தில்லை ரகசியம்

நாவல்

திலகம்

தில்லை ரகசியம்

தி.லகம்

மின்னூல் வெளியீடு : http://FreeTamilEbooks.com

உரிமை — கிரியேட்டிவ் காமன்சு. எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

உரிமை Creative Commons Attribution-NonCommercial-NoDerivs

தில்லை ரகசியம் by தி.லகம் is licensed under a Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License, except where otherwise noted.

உள்ளடக்கம்

- திவ்வை ரகசியம்
- நூல் அறிமுக உரை
- எழுத்தாளரின்அறிமுக உரை
- பொருளடக்கம்
- அத்யாயம் - ஒன்று cc-by-nc-nd
- அத்யாயம் - இரண்டு
- அத்யாயம்-மூன்று
- அத்தியாயம்-நான்கு
- அத்யாயம்-ஐந்து
- அத்யாயம்-ஆறு
- அத்யாயம்-ஏழு
- அத்யாயம்-எட்டு
- அத்யாயம்-ஒன்பது
- அத்யாயம்-பத்து
- அத்யாயம்-பதினொன்று
- அத்யாயம் -பன்னிரண்டு
- அத்யாயம்-பதின்மூன்று
- அத்யாயம்-பதினான்கு
- அத்யாயம்-பதினைந்து
- அத்யாயம்-பதினாறு

- அத்யாயம்-பதினேழு
- அத்யாயம்-பதினெட்டு
- அத்யாயம்-பத்தொன்பது
- அத்யாயம்-இருபது
- அத்யாயம்-இருபத்திஒன்று
- அத்யாயம்-இருபத்தி இரண்டு
- அத்யாயம்-இருபத்தி மூன்று
- அத்யாயம்-இருபத்து நான்கு
- அத்யாயம்-இருபத்து ஐந்து
- அத்யாயம்- இருபத்து ஆறு
- அத்யாயம்- இருபத்து ஏழு
- அத்யாயம்-இருபத்து எட்டு
- அத்யாயம்- இருபத்து ஒன்பது
- அத்யாயம்-முப்பது
- அத்யாயம்-முப்பத்தி ஒன்று
- அத்யாயம்-முப்பத்திரண்டு
- அத்யாயம்-முப்பத்தி மூன்று
- அத்யாயம்-முப்பத்தி நான்கு
- அத்யாயம்-முப்பத்தி ஐந்து
- அத்யாயம்-முப்பத்தி ஆறு
- அத்யாயம்-முப்பத்தி ஏழு
- அத்யாயம் -முப்பத்தி எட்டு
- அத்யாயம்-முப்பத்தி ஒன்பது
- அத்யாயம்-நாற்பது

- அத்யாயம்-நாற்பத்தி-ஒன்று
- அத்யாயம்-நாற்பத்தி இரண்டு
- *FreeTamilEbooks.com* - எங்களைப் பற்றி
- உங்கள் படைப்புகளை வெளியிடலாமே

தில்லை ரகசியம்

தில்லை ரகசியம் — நாவல்

திலகம்

cselvam92@hotmail.com

மின்னூல் வெளியீடு : http://FreeTamilEbooks.com

மின்னூலாக்கம் — திலகம்

மேலட்டை உருவாக்கம்: லெனின் குருசாமி — guruleninn@gmail.com

உரிமை — கிரியேட்டிவ் காமன்சு. எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

உரிமை Creative Commons Attribution-NonCommercial-NoDerivs

http://chitraselvam.pressbooks.com/

நூல் அறிமுக உரை

தில்லை ரகசியம் என்ற இந்த நூல் மறைந்த என் அன்புக்குறிய அன்னையை பற்றிய கதையாகும். இந்த கதையில் வரும் எல்லா கதாபாத்திரங்களின் பெயர்களும் கற்பனை பெயர்களே. இக்கதையில் நான் மூன்று வயது முதல் பதின்மூன்று வயது வரை, என் நினைவில் நின்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொகுத்து எழுதியிருக்கிறேன். என் அன்னை திருமணமாகியது முதல், இறக்கும் வரை சந்தித்த சோதனைகளை எனக்கு நினைவு தெரிந்த மட்டில் கோர்வையாக தொகுத்து நடந்த உண்மை சம்பவங்களை அடிப்படையாக வைத்து, என் அன்னைக்கும், தந்தைக்கும் காணிக்கையாக இக்கதைய வெளியிட ஆசைப்பட்டேன். இதில் வரும் உரையாடல்கள் அனைத்தும் என் சொந்த வாழ்வில் நடந்தவைகளே தவிர, பொதுவான கருத்துக்கள் அல்ல, யாரையும் பாதிக்கும்நோக்கத்தில் எழுதப்படவில்ல என்பதை

தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.இக்கதை என் மறைந்த பெற்றோருக்காகவும், என்னுடன் பிறந்த சகோதரி, சகோதரர்களுக்காகவும் ,என் நினைவில் நின்ற சம்பவங்களை அடிப்படையாக வைத்து அனைவருக்கும் சமர்ப்பிக்கிறேன். நன்றி வணக்கம்.

திலகம்
cselvam92@hotmail.com

எழுத்தாளரின்அறிமுக உரை

எழுத்தாளரின்அறிமுக உரை

தில்லை ரகசியம் என்ற நாவலை நான் எழுத காரணமே என் உற்ற நண்பர்கின் தூண்டுதலினாலும் என் கணவர் டாக்டர் .செல்வம் அவர்களின் ஆதரவினாலும் என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் தேர்வித்துகொள்ள ஆசைப்படுகிறேன். இருபது வருடங்களுக்கு முன் நானும் , என் கணவரும் ஒரு வீட்டிற்கு விருந்திற்கு சென்றிருந்த போது, அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து அவரவர் கடந்த காலங்களை பற்றி பேசிக்கொண்டிருக்கும் போது, என் கடந்த கால நிகழ்சிகள் சிலவற்றை நான் கூறிக்கொண்டிருக்கையில் , எங்கள் நண்பர்கள் அனைவரும் ,உன் கதை கேட்க மிகவும் சுவாரசியமாக இருக்கிறது, நீ ஏன் இதை ஒரு கதையாக எழுதி வெளியிடக்கூடாது என

ஆர்வத்தை ஏற்படுத்தியதன் விளைவாக நான் இந்த கதையை 2008-ல் எழுத துவங்கினேன்.ஆனால் எங்கிருந்து ஆரம்பிப்பது ,எப்படி ஆரம்பிப்பது என மிக குழப்பமான சூழ்நிலையில் முதலில் இருந்தாலும் ,பிறகு படிப்படியாக சிறுகுறிப்புகளை முதலில் எழுதி வைத்துக்கொண்டு,பிறகு இக்கதையை ஐந்து முறை மாற்றி மாற்றி எழுதி ,கடைசியாக ஆறாவது முறை இக்கதை என் மனதிற்கு திருப்தி தரும் வகையில் அமைந்ததால் ,இக்கதையை கூகுல் தமிழ் தட்டச்சு உதவியால் முழுதும் தட்டச்சு செய்து வெளியிட முடிவு செய்தேன். இக்கதை வெளியிடுவதா? படிப்பவர்களுக்கு இது சுவாரசியமாக இருக்குமா? என்றெல்லாம் சந்தேகத்தில் இருந்த சமயம், கனடாவில் உள்ள ஒரு நண்பருக்கு என் கதை அனுப்பி, அவரை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுகோள் விடுத்தேன். நான் அனுப்பிய கதையை படித்த அவர் வெகுவாக பாராட்டி, நான் நிச்சயமாக இக்கதை வெளியிடுமாறு ஆதரவை தெரிவித்த போதுதான், நான்

முழுமனதுடன் தைரியத்துடன், என் சொந்த முயற்சியில் தில்லை ரகசியம் என்ற இக்கதையை வெளியிட முடிவு செய்தேன். இக்கதை வெளியிட ஆதரவு தெரிவித்த எங்கள் கனடா நண்பருக்கும், எங்களது மற்ற உற்ற நண்பர்கள் அனைவருக்கும் , என் குடும்பத்தாருக்கும் என் நன்றியை தெரிவித்துகொள்கிறேன்.

திலகம்
cselvam92@hotmail.com

1

அத்யாயம் - ஒன்று

மார்ச் மாதம் 29-ம் தேதி ,1972 ம் ஆண்டு
புதன்கிழமை , எந்தவித எதிர்பார்ப்பும்
இல்லாமல் உலகிற்கு ஒளியை அளித்துவிட்டு
அன்று தன் கடமையை முடித்த திருப்தியில்
சுயநலமற்ற அந்த ஆதவன் ,ஆரஞ்சு நிற
வர்ணத்தை அள்ளி அங்கங்கே தெள்ளிததுபோல்
இருந்த நீலநிற வானத்தின் நடுவே அழகிய
வட்டவடிவ நெருப்புகுழம்பாக
மேதுவாகமறைந்து கொண்டிருந்த அந்த மாலை ஏ

அத்தை
சாராவின் கறுப்பி நிற பீயட் கார் எங்கள் தந்தை

சிறிய காரில் , ஐம்பது வயது மதிக்கத்தக்க
உள்ள ஒரு பெர்யவ்ரும் , பார்க்க ஐந்தரை ஆடி
உயரமும் , தலையின் முன்பக்கம் சற்றே
வழுக்கையும் ,கோட்டோனில்
வெள்ளை வெட்டியும் , வெள்ளை
சட்டையும் அணிந்திருந்த கார் ஓட்டுபவரும் ,
சின்ன அத்தை சாராவும் ,அண்ணன் ஷானும் ,தம்பி
சின்ன பாட்டி சந்திராவும்
மற்றும் நானும் ,மொத்தம் ஏழு பேர் எப்படியோ ச

என் தந்தையின் பெற்றோர்கள் சென்னையில்
கிழ்பக்கம் என்ற இடத்தில் வசிதுவந்தர்கள். அந்த
வீட்டின் நான்கு புறமும் பெரிய மதில் சுவர்
எழுப்பி, முன்புறம் ஐந்து அட உயர்திற்குமேல்
இருபுறமும் திறந்தாற்போல் பச்சை நிறத்தில் மிக
பெரிய கேட்டும் , அந்த கேட்டை திறந்தவுடன்
, நேரே கார் நிறுத்தவதற்கான செட்டும் , கார்
ஷெட்டில்டிருந்து வீட்டிற்குள் செல்லும்
நுழைவசலும் இருந்தது.கார் ஷெட்டிலிருந்து

வெளியே வந்தால் , வீட்டிற்குமுன் உள்ள நுழைவாசலுக்கு செல்ல கான்ச்ரிட் நடைபாதையும் ,அதன் இருபுறமும் மிக உயரமான அசோக மரங்கள் வரிசையாக நடப்பட்டு மிக அழகாக தோற்றமளித்தது . இவற்றை கடந்ததும் நாலைந்து படிகள் ஏறியதும் வீட்டின் முன்புற நுழைவாசல், அந்த நுழைவாசலின் முன்புறத்தில் வீட்டின் மேற்புற கூரைளிருந்து கீழ தரையை தொட்டவண்ணம் தொங்கிகொண்டிருந்த மனிப்லான்ட் என்னும் செடி , வெளியிலிருந்து பார்பவர்களுக்கு வீட்டினுள் நடப்பது ஏதும் தெரியாத வண்ணமும், அதே சமயம் அழகிய பச்சை நிற திரை வீட்டிற்கு அழகைகொடுபதுடன் பாதுகாப்பையும் கொடுத்து வந்தது

அத்தை சாரா டிரைவரிடம் கரை வெளிய நிறுத்தும்படி கூறியதால் , அனைவரும் கரை விட்டு இறங்கி கேட்டை திறந்து கொண்டு உள்ளே நுழைந்ததும்,வீட்டின் முன்புறமுள்ள படியில் உட்கர்ந்துடோண்டு எங்கள் வரவுக்காக காத்திருந்த அப்பா தேவன் ,எங்களை கண்டதும்

கட்டிபிடித்து கதரியாழுததும் ,சின்ன அதை சாரரவும் அழுதுகொண்டே எங்களை அழைத்துக்கொண்டு வீட்டின் முன்புற” ட” வடிவ வெரரண்டவிற்குள் நுழைகையில் உறவுக்கார ஆண்கள் அனைவரும் அந்த வெரரண்டாவில் நாற்காலியில் அமர்ந்திருந்தார்கள். அந்த ” ட” வடிவ வேரன்டாவை தாண்டியதும் மிக பெரிய வரவேற்பறையில் நங்கள் நுழைந்ததும் அங்கு உட்கார்ந்திருந்த உறவினர்களும், நண்பர்களும் “ஓ ” வென கதறி அழுதனர்

நாங்கள் நால்வரும் விவரம் புரியாமல் திருதிருவென முழித்துக்கொண்டு அந்த வரவேர்புரரையை நோட்டம் விடுகையில், அந்த அறையின் ஒரு முலையில் நீளமான பெஞ்சில் எங்கள் அம்மா “மங்கையின் ” உடல் கிடத்தப்பட்டு , அவரது உடல் ரோசாபூ மாலையில் அலங்கரித்து வைகப்படிருந்தது . மஞ்சள் நிற பட்டுபுடவையில் , மெரூன் நிற அகன்ற பார்டருடன் தங்க சரிகையில் அலங்கரிக்கபட்டிருந்த திருமண புடவையை

அம்மாவின் உடல் மீது போர்த்தபட்டிருந்தது . கார்களில் இரு கட்டைவிரல்களும் ஒன்றாக சேர்த்து கையிற்றால் கட்டப்பட்டிருந்தது.கைகள் இரண்டும் மடக்கி மார்மீது வைத்து இருந்தன .முகத்தில் மாஞ்சள் பூசி பெரிய கும்கும .பொட்டு வைக்கப்பட்டிருந்தது .தலை மாட்டில் ஒரு சிறிய எண்ணெய் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருந்தது .அதன் அருகே சிறிய சாமி படமும் வைகபட்டிருந்தது

எங்கள் நாவ்வருக்கும் எங்கள் கண்களை எங்களால் நம்பமுடியவில்லை .நங்கள் காண்பது கனவா? அல்லது நினைவா ? என்று எங்களை கிள்ளி பார்த்துக்கொள்ள வேண்டிய நிலயில் இருந்தோம் என்றே கூறலாம் . எங்கள் அன்னை இறந்துவிட்டார்கள் என்பதை எங்களால் ஏற்றுக்கொள்ளவோ ?நம்பவோ ?முடியவில்லை .எங்களை கண்டதும் துக்கம் தாளாமல் அழுகையில் , நாங்கள் நால்வர் மட்டும் ஒருவரை ஒருவர் அணைத்தவண்ணம் எந்த சலனமும் இல்லாமல் திக்ப்ரிம்மை பிடித்தது போல் சிலை போல நின்று அம்மாவின் சவ

உடலை உற்று பார்த்தவண்ணம் அந்த
வரவேற்பறையின் ஒரு ஓரத்தில் நின்றிந்தோம்.

அம்மாவின்உடல்கிடத்தப்படிருந்தமரபெஞ்சில்அருகே
,அம்மாவின்தாயானபாட்டிகமலாவும்
,அம்மாவின்அண்ணிமாமிகமலியும்
,உட்கார்ந்திருந்தார்கள்
.அவரிகள்அருகில்மாமியின்முன்றுபெண்கள்சபீன
,சலீனா ,மற்றும்சபிதாவும்உட்கார்ந்திருந்தார்கள்
.அனால்அம்மாவின்தந்தைதாதாஈஸ்வரனைமட்டும்க
.மற்றநெருங்கியஉறவினர்கள்ஒருசிலர்மட்டும்அங்கு

திடீரென அறையில்
மௌனம் நிலவியது .அப்பாவின் பெற்றோர்கள் வீ
மாமி எங்கள் நால்வரையும் நெருங்கி
அணைத்தாற்போல் பக்கத்தில் இருந்த சாப்பிடும்
அறைக்கு அழைத்து சென்று
உட்காரவைத்துவிட்டு ஏதும் பேசாமல்
சென்றுவிட்டார்கள் .என் தங்கை ஆனஹி
பயந்தபடி என்னை ஒட்டி கொண்டு
உட்கார்ந்துகொண்டாள் .அண்ணன் சானும்,தம்பி
பாட்டும் எங்களுடன் உட்கார்ந்து கொண்டு

ஏதும் பேசாமல் இருந்தார்கள்.

நால்வரும்மிரண்டுகொண்டுஉட்கார்ந்திருக்கையில்வ
டம்பளருடன் அருகில்வந்துஅமர்ந்துகொண்டு

“குழந்தைகளா , ஆளுக்கு கொஞ்சம் பால்
குடித்து விடுங்கள் . இரவு சாப்பிட சிறுது
நேரமாகும் .” என்றார்கள் .

“எங்களுக்குபசிக்கவில்லைமாமி,
இபோதுஎதுவும்வேண்டாம் ”
எனநால்வரும்மருத்துகூரியும் ,விமலாமாமிவிடாது

“உங்களுக்காகநான்பால்சூடுசெய்துகொண்டுவந்தி
, மறுக்காமல்குடித்துவிடுங்கள் ”
என்றஅன்பானவற்புறுத்தலுக்குமறுப்புசொல்லமன
,விமலாமாமிகொடுத்தபாலைஒரேமுடக்கில்நால்வரு
சென்றுவிட்டார்கள்.

நங்கள் இருந்த அறை சமையல் அறைக்கும் ,
படுக்கை அறைக்கும் நடுவே உள்ள
உணவருந்தும் அறை .அங்கிருந்து
வரவேற்பறையில் அம்மாவின் சடலத்தை மற்றும்

சுற்றி உட்கார்ந்திருக்கும் உறவினர்களை நன்றாக பார்க்க முடியும் என்பதால் , அங்கு நடக்கும் எல்லா நடவடிக்கைகளையும் , சம்பஷனைகளையும் மௌனமாக பார்துகொண்டிருந்தோம் .நங்கள் இருந்த அறையில் யாரும் விளக்கை போடததால் ,மிக இருட்டாக இருந்தது .வரவேற்பறையில் இருந்த டிஉப் லைட் வெளிச்சம் மட்டும் லேசாக தெரிந்தது.

நேரம் ஆகா ஆகா செய்தி கேட்டு உடனே வந்திருந்த உறவினர்கள் அனைவரும் ஒவ்வொருவராக கிளம்பி தங்கள் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தர்கள் .அப்பாவின் தாயார் “சரசா” ,அக்கா “ரோஜீ “, தம்பி “குமார் “, தங்கை “சாரா ” மற்றும் சித்தப்பா குமாரின் மனைவி சித்தி ராகினி , அனைவரும் சமயலறையில் மறுநாள் நடக்க வேண்டிய கா ரியத்திற்கான ஏற்பாடுகளை சைதுகொண்டிருதனர்.

அம்மாவின் அக்கா பெரியம்மா சேதுவும் ,

அண்ணனாகிய மாமா ஜகன்னதணும்
,சமயலறையில் வேலை செய்துகொண்டிருந்த
பாட்டி சரசாவிடம் சென்று ,

“நாளைக்கு எத்தனை மணிக்கு சவத்தை
இடுகாட்டிற்கு எடுத்து செல்லலாம் என
இருக்கீறீர்கள் “. நாங்கள் எல்லோரும் வீட்டிற்கு
சென்று விட்டு நாளை கலை ஆறு மணிபோல்
வரலாம் என்று இருக்கிறோம்.” என்றார்கள்.

“நாளை காலை சரியாக ஒன்பது
மணிக்கெல்லாம் உடலை வீட்டிலிருந்து
எடுத்துவிடவேண்டும் என்று ப்ரோகிதர்
சொல்லிவிட்டார்.மேலும் கலை ஒன்பது
முப்பதுக்கு சவகாட்டில் உடலை எரிக்க
வேண்டிய ஏற்பாடுகளை செய்துவிட்டு தயாராக
இருப்பதாக வெட்டியான் கூறிவிடானாம்
.உங்கள் அப்பா எப்போது சித்மபரதிலிருந்து
வருகிறார்.” என பாட்டி சரசா கேட்டதும்.

“அனேகமாக இநேரம் அப்பா
கிளம்பிவிடிருப்பார்கள்.எப்படியும் விடியற்காலை

ஐந்த அல்லது ஆறு மணிக்கெலாம் வந்துவிடலாம்." என மாமா ஜெகநாதன் பதிலளித்தார்.

"எல்லாஏற்பாடுகளும்ஒருவழியாகசெய்தாகிவிட்டது , இனிநாளைநடக்கவேண்டியவேலைக்கு , நீங்கள்எல்லோரும்சற்றுமுன்பேவந்தீர்கள்என்றால்ய " எனபட்டிசரசாமிகவும்தாழ்ந்தகுரலில்கூறவே

"அவசியம் வந்துவிடுகிறோம் " என மாமா ஜெகநாதன் கூறிவிட்டு தன் குடும்பத்துடன் கிளம்பி சென்றுவிட்டகள் .

மாமாவின் மூன்று பெண்களும், மற்ற உறவினர்களும் எங்கள் நாள்வேரிடமும் எதுவுமே பேசவில்லை.பேசினால் எங்கள் நால்வரின் மனதும் வேதனை படும் என்று பேசாமல் சென்றுவிட்டார்கள் என்றே நினைத்துகொண்டேன்.

மாமா சென்ற சிறுது நேரத்திற்கெல்லாம் விமலா மாமி எங்களிடம் வந்து ச்டைன்லஸ் ஸ்டீல்

சாப்பாடு பாக்ஸ்ய் எங்கள் நால்வர் இடமும் தனித்தனியாக கொடுத்து இரவு சாப்பாட்டை சாப்பிடசொன்னர்கள்.நாங்கள் நால்வரும் சாப்பிடும் நிலையில் இல்லாவிட்டாலும்,விமலா மாமி எங்களை சாப்பிடாமல் விடப்போவதில்லை என்பதால் அவர்கள் கொடுத்த இட்லி, சாம்பாரை சாப்பிட்டு முடித்தோம்.

சாப்பிட்டு முடித்தவுடன் விமலா மாமி எங்க நாலு பேரையும் பக்கத்தில் இருந்த படுக்கை அறைக்கு அழைத்துசென்று படுத்து தூங்குமாறு சொல்லிவிட்டு , படுப்பதற்கான படுக்கையையும் தயார் செய்து விட்டு சென்றதும் ,நாங்கள் நர்ல்வேரும் அமைதியாக எதுவும் பேசாமல் படுத்துவிட்டோம் .சிறிது நேரத்திற்கெல்லாம் எனையும் அறியாமல் நன்றாக தூங்கி விட்டேன்.

திடீரென எங்கிருந்தோ சங்கு ஊதும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழிப்பு வரவே ,வாரி சுருட்டி கொண்டு அரைதூக்கத்தில் கண்ணை

கசைக்கியவண்ணம் எழுந்து கடிகாரத்தில்
மணியை பார்த்தேன் .மணி விடியற் காலை
நாலு என காண்பித்தது . திரும்பி பக்கத்தில்
தூங்கிகொண்டிருந்த அனஹ்யை பார்த்தேன்.
அவள் நன்றாக தூங்கிகொண்டிருந்தாள்.
அண்ணன் சானும், தம்பி பாடும் என்னுடனேயே
முழிதிருந்தர்கள்.முவரும் எழுந்து மெதுவாக
வரவேரிபோரையை எட்டிபார்தோம்.அம்மா
இன்னும் அமைதியாக படுத்து
உறங்கிகொண்டிருந்தார்கள் .அருகில் பாட்டி
கமலா மற்றும் பெரியம்மா சேதுவும்
அமர்ந்துகொண்டு அம்மாவின் உடலையே
பார்துகொண்டிருந்தர்கள்.அவர்கள்
கண்களிலிருந்து கண்ணீர்
வடிந்துகொண்டிருந்தது .

இரவு முழுதும் இருவரும் தூங்கவில்லை
என்பதை அவர்கள் கண்களை பார்த்தே
புரிந்துகொண்டேன்.பெரியம்மா சேது பாட்டியை
தேற்றிகொண்டிருந்தர்கள்.பாட்டி கமலாவிற்கு
கண் அறுவைசிகிச்சை நடந்து பத்து நாட்களே
ஆயிருந்ததல் ரொம்பவும் அழவேண்டாம் என

சமதனபடுதிகொண்டிருந்தர்கள் .

செய்வதறியாது நாங்கள் முவரும் நின்றுகொண்டிருந்ததை பார்த்த விமல் மாமி ,எங்களிடம் " குழந்தைகளா போய் பல் விலக்கி விட்டு ,முகம் கழுவிவிட்டு வாங்க , காப்பி குடிக்கலாம் " என்றார்கள் மிக பரிவுடன்.

விமலா மாமி உள்ளே சென்று அனஹியயும் எழுப்பி பல் விலக்க அனுப்பிவைத்தார்கள்.நாங்க நோளுபெரும் பல் விலக்கி விட்டு ,முகம் கழுவிவிட்டு வந்ததும் , விமலா மாமி தயாராக வைத்திருந்த காப்பியை எங்களிடம் கொடுக்கவே அதை வாங்கி குடித்துவிட்டு மறுபடியும் அம்மா உடல் வைத்திருந்த ஹாலுக்கு வந்து நின்றோம் .

அம்மாவின் உடல் அருகே செல்ல எங்க நால்வருக்கும் மிகவும் பயம். எங்களுக்கு இதுதான் முதன்முறையாக இறந்த உடலை மிக அருகில் பார்க்க நேரிட்டதால் , பெற்ற தாயக இருந்தாலும் அருகே செல்ல துணிவில்லாமல் இருதோம்.

அழாமல் அம்மாவின் உடலை அமைதியாக பார்த்தவண்ணம் நால்வரும் நின்றிந்தோம். திடீரென அம்மா வாயிலிருந்து நுரை வரவே என் மனம் துள்ளி குதித்தது .அம்மா உயிருடன் வந்துவிட்டார்கள்.அவர்கள் சாகவில்லை .நான் நினைத்தது சரியாகிவிட்டது .அம்மா சாகவில்லை , அம்மா சீக்கிரம் எழுந்து பாட்டி கமலாவை அழவேண்டாம் என் சொல்லுங்க என உரத்த குரலில் கூற வேண்டும் என என் மனம் தூண்டியது .

அதற்குள் பெரியம்மா சேது எழுந்து அம்மாவின் அருகில் சென்று துணியால் அம்மா வாயிலிருந்த நுரையை சுத்தம் செய்தார்கள் .
சுற்றியிருந்தவர்கள் அம்மாவின் உடல் அருகே சென்று பார்துகொண்டிருந்தகள் .அம்மா கண் முழித்து பார்பார்களா ?என நானும் ஆவலுடன் நின்றிந்தேன் .அம்மா அசையவில்லை .அப்படியே படுத்திருந்தார்கள்.எனக்கு மிகவும் ஏமாற்றமாகிவிட்டது .அம்மா நிஜமாகவே இறந்துவிட்டார்கள்.இனிமேல் திரும்பவரவே போவதில்லை .அப்படி என்றால் அம்மாவை

ஒன்பது மணிக்கு மேல் நெருப்பில் போட்டு எரித்துவிடபோகிரர்கள். ஐயோ |.அம்மாவுக்க்கு வலிக்காதா ?உடம்பு பூரா எரியாதா ?நெருப்பு சூடு தாங்காமல் அம்மா உயிருடன் எழுந்துவிட்டால் திரும்ப அம்மாவை வீட்டிற்குள் அழைத்துவருவார்கள ? அல்லது சுடுகாட்டிற்கு போன உடல் வீட்டிற்கு வரகூடாது என்று உயிருடன் கொளுத்திவிடுவார்கள ?அம்மா தயவு செய்து சுடுகாட்டுக்கு போகும்முன் எழுந்துவிடுங்கள் என என் மனதிற்குள் கடவுளை வேண்டிக்கொண்டேன்.என் எண்ண அலைகள் எங்கெங்கோ பறந்து கொண்டிருந்தது. வானத்தில் கரிய மேககூட்ட்டங்கள் சூழ்ந்துகொண்டு உலகை இருட்டுவதுபோல ,என் இளம் மனதில் பல கவலைகளும்,துக்கங்களும் இருண்ட கரிய மேகங்களாக சூழ்ந்துகொண்டு ஒரு இனம்புரியாத திகிலை ஏற்பட்டுத்தியது . முதன் முதலாக அப்போதுதான் அம்மா உண்மையாகவே இறந்துவிட்டார்கள் என என் மனம் உணரதொடங்கியது .

இயற்கையின் அதிசயத்தை எண்ணி வியந்தேன் . மனித வாழ்வில் ஒவ்வொரு வினாடியும் நல்லதும் கெட்டதும் எப்படி மாறிமாறி வருகிறதென்று .இந்த நிமிடத்தில் இருக்கும் நல்லதோ ஒருசில நொடிகளில் பனிபோல் உருகி மாறிவிடுகிறது.இரவும் பகலும்போல் ,வெயிலும் மழையும் போல்,சூரவேளியும் குளிர்த்தென்றலும் போல் ,உயரினங்களின் பிறப்பும் இறப்பும் ஒவ்வொரு நொடியும் மாறிமாறி வருவது நினைத்து வியப்படைதேன்.

கடவுளே , இந்த உலகத்தை என் படைத்தாய் ? அதில்
பலவிதஉயிரினகளையும் எதற்காக ஏற்படுத்தினாய்
இந்த உலகம் கண்ட பையன் என்ன ?
இதற்கான் பதிலை யாரிடம் கேட்பது ?என்று
என் மனம் குழம்பியது .

குழந்தை பிறக்கும் போது ஆனந்த கண்ணீர் வடிக்கும் நாம் ,மனிதன் இறக்கும் போது ஏன் சோக கண்ணீர் வடிக்கிறோம் .இந்த பூமியில் யாரும் நிரந்தரமாக நிலைதிருக்கபோவதில்லை

.நாமும் ஒரு நாள் மடியத்தான் போகிறோம் .அப்படி இருக்க நமக்கு முன் இறந்தவரை பார்த்து ஏன் அழவேண்டும் ?நாம் இறந்தால் மற்றவர்கள் நம் இழப்பை நினைத்து அழவேண்டும் என்பதற்காகவா ?அல்லது இறந்தவர்களால் நமக்கு கிடைக்கவ்ண்டிய சலுகைகளும், பொருட்களும் ,பாசமும் ,நேசமும் சேர்த்து இழக்கிறோம் என்பதற்காகவா ?இம்மாதிரியான கேள்விகள் சிறு வயதிலிருந்தே என் மனதில் அவப்போது மின்னல் போல் வந்து சென்றன.

சிந்தனையிலிருந்து மீண்டு வந்த நான் அம்மாவின் உடலை மீதும் உற்று பார்த்தேன்.அம்மாவின் முகத்தில் அமைதியும் நிம்மதியும் கண்டேன் .அந்த நிரந்தரமான,அமைதியான ,நீண்ட உறக்கத்தை பார்க்கும்போது ,அம்மா எதையோ எனக்கு சொல்வது போல் உணர்ந்தேன் .

“மகளே , இப்போது இம்மதியாக இருக்கிறது .இனி எதை பற்றியும் நான்

கவலைப்படவேண்டிய அவசியமில்லை .இவுலகதிளிருந்தும் ,அணைத்து இன்ப துன்பத்திலிருந்தும் எனக்கு விடுதலை கிடைத்துவிட்டது .என் உடல் வலி ,நோயிலிருந்து விடுதலை கிடைத்துவிட்டது .இனி நான் ஒரு சுதந்திரபறவை .இப்பூமியை விட்டு வெகுதூரத்தில் வானிலே சிறகடித்து பறந்து திரியும் இந்த சுதந்திர வாழ்கையை எண்ணி பெருமிதமாக, நிமதியாக உறங்குகிறேன்.இனி யாருமே என்னை இம்சிக்காத இடத்திற்கு சென்றுவிட்டேன்."

உண்மைதான்.அம்மா இனி எது பற்றியும் கவலைபடவேண்டிய .இனி எல்லா கவலையும் எங்களிடம் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார்கள்.இனி என் கூட பிறந்தவர்களை பார்துகொள்ளவேண்டிய பொறுப்பு என்னுடையது என்பதை உணர்ந்தேன்."ஆண்டாண்டு காலம் அழுதுபுரண்டாலும் மாண்டோர் திரும்புவதில்லை."என்ற பழமொழியை பாட்டி கமலா சொல்லி அடிக்கடி கேடிருகிறேன்

.மனிதன் இறப்பது புதுமை இல்லை .பிறப்பு
என்று ஒன்று இருந்தால் இறப்பு என்பது
நிச்சயம் உண்டு.அம்மா இன்று
சென்றுவிட்டார்கள்,நாம் பிறகு
செல்லபோகிறோம் .இறந்தவற்காக அழுது
நேரந்தை வேன்னடிப்பதை விட ,இறந்தவர்
விட்டு சென்ற கடமைகளை நாம்
பொறுப்பேற்று திறம்பட நடத்தி சென்று
வருங்காலத்தை பசுமையாக வைப்பதே நம்
முன்னோருக்கு நாம் காட்டும் அன்பும் ,
மரியாதையும் , நன்றி கடனும் என்பதை என்
மனம் உணர்த்தியது .

வாழ்கை என்பது சுலபமானது அல்ல.மிகவும்
சிக்கலானது .ஒவ்வொரு வினாடியும் மிகவும்
விழிப்புடன் இர்ருக்கவேண்ட்யது மிகவும்
அவசியமானது.”சுவற்றிற்கும் காதுண்டு”
என்ற பழமொழிக்கேற்ப ,எப்பவும் அக்கம்,பக்கம்,ப
உள்ளது .அம்மாவின் வாழ்க்கை நிலயே எனக்கு ஒ
சிறுவயதிலிருந்தே ஒன்று மட்டும் எனக்கு
விளக்கமாகபட்டது.மனித இனம் மிருக இனத்தை
விட மிக மோசமானது என்று.மனிதர்கள்

காட்டில் நாம் வாழுகிறோம்.மனிதர்கள் வாழும்
காடு மிருகங்கள் வாழும் காடு மெகா மேலானது
என என் மனம் நினைத்தது .காட்டில் எந்த
மிருகம் கொடியது ,எந்த மிருகம் கொடியதில்லை
எனபதை தெளிவாக அதன் உருவம் மற்றும்
குணாதிசயத்தை வைத்து தெரிந்துகொண்டு ,
நம்மை அவற்றிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள
முன் எச்சரிக்கையாக நடவடிக்கைகளை
வகுத்துகொள்ளலாம்..ஆனால் மணிதர்கள் வாழும்
மிருககுணம் உள்ளது
என்பதை அறிவது அவ்வளவு எளிதான கர்யமில்
வாழும் மிருகங்களுக்கிடையில் சட்டதிட்டங்கள்
மிக தெளிவாக இருக்கும் .கொடிய மிருகங்கள்
என நாம் நினைக்கும் சிங்கம்,புலி,கரடி,யானை
போன்றவைகள் பசி எடுக்கும் நேரத்திற்கு
மட்டும் வேட்டையாடி தானும் சாபிட்டு விட்டு
தன இனத்திற்கும் சற்று கொடுத்துவிட்டு
மீதியை மற்ற மிருகங்களுக்கு விட்டு விட்டு
சென்று விடும்.நாளை தமக்கு வேண்டும் என
சேர்த்து வைப்பதில்லை .கும்பல் சேர்த்து
கொண்டு அடுத்த மிருகம் இனம் இருக்கும்

இடத்திற்கு சென்று வம்பு
செய்வதில்லை.தன்னை பாதுகாத்துக்கொள்ள
அவைகல் சற்றே விழிப்புடன் இருந்து
தப்பித்துகொள்ள முயச்சிகும்.

நம் மனித இனம் அப்படி அல்ல. அவர்கள் எந்த
சமயம் என்ன செய்வார்கள் என்பதை ஊகிப்பது
சுலபமான காரியமாக இருக்காது.”பசுதோல்
போர்த்திய புலி” என்ற தமிழ் பழமொழிக்கேற்ப
நாம் எல்லாம் மனித தோல் போர்த்திய
மிருகங்கள் என்றே என் மனம் நினைத்தது
.சாதுவாக தெரியும் மக்கள் பாம்பாக சீறி
விஷத்தை கொட்டி தீங்குசெஇயலாம்.புள்ளி
மானாக துள்ளி திரியும் மக்கள் குள்ள நரியாக
தந்திரங்களை செய்து ஏமாற்றலாம்
.சிங்கம்போல் தோற்றமளிப்பவர்கள்
பொதிசுமக்கும் கழுதையாகவும் இருக்கலாம்.

வாழ்கையே ஒரு ஓட்ட பந்தயம்
போல்தான்.யார் யாரை முறியடித்து முன்னுக்கு
வருகிறார்களோ அவர்களுக்குதான் இந்த
உலகத்தில் இடமுண்டு.எளியோரை வலியோர்

வருத்தி வாழும் இந்த உலகத்தில் நாம் எப்படி தப்பித்து பிழைத்தது வரபோகிறோம் என்ற இனம் புரியாத பயம் என் மனதை கவ்வியது.

வாசலில் சங்கு ஊதும் சத்தம் கேட்டு நினைவிற்கு வந்த நான் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தேன்.ஆதவன் அன்று தன் கடமையை செய்ய சிவந்த நிற மேனியுடன் மெதுவாக தலைதூக்கி இருண்டிருந்த பூமிக்கு வெளிச்சத்தை கொடுத்து ,தூங்கி கொண்டிருக்கும் அணைத்து உயிரினகளை எல்லாம் எழுப்பி சுறு சுறுப்பாக இயங்க வைதுகொண்டிருந்தான்.எங்கிருந்தோ சுப்ரபாதம் பாடுவது காதில் இனிமையாக கேட்டுகொண்டிருந்தது.

சூரிய உதயம் ஒருபுறமும் , சுப்ரபாதம் பாட்டு ஒருபுறமும் இவ்வுலகத்திலுள்ள உயிரினம் அனைத்தையும் எழுந்திரு எழுந்திரு என எழுப்பிகொண்டிருன்தது.ஆனால் எங்கள் அம்மா மட்டும் இன்னும் ஆழ்ந்த உறக்கதில் படுத்திருந்தார்கள்.சூரிய

பகவானே,உலகத்திலுள்ள அனைத்து
உயிரங்களையும் சுறு சுறுப்பாக
இயங்கவைதுகொண்டிருகும் நீ ஏன் எங்கள்
அம்மாவை மட்டும் எழுப்பவில்லை
?அனைவரையும் எழுந்திரு எழுந்திரு என
பாடும் சுப்ரபாதமே எங்கள் அம்மாவை மட்டும்
என் உன் பாடல்
எழுப்பவில்லை.?உங்களிருவருக்கும் எங்கள்
அம்மாவை எழுப்ப மனம் இல்லையா ? அல்லது
எங்கள் அம்மாவுக்குதான் எழுந்திருக்க மனம்
இல்லையா?நாங்க நாவரும் என்ன பாவம்
செய்தோம்?எங்களுக்கு ஏன் இவ்வளவு பெரிய
தண்டனையை கடவுள் கொடுக்கவேண்டும்?என
என் உள் மனம் வெம்பி அழுதது.

வீட்டில் அனைவரும் அம்மாவின் இறுதி
ஊர்வலத்திற்கான வேலைபாடுகளை
செய்துகொண்டிருந்தனர் .வாசலில் அம்மாவின்
உடலை தூக்கி செல்வதற்கான தேனை
ஓலையில் தடுக்கு
பின்னிகொண்டிருன்தனர்.செய்தி கேட்ட
உறவினர்களும்,நண்பர்களும் சிறுது சிறிதாக

வந்து அம்மாவின் உடல் மீது மலர்மாலையை வைத்து மரியாதையை செய்தவண்ணம் இருந்தனர்.வந்தவர்கள் அம்மாவின் உடலை பார்த்து அழ ,வீட்டில் இருப்பவர்களும் துக்கம் தளமல் அழ ஆரம்பித்துவிட்டர்கள். கடிகாரத்தை பார்த்தேன் .காலை மணி ஆறு என கடிகாரம் காண்பித்து.இன்னும் முன்று மணிநேரமேதான் அம்மா எங்களுடன் இருப்பார்கள்.பிறகு எரிந்து சம்பலாகிவிடுவார்கள் என்று நினைகையில் என் மனம் மிக வேதனைப்பட்டது.அம்மாவை பார்துகொண்டேயிருந்தேன் .அம்மாவை இனி நான் பார்கபோவதில்லை.எனவே முடிந்தவரை இப்பவே அம்மாவை நன்றாக பார்த்துவிடவேண்டும் என்று அம்மாவை பார்தவனம் சிலையாக நின்றிருந்தேன்.

அச்சமயம் வாசலில் அம்மாவின் .தந்தை தாதா ஈஸ்வரனும்,மாமா ஜெகநாதன் குடும்பமும் வருவதை பார்த்ததும் ,தாதா ஈஸ்வரனை நோக்கி ஓடினேன். எனைகண்டதும் தாதா கட்டி பிடித்த வண்ணம் ,வரவேற்பறைக்குள் வந்துதன்மகள் உடலை பார்த்து கொண்டு கண்ணில் நீர்

தரைதரையாக வடிய மௌனமாக சிறுது நேரம்
நின்றிருந்தாகள்

“உங்கள் செல்ல மகளை பார்த்தீர்களா
?வயதான காலத்தில் நம்மையெல்லாம்
அழவைத்துவிட்டு ,நிம்மதியாக உறக்கத்தில்
இருக்கிறாள்.” என பாட்டி கமலா
அழுதுகொண்டே தாத்தாவிடம் கூறியது கேட்டு
என் நெஞ்சம் நிகழ்ந்தது .

தாதாபதிலேதும்சொல்லாமல்மௌனமாகநின்றிருந்த
பெஞ்ச்அருகேஅம்மாவின்காலடியில்ஒருசேரைஇழுத்
இருப்பதுபோல்அமர்ந்திருந்தார்கள்.சிறுதுநேரமௌன

“என் பெண் பரத நாட்டியம்
பயின்றிருந்ததாலும், அவள் அதில் மிகவும்
ஆர்வமாக இருந்ததாலும் அவளை பரத நாட்டிய
உடையில் சுடுகாட்டிற்கு
எடுத்துசெள்ளவேண்டும் என்பது என்
விருப்பம்.என் மூத்த மகள் சேதுவும் ,அவள் கூட
மற்றவர்களும் உதவி செய்ய ஏற்பாடு
செய்திருக்கிறேன்.உங்களுக்கு இதில் ஏதும்

ஆட்சேபனை இருக்கிறதா/" என தாதா ஈஸ்வரன் பாட்டி சரசாவிடம் மிகவும் பணிவுடன் கேட்டார்கள்.

தாத்தாவின் வேண்டுகோளுக்கு யாருமே எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்காததால் எந்தவித ப்ரேச்சனையும் இல்லாமல் விஷயம் சுமுகமாக முடிந்தது.

கடைசி ஊர்வலத்திற்கு பங்குகொள்ள நிறைய பேர் வருவதும்,அம்மாவின் உடல் மீது மலர் மலைகளை போடுவதுமாக தொடர்ந்து இருந்துகொண்டெஇருந்தது .வீட்டினுள் இடமில்லாமல் வீட்டிற்கு வெளியிலும் ,தெருவிலும் கூட்டம் நின்று அம்மாவின் கடைசி பயணத்திற்காக காதுநின்றிருந்தார்கள்.நானூறு பேர்களுக்கு மேல்இருக்கலாம் என்றே நினைக்கிறன்.

அன்று அம்மாவின் இறுதி ஊர்வலத்திற்கு வந்த அனைவரும் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டிருந்தது எங்கள் நால்வர் கத்துகளிலும்

விழாமல் இல்லை."மனைவியை
கொன்றுவிட்டானா தேவன்.பாவம் அந்த பெண்
எவ்வளவுதான் போருத்துபோகும்.கடைசியில்
இவன் நடத்தை சரியில்லாததை
தாங்கமுடியாமல் இறந்துவிட்டால் மங்கை"
என்று அனைவரும் ஒட்டுமொத்தமாகவே
முணுமுணுத்தார்கள்.

பாவம் அங்கு வந்திருந்த உறவினர்களுக்கும்
,மற்றவர்களுக்கும் நடந்த முழுகதையும்
தெரிந்திருக்க நியாயமில்லை.அதனால் தான்
எங்கள் தற்கு அப்பா ,அம்மாவை
கொன்றுவிட்டதாக நினைக்கிறார்கள்.
உண்மையை இவர்களுக்கெல்லாம் யார்
சொல்வது.அப்பா அம்மாவை
கொள்ளவில்லை.அம்மாவே தன்னைத்தானே
கொன்றுவிட்டார்கள்.இவ்வளவு அழகான
உலகத்தில் அருமையான மனித வாழிக்கையை
அனுபவிக்கதேரியாமல் தன்னையே அழித்துக்
கொண்டார்கள்.அம்மா ஒரு
சுயநலவாதியே.எங்கள நால்வரின் நலத்தையும்
மனாதில் நினைத்திருந்தால் இப்படி

இறந்திருப்பார்களா ?உலகத்தில் எவ்வளவோ பேர் பலவித கொடுமைகளுக்கு நடுவிலும் பசி பட்டினிக்கு நடுவிலும்,பிச்சை எடுத்தாவது தன குடும்பத்தை காப்பாற்றி வாழும்போது.அமாவிற்கு என்ன குறை?படிப்பில்லையா?சம்பாத்தியம் இல்லைய?சாத்துசுகம் இல்லையா?குழந்தைகள் இல்லையா?எதற்கு மனம் நொந்து தன்னை தானே அழித்துகொள்ளவேண்டும் ?எதனால் அப்பாவிர்க்குதானே வீண் பழி ஏற்பட்டுகிறது.

அப்படி அம்மா உலகத்தை வெறுத்து மனம் நொந்து இறக்க முடிவு செய்துவிட்டால் எங்கள் நாலவரையும் தன கூடவே அழைத்து சென்றிருக்கலாமே.ஏன் எங்களை மட்டும் தவிக்க விட்டுவிட்டு தான் மட்டும் சுயநலவாதியாக இவ்வுலகை விட்டு சுதந்திரமாக பறந்து செல்ல நினைத்துவிட்டார்கள்.அம்மாவின் நிம்மதியான உறக்கத்தை பார்க்க எனக்கு மனதிற்குள் சற்றே பொறாமையாக இருந்தது.

மனதைரியத்துடன் இப்பறந்த அழகிய உலகத்தில் தினம் தினம் ஏற்படும் பலவிதமான இன்பதுன்ப

அலைகளை எதிர் போராடி எதிர்நீச்சல் போட்டு கரைசேர துணிவில்லாமல் நிரந்தரமாக தூங்கிவிட நினைத்துவிட்டார்களே அம்மா.நான் வளர்ந்தால் அம்மாவை போல கோழையாக இல்லாமல் எதிர்நீச்சல் போட்டு என்னை காப்பாற்றி கொள்ள நான் எப்படியாவது கற்றுக்கொள்ளவேண்டும்.

இவ்வளவு அழகான பூமியில் ,இப்படி அருமையான மானிட பிறவி எடுதத்தான் பயனாக என் உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரை சந்தோஷமாக அனுபவித்துவிட்டு இறப்பதுதான் என் குறிக்கோள்.அம்மாவின் முடிவு எனக்கு ஒரு பாடமாக இருந்தது.எடுப்பது ஒரே பிறவி,அதிலும் மானிடப்பிறவி,இதை ஏன் நான் வீணாக மற்றவர்களுக்கு பயந்து வீணடிப்பானேன்.அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்று சொல்லிய அவ்வை பாட்டியின் அந்த பொன்னான வார்த்தை என் மனதில் பளீரென்டு நினைவிற்கு வந்தது.

2

அத்யாயம் - இரண்டு

நான் மெதுவாக நகர்ந்து தாத்தா ஈஸ்வரனின் அருகே சென்று அவர் கையை பிடித்துகொண்டு நின்றுகொண்டு ,ஒவ்வொருவராக உள்ளே வந்து அம்மாவின் உடலில் மாலையை வைத்துவிட்டு வணங்கி சென்றதை பார்த்தவண்ணம்.

தாத்தா, "ஏன்? எல்லோரும் அம்மா மீது மலர் மாலையை வைத்து வணங்குகிறார்கள்"என்று கேட்டேன்.

"இறந்த உடல் மீது வாசனை உள்ள மலர்களை

வைத்தால் ,அந்த மலர் வாசனையில்.இறந்த உடலில் துர்நாற்றம் ஏதும் ஏற்பட்டால் தெரியாமல் இருப்பதற்காகவும் , இறந்தவர்களுக்கு மரியாதை தெரிவித்து ,மலர் வைத்து அஞ்சலி செய்வதுவழக்கம் .” என் கூறிவிட்டு அன்பாக என் முதுகில் தட்டிகொடுத்தார்கள்.

” அம்மா தலைமாட்டில் ஏன்? எண்ணை விளக்கை வைத்துவிட்டு அது அணையாமல் யாராவது எண்ணையை உற்றிகொண்டெ இருகாங்க தாத்தா ?” என்றேன் .

“அதுவாடா கண்ணு ,இறந்த உன் அம்மாவின் ஆவி , இந்த உடலை விட்டு வேறு பிறவி எடுக்க வழிகாட்டாக இந்த ஜோதியின் வெளிச்சத்தை கொண்டு, தன புதுபாதையில் சென்று ,புது உடலை எடுப்பதற்காக என நம் இந்துமதத்தில் இருக்கும் ஐதீகத்தை நாம் எல்லோரும் இன்றும் பின்பற்றி வருகிறோம்”. என்றார்கள்.

“ஆவினா என்ன தாத்தா?அது எப்படி இருக்கும்?நம் கண்ணுக்கு அது தெரியமா?” என விடலாமல் கேட்டேன்.

“இல்லடா கண்ணு ,ஆவியை நாம் பார்க்கமுடியாது .நாம் தினமும் குளித்து உடையை மாற்றுவதுபோல ,கிழிந்த பழைய உடையை தூக்கிஎறிவதுபோல ,ஆவி இந்த உடலுக்குள் பலகாலம் இருந்துவிட்டு , இந்த உடலுக்கு பழுது ஏற்பட்டவுடன் ,பழைய உடலை விட்டு புதிய உடலை தேடி சென்று விடும்.உடல்தான் பழுதுபட்டு அழியுமே தவிர, உயிர் சாவதில்லை. அது இந்த உலகத்தில் சுற்றி சுற்றி, புது உடல் எடுத்து வாழ்ந்து வரும் .உன் அம்மாவின் உடல்தான் மடிந்துவிட்டது,ஆனால் அவள் ஆவி இன்னும் சில நாட்களில், புது உடல் எடுத்து வாழ்ந்துவரும்.உன் அம்மா எங்கிருந்தாலும் ,அவளது ஆசி உங்க நாலுபேரயும் எப்போதும் காப்பாற்றி வரும்டி கண்ணு.” என கண் கலங்கி குரல் தழுதழுக்க கூறியது இன்றும் என்னால் மறக்கமுடியாது.

“அம்மா எங்களை எல்லாம் அடையாளம் கண்டு வந்து பேசுவார்களா? தாத்தா.”என ஆவலுடன் கேட்டேன்.

“மறு பிறவி எடுக்கும் ஆவி பழயதை நினைகதுடா செல்லம். உன் அம்மா மனித பிறவியும் எடுக்கலாம்,புழு,பூச்சி,பறவை,கடல்வாழ் உயிரினங்கள்,மிருகங்கள்,பாம்பு, திமிகலம்,என எதுவாகவும் பிறக்கலாம் .ஒரு உயிரினம் ஏழு ஜென்மம் எடுக்கலாம்.அந்த ஏழுஜென்மம் எடுத்து முடித்தவுடன் ,பிறவி எடுக்காமல் மோட்சமடைந்து இறைவனடி சென்றுவிடுவார்கள் “. என்று தாத்தா கூறியதும் ,எனக்கு ஆவல் மேலும் ஏற்படவே,

“அம்மா உடம்பை விட்டு பிரிந்த ஆவி, எந்த உடலுக்குள் போகவேண்டும் என்பதை அம்மா ஆவி முடிவு செய்யுமா? கடவுள் முடிவுசெய்வாரா ?தாத்தா ,என்றேன்.

“முடிவு எடுப்பது அம்மா கையில் இல்லை.எல்லாம் கடவுள்தான்

முடிவுசெய்வார்.வெயிலினால் கடல் நீர்
ஆவியாகி மேலே சென்று கறிய மேகங்களாகி ,
மீண்டும் இவ்வுலகிற்கு மழையாக பொழிவது
போல, உடலில் இருந்து பிரியும்
ஆவியான பஞ்ச பூதங்களும் , மீண்டும் திரும்ப
பூமிக்கே வந்து மறுவாழ்வு பெற்று வாழும் . நீ
சின்ன குழந்தை போக, போக
புரிந்துகொள்வாய்" என தாத்தா ஈஸ்வரன்
சொல்லி முடித்ததும் நான் விடாமல்
தொடர்ந்தேன்.

"எப்படி அம்மா உடலில் இருந்து பஞ்சபூதகளும்
திரும்ப பூமிக்கு வரும். அம்மா உடம்பைத்தான்
எரிதுவிடுவார்களே தாத்தா? என்றேன்.

"உன்அம்மாஉடல்தான்எரிந்துசம்பல்ஆகுமேதவிர,அ
அவற்றைஎடுத்துசென்றுஆற்றிலோ,கடலிலோ,
அல்லதுகுளத்திலோகலக்கும்போது,அந்தசாம்பலில்
உள்ளஅணுக்களை,மீனோஅல்லதுகடல்வாழ்உயிரி
அந்தமீனைஒருபறவையோ அல்லதுமனிதனோ,
மிருகமோசாப்பிட்டால்,உன்அம்மாவின்
உடலில்இருந்தஅணுக்கள்அதைஉண்டபறவைக்கும்,

மனிதனுக்கும்,
மிருகத்திற்கும்சென்றுவிடும்.உன்அம்மாமறுபடியும்ஒ
மிருகமாகவோ,
அல்லது பறவையாகவோ பிறப்பாள்
.இப்படி உன் அம்மாவின் உடலில் இருக்கும், கண்
புது உடலில் வாழ்ந்து வரும்.இதைதான் மறுஜன்

“சீக்கிரம் உடலை குளுப்பாட்டி அலங்காரம்
செய்யுங்கள்,மணி எட்டாகிவிட்டது.இன்னும்
ஒரு மணி நேரத்தில் வீட்டை விட்டு சடலம்
வெளியே போய்விடவேண்டும்” என காரியம்
செய்ய இருந்த நபர்
உத்தரவிடுகொண்டிருந்தார்..

வீட்டில் இருந்த அனைவரும் உடனே
சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்தனர். பாட்டி
கமலா அழ ஆரம்பித்துவிட்டார்கள்.அதை
பார்த்ததும் சுற்றி இருந்தவர் கண்களிலும்
கண்ணீர் தாரை தாரைதாரையாய்
வழிந்தோடியது.

தாத்தா ஈஸ்வரனும், மாமா ஜகந்நாதனும்

துரிதமாக அம்மாவின் உடல் மீதிருந்த
மலர்மாலைகளை எல்லாம் எடுத்தது ஒரு
பிளாஸ்டிக் பையில் போட்டுவிட்டு, மேலே
போர்த்தியிருந்த பட்டுபுடவைஐயும் எடுத்து
அதே பையில் போட்டு ,அந்த பையை
குப்பைதொட்டியில் தூக்கிப்போட
ச்சொல்லிவிட்டு,அம்மாவின் உடலை வீட்டின்
பின்புறமுள்ள வெராண்டாவில் போட்டிருந்த
மரபெஞ்சில் கிடத்தினார்கள், அப்பாவும,மாமா
ஜகன்னாதனும், தாத்தா ஈஸ்வரனும்.

அம்மாஉடல்பெஞ்ச்சில்கிடத்தப்பட்டதும்அனைவரை
கதவைசார்திவிட்டனர் .
அம்மாஉடலின்அருகேபாட்டிசரசாவும்,சித்திராஷ்மியு
,பெரியஅத்தைரோஜியும்
,பெரியம்மாசேதுவும்மற்றும்சிலஉறவுக்காரபெண்மண
அம்மாவின்மேலிருக்கும்உடைகளைஎடுக்குமாறுஉத்த
மைதிலிஅம்மாவின்உடல்அருகேவந்துநின்றுகொண்(

“நான் உடைகளை நீக்குகிறேன், யாராவது
உடலை தூக்கி பிடித்து உதவிசெய்யுங்கள்”
என்றாள் .

விமலா மாமியும் ,பெரியம்மா சேதுவும் அம்மாவின் உடலை தூக்கி பிடிக்க, மைதிலி அம்மா உடல் மீதிருந்த ஒவ்வொரு துணியையும் எடுத்து சுருட்டி ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு முடித்தாள்.பிறகு அருகில் உள்ள தண்ணீர் நிரப்பியிருந்த அண்டாவிலிருந்து தண்ணீரை ஒரு குவளையில் எடுத்து தலை முதல் கால்வரை ஊற்றி கழுவினார்கள்.

அம்மாவின் உடல் வற்றி போயிருந்தது.வயிறு ஒட்டி உள்ளே போயிருந்தது .அம்மா உறங்குவதுபோலவே இருந்தது.தண்ணீரால் கழுவிவிட்ட பிறகு அரைத்து வைத்திருந்த மஞ்சளை எடுத்து உடல் முழுதும் பூசினார்கள்,பிறகு சந்தனத்தையும் எடுத்து உடல்முழுதும் தடவி மறுபடியும் தண்ணீரை உற்றி கழுவி விட்டு முடித்தவுடன்,விமலா மாமி பாட்டி சரசாவிடம்,

“பாட்டி இப்போது குழந்தைகள் நால்வரும் அம்மாவின் உச்சந்தலையில் எண்ணெய் வைப்பது சாஸ்திரம்,எனவே குழந்தைகளை

உள்ளே வரச் சொல்லுங்கள் என்றார்கள்.

அம்மாவின் உடலை கழுத்துக்கு கீழே ஒரு
துணியால் மறைத்தபடி ,அண்ணன்
ஷான்,தம்பி பாட் ,தங்கை ஆனஹியையும் ஒருவர்
அங்கேயே கழுவி கொண்டு
ரூமை விட்டு வெளியே சென்றனர்.கடைசியாக அ
அம்மா தலையில் எண்ணெய் வைக்கும்படி, என் எ
எண்ணையை வைக்க மிகவும் பயமாக இருந்தது.
தயக்கத்துடன் பயந்து, பயந்து அம்மா உடல் அரு
 பார்த்த விமலா மாமி என் கையை பிடித்து, அம்
வைக்க
 உதவியது, எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.
பெற்ற அம்மாவாக இருந்தாலும், அவர்கள் உடல்
மிகவும் பயந்தது அலறியது என்பதை இன்னும்
என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கடைசியாக அம்மாவின் தலையில் வாய்த்த
எண்ணெயை ஷாம்பூ போட்டு கழுவி சுத்தம்
செய்து மறுபடியும் உடலில் தண்ணீர்விட்டு
கழுவி, துண்டால் .துடைத்துவிட்டு,முகத்தில்
மஞ்சளும், தடவி, நெற்றியில் மிகபெரிய குங்கும

த்தை வட்டவடிவமாக இட்டு,பிறகு மாம்பழ நிரந்த்தில் உடலும்,மரூன் நிறத்தில் மிக அகலமான தங்க ஜரிகை இட்ட பார்டருடன் உள்ள பட்டு புடவையை பரத நாட்டிய பாணியில் கட்டிவிட்டு மேலே மரூன் நிறத்தில் ரவிக்கையையும் அணிவித்து அலங்காரம் செய்து முடித்தார்கள்.

விராண்டாவிற்கு அருகிலுள்ள அறையிலிருந்து ப்ரோகிதர் குரல் கேட்டது.

“சீக்கிரம் ஹாலுக்கு எடுத்துவாருங்கள்.நேரம் நெருங்கி கொண்டேயிருக்கிறது.”என்றார்

“எல்லாம் முடிந்து விட்டது . இன்னும் ஒருசில நிமிடத்தில் உடலை ஹாலுக்கு கொண்டிபோகலாம்” என பாட்டி சரசா பதில் குரல் கொடுத்தார்கள்.என் மனம் இனம் புரியாமல் திக் திக் என அடித்துகொண்டது.ஒரு ஓரமாக நின்று அம்மாவின் உடலை மற்றவர்கள் அலங்காரம் செய்வதை பார்த்த வண்ணம் நின்றிருந்தேன் .

தலை நிறைய மல்லிகை பூவும்,கழுத்தில் மிக பெரிய ரோஜாபூ மாலையும் போட்டு தயார் செய்தவுடன் வெராண்டாவில் கதவை, விமலா மாமி திறந்துவிட்டு " தயாராகிவிட்டது உடலை ஹாலுக்கு எடுத்துசெல்லலாம் "என்றார்கள்.

உடனே மாமா,அப்பா, மற்றும் தாத்தா, மூவரும் சென்று அம்மாவின் உடலை எடுத்து வந்து மறுபடியும் ஹாலின் நடுவிலுள்ள மரபெஞ்சில் கிடத்தியவுடன்,அம்மாவின் உடலை பார்க்கவும்,கடைசி ஊர்வலத்தில் பங்குகொள்ள வந்திருந்த உறவினர்களிடமும்,நண்பர்களிடமும் ப்ரோகிதர்,

"கடைசியாக ஒரு முறை அனைவரும் உடலை வந்து பார்த்துவிட்டு ,மாலை போடுபவர்கள்,உடல் மீது மாலையை சார்த்திவிட்டு செல்லுங்கள். இன்னும் அரைமணி நேரத்தில் உடலை வீட்டிலிருந்து எடுத்து சென்றாகவேண்டும், சீக்கிரம்" என அவசர படுத்தினார்.

ஒருவர் பின் ஒருவராக வந்து அம்மாவின் மீது மலர் மாலையை குவித்தார்கள்.அம்மாவின் கூட வேலை செய்பவர்கள் நிறைய பேர் வந்திருந்தனர்.அம்மாவின் முகம் மற்றும் உடல் முழுதும் தெரியாத வண்ணம் மலர் மாலை குவிந்தது.மாலைகள் குவிய, குவிய ,தாத்தா ஈஸ்வரன் அவற்றை எல்லாம் ,அம்மா உடலில் இருந்து எடுத்து ஒரு கூடையில் போட்டுகொண்டேயிருந்தார்கள்.

இதற்கிடையில் வீட்டின் முன் தென்னை ஓலையால் பின்னப்பட்ட தடுக்கு தயாராக இருந்தது.நான்கு பேர் அதை தூக்கிசெல்வதற்காக தயாராக இருந்தார்கள், தாத்தாவும், மாமாவும் ஒரு பக்கம் தூக்கிசெல்வதாக முன்பே அறிவித்துவிட்டார்கள்.அதன் அருகில் களிமண்ணால் செய்யப்பட்ட மண் செட்டி தயாராக இருந்தது.

வீடு முழுதும் ஒரே பரபரப்பாக காணப்பட்டது. அழுபவர்கள் ஒருபக்கமும்,மாலை அணிவித்து

அம்மாவுக்கு அஞ்சலி செய்பவர்கள் ஒருபுறமும்,சுடுகாட்டிற்கு அம்மா உடலை எடுத்துசெல்லும் வேலைபாடுகள் செய்பவர்கள் ஒருபுறமும், வாசலில் வெண் சங்கு ஊதிகொண்டிருப்பது ஒருபுறமுமாக ஒரே பரபரப்பாக இருந்தது.

முத்த பிள்ளைதான் எரித்து கொண்டிருக்கும் மண் செட்டியை முன் னே எடுத்து செல்ல ,அம்மாவின் உடலை கிடத்திய ஓலை தடுக்கையை நாலுபேர் அவன் பின்னால் தூக்கி செல்ல ,ஆண் நண்பர்களும், உறவினர்களும் பின்னால் சுடுகாடுவரை செல்வது இந்துமத கலாசாரம்.

அம்மாவின் முகத்தை உற்று பார்த்தேன்,எந்தவித சலனமும் இல்லாமல் அசந்து உறங்குவது போல் இருந்தது. இவ்வளவு ஆர்ப்பாட்டத்திற்கு இடையிலும், நிம்மதியாக படுத்து உறங்கிகொண்டிருந்தார்கள்.அம்மாவை இனிமேல் பார்கவே முடியாது.அம்மா இல்லாமல் எப்படி காலம் தள்ளப்போகிறோம்.யார் எங்களுக்கு

இனிமேல் படிப்பு சொல்லி கொடுக்கப்போகிறார்கள்.என்று என் உள் மனது கலங்கியது. அண்ணன் ஷான் என் அருகே வந்து , “எனக்கு பயமாகவும்,மனது கஷ்டம்மகவும் இருக்குடீ,நான் எப்படி நம் அம்மா மீது நெருப்பை போட்டு எரிக்கபோகிறேன்.” என்றான்.

“வேறு யாரையாவது போடா சொல் அண்ணா ,நீ ‘அம்மாவை எரிக்காதே.பாவம் அம்மா ,அவுங்களுக்கு வலிக்கும்” என்றேன்.

போடீ, அம்மா இறந்துவிட்டார்கள் .அதனால் அவங்களுக்கு எதுவும் தெரியாது.எனக்குதான் மனது கஷ்டமாக இருக்கு”. என்றான்.

“நீ போகாதே அண்ணா , யாராவது கொள்ளிவைக்கட்டும் அம்மாவிற்கு” என்றேன் மறுபடியும்.

“நான்தான் முத்தபிள்ளை,அம்மாவுக்கு நாந்தான் கொள்ளிவைக்கவேண்டும்.நீ

கொடுத்துவைத்தவள், .பெண்ணாக பிறந்து விட்டதால், இதிலிருந்து தப்பித்துவிட்டாய்.நான் பையனாக,அதுவும் முத்த பையனாக பிறந்து விட்டதால் இப்படி நம்மை பெற்ற அம்மாவை, நானே எரிக்கவேண்டிய நிலை இருக்கிறது" என சிவந்து குளமாகிய் கண்களுடன் குரல் தழும்ப கூறியது கேட்ததும் எனக்கும் அழுகை பொங்கியது.

நேரம் யாருக்காகவும் காத்திருக்காது வேகமாக பறந்தது.என் மனதை யாரோ அழுத்துவது போல் ஒரு உணர்வு ஏற்பட்டது.அம்மா உடல் எரித்து விட்டால் ,அம்மாவின் ஆன்மா இவ்வுலகில் சுற்றிவரும் என் தாத்தா சொல்வது உண்மை என்றால்,உடல் வேறு ,ஆன்மா வேறு ,என்றால் அம்மாவின் உடலை விட்டு ஏன் ஆன்ம சென்றுவிட்டது.அம்மாவிற்கு 39 வயதுதானே ஆகிறது. ஆன்மா நினைத்தால் இன்னும் சிறுதுகாலம் எங்கள் நால்வருக்காக அம்மாவின் உடலில் இருந்திருக்கலாமே ? .ஆன்மாவிற்கு ஏன் அம்மாவின் உடல் பிடிக்காமல், அதை விட்டு சென்றுவிட்டது.

ஆன்மா இருக்கும் இடம் தெரிந்தால்., நான் அதை கெஞ்சி கூத்தாடி திரும்ப அம்மாவின் உடலுக்குள் வந்துவிடுமாறு கேட்கலாமே .என்றெல்லாம் என் மனம் ஏங்கி தவித்தது.

இந்துமதப்படி இறந்தவர்கள் மீண்டும் பிறப்பது உண்மை என்றால் இப்போதே அம்மா ஆன்மா யாருக்காவது குழந்தையாக பிறந்திருப்பார்களா?அந்த குழந்தை வளர்ந்தவுடன் எங்களை அடையாளம் செய்யுமா?அப்படியே அடையாளம் கொண்டாலும், நாங்கள் அதை அம்மா என கூப்பிடமுடியுமா?அம்மாவின் ஆன்மா ஆணாக பிறந்துவிட்டால் என்ன செய்வது?இப்படி எல்லாம் என் மனம் குழம்பி அலைபாய்ந்தது .ஆனால் விடை தான் தெரியாமல் ,இதற்கான விளக்கத்தை யாரிடம் கேட்பது. என யோசிக்கையில் தாத்தா ஈஸ்வரனின் நினைவிற்கு வரவே , அவரை இப்போது இது பற்றி ஏதும் கேட்க முடியாது.இது சரியான நேரமும் இல்லை.பிறகு இந்த கேள்விக்கான விடையை கேட்டு தெரிந்துகொள்ளலாம்

என்றிருந்து விட்டேன் .

உறவினர்களும் ,நண்பர்களும் கூட்டம் கூட்டமாக எல்லா இடங்களிலும்
நின்றிருந்தனர்..அனைவரும் அழுதவண்ணம இருந்தனர்.தாத்தா ஈஸ்வரன் தன மகளின் அருகே நின்று அம்மாவின் முகத்தையே பார்த்துகொண்டு அமைதியாக நின்றிருந்ததை பார்கையில்,தன மகளுடன் இருக்கபோகிற அந்த குறுகிய நேரத்தை வீணடிக்க மனமில்லாது கடைசியாக, மலர் மலையை சரிசெய்யும் சாக்கிலாவது மகள் அருகில் இருக்க வாய்ப்பு ஏற்படுத்துகொண்டிருப்பது போல என் மனதில் தோன்றியது.

பாட்டி கமலா புலம்பி அழ ஆரம்பித்தார்கள்.
“மகளே நீ சிறு வயதில் இந்த நாட்டிய உடையில் மேடையில் ஏறி ஆனந்த நடனம் என்ற பாட்டுக்கு காலை தூக்கி மேடை அதிர ஒரு தட்டு தட்டி, காலை தூக்கி ,தூக்கி நின்று ஆடி அரங்கிலுள்ளவரகளை பிரம்மிக்க வைத்ததை பார்த்து பூரிப்பு அடைந்த

நானும்,உன் அப்பாவும் இன்று அதே நடன உடையில் எந்தவித அசைவும்,சலனமும்,பாவமும் இல்லாமல் இருக்கும் உன்னை பார்த்து கலங்கி நிற்கிறோமே, வயதான் காலத்தில் எங்கள் மனம் வேதனை படும்படி இப்படி கல்மனதாகி போயவிட்டியே ."பெத்த மனசு பித்து பேதை மனசு கல்லு"என்பதை உண்மை என்று நிரூபித்துவிட்டாயே".நாங்கள் என்ன பாவம் செய்தோம்?பெற்றவார்கள் உயிருடன் இருக்கும் போதே பெற்ற பிள்ளைக்கு கொள்ளிவைப்பது போல் ஒரு கொடுமையான தண்டனை வேறு யாருக்குமே வரக்கூடாது.மரண தண்டனையை விட இது மிக பெரிய தண்டனையம்மா இது "என கதறி கதறி அழுவதை பார்க்க அனைவரின் மனதும் கலங்கியது.

இந்துமத சட்டப்படி ஆண்கள் மட்டுமே சுடுகாட்டிற்கு சவ உடலுடன் செல்ல அனுமதி உண்டு.பெண்கள் மற்றும் குழந்தைகள் யா அண்ணனுடன் சென்று அங்கு சுடுகாட்டில் என்ன நடக்கிறது என்று பார்க்க எண்ணம் தூண்டியது.பெண்ணாக இருந்ததால் என்னால்

அது முடியாத காரியம் என நான் நன்கு அறிவேன்.இது பற்றியும்தாத்தாவிடம் சமயம் வரும்போது கேட்டு தெரிந்துகொள்ளவேண்டும் என என் கேள்வி லிஸ்டில் இந்த கேள்வியையும் சேர்த்துக்கொண்டேன்.

தமிழில் ஒரு வியாக்கியானம் உண்டு."வீடுவரை உறவு.வீதிவரை மனைவி,காடுவரை பிள்ளை,கடைசிவரை யாரோ?"

உண்மைதான். மனிதனுக்கு உ யிருடன் இருக்கும்போது எவ்வளவோ இருந்தாலும் இறந்தவுடன் அவனுக்கென்று எதுவும் இல்லாமல் எரிந்து சாம்பலாகி விடுகிறான்.எரிந்து சாம்பலாகவும் , மண்ணோடு மண்ணாக புதைந்து மடியும் நாம், நமகூட வராத உறவினர்களுக்க்காகவும், பொருளுக்காகவும் ஆசைப்பட்டு, காலத்தை வீணாகிக்கொள்கிறோம் .நாம் செய்யும் நல்லதாகிய தர்மமே, அதாவது கர்மா நம்முடன் கடைசிவரை இருக்கபோகிறது.

மக்கள் உயிருடன் இருக்கும் வரை, இறந்தால்

நம் கூட வரவிருக்கும் நல்லதையும் தர்மத்தையும் செய்தால் ,மறுபிறவி என்று ஒன்று இருந்தால் அந்த நல்ல கர்மா நம்மை நல்வழி படுத்தும்.என என் மனதிற்குள் நினைத்துகொண்டேன்.

“நேரம் ஆகிவிட்டது .உடலை வெளியே எடுத்து ,தென்னை ஓரலை தத்தில் கிழக்கு பார்த்து தலையை வையுங்கள்.எல்லோரும் கடைசி அஞ்சலியை விரைவாக முடிதுகொல்லுங்கள்”என ப்ரோகிதர் குரல் கொடுக்கவே, அம்மாவின் உடலை தூக்கி கொண்டு சென்று
வீட்டின் வாயிலிற்கு வெளியே ,அம்மாவின் தலை வைத்தார்கள்.

அம்மாவின்உடலையும், தலையையும்தாத்தாஈஸ்வரனும்,மாமாஜகன்னாதனும் வீட்டிற்குமுன்னேஉள்ளபடியில்இறங்கிகான்க்ரீட்நே

மலர்மாலைகளை சரிசெய்தார்கள்.

இப்போதுஎங்கும்அமைதிநிலவியது.ரொம்பவும்

நிசப்தமாக இருந்தது.அந்த நிசப்தம் என் வயிற்றை கலைகியது.

எல்லோரும் கடைசியாக ஒருமுறை முகத்தை பார்த்துக்கொள்ளுங்கள். உடலை சுடுகாட்டுக்கு தூக்கி செல்லப்போகிறோம் என்றார் காரியம் செய்பவர்.

எல்லோரும் அம்மாவின் முகத்தை பார்க்க சற்றே அருகில் வந்தனர். நானும் அருகில் சென்று கடைசியாக பார்த்துக்கொண்டேன்.
“ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்,மாண்டோர் திரும்புவதில்லை ” என்ற பழமொழிகேர்ப்ப, இனி நாங்க நாலு பெரும் அழுது புரண்டு, வேண்டினாலும் இந்த அம்மாவை நாம் பார்க்கபோவதிலை.எனவே முடிந்தவரை அம்மா முகத்தை நன்றாக பார்த்து என் மனதில் பதித்து வைத்து கொண்டால், அம்மா நினைவு வாரும் போதெல்லாம் என் மனக்கண்ணில் வரவழைத்து பார்த்து கொள்ள வசதியாக இருக்கும் என எனக்குள் சொல்லி கொண்டேன்.அம்மா அருகில் நின்று கண்

இமைக்காமல் அவர்கள் முகத்தை உற்று பார்த்தேன். அனால் நங்கள் நால்வரும் அழவேயில்லை.

சுற்றியிருந்த அனைவரும் அழுதனர் எங்கள் நால்வரைத் தவிர.

சங்கு ஊதியது.அம்மா உடல் இருந்த தட்டியை தூக்க இருந்த நாலு பேரும் வந்து அம்மா உடலை தூக்கினர். “சவத்தின் காலை முதலில் வெளியே எடுத்து செல்லுங்கள்,என உரத்த குரலில் கூறினார். தலை பக்கம் முதலில் போககூடாது எனவும் எச்சரித்தார், .

முதலில் அண்ணன் நெருப்பு செட்டியை கையில் எடுத்துகொண்டான். அண்ணனை முதலிலேயே மொட்டை அடித்து வெள்ளை வேஷ்டி அணிவித்து தயாராக நிர்கவைதிருந்தார்கள். அவன் நெருப்பு செட்டியுடன் வெளியே சென்றதும், பின்னால் அம்மாவின் உடலை தூக்கி சென்றார்கள்.

பாட்டி கமலா “ஓ” வென கதறி அழுதார்கள்.”எங்களை விட்டுட்டு நீ மட்டும் போரியாடி குழத்தை”உனக்கு எப்படி மனம் வந்தது” ஐயோ, என் பெண்ணை தூக்கி செல்லாதீர்கள். போகாதே என் மகளே போகாதேடி” என அழுது புரண்டார்கள்.பெரியம்மா சேது பாட்டியை அனைத்து பிடித்து ஆறுதல் கூறி வீட்டினுள் அழைத்து வந்தார்கள்.

நாங்க மூவர் மட்டும் இன்னும் அழாமல் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்தவண்ணம் நின்றிருந்தோம் .திக் ப்ரிம்மை பிடித்தது போல் இருந்தது .நாங்க முணு பேரும் , ஒரு ஓரமாக ஒருவரை ஒருவர் ஒட்டியபடி நின்றிருந்தோம், தங்கை ஆனஹி என் கையை பிடித்துகொண்டு நின்றிருந்தாள் .பாவம் ,அவள் அம்மாவுடன் அதிக நாள் இல்லாததால் அவளுக்கு எதுவுமே புரியவில்லை. தம்பி பாட்டும் ஒன்றும் புரியாமல் திருதிருவென முழித்துக் கொண்டு , எங்களை ஒட்டி நின்றுகொண்டிருந்தான்

3

அத்யாயம்-மூன்று

முதன் முதலாக என்னை எதோ ஒரு பயம் கவ்வியது.அம்மாவின் உடல் வீட்டில் இருக்கும் வரையிலும், மற்ற எல்லா உறவினர்கள் வீட்டில் இருக்கையில் என மனதில் இந்த வித ஒரு சஞ்சலமும் இல்லாமலிருந்தது. இப்பொது அம்மாவின் உடலும் வீட்டில் இல்லை, எல்லா உறவினர்களும் வீட்டை விட்டு சென்றுவிட்டனர். வீடு முழுது முழுவதும் மிகவும், அமைதியாகவும், அனைவரும் வீட்டை சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.இபோதுதான் நாங்கள் முவரும்

தனியாக விடபடடதாக உணர்ந்தேன்.என்
மனதில் எதோ ஒரு கிலி பிடித்து
ஆட்டியது.வீடு முழுதும் எதோ
வெறிச்சென்றிருந்தது.

வீட்டில் வேலை செய்யும் வேலை ஆட்கள், வீட்ட
இதற்கிடையில் வேலை ஆட்கள் ஒவ்வொரு அற
செய்த ஒருசில மணி நேரத்தில், சுடுகாட்டிற்கு ெ
போய், குளித்துவிட்டு வீட்டிற்குள் வந்து கொண்டி
எல்லோரும் குளித்து முடித்தே வீட்டிற்குள் வருவத

இனி என்ன நடக்க இருக்கபோகிறதோ ? நாம் எ
அண்ணன் ஷான் வீட்டிற்குள் வருவதை
பார்த்தேன்.அடையாளமே தெரியாமல் அவனை
மொட்டை அடித்திருந்தார்கள்.அவன் முகத்தை
பார்த்தேன். அவன் கண்கள் அழுது
சிவந்திருந்தது ."அண்ணா நீ என்ன
பண்ணினாய் சுடுகாட்டில் ? என்று கேட்டேன்.

நான் கேட்டதுதான் தாமதம் அவன்
கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோல்
பெருக்கெடுத்து ஓடியது.அவன் வாயிலிருந்து

பேச்சு வரவில்லை.அவன் கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீரிலிருந்து விஷயம் சற்றே புரிந்துகொண்ட, மேற்கொண்டு ஏதும் கேட்காமல் அமைதியாக இருந்துவிட்டேன்.

அம்மாவின் உடல் இந்நேரம் சாம்பலாகி விட்டிருக்கும் .இனி அம்மா இல்லாமல் எப்படி காலம் தள்ளபோகிறோம்?.அம்மா,அப்பா இருவரும் சம்பாதிக்கும்போதே அவர்கள் சம்பாத்தியம் போதாமல் தத்தளிதோம்.இப்ப்போது அப்பாவின் ஒருவர் வருமானத்தில் எப்படி சமாளிக்கபோகிறோம். அப்பாவின் வருமானம் அவர்கள் சூதாடவே போதாதே, அப்படி இருக்க எப்படி வீட்டு செலவுக்கு சமாளிக்கபோகிரார்கள்.? என என் மனம் வெகுவாக கலங்கி நின்றது . எதுவானால் என்ன ,வாழ்கை எப்படியோ ஓடத்தான் போகிறது,கவலைப்படுவதால் எதையும் மாற்றிவிடமுடியாது.என்னை எந்த சூழ்நிலையிலும் சமாளிக்க தயார் பண்ணிக்கொள்ள வேண்டியதுதான் என என்னை நானே சமாதான படுத்திகொண்டேன்.

தாத்தா ஈஸ்வரன் குளித்து முடித்துவிட்டு வீட்டிற்குள் நுழைந்தபடி ஹாலில் உட்கார்ந்திருந்த பாட்டி கமலாவிடம், “எல்லாம் முடிந்துவிட்டது கமலா” என குரல் தழுதழுக்க கூறியதும்,

“நம் மகள் எரிந்து சாம்பலாகிவிட்டளா ?இதற்குத்தான அவளை நாம் பெற்று இவ்வளவு நாள் வளர்த்து ஆளாக்கிநோமா?என அழுது புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள். எல்லா காரியமும் முடிந்தது என்ற செய்தி கேட்டதும் மீதி இருந்த உறவினர்களும், தங்கள் வீட்டிற்கு கிளம்பி சென்றுவிட்டனர்.கடைசியாக அம்மாவின் பெற்றோர்களும்,மாமா ஜகன்னாதன் குடும்பத்தாறும், பெரியம்மா சேது குடும்பத்தாரும் அம்மாவுக்கு பால் தெள்ளிக்கும் நாள் மற்றும் நேரம் முதலியவற்றை குறித்து கொண்டு கிளம்பி சென்றுவிட்டனர்.அவர்களும் சென்றவுடன் நாங்கள் நால்வரும் செய்வதறியாமல் ஒரு ஓரத்தில் நின்று கொண்டிருந்தோம்

“அம்மா, நானும்,குழந்தைகளும் இன்று

சென்றுவிட்டு நாளைக்கு வரவா? அல்லது தங்கிவிட்டு முன்றாம் நாள் காரியம் முடிந்தவுடன் வீட்டிற்கு செல்லவா? என பாட்டி சரசாவிடம் கேட்டதற்கு,

“எப்படி இருந்தாலும் நீ இருந்துதான் காரியத்திற்கு வேண்டிய எல்லா வேலைகளும் செய்தாக வேண்டும்,வேறு யாரும் இங்கு துணைக்கு இல்லை.அதோடு இல்லாமல் முன்றாம் நாள் காரியத்திற்கு வேண்டிய செலவும் நீதான் கொடுத்தாக வேண்டும். எங்களிடம் அவ்வளவு பணம் இப்ப செலவு செய்ய முடியாது.” என திட்டவட்டமான குரலில் கூறினார்கள்.

“என்னிடம் இப்போது அவ்வளவு பணம் இல்லையே அம்மா” நான் இதுமாதிரி ஆகும் என அதிர்பார்காததால் ,பணத்தை திடீரென் தயார் செய்ய முடியாதே?”என அப்பா நீட்டி முழக்கினார்கள்.

” ஏன் இல்லை?மங்கை சாவதற்கு

முதல்நாள்தான் அவளுடைய சேமிப்பு பணத்திலிருந்து ருபாய் 5000/-எடுத்து உன்னிடம் கொடுத்திருக்காளே ,அதை கொடுத்தால் இந்த மூன்றாம் நாள் காரியத்திற்கும், 15ஆம் நாள் காரியத்திற்கும் வைத்துக்கொள்ளலாமே?நீ பணம் கொடுக்கவில்லை என்றால் எந்த காரியமும் செய்ய முடியாது.கேட்பவர்களுக்கு நீதான் பதில் சொல்லவேண்டியிருக்கும்." என பட்டி சரசா மிக தெளிவாகவும், அமைதியாகவும் கூறினார்கள்..

அப்பாவின் முகத்தில் ஆச்சர்ய குறி தெரிந்தது.புருவத்தை தூக்கிய வண்ணம் "எப்படி தெரியும் உங்களுக்கு? யார் சொன்னது?" என அப்பா சற்றே கோபம் தொணிந்த குரலில் கேட்டார்கள்.

"மங்கையின்அக்காசேதுதான்சொன்னாள் .அவர்களிடம்முன்றாம்நாள்காரியத்தைபற்றியும், பதினைந்தாம்நாள்காரியத்தைபற்றியும்பேசும்போது, கூடபிறந்தவர்களும்

"எங்கள் பெண் அவள் சாவிற்கும்

,காரியத்திற்கும் அவளே தன சேமிப்பிலிருந்து இரண்டு நா ட்களுக்கு முன், தன் புருஷனிடம் ரூபாய் 5000 த்தை கொடுத்துவிட்டு இறந்துவிட்டாள் .நாம் யாருமே செலவு பண்ணவேண்டிய அவசியம் இல்லை." என கூறிவிட்டார்கள்.என்றதும் ,

அப்பாசற்றுநேரம்திகைத்துநின்றுவிட்டு ,பதில்ஏதும்பேசாமல்தன்சட்டைபையில்வைத்திருந்த 3000/-தைஎடுத்துபாட்டியிடம்கொடுத்துவிட்டு

"இப்போதைக்கு இவ்வளவுதான் என்னால் கொடுக்கமுடியும் ,இதற்குள் எப்படியாவது முடித்து விடுங்கள்" என அரை மனதுடன் பணத்தை பாட்டியிடம் கொடுத்துவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்று விட்டார்கள்.

நல்லவேளை சேது நம்மிடம் இந்த விஷயத்தை கூறினாள் .இல்லாவிட்டால் தேவன் நமக்கு பணம் கொடுக்காமல் ஏமாற்றியிருப்பான்"என பெரிய அத்தை ரோஜி அங்கலாய்த்துக்கொண்டார்கள் .

தம்பி பாட் ,அண்ணன் ஷான், ஆனஹி,மற்றும் நானும் வெளியே வெராண்டாவில் உட்கார்ந்துகொண்டு பேசிகொண்டிருந்தோம் அன்று மதியான சாப்பாட்டிற்குபிறகு.

“அண்ணா நீ அம்மா உடல் மீது நெருப்பு போட்டாயா?என்றேன்

“அம்மாவின் உடலை முதலில் நிறைய விறகுகளும்,விரட்டிகளும் அடுக்கியிருந்ததில் மேல் ,அம்மாவின் கால் கிழக்கு பக்கம் பார்த்தாற்போல் கிடத்தினார்கள்.பிறகு இன்னும் கொஞ்சம் விறகு,மற்றும் விரட்டிகளை அம்மாவின் உடல்மீது அடுக்கினார்கள்.பார்க்க மனது மிக கஷ்டமாக இருந்துது. பிறகு நான் கொண்டு சென்ற நெருப்பு சட்டியை அங்கு வைத்துவிட்டு, என் தோளில் தண்ணீர் நிரப்பிய ஒரு மண் சட்டியை ஒரு குச்சியில் கட்டி, அதை என் லெப்ட் சைடு தோளில் தூக்கி கொண்டு ஆண்டிக்க்லோக்கில் அம்மாவை முன்றுமுறை சுற்ற சொன்னார்கள், என் பின்னால் மாமா ஒரு கூர்மையான ஐரன் ராடை கையில் வைத்துக்

கொண்டு வந்தார்கள். நாம் அம்மாவின் தலை பக்கத்திற்கு வந்ததும் அந்த ஐரன் ராடால் ஒரு தட்டு தட்டினார்கள். முதல் சுற்றில் பானையின் கீழ் பகுதில் ஓட்டை போட்டார் மாமா. தண்ணீர் வழிதோடியது. இரண்டாவது சுற்றிலும், அம்மா தலை பக்கத்திற்கு வந்ததும் மறுபடியும் மாமா மறுபடியும் நடுவில் ஒரு ஓட்டை போட்டார்கள்., மறுபடியும் தண்ணீர் வழிந்தோடியது. முன்றாம் முறை, அம்மா தலை மாட்டிற்கு நான் வந்ததும் மாமா மறுபடியும் மேல் பகுதியில் ஓட்டை போட்டவுடன் என்னை அந்த மண் பானையை கீழே போட்டு விட்டு, திரும்பி பார்க்காமல் வேகமாக சுடுகாடைவிட்டு போகசொல்லிவிட்டார்கள்..

மண் பானையை ,என் பின் பக்கமாக போட்டுவிட்டு திரும்பி பார்க்காமல் என்னை கூட இருந்த சிலபேர் வெளியே அழைதுவந்துவிட்டார்கள். அதன் பிறகு என்ன நடந்தது என எனக்கு தெரியோது.” என்றான்.

“ஏன் நீ திரும்பி பார்க்ககூடாது என

சொன்னார்கள்?”என் கேட்டேன்.

“தெரியாது” என ஒரே வார்த்தையில் பதிலளித்தான்.

“சரி, சமயம் வரும் போது இது பற்றியம் தாத்தா ஈஸ்வரனிடம் விளக்கம் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என என் கேள்வி பட்டியலில் இந்த ஒரு கேள்வியையும் சேர்த்துக்கொண்டேன்

“நம்ம அம்மா இந்நேரம் எரிந்து சாம்பலாகி இருப்பார்கள் இல்லையடா அண்ணா ?” என் கேட்டேன்..

அண்ணன் பதில் ஏதும் பேசாமல் மௌனமாக என்னை பார்த்தான்.தம்பி பாட்டும்..தங்கை அனஹியும் நாங்கள் பேசுவதை கேட்டுக்கொண்டு எங்கள் அருகில் உட்கார்ந்திருந்தாகள்.

சிறுது நேரம் பேசாமல் இருந்துவிட்டு, பிறகு தன பேச்சை தொடர்ந்தான் அண்ணன்,” நாளை மறுநாள், மூன்றாம் நாள், பால் தெளிக்க

சுடுகாட்டுக்கு போகும் போது, அம்மாவின் சாம்பலை ஒரு பத்திரத்தில் போட்டு கொடுப்பார்களாம் ,அதை எடுத்து சென்று கடலில் அல்லது ஆற்றில் கரைத்து விட வேண்டுமாம்"என்றான்.

"எதுக்குடா சாம்பலில் பால் தெளிக்கிறார்கள். சாம்பல் எப்படி பால் குடிக்கும்.?அதிலும் ஏன் மூன்றாம் நாள் பால் தெளிக்கிறார்கள்? " என கேட்டேன்.

" செத்தவர்கள் ஆவி இந்த பூமியில் சுற்றிகொண்டிருகுமாம். அவர்கள் பசியுடன் இருப்பதால் பால் தெளித்தவுடன் பசியாறி திருப்தியுடன் மற்றொரு உடலை தேடி சென்றுவிடுவார்களாம்." என்றான் .

அன்று பொழுது எப்படியோ போயிற்று. அன்றிரவு எங்க நாலு பேருக்கும் தூக்கமே வரவில்லை. அதிலும் எனக்கு மிகவும் பயமாகவே இருந்தது. அம்மாவின் ஆவி இந்த வீட்டை சுற்றி வருமா?அம்மா பேயாக திரிவார்களா?என

நினைத்து கொண்டே கண்ணை திறக்காமல் கெட்டியாக மூடிக்கொண்டேன். கண்ணை திறந்து பார்க்க மிகவும் பயமாக இருந்தது.போர்வையால் தலை முதல் ,கால் வரை இழுத்து மூடிக்கொண்டேன்.

மறுநாள் வழக்கம் போல எழுந்து , காரியங்களை முடித்துவிட்டு,மறுநாள் பால் தெளிக்கும் காரியத்திற்கும் ,11ம் நாள் காரியத்திற்கும் வேண்டிய பொருட்களையெல்லாம் பட்டியல் போட்டுவிட்டு,,யார் யாரை எல்லாம் அழைப்பது என்ற பட்டியலையும், முகவரிகளையும் வீட்டிலுள்ள பெரியவர்கள் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

ப்ரோஹிதரை அழைத்து 11-ம் நாள் தேதியையும்,காரியம் நடக்க இருக்கும் நேரமும் பாட்டி சரசா குறித்து கொண்டார்கள்.

“தேவன் இதோ மாதிரி பத்திரிக்கை போர்ஹிதர் கொடுத்திருக்கிறார்,யார்யாருக்கு அனுப்ப

வேண்டும் என்ற லிஸ்டும் இந்த காகிதத்தில் எழுதியிருக்கிறேன்.இன்றே சென்று பக்கத்து தெருவிலுள்ள பதிப்பகத்தில் அச்சடிக்க கொடுத்துவிட்டு,இரண்டு நாட்களுக்குள் தயார் செய்யும்படி கூறிவிட்டு அதற்கான பணத்தையும் கொடுத்துவிட்டு வந்துவிடு"என பாட்டி சரசா அப்பாவிடம் பொறுப்பை ஒப்படைத்தார்கள்.

அன்றிரவுஅனைவரும்ஒன்பதுமணிக்கேதூங்கசென்
சந்திரா பாட்டியும்
,அப்பாவுடன்புறப்பட்டுஎங்கள்வீட்டிற்குசென்று
11-ம்நாள்காரியத்திற்கு,முதல்நாள்காலயிலேயேதிரு
நடக்கும்காரியத்திற்கு வேண்டிய
ஏற்பாடுகளைஅப்பாசெய்யவேண்டும்
பாட்டிசரசாகூறிவிட்டார்கள்

பாட்டியும், அத்தைகளும் மறுநாள் காரியத்திறகு வேண்டியவைகளை தயார் செய்துவிட்டு
,விளக்கை அணைத்துவிட்டு, படுக்க
சென்றுவிட்டார்கள்.

எனக்கு தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு,புரண்டு படுதுகொடிருந்தேன்.என் பக்கத்தில் தங்கை ஆனஹி படுத்திருந்தாள் .அவள் என்னைவிட ஐந்து வயதுக்கு மேல் சிறியவள்.அவள் எந்தவித சலனமும் இல்லாமல் தூங்கிகொண்டிருந்தாள் .

அந்த கும்மிருட்டில் தூக்கம் வராததால், என் எண்ண அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடார்ந்து அலைமோதிக்கொண்டிருந்தது ..மனம் கனத்தது.யாரோ என் நெஞ்சில் உட்கார்ந்து கொண்டு அழுத்துவது போல உணர்ந்தேன்.துக்கம் தொண்டையை அடைத்தது.முதல்முறையாக என் மனம், அம்மாவின் இழப்பை நினைத்து கலங்கியது. நாளை வீடு திரும்பினால் என்ன செய்யபோகிறோம்.பொறுப்பில்லாத அப்பா, தன் ஒரு சம்பளத்தில் எங்கள் நால்வரையும் எப்படி காபாற்றபோகிரார்கள். நாங்க நாலுபேரும் ஒரே வீட்டில் அப்பாவுடன் வாழபோகிரோமா?அல்லது நம் உறவினர்கள் எங்க நாலுபேரையும் பிரித்து விடிவார்களா? அப்படியே பிரித்துவிட்டால்

,யார் ,யார் எந்தெந்த வீட்டில் வளரபோகிறோம்?அப்பா எங்கு இருப்பார்கள்? எங்களை எல்லாம் எப்போதாவது வந்து பார்பார்களா?இல்லை ,இனிமேல் அப்பாவை நாங்க பார்க்கபோவதிலையா?பாட்டி சரசா அப்பாவிற்கு மறுபடியும் கல்யாணம் செய்துவைத்துவிடுவார்களா ?வருகிற சித்தி எங்களை கொடுமை படுத்துவார்களா?இல்லை பாசமாக வைத்துக் கொள்வார்களா?

இப்படி பலவிதமான கேள்விகள் என் மனதில் எழும்பி மனதை கலக்கியது. என்னையும் அறியாமல் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாக வழிந்தொடி தலையணை நனைத்தது.அழுதுகொண்டே விடியற்காலை முன்றுமணியளவில் தூங்கிவிட்டேன் .அம்மா இறந்தது கேட்டு அழுகைவரவில்லை,அம்மாவின் உடல் வீட்டைவிட்டு சென்றபோது அழுகைவரவில்லை,அனால் அம்மா இல்லாமல் எங்கள் எதிர்காலம் எப்படி போக போகிறது என்பதை நினைத்தபோது என் கண்களில் நீர் வழிந்தது நினைத்து வியந்தேன்.

காலை ஆறு மணியளவில் விமலா மாமி, எங்க நாலு பேரையும் எழுப்பி பல் விளக்கி,அப்படியே குளித்துவிட்டு வரச்சொல்லி அனுப்பிவைத்தார்கள்.நாங்க நாலுபேரும் குளித்துமுடித்து வந்ததும், தயாராக வைத்திருந்த காப்பியை கொடுத்து குடிக்க செய்துவிட்டு சென்றுவிட்டார்கள்.

நான் வெளி வெராண்டாவில் ஜன்னல் ஓரம் உள்ள சேரில் உட்காந்து கொண்டு வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன்.காலை இளம் வெயில், அழகிய நீல நிற வானத்தை பெரிய வட்ட வடிவான ஆரஞ்சு நிறத்தில் அலங்கரித்து கொண்டிருந்ததை பார்க்கும் போது ,என் எண்ணத்தில் சிவபெருமானின் மனைவி நீலநிற நீலாயதாட்சனியின் அகன்ற நெற்றியில் செந்தூர திலகம் போல அந்த செந்நிற வட்டவடிவ கதிரவினின் உதயம் காட்சி அள்ளித்தது.

பறவைகள் பலவிதமானவை தன இனிய குரலை எழுப்பிக் கொண்டு படபடவென்ற சத்தத்துடன்

வானில் சிறகடித்து அங்குமிங்குமாக சுறுசுறுப்பாக பறந்தோடிக்கொண்டு,கதிரவன் வரவை ஆனந்தமாக வரவேற்று கீதம் பாடிகொண்டிருந்தது .சேவல் கொக்கரகொவென்று கூவி இன்னும் தூங்கி கொண்டிருக்கும் உயிரினங்களை எழுப்புவது போல கொக்கரித்து கொண்டிருந்தது .சூரிய பகவானின் தோற்றம் கண்டதும் பூமியிலுள்ள அனைத்து ஜீவன்களும் சுறுசுறுப்புடன் மகிழ்ச்சியுடன் இயங்கிக்க்டோண்டிருப்பதை பார்க்கும்போது, இந்த அழகிய சொர்க்க பூமியில், இன்னும் சிறிது காலம் வாழ அம்மாவிற்கு கொடுத்து வைக்கவில்லையே என மனம் வேதை அடைந்தது.

தாத்தா ஈஸ்வரன், பெரியம்மா சேது, மாமா ஜகந்நாதன் மற்றும் அவர்கள் குடும்பத்தார் அனைவரும்,சித்தப்பா குமார் குடும்பம் ,இன்னும் சற்று நெருங்கிய உறவினர்கள், பால் தெளிக்கும் காரியத்திற்கு சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்தார்கள் .அண்ணன் ஷான்,அப்பா, தாத்தா ,மாமா ,சித்தப்பா மற்றும் சில உறவினர்கள்

சுடுகாட்டிற்குச் சென்று பால்தேளித்துவிட்டு ,அம்மாவின் சாம்பல் உள்ள பாத்திரத்துடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள் . \

அனைவருக்கும் சாப்பாடு பரிமாறப்பட்டது.அப்போது மாமா ஜகந்நாதன் அங்கிருந்த அனைவரிடமும்,

“நம் மங்கையின் எறிந்த சாம்பலை எடுத்து பாத்திரத்தில் போடும்போது அவளது பற்கள் அப்படியே சாம்பலின் நடுவே இருந்தது. அதை பார்கையில், மங்கை என்னை பார்த்து சிரிப்பது போல் இருந்தது”.என்றார்.

அனைவரும் மாமா சொன்னதை கேட்டுவிட்டு மௌனமாக இருந்தார்கள்.

சாப்பாடுமுடிந்ததும்அனைவரும்கிளம்பதயாரானார்க எடுத்து பையில் வைத்துக்கொண்டிருக்கையில்,

“குழந்தைகளை பத்திரமாக பார்த்துகொள்ளுங்கள் சித்தி” 11-ம் நாள் காரியத்திற்கு முதல் நாள் காலையில்

சாப்பாட்டிற்கே இங்கு வந்து விடுங்கள்". என அத்தை சாரா பாட்டி சந்திராவிடம் தொண்டை கரகரக்க கூறினார்கள்.

அப்பாவை பார்த்து அத்தை சாரா அழுதார்கள். "உன் வாழ்கை இப்படி ஆகிவிட்டதே அண்ணா".குழந்தைகளுடன் பத்திரமாக போய் வா. என்றார்கள்.

அப்பாவின் சித்தி சந்திரா பாட்டி திருமணம் ஆகி ஆறு மாதத்தில் கணவர் இறந்துவிடாராம் .அவர்களுக்கு குழந்தைகள் யாரும் கிடையாது.கணவர் இறந்த பிறகு, பாட்டி சந்திரா, அவர்கள் இளைய சகோதரர் வீட்டில் ,சிதம்பரத்தில் வாழ்ந்துவிட்டு,அம்மா இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்புதான் உதவிக்காக சிறுதுகாலம் எங்கள் வீட்டில் இருப்பதற்காக வந்திருந்தார்கள்.இப்போது அம்மா இறந்துவிட்டதால் ஒருவேளை பாட்டி சந்திரா எங்களுடன் எங்கள் வேட்டிலேயே நிரந்தரமாக தங்கிவிடலாம், என வீட்டில் பெரியவர்கள் பெசிகொண்டிருந்ததை எங்கள் காதுகளில்

விழுந்தது.

நாங்கள் ஆறுபேரும் வீட்டைவிட்டு வெளியே கிளம்பியதும் ,பாட்டி சரசாவும்,அத்தை சாராவும் எங்களை வழியனுப்ப வீட்டின் வெளிப்புற கேட் வரை வந்தனர்.அவர்களிருவரும் கண்கலங்க தற்காலிகமான பிரியாவிடை கொடுத்து அனுப்பினர்.போயி வருகிறேன் என்று நாங்களும், போயி வா என்று அவர்களும்,இறந்த வீட்டிலிருந்து கிளம்பும்போது கூறக்கூடாது என்று இந்துமத கலாசாரத்தில் இருப்பதால், எதுவும் பேசாமல் கலங்கிய கண்களையே ,அனைவரும் விடையாக பெற்று பஸ் நிலையம் நோக்கி நடந்தோம்.

பஸ் பிரயாணம் முழுதும் அனைவரும் மௌனமாகவே கழித்தோம்.அம்மா இறந்து எல்லாம் முடிந்து ,இந்த மூன்று நாட்களுக்கு பிறகுதான் எங்கள் அனைவரின் முகத்திலும் துக்கமும்,சோகமும் பார்க்க முடிந்தது.

மூன்று நாட்களுக்கு பிறகு அன்று வீட்டை

நோக்கி செல்லும்போது,அந்த தெருவில்
உள்ளவர்களும், அக்கம் பக்கத்தில்
உள்ளவர்களும் நாங்கள் வருவதை
பார்த்துவிட்டு, அவரவர்கள் வீட்டிற்குள் சென்று
ஜன்னல் வழியாக ஒரு ஓரமாக நின்று எங்களை
பரிதாப பார்வையுடன்
பார்த்துகொண்டிருப்பாதை நாங்கள் ஆறு பேரும்
உணராமலில்லை .

தெருவில் விளையாடிகொண்டிருந்த எங்கள்
வயது சிறுவர் சிறுமியர்கள் அனைவரும்
விளையாடுவதை நிறுத்திவிட்டு ,இந்த முன்று
நாட்களில் நாங்கள் எதோ அதிசய பிறவி
எடுத்து வந்திருப்பது போல வேடிக்கை
பார்த்துகொண்டு, மௌனமாக நின்றுபதை
பார்க்க எங்களைனைவருக்கும் சற்றே
சங்கடமாக இருந்தது.

பக்கத்து வீட்டில் குடியிருக்கும் மல்லிகா மாமி
,எங்களை பார்த்ததும் வெளியே ஓடிவந்து
எங்கள் நாவரையும் கட்டி பிடித்து முத்தமிட்டு
வீட்டிற்குள் அழைத்து சென்று,

“சாப்பிட ஏதும் நான் செய்து கொண்டு வரவா?.என அப்பாவிடம் கேட்டார்கள்.

” ரொம்ப தேங்க்ஸ்,அம்மா வீட்டிலேயே மதிய சாப்பாடு சாபிட்டுவிடோம்.இனி நைட் சாப்பாடுதான்,சித்தி இருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது சமைத்துவிடுவார்கள்.”என மல்லிகா மாமியிடம் கூறிவிட்டு எங்களை வீட்டிற்குள் அழைத்துசென்றார்கள்.

வீடு அம்மா இல்லாமல் வெறிச்சென்றிருந்தது.அம்மா படுத்திருந்த படுக்கை காலியாக இருந்தது.அம்மா படுத்திருந்த இடம்,அவர்கள் உபயோகித்து வந்த உடமைகளையும், அம்மாவின் உடைகளையும் பார்த்ததும் துக்கம் தொண்டையை அடைத்தது எனக்கு.

அண்ணன் ஷான்,தம்பி பாட் ,மற்றும் தங்கை ஆனஹி முவரும் வீட்டிற்குள் இருக்க பிடிக்காமல் வெளியே நண்பர்களுடன் விளையாட சென்றுவிட்டார்கள்.அப்பா பையை

எடுத்துக்கொண்டு இரவு சாப்பாட்டிற்கு தேவையான வெஜிடபள் வாங்க கடைக்கு சென்றுவிட்டார்கள்.சந்திரா பாட்டி சமையல் அறையில் சுத்தம் செய்து ,ஒழுங்கு செய்து கொண்டிருந்தார்கள்.

நான் வீட்டிலுள்ள முதல் அறையில் அம்மாவின் படுக்கை இருந்த கட்டிலில் உட்கார்ந்து கொண்டு தெருவில் நடக்கும் சம்பவங்களை ஜன்னல் வழியாக பார்த்துகொண்டிருந்தேன்.என் மனம் எதிலும் ஈடுபடாமல், என் கண்கள்தான் தெருவை வெறித்து பார்த்துகொண்டிருந்ததே தவிர ,என் எண்ண அலைகள பின்னோக்கி ஓடியது.நினைவலைகள் ஒன்றன் பின் ஒன்றாக பெருக்கெடுத்து வந்து என் நினைவில் மோதி சென்றது .

4

அத்தியாயம்-நான்கு

அப்பா தேவன் ஒரு சூதாட்டக்காரர்.குடும்பத்தை ப
கலைக்கல்லூரி ஒன்றில் உடற்பயிற்சி இயக்குநரா

அப்பாவிற்கு எவ்வளவு பணம் இருந்தாலும் சூதாட்டத்திற்கு போதாமல் இருந்தது. அம்மா ,அவர்கள் பிறந்தவீட்டில் பல வேலை ஆட்களுடன் ராணி போல, எந்த பொறுப்பும் இல்லாமல் செல்லமாக வளர்ந்துவிட்டதால் குடும்பத்தை சரிவர நடத்தும் திறமை இல்லாமல் இருந்தார்கள்.அப்பா,அம்மா இருவரும் குடும்ப பொறுப்பு ஏற்க்க திறமை இல்லாததால், நாங்க

நாலு பேரும், எடுப்பார் கைப்பிள்ளைகளாக மிகவும் அல்லலுற்றோம்.

அந்த அல்லல்களை நினைக்கும்போது உலகம் என்றால் என்ன? அதில் மக்கள் என்பவர்கள் யார்? அவர்கள் இடையில் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று எதுவும் புரியாமல், அவ்வளவு வெகுளியாக நாங்க நாலுபேரும் வாழ்ந்து, இவ்வளவு காலங்களையும் வீணடித்துவிட்டோம்.இனியாவது புத்திசாலிதனமாக வாழ வழி தெரிந்து கொள்ள வேண்டும் என மனதிற்குள் உறுதிபடுத்திக்கொண்டேன்.

எனக்கு வயது மூன்று அல்லது நான்கு என் நினைக்கிறேன்.எங்கள் குடும்பம் அப்பாவின் பெற்றோரின் வீட்டில் .கூட்டு குடும்பமாக இருந்தது.அந்த வீட்டில் எங்கள் குடும்பம் மட்டும் அல்ல,அப்பாவின் கூட பிறந்த அக்கா ரோஜியின் குடும்பம்,தங்கை சாராவின் குடும்பம்,தம்பி குமாரின் குடும்பம் மற்றும் தாத்தா சுந்தரம்,பாட்டி சரசாவின் கூடபிறந்தவர்களின்

குடும்பங்களும், ஒற்றாக ஒரே வீட்டில் வாழ்ந்துவந்தோம். தெருவிலிருந்து, மூன்று அல்லது நாலு படிகள் ஏறியதும் ,வெளிர் நீல நிற வர்ணம் பூசிய ,இரு புறமும் திறப்பது போல உள்ள மறக்கதவும். அந்த மரக்கதவு முழுமையாக மூடாமல்,மேல் பாதியில் இரும்பு கம்பிகள் போடப்பட்டிருந்தன.கதவை திறந்து உள்ளே நுழைந்ததும்,இருபுறமும் நீண்ட திண்ணையும்,அதை தாண்டிச்சென்றால் செருப்பு கழற்றிவைப்பதற்கென்று ஒரு நீண்ட விராந்தாவும்,அதை தாண்டி உள்ளே நுழைந்தால் மிகப்பெரிய வரவேற்பறையும் , விராந்தாவிற்கும் , வரவேற்பறைக்கும் நடுவில், மேலே திறந்தாற்போல் சூரியவெளிச்சம் உள்ளே வருமாறு அமைக்கபட்ட, வரிசையாக இரும்பு கம்பியால் மூடப்பட்டுஇருந்தது.அதை முற்றம் என கூறுவார்கள்.

அந்த முற்றத்தை சுற்றிதான் எல்லா அறைகளும் இருந்தது.வரவேற்பறையை தாண்டியதும், ஒருபுறம் எங்களுக்காக ஒதுக்கப்பட்ட குளியலறையும் ,அதை ஒட்டிய சமையலையும்

இருந்தது. எங்கள் சமையலறையின் பக்கத்திலேயே மற்றவர்களுக்கான பொது சமையலறை இருந்தது.எங்கள் சமையலறையை ஒட்டினாற்போல் மேலே செல்லும் மாடிப்படிகள் இருந்தது. வரவேற்பறையில்இருந்த பொது சமயலறைக்கு எதிரே , மிகப்பெரிய படுக்கை அறை ஒன்று இருந்தது. அதில் தான் எங்கள் சின்ன அத்தை சாராவும் ,மாமா ஸ்ரீனியும் இருந்தார்கள்.

பொது சமயலறைக்கு பின்னால் வரிசையாக முன்று குளியலறைகளும், ,இரண்டு டாய்லட்டும் , அதற்கு அடுத்தாற்போல் துணிதுவைப்பதற்கும் ,பாத்திரம் கழுவுவதற்கும் மிக பெரிய திறந்தவெளி முற்றமும் இருந்தது .

மேல் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகள், எப்படியும் பத்து படிகளுக்குமேல் இருக்கலாம்.அத்தனை படிகளையும் ஏறியதும் ரைட் சைடில் “எல்” வடிவ நீண்ட விராந்தா இருந்தது,அந்த விராண்டாவிலிருந்து மறுபடியும் இரண்டு படிகள் ஏறினால் பெரிய

திறந்தவெளி மொட்டை மாடி , அந்த மொட்டைமாடியின் கடைசியில்தான், எங்களுக்காக ஒதுக்கப்பட்ட மிக,மிகப்பெரிய படுக்கை அறை இருந்தது.

படியேறி எங்கள் படுக்கை அறைக்கு போகாமல் அந்த “எல்” வடிவ வராண்டாவில் தொடர்ந்து சென்றால், வரிசையாக ஐந்து படுக்கை அறைகள் கட்டப்பட்டிருந்தது.அதில் முதல் படுக்கை அறையில்தான் பெரிய அத்தை ரோஜீயின் குடும்பம் தங்கியிருந்தார்கள்.இரண்டாவது படுக்கைஅறையில் சித்தப்பா குமாரின் குடும்பம் தங்கியிருந்தது.மூன்றாவது ப படுக்கைஅறையில்தான் தாத்தா சுந்தரமும்,பாட்டி சரசாவும் தங்கியிருந்தனர்.நாலாவது மற்றும் ஐந்தாவது படுக்கை அறையில் மற்ற உறவினர்கள் தங்கியிருந்தனர்.

தாத்தா சுந்தரம் அரசாங்க ஆஸ்பத்திரியில் மருத்துவராக வேலை பார்த்துவந்தார்கள்.அவர்களின் மூத்த மகள்தான்

பெரியத்தை ரோஜீ ,இரண்டாவது எங்கள் அப்பா தேவன், முன்றாவது , எங்கள் சித்தப்பா குமார், நாலாவதும் கடைசியுமான சின்னத்தை சாரா.

பெரிய த்தை ரோஜீயின் கணவர் மாமா சந்தானம் ஒரு அரசாங்க அதிகாரியாக வேலைபார்த்துவந்தார்.அவர்களிருவருக்கும் இரண்டு மகன்களும், ஒரு மகளும் இருந்தனர்.எங்கள் வீட்டில் அண்ணன் ஷானும், நானும்,தம்பி பாட்டும் இருந்தோம். சித்தப்பா குமார் வீட்டி ல், சித்தி ராஷ்மியிம் அவர்களது இரண்டு மகன்களும் இருந்தனர்.சின்ன அத்தை சராவிற்கு திருமணம் ஆகவில்லை, எனவே அவர்கள் மட்டும் அந்த பெரிய படுக்கை அறையில் தனியாக இருந்தார்கள்

வீட்டில் எப்போதும் நிறைய உறவினர்கள் இருந்தவண்ணமே இருக்கும். அந்தவீட்டில் தினமும் 25 பேருக்கு குறையாமல் சதா கலகலவென்றிருக்கும். வேலைக்காரர்களே ஐந்து பேருக்குமேலிருந்தனர் .வீடு எப்பொழுதும்

கலாகலவேன்றிருந்ததால், எங்களுக்கு பொழுதுபோவதே தெரியாமலிருந்தது.

ஒரு நாள் விடியற்காலையில், பாதி தூக்கத்தில் புரண்டுபடுத்த என் காதுகளில், பல குரல்கள் இங்கும் அங்குமாக பேசுவதும்,பரபரவென வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் நடக்கும் சத்தம் கேட்டு, அரை தூக்கத்தில் வாரி சுருட்டி அடித்துக்கொண்டு எழுந்து, உடலை வளைத்து சோம்பல் முறித்தபடி சுற்றிமுற்றிலும் பார்த்தேன்.

அறையில் என்னைத்தவிர யாருமே இல்லாததை உணர்ந்தேன்.மெதுவாக அறியைவிட்டு வெளியே வந்து மொட்டை மாடியில் நின்று கொண்டு செய்வதறியாமல் முழித்துக்கொண்டு நின்றிருந்தேன்.என்னை கவனிக்க அந்த வீட்டில் யாருக்குமே நேரமில்லை அப்போது.அனைவரும் பரபரப்பாக ஏதோ முக்கியமான காரியத்தில் ஈடுபட்டு இருந்தார்கள்.

குளிக்கும் அரை கீழே இருந்ததால், மெதுவாக கைப்பிடியை பிடித்தவண்ணம் படிக்கட்டில்

இறங்கி கீழே சென்று கொண்டிருக்கும்போது அம்மா அவசர அவசரமாக வேலைக்கு கிளம்பிகொண்டிருந்தார்கள்.அம்மா வேலைக்கு செல்வதால் எங்க மூன்று பேரையும் பார்த்துக்கொள்ளவும்,சமையலுக்கும், மற்ற காரியங்களுக்கும் அறுபது வயது மதிக்கத்தக்க, ஒரு ஐயர் பாட்டி ஆனாவை வேளையில் வைத்திருந்தார்கள்.ஆனா பாட்டி மிகவும் குள்ளமாக,நாலரை அடி உயரம்தான் இருப்பார்கள் என நினைக்கிறேன்.சாதாரண கலர், தலையை எப்பவும் மொட்டை அடித்து,காவி நிற புடவையால் உடலை சுற்றி அணிந்து மற்றும் அவர்கள் மொட்டை தலையை அந்த காவி புடவை துணியால் மூடியிருப்பார்கள்.மேலே ப்ளௌஸ் ஏதும் போட்டிருக்கமாட்டார்கள். பாட்டி ஆனா எப்பவும் தம்பி பாட்டை தூக்கி இடுப்பில் வைத்திகொண்டே இருப்பார்கள்.என்னையும் ,அண்ணன் ஷானையும் பாட்டிக்கு அவ்வளவாக பிடிக்காது.ஏன் என்றால் நான் சதா அழுதுகொண்டே இருப்பேனாம்,அண்ணன் துரு

துருவென மிகவும் சேட்டை செய்துகொண்டே இருப்பானாம்.தம்பி பாட் மிகவும் சாதுவாக இருந்தததால் அவை பாட்டிக்கு மிகவும் பிடிக்கும்.ஆனா பாட்டி தம்பியை இடுப்பில் தூக்கி வைத்துகொண்டு ,அம்மா வேலைக்கு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதில் மிகவும் மும்முறமாக இருந்தார்கள்.

கீழே நடக்கும் பரபரப்பான நிகழ்ச்சிகளை பார்த்தவண்ணம் குளியலறைக்கு சென்று , கோபால் பல்பொடியை எடுத்து பல் விலக்கிவிட்டு,முகத்தை கழுவிவிட்டு அப்படியே சமயலறைக்கு சென்றேன்.கோபால் பல்பொடி என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும், அது சர்க்கரை போல் மிகவும் தித்திப்பாக இருக்கும்.

வேலைக்கு கிளம்பிகொண்டிருந்த அம்மா என்னை பார்த்ததும் பாட்டி ஆனாவிடம்,

“மாமி ,அனிதா பல்விளக்கி வந்துவிட்டாள் போலிருக்கிறது,அவளுக்கு சாப்பிட ஏதும் கொடுத்துவிடுங்கள்” என கூறிவிட்டு வெளியே

வேலைக்கு சென்றுவிட்டார்கள்.

ஏனோ தெரியவில்லை, வீட்டின் அனைவரும் அவரவர் வேலையில் மும்முறமாக இருந்ததாலோ என்னவோ, என்னை கண்டுகொள்ள யாரும் இல்லாததாலோ, நான் , அம்மாவுடன் போக வேண்டும் என என் மனம் தூண்டியது.ஆனா பாட்டி கொடுத்த அப்பளத்தை அவசராவசரமாக கையில் வாங்கிகொண்டு அனைவரையும் கடந்து வெளியே சென்று, அம்மா சென்ற வழியை பார்த்துக்கொண்டே, அவர்களை பின் தொடர்ந்து நடந்தேன்.நான் வீட்டைவிட்டு வெளியே சென்றதை யாரும் கவனிக்கவில்லை என்றே நினைக்கிறேன்.

அம்மா திரும்பிப்பார்க்காமல் வேகவேகமாக நடந்து போய் கொண்டிருந்தார்கள்.எனக்கு மூன்று அல்லது நான்கு வயதுதான் இருக்கலாம் என நினைக்கிறேன். அதனால் என்னால் அம்மாவின் வேகத்திற்கு சரியாக நடக்கமுடியாமல், சிறிது தூரத்திற்கு பிறகு

அம்மாவை காணாமல்,அம்மா சென்ற வழி தெரியாமல் முழி முழியென விழித்துக்கொண்டு ,அப்பளத்தை கையில் வைத்துகொண்டு நின்றிருந்தேன்.வீடு திருப்பி வரவும் வழிதெரியவில்லை.நடு தெருவில் நின்று கொண்டு அழுதுகொண்டிருந்தேன் அம்மாவை காணவில்லை என்று.,

என் கழுத்தில் ஒரு பவுனுக்கு அழகிய தங்க செயினும், அதில் எனக்கு பிடித்த வண்டி சக்கரம் போல டிசைனில் அழகிய பெண்டண்டும் அணிந்திருந்தேன்.காலில் ஒலி எழுப்பும் நெருங்கிய வெள்ளி முத்துக்கள் கொண்ட கொலுசும்,கையில் தங்க மோதிரமும்.காதில் சிறிய தங்க கம்மலும் அணிந்திருந்தேன்.வெள்ளையில் கருப்பு கட்டம் போட்ட ,முழங்காலுக்கு கீழே தொங்கிய கவுனும்,கையில் அப்பளத்துடன் அழுதுகொண்டு நின்றிருந்த என்னை பார்த்த ஒரு ரிக்ஷாகாரர் என்னிடம் வந்து ,

“பாப்பா நீ யாரும்மா ?இங்கு எப்படி வந்தாய்?

உன் வீடு எங்கே? என்று கேட்டார்.

நான் பதில் ஏதும் சொல்ல தெரியாமல்
தேம்பி,தேம்பி அழ
ஆரம்பித்தேன்.ரிக்ஷாக்காரருக்கு என்ன
செய்வது என தெரியாமல் ,

“பாவம் யார் வீட்டு குழந்தையோ,பார்க்க
சிவப்பா ,அழகா இருக்கு,பெரிய இடத்து
குழந்தை மாதிரி தெரிகிறது.தங்க
நகைகளும்,உயர்ந்த உடைகளும் உடுத்தி
இருக்கிறது. எப்படியோ வீட்டை விட்டு
வழிதவறி வந்துவிட்டது,இது யாரோட குழத்தை
என வழியில் வருவோர் ,போவோரிடம் எல்லாம்
விசாரித்து கொண்டே, என்னை தன கையில்
பிடித்துக்கொண்டே மெதுவாக
நடந்துகொண்டிருந்தார்.

ரிக்ஷாகாரர் பார்க்க மிகவும் கருப்பாக,சற்று
குள்ளமாக,முகத்தில் அடர்ந்த வெள்ளை
மீசையும்,,இடுப்பில் வெள்ளை அழுக்கு
வேஷ்டியை மடித்து கட்டியிருந்தார்.மேலே

சட்டை ஏதும் அணிந்திருக்கவில்லை.பதிலாக ஒரு சிறிய வெள்ளை துண்டை தோள் மீது போட்டிருந்தார்.அக்கறையுடன் என் கையை பிடித்து கொண்டு, நான் யார் வீட்டு பிள்ளை என கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருந்தார்.அவருக்கு வந்த சவாரிகளை கூட அவர்
பொருட்ப்படுத்தவில்லை . என்னை அவர் கைபிடித்து
அழைத்துசென்றுகொண்டிருந்தபோது, அந்த தெருவில் இருந்தவர்கள் அனைவரும், எங்களிருவரையும் முறைத்து ,முறைத்து பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்கள். அவர்கள் அனைவரது பார்வையிலும் சந்தேக குறி தென்பட்டது.ஏன் ரிக்ஷாகாரர் என்னை அழைத்துக்கொண்டு நடக்கிறார் என்று.

சிறிது தூரம் சென்றதும், எங்கள் குடும்ப புகைப்படக் காரரான , மாமா சுரேஷ் அந்த வழியாக, எங்கள் எதிர்புறமாக நடந்துவந்துகொண்டிருந்தார்.என்னை ஒரு ரிக்ஷா ஒட்டுபவருடன் பார்த்ததும் குழம்பிய என்னத்த்டன்,கேள்வி குறி முகத்தில் தோன்ற,

“நில்லுப்பா, இந்த குழந்தையை எங்கு அழைத்து போகிறாய்? என கேட்டார்.

“ஐயா ,இந்த பெண்குழந்தை யார் என தெரியவில்லை.நடு தெருவில் கையில் அப்பளத்துடன் அழுதுகொண்டு நின்றிருந்தது.குழந்தையின் உரிமையாளர் யார் என விசாரித்துக்கொண்டு வருகிறேன்.இதை நான் கடத்தி கொண்டு போகவில்லை.நான் ஒரு குடும்பஸ்தன்.என்னை சந்தேகிக்கவேண்டாம்.” என்றார் பணிவுடன்.

“அப்படியா?இந்த குழந்தை எனக்கு தெரிந்த குடும்பத்தை சேர்ந்தது.நான் அந்த குடும்பத்திற்கு வாடிக்கையாக புகைப்படம் எடுப்பவந்தான்.போனவாரம்தான் இந்த குழந்தையை புகைப்படம் எடுத்தேன்.வீடு இந்த தெரு முனையில் இருக்கிறது.நான் இந்த குழந்தையை அவர்களிடம் ஒப்படைத்துவிடுகிறேன்:”என சுரேஷ் மாமா கூறியதை நம்ப மறுத்தார் ரிக்க்ஷாகாரர்.

“ஐயா, நீங்கள் சொல்வதை நம்பி நான் குழந்தையை உங்களிடம் எப்படி ஒப்படைப்பது?வீடு இந்த தெரு கோடியில் இருப்பதாக சொன்னீர்கள்.நீங்களும்,இந்த குழந்தையுடன் என் ரிக்ஷாவில் ஏறி உட்காருங்கள்.நாம் இருவரும் சென்று உரியவர்களிடம் ஒப்படைத்துவிடலாம்”என்றார்.

” நீ சொல்வதும் சரிதான்” என போட்டோ மாமா ரிக்ஷா மாமா சொன்னபடி என்னை தூக்கி கொண்டு ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்துகொண்டார்.ரிக்ஷா மாமா, ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு வேகமாக ஓடினார்.வீட்டை நெருங்கும்போது,வீட்டின் முன் பாட்டி ஆனா அழுது புலம்பி ஊரையே கூட்டி, வீட்டின் முன் நிறுத்தியிருந்தார்கள்.

“ஐயோ ,வேலைக்கு போயிட்டு வீட்டுக்கு திரும்பி வரும் குழந்தையை பெற்றவர்கள் ,எங்கள் குழந்தை எங்கே மாமி என்றால், நான் என்ன பதில் சொல்வேன்?”என அழுது புலம்பிகொண்டிருந்தார்கள்.

அவர்கள் அழுது புலம்பி கொண்டே, நான் ரிக்ஷாவில் வருவதை பார்த்து விட்டார்கள்.ஓடி வந்து என்னைதூக்கி அனைத்து சரமாரி முத்த மழையை வாரிவழங்கினார்கள்."குழந்தே என் வயிற்றில் பாலை வார்தேடி நீ."என்று "ஓ"வென ஆனந்தம் தாங்காமல் அழுதுதீர்தார்கள்.நான் திரும்பி வீடுவந்து சேர்ந்தது குறித்து அணைத்து உறவினார்களுக்கும் போன உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது.

" நல்ல காரியம் நடக்கயிருக்கையில் இப்படி அபசகுனம் போல் குழந்தை காணமல் போய்விட்டாளே,என கஷ்டமாக இருந்தது".நல்லவேளை குழந்தை கிடைத்துவிட்டது,இனி கவலையில்லை" என பாட்டி சரசாவின் அக்கா மங்களம் பெருமுச்சுவிட்டார்கள்.

உறவினர்கள் நான் திரும்பி வந்த செய்தி கேட்டுவிட்டு தொடர்ந்து நடக்கவேண்டிய காரியங்களை செய்துகொண்டிருந்தார்கள். ஆனா பாட்டி எங்க முனு பேரையும்

மாடியிலுள்ள எங்கள் படுக்கை அறைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள்.

நாங்கள் இருந்த படுக்கை அறை மிக, மிக பெரிய அறையாகும்.மொட்டைமாடியிலிருந்து உள்ளே நுழைந்ததும் ரைட் ஹாண்ட் பக்கம் ஒரு மரத்தால் செய்யப்பட்ட டேபிளும் , அதன் எதிரே ஒரு நாற்காலியும் போடப்பட்டிருக்கும் . அறையின் நடுவில், சுவரோரமாக இரண்டு பேர் படுப்பதுபோல் ஒரு இரும்புகம்பியாலான கட்டிலும்,அதற்கு அடுத்தாற்போல் மற்றொரு கடைசியில், சுவர் ஓரமாக டிரங்கு பேட்டிகள் சிலவும்,ஒரு டீக் மரத்தாலான பீரோவும்,இருந்தது. அந்த பீரோவில் இருபுறமும் கதவுகள் வைத்து.ஒருபுற கதவில் முழு நீளத்திற்கு கண்ணாடி வைக்கப்பட்டிருந்தது.கட்டிலுக்கு எதிரே நடமாட மிக பெரிய இடமும் ,அந்த அறையின் இருபுறமும் பெரிய ஜன்னல்களும் வைக்கப்பட்டிருந்தது.ஒரு ஜன்னல் மொட்டைமாடியில் நடப்பவைகளை பார்ப்பதுபோலவும்,மற்றொரு ஜன்னல் பீரோவை ஒட்டி வெள்ளியே பக்கத்துவீடுகளை

பார்ப்பதுபோலவும் அமைக்கப்பட்டிருந்தது.

மாலை ஐந்து மணியளவில் அம்மா
வேலையிலிருந்து களைப்புடன் வந்து
கைபையை மேஜையின் மீது வைத்துவிட்டு ,
அருகிலுள்ள கட்டில் அமர்ந்தவண்ணம்,

“கீழே என்ன நடக்கிறது மாமி.நிறைய
உறவினர்கள் பட்டுபுடவகளுடன்
வரவேர்ப்பறையில்
உட்கார்ந்திருக்கிறார்களே,சமையல் மனம் வேறு
மூக்கை துளைக்கிறதே”.உங்களுக்கு விஷயம்
ஏதும் தெரியுமா?”என கேட்டார்கள்.

“கீழே நடப்பது இருக்கட்டும்.காலையில்
நடந்ததை கேட்டால் உன் மனம்
வேதனைப்படும் .”என ஆனா பாட்டி நீட்டி
முழக்கையில் ,

“ஏன் ,என்ன ஆச்சு?”,எதுவும் சண்டை
தகறாரா?”என அம்மா ஆர்வமுடன் கேட்டதும்.

“அந்த எழவெல்லாம் இல்லடியம்மா,” என

பதிலளித்துவிட்டு, காலையில் நான் காணாமல் போன விவகாரத்தை ஒன்று விடாமல் விளக்கமாக கூ றிமுடி த்தார்கள்.

உடனே அம்மா என்னை “அனிதா இங்க வா ,என அழைத்தார்கள்.அம்மா என்னை கட்டிபிடித்து கொஞ்ச போகிறார்கள் என்ற நினைப்பில், ஆவலுடன் அம்மாவின் அருகில் சென்றேன்.நான் எதிர்பார்த்ததற்கு மாறாக அம்மா என் காதுகளை திருகி பிடித்துகொண்டு,என் கன்னத்தில் ஒரு அரை ஒன்றை விட்டுவிட்டு,

“இனிமேல் ஆனாபாட்டியை விட்டு தனியாக நீ வெளியே போகக்கூடாது.திருடன் உன்னை தூக்கி கொண்டு போய் , கண்ணை இரண்டையும் பிடுங்கி, கைகால்களை வெட்டி, உன்னை ஊனமாக்கி ,தெரிவில் பிச்சை எடுக்க வைத்துவிடுவான்.பிறகு நீ எங்க யாரையும் பார்க்கவே முடியாது.புரியுதா?”என கோபத்தில் குரலை சற்றே உயர்த்தி பேசினார்கள்.

அம்மா கன்னத்தில் அறைந்தது, காது பக்கம் “ஜிவ்” என வலித்தது.காதை திருகியதால், அதுவேறு ஒருபக்கம் வலி தங்காது “ஓ ” வென நான் அழவே ,ஆனா பாட்டி குறுக்கிட்டு,

“குழந்தையை ஏன் அடிக்கிறாய்?அதற்கு என்ன தெரியும்?எல்லாம் என் தவறுதான்.நான் கொஞ்சநேரம் கவனிக்காமல் இருந்துவிட்டேன்.என்னை வேண்டுமானால் மனதார திட்டு ,குழந்தையை ஒன்றும் சொல்லாதே.” என்றார்கள்.

“பேசாமல் இருங்கள் மாமி,இப்ப இவளை நான் கண்டிக்காமல்விட்டுவிட்டால்,இதே மாதிரி மறுபடியும் என்னுடன் வருகிறேன் என எங்காவது போய் தொலைந்துவிடுவாள்.நம் அதிர்ஷ்டம் நல்ல ரிக்க்ஷாகாரரிடமுனம்,நம் குடும்ப போடோக்ராபரிடமும் கண்ணில் பட்டாள் .வேறு யாரு கண்ணிலும் பட்டிருந்தால் என்ன கதி ஆகியிருக்கும்?”

என அம்மா கூறியதும்,ஆனா பாட்டி பேசாமலிருந்
விட்டார்கள்.

அம்மா மறுபடியும் என்னிடம் திரும்பி,"இனி
இந்த வீடு வாசற்ப்படியை தாண்டி தனியே
எங்கும் போக கூடாது. அதிகப்ரசங்கி " என
கூறி மறுபடியும் கன்னத்தில் ஒரு அரை
விட்டார்கள். என் கன்னத்தில் இருந்து இரத்தமே
வெளியே வந்துவிடும்போல் சிவந்து இருந்தது.
கன்னத்தை பிடித்தவண்ணம
அழுதுகொண்டே,போகமாட்டேன் என்பதுபோல
தலையாட்டினேன்.

ஆனா பாட்டி எழுந்து வந்து என்னை அழைத்து 6

“பாவம் குழந்தை தொலைந்து, ஒரு மணி நேரத்தில்

" இந்த வீட்டில் இவ்வளவு மக்கள் இருந்தும்
,குழந்தை காணாமல் போனது யாருக்குமே
தெரியாமல் கவனக்குறைவாக இருந்தது
நம்முடைய குற்றமும் கூட, என என் மனது
மிகவும் வேதனைபடுகிறது."என வருத்தத்துடன்

கூறினார்கள்.

“அது போகட்டும்,கீழே என்ன நடக்கிறது என கேட்டாய் இல்லையா?என ஆனா பாட்டி பேச்சை வேறு திசைக்கு மாற்றினார்கள்.

” ஆமாம் ,இந்த கதையில் அதை மறந்தேவிட்டேன்.என்ன விசேஷமாம்?” என அம்மா தொடர்ந்தார்கள்.

உன் புருஷன் தங்கை சாராவிற்கு இரவு ஏழு மணிக்கு நிச்சயதார்தமாம்.மாப்பிள்ளை இன்ஜீநீரிங் படித்திருக்கிராராம். அதிலும் பி.எச்.டி.படித்தவராம்.அப்பா,அம்மா யாருமே பையனுக்கு கிடையாதாம்.ஒரே ஒரு அண்ணன் மட்டும் உண்டாம்.மாப்பிள்ளை பெயர் சீனுவாம்.இஅவருக்கு யாரும் இல்லாததால் கல்யாணத்திற்கு, பிறகு இந்த வீட்டோடு தங்க சம்மதித்துவிட்டாராம்.

மிக உயந்த படிப்பு படித்தவராகவும்,பெற்றோர்களும்,சகோதரிகள்

யாரும் இல்லாததாலும்,எந்தவித பிக்கல் ,பிடுங்கல் ஏதும் இல்லாத இடமாக இருப்பதால் ,வெளியே உறவுகாரங்களுக்கு தெரிந்தால் பொறாமையில் திருஷ்டி பட்டுவிடும் என இவ்வளவு ரகசியமாக வைத்துவிட்டு, இரண்டு நாட்களுக்கு முன்புதான், இந்த நிச்சயதார்த்தத்தை பற்றி சில உறவினர்கட்கு மட்டும் தெரிவித்தார்களாம்."என ஒரு மூச்சில் பாட்டி சொல்லி முடித்தார்கள்.

"இவ்வளவு விஷயங்கள் எப்படி உங்களுக்கு தெரிய வந்தது மாமி?" எனக்குகூட எதுவும் தெரியவில்லை.நான் இந்த வீட்டுக்கு மருமகள் என்றுதான் பேரு.அனால் கீழே நடக்கும் நிச்சயதார்ததிற்குகூட ஒரு வார்த்தை என்னிடம் கூறாமல் இருந்துவிட்டார்கள்." என ஆச்சர்யமாக கேட்டார்கள்.

"அது ஒன்றும் பிரமாதம் இல்லை,கீழே அவைகள் எ
என ஆனா பாட்டி மிக சாதாரணமாக கூறினார்கள

அம்மா அதன் பிறகு எதுவும் பேசாமல்

மௌனமாக ஜன்னலருகே உள்ள நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு வெளியே வேடிக்கை பார்த்துகொண்டிருந்தார்கள்.நான் தொலைந்த செய்தியும்,கீழே சின்ன அத்தை சாராவிற்கு நடக்கவிருக்கும் நிச்சயதார்கத்திற்கு அம்மாவுக்கு அழைப்பு கொடுக்கவில்லை என்ற மனக்கஷ்டமும்,அப்பாகூட இதுபற்றி தன்னிடம் ஏதும் கூறவிலையே என்ற எல்லாம் சேர்ந்து அம்மாவின் மனம் வெகுவாக பாதித்திருக்கவேண்டும் என்றே என் மனதில் தோன்றியது.

நான் மெதுவாக எழுந்து சென்று அம்மாவை ஒட்டி நின்றுகொண்டேன்.அம்மா என் தலையை தடவி கொடுத்தவண்ணம் மறுபடியும் வெளியே பார்த்து கொண்டிருந்தார்கள்..

கீழே சென்ற ஆனா பாட்டி ச சமயலறையிலிருந்து சுட ,சுட காபியை கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்துவிட்டு “கீழே சென்று முகம் கைகால்களை கழுவி கொண்டு வந்து காபியை குடியேன்”

என்றார்கள்.

“இல்லை ,இப்போது நான் கீழே போக விருப்பமில்லை” என கூறிவிட்டு பாட்டி கொடுத்த காபியை வாங்கி குடித்தவிட்டு, மறுபடியும் ஜன்னலருகே உட்கார்ந்து வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள்.நான்,அண்ணன்,மற்றும் தம்பி முவரும் மொட்டைமாடியில் விளையாடிகொண்டிருந்தோம்.சிறிது நேரத்திற்கெல்லாம் எங்களுக்கு பசி எடுக்க ஆரம்பித்துவிட்டது.

“அம்மா , எனக்கு ரொம்ப பசிக்குது ” என்றேன்.

சரி, எல்லோரும் ஒற்றாக கீழே சமயலறைக்கு போய் சாப்பிட்டுவிட்டு மேலே உடனே வந்துவிட வேண்டும்.அங்கு,இங்கு, ஓடாமல் ,எங்களுடன் போய் சாப்பிட்டு விட்டு,எங்களுடனே மாடிக்கு வந்து விடவேண்டும் ,புரியுதா?”என கண்டிக்கும் குரலில் கூறிவிட்டு ,சாப்பிட கீழே

அழைத்துசென்றார்கள்.

ஆனா பாட்டி தம்பி பாட்டை இடுப்பில் தூக்கி வைத்துகொண்டார்கள்.அம்மா அண்ணனையும் ,என்னையும் கையில் பிடித்துகொண்டு படியிறங்கி மீழே சென்று ,அங்கு பரபரப்பாக நடந்து கொண்டிருந்த நிச்சயதார்த்த கூட்டத்தை கடந்து எங்கள் சமையல் அறைக்கு சென்று சாப்பிட்டு முடித்துவிட்டு, சத்தம் போடாமல் மேலறைக்கு திரும்ப வந்து சேர்ந்தோம்.கீழே இருந்த யாருமே எங்களை ரொம்ப கவனித்ததாக தெரியவில்லை.அப்பா இன்னும் வீட்டிற்கு வரவில்லை. அப்பாவிற்கும் இந்த விஷயம் தெரியாது போலிருக்கிறது ,அதனால்தான் அப்பாவையும் அங்கு பார்க்கவில்லை நாங்கள் யாரும்.

அம்மா தரையில் உட்கார்ந்துகொண்டு,மடியில் சிறு பெஞ்சு போலுள்ள ட்ஸ்கை எப்போதும்போல் தன மடியில் வைத்துகொண்டு வகுப்பு பரீட்சை தாள்களை திருத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.நான் அம்மாவின் அருகில்

உட்கார்ந்து அம்மா எப்படி பரீட்சை தாளை திருத்தம் செய்கிறார்கள் என வேடிக்கை பார்த்துகொண்டிருந்தேன்.

ஆனா பாட்டி தம்பியை இடுப்பில் வைத்துகொண்டு மொட்டை மாடியில் நின்றுகொண்டு வானத்திலுள்ள நிலாவையும்,நட்ச்சத்திரங்களையும் காண்பித்து, தானும் நல்ல காற்று வாங்கிகொண்டு நின்றிருந்தார்கள்.அண்ணன் ஷான் அந்த அறையின் முலையில் பேப்பரில் எதோ கிருக்கிகொண்டிருந்தான்.

அந்த வீட்டிலிருந்து யாருமே அம்மாவிடம் வந்து ,ஏன் நிச்சயதார்த்த விழாவில் கலந்துகொள்ளவில்லை என்று கேட்கவும் இல்லை. சாப்பிடகூட அழைக்கவில்லை.அம்மாவும் அப்பாவும் கூட இந்த விஷயத்தை பற்றி ,அதன் பிறகு பேசியதாக எனக்கு நினைவில் இல்லை.காலம் உருண்டோடியது.நாங்களும் வளர்ந்துகொண்டே வந்தோம்.

தாத்தா சுந்தரம் தினமும் இரவு தாமதமாகத்தான் வீட்டிற்கு வருவது வழக்கம்.வீட்டில் நிறை பேர் இருந்ததால் தாத்தாவிற்கு யார் யார் என்று அடையாளம் கொள்ளவது மிகவும் கஷ்டமாக இருந்தது.யார் பேரும் தெரியாது தாத்தாவிற்கு. பாட்டி திரும்ப,திரும்ப தாத்தாவிற்கு அவரவர் பெயர்களை நினைவுபடுத்திக்கொண்டே இருக்கவேண்டும்.

நன்றாக நினைவிருக்கிறது.ஒருநாள் நான் முற்றத்திலுள்ள தினையின் அருகே நின்றுகொண்டிருக்கையில், தாத்தா சுந்தரம் அன்று சீக்கிரமாகவே வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.நான் அங்கு நின்றிருப்பதை பார்த்த தாத்தா சுந்தரம், யாரு நீ ?எதுக்கு இங்க நிக்கறே? உன் வீட்டுக்கு போ பாப்பா.என்றார்கள். நான் திருதிருவென முழித்தேன், உடனே பாட்டி சரசா அங்கு வந்து,"எதுக்கு இவளை வெளியே துரத்துறீங்க?"என் கேட்டார்கள்.

" மற்ற வீடு பசங்க நம்ம வீட்டில் ஏன்

நின்னுக்கிட்டு இருக்கு.?".அதனால்தான் சொன்னேன் என்றார்கள்.

"இது பக்கத்துவீட்டு குழந்தை இல்லை. நம்ம பையன் தேவனோட மகள்.அனிதா. அடியாளம் தெரியலையா உங்களுக்கு" என சிரித்து கொண்டே வேடிக்கையாக கேட்டார்கள்.

"தேவன் மகளா இவள்? நான் யாரோ என்று நினைத்தேன்," என்றார்கள் தாத்தா.

"நேற்று கூட இதே கேள்வியைத்தான் கேட்டீர்கள் இவளை பார்த்து. இன்றும் இதே கேள்வியை கேட்குரீர்கள்." என்றார்கள் பாட்டி.

:"நேற்று சிகப்பு சட்டை போட்டிருந்தது.இனிக்கு வேற டிரஸ் போடிர்ப்பதால் அடையாளம் தெரியவில்லை."என்றார்கள் தாத்தா.

"தினமும் குழந்தை ஒரே சட்டையா போட்டிருக்கும். நீங்க தினமும் குளிச்சிட்டு உடை மாத்துவது மாதிரி ,குழந்தைகளும்

டிரஸ்ஸை மாத்திடும்.உங்களுக்காக தினமும், ஒரே கலரில் ஒரே டிரஸ்ஸை உனிபார்ம் மாதிரி போட்டுவைக்கவேண்டியதுதான்" என சிரித்துக்கொண்டே கூறியது இன்னமும் என்னால் மறக்கமுடயாத ஒரு விஷமாகும்.

5

அத்யாயம்-ஐந்து

காலதேவன் யாருக்காகவும் காத்திராமல்
வெகுவாக ஓட்டிக்கொண்டிருந்தான்.சில
மாதங்கள் கழித்து வழக்கம் போல்
விடியற்காலையில் அனைவரும் எழுந்து
விறுவிறுப்பாக
இயங்கிகொண்டிருந்தாகள்.நானும் வழக்கமான
என் இடமாகிய மாடிப்படியில்
உடகார்ந்துகொண்டு அங்கு
நடப்பவைகளைஎல்லாம் வேடிக்கை
பார்த்துகொண்டிருந்தேன்.

ஹாலில் மாட்டியிருந்த பெரிய கடிகாரம்" டாங்
,டாங்"
எனஏழு முறை அடித்து ஓய்ந்தது.அந்த சமயம் தெ
துணியால் தொப்பி போல சுற்றி கட்டியிருந்தார்.நீ

"வூட்லே யாரும் இருக்குதா?"என அவரது உரத்த
கட்டை குரலில் கேட்டது,அங்கு முற்றத்தில்
வேலை செய்துகொண்டிருந்த முனியம்மா,

"யாருங்க வேணும்?" என பதில் குரல்
கொடுத்தாள் .

"வூட் மேலே தேவன் இருக்குதா?" என கேட்டார்
அந்த பெரியமீசைக்காரர் .

"அவுரு மேலே தூங்கறாரு" என முனியம்மா
சொல்லிமுடிப்பதற்குள் அங்கு வந்த பாட்டி
சரசா,

"என்னப்பா வேணும்?" என் கேட்டார்கள்.

"நாமோ தேவனை பார்த்து பேச
வந்திருக்குது,அத வரசொல்லு"என்றார்

“அவரு தூங்கறாரு.என்ன விழயம் என்று சொல்லு.அவர் எழுந்ததும் சொல்லிவிடுகிறேன்” என்றார்கள் பாட்டி சரசா.

“நிம்பல் தேவனுக்கு இன்னா உறவு?” என அந்த மனிதர் திரும்ப கேட்கவே,

” நான் அவருடைய அம்மாதான். விஷயத்தை முதலில் சொல்லு, எனக்கு சமயலறையில் நிறைய வேலை இருக்கு”.என பாட்டி அவசரப்படுத்தினார்கள்.

“நிம்பல் மகன் தேவன் நம்மகிட்டே ரூபாய் பத்தாயிரம் கடன் வாங்கிச்சு. இரண்டு வருஷம் ஆகுது.இதோ தரான்,அதோ தரான், என டெய்லி ஏமாத்துது.முதலும் தரான் இல்லை,வட்டியும் தரான் இல்லை.இன்னிக்கு கடைசி நாள் கேடு கொடுத்திருக்கிறான் நம்பள் .பணம் வசூல் செய்ய நம்மல் இன்னிக்கு வந்திருக்கிறான்.தேவனை பார்க்காமல் நாமோ இந்த இடத்தை விட்டு நகர்றான் இல்லை”.என உரத்த குரலில் கூறியதும்,.

பாட்டி சரசாவிற்கு அவன் சத்தம் போட்டது மிகவும் கவுரவ குறைச்சலாக படவே,மிகவும் பரபரப்புடன் , “இப்போது அவரு தூங்கறாரு, எழுந்ததும் உன்னை அவசியம் வந்து பார்க்க சொல்லுகிறேன்.இப்போது இங்கு நின்று சத்தம் போடாது போய்விடப்பா.”என கெஞ்சுவது போல பேசினார்கள்.

“எவ்வளவு நாள் நம்பிள் பொறுப்பான்?. இந்த திண்ணை மேலே நம்பிள் உட்கார்ந்திருக்கிறான்.அவரி எழுப்பி அனுப்பு.” என திட்டவட்டமாக கூறிவிட்டு திண்ணையை ஊதி சுத்தம் செய்துவிட்டு உட்கார்ந்துகொண்டார் பாட்டியின் அனுமதியில்லாமலேயே

“கத்தாதேப்பா, மெதுவா பேசு,அக்கம்பக்கதிலுள்ளவர்களுக்கு கேட்கபோகுது.நாங்க கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவங்க,தயவு செய்து இப்போது சென்றுவிட்டு அடுத்தவாரம் வா,எங்க மகனிடம் பேசி உனக்கு சேர வேண்டியதை கண்டிப்பாக

கொடுத்துவிட சொல்கிறோம்".என சமாதான படுத்துவதுபோல் பேசினார்கள்.

"நிம்பள் மகன் இப்படிதான் தினமும் சொல்லி எமாத்திவறான்.பெரியவங்க நிம்பள் மேலே மரியாதை வச்சு இப்ப நம்பில்பூறான்.அடுத்த வாரம் இதே நாள் ,இதே மணிக்கு நமோ திரும்பி வரான்.நிம்பள் மகன் தேவன் வட்டியும்,முதலும் நம்ம கைமேலே வைக்கிறான்.இல்லே வூட்லே இருப்பதை எல்லாம் ஜப்தி பண்ணி கொட்னுபொஇடுவான் நாமோ." என மிகவும் உறுதியான தோரணையில் சொல்லிவிட்டு ஒருவழியாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தார் அந்த மீசைக்காரர்..

அவர் சென்றதும் பாட்டி சரசா நிம்மதி பெருமூச்சுடன் முகத்தில் சற்றே கோபக்கனலுடன் சமயலறைக்கு சென்றுவிட்டார்கள்.இரு அத்தைமார்களும் பாட்டியை பின் தொடர்ந்து சமையலறைக்குள் சென்றார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் காலை உணவுடன்,காபியையும் கையில் எடுத்துகொண்டு பாட்டி சரசா , கையில் ,அம்மா கிட்டபோ ,இங்கெல்லாம் வரக்கூடாது".என அத்தை சாரா என்னை விரட்டி விட்டார்கள்.

கீழே இறங்கி சென்ற பாட்டி சரசா அங்கு வேலை செய்துகொண்டிருந்த ஜம்புவை ,

"ஜம்பு , மேலே போய் தேவன் ஐயாவை உடனே எழுந்து சென்று பெரிய அய்யாவை அவர்கள் ரூமுக்கு சென்று பார்க்கச்சொல்".
"ரொம்ப முக்கயமான விஷயம்,பெரிய அய்யா கர்த்துகொண்டிருப்பார்,எனவே மறக்காமல் இன்னும் அரை மணி நேரத்தில் போய் பார்க்கவேண்டும் என்று சொல்"என உத்தரவிட்டுவிட்டு சமயலறைக்கு சென்றுவிட்டார்கள்.

ஜம்பு மேலே உள்ள எங்கள் அறைக்கு சென்று கதவை தட்டியதும்,அம்மா கதவை திறந்து

“என்ன ஜம்பு” என்றார்கள்.

ஜம்பு விஷயத்தை அம்மாவிடம் கூறிவிட்டு சென்றுவிட்டான்.

ஜம்பு சென்றவுடன் அம்மா உள்ளே சென்று கட்டிலில் தூங்கிகொண்டிருந்த அப்பாவை தட்டி எழுப்பி,”எழுந்திருங்க,எதோ ரொம்ப முக்கியமான விஷயமாம், உங்க அப்பா உங்களிடம் பேசவேண்டுமாம்” என எழுப்பினார்கள்.

அரைகுறை தூக்கத்தில் கொட்டவிவிட்டபடி ,முனகிக்கொண்டே புரண்டுபடுத்த அப்பா “என்ன விஷயமாம்,கேட்டாயா?” என்றார்கள்.

“என்னிடம் எப்போதாவது,ஏதாவது உங்கள் குடும்பத்தார் சொல்லியிருக்கிறார்களா?.எல்லாம் உங்களிடம்தான் பேசுவார்கள்.சரியாக எட்டு மணிகெல்லாம் உங்கள் அப்பா அவர்கள் ரூமிற்கு உங்களை
எதிர்பார்த்கொண்டிருப்பார்களாம்,இப்போது மணி ஏழு முப்பது ஆகிறது.சீக்கிரம் எழுந்து பல்

விளக்கி,காப்பி குடித்துவிட்டு போங்கள் “என அப்பாவை அவசரப்படுத்தினார்கள் அம்மா.

தன அப்பா கூப்பிடுகிறார் என்றால் அது மிகவும் முக்கியமான விஷயமாகத்தான் இருக்கவேண்டும் என எழுந்திருக்க மனமிலாவிட்டலும் அப்பா அரைமனதுடன் எழுந்து கீழே சென்று எல்லா காரியங்களையும் முடித்துவிட்டு, தாத்தாவின் அறைக்கு சென்றார்கள், அதை பார்த்த ஜம்பு அவசர அவசரமாக சமயலறைக்கு சென்று பாட்டியிடம் விஷயத்தை கூறவே, பாட்டி எல்லா வேலைகளியிம் அப்படியே போட்டுவிட்டு மாடிக்கு தாத்தா இருக்கும் ரூமிற்கு விரைந்து சென்றார்கள்.

மாடிப்படியில் உட்கார்ந்து எம்ள்ளைவற்றையும் வேடிக்கை பார்த்துகொண்டிருந்த நானும் என் அண்ணன் ஷானும் பாட்டி சாராவை பின்தொடர்ந்து தாத்தாவின் அறை அருகே சென்றோம்.பாட்டி உள்ளே சென்றதும் மறுபடியும் தாத்தாவின் ரூம் கதவு சாத்தப்பட்டது.அன்று ஞாயிற்று கிழமை

என்பதை அனைவரும் வீட்டில் சவாகாசாமாக எழுதிருப்பதை கொண்டு தெரிந்துடோண்டேன்,

அம்மாவும்,ஆனா பாட்டியும் விஷயம் என்னவாக இருக்கும் என்ற பெரிய ஆவலுடன்,சற்றே சந்தேக குறி முகத்தில் தோன்றிய வண்ணம் மொட்டைமாடியில் நின்று வேடிக்கை பார்த்துகொண்டு நின்றிருந்தார்கள்.பாவம் அம்மாவிற்கு மீசைக்கார கடன்காரன் வந்து போனது தெரியாது.நான் சிறு குழந்தை என்பதாலும், மீசைக்காரன் எதற்கு வந்தான், கடன் என்றால் என்ன என்ற விவரம் முழுமையாக புரியாததால் அம்மாவிடம் எதுவும் சொல்ல தெரியாமல் முழித்துக்கொண்டு நின்றிருந்தேன்.

பிறகு மெதுவாக தாத்தாவின் அரை அருகே சென்று,அறையின் எதிரே இருந்த பாதி உயரம் உள்ள சிறிய சுவற்றின் மீது நானும் அண்ணனும் சாய்த்து நின்றுகொண்டு அப்பாவின் வரவிற்காக காத்துகொண்டு நின்றிருக்கையில்,அவர்கள் பேசுவது எங்களிருவரின் காதுகளிலும் சற்றே

விழுந்தது.அப்பா சற்று உரக்க பேசியதால் எங்களால் நன்றாகவே கேட்கமுடிந்தது.

“இப்போது திடீரென் என்னால் ருபாய் பத்தாயிரம் கொடுக்கமுடியாது அப்பா.நான் லோன் போட்டிருக்கிறேன்,அது வர ஆறுமாதம் ஆகலாம். வந்த பிறகுதான் கொஞ்சம் பணம் கொடுக்கமுடியும். அதுகூட மொத்தமாக என்னால் பத்தாயிரம் ரூபாயை கொடுக்கமுடியாது.கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கொடுக்கமுடியும்”. என்றார்கள்.

“கொடுக்கமுடியாதவன் எதற்கு அவ்வளவு ரூபாயை கடன் வாங்கினாய்?.அப்படியே வாங்கினாயே,இரண்டு வாருடத்தில் வட்டி கூட என் உன்னால் திருப்பி தர முடியவில்லை.இந்த இரண்டு வருடத்தில் கொஞ்சம் கொஞ்சம்மாக திருப்பி கொடுத்திருக்கலாம் இல்லையா?.ஈட்டிக்காரன் வீடு வந்து வசாலில் நின்று கத்தி நம் மானத்தை வாங்குமளவுக்கு அவனை ஏன் இழுத்தடிக்கிறாய்?உன் வருமானத்தை எல்லாம் என்ன செய்கிறாய்?”

என பாட்டி சரசா மிக கோபம் தொணிந்த குரலுடன் கேட்டார்கள்.

“போனதை பற்றி பேசி இனி ப்ரோவ்ஜனமில்லை .இனி நடப்பதை பேசுவோம்.எப்படி நீ முழுகடனையும் இன்னும் ஒரு வாரத்தில் திருப்பி தரப்போகிறாய்?கொஞ்சமாவாது பணம் சேர்த்து வைத்திருக்கிறாயா?அடுத்தவாரம் பணம் கொடுக்காவிட்டால் விட்டிகுருப்பதை ஜப்தி பண்ணி எடுத்துக்கொண்டு போவதாக கூறிவிட்டு சென்றிருக்கிறான் அந்த ஈட்டிக்காரன்.அவன் வந்தால் நீ என்ன பதில் சொல்லி சமாளிக்கபோகிறாய்? மேலும் அடுத்த வாரம் அவன் இந்த வீட்டிற்கு வரக்கூடாது.அவ்வளவுதான் நான் சொல்லுவேன்”.என தாத்தா சுந்தரம் சொன்னதும்.

“இப்போதைக்கு என்னிடம் சேமிப்பு பணம் எதுவும் இல்லை.அடுத்தவாரம் என்னால் கொஞ்சம் பணம் கூட கொடுக்க முடியாது என் ஏற்கனவே சொன்னேன்.உக்னலிடம் இருந்தால்

தற்சமயம் அவனுக்கு கொடுதுவிது செட்டில் பண்ணினால்,நான் போட்ட லோன் வந்ததும் திருப்பி தந்துவிடுகிறேன்."என்று தணிந்த குரலில் அப்பா கூறினார்கள்.

"எங்களிடம் அவ்வளவு பணம் கிடையாது.இப்போதுதான் சராவின் திருமணத்திற்கு என செலவு செய்தாகிவிட்டது.எனக்கோ வயதாகிக்கொண்டே போகிறது.இன்னும் எங்களிடமே எல்லோரும் பணம் எதிர்பார்த்தால் எப்படி? நீ எங்களை கேட்டா கடன் வாங்கினாய்?எப்படி கடன் அடிப்பாயோ தெரியாது.அந்த கடன்காரன் அடுத்தவாரம் இந்த வீட்டு வாசல் முன்னால் நின்று சத்தம் போடாமல் பார்த்துகொள்.இதுநாள்வரையில் இந்த தெருவில் மிக கௌரவமாக வாழ்ந்த குடும்பம் நாம்,ஈட்டிக்காரன் நம் வீடு முன்னால் நின்று சத்தம் போடுவது நம் குடும்பத்திற்கு இழுக்கு,அதோடு இல்லாமல் நம் வீட்டு மாப்பிள்ளைகளும்,மற்ற வேலைக்காரர்களும் நம்மீதிருக்கும் மதிப்பும்,மரியாதையும்

குறைந்த்விடும்.போயி பணத்திற்கு
எர்பாடுசெஇவதை பார்.”என அப்பாவிடம் கூறி
போக சொல்லிவிட்டார்கள் தாத்தா.

பேச்சு முடிந்து அவர்கள் வெளியே வரும் சமயம்
, நானும் அண்ணனும் குடுகுடுவென சென்று
மாடிப்படியில் உடகார்ந்துகொண்டோம்.அப்பா
முகத்தை தொங்கபோட்டு கொண்டு எங்கள்
அறைகக்குள் சென்றார்கள். அப்பா “உம் ” என
இருப்பதை பார்த்து அம்மாவும்,ஆனா பாட்டியும்
எஹ்டும் பேசவில்லை மௌனமாக
இருந்தார்கள்.அப்பா செருப்பை
மாட்டிக்கொண்டு அம்மாவிடம் எதுவும் பேசாமல்
வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டார்கள்.

மறுபட்டியும் பாட்டி சரசாவும்,
இரு அத்தைகளும் தாத்தா சுந்தரம் இருக்கும் ரூமிற்
அப்படி என்னதான் அவர்கள் பேசினார்களோ தெ

அன்று பகல் முழுதும் வீடு மிக நிசப்தமாக
இருந்தது.யாரும் யாருடனும் அதிகம்
பேசவில்லை.வெளியே சென்ற அப்பாவும்

மத்யானம் சாப்பாட்டு நேரந்த்திற்கு வீடு திரும்பினார்கள்.வீட்டிற்குள் வந்த அப்பா சற்றே நேரம் நாற்காலியில் மௌனமாக உர்கார்ந்திருந்தாகள்,பிறகு அம்மாவிடம் மெதுவாக பேச்சை ஆரம்பித்தார்கள்.தாத்தா கலையில் தன்னை கூப்பிட்டு அனுப்பிய விவரத்தையும், கலையில் கடன்காரன் வந்த விஷயத்தையும் கூறிவிட்டு,"உன்னால் எதுவும் பணம் ஏற்பாடு செய்யமுடியமா?" என மிகவும் தன்மையான குரலில் கேட்டார்கள் "என்னிடம் பணமாக எதுவும் இல்லை. எல்லா நகைகளும் அடகில் இருக்கிறது.இப்போது என்னிடம் இருப்பது காதில் இருக்கும் கழலும்,மூக்குத்தியிம்தான்.இதை வைத்தால் ரொம்ப பணம் கிடைக்காதே".என்றார்கள்

சிறிது நேரம் ரூமில் அமைதி நிலவியது.மேற்கொண்டு என்ன பேசுவது என்று யாருக்கும் புரியாமல் மௌனம் சாதித்தார்கள்.அப்பா தலையை சொறிந்துகொண்டு சிறிது நேரம் கட்டிலில் சாய்ந்து எதோ ஒரு யோசனையில்

ஆழ்ந்திருந்தார்கள்.

ஒரு வாரம் ஓடியது.மறு ஞாயிற்று கிழமையும் வந்தது.நானும் எப்போதும்போல் காலையில் எழுந்து என் வழக்கமான மாடிப்படியில் அமர்ந்து கொண்டு வேடிக்கை
பார்த்துகொண்டிருந்தேன்.அதே மீசைக்கார கடன்காரர் மறுபடியும் வீட்டின் முன் வந்து நின்று கொண்டு குரல் கொடுத்தார்.

“ஹரே தேவன் இருக்குதா வூட்லே”

வேலை செய்யும் பட்டு அவனை கண்டதும். “இருப்பா” ஏன் கூறிவிட்டு உள்ளே சென்று பாட்டியிடம் கூறியதும், பாட்டி என்ன சொனார்களோ தெரியவில்லை, பட்டு உள்ளே போன வேகத்தில் வெளியே வந்து மாடிக்கு சென்று அம்மாவிடம் விஷயத்தை கூறவே,அம்மா கீழே இறங்கி வந்து கடன்காரரிடம்,

“அவர் தூங்கறார்,இப்போது எங்களால் ஒரு வாரத்தில் பணம் ஏற்பாடு செய்ய

முடியவில்லை.கொஞ்சம் நாள் அவகாசம் கொடுப்பா ,எப்படியாவது திருப்பி தந்து விடுகிறோம் என கெஞ்சுவது போல் அம்மா கூறினார்கள்.

நாய் மாதிரி நம்பள் அலையிறான் தினமும்.நம்பளை பார்த்த நிமப்ளுக்கு தமாஷா இருக்குதா?.தேவனை வரச்சொல்லு.அதை பார்க்காமல் இந்த இடத்தை விட்டு நம்பள் இ"ஹரே என்னம்மா இது வம்பா இருக்குது.போனவாரம் தேவன் அம்மா சொல்லிச்சு,எப்படியாவது இந்த வாரம் கொடுக்க சொல்லிவிடுகேறேன்,அடுத்த வாரம் வா என்று,பெரியவங்க வார்த்தைக்கு மரியாதை வச்சு நம்பள் திரும்பி போனான்.இப்ப நீ வந்து புது கதை சொல்லுது." என சத்தமிட்டான்.

"நான் தான் சொல்லிட்டேனே இப்போது எங்களிடம் பணம் இல்லை,சிறிது நாள் அவகாசம் கொடு என்று" என திரும்பவும் பதிலளித்தார்கள்.

“நீ சொல்றதை நான் நம்பறான் இல்லை.உன் மாமியார் சொல்லிச்சு இந்த வாரம் என்று, நீ சொல்லுது இன்னும் கொஞ்சநாள் என்று.பணம் கொஞ்சமாவது கொடுக்காமல் இந்த வீட்டில் விட்டு இன்று நான் போறான் இல்லை.என்னம்மா இது படா பேஜாரா இருக்குது. உன் புருஷனிடம் பணத்தை கொடுத்துவிட்டு ன்னிக்கு நகர்றான் இல்லை” என கோபமாக குரலை உயர்த்தி பேசினார் அந்த மீசைக்காரர்.

அம்மா செய்வதறியாமல் முழித்துக்கொண்டே மேலே சென்று அப்பாவை எழுப்பி கீழே அனுப்பிவைப்பதாக சொல்லிவிட்டு சென்றார்கள்.வீட்டில் மற்றவர்கள் யாரும் தங்கள் ரூமை விட்டு வெளியே வராமல் இருந்தார்கள்.வேலைக்காரர்கள் உள்ளே இருந்து என்ன நடக்கிறது என மறைந்திருந்து கிசுகிசுவென பெசஇக்கொண்டு எட்டி,எட்டி பார்த்துகொண்டிருந்தார்கள்.

மேலே சென்ற அம்மா ,அப்பாவிடம் விஷயத்தை

கூறவே, அரைதூக்கத்தில் தள்ளாடியபடியே எழுந்து சட்டையை போட்டுக்கொண்டு

“என்னம்மா என்னை எழுப்பி போகச்சொல்கிறாய்.நீயே ஏதாவது சமாதானம் சொல்லி அனுப்பிவக்ககூடாதா.” என சலித்துகொண்டார்கள்.

“நான் எவ்வளவோ கூறியும் அவன் பணம் வாங்காமல் இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன் என திண்ணையில் உட்கார்ந்து சத்தம் போட்டு நம்ம எல்லாம் திட்டுகிறான்.உங்கள் கண்டிப்பாக பார்த்து பேச வேண்டும் என பிடிவாதமாக இருக்கிறான். என்றார்கள்.

அதை கேட்ட அப்பா எதோ முனுமுனுத்துக்கொண்டே கீழே சென்று கடன்காரனிடம் வெகுநேரம் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தார்கள்.அனால் மீசைக்காரர் இம்முறை அசருவதாக இல்லை.பணம் இல்லாமல் இம்முறை இந்த இடத்தை விட்டு நகருவதில்லை

என்ற முடிவுடன் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு உரத்தகுரலில் ஏதோதோ பெசிகொண்டிருதார் அப்பாவிடம்.

அவரை சமாதானம் படுத்தமுடியாமல்,அந்த மீசியாகாரரிடம் எதோ சொல்லிவிட்டு உள்ளே அந்த அப்பா நேராக சமயலறையில் இருந்த பாட்டி சரசாவிடம் எதோ பேசவே,மறுபடியும் பாட்டி சரசாவும் அப்பாவும் தாத்தாவின் அறைக்கு சென்றார்கள்.கதவை சார்த்திகொண்டு வெகுநேரம் பேசினார்கள்.பிறகு ஜம்புவை அழைத்து ,போயி அத்தை ரோஜி ,அத்தை சாரா,மற்றும் சித்தப்பா குமாரை தாத்தா ரூமுக்கு அழைத்துவரசொல்லவே,சில நிமிடங்களில் அவர்கள் அனைவரும் வரவே, அனைவரும் உள்ளே எதோ ரகசியமாக பேசினார்கள்.

சிறிது நேரந்த்திர்கெல்லாம் அப்பா கீழே சென்று மீசைக்கார கடன்காறரை அழைத்துக்கொண்டு தாத்தாவின் அறைக்கு சென்றார்கள்.மறுபடியும் உள்ளே அதிக நேரம் அனைவரும் ஏதேதோ பேசிகொண்டிருந்தார்கள்.ஆனா பாட்டியும்,

அம்மாவும் உள்ளே என்ன பேசுகிறார்கள்
அணிவாரும் என தாங்களுக்குள்
யுகித்துகொண்டு பேசிகொண்டிருந்தார்கள்.

“நீயும் போயேன் மங்கை. நீ இந்த வீட்டு
மருமகல்தனே, உன் புருஷன்தனே கடன்
வாங்கினான்.நீ பொய் என்ன பேசுகிறார்கள்
என கேள்.”எ ந ஆனா பாட்டி அம்மாவை
தூண்டிவிட்டு கொண்டிருந்தார்கள்.

“உங்களுக்கு தெரியாதது இல்லை மாமி.அவர்கள்
என்னை இந்த வீட்டு மருமகளாக நினைத்ததே
இல்லை .எப்பவும் ஒரு மூன்றாம்
மனுஷியாகத்தான் நடத்தி வருகிறார்கள்.நான்
என் வலிய போயி அவமான பட்டு வர
வேண்டும்.அவர்களாக சொன்னால்
கேட்டுக்கிறேன் ” என பேசாமல்
இருந்துவிட்டார்கள்.

ஒருவழியாக அனைவரும் தாத்தாவின் அறையை
விட்டு வெளியே வந்தார்கள். கடன்காரரும்
வெளியே வந்து எதுவும் பேசாமல் கீழே இறங்கி

சென்று விட்டார்.அப்பாவும் முகத்தை தூக்கி “உம் “என்று வைத்துகொண்டு எங்கள் அறைக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு செய்தி தாளை எடுத்து படிக்க ஆரம்பித்தார்கள்.

அம்மாவிடம் அப்பா எதுவுமே சொல்லவில்லை. அம்மாவும் அப்பாவிடம் எதுவும் என்ன பேசினார்கள் என கேட்கவும் இல்லை.ஒரு மாத காலம் எதுவும் நடக்காதது போல ஓடியது.அம்மாவிற்கும்,ஆனா பாட்டிக்கும் பலவிதமாக சந்தேக கேள்விகள் எழுந்தன. தாத்தா சுந்தரம் கடன்காரரிடம் என்ன கூறியிருப்பார்?எப்படி பணத்தை திருப்பி கொடுக்க போகிறார்கள்?அல்லது ஏற்கனவே கொஞ்சம் பணத்தை கொடுத்து செட்டில் பண்ணிவிட்டார்களா?என அடிக்கடி அவரிகளிருவருக்குள் பேசிவந்தார்கள்.

ஒரு நாள் அனைவரும் வேலையிலிருந்து சாயங்காலம் வீடு திரும்பி ஓய்வு எடுதுகொண்டிருந்தார்கள்.அப்பா மட்டும் வீட்டில் இல்லை.அப்பா எப்போதும் இரவு

பன்னிரண்டு மணிக்கே வீடு வருவது வழக்கம்.\

சூரிய பகவான் ஆரஞ்சு நிற நெருப்பு குழம்பாக அன்று தன கடமையை முடித்து விட்டு தற்காலிகமாக இந்த பூமிக்கு விடை கொடுத்து விட்டு மெதுவாக தன தலையை கீழே இழுத்து மறந்துகொண்டிருந்தார்,இருள் பூமியை மது மெதுவாக கவ்வி ஆட்கொள்ள ஆரம்பித்தது.அச்சமயம் மாடியிலிருந்து ஜம்பு பதற்றத்துடன் கீழே ஓடிச்சென்று

“ஐயோ , பெரிய அய்யாவிற்கு எதோ ஆகிவிட்டது.வாயிலிருந்து நுரை நுரையாக தள்ளுகிறது.கண்கள் மேலே இழுத்துக்கொண்டு பேச்சு ஏதும் வராமல் இருக்கிறார்.” என கூறிவிட்டு , “நான் போயி மருத்துவரை அழைத்துவருகிறேன்” என வாசலை நோக்கி ஓடினான்.

பாட்டியும் மற்றவர்களும் மேலே தாத்தாவின் ரூமிற்கு ஓடினார்கள்.அம்மா,ஆனா பாட்டி மற்றும் நாங்கள் மூன்று குழந்தைகளும் எங்கள்

ரூமிற்கு வெளியே நின்று
பார்த்துகொண்டிருந்தோம்.எல்லோரும் நிற்க
அந்த ரூமில் இடமில்லை.மருத்துவர் பக்கத்து
தெருவிலேயே இருந்ததால் , ஜம்பு அவரை
உடனடியாக ரிக்ஷாவில்
அழைத்துவந்துவிட்டான்.

உள்ளே சென்ற மருத்துவர் பாட்டியை தவிர
மற்றவர்களை வெளியே போகசொல்லிவிட்டு
தாத்தாவை பரிசோதனை செய்தார்.
தாத்தாவிற்கு ஸ்ட்ரோக் வந்துவிட்டதால்
உடனடியாக அவசர சிகிச்சைக்கு அழைத்து
செல்லும்படி கூறிவிட்டு
சென்றுவிட்டார்,தாத்தாவை தயார் செய்து
,வீட்டிலுள்ள ஆண்கள் தாத்தாவை காரில் ஏற்றி
அருகிலுள்ள மருத்துவ மனைக்கு
கொண்டுசென்றார்கள்.தாத்தாவுடன் சித்தப்பா
குமாரும்,பாட்டி சரசாவும்.அத்தை சாராவும்
மருத்துவமனைக்கு சென்றார்கள்.

வீட்டிலுள்ள மற்ற உறவினர்களும்,
வெளியாட்களும் மிகவும் கவளியுடனும், வீடு

வேளைகளில் கவனம் இல்லாமலும் ஆளுக்காரு முலையில் கவலையுடன் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள்.நேரம் நகர்ந்தது.போனவர்கள் திரும்பி வரும் நேரத்தை எதிர்பார்த்து அடிக்கடி அனைவரும் கடிகாரத்தை பார்ப்பதும்,வீட்டின் வெளி வாசலை எட்டி எட்டி பார்பதுமாக இருந்தார்கள்.

இரவு பத்து மணியளவில் வீடு வாசலின் முன் சார் வந்து நிற்கவே அனைவரும் வாசலி நோக்கி ஓடினர்,காரிலிருந்து பாட்டியும் அத்தையும் இறங்கிவந்ததும்

“அம்மா , அப்பா எப்படி இருக்காங்க?” என பெரிய அதை ரொஜீ பத்தத்துடன் கேட்டதும்,

ஹாலில் நுழைந்தபடி அத்தை சாரா , “உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லை,அப்பாவிற்கு ச்ற்றோகே என்பதால் ரைட் ஹாண்ட் சைடு பூராவும் செயளிழத்திருக்கிறது.தற்போது கொஞ்சம் நாட்கள் ஆனால்தான் தெரியும் எந்த அளவிற்கு மோசமாக பாதிக்கபட்டிருக்கிறது

என்று. கண்ணும் சற்று மங்கலாகவே தெரிகிறது என்கிறார்கள்.அப்பாவை ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் வைத்திருந்துவிட்டு எல்லா சோதனைகளும் செய்த பிறகே அங்கிருந்து திச்சார்ஜ் பண்ணி வீட்டிற்கு அனுப்புவார்களாம்."என்றார்கள்.

இந்த செய்தி கேட்டதும் வீட்டிலுள்ள அனைவருக்கும் மறுபடியும் தெம்பு வந்தாற்போல் சுறு சுறுப்பாக தங்கள் வேளையில் ஈடுபதொடங்கினார்கள்.

அ ந்த ஒருவாரம், அப்பா உள்பட அனைவரும் ஆஸ்பத்திரியில் சென்று தாத்தாவை பார்த்து கொண்டனர்.அப்பா தினமும் இரவு சாப்பாடு எடுத்துகொண்டு ஆஸ்பத்திருக்கு சென்று தாத்தாவுக்கு துணையாக இரவு அங்கேயே இருந்துவிட்டு மறுநாள் விடியற்காலையில் வீட்டிற்கு வந்தார்கள்.

ஒரு வாரம் சென்றது.ஒருநாள் மத்யானம் இரண்டு மணியளவில் தாத்தாவை தொக்கி

கொண்டு வந்து மாடி அறையில் படுக்க வைத்தவுடன், மறுபடியும் வீட்டிலுள்ளவர்க அனைவரும் ஒருவர் பின் ஒருவராக சென்றே தாத்தாவை பார்த்துவிட்டு வந்தோம்.

அந்த வீட்டில் உள்ள உறவினர்க்கள் , வேலைகாரர்கள் உள்பட அனைவரும்,எங்களை வெறுப்புடன் பார்ப்பதை நாங்கள் உணராமல் இல்லை.அம்மா அவமானத்தால் கூனிகுரிகிபோனார்கள்.என் மன வேதனை பட்டது,எல்லாம் இந்த அப்பவால்தான் ஏற்பட்டது.அப்பா மட்டும் கடன் வாங்காமல் இருந்திருந்தால் இவ்வளவு தொல்லை ஏற்பட்டிருக்காது.என என் மனதிற்குள் நினைத்தேன்.

அதன் பிறகு அப்பாவின் கூட பிறந்தவர்களும் பாட்டியும் தாத்தாவின் ரூமிற்கு அடிக்கடி சென்று வெகு நேரம் பேசிவிட்டு வந்தார்கள், அப்பா மட்டும் ஒரு சில தடைவைகல்தான் அவர்களுடன் சென்று பேசிவந்தார்கள்,மேலும் அம்மா எதிலுமே தலையிடாமல் இருந்தார்கள்.

அப்பாவும் அம்மாவிடம் எதையும்
சொல்லுவதில்லை.

இதற்கிடையில் சின்ன அத்தையின் கணவர் சீனு
மாமாவை அப்பா எதோ திட்டி வீட்டை விட்டு
வெளியே போகும்படி சத்தம் போட்டு
கொண்டிருந்தார்கள் ஒருநாள்.அன்று ஞாயிற்று
கிழமை என்பதால் அனைவரும் வீட்டிலிருந்தனர்.
சின்ன அத்தை சாரா அழுதுகொண்டு மூக்கை
உறிஞ்சி கொண்டிருந்தார்கள்.கீழே
வரவேற்பறையில் அனைவரும் என்ன நடக்கிறது
என வெவரம் புரியாமல் ஒருவரையொருவர்
கேள்விக்குறியுடன் பார்த்தவண்ணம்
நின்றிருந்தனர்.அம்மாவும் ,ஆனாபாட்டியும்
மாடிப்படியில் நின்றுகொண்டு ஒன்றும்
புரியாமல் விழித்துகொண்டு
நின்றிருந்தனர்.நானும் அண்ணன் ஷானும் கீழே
முற்றத்தில் உள்ள தூணை பிடித்துகொண்டு
நின்று வேடிக்கை பார்துகொண்டிருந்தோம்.

அப்பா மாமா சீனுவின் கழுத்தை பிடித்து
வீட்டில் விட்டு வெள்ளியே தள்ளி “இனி இந்த

வீட்டு பக்கம் வராதே" தவறி இந்த பக்கம் வந்தால் காலை முரித்துவிடுவேன்,எதனை முறை உனக்கு எச்சரிக்கை கொடுப்பது.இனிமேல் உன்னை கோர்டில் பார்க்கிறோம்.ஓடிப்போ" என வாசல் கதவை சார்த்திவிட்டு உள்ளே வந்தார்கள்.

"சாரா அவன் துணிமணிகளை மற்றும் எல்லா உடமைகளையும் ஒரு பெட்டியில் போட்டு வெளியே திண்ணையில் வை. அவன் எடுத்து செல்லட்டும்" என கூறியது அத்தை சாரா உறிஞ்சிய மூக்குடன் ரூமுக்குள் சென்று சீனு மாமா உடமைகளை எடுத்து பெட்டியில் வைத்து கொண்டிருந்தார்கள்.அப்பாவும் அத்தைக்கு உதவியாக எல்லாம் எடுத்து பெட்டியில் போட்டுவிட்டு , வெள்ளியிலுள்ள திண்ணையில் வைத்துவிட்டு,இன்னும் அங்கிருந்து போகாது நின்றிருந்த சீனு மாமாவிடம் "பெட்டிகளை எடுத்து கொண்டு போ " என கூறிவிட்டு மறுபடியும் கதவை சார்த்திவிட்டு உள்ளே வந்ததும் அனிவரும் நகர்ந்து அவரவர் ரூமிற்கு

மௌனமாக சென்றுவிட்டார்கள்.

“ஏண்டா அண்ணா சீனு மாமாவை வீட்டை விட்டு அப்பா போகசொல்லிவிட்டர்கள்.?பாவம் அவர் ரொம்ப நல்ல மாமா தானே ,என்ன தப்பு செய்தார்கள்? என் கேட்டேன்.

“உன்னை மாதிரிதான் எனக்கும் ஒன்றும் தெரியாது.எதோ தப்பு செத்தால்தான் எல்லோரும் சேர்ந்து மாமாவை வீட்டை விட்டு வெளியே போக சொல்லிவிட்டார்கள்” என பதிலளித்துவிட்டு அவன் மேலே ஓடிவிட்டான்.நானும் அவனை தொடர்ந்து எங்கள் அறைக்கு சென்றுவிட்டேன்.

“ஏன் என்ன நடந்தது?அவை அவ்வளவு கேவலமாக பேசி வெளியே அனுப்பிவிட்டீர்கள்” என அம்மா அப்பாவை கேட்டதற்கு,

அப்பா எங்களை பார்த்தவிட்டு,பிறகு அம்மாவிடம்”இப்போது இதை பற்றி பேசவேண்டாம்,அப்புறமாக விஷயத்தை

சொல்கிறேன் “என்றதும்,

“பசங்களா எல்லோரும் போயி மொட்டை மாடியில் விளையாடுங்க” என எங்களை துரத்திவிட்டு ,உள்ளே அம்மாவும் அப்பாவும் எதோ பேசினார்கள்.

என்னவாக இருக்கும் என எங்கள் மனதில் நினைத்துக்கொண்டே,என்னவாக இருந்தால் என்ன ,நம்மிடம் யாரும் இதுபற்றி கூறப்போவதில்லை,நாம் ஏன் இதைப்பற்றி யோசித்து நேரத்தை வீணடிப்பானேன் என மனதிற்குள் கூறிக்கொண்டு அண்ணனுடன் கோலி விளையாட்டில் இறங்கிவிட்டேன்.

6

அத்யாயம்-ஆறு

சில நாட்கள் நிம்மதியாக ஓடியது,வீட்டில் எந்தவித சலனமும் இல்லாமல் இருந்தது. ஆனால் வீட்டிலுள்ள உறவினர்கள் அனைவரும் எங்களை மிகவும் வெறுப்புடன் பார்ப்பதும், நடத்துவதுமாக இருந்தனர்.குழந்தைகளாகிய எங்களிடம் கூட வெறுப்பையும்,கோபத்தையும் காட்டிவந்தனர்.

ஒருநாள் விடியற்காலையில் பறவைகள் கிரீச்சிடும் சத்தம் ஒருபுறமும்,சேவல் கூவும் சந்தம் ஒருபுறமும் கேட்டு கண்முழித்த நான் ,நான்றாக

விடிதிருந்தது கண்டு எழுந்து பார்க்கையில, அப்பா மட்டும் கட்டிலில் படுத்து தூங்கிகொண்டிருந்தார்கள்,நான் சோம்பல் முறித்தபடி உடலை வளைத்து நெளித்து வண்ணம் மொட்டை மாடிக்கு வந்து நின்று கொண்டு வானத்தை பார்த்தேன்.அந்த வெளிர் நீல நிற வானத்தில் வட்டநிலா இன்னும் சற்று மங்கலாக தெரிந்தது.

மாடு படி சுவரை பிடித்தவண்ணம் , ஒவ்வொருபடியாக மெதுவாக இறங்கி சமயலறைக்கு சென்றேன்.பாட்டி ஆனா அங்கு சமயலறையில் இல்லை.தம்பி பாட்டை தூக்கி கொண்டு எங்காவது கடைக்கு சென்றிருக்க கூடும் என நினைத்துகொண்டு,குளியலறைக்கு சென்று, பல் விளக்கி விட்டு ,அப்படியே குளித்தும் முடித்துவிட்டு ,மறுபடியும் சமயலறைக்கு சென்று பார்க்கையில், அங்கு சாப்பிட எதுவும் இல்லாததால் சுற்றி, முற்றி சாப்பிட ஏதும் இருக்கிறதா? என பார்த்தேன், பசி வயிற்றை கிள்ளியது.யாரை போய் சாப்பாடு கேட்பது?அம்மா வேலைக்கு

சென்றுவிட்டார்கள்.ஆனா பாட்டி வீட்டில் இல்லை.அப்பா நன்றாக தூங்குகிறார்கள்.

ஒரு முலையில் முதல்நாள் சமைத்த சாதம் தண்ணீர் உற்றி வைக்கப்பட்டிருந்தது.மேலே அலமாரியில் ஒரு பாட்டிலில் காய்ந்த உப்பு போட்ட நாரத்தங்காய் ஊறுகாய் இருந்தது.”பசி வந்தால் பத்தும் பறந்து போகும்” என்ற பழமொழி சரியாகவே இருந்தது.அங்கே ராக்கில் இருந்த தட்டை எடுத்து, அதில் பழைய சாதத்தையும் ,ஊறுகாயையும் போட்டுகொண்டு தனியாக உட்கார்ந்து சாப்பிட்டுமுடிதேன்.காய்ந்த உப்பில் போட்ட நாரத்தங்காய் ஊறுகாவும் ,தண்ணீர்விட்ட பழைய சாதமும், மிகுந்த பசியில் சாப்பிட்ட்டதாலோ, என்னவோ மிக மிக ருசியாக இருந்தது.தட்டை கழுவி ,எடுத்த அதே ராகில் வைத்துவிட்டு,ஒரு டம்பளர் தண்ணீரையும் குடித்துவிட்டு, வழக்கம் போல் மாடிப்படியில் வந்து உட்கார்ந்துகொண்டு வேடிக்கை பார்த்துகொண்டிருந்தேன்,

அங்கு அண்ணன் ஷான் முற்றத்தில் வைத்திருந்த ஒரு பெரிய அண்டா நிறைய இருந்த தண்ணீரில் கையை உள்ளவிட்டுகொண்டு விளையாடிக் கொண்டிருந்தான்.நானும் அவனுடன் சேர்ந்துகொண்டு அந்த அண்டாவிலுள்ள தண்ணீருக்குள் என் கைகளை விட்டு சுழற்றிகொண்டும்,தண்ணீரை வெளியே எடுத்து தெளித்துகொண்டும் விளையாடிக்கொண்டிருந்தோம்.

“தண்ணீரில் விளையாடாதீர்கள், எங்கு பார்த்தாலும் தண்ணியாக இருக்கிறது. யாராவது கால் வைத்தால் வழுக்கி விழுந்து விடுவார்கள்.” என பாட்டி சரசா எங்களை கண்டிக்கும் குரலில் எச்சரித்துவிட்டு சென்றார்கள்.

நானும் ஷானும் விளையாடும் மும்முரத்தில் ,தொடர்ந்து தண்ணீரில் விளையாடிக்கொண்டிருந்ததை பார்த்த அத்தை சாரா.

“எத்தனை முறை சொல்வது தண்ணீரில்

விளையாடாதீர்கள்
என்று,சனியன்களா,உங்களை
கேட்பதற்கு,கவனிக்க ஆள் இல்லாமல் உடம்பில்
துளிர் விட்டிருக்கிறது.இனி மாடியில் உங்கள்
ரூமில்தான் விளையாட வேண்டும்.புரியுதா?என
கோபத்துடன் கூறிவிட்டு,எங்களிருவரையும்
காதை பிடித்து எழுத்து சென்று,

“அம்மா, வாயால் சொன்னால் இதுகள்
கேட்காது,தண்டனை கொடுந்த்தால்தான்
அடுத்தமுறை சொல் பேச்சு கேட்கும்.”

“ஜம்புஇவங்கரெண்டுபேரயும்ஆளுக்காருதூணில்க
என்றுகூறியதும்,ஜம்புஎங்கிருந்தோஇரண்டுகயிறுக
ஆளுக்காருதூணில்கட்டினான்,அவன்கட்டிமுடித்

“ஜம்புஉள்ளேபோயிசிறியவெங்காயம்ஒன்றைகட்ப

உள்ளே சென்ற ஜம்பு ஒரு சிறிய
வெங்காயத்தை எடுத்துவந்து அத்தை
சாராவிடம் கொடுக்கவே ,அதை பார்த்துவிட்டு
அண்ணன் ஷான் “ஓ ” வென கைகால்களை

உதறிக்கொண்டு அழ ஆரம்பித்தான். அவன் அழுவதை பார்த்ததும் எனக்கும் அழுகை வந்துவிட்டது.

“அத்தை ப்ளீஸ் வேண்டாம் ,இனிமே நான் தண்ணியில் விளையாடமாட்டேன். வெங்காயத்தை கண்ணில் பிழியாதீங்கஅத்தைa " என அழுதான்.

ஆனால் அத்தையும், பாட்டியும் அவ்வளவு லேசில்

பிழிய முடிவு செய்துவிட்டார்கள். அண்ணன் ஷான் தலையை இங்குமங்குமாக ஆட்டி கண்ணை இருக்க முடிகொண்டான் ,ஜம்புவால் அவன் கண்ணில் வேங்காயந்தை பிழியமுடியவில்லை ,எனவே அத்தை சாரா அண்ணனனின் தலையை பிடித்துக்கொள்ள,பாட்டி அவன் கண்ணை திறந்து காட்ட,ஜம்பு வேங்கயாதை இரு கண்களிலும் லேசாக பிழிந்துவிட்டன். எரிச்சல் தாளாமல் அண்ணன் ஷான் கத்து ,கத்து என்று கத்தி அழுது தள்ளிவிட்டான்.அவன் அலறி

அழுவதை பார்த்ததும் எனக்கும் உடல்
நடுங்கியது,பயந்து நான் அழ, அழ என்
கண்ணிலும் வெங்காயத்தை பிழிந்துவிட்டு
சென்றுவிட்டனர்.கண்கள் பகபகவென
எரிந்தது.எரிச்சல் தாளாது நாங்களிருவரும்
துடித்துவிட்டோம்.

சிறிது நேரத்தில் தூணில் கட்டியிருந்த
எங்களிருவரையும் அத்தை சாரா
அவிழ்த்துவிட்டு, “ஓடி போங்க ரெண்டுபேரும்
மேலே, இனிமே கீழே வரக்கூடாது”என மிரட்டி
விரட்டி விட்டது ம், நானும்,அண்ணனும்
கண்களை எங்கள் சட்டை துணியால்
துடைத்தபடி அழுதுகொண்டே மேலே
மொட்டை மாடியில் சென்று
உட்கார்ந்துகொண்டோம்.

கண்ணிலுள்ள வெங்காய சாறு போக கண்ணை
துடைத்து துடைத்து கண்கள் இரண்டும்
சிவந்தும்,கண்ணை சுற்றி மிகவும் எரிச்சலாகவும்
இருந்ததது அப்பா செய்த தவற்றிர்க்கு, இந்த
வீட்டில் உள்ளவர்கள் தங்கள் வெறுப்பை ஏன்

எங்கள் மீது காட்டவேண்டும்.?அப்பாவிற்கு குழந்தைகளாக பிறந்தது எங்கள் தவறா?நாங்களா இவர்கள் வீட்டில் குழந்தைகளாக பிறக்க வேண்டும் என வரம் வாங்கி வந்தோம்?. இவர்களுக்கெல்லாம் தைரியம் இருந்தால் அப்பாவை தண்டிக்கவேண்டியதுதானே.

“எளியோரை வலியோர் வாட்டுவது ” என்ற பழமொழி போல் எளியோராகிய ,ஒன்றும் தெரியாத சிறு குழந்தைகளாகிய எங்களை ஏன் அப்பாவின் உறவுக்காரர்கள் வதைக்கவேண்டும்?அப்படி என்ன கொடிய தவற்றை நாங்களிருவரும் செய்துவிட்டோம்,எங்களுக்கு இப்படி ஒரு பெரிய தண்டனையை கொடுப்பதற்கு? வீட்டிலுள்ள பெரியவர்களெல்லாம் எவ்வளவு தவறுகள் செய்கிறார்கள்.அவர்களுக்கு யார் தண்டனை கொடுப்பது? என என் மனதுக்குள் வேதை அடைந்தேன்.மன வேதனையுடன் மொட்டை மாடியின் ஒரு ஓரத்தில் நிழலில் படுத்து அழுதுகொண்டே தூங்கி

விட்டேன்.அண்ணனும் என்னருகிலேயே படுத்து தூங்கிவிட்டான்

திடீரென “ஐயோ ,
குழந்தைஇப்படிவெளியேபடுத்துதூங்குதுகளே .அதுவும்இந்தநேரத்தில்.அனிதாகுட்டிஅழுந்திரும்மாக என்றஆனாபாட்டியின்குரல் கேட்டுநாங்களிருவரும்முழித்தோம்.எங்கள்கண்கள்இ

“என்னடா குழந்தைகளா நடந்தது? ஏன் ரெண்டு பேரும் அழுதீங்களா? நான் கடைக்கு போயிட்டு வந்தேன்.அம்மா வேலைக்கு போய்ட்டாங்க.அழகூடாது.கீழே வாங்க சாப்பாடு தயார் செய்து போடறேன்.பசிக்குதா>என பதட்டத்துடன் கூறி என்னை தூக்கி நிருத்திவிட்டு,

“என்ன நடந்ததது? ஏன் ரெண்டு பேரு கண்ணும் சிவந்து வீங்கி இருக்கிறது? என எங்களிருவரையும் அணைத்தாற்போல் பாட்டி ஆனா கேட்கவே, எங்களிருவருக்கும் மேலும் அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது.தேம்பி

,தேம்பி நாங்களிருவரும் மறுபடியும் அழுதவண்ணம் பாட்டியிடம் முழு விஷயத்தையும் அண்ணன் ஷான் சொல்லிமுடித்தான்

ஆனா பாட்டிக்கு மிகவும் அதிர்ச்சியாகவே இருந்தது.எங்கள் முவரையும் சமையலறைக்கு அழைத்து சென்று தன அருகே உட்காரச்சொல்லி விளையாடசொல்லிவிட்டு,அவசர அவசரமாக ரவா உப்புமாவை கிளறி எங்களுக்கு ஊட்டி விட்டார்கள்.நான் ஏற்கனவே பழைய சாதம் சாப்பிட்டதை பாட்டியிடம் கூறினேன். ஆனா பாட்டியின் மனது மிகவும் கஷ்டபட்டவராக."எதுக்குடி உனக்கு தலை எழுத்து, பழைய சாதத்தை சாப்பிட்டாய், பாட்டி இனிக்குதான் அதிசயமா காலையில் கடைக்கு போயி வந்தேன்,அதற்குள் இத்தனை ஆர்பாட்டம் ஆயிடுத்து" என கூறிக்கொண்டே தானும் கொஞ்சம் சாப்பிட்டு கொண்டே தனுக்கு தானே மெதுவாக பேசிகொண்டார்கள்.

"அட ராமா ,சின்னஞ்சிறு குழந்தைகள்.கேட்க

அப்பா,அம்மா, இல்லை என்றே ஒரே காரணத்திற்காக இப்படி தண்டிப்பார்கள?எதற்கும் ஒரு அளவு வேண்டாம்?என்னமோடி குழந்தைகளா,ரொம்ப அதிசயமான குடும்பத்தில்தான் உங்கம்மா வாக்கப்பட்டிருக்கா.அவள் தலை எழுத்து .இனி குறை காலம் இங்கு எப்படித்தான் காலம் தள்ள போறாளோ உங்கம்மா?கொஞ்ச நேரம் கடைக்கு போயிருந்தேன் அதற்குள் இந்த இழவா? என முனுமுனுத்துகொண்டார்கள்.

.நாங்களிருவரும் சாப்பிட்டு முடித்ததும்,எங்கள் கைகால்களை கழுவிவிட்டுவிட்டு ஒரும் பஞ்சு துணியால் கண்களையும் நன்றாக துடைத்து சுத்தம் செய்துவிட்டு மறுபடியும் மொட்டைமாடிக்கு அழைத்துசென்று ,தம்பி பாட்டை அருகில் வைத்துகொண்டு ஆனா பாட்டி அரிசியில் கல் போருக்கிகொண்டிருந்தார்கள் .நானும் அண்ணன் ஷானும் கோலி விளையாடிகொண்டிருந்தோம்.

காலை பதினோரு மணிக்குமேல் மெதுவாக

எழுந்த அப்பா குளித்து விட்டு, சாப்பிட்டு விட்டு வேலைக்கு கிளம்பி
சென்றுவிட்டார்கள்.எங்களை அப்பா கவனிக்கக் கூட நேரமில்லை.ஆனா பாட்டி ,அப்பா மேலுள்ள வெறுப்பில் ,அவர்களிடம் எதுவும் நடந்ததை சொல்லமால் பேசாமலிருந்து விட்டார்கள்.

மாலையில் முன்று மணிபோல் வேலையிலிருந்து வீடு திரும்பிய அம்மா,ஆனா பாட்டி போட்டுவைத்திருந்த பஜ்ஜியையும்,காப்பியையும் குடித்துவிட்டு ,மொட்டைமாடியில் வந்த சவகாசமா உட்கார்ந்திருக்கும் சமயம் பார்த்து, ஆனா பாட்டி அம்மாவிடம் வந்து உட்கார்ந்துகொண்டு.

“அம்மாடி நான் சொல்றேனே என தப்பாக எடுத்துக்காதே,என அன்று நடந்தவைகளை கூரிமுடித்ததும்,அம்மாவின் முகம் வெளுத்தது.சற்று நேரம் பேசாமல் இருந்துவிட்டு.”இனிமேல் குழநதைகள் அதிகம் கீழே போகாமல் பார்த்துகொள்ளுங்கள்

மாமி",இப்போது நம் நிலைமை இந்த வீட்டில் சரியில்லை.எனவே நாம் சற்றே ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும்"என கூறிவிட்டு நானும், அண்ணன் இருக்கும் இடத்தை பார்த்து எங்களை அருகில் வருமாறு அழைத்து,

"இனிமேல் கீழே போய் விளையாடாதீர்கள்.இந்த மொட்டைமாடியில் அல்லது நம்ம ரூமில் இல்லை, கீழே ஆனா பாட்டியுடன் சமயலரையில்தான் விளையாடவேண்டும்.சரியா?"என கண்டிக்கும் தோரணையில் கூறி விளையாட அனுப்பிவிட்டார்கள்.பிறகு பாட்டி ஆனாவும்,அம்மாவும் வெகுநேரம் பேசிகொண்டிருந்தார்கள்.தம்பி ஆனா பாட்டியின் மடியில் உட்கார்ந்துகொண்டு அவர்கள் பேசுவதையே வாய் பிளந்து கேட்டு கொண்டிருந்தான்.

இது நடந்த சில நாட்களுக்கு பிறகு,ஒரு நாள் சாயங்காலம் முன்றுமணி இருக்கலாம்,அண்ணன்

ஷானும் ,நானும் மாடிப்படியில் உட்கார்ந்து கொண்டிருந்தோம்.ஆனா பாட்டியும் தம்பியும் சமயலறையில் தூங்கிகொண்டிருந்தார்கள்.

“டேய் அண்ணா எனக்கு பசிக்குது,உனக்கும் பசிக்குதாடா?”என்று கேட்டேன்.

“அம்மாண்டி, பாட்டி சரசா தோசை சுடும் வாசனை மூக்கை துளைக்கிறது.வரியா அங்கு போய் பார்க்கலாம்”.என்று கூப்பிட்டான்.

“பாட்டி திட்டமாட்டாங்களா அண்ணா?” என்றேன்.

“சாப்பிட கேட்டா திட்டமாட்டார்கள்.தைரியமாக வா.”என்று என் கையை பிடித்துகொண்டு அழைத்து சென்றான்.

“பயம்மா இருக்குடா” என்றேன்

“பயப்படாதே, நான் பார்த்துகொள்கிறேன்:.என்றான் அண்ணன்.

சரி என தலை ஆட்டிவிட்டு அண்ணனுடன் பாட்டி சரசாவின் சமையலறை வாசலில் நின்று உள்ளே எட்டி பார்த்துகொண்டிருந்தோம்.பாட்டி சரசா சுட சுட தோசைகளை சுட்டு பெரிய அத்தை ரொஜீயின் குழந்தைகளுக்கு முன்றுபேருக்கும் சாப்பிட கொடுத்துகொண்டிருந்தார்கள்.நானும்,அண்ணன் ஷானும் சமயலறைக்கு வெளியே நின்று இருப்பதை பார்த்ததும் ,பாட்டி சிடுசிடுப்புடன்,"இங்கே வரகூடாது என்று சொல்லியிருந்தோம் இல்லையா,ஏன் இங்கே நிக்கிறீங்க ரெண்டுபேரும்,மாடிக்கு போங்க" என வேரட்டிவிட்டார்கள்.

பயந்தபடி நாங்க ரெண்டுபேரும் மாடிக்கு ஓட இருந்த சமயம், அம்மாவுடன் வேலை செய்யும் டீச்சர் பத்மா அன்று பள்ளிகூடத்திற்கு லீவு போட்டிருந்ததாலும்,எங்கள் வீட்டு வழியாக எதற்கோ செல்லும்போது ,அம்மாவிடம் கடன்வாங்கிய புத்தகம் ஒன்றை திருப்பி ஆனா பாட்டியிடம் கொண்டுத்துவிட்டு செல்லலாம் என உள்ளே நுழைந்தவர்கள்,அங்கு நடந்த

அனைத்தையும் பார்த்துவிட்டார்கள்.

மாடிக்கு ஓடிய எங்களை நிறுத்திய பத்மா மேச்சர்,

“ஆனா பாட்டி எங்கே?” என்றார்கள்.

“தூங்குகிறார்கள்” என்றான் அண்ணன் .

“பசிக்குதா பசங்களா?” என பத்மா மேச்சர் கேட்டார்கள்.

“அமாம், என்பதுபோல நான் தலை ஆட்டியதும்,உடனே பையிலிருந்த ஒரு பிஸ்கட் பாக்கெட் ஒன்றை எடுத்து எங்களிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னார்கள்.பிறகு எங்களையும் அழைத்துக்கொண்டு சமயலறைக்கு சென்று ஆனா பாட்டியை எழுப்பினார்கள் பத்மா மேச்சர்.

வாரி சுருட்டி எழுந்து உட்கார்ந்த ஆனா பாட்டியிடம் புத்தகத்தை கொடுத்துவிட்டு, அப்போது நடந்ததையும் சொல்லிவிட்டு,மங்கை

வந்ததும் மறக்காமல் விஷயத்தை கூறுமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள்.

மாலையில் வீடு திரும்பிய அம்மா ,எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு சாவகாசமாக உட்கார்ந்திருக்கும் நேரத்திற்காக காத்துகொண்டிட்ருந்த பாட்டி ஆனா புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள்.

“நீ தனி குடித்தனம் போயுடு மங்கை.உன் குழந்தைகள் மறுபடியும் உன் மாமியாரிடம் சமயலறையில் சென்று எட்டி பார்த்திருக்கிறார்கள்,நல்ல காலம் குழந்தைகளை உன் மாமியார் விரட்டி விட்டதை உன் கூட வேலை பார்க்கும் பத்மா டீச்சர் பார்த்துவிட்டு என்னை எழுப்பி விஷயத்தை சொல்லிவிட்டு இந்த புத்தகத்தையும் திருப்பி கொடுத்துட்டு போனா.”என கூறி முடித்தார்கள்.

அம்மா குழம்பியநிலையில் செய்வதறியாது முழித்துக் கொண்டிருக்கையில், ஆனா பாட்டி மேலும் தொடர்ந்தார்கள்,”குழந்தைகளை

அடிக்காதே.மிரட்டி கண்டிக்காதே.அதுகள் பாவம், ஏற்கனவே மிரண்டு போயிருக்குதுகள் .எல்லோரும் மிரட்டினால் அதுகள் பாவம் எல்லாரையும் வெறுத்துவிடும் .உன் மாமியார் பிள்ளைகுட்டி பெத்தவள்தானே ,பெண் வயத்து குழந்தைகள் மட்டும் அவர்களுக்கு உசத்தியா இருக்கு, பிள்ளையோட குழந்தைகளை பார்த்தால் பாவர்காயாய் கசக்குதாக்கும்.ஆளுக்கொரு தோசை வார்த்துபோட்ட அவங்க சொத்து குறைந்தபோயிடும். நல்லவேளை உன் கூட வேலை செய்யும் பத்மா டீச்சர் சரியான சமயத்திற்கு வரலைனா இந்த விஷயமே நமக்கு தெரியாமல் போயிருக்கும்". என ஆதங்கத்துடன் முடித்தார்கள்.

இம்முறை அம்மா எங்களை கூப்பிட்டு ஏதும் கண்டிக்கவில்லை.பாட்டி ஆனா சொன்னதில் நியாயம் இருப்பதை நினைத்து பேசாமல் இருந்த்விட்டார்கள்.அப்பாவிடம் அம்மாவோ ,நாங்களோ எதுவுமே சொல்வதில்லை.அப்பா இரவு மிகவும் தாமதமாக வருவாதாலும்,

கலையில் அம்மா வேலைக்கு போனபிறகு எழுந்து வேலைக்கு செல்வதாலும், அம்மாவுக்கு அப்பாவிடம் எதுவும் சொல்ல வாய்ப்பே கிடைப்பதில்லை என்றே நினைக்கிறேன்.

அப்பாவின் உறவினர்களை பார்த்தாலே பயமும்,பீதியும்தான் எங்களுக்கு ஏற்ப்பட்டது.எங்களை எப்போது பார்த்தாலும் மிரட்டுவதும் திட்டுவதுமாக இருந்தார்கள்.எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அப்பாவின் உறவுக்காரர்கள் எங்களிடம் அன்பாகவோ,பாசமாகவோ பேசியது கிடையாது.பல முறை என் பிஞ்சு மனது ஏங்கியிருக்கிறது “எங்களை கண்டால் ஏன் யாருக்குமே இந்த வீட்டில் பிடிக்கவில்லை? .

அப்பா குடும்பத்தினர் அனைவரும் பரம்பரையாக மிகவும் படித்தாவர்கள்.பெருமபாலானோர் மருத்துவ துறையிலும், வழக்கரிஞர் துறையிலும் இருந்தனர். அதுமட்டுமில்லாமல் அப்பாவின் முன்னோர்கள் ராவ் பஹாதூர் பட்டம் மேற்ற பணமுள்ள குடும்பத்தினர்.அவர்கள்

அனைவருக்கும் தங்கள் மிக
படித்தவர்கள்,பணமுள்ளவர்கள் என்ற
அகம்பாவமும்,ஆணவமும் இருப்பதை
வெளிப்படையாகவே பார்ப்பவர்கள்
கூறிவிடலாம்.சொந்தத்திற்குள்ளேயே,கூடபிரதவர்க
இருந்தால்கூட,பணம்,படிப்பு,கார்,பங்க்லொ ,என
இவற்றுள் ஏதாவது சற்று குறைவாக
இருந்தாலோ அவர்களை துச்சமாகவும்,
அவதூறாகவும்,நடுத்துவதும்,அவர்களுடன்
சவகாசம் வைத்து கொள்வதே தங்கள்
தரத்திற்கு குறைவு என்றும் நினைப்பவர்கள் .

எங்கள் அப்பாவும்,அம்மாவும்,அவர்களிடமிருந்து சற்
அதிர்ந்துகூட பேசத்தெரியாது.மிகவும்
அமைதியான சுபாவம்
கொண்டவர்கள்.அப்பாவிடம் குதிரை
பந்தையதிற்கு போகும் பழக்கமும்,சூதாட்டத்தில்
பணத்தை செலவழிக்கும் பழக்கம் இருந்ததால்
அப்பாவிற்கு அவர்கள் குடும்பத்தில் அவ்வளவு
மரியாதை இருக்கவில்லை.அதனால்தான் எங்கள்
குடும்பத்திற்கு மட்டும் தனி சமையலறை.யாரும்
எங்களுடன் பேசுவது கிடையாது.

அப்பா தன மாத சம்பளத்தை வீட்டு செலவிற்கு கொடுக்காதது மட்டுமில்லாமல் ,அம்மா மாத வருமானத்தையும் முழுமையாக ஒரு பைசாகூட விடாமல் சம்பள தேதி அன்று அம்மா வேலை செய்யும் இடத்திற்கு சென்று வாங்கி கொண்டு சென்றுவிடுவார்கள்.அவ்வளவு பணமும் மாத ஐந்து தேதிக்குள் சூதாட்டத்தில் போய்விடும்.பிறகு வீட்டிலுள்ள ஒவ்வொரு நகைகளும்,வெள்ளி பாத்திரங்களையும் பித்தளை பாத்திரங்களையும் அடகு வைத்தோ,விற்றோ ,கடன் வங்கியோ, அந்த பணத்தையும் வீட்டு செலவிற்கு கொடுக்காமல் சூதாட்டத்திற்கு செலவாகிவிடும்

குடும்ப செலவை பற்றியும்,மனைவி மற்றும் மூன்று குழந்தைகள் பணம் இல்லாமல் எப்படி சாப்பிடுவார்கள் என்பதை பற்றி துளியும் அக்கறை காட்டாமல், தன சூதாட்டத்திலே கவனமாக இருந்தார்கள்.காலை பதினோரு மணிவரை படுத்து தூங்கிவிட்டு,இரவு பன்னிரண்டு மணிக்குமேல் வீட்டிற்கு வருவதுமாக இருந்தார்கள் அப்பா.அம்மா

எப்படியாவது சமாளித்து கொள்வார்கள் என்ற தைரியத்தில்தான் அப்பா நடந்துகொண்டார்கள்.

அம்மா பிறந்து வளர்ந்த வீடும் மிகவும் பணமுள்ள,படித்த குடும்பத்தவர்களாக இருந்தனர்.அம்மாவின் அப்பா , தாத்தா ஈஸ்வரன் அரசியலில் மிகவும் திறமையும்,வலிமையையும் கொண்டவர்.பெரிய பெரிய அரசியல் வாதிகளும்,சினிமா துறை இயக்குனர்களும் ,பத்திரிக்கை நிபுணர்களும்,தாத்தா ஈஸ்வரனின் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தனர்..

தாத்தா ஈஸ்வரனின் வீடு சிதம்பரம் என்ற ஊரில் கடல் போல மிக பெரியதாக இருக்கும்.அந்த வீட்டில் பத்து பேருக்கு மேல் வேலை செய்து வந்தனர்.பல ஏக்கருக்கு நெல் விளையும் நிலங்களும்,அதிலிருந்து அரிசி,பல பருப்பு வகைகள்,யாவும் ஒரு வருஷத்திற்கு வேண்டியவைகள் எங்கள் வீட்டிற்கு வந்து தவறாமல் இறங்கிவிடும்.அதை தவிர தாத்தவிருக்கு தென்னந்தோப்பும்

,வாழைதோப்பும்,பலவித பூக்கள் பூக்கும் பூந்தோட்டமும்,இருந்தது.அப்படி பட்ட வீட்டில் பிறந்து வளர்ந்தவர்கள் அம்மா மங்கை.

அம்மாதான் அவர்கள் வீட்டில் கடைசி குழந்தை என்பதால் மிகவும் செல்லமாக வளர்ந்து விட்டார்கள்..அம்மா கல்லூரிக்கு செல்லும்போதும் மைசூர் பட்டு புடவைக்கு சரியாக வெல்வெட் சட்டையும் ,அதற்கு மாட்ச்சாக தங்க வளையல்களும்,அத்துடன் கலந்த கண்ணாடி வளையல்களும்,தங்கத்தால் செய்த ஹேர் கிளிப்பும் ,புடவைக்கு மாட்ச்சாக தலையில் குறைந்தது நாலு முழத்திற்கு பூவும் வைத்துக்கொண்டுதான் போவார்கள் என உறவுக்காரர்கள் பேசி கேட்டு இருக்கிறேன்.பூந்தோட்டத்திலிருந்து ,தோட்டத்தை பராமரிக்கும் பெண் அதிகாலையில் எழுந்து பூவை பறித்து அம்மாவின் புடவைக்கு மாட்ச்சாக பூதொடுத்து கொடுப்பாள் எனவும் சிலர் பேசி கேட்டுருக்கிறேன்

அம்மாவிற்கு ஒரு அக்காவும்,ஒரு அண்ணன் மட்டுமே இருந்தனர்.அக்கா சேதுதான் மூத்த பெண்,அடுத்தது அண்ணன் ஜகந்நாதன் ,கடைசியாக அம்மா மங்கை .மிகுந்த செல்வாக்குடன் அம்மா வளர்ந்ததால் எங்கள் வீட்டிற்கு வருடத்திற்கு வேண்டிய துணிமணிகள்,அரிசி,பருப்பு,எண்ணெய் ,இனிப்பு பண்டங்கள்,பலகாரங்கள்,தேங்காய்,மாங்காய்,செல வேண்டிய பணமும் தவறாமல் வந்து குறித்த நேரத்திற்கு எங்கள் வீட்டிற்கு வந்து இறங்கிவிடும்.

இந்த தைரியத்தில்தான் அப்பா வீட்டிற்கு பணம் கொடுக்காமல் தன இஷ்டத்திற்கு செலவு செய்து கொண்டிருந்தார்கள்.அம்மாவும் அப்பாவை எதுவுமே கேட்பதில்லை. தன வேலை உண்டு தான் உண்டு என அமைதியாக இருந்துவிடுவார்கள் அம்மா.எப்படியோ காலம் ரொம்பவும் தடங்கல் இல்லாமல் இதுநாள் வரையில் சென்றது..

7

அத்யாயம்-ஏழு

இரண்டொருமாதங்கள்கடந்தோடின.ஒருநாள்விடிய

“வந்ததடி வேட்டு ,உன் புருஷனை எழுப்பி, உன் மாமனார் அறைக்கு செல்ல தயாராக இரு.” என கிண்டலாக கூறிவிட்டு கழுத்தை ஒரு வேட்டுவேட்டிகொண்டு சற்றே தூரமாக மொட்டைமாடியில் நின்று என்ன நடக்கிறது என கவனித்தார்கள்.

அம்மா ஜம்புவிடம், “என்ன ஜம்பு?” என்றதும்,

“பெரிய அய்யா ,தேவன் அய்யாவிடம் ஏதோ

பேச வேண்டுமாம்.உடனே வரச்சொன்னார்கள்.” என கூறிவிட்டு கீழே சென்றுவிட்டான்.

வழக்கத்திற்கு மாறாக அன்று சீக்கிரமாகவே எழுந்து பேப்பர் படித்துகொண்டிருந்தார்கள் அப்பா.அம்மாவிடம் ஜம்பு கூறியதை உள்ளேயிருந்து கேட்டுகொண்டிருந்த அப்பா, படித்து கொண்டிருந்த பேப்பரை மடித்து மேஜை மீது வைத்துவிட்டு, அங்கே ஹாங்கரில் மாட்டியிருந்த சட்டையை எடுத்து போட்டுகொண்டு, தாத்தா ரூமிற்கு செல்ல தயாரானார்கள்.அம்மா வாசல் அருகே நின்று கொண்டு அப்பா செல்வதை அமைதியாக பார்த்துகொண்டிருந்தார்கள்.அப்பா சென்ற மறு நிமிடம் ஆனா பாட்டி அம்மாவின் அருகில் வந்து.

“இன்னிக்கு என்ன நாடகம் உள்ளே நடக்க போகுதோ? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்” என்றார்கள்.

“என்னவாக இருந்தால் என்ன,கத்தரிக்காய் காய்த்
இல்லையேல் அதை

பற்றி நான் கவலைப்பட போவதில்78லை"என்ற பதிலை வெகு சாதாரணமாக சொல்லிவிட்டு அம்மா தன் வேலையை பார்க்க ரூமிற்குள் சென்றுவிட்டார்கள்..

தாத்தாவின் அறைக்கு சென்றிருந்த அப்பா ஒரு மணி நேரத்திகேல்லாம் வெளியே வந்தார்கள்.அப்பாவின் முகத்தில் எந்தவித மகிழ்ச்சியான அறிகுறியும் தென்படவில்லை, மாறாக முகத்தில் வாட்டமும்,சோர்வும், வருத்தமும் தெரிந்தது, முகத்தை தொங்கபோட்டவண்ணம் எங்கள் அறைக்கு சென்று, இரு கைகளையும் கன்னத்தில் வைத்து கொண்டு கட்டிலில் உட்கர்ந்திருந்தார்கள். அம்மாவிற்கு மனது கேட்காமல்

"ஏன் கவலையா இருக்கீங்க? என்ன நடந்தது?என்று கேட்கவே.

"அப்பா வீட்டை விற்று விட்டார்களாம்,இன்னும் ஒரு சில மாதத்தில் நாம் எல்லாம் தனி குடித்தனம் போய்விட வேண்டும் என்று

சொல்லிவிட்டார்கள்." என வருத்தமுடன் கூறினார்கள்.

"எதற்கு திடீரென வீட்டை விற்றுவிட்டார்கள்?"என அதிர்ச்சி மேலிட அம்மா கேட்டதற்கு.

"இந்த வீட்டை விற்று பணத்திலிருந்து என் கடன் ரூபாய் பத்தாயிரத்தை திருப்பி கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கும் அவரவர் பங்கை பிரித்து கொடுத்துவிட்டு, வீடு தனித்தனியாக பார்த்துகொண்டு போக சொல்லிவிட்டார்களாம் அப்பா" என மிகவும் வருத்தமுடன் கூறினார்கள் அப்பா.

"அப்படின்னா உங்க அப்பாவும் , அம்மாவும் எங்கு தங்கபோகிறார்கள்?" என அம்மா திரும்பவும் விட்டாமல் கேட்கவே,

"அப்பாவும்,அம்மாவும் கீழ்பாக்கத்தில் வீடு பார்த்து கொண்டிருக்கிறார்களாம்,பிடித்த வீடாக இருந்தால், உடனே வாங்கிவிட்டு என் தங்கை

சாராவுடன் அங்கு சென்றுவிடுவதாக அப்பா கூறினார்கள்".என அப்பா கூறியதும் சற்றே அதிர்ச்சியடைதவர்களாக அம்மா அப்படியே அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்துவிட்டார்கள்.

ஆனா பாட்டி கடுகடுவென் முகத்தை வைத்து கொண்டு, என் தம்பியை இடுப்பில் வைத்தபடி மொட்டை மாடியில் எதையோ வேடிக்கை பார்ப்பதுபோல் பாவனை செய்துகொண்டு நின்றிருந்தார்கள்.

மதியம் சாப்பாட்டை முடித்துவிட்டு அப்பா வெளியே கிளம்பி சென்றுவிட்டார்கள்.அம்மா நீலநிறத்தில் உள்ள கடிதத்தை எடுத்து வைத்துகொண்டு ஊரிலுள்ள தாத்தா ஈஸ்வரனுக்கும்,பாட்டி கமலாவுக்கும் இந்த விஷயத்தை குறித்து கடிதம் எழுதி முடித்துவிட்டு, மறுநாள் தபாலில் போடுவதற்காக தன கைபையில் பத்திரமாக வைத்தார்கள்..

ஆனா பாட்டி அம்மாவிடம் வந்து,"என்னம்மா இது ஒரே கூத்தா இருக்குது.முட்டை பூச்சிக்கு பயந்து வீட்டை கொளுத்துற கதைய இருக்கு.ரூபாய் பத்தாயிரத்தை புரட்டி கடன்காரனுக்கு கொடுக்கறதை விட்டுட்டு, இவ்வளவு பெரிய அரண்மனை போல உள்ள வீட்டை யாராவது விற்பார்களா?பரம்பரை பரம்பரையாக எல்லோரும் வசித்துவந்த வீட்டை இப்படி திடுதிப்பென்று எதற்கு விற்கணும் ..ஒரு பத்தாயிரத்தை உன் மாமனார் கொடுக்கமுடியாதா என்ன?"என புலம்பி தள்ளினார்கள்.

வழக்கம் போல் அம்மா பதில் எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தார்கள்.

அன்று சனிக்கிழமை மாலை நான்குமணிளவில் வீடு வாசலில் ஒரு சாம்பல் நிற பீயட் கார் வந்து நின்றது.அதிலிருந்து தாத்தா ஈஸ்வரன் இறங்கி வருவதை பார்த்த நான் மகிழ்ச்சியால் துள்ளி கதிகாண்டு மாடியில் உள்ள எங்கள் அறைக்கு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க

ஓடிச்சென்று,

“அம்மா,அம்மா, தாத்தா வந்திருக்காங்க.”என்று சந்தோஷம் தாங்காமல் குதித்தேன்.

அம்மா ஒன்றும் புரியாமல் “என்னடி உளறுகிறாய்.தாத்தாவால் நடக்கமுடியாது.இங்கு இல்லம் அவர்கள் வரமாட்டார்கள்”.என்றார்கள்.

“நான் இந்த டாக்டர் தாத்தாவை சொல்லலை அம்மா,நம்ம ஈஸ்வரன் தாத்தா சிதம்பரத்திலிருந்து வந்திருக்கிறார்கள்” என்று நான் சொல்லி முடிக்கும் முன்பே,ஈஸ்வரன் தாத்தா மொட்டை மாடியில் எங்கள் அறையை நோக்கி வருவதை பார்த்துவிட்ட அம்மா ஆச்சர்ய குறியால் புருவத்தை நெளித்தவண்ணம்,தன அப்பாவை கண்ட ஆனந்தத்தால் குழந்தைபோல் துள்ளி வாசலருகே ஓடிச்சென்று,

“என்னப்பா திடீரென்று, ஒருவரி கடிதம் கூட போடாமல் வந்து விட்டீர்கள்”. என்றார்கள்

“திட்டேரென்று வரவில்லையம்மா,உன்

கடிதத்தை படித்ததும் நானும்,உன் அம்மாவும் பதரிவிட்டோம்.என்ன விஷயம் என்று நேரில் வந்து விவரமாக தெரிந்து போகலாம் என்று உடனே புறப்பட்டு வந்துவிட்டேன்,உனக்கு கடிதம்போட்டுவிட்டு வரும் அளவிற்கு எனக்கு மனது கேட்கவில்லை.,பொறுமையும் இல்லை.”என்றார்கள் தாத்தா.

ஆனா பாட்டி தாத்தாவை பார்த்ததும் “வாங்க,வாங்க ,நல்லகாலம் வந்தீங்க”.என்று கூறும்போதே ஆனா பாட்டியும் தொண்டை கரகரத்தது.அழுகை பீறிட்டுக்கொண்டு வருவதுபோல் இருக்கவே சற்றே சமாளித்துகொண்டு “.நான் சென்று குடிக்க காபி கொண்டுவருகிறேன்,நீங்கள் உங்கள் மகளுடன் பேசிகொண்டிருங்கள் “. என்று கூறிவிட்டு தம்பி பாட்டை தூகிகொண்டு கீழே சமயலறைக்கு சென்றுவிட்டார்கள்.

அம்மா தாத்தாவிடம் நடந்த அனைவற்றையும் ஒன்று விடாமல் விவரமாகவும்,சுருக்கமாகவும் சொல்லி முடித்தார்கள்.

“சரிம்மா, நான் போயி உன் மாமனாரை பார்த்துவிட்டு வருகிறேன் .மீதியை பிறகு பேசிக்கொள்ளலாம்.”என கூறிவிட்டு கிளம்புகையில், ஆனா பாட்டி காப்பியுடன் மேலே வந்து தாத்தாவிடம் கொடுக்கவே ,அதை வாங்கி அவசராவசரமாக சூடு ஆற ஊதி குடித்துவிட்டு ,சுந்தரம் தாத்தாவை பார்க்க அவரது அறைக்கு சென்றார்கள்.

கொஞ்சநேரத்திற்கெல்லாம் தாத்தா ஈஸ்வரன் திரும்பிவந்துவிட்டார்கள்.

அம்மா ஆவலுடன்,”என்னப்பா சொன்னார் என் மாமனார்?”என்று கேட்டார்கள்.

“உன் மாமனார் ரொம்பவும் என்னிடம் பேசவில்லை.மன்னிப்பு கேட்டுகொண்டார் என்னிடம்.பின் அவர் உடல் நிலையைப்பற்றி விசாரித்தேன். நானும் வீடு விற்றது பற்றி எதுவும் கேட்கவில்ல. அவரும் எதுவும் என்னிடம் அதைப்பற்றி பேசவில்லை.”என தாத்தா கூறினார்கள்.

“மன்னிப்பா| எதற்கு அவர் உங்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்?அவர் எந்த தப்பும் செய்யவில்லையே அப்பா.”என்றார்கள் அம்மா ஆச்சர்யத்துடன்.

“அவர் எதுவும் தப்பு செய்யவில்லை.அவர் பையன் தேவனால், உன் வாழ்க்கை சரிவர அமையாமல் போய்விட்டதால்,மிகவும் கவலையுடன் கூறிவிட்டு, தன உயிருடன் இருக்கும்வரை உன்னை எந்த குறையும் வராமல் பார்த்துகொள்கிறேன்”.என்று கூறினார்

“அது போகட்டும்மா,எங்கு வீடு பார்ப்பதாக இருக்கிறீர்கள்?நீ வாடகை வீட்டிலே வாழ்ந்ததே இல்லையே.எப்படி குழந்தைகளை வைத்து கொண்டு வாடகை வீட்டில் சமாளிக்க போகிறாய்?” என தாத்தா மிகவும் கவலைப்படும் தொனியில் கேட்டார்கள்..

“இப்போது எனக்கு வேறு வழி கிடையாது.நான் வேலை செய்யும் பள்ளிகூடத்திற்கு பக்கத்திலேயே திருவல்லிகேணியில் கேசவ

பெருமாள் கோவில் அருகே வீடு பார்கசொல்லி தரகரிடம் கூறியிருக்கிறோம்.இன்னும் ஓரிரு வாரங்களில் அநேகமாக கிடைத்துவிடும் ,வீடு மாறியதும் அந்த வீடு முகவரியை உங்களுக்கு தெரிவித்து கடிதம் போடலாம் என்றிருந்தேன்." என அம்மா கூறியதும்,

சிறிது நேரம் அம்மாவுடன் பேசிகொண்டிருந்துவிட்டு, ஈஸ்வரன் தாத்தா போய்வருகிறேன் என விடைபெறுகையில்,

"இரவு சாப்பிட்டுவிட்டு நாளை காலையில் புறப்பட்டால் என்னப்பா,ஏன் இப்போதே அவசரமாக கிளம்பவேண்டும்?"என அம்மா சொன்னதும்,

"உன் புருஷனை பார்க்க எனக்கு இஷ்டமில்லை.நான் வந்த காரியம் முடிந்து விட்டது.இனி நான் ஜகன்னாதனையும், சேதுவையும் இன்றிரவு முடிந்தால் பார்த்துவிட்டு ,நாளை காலையில் ஊருக்கு கிளம்பி போய் விடுவேன்.நீ பத்திரமாக வீடு பார்த்து

போயிவிட்டு உடனே விவரமாக வீட்டு முகவரியுடன் கடிதம் போடு." என கூறிவிட்டு எங்கள் மூவரையும் தூக்கி முத்தமிட்டு கொஞ்சிவிட்டு கிளம்பி சென்றுவிட்டார்கள்.

தாத்தா ஈஸ்வரனை அந்த வீட்டில் யாருமே வாங்க என்று கூட கூப்பிடவில்லை.அனைவரும் ஒன்றும் தெரியாதவர்கள் போல முகத்தை திருப்பிக்கொண்டு அவரவர் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

சூரியனும் ,சந்திரனும்,எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் தன்னுடைய வேலைகளை,கடமை தவறாமல் சரிவர செய்து கொண்டிருப்பதைப்போல்,மனிதர்களாக பிறந்த நாம் மட்டும் ஏன் அதுபோல இல்லாமல், மற்றவர்கள் மீது பொறுப்பை போட்டுவிட்டு,கவலையின்றி,கடமையின்றி காலத்தை வீணே கழிக்கிறோம்?என நினைக்கையில் எனக்கு விந்தையாகவும், வியப்பாகவும் இருக்கும்.

ஒருநாள் விடியற்காலையில் எங்களுக்காக வீடு பார்த்துகொண்டிருந்த தரகர் வந்திருந்தார். அவர் அம்மாவிடம் ,அம்மா வேலை பார்க்கும் பள்ளிக்கூடம் அருகிலேயே வீடு கிடைத்துவிட்டது என்றும், ஆனால் அது நாலுமாடி கட்டிடம் என்றும்,நான்காவது மாடியில் ஒரு பகுதில்தான் அந்த போர்ஷன் இருக்கிறது எனவும், நாங் நாலுமாடி ஏறி செல்லவேண்டியிருக்கும் எனவும்,ஒரு பெரிய அறையும் அதை ஒட்டி ஒரு மிக பெரிய சமையலறையும் மட்டும்தான் இருக்கிறது.உடனே அந்த வீட்டிற்கு முன் பணம் கொடுக்காவிட்டால், அந்த வீடு நமக்கு கிடைக்காமல் போக வாய்ப்பு இருக்கிறது.பிறகு உங்களுக்கு வேண்டிய சரியான நேரத்தில் ,அந்த ஏரியாவில் உடனே வீடு கிடைக்குமா?என்பது சந்தேகம்தான் என கூறினார்.

அப்பாவும் ,அம்மாவும் சிறிது நேரத்தில் கிளம்பி தரகருடன் வீடுபார்த்துவிட்டு ,பிடித்திருந்தால் முன்பணம் கொடுத்துவிட்டு வருவதாக ஆனா

பாட்டியிடம் சொல்லிவிட்டு கிளம்பி சென்றுவிட்டார்கள்.

காலையில் சென்ற அப்பாவும்,அம்மாவும் மதியம் சாப்பாட்டிற்கு வீடு திரும்பினர்.அம்மா மிகவும் களைத்துபோயிருந்தார்கள் .

“வீடு எப்படி இருக்கிறது மங்கை?மாத்தம் எத்தனை அறைகள்?மாட்டைமாடி இருக்கிறதா? வசதியாக தெரிகிறதா?”என ஆனா பாட்டி ஆவலுடன் கேள்விகளை அடுக்கிகொண்டே போனார்கள்.

“நாலு மாடி ஏறவேண்டும் மாமி.குறைந்தது முப்பது படிகளாவது இருக்கும்.குளிப்பதற்கும் ,குடிப்பதற்கும் எல்லாம் நாலு மாடி இறங்கி கீழேதான் போயி எடுத்துவரவேண்டும்.மாடிப்படிகள் எல்லாம் திறந்தவெளியில் இருக்கிறது.எல்லாவற்றிற்கும் நாம் வெளியே வந்துதான் கீழ இறங்கிபோக வேண்டும்.மழை காலம் வந்துவிட்டால் கஷ்டம் தான் .மழையில் நனைந்து

கொண்டுதான்,அல்லது குடை
பிடித்துக்கொண்டுதான் கீழே சென்று தண்ணீர்
கொண்டுவரவேண்டும். அதோடில்லாமல்
குளியலறை,டாய்லேட் எல்லாம் கீழேதான்
இருக்கு.மழையில் வழுக்கி விழாமல் கவனமாக
இறங்கி ஏற வேண்டும்.அந்த வீட்டில் ரொம்ப
காலம் இருக்க முடியாது.தற்போதைக்கு கொஞ்ச
காலம் அங்கிருந்துவிட்டு,,வேறு ஏதும் வசதியாக
வீடுகிடைக்கிறதா என்று பார்த்துக்கொண்டே
இருக்கவேண்டும்.சமயம் எப்ப வந்தாலும்
வேறு வீடு மாறி
விடவேண்டுயதுதான்.இப்போதைக்கு வேறு வழி
இல்லை.எனவே முன்பணம் கொடுத்துவிட்டு
வந்துவிட்டோம்". என்றார்கள்.

ஆனா பாட்டி பதிலேதும் சிறிது நேரத்திற்கு
பேசாமல் இருந்துவிட்டு,"எப்போது வீடு மாற்ற
போகிறோம்?" என அமைதியாக கேட்டார்கள்.

"இந்த மாதம் முடிந்து அடுத்த மாதம் ஏப்ரல் 1-ம்
தேதி அன்று ,இதை காலி செய்துவிட்டு
வாடகை வீட்டிற்கு சென்றுவிடுவோம்."என

அம்மா பதிலளித்தார்கள்.

“இன்னும் சில வாரங்களே இருக்கிறது” என முனு முனுத்துகொண்டே தம்பியை தூக்கிக்கொண்டு ஆனா பாட்டி சமயலறைக்கு சென்றுவிட்டார்கள்.

நாங்க வீடு பார்த்து முடித்த அதே வாரத்தில் தாத்தா சுந்தர கீழ்பாக்கம் என்ற இடத்தில் ஒரு சிறிய நாலு படுக்கை அறை கொண்ட வீட்டை வாங்கிவிட்டதாக தெரியவந்ததது.மேலும் ஆனா பாட்டி அங்கு வேலை செய்யும் மற்ற வேலை ஆட்களிடமிருந்த நிறைய விஷயங்களை கேட்டு வந்து தினமும் அம்மாவிற்கு தெரிவித்துக்கொண்டே இருந்தார்கள்.

தாத்தா சுந்தரம், பெரிய அத்தை ராஜிக்கு வீடுகட்டுவதர்காக சென்னையிலுள்ள அசோக் நகரில் இடம் வாங்கி கொடுத்திருப்பதாகவும்.சித்தப்பா குமாருக்கும், சின்ன அத்தை சராவிற்கும் பணமாக கொடுத்துவிட்டதாகவும்,எங்கள் பங்கிருக்கு

,அப்பாவின் கடன் ருபாய் பத்தாயிரம் போக,
மீதி பணம் ரூபாய் பன்னிரண்டாயிரத்தை
அப்பாவிடம் பணமாக கொடுத்துவிட்டதாகவும்
,அம்மாவும்,ஆனா பாட்டியும்
பேசிக்கொண்டதிலிருந்து தெரிந்து கொண்டேன்.

அதன் பிறகு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு
குடும்பமாக வீட்டை காலி செய்து விட்டு
வெளியே போகும் போது அனைவரும்
அவர்களுக்கு பிரியாவிடை கொடுத்து அனுப்பி
கொண்டிருந்தார்கள்.

அன்று ஒரு நாள் பெரிய அதை ராஜியின்
குடும்பம் கிளம்பிகொண்டிருந்தது .பெரிய அதை
ராஜி பொங்கி வந்த அழுகையின் நடுவில்
அனைவரிடமிருந்தும் விடைபெற்று
கொண்டிருந்தார்கள்.யாருக்கும் பிரிந்து செல்லும்
மனமில்லாமல் அழுவதை பார்த்தும் ,எனக்கும்
அழுகை அழுகையாய் வந்தது.ஒருவழியாக
எப்படியோ பிரியாவிடை கொடுத்து
அனுப்பிவைத்தார்கள்.

ஓரிரு நாட்களுக்கு பிறகு மிகவும்
விடியற்காலையிலேயே நிறை பேர் வீட்டிலுள்ள
பெர்நிச்சர்களை எடுத்துக்கொண்டு கீழே
சென்று ஒரு பெரிய வேனில்
ஏற்றிகொண்டிருந்தார்கள்.அதை பார்த்த நானும்
அண்ணன் ஷானும் ஆனா பாட்டியிடம்,"ஆனா
பாட்டி நாம இன்னிக்கு புது வீடு
போறோமா?"என்றோம்.

"இல்லையடா கண்ணுகளா ,நாம
நாளைக்குதான் போறோம்.உன்
தாத்தாவும்,பாட்டியும், சித்தப்பா குமார
குடும்பமும், சின்னத்தை சாரூவும் புது வீட்டுக்கு
போறாங்க."என்றார்கள்.

வேலை ஆட்கள் தாத்தாவின் இடத்தை காலி
செய்து கொண்டிருந்ததை நானும், அண்ணன்
ஷானும் கீழேயிருந்த வரவேற்பறையிலிருந்து
வேடிக்கை பார்த்து
கொண்டிருந்தோம்.வீட்டிலுள்ள சாமான்கள்
அனைத்தும் ஒவ்வொரு குடும்பமும் காலி செய்து
போகும்போது குறைந்துகொண்டே வந்ததாலும்,

கடைசியாக தாத்தா காலி செய்யும் சமயம் வீடு முழுதும் காலியாக பார்க்க மிக பெரியதாக தெரிந்தது.

சாமான்கள் முழுதும் வேனில் ஏற்றி முடித்தவுடன்,வீடு பார்க்க வெறிச்சென்று ,.வேலை ஆட்கள் யாருமே பார்க்க மகிழ்ச்சியாக இல்லை.அன்றுடன் வேலை ஆட்கள் எல்லோருக்கும் கணக்கு தீர்த்து கொடுக்க வேண்டிய பணம் எல்லாம் கொடுத்து முடித்து விட்டு அவர்களையும் அன்றுடன் வீட்டை விட்டு அனுப்பிவைப்பதாலும், இவ்வளவு வருடங்களாக குடும்பம் முழுதும் பரம்பரை பரம்பரையாக வேலை பார்த்துவிட்டு, இன்று அந்த அரண்மனைபோல் உள்ள வீட்டைவிட்டு பிரிந்து போவது என்ற நிலையில் அனைவரது மனமும் மிகவும் வேதனையில்,முக வாட்டத்துடன் கண்ணில் நீர் தாரைதாரையாய் அருவி போல் வடிய,மூக்கை பாட்டியை வழியனுப்ப நின்றிருந்தார்கள்.

தாத்தா,பாட்டி, சின்னத்தை சாரா ,குமார்

சித்தப்பா குடும்பம் அனைவரும் மத்தியானம் சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு கிளம்பி கொண்டிருந்தார்கள்.நாங்க மட்டும் மறுநாள் கலையில் கிளம்புவதாக பேசிகொண்டிருந்தார்கள்.ஆனா பாட்டியும் ,அம்மாவும் மறுநாள் விடியற்காலையில் புறப்படுவதற்கான ஏற்பாடுகளையும் ,பெட்டி படுக்கை,சாமான்களை எல்லாம் தயாராக வைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஜம்பு ,அப்பா மற்றும் குமார் சித்தப்பா தாத்தாவை மெதுவாக வீல் சேரில் உட்காரவைத்து, மாடியிலிருந்து இறக்கி சென்று காரில் உட்காரவைத்தார்கள்.தாத்தா முகத்தில் எந்தவித சலனமும் இல்லை.மாறாக தாத்தாவின் முகம் மிக தெளிவாக இருந்தது.இவ்வளவு நாட்கள் ஜேஜே என்று உறவினர்களுக்கு இடையில் வாழ்ந்துவிட்டு இனி தனியாக போகிறோமே என்ற கவலை அவர்கட்கு இருப்பதாக றவில்லை.

இன்னும் சொல்லப்போனால் அந்த வீட்டில்

யார் யார் இருக்கிறார்கள்?,தாத்தாவின் பேர குழந்தைகள் எத்தனை பேர்?,.பக்கத்து,எதிர்வீட்டுகுழந்தைகள் யார்?,மற்ற உறவினர் குழந்தைகள் யார்? யார்?, தன சொந்த பேரக்குழந்தைகளின் பெயர் என்ன ?என நிறைய விஷயங்கள் தாத்தாவுக்கு தெரியாமல் இருந்தது.

ஒரு நாள் மாலையில், தாத்தா சுந்தரம் வேலை முடித்துவிட்டு வழக்கத்திற்கு மாறாக வீட்டிற்கு வெகு சீக்கிரமாக வீடு திரும்புகையில்,அங்கே வழியில் நின்றிருந்த என்னை பார்த்து விட்டு "யார் இந்த பாப்பா? இங்கே நம்ம வீட்டில் ஏன் இருக்கு?,அதன் வீட்டுக்கு போக சொல்லு சரசா"என பாட்டியிடம் கூறியதும்,

"என்ன அப்படி சொல்லிடீங்க?அது நம்ம பையன் தேவனின் பெண் அனிதா.நேற்றுகூட இவளை பார்த்து இதேதான் சொன்னீங்க.இன்னைக்கும் இவளை யாரு என கேக்குறீங்க.நான் நேத்து சொன்னதை மறந்துடீங்க போல இருக்கு".என பாட்டி சரசா

சிரித்துக்கொண்டே சொன்னதும்.

“நம்ம தேவன் மகளா இது?நேத்து சிவப்பு கவுன் போட்டிருந்தது ,இன்னைக்கு கருப்பு கலர் கவுன் போட்டிருக்குதே.எனக்கு அடியாளம் தெரியவில்லை.”என்றார்கள்.

“குழந்தை தினமும் ஒரே கலர் கவுனா உங்களுக்காக போட்டுக்கமுடியும்.இனிமே உங்களுக்கு யாரு என தெரியவேண்டும் என்றால் எல்லா குழந்தைகளுக்கும் ஒரே மாதிரி யுனிபாம் போட்டுவிடவேண்டியதுதான்”.என தாத்தாவிடம் கிண்டலாக கூறி சிரிந்தார்கள்.அந்த சம்பவம் இன்று என் மனதில் பசுமையாக இருந்தது.

ஆனால் இன்று தாத்தா என்னை பார்த்ததும் யார் என்று கேட்கவில்லை.ஏன் என்றால் எங்கள் ஒரு குடும்பம்தான் அங்கு இருந்தது.அப்பாவிடம் மட்டும் தாத்தா தன அருகில் கூப்பிட்டு எதையோ பேசிவிட்டு,அம்மாவையும் அருகில் வருமாறு

அழைத்தார்கள்.அம்மா முதன் முறையாக சுந்தரம் தாத்தாவிடம் பேசியதை அன்றுதான் நான் பார்த்தேன்.

“போயிட்டு வரேம்மா.ஜாக்கிரதையாக இரு,எதுவும் பிரச்சனை என்றால் என்னிடம் கூற தயங்காதே”. என சுருக்கமாக ஒரு வரியில் கூறிவிட்டு விடை பெற்று கொண்டார்கள்.

அம்மாவும் சரி என்பதுபோல தலையாட்டி விடை கொடுதார்கள்.

பாட்டி சரசாவும்,சின்னத்தை சாராவும் வீட்டை ஒருமுறை ஏக்கத்துடன் நோட்டம் விட்டார்கள்.இருவர் கண்களும் குளமாகியது.வேலை ஆட்கள் அனைவரும் அழுதவண்ணம, காரின் அருகில் நின்றிருந்தனர்.

“நேரமாகுதும்மா, காரில் ஏறுங்கள்.” என்ற தாத்தாவின் குரல் கேட்டு இருவரும் காரில் ஏறி அமர்ந்தார்கள்.

சித்தப்பா குமாரும்,சித்தி ராஷ்மியும் அவர்கள்

பையன் மணியும் மற்றொரு காரில் ஏறி அமர்ந்தார்கள்.

“டிரைவர் ,காரை கிளப்புப்பா, வி ஆர் ரெடி “என்று தாத்தா சொன்னதும் இரண்டு கார்களும் கிளம்பி சென்றது.

தாத்தா ,பாட்டியை வழியனுப்பிவிட்டு வீட்டிற்குள் வந்த எங்கள் அனைவருக்கும் அந்த வீட்டில் இருக்க பிடிக்கவே இல்லை. ஆனால் வேறு வழியில்லை.கலகல என்றிருந்தவீடு ,இன்று களையிழந்து வெறிச்சென்றிருந்தது.அந்த வீடு ஒரு பாலைவனமாக தோன்றியது.தாத்தா சென்றதும் வேலையாட்களும் ஒருவர்பின் ஒருவராக விடைபெற்று சென்றுவிட்டனர்.

முதன்முறையாக நானும்,அண்ணன் ஷானும் அந்த வீட்டை ஒவ்வொரு அறையாக சென்று எப்படியிருக்கிறது என பார்த்து வந்தோம்.

எல்லோரும் அந்த வீட்டில் வாழ்கையில் ,அந்த வீட்டை முழுமையாக பார்க்க எங்களுக்கு

வாய்ப்பு இருந்ததே இல்லை.எல்லா அறைகளும் காலியாக இருந்ததால் நன்றாக சுதந்திரமாக ஓடிவிளையாட மைதானம் போல வசதியாக இருந்தது.எங்களை மிரட்டுவதற்கோ,பயமுருத்துவதற்கோ அன்று யாரும் இல்லாததால் நாங்களிருவரும் எங்கள் விருப்பபடி மாடிக்கும், கீழுக்குமாக ஓடி, ஓடி விளையாடி, களைத்து போய் அன்றிரவு சீக்கிரமாகவே தூங்கிவிட்டோம்.

ஆனா பாட்டி அன்று வீட்டில் சமைக்கவில்லை.அவர்கள் எல்லாவற்றையும் பாக் பண்ணுவதில் முமுரமாக இருந்ததால், அப்பா ஹோடேலில் இருந்து அனைவருக்கும் சாப்பாட்டை ஒரு ஐந்து அடுக்கு தூக்கில் வாங்கிவந்தார்கள்.

நாங்கள் சாப்பாட்டை சாப்பிட்டு முடித்தோம். அம்மா,அப்பா, ஆனா பாட்டி முவரும் வருத்தத்தில் அதிகம் சாப்பிடவில்லை.கடமைக்கு எதோ கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு,மீதமிருந்த நிறைய சாப்பாட்டை அங்கே தேர்விலிருந்த

பிச்சை எடுப்பவரிடம் கொடுத்துவிட்டார்கள்.

மறுநாள் குளித்துவிட்டு உடைமாற்றிகொள்ள வேண்டிய உடைகளை மட்டும் எடுத்து வெளியே வைத்துவிட்டு,மீதமுள்ள எல்லா சாமான்களையும் அப்பாவும்,அம்மாவும்,ஆனா பாட்டியும் எடுத்து சென்று கீழே உள்ள வரவேற்ப்பரையில் வைத்தார்கள்.நானும்,அண்ணன் ஷானும் எங்களால் முடிந்ததை எடுத்து சென்று கீழு வைத்து உதவி செய்துகொண்டிருந்தோம்.

எல்லாவற்றையும் கீழே வைத்துவிட்டு,மாடியில் நாங்கள் இருந்த அறையை பூட்டிவிட்டு,வரவேற்பறையில் அருகில் இருந்த சின்ன அத்தை சாரா இருந்த அறையில் நாங்கள் அனைவரும் ஒரு ஜமுக்காளத்தை விரித்து போட்டு படுத்து விட்டோம்..

8

அத்யாயம்-எட்டு

மறுநாள் காலை ஏப்ரல் 1ம் தேதி 1962,முழுமையாக விடியவில்லை. பாதி விடிந்தும் விடியாததுமாக இருந்தது.சூரியன் மெதுவாக தன் தலையை தூக்கி சிறுது சிறுதாக இந்த பூமியை பார்க்க ஆரம்பிதுகொண்டிருந்தார்.நான் கண்முழித்து பார்க்கும் முன்பே அம்மா,ஆனா பாட்டி,அப்பா மூவரும் குளித்து முடித்துவிட்டு தயாராக இருந்தார்கள்.காபி வாங்கிவர வெளியே சென்றிருந்த அப்பாவும் கையில் பிளாஸ்க் உடன் உள்ளே வந்து அம்மாவிடம்

ப்ளாஸ்க்கை கொடுத்தார்கள்.

அம்மா காபியை ஊற்றி ஆனாபாட்டி கொஞ்சம் கொடுத்துவிட்டு,தானும் குடித்துவிட்டு மீதியை அப்படியே ப்லாஸ்கில்
மூடிவைத்துவிட்டு,என்னையும் ,அண்ணன் ஷானையும் குளிக்கசொல்லி குளியலறைக்கு அழைத்து சென்றார்கள்.புது வாடகை வீட்டில். கீழிருந்து தண்ணீர் எடுத்துவருவது கஷ்டம் என்பதால், எல்லோரும் இங்கே குளித்துவிட்டு .துணிமணிகளை துவைத்து எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று எங்களை எல்லாம் அவசர, அவசரமாக குளிக்கவைத்து ,துணிமணிகளையும் துவைத்து எடுத்து கொண்டார்கள்.எல்லாம் மிக துரிதமாக நடந்து முடிந்தது.
குறித்தநேரத்திர்கெல்லாம் வாசலில் சாமான்களை
ஏற்றி செல்லும் வான் வந்துநின்றது.

இரண்டு ஆட்கள் வானிலிருந்து இறங்கி வீட்டினுள் வந்து, தயாராக வைத்திருந்த சாமான்கள் அனைத்தையும் வேனில்

ஏற்றிகொண்டிருந்தார்கள்.அப்பாவும்
அவர்களுக்கு உதவியாக சிலவற்றை
எடுத்துசென்று வானில்
வைத்துக்கொண்டிருந்தார்க்கள் .எல்லாம்
முடிந்ததும் ,எங்கள் அனைவரையும் வெளியே
நிற்க சொல்லிவிட்டு வீட்டை
பூட்டினார்கள்.பிறகு அந்த தெரு முனையிலிருந்த
டாக்ஸி ஒன்றை அழைத்து வந்தார்கள் அப்பா .

டாக்ஸி வந்து நின்றதும், ஆனா பாட்டியையும்
எங்களையும் டாக்ஸி பின் சீட்டில்
உட்காரசொல்லிவிட்டு,அம்மாவும் அப்பாவும்
பூட்டிய வீட்டை சற்று நேரம் நின்று
பார்த்துகொண்டிருந்தார்கள்.அம்மாவின் கண்கள்
லேசாக கலங்கியிருந்தது.வீட்டை விட்டு பிரிய
மனமில்லாமல் அம்மா காரின் பின் சீட்டில்
எங்களுடன் ஒரு ஜன்னல் ஓராமாக
உட்கார்ந்துகொண்டார்கள். நான் வெளியே
வேடிக்கை பார்த்து கொண்டு வரவேண்டும்
என்று அம்மாவின் மடிமீது
உட்கார்ந்துகொண்டேன். ஆனா பாட்டி
தம்பியை மடிமீது வைத்துகொண்டு நடுவில்

உட்கார்ந்திருந்தார்கள். அண்ணன் ஷான், ஆனா பாட்டியின் அருகில் அடுத்த ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்தான். அப்பா முன் சீட்டில் கார் ஓட்டுபவர் அருகில் உட்கார்ந்துகொண்டார்கள்.

டாக்ஸி வீட்டை விட்டு கிளம்பியது.அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் எல்லாம், நாங்கள் அனைவரும் வீடு காலி செய்து கொண்டுபோவதை ஒவ்வொருநாளும் நின்று வேடிக்கை பார்த்துகொண்டிருந்தார்கள்.நெருங்கி பழகியிருந்த சிலபேர் எங்கள் காரின் அருகில் வந்து சிறிது நேரம் பேசிவிட்டு பிரியா விடை கொடுத்தனுப்பினார்கள்.

முதலில் எங்கள் டாக்ஸி செல்ல, பின்னல் எங்கள் சாமான்களை ஏற்றிய வான் பின்தொடர்ந்து வந்தது.டாக்ஸி தெரு முனையை திரும்பும்வரை அப்பாவும் ,அம்மாவும் வீட்டை திரும்பி திரும்பி பார்த்த வண்ணமே இருந்தார்கள்.யாரும் பேசவே இல்லை.காரில் அமைதி நிலவியது.என் மனம் ஏனோ படபடவென அடித்துகொண்டது.புது வீடு

எப்படி இருக்கபோகிறது?ஓடி விளையாட இடம் பெரிதாக இருக்குமா?என்னுடன் விளையாட என் வயது பெண் குழந்தைகள் இருப்பார்களா?என்று பலவாறு கேள்விகள் எழுந்தன.

ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்றேன்.வழியில் பார்த்த காட்சிகள் என் நெஞ்சை உருக்கியது.தெருக்களில் உள்ள ப்ளாட்பாரத்தில் ஏழை மக்களின் குடும்பங்கள் வசிப்பதையும்,ஏழை குழந்தைகள் உடலில் உடை இல்லாமல் ஆங்காங்கே சுற்றிகொண்டிருப்பதையும்,பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை ஆங்காங்கே பிச்சை எடுப்பதையும் முதன்முறையாக நான் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.நான்கு வயது நிரம்பிய நான் வீட்டை விட்டு வெளியே செல்லும் வாய்ப்பு அதுவரை அதிகம் இல்லமால் போயிற்று .தினமும் இரவில் பிச்சை கேட்டு வருபவரை பார்த்திருக்கிறேன். ஆனால் இப்போதுதான் அவர்கள் குடும்பம் எப்படி வாழ்கிறது என்பதை

பார்க்கநேரிட்டது.

கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவன் ஏன் இவ்வளவு ஒர வஞ்சனையாக இருக்க வேண்டும்.பணக்காரர்கள்,நடுவகுப்புகாரர்கள்,ஏழை என ஏன் பாகுபடுத்தி மக்களை படைத்து துன்புருத்தவேண்டும்.எல்லோரையும் ஒரே மாதிரியாக ஏன் படிக்ககூடாது?அதோடில்லாமல் குருடாகவும்,செவிடாகவும்,ஊமையாகவும்,ஊனமாக ஏன் படைத்தது வதைக்கவேண்டும்?கடவுள் என பேசிக்கொள்கிறார்களே,அவர் ஆண் கடவுளா? அல்லது பெண் கடவுளா?அவர் எப்படி இருப்பார்?எங்கு வாழ்கிறார்?என்ன சாப்பிடுவார்?என்ன மொழி பேசுவார்?என்று என் மனம் கடவுளை பற்றி சிந்திக்க ஆரம்பித்தது.கடவுளை நான் பார்க்கமுடியுமா? எப்படி பார்ப்பது?அவரை என்ன சொல்லி அழைத்தால் என்னை வந்து பார்ப்பார் என்றெல்லாம் என் எண்ண அலைகள் ஓடிக்கொண்டேயிருந்தது.

கடவுளை பற்றி யாரிடம் கேப்பது.உடன் என்

நினைவில் தாத்தா ஈஸ்வரன் நினைப்பே வந்தது.தாத்தா நிறைய கடவுளை பற்றி பலரிடம் பேசி கேட்ட ஞாபகம் உண்டு எனக்கு.கண்டடிப்பாக கடவுளை நான் பார்த்தே ஆகவேண்டும்.இது பற்றி அவரிடம் நேரடியாக கேட்டு தெரிந்தாக வேண்டும்.கோவிலில் வெறும் கர்ச்சிலை தானே இருக்கிறது. நான் பேசினால் அந்த சிலையின் காதுகளில் விழுமா?கண்ணை மூடி வேண்டினேன். கடவுளே எனக்கு நீ ஒரு சிறப்பான சக்தியை கொடு.இந்த உலகத்தில் யாரும் கஷ்டப்படாமல் நான் பார்த்துகொள்கிறேன் என்று.

ஓடி கொண்டிருந்த டாக்ஸி திடீரென நின்றதும்,டாக்ஸி உடன் ஓடிகொண்டிருந்த என் எண்ண அலைகளும் ஓய்ந்து நின்றது.கண்களை திறந்து திரும்பி அம்மாவை பார்த்தேன்.

“நம்ம புது வீடு வந்துவிட்டது,நாம எல்லாம் இறங்கவேண்டும்” என்றார்கள்.

புது வீடு பார்க்கும் ஆர்வாத்தில்

டாக்ஸியிலிருந்து வேகமாக குதித்து இறங்கினேன்.ஆளுக்கொரு சாமான்களை கையில் எடுத்துக்கொண்டு, டாக்ஸி ஓட்டுபவரிடம் பணத்தை கொடுத்து அனுப்பிவிட்டு எங்களிடம்,

“கதவை திறந்து உள்ளே போங்க எல்லோரும்” என்றார்கள் அப்பா.

வாசலில் இருபக்கம் திறப்பதுப்போல் கம்பிகள் போட்ட கதவை திறந்ததும்,ஒரு நீண்ட இருட்டான விராந்தா.அதை கடந்ததும் ஒரு படியிரங்கியதும் லெப்ட் சைடில் ஒரு கைபம்ப். அதுதான் குடிதண்ணீர் குழாய் என்றார்கள் ஆனா பாட்டியிடம்,அம்மா.அந்த பம்ப் ஒரு திறந்த வெளியில் இருந்தது.அந்த குழாய் இருந்த சதுரவடிவ முற்றம், ஒரே சமயத்தி நாலு அல்லது ஐந்து பேர் தாராளமாக நிற்கும் அளவிற்கு இடம் இருந்தது.அந்த திறந்த வெளி சதுர முற்றத்தின் ரைட் சைடில் செங்குத்தான நீண்ட மாடிப்படிகள் சென்றன. படிக்கட்டுகளை எண்ணிக்கொண்டே நானும், அண்ணன் சானும்

ஏறிச்சென்றோம்.சரியாக பதினைந்து படிகள். அதன் முடிவில் மற்றுமொரு சிறிய வெராண்டா .அந்த வெராண்டாவில் லெப்ட் சைடில் மற்றொரு கை பாம்பு குழையும் ,ரைட் சிடில் இரண்டு குளியலறையும்,இரண்டு டாயலேட்டும் வரிசையாக இருந்தது.அந்த விராந்தாவிற்கு மேல் உள்ள எங்கள் போர்ஷனுக்கு போக வேண்டிய படிக்கட்டுகள் கட்டியிருந்ததால் ,விராண்டவை அந்த மேல் படிகள் முடியவண்ணம் இருந்தது.

அந்த விராந்தாவை நாங்கள் அனைவரும் சுருக்கமாக நோட்டம்விட்டுவிட்டு ,மறுபடியும் படிகளை எண்ணிக்கொண்டே மேலே சென்றோம். எனக்கு என்ன தெரியாது. அண்ணன் ஷான் எண்ணிக்கொண்டே வந்தான்.நானும் அவனுடன் கூட அவன் சொல்வதை திருப்பி சொல்லிக்கொண்டே வந்தேன்.சரியாக பத்து படிகள்.மொத்தத்தில் கீழிருந்து எங்கள் ப்ரோஷனுக்கு போக தினமும் நாங்கள் இருபத்தைந்து படிகள் ஏரியாகவேண்டும்.அவ்வளவு படிகளை ஏறி முடித்ததும் ,மறுபடியும் இருபுறம் திறப்பதுபோல்

மரக்கதவு இருந்த்தது,அதை திறந்து கொண்டு உள்ளே நுழைந்ததும், மறுபடியும் சதுரவடிவில் ஓர் அறை இருந்தது, அந்த அறையிலிருந்து மீண்டும் மூன்று படிகள் ஏறியதும் மற்றுமொறு நீண்ட சதுர வடிவ விராந்தா காணப்பட்டது.அந்த விராண்டாவின் ரைட் சைடில் உள்ள போர்ஷனில் ஒரு குடும்பம் குடியிருந்தது.பார்ப்பதற்கு சற்றே குறைந்த வருமானம் உள்ள குடும்பமாக தெரிந்தது.

அந்த போர்ஷனை கடந்து நேரே சென்றால் ஒரு வாசற்படியும், அதில் ஒரே ஒருபுறம் திறப்பது போல பெரிய மரக்கதவு இருந்தது.அப்பா கைபெட்டியை கீழே வைத்துவிட்டு தன சட்டை பையிலிருந்து சாவியை எடுத்து பூட்டை திறந்து ,கதவையும் திறந்தார்கள்.

நாங்கள் உள்ளே நுழைந்ததும் மிகப்பெரிய அறையும்,அதை ஒட்டி ரைட் சைடில் அதே அளவில் மிகப்பெரிய சமையலறையும் இருந்தது.எனக்கும், அண்ணன் ஷானுக்கும்

பெருத்த ஏமாற்றம்.ஓடி விளையாட அங்கு மொட்டை மாடிகூட இல்லை.மொத்தம் இருப்பது இந்த இரண்டு அறைகள் மட்டுமேதான்.வாசல் கதவை திறந்தால் ,அடுத்த போர்ஷனில் உள்ளவர்களைத்தான் பார்க்க நேரிடும்.இந்த சிறிய இடத்தில் ஜெயில் கைதி போல் எவ்வளவு நாள் காலம் தள்ளுவது ?.என மனம் சற்றே சோர்வு அடைந்தது.

அப்பா எங்களையெல்லாம் விட்டுவிட்டு, வேனிலிருந்து சாமான்களை எடுத்து வரும் ஆட்களுக்கு உதவி செய்வதற்காக சென்று விட்டார்கள்.மேலே சாமான்களை எடுத்து வந்த அந்த இரண்டு ஆட்களும் மிகவும் சலித்துகொண்டார்கள் “மெதுவாப்பா, பீரோ கண்ணாடி உடைந்துவிட போகிறது.” என அம்மா சொன்னதுதான் சாக்கு.என ஆரம்பித்துவிட்டான் அந்த இருவரின் ஒருவன்.

.”என்னம்மா விஷயம்புரியாமல் பேசுகிறீர்கள்.இவ்வளவு படிகள் ஏறவேண்டும் என ஐயா எங்களிடம் சொல்லவே

இல்லை.அவர் சாமான்களை மாடிப்படிகளில் தூக்கிக்கொண்டு போகவேண்டும் என்று சொன்னபோது எதோ கொஞ்ச படிகள்தான் என நினைத்தோம்.இவ்வளவு படிகள் என்றால் ஐயா பேசிய தொகைக்கு சம்மதித்திருக்க மாட்டோம்." என குற்றம் சாட்டுவதுபோல பேசிவிட்டு, பேசிய தொகையை விட அதிகம் கொடுக்கவேண்டும் என வலியுறுத்தி, வாக்குவாதம் செய்ய ஆரம்பித்தான் அதில் ஒரு ஆள்.

இந்த வாக்குவாதத்தை எல்லாம் கேட்டுகொண்டே வந்த அப்பா "உனக்கு அதிகம் பணம் வேண்டும் என்றால் என்னை கேளுப்பா.எதுக்கு அன்னவசியமாக வீட்டு பெண்களுடன் வாக்குவாதம் பண்ணுகிறாய்.சாமான்களை எல்லாம் முதலில் இறக்கி வை ,பேசிய தொகைக்கு மேலே நீ எதிர்பார்க்கும் பணத்தை கொடுத்துவிடுகிறேன்.உங்கள் இருவரின் கஷ்டம் எனக்கு புரியாமல் இல்லை." என அப்பா சாதாரணமாக கூறியதும் ,அவர்கள் இருவரும்

சற்றே நிம்மதி பெருமூச்சுடனும்,திருப்தியுடனும் எல்லாவற்றையும் எடுத்து வந்து வைத்துவிட்டு ,எதிர்பார்த்த பணத்தை திருப்தியுடன் வாங்கி கொண்டு, அப்பாவிற்கு மிகவும் நன்றி சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள்.

அப்பா எங்களுக்கு மதியம் சாப்பாட்டிற்கு, சாப்பாடு வாங்கி வருவதாக ஹோட்டலுக்கு லஞ்ச பாக்சுடன் வெளிய புறப்பட்டு சென்றார்கள்.அப்பா நகர்ந்ததும் ஆனா பாட்டி புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள்.

“ஒரு பக்கெட் தண்ணீர் எடுத்து வர நாம இவ்வளவு படிகள் இறங்கி, ஏற வேண்டுமா?இந்த வயதான் காலத்தில் எப்படி என்னால் முடியும்?கர்ணம் தப்பினால் மரணம்தான்,சற்று வழுக்கினால் கூட கீழே உருண்டு விழுந்து மண்டை,கை ,கால்,உடைந்து விடும் அளவிற்கு படிகள் மிகவும் செங்குத்தாகன்னா இருக்கு”. என்றார்கள்.

கவலைபடாதீங்க மாமி.நான் தண்ணீர் கொண்டு

வரும் வேலையை பார்த்து
கொள்கிறேன்.துணிதுவைப்பதையும் நானே
பார்த்துக்கிறேன்.நீங்கள் சமையல்
வேலையும்,பாத்திரம்
கழுவுவதையும்,குழந்தைகளை பார்த்துகொள்வது
மட்டும் செய்யுங்கள்.அதுவே போதும்
எனக்கு.புது இடம் என்பதால் வேலைக்கு ஆள்
கிடைக்க சில நாட்கள் ஆகும்.அதிலும் இவ்வளவு
படிகள்ஏற வேண்டும் என்றால் எளிதில் ஆள்
கிடைக்காது.மிகவும் கஷ்டமே", என்று
பாட்டியை சமாதான படுத்தினார்கள்.

"நீ மட்டும் எப்படி
குளிப்பதற்கும்,குடிப்பதற்கும்,அவ்வளவு தண்ணீரை
எடுத்துவர முடியும்.உனக்கு வீட்டு வேலை
செய்து பழக்கம் அவ்வளவாக
இல்லையே.எனக்கென்னவோ இந்த வீடு
கொஞ்சமும் பிடிக்கவில்லை.ஊர்ல வேறு வீடு
நல்லதா கிடைக்காதா என்ன?என்ன
தலையெழுத்துக்கு இந்த மாதிரி வீட்டிற்கு நாம
குடிவரனும்?". என தலையில்
அடித்துகொண்டார்கள்.

“இப்போதைக்கு வேறு வழியில்லை மாமி.கொஞ்சம் நாள் எப்படியாவது தள்ளிவிட்டு வேறு வசதியான வீடு பார்த்து செல்ல வேண்டியதுதான்.நான் முதலில் குடிக்க தண்ணீர் கொண்டுவருகிறேன்”.என கூறிவிட்டு அங்குள்ள பெரிய பித்தளை குடத்தை எடுத்து கொண்டு கீழே இறங்கி சென்றார்கள் அம்மா.

அம்மாவிற்கு இதுபோன்ற வேலைகள் எல்லாம் பழக்கம் இல்லாததால், தடுமாறி,தடிமாறி குடத்திலிருந்து நீர் ததும்பி உடைகளை எல்லாம் நனைய எப்படியோ சமாளித்து படியேறி வந்துவிட்டார்கள். பார்க்க மிகவும் பாவமாக இருந்தது எனக்கு.மேற்படியில் நின்று பார்த்த எனக்கு , ஏதோ மிக பெரிய மலை மீது நின்று கீழே பார்ப்பதுபோல மிகவும் பயமாக இருந்தது.

அந்த தெருவில் வீடுகள் எல்லாம் மிக நெருக்கமாக கட்டப்பட்டிருந்தது.சுற்றிலும் செடி,கொடிகள்,மரங்கள் எதுவும் இல்லாமல்,எல்லா வீடுகளும் குறைந்தது இரண்டு

மாடி கட்டிடங்களாக, அதிக பட்சம் மூன்று
அல்லது நாலு மாடி கட்டிடங்களாக
இருந்தது.ஒரு வீட்டு மொட்டை மாடியிலிருந்து
அடுத்த ,வீட்டு மொட்டைமாடிக்கு சுலபமாக
தாவி சென்று விடும் அளவிற்கு நெருக்கமாக
இருந்தது.எல்லா வீடுகளும் மிக பழையதாக,
நூறு வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டதுபோல்
காட்சியளித்தது.எங்கள் வயது குழந்தைகள்
நிறைய பேர் ஆங்காங்கே
மொட்டைமாடிகளில்விளையாடிக்கொண்டிருந்தை
பார்த்த எனக்கும் , அண்ணன் ஷானுக்கும்
மிகவும் சந்தோஷமாக இருந்தது.அண்ணன்
ஷான் எங்கள் பக்கத்து போர்ஷனில்
குடியிருக்கும் இரண்டு பையன்களுடன் வெகு
சீக்கிரமாகவே சிநேகிதம் ஆகி
விளையாடிகொண்டிருந்தான். அவர்களுக்கு
பெண் குழதைகள் கிடையாது.

பழைய வீட்டில் என்னுடன் விளையாட
யாருமே இல்லாமல்,எப்பவும் வீட்டினுள்
தனியாக படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு
வீட்டுக்குள் நடப்பவைகளை வேடிக்கை

பார்த்துகொண்டிருந்த எனக்கு,இங்கு அக்கம் பக்கத்து வீடுகளில் குழந்தைகள் சத்தம் போட்டு கத்திக்கொண்டு ஓடி விளையாடுவது, பட்டம் விடுவதுமாக இருப்பதை பார்த்ததும் மிகவும் ஆனத்தமாக இருந்தது.எனக்கும், அண்ணன் ஷானுக்கும் இந்த வீடு மிகவும் பிடித்துவிட்டது. நாங்கள் சிறு குழந்தைகள் என்பதால் அந்த வீட்டு வசதியை பற்றி துளியும் நினைத்துப்பார்க்க தோன்றவில்லை. எங்களுடன் விளையாட குழந்தைகள் இருக்கிறார்களா/ என்பதில்தால் கவனம் இருந்தது.

அனைவருக்கும் சீக்கிரமே பசி எடுத்துவிட்டது.எனவே அப்பா வாங்கி வந்த சாப்பாட்டை ,அன்று மத்தியானம் சற்று முன்னதாகவே சாப்பிட்டு முடித்தோம்.அப்பா,அம்மா, ஆனா பாட்டி முவரும் வந்திறங்கிய சாமான்களை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து சரி செய்து கொண்டிருந்தார்கள்.நானும், அண்ணன் ஷானும்,தம்பி பாட்டும், பக்கத்து போர்ஷன்னில் உள்ள அண்ணன் ஷான் வயது பையன்களுடன்

உட்கார்ந்து கொண்டு கார்டு கேம் விளையாடிகொண்டிருந்தோம்.

நான்கு மாதங்கள் போனதே தெரியவில்லை.அம்மாவிற்கு சிறிது நாட்களாகவே உடல் நிலை சரியில்லாமல் இருந்தது.தினமும் காலையில் வாந்தி எடுத்து கொண்டிருந்தார்கள்.சாப்பாடும் சரிவர சாப்பிடாமல் இருந்தார்கள்.

“என்ன அச்சு கொஞ்ச நாளாவே நீ ஒரு மாதிரியா இருக்கே? மறுபடியும் ஏதாவதா?” என்றார்கள் ஆனா பாட்டி.

“அப்படித்தான் நினைக்கிறேன் மாமி.இன்றோடு ஐம்பது நாட்களாகிவிட்டது.சாதத்தை பார்த்தால் குமட்டிகொண்டுவருகிறது.”என்றார்கள்.

“அடகடவுளே| நாலாவதா?இருக்கிற முன்றை பார்க்கவே முடியலை.இந்த லட்சணத்தில் நாலாவதா?சற்று கவனமாக இருக்க கூடாதாம்மா நீ”, என ஆனா பாட்டி சற்றே சோர்வுடன்

கூறினார்கள்.

“என்ன மாமி,சந்தோஷபடுவதற்கு பதில் இப்படி புலம்ப ஆரம்பிதுவிடீர்கள்.நாலாவது வந்து விட்டால் உங்களுக்கு வேலை அதிகம் என பயப்படுகிறீர்களா?”என்றார்கள்.

“ஐயோடியம்மா,நீ தப்பாக எடுத்துக்காதே.உன் குடும்பம் இப்போது இருக்கும் இந்த நிலையில், நாலாவது வந்து விட்டால் எப்படி நீ சமாளிக்க போகிறாய்?என்று கவலைபடுகிறேனே தவிர,சேதி கேட்டு சந்தோஷமாகத்தான் இருக்கு.இப்ப ஐம்பது நாட்கள்தான் ஆகிறது என்றால் இன்னும் குழந்தை பிறக்க எவ்வளவு நாள் என ஆனா பாட்டி விரல்களை மடக்கி எதோ எண்ணி விட்டு,கணக்கு போட்டபடி,அப்படின்னா மார்ச் மாதம் நடுவில் பிறக்கலாம் இல்லையா?”என்றார்கள்.

“டாக்டேரிடம் இனிமேதான் போய் பார்க்கவேண்டும்.முதலில் வீட்டு காரியத்தை முடித்துவிட்டுதான் ,இங்கு டாக்டர் எங்கு

இருக்கிறார் என
விசாரிக்கவேண்டும்".என்றார்கள்.

அப்பா இரவு மிகவும் லேட்டாக வருவதால்,
அன்றிரவு அம்மா அப்பாவிடம் எதுவும்
கூறவில்லை.காலையில் அப்பா இன்னும்
தூங்கிகொண்டிருந்ததால் அம்மாவால் இன்னும்
அப்பாவிடம் விஷயத்தை சொல்ல சந்தர்ப்பம்
கிடைக்கவில்ல.இந்த விஷயத்தை கேட்டது முதல்
என் மனதில் ஆர்வம் மிகுந்தது,

சமயலறையில் சமைதுகொண்டிருந்த ஆனா பாட்டி
என் கூப்பிட்டேன்.
"தொந்தரவு செய்யாதே,இன்னும் சமையல் ஆகவி

"சாப்பாடு வேண்டாம்" எனக்கு இப்ப
பசிக்கவில்லை,அம்மா வயத்துல பாப்பா இருக்கா
பாட்டி?" என்று கேட்டேன்.

"ஆமாம்,இப்ப என்ன அதற்கு.மூன்றை
வைத்துகொண்டு உன் அப்பா அம்மாவால
குப்பை கொட்ட முடியல ,இந்த அழகுல

நாலாவது வேற.தேவைதான?என தலையில் அடித்துகொண்டார்கள்.

“அம்மா வயத்துல பாப்பா எப்படி வந்தது பாட்டி?” என்றேன்.

” எப்படியோ வந்துடுத்து.நீ சின்ன குழந்தை அதெல்லாம் உனக்கு புரியாது.நேரம் வரும் பொது நீயே தெரிஞ்சுக்குவே.இப்ப போய் விளையாடு”,என என்னை விரட்டுவதிலேயே இருந்தார்கள் பாட்டி.

“முடியிருக்கும் வயத்துக்குள்ளே எப்படி குழத்தை உள்ளே போச்சு? இது ஒரே ஆச்சர்யமாகவும், புரியாத புதிராகவும் என் மனதில் தோன்றியது. தனியாக உட்கார்ந்துகொண்டு எனக்குள்ளே கேள்விகளை கேட்டபட்டி கற்பனை உலகில் இறங்கிவிட்டேன்.\நான்கு வயதே நிரம்பி என் பிஞ்சு உள்ளத்தில் ஒரே குழப்பமாக இருந்தது.சிந்தித்து சிந்தித்து என் மண்டையே சுக்குநூறாக வெடித்துவிடும்போல் ஆகிவிட்டது.

வயத்துக்குள் குழந்தை எப்படி வந்தது?,யார் குழந்தையை வைத்தார்கள்?,எப்படி வைத்தார்கள்?,குழந்தை எப்படி சாப்பிடும்?எப்படி தூங்கும்?யாருடன் விளையாடும்?எப்படி டாயலேட் போகும்?எப்படி குளிக்கும்?ஆனா?பெண்ணா?அது எப்படி வயற்றிலிருந்து வெளியே வரும்?இந்த கேள்விகள் என்னை குடைந்து எடுத்தது.எப்படியாவது இதற்கு விடை யாரிடமாவது கேட்டு தெரிந்துகொள்ளும் ஆர்வம் ஏற்பட்டது.

மாலை ஐந்து மணிபோல் அம்மா வேலைமுடிந்து வீடு திரும்பும் நேரத்தை எதிர்பார்த்து வாசலில் உள்ள படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு அம்மாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தேன்.மாலை நேரம் என்பதால் தெருக்களில் ஆட்கள் நடமாட்டம் அதிகமாகவே இருந்தது.வேலை முடிந்து வீடு திரும்புவார்கள் ஒருபுறமும்,கடைக்கு செல்லும் ஆண்களும்,பெண்களும் ஒருபுறமும்,பால்காரர் மாடுகளை ஓட்டிவந்து, அந்தந்த வீட்டின் முன்

மாடுகளை கட்டிபோட்டுவிட்டு, பால் கறந்து, ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று கொடுப்பது ஒருபுறமும்,பூ விற்பவர்கள் பூ கூடையை வைத்துகொண்டு சத்தம்போட்டு பூ விற்பது ஒருபுறமும்,சைக்கிள் ரிக்ஷா,ஆட்டோ ரிக்ஷா சவாரிகளை ஏற்றிக்கொண்டு இங்கும் அங்குமாக ஓடிகொண்டிருப்பது ஒருபுறமும்,பள்ளிக்கூடம் முடிந்து குழந்தைகள் தெருக்களில் ஓடி விளையாடிகொண்டிருப்பது ஒருபுறமுமாக ஒரே கலகலப்பாக இருந்தது.

அதோ தெரு முனையில் அம்மா வருவது பார்த்ததும் என் மனம் துள்ளி குதித்தது.அம்மா வீட்டை நெருங்கியதும் அவர்கள் கையை ஆவலுடன் பிடித்துகொண்டு மாடி ஏறி வீட்டிற்குள் வந்ததும் ,அம்மாவின் முகம் களைப்புடன் இருந்ததால் அதை உணர்ந்த நான் ,அம்மா எல்லா வேலைகளையும் முட்டித்துவிட்டு சாவகாசமாக உட்காரும் நேரத்தை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தேன்.

அம்மா எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு

முன் ரூமில் வந்து உட்கார்ந்ததை பார்த்த நான் அவர்கள் அருகில் சென்று உட்கார்ந்துகொண்டு மெதுவாக பேச்சை ஆரம்பித்தேன்.

“அம்மா,உங்க வயத்துல நிஜமாவே பாப்பா இருக்கா? என்றேன்.

“ஆமாம்” என தலை அசைத்தார்கள்.

“தங்கை பாப்பாவா? தம்பி பாப்பாவா?என்றேன்.

“தெரியாது,குழந்தை பிறந்தால்தான் தெரியும் ” என்றார்கள்.

“எப்படி அது உங்கள் வயத்துல வந்துச்சி?” விடாமல் கேட்டேன்.

சிறிதுநேரம்என்னபதில்சொல்வதுஎனதெரியாமல்மு

“உங்க வயத்தை அறுத்து குழந்தையை வைத்துவிட்டு,மறுபடியும் முடி விட்டாராம்மா”என்றேன்.

“கடவுள் சிறப்பான சக்தி உண்டு.மந்திரத்தால்

அவர் வயிற்றை அறுக்காமல் குழந்தையை வைத்துவிட்டார்" என்று பதில் அளித்தார்கள்.

சற்று நேரம் என்ன ,எப்படி என்று புரியாமல் விழித்த நான் மறுபடியும் தொடர்ந்தேன்.

"கடவுள் ஏன் உங்கள் வயத்துல போட்டார்? ஆனா பாட்டி வயத்துல போடவேண்டியதுதானே.பாட்டிதானே எங்களையெல்லாம் பாத்துகுறாங்க"என்று நான் சொன்னது கேட்டு அம்மாவும்,பாட்டியும் சிரிப்பு தாங்காமல் "ஓ"வென சத்தம்போட்டு சிரித்துவிட்டார்கள்.அவர்கள் ஏன் சிரிக்கிறார்கள் என்ற விவரம் புரியாமல் மீண்டும் என் கேள்வி கணைகளை தொடர்ந்தேன்.

"சொல்லுங்க அம்மா" என அம்மாவை உலுக்கினேன்.

"குழந்தை வேண்டும் என்று நான்தான் கேட்டேன், அதனால் கடவுள் என் வயத்துல குழந்தையை வைத்துவிட்டார்.ஆனா பாட்டி

கேட்கவில்லை அதனால் அவர்கள் வயிற்றில் வைக்கவில்லை" என பொறுமையாக பதிலளித்தார்கள்.

"அப்படீனா ,நான் சூரிய பகவானை பார்த்து எனக்கு குழந்தை வேண்டும் என்று கேட்டால் என் வயத்துல குழந்தையை போட்டுவிடுவாரா?என கேட்டதும் ,

"எதுக்குடி இப்பவே குழந்தை வேண்டும் என்று அவசர படறே.நீ வளந்து ,பெரியவளாகி,நல்ல படிச்சு பட்டம் வாங்கி, பெரிய வேலைக்கு போய் நல்ல மாப்பிள்ளையா பார்த்து கல்யாணம் பண்ணி கொண்டு,பிறகு கடவுளை வேண்டி கொண்டு நிறைய குழந்தைகளை பெற்று வளக்கலாம்.இப்ப போய் விளையாடு " என என்னை அந்த இடத்தை விட்டு நகர்த்த பார்த்தார்கள் ஆனா பாட்டி.

நான் அங்கிருந்து போகாமல் அம்மாவிடம் விடாமல் நச்சரித்தேன்,"சொல்லுங்கள் அம்மா ,நான் கேட்டா கடவுள் கொடுப்பாரா? "என

கேட்டேன்.

“இப்ப கேட்டா கொடுக்க மாட்டார்.நீ வளர்ந்து இருபத்தி ஒரு வயசு ஆகி, கல்யாணம் ஆனவுடன் கடவுளை வேண்டினால் குழந்தை கிடைக்கும்” என்றார்கள்.

“எனக்கு இருபத்தி ஒரு வயசு எப்ப ஆகும்.இன்னும் எவ்வளவு நாள் இருக்கிறது?” என்று கேட்டேன்.

அதற்கு இன்னும் நிறைய வருடம் இருக்கிறது.அம்மாவுக்கு நிறைய வேலை இருக்கு. நீ இப்ப போய் விளையாடு.என என்னை ஒருவழியாக அங்கிருந்து நகர்த்திவிட்டார்கள்.

நாட்கள் நகர்ந்தன.அம்மாவின் வயிறும் பெரிதாகிகொண்டே சென்றது.இப்போதெல்லாம் என் ஆர்வம் பிறக்க போவது தம்பி பாப்பாவா?தங்கை பாப்பாவா? என்பதில் இருந்தது.

அந்த வீட்டிற்கு வந்து பல மாதங்கள்

ஆகிவிட்டது.அண்ணன் ஷானுக்கு ஆறு வயதாகிவிட்டது.எனக்கு நாலுவயதுக்கு மேல் ஆகிவிட்டது.தம்பி பாட்டுக்கு இரண்டு வயது.

ஒரு நாள் கலையில் எழுந்ததும் காபி குடித்து விட்டு பேப்பரை படித்துகொண்டிருந்த அப்பா,அம்மாவிடம் சைனாவுக்கும்,இந்தியாவுக்கும் எதோ சண்டை நடக்கபோவதாக கூறினார்கள்.

“நம்ம கூட சீனா ஏன் சண்டை போடவேண்டும்?நாம என்ன தப்பு பண்ணினோம்?”என்று அப்பாவிடம் கேட்டேன்.

“நீ சின்ன பொண்ணு,உன்னக்கு சொன்ன புரியாது.” என்றார்கள் அப்பா.

“எனக்கு போர் அடிக்குது ,விளையாட யாருமே இல்லை, ஏன் சைனாகாரங்க நம்ம கூட சண்டை போடவேண்டும்? என்றேன்.

என் நச்சரிப்பு தாங்காமல் அப்பா என்னிடம், “இங்க வந்து இப்படி என் முன்னால் தரையில் உட்காரு சொல்லுகிறேன்”என்றார்கள்.

நான் உட்கார்ந்ததும் அப்பா எனக்கு புரியுதோ, இல்லையோ கதையை கூற ஆரம்பித்தார்கள்.அண்ணன் ஷானும் என்னுடன் வந்து உட்கார்ந்துகொண்டு கதை கேட்க ஆரம்பித்தான்.

“அதாவது,சைனா நாடு நம்ம இந்திய நாடொடு சண்டை போட இரண்டு கரணம் உண்டு.நம்ம இந்தியாவின் வடக்கு பக்கம் ஜம்மு,காஷ்மீர் என்ற ஊர் உண்டு,அதன் வடக்கு பக்கம் அக்சை என்ற இடத்தையும்,இரண்டாவதான வடக்கு பக்கம் அருணாசலம் என்ற இடத்தையும் சைனா நாடு அவர்களுடையது என சொந்தம் கொண்டாடுகிறார்கள்.இந்திய நாடு அது தன்னுடையது என உரிமை கொண்டாடுகிறது.இருநாட்டாரும் அந்த இடங்கள் தன்னுடையது என சொந்தம் கொள்வதால்,யாரும் சமாதானமாக போக முடியாத

என்றார்கள் அப்பா.

“அந்த இடமெல்லாம் யார்கிட்ட முதலில்

இருந்தது? என்று எதுவும் புரியாமல் கேட்டேன்.

“நம்ம இந்தியாவை பிரிட்டிஷ் காரங்க முன்னூறு வருஷத்துக்கு முன்னே பிடித்துகொண்ட போது, சைனா நாட்டு எல்லையில் இருந்த அந்த பகுதியையும் இந்தியாவுடன் சேர்த்து ஆண்டு வந்தார்கள்.காந்தி தாத்தா நம்ம இந்தியாவுக்கு வெள்ளைக்காரரிடம் இருந்து சுதந்திரம் வாங்கி தந்த போது சைனாகாரர்கள், அந்த இடத்தை அவர்களுக்கு திருப்பி கொடுக்கவேண்டும் என கேட்டார்கள்.நம்ம இந்திய நாடு, அது எங்க நாட்டை சேர்ந்தது ,அதை நாங்க திருப்பி தர முடியாது என கூறிவிட்டதால் சைனா காரர்களுக்கு நம்ம மீது கோபம் வந்து, நம்மோட சண்டை போட்டு ஜெயித்து, அந்த இடத்தை திருப்பி எடுத்துகொள்ளலாம் என நினைத்து சண்டைக் போடபோகிறார்கள்.” என்றார்கள் அப்பா.

என் உடல் பயத்தால் நடுங்கியது.”அப்படின்னா குண்டு போட்டு நம்மை எல்லாம் சாக அடிச்சிடுவான்களா அப்பா” என்றேன் .

நாம எல்லாம் சாகமாட்டோம்..நம்ம நாட்டுக்காக சண்டை போடபோகும் போர்வேரர்கள் சிலபேர் சாகலாம்.நமக்கு ஒன்றும் ஆகாது"என என்னை சமாதானம் படுத்துவதுபோல் கூறினார்கள் அப்பா.

"பாவம்,நம்ம நாட்டுக்கு சண்டை போடும் சொல்ஜர்கள் செத்து போய்ட்டா அவங்க குழந்தைகளுக்கெல்லாம் அப்பா இல்லாமல் கஷ்டபடுவார்கள் இல்லியா அப்பா?ஏன் சண்டை போட்டு எல்லாம் சாகனும்?இடம்தானே, சைனா கரங்களே எடுத்துகொள்ளட்டும் என நாம சண்டை போடாமல் இருந்தால் என்ன?"என்று நான் கூறியது கேட்டு அப்பா சிரித்து விட்டார்கள்.

"நீ சிறிய குழந்தை சுலபமாக சொல்லிட்டே.நீ வளர வளர எல்லாம் புரிஞ்சுக்குவே.நீ விளையாடுற பொம்மை இல்லை அந்த இடம். எதிரி வந்து கேட்டல்இந்தா என கொடுத்துவிடுவதர்க்கு. இதுபற்றி எல்லாம் யோசிக்காம போயி விளையாடுங்க" என

கூறிவிட்டு மறுபடியும் பேப்பரில்
முழ்கிவிட்டார்கள் அப்பா.

9

அத்யாயம்-ஒன்பது

அந்த சிறிய வீடு எங்கள் அனைவருக்கும்
கொஞ்சம் கொஞ்சமாக பிடிக்க
ஆரம்பித்தது.எங்களை சுற்றி குடியிருந்த
குடும்பங்கள் அனைவரது வருமானமும் நடுத்தர
வர்கத்திற்கு கீழே சற்று குறைவான
வருமானமுடையவர்களாக
இருந்தபோதிலும்,மிகவும் நல்ல குணம்
படைத்தவர்களாக,கேட்காமலேயே வலிய வந்து
உதவி செய்யும் மனப்பான்மை
கொண்டவர்களாகவும் இருந்தனர்..அதோடு
இல்லாமல் அம்மா,அப்பா இருவர் வேலை

செய்யும் இடமும் நடை தூரத்தில், பக்கத்து தெருவேலேயே இருந்தததால் மத்தியானம் சாப்பாட்டிற்கு இருவரும் வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம் ஓய்வு எடுத்து செல்ல வசதியாக இருந்தது.

எங்கள் வீட்டு ஜன்னல் வழியாக பார்த்தால் பக்கத்து வீட்டு மாடியில் குடியிருக்கும் குடும்பத்தார்களை நன்றாக பாக்கவும்,சற்று சத்தம் போட்டு பேசினால் நன்றாக கேட்கவும் முடியும் .என் பெற்றோர்கள் அங்குள்ள ஒரு பதினெட்டு வயது ராஜம் என்ற அக்காவை ரொம்பவும் பிடித்து விட்டது.ராஜம் அக்கா விடியற்காலையில் அவர்கள் மொட்டைமாடியில் நின்று கொண்டு வெகு நேரம், தன தலை முடியை வாரிக்கொண்டு பாட்டு பாடிகொண்டிருப்பார்கள்.

அப்பா அந்த அக்கா பாடும் பாட்டை தினமும் காலையில் ஜான்னல் ஓரமாக நின்று கேட்டு ரசிப்பதுடன் அம்மாவையும் கூப்பிட்டு கேட்கச்சொல்வார்கள்.

ஒருநாள் சாயங்காலம் அம்மாவுடன் நான் கடைக்கு செல்லும் வழியில் ராஜம் அக்காவை பார்க்க நேர்ந்தது.ராஜம் அக்காவிற்கும், நாங்கள் புதியதாக அந்த வீட்டிற்கு குடிவந்திருப்பது தெரியும், எங்களையெல்லாம் தினமும் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இதுநாள் வரையில் பேச வாய்ப்பு கிடைத்ததில்லை. எனவே ராஜம் அக்காவை வழியில் பார்த்ததும், அம்மா அந்த அக்காவிடம் நின்று பேச ஆரம்பித்தார்கள்.

“உன் பாட்டை தினமும் காலையில் நாங்கள் கேட்டு ரசிக்கிறோம். நீ நன்றாக பாடுகிறாய்.” என ராஜம் அக்காவை முதலில் பாராட்டிவிட்டு பிறகு அவர்கள் குடும்பத்தை பற்றி விசாரிக்க ஆரம்பித்தார்கள் அம்மா.

“உன் பெயர் என்ன? என்ன படிக்கிறாய்?” என்றார்கள்.

“என் பேரு ராஜம் .நான் உயர் நிலை பள்ளிக்கூடம் முடித்துவிட்டு மேலே படிக்க

பணம் இல்லாததால் வீட்டில் இருக்கிறேன். வேலை தேடி கொண்டிருக்கிறேன்". என்றார்கள் ராஜம் அக்கா .

அம்மாவும் தன்னை அறிமுகபடுத்திவிட்டு, எங்களை பற்றி முழு விவரமும் அக்காவிடம் கூறிவிட்டு ,,பிறகு சிறிது நேரம் பேசி விட்டு பிரிந்து சென்றோம்.

அதன் பிறகு அம்மா வேலையிலிருந்து வந்ததும் ,சாவகாசமாக நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஜன்னல் அருகே உட்கார்ந்து கொண்டு, ராஜம் அக்காவிடம் வெகு நேரம் பேசிக்கொண்டிருப்பார்கள்.சில சமயங்களில் ராஜம் அக்கா எங்கள் வீட்டிற்கு வந்து அம்மாவிடம் பேசிவிட்டு போவார்கள்.ராஜம் அக்காவிற்கு ,அம்மாவையும்,எங்களையும் மிகவும் பிடித்து விட்டது.ஆனா பாட்டிக்கும் இந்த சிறிய வீடு,ராஜம் அக்கா எல்லாம் மிக மிக பிடித்துவிட்டது.

ஆனா பாட்டி தினமும் தம்பி பாட்டை

தூக்கிக்கொண்டு பக்கத்து தெருவிலுள்ள கேசவ பெருமாள் கோவிலுக்கு சென்று வருவார்கள். பாட்டிக்கு தினமும் சாயங்காலம் கோவிலுக்கு சென்று வருவது மிகவும் பிடித்திருந்தது.நாங்கள் குடியிருந்த வீட்டிலிருந்து கேசவ பெருமாள் கோவில் நூறு அடிக்குள் தான் இருக்கும். எனவே பாட்டி நினைத்த போதெல்லாம் அந்த கோவிலுக்கு தம்பியுடன் சென்றுவிட்டு, நிதானமாக வீட்டிற்கு வருவார்கள்.நாள் ஆக, ஆக ஆனா பாட்டி இந்த வீட்டை பற்றி குறை சொல்வது குறைந்துகொண்டே வந்து ,ஒருசில மாதத்தில் அவை நின்றுவிட்ட தோடில்லாமல்.இந்த சிறிய வீட்டிலேயே இருந்துவ

வீட்டை மாற்றுவதை பற்றி யாரும் பேசவில்லை.

ஒருநாள் மாலை நாலு மணியிருக்கும் ராஜம் அக்கா எங்கள் வீட்டிற்கு வந்து அம்மாவிடம்,".மங்கை அக்கா பிள்ளைகள்

முவரையும் நான் பீச்சுக்கு அழைத்து சென்று வருகிறேன் .நீங்களும் ,ஆனா பாட்டியும் இந்த குழ ஓய்வு எடுத்துகொள்ளுங்கள்.நான் இருட்டுவதற்கு என் கூறுகையில்

“ரொம்ப தாங்க்ஸ் ராஜம்,பத்திரமாக போயிட்டு வ போகாதே,
உன் ஒருத்தியால் முன்று பேரை ஒரே சமயத்தில்

அம்மா வேலை செய்யும் பள்ளிகூடத்திற்கு எதிரேவே இருந்த்தது. பீச். வீட்டிலிருந்து ஐந்து அல்லது பத்து நிமிடத்தில் நடந்து சென்று விடலாம்.பீச்சில் ராஜம் அக்காவுடன் நாங்கள் ஓடி விளையாடினோம்.அக்கா எங்கள் முவரையும் மிக கவனமாக பார்த்துகொண்டார்கள்.இருட்டுவதற்கு சற்று நேரத்திக்கு முன்பே எங்கள் முவரையும் தன் கையில் பிடித்து கொண்டு மிக ஜாகிரதையாக வீட்டிருக்கு அழைத்து வந்தார்கள்.பீச்சில் மணல் வீடு எப்படி கட்டுவது என ராஜம் அக்கா சொல்லி கொடுத்தார்கள்.

எங்களை அம்மாவிடம் ஒப்படைகையில்
அண்ணன் ஷான் எங்களுடன் இல்லாதது கண்டு
அம்மா சந்தேகத்துடன் “பெரியவன் ஷான்
எங்கே?ராஜம்” என்றார்கள்.

“எங்கள் கூடதான் இருந்தான் மங்கை
அக்கா.படிகள் ஏறி வரும்போதுகூட
எங்களுடன்தான் இருந்தான்.ஒருவேளை கீழே
பையன்களுடன் விளையாட
சென்றுவிட்டானோ என்னவோ?” என்றார்கள்
ராஜம் அக்கா.

அம்மாவின் முகத்தில் பதற்றம் தெரிந்தது.ராஜம்
அக்கா சொன்னதை நம்பியதாக
தெரியவில்லை.உடனடியாக வாசல் கதவை
திறந்துகொண்டு கீழே ஓடி சென்று
“,ஷான்,ஷான் ” என பதற்றமாக உரத்த
குரலில் கூப்பிட்டார்கள்.

பதிலேதும் வராது போகவே,அக்கம் பக்கத்திலுள்ள
ராஜம் அக்காவும்,அம்மாவும் ஷானை
பற்றி விசாரிக்கையில் ,யாருமே அண்ணன்

ஷானை பாத்ததாக சொல்லவில்லை.

அம்மாவிற்கு பயம் அதிகமாயிற்று.அப்போது நன்ற
மங்கை அக்கா நான் முன்று குழந்தைகளையும் ை

அம்மா ராஜம் அக்காவை நம்பாமல், அவர்களை
பயத்தால் திட்ட
ஆரம்பித்துவிட்டார்கள்."உண்மையை சொல்
ராஜம்,என் பிள்ளையை எங்கு விட்டுவிட்டு
வந்தே?இந்த கும்மிருட்டில் நான் எங்கு போய்
தேடுவேன்?".என்று அழ ஆரம்பித்துவிட்டார்கள்.

"உண்மையைத்தான் சொல்றேன் அக்கா.இந்த
பாத்ரூம் படிவரை அவன் என் கையை
பிடித்துக்கொண்டுதான் வந்தான்.வீடு
வந்துவிட்டதால் அவனை என் கையில் இருந்து
விட்டுவிட்டு மேலே வந்தேன். அவன் நிச்சயமாக
இங்குதான் எங்காவது இருப்பான்".என்றார்கள்.

ராஜம் அக்காவும்,அம்மாவும்
மேல்மாடிக்கும்,கீழுக்குமாக ஓடி ஓடி அண்ணன்
பெயரை சொல்லி

கூப்பிட்டுகொண்டிருந்தார்கள்.

அம்மா என்னிடம் “அண்ணன் உங்களுடன் வந்தான?” என்று கிறார்கள்.

“ஆமாம் ,எங்களோடதான் வந்தான். அக்கா சொல்வது உண்மை” என்றேன் .எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு.ஷான் எங்களுடன் இந்த படிவரை வந்தான்.நான் நிச்சயமாக சொல்வேன்.அவனை நான் பீச்சில் விட்டுவிட்டு வரவில்லை.”என கலங்கிய கண்களுடன் அம்மாவிடம் கூறினார்கள்.

ராஜம் அக்கா எதேச்சையாக கீழே உள்ள டாயலே அக்கா,இங்கே வாங்களேன்”என அழைக்கவே அம்மா டாயலேட் அருகே சென்று நிற்கையில், உள்ளிருந்து பாட்டு சத்தம் வரவே “யார் உள்ளே”ஷான் நீயா இருக்கே” என்று கேட்டதும்,

“ஆமாம்” என ஷான் பதிலளித்தது கேட்டு ராஜம் அக்காவிற்கு போன உயிர் திரும்பி வந்தது

போல் ஒரு பெரு மூச்சு விட்டார்கள்.

ஆனாலும் என் மனம் மிகவும்
கஷ்டப்பட்டது.அண்ணன் ஷான்
தொலைந்துவிட்டான் என கேட்டு மன வருத்தம்
அடைந்த நான்,அவன் கிடைத்துவிட்டான் என
கேட்டதும் அதைவிட மிகவும் வேதனை
பட்டேன்.ஏன் என்றால் அண்ணன் ஷான்
எப்பவும் என்னை அதிகாரம் செய்துகொண்டே
இருப்பான்.மிரட்டுவான். அவன் சிநேகிதர்கள்
கூட நான் விளையாட கூடாது என என்னை
விரட்டிவிடுவான். எனவே அவன் தொலைந்தது
ஒருபுறம் என் மனம் கஷ்டப்பட்டாலும்,மறு புறம்
அப்பாடா,இனி நிம்மதியாக இருக்கலாம்.என்னை
அதிகாரம் செய்ய அவன் இல்லை என்று
மகிழ்ச்சி ரொம்ப நேரம் நீடிக்காமல் ஒரு சில
நிமிடங்களிலேயே முற்றுபுள்ளி
வைத்தாகிவிட்டது.

அம்மாவிற்கு அண்ணன் ஷான் மீது மிகவும்

கோபம்.அவசரப்பட்டு அக்கா ராஜத்தை திட்டிவிட்டோமே என்று அம்மாவின் மனம் மிகவும் வேதனை பட்டது.சற்றே மன சங்கடத்துடன் ராஜம் அக்காவிடம் மன்னிப்பு கேட்டார்கள்.அம்மாவிற்கு பெருத்த அவமானமும்,மனவருத்தமும் உண்டாயிற்று.

ராஜம் அக்கா அழுத கண்ணீரை துடைத்துக்கொண்டே,சந்தோஷத்தால் சிரித்துக்கொண்டே,"பரவாயில்லை அக்கா,உங்கள் நிலையில் நான் இருந்தாலும் இப்படிதான் பதட்டப்பட்டிருப்பேன்.படியேறி உள்ளே வரும் வரை அவனை பார்த்துகொண்டு வந்த நான் ,அவன் டாயல்லேடுக்குள் போனதை பார்க்காமல் வந்தது என் தவறும் கூட"என்று மிகவும் பணிவாகவும். அடக்கமாகவும் கூறிவிட்டு தன வீட்டிற்கு சென்று விட்டார்கள்.

இருப்பினும் அம்மாவின் மனம் சமாதானம் அடியவில்லை.ஷான் டாய்லெட்டிலிருந்து வெளியே வந்ததும் அவன் காதை திருகி வீட்டிற்கு அழைத்து வந்து கதவை சார்த்தி

விட்டு, அவன் கண்ணத்தில் இரண்டு அரை விட்டார்கள்.அரை மணி நேரமா உன் பேரை சொல்லி கத்தி கொண்டு தேடிகொண்டிருக்கிறோம்.,படவா ,ஒரு வார்த்தை அம்மா நான் டாய்லெட்டில் இருக்கிறேன் என்று ஒரு குரல் கொடுத்திருக்கலாம் இல்லையா. டாய்லெட்டில் ஏன் இவ்வளவு நேரம் இருக்கிறாய்?யாராவது அவசரமாக டாய்லெட் போகவேண்டுமென்றால், நீ அவர்களை அவ்வளவு நேரம் காக்க வைப்பது சரியில்லை.இனிமேல் டாய்லெட் போனால் விழயத்தை முடித்துவிட்டு, ஐந்து நிமிஷத்தில் வெளியே வந்துவிடவேண்டும்.அங்க உட்கார்ந்துகிட்டு பாட்டு என்னடா வேண்டியிருக்கு.பெரிய பாகவதர்னு நினைப்பா உனக்கு.இனிமே நீ டாய்லெட் போனால், ஐந்து நிமிஷம் தான் புரியுதா?என கடிந்துகொண்டார்கள்.

அப்பா தினமும் பேப்பர் படித்து சைனா ,இந்தியா சண்டையை பற்றி எங்கள் எல்லோருக்கும் தகவல் சொல்லிக்கொண்டே

இருந்தார்கள்.அக்டோபர் இருபதாம் தேதி போர் ஆரம்பிக்க போவதாகவும்,எந்த வீட்டிலும் இரவு பத்து மணிக்கு மேல் மின்சார விளக்கு எரிய கூடாது என அரசு சட்டம் போட்டுள்ளது என்றும் வீட்டில் அனைத்து ஜன்னல்களின் கதவுகளை முடிவிட்டு ,அவசரத்திற்கு வேடுமானால் மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து கொள்ளலாம் என்றும் கூறினார்கள்.

எனக்கும் அண்ணன் ஷானுக்கும் சந்தேகம். எங்கோ நடக்கும் சண்டைக்கு, நாம எல்லாம் ஏன் மின்சார விளக்கை அணைக்க வேண்டும்?அதிலும் ஜன்னல் கதவுகளை ஏன் முடிவிடவேண்டும்?என்று தோன்றவே. அப்பாவிடம் சென்று இது பற்றி நாங்களிருவரும் கேட்டபோது,

“சைனா நாட்டு போர் விமானம், நம் நாட்டு மேலே பறக்கும் போது நாம் எல்லாம் மின்சார விளக்கை போட்டிருந்தால், இந்த இடத்தில் மக்கள் பலர் வாழுகிறார்கள் என தெரிந்துகொண்டு ,நம் வீடுகள் மேலே குண்டு

போட்டு சாகடித்துவிடுவார்கள்.எல்லா விளக்கையும் அணைத்துவிட்டால் ,இருட்டில் நகரம் இருக்கும் இடம் தெரியாமல் சைனா காரர்கள் குண்டு போடாமல் சென்று விடுவார்கள்.ஜன்னல் கதவை சார்த்திக்கொண்டு மெழுகுவர்த்தி ஏற்றி வைத்தால் ,மெழுகுவர்த்தி வெளிச்சம் அவ்வளவாக தெரியாது.இருட்டில் நாம எதுவும் அவசரம் என்றால் தேட முடியாது இல்லையா அதனால் தான் இப்படி ஒரு சட்டம் அரசாங்கம் போட்டிருக்கிறது"என்று அப்பா எங்களிருவருக்கும் விளக்கம் கொடுத்தார்கள்.

எனக்கும் அண்ணன் ஷானுக்கும் பயமாக இருந்தது."டேய் அண்ணா ,நாம எல்லாம் சண்டையில் செத்துவிடுவோமாடா?" என்றேன்.

"குண்டு போட்டால் நாம தான் முதலில் சாவோம்டி.ஏன்னா நாம் உயரமான் கட்டிடத்தில் இருக்கிறோம்.சைனாகாரன் குண்டு முதலில் நம்ம மாடியில்தான் விழும்."நாம் சின்ன கட்டிடத்தில் இருந்தால் தப்பித்து கொள்ளலாம் ."என்றான் எதோ ரொம்ப தெரிந்தவன் போல.

அன்றிரவு பத்து மணிக்கெல்லாம் எல்லோரும் மின்சார விளக்கை அணைத்துவிட்டு ,எல்லா ஜன்னல் கதவுகளையும் மூடிவிட்டு. ஓர் சிறிய மெழுகுவத்தியை ஏற்றி வைத்திருந்தார்கள்.

நான் படுத்துக்கொண்டே கண்ணை இருக்க முடிக்கொண்டு கடவுளை வேண்டிக்கொண்டேன்.கடவுளே எல்லோரும் ஒரு நாள் சாகத்தான் போகிறோம்.இந்த உலகில் எதுவுமே நிரந்தரம் இல்லை.அப்படியிருக்கும்போது நமக்கு சொந்தமில்லாத இந்த நிரந்தர பூமிக்கு ஏன் சண்டைபோட வேண்டும்.?இறக்கும் போது மனிதன் எதையும் தன்னுடன் எடுத்து செல்வதில்லை.நம்முடன் எடுத்து செல்லாத பொருளுக்கு நாம் ஏன் அடித்துக்கொண்டு சாகவேண்டும்.இருப்பதை மனதார அனுபவித்துவிட்டு இருப்பதை விட்டுவிட்டு,மனித வர்க்கம் ஏன் இப்படி பொன்னுக்கும், பொருளுக்கும் சண்டைபோட வேண்டும்?மனித இன்னமே ஒரு புரியாத புதிர்தான் .அந்த நான்கு ,ஐந்து வயதிலேயே

எனக்கு மனித இனத்தைக் கண்டால் மிகவும் வெறுப்பாக இருந்தது.

. சிறு வயதில் நான் அதிகம் பேசமாட்டேன்.நடப்பவைகளை அனைத்தும் அமைதியாக பார்த்துகொண்டு உட்கார்ந்திருப்பேன்.அடிக்கடி கண்களை முடிக்கொண்டு கடவுளை வேண்டிக்கொள்வேன்.தனியாக உட்கார்ந்த்கொண்டு கண்களை மூடி கடவுளை கற்பனை செய்த கொண்டு மனதிற்குள் அவரிடம் பேசிக்கொள்வேன்.

அப்பா செய்தி தாளை படித்து சொன்னபடி சரியாக அக்டோபர் இருபதாம் தேதி 1962வில் இந்திய, -சைனா போர் துவங்கிவிட்டது.தினமும் வேலை முடிந்து அனைவரும் விரைவாக வீட்டிற்கு வர தொடங்கினார்கள்.வழக்கமாக இரவு பன்னிரண்டு மணிக்கு வீடு திரும்பும் அப்பா கூட இரவு பத்து மணிக்குள் வீட்டிற்கு வந்துவிடுவார்கள்.மின்சார விளக்கு பத்துமணிக்குமேல் இல்லாததாலும்,இறவு

பத்துமணிக்கு மேல் பஸ் ,டாக்ஸி,ஆட்டோ எதுவும் ஓடாததாலும் அப்பாவின் சூதாட்டம் தடைப்பட்டது.தினமும் இரவு பத்து மணிக்கு அபாய சங்கு ஊதும் போது என் இதயம் படபடவென அடித்து கொள்ளும்.பயம் என்னை கவ்விக்கொள்ளும். அம்மாவை ஒட்டிக்கொண்டு படுத்து க்கொள்வேன்.

சரியாக ஒருமாத காலம் ஓடியது.அப்பா இரவு பத்து மணிக்கெல்லாம் வீட்டிற்கு வருவது எங்க எல்லோருக்கும் சந்தோஷத்தை அளித்தது.இதை நினைக்கும் போது இந்தியா -சைனா போர் தொடர்ந்து பலகாலம் நீடித்தால் நன்றாக இருக்கும் போல் என் மனதில் தோன்றியது.இதனாலாவது அப்பாவின் அந்த சூதாட்டமும்,இரவு நேரம் கழித்து வீடு திரும்புவதிலும் ஒரு மாற்றம் ஏற்படலாம்.அப்பாவை நாங்கள் மாலை நேரத்திலும்,இரவு நேரத்திலும் வீட்டில் பார்த்ததாக நினைவில் இல்லை.இப்படி எல்லாம் என் மனம் அல்ப்பமாக நினைத்தது.

அன்று நவம்பர் 21-1962,இந்தியா படுதோல்வி என்றும்,சைனா பலத்த வெற்றியுடன் போர் முடிந்தது என்றும் அப்பாவும் அம்மாவும் பேசிகொண்டார்கள்.இந்திய போர்வீரர்கள் பல பேர் இறந்துவிட்டதாகவும்,பலர் காயமுற்றதாகவும்,சிலர் காணாமல் போய்விட்டதாகவும்,சிலர் கைதிகளாக சைனாவில் இருப்பதாகவும் அப்பா செய்தி தாளை படித்து எங்களுக்கெல்லாம் சொல்லிகொண்டிருந்தார்கள்.

அதை எல்லாம் கேட்டு என் மனம் வேதை பட்டது.பாவம், போர்வீரர்களின் குழந்தைகளும்,குடும்பமும் எவ்வளவு கஷ்டபடுவார்கள் இப்படியொரு செய்தி எல்லாம் கேட்டு.அவர்கள் நிலைமையை நினைத்து என் மனம் வேதனை அடைந்தது.சிறு வயதில் கஷ்டமான செய்தியை கேட்டாலோ,கஷ்டமான நிகழ்ச்சியை பார்த்தாலோ, அது என் மனதை விட்டு பல நாட்களுக்கு போகாது.அந்த சம்பவமோ,செய்தியோ அடிக்கடி என் நினைவில் வந்து உறுத்திக்கொண்டே இருக்கும்.அவைகளை

என் மனதிலிருந்து அகற்றுவது அவ்வளவு எளிதான காரியமாக இருக்காது.

இதற்கிடையில் அம்மாவின் வயிறு மிக மிக பெரியதாக பலூன் போல இருந்தது.இன்னும் சில வாரங்களில், வேலைக்கு சில மாதங்கள் லீவு போட்டு விட்டு சிதம்பரத்திற்கு தாத்தா ஈஸ்வரன் வீட்டிற்கு குழந்தை பிறப்பதற்கு போக போவதாக வீட்டில் பேச்சு நடந்துகொண்டிருந்தது.

அந்த வீட்டிற்கு வந்து பல மாதங்கள் ஆயிற்று.ஆனால் இதுநாள் வரையில் எந்த உறவினர்களும், அங்கு வந்து எங்களை பார்கவே இல்லை என்று நாங்கள் நினத்துகொண்டிருக்கையில்,ஒரு நாள் ஞாயிற்று கிழமையில், தாத்தா ஈஸ்வரன் ஊரிலிருந்து எங்கள் வீட்டிற்கு ,எப்படியோ புது முகவரியை கண்டுபிடித்து வந்து சேர்ந்தார்கள்.நாங்கள் குடியிருக்கும் வீட்டையும்,போர்ஷனையும் கண்டுபிடித்துவருவது அவ்வளவு சுலபம் இல்லை.

தாத்தா கீழ் படியில் ஏறி வரும்போதே , அம்மா அவர்களை பார்த்து வீடு ஆவலுடன் கீழே சென்று ,தாத்தாவை எங்கள் ப்ரோஷனுக்கு அழைத்து வந்து நாற்காலியில் உட்காரசொல்லிவிட்டு ,ஆனா பாட்டியிடம் தாத்தாவிற்கு காபி கொண்டுவரசொல்லிவிட்டு, அங்கு கட்டிலில் தூங்கிகொண்டிருந்த அப்பாவை எழுப்பினார்கள்.

அந்த போர்ஷனில் ஒரே ஒரு அறை மட்டுமே இருந்ததால், வரவேற்பு அறை ,படுக்கை அறை எல்லாமே அந்த ஒரு ரூமில்தான்.அம்மா எழுப்பியதும் வாரி சுரட்டி கொண்டு எழுந்த அப்பா,வாங்க என தாத்தாவை வரவேற்றுவிட்டு, பாத்ரூமுக்கு சென்று பல் விளக்கி விட்டு திரும்ப வந்து ,பாட்டி கொடுத்த காபியை குடித்துவிட்டு, சட்டையை மாட்டிகொண்டு வெளியே சென்றுவிட்டார்கள்.

அப்பாவும்,தாத்தாவும் பேசி நான் பார்த்ததே இல்லை.அவர்களுக்கு சண்டையோ,மனஸ்தாபமோ இல்லை .ஆனால்

ஏனோ தெரியவில்லை இருவரும் பேசுவது கிடையாது.

அப்பா வீட்டை விட்டு சென்றவுடன்,அதற்காக காத்திருந்தது போல ஈஸ்வரன் தாத்தா பேச்சை ஆரம்பித்தார்கள்.

“என்னம்மா இப்படி ஒரு இடத்தில் இதுமாதிரி ஒரும் சிறிய வீட்டில் உன்னையும்,குழந்தைகளையும் மாப்பிள்ளை கொண்டு வந்து வைத்திரு க்கிறார்.நீ வேறு வாயும்,வயிறுமாக இருக்கிறாய்.இந்த நிலையில் நீ இந்த மாதிரி வீட்டில் இருப்பது சரியில்லை.ஒவ்வொன்றிற்கும் நீ பல படிகள் இறங்கி ,ஏற வேண்டிய நிலை.கடல் மாதிரி வீட்டில் மகாராணி போல வாழ்ந்துவிட்டு, இப்படி வாடைகை வீட்டில் கஷ்டப்படணும் என்று உன் தலையெழுத்தா?என்று குரல் கம்ம பேசினார்கள் தாத்தா.

“என்னப்பா செய்வது,திடீரென்டு எல்லாம் கனவு போல நடந்துவிட்டது.நிதானமாக வீடு

தேடும் அளவிற்கு, அந்த வீடு வாங்கியவர் எங்களுக்கு அவகாசம் கொடுக்கவில்லை. உடனடியாக வீட்டை காலி செய்ய வேண்டியிருந்தத்தால், அவசரத்திற்கு நாங்கள் வேலை செய்யும் இடத்திற்கு அருகே இந்த வீடு மட்டுமே அப்போதைக்கு கிடைத்தது. விட மனசில்லை". என்றார்கள்.

"வேறு வீடு பார்க்க தரகரிடம் சொல்லி வீட்டீர்களா?" என கேட்டார்கள் தாத்தா.

"இல்லை அப்பா, இந்த வீட்டிற்கு வந்ததும், நான் முழுகாமல் ஆகிவிட்டேன்,இந்தியா-சைனா சண்டை வேறு வந்துவிட்டது. வேலை பார்க்கும் இடத்தில்,பல அவசர வேலைகள் வந்ததாலும், எதையும் நினைத்துப்பார்க்க நேரமே இல்லை.அதோடு இல்லாமல் குழந்தைகளுக்கும்,எனக்கும் இங்குள்ளவர்களை மிகவும்
பிடித்துவிட்டது.கடைகள்,கோவில்,பீச்,நாங்கள் வேலை பார்க்கும் இடம் எல்லாமே நடை தூரத்தில் மிக வசதியாக இருக்கிறது.அதனால்

வேறு வீட்டை பற்றி யாரும் இதுவரை நினைத்துகூட பார்க்கவில்ல". என்றார்கள் அம்மா .

"நான் வேண்டுமானால் முன்று அல்லது நான்கு வருடத்திற்கான குத்தகை தொகையை வீட்டு ஓனரிடம் கொடுத்துவிடுகிறேன்.வேறு எங்காவது ஒரு நல்ல வீடா வசதியாக எடுத்துகொள்.இங்கிருந்து கஷ்டப்படாதே.பிறகு சொந்தமாக ஒரு இடம் வாங்கி அதில் உனக்கு வீடு கட்ட ஏற்பாடு செய்கிறேன் " என்றார்கள் தாத்தா.

மீண்டும் தொடர்ந்தார்கள்,நீ பிரசவம் முடிந்து திரும்பும் போது, நேராக வேறு வீட்டிற்கு போவதுபோல வைத்துக்கொள்.குழந்தையுடன் இந்த வீட்டிற்கு நீ வருவதில் எனக்கு துளியும் இஷ்டமில்லை".என்றார்கள் தாத்தா.

ஆனா பாட்டி கொடுத்த காபியை குடித்து முடித்துவிட்டு,"சரிம்மா,,அது போகட்டும் ,நான் வந்த வேலையை மறந்துட்டேனே, நீ

என்றையிலிருந்து மேடேர்நிட்டி லீவ் போடபோகிறாய்?நீ ஊருக்கு பிரசவத்திற்காக வரும் நாளை குறித்து எனக்கு கடிதம் போட்டால் ,நான் வந்து உன்னை அழைத்து போகிறேன்". என்றார்கள் தாத்தா.

"மார்ச் ஒன்னாம் தேதியிலிருந்து லீவு எடுப்பதாக முன்பே பள்ளிகூட தலைமை ஆசிரியர்ருக்கு எழுதி கொடுத்த்விட்டேன் அப்பா. அனிதாவையும் ,ஷானையும் ஆனா மாமியிடம் விட்டுவிட்டு, சின்னவன் பாட்டை என்னுடன் அங்கு அழைத்து வந்துவிடலாம் என இருக்கேறேன்"என பதிலளித்தார்கள் அம்மா.

ஆனா பாட்டி குறுக்கிட்டு."மணி ஐயரை நான் பார்த்துகொள்கிறேன்,நீ மட்டும் போயிட்டு நல்ல படியா பிரசவம் முடிந்து ,முணு மாசம் நிம்மதியா இருந்துட்டு திரும்பி வா.முன்று குழந்தைகளை பார்த்துக்கொள்வதில் எனக்கொன்றும் சிரமம் இல்லை".என்றார்கள்.

அம்மாவும், அதை சரி என்பதுபோல் பேசாமல்

இருந்து விட்டார்கள். அம்மாவிற்கு தெரியும் ஆனா பாட்டியால் தம்பி பாட்டை பிரிந்து இருக்க முடியாது என்று. தம்பி பாட் ஆனா பாட்டியின் செல்ல பிள்ளை. ஆனா பாட்டி தம்பியை மணி ஐயர் என்றுதான் எப்பவும் கூப்பிடுவார்கள். ஆனா பாட்டி ஐயர் வகுப்பை சேர்ந்தவர்கள்.நாங்கள் சைவ குடும்பம் என்பதால் எங்கள் வீட்டில் சமையல் வேலைக்கு ஒப்புக்கொண்டு பல வருஷங்களாக எங்கள் வீட்டிலேயே வாழ்ந்து வருகிறார்கள்.அதனால் அம்மா எதுவும் மறுப்பு சொல்லவில்லை.

“அப்பா,ஊருக்கு சென்று அம்மாவிடம் நான் இப்படி ஒரு வீட்டில் வசிப்ப தை சொல்லிவிடாதீர்கள். அம்மாவின் மனது வேதனை படும்.நான் அவரிடம் சொல்லி ,பிரசவம் முடிந்து திரும்பி வரும் சமயம் , அவரிடம் சொல்லி, நல்ல வீடாக ஒன்றை சீக்கிரமாக பார்க்க ஏற்பாடு செய்து விட்டு வருகிறேன் “. என்றார்கள் அம்மா.

தாத்தா ஜன்னல் வழியாக கீழே

பார்த்துக்கொண்டே,நெஞ்சில் கைவைத்து வண்ணம் ,"ஒரு குடம் தண்ணீர் எடுத்துவர இவ்வளவு படிகள் நீ இறங்கி, ஏற வேண்டுமா?என பெருமூச்சு விட்டார்கள்.

"பழகிவிட்டேன் அப்பா" இப்போது ஒன்றும் இது எனக்கு சிரமமாக இல்லை" என்றார்கள் அம்மா.

"கிளியை வளர்த்து குரங்கு கையில் கொடுத்தாற்போல ,ராணி மாதிரி வளர்ந்த உன்னை, இப்படி கொஞ்சமும் பொறுப்பில்லாத சூதாட்டகார மாப்பிள்ளைக்கு கல்யாணம் செய்து, உன் வாழ்கையை வீணடித்து விட்டேனே என வருத்தமாக இருக்கு.உன் மாமனார் சுந்தரம் என்னுடைய பழைய கால சிநேகிதர் என்பதால், அவர் மகனுக்கு உன்னை கல்யாணம் செய்து வைத்தால், உன்னை நல்லபடியாக பார்த்துகொள்வார், நீயும் எந்த குறையும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருப்பாய் என நினைத்தேன்.இதனால் நான்தான் வலிய சென்று அவரிடம் உன் கல்யாண விஷயமாக பேசி முடித்தேன்.ஆனால்,

உன் வாழ்க்கை இந்த நிலையில் முடியும் என்று துளியும் என் கனவில் கூட நினைக்கவில்லை".என தாத்தா சொல்கையில் அவர்கள் கண்கள் கலங்கியது.

"நடந்ததை பேசி பிரயோஜனமில்லை அப்பா.எல்லாம் என் தலைஎழுத்து என்னவோ அப்படிதான் நடக்கு ம்," என அம்மா சுருக்கமாக பேச்சை முடித்துவிட்டு விட்டார்கள்.

"சரிம்மா,நான் அப்ப கிளம்பறேன்,நீ எனக்கு கடிதம் போடு. நான் வந்து உன்னை அழைத்து போகிறேன். நீ தனியாக வராதே."என்று சொல்லிவிட்டு நாற்காலியை விட்டு எழுந்திருக்கையில்,

"ஏம்பா,மத்தியானம் சாப்பிட்டு விட்டு போகலாமே.ஏன் உடனே கிளம்புறீங்க?" என்றார்கள் அம்மா.

"இல்லைம்மா,நீ இருக்கும் நிலையை பார்த்தபிறகு

,எனக்கு சாப்பிடனும்னு தோணலை.பசிக்கவில்லை.முதலில் நீ வேறு வீடு பார்க்க மாப்பிள்ளையிடம் இன்னைக்கே சொல்லு."என கூறிவிட்டு அம்மாவின் பதிலுக்கு காத்திருக்காமல் எழுந்து வெளியே நடக்க ஆரம்பித்தார்கள் தாத்தா.

தாத்தாவை கீழ்வரை சென்று வழியனுப்பிவிட்டு வந்த அம்மா, கட்டிலில் நிதானமாக உட்கார்ந்து ஓய்வு எடுத்துகொண்டிருந்தார்கள்.அம்மாவிற்கு முச்சு வாங்கியது.நான் அம்மாவின் அருகில் உட்கார்ந்து கொண்டு ,அம்மா அவர்கள் வயிற்றை தடவி கொடுத்துகொண்டிருக்கும் போது நானும் கூடவே தடவி கொடுத்துக்கொண்டிருந்தேன்.

"அம்மா குழந்தை எப்படி வெளியே வரும்"என்று மெதுவாக பேச்சை ஆரம்பிதே.

அம்மா தன தொப்புளை காண்பித்து.அதன் வழியாக வெளியே வரும் என்றார்கள்.

“வலிக்குமாம்மா”என்றேன்.

“ரொம்ப வலிக்கும் “என்றார்கள்.

“தொப்புள் தானாக முடி கொள்ளுமாம்மா, குழந்தை பிறந்ததும் “என கேட்டேன்.

“ஆமாம். தொந்தரவு செய்யாமல் போய் வேறு ஏதாவது செய்” என என்னை கட்டிலிலிருந்து போக சொல்லிவிட்டார்கள்.

மத்தியானம் சாப்பாட்டிற்கு சற்று முன்னதாகவே வெளியே சென்ற அப்பா திரும்ப வந்துவிட்டார்கள்.உள்ளே வந்த அப்பா தாத்தா இல்லாதது கண்டு,

“எங்கே உன் அப்பா?” என்றார்கள்.

“அப்பா வந்த ஒரு மணி நேரத்திற்க்கெல்லாம் சென்றுவிட்டார்கள்.வெறும் காபி மட்டும் குடித்துவிட்டு சென்றுவிட்டார்கள்”என்று அம்மா சொல்லிவிட்டு ,தாத்தா வேறு வீடு பார்க்க சொன்ன விஷயத்தையும் அப்பாவிடம்

சொன்னதும்,அப்பாவும் அதை ஆமோதிப்பது போல் ,

“நானே
நினைத்துகொண்டிருந்தேன்.எல்லாவற்றிற்கும் கீழே போவது கஷ்டமாகத்தான் இருக்கிறது.இந்த ஏரியாவில், நல்ல வீடு தரகர் யாரும் இருந்தால் நீயே அவரை வீடு பார்க்க சொல்லிவிடு”. என்றார்கள் அப்பா.

“நம்ம பக்கத்து போர்ஷனில் குடியிருப்பவரும் வீடு பார்க்கும் தரகர்தானே ,அவரையே வீடு பார்க்க சொல்லட்டுமா?” என்றார்கள் அம்மா.

“அப்படியா, அவர் வீடு பார்க்கும் தரகர் என்று இவ்வளவு நாள் எனக்கு தெரியாமல் போயிற்றே.தெரிந்திருந்தால் முன்பே அவரிடம் சொல்லியிருப்பேன்”என்றார்கள் அப்பா.

அம்மா பக்கத்து போர்ஷன் மாமாவிடம் வீடு பார்க்க சொல்லி விட்டதால் ,அவ்வப்போது அவர் காலியாக இருக்கும் வீடுகளுக்கு அப்பா,

அம்மாவை அழைத்து சென்று காண்பித்து வந்தார். பல வீடுகள் பார்த்தும் எதுவும் என் பெற்றோருக்கும்,ஆனா பாட்டிக்கும் பிடித்ததாக ஒன்றும் சரிவர அமையவில்லை.

இதற்குள் மார்ச் மாதமும் வந்துவிடவே, அம்மா அவர்களது பெற்றோர் வீட்டிற்கு, சிதம்பரத்திற்கு செல்லு ம் நாளும் நெருங்கிக்கொண்டு வந்தது.ஏற்கனவே தாத்தா ஈஸ்வரனுக்கு அம்மா கடிதம் மூலம் தெரிவித்திருந்தபடியால்,மார்ச் மாதம் நல்ல நாளாக பார்த்து அம்மாவை காரில் அழைத்து செல்வதாக தாத்தா பதில் கடிதம் போட்டிருந்தபடியால்,அம்மா ஊருக்கு புறப்பட வேண்டிய ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்தார்கள்.

அம்மா ஊருக்கு கிளம்பும் முதல் வாரம், ஞாயிற்று கிழமை காலை ஏழு மணியளவில், எங்கள் போர்ஷன் வாசல் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டு அம்மா கதவை திறந்து பார்த்த பொது,சுந்தரம் தாத்தாவின் கார் டிரைவர் நின்றிருப்பதை பார்த்ததும், அம்மா

பதற்றத்துடன் என்னவோ?ஏதோ ?என
பயந்தபடி

“என்னப்பா விஷயம்,இந்த காலையில்
வந்திருக்கே?”உள்ளே வா.”என கூப்பிட்டார்கள்.

“பெரிய அய்யா,அம்மா மற்றும் சின்னையாவின்
தம்பி, தங்கை எல்லோரும் கீழே காரில்
உட்கார்ந்திருக்கிறார்கள். எதோ முக்கிய விஷயம்
பேசவேண்டுமாம்.தேவன் அய்யாவை கீழே
உடனே வரச்சொனார்கள்” என்றார்.

“அய்யா தூங்கிக்கொண்டிருக்கிறார்.இப்பவே
எழுப்பி அனுப்புகிறேன்.நீ கீழே போய்
அவர்களிடம் சொல்லு,இன்னும் ஐந்து
நிமிஷத்தில் வந்துவிடுவார்”என்ற” என
கூறிவிட்டு டிரைவரை அனுப்பிவிட்டு
,அப்பாவையும் எழுப்பி விஷயத்தை சொன்னதும்
அப்பா அவசர அவசர மாக எழுந்து,
ஹாங்கரில் மாட்டியிருந்த சட்டையை எடுத்து
போ ட்டுகொண்டு கீழே இறங்கி ஓடினார்கள்.

“அப்படி என்ன அப்பாவும், பிள்ளைக்கும் ரகசிய பேச்சு.உன் மாமனாரால்தான் நடக்க முடியாது சரி ,ஏன் மத்தவங்க மேலே வந்து முழுகாமல் இருக்கிற உன்னையும்
பார்த்துவிட்டு,,குழந்தைகளையும்
பார்த்துவிட்டு,அப்படியே இந்த வீடும் எப்படி இருக்கிறது என்று பார்த்துவிட்டு போகலாம் இல்லையா? அடுத்த வாரம் வேறு நீ பிள்ளை பேருக்கு ஊருக்கு போக இருக்கே” என கடு கடுப்பாக பேசினார்கள் ஆனா பாட்டி.

“அவர்களை பற்றி உங்களுக்கு தெரியாததா மாமி,புதுசா கேட்கறீங்க.அவர்களை
பொருத்தவரை நானும் ,குழந்தைகளும் முன்றாவது தரமான ஆட்கள்தான்.தங்கள் பிள்ளையுடன் ஏதாவது ரகசியம்
பேசுவார்கள்.நமக்கு தெரியாமல் இருப்பதே நல்லது.”என அம்மா கூறியதும் ஆனா பாட்டி பேசாமல் தன வேலையை பார்க்க
ஆரம்பித்துவிட்டார்கள்.

சிறிது நேரத்தில் அப்பா மட்டும் மேலே திரும்பி

வந்தார்கள் .நான் ஆவலுடன் வேறு யாரும் வருகிறார்களா? என பார்த்த போது ,யாரும் வராதது கண்டு என் மனம் ஏமாற்றம் அடைந்தது.அம்மா எதுவும் அப்பாவிடம் அவர்கள் எல்லாம் ஏன் வந்தார்கள்? என்ற விஷயத்தை கேட்கவே இல்லை.பேசாமல் இருந்துவிட்டார்கள். அப்பாவும் எதுவும் சொல்லவில்லை.

கடிதத்தில் எழுதியிருந்தபடி, மார்ச் மாதம் ஐந்தாம் தேதி சரியாக மாலை ஏழு மணிக்கெல்லாம் தாத்தா ஈஸ்வரன் அம்மாவை அழைத்துசெல்ல காரில் வந்திருந்தார்கள். அப்பா வீட்டில் இல்லை .எங்கள் மனது மிகவும் கஷ்டப்பட்டது.ஏனோ தெரியவில்லை அம்மா எங்களை தன்னுடன் அழைத்து செல்லவில்லை. அண்ணன் ஷானுக்கு ஆறு வயது என்பதால், அவன் இரண்டாம் வகுப்பு படித்துகொண்டிருந்தான் என நினைக்கிறேன் .நான் இன்னும் பள்ளிக்கூடம் போக ஆரம்பிக்கவில்லை.அம்மா குழந்தை பிறந்து திரும்பி வந்தவுடன்தான் என்னை அந்த ஜூன்

மாதம் முதல் வகுப்பில் சேர்க்கப்போவதாக பேசிகொண்டிருந்தார்கள்.

தாத்தாஅம்மாவின்பெட்டிகளைகீழேஎடுத்துசென்று

“அம்மா எப்ப வருவீங்க?” என்றேன்.

“மூன்று மாதம் ஆகும்.முடிந்தால் கூடிய சீக்கிரம் வரப்பார்க்கிறேன்,நீ ஆனா பாட்டி சொல்பேச்சு கேட்டுக்கொண்டு பத்திரமாக இருக்கவேண்டும்.பாட்டியிடம் சொல்லாமல் எங்கும் போககூடாது.பாட்டிக்கு தொந்தரவு கொடுக்காமல் நல்ல பிள்ளைகளாக இருக்கவேண்டும்”.போய் வருகிறேன் மாமி.குழந்தைகளை பத்திரமாக பார்த்து கொள்ளுங்கள்” என கூறிவிட்டு விடை பெறுகையில் ஆனா பாட்டிக்கு அழுகை வந்துவிட்டது.

அம்மா ஊருக்கு செல்வதை பார்த்த ராஜம் அக்கா, எங்கள் வீட்டிற்கு ஓடி வந்து.”மங்கை அக்கா நீங்க கவலை படாமல் ஊருக்கு

போயிட்டு வாங்க ,நான் தினமும் வந்து குழந்தைகளுடன் சற்று நேரம் இருந்து விட்டு செல்கிறேன்.குழந்தை பிறந்ததும் கடிதம் போடுங்கள் " என கூறிவிட்டு அம்மா கிளம்பும் வரை எங்கள் வீட்டில் இருந்தார்கள்.

"நல்லபடியா பிரசவம் முடிந்து சீக்கிரமாக வந்துடு.உன் புருஷன் வீட்டிலிருந்து உன்னை வழியன்னுப்ப துப்பு இல்லை. நீ கவலை படாதே.நான் எல்லாம் பார்த்துகொள்கிறேன்.போயிட்டு வாம்மா."என அழுதுகொண்டே அம்மாவுடன் கீழே இறங்கி சென்றார்கள் ஆனா பாட்டி.நாங்களும் பாட்டியுடன் கீழே சென்றோம்.

தாத்தா எங்கள் முன்று போரையும் கட்டிபிடித்து தலையில் முத்தம் கொடுத்துவிட்டு "குட்டிகளா பத்திரமா இருக்கணும் புரியுதா?அம்மா சீக்கிரம் வந்துவிடுவார்கள்.என்று கூறிவிட்டு காரில் ஏறியதும் கார் கிளம்பி சென்றது.

கார் தெருமுனையில் திரும்பும் வரை, நாங்கள்

கையசைத்து கொண்டே பெரியா விடை கொடுத்தனுப்பினோம்.அம்மா சென்றதும் ராஜம் அக்காவும் அவர்கள் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். ஆனா பாட்டி எங்கள் முவரையும் அழைத்துக்கொண்டு, எங்கள் போர்ஷனுக்கு சென்று கதவை இழுத்து தாழிட்டுகொண்டார்கள்.

“நீங்க முணுபேரும் இந்த ரூமிலேயே விளையாடிகொண்டிருகள்.வெளியே போககூடாது.என்னால் உங்கள் முணு போரையும் பார்த்துக்கொண்டே இருக்கமுடியாது.”என கூறிவிட்டு எங்கள் முன்று பேரின் அருகில், பாட்டியும் சற்று நேரம் படுத்து ஓய்வு எடுத்தார்கள்..

நாட்கள் நகர்ந்தன.அம்மா சென்று ஒருவாரம் ஆயிற்று.ஆனா பாட்டி எங்கள் முவரையும் வீட்டிற்குள்ளேயே அதிக நேரம் வைத்திருந்தார்கள்.வெளியே ரொம்ப அனுப்பாமல் இருந்தார்கள்.இதனால் எங்களிருவருக்கும் மிகவும் போர் அடித்தது.

நானும் , அண்ணன் ஷானும் அப்பாவிடம் எங்களுக்கு போர் அடிக்கிறது என்று சொன்னதும் , அதிலிருந்து அப்பா என்னையும், அண்ணன் ஷானையும் தினமும் அப்பா வேலை செய்யும் காலேஜுக்கு அழைத்து சென்று, அங்குள்ள மைதானத்தில் விளையாட வைத்துவிட்டு, சாயங்காலம் நான்கு மணி அளவில் வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டு செல்வார்கள்.

அப்பா டிபார்மெண்டில் நிறைய பியூனஸ் இருந்ததால், அவர்கள் தினமும் எங்களை பார்த்துகொண்டார்கள். சிலபேர் எங்களுடன் விளையாடவும் செய்தார்கள். நாங்கள் சிலசமய கிரிகெட் விளையாடினோம்.சாயங்காலம் வீட்டிற்கு வந்ததும் ராஜம் அக்கா எங்களிருவரையும், அவர்கள் வீட்டிற்கு அழைத்து சென்று விளையாடவைத்துவிட்டு திரும்பவும் கொண்டுவந்து விட்டுவிடுவார்கள்.

நாட்கள் இப்படியாகத்தான் நகர்ந்தது.அப்பாவுடனும், ராஜம் அக்காவுடனும்

தினமும் வெளியே சென்று வந்ததால் போரடிக்காமல் பொழுது நன்றாகவே ஓடியது. அம்மா இல்லாததே தெரியாமல் போயிற்று எங்களுக்கு.அம்மாவை பற்றியும் பிறக்க இருக்கும் குழந்தையை பற்றியும் நினைக்க எங்களுக்கு நேரமே இல்லாமல் போயிற்று .

ஒருநாள் தபால்காரர் எங்கள் போர்ஷன் கதவை தட்டி ஆனா பாட்டியிடம் ஓர் நீல நிற லெட்டரை கொடுத்ததும், பாட்டி அதை அவசர அவசரமாக வாங்கி பிரித்து படித்து விட்டு'குழந்தைகளா உங்களுக்கு தங்கை பாப்பா பொறந்திருக்கு" என்று சந்தோஷமாக சொல்லிவிட்டு,பக்கத்து மாடியிலிருந்த ராஜம் அக்காவை ஜன்னல் வழியாக கூப்பிட்டு விஷயத்தை சொன்னதும், ராஜம் அக்கா உடனே எங்கள் வீட்டிற்கு ஓடிவந்துவிட்டார்கள். பாட்டி, ராஜம் அக்காவிடம் பணத்தை கொடுத்து கடையிலிருந்து சாக்கலேட் கொஞ்சம் வாங்கி வரச்சொல்லி, அக்கம் பக்கத்து வீடுகளுக்கெல்லாம் விஷயத்தை கூறி சாக்லேட்டும் கொடுத்தார்கள்.ராஜம் அக்காவும்

எங்கள் கூடவே அன்று இருந்தார்கள்

முன்று மாதம் ஆகும் வருவதற்கு என்ற சொல்லிவிட்டு போன அம்மா ஒரு மாதத்திற்கு முன்பே வரப்போவதாக அப்பாவிற்கு கடிதம் போட்டிருந்தார்கள்,அந்த கடிதத்தை அப்பா படித்து காட்டியதும் அனைவரும் புது தங்கை பாப்பாவை பார்க்க ஆவலாக காத்திருந்தோம்.

“மே” மாத வெய்யில் கொளுத்தியது.அந்த மாதம் ஒரு நாள் விடியற்காலையில் அரை தூக்கத்தில் அம்மாவின் குரல் கேட்டது.தூக்கத்திலிருந்த நான் அது கனவு என எண்ணியிருந்தேன்.ஆனால் அம்மாவும்.ஆனா பாட்டியும் அப்பாவும் பேசுவது தொடர்ந்து கேட்டுகொண்டே இருக்கவே கண்விழித்து பார்த்தேன்.நிஜமாகவே அம்மா அங்கு உட்கார்ந்து பேசி கொண்டிருந்தார்கள்.

“அம்மா ,என கத்தியபடி ஆனந்தத்தால் அம்மாவை கட்டிபிடித்துகொண்டே சுற்றி முற்றிலும் தங்கை பாப்பா எங்கே என என்

கண்கள் ஆவலுடன் தேடியது.பிறகு பெருத்த ஏமாற்றத்துடன் .

“தங்கை பாப்பா எங்கம்மா?”என்றேன்.

“ஊரில் விட்டுவிட்டு வந்துவிட்டேன்”.இன்னும் சிறிது நாள் கழித்து அழைத்துவந்துவிடுவேன்” என்றார்கள் அம்மா.

“ஏன் இப்பவே தூக்கிக்கொண்டு வரலை? என்றேன் மறுபடியும்.

“அம்மாவுக்கு நிறைய வேலை இருக்கு உன்னை பள்ளிகூடத்தில் சேர்க்கவேணும்,எனக்கு பள்ளிக்கூடம் வேலைகள் அதிகம் இருக்கு.ஆனா பாட்டியால் உங்க நாலு பெரியும் பார்த்துக்கொள்ள முடியாது.அதனால் பாப்பாவை ஊரில் விட்டுவிட்டு வந்துவிட்டேம்”. என்றார்கள் அம்மா.

“எப்ப நாம் பாப்பாவை பார்க்கபோறோம்?” என்றேன்.\

“லீவு விட்டதும் போய் அழைத்து வந்துவிடுவேன்” என்று கூறிவிட்டு ஆனா பாட்டியிடம் தொடர்ந்து எதை எதையோ பேசிகொண்டிருந்தார்கள்.

10

அத்யாயம்-பத்து

சமீபத்தில் தான் இந்த வீட்டிற்கு குடிவந்தாற்போல் இருந்தது. ஆனால் அதற்குள் ஒருவருடம் முடிந்து,இரண்டாவது வருடமும் ஆரம்பித்துவிட்டது."மே" மாமதம் பன்னிரண்டாம் தேதியுடன் எனக்கு நாலுவயது முடிந்து ஐந்தாவது வயது ஆரம்பித்துவிட்டது.என்னை பள்ளிகூத்தில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது.அம்மா வேலை செய்யும் பள்ளிகூடத்திலே என்னை சேர்க்க முடிவு செய்துவிட்டார்கள்;அம்மாவிற்கு அது மிகவும் சுலபமாக இருக்கும் என்பதால்.காலையில் நான்

அம்மாவுடன் சென்று சாயங்காலம்
அம்மாவுடனே திரும்பி வந்துவிடுவேன்
என்றார்கள்.

வீட்டினுள் நான்கு சுவற்றிற்குள் அடைந்து கிடந்த
ஸூ,பாக் எல்லாம் கடையிலிருந்து முதல்நாளே வ
அறியாமல் வெகுநேரத்திற்கு பிறகு தூங்கிவிட்டிரு

காலையில் அம்மா என்னை எழுப்பியபோது, அவ
மேலே அழைத்தது வந்து, மெரூன் கலரில் ஸ்கர்ட்

முதல் நாள் அம்மாவுடன் கிளம்பி பள்ளிக்கூடம்
சென்றேன்.அம்மா என்னை அழைத்து சென்று
வகுப்பில் விட்டுவிட்டு, எங்கள்
டீச்சர் சந்திராவிடம் ரொம்பநேரம்
பேசிகொண்டிருந்தார்கள்.நான் மிகவும் ஷை
டைப் என்பதால்,வகுப்பறைக்குள் சற்றே தயங்கி
நின்று கொன்று சுற்று முற்றிலும்
பார்த்தேன்.விளையாடுவதற்கு நிறைய
பொருட்கள் ஆங்காங்கே அறையின் ஒவ்வொரு
முலையிலும் வைக்கப்பட்டிருந்தது.என்னை
போலவே மற்ற குழந்தைகளும் அன்று புத்திதாக

பள்ளிக்கூடம் வந்த்திருந்ததால், ஒருவரை ஒருவர் முறைத்து பார்த்து கொண்டு தயங்கி, தயங்கி ஒவ்வொரு முலையில் நின்றிந்தோம்.

முதல் நாள் யாரும் ஒருவருடன் ஒருவன் அவ்வளவாக பேசவில்லை.நாட்கள் செல்ல செல்ல ஒருவரை ஒருவர் நான்றாக தெரிந்துகொண்டு ஒர்ன்றாக விளையாட ஆரம்பித்தோம்.எங்கள் அனைவருக்கும் பள்ளிக்கூடம் மிகவும் பிடித்து விட்டது.மத்தியானம் சாப்பாட்டிற்கு அம்மா என்னை அவர்களுடன் வீட்டிற்கு அழைத்துவந்து சாப்பாடு கொடுத்துவிட்டு, திரும்பவும் என்னை என் வகுப்பில் கொண்டுவந்தது விட்டுவிட்டு, தன பள்ளிகூடத்திற்கு சென்றுவிடுவார்கள்.

நானும், அண்ணன் ஷானும் பள்ளிக்கூடம் செல்வதால் நாட்கள் வெகுவாக பறந்தோடியது.

அவ்வருடம் 1963,டிசம்பர் மாத அரை பரீட்ச்சை லீவு தொடங்கும் சமயம்,அன்று ஞாயிற்று கிழமை. அப்போதெல்லாம் அனைவருக்கும்

ஞாயிற்று கிழமை ஒருநாள் தான் விடுமுறை நாள்.எனவே அன்று தான் விருந்தாளிகள் பொதுவாக வீட்டிற்கு வருவது வழக்கம்.அதுபோல அன்று விடியற்காலையில் நான் கண்விழித்து பார்கையில், வீட்டில் தாத்தா ஈஸ்வரன்,பாட்டி கமலா,அம்மா, அப்பா அனைவரும் ஹாலில் உட்கார்ந்து பேசிகொண்டிருந்தார்கள்.வழக்கம் போல் ஆனா பாட்டி சமையல் அறையில் சமைப்பதில் மும்முறமாக இருந்தார்கள்.அண்ணன் ஷானும்,தம்பி பாட்டும் ,ஒரு சிறிய படுக்கை அந்த ரூமில் போடப்பட்டிருந்த்ததன் அருகில் உட்கார்ந்துகொண்டு, எதையோ வேடிக்கை பார்த்துகொண்டிருந்தார்கள்.நான் வாரி சுரிட்டிகொண்டு எழுந்து நேராக அவர்கள் இருக்கும் இடத்திற்கு ஓடி சென்று ஆவலுடன் பார்த்தேன்.

“இதுதான் உன் தங்கை பாப்பா”என்றார்கள் தாத்தா ஈஸ்வரன்.

“பாப்பாவிற்கு பெயர் என்ன?”என் கேட்டேன்.

“இன்னும் பெயர் வைக்கவில்லை.இனிமேல்தான் வைக்கவேண்டும்”என்றார்கள் தாத்தா.

இதற்கிடையில் ஆனா பாட்டி சமையலறையிலிருந்து “ஆனஹி” பெயர் வையுங்கள். குழந்தை மூக்கும் முழியுமாக இருக்கிறாள்”.என குரல் கொடுத்தார்கள்.

எனக்கு மட்டும் இல்லை அனைவருக்கும் அந்த ஆனஹி என்ற பெயர் மிகவும் பிடுத்து விட்டது.

ஆனஹி என அடிகடி கூப்பிட்டுகொண்டே நாங்கள் முவரும் தங்கை பாப்பாவுடன் உட்கார்ந்து விளையாடி கொண்டிருந்தோம்.ஆனஹி தவழ்ந்து நகரும் அளவிற்கு வளர்ந்துவிட்டாள்.அந்த அறை முழுதும் தன் வயிற்றால் உந்தி, உந்தி தவழ்ந்து வலம் வந்துகொண்டிருந்தாள்.

“அம்மா ,தாத்தாவும்,பாட்டியும் ஆனஹியை திரும்பவும் ஊருக்கு எடுத்துக்கொண்டு போய்விடுவார்களா?” என்று கேட்டேன்.

“இல்லடா கண்ணு, அவள் கொஞ்சம் நாளுக்கு உங்களுடன்தான்
இருக்கப்போகிறாள்”என்றார்கள் பாட்டி கமலா.

ஆனந்தத்தால் என் முகம் மலர்ந்தது.இனி பள்ளிகூடம் விட்டு வந்தால் ஆனஹியுடன் விளையாடலாம்.வீட்டில் போர் அடிக்காது என மனதிற்குள் எண்ணி சந்தோஷப்பட்டேன்.

தாத்தாவும் ,பாட்டியும் எப்ப வந்தாலும் காபி மட்டும் குடித்துவிட்டு உடனே கிளம்பி விடுவார்கள். அதிக நேரம் அவர்கள் எங்கள் வீட்டில் இருந்ததே இல்லை.அதே போல் அன்றும், ஆனஹியை விட்டுவிட்டு சிறுது நேரத்தில் கிளம்பி சென்றுவிட்டார்கள்..

ஆனஹி எங்களுடன் வளர்ந்துவந்தாள்.தினமும் எல்லோரும் அவளுடன் அதிக நேரம் செலவழித்தோம்.அவள் வந்து இரண்டு மாதங்களுக்குமேல் ஆயிற்று.1964 வருடம் மார்ச் மாதமும் வந்துவிட்டது. ஆனஹிக்கு ஒருவருடமும் முடிய இருந்தது.ஆனால் இன்னும் அவள்

நடக்கவில்லை என அம்மா மிகவும் கவலைபட்டார்கள்.ஆனஹி இன்னமும் உட்கார்ந்தபடியே நகர்ந்து, நகர்ந்து எல்லா இடங்களுக்கும் சென்று வந்தாள் .டாக்டேரிடம் அவளை அழைத்துசென்று காண்பிக்கையில்,பயப்பட எதுவும் இல்லை.சில குழந்தைகள் தாமதமாக நடக்கும் அவ்வளவுதான் என் அவர் கூறியதை கேட்டதும் வீட்டில் அனைவர் கவலையும் சற்றே தீர்ந்தது.

ஒரு நாள் நானும் அம்மாவும் பள்ளிக்கூடம் முடிந்து மூன்று மணியளவில் வீடு திரும்பிகொண்டிருக்கையில் ,எங்கள் வீடு மாடிப்படி அருகில் ஆனா பாட்டி அழுது அரற்றும் குரல் கேட்டு ,அம்மா பதறி கொண்டு மாட்டிக்கு ஓடி சென்று பார்கையில், ஆனாபாட்டியும்,பக்கத்து போர்ஷநிலுள்ளவர்களும் ,உள்ளேஆனஹியை சுற்றி நின்றிருந்தார்கள்.அம்மா அவர்களை விளக்கிவிட்டு பார்க்கையில் ஆனஹி வாயிலிருந்து நுரை நுரையாக வழிந்து,கண்கள் மேலே சொருகியபட்டி,உடல் வெட்டி வெட்டி

இழுத்து கொண்டிருந்தது.

அம்மா அதை பார்த்ததும் பதறி அடித்துக்கொண்டு ஆனஹியை கையில் தூக்கியதும்,நானும் பயந்து “ஒ ” வென அழ ஆரம்பித்துவிட்டேன்,.எங்கள் வீட்டிலிருந்து ஐந்த அல்லது ஆறு வீடு தள்ளிதான் டாக்டர் கிளினிக் இருந்தது.எனவே அம்மா அவளை கையில் தூக்கிக்கொண்டு டாக்டர் கிளினிக்கிற்கு ஓடவே, பக்கத்திலிருந்த சிலரும்,ராஜம் அக்காவும் அம்மா கூடவே ஓடினார்கள்.ஆனா பாட்டியுடன் நாங்க முணு பேரும் வீட்டிலேயே இருந்துவிட்டோம்.என் வயிற்றிற்குள் பல பட்டாம்பூச்சிகள் சிறகடித்து பட படவென் பறப்பதுபோல பயத்தல் வயிற்ற பிரட்டிகொண்டிருன்தது.

சிறிது சிறிது நேரத்திற்கலெல்லாம் சிரித்த முகத்துடன் ஆனஹியை தூக்கிக்கொண்டு அம்மா உள்ளே நுழைத்ததை கண்டதும் எங்கள் அனைவரின் முகத்திலும் பிரகாசமானது.

“என்னவாம் மங்கை?’ என ஆனா பாட்டி கேட்டதும்.

“ஒன்றும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை மாமி.சில பிறந்த குழந்தைகளுக்கு அதிகம் சத்தம்,அல்லது ஏதும் திடீரென அதிர்ச்சி ஏற்பட்டால் பிட்ஸ் வந்துவிடுமாம்.அது ஒரு வயது ,இரண்டு வயது வரை இருக்குமாம். போக போக சரியாகிவிடும் என்றார் டாக்டர்.நல்ல போஷாக்கும், அதிக சத்தம் இல்லாத இடமாக இருந்தால் விரைவில் எல்லாம் சரியாகிவிடும் என்றார்.இங்கிருந்து டாக்டர் கிளிநிகுள் நுழைதவுடனே, இவள் டாக்டரை பார்த்து சிரிக்க ஆரம்பித்துவிட்டாள். எல்லாம் சரியாகிவிட்டது.ஒரே ஒரு இன்ஜெக்ஷன மட்டும் தற்போதைக்கு போட்டு அனுப்பிவிட்டார்.

அதன் பிறகு ஆனஹி எந்த பிரச்சனையும் இல்லாமல் நல்ல உடல்நலத்துடன் இருந்தாள் . நான் மிகவும் ஆர்வத்துடன் பள்ளிக்கூடம் சென்றுவந்தேன்.இப்பொது சற்று எழுதவும் ,எண்களின் எண்ணிக்கையும் கற்று

கொண்டேன்.ஆனால் கடிகாரத்தில் மணி எப்படி பார்ப்பது என்று எனக்கு யாரும் கற்றுத்தரவில்லை.நானும் முயற்சி எடுத்து யாரையும் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை.

1964-ம் ஆண்டுமவருடமும் வெகு விரைவாக ஓடிகொண்டிருந்தது.பக்கத்து போர்ஷன் சாரதி மாமா, எங்கள் போர்ஷன் திறந்தே இருந்ததால், அங்கு ஹாலில் உட்கார்ந்து ஆனஹியுடன் நான் விளையாடிகொண்டிருந்ததை பார்த்துவிட்டு

“அம்மா இருக்காங்களா பாப்பா?” என்றார்.

“ஓ” இருக்காங்களே” என சாரதி மாமாவிற்கு பதிலளித்துவிட்டு சமயலரைபக்கம் திரும்பி

“அம்மா சாரதி மாமா”என்றேன்.

சமையலறையிலிருந்து வெளியே வந்த அம்மா சாரதி மாமாவை பார்த்துவிட்டு “வாங்க,வாங்க என்ன விஷயம்” என்றார்கள்.

” நல்ல வீடாக ஒன்று

கிடைத்திருக்கிறது.ஆனால், அது இந்த வட்டாரத்தில் இல்லை.மைலாப்பூரில் கபாலீஸ்வரர் கோவில் அருகில் உள்ளது.அதிக தூரம் இல்லாவிட்டாலும் நீங்களிருவரும் பசில்தான் வரவேண்டும்.அநேகமாக நாலு ஸ்டாப்பிங் இருக்கும். ஆனால் வீடு மிக பெரியதாகவும்,வசதியாகவும் இருக்கிறது. ஒரே ஒரு சின்ன கஷ்டம். மாடியில் படுக்கை அறையை ஒட்டி உள்ள டாய்லெட்டில் மட்டும் தண்ணீர் கீழிருந்துதான் எடுத்து சென்று அண்டாவில் நிரப்பிகொள்ளவேண்டும். மற்ற படி வேறு எந்த குறையும் இல்லை.குழந்தைகள் ஓடி விளையாட மிக வசதியான் பெரிய மொட்டைமாடி இருக்கிறது.வாடகை ரூபாய் எழுபத்தைந்து. அந்த தெருவிலுள்ளவர்களும் ஓரளவிற்கு நடுத்தர வகுப்பை சேர்ந்தவர்களே என்பதால் உங்களுக்கும் பிடித்துவிடலாம்.நீங்கள் இருவரும் நாளை காலை ஏழுமணிக்கு தயாராக இருந்தால், அங்கு போய் வீடு பார்த்து விட்டு பிடித்திருந்தால் ஏதாவது கொஞ்சம் முன்பணம் கொடுத்துவிட்டு வந்துவிடலாம்.இதை விட்டால்

வேறு நல்ல வீடாக கிடைக்குமா என்பது சற்றே சந்தேகம்தான் “என்றார்.

“வீட்டில் அவங்க வந்ததும் விஷயத்தை சொல்லிவிட்டு ,,காலையில் தயாரானதும், உங்களுக்கு உடனே சொல்லிவிடுகிறேன். அவங்க ராத்திரி வர லேட்டாகும். எனவே விடியர்காலையிலேயே நான் உங்களிடம் சொல்லிவிடுகிறேன்.ரொம்பவும் தேங்க்ஸ் “. என்று சொல்லி அவரை அனுப்பிவிட்டு மறுபடியும் சமயலறைக்கு சென்றுவிட்டார்கள் அம்மா.

இரவு அப்பா வருவதற்காக காத்திருந்து விஷயத்தை அப்பாவிடம் கூறிய அம்மா, மறுநாள் காலை ஏழுமணிக்கெல்லாம் எழுந்து தயாராகும்படி சொல்லி விட்டு படுத்து தூங்கிவிட்டார்கள்.மறுநாள் காலையில் அம்மாவும் அப்பாவும் காலை ஏழு மணிக்கெல்லாம் கிளம்பி தயாராக சாரதி மாமாவிற்காக காத்திருந்தார்கள்.சாரதி மாமாவும் சரியாக குறித்த நேரத்திற்கு வரவே அனைவரும்

கிளம்பி புது வீட்டை பார்க்க சென்றுவிட்டார்கள். எனக்கும் அவர்களுடன் செல்லுவதற்கு ஆசையாக இருந்தது.நானும் அண்ணனும் எவ்வளவோ கெஞ்சிகேட்டும் அம்மாவும் அப்பாவும் எங்களை அவர்கள் கூட அழைத்து செல்ல மறுத்துவிட்டார்கள்.

புது வீடு பெரியதாக இருக்கும் என சாரதி மாமா கூறியது கேட்டதிலிருந்து என் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.நன்றாக ஓடிவிளையாட வசதியாக இருக்கும்.அந்த வீடு எப்படி இருக்கும் என கற்பனை செய்து பார்க்க தொடங்கினேன்.குழந்தையிலிருந்து எதையும் முன்கூட்டியே கற்பனை செய்து பார்க்க துவங்கிவிடுவேன்.நினைவில் நடக்கமுடியாததை கற்பனையில் நினைத்து பார்த்து பூர்த்திசெய்து கொள்வதை எனக்குள் எப்படியோ சிறுவயதிலிருந்தே வளர்த்துகொடேன்.எனவே நிஜ வாழ்வில், எனக்கு அது இல்லை, இது இல்லை என்று யாரையும் தொல்லை செயாமல், நல்ல குழந்தை என்று அம்மாவிடம் பேர் வாங்கினேன்.

“கடவுள்ளை மறுபடியும்
வேண்டிக்கொண்டேன்.கடவுளே,என் கூட
விளையாட நிறைய பெண் குழந்தைகள் அக்கம்
பக்கத்து வீட்டிலே இருக்க வேண்டும்.அப்படி
இருந்தால், அந்த வீட்டையே அம்மா அப்பாவும்
பிடிக்கும்படி செய்துவிடு”.என்று.

ஆவலுடன் அம்மா,அப்பா, வருகையை
எதிர்பார்த்து ஜன்னலின் அருகே உட்கார்ந்து
கீழே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டே
இருந்தேன்.அப்போது பக்கத்து வீடு
மாடியிலிருந்து ராஜம் அக்கா என்னை பார்த்து
விட்டு, “அம்மா இருக்காங்களா?”என்று
கேட்டார்கள்.

“இல்லை ராஜம் அக்கா” என்று விஷயத்தை
சொன்னேன்.

மணி பத்து இருக்கும் அம்மாவும் ,அப்பாவும் கீழு ப
படிகட்டுகளிலிறங்கி
ஓடிச்சென்று அம்மாவின் கையை பிடித்தவண்ண

“வீடு எப்படிம்மா
இருக்கு?உங்களுக்கும்,அப்பாவுக்கும்,
பிடித்துவிட்டதா?”என்றேன் மிகவும் ஆவலுடன்.

“மேலே போ, வீட்டிற்கு போயி பேசலாம் ” என
என்னை மேலே அழைத்து வந்தார்கள் .

வீட்டிற்குள் நுழைந்ததும்,

“விஷயம் பழமா?காயா? என்றார்கள் ஆனா
பாட்டி.\

“முக்கால்வாசி பழம்தான்” என்றார்கள் அம்மா.

எனக்கும் ஒன்றும் புரியவில்லை.என்ன புதிர்
போடுகிறார்கள்?இவர்கள் பழம் என்றால்
என்ன?காய் என்றால் என்ன?என குழம்பியபடி
“அப்படின்னா என்னம்மா? என்றேன்.

“பழம் என்றால் போன காரியம் நல்லபடியா
முடிந்ததது என்றும்.காய் என்றால் போன
காரியம் சரிவர முடியவில்லை என்றும்
அர்த்தம்”.என்றார்கள் ஆனா பாட்டி.

“நீங்க பழம்னு சொன்னீங்களே,அப்படின்னா போன காரியம் நல்லபடியா முடிஞ்சுபோசாம்மா? என்றேன்.

“ஆமாண்டி கண்ணு, ரொம்ப பெரிய வீடாக வசதியாக இருக்கிறது.உனக்கும் விளையாட நிறைய பெண் குழந்தைகள் உன் வயதில் இருக்கிறார்கள்..இதை கேட்ததும் சந்தோஷத்தால் என்மனம் துள்ளி குத்தித்தது.வெளியே ஓடிச்சென்று ராஜம் அக்காவிடமும், பக்கத்து போர்ஷனில் இருப்பவர்களிடமும் உரத்த குரலில் விஷயத்தை கூறிவிட்டு மறுபடியும் உள்ளே ஓடி அம்மாவும், ஆனா பாட்டியும் பேசியதை தொடர்ந்து ஆர்கவத்துடன் கேட்டு கொண்டிருந்தேன்.

“தண்ணீர் வசதி எப்படி?” என ஆனா பாட்டி கேட்டார்கள்.

“பரவாயில்லை மாமி,சமையலறை கீழே இருக்கிறது. சமயலறைக்கு உள்ளேயே குடிதண்ணீருக்கான கைபம்பும்

உள்ளது.சமயலறைக்கு எதிரே குளியலறையும் ,அதை ஒட்டி ஒரு கிணறும் இருக்கு.மாடியில் இரண்டு படுக்கை அறையும் ஒரு வரவேற்பறையும் ,பெரிய மொட்டை மாடியும் இருக்கு.ஒரு படுக்கை அறையை ஒட்டி டாய்லெட் இருக்கு .அதற்கு மாட்டும் தண்ணீரை கீழேயிருந்து எடுத்துசென்று ஒரு ட்ரம்மில் நிரப்பிகொள்ளவேண்டுயதுதான்.அது மட்டுமே அந்த வீட்டில் சற்று குறையாக இருக்கிறது.மற்றபடி எல்லாவித வசதிகளும் உள்ளது.குழந்தைகள் பள்ளிக்கூடம் பக்கத்து தெருவிலேயே இருக்கிறது.
கடைகள்,கோவில்கள் எல்லாம் நடைதூரத்திலேயே இருக்கிறது.”என்றார்கள் அம்மா.

“ஏன் கீழ் போர்ஷனா பார்த்தா என்ன?ஏன் எப்பவும் மாடியிலேய வீடு பார்கறீங்க?” என அலுத்துக்கொண்டே கேட்டார்கள் பாட்டி.

“மாடியிலுள்ள போர்ஷன் எங்களிருவருக்கும் மிகவும் பிடித்திருக்கிறது மாமி,ஏன் என்றால்

மொட்டை மாடி இருந்தால் துணி காயவைக்க,குழந்தைகள் ஓடிவிளையாட, காலையிலும் சாயங்காலமும் மொட்டை மாடியில் காத்தாட நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டிருக்கலாம்.கீழ் போர்ஷனாக இருந்தால் வீட்டுகுள்ளேயே அடைந்து கிடக்கவேண்டும்". என்றார்கள் அம்மா.

அப்பா எதுவும் பேசவில்லை.செய்தித்தாளை படிப்பதில் மும்முரமாக இருந்தார்கள்.

"எப்போது இந்த இடத்தை காலி செய்ய போகிறோம்" என பாட்டி கேட்டார்கள்.

"தெரியாது மாமி,முன்பணம் நிறைய கொடுக்கவேண்டும், மாதம் ரூபாய் எழுபத்து ஐந்து வாடகை.ஊருக்கு அப்பாவுக்கு கடிதம் போட்டு ஆலோசனை கேட்கவேண்டும்.வீட்டுகாரர் நம்ம வகுப்பை சேர்ந்தர் .சைவ வெள்ளாளர் ,எனவே வீட்டை நமக்கே வாடகைக்கு கொடுக்க முடிவு செய்துவிட்டார்.எனவே இப்போதைக்கு ரூபாய்

ஐம்பது முன்பணமாக கொடுத்துவிட்டு வந்திருக்கிறோம்.அப்பாவை கேட்டுவிட்டு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என தெரிந்துகொண்டு,பிறகு மீதியை கொடுக்கலாம் என இருக்கிறோம்.இதற்கு முன் இந்த வீட்டு ஓனரிடம் முன்கூட்டியே விஷயத்தை சொல்லி விடவேண்டும்."என்றார்கள் அம்மா.

அம்மா ,ஈஸ்வரன் தாத்தாவுக்கு மறுநாளே கடிதம் எழுதி போட்டுவிட்டு .தாத்தாவின் பதிலுக்காக ஆவலுடன் காத்திருந்தார்கள்.ஒவ்வொரு நாளும் தபால்காரர் வந்தால் ,தாத்தாவிடமிருந்து கடிதம் வந்ததா என ஆவலுடன் கேட்பார்கள்.அம்மாவின் கடிதம் கண்டவுடனேயே தாத்தா பதில் போட்டுவிட்டிருக்ககூடும்,தாத்தாவின் கடிதம் மிக விரைவில் அம்மாவிற்கு கிடைத்துவிட்டது.தாத்தா ஈஸ்வரன் பணத்துடன் சனிகிழமை புறப்பட்டுவருவதாக கடிதம் போட்டிருந்தார்கள். அம்மாவுக்கும்,அப்பாவுக்கும் தாத்தா எப்படியும் தவறாமல் பணத்துடன் வந்து நிற்ப்பார்கள் என உறுதியான நம்பிக்கை இருந்தததால், அப்பா

இதுபற்றி ஏதும் கவலைபடாமல், எல்லாம் அம்மா பார்த்துகொல்வார்கள் என்ற தைரியத்தில் இருந்தார்கள்.

கடிதத்தில் எழுதியதுபோலவே ,தாத்தா ஈஸ்வரன் சனிக்கிழமை காலை ஆறு மணிக்கெல்லாம் பணத்துடன் எங்கள் வீட்டு கதவை தட்டினார்கள்.உள்ளே வந்த தாத்தாவிடம் அம்மா எல்லா விவரங்களையும் கூறியதும்,தாத்தாவின் முகத்தில் சிறிது சந்தோஷத்தை பார்க்கமுடிந்தது.தாத்தாவிற்கு விவரம் கேட்டதும் மறுநாள் காலைவரை போருத்திருக்கமுடியாமல், அன்று மாலையே போயி வீடுபார்க்கவேண்டும் என அம்மாவிடம் கூறினார்கள்.

“அப்பா பக்கத்துவீட்டு சாரதி இல்லாமல் போகமுடியாது. நான் அவரை ஒரு வார்த்தை கேட்டுவருகிறேன். சாரதி சரி என்றால் இன்று மாலையே சென்று வீடு பார்த்துவிட்டு அப்படியே வீட்டு ஓனரிடமும் பேசி விட்டுவரலாம் என்று சொல்லிவிட்டு, கதவை திறந்துகொண்டு பக்கத்து போர்ஷனுக்கு சென்று,

சாரதி மாமாவிடம் பேசிவிட்டு உள்ள வந்த அம்மா தாத்தாவிடம்.

“சாரதி சரி என சொல்லிவிட்டார் அப்பா. சாயங்காலம் நாலு மணிக்கு போகலாம் என்றார்” என் கூறினார்கள் அம்மா.

அன்று மாலை நாலுமணிக்கு தாத்தாவும்,அம்மாவும்,சாரதி மாமாவும் கிளம்பி மைலாபூர் வீடு பார்க்க சென்றுவிட்டார்கள்.

திரும்பி வந்த தாத்தா அன்றிரவு எங்கள் வீட்டிலேயே தங்கிவிடுவதாக கூறினார்கள். தாத்தா ஈஸ்வரனுக்கு அந்த வீடு பரவாயில்லை என தோன்றியதால், சொந்த வீடு வாங்கும் வரை அல்லது கட்டும் வரை சிறிது காலத்திற்கு அந்த மைலாபூர் வீட்டிலிருக்கலாம் என்றார்கள்.தாத்தாவுக்கு அந்த வீடு மிகவும் பிடித்துவிட்டது என அம்மாவிடம் கூறினார்கள்.

அன்றிரவு அப்பா வந்ததும் ,விஷயத்தை அப்பாவிடம் சொல்லிவிட்டு,மறுநாள் காலையில்

சென்று ,மூன்று வருடத்திற்கான மொத்த வாடகை பணத்தையும் தாத்தா ஈஸ்வரன் கொடுத்துவிடப்போவதாகவும், சாரதி மாமாவும் சரியாக ஆறு மணிக்கெலாம் தயாராக காத்திருப்பார் என்ற விவரத்தை கூறிவிட்டு படுத்து தூங்கிவிட்டார்கள்.

மறுநாள் ஞாயிற்றுகிழமை பேசியபடி அனைவரும் கிளம்பி கொண்டிருந்தனர் புது வீடு முன்பணம் கொடுப்பதற்காக.நானும் அண்ணன் ஷானும் அவர்களுடனே அதி காலையில் எழுந்து குளித்து முடித்து விட்டு தயாராக நின்றுகொண்டு,அவர்களுடன் நாங்களும் புது வீடு பார்க்க வரவேண்டும் என பிடிவாதம் பிடிக்கவே, சரி என கூறி எங்களிருவரையும் அழைத்துக்கொண்டு.ஆனஹியையும்,தம்பி பாட்டையும் ஆனா பாட்டியிடம் விட்டுவிட்டு கிளம்பினோம்.

எங்களிருவருக்கும் ஒரே குதூகலம்.அப்பா அன்று டாக்ஸி ஏற்பாடு செய்திருந்தபடியால், அனைவரும் புதுவீட்டிற்கு டாக்ஸியில்

சென்றோம். முதலில் நாங்கள் அந்த வீட்டு ஓனர் வீட்டிற்கு சென்றோம்.அவரது வீடு மிகவும் பெரியதாக இருந்தது.டாக்ஸி அவர் வீட்டில் வாசலில் நின்றதும்,சாரதி மாமா அந்த வீடு கேட்டை திறந்துகொண்டு உள்ளே சென்று வீட்டு ஓனரை தன்னுடன் அழைத்துகொண்டு வெளியே வந்தார். வீட்டு ஓனர், அப்பாவுக்கும் தாத்தாவுக்கும் ஒரு பெரிய வணக்கத்தை சொல்லிவிட்டு மிகவும் பவ்யமாக பேசிகொண்டிருந்தார். பார்க்க மிகவும் நல்லவராக தெரிந்தார்.ஏனோ எங்களை எல்லாம் வீட்டிற்குள் அழைக்காமல் வெளியே நிற்கவைத்தே பேசிகொண்டிருந்தார்.

“நீங்கள் எல்லோரும் அந்த வீட்டிற்கு போயி காத்திருங்கள். நான் இன்னும் ஐந்து நிமிடத்தில் அங்கு வந்துவிடுகிறேன்.மீதியை அந்த வீட்டில் பேசிக்கொள்ளலாம்”என்று கூறி எங்களை அனுப்பிவிட்டு தன வீட்டிற்குள் உடை மாற்றி வர சென்றுவிட்டார்.

நாங்கள் டாக்ஸியில் ஏறி அமர்ந்ததும் நான்கு

அல்லது ஐந்து வீடு தள்ளி ஒரு பெரிய வீட்டின் முனே டாக்ஸி நின்றது.பிறகுதான் தெரிந்தது வீட்டு சொந்தகாரர் வெகுதூரத்தில் இல்லை என்று.வீட்டின் முன் டாக்ஸி நின்றதும்,நாங்கள் அனைவரும் டாக்ஸியிலிருந்து இறங்கி வெளியே நின்றுகொண்டு அந்த தெருவை ஒரு நோட்டம் விட்டோம்.

அது ஒரு குறுகிய தெரு.வீடுகள் மிக நெருக்கமாக கட்டப்பட்டிருந்தது.பார்க்க எங்கள் தாத்தா சுந்தரத்தின் பழைய வீடு இருந்த தேருபோல இருந்த்தது.ஒருவீடிற்கும் ,அடுத்தவீடிற்கும் ஒரே சுவர்தான்.எந்தவித தனிப்பட்ட சுதந்திரமும் இல்லாமல் இருந்தது.அந்த தெருவிலுள்ள முக்கால்வாசி வீடுகள் அனைத்தும் இரண்டு மாடி கட்டிடங்களாகவே இருந்தது.

தெருக்களில் சைகிள் தவிர கார்,லாரி போக்குவரத்து அதிகம் இல்லாததால் நிறைய குழந்தைகள் பயமில்லாமல் தெருவில் ஓடிவிளையாடிகொண்டிருந்தார்கள்.அனைவரும்

பார்க்க கிட்டத்தட்ட எங்கள் வயது
உள்ளவர்களாக இருந்தனர்.என்னக்கும்
அண்ணனுக்குபிறகு ம் மிகுந்த மகிழ்சியை
தந்தது.பள்ளிகூடத்திலிருந்து வந்ததும் தினமும்
தெருவில் விளையாட நிறைபேர்
இருக்கிறார்கள். போழுதுபோகவில்லையே என்ற
கவலை இனி கிடையாது என ஆனந்த பரவசம்
அடைத்தோம்,.

டாக்ஸியிலிருந்து நாங்கள் இறங்கி சுற்றிமுற்றும்
பார்த்துகொண்டிருக்கையில் அங்கு விளையாடும்
குழந்தைகளும்,அக்கம்,பக்கம் குடியிருப்பவர்களும்
எங்களை விநோதமாக வேடிக்கை
பார்த்துகொண்டிருந்தார்கள்.

வீட்டு சொந்தகாரரும் சொன்னபடி
வந்துசேர்ந்தார்.நாங்கள் அனைவரு ம்
வீட்டிற்குள் செல்ல ஆயத்தம் ஆனோம்.

வீட்டில் முன்புறம், தெருவிலிருந்து நான்கு
படிகள் ஏறியவுடன்,பாதிக்குமேல் ஜையில்
கம்பிகளை போல இரும்பினால் ஆன கம்பிகள்

போடப்பட்டும்,கீழ்பாதி வெளிர் நீல நிரல் வர்ணம் அடித்த மறக்கதவும்.அவைகள் இருபக்கமும் திருப்பதுபோல் வாசல் கதவு இருந்தது. வாசல் கதவிற்கு பக்கத்திலுள்ள சுவரும் மேல் பாதி இரும்பு கம்பிகல்லாலும்,கீழ்பாதி செங்கல்லாலும் கட்டப்பட்டிருந்தது, வாசல் கதவை திறந்து உள்ளே நுழைத்தால் மிக பெரிய ஹால் ,அது பொதுவான அறை . அதன் லெப்ட் சைடில் ஒரு பொதுவான டாய்லெட்டும், அதை ஒட்டி “வி” வடிவில் படிக்கட்டுகளும் சென்றது.சும்மார் பத்து படிகளுக்குமேல் இருக்கலாம். அவைகளை ஏறியது. மறுபடியும் இருப்புறமும் திறப்பது போல இரும்பு கம்பிகள் போட்ட நுழைவாயில் கதவுகள் இருந்தது. அதை திறந்து உள்ளே சென்றால் பெரிய வரவேற்ப்பறை. அதன் ரைட் சைடில் மறுபடியும் ஒரு நுழைவாயில்,அதை தாண்டியதும் மிக மிக பெரிய படுக்கை அறையும், அதை ஒட்டி மற்றொரு படுக்கை அறையும் இருந்தது.முதல் படுக்கை அறையில்தால் டாய்லெட் இருந்ததது.

முதல் படுக்கை அறையில் இருபுறமும் திறப்பதுபோல மிக பெரிய மரக்கதவு. அதை திறந்ததும் பின்னால் மிக பெரிய மொட்டை மாடி, அந்த மொட்டைமாடியில் ஒரு ஓரத்தில் படுக்கை அறையை ஒட்டி சதுர வடிவில் இரும்பு கம்பிகளால் போடப்பட்ட ஓர் திறந்தவெளி,கீழே உள்ள போர்ஷனில் குடியிருப்பவர்களுக்கு சூரிய வெள்ளிச்சம் தெரிவதற்காக .கீழே குனிந்து அந்த கம்பி வழியாக பார்கையில் ,கீழ் போர்ஷனில் குடியிருப்பவர்கள் எங்களை பார்ப்பது தெரிந்தது. எல்லாவற்றையும் கடந்து அந்த மொட்டை மாடியின் மறு புறத்தில், மறுபடியும் செங்குத்தான படிகள் இறங்கியதும், ஒரு மிக பெரிய திறந்த வெளி முற்றம். அந்த முற்றத்தில் படிக்கட்டை ஒட்டி எங்கள் சமையலறையும், சமையலறையின் மற்றுமொறு பக்கத்தில் சாப்பாட்டு அறையும் இருந்தது, எங்கள் சமயலறைக்கு பக்கத்தில் ஒட்டினார்போல பக்கத்து போர்ஷனில் குடியிருப்பவர்களின் சமையலறை.எங்கள் எங்கள் சமயலறைக்கு எதிர்த்தாற்போல், ஒரு ஓரத்தில் பெரிய

கிணறும், அந்த கிணற்றை ஒட்டினாற்போல் எங்களது குளியலறையும் அதற்கு அடுத்தாற்போல் பக்கத்துபோர்ஷன்காரர்கள் குளியலறையும், அதற்கு எதிர்த்தாற்போல், எங்கள் மொட்டை மாடி படிகட்டுகள் அடியே ஓர் தண்ணீர் கைபம்பும் இருந்தது.

அந்த கைபம்பை தாண்டியதும் மறுபடியும் ஒரு நுழைவாயில் .இருபுறமும் மரக்கதவுகள் போடப்பட்டிருந்தன.உள்ளே நுழைந்ததும் மிக நீளமான நீண்ட சதுர வடிவ வெராண்டா காணப்பட்டது. அந்த வேராண்டாவின் லெப்ட் சைடில் மறுபடியும் முன்றாவது போர்ஷன்காரர்களின் சமையலறையும், அதை ஒட்டி அவர்களது படுக்கை அறையும் இருந்தது. அதை தாண்டியதும் இரண்டாவது குடிதனகாரர்களின் படுக்கை அறையும் இருந்தது. அவர்கள் அறையை தாண்டியதும் அந்த நீண்ட சதுர வடிவ வெராண்ட முடிந்து ,அங்குள்ள மரக்கதவை திறந்ததும் மறுபடியும் எங்கள் போர்ஷனுக்கும் செல்லும் முப்புற படிக்கட்டும்,அந்த பொது ஹாலும்

வந்துவிடும்,பிறகு தெருவிற்கு செல்லும் வாசலும் வந்துவிடும்.

கீழே இரு குடும்பங்கள் குடியிருக்கும் அவ்வளவு பெரிய போர்ஷனில் ,நாங்கள் மேலே ஒரு குடும்பம் வடைகைக்கு போக இருந்தோம்.கீழே முதல் ரூமில் ஒரு வயதான அப்பாவும்,அம்மாவும், அவர்களது ஒரே
பிள்ளையுடனும்,மருமகளுடனும்,ஒரு பேர குழந்தையுடனும் வசித்துவந்தார்கள்.
இரண்டாவது ரூமில், அப்பா,அம்மா, இரண்டு பெண் குழந்தைகள், பிறகு அந்த அப்பாவுடைய விடோ அம்மாவும் வசித்துவந்தனர்.அந்த இரண்டாவது ரூமிற்கு மேலே தான் சூரிய வெளிச்சத்திற்காக நீண்ட சதுர வடிவேல் கம்பிகள் போட்ட திறந்தவெளி எங்கள் மொட்டை மாடியில் இருந்தது.

எங்கள் சமையலறை கதவை திறந்ததும் ஒரு மிக பெரிய சாப்பாட்டு அறையும் அதில் கை பம்பும் இருந்தது. குடிதண்ணீருக்கு நாங்கள் வெளியே போக வேண்டிய அவசியம் இல்லை, எல்லாம்

சமயலறையிலேயே இருந்தது. அதேபோல் குளியலறையை ஒட்டி கிணறு இருந்ததால். அதில் அவரவர்கள் புள்ளியையும் கயிற்றையும் உபயோகித்து தண்ணீரை இறைத்து அண்டாவில் நிரப்பிகொள்ளவேண்டியதுதான்.

பாவம் அந்த இரண்டாவது அறையில் குடியிருந்தவர்கள் ரூமிற்கு எதிரே உள்ள வேராண்டாவிற்கு, மேலுள்ள சூரிய வெளிச்சத்திற்காக வைத்திருந்த ,அந்த கம்பிபோட்ட திறந்தவெளியில் மழை பெய்தால் தண்ணீர் வந்து வேராண்டவை நனைப்பதுடன் இல்லாமல் அவர்கள் அந்த ரூமை மூடாவிட்டால் மழை தண்ணீர் வீட்டிற்குள் வந்துவிடும்.கதவை முடிவிட்டால் உள்ளே இருட்டாக இருக்கும், ஏன் என்றால் அந்த அறைக்கு ஜன்னல்கள் கிடையாது. கோடை காலத்தில் அவர்கள் கதவை மூடிக்கொண்டு தூங்க முடியாது.பார்க்க மிகவும் கஷ்டமாக இருந்தது.

எங்கள் அனைவருக்கும் வீடு மிகவும் பிடித்துவிட்டது.அந்த வீட்டிற்கு குடிபுகும் நாளை

மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தோம்.அந்த
தெருவில் குடியிருக்கும் முக்கால்வாசி
குடும்பங்கள் பிராமின் வகுப்பை
சேர்ந்தவர்களே.எதிர் வீட்டில் ஒரு முஸ்லிம்
குடும்பம் இருந்தது.அவர்களுக்கும் மூத்தபெண்
என் வயது ,அவளுக்கு ஒரு தங்கையும்
இருந்தது.எங்கள் போர்ஷனுக்கு கீழே
கிடியிருக்கும் இரு பெண்களும்,முதல் பெண் ரமா
என்வயதும்,இரண்டாவது பெண் பாமா
எங்களை விட இரு வயது இளையவ்ளுமாக
இருந்தாள் .பக்கத்துவீட்டில் என்வயது
பெண்ணின் பெயர் தேவகி. பாவம் அவளுக்கு
ரைட் சைடு கால் சற்றே ஊனமாகி
விட்டபடியால், சற்றே தாங்கி தாங்கியே
நடப்பாள்.அவளது எதிர்வீட்டில் எங்கள் வயதி
ல் ரேவதி என்ற பெண்ணும்
இருந்தால்.ரேவதியின் குடும்பம் மிகவும்
ஏழ்மையில் இருப்பது போல் தோன்றியது.

மொத்தத்தில் அந்த தெருவில் எங்கள்
பெற்றோர்கள் மட்டுமே மிகவும்
படித்தவர்களாகவும் இருவரும்

சம்பாதிப்பவர்கலாகவும் இருந்தனர்.நானும்
அண்ணன் ஷானும் இவற்றை எல்லாம் சுற்றி
பார்த்துகொண்டிருக்கையிலும், அவர்களுடன்
எல்லாம் பேசி கொண்டிருக்கையிலும் தாத்தா
ஈஸ்வரனும், அப்பா, அம்மா முவரும் நாங்கள்
குடி போக இருக்கும் போர்ஷன் எல்லா பேப்பர்
வேலைகளும் முடித்துவிட்டு ,கையெழுத்தையும்
போட்டுவிட்டு விடைபெற தயாரானார்கள்.

அந்த வீட்டில் எனக்கு மிகவும் பிடித்தது
சமையலறையும் ,மொட்டைமாடியும் தான்.
ஆனா பாட்டி பார்த்தால் அவர்களுக்கும் மிகவும்
பிடித்துவிடும் என்று என் மனதிற்குள்
நினைத்துகொண்டேன்.
ஆனா பாட்டியும் எங்களுடன் வந்திருக்கலாம்
வந்திருந்தால் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார்கள் எ

அனைவரும் ஒன்பது மணியளவில்
வீடுதிரும்பினோம்.ஈஸ்வரன் தாத்தா மதிய
உணவை சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம் ஓய்வு
எடுத்துவிட்டு சாயங்காலம் காபியை
குடித்துவிட்டு கிளம்பி

சென்றுவிட்டார்கள்.ஈஸ்வரன் தாத்தா மூன்று வருடத்திற்கு சேர்த்து மொத்தமாக வாடகையை அன்று வீடு சொந்தக்காரரிடம் கொடுத்துவிட்டார்கள்.என்பதை டாக்ஸி யில் வீடு திரும்புகையில அம்மாவும் தாத்தாவும் அப்பாவும் பேசிக்கொண்டு வந்ததிலிருந்து தெரிந்துகொண்டேன்.அம்மா இனி வீடு வாடகையை பற்றி கவலை பட தேவையில்லை .எப்படியிருந்தாலும் அப்பா கொடுக்கபோவதில்லை. எனவே தாத்தா ஈஸ்வரன் நல்ல காரியம் பண்ணியதாக என் மனதிற்குள் நிம்மதியடைந்தேன்.

தாத்தாஈஸ்வரன் கிளம்பிசென்றது, அம்மாஆனாபாட்டியிடம்

“மாமி எல்லா பணமும் கொடுத்தாகிவிட்டது.இந்த வீட்டு ஓனரிடம் கூறிவிட்டு இன்னும் ஒரு மாதத்தில் வீடு காலி செய்தாகவேண்டும்.எனவே இப்பவே கொஞ்சம்,கொஞ்சமாக பொருட்களை பையில் அல்லது பாக்ஸில் போட்டு வைக்க

வேண்டியதுதான்."என்றார்கள்.

ஆனா பாட்டியின் முகத்தில், நான் ரொம்பவும் ஆர்வத்தை பார்க்கவில்லை."சரி" என தலை ஆட்டிவிட்டு மௌனமாக தன வேலையில் தொடர்ந்து ஈடுபட்டுகொண்டிருந்தார்கள்.

அம்மா சமயலறையில் பூட்டி வைத்திருந்த ஒரு பெரிய மரப்பெட்டியை எதையோ எடுப்பதற்காக திறந்தவர்கள்,அந்த பெட்டியில் வைத்திருந்த பாதி வெள்ளி பத்திரங்களுக்குமேல் காணாமல் போனது கண்டு அதிர்ச்சியடந்தவர் களாக,

"மாமி இங்கு வந்து பாருங்கள்,பாதி வெள்ளி பத்திரங்களுக்குமேல் காணாது போல தெரிகிறது.உங்களுக்கு எதுவும் தெரியுமா?"என கேட்டார்கள்.

"எனக்கு என்னடியம்மா தெரியும்.நான் அந்த பெட்டி பக்கம் போவதே இல்லையே".என்றார்கள் முகத்தில்

பதற்றத்தோடு.

“என்ன மாமி நீங்கள்தானே வீட்டிலிருக்குறீர்கள் ,நாங்களிருவரும் பகலில் வேலைக்கு சென்று விடுகேறோம்.தெரியாது என்றால் எப்படி?”.என்றார்கள் அம்மா.

“நான் எடுக்கலேம்மா.என்னை சந்தேக படாதே.உண்மையிலேயே எனக்கு தெரியாது”என்றார்கள் பதிலுக்கு ஆனா பாட்டி.

அம்மா ஆனா பாட்டி கூறியதை நம்பியதாக எனக்கு தோன்றவில்லை.ஆனா பாட்டிதான் எல்லாம் திருடிவிட்டது போல் அவர்களிடம் பேசிகொண்டிருந்தார்கள்.ஆனா பாட்டியும் தொடர்ந்து மறுப்பு தெரிவித்து கொண்டிருந்தார்கள்.

அம்மா பதட்டத்துடன் எதையும் காதில் போட்டுகொல்லாமல் அங்குள்ள பித்தளை பாத்திரங்கள் இருக்கும் பெட்டியையும் திறந்து பார்த்ததில்.அதிலும் பாதிக்குமேல் பித்தளை

பாத்திரங்கள காணாது போகவே அம்மா மேலும் பதற்றமடைந்தார்கள்.

“பித்தளை பாத்திரங்களையும் காணவில்லையே மாமி.இதுவும் உங்களுக்கு தெரியாது என சொல்லப் போகிறீர்களா? .என அம்மா கோபமாக கேட்டார்கள்.

“ஆனா பாட்டியின் கண்களிலிருந்து நீர் அருவியாய் வழிந்தோட “சத்தியமாக சொல்றேன்,எனக்கு எதுவும் தெரியாது மங்கை.என்னை நம்பு.எனக்கு சாவி இருக்கும் இடம் கூட தெரியாது.”என்றார்கள்.

பாட்டியை பார்க்க மிகவும் பாவமாக இருந்தது,ஆனா பாட்டிதான் தனக்கு எதுவும் தெரியாது என்கிறார்களே,அம்மா ஏன் திரும்ப திரும்ப அவர்களையே குற்றவாளிபோல் குறை சொல்லிகொண்டேயிருக்கிரார்கள்.பாட்டி பொய் சொல்வதாக எனக்கு தெரியவில்லை. ஆனால் பாத்திரங்களை எல்லாம் யார் திருடியிருப்பார்கள் .என என் மனம் நினைத்தது.

அப்பா இதை எல்லாம் கேட்டுக்கொண்டு ஒன்றும் தெரியாதது போல ஏதோ புத்தகத்தை படித்துகொண்டிருந்தார்கள். அதை பார்க்கும் பொது அங்கு நடப்பதற்கும் அப்பாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லாதது போல தோன்றியது.எனக்கு. அப்பா எழுந்து வந்து என்ன? ஏது? என்று கேட்கக்கூடாதா.ஏன் இப்படி தனக்கு சம்பந்தம் இல்லாததுபோல உட்கார்ந்து இருக்கவேண்டும் ?என நான் வியப்புடன் அப்பாவை பார்த்துகொண்டிருந்தேன்.

சமயலறையில் சிறிது நேரம் அம்மா எல்லாவற்றியும் ஆராய்ந்து விட்டு ஹாலில் வந்து சற்று நேரம் ஓய்வு எடுப்பதற்காக உ ட்கார்ந்தார்கள். அப்பாவிடம் இதுபற்றி அம்மா எதுவும் பேசவில்லை.அப்பாவும் என்ன என அம்மாவை கேட்கவும் இல்லை.அம்மா முகத்தில் வெள்ளி பத்திரங்களும், பித்தளை பாத்திரங்களும் காணாமற்போன கவலை முகத்தில் தெரிந்தது,

ஆனா பாட்டி முக்கை உறுஞ்சிய படி புடவை

தலைப்பில் கண்களை துடைத் துக்கொண்டே சமையலை முடித்துவிட்டு,அம்மாவிடம் கூட சொல்லிகொல்லாமல் வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டார்கள். இந்த சமயம் பாட்டி தம்பி பாட்டை தூக்கிக்கொண்டு செல்லவில்லை. தான் மட்டும் தனியே சென்றிருந்தார்கள்.பலமணி நேரம் ஆகியும் பாட்டி வீடு திரும்பாததால் அம்மாவிற்கு பயம் ஏற்பட தொடங்கியது.

“மாமியை ரொம்ப நேரமா காணவில்லை.எனக்கு ரொம்ப பயம்மா இருக்கு.நீங்க வெளியே போயி விசாரித்து வருகிறீர்களா.நான் குழந்தைகளை பார்த்துகொள்கிறேன்”. என்றார்கள் அம்மா.

“கவலை படாதே, எங்கும் போயிருக்கமாட்டார்கள்.நம்மை விட்டால் அவர்களுக்கு வேறு யாரும் கிடையாது”. கொஞ்சம் நேரம் பேசாமல் இரு”, என்றார்கள் அப்பா சலிப்புடன்.

“பக்கத்து தெருவில் குளம் இறக்கிறது, நான் மாமியை பதற்றத்தால் ஏதேதோ

கேட்டுவிட்டேன்.இதனால் மனம் ஒடிந்து, குளத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்டால் என்ன செய்வது".எனக்கு பயமாக இருக்கிறது". என்றார்கள் அம்மா கவலயுடன்.

அப்பா மறுபடியும் "அதெல்லாம் ஒன்றும் மாமி தற்கொலை செய்துகொள்ளமாட்டார்கள். நீ கொஞ்ச நேரம் பேசாமல் இரு. "என மறுபடியும் சாவாதானமாக சொல்லிவிட்டு புத்தகம் படித்துகொண்டிருந்தார்கள்.

அம்மாமனதுகேட்காமல்
கீழேசென்றுதெரிவிலுள்ளசிலரைபாட்டியைபற்றிவி
பக்கத்துவீட்டு
ராஜம்அக்காவிடமும்அம்மாஆனாபாட்டியை
பற்றி

சொல்லி எங்காவது தேடும்படி சொல்லிட்டு மே

அம்மா கவலையுடன் வீடுதிரும்பினார்கள்.சிறிது நேரத்திற்கெல்லாம் ஆனா பாட்டியும் உள்ளே நுழைவதை பார்த்துவிட்டு நிம்மதி பெருமூச்சு

ஒன்றை விட்டுவிட்டு “எங்கு இவ்வளவு நேரம் போயிருந்தீர்கள் மாமி?என்னிடம் சொல்லிக்கொண்டு கூட போகவில்லையே”.எங்கெல்லாம் தேடுவது உங்களை”. என்றார்கள் அம்மா.

“நான் எங்கு போனால் உனக்கென்ன .நீதான் என்னை நம்பவில்லையே.நம்பிக்கை போனதும், நான் எதற்கு இங்கு இருக்க வேண்டும்?.இந்த வீட்டில் இருக்கும் ஒவ்வொரு நாளும், நீ என்னை சந்தேக படப்போகிறாய் .இன்னும் இறண்டொரு நாளில், வேறு வேலை பார்த்து கொண்டு செல்லலாம் என இருக்கிறேன்,குழந்தைகளை நன்றாக பார்த்துகொள்”,என சுருக்கமாக கூறிவிட்டு இரவு சாப்பாட்டிற்கான வேலையில் இறங்கிவிட்டார்கள் பாட்டி ஆனா.

“பொருட்களை காணவில்லையே என்ற ஆதங்கத்தில் ஏதேதோ கேட்டுவிட்டேன். அதற்காக நீங்கள் வீட்டை விட்டு போக வேண்டுமா என்ன.”என மிகவும் கெஞ்சுவது

போல கேட்டார்கள் அம்மா.

“சந்தேகம் என்று ஏற்பட்ட பிறகு இனி இந்த வீட்டில் நான் இருப்பது எனக்கு மரியாதை இல்லை. இன்றே கிளம்பி போய்விட்டிருப்பேன் ,ஆனால் குழந்தைகளுக்காக இன்னும் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு இருந்துவிட்டு போகலாம் என இருக்கிறேன்.” என பாட்டி திட்டவட்டமாக கூறியதும் அம்மாவின் முகம் வெளுத்தது.

அப்பா எதுவும் பேசாமல் உட்கார்ந்து எல்லாவற்றையும் கேட்டுகொண்டிருந்தார்கள்.அப்பாவின் முகமும் பாட்டியின் பேச்சில் வாடியது.

அதன் பிறகு ரூமில் அமைதி நிலவியது, சாப்பிட்டு படுக்கும் வரை யாருமே எதுவும் பேசவில்லை,என் மனமும், அண்ணன் ஷானின் மனமும் மிகவும் கஷ்டப்பட்டது, பாட்டி ஆனா இல்லாமல் எப்படி காலம் தள்ளபோகிறோம். பாட்டி இல்லாமல் வீட்டை கற்பனை

செய்துகூட பார்க்க முடியவில்லை, ஆனா பாட்டி புது வீட்டை பார்க்காமல் போகிறார்களே .ஆனா பாட்டி எப்படி தம்பி பாட்டை பிரிந்து இருப்பார்கள் .தம்பியை பிரிந்து அவர்கள் இருந்ததே இல்லையே.என்றெல்லாம் எங்கள் இருவரின் மனமும் வேதனை பட்டது,

யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.எப்படி பாத்திரங்கள் எல்லாம் காணாமல் சென்றது என்று,இந்த வீட்டிற்கு வரும் போது எல்லா பாத்திரங்களும் இருந்தது, வந்து ஒரு வருடத்திர்கெல்லாம் காணாமல் போய்விட்டதே என்று அம்மாவின் மனம் கஷ்டபட்டது,

வீடு காலி செய்ய இன்னும் சரியாக சில நாட்களே இருந்தது,அம்மா தாத்தா ஈஸ்வரனுக்கு எல்லா விவரங்களையும் கடிதம் மூலம் எழுதி தெரிவித்து ,எங்கள் வீட்டுடன் தங்குமாறு விரைவில் ஒரு வேலையாளை ஏற்பாடு செய்து தருமாறு கேட்டிருந்தார்கள்.

அம்மாவால் எங்கள் நால்வரையும் பார்த்துகொள்ளமுடியாது என்பதால் தாத்தா நிச்சயமாக எப்படியும் ஒரு வேலையாளை புது வீட்டிற்கு போகும்போது கொண்டுவந்து விட்டு விடுவார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை அம்மாவிற்கு இருந்தது.

ஆனா பாட்டி வீட்டை விட்டு செல்லவதை உறுதியாக சொல்லிவிட்டார்கள். என் மனம் மேலும் வேதனை அடைந்தது,ஆனா பாட்டியை யார் பார்த்துகொல்வார்கள்?பாவம் பாட்டிக்கு யாருமே இல்லையே.எங்கு போயி தங்குவார்கள்?.இந்த வயதான காலத்தில் பாட்டி இறந்துவிட்டால் நமக்கு எப்படி தெரியும்?யார் சொல்லுவார்கள்?ஆனா பாட்டி போவதை அப்பா ஏன் தடுக்கவில்லை.அம்மா அவ்வளவு கெஞ்சியும் ஆனா பாட்டி ஏன் பிடிவாதமாக வீட்டை விட்டு போக முடிவு செய்து விட்டார்கள்?இவ்வளவு கேள்விகளுக்கும் என் இளம் மனதில் எழுது நின்றதுதான் மிச்சம். அதற்கான பதில் எதுவும் அப்போது எனக்கு கிடைக்கவில்லை.

அன்று என்ன கிழமை ,நாள் என்று ஞாபகம் இல்லை.ஆனால் விடியற்காலை அது மட்டும் நினைவிருக்கிறது. அம்மா பதற்றத்துடன் பேசியது அரை தூக்கத்தில் கனவு காண்பது போல இருந்தது,

“ஐயோ, மாமியை காணவில்லையே.அவர்கள் துணிமணிகள்,பெட்டி எதுவும் இல்லை, கொஞ்சம் எழுந்து பாருங்களேன்”. என அப்பாவை உலுக்கி எழுப்பினார்கள் அம்மா.

அப்பா நிதானமாக எழுந்து பார்த்துவிட்டு,எங்கும் சொல்லாமல் போயிருக்க மாட்டார்கள்,.போன தடவை சென்றது போல் இன்னும் சில மணி நேரத்தில் திரும்ப வந்து விடுவார்கள் ,என் வீனா பதட்ற்றபடுகிறாய்”,என கூறிவிட்டு திரும்பவும் படுத்துவிட்டார்கள்.

அம்மா சுற்றி முற்றி எங்கும் விசாரித்து பார்த்ததில், யாரும் ஆனா பாட்டியைக் பார்த்ததாக கூறவில்லை. ஆனா பாட்டி இல்லாததால் அம்மா அன்று வேலைக்கு

போகமுடியாமல் போய்விட்டது,எனவே லீவு போட்டுவிட்டு எங்களுடன் வீட்டிலிருந்தார்கள்.

பல மணி நேரங்கள் சென்றும் ஆனா பாட்டி வீடு திரும்பவில்லை.பாட்டியின் உடமைகள் எதுவும் வீட்டில் இல்லாததால் இனி ஆனா பாட்டி திரும்பி வரப்போவாதில்லை என எல்லோருக்கும் உறுதியாயிற்று.அன்று முழுதும் அம்மாவும், ராஜம் அக்காவும் பல இடங்களில் விசாரித்தும், ஆனா பாட்டி சென்ற இடம் பற்றி தகவல் தெரியவில்லை.

ஒரு வாரத்திற்குமேல் ஆயிற்று.அம்மாவோ ,அப்பவோ வீட்டிலிருந்து எங்களை பார்த்துவந்தார்கள்.சில சமயம் ராஜம் அக்கா எங்களை பார்த்து கொண்டார்கள்.இப்போது ராஜம் அக்கா மிகவும் உதவியாக இருந்தார்கள.ஆனா பாட்டி திரும்பி வரும் அறிகுறியே தென்படவில்லை.

எப்படியோ இரு வாரங்கள் ஆனா பாட்டியில்லாமல் எங்கள் பெற்றோர்கள்

எங்களை சமாளித்து வந்தார்கள்.

11

அத்யாயம்-பதினொன்று

புது வீட்டிற்கு செல்லும் நாளும் வந்தது,வீடு காலி செய்யும் ஆட்கள் வந்து ஒன்றன்பின் ஒன்றாக பொருட்களை வானில் ஏற்றிகொண்டிருந்தார்கள்.அந்த சமயம் அப்பா மத்தியானம் சாப்பாட்டை ஹோட்டலிலிருந்து வாங்கிவந்தவுடன் அனைவரும் சாப்பிட்டுமுடித்துவிட்டு ,கிளம்பதயாராகைவிட்டோம்.அப்பா டாக்ஸி அழைத்துவர சென்றுவிற்றிருந்தார்கள். அப்போது ராஜம் அக்கா எங்களை வழியனுப்ப வீட்டிற்கு வந்திருந்தார்கள்.அம்மாவும் ராஜம்

அக்காவும் மிகவும் அழுதார்கள் அக்கா எங்களியம் கட்டிபிடித்து முத்தமிட்டு விட்டு ,'லீவு நாளில் எல்லோரும் என்னை வந்து பார்க்கவேண்டும்"புரியுதா? என்றார்கள்.

"கண்டிப்பா நீ புதுவீட்டிற்கு வரவேண்டும் ராஜம்.உனக்கு கல்யாணம் என்றால் தவறாமல் எங்களுக்கு பத்திரிகை அனுப்பு.எங்கிருந்தாலும் நாங்க வந்துவிடுகிறோம்.நாங்க எங்கிருந்தாலும் நீ காலையில் வழக்கமாக பாடும் பாடல்களையும், எங்களுக்கு செய்த உதவியையும் எப்பவும் நினைத்துக்கொண்டே இருப்போம்.நான் வேலை செய்யும் பள்ளிக்கூடம் இங்குதானே இருக்கிறது.நீ இப்பவேண்டுமானாலும் அங்கு வந்து என்னிடம் பேசிவிட்டு போகலாம்.ஆதில் எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை".என அம்மா ராஜம் அக்காவிடம் கூறிய வண்ணம் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துக்கொண்டே எங்களிஎல்லாம் தயார் செய்கையில் ராஜம்அக்காவும் அம்மாவுக்கும் உதவிசெய்து கொண்டே கண்களில் வடிந்த கண்ணீரை தன

முந்தானையால் துடைத்துவிட்டுகொண்டே இருந்தார்கள்.

இதற்குள் டாக்ஸி கொண்டுவர சென்ற அப்பாவும் திரும்பிவிடவே அனைவரும் பக்கத்து போர்ஷனில் குடியிருப்பவர்களிடம் போய்வருகிறேன் என சொல்லிக்கொண்டு கீழே இறங்கி சென்று டாக்ஸியில் ஏறி உட்கார்ந்தோம்.ராஜம் அக்காவிடமிருந்து பிரிய மனமில்லாமல் போய்வருகிறோம் என கூறியவுடன் டாக்ஸி கிளம்பியது .

1964-ம் வருடம் "மே"மாத புது வீடு சென்றோம்.மறுபடியும் எங்கள் பொருட்கள் ஏற்றிய வான் முன்னே செல்ல எங்கள் டாக்ஸி பின்னால் தொடர்ந்தது. அம்மாவிற்கு வருத்தம் ஆனா பாட்டி இல்லாமல் புது வீட்டிற்கு போகிறோமே என்று. புறப்படிவதற்கு முன் எல்லோரிடமும் ஆனா பாட்டி ஒருவேளை திரும்பி வந்தால் எங்களை வீட்டு முகவரியை கொடுத்து அங்கு அவசிச்யம் வரும்படி சொல்லிவிட்டு தான் வந்தார்கள்.பாட்டி எங்கு

போனார்கள் என்று யாருக்குமே தெரியவில்லை. அது மிகவும் புரியாத புதிராகவே இருந்தது. வெள்ளி சாமான்களை யார் எடுத்துசென்றார்கள்?. பாட்டி எங்கு போனார்கள்?எல்லாமே மாயையாக இருந்த்தது.

புதுவீட்டிற்கு சென்றடைந்ததும் அப்பாவும்,அம்மாவும் மிகவும் பிசியாகி விட்டார்கள். பாட்டி இல்லாததால் அம்மாவிற்கு துணையாக அப்பாதான் எங்களை பார்த்துகொல்வதிளிருந்து ,கடைக்கு போவது வரை அன்று முழுதும் இருவரும் மிகவும் பிசியாக இருந்தார்கள். ஆனஹி அம்மாவுடன் இருந்தாள் .நான்.அண்ணன் ஷான்,தம்பி பாட் மூவரும் தெருவிற்கு சென்று மற்றவர்களுடன் விளையாடிகொண்டிருந்தோம்.

அம்மாதம் கோடைவிடுமுறை என்பதால் அம்மாவும், அப்பாவும் வேலைக்கு செல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை.எங்களுக்கும் தெருவில் விளையாட நிறைய பேர் எங்கள் வயதில் இருந்ததால்

அம்மாவுக்கும் சற்று தொல்லை கம்மியாக இருந்தது. நாங்கள் முவரும் தெருவில் விளையாடுவதால் ஆனஹியுடன் அம்மா வீட்டில் சற்று ஓய்வு எடுத்துகொள்ள வசதியாக இருந்தது.

புதுவீட்டிற்கு வந்தது முதல் அப்பா எங்களை பள்ளிக்கூடம் சேர்ப்பதற்காக ஒவ்வொரு ஸ்கூலாக சென்று பதிவு செய்து வந்தார்கள்.அம்மா எங்களுடன் வீட்டில் தங்கியிருந்தார்கள்.வீட்டில் எல்லா வேலைகளும் அம்மாவே தனியாக செய்ய வேண்டிய நிலை.ஆனால் எப்படியோ சமாளித்துவந்தார்கள்.

நாங்கள் செல்லு பள்ளிக்கூடம் பக்கத்து தெருவிலேயே இருந்த்தது. தினமும் நானும் அண்ணனும் நடந்தே பள்ளிக்கூடம் சென்றுவிடலாம்.தம்பி பாட்டின் பள்ளிக்கூடம் மட்டும் சற்று தூரத்தில் இருந்தது. அவன் பஸ்சில்தான் ஸ்கூலுக்கு போகமுடியும்.இல்லையென்றால் சைக்கில் ரிக்க்ஷாவில் செல்லவேண்டும்.ஆனால் அப்பா

தினமும் தம்பியை தன சைக்கிளில்
கொண்டுபோவிடுவதாக அம்மாவிடம்
சொல்லிகொண்டிருந்தார்கள்.

இதற்கிடையில் சிதம்பரத்திலிருந்து தாத்தா
ஈஸ்வரனிடமிருந்த அம்மாவிற்கு கடிதம் ஒன்று
வந்திருந்தது. அதில் நாற்ப்பது வயதுள்ள ஒரு
அம்மாவை சமையலுக்கு ஏற்பாடு
செய்திருப்பதாகவும் அவர்களை கூடிய சீக்கிரம்
அழைத்துவரபோவதாகவும் தெரிவித்திருந்தார்கள்.

அம்மாவுக்கும் ,அப்பாவிற்கும் கூட வேலைக்கு
செல்லும் பஸ் ஸ்டாப் பத்து வீடு தள்ளி
இருந்ததால் அதிக தூரம் பஸ்ஸ்டாப்புக்கு நடக்க
தேவை இல்லை .

தினமும் தெருவிற்கு சென்று விளையாடுவது
மிகவும் நன்றாகவே இருந்த்தது. அண்ணன்
ஷான் சில சமயங்களில் தன் சிநேகிதர்களை
எங்கள் மாடிக்கு அழைத்துவந்து பட்டம்
பறக்கவிட்டு விளையாடி கொண்டிருப்பதை
நாமும் ,பாட்,மற்றும் ஆனஹி உட்கார்ந்து

வேடிக்கை பார்த்துகொண்டிருப்போம்.

அந்த தெரிவில் முக்கால்வாசி குடும்பத்தார்கள் பிராமண வகுப்பை சேர்ந்தவர்கள்.அவர்கள் மற்ற வகுப்பு ஆட்களுடன் பேசுவது கிடையாது.மேலும் மற்ற வகுப்பு காரர்களை அவர்கள் வீட்டு வாசற்படியை கூட மிதிக்க அனுமதிக்கமாட்டார்கள்.பிராமணர்கள் எவ்வளவு ஏழ்மையில் இருந்தாலும்கூட அவர்கள் தாங்கள் உயர்ந்த பராமணர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்ற பெருமை இருந்துவந்தது.

எதிர் வீட்டிலிருந்த இரண்டு முஸ்லிம் பெண்களுடன் அந்த தெருவிலுள்ள யாரும் விளையாடுவதில்லை.என்னதான் அவர்களிடம் பணம் இருந்தாலும் அவர்கள் முஸ்லிம் இனத்தவர் என்பதால் மற்ற பிராமண குழந்தைகள் அவர்களுடன் விளையாடுவதில்லை.

பாவம் அந்த இரண்டு பெண்களும் அவர்கள் வீட்டின் முனே உள்ள திண்ணையில் உட்கார்ந்துகொண்டு நாங்கள் விளையாடுவதை

வேடிக்கை பார்த்துகொண்டிருப்பார்கள்.சில சமயங்களில் நானும் அவர்களுடன் உட்கார்ந்துகொண்டு பெசிகொண்டிருப்பேன்.

அந்த தெருவிலேயே எங்கள் குடும்பம் அதிக பணமுள்ள வசதியான குடும்பமாக இருந்தாலும்,அதே சமயத்தில் சைவ குடும்பமாக இருந்தாலும்,நாங்கள் பிராமணர் அல்லாதவர் என்ற ஒரே காரணத்திற்காக என்னையும் அந்த தெருவில் எந்த வீட்டிற்குள்ளும் செல்லஅனுமதி கிடையாது.அதேபோல அவர்கள் வீட்டு குழந்தைகளும் எங்கள் வீட்டிற்குள் போகவும் அனுமதி கிடையாது.

சில சமயங்களில் மழையாகவோ அல்லது அதிக வெயில்லாக இருந்தாலோ ,யாராவது ஒருவர் வீட்டிற்குள் சென்று விளையாடுவது வழக்கம்.அந்த சமயம் மற்ற எல்லா குழந்தைகளும் ஒரு வீட்டில் விளையாடும் பொது நான் மட்டும் வெளியே நின்று அவர்கள் விளையாடுவதை ஏக்கமுடன் பார்துகொண்டிருப்பேன்

என்னை உள்ளே வா என்றுகூட என் சிநேகிதிகள் அழைப்பதில்லை. ஏன் என்றால் அவர்கள் பெற்றோர்கள திட்டுவார்கள் என்ற பயமே.

நாம் எல்லோரும் ஒரே மனித இனத்தை சேர்ந்தவர்களே.அப்படியிருக்க நமக்கும் ஏன் இவ்வளவு தீண்டாமை உணர்வு.இத்தனைக்கும் இவர்களை எல்லாம் வேதா பணத்தில்,படிப்பில்,அதிகாரத்தில்,சமூகத்தில் உயந்த சைவ குடும்பத்தை சார்ந்தவர்களாக நாங்கள் இருந்ததும்,எந்த முறையில் எங்கள் குடும்பம் இவர்களுக்கு குறைச்சலாகிவிட்டது.எதற்கு நான் இவர்கள் வாசல் படியை கூட மிதிக்க அனுமதியில்லை என என் மன மிகவும் வேதனை அடைந்தது.

ஒரு சமயம் நான் தேவைபோயி எங்கள் வீட்டிற்கு கீழே குடியிருக்கும் ரமா ,பாமா வீட்டின் நுழைவாயிலில் கால் வைத்துவிட்டேன்.உடனே அவர்கள் பாட்டி துடித்துபோய் .என்னை கோபத்துடன் தூர

துரத்திவிட்டு அந்த வாசற்படியை
தீட்டுப்பட்டுவிட்டது என கூறிக்கொண்டே
தண்ணீரை விட்டு கழுவி விட்டதை பார்த்ததும்
என் மனம் அவமானத்தால் குன்றியது.மேலே
எங்கள் வீட்டிற்கு அழுதுகொண்டே சென்று
அம்மாவிடம் முறையிட்டேன்.

“இந்த தெருவில் நம்மை அப்படிதான்
நடத்துவார்கள்,நீதான் ஜாக்கிரதையாக
நடந்துகொள்ளவேண்டும் ,அழுது பிரோஜனம்
இல்லை”என எச்சரித்து அனுப்பினார்கள்.அம்மா
அக்கம் பக்கத்தாரிடம் யாரிடமும் பேசியது
கிடையாது.தான் உண்டு தன வேலை உண்டு
என்று இருந்துவந்தார்கள்.

எங்கள் வீட்டிற்கு சமைப்பதர்காகவும்,எங்களை
பார்த்து கொள்ளவும் நாற்பது வயது
மதிக்கத்தக்க ராஜாம்பா என்ற விதவை
அம்மாவை தாத்தா ஈஸ்வரன் ஊரிலிருந்து
அழைத்துவந்தது ஒரு நாள் காலையில்
விட்டுவிட்டு ,தங்கை ஆனஹியை தன்னுடன்
சிதம்பரத்திற்கு

அழைத்துசென்றுவிட்டார்கள்.ராஜாம்பா பாட்டியால் ஆனாஹ்யை பார்த்துக்கொள்ள கஷ்டமாக இருக்கும் என்று தாத்தாவுடன் அவளை அனுப்பிவிட்டார்கள் அம்மா.

அவள் சென்றது எங்களுக்கெல்லாம் மிகவும் கஷ்டமாக இருந்தது.இன்னும் கொஞ்ச நாளைக்கு அவள் அங்கு தாத்தா வீட்டில் இருந்தால் சற்றே அம்மாவிற்கு சுலபமாக இருக்கும் என்று என் பெற்றோரோகள் நினைத்தார்கள்.

அதே சமயத்தில் தாத்தாவீடில் நிறைய வேலை ஆட்கள் இருப்பதால் ஆனஹ்யை தற்சமயம அங்கிருப்பதே நல்லது என்றும் நினைத்து தாத்தா அவளை தூக்கிக்கொண்டு சென்று விட்டார்கள்.

ஜூன் மாதமும் வந்தது.எங்களனைவருக்கும் பள்ளிக்கூடம் திறக்கும் நாளும் வந்தது. சரியான சமயத்தில் ராஜாம்ப பாட்டியும் வந்தது எங்களனைவருக்கும் ரொம்பவும் வசதியாக

இருந்தது.புது பள்ளிக்கூடம் செல்லும் நாளை ஆவலுடன் எதிர்பாத்து நாங்கள் காத்திருந்த நாளும் வந்தது,நாங்கள் முரவும் சேர்ந்த ஸ்கூல் அனைத்தும் கிறிஸ்துவ பள்ளிக்கூடம்.நான் முதல் நாள் சென்றாபோது யாருடனும் பேசவில்லை.எங்கள் தெருவிலுள்ள மற்ற பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் வேறு கிறிஸ்துவர் இல்லாத ஸ்கூலுக்கு சென்றதால் நான் சென்ற ஸ்கூலில் எனக்கு தெரிந்தவர்கள் யாருமே இல்லாதது எனக்கு மிகவும் பெருத்த வருத்தமாக இருந்தது.எப்படியோ இன் வகுப்பில் எனக்கொரு சினேகிதி முதல் நாள் அன்றே கிடைத்துவிட்டாள் .மிகவும் நல்லவள். அவளின் பெர்யர் சரோஜா.அவளும் பிராமண வகுப்பை சேர்ந்தவளாக இருந்தாலும், எங்கள் தெருவில்லுலவர்கள் போல் இல்லாமல் நான் அவர்கள் வீட்டிக்குள் போக தாராளமாக அனுமதி அள்ளிக்கப்பட்டது.

சரோஜாவை எனக்கு மிகவும் பிடித்து விட்டதால்,நாங்களிருவரும் வகுப்பிலும், ஸ்கூலுக்கு வெளியிலும் ஒன்றாகவே இருந்தோம்

.படிக்கும்போதும் ஒன்றாகவே சேர்ந்து
படித்துவந்தோம்.ஹோம்வொர்க் கூட
நாங்களிருவரும் சரோஜாவின் வீட்டில்
உட்கார்ந்து கொண்டு ஒன்றாகவே செய்து
முத்துவந்தோம்.அவளின் பெற்றோர்களும் மிகவும்
நாலவர்கள்.ஸ்கூல் மிகவும் பிடிக்க ஆரம்பித்தது,
தினமும் காலையும் முதலில் யார் ஸ்கூலுக்கு
போகிறோமோ அவர்கள் அந்த ஸ்கூல் கேட்
அருகே மற்றவுக்காக காத்திருப்போம்.பிறகு
நானும்,சரோஜாவும் அந்த ஸ்கூல் கேட்
அருகிலேயே இருந்த பள்ளிகூட சர்சிற்கு சென்று
ஜீசஸை கும்பிட்டுவிட்டுதான் வகுப்பறைக்கு
செல்வோம்.நாங்களிருவரும் இந்து மதத்தை
சேர்ந்தவர்கள் ஆனாலும். கிறிஸ்துவ
பள்ளிகூடத்தில் படித்ததால் அந்த பள்ளிகூட
சர்ச்சில் தினமும் காலையிலும் மதியம்
சாப்பாட்டிற்கு பிறகும் தவறாது சென்று
ஜீசஸை கும்பிட்டுவந்தோம்.

இப்போது நான் ஆனஹி
இல்லாதது நினைத்து கவலைப்படவில்லை.ஆனஹி
என்னதான் அந்த தெருவில் சிலர் எங்களை வித்ய

ஆரம்பிதார்கள் .எங்கள் வீட்டிற்கு பக்கத்துவீட்டில்

எங்கள் வீட்டு பக்கத்து வீட்டு மாடியில் எங்கள் அம்மாவை போலவே அவர்களும் ஒரு உயநிலை பள்ளிகூட ஆசிரியர்.அந்த டீச்சருக்கு கணவர் இறந்துவிட்டார்.அவர்களுக்கு இரண்டு பெண்கள் மிகவும் வளர்ந்தவர்களும்,ஒரு விதவை அம்மாவும் இருந்தார்கள்.அவர்களும் பிராமண வகுப்பை சேர்ந்தவர்களே. ஆனாலும் நல்ல குணமுடையவர்கள் அம்மாவுடன் மிகவும் சகஜமாக பழகினார்கள். அந்த டீச்சரின் பெயர் சகுந்தலா.அம்மாவும் அடிகடி அவர்கள் வீட்டிற்கு எப்போதாவது சென்று பேசிவிட்டு வருவார்கள்.அவர்கள் வீட்டிற்குள் நாங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் . சகுந்தலா டீச்சரோ அவர்கள் அம்மவு எதுவுமே சொல்லமாட்டார்கள். அதே போல் பக்கத்துவீட்டு கால் ஊனமான பெண் தேவகியும் வீட்டிற்குள்ளும் நான் சகஜமாக எங்குவேண்டுமானாலும் செல்ல அனுமதி உண்டு.

நாட்கள் ஆகா ஆகா நிலைமை மாறி கொண்டே வந்தது.மைலாபூர் சென்றதும். நாங்களும் சற்று வளர்ந்து சற்றே விவரம் தெரிந்தவர்களாக ஆனோம் .அந்த தெருவிற்கு வந்தது முதல் ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு இந்து பண்டிகையை அங்குள்ளவர்கள் கொண்டாடிய வண்ணம் இருந்தனர்.நாங்கள் முன்பிருந்த இடங்களில் இப்படி ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு பண்டிகையை கொண்டிடாட்டி நான் பார்த்ததே இல்லை. இதுதான் முதல் முறை நான் சில இந்து பண்டிகைகளை பற்றி தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

நாங்கள் அப்பா குடும்பத்துடன் இருந்த பொது ,தீபாவளி,பொங்கல், மற்றும் விநாயகர் சதுர்த்தி மட்டுமே வீட்டில் கொண்டாடி பார்த்திருக்கேறேன்.ஆனால்இந்த தெருவில் அனேக குடும்பங்க பிராமண வகுப்பை சேர்ந்தவர்கள் என்பதால் ,அவர்கள் பல பண்டிகைகளை கொண்டாடுவதை பார்க்கும் அறிய வாய்ப்பும் எங்களுக்கு கிடைக்கப்பெற்றது.

அந்த மாதம் நவராத்திரி பண்டிகை மாதம்.நவம் என்றால் ஒன்பது .எனவே ஒன்பது நாட்களுக்குமாலைநேரத்தில் தொடர்ந்து ஒவ்வொரு வீட்டிலும் பூஜை நடந்துகொண்டிருக்கும்.அச்சமயம் பெரும்பாலான வீடுகளில் குறிப்பாக பிராமின் வீடுகளில் கொலு என கூறப்படும் ஒன்று வீட்டில் வரவேற்ப்பரையில் மறுத்தாலோ அல்லது பெட்டிகளினாலோ படிகட்டுகள் கட்டி ,அவற்றை வெள்ளை துணியால் மூடி அலங்கரித்து,ஒவ்வொரு படியிலும் பலவித பொம்மைகளை வைதது,சுற்றிலும் கலர் மின்சார விளக்கையும் சுற்றி அலங்கரித்து வைத்திருப்பார்கள்.படிகள் கட்டும் பொது மூன்று,ஐந்து,ஏழு,மற்றும் ஒன்பது என ஒற்றைபடை எண்ணில்தான்கட்டுவது வழக்கம் .ஒரு வீட்டிற்கும் மற்ற வீட்டிற்கும் இந்த படிகட்டுகள் கட்டுவதில் போட்டிஏற்பட்டுவிடும்.யார் வீட்டில் அதிக படிகள் வைத்து ,அதில் அதிக விலை உயர்ந்த பொம்மைகளையும்,அதிலும் குறிப்பாக சில அறிய

பொம்மைகளை வைத்திருக்கிறார்கள் என்பதை அந்த தெருக்களில் பெருமையாக பேசிகொள்வார்கள்.

தினமும் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள பெண்கள் வீடுவீடாக சென்று அவர்கள் வைத்திருக்கும் கொலுவிற்கு அழைப்பு கொடுத்துவிட்டு செல்வார்கள்.கையில் கும்கும சிமிழுடன் வந்து ,"எனல் வீடு கொலுவுக்கு கண்டிப்பாக வரவேண்டும்,வந்து ஒரு பாட்டு பாடவேண்டும் மாமி நீங்கள்" என தினமும் அழைக்கவேண்டும்.

அந்த ஒன்பது நாட்களும் தினமும் சாயங்காலம் ஆனால் சிறிய பெண்கள் தங்கள் விதவிதமாக அலங்கரித்துக்கொண்டு,பட்டுப்பாவாடை உடுத்திக்கொண்டு தங்கள் அம்மக்களுடன் வீடுவீடாக சென்று கொலுவை பார்த்துவிட்டு ,சாமிமீது பாட்டுகளையும் பாடிவிட்டு ,அவர்கள் கொடுக்கும் பிரசாதத்தை வாங்கிகொண்டு வீடிற்கு வந்துவிடுவார்கள்.கொலு பண்டிகை பெண்களுக்கு மாட்டும் தான் .ஆண்கள் இதில்

தலையிடுவாதோ,கலந்துகொள்வதோ
கிடையாது.

ஒன்பது நாட்களுக்கும் ஒன்பதுவிதமான
பிரசாதம் தயாரிக்கப்படும்.நாங்கள் இருந்த
தெருவில், எங்கள் வீட்டையும் , எதிர்வீட்டு
முஸ்லிம் வீட்டையும் தவிர மற்ற எல்லவீடிற்கும்
சென்று ஒருவரை ஒருவர் அழைப்பு
கொடுத்துகொண்டனர்.

அந்த தெருவிலுள்ள அக்கம் பக்கத்து வீடு
பெண்கள் அனைவரும் சாயங்காலம் ஆனது
தங்களை அழகாக அலங்கரித்து கொண்டு வீடு
வீடாக கொலுவிற்கு தங்கள் அம்மக்களுடன்
செல்வதை ஏக்கத்துடன் பார்த்துகொண்டு நான்
பார்ப்பதை பொருத்துகொள்ளமுடியாமல் ,
அம்மா என்னையும் தினமும் நிறைய தங்க
நகைகளால் அலங்கரித்து வந்தார்கள். திங்கமும்
என்னை வித விதமாக அலங்கரித்தார்கள்.அம்மா
பணமுள்ள குடும்பத்தில் இருந்து வந்ததால்
நிறைய தங்க நகைகளும், வைர நகைகளும்
வீட்டில் இருந்ததது.அவர்ற்றால் தன ஆசை தீர

என்னை அலங்கரித்து பார்த்தார்கள் அம்மா. ஒரு நாள் எனக்கு கிருஷ்ணர் போல வேஷமும், ஒருநாள் எனக்கு சரஸ்வதி போல வேஷமும், ஒருநாள் லக்ஷ்மி போல வேஷமும், ஒருநாள் முருகர் போல் வேஷமும், ஒருநாள் பார்வதி போல வேஷமும்,இப்படி பலவிதமாக என்னை அலங்கரித்து அழகுபார்த்தார்கள் அம்மா.

அம்மா என்னை அலங்கரித்து முடித்தவுடன், எங்கள் எதேறு வாசலில் பொம்மை போல் நான் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துகொண்டிருப்பதை அந்த தெருவிலுள்ள அனைவரும் பார்த்து பிரம்மித்துவிட்டனர்.நான் நிறைய நகைகள் அணித்திருந்ததால் தேர்விற்கு செல்ல கூடாது என அம்மா எனை மிகவும் எச்சரித்திருந்ததால் .நான் ஜாக்கிரதையாக வாசற்படியில் ஜன்னல் கம்பிகளுக்கு பின்னால் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துவந்தேன்.

ஓரிரு நாட்களில் அந்த தெருவிலுள்ள அனைத்து குடும்பங்களும் நான் உய்தர ஆடையும் நகைகளும் அணித்துகொண்டிருப்பதை

பார்த்ததும் ,ஒருவர் பின் ஒருவராக அவர்கள் வீட்டு கொலுவிற்கு என்னையும் அழைக்க ஆரம்பித்தார்கள்.சிறு வயதிலிருந்தே எனக்கு அதிக ரோஷம் உண்டு.மதியாதார் தலை வாசலை மிதியாதே என்று பாட்டி கமலா சொல்லி பலமுறை கேட்டிருக்கிறேன்.இப்போது என் நகைகளையும் உடைகளையும் பார்த்துவிட்டு ஏன் என்னை அழைக்கவேண்டும். பணக்காரி என்றால் தீண்டாமை போய்விடுமா?எனவே அவர்கள் அழைப்பை மறுத்தேன்.நகைகளுடன் தனியாக என்னை வெளியே வீடுகளிக்கு அனுப்ப அம்மாவும் சம்மதிக்கவில்லை.

அந்த நவராத்திரி கொலு விழா முடிந்த பிறகு அக்கம் பக்கத்து வீட்டிலுள்ள அனைவரும் என்னை அவர்கள் வீட்டிற்குள் வந்து விளையாட அனுமதி அள்ளித்தார்கள். ஆனால் கீழ்வீடு ரமா,பாமா வீட்டில் மட்டுமே என்னை வீட்டிற்குள் வர அவர்கள் பாட்டி சம்மதிக்கவில்லை. அந்த பாட்டி ஒரு சரியான சிடுமூஞ்சி.எனக்கு கீழ்வீட்டு பாட்டியை

கண்டாலே சிம்ம சொப்பனம்.எப்பவும் எங்களை அந்த பாட்டி விரட்டிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் மேல எங்கள் காற்றுகூட படகூடாது. அவ்வளவு ஆர்தோடாக்ஸ் டைப் ரமா,பாமாவின் பாட்டி.ஓர்நாள் வேண்டுமென்றே அண்ணன் ஷான் அந்த பாட்டியை தொட்டுவிட்டான். பாட்டி அலறி அடித்துக்கொண்டு நேராக குளியலறைக்கு சென்று குளித்துவிட்டு வந்து, எங்கள் அம்மாவை கூப்பிட்டு விஷயத்தை சொன்னவுடன் அம்மாவிற்கு கோபம் வந்து அண்ணன் ஷானை ஸ்கேலால் நன்றாக அடி கொடுத்தார்கள்.அதிலிருந்து எங்களுக்கு அந்த பாட்டியை கண்டால் பிடிக்கவே பிடிக்காது.

மக்களின் அற்ப குணத்தை எண்ணி வியந்தேன் அந்த சிறுவயதிலேயே.பணம் என்றால் பிணமும் வாயை பிளக்கும் என்ற பழமொழியை கேட்டிருக்கிறேன்,ஆனால் அப்போதுதான் உணர்ந்தேன், பணம் மட்டும் இருந்தால் இந்த உலகை விலைபேசி வாங்கிவிடலாம்.மனித குணத்திற்கு மரியாதை இல்லை என்பதையும் நான்றாகவே அந்த சின்னஞ்சிறு வயதில்

என்னால் உணர முடிந்தது.ஒரு மனிதன் எப்படி பட்ட குணமுள்ளவன் என்பதை தெரிந்த கொள்வதைவிட ,அந்த மனிதனிடம் எவ்வளவு பணம் பலம், படை பலம் இருக்கிறது என்பதை முதலில் தெரிந்து கொள்ளவே மக்கள் விரும்புகிறார்கள்.

மின்மினுக்கும் பூச்சி மின்சார விளக்கை பார்த்துவிட்டு அதனிடம் பறந்து சென்று மோதுவது போலத்தான் பெரும்பாலான மக்கள் பணம் ஜொலிக்கும் இடத்திற்கே காந்தசக்தி போல் ஈர்க்கபடுகிரார்கள் .அதன் பிறகு அந்த தெருவில் அவ்வளவாக எங்களுக்கு எதிர்ப்புகள் இல்லை.முதன் முதலில் நாங்கள் அந்த வீட்டிற்கு குடிவரும் சமயம் அந்த வீட்டில் கீழேயிருந்த இரு பிராமண குடும்பத்தாரும் எங்களுக்கு அந்த மேல் ப்ரோஷனை வாடகைக்கு விடகூடாது என வீட்டு ஓனரிடம் வாக்குவாதம் செய்துவந்தார்களாம் .வீட்டு ஓனர் எங்கள் சைவ இனத்தை சேர்ந்தவர் என்பதால் எங்களுக்கே கொடுக்க முடிவு செய்துவிட்டாராம்.எனவே கீழே

குடியிருந்தவர்களுக்கு சற்றே கோபம் என வீடு ஓனர் முலமாக கேள்விபட்டர்கள் அம்மாவும் அப்பாவும்.

நாட்கள் நகர்ந்தன. முன்று வருடங்கள் முன்று மாதங்களாக ஓடிற்று. இன்னும் ஆனஹி தாதாவிட்டில் சிதமபரத்திலேயே இருந்தால். ஒவ்வொரு வருடமும் கோடைவிடுமுறை சமயம் நாங்கள் சிதம்பரம் செல்லும்போது அவளை பார்ப்போம். ஆனஹிக்கு அம்மாவை நினைவில்லை. அவள் எங்கள் கமலா பாட்டியை அம்மா என்று கூப்பிட்டால். எங்கள அம்மாவை அத்தை என்று அழைக்க ஆரம்பித்தாள் .எங்களை எல்லாம் யாரோ போல பார்க்க ஆரம்பித்தாள் .அம்மாவிற்கு அதில் சற்றே வருந்தமாக இருந்தாலும் ,ராஜாம்பா பாட்டியால் எங்கள் நாலுபேரையும் பார்த்துக்கொள்ள முடியாது என்பதால் ஆனாஹி ஸ்கூல் செல்லும் வரையில் தாத்தா பாட்டியுடன் சிதம்பரத்தில் இருக்க அனைவரும் முடிவுசெஇதுவிட்டார்கல்.

சிதம்பரத்திற்கு தாத்தாவீட்டிற்கு
செல்லும்போதெல்லாம் எங்கள் மாமா
ஜகன்னாதனின் மூன்று பெண்களும் அங்கு
வருவார்கள்.கடந்த இரண்டு வருடங்களாக
நாங்கள் அனைவரும் ஒன்றாக சிதம்பரம்
போவதால் ஒருவரி ஒருவர் நான்றாக
தெரிந்துகொண்டோம்.ஒன்றாக
விளையாடினோம்.கோடைவிடுமுறை முடிந்தது
மெட்ராஸ் திரும்பும்போது பிரிய மனம்
இல்லமால் பிரிந்து செல்வோம்.

நாங்கள் சுந்தரம் தாத்தாவீடில் இருந்தபோது
இவர்களையெல்லாம் பார்த்ததாக எனக்கு
நினைவே இல்லை.அம்மாவின் அக்கா
அமெரிக்காவில் இருந்ததால் அவர்களையும்
நாங்கள் பார்த்ததே இல்லை. மாமா
ஜகன்னதனையும் அவர் குடும்பத்தாரையும்
ஒருநாளும் பார்த்ததாக நினைவில் இல்லை.

ஆனால் சுந்தரம் தாத்தா வீட்டை விட்டு வந்து
அம்மாவின் பள்ளிக்கூடம் அருகில்
குடியிருந்தபோது , ஒருநாள் அம்மாவுடன்

ஆஸ்பத்திரிக்கு சென்ற ஞாபகம் இருந்தது. அங்கு அம்மாவின் அக்கா சேது குழந்தை பிறந்து இருந்தது. அம்மா என்னை அவர்களிடம் காட்டி இவள் தான் அணிதா என்றார்கள்.பெரியம்மா சேதுவின் குழந்தை மிக குண்டாக அழகாக இருந்தது. அதை தூக்கிக்கொள்ள வேண்டும் என நான் அழுது அடம்பிடித்ததும் நினைவில் இருக்கிறது.அப்போதுதான் முதன் முறையாக பெரியம்மா சேதுவையும் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் பிறகு நாங்கள் பெரியம்மாவை சில காலங்களாக பார்க்கவே இல்லை.

1967-ம் வருடமும் பிறந்தது.நான் நான்காவது அல்லது ஐந்தாவது படித்துகொண்டிருக்கும் சமயம் ஒருநாள் குளியலறையில் அதிக நேரம் குளித்துக்கொண்டே எனக்கு பிடித்த ஒரு ஜீசஸ் பாட்டை பாடிகொண்டிருந்தேன்.அப்போது பக்கத்து வீடு மாடியில் இருக்கும் சகுந்தலா டீச்சர் நான் பாடுவதை கேட்டுவிட்டு ,சாயங்காலம் அம்மா ஸ்கூலிலிருந்த வந்தவுடன் வழக்கமாக முட்டைமாடியில் நாற்காலியில்

உட்கார்ந்துகொண்டு ஏதாவது செய்து கொண்டிருப்பார்கள். அந்த சமயம் பார்த்து சகுந்தலா டீச்சர் அம்மாவை உரத்தகுரலில் அவர்கள் போர்ஷனிலிருந்து கூப்பிட்டு "காலியில் உங்கள் குளியலறையிலிருந்து யாரோ மிகவும் அழகாக ஜீசஸ் பாட்டு ஒன்றை பாடிகொண்டிருதாள்ளே யாரு அந்த பொண்ணு"என்று கேட்டார்கள்.

"நான் வீடில் இல்லையே. என் மகள் அணிதாமட்டும்தான் வீட்டில் இருந்தாள் . நான் அவளை கூப்பிட்டு கேட்கிறேன்" என கூறிவிட்டு அங்கு வில்லையாடி கொண்டிருந்த என்னை அழைத்து.

:"காலியில் நம்ம குளியலறையில் யாராவது ஏசுநாதர் பாட்டு பாடிக்கொண்டு குளித்தார்களா?" என்று என்னிடம் கேட்டதும்.

"ஆமாம் நான்தான் அந்த பாட்டை பாடிக்கொண்டு குளித்தேன்". என்றேன்.

“நிஜமாவா சொல்றே?வேறு யாரும் நம்ம குளியலறையில் குளிதார்களா?உண்மையை சொல்லு” என திரும்பவும் என்னை நம்பாததுபோல அம்மா கேட்டார்கள்.

“நிஜமாவே நான்தான் அம்மா பாடினேன்.வேறு யாரும் இல்லை” என்றேன்.

சகுந்தலா டீச்சர் தொடர்ந்தார்கள்.”இந்த சிறிய வயதில் இவ்வளவு இனிமையாக பாடுகிறாளே, அவளை ஏன் முறைப்படி கர்நாடகா சங்கீதம் கிளாசுக்கு அனுப்ப கூடாது” என்றார்கள்.

அதன் பிறகு அவர்களிருவரும் ஏதேதோ பேசிகொண்டிருந்தார்கள்.பிறகு சகுந்தலா டீச்சர் அவர்கள் வீட்டிற்குள் சென்றது அம்மா என்னை அழைத்து.

“எங்கே காலையில் நீ குளியலறையில் பாடிய பாட்டை பாடு பார்க்கலாம்”என்று கேட்டார்கள்.

அம்மா சொல்லி முடிப்பதற்குள் நான் மிகவும் சுவாரஸ்யமாக அந்த பாட்டின் சில வரிகளை

பாடி முடித்ததும்,அம்மாவால் நம்ப முடியவில்லை.முதல் முறையாக நான் பாடுவதை அன்றுதான் கேட்டறிந்த அம்மா அசந்துபோய் எனக்கு பாட்டில் மிகுந்த ஆர்வம் இருப்பதை உணர்ந்து உடனே மறுபடியும் பக்கத்து வீட்டு சகுந்தலா டீச்சரை கூப்பிட்டு,

“என் பெண் அனிதாதான் பாடியிருக்கிறாள். உங்களிடம் பேசிவிட்டு அவளை கூப்பிட்டு பாடசொன்னேன் .காலையில் பாடிய பாட்டை பாடிகான்பித்தாள் .அவளுக்கு பாட்டில் ஆர்வம் இருப்பதை நீங்கள் சொல்லித்தான் எனக்கே தெரியவந்ததது. ரொம்பவும் தாங்க்ஸ் உங்களுக்கு.இந்த ஏரியாவில் நல்ல பாட்டு டீச்சர் யாரும் உங்களுக்கு தெரியமா?” என்று கேட்டார்கள்.

“நம் தெருவிற்கு இரண்டு தெரு தள்ளி அனிதா படிக்கும் பள்ளிக்கூடம் அருகிலேயே நல்ல பெயர் போன டீச்சர் இருக்கிறார்கள்.அவர்களிடம் இந்த மைலாபூர் ஏரியாவில் உள்ள நிறைய பெண் குழந்தைகளும்,ஆன் குழந்தைகளும், வாய்

பாட்டும்,வீணையும் கற்றுவருகிரார்கள்.ஆனால் அந்த டீச்சர் காலையில் ஆறு மணி முதல் ஏழு முப்பது வரை தான் வகுப்பு நடத்துகிறார்கள். சாயங்காலம் கிளாஸ் கிடையாது" என்ற விவரத்தை அம்மாவிற்கு சொல்லி அந்த பாட்டு டீச்சரின் முகவரியையும் அம்மாவிடம் கொடுத்தார்கள்.

காலையில் ஆறுமணி கிளாஸ் என்றால் என்னை ஐந்து முப்பதுக்கே எழுப்பி தயார் செய்து அனுப்பவேண்டுமே என்று அம்மா சற்றே யோசித்தார்கள்.அந்த சிறிய வயதில் காலையில் ஐந்து மணிக்கு எழுந்துசெல்வது என்பது நடக்ககூடிய காரியமா? எனவும் நினைத்து விட்டு ,அது நடக்க கூடிய காரியம் இல்லை என ராஜாம்பா பாட்டியிடம் சொல்லிகொண்டிருன்ததி நான் கேட்டுவிட்டு."அம்மா எனக்கு கவலயில்லை நான் கலையில் எழுந்து போகிறேன் என்னை எழுப்பிவிடுங்கள்" என்றேன்.

எனக்கு பாட்டு கற்றுகொல்வதில் ஆர்வம்

இருந்ததால் அம்மாவிற்கு தைரியம்
கொடுத்தேன்.நான் கொடுத்த தைரியத்தில்
அம்மா மறுநாளே அந்த பாட்டு டீச்சரை பார்த்து
சுருக்கமாக பேசிவிட்டு வந்தார்கள்.

அதன் பிறகு அந்த வார கடைசியில் ஒருநாள்
சனிக்கிழயமை சாயங்காலமாக அம்மா
என்னையும் அழைத்துக்கொண்டு பாட்டு
டீச்சரை பார்க்க அவர்கள் வீட்டிற்கு
சென்றோம்.அவர்கள் வீட்டு வாசல் கதவு
திறந்தே இருந்தது.

“வீட்டில்யாரும்இருக்கீங்களா?”
என்றஅம்மாவின்குரல்கேட்டுஉள்ளிருந்துவெளியேவ
“யாருங்க? என்னவேணும்? என்றாள்

“பாட்டு டீச்சர் ருக்மணிம்மாவை பார்க்கணும்”
என்றார்கள்.

“அவர்கள் சமயலறையில் வேலையை
இருக்காங்க. என்ன விழயமா பாக்கவந்திருகீங்க
“என்றாள் .

” பட்டு கிளாசில் என் பெண்ணை சேர்க்க
வைத்திருக்கேன் .இரண்டு நாட்களுக்கு முன்
அவர்களிடம் பேசிவிட்டு சென்றேன்.என் பெயர்
மங்கை என்று சொல்லு அவர்கள்
தெரிந்துகொள்வார்கள்” எண்டார்கள் அம்மா.

“சரி இருங்க,
நான்போயிஅவங்ககிட்டேசொல்லிட்டுவரேன்”
எனகூறிவிட்டுஉள்ளேசென்றவள்சிறிதுநேரதிர்கெல

“இப்படி வெளியே திண்ணையில்
உட்காருங்க.அம்மா வந்துடுவாங்க” என
அங்குள்ள திண்ணையை எங்களுக்கு
காண்பித்துவிட்டு மறுபடியும் உள்ளே
சென்றுவிட்டாள். அவள்
பார்பதற்கு அந்த வீட்டில் வேலை செய்யும் பெ

பாட்டு டீச்சர் சிறிது நேரத்தில் வெளியே வந்து
“வாங்க என்ன வேண்டும்?” என்றார்கள்.

“இவள்தான் என் பெண் அனிதா.ஒன்பது
வயதாகிறது.பாட்டு கற்றுக்கொள்ளவேண்டும்

என்று ஆர்வமாக இருக்கிறாள்.அவளை பாட்டு கிளாசில் எப்போதிலிருந்து நான் அனுப்பலாம்?" என அம்மா கேட்டார்கள்.

"நீங்கள் பிராமினா?" என்று கேட்டார்கள் அந்த டீச்சர்.

"இல்லை, ஆனால் சைவ குடும்பத்தை சேர்ந்தவர்கள்.நான் ஒரு உயர்நிலை பள்ளி ஆசிரியராக இருக்கிறேன்.அணித அப்பா கல்லூரியில் ஆசிரியராக வேலை பார்கிறார்.நானும் சிறு வயதில் சிறிது கர்னாடக சங்கீதமும். பாரத நாட்டியமும் கற்றிருக்கிறேன்.அதனால் சங்கீத ஞானம் எனக்கு கொஞ்சம் உண்டு" என்றார்கள் அம்மா.

சற்று நேரம் யோசித்துவிட்டு பாட்டு டீச்சர் சரி என தலையாட்டிவிட்டு,"நாளையிலிருந்து அவளை காலையில் சரியா ஆறு மணிக்கெல்லாம் இங்கு இருக்குமாறு அனுப்பிவிடுங்கள் "என்று சொல்லி விட்டு எங்களை அனுப்பிவிட்டார்கள்.

இந்த வீட்டிற்கு வந்தது முதல் வீட்டில் எந்த பிரச்சனையும் இல்லமால் நா=நன்றாக ஓடிகொண்டிருந்தது. மாமா ஜகந்நாதன் தன குடும்பத்துடன் வருடம் ஒருமுறை தீபாவளி சமயம் எங்கள் வீட்டிற்கு வந்து அம்மாவையும் எங்களையும் பார்த்துவிட்டு அம்மாவிற்கு தீபாவளிக்காக ஒரு புடவையும் எடுத்துகொடுத்துவிட்டு செல்வார்கள்.

அதேபோல் அம்மாவின் பெற்றோர்களும் நினைத்த சமயமெல்லாம் எங்கள் வீட்டிற்கு வந்து சென்றார்கள். ஆனால் ஆனஹியை மட்டும் தாத்தா பாட்டி எப்போதுமே தன்னுடன் அழைத்துவந்ததில்லை.எங்கள் அனைவருக்கும் மிகவும் சந்தோஷமாக இருந்தது.

அம்மாவின் அக்கா சேது 1955-ம் வருடம் அமெரிக்காவிற்கு சரித்திர ூச்சராக,வாஷின்டன் ஸ்டேடியுள்ள க்லார்க்ச்டன் உயர்நிலை பள்ளிக்கு வேலை பார்க்க சென்றிருந்தார்கள்.அங்கு 1955-58 வருடம் வரை இருந்த்டுவிட்டு அங்கு

தொடர்ந்து இருக்க பிடிக்காமல் திரும்பவும் இந்தியா வந்து ,தமிழ் நாட்டில் அரசாங்க கல்வி இலாகாவில் அதிகாரியாக வேலை பார்த்துவந்தார்கள்.வேலையிலும் ,பணத்திலும், செல்வாக்கிலும் ,படிப்பிலும் நல்ல செல்வாக்கு பெற்றிருந்த பெரியம்மா சேது பல வருடங்களாக குழந்தை இல்லாமல் என் தங்கை ஆனாஹி பிறந்த சமயம் தான் அவர்களுக்கு ஓர் ஆன் குழந்தை பிறந்தது. அந்த குழந்தை பிறந்த்ததை பார்க்கத்தான் நான் அம்மாவுடன் ஹாஸ்பிடலுக்கு சென்ற ஞாபகம் இருக்கிறது.

எல்லாம் நான்றாக செல்கையில் அப்பா மாட்டும் மாறாமல் அப்படியே இருந்தார்கள். தினமும் இரவு பன்னிரண்டு மணியளவில் தான் வீட்டிற்கு வருவார்கள். வேலை முடித்து நேராக அங்குள்ள ஒரு கிளப்புக்கு சென்று சீட்டாடிவிட்டு வருவார்கள்.சனிகிழமை.ஞாயிற்றுகிழமையில் ஹார்ஸ் ரேசுக்கு சென்றுவிட்டுவார்கள். இருவரு சம்பாதிக்கும் பணம் அப்பாவின் சூதாட்டத்திற்கே போதவில்லை.

வீடு எல்லா செலவுகளும் அம்மாவின் பெற்றோரோ வீட்டிலிருந்துதான் வந்துகொண்டிருந்தது.அம்மாவும் அப்பாவை எதையுமே கேட்பதில்லை.தாத்தா ஈஸ்வரன் வீட்டிலிருந்து வருடத்திற்கு வேண்டிய அரிசி,பருப்பு வகைகள், தேங்காய்,எண்ணெய் ,பலகாரங்கள் மற்றும் நிறைய பொருட்கள் லாரியில் வந்து இறந்தி விடும்.

லாரியில் இவ்வளவு சாப்பாட்டு பொருட்களும் வந்துஇரங்குவதை அந்த தெருவில் குடியிருப்பவர்கள் பார்த்து அசந்து விட்டனர்.இவ்வளவு பெரிய இடந்த்தை சேர்ந்தவர்கள் எப்படி இங்கு வந்து வாடகை வீட்டில் குடியிருக்கிறார்கள் என்று.இப்படி அவர்களுக்குள் பேசிக்கொள்வதை என் சிநேகிதி என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறாள்.

அதோடில்லாமல் எங்களை பார்க்கவரும் உறவினர்கள் பெரிய பெரிய காரில் வருவதை பார்த்த அந்த தெருவில்லுள்ளவர்கள் எங்களிடம் அதன் பிறகு மிகவும் மரியாதையும் மதிப்பும்

வைத்து நடத்திவந்தார்கள்.அம்மாவின் பெற்றோர்கள் உதவியால் குடும்பத்தில் எந்தவித ப்ரச்சனயுக் இல்லாமல் காலம் நன்றாகவே நகர்ந்து சென்றது.

பாட்டி கமலா வருடத்திற்கொருமுறை எங்கள் வீட்டிற்கு வந்திருந்து எங்களுக்கு வருடத்திற்கு வேண்டிய
துணிமணிகள்,செருப்பு,ஷூஸ்,நகைகள்,ஸ்கூல் புத்தகங்கள். எங்கள் வீடு சமையல் அம்மா ராஜாம்பாவிற்கு மாத சம்பளம் மற்றும் அவர்களுக்கு துணிமணிகள்.மற்றும் மளிகை சாமான்கள் எல்லாம் வாங்கி போட்டுவிட்டு சென்றுவிடுவார்கள்.ஆனால் பாட்டி கமலாவும், தாத்தா ஈஸ்வரனும் ஒருநாள் கூட எங்கள் வீட்டில் தங்கியதாகவோ, ஒருவேளை சாப்பாடு சாப்பிட்டதாகவே என் நினைவில் இல்லை.அம்மாவின் உறவினர்கள் அனைவரும் ஒருமணி நேரம் வந்து போவதுடன் இருந்தார்கள்.

என் மனம் பல நாட்கள் ஈங்கியது.ஏன் தாத்தா

பாட்டி எங்கள் வீட்டில் தங்குவதே இல்லை என்று. பலமுறை இந்த கேள்வியை அவர்களிடம் நான் கேட்டிருந்தும் அதற்கான பதிலை அவர்களிடமிருந்து எனக்கு கிடைக்கவில்லை

அத்யாயம் -பன்னிரண்டு

பெரியம்மா சேது இப்போதெல்லாம் எங்கள் வீட்டி
பக்கத்து தெருவிலேயே உள்ள
ஆரம்ப பள்ளிகூடத்திருக்கு சென்றுகொண்டிரு
.

. ஒவ்வொரு கோடைவிடுமுற சமயமும்
நாங்கள் முவரும், மாமா ஜகன்னாதனின் முன்று
பெண்களும் சிதம்பரத்திற்கு தாத்தா வீட்டிற்கு
ஒரு மாத காலம் சென்றுவிடுவோம். தாத்தா
ஈஸ்வரன் கோடைவிடுமுறை ஆரம்பிக்கும் ஒரு
மாதத்திற்கு முன்பே எங்க ஏழு பேருக்கும்

ட்ரைன் டிக்கெட் வாங்கிவிடுவார்கள்.
எங்களனைவருக்கும் பைனல் எக்ஸாம் முடிந்த
மறுநாளே சென்னைக்கு வந்து, எங்க ஏழு
போரையும்
அழைத்துசென்றுவிடுவார்கள்.அம்மாவும்,ஜகந்நாதன்
மாமாவும்,மாமி கமலாவும், பள்ளிக்கூடம்
திறப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்
சிதம்பரம் வந்து எங்களுடன் தங்கிவிட்டு ,பின்
எல்லோரும் ஒன்றாக சென்னைக்கு
திரும்பிவிடுவோம்.

தாத்தாவின் வீட்டில் மொத்தம் பத்து
முற்றங்களும் ,இருபததைந்து அறைகளும்
,பார்க்க மிக பெரியதாகவே இருக்கும்.ஒவ்வொரு
முற்றத்திலும் பல வேலையாட்கள் எப்பவும்
மும்முரமாக வேலை செய்து கொண்டே
இருப்பார்கள்.அதிலும் நாங்கள் போகும் நேரம்
கோடைகாலமாக இருப்பதால், ஒருமுற்றத்தில்
சில பெண் வேலையாட்கள் அப்பளம்
,வடவம்,செய்து
காயவைத்துகொண்டிருப்பார்கள்.மற்றொரு
முற்றத்தில் ஒருவர் கடபாரையில் தேங்காயை

உறித்து போட ,சிலபேர் அதை உடைத்து அந்த தேங்காய் தண்ணீரை ஒரு அண்டாவில் ஊற்றிவிட்டு அந்த உடைத்த தேங்காயை மற்றவர்களிடம் கொடுக்க, அவர்கள் அதை துண்டு துண்டுகளாக கீறி ஒரு தென்னைமர ஓலையில் செய்த தட்டியில் போட்டு வெய்யிலில் எண்ணெய் எடுப்பதற்காக காயவைத்துகொண்டிருப்பார்கள் .

இன்னொரு முற்றத்தில் சிலர் நெல்லை பெரிய பெரிய அண்டாவில் வேகவைத்து ,அதை எடுத்து முற்றத்தில் கீழே கொட்டி காயவைத்துகொண்டிருப்பார்கள்.இப்படி ஒவ்வொரு முற்றத்திலும் கும்பலாக வேலையாட்கள் ,அவரவர் வேலைகளை செய்து கொண்டிருப்பார்கள்.

இரண்டு மிக பெரிய சமயலறையில் அனைவருக்கும் சமையல் நடந்துகொண்டிருக்கும்.மறுபுறம் சாப்பாட்டு அறையில் அனைவருக்கும் சாப்பாடு பரிமாறுவது ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும்,.இரவு வரை

தாத்தாவின் வீட்டில் வேலை ஆட்கள் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டு வீடு மிகவும் கலகலப்பாக இருப்பதால் எங்கள் அனைவருக்கும் தாத்தாவீடு செல்வதென்றால் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருப்போம்.

எங்கள் ஏழுபேரையும் குளுப்பாட்ட தனி வேலைகாரர்கள் இருப்பார்கள்.தினமும் எங்களை குளிக்க வைத்து, வாசனை திரவியங்களை உடம்பில் பூசிவிட்டு,தலையில் சாம்ராணி தூபம் போட்டு காயவைத்துவிட்டு செல்வார்கள்.அதுபோல் தலை வாரவும்,தலை முடியில் பேன் எதுவும் இல்லாமல் சுத்தம் செய்யவும் தனி ஆட்கள் இருந்தனர்.

வீட்டிற்கு பின்னால் உள்ள மிகப்பெரிய தோட்டத்தில், ஒருபுறம் பூந்தோட்டமும்,அந்த பூந்தோட்டத்தை பார்த்துக்கொள்ள தோட்டக்காரரும்,அவரது மனைவியும் பக்கத்திலே சிறிய குடிசையில் தங்கியிருந்தார்கள்.அவர்கள் தினமும் காலையிலும் ,மாலையிலும்

பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி, அதில் மலரும் பூக்களை சரமாக தொடுத்து கொண்டுவந்து பாட்டி கமலாவிடம் கொடுத்துவிட்டு சென்றுவிடுவார்கள். அங்கிருந்தால் எங்களனைவருக்கும் பொழுதுபோவதே தெரியாது.எங்க ஏழு பேருக்கும் நான்கு வாரங்கள் நான்கு நாட்களாக பறந்து சென்றுவிடும்.

மாமா ஜகந்நாதனுக்கு மகன் இல்லை.மூன்றும் பெண் குழந்தைகளாக பிறந்துவிட்டது என்பதால்,தாத்தா வீட்டில் வேலை செய்யும் ஆட்களும் ,பண்ணையில் வேலைசெய்யும் ஆட்களுக்கும் மிகவும் வருத்தம்,அந்த வீட்டிற்கு ஒரு ஆண் வாரிசு இல்லையே என்று .எனவே நான் முற்றத்தில் என் மாமா பெண்களுடன் விளையாடி கொண்டிருக்கும்போது அங்கு வேலை செய்யும் பெண் வேலையாட்கள் என்னை பார்த்து

“ஏன் சின்னம்மா பொண்ணு, தாய் மாமனை கட்டிக்கிட்டு ஒரு ஆண் வாரிசை பெத்து போடு

தாயி" என கொஞ்சமும் சிந்திக்காமல் என்னை கேட்பார்கள்.மாமா ஜகந்நாதன் வயது என்ன?என் வயது என்ன?எனக்கு மிகவும் அழுகை அழுகையாக வரும் .ஏன் இந்த வேலையாட்கள் கொஞ்சம் கூட நாகரீகம் இல்லாமலும்,விவஸ்தை இல்லாமலும் பேசுகிறார்கள்.நானோ ஒன்பது வயது சிறிய பெண், மாமாவோ முப்பது வயதுக்கு மேல் இருக்கும்,எனக்கு தந்தை போல் வயதுள்ளவர். அந்த வேலை ஆட்களை பார்த்தாலே எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

நல்லவேளை ,என் மாமா பெண்கள் முவர் காதிலும்,மாமி கமலியின் காதுகளிலும் இவர்கள் பேசுவது கேட்கவில்லை.அப்படி கேட்டிருந்தால் என் நிலை என்னவாகியிருக்கும்.மிகவும் வெட்ககேடு இல்லையா?என நினைத்தபடி அங்கிருந்து மிக வேகமாக ஓடிவிடுவேன்.1969-ம் வருடம் வரை நாங்கள் ஒவ்வொரு கொடைவிடுமுறையும் ஒன்றாக சிதம்பரத்திற்கு சென்று மகிழ்ச்சியுடனும்,குதூகலத்துடனும் இருந்து வந்தோம் .

என்னுடைய கர்னாடக சங்கீத வகுப்பும் தவறாமல் சென்று வந்தேன். வீட்டில் அம்மாவும் தினமும் காலையில் என்னை பாடச்சொல்லி தப்பாக பாடினால், அதை திருத்தி ,சரியாக பாடச்சொல்லி பயிற்சி அளித்து வந்தார்கள்., நன்றாக பாட கற்றுக்கொண்டேன்.பள்ளி கூடத்திலும் பாட்டு போட்டியில் கலந்துகொண்டு முதல் பரிசை ஒவ்வொரு முறையும் பெற்று வந்தேன்,அதேபோல் பள்ளிகூட விளையாட்டு விழாவிலும், குறுகிய தூர ஓட்டப் பந்தயம்,பந்து எறிதல் ,டிஸ்க் எறிதல், லாங் ஜம்ப்,ஹய் ஜம்ப்,ஆகிய நான்கு போட்டியிலும் என்னை தோற்கடிக்க என்வயத்தில் அந்த பள்ளிகூடத்தில் ஆளே கிடையாது. நான் அந்த நான்கு போட்டிகளிலும் கலந்துகொள்கிறேன் என தெரிந்தால், மற்ற பெண்கள் தனக்கு முதல் இடம் இல்லை என்பதை நிச்சயமாக தெரிந்துகொண்டு இரண்டாவது,மூன்றாவது . இடத்திற்கு தன்னை தயார் செய்து கொள்வார்கள்.

என் பள்ளிகூடத்தில் பாட்டு போட்டி,வரைதல்

போட்டி,விளையாட்டு போட்டி ஆகிய
முன்றிலும் நான் முதல் இடந்த்தையே
பெற்றுவந்தேன்.ஆனால் கணிதம் என்றால்
எனக்கு பாவக்காய் போல கசக்கும்.கணித
புத்தகத்தைஅலுப்பாகத்தான் திறந்துகூட பார்க்க
எனக்கு பிடிக்காது.விஞ்ஞான பாடம் எனக்கு
மிகவும் பிடித்த ஒன்று.பூகோளம் என்றால்
எனக்கு சற்றே அலுப்பாகத்தான் இருக்கும்
.வரலாறு பாடத்தில் நல்ல மதிப்பெண்
வாங்கிவிடுவேன்.ஏன் என்றால் அம்மா
வரவலாற்று பாட ஆசிரியை என்பதால் என்னை
நன்றாக பாடம் சொல்லிகொடுத்து தேர்விற்கு
தயார்செய்து
அனுப்பிவிடுவார்கள்.ஆங்கிலேயமும்,தமிழும்,
சுமாரான மதிப்பெண்களை
வாங்குவேன்.மொத்தத்தில் வகுப்பில் பத்து
ராங்கிற்ககுள் வந்துவிடுவேன்

ஒவ்வொருமுறையும் பரீட்சை எழுதி
முடித்தவுடன் கேள்விதாள்களை பத்திரமாக
நான் வீட்டிற்கு கொண்டுவரவேண்டும் என்பது
அம்மாவின் உத்தரவு.அந்த கேள்வி தாளை

வைத்துகொண்டு அம்மா என்னை ஒவ்வொரு
கேள்விக்கும் பதில் சொல்லச்சொல்லி
மதிப்பெண்களை போட்டு,கிட்டதாட்ட அந்த
மதிப்பெண்களை என் பள்ளிகூடத்திலிருந்து
எங்கள் டீச்சர் பதில் தாளை திருத்தி
கொடுத்ததும், அதில் .தான் போட்ட
மதிப்பெண்களுடன் சரிசெய்து பார்த்து, நான்
வாங்கிய மதிப்பெண்கள் சற்றே ஏறக்குறைய
இருந்ததால் நான் தப்பித்தேன், ஆனால்
மதிப்பெண்களில் அதிக வித்யாசம் இருந்தால்
,அவ்வளவுதான் என்னை உண்டு இல்லை என்று
ஆகிவிடுவார்கள் அம்மா.

வகுப்பிலுள்ள சக மாணவிகள் தங்கள்
ப்ரோக்ரேஸ் ரிபோர்டில் அப்பவாவின்
கையெழுத்து வாங்கிவரவேண்டும் என்றால்,
எங்கள் வீட்டில் மட்டும் அம்மாவின்
கைஎழுத்துடந்தான் எங்கள் ப்ரோக்ரேஸ்
ரிபோர்டை டீச்சரிடம் கொடுக்க
வேண்டும்.நாங்கள் அப்பாவின்கையெழுத்து
வாங்கி சென்று டீச்சரிடம் கொடுத்தால் ,எங்கள்
டீச்சர் அதை வாங்க மறுத்து, ப்ரோக்ரேஸ்

ரிபோர்ட் கார்டை திரும்பவும் வீட்டிற்கு அனுப்பி எவ்வளவு நாட்கள் ஆனாலும் அம்மாவின் கையெழுத்துடன் தான் வரவேண்டும் என திட்டவாடமாக கூறிவிடுவார்கள்.

ஒருநான் சரித்திர பரீட்சைக்கு அம்மா என்னை நன்றாக தயார் செய்து அனுப்பியிருந்தார்கள்.அத்துடன் இல்லாமல் பரீட்சைக்கு போகும் முன் என்னிடம் "இந்த பரீட்சையில் நன்றாக தயார் செய்து அனுப்புகிறேன்,நீ அவசியம் தொண்ணூறு மதிபெண்களுக்கு மேல் எடுத்து காட்டவேண்டும்.புரிகிறதா?"என மிகவும் கண்டிப்பாக எச்சரித்து அனுப்பிவைத்தார்கள்.நானும் மிகவும் நம்பிக்கையுடன் எப்படியும் தொன்நூருக்குமேல் மதிப்பெண்களை எடுத்துவிடுவேன் என்று உறுதியுடனும் ,தைரியத்துடனும் பரீட்சை அரைகுள் நுழைந்து தெம்புடன் அமர்ந்திருந்தேன்.

கேள்விதாட்கள் அனைவருக்கும்

கொடுக்கப்பட்டது.அதை திறந்து பார்த்ததும்
மகிழ்ச்சியால் என் மனம் பட்டாம்பூச்சிபோல்
சிறகடித்து பரந்த்தது.அனைத்து
கேள்விகளுக்கான பதில் எனக்கு நான்றாகவே
தெரிந்திருந்தது.எப்படியும் இந்த பரீட்சையில்
தொண்ணூற்று ஐந்திருக்கு மேல் நிச்சயமாக
எடுத்து, அம்மாவை ஒரு அசத்து
அசத்திவிடபோவதாக நினைத்து ,மமதை
தலைக்கு ஏற மிகவும் மிதப்புடன் இருந்தேன்.

முன்று மணிநேரம் பரீட்ச்சையை முடித்துவிட்டு
வெளியே வந்த நான் வழக்கம் போல என்
சினேகிதி சரோஜாவுடன் அந்த
கேள்விதாளிலுள்ள கேள்விகளுக்கான
பதில்களை சொல்லி சரி
பார்த்துகொண்டுவருகையில் ,பெரிய மதிப்பெண்
உள்ள ஒரு கேள்விக்கான பதில்
தெரிந்திருந்தும்,அந்த கேள்வியை சரியாக
புரிந்துகொள்ளாமல் அவசரப்பட்டு தவறான
பதிலை நான் எழுதிவிட்டதை அறிந்தேன்.அந்த
ஒரு கேள்விக்கான மதிப்பெண்கள் மட்டுமே
பத்து.உலகமே என் கண் முன்னாள்

சுற்றுவதுபோல் இருந்தது.பயம் என்னை கவ்வியது.தவறான பதிலை எழுதிவிட்டோமே என்ற வருத்தத்தை விட ,அம்மாவிற்கு என்ன பதில் சொல்ல போகிறேன் என்ற பயம் என்னுள் தலைதூக்கியது.கடவுளே இந்த ஒரு கேள்விக்கான சரியான பதிலை தெரிந்திருந்தும்,கேள்வியை புரிந்துகொள்ளாமல் வேறு பதிலை எழுதிவிட்டேனே.,இப்போது அம்மாவிடம் இது பற்றி உண்மையை சொன்னால் நன்றாக உதய் கிடைக்கும்.என்ன செய்வது என என் மனம் பயத்தால் நடுங்கியது.

எதுவானாலும் பரவாயில்ல.நடந்தது நடந்துவிட்டது.நடந்ததை இனிமேல் யாராலும் மாற்றமுடியாது.எப்படி இருந்தாலும் டீச்சர் பதில் தாளை திருத்தித்தர குறைந்தது பத்து நாட்களாவது ஆகலாம்.அதுவரை அம்மாவிடம் ஏதாவது சொல்லி சமாளிக்கவேண்டுயதுதான்.பத்துநாட்களுக்கு பிறகு தெரிந்தால் அப்போது அம்மாவுக்கு நல்ல

முடாக இருந்தால், அடி வாங்காமல் தப்பித்துகொள்ள வாய்ப்பு இருக்கலாம்,என மனதிற்குள் எனக்கு நானே தைரியம் சொல்லிக்கொண்டு வீட்டை நோக்கி வீர நடை நடந்தேன்.

அன்று சாயங்காலம் அம்மா வேலையிலிருந்து வீடு திரும்பியதும்,வழக்கம் போல் கைகால்களை கழுவிக்கொண்டு ,ராஜாம்பா பாட்டி கொடுந்த காபியை குடித்துகொண்டே, மொட்டை மாடியில் ,நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நான் அம்மா இருக்கும் இடத்திற்கு போகாமல், சற்றே தூரத்தில், அடுத்த மாடியில் அண்ணன் ஷானும் ,அவன் நண்பர்களும் விளையாடுவதி வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதுபோல் நடித்துகொண்டிருந்தேன், அம்மாவை திரும்பிகூட பார்க்கவில்லை.மனதிற்கு படபடவென் அடித்துகொண்டது. அம்மா என்னை கூப்பிட்டு எதுவும் கேட்க கூடாதே என்று.ஆனால் என்னுடைய வேண்டுதல் அன்று பலிக்கவில்லை.

“அனிதா ,இங்க வா?” என அம்மாவில் குரல் கேட்டதும் ,என்னுள் பயம் ஏற்பட்டுவிட்டது. என்ன சொல்லப்போகிறோம் அம்மாவிடம் என யோசித்துக்கொண்டே அம்மாவின் அருகில் சென்றேன்.

“என்னம்மா” என்றேன் நடுக்கத்துடன்.

“பரீட்சை எப்படி எழுதினாய்?” எங்கே கேள்வி தாளை கொண்டுவா பார்க்கலாம்”. என்றார்கள் என் பதிலுக்கு காத்திராமல்.

உள்ளே சென்று என் ஸ்கூல் பையிலிருந்த கேள்வி தாளை கொண்டுவந்து அம்மாவிடம் கொடுத்தேன். அம்மா சிறிது நேரம் கேள்வித்தாளை நோட்டம் விட்டுவிட்டு. “பரவாயிலையே, நான் சொல்லிகொடுத்த அத்தனையும் வந்திருக்கே.ரொம்பவும் சுலபமாக இருந்திருக்கும் உனக்கு,” என மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டு. ஒவ்வொரு கேள்வியாக அம்மா கேட்கவே, நான் பதில் சொல்லிக்கொண்டே வந்தேன். அம்மாவும் நான் பதில் சொல்லி

முடித்ததும் ,அந்த கேள்விக்கு பக்கத்தில் தன்னுடைய மதிப்பெண்களை போட்டுக்கொண்டே வந்தார்கள்.கடைசியாக நான் தாப்பாக எழுதியகேள்விக்கான பதிலை அம்மா கேட்கவே, ஒரு நிமிடம் உண்மையை சொல்வதா அல்லது அந்த கேள்விக்குரிய சரியான பதிலை சொல்லி இம்முறை தப்பித்து விடிவதா என எண்ணம் அலைப் பாய்ந்து கொண்டிருக்கையில்,"என்ன முழிக்கிறே? இந்த கேள்வியை எத்தனை தடவை உன்னக்கு நெற்று சொல்லி பதில் சொல்லசொல்லி இருக்கிறேன்"மறந்துட்டாயா?"என அம்மா சற்றே அதட்டும் குரலில் கேட்டது.

"இல்லை அம்மா "பதில் சரியாகத்தான் எழுதினேன். என சொல்லி சமாளித்துவிட்டு அந்த கேள்விக்கான சரியான பதிலை சொல்லிமுடித்ததும் ,அம்மாவிற்கு மிகவும் சதோஷம் ஏற்பட்டுவிட்டது.பிறகு எல்லா மதிப்பெண்களையும் கூட்டி மொத்தத்தில் நூற்றுக்கு தொநூற்றி ஐந்து மதிப்பென்களுக்கு மேல் வரலாம்."குட் கேல் ,போயி விளையாடு

என என்னை அனுப்பிவிட்டார்கள்.

எனக்கு நன்றாக தெரியும் நான் தொநூற்று ஐந்து மதிப்பெண்களை எடுக்கப்போவதில்லை என்று.ஆனால அப்போது உண்மையைக் சொன்னால் நன்றாக உதய் கிடைக்கும் என பயத்து நெஞ்சு குறுகுறுப்புடன் குற்ற உணர்வுடன் விளையா சென்றுவிட்டேன்.ஆனால் விளையாட்டில் என் மனம் ஈடுபடாமல் வருத்தத்துடன் ,ஒருமுலையில் உட்கார்ந்துகொண்டு ,மற்றவர்கள் விளையாடுவதை இரு கன்னத்தில் கைவைத்துக்கொண்டு பார்த்துகொண்டிருந்தேன்.

ஒரு மாத காலம் எப்படியோ ஓடிவிட்டது.வகுப்பு ப்ரோக்ரேஸ் ரிபோர்ட் கார்டும் கொடுத்துவிட்டார்கள்.முன்று நாட்களுக்குள் எங்களது பெற்றோர்களிடம் கையெழுத்துவாங்கி விட்டு டீசரிடம் கொடுத்துவிடவேண்டும்.அம்மா எதிர்பார்த்த அளவிற்கு நான் தொண்ணூற்று ஐந்து மதிப்பெண்கள் பெறாமல் எழுபத்தைந்து மதிப்பெண்களே பெற்றிருந்தேன்.அதை

பார்த்ததும் பயத்தால் உடல் முழுதும் வேர்த்துகொட்டியது.அம்மாவிடம் உண்மையை சொல்லிவிட ஏனோ என் மனம் துணியவில்லை.இந்த முறை எப்படியாவது தப்பித்துவிட்டால், அடுத்த முறை எப்படியாவது நல்ல மதிப்பெண்களை வாங்கி அம்மாவை திருப்தி படுத்திவிடலாம்,கடவுளே இந்த முறை என்னை எப்படியாவது காப்பாற்றிவிடு அடுத்தமுறை நிச்சயமாக இம்மாத்ரி தவறு நேராமல் கவனமாக பார்த்து பரீட்சை எழுதுகிறேன்,என வேண்டினேன்.

அன்று ப்ரோக்ரேஸ் ரிபோர்துடன் வீட்டிற்கு வந்த நான் அம்மாவிடம் அதை காண்பிக்காமல், என் பையிலேயே வைத்திருந்தேன். மறுநாள் காலையில் ஆறு மணிக்கெல்லாம் அம்மா வேலைக்கு சென்றுவிட்டார்கள். அந்த மாதம் அம்மாவிற்கு காலை நேர வேலை.அம்மா வேலை பார்த்துவந்த அந்த அரசினர் மகளிர் உயர் நிலை பள்ளியில் நிறைய குழந்தைகள் சேர்க்கபட்டதாலும் , அந்த தொகுதியில் ஒரேஒரு பெண்கள் உயர் நிலை பள்ளிக்கூடம்

மட்டுமே இருந்தாலும், காலை ஷிப்ட் ,மத்தியானம் ஷிப்ட் என இரண்டாக பிரித்திருந்தார்கள்.காலை ஷிப்ட் ,காலை ஆறு மணி முதல் மதியம் பன்னிரண்டு வரையிலும், மத்தியானம் ஷிப்ட், மதிய பன்னிரண்டு முதல் சாயங்காலம் ஆறு மணி வரையிகும் இருந்த்தது.

அந்த ஸ்கூலில் வேலை செய்யும் டீச்சர் அனைவருக்கும் காலை ஷிப்டும், மதியம் ஷிப்டும் மாறி மாறி வரும்.ஒரு மாதம் காலை ஷிப்ட் வேலை செய்யும் ஆசிரியர்கள் மறு மாதம் மத்தியானம் ஷிப்ட் வேலை பார்க்கவேண்டும்.

அம்மா வேலைக்கு சென்றதும் இதுதான் சமயம் என தூங்கி கொண்டிருக்கும் அப்பாவை எழுப்பி ப்ரோக்ரேஸ் ரிபோர்டில் கையெழுத்து கேட்டேன்.

பாதி தூக்கத்தில் இருந்த அப்பா என்னிடம் “நீ எப்பவும் அம்மவிடம்தானே வாங்கி கொண்டு போவாய்.இன்று ஏன் என்னிடம் கையெழுத்து

கேட்கிறாய்?" என்றார்கள்.

"நான் அம்மாவிடம் வாங்க மறந்து விட்டேன் .இன்னைக்கே ப்ரோக்ரேஸ் ரிப்போர்ட் கார்டை டீச்சரிடம் கொடுக்கவேண்டும்" என மறுபடியும் அப்பாவிடம் பொய் சொன்னேன்.

அப்பா சந்தேகத்துடன் என்னை பார்த்துக்கொண்டே, என் ப்ரோக்ரேஸ் ரிபோர்ட் கார்டை பார்த்துக்கொண்டே "பரவாயிலையே நல்ல மார்குகள்தான் வாங்கியிருக்கிறாய்"வகுப்பில் நாலாவது ராங்க் வந்திருக்கிறாய்,எதற்கு அம்மாவிடம் காண்பிக்காமல் என்னிடம் கையெழுத்து வாங்குகிறாய்" என மறுபடியும் சந்தேகமாக கேட்டதும் ,அப்பாவிடம் நான் உண்மையை சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.விஷயம் முழுதும் அப்பாவிடம் கூறிவிட்டு "அப்பா ப்ளீஸ் இந்த முறை மட்டும் கையெழுத்து போட்டுவிடுங்கள் அடுத்தமுறை நல்லா படித்து , ஹிஸ்டரியில் நல்ல மார்க் எடுத்துவிடுகிறேன்".என

கெஞ்சியதும்,அப்பா சிரித்துக்கொண்டே என்னை முதிகில் தட்டிகொடுத்துவிட்டு,ரிப்போர்ட் கார்டில் தன கையெழுத்தை போட்டுவிட்டு படுத்துவிட்டார்கள் மறுபடியும்.

அப்பாடா ,இன்றும் எப்படியோ தப்பித்துவிட்டோம்.என நினைத்துகொண்டு பள்ளிகூடத்திற்கு வெகு ஜோராக சென்றேன்.வகுப்பும் ஆரம்பித்தது.ஆசிரியை உள்ளே நுழைத்ததும் முதல் வேலையாக எல்லோரயும் ப்ரோக்ரேஸ் கார்டை திரும்ப தருமாறு கேட்டபோது,நாங்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வரிசையில் நின்று டீச்சரிடம் கார்டை கொடுக்கையில், டீச்சர் அவற்றை திறந்து பார்த்து கையெழுத்து இருக்கிறதா என சரி பார்த்து அவற்றை தன மேஜை மீது வைத்துகொண்டிருந்தார்கள்.

கண்களை இருக்க மூடிக்கொண்டேன். கடவுளே இம்முறையும் என்னை எப்படியாவது காப்பாற்றிவிடு.டீச்சர் ஏன் அம்மா கையெழுத்து இல்லை என்று கேட்க கூடாது.இம்முறை

என்னை நீ காப்பாற்றிவிட்டாய். தாத்தா ஈஸ்வரன் சிதம்பரத்திலிருந்து புதியதாக தேங்காய்களை பறித்து சமீபத்தில்தான் எங்கள் வீட்டில் கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள் ,அதில் முன்று தேங்காய்களை, உனக்கு நிச்சயமாக இன்று சாயங்காலும் உன் கோவில் வந்து உடைக்கிறேன் என வேண்டிக்கொண்டிருக்கையில் ,என் முறையும் வரவே, டீச்சரிடம் ரிபோர்ட் கார்டை கொடுத்தேன்.அதை வாங்கி பார்த்த டீச்சர்

“ஏன் உன் அம்மா கையெழுத்து போட வில்லை” என்றார்கள்.

அதற்கு பளிச்சென்று என் மனதில் மின்னல் போல ஒரு பத்தி தோன்றியது.

“தாத்தாவுக்குஉடல்நிலைசரியில்லைஎனஊரிலிருந்து ,எனவேஅம்மாஊருக்குபோயிருக்கிறார்கள்.வருவதற் என்றேன்

“பரவாயில்லை,பத்து நாட்கள் கழித்து அம்மா

வந்தததும்,அவர்கள் கையெழுத்துடன் கொண்டுவா"என ரிபோர்ட் கார்டை திரும்ப என்னிடமே கொடுத்ததும்,என் கண்கள் இருண்டது,என் இதயம் ஆயிரம் துண்டுகளாக சுக்குநூறாக வெடித்து சிதருவதுபோல இருந்தது.கடவுளே,உன்னை எப்படியெல்லாம் வேண்டினேன்.உன் கோவிலில் முன்று தேங்காய் உடைக்கிறேன் என்றேனே.இப்படி என்னை கைவிட்டுவிட்டாயே.அதுமட்டுமல்ல இப்படி ஒரு சங்கடத்திலும் மாட்டிவிட்டாயே.இனி நான் தப்பிக்க வழி இல்லையா?என மன வேதனையுடனும்,பயத்துடனும் முகத்தை தொங்க போட்டுகொண்டு ரிபோர்ட் கார்டுடன் என் இருக்கையில் வந்து உட்கார்ந்தேன். என் வகுப்பில் உள்ள சக மாணவிகள் என்னை ஒருமாதிரியாக பார்ப்பது போல் உணர்ந்தேன்.

ப்ரோக்ரேஸ் ரிபோர்ட் கார்டை வாங்கி என் பையில் வைத்துகொண்டு அதை அம்மாவிடம் காண்பிக்க தைரியம் இல்லாமல் இருந்தேன். நாட்கள் நகர்ந்தது. அம்மாவும் தினமும் ஏன்

இன்னும் ப்ரோக்ரேஸ் ரிபோர்ட் வரவில்லை
என கேட்டவண்ணம் இருந்தார்கள்.நானும்
உண்மையை கூற தைரியம் இல்லாமல், டீச்சர்
இன்னும் கொடுக்கவில்லை என அம்மாவிடம்
பொய் சொல்லி வந்தேன். எப்படி இருந்தாலும்
இப்போது இல்லாவிட்டாலும் எப்போதாவது
ஒரு நான் அம்மாவுக்கு என் மார்க் தெரியத்தான்
போகிறது,ஆனால் ஏனோ தெரியவில்லை
,எதோ ஒரு அசட்டு தைரியத்தில்,துணிச்சல்
இல்லாமல்,பயந்துகொண்டு ஒரு பொய்க்கு மேல்
இன்னொரு பொய் என நாளுக்கு நாள் நான்
பொய் பேசுவது அதிகமாகியது.பொய்
பேசுகிறோமே என ஒரு பக்கம் குற்ற உணர்வு
வாட்டினாலும், மறுபுறம் அம்மாவிடம் பொய்
சொன்னதிற்காக அடிவிழுமோ என்ற பயமும்
ஒரு பக்கமாக என் நிம்மதி நாளுக்கு நாள்
குறைந்து கொண்டே வந்து மிகவும்
கவலையாகவே இருந்தேன்.எதோ ஒன்று
உண்மையை அம்மாவிடம் கூறமுடியாமல்
தடுத்தது. அது பயமா?அல்லது அசட்டு
தைரியமா?என அப்போது புரியவில்லை எனக்கு.

நாட்களும் நகர்ந்தன. அம்மாவிற்கு என் ஸ்கூலுக்கு வந்து டீச்சரிடம் இதை பற்றி கேட்க நேரம் இல்லாமல் போயிற்று .ஆனாலும் தினமும் எப்படியாவது நேரம் கிடைக்கும்போது ,என் ஸ்கூலுக்கு வந்து டீச்சரை பார்க்கபோவதாக கூறிகொண்டிருந்தார்கள் அம்மா.அப்போது நான் உண்மையை கூற தைரியம் இல்லாமல் பேசாமல் இருந்தேன்.டீச்சரும் மறந்துவிட்டார்கள் என நிம்மதியாக இருந்தேன்.

சரியாக பத்து நாட்கள் முடிந்ததும் ,இனி டீச்சரும் இதை பற்றி கேட்கமாட்டார்கள் என்ற தைரியத்தில் ஒரு நாள் நான் ஸ்கூலுக்கு சென்றபோது, எங்கள் வகுப்பு டீச்சர் மறக்காமல் என்னிடம்"அனிதா,பத்து நாட்களுக்கு மேல் ஆயிற்று,அம்மா ஊரிலிருந்து வந்திருக்க வேண்டுமே,அம்மாவின் சைன் வாங்கிவந்தாயா?"என ஞாபகமாக கேட்டதை, அன்று நான் சிறிதும் எதிர்பார்க்காததால் மிகவும் அதிர்ந்துவிட்டேன்.

"அம்மா இன்னும் ஊரிலிருந்து வரவில்லை

டீச்சர் " என மறுபடியும் யோசிக்காமல்
பதிலளித்தேன்.

"எப்படிஉன்அம்மாவேலைக்குஇவ்வளவுநாள்லீவுபே
இல்லையே."எனசந்தேகத்துடன்கூறிக்கொண்டே,எ
ஜமுனாவை அழைத்து "ஜமுனாநீஅனிதாவுடன்
,அவள்வீட்டிற்குஇன்றுபோயி,அவள்அம்மாஊரிலிரு
ஏன்இன்னும்வரவில்லை?
எப்போதுவருகிறார்கள்?எனமுழுவிவரத்தையும்கேட்
என்றார்கள்

ஜமுனாவிற்கு மிகவும்
குஷியாகிவிட்டது.அவளுக்கு தெரிந்து விட்டது
நான் பொய் சொல்கிறேன் என்று. அதனால்
டீச்சர் சந்தேகப்பட்டு அவளை என் வீட்டிற்கு
அனுப்பி உண்மையை தெரிந்துவரும்படி
கூறினார்கள் என்று.

ஜமுனாவிற்கு என்னை கண்டால்
பிடிக்காது.வகுப்பில் எனக்கும் அவளுக்கும் ரான்க்
வாங்குவதில் போட்டி .அதற்கு முன் மாதம் நான்
வகுப்பில் முதலாவது ரான்க் வாங்கியபடியால்

,டீச்சர் என்னை வகுப்பு லீடராகவும்,ச்கோர்ட் லீடராகவும்,ஸ்போர்ட்ஸ் லீடராகவும்,நியமித்து, என் சட்டையில் முன்று பதவிக்கான பாட்ஜும் அணிந்துகொண்டு பள்ளிகூடத்திருக்கு தினமுன் பெருமையுடன் சென்றுவந்தேன்.ஜமுனாவிற்கு பொறாமையால் பொறுமிக்கொண்டிருந்தாள் .எனவே அடுத்த முறை வகுப்பில் முதல் ரான்க் வாங்கி அவள் வகுப்பு லீடராக வந்து விடபோவதாக எல்லோரிடமும் சபதம் இட்டுக்கொண்டு இருந்தாள் .எப்படியாவது நான் அணிந்திருக்கும் அந்த முன்று பாட்ஜும் அவள் பறித்துகொள்ள திட்டமிட்டு மிகவும் மும்முரமாக படித்துகொண்டிருப்பதாக வகுப்பிலுள்ள என் சக மாணவிகள் என்னிடம் அடிக்கடி கூறிகொண்டிருந்தார்கள்.

ஆனால் இம்முறை நான் நாலாவது ராங்க் வாங்கியும் ,டீச்சர் என்னை வகுப்பு லீடர் ,ச்கோர்ட் லீடர்,ஸ்போர்ட்ஸ் லீடர் பதவியிலிருந்து நீக்காமல் வைத்து இருந்ததற்கு காரணம் என்னுடைய நல்ல நடத்தையும்,எல்லா வகுப்பு வேலைகளும் சரிவர பிழையின்றி

செய்து வந்ததாலும் இன்னும் சில மாதங்களுக்கு என்னை தொடந்து இருக்க அனுமதி அளித்து வைத்திருந்தது குறித்து ஜமுனாவிற்கு பொறாமையால் நெஞ்சு கொத்தித்து கொண்டிருந்தது. அவள் முகபாவதிலிருந்தே அனைவரும் உணரமுடியும்.என்னை பார்த்தாலே அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்.அவளுக்கு வகுப்பில் அவ்வளவாக சினேகிதிகள் கிடையாது.ஒரு சில பணக்கார சிநேகிதிகளை வைத்துகொண்டு மிகவும் அலட்டி கொண்டிருப்பாள்.

எங்கள் டீச்சருக்கு நான் பெரிய இடத்து பெண் என்ற பயமும், மரியாதையும் இருந்தது.என் பெரியம்மா சேது அரசாங்க கல்வி இலாகாவிற்கு அதிகாரி என்பதாலும். அடிக்கடி எங்கள் பள்ளிகூடத்திற்கு பெரியம்மா சேது திடீர் விஜயம் செய்துவிட்டு போவது வழக்கம் . ஏன் என்றால் அந்த சாக்கில் ,அப்படியே எங்கள் வீட்டிற்கும் வந்து அம்மாவையும் பார்த்துவிட்டு போகலாம் என்று.என் ஸ்கூலுக்கு திடீர் விஜயம் செய்தது விட்டு, எங்கள் வீட்டிற்கும் திடீர்

விஜயம் செய்தது விட்டு அப்படியே எங்களை அவர்கள் வீட்டிற்கு, அவர்கள் காரிலேயே அழைத்து சென்று இரண்டு நாட்கள் தங்கவைத்துவிட்டு திரும்பவும் ஞாயிற்று கிழமை வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டு சென்றுவிடுவார்கள்.

. தனிப்பட்ட முறையில் என்னை என் டீச்சருக்கு பிடித்திருந்தாலும்,என் குடும்பத்தார் அடிக்கடி என் படிப்பு விஷயமாக தலையிட்டு டீச்சரை கேள்விகள் கேட்டு வந்ததால் டீச்சருக்கு என்மீது சற்றே வெறுப்பாகவும் இருந்த்தது.

இதை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு,ஜமுனா மிகவும் ஆனந்தத்துடன் ,"சரி டீச்சர் நான் இன்று சாயங்காலமே அவளுடைய வீட்டிற்கு சென்று விஷயத்தை தெரிந்து கொண்டுவருகிறேன் ".என்றாள் .

"அனிதா ,நீ வீட்டிற்கு போகும் பொது மறக்காமல் ஜமுனாவை உன்னுடன் அழைத்து செல்"என எச்சரிப்பதுபோல கூறினார்கள்.

மாலையில் ஸ்கூல் முடிந்ததும், என் மீது கண் வைத்து கொண்டே இருந்த ஜமுனா, என்னை பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தாள்.நான் தப்பித்து தனியாக வீடு சென்று விடாதபடி கூடவே வந்தது எனக்கு சற்றே கடுப்பாகவும் ,கோபமாகவும் இருந்தாலும் அவளை நான் எதுவும் சொல்ல முடியாத நிலையில் இருந்தேன்.

நானும் ஜமுனாவும் வழிமுழுக்க எதுவும் பேசாமல் நடந்து வந்துகொண்டிருந்தோம்.கடவுளை இனி வேண்டி பிரயோஜனம் இல்லை.வெள்ளம் தலைக்குமேல் சென்றுவிட்டது, இனிமேல் ஜான் போனால் என்ன?முழம் போனால் என்ன?இன்றைக்கு அம்மாவிற்கு தெரிந்து எனக்கு நன்றாக உதய் கிடைக்கபோகிறது.நாளைக்கு பள்ளிக்கூடம் சென்றால் வகுப்பில் அனைவருக்கும் விஷயம் தெரிந்துவிடபோகிறது. வகுப்பில் எல்லோருக்கும் முன்னால் டீச்சர் எனக்கு தண்டனை கொடுப்பதோடில்லாமல், என் எல்லா பதவிகளும் பறிமுதல் செய்து, என் எதிரியான

இவளிடம் கொடுத்துவிடபோகிறார்கள்.என்
உள்ளம் அவமானத்தால் குன்றியது.

முதலிலேயே அம்மாவிடம் உண்மையை
கூறிவிட்டு ப்ரோக்ரேஸ் கார்டை
காண்பித்திருந்தால் இவ்வளவு தொல்லைகள்
இருந்திருக்காதே.இனிமே டீச்சரும் ,அம்மாவும்
நான் எது சொன்னாலும் நம்பபோவதில்லை.என்
மனதில் என்னை நானே மிகவும் நொந்து
கொண்டேன்.மன வேதனையுடன் எங்கள்
தெருமுனைக்கு வந்துவிட்டேன், அந்த தெருவில்
திரும்பியதும் நாலாவது வீடு எங்கள் வீடு.

என்இதயம்பக்பக்எனஅடிக்கதொடங்கியது.அச்சமய

“ஜமுனா,என் யாரோ கூப்பிடும் குரல் கேட்டு
திரும்பி பார்த்தோம் இருவரும். நடுத்தர
வைத்துள்ள ஒருவர் ஸ்கூட்டரில் வந்து எங்கள்
அருகே நின்றார்.

மாமா... என குதூகலமாக கூறிய ஜமுனா
என்னுடன் வந்த காரியத்தை மறந்துவிட்டு ,

வீட்டுக்கா போறீங்க போறீங்க மாமா?"
என்றாள் .

"ஆமாம் ,ஏறி பின்னால் உட்கார்
போகலாம்"என்றார் அவளது மாமா.

அவர் சொன்னத்துதான், தாமதிக்காமல் ஜமுனா
என்னிடம் கூட எதுவும் சொல்லி கொள்ளாமல்
மாமாவின் ஸ்கூட்டரில்,அவருக்கு பின்னால் ஏறி
உட்கார்ந்து கொண்டு பறந்துவிட்டாள்.

என் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.இன்று நான்
கடவுளை வேண்டிகொள்ளவில்லை.ஆனால்
கடவுள் என்னை
காப்பாற்றிவிட்டார்.ஜமுனாதான் டீச்சரிடம
வம்பில் மாட்டிகொண்டாள் என என் மனம்
ஆனந்தபாட்டதே தவிர.அன்றும் அம்மாவிடம்
உண்மையை சொல்ல எனக்கு துணிவில்லாமல்
போய்விட்டது.

மறுநாள் வகுப்பில் டீச்சரிடம் சென்று ஜமுனா
எதையோ கூறியதும்,டீச்சரும் தலையாட்டிவிட்டு

எதுவும் பேசவில்லை.என்னையும் டீச்சர் எதுவும் கேட்கவில்லை.என் மனம் அமைதி அடைந்தது.இனிமேல் டீச்சர் என்னை எதையும் கேட்க மாட்டார்கள் தப்பித்துவிட்டோம் என நிம்மதி பெருமூச்சு ஒன்றை விட்டுவிட்டு மும்முரமாக வகுப்பு பாடத்தில் இறங்கினேன்.

ஒரு வாரம் ஓடியது.என் மனதில் மிக உறுதியாக விட்டேன் .இனி ப்ரோக்ரேஸ் ரிபோர்ட் கார்டை பற்றி கவலையில்ல என்று. அன்று வழக்கம் போல பள்ளிகூடத்திலிருந்து வந்து மொட்டை மாடியில் அண்ணன் ஷானும்,தம்பி பாட்டும் அவர்கள் சிநேகிதர்களுடன் பட்டம் விட்டுகொண்டிருந்ததை வேடிக்கை பார்த்துகொண்டிருந்தேன்.அம்மாவும்,வேலை செய்யும் ராஜாம்பா பாட்டியும் கீழே சமயலறைக்கு வெளியே உள்ள படிக்கட்டில் நின்று பேசிகொண்டிருந்தார்கள் .

சிறிது நேரம் கழித்து மறுபடியும் நான் கீழே எட்டி பார்க்கையில் அம்மாவுடனும், ராஜாம்பா பாட்டியுடனும் ஜமுனா நின்று

பேசிகொண்டிருந்ததை பார்த்ததும் என் உடலில் ஓடும் ரத்தம் பூராவும் உறைந்து நிற்ப்பதுபோல் அதிர்ந்தேன்.அம்மாவிடம் உதய் வாங்கிக்கொள்ள என்னை நான் தயார் படுத்திகொண்டேன்.பயத்தாலும்,அவமானத்தாலும் மொட்டை மாடியின் ஒரு முலையில் அம்மா என்னை கூப்பிடும் நேரத்தை எதிர்பார்த்து காத்திருந்தேன். கண்ணை இறுக முடிக்கொண்டு கடவுளை வேண்டிக்கொண்டேன்.கடவுளே இனிமேல் நான் பொய் சொல்ல மாட்டேன். இந்த உண்மையை ஒரு மாதத்திற்கு முன்பே அம்மாவிடம் சொல்லியிருந்தால் இப்படி ஒரு மாதமாக தினமும் நான் பயந்து பயந்து செத்திருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது இல்லையா ? .பிரச்சனை அந்த நிமிஷத்துடன் முடிந்திருக்கும்.ஒரு மாத காலமாக நரக வேதனை அனுபவித்தாயிற்று.இனிமேல் என்னால் பொறுத்திருக்க முடியாது.

சிங்கம் எப்போது குகையிலிருந்து வெளியே வந்து என்னை சாப்பிடும் என பயந்து கொண்டிருப்பது கோழைத்தனம் .எனவே

சிங்கத்தை குகைக்குள் சென்று நானே பார்த்து விடுகிறேன்.என முடிவு செய்து கொண்டு எழுந்து நின்று மறுபடியும் கீழே பார்த்தேன்.இப்போது ஜமுனா அங்கு இல்லை .அம்மாவும் ராஜாம்பா பாட்டியும் மறுபடியும் எதோ மிகவும் ஸ்வாரஸ்யமாக சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தார்கள்.அம்மா என்னை கூப்பிட்டு எதுவுமே கேட்கவில்லை.இது என்னடா வம்பா இருக்கிறதே என்ற சந்தேக குறியுடன் சற்றே நடுக்கத்துடன் மேலே நின்று கொண்டே அம்மாவை பார்த்தேன். அம்மாவும் கீழிருந்தபடி என்னை பார்த்துவிட்டு எதுவும் சொல்லவில்லை. என் மனதில் மிகவும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. ஜமுனா அம்மாவிடம் என்னை பற்றி என்ன சொல்லி இருப்பாள்?.அம்மா ஏன் எதுவும் என்னை கேட்கவில்லை?.அம்மா ஜமுனாவிடம் என்ன பதில் கூறி அனுப்பியிருப்பார்கள்?.நாளை வகுப்பிற்கு சென்றால் டீச்சர் என்னை என்ன கேட்பார்கள்?.என்று பலவிதமாக என் மனதில் கேள்விகள் எழும்பி என் வயிற்றை கலக்கி

கொண்டிருந்தது.

அன்று அம்மா என்னை எதுவும் கேட்கவில்லை. நானும் அம்மாவிடம் எதுவும் தெரியாததுபோல் நடந்துகொண்டேன்.மறுநாள் காலையில் வகுப்பிற்கு சென்றதும் ,டீச்சரிடம் ஜமுனா எதோ சொல்லிகொண்டிருந்தாள் .அன்று காலையிலிருந்து வகுப்பு முடியும் வரை டீச்சர் எதுவும் என்னிடம் பேசவில்லை.மாலையில் கடைசி வகுப்பு முடிந்து வீட்டிற்கு செல்லும் சில மணி நேரத்திற்கு முன், டீச்சர் என்னை அருகில் அழைத்தார்கள்.வகுபில்லுள்ள சக மாணவிகள் விஷயம் முழுதும் ஜமுனா மூலம் சிறிது அறிந்திருந்தார்கள்.அனைவரும் ஆர்வத்துடன் என்ன நடக்க போகிறது என்று அமைதியாக எதிர்பார்த்து கொண்டிருக்கையில் ,ஜமுனா மட்டும் பெருமையாக வெற்றி பொன்முருவலுடன் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தாள்.

“அனிதா, நீ அணிந்திருக்கும் இந்த முன்று பாட்ஜையும் எடுத்து என் மேஜை மேல் வை” என்றார்கள்.

நான் அமைதியுடன் எழுந்துசென்று முன்று பாட்ஜையும் கழற்றி டீச்சர் மேஜை மீது வைத்துவிட்டு மிக வருத்ததுடனும், அவமானத்துடனும் என் இருக்கையில் வந்து உட்கார்ந்துகொண்டேன்.

டீச்சர் வகுப்பிலுள்ள அனைத்து மாணவிகளை பார்த்து "அனிதா வீட்டிலும்,என்னிடத்திலும் பொய் சொல்லிவந்ததாலும்,அவளது ஒழுங்கு தவறிய இந்த நடவடிக்கையால் இந்த வகுப்பு தலைவியாக இருக்க அவளுக்கு தகுதி இல்லை என்பதால், இந்த முன்று பாட்ஜையும் வகுப்பு முதலாவது ரான்க் வாங்கிய ஜமுனாவிற்கு அளிக்கிறேன் என கூறி அந்த முன்று பாட்ஜையும் ஜமுனாவிடம் கொடுத்தது எனக்கு மிகவும் அழுகையாக வந்தது.

என் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு முகத்தை மூடிக்கொண்டு என் டெஸ்கில் முகத்தை வைத்துகொண்டு அழுதுகொண்டே இருந்தேன்.என் நெருங்கிய சினேகிதி கீதா மட்டும் என் அருகில் அமர்ந்து கொண்டு

என்னை தேற்றி ஆறுதல் வார்த்தைகளை
சொல்லிகொண்டிருந்தாள் .என் மனம்
அவமானத்தால் மிகவும் கூனி குறுகியது .

13

அத்யாயம்-பதின்முன்று

அந்த நிகழ்ச்சிக்கு பிறகு படிப்பு விஷயத்தில் பொய்சொல்வாதில்லை என முடிவுசெய்துவிட்டேன்.படிப்பில் அதிக கவனம் செலுத்தி நல்ல மதிப்பெண்களை வாங்க மிகவும் முயற்சி செய்து படித்து வந்தேன்.அம்மாவும் அந்த சம்பவத்தை பற்றி என்னிடம் அதன் பிறகு எதுவும் கேட்காமலிருந்துவிட்டார்கள்.

பெரியம்மா சேது அடிக்கடி என் பள்ளிகூடத்திருக்கு வந்து என்னை பற்றி ஸ்கூல் தலைமை ஆசிரியரிடம் விசாரிப்பதும்,எங்கள்

வீட்டிற்கு வந்து போவதுமாக இருந்தார்கள்.எங்கள் வீட்டிற்கு வரும் சமயம் எல்லாம் நிறை வெளிநாட்டு சாகோலேட்சும் ,பிஸ்கேட்சும் ,கொடுத்துவிட்டு செல்வார்கள்.அம்மாவும்,பெரியாம்மாவும் மிகவும் ஒத்துமையான சகோதரிகளாக இருப்பதை பார்க்க எனக்கு ஆச்சர்யமாக இருக்கும்.ஊரிலுள்ளவார்கள் பொறாமை படும் அளவிற்கு இருவரும் ஒரே மாதிரி உடைகளை உடுத்திக்கொண்டு பல இடங்களுக்கு ஒன்றாக போயி வந்தனர். இருவரின் ஒத்துமையை கண்டும் பலரும் வியந்தனர்.அம்மா ஒவ்வொரு வாரமும் எங்களை பெரியம்மா வீட்டிற்கு, ஞாயிற்று கிழமை காலையில் அழைத்து சென்று விட்டு, மிகவும் சந்தோஷமாக பொழுதை கழித்துவிட்டு ,அன்று மாலையில் எல்லோரும் வீடு திரும்பிவிடுவோம்.

அம்மாவும் ,பெரியம்மாவும் உட்கார்ந்து பல விஷயங்களை பேசிவந்தார்கள்.பெரியம்மா,அம்மாவிற்கு பல புத்திமதிகளை கூறிவந்தார்கள்.பண விஷயத்தில்

எப்படி சாமர்த்தியமாக இருக்க வேண்டும்,மாத சம்பளத்திலிருந்து ,அப்பாவிற்கு முழுமையாக பணத்தை கொடுத்துவிடாமல், சிறிது பணத்தை எடுத்து என் பெயரிலும்,சிறிது பணத்தை என் தங்கை ஆனஹி பெரியாரிலும், கல்யாணத்திற்காக தனித்தனியாக பாங்க்கில் போட்டு வைத்து விடுமாறும், வீடு கட்டுவதற்கு தனியாக பணத்தை போட்டுவைக்குமாரும் ,இப்படி பல விஷயங்களை அம்மாவிற்கு விளக்கி கூறி புத்திமதி சொல்லிவந்தார்கள்.

அப்பாவிடம்,அம்மா எதுவும் அதிகம் பேசியதாகவும்,எதையும் அதிகாரமாக தட்டி கேட்டதாகவும், பார்த்ததாக எனக்கு தெரிந்து நினைவில் இல்லை.வேலை ஆட்களை கூட அம்மா அதட்டி பேசி நான் பார்த்ததே இல்லை.எப்பவும் கலகலவென்று சிரித்து பேசுவார்கள்.இல்லை என்றால் அமைதியாக இருந்துவிடுவார்கள்.குரலை உயர்த்தி அதிகாரமாக பேசத்தெரியாது அம்மாவிற்கு.நல்ல குணத்துடன் மற்றவர் மனதை புண்படுத்தாமல் பேசும் சுபாவம் படைத்தவர் அம்மா.

சண்டை போட்டு அழுது,ஆர்பாட்டம் செய்து முகத்தை தூக்கி வைத்துகொண்டு “உம்” என்று அம்மா இருந்தது நான் பார்த்ததாக நினைவில் இல்லை என்றே சொல்லலாம்.எப்பவும் சாந்தமாக, சிரித்த முகத்துடன், தலை நிறைய பூவைத்து, நல்ல நிற புடவைகளில் இருபுறமும் பெரிய பார்டர் வைத்தாற்போலவும்,அதற்க்கு மாட்ச்சாக தங்க வளையல்களும் ,அதன் நடு நடுவே கண்ணாடியால் ஆன கலர் வளையல்களையும், காலில் எப்பவும் சலங்கை வைத்த மெட்டியும் அணிந்த்திருப்பார்கள்.அம்மா நடக்கும் பொது ஜல் ஜல் என சத்தம் கேட்கும்.சலங்கை சற்றே நசுங்கி அதிலிருந்து சத்தம் வராவில்ட்டால் உடனே கடைக்கு சென்று புது மெட்டி வாங்கி காலின் விரலில் போட்டுகொள்வார்கள்.அதே போல், என் கால்களிலும் ஜெருங்கிய வெள்ளி முத்துக்கள் உள்ள சலங்கையை அடிக்கடி மாற்றி புதிதாகவாங்கி போட்டு விடுவார்கள்அம்மாவை பலரும் குணவதி, மஹாலக்ஷ்மி என்பார்கள்.சிறுவயதில் பிரபலமான நாட்டியம்

கற்றுத்தரும் டீச்சரிடம் முறைப்படி பரதநாட்டியம் பயின்றவர்கள் அம்மா. கர்நாடாக சங்கீதத்தில் வாய்ப்பாட்டும் சிறிது கற்றிருந்தார்கள்.நல்ல குரல் இருந்ததால் அடிக்கடி சினிமா பாடல்களும்,கர்நாடக சங்கீதமும் பாடுவார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கர்னாடக சங்கீத கச்சேரிக்கு தவறாது சென்று கேட்டு வருவார்கள்.

அம்மாவின் பெற்ற அம்மா ,பாட்டி கமலா அடிக்கடி மிகவும் பெருமையாக சொல்லிக்கொள்வார்கள்,"என் பெண் மேடையில் ஏறி காலை தூக்கி ஒரு தட்டு தட்டியது ம் அங்குள்ள கூட்டம் ஓர்சில மணிநேரத்திற்கு ஓயாமல் கைதட்டல் இருக்கும்.அந்த அளவிற்கு அருமையாக ஆடகூடியவள் என் பெண்" என்று.

தாத்தா ஈஸ்வரனும் பல சமயங்களில் அம்மாவின் நாட்டியம் பயின்று அரங்கேற்றிய கதைய கூரியிருக்கிரால்கள்.1930-ம் வருடத்திற்கு முன் தேவதாசி என ஒரு இனத்தை

சேர்ந்தவர்கள் இருந்தனராம்.அவர்கள் தான் பரத நாட்டியம் பயின்று, ராஜா சபைகளிலும் மற்ற சபைகளிலும் ஆடுவார்களாம் .குடும்ப பெண்கள் பரத நாட்டியம் கற்றுக்கொண்டு பொது இடங்களில் ஆடுவது முறையில்லை என்பது சமுதாயத்தில் ஒரு முரண்பாடான கருததாக இருந்துவந்ததாம். எனவே மற்ற குடும்ப பெண்கள் நாட்டியம் கற்று கொள்வது இயலாத காரியமாக இருந்ததாம்.தேவதாசி இனத்தை சேர்ந்தவர்கள் நாட்டியம்அவர்களுக்காக படைக்கப்பட்டதாகவும், மற்றவர்கள் கற்று கொண்டால் அவர்களுக்கு போட்டியாக வந்து ,அவர்கள் பிழைப்பில் பிரச்சினை வந்துவிடும் என எண்ணி, மற்ற குடும்பத்தை சேர்ந்தவர்கள் நாட்டியம் கற்றுகொள்வதற்கு மிகவும் எதிர்ப்பு தெரிவித்து வைத்தார்கள் என்றும் ,அதனால் தாத்தா ஈஸ்வரன், அந்த காலத்தில் துணிந்து அம்மாவை நாட்டியம் கற்றுக்கொள்ள அனுப்பியதாக, மிக ,மிக பெருமையாக கூறி கொள்வார்கள் .

அம்மா பாதினாறு வயத்தில் இருக்கும்போது

மதுரை நகரில் உள்ள மீனாட்சி அம்மன் கோவிலில் முதல்முறையாக நாட்டியம் அரங்கேற்றம் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்திருந்தும்,அரங்கேற்றம் நாளன்று முதன் முறையாக ஒரு குடும்ப பெண் நாட்டியம் ஆடபோவது கேட்டு, பெரும்பாலான மக்கள் கூட்டம் அந்த கோவில் மண்டபத்தில் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கையில் ,தேவதாசி இனத்தை சேர்ந்த பலர் ,அன்று மேடையில் அம்மாவின் அரங்கேற்றம் நடக்ககூடாது என எதிர்ப்பு தெரிவுத்து ஒருபுறம் நிற்கையில்,கூடியிருந்த மக்கள் கூட்டம் அம்மா ஆட வேண்டும் என ஆதரவளித்து கொண்டு ஒருபுறம் இருக்க ,இந்த குழப்பத்திர்கிடையில் அம்மாவின் அரங்கேற்றம் நடக்க மேடையில் திரை விலகியதும் :"ஆனந்த நடனம்" என்ற பாடலுக்கு அம்மாவின் காலை தூக்கி மேடையில் ஒரு தட்டு தட்டி தூக்கியதும், கூடியிருந்த கூட்டத்தின் ஆரவாரம்,கைத்தாட்டல் பல நிமிடங்கள் ஓயவில்லை,என பெருமையாக சொன்னார்கள் தாத்தா.

அம்மா திறம்பட தன அரங்கேற்றத்தை முடித்தவுடன், அங்கு வந்திருந்த தேவதாசி இனத்தவர்கள், அசந்து போயி ,அம்மாவின் நாட்டியத்தை மிகவும் பாராட்டிவிட்டு ,எதிர்ப்பு தெரிவித்ததற்காக மன்னிப்பு கேட்டுவிட்டு, தங்கள் வருத்தத்தை தெரிவித்து சென்றதாகவும் தாத்தா அடிக்கியடி சொல்லி நாங்கள் கேட்டிருக்கிறோம்.

அம்மா அரங்கேற்றம் முடிந்தவுடன், அந்த கோவிலின் மீனாட்சி அம்மன் மேல் போர்த்தியிருந்த ஆலிவ் பச்சை நிறத்தில் காவிநிற பார்டர் இருபுறமும் போட்ட பட்டுபுடவையில் சிவப்பு நிறம் நூலில் “நாட்டிய கலா மாமணி “என்ற பாடம் கொடுத்து அதை அம்மாவிற்கு பரிசாக கொடுத்திருந்தார்கள்.அந்த புடவையை அடிக்கடி எங்கள் அனைவருக்குக்க் எடுத்து பெருமையுடன் காட்டி மகிழ்வார்கள் தாத்தாவும், பாட்டியும்.

தாத்தாவின் மிகவும் நெருங்கிய நண்பர் ,இந்தியாவின் சுதந்திர போராட்டத்திற்கு மிகவும்

பங்கு பெற்ற ,மக்களால் மிகவும் மதிக்கபெற்று வரும் திரு.வி .க என சுருக்கமாக அழைக்கப்படும் ஒரு உயர்ந்த பெருந்தலைவர் வெள்ளி குழலில் அம்மாவின் பெயர் பதித்து “பரத கலா மாமணி “என்ற பட்டமும் பதித்து பரிசாக கொடுத்த ஒரு வெள்ளி குழலையும் ,எங்களிடம் காண்பித்திருக்கிறார்கள் பெரியம்மா சேது.

அம்மாவின் வேலை செய்யும் ஸ்கூலில், அவர்கள் கூட வேலை பார்க்கும் சக ஆசிரியர்கள், அம்மாவிடம் “ஏன் மங்கை ,நீ நாட்டியம் கற்றுகொண்டாய் ,அதேபோல உன் பெண் அனிதாவிற்கும் இது சரியான் வயது என்பதால் ,அவளுக்கும் நாட்டியம் கற்றுகொடுத்தால் என்ன?என பல முறை வற்புறுத்தியதன் பேரில்,மயிலாப்பூரில் ஒரு பெயர் பெற்ற பரதநாட்டிய ஆசிரியரிடம் அம்மா என்னை அழைத்துச்சென்றார்கள்

அந்த பரத நாட்டிய ஆசிரியை என்னை பார்த்ததும் ,என்னை மாணவியாக எடுத்து கொள்ள முடியாது என கூறிவிட்டது கேட்டு

அம்மாவின் மனம் மிகவும் வேதை பட்டது..:உங்க பெண் அனிதாவிற்கு நாடியத்திருக்கு தேவையான முகக்கட்டு இல்லை.பரதத்திற்கு முகபாவனை மிகவும் அவசியம்.அதற்கான மிகபெரிய எடுப்பான பெரிய கண்ணும், மூக்கும் இருப்பது மிகவும் முக்கியமே.ஆனால் இவளுக்கு கண்ணும்,மூக்கும் அமைப்பாக இல்லாததால் நாட்டியம் கற்றுகொடுப்பது சற்றே கடினம்,பணம் எதுவும் வீணே செலவு பண்ணாதீர்கள்"என மிகவும் நாசுக்காக சொல்லி அம்மாவை அனுப்பிவிட்டார்கள்.

அம்மாவிற்கு அவர்கள் கூறியது முற்றிலும் உண்மையாகவே பட்டது.இது அம்மாவிற்கு முன்பே தெரிந்திருந்ததால் தான் என்னை நாட்டியத்தில் சேர்ப்பதை பற்றி அம்மா நினைக்கவில்லை. இருந்தாலும் கூட வேலை செய்பவர்கள் கூறியதற்காக என்னை நாட்டியத்தில் சேர்க்க முயற்சி செய்து,அது முடியாமல் போகவே ,அந்த என்னத்தை அறவே கைவிட்டுவிட்டார்கள்.அந்த சமயம் அம்மா எனக்கு பெயர் வைத்த கதையை

நகைச்சுவையாக ,அம்மா வேலை செய்யும் சக ஆசிரியர்களிடம் கூறிகொண்டிருந்தார்கள்.அதை கேட்டு நான் மிகவும் ஆச்சர்யப்பட்டேன்.எனக்கு பெயர் வைப்பதில் கூட இவ்வளவு பிரச்சனையை இருந்திருக்கிறதா? என்று.

நான் பிறந்தவுடன் எனக்கு என்ன பெயர் வைப்பது என அம்மாவுக்கும்,அப்பாவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாம்.அம்மா எனக்கு முதலில் "மலர்விழி"என பெயர் வைக்க ஆசைப்பட்டார்களாம்.உடனே அப்பா அதற்கு,

"நம் பெண்ணுக்கு கண் கடுகு போல சிறியதாக இருக்கிறது அதற்கு போயி "மலர்விழி" என எப்யர் வைக்க போகிறேன் என்று சொல்றியே .யாராவது கேட்டால் சிரிப்பார்கள்" என்றார்களாம்.

"சரி", அப்படி என்றால் "மலர்கொடி" என பெயர் எப்படி இருக்கிறது" என அம்மா கேட்டதற்கு,

அப்பா “ஓ”வென சத்தம் போட்டு சிரித்துவிட்டு
“தப்பாக நினைக்காதே,உன் பெண் குண்டு
,குண்டு என
இருக்கிறாள்,இடுப்புக்கும்,உடம்புக்கும் வித்யாசமே
இல்லாமல் பீர்பாய் மாதிரி இருக்கிறாள்,வேறு
ஏதாவது பொருத்தமான பேரா தேர்ந்தெடு”
என்றார்களாம்.

“அதுவும்வேண்டாம்என்கிறீர்கள்
.சரி,பரவாயில்லை.”
கார்குழலி”என்றபெயர்எப்படிஇருக்கிறது?”என்றார்

“உன்னை பொருத்தமான பெயரா வை என்றால்
,எல்லாம் எதிர்மாறான பெயராக
சொல்லிவருகிறாய்” என்றார்களாம்.

“ஏன் கார்குழலி என்ற பெயருக்கு என்ன
குறை?”என்றார்களாம் அம்மா.

உடனே என் அப்பா என் தலை முடியை
கையில் தொட்டு காண்பித்து,”இதை பார்த்தால்
கார்குழல் மாதிரியா திரியுது உனக்கு?.நீ தமிழில்

சற்று ஞானம் உள்ளவள்.உனக்கு தெரியாதது இல்லை.கார்குழலி என்றால் நீண்ட கரிய கூந்தல் என்று அர்த்தம்.நம் மகளுக்கு சென்பட்டையான குட்டையான கூந்தல், இதை பார்த்து எப்படி "கார்குழலி" என பெய வைக்க உனக்கு துணிவு வந்தது? என்று கிண்டலாக கேட்கவே,

அம்மாவிற்கு சலிப்பு ஏற்பட்டு,"நான் எந்த தமிழ் பெயர் கொண்டுவந்தாலும் அவளுக்கு பொருந்தமான பெயர் இல்லை என்கிறீர்கள்.எனவே நீங்களே ஒரு பெயர் சொல்லுங்கள் என்றது ,அப்பாவிற்கு பிடித்த அனிதா என்ற பெயரை எனக்கு வைக்க முடிவு செய்தார்களாம்.

எனக்கு பெயர் வைத்த இந்த கதையை கூறிவிட்டு அம்மா மீண்டும் தொடர்ந்தார்கள்."என் வயிற்றில் பிறந்துவிட்டு மூக்கு,முழி எதுவுல்லாமல் இருக்கிறாள்.எங்கிருந்து இவளுக்கு சைனாகாரர்கள் போல சப்பை

முக்கும்,கடுகுபோல கண்ணும்,செம்பட்டை முடியும் வந்ததோ தெரியவில்லை.ஒருவேளை ஆஸ்பத்திரியில் குழந்தை பிறந்ததும்,வேறு ஒருவருக்கு பிறந்த குழந்தையை தவறி மாற்றி என்னிடம் கொண்டுவந்துகொடுத்துவிடார்களோ என்னவோ?" என வேடிக்கையாக கூறியதும் அனைவரும் சிரித்துவிட்டனர்.

ஆனால் என் மனம் மட்டும் சந்தேகத்தால் கேள்விகுறி எழுப்பி நின்றது.என் கண் ,முக்கு,தலைமுடி பற்றி நான் அப்போது கவலை படவில்லை.அதற்கு பதிலாக" நான் உண்மையில் இவர்களின் சொந்த பெண் இல்லையா?"என்ற சந்தேகம் வந்துவிட்டது.பல நாட்கள் தனியாக உட்கார்ந்து கொண்டு அம்மா சொல்வது உண்மையாக இருக்குமா?என என் மனம் மிகவும் சிந்திக்கதொடங்கியது.அப்படி என்றால் என் சொந்த அப்பா அம்மா யார்? அவர்கள் எங்கு இருப்பார்கள்? என்றெல்லாம் என்ன தொடங்கியது.

1969-ம் வருடமும் பிறந்தது.நான் ஆறாம்

வகுப்பிற்கு சென்றுவிட்டேன்.அண்ணன் ஷான் ஏழாம் வகுப்பும், தம்பி பாட் ஐந்தாம் வகுப்பும் படித்துகொண்டிருந்தோம்.நான் கர்னாடக சங்கீதமும் ஓரளவிற்கு ஒழுங்காக பயிற்சி பெற்றுவந்தேன்.நான் நன்றாக பாடுவதால் ஓய்வு நேரங்களிலும் ,வகுப்பிலும்,என் சக மாணவிகளும்,டீச்சர் அனைவரும் என்னை பாட சொல்லி கேட்டு ரசிப்பார்கள்.

ஒவ்வொரு வாரமும் சனி,ஞாயிற்று கிழமைகளில் பெரியம்மா எங்களை அவர்கள் வீட்டிற்கு அழைத்து சென்று விடுவார்கள். அவர்களுக்கு ஒரே பிள்ளை என்பதால் குமாருடன் விளையாடுவதற்கு ,சனிகிழமை மத்தியானம் எங்கள் முவரை மட்டும் காரில் அழைத்துசென்று விடுவார்கள்.அம்மா எங்களுடன் வருவது நின்றுவிட்டது.நாங்கள் முவர் மட்டும் பெரியம்மா வீட்டிற்கு தனியாக செல்வது ஆரம்பிக்கதொடங்கியது.அம்மா எப்போதாவதுதான் எங்களுடன் வருவார்கள்.

ஆரம்பத்தில் பெரியம்மாவுடன் செல்வது

சுவாரஸ்யமாக இருந்தாலும் ,போக போக பெரியம்மா வீடு செல்வதுஎன்றால் பயமாக இருந்ததது.பெரியம்மா எங்களை மிகவும் மிரட்டி கொண்டே இருந்தார்கள்.பெரியம்மா சேதுவின் வீட்டில் கணேஷ் என்ற பெயரில் ஐம்பது வயது மதிக்கத்தக்க் ஒரு சமையல் காரரும்,அவருக்கு கீழு ஐந்து பெண்கள் அந்த வீட்டில் வேலைக்கு வைத்திருந்தார்கள் பெரியம்மா.அப்படியிருந்தும் பெரியப்பா,பெரியம்மா இருவரும் என்னையியும்,அண்ணன் ஷானையும் மிரட்டி தோட்டத்திலுள்ள செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதும்,என்னை பாதிரங்களைஎல்லாம் கழுவச்சொல்வதுமாக வேலை வாங்கிவந்தார்கள்.

. ஆனால் இதுபோல் பெரியம்மா எங்களை நடந்துகிரார்கள் என்று எங்கள் பெற்றோர்களிடம் எங்களிருவருக்கும் சொல்ல தோன்றாமல் இருந்துவிட்டோம்.பயந்து கொண்டு பேசாமால் இருந்துவிடிவோம்.ஒவ்வொரு சனிக்கிழமையும்,ஞாயிற்றுகிழமையும் அங்கு போவதை வெறுத்தோம்.ஆனால் ஏனோ

தெரியவில்லை பெரியம்மா வந்து எங்களை அழைக்கும்போது வரமுடியாது என கூற எங்களுக்கு துணிச்சல் இல்லாமல் இருந்தோம்.அம்மாவிடம் கூட பெரியம்மா வீட்டிற்கு போக முடியாது என கூற தெரியாமல் இருந்து விட்டோம்.

அம்மா வீட்டில் இல்லாத சமயம், பெரியம்மா எங்கள் வீட்டிற்கு வந்து, ராஜாம்ப பாட்டியிடம் கூறிவிட்டு,எங்கள் அவர்கள் வீட்டிற்கு அழைத்து போயி விடுவார்கள்.அம்மாவும் இதுபற்றி பெரியம்மாவிடம் எது கேட்பதில்லை.அக்காதானே என்று பேசாமல் இருந்துவிடுவார்கள்.

அம்மாவோ ,அப்பவோ, எங்கள் பற்றி பொறுப்பாக எதுவும் சிந்திக்காமல் இருந்ததை தனக்கு சாதமாக்கி கொண்ட பெரியம்மா அதன் பிறகு வாரகடைசியில் மட்டுமில்லாமல், சமயம் கிடைக்கும் போதெல்லாம், எங்களை காரில் தூக்கி போட்டுகொண்டு சென்றுவேடுவார்கள்.வெகு நாட்களுக்கு

அவர்கள் வீட்டில் வைத்துகொண்டு என்னையும்,அண்ணன் ஷானையும் அடிமைகள் போல் நடத்தி, வேலை ஆட்கள் போல் நடத்தி வந்தார்கள்.யாரிடமும் இதை பற்றி கூற தெரியாமல் வெகுளித்தனமாகவும்,பயந்த சுபாவத்துடனும் பேசாமால் இருந்துவிட்டோம்.

அம்மா ,பெரியம்மாவை மிகவும் நல்லவர்கள் எனவும்,தன் குடும்பத்தில் மீது மிகவும்அக்கறையாக இருப்பதாகவும் நம்பி வந்தார்கள்.மேலும் பல வருடங்கள் பெரியம்மா இங்கிலாந்திலும்,அமெரிக்காவிலும் இருந்து விட்டு திரும்பிய வந்திருந்ததாலும் ,பல வருடம் பிரிவினைக்கு பிறகு ஒன்றான சகோதரிகள் இருவரும் மிக ஒத்துமையாக காணப்பட்டார்கள்.அம்மா, பெரியம்மாவின் ஒரே மகன் குமார், பதிமுன்று வருடங்கள் கழித்து அவர்களுக்கு பிறந்த ஒரே குழந்தை என்பதால் மிகவும் அக்கறையுடனும்,அன்புடனும் நடத்திவந்தார்கள்.

அம்மா,பெரியம்மா ,நாங்கள் முவரும்

,பெரியமாவின் மகன் குமார் ஒன்றாக வெளியே எங்காவது சென்றால் எங்களை விட , குமாரை மிக நன்றாக பார்த்துக்கொள்வார்கள் அம்மா.

ஒவ்வொரு முறையும், நாங்கள் பெரியம்மா வீட்டிற்கு செல்லும் போதெல்லாம் அவர்கள் அமெரிக்கா சென்று வந்த பயண கதையை கூறிவந்தார்கள். இரவு சாப்பாட்டிற்கு பிறகு அம்மா,நான், அண்ணன் ஷான்,தம்பி பாட் ,குமார்,மற்றும் பெரியம்மா வீட்டில் வேலை செய்யும் ஆறு வேலை ஆட்களும், மொட்டை மாடியில் சென்று, அங்கு கீழே ஜமுக்காளத்தை விரித்து போட்டுவிட்டு, குடிக்க தண்ணீரும்,சாப்பிடுவதர்க்கு ச்னாக்கும் வைத்துவிட்டு பெரியம்மாவை சுற்றி உட்கார்ந்துகொண்டு, அந்த நிலா வெளிச்சத்தில் .குளு ,குளுவென வீசும் தென்றல் காற்றை அனுபவித்தவண்ணம்,நேரில் பார்த்து

ரசிப்பது போலவும், கண்ணிற்கு முன்னே படம் ஓடுவது போலவும் பெரியம்மா உறுக்கமாகவும் ,சுவாரஸ்யமாகவும் கூறும் கதைகளை

ஆர்வத்துடன் கேட்டுவந்தோம்.பெரியம்மா கதை சொல்வதர்க்குமுன் என்னிடமும், அண்ணன் ஷாநிடமும் பேப்பர் பென்சிலை கொடுத்து அவர்கள் சொல்லிய கதையை ஒரு கட்டுரையாக எழுதி அவர்களிடம் காண்பித்தால், அடுத்த முறை கதையை தொடருவதாக கூறி எங்களிருவரையும் குறிப்பு எடுத்துகொள்ள சொல்வார்கள்.

அவர்கள் கதை கூற ஆரம்பித்த பிறகு ஒவ்வொரு வாரமும் பெரியம்மா வீடு செல்வதை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து வந்தோம். அவர்கள் அன்று சொன்ன கதை இன்றும் பசுமையாக என் நினைவில் நின்றிருக்கிறது.பெரியம்மா எதையும் அழகாக, மனதி ல் பதிவது போல பேசுவார்கள்.ஒரு சமயம் எங்கள் மீது அக்கறையாக இருப்பதுபோல் தன்மையாக பேசுவார்கள்.மறுசமயம் சற்று கொடுமையான வார்த்தைகளை பேசி எங்களை அடித்து வேலை வாங்குவார்கள்.சிறிய குழந்தைகள் எங்களால் பெரியம்மாவை சரியாக எடைபோட தெரியாமல் குழம்பிய நிலையில் இருந்தோம்.

பெரியம்மா கப்பலில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் ,பல நாடுகளை சுற்றி பார்த்த நிகழ்ச்சிகளையும் ,அமெரிக்காவில் தங்கியிருந்த மூன்று வருங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் கூறியதை கேட்கும்பொழுது எங்கள் அனைவருக்கும் பெரியம்மாவுடன் கூடவே கப்பலில் சென்று உலகத்தை சுற்றி வந்தது போல் அவ்வளவு உறுக்கமாகவும், அழகாகவும் கூறியதை இன்னும் என்னால் மறக்க முடியாத நிகழ்ச்சியாக நினைவில் நிற்கிறது.

14

அத்யாயம்-பதினான்கு

பெரியம்மா சேது சரித்திர பாடத்தை விருப்பமாக எடுத்து எம்.ஏ படமும்,ஆசிரியை பயிற்சி பட்டமும் பெற்று இருந்தார்கள்.அதுமட்டுமல்ல பெரியம்மா பள்ளிகூட இறுதி தேர்வில், தமிழ்மாநிலத்தில் முதலாவதாக மதிப்பெண்களை பெற்று தங்க மெடலும் பெற்றிருந்தார்கள். கல்லூரியில் சரித்திர பாடத்தில் முதலாவது வகுப்பில் தேறி தங்க மெடலும் பெற்றிருந்தார்கள்,சரித்திரத்தில் படித்த இடங்களை சுற்றிபார்க்க மிகவும் ஆர்வம் கொண்டவராக இருந்ததாகவும்,ஆனால் அது

அவர்கள் வாழ்க்கையில் நடக்க சந்தர்ப்பம்
ஏற்பட வாய்ப்பு மிக மிக குறைவு என்பதாலும்
வெளிநாடு செல்லும் வாய்ப்பு தன கனவுலகில்
மட்டுமே பெறமுடியும் என்று எண்ணிய
பெரியம்மாவிற்கு 1947-ம் வருடம்
இங்கிலாந்திற்கு செல்லும் வாய்ப்பை அரசாங்கம்
முலம் ;பெற்று இரண்டு வருடங்கள்
லண்டன்,இங்கிலாந்திற்கு சென்று 1949-ம்
வருடம் இந்தியாவிற்கு திரும்பி
,ஒருஉயர்நிலைப்பள்ளியில் தலைமை
ஆசிரியையாக நான்கு வருடங்கள்
பணியாற்றியதாகவும் ,அவர்கள்
வெளிநாட்டுப்பயணம் அத்துடன் முடிந்துவிட்டது
என நினைத்துக்கொண்டிருக்கையில் 1954-ம்
வருடம் டிசம்பர் மாதம் போல் அமெரிக்காவில்
வாஷின்டன் ஸ்டேட்டில் பொது பள்ளி
ஸ்தாபனத்திலிருந்து ஆசியா கண்டத்தை
பற்றியும்,முக்கியமாக இந்திய தூர கிழக்கு
நாடுகளை பற்றியும் அங்குள்ள
மாணவ,மாணவிகளுக்கு அறிய ஆவல்
கொண்டிருப்பதால் அதை ஒரு இஷ்டபாடமாக

உயர்நிலைப்பள்ளிகளில் அந்த வருடம் ஆரம்பிக்க இருப்பதால்,பெரியம்மாவை வந்திருந்து நடத்தி தருமாறு அழைப்பு வந்தது என மிக பெருமையாக கூறினார்கள். பிறகு தன பயண கதையை தொடர்ந்தார்கள்.

“இந்த அழைப்பை ஏற்க மிக ஆவலாக இருந்தேன்.இது நடக்க கூடிய காரியமா?என சந்தேகம் கூடவே பிறந்தது. போன முறை அரசாங்கம் முலம் சென்றதால் எந்தவித கஷ்டமும் இல்லை.முதல் முறையாக தன் மகள் வெளிநாடு செல்கிறாள் என என் பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் அனுப்பிவைத்தார்கள்.ஆனால் இம்முறை அப்படி அல்ல பலருடைய சம்மதத்தையும் பெற வேண்டும்.முதலாவதாக பெரியப்பா சம்மதத்தை பெறவேண்டும்,பிறகு வேலைசெய்யும் அரசாங்கம் எனக்கு வெளிநாடு செல்ல விடுமுறையும், வெளிநாட்டில் ஆசிரியராக வேலை செய்ய அனுமதியும் பெறவேண்டும்.இம்முறை சற்றே கடினமாகத்தான் இருக்கும்,இருந்தாலும் எப்படியாவது முச்சு பிடித்துகொண்டு

காரியத்தில் இறங்கிவிடவேண்டும் என மன உறுதியுடனும் ,முழுமூச்சுடனும் காரியத்தில் இறங்கினேன்.”

“இம்மாதிரி ஏற்பாடுகளில் நாம் ஈடுபடும் போது மிகவும் அவசிமானது பொறுமையே,அதே போல பொறுமையாக ஒவ்வொரு விஷமாக முடித்து அமெரிக்கா தூதர் ஆலயத்தில் விசாவிற்கு விண்ணப்பித்தபோது அவர்கள் என் பேப்பர்களை பார்த்துவிட்டு “உங்களை அழைத்திருக்கும் கல்வி ஸ்தாபனம் உங்களை தற்காலிகமாக வேலையில் எடுத்து கொள்வதற்கான அனுமதியை, அந்த இலாகா ஸ்தாபனத்தாரிடமிருந்து பெறவில்லை.ஆகையால் உங்களுக்கு விசா வழங்க இயலாது” என கூறியது கேட்டு தலையில் இடி விழுந்தமாதிரி இருந்தது எனக்கு.பிறகு எப்படியோ சமாளித்துக்கொண்டு இதற்கு ஏதும் வழி உள்ளதா? என அவர்களை கேட்டதற்கு காலம் தாமதிக்காமல் உடனே என்னை அழைத்திருக்கும் ஸ்கூலுக்கு கடிதம் போட்டு அனுமதி கடிதத்தை நேரடியாக அமெரிக்கா

தூதர் ஆலயத்திற்கு அனுப்பினால வரைவில் செயல்பட இயலும் என கூறிவிட்டார்கள்.

“இந்த ஜென்மத்தில் நடக்ககூடிய காரியமாக தெரியவில்லை என்ற நினைப்புடன், அந்த அமெரிக்கா கல்வி இல்லாகாவிற்கு விவரமாக கடிதம் எழுதிபோட்ட பத்து நாட்களுக்குள் விமானம் மூலம், கவலை படாதீர்கள் உங்களை கொண்டு வருவதற்கான அனைத்து வசதிகளும் எவ்வளவு சீக்கிரமாக செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக செய்து.இன்னும் வேறு ஏதேனும் விவரம் விசா வாங்குவதற்கு தேவைபட்டால் உடன் தெரிவிக்கவும் என்ற கடிதத்தை கண்டவுடன்தான் மிகவும் ஆறுதலாக இருந்தது.முகம் தெரியாத மக்கள் பல்லாயிரக்கணக்கான மயில்களுக்கு அப்பால் இருப்பவார்கள்-நம்மிடம் இவ்வளவு பரிவும்,அக்கறையும் காண்பிக்கிறார்களே என்பதை நினைக்கும்போது மனம் நெகிழாமல் இல்லை”.அதிலும் நம் அவஸ்தையை கேட்டு அதற்கான தேவைகளை உடனுக்குடன் செய்ததை என்னால் புகழாமல்

,மறக்காமல் இருக்க இயலாது"என மிகவும் உறுக்கத்துடன் பெரியம்மா சொல்வதை கேட்டபோது என் உடல் சிலிர்த்தது.

மேலும் பெரியம்மா தொடர்ந்தார்கள்."ஒரு வாரம் கழித்து விசாரித்ததில் எல்லா இடங்களிலிருந்தும் பதில் வந்து விட்டது இனி எப்போது வேண்டுமானாலும் வந்து விசா வாங்கி கொள்ளலாம் என்ற அறிவிப்பின் பேரில், அமெரிக்கா தூதர் ஆலயத்திற்கு சென்று கைரேகை பதிவு செய்து விட்டு, சில உறுதி மொழிகளை தாளில் கையழுத்து இட்டு முடித்தவுடன் விசா வழங்கப்பட்டது.இவை எல்லாம் சேர்ந்து சுமார் ஒன்றரை மணி நேரம் ஆயிற்று"என பெரும் உவகையுடன் கூறினார்கள் பெரியம்மா சேது.

"அமெரிக்கா செல்ல விசா வாங்கி முடித்ததும்,வழியில் பாரிசிலுள்ள யுனெஸ்கோ சபையில் சில முக்கியமான புத்தகங்களை சேகரித்து வைக்க முன்கூட்டியே அவர்களுக்கு நான் அறிவித்திருந்ததால்,இரண்டாவது

முறையாக பாரிஸ் செல்ல ரூபாய் 20 கட்டி அதற்கும் விசா வாங்கி விட்டு,எல்லா பேப்பர்களையும்,சர்டிபிகேடுகளையும் ,விசா கார்டையும் தரையில் பரப்பி வைத்துகொண்டு சரிபார்த்தவுடன் ஒரு பெரிய பெருமூச்சும், பெருமகிழ்ச்சியும் ஏற்பட்டதை வார்த்தையால் சொல்லி அடங்காது" என மிக பரவசத்துடன் முகமலர்ச்சியுடன் கூடினார்கள் பெரியம்மா.

"சென்னையிலிருந்து பம்பாயிக்கு இரயிலிலும்,பம்பாயிலிருந்து லண்டனுக்கு ரூபாய் 988/-கட்டி டிக்கெட்டும்,லண்டனிலிருந்து ஸ்தாம்ப்டன் ,நியூயார்க்கிற்கு ரூ 798/-கட்டி டிக்கட்டுகளும் சென்னை தாமஸ் குக்ஸ் ஏஜென்ட் மூலமாக வாங்கினேன்".என்றார்கள்.

பிறகு லண்டன் ,பாரிஸ்,நியூயார்க் ,வாஷிங்டனில் தங்குவதற்கான இடம் வேண்டும் என்பதால் அங்கெல்லாம் கடிதம் போட்டு தங்க ஏற்பாடுகளை செய்து முடித்து விட்டு, பிறகு இந்திய பணத்தை அமெரிக்கா டாலராக மாற்ற வேண்டுமே?போனதும் கைசெலவிர்க்கு

கொஞ்சமாவது டாலர் வைத்திருக்க வேண்டும் என்பதால் ஒரு டாலர் ரூ 4.25பைசே அப்போது,என்னிடமிருந்த சிறிது ரூபாயை டாலராக மாற்றிக்கொண்டேன்" என்றார்கள் பெரியம்மா.

இந்திய நாட்டை பற்றி அறிய அமெரிக்கர் அதிக ஆவல் காட்டியதால்,இந்தியர்கள் எப்படிப்பட்டவர்கள்,என்ன மாதிரி வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்று ஓரளவிற்கு அவர்களுக்கு உணர்த்த தேவையான படங்களையும் சேகரிக்க முயர்ச்சிகையில்,அதை வெகு சுலபத்தில் "நாரதர்"பத்திரிக்கையாளர்கள் முலமாகவும்,"ஆனந்தவிகடன் "பத்திரிக்கையாளர்கள் முலமாகவும் அவர்கள் ஆபீசிலிருந்தும்,ஜெமினி ஸ்டூடியோவிலிருந்தும், அபூர்வமான படங்கள் 100 கணக்கில் கிடைத்தது.அமெரிக்க குழந்தைகளும், அமெரிக்க பெரியவர்களும் அந்த படங்களை பார்த்து மிகவும் பிரம்மித்து போனார்கள்" என மிகவும் பெருமிதத்துடன் பெரியம்மா கூறுகையில் எங்களனைவருக்கும் அச்சமயம் அந்த படங்களை

பார்க்க ஆசை ஏற்பட்டது. அதை பற்றி கேட்டபோது. அந்த சமயம் அவர்களிடம் அப்படங்கள் எதுவும் இல்லை என கூறியதை கேட்ட எங்கள் அனைவருக்கும் மிகவும் ஏமாற்றமாக இருந்தது.

“1955-ம் வருடம் ஜூலை 12-ம் தேதி நான் சென்னையை விட்டு கிளம்பி ,என் பெற்றோர்களுடன் பம்பாய்க்கு இரயிலில் சென்றேன்.பம்பாய் துறைமுகத்தின் அருகில் உள்ள ஜெமினி கிளை அலுவலகத்திலேயே தங்க வசதி இருந்தததால், அங்கேயே தங்கிவிட்டோம்.பிறகு பம்பாய் நகரை சுற்றி பார்க்கையில்,மேல் நாட்டு வாழ்க்கைமுறை வாடை அங்கே அதிமாக தென்பட்டது.விலை வாசிகள் மிக உயர்ந்திருந்தது.பம்பாயை சுற்றி பார்க்கையில் சென்னை வாழ்க்கைமுறை எவ்வளவோ தேவலை என்றாகிவிட்டது.

மேலும் அங்கே வசித்து வந்த சென்னை குடும்பத்தாரிடம் பேசுகையில் அவர்கள் எல்லாம் பம்பாயில் இருப்பதையே பெரிதும் விரும்புவதாக

கூறினார்கள்.பம்பாயை விட சென்னை ஒரு அழகான,அமைதியான,ஒழுங்கான சுத்தமான ஒரு சின்னச்சிறு பட்டிணம் என்ற நான் தனிப்பட்ட முறையிலே என் கருத்தை சொல்வேன்".என்றார்கள் பெரியம்மா.

"நானும்,என் அப்பாவும் பம்பாய் பீச்சை பார்க்க சென்றபோது சென்னை மெரினா பீசிலுள்ள அழகு அதிலில்லை.பம்பாயில் இப்படியாக இரண்டு நாட்கள் கழித்துவிட்டு, முன்றாம் நாள் காலையில் லண்டனுக்கு செல்லும் கர்பியு கப்பல் வருவதாகவும்,மதியம் 2:30க்கு மணிக்கு பம்பாய் துறைமுகத்திலிருந்து கிளம்புவதாகவும் அறிவித்திருந்தபடியால் ,சரியான நேரத்தில் என் அப்பாவுடன் பம்பாய் கப்பல் துறைமுகத்தை அடைந்து கப்பலில் ஏற கியூவில் நின்று ,எல்லா க்லியரென்சும் முடித்துவிட்டு கப்பல் உள்ளே செல்வதற்கு நான் தயாராகுகையில்,பிரயாணிகளுடன் யாராவது இரண்டு பேர்களுக்கு மேற்படாமல் இருந்தால்அவர்கள் கப்பல் உள்ளே சென்று பயணிகளை வழியனுப்பிவர பாஸ்

கொடுப்பார்கள்.அதனால் என் அப்பா கப்பல் உள்ளே செல்ல பாஸ் வாங்கிகொண்டார்கள்.”.

“எல்லாம் முடிந்து கப்பலை நோக்கிநான் செல்லும்போது கூட்டத்தில் என் அப்பாவை காணவில்லை.இந்த கூட்டத்தில் அப்பாவை எங்கு நான் தேடி கண்டு பிடிப்பது என்ற மனவேதனையுடன் கப்பலுக்குள் செல்கையில் ,கப்பலுக்குள் இருந்து என் அப்பா வரவேற்ற ஆச்சரியத்தை சொல்ல வார்த்தையே இல்லை”என பூரிப்புடன் சொன்னார்கள் பெரியம்மா

“என்னக்கு முன்னே கப்பலுக்குள் சென்று எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா என ஆராய்ந்து பார்த்துவிட்டு, திருப்தி அடைந்தவண்ணம் என்னையும், நான் தங்க போகும் காபினுக்குள் அழைத்துசென்று காண்பித்தார்கள்.”என தாத்தா ஈஸ்வரை புகழ்ந்து பேசினார்கள்.

கப்பல்புறப்படசிலநிமிடங்களேஇருந்ததால்வழியனுப்

,"உடம்பைபார்த்துகொள்,ரொம்பவும்அலையாதே,கூ
,நல்லநண்பர்களைதுணையாககொண்டுஎங்குவேண்
எனநூறுதடவைபோல்கூறியதைஇன்னும்என்னால்
"என்றார்கள்பெரியம்மாமிகவும் உறுக்கத்துடன்
."அதேசமயம்பெரியப்பாஎன்னிடம்ஒரேவார்த்தையி
"சீக்கிரம்வந்துவிடு"
என்பதுடன்முடித்துகொண்டார்கள்"என்பதைசிரித்து

"அன்று ஜூலை 16-ம் தேதி 1955.மாலை 5:30
மணியளவில் கர்பியு
பம்பாய் துறைமுகத்திலிருந்து மெதுவாக நகர,பிரய
என்ற துக்கம் தொண்டையை அடைத்தது"
என மிகவும் உறுக்கமாக பெரியம்மா கூறியது கே

பம்பாயிலிருந்து லண்டன் செல்லும் அந்த கர்பியு
கப்பல்,பெண்ணின்சுல அண்ட் ஓரியண்டல்
ஸ்ட்ரீம் கம்பனியை சார்ந்தது.அந்த கம்பனிக்கு
தூர கிழக்கிலிருந்து இங்கிலாந்திற்கு
பிரயாணிகளை ஏற்றி செல்ல சுமார் 11
கப்பல்கள் இருந்தன.அந்த பதினொன்றில் நான்
சென்ற கர்பியு கப்பல்தான் மிக சிறியது, அந்த
கப்பலில் 14,280 டன் நிறையும்,415

பிரயாணிகளும்,302 கப்பல் சிப்பந்திகளும் இருந்தனர்.அந்த கப்பலில் முதல் வகுப்பு பிரயாணிகளும்,டூரிஸ்ட் வகுப்பு பிரயாணிகளும்,என்று இரண்டு வகையாக பிரக்கபட்டு,அதில் 4 பேர் தாங்கும் காபினும் ,3 பேர் தாங்கும் காபினும் இருந்தது. அதில் நான் நான்கு பேர் தாங்கும் காபினில் தங்கியிருந்தேன்.அந்த கர்பியு கப்பல் கடந்த யுத்த காலத்தில் படை வீரர்களை ஏற்றி செல்லும் கப்பலாக இருந்த்தது.

“அந்த கர்பியு கப்பலின் மேல் அதிகாரிகள் யாவரும் ஆங்கிலேயர்களே.மற்ற கீழ் சிப்பந்திகள் அனைவரும் கோவாவையும்,மராட்டியர்களும் ஆவார்கள்.அவர்கள் கொன்கினியும்,மராடியையும் பேசும் கிறிஸ்துவ இனத்தை சேர்ந்தவர்கள்.ஆனால் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் யாரும் அதில் இல்லை”என்று சற்றே மனக்குறையுடன் கூறினார்கள் பெரியம்மா.

“நான் சென்ற கப்பல் ஹாங்காங்

,சைனாவிலுள்ள பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு ஜூலை 2-ம் தேதி புறப்பட்டு ,சிகப்பூர் சென்று அங்குள்ள பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு ,கொழும்பு நாட்டில் இன்னும் சில பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு ஜூலை 16-ம் தேதி பம்பாயில் தங்கி, சுமார் 130 பேரை ஏற்றி கொண்டு இங்கிலாந்தை நோக்கி விரைந்ததது"என்று பெரியம்மா சொன்னதும்.எனக்கும் நாமும் எப்போது அவ்வாறு கப்பலில் போக போகிறோம் என்ற ஆவல் ஏற்பட்டது.

பெரியம்மா கப்பலில் சென்ற கதைகளை கேட்கும்போது நாங்கள் அனைவரும் கப்பலில் அமெரிக்கா செல்வது போல ஒரு உணர்வு ஏற்பட்டது.எல்லாவற்றையும் மறந்து அனைவரும் வாயை பிளந்த வண்ணம் கதைகளை கேட்டுகொண்டிருந்தோம்.

"கப்பலுக்குள் இருப்பது ஒரு சிறிய டவுனில் வசிப்பதுபோல எல்லா விதமான வசதிகளும் இருந்தது.ஒவ்வொரு வேளையும் விதவிதமான

சாப்பாடுகளும்,படிப்பதற்கு, நூல்நிலையமும்,துணி துவைக்கும் அறையும், நீச்சல் குலமும், உடற்பயிற்சி செய்யும் இடமும் என பல தரப்பட்ட வசதிகள் குறைவில்லாமல் இருந்தது.சாப்பிடுவதற்கு முதல் பந்தி,இரண்டாவது பந்தி,என இரண்டாக பிரிக்கபட்டிருந்தது.அதில் நான் முதல் பந்தியில் சாப்பிட இடம் கிடைத்தது.ஆனால் கப்பல் சாப்பாடு சுத்தமாகவே எனக்கு பிடிக்கவில்லை,வீட்டு சாப்பாட்டை நினைத்து மிகவும் ஏங்கிபோனேன்" என்றார்கள்.

"கப்பலில் சுமார் 20 இந்தியர்கள் பயணம் செய்ததால் எல்லோரும் ஒரே மேஜையில் சாப்பிடுவதற்கு உட்கார்ந்துகொண்டோம்.இந்தியாவில் கையில் சாப்பிட்டு பழக்கமுள்ள இந்திய பிரயாணிகளுக்கு முதல் முறையாக கப்பலில் போர்க்,கத்தியை உபயோகித்து சாப்பிடுவதில் மிகவும் சிரம்மமாக இருந்தது.பிறகு ஒர்வருகொருவர் எப்படி உபயோகிப்பது என சொல்லி கொடுத்துக்கொண்டு சாப்பாடு

உண்டதில் ,சாப்பிட்ட மாதிரியே திருப்தி ஏற்படவில்லை"என்றார்கள்.

"முதல் பந்தி காலையில் 8:15 மணிக்கு கலை உணவும்,12:30இற்கு மதிய உணவும்,இரவு 7:30 க்கு இரவு சாப்பாடும்,விடியற்காலையில் காபி ,பால்,பழங்கள் யாவும் அவரவர் காபினுக்கே வந்துவிடும்.அந்த மாதிரி வாழ்க்கை மிகவும் பிடித்துவிட்டது என்னக்கு.காலையில் காபி,டீ ,பால்,பழம் யாவும் படுக்கைக்கே வந்துவிடுகிறது.மணி அடித்தால் சாப்பாடு.அலுவலக வேலை ,குடும்ப கவலை,மற்ற கவலைகள் எதும் இல்லாமல், ஹாயாக கப்பலில் உலவி வந்தது ,வேறெங்கும் கிடைக்காத ஒரு ஓய்வும்,மனநிம்மதியும் அளித்தது.சுற்றிலும் நீல கடலும்,மேலே நீல வானமும்,இதற்கிடையில் சிறிய கப்பலில் நிம்மதியாக மேற்கு நோக்கி ஒய்யாரமாக ஊர்ந்து சென்றதை நினைக்கையில் இன்றும் மனதில் பசுமையாக உள்ளது"என பேரு முச்சுவிட்டார்கள்" பெரியம்மா .

கர்பியு கப்பல்
இங்கிலாந்திற்கும்,ஹாங்காங்கிற்கும் மிடையே
உள்ள பிரயாணிகளை ஏற்றி செல்லும்
வழக்கமாக இருந்ததால்,அப்போது சைனாவில்
அனேக வருடங்களாக வசித்து வந்த
ஆங்கிலேயர் ஒருவர் யுத்தத்திற்கு பிறகு
அமெரிக்கா ஆதிக்கத்திற்குட்பட்ட ஜப்பானில்
தங்க நேர்ந்ததாம். அமெரிக்க
அலுவலர்கள்,சீனா,மலேயா,சிங்கபூரிலிருந்து
மேல்படிப்பிரக்காக செல்லும் மாணவ,மாணவிகள்
அந்த கப்பலில் பயணம் செய்தார்கள்.வழக்கமாக
சுமார் ஒவ்வொரு முறையும் 18 நாட்கள்
ஹாங்காங்கில் கர்பியு கப்பல் தங்கும்
,வருடத்திர்க்கு நாலு முறை ஹாங்காங் போயி
திரும்புவது வழக்கமாக
இருந்த்தது.ஹாங்காங்கிலிருந்து கிளம்பும் கர்பியு
கப்பல்சைனா,மலேயா ,கொழும்பு,பம்பாய்
,ஏடன்,போர்ட் செயட் ,துறைமுகங்களில்
இருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு
இங்கிலாந்திற்கு போயி சேர சுமார் இரண்டரை
மாதங்கள் ஆகும், அந்த இரண்டரை மாதங்களும்

பிரியாணிகள் கப்பல் வேலையாட்கள் 415 +302=717 பேர்களுக்கு வேண்டிய சகல உணவும்,மற்ற வசதிகளையும் ஐரோப்பாவிலிருந்து ஏற்றி வைத்துவிடுவார்கள்.இங்கிலாந்திற்கு கப்பல் திரும்பியதும் கப்பலில் உள்ள கடைகளில் சரக்குகளை வாங்கி மீண்டும் நிரப்பவும், கப்பல் முழுதும் கழுவி சுத்தம் செய்யவும்,கப்பலில் வேலை செய்பவர்களுக்கு ஓ ல் ஒவ்வொரு முறையும் லண்டன் துறைமுகத்தில் தங்கிவிடும்.இக்கப்பலில் சமையல் செய்பவர்கள் ஆங்கிலேயர்கள்,பரிமாறுபவர்கள் இந்தியர்கள". என்பதையும் பெரியம்மா கூற மறக்கவில்லை.

"நான் சென்ற கப்பலில் 150 முதல் வகுப்பு பிரயாணிகளும் 265 உல்லாசவகுப்பு பிரயாணிகளும் இருந்தார்கள்.அந்த கப்பலில் கோவாவை சேர்ந்தவர்கள் சில முஸ்லிம் சிப்பந்திகள் இருந்தனர்.அவர்க தனக்கென ஒரு சிறப்பு சமையலறையை கப்பலின் தளத்தில் ஏற்படுத்தி,அதில் தங்களுக்கு வேண்டிய புலால் முதலியவற்றை தயார் செய்து சாப்பிட்டு

வந்தார்கள்.அதே கப்பலில் ஐந்து பாகிஸ்தானியர்களும்,அவர்களிடம் கொஞ்சம் பணத்தை கொடுத்து விட்டு அந்த உணவை வரவழைத்து தினமும் ரசித்து சாப்பிட்டு வந்தனர்" என சற்றே பொறாமையாக கூறினார்கள் பெரியம்மா.

"கப்பலில் 12 வயதிற்குட்ட்பட்ட குழந்தைகட்கு,பெரியவர்கள் சாப்பிடும் ஒரு மணி நேரத்திற்கு முன்பே உணவு பரிமாறப்பட்டு விடும்.பெரியவர்கள் பிறகு நிம்மதியாக உட்கார்ந்து சாப்பிட வசதியாக இந்த ஏற்பாட்டை செய்திருந்தார்கள்".என பெரியம்மா வெகுவாக ஆதரித்து பாராட்டி பேசினார்கள்.

"கப்பலில் 20 பவுண்டு வரை ஒரு நபருக்கு உள்ள லக்கேஜ் எடுத்து செல்ல அனுமது உண்டு.அதற்கு மேல் ஒவ்வொரு பவுண்டு கணத்திற்கும் உள்ள பெட்டிகளுக்கு 5 ஷில்லிங் (சுமார் 4 ரூபாய்)என கணக்கு போட்டு பில்லை காபினுக்கு அனுப்பிவிடுவார்கள்.இந்த விஷயம் தெரியாத நான், 8 பவுண்டு அதிகமாக நான்

கொண்டு சென்ற கனத்திற்கு கணக்கு போட்டு 40 ஷில்லிங் அதாவது 2 பவுன் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் வேறு வழியில்லாமல் கப்பலிலுள்ள பர்சாரிடம் சென்று பணம் கட்டினேன்".என மிக வருத்தத்துடன் கூறினார்கள் பெரியம்மா.

"மேலும் அது ஆங்கிலேயர் கப்பல் என்பதால் ஆங்கிலேயர் பிரயாணிகளுக்கு எதுவும் நோய்வாய்பட்டால் இலவச மருத்துவமும்,மற்ற நாட்டு முதல் வகுப்பு பிரயாணிகளுக்கு 10 ஷில்லிங்கும்,மற்ற வகுப்பி பிரயாணிகளுக்கு 5 ஷில்லிங் எனவும்,அம்மை குத்திக்கொள்ள 101/2 ஷில்லிங்கும் கொடுக்கவேண்டும்.அந்த கப்பலில் ஹாஸ்பிடலில் மொத்தம் 8 படுக்கைகள் இருந்தது.அதிக நோய்வாய்பட்ட பிரயாணிகள இதில் வைத்து கவனித்துவந்தார்கள்.இந்த வைத்தயசாலை கப்பலின் மேல்தளத்தில் ஒரு முலையில் தனியாக வைக்கப்பட்டிருந்தது.அதற்க்கு காரணம் அந்த நோய் மற்றவர்களுக்கு பரவாமல் இருக்கே".என்றார்கள் பெரியம்மா.

“துணிகளை தொய்ப்பதார்கான ரூமில் 21/2 அடி நீளமும்,11/2 அடி அகலமும் 11/2 அடி
உயரமும் உள்ள தொட்டி இருந்தது.அதில் சுடும் நீ ,தண்ணீரை தொட்டியில் நிரப்பி சோப்பு போட்டு துணிகளை அதில் ஊறவைத்து,,கசக்கி துவைத்து சுத்தமான தண்ணீரில் அலசிவிட்டு,பக்கத்தில் துணிகளை பிழிவதற்கான மிஷின் இருந்ததால் அது துணிகளை பிழிந்து எடுத்துவிடும்.பிறகு துணிகளை காயவைப்பதற்கு என தனி அறையில் நிறைய கொடிகள் கட்டியிருக்கும்.அந்த அரை முழுதும் ஹீட்டர் போட்டிருப்பதால் துணிகளை கோடியில் காயவைத்ததும் விரைவில் காய்ந்துவிடும் .துணிகள் காய்ந்தவுடன் ஐரன் செய்வதற்கு தனியாக உள்ள ரூமில் ,மின்சாரத்தால் இயங்கும் ஐரனால் செய்யப்பட்ட பெட்டியில் ஐரன் செய்து வருவது மிகவும் வசதியாக இருந்தது”. என்றார்கள்.

“வேலைக்காரர்களை வைத்து துணிதுவைத்து,ஐரன் செய்து போட்டு பழகிய

இந்திய பிரயாணிகளுக்கு ,அந்த கப்பலில் தாங்களாக எல்லாம் செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதால் ஆரம்பத்தில் எங்கள் அனைவருக்கும் மிகவும் கஷ்டமாக இருந்தது.பிறகு சிறுது சிறுதாக துணிதுவைக்க, துணி ஐரன் செய்ய கற்று கொண்டுவிட்டோம் “. என பெரியம்மா மிகவும் நகைச்சுவையாக கூறினார்கள்.

“துணிதுவைப்பதும் ,துணி ஐரன் செய்வதற்கும் கப்பலில் அதிக பணம் செலவு செய்ய வேண்டும் என்பதால் ,இந்திய பிரயாணிகளாகிய எங்களுக்கெல்லாம் வேறு வழியின்றி நாங்களே செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டுவிட்டது”.என்றார்கள்.

“கப்பலில் மொத்தம் 50 குழந்தைகள் இருந்தனர்.வயது ஒன்றிற்குட்பட்ட குழந்தைகளுக்கு டிக்கெட் கிடையாது.இலவசமாக செல்லலாம்.வயது ஒன்றிலிருந்து மூன்று வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு 1/4 டிக்கெட்,வயது மூன்றிலிருந்து பன்னிரண்டு

வயதிர்க்குட்பட்ட குழந்தைகளுக்கு 1/2 டிக்கெட்டும் ,பன்னிரண்டு வயதுக்கு மேல்பட்ட குழந்தைகளுக்கு முழு டிக்கெட்டும் இருந்தது". என்றார்கள்.

பம்பாயிலிருந்து புறப்பட்ட கர்பியு கப்பல லண்டன் துறைமுகத்தை அடிய 18 நாட்கள் ஆயிற்று.அந்த 18 நாட்களும் 18 நிமிடங்களாக பறந்து சென்றுவிட்டது.தங்கள் இஷ்டப்படி இராத்திரி ,பகலாக காலம் கழித்ததில் நாட்கள் நகர்ந்ததே தெரியவில்லை.கப்பலை விட்டு இறங்கும் போது அனைவருக்கும் மிகவும் மனது கஷ்டமாகவே இருந்தது". என சொல்லி விட்டு அந்த 18 நாட்களும் எப்படி 18 நிமிடங்களாக பரந்த்தது எனவவும் விவரமாக கூறினார்கள்.

"கப்பல் பம்பாயிலிருந்து புறப்பட்டதும், நல்ல மழை.கடல் கொந்தளிப்பாக இருந்தது.இரண்டு,மூன்று நாட்களுக்கு கப்பல் மிகவும் ஆடியது.சில சமயம் கடல் ஆத்திரத்துடன் கொந்தளித்து, கப்பலில் மேல் தள்ளத்தில் வந்து மோதியது.ஏடன் துறைமுகத்தை அடையும்வரை

கப்பல் ஆட்டத்துடனே நகர்ந்து சென்றது. பிரயாணிகள் அனைவரும் ஏதாவது ஒன்றை பிடுத்துக்கொண்டுதான் நடக்க வேண்டிய நிலை.அந்த மூன்று நாட்களில் நேராக நடந்தவர்கள் யாரும் இல்லை என்றே சொல்லலாம்". என சிரிப்புடன் கூறினார்கள்.

"கப்பல் ஆடும் ஆட்டத்தில் மக்களை இப்படியும்,அப்படியும் கொண்டு தள்ளியது கண்டு அனைவருக்கும் ஒருபுறம் சிரிப்பாக இருந்தாலும்,மறுபுறம் பயம் மனதை கவ்வியது.கப்பல் சுமார் 18 மைல் வேகத்தில் சென்றது.புறப்பட்டு 5 நாட்களுக்கு கடல் அலைகளை தவிர நிலத்தை பார்க்க முடியவில்லை". என்றார்கள்.

"ஜூலை 16-ம் தேதி,1955 வருடம் புறப்பட்ட கப்பல் 5 நாட்களில் அரேபியா கடலை கடந்து 21-, தேதி காலையில் அரேபியாவிலுள்ள ஏடன் துறைமுகத்தை அடைந்ததது.ஏடன் ஐ நெருங்க,நெருங்க,வெய்யில் அதிமாகியது.மழை நின்று கடல் கொந்தளிப்பு நின்று,கடல் அலை

சீறல்களும் குறைந்து அடங்கிவந்த்தது.ஜூலை 21-ம் தேதி 1955 காலை சுமார் ஏழு மணியளவில் ஏடன் துறைமுகத்தை அடைந்து,துறைமுகத்தின் சிறிது தூரத்திலேயே நின்றுவிட்டது.கரைக்கு செல்வோர் சிறிய படகுகளில் சென்றோம்.சிறிய படகில் கரைக்கு சென்று கப்பலுக்கு திம்பிவர 21/2 ஷில்லிங் கொடுக்கவேண்டும்"என்றார்கள்.

"அன்று ஜூலை 21-ம் தேதி,புதன்கிழமை,1955-ம் வருடம் நல்ல வெய்யில் கொளுத்தியதில் காலை உஷ்ணமே தாங்கமுடியாமல் போயிற்று .கப்பலில் ஒரு சிலரை தவிர மற்றவர்கள் கரையை சுற்றி பார்க்க கிளம்பிவிட்டோம்,கப்பல் சிப்பந்திகள் யாரும் இறங்கவில்லை."என்றார்கள்.

"ஏடன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் 1839-ம் ஆண்டே சேர்க்கப்பட்டதால் ,அதை "விக்டோரியா அரசியில் மணி மகுடத்திருக்கு பொலிவு தந்த முதல் மாணிக்கம்" என்று அழைக்கப்பட்டது.1947-ம ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி வரை ஆட்சிமுறையில்

இந்தியாவுடன்
பினைக்கப்பட்டிருந்தாலும்,பின்னல் குடியேற்ற
அந்தஸ்தை பெற்றது". என்றார்கள்
பெரியம்மா.கிழக்கிலுள்ள நாடுகளில் ஏடன்
நாட்டில்தான் கப்பல்களுக்கு எண்ணெய் ,கரி
ஆகியவற்றை நிரப்பும் துறைமுகமாக
இருந்தது.அச்சமயம் பிரிட்டிஷ் காலனியிலுள்ள
அந்த நகரத்தில் பரப்பளவு 75 சதுர
,மைல்களுக்கும்,80,000 ஜனத்தொகையும்
கொண்டிருந்தது "எனவும் விவரித்தார்கள்.

"கப்பலிலிருந்து பார்க்க ஏடன் நகரம் மிக
அழக்காக தோன்றியது.ஒரே பாறைகள் மயமும்
,கட்டாந்தரை குன்றுகளுக்குமேல் அடுக்கடுக்கான
அமைந்த வீடுகளின் தோற்றமும் பார்க்க மிக
அற்புதமாக காட்சி அளித்தது.நான் இறங்கி
சென்ற அந்த கரைக்கு பெர்ய "வேல்ஸ்
இளவரசரின் பியர்" என்றும்,ஆனால் அதற்க்கு
முன் 1947-ம் ஆண்டு நான் இங்கிலாந்து சென்ற
போது ,நான் சென்ற அந்த கப்பல் ஏடன்
துறைமுகத்தை ஞாற்றுகிழமை சென்றடைந்ததால்
ஊர் அடங்கிய நிலையில் ஏதும் சுற்றி பார்க்க

முடியாமல் போயிற்று என்ற மனகஷ்டத்தை இம்முறை தீர்ந்தது “என மிகவும் ஆனந்த பரவசத்துடன் கூறினார்கள் பெரியோம்மா சேது.

“அந்த பாலைவனத்தின் பிரான்தியத்தில் நகருக்கு வெளியே அழகிய சிறு சோலை வனமான”மல்லா”என்ற சிறிய கிராமத்தில் நல்ல அழகிய காட்சிகளுடன் தோன்றிய தோட்டங்கள் அருமையாக காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது.சூரிய அஸ்தமனத்தின் போது இன்னும் அற்புத அழகாக அந்த சிறு கிராமம் காணப்பட்டது”. என பெரியம்மா மெய்சிலிர்க்க கூறினார்கள்.

“ஊருக்கு வெளியே பெரிய,பெரிய,பிரும்மாண்டமான குளங்களை கண்டு அனைவரும் வியந்து நின்றோம். ஆனால் அவைகளை எப்போது ஏற்படுத்தப்பட்டது என்ற விவரம் மட்டும் அறியமுடியாமல் போய்விட்டது.ஆனால் அவைகள் பார்சி தேசத்தவர்கள் கி,பி,6-ம் நூற்றாண்டில் அரேபியரை ஆண்டுவந்த போது

கட்டபட்டிருக்கலாம் எனவும்,ஆனால் இதை அரேபியர்கள் ஒத்துக்கொள்ளவில்லை எனவும் அக்குளங்களை பார்க்கையில், அவைகளை கட்டியவர்கள் முதல்தர என்ஜினீயர்ஸ் ஆகவே இருக்க வேண்டும் என்பதில் ஒருதுளி சந்தேகமும் இல்லை என்றே சொல்லலாம்.சுமார் 45 நிமிடங்கள் விடாமல் தொடர்ந்து அடைமழை பெய்தால் அக்குளத்தில் 200 லட்சம் காலன் நீர் நிரம்பிவிடுமாம்,இதுபோல் 1953-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிகழ்ந்ததாம்". என்றார்கள் பெரியம்மா.

"குளங்களை சுற்றிலும் தோட்டங்கள் அமைக்கப்பட்டு இருந்தது.கிறிஸ்து பிறப்பதற்கு முன் உள்ள ஆயிரம் ஆண்டுகளுக்கு அரேபியாவில் "சமேரியன் நாகரீகம் "என ஒன்று இருந்ததாம்.அந்த சமயம் அனேக அணைகளும்,நீர் தேக்கங்களும் உண்டாக்கப்பட்டதாம்.ஒருவேளை அச்சமயம் இக்குளங்கள் கட்டப்பட்டிருக்கலாம் என யுகிக்கபடுகிறது.முனொருகாலத்தில் எரிமலையாய் காட்சியளித்த பிரதேசத்தில், இப்போது

இக்குளங்களை பிரமாதமான வேலைபாடுகளுடன் அமைத்திருப்பதை பார்க்க மிகவும் கண் கொள்ளாத காட்சியாக இருக்கிறது"என வாயார அதை புகழ்ந்து தீர்த்தார்கள் பெரியம்மா.

"நகரங்களில் ஒரு பக்கத்தில் மலைகள் குடைந்து ரோடுகள் போடப்பட்டிருக்கிறது.அதற்க்கு "மெயின் கணவாய்"என்ற பெயரும் அதில் ஒரு சுவாரஸ்யமான கதை சொல்லப்படுக்கிறது "என பெரியம்மா கூறியதும் ,சுற்றி உட்கார்ந்திருந்த எங்கள் அனைவரின் மனதிலும் ஒரு பெரிய ஆர்வம் ஏற்பட்டது.பெரியம்மா சொல்வதை உன்னிப்பாக கேட்க ஆரம்பித்தோம்.

"கிறிஸ்துவ வேதத்திலுள்ள பழைய டேஸ்டிமெண்டில் முதல் புத்தகமாக ஜெனசிஸ் என்ற நூலில்,நான்காவது அத்தியாயத்தில் ஒரு கதை உண்டு.உலகில் முதன் முதலாக படைக்கப்பட்ட ஆதாம்,ஏவாள் இருவருக்கும் காயின்,ஆபேல் என்ற இரண்டு மகன்கள் பிறந்தனராம்.அதில் மூத்தமகனான காயின்

என்பவர்தான் தன சகோதரன் ஆபேலை
கொலை செய்து விட்டதாகவும்,உலகிலேயே
நடைபெற்ற அதுதான் முதல் கொலை என்றும்
,அந்த கொலை இப்பொது அமைந்துள்ள ஏடன்
நகரில் நடந்ததாகவும்,கொலை செய்த அந்த
காயனின் உடலும் அந்த மெயின் கனாலில்தான்
புதைக்கபட்டிருக்கிரதேன்றும்,உலகிலேயே முதல்
கொலை அந்த ஏடன் நகரில்தான் ஏற்பட்டதால்
அதற்கு
தண்டனையாக கடவுள் என்றும் ஏடன் நகரை மீ
வருவதாகவும்,அது உண்மையா
,பொய்யா என்பது பற்றி கதை கேட்ட நான் கவ
என நகைசுவையாக கூறினார்கள் பெரியம்மா.

15

அத்யாயம்-பதினைந்து

“நகருக்கு 10 மைல்களுக்கு அப்பால் அமைந்திருக்கும் “ஹெயிட் ஆடேமேன் “என்னும் இடத்தில் அமைந்திருக்கும் இயற்க்கை ஊற்றுக்கள் முலம் மக்களுக்கு தண்ணீர் அந்த ஏடன் நகருக்கு சப்ளை செய்யப்படுகிறது.டாக்ஸி சார்ஜ் ஒரு மணி நேரத்திற்கு ரூ 10/- கொடுத்துவிட்டு இரண்டு மணிநேரம் ஏடன் நகரத்தை சுற்றிவிட்டு கடைசி முன்று மணிநேரத்தை கடை தெருக்களில் சுற்றிப்பார்த்துவிட்டு ,இங்கிலாந்தில் செய்த பொருட்கள் இங்கிலாந்திலேயே விலை அதிகம்

,அதே பொருளை ஏடனில் வாங்கினால் உயர்ந்த பொருட்களை பாதிவிலைக்கு வாங்கிவிடலாம் “என்றார்கள்.

“மேலும் பெரிய கடைதெருக்களில் தவிர சின்ன கடைதெருக்களும் இருந்தது.அவைகள் பார்க்க மிக பழமையாக தெரிந்தது.வறுமையின் சாயல் நன்கு தென்பட்டது. தெருக்களில் ஒட்டகம் வண்டி இழுத்து செல்வது பார்க்க சற்றே வேடிக்கையாக இருந்தது.நம் நாட்டில் குதிரை பந்தயம் விடுவதுபோல, ஏடனில் வருடத்தில் பண்டிகை நாளன்று ஒட்டகம் பந்தயம் விடுவார்கள்.சிறிய சிறிய தெருக்களை சுற்றி பார்க்கையில் என் மனம் மிகவும் கஷ்டமாக இருந்தது.ஏன் என்றால் அந்த இடங்களில் வசித்த முஸ்லிம் மக்கள் எளிய தோற்றத்தில் காணப்பட்டார்கள்.தெருக்கள் மிக குறுகலாகவும்,சிறிதே அசுத்தமாகவும் காட்சியளித்தன .வீடுகளுக்கு வெள்ளை அடித்தே பல்லாண்டுகள் ஆயின போல் காட்சியளித்தது.தெருவில் நடந்து செல்லும் பெண்கள் தலையிலிருந்து கால்வரை முடிய

பர்தாவும்,பள்ளிக்கூடம் செல்லாது
சிறுவர்கள்,சிறுமியர்கள் தெருக்களில்
விளையாடிக்கொண்டும்,சில சில்லறை
சாமான்களை பிரயாணிகளுக்கு விற்று
கொண்டும் இருந்தனர்.பஸ்களில் கண்ணாடி
ஜன்னல்கள் இல்லாமல் காற்றோட்டமாக
இருந்தது.வெய்யில் தலை கொதிக்க, முன்று
மணிநேரம் சுற்றி விட்டு சரியான நேரத்தில்
கப்பலை வந்தடைந்தோம்".என்றார்கள்

"மேலும் ஹார்பரில் சில கடைகள் படகுகளில்
இருந்தது.கீழே இறங்கி வரமனமில்லாமல்
கப்பலிலேயே உட்கார்ந்திருந்த பிராணிகளையும்
சும்மா விடாமல் அப்படகு கடைகாரர்கள் தங்கள்
படகை கப்பல் ஓரமாக செலுத்தி
அங்கிருந்தபடியே மேலே தளங்களில்
பிரயாணிகளுக்கும் விற்பனை செய்து
கொண்டிருந்தனர்.பெரிய தாம்பு கயிறுகளை
மேதலத்தில் விட்டெரிந்து பிரயாணிகளை அதை
பிடித்துக்கொள்ள செய்து ,பிறகு அவர்களுக்கு
வேண்டிய சாமான்களை சிறு கூடையில் கட்டி
வைத்து மேலே அனுப்பி ,அதற்குண்டான

பணத்தை அதே கூடையில் வைக்க சொல்லி கீழே இறக்கி எடுத்து கொண்டார்கள்.கப்பலை சுற்றி பல படகுகள் மொய்த்து கொண்டு ஒரே கூச்சலாகவும்,பொருள்களின் விலையை கூறிக்கொண்டும்,பிரயாணிகள் கப்பலின் மேல்தளத்திலிருந்து பேரம் பேசுவதும் பார்க்கையில் காது வலி எடுத்துவிடும் போல இருந்தது."என்றார்கள் பெரியம்மா.

"காலையில் சுமார் 7:30 மணிக்கு ஏடன் வந்த கப்பல் ,சுமார் 11:30மணிக்கு ஏடன் துறைமுகத்தை விட்டு கிளம்பியது.5 நாட்களாக கரையை காணாது நடு கடலில் கப்பலுக்குள்ளாகவே சுற்றி சுற்றி வந்த பிரயாணிகளுக்கு, ஏடன் துரைமுகத்திலிரங்கியது ,காலார தெருக்களில் நடந்து பொருட்களை வாங்கி வந்ததில் மிகவும் ஆனந்த பரவசமாக இருந்தது."

"ஏடன் ஐ தாண்டியதும் கப்பல் செங்கடலில்நுழைந்தது.உஷ்ணத்திற்கு இந்த கடல் பெயர்போனது.செங்கடல் என்றால் அது

சிவப்பு நிறமாக இருக்கும் என நினைக்க வேண்டாம்" என எங்கள் மனதில் நாங்கள் நினைத்தை உணர்ந்ததுபோல கூறிவிட்டு,"செங்கடல் நீல நிறமாகத்தான் இருக்கும்.ஏடன் ஐ நெருங்கும் போதே உஷ்ணம் தாங்கமுடியாமலிருந்தது. .ஏடன் ஐ தாண்டியதிலிருந்து , செங்கடலை தாண்டும் வரை உஷ்ணம் தாளாது அனைவரும் துடித்துவிட்டோம்.கடல் காற்று இல்லாமல் கடலுக்கு நடுவே இருப்பது ஒரு மாதிருயாக கடினமாக இருந்தது.ஏடன் ஐ கடந்து இரண்டு நாட்களுக்கு ஒரே தவிப்பாகவும்,கொடுமையான வெய்யிலில் வியர்த்து ,வியர்த்து கொட்டியது.காபினுக்குள் இருக்கவும் முடியவில்லை,நிழலில் இருந்தால்லும் வியர்த்து கொட்டியது.இந்த மாதிரி உஷ்ணம் பிரேதேசத்தில்தான் ப்ரேத்யோகமான நிலவு தெரிகிறது".என்றார்கள்.

பிறகு தொடர்ந்து நெஞ்சை உறக்கும் ஒரு கதையையும் கூடவே கூறவே எங்கள் அனைவரின் கண்களிலிருந்தும், எங்களையும்

அறியாமல் கண்ணீர் வழிந்தோடியது."சைனா தேசத்தில் நாற்ப்பது ஆண்டு காலமாக வசித்துவிட்டு, கடைசி காலத்தில் தாய் நாடு திரும்பி சென்று கொண்டிருந்த ஆங்கிலேய முதியவர் ஒருவர், நான் சென்ற கர்பியு கப்பலில் பயணம் செய்தார்.செங்கடலில் ஏடன் ஐ தாண்டியதும் உஷ்ணம் தாளாது அந்த முதியவர் படுத்த படுக்கையாகி விட்டார்.ஆஸ்பத்திரியில் அவரை வைத்து மிக கவனமாக கவனித்து வந்தும் ,மறுநாள் அந்த கப்பலிலுள்ள ஆஸ்பத்திரியில் யாருக்கும் சொல்லாது இறந்துவிட்டார்." இதை கேட்ட எங்கள் அனைவருக்கும் மிகவும் அதிர்ச்சியாகவும்,வருத்தமாகவும் இருந்தது.40 ஆண்டுகள் கழித்து ஆவலுடன் தன் தாய் நாடாகிய இங்கிலாந்திற்கு திரும்ப வந்து கொண்டிருந்த அவர் வீட்டை அடைந்த பின் உறவினர்கூட மகிழ்ந்திருந்து உயிர் நீத்திருக்க கூடாதா?இப்படி அனாதையாக நடு கடலில் யாருக்கும் சொல்லாமல் சென்றுவிடாரே என அனைவரின் மனமும் மிக வேதனை

அடைந்தது.காலையில் உயிர் நீத்த அவரது உடலை 3 மணி நேரத்திற்கு பிறகு கப்பலில் மேல்தளத்தில் நன்றாக வெள்ளை துணியால்உறுதியாக சுற்றி ஜபம் செய்து(பாதிரியார் கொண்டு)பிரயாணிகள் அனைவரும் கூடி அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்தித்து, பின்பு எல்லோரும் அமைதியாய் நின்று சடலத்தை பார்த்த பின், அதை மெதுவாக இறக்கி சமுத்திரத்தில் தள்ளப்பட்டது.கப்பலில் யாராவது இறந்தால் சடலத்தை மேற்கொண்டு எடுத்துச் செல்லாமல் கடலில் தள்ளி விடுவார்கள்.இதை பார்த்ததும் எல்லோர் மனதிலும் பயமும்,பீதியும்,ஏற்பட தொடங்கியது.அவர் இறந்த சேதியை தந்தி மூலம் உறவினர்களுக்கு தெரிவித்துவிட்டனர்.

“கடலில் ஒருவர் இறந்தால் கட்டாயம் பயணம் முடிவதற்குள் மூன்று பேராவது உயிர்துறப்பது நிச்சயம் என்று யாரோ கிளப்பிய வதந்தி அனைவரது வயிற்றையும் கலக்கியது.இன்னும் இருவர் யார்,யார் என சீட்டு எழுதி குலுக்கி பார்க்கும் நிலை ஏற்பட்டது.சொன்னது

உண்மையானது போல ,ஆஸ்பத்திரியில் மற்றொரு நபர் கவலைக்கிடமாய் இருப்பதாக கேள்விப்பட்ட அனைவருக்கும் இன்னும் பயம் அதிகரித்தது.அவர் வங்காளத்தை சார்ந்த இளம் மாணவர்.புறப்பட்டதிலிருந்து அவர் யாருடனும் பேசவில்லை.வைத்ய படிப்பிர்காக சென்று கொண்டிருந்தார் அவர்.சாப்பாடு பிடிக்காததால்,அவர் சாப்பிடாமலேயே நாட்களை கடத்தியதாகவும்,தன்னுடைய குறைகளை யாருக்கும் தெரிவிக்காமலேயே காபினுக்குலேயே இருந்தததால், இரண்டு நாட்களாக காபினுக்குள் மயக்கமுற்ற நிலையில் இருந்த அவரை காபின் ஸ்டுவர்ட் மூலம் பர்சார் ஆபீசுக்கு தெரியவந்து ,ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து சிகிச்சை அளிக்கப்பட்டு ,மூன்று நாட்கள் கவலைக்கிடமாக இருந்த அந்த மாணவன் இனி ஆபத்தில்லை என மருத்துவர்கள் அறிவித்ததும்,கப்பலில் இருந்த எங்கள் அனைவருக்கும் உயிர் வந்தது போல் மன நிம்மதி ஏற்பட்டது" என மன உருக்கத்துடன் சொன்னார்கள் பெரியம்மா.

“செங்கடலை முக்கால்வாசி தாண்டியதும் உஷ்ணம் காற்று தணிந்தது .இதற்கு முன்னால் பிராணிகள் உஷ்ணம் தாளாமல் இரவில் கப்பலின் மேல்தளத்தில் சென்று தூங்கினோம்.கப்பல் மேல்தளத்திலும் உஷ்ண காற்று வீசியது.இப்படியாக செங்கடலை தாண்ட 5 நாட்கள் ஆயிற்று.எப்போது போர்ட் செயிட் துறைமுகம் வரும் என்ற ஆவலுடன் அனைவரும் காத்திருந்தோம்” என்றார்கள்.

“ஜூலை 21-ம் தேதி புதன்கிழமை பகலில் புறப்பட்ட கப்பல், ஞாயிற்று கிழமை ஜூலை 25-, தேதி 1955ல் இரவு சூயஸ் கனால் ஐ தொட்டது.சூயஸ் துறைமுகத்தில் சுமார் 4 மணிநேரம் நான் சென்ற கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டது.அந்த சூயஸ் துறைமுகத்தை தாண்டினால்தான் சூயஸ் கனாலுக்குள் நுழைய முடியும்.அந்த சூயஸ் கனால் 101 மயில் நீளமும் 984 அடி அகலமும் அதாவது 163கி.மீ.கொண்டிருந்ததால்,ஒரே சமயத்தில் இரு கப்பல்கள் கனாலுக்குள் போக இயலாது எனவே,ஏற்கனவே நான் சென்ற கர்பியு

கப்பலுக்கு முன் பல பெரிய கப்பல்கள் வாய்காலில் செல்ல வரிசையாக நின்று கொண்டிருந்தது.மாலை 7 மணிக்கு சூயஸ் துறைமுகத்தை அடைந்த எங்கள் கப்பல், இரவு 11 மணிக்குதான்,எங்கள் கர்பியு கப்பலில் முறை வந்து மெதுவாக நகர ஆரம்பித்தது .” என்றார்கள் பெரியம்மா.

“பிரெஞ்ச் நாட்டு நிபுணரும்,பொறியாளருமான பெர்டினாண்ட் -டி -லேப்பெஸ், ,ஈஜிப்ட் வைசராய், செயிட் பாஷாவை, அங்கே கால்வாய் கட்ட இணங்க வைத்து 1858-ல் யுனிவேர்சல் சூயஸ் ஷிப் கனால் என்ற கம்பெனி நிறுவப்பட்டு, கனால் கட்டும் உரிமையை பெற்றார்கள்.சில காலங்களுக்கு பிறகு சூயஸ் ஷிப் கனால், ஈஜிப்சியன் ஆதிக்கதிற்குட்பட்டு இயங்கியது .பிரெஞ்சுகாரர்களும்,எஜிப்சியனுக்கும் அந்த யுனிவேர்சல் சூயஸ் ஷிப் கனால் சொந்தமாக இருந்து வந்தது.ஏப்ரல் 25-ம் தேதி 1859-ம் வருடம் சூயஸ் கனால் கட்ட துவங்கி,10 வருடங்களுக்கு பிறகு நவம்பர் 17-ம் தேதி

1869-ம் வருடத்தில் அந்த கனால் திறக்கப்பட்டது. இதை கட்ட சுமார் 100 மில்லியன் டாலர் செலவாக்கப்பட்டது.இந்த சூயஸ் கனால் செங்கடலையும்,மேடிடரனியன் கடலையும் இணைக்கும் ஒரு கால்வாயாக அமைந்திருந்தது.பிரெஞ்ச் நிபுணர் (டிப்லமட்)பெர்டினண்ட்- டி- லேப்பெஸ்-ன் சிலை பிரமாதமாக வாய்க்கால் ஓரத்தில் காட்சியளித்தது".எனவும் குறிப்பிட்டார்கள் பெரியம்மா.

"வாய்க்கால் மிக குறுகியதாக இருந்ததால் கறையோரமுள்ள ஹோட்டல்கள்,நடன சங்கங்கள் ,கடைதெருக்கள்,பெரிய கட்டிடங்கள் எல்லாம் ஒரே ஜகஜோதியாக காட்சியளித்தது.விசாரித்ததில் மறுநாள் எகிப்தியரின் (ஜூலை 26-, தேதி) சுதந்திர தினம் என்பது அறிய வந்தது.கரை முழுதும் அழகாக அலங்கரிக்கப்பட்டு அந்த நள்ளிரவில் அனைவரின் கவனத்தையும் வெகுவாக கவர்ந்தது இழுத்தது.சங்கீத நிகழ்ச்சிகளின் ஓசை கப்பலிலுள்ளவர்கள் காதுகளில் இனிமையாக

ஒலித்தது.கப்பல்கள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக 8 மைல்வேகத்தில் சென்று கொண்டிருந்தது" என்று பெரியம்மா சொல்லுகையில் நாங்கள் அனைவரும் பெரியம்மாவுடன் சூயஸ் கனாலில் பயணம் செய்வதுபோல் இருந்தது.

"சுமார் இரண்டு மணிநேரம் சூயஸ் கனாலை பார்த்துவிட்டு இரவு ஒரு மணி அளவில் பிரயாணிகள் அனைவரும் தூங்குவதற்கு சென்று விட்டோம்/.எனவே இரவு முழுதும் சூயஸ் கனாலில் காப்பல் மிதந்து சென்றது.மறுநாள் காலையிலும் தொடர்ந்து சென்று கொண்டிருந்தது.காலையில் நாங்கள் அனைவரும் அவசர அவசரமாக காலை உணவை முடித்துவிட்டு,பகலில் சூயஸ் கனாலை பார்க்கும் ஆவலில் கப்பலின் மேல் தளத்திற்கு சென்று அமர்ந்து கொண்டு பார்க்கையில் சூயஸ் கனாலின் ஒரு புறம் அரேபியா கரையும் ,மறுபுறம் எகிப்து கரையும், மற்றும் ஆப்ரிகாவையும்,ஆசியாவையும் பிரிக்கும் கால்வாய் கரைகள் இரண்டிலும்

வீடுகளும்,ஆகாங்கே சிலர் மீன் பிடித்துக்கொண்டும் இருந்தனர்.எகிப்து வாய்க்கால் கரை ஓரம் நல்ல தார் ரோடும் போடபட்டிருன்தது.அதில் உல்லாச பயணிகள் பஸ்,கார்,மிலிடரி ட்ரேக்ஸ் செல்வதை பார்க்கையில், கரையில் செல்லும் அவர்கள் ஏகமாக கரகோஷத்துடன் கப்பலில் செல்லும் எங்களுக்கு மகிழ்ச்சியை தெரிவித்தார்கள்.நாங்களும் திரும்ப கைகளை உயர்த்தி எங்கள் நன்றியை கோஷமிட்டு தெரிவித்துகொண்டே சென்றோம்" என்றார்கள்.

"100 மைல்கள் தூரமுள்ள சூயஸ் கால்வாயை சுமார் 11 மணி நேரத்தில் கடந்து ,சயிட் துறைமுகத்தை காலை 10 மணிக்கு கப்பல் சென்று அடைந்தது.ஜூலை 26-ம் தேதி திங்கள் கிழமை 1955 அன்று துறைமுகத்தை அடைந்ததும், அனைத்து பயணிகளும் கரைக்கு சென்று திரும்ப இரண்டு மணி நேரங்களே இருந்தது.சயிட் துறைமுகம் வழிமுழுதும் கடைகள், ,சுற்றியுள்ள கப்பல்கள் முழுதும் கடைகளாக இருந்தது.வகைவகையான

பொருட்கள் கண்ணை பறித்தது.மேலும் அன்று சுதந்திர தினம் என்பதால் நகரெங்கும் ஒரே கொண்டாட்டமாக காணப்பட்டது.சயிட் துறைமுகத்தில் பெர்னாண்ட்- டி -லேப்பஸ் சிலை கம்பீரமாக நின்றிருந்தது.

. பெர்டினாண்ட்- டி -லேப்பஸ் ஒரு பிரெஞ்சுகாரர் என்பதையும் பெரியம்மா குறிப்பிட்டு கூறினார்கள்.

“சூயஸ் ஷிப் கனால் கம்பெனி, அத்துறைமுகத்தின் அருகே கட்டப்பட்டிருந்தது அந்த கட்டிடம் பார்க்க மிகவும் கர்னாடக பாணியில் கீழ்நாட்டு பாணியிலும் கட்டப்பட்டிருந்தது.சயிட் துறைமுகம் சுமார் 1,20,000ஜனத்தொகை கொண்டிருந்தது.அது ஒரு முஸ்லிம் பிரதேசம். .ஆனால் அங்கும் மக்கள் ஆங்கிலம் பேசுவது கண்டு மிக வியப்பாக இருந்தது”என்றார்கள்.

“வந்து நின்ற மூன்று மணி நேரத்தில் கர்பியு கப்பல் திரும்பவும் சயிட் துறைமுகத்தை விட்டு

சுமார் ஒரு மணி அளவில் பிரபகலில் கிளம்பியது.பம்பாயிலிருந்து புறப்பட்டு ,அரேபிய கடலையும்,செங்கடலையும்,சூயஸ் கனாலேயும் கடந்து, சயிட் துறைமுகத்தையும் கடந்து, மத்திய திரைகடலுக்குள் சென்று கர்பியு கப்பல் நுழைந்தது .பாதி பிரயாண தூரம் முடிந்தது என்றும் இன்னும் பாதி தூரம் கடலில் எங்கும் நிற்காது கடக்க வேண்டியதுதான் என அனைவரும் அடுத்த வர இருக்கும் இடத்தை ஆவலுடன் எதிர்பார்த்து காத் த்திருந்தோம்".என்றார்கள்..

"1947-ம் வருடம் நான் போர்ட் சயிட் சென்ற சமயம் எதோ தொத்துநோய் பரவி இருந்ததால் பயணிகள் யாரையும் இறங்கி ஊர் சுற்றி பார்க்க அனுமதி கிடைக்கவில்லை.அதை இம்முறை வாய்ப்பு கிடைத்தது என் அதிர்ஷ்டமே,போர்ட் சயிட் ஐ பார்க்க வேண்டும் என்ற கொடுப்பனை எனக்கு இருந்திருக்கிறது"என முக மலர்ச்சியுடன் கூறினார்கள் பெரியம்மா.\

“சூயஸ் கனால் பயணம் மிக சுகமாக இருந்தது.உலக சரித்திரத்தையே மாற்றி அமைத்த இக்கால்வாய், இங்கிலாந்து செல்வோர்,ஆப்ரிக்கா கண்டனத்தை சுற்றிக்கொண்டு போக வேண்டும் என்ற கடின நிலைமையை மாற்றி ,கீழ் நாடுகளுக்கும்,மேல்நாடுகளுக்கும் விரைவில் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தியது எவ்வளவு பெரிய பிரயத்தனம்”எனவும் கூறினார்கள்.

“கப்பல் மத்தியதிரை கடலில் நுழைந்து ஓயாமல் ஓடிக்கொண்டிருந்தது.வழியில் அனேக கப்பல்கள் எதிரேயும்,கூடவேயும் வந்து கொண்டிருந்தது.நிலத்தைத்தான் பார்க்க முடியாவிட்டாலும்,அக்கப்பல்களை பார்க்கும் போதாவது பயணிகளாகிய எங்களுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது .அவர்களை கடந்து கப்பல்கள் செல்கையில், கம்பி இல்லாத தந்தி முலம் செய்திகளை பரிமாறி,ஒவ்வொரு கப்பல்களின் பெயர் என்ன?எங்கு செல்கிறது?அவர்கள் எந்த நாட்டை சேர்ந்தவர்கள்?என்ற பல விஷயங்களை அறிந்து

தெரிந்து கொண்டோம்." என்றார்கள்.

"மத்தியதிரைகடல் சீதோஷ்ணநிலை மிகவும் நன்றாக இருந்தது.அதனால் அனைவருக்கும் மறுபடியும் உற்சாகம் ஏற்பட்டு மாலை நிகழ்ச்சிகளில் மீண்டும் கலந்துகொள்ள ஆரம்பித்தோம். போர்ட் சயிடில் கடிதங்கள் ஏது எதிர்பார்க்கவில்ல என்பதால், நான் பர்சார் அப்பீசுக்கு சென்று எதுவும் விசாரிக்கவில்லை.ஒரு நாள் நான் தூங்கிகொண்டிருக்கையில், காபின் ஸ்டுவர்ட் என்னை எழுப்பி, வீட்டிலிருந்து வந்த கடிதங்களை கொடுத்து விட்டு சென்றார்.அதுதான் முதல் கடிதம், எனவே மகிழ்ச்சியுடன் பிரித்து படித்தபோது, எதிபாராத அதிர்ச்சியை படிக்க நேரிட்டது.அதில் நான் புறப்பட்ட நான்காவது நாளில், எனது மூத்த சகோதரன் திடீரென மாரடைப்பால் இறந்துவிட்ட செய்தி வந்திருந்தது.புறப்பட்டதிலிருந்து அடைமழையால் கப்பலில் போராட்டமும்,செங்கல்டலின் கொடிய உஷ்ணத்தாலும் அவதிபட்டு

,மதியதிரைகடலின் அருமையான சீதோஷ்ண நிலையை பல நாட்களுக்கு பிறகு சந்தோஷமாக அனுபவிக்க ஆரம்பிக்கும் நேரம், அண்ணன் இறந்த சேதி இடிபோல வந்து விழுததால், மனது மிகவும் துக்கத்தில் ஆழ்ந்து போனது ,"என்று மிகவும் முக வாட்டத்துடன் பெரியம்மா கூறுகையில் என்மனமும், அந்த மாமாவை பார்க்க எங்களுக்கெல்லாம் கொடுத்துவைக்கவில்லையே என கஷ்டமாக இருந்தது.

"யுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்ட சில ராணுவ வீரர்களும், நான் சென்ற கப்பலில் பிரயாணம் செய்தார்கள்.மத்திய திரைகடல் பிராந்தியம் பூராவும் எப்படி சுரங்க வெடிகளால் நிரப்பப்பட்டது எனவும், எதிரிகளின் இந்த செய்கையால் ,எத்தனை கப்பல்கள் அந்த கடலில் மூழ்கின என கதை கதையாக அவர்கள் கூறியதை கேட்டோம்.அந்த கடலுக்கு அடியில் எத்தனை கப்பல்களும், மனிதர்களும் மூழ்கி கிடக்கிறது என்று அவர்கள் கூறி கேட்கையில் மிகவும் மனது கஷ்டமாக இருந்ததுடன் ,எதோ

ஒன்று மனதை போட்டு கலக்கியது".என்றார்கள்.

"அச்சமயம் நான் சென்ற கர்பியு கப்பல் 18 மைல் வேகத்தில் ஊர்ந்து சென்றுகொண்டிருந்தது.நான்கு நாட்களில் மத்தியதரை கடலை கடந்து,இரவில், இரண்டாவது மகா உத்தத்தில், குண்டுகளால் தர்த்தப்பட்ட சரித்திர பிரசித்தி பெற்ற, மால்டா தீவை, எங்கள் கர்பியு கப்பல் நெருங்கிகொண்டிருந்தது.அதை பார்த்த எனக்கு சரித்திரபாடம் எல்லாம் நினைவில் வந்து நின்றது.எத்தனை போர்வீரர்கள் இங்கு மடிந்தார்கள், யுத்த சமயத்தில் இந்த பிரான்தியத்திற்குள் போக யாருக்கு தைரியம் வரும் .அப்படிப்பட்ட ஒரு இடத்தை பார்க்க ஏற்பட்ட சந்தர்ப்பத்தை நினைக்கும் பொது நான் மிகவும் கொடுத்துவைத்திருக்கவேண்டும்".என பெரியம்மா சொல்லி சொல்லி பெருமை பட்டுகொண்டார்கள்.

"வெடிக்காத சுரங்க வெடிகளை எல்லாம் ,கடலுக்கு அடியிலிருந்து ,கப்பல்களுக்கு ஆபத்து

ஏற்படாதவாறு, அதற்க்கு இரண்டு வருடங்களுக்கு முன்புதான் (1955-ம் ஆண்டுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்)கடைசியாக அலசி எடுத்து முடித்தார்களாம்".என்றார்கள்.

"இந்த ப்ரேதேசத்தில்தான், மனித வர்க்கத்திற்குள் எத்தனை போராட்டங்கள் ,எத்தனை யுத்தங்கள்,படையெடுப்புகள்,நடந்திருகின்றன.உலக எத்தனை பெரிய சாம்ராஜியங்கலேல்லாம் இந்த கடலில் தோன்றி,வாழ்ந்து மடிந்திருக்கின்றன .எத்தனை விதமான நாகரீகம்.ஆயிரம்,ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்கடலில் எத்தனை வியாபாரங்கள், கப்பல் போக்குவரத்து நடந்திருக்கின்றன.அன்று ஆரம்பித்த போட்டி மனிதவர்கத்திற்குள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன .அவ்வளவு யுத்தங்களும்,போராட்டங்களும் ,முழ்கிய கப்பல்களும்,முழ்கிய படைவீரர்களும்,கொண்ட மத்திய திரைகடல் அன்று சாந்தமே உறவாக நீல ஜமக்காளம் விரித்தாற்போல மிக கம்பீரமாக காட்சியளித்தது".என மிகவும் நெகிழ்வுடன் கூறினார்கள் பெரியம்மா சேது.

“பிறகு நான் சென்ற கர்பியு கப்பல் இத்தாலிக்கு தெற்கேயுள்ள சிசிலி தீவின் அருகே சென்று,பின் ஸ்பெயினிலுள்ள ஜிப்ரால்டர் துறைமுகத்தை நெருங்க,நெருங்க குளிர் அதிகமானது.ஜிப்ரால்டர் துறைமுகம் கதிரவன் உதயத்தில் மிக
அழகாக காட்சி அளித்தது.வளைந்து,வளைந்து பாறைகளும்,அவற்றின் ஓரமாக தவழ்ந்து சென்று மோதிய கடல் அலைகளும், அடுக்கடுக்காக தோன்றும் வீதிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளும், துறைமுகத்தை ஒட்டி நின்ற பலதரப்பட்ட படகுகளும்,கப்பல்களும்,பார்க்க கண்கொள்ளா காட்சியாக திகழ்ந்தது”.என்றார்கள்.

“மத்திய தரைகடலை கடந்து,ஜிப்ரால்டரையும் கடந்து,சென்ற கர்பியு கப்பல் அப்போது அட்லாண்டிக் மஹாசமுத்ததில்
நுழைந்தது.அப்போது குளிரும் அதிகமாயிற்று.கப்பலின் மேல்தளத்தில் சதா காற்று வாங்கி கொண்டிருந்த பயணிகள் எல்லாம்,ஆள் அரவம் கேட்டு தலையை
தன ஓட்டுக்குள் மெதுவாக உள்ளே

இழுத்துகொள்ளும் ஆமையை போல,மெதுவாக எழுது தன காபினுக்குள் சென்றுவிட்டார்கள்."என்று மிகவும் நகைச்சுவையுடன் சிரித்துக்கொண்டே கூறினார்கள்.

"இன்னும் 4 நாட்களில் இங்கிலாந்தை போயி சேரப்போவதாக அறிவிப்பு கேட்டு நாங்கள் அனைவரும் குதூகலம் அடந்தோம். .அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் சிறிது பயணம் செய்து,பிறகு கர்பியு கப்பல் பிஸ்கா வளைகுடாவில் செல்ல ஆரம்பித்தது.ஒரே முடு பணியாக இருந்தது.20 அடிகளுக்குமேல் ஒன்றுமே தெரியவில்ல.இங்கிலாந்தை நெருங்க இன்னும் 3 நாட்களே இருந்தது, ஆனால் இங்கிலாந்தை நெருங்க,நெருங்க,சுற்றிகும் முடுபனி வெண்மையாக காணப்பட்டது.பாக் முடப்பட்டதால் எதிரே வரும் கப்பல் கூட தெரியாமல் இருந்தது.இரண்டு நிமிடத்திற்கு ஒரு முறை , முடுபனியில் நடுவே அகப்பட்ட கப்பல்கள் சத்தமாக ஊதிக்கொண்டே சென்றது.சத்தம் கேட்டதே தவிர ,அந்த

கப்பல்களை பார்க்க முடியவில்ல.அந்த அளவிற்கு மிகவும் அடர்த்தியான பனி மூட்டமாக இருந்தது".என அழகாக அந்த சூழ்நிலையை வர்ணித்தார்கள் பெரியம்மா.

"புறப்பட்ட 17 நாட்களுக்கு பிறகு கர்பியு கப்பல், இங்கிலாந்து கரையை நெருங்கியது. பொதுவாக சில கப்பல்கள் இங்கிலாந்திற்கு, தெற்கு கரையோரமாக ஒதுங்குமாம்.ஆனால் கர்பியு கப்பல் எல்லாவற்றையும் சுற்றிக்கொண்டு நேரே லண்டன் அருகிலுள்ள டில்ப்ரி துறைமுகத்தை அடைந்தது.ஜூலை 16-,தேதி,1955 இல் பம்பாயில் கிளம்பிய கர்பியு கப்பல ஆகஸ்ட் 3-,தேதி 1955 அன்று விடியற்காலையில் லண்டநிலுள்ள "டில்ப்ரி" துறைமுகத்தை அடைந்தது."

"விடியற்காலையில் கரையை சேர்ந்த கப்பலிலிருந்து எல்லாம் முடிந்து வெளியே வர காலை 11:30 மணி ஆகிவிட்டது.பிறகு ட்ரெயினில் ஏறி செயின்ட் பாங்க்ரியாஸ் என்ற ஸ்டேஷனை சென்றடைந்தேன்.என்னுடன் என்

காபினில் பயணம் செய்த இரண்டு வடக்கு இந்திய பெண்கள் ,லண்டனில் இந்தியர்களுக்கான பிரத்யோகமான “கில்ட் போர்ட்”தெருவிலுள்ள ஹாஸ்டலில் தங்கி படிப்பதற்காக சென்றுகொண்டிருந்தார்கள்.,அவர்களிருவரும் என்னை விட வயதில் சற்றே பெரியவர்கள் .லண்டனில் இறங்கியதும், மாலையே நான் பாரிசிற்கு விமானம் மூலம் செல்ல முன்பே ஏற்பாடு செய்திருந்தபடியால், அதுவரை தங்களுடன் தங்கி ஊர்சுற்றி காண்பிக்குமாறு அந்த இரு பெண்களும் கேட்டுகொண்டபடியால், நான் சரி என கூறிவிட்டு அவர்களுடன் ஹாஸ்டலுக்கு செல்ல தயாரானேன்”.

“1947-ம் வருடம் அரசாங்க ஸ்காலர்ஷிப்பில் என்னுடன் பயணம் செய்தவரும்,பிறகு என்னுடன் உற்ற ச்நேகிதியாகிவிட்ட ஒரு பெண், ஒரு ஆங்கிலேயரை மணந்தது கொண்டு , ஒரு பெண் குழந்தையுடன் அங்கே வாழ்ந்துவந்தாள்.அவள் ஒரு வங்காள பெண் .அவள் ஸ்டேஷனுக்கு வந்து என்னை சந்தித்து

அழைத்துபோவதாக கொடுத்த தந்தியை டிஸ்ப்ரி ஹார்பெரிலேயே கிடைத்து.அந்த பெண்மணி தன ஆங்கிலேய கணவருடனும்,குழந்தையுடனும் ஸ்டேஷனில் வந்து ,என்னை வரவேற்றாள்.பாரிஸ் போயி விட்டு மீண்டும் லண்டன்க்கு திரும்பியதும் அதிக நேரம் பேசலாம் என அவளுக்கு தற்காலிகமாக விடை கூறி அனுப்பிவிட்டு, அந்த இருவங்காள பெண்களுடன் ,அவர்கள் தங்க போகும் ஹாஸ்டலுக்கு மதியம் 2:30 மணிக்கு சென்றடைந்தோம்.1947-ம் வருடத்திற்கு பிறகுஏழு வருடம் கழித்து லண்டனை பார்த்தபோது என் கண்களை என்னால் நம்பமுடியவில்லை.எல்லாம் கனவு போல் தோன்றியது.லண்டனில் எந்த மாற்றமும் இல்லாமல் அதே பழைய மாதிரி தோற்றமளித்தது."என்றும் கூறினார்கள்.

"இரவு பாரிஸ் போகும் விமானத்தில் ஏறி அமர்ந்த போது சற்றே அசதியாக இருந்தது. அந்த விமானத்தில் 47 பயணிகள் இருந்தனர்.லண்டனுக்கும்,பாரிசுக்கும் பறக்கும்

நேரம் 80 நிமிடங்களே என்பதால், விமானம் சரியான நேரத்திறுக்கு புறப்பட்டு சரியான நேரத்திருக்கு போயி சேர்ந்தது. எனவே நேரம் பறந்ததே தெரியவில்லை.நான் சென்ற விமாதத்தின் பெயர் “எலிச்பீதன் “.அது பிரிட்டிஷ்-ஈரோப் ஏர்வே கம்பெனி ஐ சேர்ந்தது.அதில் . 5 வேலை ஆட்களும் 2 600எச் பி பவர் கொண்ட என்கின்ஜீனும் ,மணிக்கு 245எம்.பி யில் பறந்து சென்றது.”என விவரித்தார்கள்.

“விமானத்தில் என் அருகில் ஒரு அமெரிக்க பெண்மணி அமர்ந்த்திருந்தாள் .அவளுக்கு வயது 25 இருக்கலாம் .இரண்டு வருடங்களாக கோடை விடுமுறைக்கு ஐரோப்பா வந்து போகிறாள் எனவும்.அவள் நியூ யார்க்கில், அமெரிக்காவில் கலை பள்ளிகூடத்தில் சிற்பம் போதிக்கும் கலைப்பள்ளியில் படித்து வருகிறாள் எனவும் கூறினாள் .அவளை பற்றி நான் விசாரித்து வருகையில் ,அந்த பெண்மணி மிக சாதாரணமாக தனக்கு முன்பு கல்யாணம் ஆகியிருந்தது.இப்போது தான் மணமானவள்

இல்லை என கூறியது கேட்டதும்,இந்திய பண்பாட்டில் வளர்ந்த எனக்கு முதலில் சற்றே ஆச்சர்யமாக இருந்தது.மேலும் அந்த பெண் பாரிஸில் தான்அவளது நித்திய கனவு எனவும் ,தன வாழ்நாளை பாரிசில் கழிக்க விரும்புவதாகவும்,மேலும் எல்லாம் புதுமையில் திளைத்த நாடான அமெரிக்காவை காண தனக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது எனவும்,பழமையும்,பற்பல வாழ்க்கை விதங்களையும் அளிக்கும் பாரிஸ் தன நெஞ்சை மிகவும் கவர்ந்தது என அந்த பெண் கூறியது கேட்ட நான் ,உலகோர் கண்டு பிரமிக்கும் நியூ யார்க் நகரில் பிறந்து வளர்ந்த பெண்ணுக்கு இந்த மாதிரி ஒரு ஆசையா?என வியந்து நின்றேன் “என ஆச்சர்யமாக கூறினார்கள்.

16

அத்யாயம்-பதினாறு

இரவு வெகு நேரம் ஆகிவிட்டபடியால் பெரியம்மா கூறிவந்த பயனகதையை அத்துடன் நிறுத்திவிட்டு “நான் இப்போது கூறியதை எல்லாம் ஒரு கட்டுரை போல் எழுதி என்னிடம் காண்பிக்கவ்ண்டும். .அப்போதுதான் அடுத்தது என்ன நடந்தது என மறுமுறை நீங்கள் இங்கு வரும் சமயம் சொல்லுவேன்”. என பெரியம்மா எங்கள் முவரிடம் கூறவே ,நான்,அண்ணன் ஷான் மற்றும் தம்பி பாட் முவரும் சரி என தலை ஆட்டிவிட்டு கீழே இறங்கி தூங்குவதற்காக சென்றுவிட்டோம்.பெரியம்மா

கதை சொல்வதை நிருத்தியத்தில் அனைவருக்கும் சற்றே ஏமாற்றமாகத்தான் இருந்தது. ஆனால் நள்ளிரவாகி விட்டதாலும்,பெரியம்மா மிகவும் களைப்பாக இருந்ததாலும்,தொடர்ந்து கதையை கூற சொல்லி கேட்பதற்கு எங்களுக்கும் முடியாததால் பேசாமலிருந்துவிட்டோம் .அன்றிரவு பெரியம்மா வீட்டில் தங்கி விட்டு ,மறுநாள் மத்தியானம் சாப்பாட்டிற்கு பிறகு எங்கள் வீட்டிற்கு கிளம்பி சென்றுவிட்டோம்.

வழக்கம் போல ஒவ்வொரு மாதமும் சிதம்பரத்திலிருந்து தாத்தாவும்,பாட்டியும்- அம்மா,பெரியம்மா,மற்றும் மாமா மூவர் வீட்டிற்கும் வந்து பார்த்துவிட்டு,பெரியம்மா வீட்டில் சிறிது நாட்களும்,மாமா வீட்டில் சிறிது நாட்களும்,எங்கள் வீட்டில் ஒருசில மணி நேரமே வந்து பார்த்துவிட்டு செல்வது வழக்கம். அதுபோல 1969-ம் வருடமான அந்த வருடமும் பி தாத்தாவும்,பாட்டியும், தங்கை ஆனஹியையும் அழைத்து வந்திருந்தார்கள்

“மங்கை ,போனமாதம் எதிர் வீடில் கல்யாணம்

நடந்தது.ஆனஹி படுத்திருந்த அறை, எதிர்வீட்டு கல்யாண சத்திரத்திற்கு எதிரே இருந்ததால் அந்த மேளசத்தத்தில் உடல் எல்லாம் வெட்டி வெட்டி இழுத்துக்கொண்டு பிட் போல வந்துவிட்டது. நாங்கள் எல்லோரும் மிகவும் பயந்துவிட்டோம்.ஆனஹிக்கு ஏதாவது ஆகிவிட்டால் உனக்கு நாங்கள் என்ன பதில் சொல்வது ,எனவே இவளை இங்கேயே உன்னிடம் விட்டுவிட்டு போகலாம் என எல்லாவற்றையும் எடுத்துவந்துவிட்டோம்",உன் வீட்டில்தான் இப்பொது வேலைக்கு ஆள் இருக்கிறதே .வேண்டுமானால் இன்னொரு வேலை ஆளை சீக்கிரமே பார்த்து அனுப்பிவைக்கிறோம்.அவள் உன் குழந்தைகளை பார்த்துக்கொள்ள வசதியாக இருக்கும்.எங்களுக்கோ வயதாகிவிட்டது எனவே தப்பாக நினைத்து கொல்லாதே."என கூறிவிட்டு ஆனஹியை எங்கள் வீட்டிலேயே விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள்.

ஒருமாதத்திற்குபிறகுதாத்தாவும்,பாட்டியும்சொன்னத

வயதுஉள்ள,எங்கள்அம்மாவின்பெயரையேமங்கை
மங்கைஅக்காவிற்குஎங்கள்அம்மாவின்பெயரேஇருந்
அம்மாவும்மற்றவர்களும்அக்காவிற்குகுமாரிஎன்றுபெ
குமாரி
அக்கா,பதினொன்றாம்வகுப்பில்மாத்தமதிப்பெண்க
454 மதிபெண்ட்களைஎடுத்துதேறியதால்
,எங்கள்நால்வரைபார்த்துகொள்வதோடு
இல்லாமல்வீட்டில்எங்களுடன்பாடம்சொல்லித்தரவு

எங்களுக்கு சமைப்பதற்கு 40 வயதுள்ள
ராஜாம்ப பாட்டியும்,எங்களை
பார்த்துகொள்ளவும்,படிப்புசொல்லிதரவும்குமாரி அ
எங்களுக்கும் குமாரி அக்காவை மிகவும் பிடித்து
விட்டது. குமாரி அக்கா பார்ப்பதற்கு ராஜம்
அக்காவைபோலவே இருந்ததால்
எங்களனைவருக்கும் மிகவும்
பிடித்துவிட்டது.குமாரி அக்கா நல்ல
குணத்துடன், எங்கள் நால்வரையும்
பார்த்துகொண்டார்கள்.குமாரி அக்கா படிப்பில்
மிகவும் புத்திசாலியாக இருந்ததால்,அம்மாவிற்கு
குமாரி அக்காவை வேலைக்கு வைத்துகொள்ள
விருப்பமில்லை.அடிக்கடி பெரியம்மாவிடம்

“பாவம் சேது இந்த பெண் குமாரி ,இவ்வளவு புத்திசாலியாக ,படித்து நல்ல அதிக மதிபெண்ட்களை வாங்கியிருந்தும்,குடும்ப வறுமையால் மேலே படிக்க வாய்ப்பு இல்லாமல் இப்படி என் வீட்டில் வேலைகாரியாக இருப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது . நீ முடிந்தால் இந்த பெண்ணிற்கு, சிறுநிலை ஆசிரியை பயிற்சி பள்ளியில் சேர்த்து படிக்க வைத்து, ஒரு டீச்சர் வேலை வாங்கி கொடுத்துவிடு.அவள் டீச்சரானால் குழந்தைகளுக்கு நன்றாக பாடம் சொல்லி கொடுப்பாள்”என கூறி கொண்டே இருப்பார்கள்..

அம்மாவால் குமாரி அக்காவை படிக்க வைக்க முடியாத நிலை.அம்மாவின் மாத வருமானத்தை அப்பா வாங்கி சென்று விடுவதால் அம்மாவிடம் எப்போதுமே அதிக பணம் இருந்ததில்லை . வீட்டிற்கு வேண்டுய எல்லா பொருட்களும், தாத்தா ஈஸ்வரன் அனுப்பிவிடுவதுடம் அம்மாவிர்க்கென்று கொஞ்சம் பணமும் கொடுத்துவிடுவார்கள்.அப்பணம் அம்மாவின் பஸ்

போக்குவரத்து செலவுக்கும் ,இதர செலவிற்கும் சரியாகிவிடும். குமாரி அக்காவிற்கு பீஸ் கட்டும் அளவிற்கு பணம் இல்லாத காரணத்தால்தான், பெரியம்மாவின் உதவியை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது அம்மாவிற்கு.பெரியம்மா ஏதும் முடிவாக கூறாமால் "பார்க்காலாம்,முயற்ச்சிக்கிறேன்"என கூறி காலம் தாழ்த்தி வந்தார்கள்.

ஆனஹி எங்கள் வீட்டிலேயே வளர்ந்துவந்தாள்.மிக சந்தோஷமாக ஓடிவிளையாடி கொண்டிருந்தாள்.ஒருநாள் அம்மாவும் ,அப்பாவும் வீட்டிலில்லாத சமயம் , ராஜாம்பா பாட்டி தூங்கிகொண்டிருந்தார்கள்.நானும் ஆனஹியும் ராஜாம்பா பாட்டியின் அருகில் உட்கார்ந்துகொண்டு "பாட்டி பசிக்குது சாப்பாடு போடுங்கள்"என எழுப்புகையில், பாட்டி தூக்கத்தில், தூக்கத்திலிருந்து எழுந்திருக்க மனமில்லாமல் ,எங்கள் இருவரையும் தூர போங்கள் என உதறி தள்ளி விட்டிருக்கிறார்கள் ,அந்த சமயம் பார்த்து பெரியம்மா உள்ளே

நுழைத்ததும், இந்த காட்சியை பார்த்துவிட்டார்கள், உடனே கீழே இருந்த குமாரி அக்காவை அழைத்து, தான் சாயங்காலம் வந்து, எங்கள் அம்மாவை பார்த்து முக்கிய விஷயம் பேச போவதாக சொல்லிவிட்டு சென்று விட்டார்கள். .

கூறியது போலவே அம்மா வேலையிலிருந்து வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் பெரியம்மாவும் வந்திறங்கி நடந்த விஷயங்களை அம்மாவிடம் கூறிவிட்டு "ஆனஹியை நான் என் வீட்டிற்கு அழைத்து செல்கிறேன்,எனக்கு பெண் குழந்தை இல்லாதததால்,என் மகன் குமாருடன் ஆனஹியும் வளரட்டும்"என்றார்கள்.

அம்மா மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்ல.பெரியம்மாவும் அம்மாவின் பதிலுக்கு காத்திராமல், குமாரி அக்காவிடம் ,ஆனஹியின் பொருட்களை தயார் பண்ண சொல்லி விட்டு ,அவளை தன்னுடனேயே அழைத்து சென்றுவிட்டார்கள்.அப்பாவிடம் யாரும் அனுமதி எதுவும் கேட்ககூட

நினைக்கவில்லை.அன்றிரவு வீட்டிற்கு வந்த அப்பாவும் செய்தி அறிந்து ,அதை பெரியதாக எதுவும் பொருட்படுத்தவில்லை.”அப்படியா?”என கேட்டுவிட்டு பேசாமலிருந்துவிட்டார்கள் .

என் மனம் மிகவும் வேதனை அடைந்தது.எடுப்பார் கைபிள்ளைகள் போல எங்களை அனைவரும் அழைத்து செல்வதும்,கொண்டு வந்து விடுவதும்,அவர்கள் இஷ்டத்திக்கு எங்களை ஆட்டிபடைப்பதும்,எதையும் எங்கள் பெற்றோர்கள் ஏன் யோசிக்காமலும்,கவலைபடாமலும், பொறுப்பு இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள் என்று .இருவருக்குமே தன குழந்தைகளை பற்றி சிறிதும் அக்கறையில்லை.அப்பாவிற்கு சூதாட பணம் கிடைத்தால் போதும்,. அம்மாவிற்கு எங்களை யாராவது பார்த்து கொண்டால் போதும்.

சிறு வயதிலிருந்தே செல்வாக்காக வளர்ந்த அம்மா,திருமணமாகி குழந்தைகள் நான்கு பிறந்தும் கூட, இன்னமும் எல்லாவற்றையும்

அவர்களுடைய பெற்றோர்கள் பார்த்துக் கொள்வார்கள் என பொறுப்பிலாமல் இருப்பது கண்டு என் மனம் வெகுவாக கலங்கியது.

மேலும் என் பிஞ்சு மனதில் எதோ ஒரு இனம் புரியாத பயம் கவ்வியது.கடவுளிடம் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக வேண்டிகொள்வேன்."கடவுளே அப்பாவை எப்படியாவது திருத்திவிடு, ,அம்மாவிற்கும் குடும்ப பொறுப்பு என்ன என்பதை தெரியுமாறு செய்துவிடு."என தினமும் மாலை பொழுதில் சாமி படம் முன் நின்று வேண்டிக்கொள்வேன். ஆனஹி பெரியம்மா வீடு சென்றதும் ராஜாம்ப பாட்டியை வேலையை விட்டு போக சொல்லிவிட்டார்கள் அம்மா.எல்லாம் பெரியம்மாவின் லீலைகளே.இப்போது எல்லா வேலைகளும் குமாரி அக்காதான் பார்த்து கொண்டார்கள்.

மாதங்கள் கடந்தது.ஒரு நாள் நாங்கள் பெரியம்மா வீடு சென்ற பொது ஆனஹாயை அங்கு காணாமல்,"ஆனஹி எங்கே சேது"என

பெரியம்மாவை கேட்டார்கள் அம்மா.

“அவளை சிதம்பாரத்திர்க்கு கொண்டுபோயி விட்டுவிட்டேன்.இப்போதுதான் 10 நாட்களுக்கு முன் அங்கு சென்றேன்.அப்படியே ஆனஹியையும் என்னுடன் அழைத்து சென்று அங்கு விட்டுவிட்டு வநதுவிட்டேன்” என்றார்கள் பெரியம்மா.

“ஏன் சேது என்னவாயிற்று? எதற்கு மறுபடியும் அவளை சிதம்பரத்தில் கொண்டுபோயி விட்டுட்டாய்?” என்று அம்மா கேட்டதற்கு.

மூர்த்தியால் இரு சிறு குழந்தைகளையும் பார்த்துக்கொள்வது மிக கஷ்டமாக இருக்கிறது என கூறியதால்,நான் அவள் சிதமபரத்தில் இருப்பதே நல்லது என்று நினைத்து அந்த பக்கம் செல்லும் வாய்ப்பு பத்து நாட்களுக்கு முன் இருந்ததால்,அப்படியே ஆனஹியை அங்கு விட்டுவிட்டேன்”என்றார்கள் பெரியம்மா.

வழக்கம் போல அம்மா எதுவும்
பேசவில்லை.மௌனமாக
இருந்துவிட்டார்கள்.அக்காவை ஒரு
வார்த்தைகூட ஏன்? என்னை கேட்காமல்
இப்படி செய்தாய்? என
கேட்கவேயில்லை.பாவம் ஆனஹி, அவளை
பெற்ற பெற்றோரோகள் உயிருடன் இருந்தும்
,அவளுக்கென்று ஒரு இடம் இல்லாமல்
அங்கும்,இங்குமாக
அலைகழிக்கிராார்கள்.மற்றவர்களைச் குறை
சொல்லி பயனில்லை.என் பெற்றோரோகள்
மீதுதான் எல்லா குறையும் உள்ளதை நான்
முதன் முதலில் உணர ஆரம்பித்தேன்.ஆனஹி
சென்று பல மாதங்கள் ஓடின.

ஒருநாள் விடியற்காலையில் ஆறு மணி அளவில்
கண்விழித்து பார்த்த பொது அம்மாவை எங்கும்
காணவில்லை.வீடெங்கும் சுற்றி தேடிவிட்டு
குமாரி அக்காவிடம் சென்று,"அக்கா அம்மா,
எங்கே காணும்?இன்றைக்கு அம்மாவிற்கு
மத்தியானம் ஷிப்ட் வேலை தானே"என்றேன்.

“தாத்தா ஈஸ்வரன் உடல்நிலை சரியில்லாமல் மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக நடு ராத்திரி தந்திவந்ததால்,அம்மா தாத்தாவை பார்க்க ஊருக்கு சென்றிருக்கிறார்கள்.விரைவில் திரும்பிவிடுவார்கள் என நினைக்கிறேன்”என கூறியது கேட்டு என் மனம் மிகவும் கவலையடைந்தது.

தாத்தா ஈஸ்வரன் இறந்துவிட்டால், ஊரிலிருந்து எங்களுக்கெல்லாம் இப்போது வந்து கொண்டிருக்கும் ,வருடத்திற்கு வேண்டிய பொருட்களை இனி யார் அனுப்புவார்கள்.பாட்டி கமலாவை யார் பார்த்துகொல்வார்கள்.அவ்வளவு பெரிய வீட்டில் பாட்டி மட்டும் எப்படி தனியாக இருந்து பராமரிக்கபோகிரார்கள்.என்றெல்லாம் என் மனம் நினைக்க தொடங்கியது.

தாத்தாவிற்கு ஒன்றும் ஆகக்கூடாது.உடல் குணமாகி பழையபடி அவர்கள் நடமாட வேண்டும் என கடவுளை வேண்டிக்கொண்டேன்.அப்பாவுக்கும்,எங்களுக்கும், தாத்தாவிற்கு என்ன உடல்நிலை என்ற விவரம்

தெரியவில்லை.சீரியஸ் என தந்தி பார்த்துவிட்டு
அம்மா,பெரியம்மா,மற்றும் மாமா மூவரும்
சிதம்பரத்திற்கு உடனே புறப்பட்டு
சென்றுவிட்டார்கள் என்று மட்டுமே தெரியும்.

முன்று நாட்கள் அம்மாவை பற்றியும்,
தாத்தாவை பற்றியும் எதுவும் விஷயம்
தெரியாததாலும்,தந்தி எதுவும் வராததாலும்
தாத்தா ஈஸ்வரனுக்கு எதுவும் ஆகவில்லை
என்று வீட்டில் நாங்கள் அனைவரும்
அறிந்துகொண்டோம்.முன்றாவது நாள்
அதிகாலையில் அறைதூக்க்கதில் அம்மாவின்
குரல் கேட்டதும்.அதை நான் கனவு என
நினைத்துகொண்டிருக்கையில், தொடர்ந்து
குமாரி அக்காவின் குரலும் கேட்கவே,திடுக்கிட்டு
விழித்து பார்க்கையில்,அம்மாவும்,குமாரி
அக்காவும் காப்பியை குடித்துகொண்டே, எங்கள்
படுக்கை அருகே உட்கார்ந்துகொண்டு
நிஜமாகவே பேசிகொண்டிருந்தார்கள்.

அப்பா வழக்கம் போல அம்மா வந்தது கூட
தெரியாமல் பலத்த குறட்டை ஒலியுடன்

தன்னுடைய படுக்கை அறையில் தூங்கிகொண்டிருந்தார்கள்.அம்மாவை பார்த்ததும் அது கனவல்ல ,நினைவுதான் என உணர்ந்து ஓடி சென்று அம்மாவை ஆசையுடன் கட்டிகொண்டேன்.

“அம்மா தாத்தா எப்படி இருக்காங்க?என்று ஆவலுடன் கேட்டேன்.

“நன்றாகிவிடார்கள்.பயப்பட இனி ஒன்றுமில்லை என டாக்டர் கூறிவிட்டார்” என சுருக்கமாக எனக்கு பதிலளித்துவிட்டு மீண்டும் குமாரி அக்காவுடன் தன பேச்சை தொடர்ந்தார்கள்.

அம்மா முகத்தில் சந்தோஷமில்லை.அதற்க்கு பதிலாக முகம்வாடி ,சோகத்துடன் காணப்பட்டார்கள்.தாத்தாதான் குணமாகி விட்டார்களே ,அம்மா ஏன் சந்தோஷமாக இருப்பதற்கு பதிலாக சோகமாக இருக்கிறார்கள்?ஒருவேளை பிரயாண களைப்பாக இருக்கலாம் என என் மனதில் நினைத்துகொண்டு , ஆவலுடன் என்ன நடந்தது

என அவர்கள் சம்பாஷணையில் தலையிடாமல் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தேன.அவர்களின் சம்பாஷனை அப்போதுதான் ஆரம்பித்ததால் முழுமையாக நடந்த விவரத்தை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

“உங்கப்பாவிற்கு மாரடைப்பு ஏற்பட்டுவிட்டதா அக்கா? என குமாரி அக்கா கேட்டதற்கு,

“இல்லை குமாரி,அப்பாவிற்கு லேசாக சர்க்கரை வியாதி இருந்திருக்கிறது போலிருக்கிறது.அது தெரியாம ஒரு நாள் விடியற்காலையில் ,இருட்டில் எழுந்து பாத்ரூமிற்கு செல்லும் வழியில் இருந்த பெஞ்ச் முனையில் ,அப்பாவின் தொடையில் இடித்து கொண்டார்கள்.பெஞ்ச் முனையில் இரும்பு தகடு போல் இருந்தது, அப்பாவின் தொடையில் கிழித்து ரத்தம் வந்திருக்கிறது. அது சாதாரண காயம்தானே என அப்பா மருந்து போட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் காயம் ஆறுவதற்கு பதிலாக அதிகமாகி தொடை முழுதும் பரவி அதிக

காயமாகிவிட்டிருக்கிறது.அப்பாவிற்கு சர்க்கரை வியாதி இருப்பது தெரியாமல் காயங்களை மருத்துவர் அறுவை சகிச்சை செய்து வெட்டிஎடுத்து சுத்தம் செய்திருக்கிறார்கள் .அப்படியும் புண் ஆறாமல் ,அது கால் முழுதும் பரவ ஆரம்பிக்கவே ,அதிலுள்ள விஷம் சற்றே உடலில் பரவி அப்பாவிற்கு உடல் நிலை சரியில்லாமல் படுத்த படுக்கை யாகிவிட்டிருக்கிரார்கள். அப்பாவின் உயிருக்கு ஆபத்து எனகருதி எங்களுக்கெல்லாம் அவசர தந்தி அனுப்பச்சொல்லிவிட்டாராம் மருத்துவர்.அப்பாவும் தான் உடனே இறந்துவிட போகிறோம் என நினைத்து ,பயத்தில் அவர்களுடைய சொத்துக்களை பாகபிரிவினை செய்து எழுதிவிட வக்கீலுக்கு ஏற்பாடு செய்துவிட்டு, எங்களுக்கும் தன்திகொடுத்து உடனடியாக வரச்சொல்லிவிட்டார்கள்" என்று அம்மா கூறியதும்.

"உயில் எழுதிவிட்டாரா உங்கள் அப்பா? டாக்டர் என்ன சொன்னார்?உங்கள் அப்பாவின் உடல் குணமாகிவிடும் என்றாரா? என குமாரி

அக்கா விடாமல் தொடர்ந்தார்கள்.

“உயில் எழுதியதில்தான் வந்தது வினை குமாரி.அண்ணன் ஜகந்நாதனுக்கு என் மீதும் ,அப்பா மீதும், மிகவும் கோபம்.”என்று முகவாட்டத்துடன் கூறினார்கள் அம்மா.

“ஏன் அக்கா?என்றார்கள் குமாரி அக்கா தன நெற்றி புருவத்தை தூக்கி நிருத்தியவண்ணம்.

“நாங்கள் அங்கு போயி சேருவதற்கு முன்பே அப்பா வக்கீலை வரவழைத்து உயிலை எழுதி முடித்து வைத்திருந்தார்கள். நாங்கள் அனைவரும் சென்றடைந்ததும்,அன்று மாலையே வக்கீலை வரவழைத்து உயிலை படிக்கச் சொன்னார்கள் அப்பா.என் பெற்றோர்களின் பணம்,நகை,வீடு,நிலம் எல்லாவற்றிலும் 60%எனக்கும்,40%ஜகன்னாதனுக்கும்,எழுதிவைத்துவி அப்பா,”என அம்மா முடிப்பதற்குள் குமாரி அக்கா குறுக்கிட்டு ,

“உங்க அப்பா அக்கா சேதுவுக்கு எதுவும்

எழுதிவைக்கவில்லையா? என்று கேட்டார்கள்.

“அக்கா சேது தன இஷ்டப்படி ,வீட்டில் எங்கள் பெற்றோர் சம்மதம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டதால்,அவளுக்கு சொத்தில் பங்கில்லை என முன்பே கூறிவிட்டதால்,அவள் எதுவும் பேசவில்லை”.என்றார்கள்.

“ஆனால் வக்கீல் எல்லாவற்றையும் படித்துமுடித்தவுடன் அக்கா சேதுவின் முகம் வாடியது”.அண்ணன் ஜகன்னாதன் கோபத்துடன் கிளம்பி வெளியே சென்றுவிட்டான்.அதன் பிறகு அவன் என்னிடம் அதிகம் பேசவில்லை.ஊருக்கு புறப்பட்டும் முன், அவன் அம்மாவிடம் எதோ தனியாக சமயலறையில் கோபமாக முறையிட்டுகொண்டிருந்ததை பார்த்தேன்.என் கூட பிறந்தவர்களுக்கு இப்போது நான் ஒரு எதிரிபோல ஆகிவிட்டேன் குமாரி” என வருத்தம் தொனிந்த குரலில் அம்மா கூறினார்கள்.

“நீங்கள் என்ன பண்ண முடியும் அக்கா?உங்கள் அப்பா விருப்பபட்டு உங்களுக்கு பாதி

சொத்துக்குமேல் எழுதி வைத்திருக்கிறார்கள்.அது உங்கள் தப்பில்லையே". என ஆறுதல் வார்த்தைகளை சொன்னார்கள் குமார் அக்கா.

"சரி குமாரி,அது என் தப்பு இல்லா விட்டாலும்,நான்தான் அப்பாவை மயக்கி ஏமாற்றி சொத்துக்களை எடுத்துக்கொண்டேன் என என் மீது தேவை இல்லாமல் கோபமாக இருக்கிறான் என் அண்ணன்.இதனால் இன்னும் என்னென்ன குழப்பங்களும்,சண்டையும், சச்சரவும் வரபோகிறதோ? நினைத்தால் என் வயிற்றை கலக்குகிறது"என்று மிகவும் கவலையுடன் சொன்னார்கள் அம்மா.

"உங்க அப்பாவிடம் இது பற்றி நீங்கள் பேசி இருக்கலாமே அக்கா" என்றார்க குமாரி அக்கா.

"பேசினேன் குமாரி,ஆனால் அப்பா முடிவாக சொல்லிவிட்டார்கள். அதுதான் அப்பாவின் இறுதியான முடிவு ,அதை மாற்ற முடியாது என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார்கள்".

நான் எவ்வளவோ எடுத்து கூறினேன்.என் சொத்தில் பாதியை அக்கா சேதுவுக்கு எழுதிவிடுங்கள் என்று ,அப்பா பிடிவாதமாக அக்காவிற்கு சொத்தில் பைசா கிடையாது என கூறிவிட்டார்கள்.என் அம்மா கூட எவ்வளவோ சொல்லியும் அப்பா கொஞ்சம் கூட அசையவில்லை"என குரல் தழுதழுக்க கூறினார்கள்.

"ஆண்டவன் மீது பாரத்தை போட்டுவிட்டு இனி நடப்பதை பாருங்கள் அக்கா .வருத்தப்பட்டு ப்ரோயோஜனம் இல்லை.போக போக எல்லாம் தானாக சரியாகி விடும்" என குமாரி அக்கா அம்மாவிற்கு தைரியம் சொல்லிவிட்டு தன வேலையை கவனிக்க கீழே சமயலறைக்கு சென்று விட்டார்கள்.

அம்மா ஒவ்வொரு நாளும் பயந்து கொண்டே சிதம்பரத்திலிருந்து தந்தி அல்லது கடிதம் வருகிறதா?என எதிர்பார்த்து கொண்டிருந்தார்கள்.ஏன் என்றால் தாத்தாவிர்க்கு ஆறு மாதம் காலம் கெடு

மருத்துவர்
கொடுத்திருந்ததால்,அந்த ஆறு மாதத்தில் தாத்தாவி

ஆனால் அதற்க்கு பதிலாக தாத்தாவிடமிருந்து அடிக்கடி, அவர் உடல் நிலை தேறி வருகிறது என்ற நல்ல செய்தி வந்து கொண்டிருக்கவே,அம்மாவிற்கு சற்றே ஆறுதலாக இருந்தது.

ஆனஹி இன்னும் சிதம்பரத்திலேயேதான் இருந்தாள் .அவள் அங்கு இருப்பது தாத்தாவிற்கு ஆறுதலாக இருப்பதால், அவள் இன்னும் சிறிது காலத்திற்கு தன்னுடனேயே இருக்கட்டும் என தாத்தா கூறிவிட்டார்களாம்.அதன் பிறகு வழக்கம் போல காலம் உருண்டோடியது.

பெரியம்மாவும் வழக்கம்போல் எங்கள் வீடிற்கு அடிக்கடி வந்துபோய் கொண்டிருந்தார்கள். தன மீது அப்பா சொத்து ஏதும் எழுதிவைக்காதது பற்றியும்.அம்மாமேல் அதிக சொத்து எழுத்தி வைத்தது பற்றியும் பெரியம்மா பொருட்படுத்தியதாக எங்களுக்கு

தெரியவில்லை.அதானால் அதற்க்கு மாறாக ஒவ்வொரு வாரமும்,ஒவ்வொரு விடுமுறையின் போதும் பெரியம்மா எங்கள் முவரையும் அவர்கள் வீட்டிற்கு அழைத்து சென்று கொடுமை செய்வது அதிகமாகியது.

பெரியம்மா கடைசியாக விட்ட பயண கதையை தொடர்ந்து கேட்கும் ஆவல் எங்களுக்கு இருந்ததால் ,ஒவ்வொருமுறை பெரியம்மா வீட்டிற்கு செல்லும் போதும், அவர்கள் கதையை தொடர்வார்களா? என ஆவலுடன் எதிர்பார்த்து வந்தோம்.

மறுபடியும் பெரியம்மா வீட்டிற்கு ஒரு நாள் சென்றிருந்தபோது ,நான் விடாமல் பெரியம்மாவை கதை கூறுமாறு கேட்டதன் பேரில், சரி என சமதிக்கவே,அன்றிரவு சாப்பாட்டிற்கு பிறகு, வரவேற்ப்பு அறையில் அனைவரும் கீழே படுக்கையை விரித்து போட்டு விட்டு அதில் அமர்ந்திகொண்டோம் .பெரியம்மா அவர்களுடைய வழக்கமான நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார்கள்.

17

அத்யாயம்-பதினேழு

பெரியம்மா நாற்காலியில் உட்கன்ர்திருந்தபடி “சரி போன முறை எங்கு நிருந்தினேன்” என்று கேட்டதும்.

நான் தாயாராக எடுத்துசென்றிருந்த நோட்புக்கை பார்த்துவிட்டு “இங்கிலாந்திலிருந்து பாரிச்சுக்கு விமானத்தில் சென்றுகொண்டிருன்தீர்கள் பெரியம்மா”என்றேன் .

பெரியம்மா சிறிது நேரம் யோசித்துவிட்டு பிறகு

விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்கள்.”லண்டனிலிருந்து பாரிசுக்கு போக 80 நிமிடங்கள்,அந்த 80 நிமிடங்களும் அருகிலுள்ள அந்த பெண்மணியுடன் பேசிகொண்டுபோனத்தில் 80 நொடிகளாக பறந்துவிட்டது.ஐந்து வருடங்களுக்கு பிறகு மறுபடியும் பாரிஸ் நகரை சுற்றி பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது எண்ணி மனம் ஆர்வத்தாலும், ஆனந்தத்தாலும் துள்ளியது.பாரிசில் இறங்கியதும் நேரே முன்பு 1948-49 இல் தங்கியிருந்த அதே ஹோட்டலுக்கு டாக்சியில் போயி இறங்கியதும்,அந்த ஹோட்டலுக்கு சொந்தக்காரரான அதே பெண்மணி மிஸ் .டெலில் என்னை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.மிஸ்.டெலில் வெகு நாட்களாக அந்த விடுதியை நடத்தி வருந்தார்.கல்யாணமே ஆகாதவர் அவர்.அவருக்கு வயது 45 இருக்கலாம்”என்றார்கள் பெரியம்மா.

“நான் சென்ற முறை தங்கிய அதே அறையை இம்முறையும் மிஸ்.டெலில் எனக்கு கொடுத்திருந்தார்.முன்பு பாரிசை விட்டு

கிளம்புகையில் மிஸ்.டெலிலை திரும்ப பார்ப்போமா?அதே அறையில் திரும்ப தங்க கூடிய வாய்ப்பு இருக்குமா? என கனவிலும் நான் நினைக்கவில்லை.எல்லாம் திரைப்படம் போல அப்போது என் நினைவில் ஓடியது .”என்று மிகவும் உணர்ச்சிவசபட்டு கூறினார்கள் பெரியம்மா.

“பாரிஸ் அச்சமயம் கோடைகாலம் என்பதால் விடியற்காலை மூன்று மணிக்கே நன்றாக ப விடிந்துவிட்டது.இரவு 10 மணிக்குமேல்தான் சூரிய அஸ்தமனமும்,காலை மூன்று மணிக்கே சூரியோதயமும் ஆகிவிடும்.எனவே காலையில் சீக்கிரமாக எழுந்து, காலை உணவு அறைக்கு சென்றபோது ,மிஸ்.டெலில் என் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தார்.வெளிநாட்டு பிரயாணம் செய்தபோதெல்லாம் நான் கணக்கற்ற இடங்களில் சாப்பிட்டிருந்தாலும்,பிரெஞ்சு தேசத்து உணவை நான் ரசித்து சாப்பிட்டதுபோல வேறு எங்கும் சாப்பிட்டதே இல்லை.இந்தியாவில் நான் இருக்கும்

போதெல்லாம் பிரெஞ்ச் நாட்டு உணவை
நினைக்கும் போதெல்லாம் நாக்கில் நீர்
ஊரும்,மற்ற நாட்டு உணவை
பார்த்தபோது,எப்போது இந்திய
திரும்புவோம்,இந்திய சாப்பாட்டைஎப்போது
சாப்பிடுவோம் என்றிருக்கும்.என்னதான்
இருந்தாலும் நம் தென்னிந்திய ரசம் சாதம்
சாப்பிடுவதற்கு ஈடு இணை எந்த உணவிலும்
இல்லை “. என பெரியம்மா சொல்லும்போதே
அவர்கள் நாக்கை சப்புகொட்டி
கொண்டார்கள்.அது என்னவோ உண்மை தான்
ரசம் சாதம்தான் எனக்கும் பிடித்த உணவு கூட.

“பிரஞ்சுகாரர்கள் மிகவும் சிநேக
சுபாவமும்,தமாஷான குணமும்
படைத்தவர்கள்.அமெரிக்காவில் மேற்கேயுள்ள
கிளார்க்ஸ்டன் உயர்நிலை பள்ளியில் ஆசிய
சரித்திரம் என்ற புது பாடத்தை அந்த வருடம்
1955ல் புதியதாக புகுத்தும் திட்டம்
ஏற்படுத்தபட்டிருந்ததாலும்,யு.ஸ் ஏ வில்
அதுவரையில் எந்த உயர்நிலை பள்ளிகளிலும்
இதுபோல ஆசிய சரித்திரம் பாடமே

பொதிக்கப்படவில்லை.அதற்கான புத்தகங்களும் பாடங்களும்,இன்னும் அவைகளை போதிக்க தேவையான் சாதனகளையிம் இருந்தால் எடுத்துவரச் சொல்லி முன்பே எனக்கு அறிவித்திருந்தபடியால்,இந்தியாவிலும் அச்சமயம் ஆசிய சரித்திரம் என்ற பாடம் உயர்நிலை பள்ளியில் தனிபாடமாக இல்லாமலிருந்ததால் ,நான் இந்தியாவில் இருக்கும் போதே டில்லியிலுள்ள அணைத்து ஆசிய தூதுவர் காரியலத்திர்க்கும் கடிதம் போட்டு விவரங்களை கேட்டிருந்தபடியால் ,தாமதிக்காமல் அனைத்து புத்தகங்களும்,படங்களும்,வந்து குவிந்தன.மேலும் அனைத்து தூதுவர் ஆலயத்திளிருந்தும் அருமையாக எழுதியிருந்த வாழ்த்து கடிதங்களையும் என்றும் மறக்க இயலாது". என கூறிவிட்டு ஒவ்வொவாரும் கடிதமாக எடுத்து படித்து காட்டி ஆனந்த பரவசம் அடைந்தார்கள் பெரியம்மா.

"அமெரிக்காவில்முதன்முதலாகஆசியசரித்திரத்தைஒ
,வாஷிங்கடனில்உள்ளகிளார்க்ஸ்டன்
உயர்நிலைபள்ளிதான்.அப்போதையஉலகநிலையை

,அனுமதியும்கேட்காமல்என்இஷ்டப்படிஎனதுமனதிற்
“.எனவெகுவாகஅந்தகிளார்க்ஸ்டன்பள்ளிகூடத்தைப
பெரியம்மாசேது.

மேலும் “இப்படிப்பட்ட உயர்ந்த மனப்பான்மை
படைத்தவரிக்களிடம் ஒரு வருடம் வேலை
பார்ப்பது நான் பெற்ற பெரும்
பாக்கியமே.பரஸ்பர ஒத்துழைப்பையும்
,நம்பிக்கையும் உள்ள இடத்தில் யாருக்குதான்
மனபூர்வமாக உழைக்க ஆர்வம் இருக்காது?”என
பெருமிதத்துடன் கண்களில் நீர் மல்க
கூறினார்கள். இதுகேட்டு என் மனதில்
புல்லரித்தது நின்றேன்.பெரியம்மா கூறும்
ஒவ்வொன்றையும் விடாது ஒரு பேப்பரில்
சுருக்கமாக எழுதி வைத்தேன்.

“உலக மக்களிடையே கல்வி,கலாச்சாரத்தை
பரப்பி,பரஸ்பர ஒத்துமை
உணர்ச்சியையும்,ஒத்துழைப்பையும் ஏற்படுத்தி
,இறுதியில் உலக சமாதானத்திற்கு
வழிகோலுவதுதான் யுனெஸ்கோ என்ற
ஸ்தாபனத்தின் நோக்கம்.பாரிசில் பழைய

நாட்களில் அரண்மனையாக இருந்த ஒரு இடத்ததை அப்போது யுனெஸ்கோ தலைமை காரியாலயமாக உபயோகித்து வந்தார்கள்.இந்தியாவிலிருந்து புறப்படும் முன்பே யுனெஸ்கோ நிறுவனத்திற்கு நான் கடிதம் மூலம் தெரிவித்திருந்தபடியால் அந்த நிறுவனத்திற்கு சென்றவுடன் அனைத்து புத்தகங்களையும் எனக்கு கொடுத்துதவினார்கள்".என்றார்கள் பெரியம்மா.

"1945-ம் வருடம் நிறுவப்பட்ட யுனெஸ்கோ நிறுவனம்,மேல்நாட்டாரின் நாகரீகத்திற்கு மையமாக விளங்கும் பாரிஸ் நகரில் அமைந்திருப்பது முக்கியமாக கவனிக்கத்தக்கது இந்த அலுவலகத்தில் உலகத்திலுள்ள பலதேசத்திலிருந்து வந்தவர்கள் அலுவல் புரிகிறார்கள்.இதில் இந்தியர்களும் வேலை செய்து வருகிறார்கள்.65 நாடுகளிலிருந்து 65 அங்கத்தினர்களை கொண்ட அந்த யுனெஸ்கோ சங்கத்தின் பிரதான தலைவர் லூதர் இவான்ஸ் என்பவரே.அவரை டைரக்டர் ஜெனரல் என்று அழைப்பார்கள்.இந்த நிறுவனத்தில் அப்போது 65

நாடுகளிலிருந்து வேலை செய்ய வந்தவர்கள் 900 பேர்கள்.அதை ஒரு மனித காட்சி சாலை என்கூட கூறலாம்" என்று வேடிகையுடனும்,நகைச்சுவையுடனும் கூறினார்கள் பெரியம்மா.

"அந்த யுனெஸ்கோ நகரத்தில் 5 பெரிய இல்லாக்காகள் இருக்கிறது.1.கல்வி இலாக்கா 2.இயற்க்கை சரித்திர 3.சமுக சரித்திரம்.4.கலாசார பணிகள் 5.மக்களுடன் தொடர்பு ."என்ற பெரியம்மா யுனெஸ்கோ நிறுவன வர்ணனையை முடித்துவிட்டு, பாரிஸ் நகரை வர்ணிக்க தொடங்கினார்கள்.நேரம் போனதே தெரியவில்லை. மிகவும் சுவாரஸ்யமாக இருந்ததால் அனைவற்றையும் கேட்டு கொண்டே யாரும் எங்கும் எழுந்தது போகாமல் திரைப்படம் பார்ப்பதுபோல கேட்டுகொண்டிருந்தோம்.பெரியம்மா மேலும் தொடர்ந்தார்கள்.

"சுமார் 150 வருடங்களுக்கு முன்பு ஐரோப்பாவை ஒரு கலக்கு கலக்கிகொண்டிருந்த

நெப்போலியனால் நிர்ணயிக்கப்பட்ட மண்டபங்களும்,கட்டிடங்களும், ஞாபகார்த்தமான தூண்களும்,விசாலமான ரஸ்தாக்களும் எல்லாம் பார்க்கும் பொது பார்ப்பவர் நெஞ்சை நெகிழவைத்துவிடும் அளவிற்கு இருக்கிறது"என்றார்கள்.

"இதை எல்லாவற்றையும் விட மிக பிரசித்தி பெற்ற நெப்போலியனால் துவக்கப்பட்ட வெற்றி மண்டபமும்,அதன் அடியில் திறந்த வெளியில் யாரோ முகமறியாத போர்வீரன் புதைக்கபட்டிருந்தார்.அவரை "அன்நோன் சோல்ஜர்"என்று சொல்வது உண்டாம்.புதைத்த இடத்திற்கு மேலே ஒரு விளக்கு சதா அறிந்து கொண்டேயிருக்கிறது.பிரான்ஸ் ,,ஜெர்மானிய ஆக்கிரமிப்பில் நான்கு வருடம் இருந்த போது கூட இந்த விளக்கு மாத்திரம் அனைக்கபடவே இல்லை என்பதை அங்குள்ளவர்கள் கூற கேட்டு மிகவும் பிரம்மிப்பாக இருந்தது எனக்கு"என்றார்கள்.

"பாரிஸ் நகரம் பாஷன் உடைகளுக்கு மிகவும்

பேர் போனது .இதைகான உல்லாச பிரயாணிகள் மிகவும் ஆர்வம் காட்டியதால் ,கபேவிற்கு வெளியே அமர்ந்து காபி அருந்துவதை ஒரு காரணமாக வைத்துகொண்டு, நடைபாதையில்வரும் பாஷன் உடைகளை கண்டு களிப்பது வழக்கமாக உள்ளது.பாரிசில் பாஷன் வருடத்திற்கு நான்கு முறையாவது மாறிக்கொண்டே இருக்கும்.ஒவ்வொரு சீசனிலும் ஒரு பாஷன் ஷோ நடக்கும்.ஒவ்வொரு முறையும் புது பாஷனில் உடையை தைத்து அங்குள்ள மாடலிங்குக்கு அணிவித்து பொதுமக்களுக்கு விளம்பர படுத்தி காண்பிப்பது அங்கு வழக்கம்.புதுபுது பாஷனில் மேல்நாட்டு உடைகளை தைப்பதில் பாரிஸ் தையர்காரர்களும்,உடை செய்பவர்களும்தான் உலகிலேயே மிக பிரசித்து பெற்றவர்கள்"என பெரியம்மா கூறிகையில் அந்த பாஷன் ஷோவை நாமும் பார்க்க மாட்டோமா என ஆவல் எனக்கும் எழுந்தது.பெரியம்மா தன்னுடன் கொண்டுவந்திருந்த சில பாஷன் படங்களையும் எங்களிடம் காண்பிக்கையில் அனைவரின்

கண்களும் தாமரை பூப்போல அகலமாக விரிந்து அதிசயமாக பார்த்தன.

“நகரில் பற்பல இடங்களில் ஆங்காங்கே இம்மாதிரி புது பாஷன் காட்சிகள் நடந்து கொண்டிருக்கும்.சில சமயங்களில் இரண்டு மணி நேரங்கள் நடக்கும்.இம்மாதிரி தென்பட்ட பாஷன் எல்லாம் முன்று மாதத்தில் மாறிவிடும்.நல்ல வேளை, யார் செய்த புண்ணியமோ ,நம் இந்திய நாட்டில் அப்படி ஒரு தொல்லை நமக்கில்லை”என்று சிரித்துக்கொண்டே நிம்மதி பெருமூச்சு விட்டபடி கூறினார்கள் பெரியம்மா.

“இந்த மாதிரி காட்சிகளெல்லாம் பார்க்க எனக்கு மிகவும் பிடிக்கும் என்பதால் ஒருமுறை இம்மாதிரி பாஷன் ஷோ பார்த்து கொண்டிருக்கையில் எல்லா பாஷன் ஷோவையும் பார்த்து பிரமிப்பு அடைந்த ஒரு அமெரிக்க நியூ யார்க் தையற்காரர் ஒருவர் என்னை பார்த்து “பார்க்க போனால் உங்கள் உடைதான் மிக எளிமையாகவும்,ஆனால் அதே சமயம் மிக

லாவண்யமாகவும் உள்ளது.உடையில் தையல் வேலைக்கு இடமே இல்லை என்பதால் தையல் கூலி மிச்சம்" என்றார்."பாரிஸ்ஸில் கறிகாய்களுக்கு பஞ்சம் இல்லை.அதிலும் ஹோட்டலில் பரிமாறும் வாழைப்பழ பச்சடி எனக்கு மிகவும் பிடித்துவிட்டது.பிரெஞ்சு மக்கள்தான் மேல்நாட்டினருள் மிக ருசியாக உணவு சமைப்பதில் பெயர் போனவர்கள்"என்றும் கூறினார்கள்.

"மேலும் மாணவர்கள் வசிக்கும் லத்தீன் குவார்ட்டர்ஸ் என்னும் இடத்தில் பாந்தியன் என்ற ஒரு கட்டிடம் இருக்கிறது. அதில் பிரபல பிரெஞ்சு எழுத்தாளர்களும்,மக்களை முதன் முதல் சுதந்திரம்,சமத்துவம் பாதையில் இழுத்து விடுமாறு ,அவர்கள் கண்களை திறந்தவருமான ரூஸோ ,வால்டர்,விக்டர் ஹ்யூகோ ,முதலியோர் அந்த பாந்தியன் கட்டிடத்திற்குள்தான் சமாதி வைத்துள்ளர்ர்கள்", என்றும் கூறினார்கள் பெரியம்மா.

"ஐரோப்பியர் கிறிஸ்துவ மதத்தை தழுவுவதற்கு

முன் ஆண்டவை வழிபட வேண்டி கட்டப்பட்ட கோவில்களுக்கு பாந்தியன் என பெயர் சொல்லப்படுக்கிறது .ரோமாபுரியிலும் அம்மாதிரி ஒரு பெரிய பாந்தியனை நான் பார்க்க வாய்ப்பு கிடைத்தது" எனவும் கூறினார்கள்.

"சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் ரோமர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாரிஸ் மக்களை பற்றி முதன்முதலில் ஜூலியஸ் சீசர்தான் தன்னுடைய எழுத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்.அதுதான் இந்நகரத்தின் சரித்திரத்தில் ஆரம்பம் .நகரங்களில் சில பாகங்களில் ரோமர் ஆட்சியின் சின்னங்கள் பல இன்னும் காணப்படுகிறது. அவைகளில் சில தெர்மேஸ்,தியேட்டர்,வெற்றி வளைவுகள் .ரோமர் ஆட்சியில் அந்த இடத்தில் ஒரு பெரிய தண்ணீர் தேக்கமும் கட்டப்பட்டுள்ளது.அது பாழாகி நாளடைவில் மறைந்துவிட்டது எனவும் அங்குள்ளவர்கள் கூற நான் கேள்விபட்டேன்.சில ஆண்டுகளுக்கு முன்தான் எதோ புதிதாக ரஸ்தா போடுவதற்கு ஏற்பாடு செய்கையில் எதிபாரதவிதமாக அந்த இடம்

கண்டுபிடிக்கபத்ததாகவும் கேள்விபட்டேன்".
என்றார்கள் பெரியம்மா.

"சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவை
திணறடித்து கொண்டும்,மன்னாதி
மன்னர்களையெல்லாம் அடிபணிய வைத்துக்
கொண்டிருந்த நெப்பொலியனுகென்று ஒரு தனி
பிரத்யோகிய ம்யூசியம் இருக்கிறது.அதில் சரித்திர
பிரசித்தி பெற்ற போர் வீரரிகளின் சொந்த
சாமான்கள் ,உடைகள்,தினப்படி
உபயோகித்துவந்த
கத்திகள்,துப்பாக்கிகள்,பீரங்கிகள்,மேஜை
நாற்காலிகள் உள்பட எல்லாம் மக அழகாக
அந்த ஹால்களில்
வைக்கபட்டிருந்தன.நெப்போலியன் கடைசியாக
போர்க்களத்தில் அணிந்திருந்த உடையும்
அப்படியே காட்சிக்காக
வைக்கபட்டிருந்தது.நெப்போலியனின்
சவாரிசெய்த குதிரையைகூட பஞ்சடைத்து
நிஜகுதிரை போல வைத்திருந்ததை கண்டு என்
மனம் மிகவும் நெகிழ்ச்சி அடைந்தது".
என்றார்கள்.

“கடைசி சண்டையான வாட்டர்லூவிர்க்கு பிறகு நெப்போலியன் கைது செய்யப்பட்டு செயின்ட் ஹெலினா என்ற ஒரு சிறு தீவிற்கு தனியாக அனுப்பப்பட்டு அங்கு தனியாக இருந்தபொது நெப்போலியன் தன நண்பர்களுக்கு சிலருக்கு மனவருத்தத்துடன் எழுதிய கடிதங்கள் சிலவும் பொதுமக்களின் பார்வைக்காக அச்சமயம் வைக்கபட்டிருந்தது.அந்த கடிதத்தை படிக்கும் பொது என் மனம் மிகவும் உருகி வேதனை அடைந்தது “என்று மிகவும் வருத்தத்துடன் கூறினார்கள்.

“வாழ்க்கையில் வெற்றிகளை பல கண்டு தன கனவு சிதறியதோடு அல்லாமல் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு தன இஷடத்திற்கு விரோதமாக நாடுகடத்தப்பட்டு தன்னந்தனியே ஒரு சிறு தீவில் எளிய வாழ்கை நடத்தும் காலமும் தனக்கு ஏற்பட்டது குறித்து தன் பாஷையில்
உறவினர்களுக்கும்,நண்பர்களுக்கும்,படிப்போர் உள்ளம் உருகி கண்ணீர் வடிக்கும் வண்ணம் எழுதி இருந்ததை ஒருவர் எனக்கு

மொழிபெயர்த்து படித்துகாட்டுகையில்,வருத்தம் அதை படித்தவரின் தொண்டையை அடைக்க கண்ணீர் அவர் பார்வையை மறைத்த காட்சியை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை"என மிகவும் உருக்கத்துடன் கூறினார்கள்.

மேலும் அந்த கடிதத்தில் இருந்ததை எங்களுக்கு விளக்கினார்கள் பெரியம்மா."கடைசியில் ஆங்கிலேயரின் கையில் எதிபாராமல் சிக்கி இந்த மாதிரி தனி வாழ்க்கையும்,சிருமையும்தான் நான் அடைய வேண்டுமா?வாழ்நாள் முழுதும் எனது நாட்டிற்க்காக உழைத்ததன் பலனாக என்னை ஆண்டவன் முந்தியே தன்னிடம் அழைத்திருந்தால் அது எவ்வளவோ மேலாக வரவேற்றிப்பேனே.எதோ என் நாட்களில் அனேக காலம் கழிந்துவிட்டது.இன்னும் சில நாட்கள்தான்.ஆவி பிரியும் முன் எனக்கு நமது மக்களை பற்றிதான் கவலை.ஆயிரக்கணக்கான மக்களின் இரத்தத்தால் மெழுகுபட்டு எழுதப்பட்டுள்ள நம் சுதந்திர சமத்துவம் என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்பதே என்னுடைய சகல பிரார்த்தனையும்,பிரெஞ்சு மக்கள்தான்

இன்னும் எனது ஜீவ நாடியாய் இருக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு
தெரியபடுத்துங்கள்"என்று இப்படி ஒரு நெப்போலியனின் கடிததத்தை படிக்கும் பொது யாருக்குத்தான் கண்கள கலங்காது என என் மனதிற்கும்
நினைத்துக்கொண்டேன்.நெப்போலியன் காலத்தில் வாழ்ந்து இவை எல்லாம் பார்க்கமுடியாவிட்டாலும்,அந்த சரித்திரத்தை எல்லாம் பாதுகாத்து,நாம் எல்லாம் படித்து பயனுற இருப்பதை நினைத்து என் மனம் மிகவும் ஆனந்த மடைந்தது " என்றார்கள் பெரியம்மா.

எங்கள் குடும்பத்தில் ஒருவரான பெரியம்மா இப்படி எல்லாம் வெளிநாடுகளுக்கு சென்று அந்த நாட்டு சரித்திரத்தை ஓரளவிற்கு நேரே பார்த்து ,படித்து ,அறிந்து வந்து எங்களுக்கெல்லாம் கதை போல கூறியது நாங்கள் செய்த பாக்கியமே என்றுதான் சொல்லவேண்டும்.எத்தனை பேருக்கு இந்த பாக்கியம் கிடைக்கும்?பெரியம்மாவை நினைத்து

மிகவும் பெருமிதமடைந்தேன் என் மனதிற்குள்.

பெரியம்மா மேலும்
தொடர்ந்தார்கள்."ரோமாபுரிக்கு ஒரு
சீசரும்,பிரான்சுக்கு ஒரு
நெப்போலியனும்,-என்னே சரித்திர
போக்கு?கடைசியாக உடலை விட்டு உயிர்
பிரியும் முன் சில நாட்களாகநெப்போலியன்
படுத்திருந்த சின்ன கட்டிலும், அணிந்திருந்த
பழைய செருப்பும்,இரண்டும் அப்படியே ஒரு
முலையில் பார்வைக்காக
வைக்கபட்டிருந்தது.அதை பார்க்கையில் என்
மனம் மிகவும் வேதனை அடைந்தது".
என்றார்கள் பெரியம்மா.

"எப்படி எல்லாம் வாழ்ந்த ஒரு போர்வீரருக்கு
இம்மாதிரி ஒரு அவல நிலை ஏன் நிகழவேண்டும்
?பிறக்கும் போது இவ்வுலகிற்கு நாம் எதுவும்
கொண்டு வருவதில்லை,.இறக்கும் போது
நம்முடன் எதுவும் எடுத்துச்
செல்வதில்லை.மனதை நெகிழவைக்கும்
சரித்திரத்தை நம் கண்முன் கொண்டுவந்து

நிறுத்திய அந்த ம்யூசியம் போல வேறெங்கும் நான் காணவில்லை"என்றார்கள்.

"கடந்த இரு மகா யுத்தத்தில் பிரான்சில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும். ஆண்கள் போர்களத்திற்கு சென்று உயிர்நீத்த சோகக்கதையை ஒவ்வொரு குடும்பத்திலும் ,ஏதாவது ஒரு பரிதாபக் கதையை நான் கேட்க நேரிட்டது"என்றார்கள்.

"17-ம் நூற்றாண்டில் 14-ஆவது லூயி மன்னனால் வயதான போர்வீரர்களுக்காகவும்,யுத்தத்தில் காயம் அடைந்த பலஹீனமானவர்களுக்கும் ஓர் இருப்பிடம் பிரமாதமாக கட்டபட்டிருந்த்து.அதற்கு பெயர் இன்வாலிட் .அந்த கட்டிடத்தின் நடுவே ஒரு கூண்டு போன்ற அமைப்பு இருக்கிறது.அந்த கூண்டு தங்க கில்ட் கொடுக்கபட்டிருந்தது.அதற்க்கடியில்தான் நெப்போலியனின் சடலம் புதைக்கப்பட்டிருக்கிறது.சுமார் 30 ஏக்கர்

விஸ்தீரமாக அமைந்துள்ள அந்த போர் வீரர்களின் விடுதியின் ஒரு முலையில்தான் நெப்போலியன் மியூசியம் உள்ளது"என்றும் சொன்னார்கள்.

"அதை தாண்டி சுமார ஒரு மைல் தூரத்தில்தான் "ஐபல் டவர்"இருக்கிறது.இந்த இரும்பினால் கட்டப்பட்ட கோபுரம் .இது 1889-ம் ஆண்டு கட்டப்பட்டது.அவ்வருடம் பாரிசில் நடந்த அகில உலக கண்காட்சியின் போது பிரபல பிரெஞ்ச் இன்ஜினீயரான "ஐபல்" என்பவரால் இம்மாதிரி ஒரு சின்னம் கட்டப்பட்டு, அந்த கண்காட்சி முடிந்த பிறகும் இவ்வளவு பெரிய ஒரு விசித்திரமான கோபுரத்தை தகர்த்தெறிய மனமில்லாமல் ,அந்த இஞ்சீனியர் "ஐபல் " ஞாபகார்த்தமாக வைத்து காப்பாற்றப்பட்டு வருகிறது."என்று மிக விளக்கமாக கூறினார்கள்.

"அந்த கோபுர உச்சியில் ஒரு கபே இருக்கிறது.ஐரோப்பாவிலேயே முதன்முதலாக கம்பியில்லாத தந்தி இதன் உச்சியிலிருந்துதான் அனுப்பப்பட்டதாம்.பல ஆண்டுகளுக்கு முன் ஒரு

உல்லாச பிரயாணியான அமெரிக்க பெண் ஒருவர் அதன் மேலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டதாகவும் அங்கு கேள்விபட்டேன்"என்றார்கள்.

" வாழ்க்கை வாழ்வதற்கே, என்ற நம் இந்திய பழமொழிக்கேற்ப,வாழ்க்கையை அனுபவிக்க பிறந்தவர்கள் பிரெஞ்ச் மக்கள்.கணக்கற்ற யுத்தங்களில் அடிபட்டிருந்தும்,அம்மக்கள் வாழ்க்கையை ஒரு திருமணமாக மதித்து இருக்கும்வரை மகிழ்ச்சியோடு காலம் தள்ளுவோம் என்ற ஒரு உயர்ந்த கொள்கையுடன் முன்னேறும் விதம் உலகுக்கு ஒரு நல்ல எடுத்து காட்டாக உள்ளது." என மிகவும் ஆச்சிரியத்துடன் சொன்னார்கள்.

"மேலும் ஆபரா காமிக்" என்றொரு பெரிய தியேட்டர் அங்கிருக்கிறது.அதில் கர்னாடக சங்கீத நாடகங்கள் நடத்தப்படுகிறது.ஒரு நாள் அங்கு போயிருந்த சமயம் ஒரு ரசமான நாடகத்தை பார்க்க நேர்ந்தது.அந்த நாடகத்தின் பெயர் "லக்குமி"என்றும்,அது ஒரு இந்திய கதை

என்றும்,,இந்தியா ,பிரிட்டிஷ்
ஆட்சிக்குட்பட்டிருந்த போது ,அந்த சரித்திரம்
உண்மையாக நடைபெற்ற சம்பவம்." என்று
சொல்லிவிட்டு பெரியம்மா அந்த நாடகத்தின்
கதையை விவரித்தார்கள்.

"இலக்குமி என்னும் ஒரு இந்து கோவில்
குருக்களின் மகள் ஒரு பிரிட்டிஷ் ராணுவ
அதிகாரி மீது காதல் கொண்டாள் .அதை அவள்
தகப்பனார் அறிந்து கோபம் கொண்டு ,அந்த
அதிகாரிக்கு "ஹானி "விளைவித்து
காயப்படுத்திவிட்டாராம்.பிறகு அவரை தனியாக
ஒரு இடத்தில் ரகசியமாக வைத்து அந்த பெண்
சிகிச்சை செய்து வந்தாளாம்.அப்போது அவர்கள்

"திரும்ப இங்கிலாந்திற்கே வரவழைக்கும் உத்தரவு
கையில் வரவே,அவர் அந்த இந்திய பெண்ணுக்கு
பிரியாவிடை கொடுத்துவிட்டு இங்கிலாந்துக்கு
சென்றுவிட்டாராம். தனது காதலனின் பிரிவு
தாங்காது அந்த கோவில் குருக்களின் மகள்
விஷ பச்சிலை சாப்பிட்டு தற்கொலை செய்து
கொண்டதாக அந்த நாடகம் முடிந்தது.அது

பிரெஞ்சு நாடு முழுதும் மக்களுக்கு பிடித்த ஒரு நாடகமாக இருந்தது.ஆனால் அந்த சங்கீத் நாடகம் பிரெஞ்ச் பாஷையில் அமைக்கபட்டிருந்தது.நடித்தவர்கள் அனைவரும் பிரெஞ்ச் நடிகர்களே.மற்றபடி சீன் எல்லாம் இந்திய ஜோடனையில் இருந்தது. முதல் சீனில் ஒரு அருவி அருகே பிள்ளையார் சிலை மிக பெரியதாக இருந்தது.இலக்குமியாக நடித்தவர் ஒரு பிரெஞ்ச் நடிகை.முதல் சீனில் கோவில் நந்தவனத்தில் பாடிகொண்டே பூ பறித்து ,புஷ்பமாலை தொடுத்து சீன் மிக அழகாக எடுக்கப்பட்டிருந்தது.அன்பனின் பிரிவை தாளாது துடித்து கடைசியில் அவள் தற்கொலைதான் பரிகாரம் என முடிவு செய்து அதையும் நிறைவேற்றிய கட்டம் அங்கிருந்த எல்லோர் மனதையும் கலக்கிவிட்டது.அந்த நாடகத்தை திரும்ப திரும்ப பார்த்தாலும் அம்மக்களுக்கு சலிப்பு ஏற்படவில்லை என அந்த அரங்கில் இருந்தவர்கள் என்னிடம் கூறியது கேட்டு நான் மிகவும் அதிசயப்பட்டேன்" என்றார்கள்

"முன்பு 1947-ம் ஆண்டு நான் லண்டனில்

இருந்தபோது,பிரிட்டிஷ் அரசாங்கத்தார்
இங்கிலாந்திலுள்ள சில பயிர்த்தொழில்
செய்வோரை தேர்ந்தெடுத்து தங்கள்
செலவிலேயே கஷ்டப்பட்டு உழைக்கும்
அவர்களை பாரீசிர்க்கு அனுப்பி 10 நாட்களுக்கு
போல் தங்க வைக்க எல்லா ஏற்பாடுகளும்
செய்து முடித்துவிட்டனர்.குடியானவர்கள்
எல்லாம் "பாரிஸ்"என்னும் கனவுலகம் பார்க்க
போவதை எண்ணி இறுமாந்து
கொண்டிருக்கையில்,அவர்கள் புறப்படுவதற்கு
தயாராகும் சமயம் திடீரென அவர்களது
மனைவிமார்கள் எல்லாம் ஒன்று கூடி கூட்டம்
போட்டு "நாங்கள் எங்கள் கணவன்மார்களை
தனியாக பாரிஸ் செல்வதை
ஒப்புக்கொள்ளமுடியாது .வேண்டுமானால்
எங்களையும் அரசாங்க செலவிலேயே
அவர்களுடன் அனுப்ப ஏற்பாடு
செய்யுங்கள்.இல்லாவிட்டால் அவர்கள் தனியாக
பாரிஸ் சென்று கும்மாளம் போடுவதை நாங்கள்
அனுமதிக்க முடியாது என்று தீர்மானமாக கூறி
மேலதிகாரிக்கு மனு போட்டதில்,கடைசியாக

அந்த பயணம் யாருக்கும் இல்லாமல் போனதுதான் மிச்சமாயிற்று”என சிரிப்பு தாளாமல் கூறி முடித்தார்கள் பெரியம்மா..

பெரியம்மாவின் பழைய பிரெஞ்ச் நண்பர்கள், பெரியம்மா அவர்களுக்கெல்லாம் சொல்லாமல் திருமணம் செய்து கொண்டபடியாலும்,வெகு நாட்களுக்கு பிறகு பெரியம்மாவை பார்த்த சந்தோஷத்தாலும் ஒரு குடும்பத்தினர் குட்டி விருந்து ஒன்று ஏற்பாடு செய்திருந்தார்களாம்.

“மேலும் வருடா வருடம் பாரிசில் குழந்தைகளுக்கு என்று ஒரு தனி அழகு போட்டி நடைபெற்று வருமாம்.1949-ம் ஆண்டு நடந்த போட்டியில் என்னையும் ஒரு ஜட்ஜாக நியமித்திருந்தார்கள்.அந்த போட்டியில் பரிசு வாங்கிய குழந்தைகளின் பெற்றோரோகள் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டார்கள்.அந்த போட்டி நடந்த மறுநாள் பாரிஸ் பத்திரிக்கை ஒன்றில் அதை பற்றி படித்தபோது எனக்கு வியப்பு தாங்கவில்லை.ஏன் என்றால் என் கனவிலும்

நினைத்து பாராத ஒரு செய்தி பத்திரிகையில் வெளியாகி இருந்தது.இந்த போட்டியில் விசேஷமாக கலந்துகொண்ட ஜட்ஜுகளில் ஒருவரான இந்திய பெண்,இவர் ஒரு இந்திய இளவரசி,வலது மூக்கு பக்கம் ஒரு வைரம் அணிந்திருந்தார்.இவரது பெயர் இளவரசி சேது என்ற செய்தியை பத்திரிகையில் படிக்கையில் எனக்கு தூக்கிவாரி போட்டது.ஒன்றுமே புரியாமல் அங்குள்ள சில நண்பர்கள் குடும்பத்தை விசாரிக்கையில் “நாங்கள் பள்ளிகூடங்களில் இந்தியாவை பற்றி படிக்கையில்,அங்கே இளவரசிதான் மூக்கில் வைரம் அணிந்திருப்பார்கள் என படித்திருந்தோம்.அதனால்தான் உங்கள் மூக்கில் வைர மூக்குத்தியை பார்த்ததும்,உங்களை கேட்காமலேயே பத்திரிகையாளர்கள் நீங்கள் இளவரசி என முடிவு செய்துவிட்டார்கள்.அதில் உங்களுக்கென்ன கஷ்டம்.இம்மாதிரி பத்திரிகையில் என் பெயரை போட்டிருந்தால் நான் மிகவும் பெருமைபடுவேன்.யாரிடமும் நீங்கள் இளவரசி இல்லை என்பதை

சொல்லவேண்டாம் என் அவர்கள் சொல்லியது கேட்டு நான் மிகவும் அதிசயமடைந்தேன்"என கூறினார்கள்.

"இளவரசி இப்படி தெருவில் நடந்து சென்றால், இது என்ன பிச்சைகார இளவரசியோ?என்று ஜனங்கள் நினைக்கமாட்டார்களா?"என நான் அவர்கள் சந்தேகத்துடன் கேட்டதற்கு "எது எப்படியோ,பேசாமலிரு.இதை பற்றி பெரிது படுத்தி கொள்ளாதே.அந்த பெயர் உனக்கு இருந்து விட்டு போகட்டும்.ஒரு இளவரசி என் ஹோட்டலில் தங்கியிருக்கிறாள் என்றால் எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?எல்லோரும் இது பற்றி இன்று என்னை கேட்டார்கள்.நானும் ஆமாம் ,அவள் ஒரு இளவரசிதான் என்று எல்லோரிடமும் சொல்லி கொண்டு வருகிறேன்"என அநத ஹோட்டல் சொந்தகார பெண்மணி மிஸ் .டெலில் சொன்னதை கேட்டு எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது"என்றார்கள் பெரியம்மா.

அந்த செய்தி வந்த பத்திக்கையும் மிக பத்திரமாக வைத்திருந்து எங்களிடம் எல்லாம் காண்பித்துவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள் பெரியம்மா.அதை படித்துவிட்டு நாங்கள் அனைவரும் பெரியம்மாவுடன் சேர்ந்து கொண்டு சிறி சிறியேன சிரித்து ஓய்ந்துவிட்டோம்.

“கடந்த ஆயிரம் ஆண்டுகளாக ஐரோப்பிய நாகரீகதிற்கே இருப்பிடமாயுள்ள இப்பாரிஸ் நகரை “லண்டன் உலகில் ஒருமுலை”ஆனால் பிரான்ஸ் உலகிற்கே மையம் என்று நெப்போலியன் குறிப்பிட்டது எழுதியிருந்ததில் ஆச்சர்யபடுவத்தர்க்கு ஒன்றுமில்லை ” என பெரியம்மா பிரான்ஸ் நாட்டை மிகவும் உயர்த்தி பேசி வந்தார்கள்.

18

அத்யாயம்-பதினெட்டு

“உலகத்தோரின் உள்ளத்தை
கொள்ளைக்கொண்ட அன்னகரிலும் ஏழ்மை
தாண்டவ மாடாமல் இல்லை.நகரில் ஏழை
தொழிலாளிகள் வசிக்கும் சிற்சில இடங்களில்
போயி பார்வையிட்டபோது என் மனம் மிகவும்
கஷ்டப்பட்டது.கோணல் கோணல்களாக
அமைந்திருக்கும் குறுகிய சந்துகளும்,இருபுறமும்
இருட்டான புறா கூண்டுபோல
வீடுகளும்,பார்த்ததுமே இவை ஏழை மக்கள்
வசிக்கும் இடங்கள் என்பது
தெரிந்துவிடும்’என்றார்கள்.

“மேலும் பாரிசில் அப்போது பிச்சைகாரர்கள் கிடையாது.ஆனால் கௌரவ பிச்சைகாரர்கள் ஒருசில இடங்களில் தென்பட்டனர்.யுத்தத்தில் கை,கால்களை இழந்து,பார்வை இழந்து ,அங்கஹீனங்கள் இழந்து இருக்கும் மக்களுக்கு அரசாங்கத்தார் உதவி பணம் ஆயுள்பூராவும் கொடுத்தாலும் அது போதாமையால் சிலர் தெருக்களின் ஓரமாக தொப்பியை கவிழ்த்து கையில் வைத்துகொண்டு பேசாது நிற்ப்பார்கள்.மனம் இறங்கி சிலர் அந்த தொப்பியில் பணம் போட்டு செல்வார்கள்”என்றார்கள் பெரியம்மா.\

“கடந்த மகா யுத்தத்திற்கு முன்னால் அழகாக பிடில் வாசித்து ஆயிரகணக்காக சம்பாதித்த ஒருவன், குண்டு வீச்சில் பார்வை இழந்து அந்த தியேட்டரில் மேற்கொண்டு வேலை செய்ய முடியாமல் வெளியே தள்ளப்பட்டதால்,தன பிடில் வாசிப்பதை விடாமல் தொடர்ந்து தெருவின் ஓரமாக நின்று, எல்லோர் மனமும் நெகிழ வைக்கும்படி அந்த மனிதர் பிடில் வாசித்துகொண்டிருந்தத்தை பார்க்க என் உடல்

முழுதும் புல் அறிந்த்தது"என்று பெரியம்மா மன நெகிழ்வுடன் கூறினார்கள்.

"பெரும்பாலானோர் அவர் பிடில் வாசிப்பதை நின்று கேட்காமல் செல்லமாட்டார்கள்.ரசித்து முடித்தவுடன் அங்கு கவிழ்த்து வைத்திருந்த தொப்பியில் தவறாது பணம் போட்டு செல்வார்கள்"

"நான் பாரிஸ் சென்ற வேலையை முடித்துவிட்டு,அந்த நகரத்தையும் சுற்றி பார்த்துவிட்டு,அதன் பிறகு லண்டனுக்கு திரும்பி ,பின் அமெரிக்கா செல்லும் கப்பலுக்கு தயாரானேன்." என்று கூறிவிட்டு இதற்கிடையில் பாரிஸ் நாட்டு பஸ் போக்குவரத்து பற்றி பெரியம்மா விளக்குகையில் கதை கேட்ட எங்களை அனைவருக்கும் மிகவும் அதிசயமாகவும்,ஆச்சர்யமாகவும் இருந்தது.பெரியம்மா தொடர்ந்தார்கள்.

"பாரிஸ் பஸ் போக்குவரத்தை பொருத்தவரை குழந்தைகள் அதிகமாக இருக்கும் பெற்றோர்கள்

இருவருக்கும் மற்றவர்களைவிட பஸ் சார்ஜ் கம்மி.குழந்தைகள் அதிகம் ஆக,ஆக,பஸ் சார்ஜும் குறைந்துகொண்டே போகும்.இதை நிரூபிக்க குழந்தைகள் அதிகம் என்ற அத்தாட்சி சான்றை பெற்றோர்கள் எப்போதும் தன்னுடன் வைத்திருக்கவேண்டும்.பாரிஸ் நகரில் பஸ் நிற்கும் பொது முதலில் கண்டெக்டர் குழந்தைகள் ,குழந்தைகள் என குரல் கொடுப்பார்.சிறு குழந்தைகள் வீட்டில் விட்டுவிட்டு வெளியில் கடைக்கு சென்று வீடு திரும்பும் பெற்றோர்கள் இருவருக்கும் முதலில் பஸ் ஏறிவிட வேண்டும் என்ற சட்டம் அங்கு இருக்கிறது.குழந்தைகள் உள்ள பெற்றோரோகள் ஆபீஸ் சென்று வீடு திரும்பும் போதும், பஸ்சிற்கு காத்திருக்கும் மக்கள் அதிகமாக இருந்தால் தங்களுக்கு இத்தனை சிறு குழந்தைகள் இருக்கிறார்கள் என்ற குறிப்பிட்ட சான்றை கண்டக்டரிடம் காண்பித்துகொண்டே முதலில் பஸ்சிர்க்குள் ஏறிவிடுவார்கள்.அப்போது முன்னே வந்தவர்கள் ஒதுங்கி அவர்கட்கு வழி கொடுக்க வேண்டும் என்ற சட்டம் அந்த நாட்டில் இருக்கிறது" என மிகவும்

பாரட்டுதலுடன் கூறிவிட்டு “இதுபோல நம் இந்திய நாட்டிலும் வந்தால் நன்றாக இருக்குமே.ஆனால் இதுபோல் எப்போது வருமோ?வராதோ?” என மிக வருத்தத்துடன் கூறினார்கள்.

“பாரிசை முடித்துவிட்டு லண்டனை அடைந்த நான் 1947-ம் ஆண்டு தங்கிய அதே சர்வகலாச்சார பெண்கள் விடுத்திக்கு சென்று அதே அறையில் தங்க சந்தர்ப்பம் கிடைத்தது.அதே கட்டில்,அதே மேஜை மற்றும் அதே நாற்காலி அப்படியே மாறாமல் இருந்தது”என்றார்கள்.

“பிறகு லண்டனில் அனேக ஆண்டுகளாக ,சென்னை தரகம்பாடியை சேர்ந்த தமிழர் ஒருவர் தன் மராட்டிய மனைவியுடன் வசித்துவந்தார்.அப்போது அவர்கட்கு குழந்தை எதுவும் இல்லை.அந்த மராட்டிய மனைவி 1947-ம் ஆண்டு நான் லண்டனில் தனியாக இருந்தபோது நன்றாக கவனித்து கொண்டார்கள்.நான் அந்த முறை இந்தியா

திரும்பிய ஒரு வருடத்திர்க்கெல்லாம் அந்த மராட்டிய பெண்மணி இறந்துவிட்டதாக எனக்கு கடிதம் வைத்திருந்தது பார்த்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.என்னை தன பெண் போல பார்த்து கொண்டவர்களுக்கு இப்படி ஆயுசு குருகியதாகிவிட்டதே என்று."

"ஆனால் இந்த முறை நான் லண்டன் நகரை அடைந்ததும் அந்த நபரை தொலைபேசியில் அழைத்து பேசிய சமயம், அவர் ஒரு ஆங்கிலேய பெண்ணை மனதிருப்பதாக கூறினார்.என்னை பார்த்து தமிழ் பேச அன்று இரவு சாப்பாட்டிற்கு அழைத்திருந்தார்.

"சமயத்தில் போயி சேர்ந்த நான் அருமையான வரவேற்ப்பு அளிக்கப்பட்டு உள்ளே சென்ற நான் அவரது மூன்று சிறு குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்ததை பார்த்தேன். அந்த நபர் தன ஆங்கில மனைவியையும்,மூன்று குழந்தைகளையும் எனக்கு அறிமுகபடுத்திவைத்தார்.அந்த ஆங்கில மாது மிக நல்லவராக இருந்தாலும்,முன்பு தாயார் போல

என்னை கவனித்துகொண்ட அந்த மராட்டிய மனைவி ,போனசமயம் என்னை உள்ளம் உவந்து வரவேற்ற அந்த இடத்தில் புதிதாக அன்று ஒரு மாது தென்பட்டது எனக்கு கொஞ்சம் வித்யாசமாகவும்,மிக வருத்தமாகவும் இருந்தது.அப்போது புதிதாக பிறந்த பெண் குழந்தைக்கு சந்திரா என பெயர் வைக்கப்பட்டிருந்தது.நாங்கள் கடந்தகால விஷயங்களை பரிமாறி கொண்டும்,அவர் இங்கிலாந்திலேயே அனேக காலம் வசித்து வந்ததால் இந்திய நாட்டை பற்றி அதிக விஷயங்களை அறிய பிரியப்பட்டதால் பல விஷயங்களை பேசினோம். அந்த நபருக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. பெசமட்டும்தான் தெரியும்."என்றார்கள்.

"தனது ஆங்கில மனைவிக்கு நமது இந்திய உணவை நன்றாக சமைக்க கற்று கொடுத்திருந்தார் அவர்.நான் அவர்கள் வீட்டிற்கு சென்றபோது
சாம்பார்,சாதம்,ரசம்,அப்பளம்,ஊறுகாய் என தடபுடலாக அந்த ஆங்கில மனைவி சமைத்து

வைத்திருந்தார்.அதை எல்லாம் முக்கு பிடிக்க நன்றாக சாப்பிட்டு முடித்தேன்.அந்த ஒருவேளை சாப்பாட்டிற்கே அவர்களுக்கு நான் மிகவும் கடமைபட்டிருக்கிறேன்”என கூறினார்கள்.

“இரவு 10 மணிக்கு அவர் வீட்டை விட்டு கிளம்புகையில் ,அமெரிக்காவிலிருந்து திரும்ப இந்தியா செல்லும் வழியில் லண்டனில் தன்னை பார்க்காமல் நான் போககூடாது என்று கடுமையாக உத்தரவிட்ட அந்த தமிழ் நபரிடமிருந்து அன்றிரவு நான் விடைபெறும் பொழுது அன்றுதான் நான் அவரை கடைசியாக பார்ப்பது என கனவிலும் நினைக்கவில்லை.நான் அமெரிக்கா சென்ற சில மாதங்களுக்குள் அந்த தமிழ் நபர் திடீரென இறந்துவிட்டார் என கடிதம் வந்தது.என்ன விந்தையான உலகம் இது.”என கண்கள் கலங்க வேதனையுடன் பெரியம்மா கூறுகையில் எனக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.அந்த மனிதரை நாங்கள் யாரும் நேரில் பார்க்காவிட்டாலும் எதோ நாங்களும் அவரை சந்தித்து பிரிந்ததுபோல ஒரு உணர்வு

ஏற்பட்டது.

“லண்டனில் ஒவ்வொரு முலைமுடுக்கும் சரித்திரம்
பேசும்.லண்டன் ஒரு அகில நாட்டு நகரம்
என்றே கூறலாம்.இந்த நகரத்தில் எல்லா
நாட்டுமக்கள் வசிப்பதையும் காணலாம்.இந்த
சிறிய தீவில் வசிக்கும்
மக்களா உலகில் பல பாகங்களை பிடித்து சாம்ராஜ
என வியப்படைந்தேன்.

சூரியனே அஸ்தமிக்காத இந்த பிரிட்டிஷ்
தலைநகரான லண்டனிலிருந்து கொண்டு
தங்கள் சாம்ராஜ்யத்தை நடத்தி வந்தார்கள்
இந்த பிரிட்டிஷ் மக்கள்”என மிகவும்
ஆச்சர்யத்துடன் கூறினார்கள்.

“பிரிட்டிஷ் மக்கள் மிகுந்த அடக்கமும்,சாந்தமான
சுபாவமும் கொண்டவர்கள்”என பெரியம்மா
சொல்கையில் என் மனம் எங்கோ பறந்து
சென்றது.இப்படி சாந்தமும் ,அடக்க சுபாவமும்
உள்ளவர்கள் ஏன் இந்தியாவை அடக்கி,ஒடுக்கி
ஆண்டார்கள் என என் சின்ன மனதிலே ஒரு

இனம்புரியாத கேள்வி எழுந்தது.பிறகு எனக்கு நானே பதிலையும் சொல்லிக்கொண்டு ,,"இது பிரிட்டிஷ் காரர்கள் தவறு இல்லை.நம் இந்திய மக்களின் தவறே.அதனால்தான் 200 ஆண்டுகளுக்குமேல் மாற்றான் தோட்டத்து மல்லிகையாக நாம் வாழ்ந்தோம் என எனக்கு நானே சமாதனம் செய்து கொண்டு,பெரியம்மாவின் கதையை தொடர்ந்து கவனிக்க ஆரம்பித்தேன்.

"நான் இங்கிலாந்தில் இருந்த பொது ராணி எலிச
உலகில் பல பாகங்களிலிருந்து அவருக்கு வந்த வெகுமானங்களும் ஜேம்ஸ் அரண்மனையில் வைக்

இந்தியாவிலிருந்து ராணி எலிசபெத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு வைர கொலுசும்,இந்தியாவைப் பற்றி நேரூஜியால் எழுதப்பட்ட ஒரு பெரிய புத்தகமும் அங்கு ஒரு பிரதான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.ஹைதராபாத்திலிருந்து நிஜாம் அனுப்பிய ஒரு வைர நெக்லசும் எல்லாவற்றையும் விட கண்களை பறிக்க

கூடியதாக வைக்கபட்டிருந்தது.அதை இப்போது நினைத்தாலும் கண்கள் கூசி கசக்கி கொள்வேன்"என பெரியம்மா கூறுகையில் அந்த நெக்லசை இந்த ஜென்மத்தில் எங்களுக்கெல்லாம் பார்க்க வாய்ப்பு கிடைக்குமா?என மனம் எண்ணியது.

இந்தியாவில் பல ஏழை மக்கள் பசியால் வாடி துடித்து கொண்டிருக்கையில் ,அவர்களின் பசியை என்னாது ,ராணி எலிசபெத் கழுத்தில் அணியாத அந்த வைர நெக்லஸ் ஏன் நம் நாடு வீணாக செலவு செய்து அவர்களுக்கு அனுப்பவேண்டும்.பிரிட்டிஷ் ராணிக்கு இல்லாத நகைகளா.என என் மனம் எண்ணியது.

"நம் இந்திய நாட்டின் கோஹினூர் வைரம் என்ற விலை உயர்ந்த வைரம் அங்குள்ள ஒரு ராஜ மகுடத்தின் நடுவில் பதித்திருக்கிறது.அது பார்க்க மிக பெரியதாகவும், அழகாகவும் இருந்தது."

"அடுத்தது லண்டன் டவர் என்ற கோட்டை

சுமார் 12 ஏக்கர் விஸ்தீரம் கொண்டது.உள்ளே நுழைந்ததும் சிறை கூடங்கள் பார்க்கும் போது மிகவும் பயமாக இருந்தது.கடந்த பல ஆண்டுகளாக அங்கு நடந்த சரித்திரத்தை பற்றி கேள்விப்படும்போது இன்றும் பயங்கரமாகவே இருந்தது.அரசர் குடும்பத்தினர் அக்கோட்டையில் முற்காலத்தில் கொலை செய்யப்பட்ட இடமும் அப்படியே மக்களின் பார்வைக்காக வைக்கபட்டிருந்தது.அச்சமயம் அக்கோட்டை சில யுத்த தளவாடங்கள் சேமித்து வைக்குமிடமாக இருக்கிறது" என சொல்லிவிட்டு அப்படியே அங்கு நடந்த ஒரு பேய் கதையையும் பெரியம்மா கூறினார்கள்.

"பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் மன்னனான எட்டாம் ஹென்றி ஒருவர் பின் ஒருவராக ஆறு மனைவிகளை மணந்தாராம்.அந்த ஆறு பேரில் ஒருவரான ஆன்பொலின் என்ற 21 வயது இளம் மனைவியை வேறு மனம் செய்துகொள்ளும் பொருட்டு தூக்கு மேடைக்கு அனுப்ப எட்டாம் ஹென்றி உத்தரவு

போட்டுவிட்டாராம்.ஹாம்ப்டன் அரண்மனையில் ஒரு சிறிய சர்ச் அடித்தளத்தில் உள்ளதாம்.அந்த இளம் மனைவியை தூக்கிலிட காவலாளிகள் அழைத்துக் கொண்டு அங்குள்ள விராண்ட வழியாக செல்லும் பொழுது .

அந்த மன்னன் கீழே சர்ச்சில் உருக்கமாக தொழுதுகொண்டிருந்தாராம்,அப்போது அந்த இளவரசி உயிர் பிச்சை வேண்டி மன்னன் இருக்கும் திசையை நோக்கி ஓட மன்னனின் சினத்திற்கு அஞ்சிய காவலாளிகள் அவளை விடாமல் தரதரவென இழுத்துகொண்டு செல்ல அந்த பெண் அலறிக்கொண்டே அந்த ஹாலின் வழியாக தூக்கு மேடைக்கு சென்றதாக ஒரு கதையாம்.அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் அதே தினத்தில் அவளது அலறும் குரல் நள்ளிரவில் எங்கும் கேட்குமாம்.அந்த நாள் இரவில் ,முக்கியமாக முறை காவலாளிகள் சற்றே திகிலுடந்தான் ஹால்களில் சுற்றி காவல் காத்து வந்தார்களாம்”

“வழக்கமாக அங்கே காவலாளிகள் தனியாக

நின்று தம்தம் பகுதியை சுற்றி வருவது வழக்கமாம்.பல வருடங்களுக்கு முன்பு சிலர் ரொம்பவும் பயத்தால் அந்த இரவு மட்டும் இருவராக வேலையில் சேர்த்து போட்டார்களாம்.ஏன் எனில் மிக அகலமான அந்த ஹாலில் சில வருடங்களுக்குமுன் ஒரு காவலாளி இரவு பூரா சுற்றி சுற்றி வருகையில் திடீரென ஒரு முலையில் திருப்பத்தில் திரும்பும்போது இன்னொரு அரசியின் பேய் வருவதை காணவே அப்படியே அங்கேயே மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டாராம் என லண்டன் பேப்பரில் நான் படித்திருக்கிறேன் போனமுறை நான் லண்டனில் இருந்தபோது"என்றார்கள் பெரியம்மா.

"இதெல்லாவற்றையும்விட தூர தேசத்திலிருந்து லண்டன் வரும் ஒரு முன்பின் தெரியாத பெண்மணியை சந்திக்கும் வண்ணம், நான் என் விடுதிக்கு திரும்பி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதால் அந்த பெண்மணியும் குறித்த மணிக்கு சரியாக வந்து சேர்ந்தார்.என் லண்டன் வருகையை பற்றி சென்னையிலுள்ள நண்பர்

ஒருவர் அந்த பெண்மணிக்கு முன்பே கடிதம் மூலம் எழுதி தெரிவித்திருந்திருந்தார்.அந்த சென்னை மனிதர் ஒரு அரசாங்கத்தில் ஆபீசராக இருந்து ஓய்வு பெற்றவர்.அந்த ரிடையர்ட் ஆபீசரும்,அந்த பெண்மணியும் லண்டனில் ஒரே கல்லூரியில் படித்தவர்கள்.தன பழைய இந்திய நண்பரிடம் மிகுந்த அன்பும்,,மதிப்பும் வாஞ்சையும் கொண்ட அந்த பெண் மணி என்னை பார்த்ததும் அந்த ஆபீசரை பார்த்தது போல சந்தோசம் அடைந்தார்"

"தனது பழைய இந்திய நண்பரை வருடம் இருபதை தாண்டியிருந்தாலும் சிறிது கூட மறக்காமல் சிநேகிதத்தை கடிதம் மூலம் காத்தது,அங்கிருந்து வந்த என்னை பார்த்து தனது பழைய தோழமையை நேரில் காணுவது போல் உள்ளம் புளங்காகிதம் அடைந்தது கண்டு என் மனம் வெகுவாக நெகிழ்ந்தது விட்டது"என்றார்கள்,

"அந்த பெண்மணிக்கு கடைசியாக விடை கொடுத்து அனுப்பியவுடன் அருகில் இருந்த

வெஸ்ட் மினிஸ்டர் சர்சிற்கு சென்றேன். கடந்த அனேக நூற்றாண்டுகளாக பிரிட்டிஷ் அரச வம்ச திருமணம் ,முடிசூட்டு விழா முதலியன அந்த சர்ச்சில்தான் நடந்துவருகின்றன.தற்சமயம் அங்குதான் அரண்மனை விழாக்கள் நடைபெற்று வருகின்றன.சில பழைய அரசர்களும் அங்குதான் புதைக்கபட்டிருக்கிரார்கள்.அப்போது அங்கே ராணி எலிசபெத்தின் திருமணமும்,முடிசூட்டு விழாவும் நடைபெற்றன" என்றும் கூறினார்கள்.

"முதலில் நுழைந்ததும் அனைவரின் கண்களில் படுவது முகம் தெரியாத ஒரு போர்வீரனின் சமாதியும்,அவனுடைய தீரச்செயலும் பெரிய எழுத்துக்களில் போரிக்கபட்டிருக்கிறது.அந்த சமாதிக்கு இருபுறமும் உலா சுவர்களில் முதலில் இந்தியாவிலுள்ள திருச்சிராப்பள்ளி கோட்டையின் சிற்பம் செதுக்கபாட்டிகின்றன.அதை கண்ட நான் சற்றே ஆச்சர்ய பட்டேன் .கிளைவின் முற்றுகை படம் அதில் தீட்டப்பட்டிருந்தது.அதேபோல நகரில் செயின்ட் பால் என்னும் சர்ச்சிலும்

இருக்கிறது என கேள்விபட்டேன்.இது வெளி பார்வைக்கு மிக பிரமாதமான தோற்றமுடையதாக இருந்தது.இதன் அடி தளத்தில் நெப்போலியனை தோற்கடித்த போர்வீரர்களான இருவர் நெல்சன் பிரபுவும்,வில்லிங்டன் பிரபுவும் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கிறது.அவர்களது தீரச்செயலால் ஐரோப்பாவின் சரித்திரமே எப்படி மாறி விட்டது .அவர்களது சவ ஊர்வலத்தில் ஏற்றி சென்ற பெரிய இரதங்களும் அந்த இடத்திலே வைக்கபட்டிருந்தது.நெப்போலியன் பயமுறுத்திய பிடியிலிருந்து இங்கிலாந்தை விடுவித்த இவ்விரண்டு வீரர்களையும் ஆங்கிலேய மக்கள் பெரிதும் போற்றியிருப்பதை அந்த காட்சிகளை கண்டே எளிதில் யாவரும் அறிந்து கொள்ளலாம்”என மிக விளக்கமாக கூறினார்கள்.

“தேம்ஸ் நதிக்கரையோரமாக காணப்படும் உயர்ந்த கட்டிடங்களுக்குள் மிகமிக அழகாக காணப்படும் பிரிட்டிஷ் பார்லிமென்ட் ,உலகில்

எங்கும் பரவியிருந்த சாம்ராஜ்யத்தை ஆங்கிலேயர் இந்த கட்டிடத்திற்குள் இருந்துதான் பற்பல சட்டங்களை இயற்றி ஆண்டு வந்தனர் என நினைக்கையில் ,மிகவும் வியப்பாக இருந்தது எனக்கு"என்றார்கள்.

"இங்கிலாந்தில் 300 ஆண்டுகளுக்கு முன்னிருந்த முதலாவது சார்லஸ் என்னும் அரசன் மக்களால் மரண தண்டனை வித்திக்கப்பட்டு உயிர் துறந்தபின் அந்த நாட்டில் சில ஆண்டுகள் அரசாங்கத்திற்கு தலைமையாக இருந்து தேசத்தை நடத்திய க்ரொம்வெல் என்பவரின் சிலைதான் பார்லிமென்ட் கட்டிடத்திற்கு வெளியே வாசற்படியில் அருகே வைக்கபட்டிருகிறது .மக்களால் அங்கீகரிக்கப்பட்ட இம்மாதிரி உள்ள மரண சாசனம் இன்னும் சில சரித்திர தஸ்தாவேஜுகள் அந்த கட்டிடத்திற்கு இருபுறமும் உள்ள ம்யூசியத்தில் வைக்கபட்டிருக்கிறது"எனவும் கூறினார்கள்.

"அந்த பார்லிமென்ட் கட்டிடம் திட்டம் போட்டு

நிர்மாணித்த சிற்ப்பியான சார்லஸ் பாரி என்பவர் இதன் ஒரு முலையில் மனிகூண்டில் இருக்கவேண்டும் என தீர்மானித்தபோது,அதன் உச்சியில் ஒரு பெரிய கடிகாரம் வைக்கப்பட அங்கீகாரம் அளித்துத்து அப்போதிருந்த பார்லிமென்ட் சபை.அதன் முடிவாக எழுப்ப பட்டதுதான் "பிக்பென்"கடிகாரம் .அதன் தோற்றமே மிக கம்பீரமானது.பூமியிலிருந்து சுமார் 300 அடி உயரத்தில் மணிக்கூண்டின் உச்சியில் புகழ்பெற்ற "பிக்பென்"கடிகாரம் அமைக்கப்பட்டுள்ளது.இதன் உச்சியில் 334 படிகட்டுகள் இருக்கின்றன.உலகிலேயே அதுதான் மிகபெரிய மெகானிகல் கிளாக்.அந்த கடிகாரத்திலிருந்து எழும் நாதம் ஒவ்வொரு தினமும் அடிக்கடி உலகெங்கும் ரேடியோ முலம் அஞ்சல் செய்யப்பட்டு வருகிறது."என்றும் சொன்னார்கள்.

"எவ்வளவோ போட்டிக்கும் ,இடைஞ்சல்களுக்கும் இடையில் இந்த் கடிகாரம் கடைசியாக 1859-ம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து ஓட ஆரம்பித்ததாம்.இதற்க்கு பெயரிடுவது பற்றி ஒரு

பலத்த வாக்குவாதம் காமன் சபையில் நடைபெற்றதாம்.அப்போது அச்சபையில் மக்களின் விசுவாசத்தையும்,பிரியத்தையும் பெற்றிருந்த "சர்.பெஞ்சமின் ஹால் "என்ற ஒருவர் பார்க்க உருவத்தில் பெரியதாய் வாட்ட சாட்டமாக இருந்தாராம்.அவரை செல்லமாக பிக்பென் என சுருக்கமாக அழைத்துவந்தார்களாம்.வாக்குவாதத்தில் முடிவு ஏற்படாத பட்ச்சத்தில் ஒரு அங்கத்தினர் எழுந்து,"ஏன் அந்த கடிகாரம் பெரியதாக இருப்பதால் "பிக்பென்"என்றே கூப்பிட்டால் என்ன?"என கூறுகையில் சபையில் பலத்த சிரிப்புடன் "ரொம்ப நியாயம்"என சப்தம் எழுந்ததாம்.அதிலிருந்து அப்பெயரையே அமோதிக்கபட்டு வழங்கபட்டது".என்ற கதையை மிகவும் வேடிக்கையாக பெரியம்மா கூறவே எங்கள் அனைவருக்கு சிரிப்பு வந்துவிட்டது.

"மிக அபூர்வமாக அமைக்கப்பட்ட இக்கடிகாரத்தில் நான்கு முகங்கள் கொண்டது.அதனுடைய மொத்த நிறை 5 டன்.கடிகாரம் ஒவ்வொரு மணி நேரத்திற்கும்

மணி அடிப்பதற்கு சுமார் 131/2 டன் கனத்தில் ஒரு பெரிய கிண்டாமணியும்,அதற்க்கு பின்னால் வைக்கப்பட்டுள்ளது.அதிலிருந்து வெளிப்படும் ஒலி ஒரு நாளைக்கு 43 முறை வெளி உலகிற்கு ரேடியோ மூலம் பரப்பபடுகிறது.வடக்கு இங்கிலாந்தில் ஆர்டர் செய்யப்பட்ட இந்த கிண்டாமணி ட்ரைன் மூலமாக லண்டனுக்கு கொண்டுவர இயலாமல் அதை கப்பலின் மேல் தளத்தில் வைத்து கொண்டு வந்து சேர்த்ததாக நான் அறியவந்தேன்" என்றார்கள்.

"அந்த பெண்டுலத்தின் கனமே 700 பவுண்ட்.நீளம் 13அடி,நான்கு முகம் கொண்ட அக்கடிகாரத்தின் ஒவ்வொரு முகவட்டமும் குறுக்களவு 231/2 அடி .மணி காட்டும் எண் ஒவ்வொன்றும் உயரம் 2 அடி .நிமிஷம் காட்டும் முள்ளின் நீளம் 11அடி.ஒரு வருடத்தில் இந்த முள் சுமார் 100 மைல் தூரம் சுற்றி வருகிறதாம்.மணி காட்டும் முள் ஒருவித கண்ணாடியால் செய்யப்பட்டது".என்றும் அந்த கடிகாரத்தை பற்றி மிக விளக்கமாக கூறினார்கள்.

“1859-ம் ஆண்டிலிருந்து நிறுவப்பட்டு ஓடிக்கொண்டிருக்கும் இக்கடிகாரத்திற்கு 1913-ம் ஆண்டு வரை ,ஒரு வாரத்தில் பதினாறுமணிநேரம் இரண்டு ஆட்கள் சாவி கொடுத்து வந்தார்களாம்.அதன் பிறகு அந்த கடிகாரம் மின்சாரத்தால் இயங்கி வருவரதாகவும் விஷயம் அறிந்தேன்” என பெரியம்மா கூறியது கேட்க எங்களனைவருக்கும் மிகவும் அதிசயமாக இருந்தது.

“மேலும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி வசிக்கும் “டௌனிங் “தெருவில் 10-ம் நம்பர் இல்லம் உலகில் மிக பிரசித்தி பெற்றது.புகழ் வாய்ந்த இந்த இடத்தை பற்றி பிரமாதமாக கேள்விபட்டிருக்கும் நமக்கு அது ஒரு சின்ன சந்து தெருவில் ஒரு முலையில் இருப்பதை பார்க்க மிக வியப்பாக இருந்தது.கடந்த யுத்தத்தின்போது அனேக தடவைகளில் இவ்வில்லத்தின் அடிதளத்திலிருந்துதான் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் தன சாம்ராஜ்யம் முழுவதிற்கும்,உலக மக்கள் அநேகருக்கு ரேடியோ மூலம் பிரசங்கம்

செயதுவந்தாராம் " என்றார்கள்.

"மேலும் நான் தொடர்ந்து லண்டன் போலிஸ்காரர்களை "ஒரு நடமாடும் அகராதி" என்றே சொல்லவேண்டும்.நகரை பற்றி என்ன கேட்டாலும் அவர்கள் உடனே சரியான பதிலை அளிக்கிறார்கள்.ஆங்லேயர்கள் அவர்கள் பாபீஸ் என குறிப்பாக கூறுகிறார்கள் அங்கு நிறைய பெண் போலீசார் இருக்கிறார்கள்."என குறிப்பிட்டு சொல்லி மிகவும் பெருமை பட்டார்கள் பெரியம்மா.

"மலும் லண்டனில் கிரீன் பார்க் ,ஜேம்ஸ் பார்க்,க்யு கார்டன் என சில பெரிய பூஞ்சோலைகள் இருக்கிறது.அவற்றுக்குள் நடந்து சுற்றும் போது ஒரு பெரிய ஜனநேருக்கமாக உள்ள பட்டினத்தில் இருக்கிறோம் என்பதே தெரியவில்லை.அவ்வளவு ஒரு அமைதியுடன் அது காணப்பட்டது .இந்த வஸ்தீரமான அமைந்திருக்கும்,தோட்டங்களுக்கு அடியிலும் இரயில் ஓடிக்கொண்டிருக்கிறது. பார்க்கில் வந்திருக்கும் மக்களுக்கு வீடு திரும்ப அது மிகவும்

வசதியாக இருக்கிறது.கடந்த யுத்தங்களின்போது இரவில் ஒரு மணிக்கு இரயில் ஓடுவது நின்றபின் அதன் தண்டவாளத்தில் குறுக்கேயும்,பிளாட்பாரத்திலும் முழுதும் எங்கு பார்த்தாலும் ,குண்டு வீச்சுக்கு பயந்துகொண்டு ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு இம்மாதிரி பூமிக்கடியில் வந்து தூங்குவது வழக்கமாம்.பாவம்|. ஒரு மணிக்கு தூங்க ஆரம்பித்து திரும்ப 51/2 மணிக்கெல்லாம் கலையில் படுக்கையை சுருட்டிக்கொண்டு வீடு திரும்பிவிடுவார்களாம்" என கூறினார்கள் பெரியம்மா.

"மேலும்ராயல்ஆல்பர்ட்ஹால்எனப்பட்டஒருமிகபெர "என்றார்கள்

"மேலும் லண்டன் நகரில் எங்கு பார்த்தாலும் கடைதெரு மாதிரியே தோன்றியது எனக்கு.ஆக்ஸ்போர்ட் தெரு ,ரேஜன்ட் தெரு ,பாண்ட் தெரு,பிக்கடெல்லி ஏரியா முதலியவற்றில் மிக பெரிய கடைகள் எல்லாம் பெயர் போனவைகள் .அதில் பாண்ட்

தெரு,ரேஜன்ட் தெருவிலுள்ள கடைகள் பணக்காரர்கள் வாங்குமிடம் என கேள்விபட்டேன்.அதே போல கவென்ட் தோட்ட கறிகாய் கடை ஒன்று நகரில் உள்ளது.விடியற்காலையிலேயே அங்கு கடை ஆரம்பித்து விடும் "என்றார்கள்.

"லண்டன் மாநகரில் கொஞ்சம் பணம் உடையோர் மேற்கு பக்கத்திலும்,ஏழை மக்கள் கிழக்கு பக்கத்திலும் வசிக்கிறார்கள்.இவற்றிக்கு வெஸ்ட் எண்டு,ஈஸ்ட் எண்டு ,என பெயர்.அந்த கிழக்கு முனையில் நான் சென்று சுற்றி பார்க்கையில் என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை.படு ஏழ்மையுடன் தோற்றமுடைய சேரிகளை அந்நாட்டிலிருப்பதை நான் கொஞ்சமும் எதிர்ப்பார்க்கவேயில்லை"என மிகவும் ஆச்சர்யமாக கூறினார்கள்.

"உலக சாம்ராஜ்யத்தை கட்டி ஆண்ட இங்கிலாந்திலும் இப்படிப்பட்ட வறுமையின் முழு சாயலை காணுகையில் என் மனம் திடுக்கிட்டது.அங்குள்ள ஏழை மக்களை

பொதுவாக காக்னைஸ் என மற்ற ஆங்கிலேயர்கள் அழைக்கிறார்கள்.அங்கு சிறுவர் ,சிறுமியர் அழுக்கு துணியுடன் குறுகிய தெருக்களிலும்,நெருக்கமான சந்துகளிலும் விளையாடிகொண்டிருந்தார்கள்"என்றார்கள்.

"சேரிகளை அழித்து ஏழைகளுக்கு கட்டிடமாக கட்டும் நோக்கத்துடன் பாடுபடும் உலகின் பலபாகங்களில் லண்டன்தான் முதல் நகரமென்றும்,அனேக ஆண்டுகளாக இச்சேரிகளை அரசாங்கக் அழிக்கபாடுபட்டு வந்ததை விட , யுத்தத்தின் சமயம், எனக்கு தெரிந்த பெண்மணி ஒருவர், வேலை செய்துவிட்டு வழக்கம்போல வீட்டிற்கு திரும்பிய போது அவளுடைய இல்லம் இருந்த இடத்தில் அது இல்லையாம்.அதற்குள் குண்டுவீச்சினால் அது முழுதும் இடிந்து தீப்பற்றி எரிந்து சாம்பலாகிவிட்டதாம்.பாவம் தனிய இருக்கும் அப்பெண்ணின் மனது எவ்வளவு பாடுபாடிருக்கும்.அந்த பெண்மணிக்கு வயது ஐம்பது இருக்கலாம்,ஏழையாக இருந்தாலும் நன்கு படித்தவர் அந்த பெண்"என்றார்கள்.

“மேலும் அந்த பெண் பெயர் மிஸ்.மேகாய்.
அவரை பற்றி இன்னொரு
விசேஷமான செய்தி உள்ளது. அப்போது
இங்கிலாந்தில் உள்ள எலிசபெத் ராணியின்
தாயான ஆறாம் ஜார்ஜ் மன்னரின் மனைவியை
போலவே மிஸ்.மெகாய் தொன்றமளித்தார்.
அவரை பார்ப்போர்கள் அதை அவரிடம் கூறாமல்
இருக்கமுடியாது.அப்போதுள்ள இளைய
எலிசபெத் ராணி பட்டத்திற்கு வருமுன்,மூன்று
வருடங்களுக்கு முன்னால் பெரிய எலிசபெத்
ராணியிதான் பட்டத்து மன்னரின் பட்ட
பட்டத்து ராணியாக முடிசூட் டி
கொண்டவர்.என்ன சிநேகிதி மிஸ்.மெகாய்
அப்போது ஒரு அழகிய போடோ ஒன்று எடுத்து
,அதோடு தான் ராணி மாதிரியே அதே சாயலை
கொண்டிருப்பதாக குறிப்பிட்டு ஒரு கடிதம்
எழுதிவைத்து பகிங்ஹாம் அரண்மனையில்
வசித்த ராணிக்கு அனுப்பி வைத்ததில் உடனே
சில நாட்களுக்கு பிறகு அவருக்கு ஒரு சின்ன
வெகுமானமும் பாராட்டு கடிதமும்
அரண்மனையிலிருந்து வ ந்தாம் அவற்றை

எல்லாம் அவர் என்னிடம் காண்பித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்"என்றார்கள் பெரியம்மா.\ "அதன் பிறகு நாட்கள் நிமிஷங்களாக பறந்தது.அமெரிக்க செல்ல கப்பல் ஏறும் தினமும் வந்தது.கப்பலில் ஏறும் பிரயநிகளுக்கென லண்டனிலிருந்து இரண்டு இரயில்கள் விடப்பட்டிருந்தது.அதில் முதல் இரயிலில் சுமார் 80 மைல்கள் தூரத்திலிருக்கும் ஸ்தாம்ப்டன் துறைமுகத்தை நான் சென்றடைந்தேன்.லண்டன் நகரை பிரியும் போது என் மனம் மிகவும் வேதனை அடைந்தது"என்று மிக உருக்கமாக கூறினார்கள் பெரியம்மா.

"ஸ்தாம்ப்டன் துறைமுகத்தில் நான் ஏறும் கப்பலின் அருகேயே ட்ரெயின் சென்றது.நான் செல்லும் கப்ப லுக்கு அருகிலேயே உலகில் மிக பெரிய கப்பலான குயீன் எலிசபெத் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.அதில் இடம் கிடைக்க வேண்டி நான் எவ்வளவோ முயற்சித்தும் இடமில்லை என கூறிவிட்டார்கள் .பல நாட்களுக்கு முன்பே அதில் ரிசேர்வ்

பண்ணியிருக்க வேண்டுமாம்.நான் அமெரிக்காவிற்கு சென்ற ஜார்ஜிக் என்ற கப்பல் குயீன் எலிசபெத் கப்பலுடன் ஒப்பிடவே முடியாது" என்றார்கள் மிகவும் வருத்தத்துடன்.

இரவு வெகுநேரமாகிவிட்டதால் பெரியம்மா இத்துடன் கதை முடிக்க வேண்டியநிலை ஆயிற்று.கதை மிக விறு,விருப்பாக இருந்ததால் எங்கள் அனைவருக்கும் பெரியம்மா கதைய நிறுத்துவதில் விருப்பமில்லை.அறைமனதுடன் அனைவரும் எழுந்து தூங்குவதற்கு சென்றுவிட்டோம்.பெரியம்மா கூறிய அனைவற்றையும் அவர்கள் கூற கூற ஒரு பேப்பரில் குறிப்பு போல எடுத்து கொண்டேன்.மறுநாள் எங்கள் வீட்டிற்கு சென்றதும்,விவரமாக கட்டுரை எழுதி பத்திரமாக என்னுடைய கப்போர்டில் வைக்க முடிவு செய்தேன்.

19

அத்யாயம்-பத்தொன்பது

மறுநாள் பெரியம்மா வீட்டில் காலை உணவை சாப்பிட்டு விட்டு சுமார் பத்து மணி அளவில் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். அன்று ஞாயிற்று கிழமை என்பதால் பெரியம்மா வீட்டில் முதல் நாள் அவர்கள் கூறிய பயண கதை குறுப்பு தாளை எடுத்து வைத்துகொண்டு ,அதை விவரமான கட்டுரையாக ஒரு நோட்டு புத்தகத்தில் எழுது , பத்திரமாக என் அலமாரியில் வைத்து பூட்டினேன்.

நாட்கள் வெகுவாக நகர்ந்து சென்றது.

கோடைவிடுமுறையும் வந்தது. உடல்நிலை சரியில்லாததால் வழக்கமாக லீவு விட்ட அன்றே வந்து எங்களை அழைத்து செல்லும் தாத்தா ஈஸ்வரன் இந்தமுறை வரவில்லை.அதற்க்கு பதிலாக கடிதம் போட்டு எங்களை கொண்டு வந்து விடுமாறு அம்மாவிற்கு ஏற்கனவே எழுதியிருந்ததால்,அம்மா எங்களுடன் கிளம்பி சிதம்பரத்திற்கு வந்தார்கள்.குமாரி அக்காவிற்கும் லீவு கொடுத்து ,அவர்கள் குடும்பத்துடன் சிறிது நாள் தங்கி ,பிறகு நாங்கள் அனைவரும் சென்னைக்கு திரும்பும் முன் ,அவர்கள் எங்களுடன் சிதம்பரம் வந்து, பிறகு அனைவரும் ஒன்றாக சென்னை திரும்புவதாக ஏற்பாடு செய்திருந்தார்கள் அம்மா.

சிதம்பரத்திற்கு சென்றடைந்ததும், எங்கள் நால்வருக்கும் பெருத்த ஏமாற்றம் காத்திருந்தது.மாமாவிற்கு கோபமாம் ,அதனால் இனி அவர்கள் முன்று பெண்களையும் சிதம்பரத்திற்கு அனுப்பிவைக்கப்போவதில்லை என கடிதம் போட்டுவிட்டார்களாம் மாமா ஜகன்னாதன்.

தாத்தாவை பார்க்கும் ஆவலுடன் சிதமபரம் சென்ற நான், தாத்தா படுத்த படுக்கையாக இருப்பார்கள் ,நான் போய் பார்த்து அவர்களுக்கு என்னென்ன ஆறுதல் வார்த்தைகளை கூறலாம் என இரயிலில் பயணம் செய்த முழுதும் எனக்குள் ஒத்திகை பார்த்துக்கொண்டே சென்றேன்.

வழக்கமாக நாங்கள் இரவு ஒன்பது மணிக்கு சென்னையில் இரவு இரயிலில் கிளம்பி மறுநாள் விடியற்காலையில் ஆறுமணிக்கு சிதம்பரத்திற்கு செல்வோம்.இரயில் சிதம்பரத்தை விடியற்காலையில் நெருங்கும் சமயம் அம்மா எங்களை எல்லாம் எழுப்பி தயார் செய்து விட்டு ,அம்மாவும்,குமாரி அக்காவும் பெட்டிகளை எடுத்து வைத்துகொண்டிருந்தார்கள். இரயில் நின்ற ஐந்து நிமிடத்திருக்குள் அனைவரும் இறங்கிவிடவேண்டும்,இல்லை என்றால் இரயில் கிளம்பி சென்றுவிடும். பிறகு அடுத்த ஸ்டேஷனில்தான் இன்றங்கி திரும்பி வேறு இரயில் அல்லது பஸ் பிடித்து வரவேண்டும்.எனவே அம்மாவும், குமாரி

அக்காவும் துரிதமாக எல்லாவற்றையும் இரயிலின் இறங்கும் வாயிலில் தயாராக வைத்துவிட்டு ,அனைவரும் இறங்குவதற்கு தயாராக நின்றுகொண்டிருந்தோம்.

இரயில் சிதம்பரம் ஸ்டேஷனில் நுழையும் சமயம் ,நாங்கள் முவரும் ஜன்னல் வழியாக வேடிக்கைபார்த்துகொண்டிருந்தோம்.இரயில் நின்றதும் நாங்கள் இருக்கும் பெட்டியின் முன் தாத்தா ஈஸ்வரன் நின்றிருப்பதை பார்த்ததும் ஆச்சர்யத்தால் எங்கள் அனைவருக்கும், எங்கள் கண்களையே எங்களால் நம்பமுடியவில்லை.ஆனந்தத்தால் வாய்பிளந்து, சிறிது நேரம் சென்றவுடன் ,பிறகு சுயநினைவு திரும்பியவர்களாக “தாத்தா”என்ற ஆனந்த கூச்சலுடன் இரயிலிலிருந்து கீழே குதித்து, முவரும் தாத்தாவை கட்டிகொண்டோம்.அம்மாவும் ,தாத்தாவை ஸ்டேஷனில் எதிபார்க்காததால் மிகவும் ஆச்சரியத்தில் ஆனந்தபட்டவர்களாக ,

‘ஏன் அப்பா நீங்கள் வந்தீர்கள்,வெறும் ஜட்கா

வண்டியை மட்டும் அனுப்பிவைத்திருக்கலாமே "என செல்லமாக கடிந்துகொண்டார்கள்.

"உடல் சரியாகிவிட்டத்து.இனி எனக்கு ஆபத்து எதுவும் இல்லை ,சாகும் கண்டத்தை தாண்டிவிட்டேன்.இன்னும் பத்து வருடங்களுக்கு மேல் நான் உயிருடன் இருப்பேன்,அந்த சந்தோஷத்தில் வீட்டில் இருக்க மனமில்லாமல் வந்துவிட்டேன்"என்று கூறிவிட்டு எங்கள் அனைவரையும் ஸ்டேஷனுக்கு வெளியே நிறுத்தி வைத்திருந்த வெள்ளை குதிரை வண்டிக்கு அழைத்துசென்று உட்கார வைத்தார்கள்.

தாத்தாவின் குதிரை வண்டி அது.மிக பெரிய வெள்ளை குதிரையின் பின்னால் இரண்டு புறமும் திரையிட்டு மறைத்திருந்த நீண்ட வண்டி.அதில் ஆறு பேருக்கு மேல் தாராளமாக உட்கார்ந்து பயணம் செல்லலாம். குதிரை வண்டியில் போவதென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்.அதில் குஷியாக ஏறி அமர்ந்து கொண்டேன்.வழி முழுதும் வேடிக்கைப் பார்த்துக்கொண்டே சென்றேன்.

இளம் காலை கதிரவன் செந்நிறமாக
நீலவானதிலே மெதுவாக தலையைதூக்கி
பூமியை பார்த்து ரசித்த வண்ணம் மேலே
எழும்பிக்கொண்டிட்ருந்தார்.காக்கையின்
கரைதலும்,சேவல் கூவுதலும் ,பெண்கள் சிலர்
தன வீட்டிற்கு முன் தண்ணீர் தெளித்து கோலம்
போட்டுக்கொண்டிருப்பது ஒருபுறமும்,கதிரவனின்
வரவால் மகிழ்ச்சியுற்ற அனைத்து ஜீவன்களும்
சுறுசுறுப்புடன் சாலைகளில்
இயங்கிக்கொண்டிருப்பதை பார்த்து
ரசித்தவண்ணம் தாத்தா வீட்டை
அடைந்தோம்.அந்த கதிரவனின் மகிமையை
எண்ணி வியந்தே.அந்த ஒரு சூரிய
உதையத்தால்தான் இந்த பூலோகமே
இயங்குகிறது.அச்சூரியன் இல்லாவிட்டால் எந்த
ஜீவஜந்துக்களும் இல்லை.என்பதை எண்ணி
வியந்த வண்ணம் வண்டியை விட்டு
இன்றங்கினேன்.

வழக்கமான குதூகலத்துடன் வரவேற்கும்
அவ்வீட்டு வேலையாட்கள் குதூகலம்
குன்றி,வேண்டாவெறுப்பாக வரவேற்றுவிட்டு

உள்ளே சென்று விட்டார்கள்.அம்மாவுக்கு முகம் வாடியதுடன்,எங்கள் மூவருக்கு முகம் துவண்டுபோனது.பட்டியின் முகத்திலும் வழக்கமான குதூகலத்தை பார்க்க முடியவில்லை.மாமா பெண்கள் மூவரும் வராததால் வீடு களை இழந்து காணப்பட்டது.

வழக்கமாக எங்கள்ஏழு பேரையும் தாத்தா அழைத்து வரும்போது வீடே ஒரு கோலாகலமாக இருக்கும். எங்கள் வருகையை எதிர்பார்த்து ,நாங்கள் வருவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பே, நாங்கள் படுக்கும் அறைகளை சுத்தம் செய்து ,அழகாக அலங்கரித்து, வேலை ஆட்கள் அனைவரும் எங்களை சுற்றி சுற்றி கொஞ்சி மகிழ்வார்கள்.

ஆனால் இந்த முறை அந்த அளவிற்கு யாரும் ஆர்வம் காட்டவில்லை.கூட விளையாட மாமா பெண்கள் இல்லாதது மிகவும் போரடித்தது.அம்மாவும் சந்தோஷமில்லாமல் காணப்பாட்டார்கள்.எங்களை பார்த்த என்

தங்கக் ஆனஹி பயந்து பாட்டி கமலாவை கட்டிகொண்டாள்.அம்மா எவ்வளவோ ஆசையுடன் அருகே அழைத்தும் ,அவள் அம்மாவிடம் வர மறுத்துவிட்டாள். அம்மாவின் முகம் மேலும் வாடியது.

“என்னை ஆனஹி மறந்து விட்டாள் போலிருக்கிறது”என்றார்கள் அம்மா வருத்தத்துடன்.

“ஆனஹி ,இவங்க உன் அம்மாடா கண்ணு, அம்மா கிட்ட போ”என்றார்கள் பாட்டி.

“நீங்கதான் என் அம்மா.இவங்க யாரோ” என்றால் ஆனஹி.

“நான் உன் பாட்டி,இவங்கதான் உன் அம்மா,நீ மறந்துவிட்டாய் போலிருக்கிறது”என்றார்கள் மறுபடியும் .

ஆனஹி பயத்துடன் பாட்டியை கட்டிபிடித்து கொண்டு அன்று முழுதும் அம்மாவிடம் அவள் வரவே இல்லை.குதூகலம் குறைந்த வீடு பார்க்க

ஒரு சூன்யம் பிடித்த வீடாக காணப்பட்டது.வேலை ஆட்கள் எங்களை வெறுப்புடன் பார்ப்பதை நாங்கள் அனைவரும் உணராமல் இல்லை.அவர்கள் அனைவர் மனதிலும் எங்கள் மாமாவுக்கு ஆண் வாரிசு இல்லாததாலும் ,எங்கள் அம்மாவுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்ததாலும்,மாமாவுக்கு சேரவேண்டிய சொத்து பாதிக்குமேல் எங்களுக்கு வந்துவிட்டதே என்ற வெறுப்பும்,கோபமும் இருப்பதை உணர்ந்தோம்.

தாத்தாவிற்கு பிறகு சின்ன அய்யாவான எங்கள் மாமாதான் அவர்களது எஜமானர் என இவ்வளவு காலம் நம்பியிருந்த பண்ணை ஆட்களுக்கும்,வேலை ஆட்களுக்கும், தாத்தா எழுதிய உயிலினால் பெரிய ஏமாற்றம்.அவர்களால் எங்கள் அம்மாவை எஜமானியாய் ஏற்றுகொள்ள மனம் இடம் கொடுக்க மறுத்தது.ஏனோ தெரியாது.பண்ணை ஆட்களுக்கும்,வேலை ஆட்களுக்கும் மாமாவையும் அவரது முன்று பெண்களையும் மிகவும் பிடிக்கும்.எப்பவும் அவர்களைத்தான் தூக்கி

தலையில் வைத்துக்கொண்டு, இந்த சொத்து பூராவும் ஆளப் பிறந்த வாரிசு என சொல்லி ,சொல்லி மாமாவையும் ,அவர் குடும்பத்தாரையும் மரியாதையாகவும், பரிவுடனும் தனி கவனிப்புடனும் நடத்தி வந்தார்கள்.

அம்மாவையும் ,எங்களையும் அந்த அளவிற்கு பொருட்படுத்தியது கிடையாது.இதை நினைத்து என் மனம் பல நாள் வேதனை பட்டிருக்கிறது.பண்ணை ஆட்கள்,வேலை ஆட்கள் மட்டும்மில்லை,பாட்டி கமலா கூட மாமா பெண்களை உயர்வாக பேசி எங்கள் நால்வரையும் “இது உங்கள் வீடு இல்லை, உங்கள் அப்பா பக்க தாத்தா, பாட்டிதான் உங்களுக்கு சொந்தமானவர்கள்.அவர்கள் வீடுதான் உங்களுக்கு சொந்தம் என எப்பவும் வித்யாசமாக பேசியும்,நடத்தியும் வந்தார்கள்.இதனால் பாட்டி மீது எங்கள் முன்று பேருக்கும் சற்றே வெறுப்பாகவும்,கோபமாகவும் இருந்து வந்தது.

ஆனால் சிறிய கிராமங்களிலும்,நகரங்களிலும்

சொத்துக்கு வாரிசு ஆண் மகனே என்றும்,பெண்கள் திருமண ஆகி சென்று விடுவதால் அவர்கள் அந்த வீட்டை பொருத்தவரை அந்நியர்களாகவும்,அவர்கட்கு பிறக்கும் குழந்தைகளுக்கு அந்த வீட்டில் எந்த உரிமையும் இல்லை என்று நினைப்பது ஒன்றும் புதியது இல்லை.இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் ஐதீகமே.

ஆனால் எங்கள் நாள்வரை பொருத்தவரையில் எங்கள் அப்பா வீட்டிலும் எங்களுக்கு எந்த உரிமையும்,அன்பும்,மரியாதையும் இல்லை. அப்பா பக்கம் ,அப்பாவின் பெற்றோர்கள் அவர்களது பெண்களையும் ,பெண்களுக்கு பிறந்த பேர குழந்தைகளையும் சொந்தம் கொண்டாடிக்கொண்டு,அப்பாவையும்,சித்தப்பா குமாரின் குடும்பத்தாரையும் ,குழந்தைகளாகிய எங்களையும் அந்நியர்களாக நடத்தி வந்தார்கள். இங்கு அம்மாவின் பெற்றோர்கள், தங்கள் மகனின் குழந்தைகளை சொந்தமாகவும்,எங்களை அந்நியர்களாகவும் நடத்தி வந்தார்கள்.ஆகா மொத்தத்தில், இருதரப்பாராலும் நாங்களும்

,எங்கள் பெற்றோரும் அந்நியர்களாகவே நடத்தப்பட்டும்,ஒதுக்கப்பட்டும் இருந்து வந்ததை நினைக்கையில்,நாம் ஏன் பிறந்தோம்,கடவுள் ஏன் எங்கள் நாள்வரையும் படைத்து எல்லோருடைய வெறுப்பிற்கும் ஆளாக்குகிறார்.சிறு குழந்தைகளான நாங்கள் என்ன தவறு செய்தோம் .பெரிய,பெரிய தவறுகளை எல்லாம் செய்துவிட்டு பெரிய மனிதரைப்போல வேஷம்போடும் ஆட்களை இவ்வுலகம் மத்தித்து,போற்றி வருகிறதே.ஒன்றும் அறியாத,எந்த தவறும் செய்யாத,இந்த நான்கு பிஞ்சு மலர்களையும் ஏன் இந்த உலகம் தன காலடியில் போட்ட நசுக்கி,மிதித்து வதைக்கின்றது ?"என என் மனம் நெகிழ்ந்தது.

பணம் இல்லாமல் ஏழ்மையில் குழந்தைகள் அவதிபடுவதையும்,தாய்,தந்தையர் இல்லாமல் அனாதைகளாக அவதிபடும் குழந்தைகளையும்,சகஜமாக பார்க்கலாம்.ஆனால் எங்கள் நால்வரையும் போல, நன்கு படித்து பணக்கார குடும்பத்தில் பிறந்து வளர்ந்து,கைநிறைய சம்பாதிக்கும்

பெற்றோர்களுக்கு பிறந்து,எல்லாம் இருந்தும் அவதிப்படும் குழந்தைகளை பார்ப்பது மிகவும் அறிதே என நினைக்கிறேன்.

பெற்றெடுத்த பெற்றோர்கள்,இருபுறமும் உள்ள தாத்தாக்கள்,பாட்டிகள்,மற்றும் பெற்றோர்களின் கூட பிறந்தவர்கள் யாவரும், ஒருமுறை கூட அன்பு வார்த்த கூறி கொஞ்ச மனம் இல்லையே ஏன்?இருபுறமும் உள்ள குடும்பத்தாரின் குழந்தைகளின் நடுவே அழகிய ரோஜாபூபோல கலரில் மலர்ந்து,பார்ப்பவர்கள் கண்ணை பறிக்கும் தோற்றத்துடன் இருக்கும் எங்களுக்கு என்ன குறை என்று உறவுக்காரர் சமுதாயம் எங்களை வெறுக்கிறது என எங்களுக்கு ஒரு இனம் புரியாத புதிராகவே இருந்து வந்தது.அப்போது என் சிறிய உள்ளத்தில் உலகம் என்றால் என்ன?அதில் மக்கள் என்பவர்கள் யார்?மக்களில் எத்தனை வகையானவர்கள் இருக்கிறார்கள்?சமுதாயம் என்றால் என்ன?அதில் நாம் எப்படி வாழ்ந்தால் மரியாதை கிடைக்கும்?சமுதாயத்தில் நல்லது எது?கெட்டது எது? அதன் நெளிவு,சுளிவு

என்ன?என்றெல்லாம் தெரியக்கூடிய ,அறிய கூடிய வயதில் நாங்கள் இல்லாததால்,வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நடக்கும் நிகழ்ச்சிகள் புரியாத புதிராகவும்,மர்மமாகவும்,பீதியாகவும்,வெறுப்பாகவும் வந்தது.அச்சிறு வயதில் புரியாதது ,நாள் செல்லசெல்ல சிறிது சிறிதாக புரிய தொடங்கியது.

கற்றது கை மண்ணளவு.கல்லாதது உலகளவு .என்ற ஔவை பாட்டியின் பழமொழி நினைவிற்கு வந்தது.நிஜவாழ்க்கையில் நடக்கும் நெளிவு,சுளிவுகளை போதிக்க எந்த பள்ளிக்கூடமும் கிடையாது.தினப்படி வாழ்வில் ஏற்படும் அனுபவத்தை சிந்தித்து நாமாக நமக்கு போதித்து கொள்ள வேண்டியதுதான் என்பது புரிய வெகு நாட்கள் ஆகியது எனக்கு.தினப்படி வாழ்க்கை பாடத்திற்கு நானே ஆசிரியராகவும்,நானே மாணவியாகவும் ஆகி,சந்தேக கேள்விகளை நானே ஆசிரியராக இருந்து எனக்கு நானே கேட்டு,அதற்க்கான விளக்கவுரையை எனக்கு நானே மாணவியாக

இருந்து, எனக்கு தெரிந்தவரையில் பதிலளித்து தேறி வந்தேன்.

சிதம்பரத்திலிருந்து அந்த மூன்று வாரங்களுமே ஒரே மந்தமாக சென்றது.ஒவ்வொரு கோடை விடுமுறையின் போதும், மாமா பெண்களுடன் நாங்கள் கழித்த இன்ப நாட்களையும்,நிகழ்ச்சிகளையும் எங்கள் முவருக்குள் பேசி மகிழ்ந்தோம்.மாமா பெண்கள் முவரும் இல்லையே என என் மனம் மிகவும் வேதைபட்டது.நாங்கள் எட்டு பேரக்குழந்தைகளும் அந்த வீட்டில் அடித்த ரகளைகளை சொல்லி முடியாது.அவ்வளவு அறந்த வாலு குழந்தைகளாக இருந்தோம்.எங்கள் ஏழு பேரையும் ஒவ்வொரு முறையும்அழைத்து வந்த தாத்தா ஈஸ்வரன், நாங்கள் சிதம்பரம் வந்து சேர்ந்த ஒரு வாரத்திற்குள் சோர்ந்து தலையில் கைவைத்த வண்ணம் “எப்போது இந்த குழந்தைகள் சென்னைக்கு திரும்பும்” என வாய்விட்டே புலம்ப ஆரம்பித்து விடுவார்கள்.அந்த வீட்டில் வேலை செய்யும் வேலை ஆட்களும் ,எங்கள் ரகளை

தாங்காமல் அலுத்துகொள்வார்கள்.ஆனால்
நாங்கள் ஏழு பேரும் சென்னைக்கு கிளம்பும்
நாள் நெருங்கும் போது ஒருவாரம் முன்பே
சோகமாகி "ஐயோ,இந்த ஏழு அறந்த வாலுகளும்
சென்னைக்கு சென்று விட்டால், இந்த கடல்
போன்ற வீடே வெரிச்சென்றிருக்குமே.கடல்
போன்ற அந்த வீட்டில் சதா அலைகள் போல
ஒலி எழுப்பிக்கொண்டே இருந்த இந்த சிறு
அலைகள் சென்றுவிட்டால்,இவ்வீடு
அமைதியாய் ,ஓசையற்று, ஒளியிழந்து
காணப்படுமே,இந்த கடலலைகளின் ஓசைகளை
கேட்க இன்னும் 9 மாதங்கள் காத்திருக்க
வேண்டுமே என புலம்ப
ஆரம்பித்துவிடுவார்கள்.நாங்கள் இருந்தாலும்
தொல்லை,இல்லாவிட்டாலும் தொல்லை
அவர்களுக்கெல்லாம்.

ஒரு சமயம் தாத்தா வீட்டு வாழை
தோப்பிலிருந்து வாழைபழங்கள்
கொத்துகொத்தாக வந்திறங்கியது.நாங்கள்
ஏழுபேரும் குதித்து நசுக்கிவிடுவோம்,அல்லது
அளவு தெரியாமல் நிறைய சாப்பிட்டுவிட்டு

உணவு நேரத்தில் எதுவும் சாப்பிட மாட்டோம்,என பயந்துகொண்டு தாத்தா ஈஸ்வரன் வேலை ஆட்களிடம் சொல்லி ,எல்லா பழகாத்துகளையும் ஒரு அறையின் மேலே வரிசையாக கட்டி தொங்கவிடுமாறு சொன்னார்கள்.அது மிக பெரிய அறை, அதில் ஒரு புறம் முக்கியமான பத்திரங்களை வைக்கும் இரும்பு பெட்டியும்,இரும்பு பெட்டிமேல் சாமி கும்பிடும் இடமாக சாமி கற்சிலைகளும்,படங்களும்,அதில் ஒருபுறம் முக்கியமான உணவு தானியங்களும் வைக்கப்பட்டிருந்தது.இன்னோர் பக்கம் கொலு வைப்பதற்கான வாங்கப்பட்ட விலை உயர்ந்த வர்ண ஜால பெரிய,பெரிய சிலைகளும் வைத்திருந்த முன்று பெரிய கண்ணாடி பீரோக்களும்,இன்னொரு பக்கம் தாத்தாவின் பலவகையான புத்தகங்கள் கொண்ட ஐந்து பெரிய கண்ணாடி பீரோக்களும்,இன்னொருபுறம் மிகப்பெரிய அலமாரியில் சிறு,சிறு டிராயர்களும்,மறைவான டிராயர்கள் பலவும் மேலும் பெரிய பெரிய டிராயர்களும்,மேலே

கண்ணாடியால் முடப்பட்ட ஷெல்பும் வைக்கபட்டிருந்தது.அந்த அறையின் நடுவே மிக பெரிய ஊஞ்சல், நாங்கள் விளையாடுவதற்கென மாட்டப்பட்டிருந்தது.அந்த அரை விளையாட்டு மைதானக் போல மிக பெரியதாக இருந்ததால் நாங்கள் வீட்டிற்குள் ஓடிவிளையாட வசதியாகவும் ,பாதுகாப்பாகன இடமாகவும் தாத்தா அமைத்திருந்தார்கள்.

வாழைப்பழ கொத்துகளை உணவு பொருட்கள் இருக்கும் இடத்திற்கு மேலே கட்டைபோல் இருந்ததில் ,வரிசையாக கட்டி தொங்கவிடபட்டிருந்தன. அதற்கு எதிரேதான் அந்த பெரிய ஊஞ்சல் மாட்டப்பட்டிருந்தது.ஒரு நாள் நாங்களனைவரும் மதிய உணவு முடித்தவுடன்,பெரியவர்கள் அனைவரும் வீட்டில் படுத்து ஓய்வு எடுத்துகொண்டிருந்தார்கள்.தாத்தா ஈஸ்வரன் எங்கள் ஏழு பேரையும்,எங்களுக்காக ஒதுக்கப்பட்ட படுக்கை அறையில், எங்கள் ஏழு பேருக்காக சிறப்பாக செய்யப்பட்ட மிகப்பெரிய ஒரே கட்டிலில், அதே அளவில் பெரியதாக

செய்யப்பட்ட ஒரே மெத்தையில் வரிசையாக படுக்க வைத்துவிட்டு ,கதவை சார்த்திவிட்டு தன அறைக்கு ஓய்வு எடுக்க செல்லும் வரையில் நாங்க ஏழு பேறும் அமைதியாக படுத்திருந்துவிட்டு ,யாருக்கும் தூக்கம் வராமையால் ஒருவர் பின் ஒருவராக சத்தம் செய்யாமல் அடிமேல் அடி எடுத்து வைத்து வாழைப்பழ கொத்துக்கள் தொங்கவிட்டிருந்த அறைக்கு சென்றோம்.வாழைப்பழங்கள் மிக உயரத்தில் இருந்தது. நன்றாக பழுத்து அந்த அறை முழுதும் வாழைப்பழ வாசனை மூக்கை துளைத்தது.அதை பறித்து சாப்பிடவேண்டும் என எங்கள் ஏழு பேருக்கும் ஆசை ஏற்பட்டதால்,அது மிகவும் உயரத்தில் இருந்ததால் அதை எப்படி பறிப்பது என அனைவரும் யோசனையிலும்,ஆராய்ச்சியிலும் இறங்கினோம்.சத்தம் வராமல் ஒவ்வொருவருக்கும் வந்த யோசனையை கிசுகிசுவென பேசி பழத்தை பறிக்க முயற்சி செய்தோம்.

முதலில் ஒரு நாற்காலியை இழுத்து போட்டு,

அதன்மேல் டப்பாவை வைத்து என் அண்ணன் ஷானை ஏற்றிவிட்டோம்.எங்கள் அனைவரையும் விட உயரமாக இருந்த அவனால் பழத்தை பறிக்க முடியவில்லை.பிறகு அண்ணன் தரையில் மண்டியிட்டு மிருகம்போல் நான்கு கால்களில் நிற்கவே, அவன் முதுகு மேல் என் தம்பி பாட் ஏறி
நிற்க,அவன் மேல் நான் ஏறி நின்று, பழத்தை பறி அனைவரும் பல வழியாக முயற்ச்சித்து விட்டும் எல்லாம் படுதோல்வியில் முடிந்தது.மாமாவின் கடைசி பெண் நிஷா மிக அருமையான யோசனையை கூறினாள் .

“ஏய்,நானும், அக்கா உஷாவும் ஊஞ்சலின் இருபுறமும் செயினை பிடித்து கொண்டு நிற்கிறோம்.ஷான்,அனிதா ,என் பெரிய அக்கா சீதா,பாட் நீங்க நாலு பெரும் ஊஞ்சலை வேகமாக
மிக உயரத்தில் போவது போல மேலே தள்ளுங்கள்.நாங்கள் எட்டி பழத்தை பறித்து போடுகிறோம்.பழத்தை நம் படுக்கை அறைக்கு எடுத்து சென்று சாப்பிட்டுவிட்டு, தொலை

தோட்டத்திற்கு எடுத்து சென்று, மண்ணை தோண்டி புதைத்துவிடலாம் என்றாள் .அந்த யோசனை எங்கள் எல்லோருக்கும் நல்ல ஐடியாவாக பட்டதால்,அவள் யோசனைப்படி ஊஞ்சலை வேகமாக நாங்கள் தள்ளி கொண்டு போனதும்,அது உயரே சென்றதும் அவர்கள் இருவரும் பழத்தை பறித்து கீழே போட்டார்கள். ஆளுக்கு முன்று பழங்கள் என பறித்தவுடன், அனைவற்றையும் எடுத்துகொண்டு ,மறுபடியும் சத்தம் போடாமல் எங்கள் அறைக்கு சென்று கதவை சார்த்திக்கொண்டு,பழங்களை எல்லாம் சாப்பிட்டுமுடித்துவிட்டு, மறுபடியும் சத்தம் வராமல் ஒருவர் பின் ஒருவராக வரிசையாக அடிமேல் அடிவைத்து, எல்லா முற்றங்களையும் கடந்து, தோட்டத்து கதவை சத்தமின்றி திறந்து கொண்டு ,தோட்டத்திற்கு சென்று ,குழியை அனைவரும் எங்கள் கைகளினால் தோண்டி, பழத்தோலை அனைத்தையும் மூடி மறைத்துவிட்டு, திரும்பவும் எங்கள் அறைக்கு வந்து படுத்துகொண்டோம்.

மாலை நாலு மணியளவில் அனைவரும் எழுந்து

ஊ ,ஸ்நாக் சாப்பிட்டுகொண்டிருக்கையில், தாத்தா ஈஸ்வரன் அனைவருக்கும் வாழைப்பழம் எடுத்துவர ,அந்த அறைக்கு சென்று, சில பழங்களை எடுத்துகொண்டு வெளியே வந்ததும்,"பழக்கொத்திலிருந்து நிறைய பழங்கள் எடுத்தாற்போல தெரிகிறதே,யாராவது எடுத்தீர்களா?"என கேட்டவுடன் அனைவரும் ஒருவரைஒருவர் பார்த்து முழித்த வண்ணம், காலையிலிருந்து நாங்கள் யாரும் அந்த அறைப்பக்கம் போகவே இல்லையே.என்றார்கள் ஒரு மொத்தமாக.

"நான் காலையில்தான் சென்று பழம் பழுத்து விட்டதா?என பார்த்தேன்.பழம் நன்றாக பழுத்த வாசனை மூக்கை துளைத்தது.சரி சாயங்காலம் அதை பறித்து வந்து ஸ்நாக் உடன் சாப்பிட கொடுக்கலாம் என இருந்தேன்.ஆனால் இப்பொது பார்த்தால் நிறைய பழங்கள் பறித்த மாதிரி தெரிகிறது"என மிக குழப்பத்துடன் தாத்தா கூறிவிட்டு , நாங்கள் இருக்கும் திசையை பார்த்துவிட்டு,நாங்கள் ஏழு பெரும் ஒன்றும் தெரியாத பாவப்பட்ட குழந்தைகள்

போல உட்கார்ந்திருந்ததை கண்டதும் “மிக உயரத்தில் இருப்பதால் குழந்தைகள் எடுப்பது என்பது அவ்வளவு சுலபம் இல்லை.”என தாத்தா தனக்குத்தானே பதில் அளித்துவிட்டு.தன்னுடைய பதிலில் தனக்கு திருப்தி இல்லாமலும்,எங்களை நம்பாமலும் சுற்றி முற்றி வாழைப்பழதோல் எதுவும் தென்படுகிறதா? என தேடினார்கள்.எங்கும் வாழைப்பழதோல் தென்படாததால், அனைவருக்கும் மிகவும் குழப்பமாக இருந்தது.,,

அந்த பெரிய அறையில் குடும்பத்தில் உள்ளவர்கள் தவிர வேறு யாரும், ,வேலை ஆட்கள் உள்பட பொதுவாக போக அனுமதி கிடையாது.ஏதாவது வேலை இருந்தால், தாத்தாவுடன் உள்ளே சென்று வேலை முடிந்ததும் தாத்தாவுடன் வெளியே வந்து விடுவார்கள்.அந்த அறையை பூட்டி சாவியை அருகிலுள்ள பெரிய முகம் பார்க்கும் கண்ணாடிக்கு பின்னால் மறைத்து வைப்பார்கள்.

தாத்தா சாவியை மறைத்து வைக்கும் இடத்தை,

ஒருநாள் எங்கள் மாமாவின் இரண்டாவது பெண் உஷா பார்த்துவிட்டாள் .நாங்கள் அந்த சாவியை எடுத்து, ரூமை திறந்து ,உள்ளே சென்று, எந்த சுவடும் தெரியாமல் கனகச்சிதமாக காரியத்தை முடித்துவிட்டு, சாவியை எடுத்த இடத்திலேயே அழகாக வைத்துவிட்டு ,ஒன்றும் தெரியாத பதுமைகளாக ஏழு பேரும் மூச்சுவிடாமல், எந்த குறியும் முகத்தில் காண்பிக்காமல் அமர்ந்திருந்து விளையாடிகொண்டிருந்தோம்.

வீட்டிலுள்ள பெரியவர்கள், வேலை ஆட்கள் அனைவரது மண்டையும் குடைய ஆரம்பித்தது.அறைக்கு அந்நியர்கள் போயிருக்க முடியாது.குழந்தைகளுக்கு முதலில் சாவி இருக்கும் இடம் தெரிந்திருக்க நியாயமில்லை.அப்படியே தெரிந்து உள்ளே போயிருந்தால் கூட பழம் மிக உயரத்தில் இருப்பதால் 20 பழங்களுக்கு மேல் பறிப்பது என்பது நடக்ககூடிய காரியம் இல்லை.ஆனால் பழங்கள் எப்படி மாயமாக மறைந்தது? என்ற கேள்வி எல்லோரையும் குடைந்து எடுத்தது.

கடைசியாக அனைவரும் ஒருமனதாக
,ஒருவேளை, எலி,பூனை அல்லது வேறு
ஏதாவது ஒன்று பரணையிலிருந்து வந்து
சாப்பிடுகிறதோ?என்னவோ?என கூறி அன்று
மாலையிலேயே பழகொத்துகளை இடம் மாற்றி
விட்டார்கள். இந்த சம்பவத்தை நாங்கள் ஏழு
பேரும் எப்போதும் நினைத்து பார்த்து
மனதிற்குள் சிரித்துகொள்வோம்.நாங்க ஏழு
பெரும் பழங்கள் மாயமாக மறைந்த கதையை,
கடைசிவரையில் ,ஒத்துமையுடன் கூறாமல்
இருந்ததை இன்றும் பேசி சிரித்து கொள்வோம்.

அதேபோல மற்றோரு சமயம், மதியம்
சாப்பாட்டிற்கு பிறகு பெரயவர்கள் ஓய்வு
எடுக்கும் முன், தாத்தா எங்களை
வலுகட்டாயமாக எங்களது அறையில்
ஓய்வெடுக்கும்படி சொல்லி படுக்கையில்
படுக்கவைக்கையில் ,எங்க ஏழு பேருக்கும்
மதியம் தூங்கி நேரத்தை வீணடிக்க
விரும்பவில்லை.நன்றாக விளையாடுவதை
விட்டுவிட்டு ஏன் தூங்கி நேரத்தை
வீனடிக்கவேண்டும் என்ற எண்ணம்

ஒருபுறமும்,பெரியவர்கள் தூங்கும் சமயம்தான் நாங்கள் நிம்மதியாக பக்கத்து,எதிர்வீட்டு குழந்தைகளை திருட்டுத்தனமாக எங்கள் வீட்டிற்க்குள் அழைத்துவந்து விளையாட முடியும்.ஏன் என்றால் தாத்தாவும்,பாட்டியும் நாங்க யாரும் வீட்டைவிட்டு வெளியே சென்று அக்கம்,பக்கத்து வீட்டு குழந்தைகளுடன் விளையாடுவதை அனுமதிப்பதில்லை.அவர்கள் தூங்கும் சமயம் சில நாட்களில் மெதுவாக எழுந்து வெளியே சென்று நன்றாக விளையாடிவிட்டு அனைவரும் எழுந்திருப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன் உள்ளே வந்து எங்கள் படுக்கை அறையில் படுத்து தூங்குவதுபோல் பாவனை செய்வதுண்டு.எங்கள் படுக்கை அறையை ,வீட்டு வாசலுக்கு உள்ளே நுழைந்ததும் இருந்ததாலும்,மற்றவர்கள் படுக்கை அறைகள் வீட்டிற்குள், சிறிது தூரம் தள்ளி உள்ளே இருந்ததாலும் எங்களுக்கு அது மிக வசதியாக போயிற்று .

ஒருநாள் தாத்தா தன் வழக்கமான படுக்கை அறை அறையில் படுத்துக்கொண்டு தூங்காமல்

கண்ணை முடிக்கொண்டு ஓய்வு எடுத்து கொண்டிருந்தார்கள்.மாலை மூன்று மணி அளவில் யாரையோ எதிபார்த்திருந்ததால் ,தன அறைக்கு சென்றால் ,அவர்கள் வாசலில் கதவு தட்டுவது கேட்காது என எண்ணி ,அந்த அறையில் ஓய்வு எடுக்கையில் எங்களால் அன்று வெளியே சென்று விளையாட முடியாமல் போயிற்று.என்ன செய்வதென்று எங்களுக்கு புரியவில்லை .ஒரு புறம் தூக்கம் வராமல் போரடித்தவண்ணம் புரண்டு,புரண்டு படுத்துகொண்டிருந்தோம்.எங்களுக்குள் பேசினாலும் தாத்தாவுக்கு கேட்டுவிடும்.ஏன் என்றால் எங்கள் படுக்கை அறைக்கும் ,தாத்தா படுத்திருந்த அறைக்கும் நடுவே பெரிய ஜன்னல் இருந்தது.எனவே தாத்தா அடிக்கடி கண் திறந்து எங்களை பார்த்துகொண்டிருந்தார்கள்.அண்ணன் ஷானுக்கு திடீரென ஐடியா தோன்றியது.

“தாத்தா,எனக்கு அவசரமாக டாய்லெட் போக வேண்டும்”என்றான்.

“போயிட்டு சீக்கிரம் வந்து படு”என்றார்கள்.

“தாத்தா ,எனக்கும் அவசரமாக டாய்லெட் வருது”என்றாள் மாமாவின் பெண் நிஷா .

“சரி,போயிட்டு சீக்கிரம் வரணும்.ரொம்ப நேரம் டாய்லெட்டில் இருக்ககூடாது.புரியுதா?”என இருவரையும் எச்சரித்துஅனுப்பினார்கள் தாத்தா.

நிஷா போகும்போதே அவளுடன் நானும்,பாட்டும் ,சீதாவும்,உஷாவும் ரகசியமாக படுக்கையில் தலையணையை நாங்கள் படுத்திருப்பதுபோல வைத்து போர்வையை மேலே போட்டு மூடிவிட்டு, டாய்லெட்டுக்கு சென்றோம்.எங்கள் பின்னாலேயே ஆனஹியும் எப்படியோ சத்தம்போடாமல் வந்துவிட்டாள் .தோட்டத்தில் வரிசையாக 10 டாய்லேடுக்குமேல் இருந்ததால், நாங்க ஏழுபேரும் ஆளுக்காரு டாய்லெட்டில் உட்கார்ந்துகொண்டு, ஒருவருக்காருவருடன் சத்தமாக பேசிக்காண்டும்,சிரித்துக்காண்டும் வெகு அமர்க்களம்மாக இருந்தோம்.உண்மையில் யாருக்கும் டாய்லெட் போக வேண்டிய அவசியம் இல்லை அப்போது.

திடீரென தாத்தாவிற்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.எங்கள் படுக்கைஅறை மிக நிசப்தமாக இருக்கவே ,தாத்தாவிற்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.நாங்கள் அனைவரும் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுக்கையில் கட்டிலில் ஏற்படும் க்ரீச் சத்தமும்,கிசுகிசுவென நாங்கள் பேசும் சப்தம் எதுவும் இல்லாமல் நிசப்தமாக இருக்கவே, தாத்தாவிற்கு சந்தேகம் ஏற்பட்டு எழுந்து சென்று, எங்கள் அறையில் விளக்கை போட்டு பார்க்கையில் ,நாங்கள் ஒருவர் கூட படுக்கையில் இல்லாமல் தாத்தாவை ஏமாற்றி விட்டு ஓடிவிட்டோம் என்றதும், தாத்தாவிற்கு கோபம் வந்துவிட்டது.அங்கு வரவேர்ப்பறையில் தூணின் மேலே சொருகி வைத்திருந்த சாட்டையை கையில் எடுத்துகொண்டு, சும்மா எங்களை மிரட்டுவதற்காக டாய்லெட் அருகே வந்த சமயம் ,,நாங்கள் ஏழு பேரும் டாய்லெட்டில் , ஒரே சிரிப்பும், கும்மாளமுமாக பேசிக்கொண்டிருந்ததை கேட்டுவிட்டு, எங்கள் அனைவரையும் வெளியே வருமாறு சொன்னதும், நாங்கள் ஏழு பேரும் மிகவும்

பயந்து, எங்கள் சப்த நாடியும் ஒடிங்கியபடி
வெளியே வந்து, வீட்டிற்குள் செல்லாமல்,

மாறாகநாங்கள்தோட்டத்திற்குஓடினோம்.தாத்தாவு
அதுமிகபூந்தோட்டம்என்பதால்அதைநாங்களழுபெரு

பிறகு தப்பிக்க முடியாது என்ற நிலையில்,
தோட்டத்தில் உள்ள ஒரு பக்கம் கேட்டை
திறத்து கொண்டு தெருவிற்கு ஓடினோம். அந்த
தெரு நீண்ட சதுர வடிவ தெரு.அதை ஒருமுறை
சுற்றி வந்தால் 1/2 மைல் இருக்கலாம் என
நினைக்கிறேன்.பயத்தால் நாங்கள் ஏழு பெரும்
ஓடி, ஓடி ஒரு முறை சுற்றி வந்து, வீட்டின்
முன்புறமாக வந்து ,தடதடவென வீட்டிற்குள்
நுழைகையில், வீட்டிலுள்ள பெரியவர்கள்
அனைவரும் ஓய்விலிருந்து எழுந்து மாலை டீ
குடிப்பதற்கு தயாராக
இருந்தார்கள்.அவர்களுக்கெல்லாம் என்ன
நடக்கிறது என புரியாமல்
விழித்தார்கள்.வேகமாகவும்,அமைதியாகவும்
எங்களை துரத்திவந்த தாத்தாவும் வீட்டிற்குள்
நுழைவதை பார்த்த நாங்கள் நேராக

சமயலறையில் சென்று, அங்குள்ள மிகபெரிய
ச்விம்மின்க்பூல் போல உள்ள தண்ணீர்
தொட்டிக்குள் குத்தித்து
ஒழிந்துகொண்டோம்.நல்லவேளை தண்ணீர்
தொட்டிக்குள் அப்போது தண்ணீர் துளிகூட
இல்லாமல் சுத்தம் செய்து
வைக்கபட்டிருந்தது.எங்களுக்கும் அது
வசதியாகிவிட்டது.தொட்டியில் குதித்த எங்கள்
அனைவருக்கும் முச்சுவாங்கியது.பயத்துடன்
நடுங்கிக்கொண்டே தொட்டிக்குள்
உட்கார்ந்திருக்கையில், தாத்தாவின் காலடி
ஓசை சமையலறை பக்கம் கேட்டது. நாங்கள்
எதுவும் சொல்லாமல் தொட்டியில்
குதித்ததிலிருந்தே பாட்டியும்,சமையல் ஆட்களும்
ஓரளவு நிலைமையை
சுதாரித்துக்கொண்டு,தாத்தாவிடம் நாங்கள்
வம்பில் மாட்டிக்கொண்டோம் என புரிந்து
கொண்டு ஒன்றும் தெரியாதவர்கள் போல்
இருந்தார்கள்.இது தெரியாத நாங்கள்
தாத்தாவின் காலடி ஓசை கேட்டதும் இனி
தப்பிக்க முடியாது என்ற பயம் வந்ததும்

நானும்,நிஷா,சீதா,முவரும் “ஒ “வென கத்தி அழுவிட்டோம்.சத்தத்தை கேட்டு தாத்தா, நாங்க தண்ணீர் தொட்டியில் இருப்பதை தெரிந்து கொண்டார்கள். உடனே தாத்தா சமையலறைக்குள் நுழைந்து பாட்டியையும்,சமையல் செய்யும் மரகத அத்தையையும சமையலறையை விட்டு வெளியே போக சொல்லிவிட்டு, கதவை இழுத்து உள்ளே தாளிட்டுவிட்டு ,தண்ணீர் தொட்டி அருகே வந்து”பத்து எண்ணுவேன்,அதற்குள் எல்லோரும் வெளியே வந்தாகவேண்டும்.இல்லையேல் தொட்டிகுள்ளேயே நிறை சாட்டை அடி விழும்”என பயமுறுத்தலுடன் கூறியதும் அனைவும் வெளி வந்து நின்றோம்.

“தாத்தா ப்ளீஸ்,ப்ளீஸ்,இனிமே இதிமாதிரி செய்ய மாட்டோம் தாத்தா.ப்ளீஸ் தாத்தா, என அனைவரும் கரகோஷமாக சத்தமிட்டு அழுததை கேட்டு, பாட்டி பொறுக்க முடியாமல் கதவை தட்டி உள்ளே வந்து “பாவம், குழந்தைகள் அடிக்காதீங்க.சும்மா மிரட்டி விட்டு

அனுப்பிவிடுங்கள்.”என கூறியது கேட்ட தாத்தா, ஆனஹியையும்,நிஷாவையும் பாட்டியுடன் வெளியே அனுப்பிவிட்டு மறுபடியும் கதவை சார்த்திகொண்டார்கள்.

ஆனஹியும் ,நிஷாவும் மிகவும் சிறியவர்கள் என்பதால் தப்பித்துகொண்டார்கள்.மீதி நாங்கள் ஐந்து பெரும் மாட்டிகொண்டோம்.எங்களை திரும்ப சொல்லி ஆளுக்கொரு சாட்டை அடியை எங்கள் பட்டில் போட்டு ஒவ்வொருவராக வெளியே அனுப்பிவைத்தார்கள் .சாட்டை அடியால் அதிக வலி ஒன்றும் இல்லை. ஆனால் பயத்தால் நாங்கள் அலறி அழுததுதான் அதிகமாக இருந்தது. தாத்தா வாயை திறந்து எதுவும் பேசவில்லை.

அனைவரும் தேம்பி,தேம்பி அழுது கொண்டே வரவேர்ப்பறையில் உட்கார்ந்திருக்கையில் அம்மா,மாமா,மாமி,பாட்டி அனைவரிடமும் தாத்தா நடந்தவைகளை கூறியதும்,மாமா சிரித்துக்கொண்டே “இன்னும் நல்லா இரண்டு அடி கொடுத்திருக்கலாமே அப்பா. ஏன் லேசான

அடியுடன் நிறுத்தி கொண்டீர்கள்"என்றார்கள்.

"சும்மா இரு ஜெகன்னாதா,நீ வேறு எதும் கிளப்பிவிடாதே.பாவம் குழந்தைகள் பயப்படுகிரதுகள்."என பாட்டி மாமாவை அடக்கினார்கள்.

மாமா சிரித்துக்கொண்டே எங்களை பார்த்து "நல்லா அடி வாங்கினீர்களா ?இனிமே இந்த மாதிரி வம்பு பண்ணுவீர்களா?"என கிண்டலடித்தார்கள்.

அம்மாவும்,மாமியும் எதுவும் பேசாமல் சிரித்துகொண்டே சமையறையில் உட்கார்ந்து டீயும்,ஸ்நாக்கும் சாப்பிட்டு கொண்டிருந்தார்கள்.தாத்தா எங்களை ஐந்து பேரையும் ஸ்நாக் சாப்பிட அழைந்தபோது முதலில் போக மறுத்த அண்ணன் ஷானும்,சீதாவும்,தம்பி பாட்டும் பிறகு சென்று விட்டார்கள் ஸ்நாக் சாப்பிடுவதற்கு.நானும்,உஷாவும் தாத்தா அடித்துவிட்டதால் ரோஷத்துடன்

சாப்பிடமுடியாது என அடம்பிடித்து அழுதுகொண்டே இருந்ததும், அது தாத்தாவின் கோபத்தை மேலும் கிளறியது.

“இன்னும்ஐந்துநிமிடத்தில்போய்ஸ்நாக்சாப்பிடாவிட்
“எனதாத்தாகூறிமுடிப்பதற்குள்உஷாவும்,நானும்கண்

‘ஏய் ,வா நாம மரியாதையா போய் சாப்பிட்டுவிடலாம், இல்லை நம் இரண்டு பேரு மட்டும் அடி வாங்குவோம்.எல்லோரும் நம்மை வேடிக்கை பார்ப்பார்கள் நாம அடிவாங்குவதை.” என கூறி என் கையை பிடித்து உஷா இழுக்கவே .நானும் பயந்துகொண்டு எழுந்து சமயலறைக்கு சென்று சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தோம்.

இந்த சம்பவத்தை வீட்டில் உள்ள அனைவரும் இரண்டு முன்று நாட்களுக்கு வருவோர்,போவோரிடமெல்லாம் சொல்லி சொல்லி சிரித்து கொண்டிருந்தார்கள்.நாங்க ஏழு பேரும் கூட இந்த சம்பவத்தை ,அதன் பிறகு நினைத்து சிரித்து கொள்வோம்.

இதுபோல தினமும் சிறு சிறு சம்பவங்கள் நடப்பதை, அங்குள்ள வேலையாட்களுக்கும் ,தாத்தா,பாட்டிக்கும் சங்கடத்தை கொடுத்தாலும்,அதை பார்த்துக்கொண்டே அவர்கட்கெல்லாம் பொழுது நான்றாக கழியும்.

இம்முறை மாமாவின் பெண்கள் இல்லாதது தாத்தா,பாட்டிக்கு மற்றும் வேலை ஆட்களுக்கும் மட்டுமல்ல எங்களுக்கும் அது ஒரு மிக பெரிய குறையாகவே இருந்தது.தினமும் மாலை ஆறு மணிக்கு தாத்தா எங்களை கோவிலுக்கு அழைத்து சென்றபோது,ஒருநாள் கோவிலின் குளத்து படியில் உட்கார்ந்துகொண்டு, எங்களை அருகிலுள்ள மிக பெரிய மண்டபத்தில் ஓடிவிளையாட சொன்னார்கள் .நாங்க நாலுபேரும் ஓடிவிளையாடிகொண்டிருந்தோம் அங்குள்ள சில குழந்தைகளுடன் . பிறகு எனக்கு கால்வலி எடுத்ததால் ,தாத்தாவின் அருகில் சென்று உட்கார்ந்த வண்ணம் தாத்தாவை பார்த்தேன்.

தாத்தா ஆடாமல் ,அசையாமல்

உட்கார்ந்திருந்தார்கள் .அவர்கள் கன்னத்தில் வழிந்த கண்ணீரை எண்ணால் பார்க்க முடிந்தது.தாத்தா நிஜமாகவே அழுகிறார்களா?அல்லது நான்தான் அதை கற்பனை செய்கிறேனா? என சந்தேகம் வந்தது.

20

அத்யாயம்-இருபது

மெதுவாக தாத்தாவின் அருகில் உட்கார்ந்து கொண்டு பேச்சை ஆரம்பிதேன்.

“தாத்தா,ஏன் இருட்டில் தனியாக உட்கார்ந்து கொண்டு அழறீங்க”என்றேன்.

“ஒன்றும்மில்லேடா கண்ணு,நீ போய் விளையாடு”என்றார்கள்.

“ஏன் தாத்தா,மாமாவின் பெண்கள் வரவில்லை என மனசு கஷ்டமா இருக்குதா?”என்றேன்.

“இல்லையடா தங்கம், அதை நான் நினைக்கவே இல்லை.என் முதல் மனைவியையும்,குழந்தையையும் நினைத்துகொண்டேன் .மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.என்னையும் அறியாமல் கண்ணில் நீர் வந்துவிட்டது”என்றார்கள்.

“முதல் மனைவியா?என் வாயை பிளந்த வண்ணம் “அப்படீன்ன” நீங்க இரண்டாவது கல்யாணம் செய்துகொண்டீர்களா தாத்தா?”என்று கேட்டேன்.

“ஆமாம் கண்ணு,என் முதல் மனிவி செல்வி பிரசவத்தின் போது இறந்துவிட்டாள்.பிறந்த ஆண் குழந்தையும் உடனே இறந்து விட்டது”என கூறும்போதே தாத்தாவின் குரல் தழுதழுத்தது,மீண்டும் கண்கள் குளமாகியது.

“இவ்வளவு வருடங்கள் கழித்து இப்போ ஏன் அவர்களை நினைத்து அழறீங்க தாத்தா?என கேட்டேன்.

“நான் சொல்வதை நீ யாரிடமும்,முக்கியமாக உன் பாட்டியிடம் கூறாமல் இருந்தால், என் கடந்த கால கதையை உனக்கு சொல்வேன்”என்றார்கள் தாத்தா.

“நிச்சயமா நான் யாரிடமும் சொல்ல மாட்டேன் தாத்தா.நீங்கள் என்னை நம்பி தைரியமாக சொல்லலாம்”என தாத்தாவிற்கு நான் கொடுத்த தைரியத்தில் தன கதையை கூற ஆரம்பித்தார்கள்.

நாங்கள் உட்கார்ந்திருந்த அந்த கோவிலின் குளம் சதுர வடிவிலிருந்தது.நான்கு புறமும் வரிசையாக பல படிகட்டுகள் கல்லினால் கட்டப்பட்டு இருத்தது. படிகளில் இறங்கி கீழே சென்றால் தண்ணீர் இருந்தது.கோவிலுக்குள் நுழைந்ததும் ரைட் சைடில் அந்த குளம் இருந்ததால் ,சாமி கும்பிட்டு விட்டு வெளியே வரும் வயதானவர்கள், அந்த குளத்தின் படிக்கட்டிலே நிம்மதியாக உட்கார்ந்து கொண்டு நிலா வெளிச்சத்தில் தியானம் செய்வது மற்றும் நிம்மதியாக ஓய்வு எடுத்துவிட்டு செல்வார்கள்.

தாத்தா கதையை துவங்கினார்கள்.”உன் முதல் பாட்டி பார்க்க அழகாக இருக்கமாட்டாள்.சற்றே குண்டாகவும்,கருப்பாகவும் ,சற்றே கோணலான பற்களை கொண்டும், அவலட்சணம் என சொல்ல முடியாது,ரொம்பவும் பார்க்க சுமாராகத்தான் இருப்பாள்.சுமாரான அழகுடன் இருந்தாலும்,நல்ல குணவதி.எங்களுக்கு கல்யாணம் ஆன அந்த ஒரு வருடம் ,எனக்கு எந்த குறையுமில்லாமல் அன்புடனும்,பாசமுடனும் எனக்கு தேவையானவைகளை முகம் சுளிக்காமல் பொறுமையுடன் செய்வாள். அந்த இனிமையான காலம் ஒரு வருடமே நிலைத்தது எனக்கு.முதல் பிரசவத்தில் தாயும்,குழந்தையையும் நான் பறிகொடுத்தபோது எனக்கு பத்தொன்பது வயதே. சாதாரண குடும்பத்தை சேர்ந்த உன் முதல் பாட்டி செல்வியை, என் தந்தை இறந்துபோன மறுவருடமே திருமணம் செய்துகொண்டேன்.

மூன்று வருடத்தில் என் தந்தை,மனைவி ,குழந்தை மூவரையும் இழந்த என் மனம் மிக

வேதனை அடைந்தது.மனவேதனை தாங்காது ராணுவத்தில் சேர்ந்தேன்.அதில் இரண்டு வருடம் பணியாற்றிவிட்டு எனது 21-வது வயதி இராணுவத்தைவிட்டு வெளியே வந்து சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டேன்.போராட்டம் அப்போது தீவீரமாக இல்லை.

அப்போது இதே கோவிலில் நடராஜர் சிலைக்கு முன் தினமும் அமர்ந்து கண்ணை மூடி வேண்டிக் கொண்டேன். மறுபடியும் எனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை கொடு என்று. சில சமயங்களில் கடவுளை கண் மூடி வேண்டும் போது என்னையும் அறியாமல் கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடும். அப்போது தினமும் ,என் அருகில் ஒரு பெரியவர் ,பார்க்க நல்ல சிவப்பான நிறத்தில், நல்ல பணமுள்ள மனிதரைப்போல தெரிந்தவர் உட்கார்ந்திருந்தார்.சில நாட்களாகவே நான் கோவிலுக்கு செல்லும் அதே சமயம் அந்த பெரியவரும் என்னருகே அமர்ந்து தியானக் செய்வதுடன்,என்னையும் கவனித்து

வந்திருக்கிறார். ஒரு நாள் கண்களில் நீர்வழிய கடவுளைநான் வேண்டிக்கொண்டிருக்கையில் அவர் என் அருகே வந்து என் தோளை தொட்டு,"தம்பி நீங்கள் தப்பாக நினைக்காவிட்டால் உங்களை நான் ஒன்று கேக்கலாமா?என்றார் மிக பணிவுடனும்,கனிவுடனும்.

"எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை, தாராளமாக என்ன கேள்வி வேண்டுமானாலும் கேளுங்கள்"என்றேன்.

"கிட்டத்தட்ட சில மாதங்களாக உங்களை, இதே சாமி சந்நிதானத்தில் இதே நேரத்தில் பார்க்கிறேன்.தினமும் பலமணிநேரங்கள் கண்களை மூடியபடி,கண்ணிலிருந்து நீர் வழிதோடியபடி தியானத்தில் இருக்கிறீர்களே,அப்படி என்ன தம்பி உங்களுக்கு இந்த சிறு வயதில் கஷ்டம்?."என கேட்டார்.

"பெரியவர் அப்படி கேட்டதும்,அவரை பார்த்தால் நல்ல குணமுள்ளவராகவும்,நம்பிக்கைக்கு

பாத்திரமானவருமாகவும்,என் தந்தையின் வயதில் தோற்றமளித்ததாலும் என் மனம் விட்டு நடந்த சம்பவங்களை கூறினேன்.என் கதைய கேட்டுவிட்டு மனகஷ்டபட்டவராக பல ஆறுதல் வார்த்தைகளை கூறி சென்றார்.அதன் பிறகு இதே கோவிலில் நாங்களிருவரும், இதே சந்நிதானத்தில் தினமும் சந்தித்து பேசி வந்தோம்.எங்களுக்கிடையே நிறைய வயது வித்தியாசமிருந்தாலும், நல்ல நண்பர்களாக பழகி வந்தோம்"

"ஒரு நாள் நாங்களிருவரும் பேசிகொண்டிருக்கையில் ,"என் மனக்குறைகளை இவ்வளவு நாள் கேட்டு ஆறுதல் வார்த்தைகளை கூறி வருகிறீர்களே,உங்களை பற்றியும்,உங்கள் குடும்பத்தை பற்றியும் எதுவும் சொல்லவே இல்லையே?உங்கள் குடும்பத்தைப்பற்றி நான் தெரிந்து கொள்ளலாமா?"என்று கேட்டேன்.

"தம்பி ஏற்கனவே மனக்கஷ்டத்திலிருக்கும் உங்களிடம், என் கஷ்டத்தை கூறி மேலும் உங்களை வருத்ததிற்குள்ளாக்க நான்

விரும்பவில்லை.உங்களை போலவே நானும் இந்த நடராஜர் பெருமானிடம் நல்ல வழி காண்பிக்குமாறு தினமும் வந்து வேண்டிக்கொள்கிறேன்".என்றார்.

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் நான் கேட்டு தெரிந்துகொள்ளலாம ?" என்றேன்.

"நிச்சயமாக தம்பி,உற்ற நண்பரான உங்களிடம் கூறாமல் யாரிடம் நான் கூறப்போகிறேன்"என சொல்லி, தன கதை கூற ஆரம்பித்தார் அந்த பெரியவர்.

"எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். என் மனைவியும் இரண்டாவது பிரசவத்தில் ஒரு பெண் குழந்தையை பெற்றுவிட்டு உடனே இறந்துவிட்டாள் .எனது இரண்டாவது மகளுக்கு இப்போது 13 வயதாகிறது.மூத்த மகளுக்கு 25 வயதாகிறது.இரண்டு பெண்களுக்கும் நடுவே நிறைய வயது வித்யாசம்.நாள் கழித்து இரண்டாவது குழந்தை

பிறந்தததால்பிரசவத்தில்மனைவி இறந்துவிட்டாள

“பிறகு மூத்தவளுக்கு நல்ல மாப்பிள்ளையாக
பார்த்து திருமணம் முடித்து
அனுப்பிவிட்டேன்.அதன் பிறகு வீட்டிலுள்ள
வேலை ஆட்கள்தான் இரண்டாவது மகளை
வளர்த்துவந்தார்கள். என்னிடம் நிறைய
பணமும்,சொத்தும் இருக்கிறது.நானும்
இரண்டாவதாக திருமணம் செய்துகொள்ள
விரும்பவில்லை.என் மூத்தமகள் தலை
பிரசவத்தில் ஒரு பெண் குழந்தையை
பெற்றெடுத்துவிட்டு
இறந்துவிட்டாள்.குழந்தை நலமுடன் இருக்கிறது.
இப்போது என் கவலை எல்லாம் ,என் இரண்டாவ

தாயில்லாத என் இளைய மகளை மிகவும் செல்ல
ஒரு பயம் வந்துவிட்டது.

எனக்கு திடீரென ஏதாவது ஆகிவிட்டால் என்
மகள் கமலாவின் நிலை என்ன
ஆகும்?அவளுக்கென்று யாருமே
இல்லையே.என்ற மனவேதனை நாளுக்கு நாள்

அதிகமாகி வருகிறது.அதனால்தான் தினமும் மன நிம்மதிக்கு கோவிலுக்கு வந்து போகிறேன்"என்றார்.

மேலும்தொடர்ந்தார்அந்தபெரியவர்,"என்சொத்துக்க

"தம்பி,உங்கள் மீது எனக்கு அபார நம்பிக்கையும், நல்ல அபிப்பிராயமும் இருக்கிறது.நீங்கள் சரி என்று ஒரு வார்த்தை சொன்னால், என் மகளை உங்களுக்கே திருமணம் செய்தது வைத்துவிட்டு என் சொத்து பூராவையும் உங்கள் பெயருக்கு எழுதிவைத்துவிடுகிறேன்"என்றார்.

" முதலில் எனக்கு என்ன பதில் சொல்வது என தெரியாவில்லை.பெண்ணை பார்க்காமல் எப்படி யாரோ ஒருவருக்கு சரி என வாக்கு கொடுப்பது என தடுமாறிக்கொண்டு இருக்கையில் அந்த பெரியவரே மீண்டும் தொடர்ந்து கூறினார்"

"நீங்கள் யோசிப்பது எனக்கு புரியாமல் இல்லை.என் பெண் என்னை போலவே நல்ல

கலவாகவும் ,பார்க்க மஹாலக்ஷ்மி போல அழகாக இருப்பாள்.ஒரு குறையும் அவளுக்கு இல்லை.அவளை நீங்கள் திருமணம் செய்து கொண்டு கடைசிவரை கண் கலங்காமல் நல்லபடியாக வாழவைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."என அவர் கண்கலங்க கூறியதும்,பெரியவர் வார்த்தையில் நம்பிக்கை வைத்து நானும் "சரி" என அந்த இடத்திலேயே கூறிவிட்டேன். எல்லாம் நடராஜர் பெருமானின் சந்நிதானத்திலேயே
நடந்ததால்,நாங்களிருவரும்இதுநாள்வரையில் அந்த நடராஜர் சந்நிதானத்தில் கண்ணீர்விட்டு வேண்டியது
,நடராஜர் காதுகளில் விழுந்து,எங்களிருவாருக்கும்

"எனக்கு கடவுள் பக்தி அதிகம் இருந்ததால் கடவுளின் மீது பாரத்தை போட்டுவிட்டு திருமணத்திற்கு நான் பச்சைக்கொடி காட்டியவுன் பெரியவர் வெகு விரைவாக திருமண ஏற்பாடுகளை செய்ததுடன் ன் இல்லாமல், மாப்பிள்ளையான என்னை மிகவும் மரியாதையாகவும் நடத்தி வந்தார்."

“நான் வீட்டிற்கு சென்று என் அம்மாவிடம் இதை கூறியதும் “இது உன் கல்யாண விஷயம் நீதான் முடிவு செய்யவேண்டும்,உனக்கு பெண்ணையும், அவள் தந்தையையும் பிடித்திருந்தால் சரி, எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை,என அவர்களும் கூறிவிட்டபடியால் என் கல்யாண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது”என்றார்கள் தாத்தா.

“நான் அதன் பிறகு அந்த பெரியவர் வீட்டிற்கு அடிக்கடி சென்று வந்தேன் ஆனால் உன் பாட்டியை மட்டும் நான் பார்க்கவே இல்லை, அதேபோல் அந்த பெரியவரும், என் வீட்டிற்கு வந்து என் அம்மாவையும்,தம்பியையும் பார்த்து முறைப்படி பேசிவிட்டு சென்றார்”

‘என் கல்யாண நாளும் வந்தது.அன்று நான் ஆவலுடன் பெண்ணை பார்க்க மணவறையில் உட்கார்ந்திருந்தேன்.உன் பாட்டியை சில பெண்மணிகள் மணவறைக்கு அழைத்துவந்தார்கள்.அந்த பெரியவர் சொன்னதுபோல மிக அழகாகவும்,மிக சிறிய

பெண்ணாகவும் இருந்தாள்.என்னை முதன் முதலாக மணவறையில் பார்த்துவிட்டு, அந்த மணவறையிலே உன் பாட்டி அழ ஆரம்பித்துவிட்டாள் .13 வயதான அவள் அழுவதை பார்த்த அனைவரும், ஏதோ சிறுபெண் பயத்தால் அழுகிறாள் என நினைத்து கொண்டோம்.பிறகுதான் புரிந்தது, நான் அவளை போல நல்ல நிறத்துடன் இல்லாமால் சற்றே மாநிறமாக இருக்கிறேன் என்று அழுதிருக்கிறாள் என தெரியவந்தது.உன் பாட்டி என் நிறத்தை கண்டு, என்னை வெறுத்தாள் .நல்ல பணக்கார வீட்டு பெண் என்பதால் சமையல் வேலை முதல் எந்த வீட்டு வேலையும் செய்ய தெரியாதவளாக இருந்தாள் “.

“உன் பாட்டியின் அப்பாவான என் மாமனார் கல்யாண வரிசையாக வீடு,சொத்து,பணம் மற்றும் நிலம் ,அவர்கள் வீட்டு வேலை ஆட்களும் அப்படியே எங்களிடம் கொடுத்துவிட்டு ,தானும் எங்களுடன் தங்கிவிட்டார்.மேலும் உன் பாட்டியை கடைசி வரை கண்கலங்காமல்பார்த்துகொள்ளுமாறு

என்னிடம் சத்திய வாக்கும் வாங்கி கொண்டார்.எங்களுக்கு திருமணமாகி நான்கு குழந்தைகள் பிறந்தபிறகும்,உன் அம்மா மங்கைக்கு எட்டு வயது இருக்கும்வரை எங்களுடனேயே தங்கி உயிர் நீத்தார் என் மாமனார்.மிகவும் உயர்ந்த குணம்முள்ள மனிதருக்கு பிறந்த உன் பாட்டிக்கு, ஏழைகளை கண்டாலும்,கருப்பு தொலை கண்டாலும் உதாசீனமாகவும் ,துச்சமாகவும் நடத்தும் குணம் இருந்தது"என்றார்கள்.

"இப்போது எனக்கிருக்கும் சொத்தில் பாதிக்குமேல் உன் பாட்டியினுடையது என்பதால் என்னை உதாசீனமாக நடத்தி வருகிறார்கள்.என்னை ஒரு மனிதனாக மதித்து அன்புடனும்,ஆசையுடனும் ஒருநாளும் பேசியதில்லை.எப்பவும் ஆணவமாகவே பேசி அவமத்தித்து வருகிறாள்.அதனால்தான் என் முத்த மனைவியின் நினைப்பு எனக்கு அடிக்கடி வந்துவிடுகிறது.அவள் இருந்திருந்தால் எனக்கு அன்பும்,பாசமும் குறைவில்லாமல் இருந்திருக்கும்.ஆனால் இவ்வளவு

பணக்காரனாக இருந்திருக்க மாட்டேன்.உன் பாட்டியை கல்யாணம் செய்து கொண்டதால் நிறை பணம்,நகை,நிலம் மற்றும் வீடுகள் கிடைத்தது.ஆனால் பாசமும்,அன்பும் கிடக்கவில்லை." என குரல் தழுவி தழுக்க தாத்தா கூறியது கேட்க என் மனம் மிகவும் வேதனை அடைந்தது.

"ஏன் தாத்தா பாட்டியிடம் உங்கள் விருப்பத்தை சொல்லி உங்களிடம் அன்புடன் இருக்க சொல்லவேண்டியதுதானே?"என்றேன்.

"உன் பாட்டியிடம் பேசி பயன் இருக்காது.உன் பாட்டியின் அப்பாவின் உயர்ந்த குணத்திற்காகவும்,அவரது கடைசி காலத்தில் அவருக்கு அவர் மகளை கடைசி காலம்வரை கண்கலங்காமல் ராணிமாதிரி வைத்து காப்பாற்றுவதாக வாக்கு கொடுத்திருந்ததால், கொடுத்த வாக்க காப்பாற்ற நான் பொறுமையாக போய் கொண்டிருக்கேறேன்.உன் பாட்டி என்னை தரக்குறைவாக நடத்துவதையும்,பேசுவதையும்

நான் பொருட்படுத்துவதில்லை.பாவம்,உன் பாட்டி உலகமரியாதவள்.எனக்கு முன் அவள் இறந்துவிட வேண்டும் என கடவுளை தினமும் வேண்டி கொள்கிறேன்."என்றார்கள் தாத்தா வருத்தமுடன்.

"ஏன் தாத்தா அப்படி சொல்றீங்க.எதற்கு உங்களுக்குமுன் பாட்டி சாக வேண்டுமென நினைக்கிறீங்க?'என்றேன்.

"உன் பாட்டி எனக்கு முன் இறந்தால், அவளை ஒரு குறையும் இல்லாமல் ராணிபோல இறுதி வழி அனுப்பிவிட்டு, நான் என் மாமனாருக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றிய திருப்த்தியுடன் கண்ணை முடிவிடுவேன்.நான் போய் ,அவள் இருந்தால் மிகவும் கஷ்டப்படுவாள்"என்று கவலையுடன் தாத்தா கூறியது கேட்டு என் மனம் ஆச்சரியப்பட்டது.

பாவம் தாத்தா.பாட்டி அவர்களை சரியாக நடத்தாவிட்டாலும்,கவனிக்காவிட்டாலும் பாட்டியை நினைத்து

கவலைபடுகிரார்களே.பாட்டி ஏன் தாத்தாவை புரிந்துகொள்ளாமல் எப்பவும் உதாசீனமாக நடந்துகொள்கிறார்கள், என கன்னத்தில் கைகளை வைத்த வண்ணம் யோசித்தபடி தாத்தாவின் அருகில் உட்கார்ந்திருந்தேன்.

“சரி ,புறப்படலாம் சாப்பிட நேரமாயிற்று,நேரம் கழித்து சென்றால் பாட்டி கோபித்துக்கொள்வார்கள்,போய் ஷான்,பாட் ,ஆனஹியை அழைத்துவா “என கூறிவிட்டு எழுந்து குளத்தைவிட்டு வெளியே தாத்தா வரும் சமயம், நாம் ஓடிச்சென்று அவர்கள் அழைத்துவந்ததும் அனைவரும் வீட்டிற்கு சென்று இரவு சாப்பாட்டை முடித்தோம்.

இப்போது நான் பாட்டியை வித்யாசமாக பார்க்க ஆரம்பித்தேன்.பாட்டி அழகானவர்கள்,ரொம்ப நல்லவர்கள் என இவ்வளவு நாள் நினைத்து கொண்டிருந்த நான், அன்று கோவிலிலிருந்து வந்தது முதல் அவர்களை வெறுப்புடன் பார்க்க ஆரம்பித்தேன்.

மறுநாள் காலையில் அனைவரும் வழக்கம்போல எழுந்து காலை உணவை சாப்பிட்டுவிட்டு அம்மாவும்,பாட்டியும் வரவேற்ப்பரையில் சோபாவில் உட்கார்ந்திருந்தார்கள்.தாத்தா அந்த அறையின் ஒரு முலையிலுள்ள கணக்கு மேஜையின் முன் இருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஏதோ வரவு ,செலவு,கணக்குகளை எழுதிகொண்டிருக்கையில், அவர்கள் முவருக்குள்ளும் சுவாரஸ்யமான சம்பாஷனைகள் நடந்து கொண்டிருந்தது.நான்,ஷான், பாட், ஆனஹியும் அங்கு செஸ் கேமில் விளையாடிக்கொண்டிருக்கும்மும்முறத்தில் முதலில் அவர்களது உரையாடல்களை நான் கவனிக்க இயலாமல் போயிற்று .ஆனால் உரையாடல்களில் கடைசி பகுதியை ஏனோ என்னை கவர்ந்திருக்கவே அவற்றை கவனிக்க ஆரம்பித்தேன்.

“ஆண்களை விட பெண்கள்தான் அழகு படைத்தவர்கள்”என பாட்டி பெருமையாக கூற கேட்ட தாத்தா பொறுமையாக,

“எப்படி சொல்கிறாய் பெண்கள்தான் அழகு என்று”என கேட்டார்கள்.

“என்னை பாருங்கள்,உங்கள் இரு பெண்களை பாருங்கள், பேத்திகளை பாருங்கள்,பொதுப்படையாக இந்த வீட்டில் பெண்கள்தான் அழகாக இருப்பதுடன், நல்ல கலராகவும் இருக்கிறார்கள்”.என பாட்டி கூறி முடித்ததுதான் தாமதம், தாத்தா தன கேள்வி கணைகளை சரமாரியாக எடுத்துவிட தொடங்கினார்கள்.

“நீ சொல்வது உண்மையானால், நான் கேட்கும் கேள்விகளுக்கு முதலில் உண்மையான பதிலை கூறு,பிறகு முடிவில் அழகுள்ளவர்கள் ஆணா ?அல்லது பெண்ணா?என்பதை நீ சொல்லும் பதிலிலிருந்தே முடிவு செய்து கொள்ளலாம்”என்று கூறிவிட்டு தன கேள்விகளை கேட்க ஆரம்பித்தார்கள்.

“சிங்கத்தில் ஆண் சிங்கம் அழகா?பெண் சிங்கம் அழகா?”என்றார்கள்.

“ஆண் சிங்கம்தான்” என்றார்கள் பாட்டி.

“மயிலில் ஆண்மையில் அழகா?பெண் மயில் அழகா?”

“பெண்மயில்தான் அழகு”

“மாட்டில் காளை மாடு அழகா?பால்கொடுக்கும் மாடு அழகா?’

“காளை மாடுதான்”

“ஆண் நாய் அழகா?பெண் நாய் அழகா”

“ஆண் நாய்தான்”

“சரி முடிவாக கேட்கிறேன்,யானையில் ஆண் யானை அழகா?பெண் யானை அழகா?”

ஆண் யானைதான்”

“பாம்பில் ஆண் பாம்பு படம் எடுத்து ஆடுமா?பெண் பாம்பு படம் எடுத்து ஆடுமா?

“ஆண் பாம்புதான்”என்றார்கள் பாட்டி.

தாத்தா தொடர்ந்தார்கள் “இதுவரை நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் வரிசையாக நீ ஆண்களைத்தான் அழகு என கூறிவந்தாய் ,ஒரு பெண் மிருகம் கூட அழகு என உன் வாயிலிருந்து வரவில்லை.எல்லா மிருகங்களையும் எடுத்துகொள்.அதில் வரிசை படுத்தி ஆண் மிருகமா? பெண் மிருகமா?எது அழகு என சொல்லிவிடு பார்க்கலாம்.குயிலில் கூட ஆண் குயில்தான் இனிமையான் குரல் கொண்டது.ஆண் பாம்பு படம் எடுத்தது ஆடினால் அதற்க்கு மயங்காதவர்களே இல்லை.அது போகட்டும் கடைசியாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன்.சிதம்பரத்தில் சுவாமி நடராஜா சிலை ஏன் அனைவருக்கும் பிடித்திருக்கிறது”என கேட்டார்கள் தாத்தா.

“அவர் தன காலை தலைக்குமேல் தூக்கி ஆடிய நடனமும்,அபிநயமும் மிக அழக்காக இருக்கிறது.பெண்கள் அதுபோல காலை தூக்கி ஆடுவாது நம் பண்பாட்டில் கிடையாது’

என்றார்கள் பாட்டி.

“பண்பாட்டில் இல்லாமலிருந்தாலும் கூட ,பெண்கள் தலைக்குமேல் காலை தூக்கி வைத்து ஆடினால் ,பார்க்க அழாகாக இருக்கும் என நினைக்கிறாய?’என கேட்டார்கள் தாத்தா.

“நிச்சயமாக இருக்காது”என்றார்கள் பாட்டி.

“கடைசியில் நீயே ஆண்தான் அழகு என எல்லாவற்றிற்கும் பதில் அளித்துவிட்டாய்.கண்ணாடி முன்னால் உடையில்லாமல் நீயும்,நானும் நின்றால் யார் அழகாக இருப்பார்கள் என நினைக்கிறாய்?”என கடைசியாக தாத்தா கேட்ட கேள்வியில் பாட்டியின் முகம் ரத்தம் பரவியது போல சிவந்து காணப்பாட்டது.அவமானத்தால் தன் 24காரேட் தங்க கண்ணாடி பிரேமை தன் வலது கையால் தூக்கிவிட்டு, ஒரு முறை முறைத்து விட்டு எதுவும் பேசாமல் வாயடைத்து சிறிது நேரம் உட்கார்ந்திருந்ததை பார்க்க மிகவும் கஷ்டமாக இருந்தது எனக்கு.

தாத்தா வெற்றி பெருமிதத்துடன், என்னை பார்த்து கண்சிமிட்டியபடி ஒரு சிறு புன்னகையை உதிர்த்தார்கள்.தாத்தாவின் அந்த பொறுமையான,நிதானமான,விளக்கமான,அந்த கேள்விகளை எண்ணி வியந்தேன்.வேறு யாரேனும் தாத்தாவின் இடத்தில் இருந்திருந்தால் ஏதேதோ பேசி பொறுமை இழந்து கோபத்தில் குதி குதியென குதித்திருப்பார்கள்.தாத்தா பொறுமையாக கேள்விகளை கேட்டு பாட்டியையே அதற்க்கான பதிலையும் கூறவைத்து அதன் மூலம் உலகத்தில் எந்த இனம் அழகு என்ற உண்மையான விளக்கத்தை பாட்டிக்கு மட்டும் அல்ல எனக்கும் விளக்கிய அவர்களது புத்தி கூர்மை என்னை வெகுவாக கவர்ந்தது.

அன்றிலிருந்து தாத்தாவிடம் பல விளக்கங்களை நான் கேட்டு தெரிந்து கொண்டேன்.என் மாமா பெண்கள் முவரும் வராதது ஒருவகையில் எனக்கு சாதகமாக போய்விட்டது.அவர்கள் வந்திருந்தால் அவர்களுடன் விளையாடி பொழுதை கழித்திருப்பேன்.தாத்தாவிடமிருந்து

பல விஷயங்களையும்,விளக்கங்களையும் கேட்டு அறிந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாமல் சென்றுவிட்டிருக்கும்.

ஒருநாள் விடியற்காலையில் தாத்தா காண்ணாடி முன்னாள் உட்கார்ந்துகொண்டு தன் உருவத்தையே பார்த்து இருகைகூப்பி கும்பிட்டு கொண்டிருப்பதை பார்த்த எனக்கு சிரிப்பு வந்துவிட்டது.தாத்தா தன்னை தானே கும்பிட்டுவிட்டு வரும்வரையில் காத்திருந்துவிட்டு,பிறகு அவர்களிடம் "தாத்தா ஏன் உங்களையே நீங்கள் கும்பிட்டு கொண்டிருக்கிறீர்கள்"என்றேன் சிரிப்பை அடக்கமுடியாமல் சிரித்துக்கொண்டே.

"சாமி கும்பிட்டேன்"என்றார்கள் தாத்தா.

"என்ன தாத்தா, கண்ணாடியில் உங்கள் உருவத்தை பார்த்து கும்பிட்டுக்கொண்டு சாமி கும்பிடுகிறேன் என்று சொல்றீங்க" என பரிகாச சிரிப்புடன் கேட்டேன்.

“இப்படி உட்கார்,விளக்கமாக
சொல்கிறேன்”என்றார்கள் தாத்தா.

நான் தாத்தாவின் அருகில் சென்று
உட்கார்ந்ததும்,”கடவுள் என்பதற்கு பொருள்
என்ன தெரியுமா?”என கேட்டார்கள்.

“தெரியாது”, என்றேன்.

“கடவுள் என்பதற்கு பொருள் “கட்டை உள்
இருப்பவன் “என்பதே. கடவுள்
தூணிலும்,இருக்கிறான்,துரும்பிலும்
இருக்கிறான்.என்னிலும் இருக்கிறார்,உன்னிலும்
இருக்கிறார்.கடவுள் என்பவர் எங்கும்
வியாபித்திருக்கிறார்.உலகத்தில்
படைக்கப்பட்டிருக்கிற அனைத்து
ஜீவதத்துக்களிலும்,மரம்,செடி,கோடி,யாவற்றிலும்
இருக்கிறார்.கட்டைக்குள் இருப்பவன் என்ற
வார்த்தை நாளடைவில் திருந்தி
கடவுளாகிவிட்டது “.என தாத்தா கூறியதில்
திருப்தி அடையாமல் மேலும் என் கேள்விகளை
தொடர்ந்தேன்.

:கடவுள் எதிலும் இருக்கிறார் என சொல்றீங்களே தாத்தா.பிறகு ஏன் வீட்டில் சரஸ்வதி,லக்ஷ்மி,நடராஜர்,சிவன்,பெருமாள்,பிரம்மன் ,கிருஷ்ணர்,என பல உருவ படங்களை வைத்து தினமும் பூஜை செய்து வரீங்க"என்றேன்.

"இந்து மதத்தில் பல கடவுள்கள் இருப்பதாக எல்லோரும் நினைக்கிறார்கள்.அது உண்மை இல்லடா கண்ணு.நம்முடைய திருப்திக்கு நாமே கடவுள் இப்படி தான் இருப்பார் என கற்பனை செய்து கொண்டு ,கண்ணுக்கு தெரியாத உருவத்தை கற்பனை செய்து, அதை உருவமாக வடித்து வணங்கி வருகிறோம்.கடவுளை நினைப்பதற்கு உருவம் தேவை இல்லை.மனதுதான் தேவை.இதெல்லாம் உன் பாட்டிக்காக வைத்திருக்கிறேன்"என்றார்கள்.

"முதலில் கடவுள் என்றால் என்ன தாத்தா?"அவர் எப்படி இருப்பார்?கடவுள் ஆணா ?பெண்ணா?என்றேன்.

"கடவுள் என்று தமிழில் சொல்கிறோம்.இந்த

வார்த்தை சமஸ்க்ரிதத்தில் பகவான் என்று கூறப்படுகிறது."பக்" என்றால் ஆறு குணாதிசயங்களை கொண்டது.பேரும் ,புகழும்,தர்மமும்,சொத்துக்களும்,அறிவும்,பற்றின்மை .இவை ஆறும் யாரிடம் இருக்கிறதோ அவர் பகவான் என்று பொருள்." என்றார்கள் தாத்தா.

கடவுளை பலர் பலவாறு தொழுகிறார்கள்.பெரிய ஞானிகள் கண் மூடி தியானித்து கடவுளுக்கு எந்த உருவமும் கொடுக்காமல் தொழுவார்கள்.நம்மை போல் உள்ளவர்கள் கடவுளை பல உருவங்களில் கற்பனை செய்து, அதற்க்கு வடிவம் கொடுத்து வணகுகிறோம்.உலகில் மக்கள் மூன்று வகையாக கடவுளை வணங்கி,அவர் யார் என புரிந்துகொள்ளலாம்.முதலில் தனியாக உட்கார்ந்து தான் யார்,கடவுளை எப்படி அதன் வழியாக புரிந்துகொள்வது என்பது ஒன்று.எல்லா உயிரினங்களிலும் பகவானை பார்ப்பது இரண்டாவது.தன்வழியாக இல்லாமலும்,பிற உயிரினங்களிலும் இல்லாமலும்,எல்லாவற்றையும் கடந்து

அதற்குமேலே சென்று பகவானின் மூலம்
பகவானை பார்ப்பது முன்றாவது.எனவே
கடவுளை தன் வழியாகவும்,தெய்வீக
வழியாகவும் இரண்டு விதமாக வழிகளில்
பார்க்கலாம்"என தாத்தா கூறியது கேட்ட
எனக்கு மிகவும் குழப்பமாகவே
இருந்தது.ஒன்றுமே புரியவில்லை எனக்கு.

என் முகபாவத்திலிருந்து நான் குழம்பியிருப்பதை
பார்த்த தாத்தா"நீ சிறு குழந்தை இதெல்லாம்
உனக்கு இப்போது புரியாது,போகப்போக
புரிந்துகொள்வாய்"என்றார்கள்

"நம் மதத்தில் நிறைய கடவுள்கள் இல்லை
என்று சொன்னீங்களே தாத்தா,அப்படீனா
என்ன அர்த்தம்?.என்றேன்.

"உனக்குபுரியறமாதிரிசொல்றேன்கேளு.இந்தஉலகத்
33கோட்டிகடவுள்கள்எனகுறிப்பிட்டுஇருப்பதைநம்
33கோடிகடவுள்கள்இந்துமதத்தில்இருப்பதாகதவறா
33வகையானகடவுள்என்றேஅர்த்தம்.அந்த
33வகையானகடவுள்களில்

8வகையானவசூஸ்,11வகையானரூத்ரா
12ஆதித்யா,1இந்திராமற்றும,
1ப்ரஜபதி.”என்றார்கள்

மீண்டும் தொடர்ந்து அவைகளுக்கு நீண்ட
விளக்கத்தையும்
அளித்தார்கள்.பூமி,நெருப்பு,காற்று,வானம்,சூரியன்,
(மழை)மற்றும் கிரகங்கள் (ப்லானெட்)இவை 8
வகையான வசூக்களும், ஜனந்த்ரீய ஐந்து
வகையான உணர்வு உறுப்புகளான
கண்,மூக்கு,நாக்கு,காது ,உடல்தொலும் ஐந்து
உடல் உறுப்புக்களான
கைகள்,கால்கள்,உடல்,உயிர்பெருக்க
உறுப்பு,கழிவு உறுப்பு மற்றும் ஆத்மா என்ற 11
ரூத்ராவும்,வருடத்தில் 12 மாதங்களான 12
அடித்யாவும், வானத்திலுள்ள இருண்ட கருமேகம்
இந்திரா என்றும் ,உலகத்தின் இயற்கையை
ப்ரஜபதி என்றும் விளக்கினார்கள் தாத்தா.

“ஆனால் ஒரே ஒரு சக்திதான் நம்மை எல்லாம்
ஆட்டிவைக்கிறது என்றீர்களே தாத்தா
அப்படீன்னா இந்த 33 வகையான கடவுள்கள்

எப்படி தோன்றினார்கள்" என்று கேட்டேன்.

"அந்த ஒரே ஒரு மகாசக்திதான் பல ரூபங்களின் வழியாக நம்ம ஆட்கொள்கிறது.உதாரணமாக நான் உனக்கு என்ன வேண்டும்?என்று கேட்டார்கள்.

"தாத்தா" என்றேன்.

"உன் அம்மாவுக்கு நான் என்ன உறவுமுறை?"

"அப்பா"

"உன் அப்பாவிற்கு நான் என்ன உறவுமுறை?"

"மாமனார்"

"இந்த வீட்டில் சமயல் செய்பவர்களுக்கு நான் என்ன வேண்டும்?"

"எஜமான்"

"என் கூட பிறந்த தம்பிக்கு நான் என்ன முறை?"

“அண்ணன்”

“என் தம்பியின் குழந்தைகளுக்கு நான் என்ன முறை?”

“பெரியப்பா”என்றேன்.

“இப்போது புரிகிறதா .உன் தாத்தாவாகிய என்னை எத்தனை பேர் எப்படி எல்லாம் பெயரிட்டு அழைக்கிறார்கள். நான் ஒரே ஒரு ஆள் பலபேருக்கு பலவிதமான பெயர்களில் அழைக்கப்படுகிறேன்.” என தாத்தா கூறியதும் எனக்கு கடவுள் என்பது யார் என சிறிதளவிற்கு புரிய ஆரம்பித்தது.

தாத்தா மேலும் தொடர்ந்தார்கள்.இந்த பூமி இல்லாமல் உயிரங்கள் இல்லை.அதேபோல சூரியன்,சந்திரன் இல்லாமல் பூமி இல்லை.நெருப்பு.மழை,காற்று இவைகளில்லாமல் ஜீவஜத்துக்கள் வாழமுடியாது.எனவே அந்த மிக பெரிய ஒரே மகாசக்தி சூரியனாகவும்,சந்திரனாகவும்,வானமாகவும்,தண்ணீ

நம்மை வாழ்விக்கிறார்.அதனால்தான் இந்து மதத்தில் சூரிய பகவான்,சந்திரபகவான்,வர்ண பகவான்,அக்னி பகவான், பூமாதேவி என வழிபடுகிறோம்.உயிரனங்கள் சிறப்புடன் வாழ இவை அனைத்தும் மிக அவசியம்.அதே போல படிப்பறிவு,செல்வம்,விவேகம்,நல்லவைகளை ஆக்குதல்,கேட்டவைகளை அழித்தல்,கோபம்,அன்பு கலைகள் முதலியவைகள் உயிரங்கள் அனைத்திற்கும் மிகவும் அவசியம்.அதனால்தான் படிப்புக்கு சரஸ்வதி,செல்வத்திற்கு லக்ஷ்மி ,விவேகத்திற்கு விநாயகர்,நல்லவைகளையும்,உயிரினங்களையும் ஆக்குவிப்பதை பிரம்மா என்றும்,கேட்டவைகளை அழிப்பதை சிவா என்றும் அன்பிற்கு கிருஷ்ணா என்றும்,கோபத்திற்கு காளி என்றும்,கலைகளுக்கு இசைவாணி என்றும்,நடராஜ

“ஏன் தாத்தா படிப்பு,செல்வம்,கோபம் இதற்கெல்லாம் பெண் கடவுள் ,மற்றவற்றிர்கேல்லாம் ஆண் கடவுள்”என கேட்டேன்.

“அது வேறு ஒன்றுமில்லடா கண்ணு.நீ பிறந்த கொஞ்சம் நாளைக்கெல்லாம் உன்னை இடுப்பில் வைத்து கொண்டு அதோ நிலாவை பாரு,இதோ இது உன் அப்பா ,இது உன் மாமா,எங்கே அப்பா என்று கூப்பிடு, மாமா என்று கூப்பிடு என்று முதன்முதலில் உனக்கு சொல்லி தருவது யாரு?”என கேட்டார்கள்.

” “அம்மாதான்”என்றேன்.

“பாத்தியா ,அம்மாதான் என சொன்னாயாய்.அப்பா என சொல்லவில்லை இல்லையா.அதனால்தான் ஒரு குழந்தைக்கு முதன்முதலில் பேச்சையும்,உலக அறிவையும் ,சொல்லிதருபவள் அம்மா என்பதால்தான்,அந்த சக்தியை பெண் கடவுளாக பார்க்கிறோம்.எனவேதான் அந்த சக்திக்கு சரஸ்வதி என பெயரிட்டு வணங்கி வருகிறோம்.”என்றார்கள் தாத்தா.

உலகத்தில் எந்த உயிரினமும் பிறந்ததும் “அம்மா” என்றுதான் முதல் வார்த்தையாக

கூறுகிறது.பிறந்த ஜீவன் அம்மா என முதல் வார்த்தையாக யாரும் போதிக்காமல் கூறுவதால் அதற்க்கு சக்தி என பெயரிட்டு வணங்கி வருகிறோம்."அதேபோல ஒரு குடும்பம் நல்ல நிலையில் உருவாக்குவதும்,அழிப்பதும் ஒரு பெண்ணின் கையில்தான் உள்ளது.கணவன் வெளியே வேலைக்கு சென்று உழைத்து எடுத்துவந்த பணத்தை மனைவியின் கையில் கொடுத்து விடுகிறான்.அந்த பணத்தை சிக்கனமாக செலவு செய்து,பணத்தை சேர்த்து அதை விருத்தி பண்ண ஒரு பெண் நினைத்தால் நிச்சயமாக முடியும்.அது இல்லாமல் பணத்தை பொறுப்பின்றி தாராளமாக ஆடம்பரமாக செலவு செய்துவிட்டு குடும்பத்தை வறுமையிலும்,கடனிலும்,வைப்பது ஒரு பெண்ணால்தான் ஏற்பட வாய்ப்பு உண்டு.எனவேதான் நம் தமிழில் ஒரு பழமொழி உண்டு."ஆவதும் பெண்ணால்,அழிவதும் பெண்ணால்"என்று.எனவேதான் ஒரு பெண் உருவத்திற்கு மஹாலக்ஷ்மி என பெயரிட்டு பெண்களை மஹாலக்ஷ்மி போல வாழ அந்த

கடவுளை வழிபடுமாறு ஏற்படுத்தினார்கள் நம் முன்னோர்கள் தான் மட்டுமல்ல தனக்கு பிறகு மகாலக்ஷ்மிகளை உருவாக்கி குடும்பத்தில் சொத்தையும்,சுகத்தையும் பெருக்க வழி செய்ய வேண்டியே பெண் கடவுளை பெண்கள் தோழ இப்படி ஒரு ஏற்பாடு

“ஆதே போல காளி என்ற பெண் கடவுள் ஊர் எல்லையில்தான் இருக்கும், ஏன் என்றால் பெண்கள் கோபப்படுவது குடும்பத்திற்கு நல்லது கிடையாது.பெண்கள் எப்பவும் சிடு,சிடுவென இருப்பது குடும்பத்தை குலைத்துவிடும்.பெண் என்பவள் நல்ல குணவதியாக,பொறுமைக்கு பூமாதேவியாக,எப்பவும் சிரித்த முகத்துடன் இருந்தால்தான் குடும்பம் நல்ல நிலையில் இருக்கும் .இல்லையேல் கோப கனலை வீசிக்கொண்டிருக்கும் ஊர் எல்லையில் உள்ள காளி அம்மன் போல கோபமுள்ள பெண்களை அனைவரும் வெறுத்து ஒதுக்கி விடுவார்கள்.”என்றார்கள்.

“அப்பா ஏன் எல்லோரும் காளி கோவிலுக்கு

போய் காளியை கும்பிடுகிறார்கள்”என்று புரியாமல் கேட்டேன்.

“காளியிடம் போய் ,காளி உன்னை போல் எனக்கு கோபம் வந்து எல்லோரும் வெறுத்தொதுக்கும் நிலை எனக்கு இல்லாமல் சாந்த குணத்தை கொடு என்று வேண்டி கொள்ளவே அங்கு செல்கிறோம்.கோபத்தால் நாசமே ஏற்படுவதால்,அதை ஒரு நாளும் தனக்கு ஏற்படக்கூடாது என்று பெண்கள் உணரவே அப்படி ஒரு உருவத்தை ஏற்படுத்தி அதற்க்கு காளி என பெயரிட்டு வணங்கி வருகிறோம்”என்றார்கள் தாத்தா.

“”வாயு”பகவான் என்றால் காற்று .காற்று இல்லை என்றால் நாம் உயிர் வாழ முடியாது.அனைத்து உயிரினகளும் உயிர்வாழ முக்கியமான காற்றை வாயு பகவான் என பெயரிட்டு வணங்கி வருகிறோம்.அதே போல நெருப்பு இல்லை என்றால் நாம் உணவுசமைத்து சாப்பிட முடியாது.வெளிச்சம் கிடைக்காது.எனவே நெருப்பை அக்னி பகவான்

என சொல்கிறோம்.தண்ணீர் காற்றை போலவே
உயிரினங்களுக்கு மிகவும் அவசியம் .கடன்
நீரான உப்பு தண்ணீர் ஆவியாகி கருமேகமாக
வானிலே இருக்கும்போது அதை இந்திரன்
பகவான் என்றும்,அந்த கருமேகத்திலிருந்து
மழையாக பொழியும் தண்ணீரை வர்ண
பகவான் என்றும்,அந்த மழை நீர்
ஆறுகளாகவும்,ஏரிகளாகவும்,பூமியில் தேங்கி
,குடிதண்ணீராக
உயிரினகளுக்கும்,மரம்,செடி,கொடிகளுக்கும்,அளித்து
உயிர்பித்து வருவதால்
ஏரிகளுக்கு,ஆறுகளுக்கும்,கங்கா,யமுனா,காவேரி
என பெயரிட்டு கடவுளாக வணங்கி
வருகிறோம்”என்றார்கள் தாத்தா.

“ஆறுகளுக்கும்,ஏரிகளுக்கும் ஏன் பெண்கள்
பெயரை வைத்திருக்கிறார்கள் தாத்தா,ஒரு
ஆற்றிற்கு கூட ஆண்கள் பெயரை
வைக்கவில்லையே ஏன்? “என்று கேட்டேன்.

“ஏன் என்றால் பெண்கள் மிகவும்
மென்மையானவர்கள்.பெண்கள் குளிர்ந்த

தென்றலை போல மிகவும் மென்மையுடனும் , தாகத்தை அடக்கும் குளிர் நீரை போல மிகவும் குளிர்ந்த வார்த்தைகலை பேசி இனிமையாக இருப்பவர்கலாதளாலும் மிகவும் நளினமாக இருப்பவர்கலாதளாலும்,நளினமாக வளைந்தோடும் ஆறுகளுக்கும்,ஏரிகளுக்கும் பெண் பெயரையே வைத்துள்ளார்கள்.அதே போல மலைகளுக்கு பெண் பெயரை வைக்கமாட்டார்கள்.மலைகள் மிகவும் கரடு முரடானது என்பதால்."என விளக்கம் கொடுத்தார்கள் தாத்தா.

"நம் இந்து மாததத்தில் ஆணும் பெண்ணும் சரிபாதியே.உலகில் எந்த உயிரினத்திலும் மரம் செய் கொடிகள் உள்பட ஆண் ,பெண் என்ற இரு இனம் இருக்கிறது.ஆண் இல்லாமல் பெண் இல்லை, பெண் இல்லாமல் ஆண் இல்லை.இதைதான் நம் இந்து மதத்தில் பெண்ணை சக்தி என்றும் ஆணை சிவன் என்றும் சொல்கிறார்கள்.எந்த ஒரு பொருளும் இயங்க சக்தி வேண்டும் .கார் இருக்கிறது. அந்த கார் ஓட வேண்டுமென்றால் அதற்க்கு

பெட்ரோல் (சக்தி) தேவை இல்லையா .அதுபோல ஒரு ஆண் மகன் நல்ல நிலையில் இயங்க வேண்டும் என்றால் ஒரு பெண் துணை அவனுக்கு சக்தியாக இருந்து இயங்க வைக்க வேண்டியது அவசியமாகும்.மனைவியாகிய சக்தி சிவனாகிய கணவனை
மணந்து அவனுக்கு வாரிசுகளை பெற்றெடுத்து ,அவன் குலம் விளங்க குடும்பததை சரிவர நடத்த இருந்து செயல்படுவததை உணர்த்தும் பொருட்டே நாம் சக்தி, சிவன் என வழிபாட்டு வருகிறோம்.உலகில் இரு பாலாரும் மிகவும் முக்கியமானவர்கள்.இதில் யார் சிறந்தவர்கள் என வாதிடுவது சரியானது இல்லை.சிவன் வேலையை சிவன் செய்ய வேண்டும், சக்தி வேலையை சக்தி செய்ய
வேண்டும்.அதனால்தான் உலகம் நலம்பெற உருண்டோடிகொண்டிருக்கிறது.அதை விட்டு இருவரும் போட்டியில் இறங்கி விட்டால் உலகம் நிலைப்பது நின்றுவிடும்.

“ஏன் தாத்தா இப்பதான் ஆண் செய்யும் முக்கால்வாசி வேலைகளை பெண்களும்

செய்கிறார்களே."என்றேன்.

"சரிடா தங்கம்,உன்னை ஒரு கேள்வி கேட்கட்டுமா?"

"சரி " என்பது போல தலை ஆட்டினேன்.

"ஆண்மகன்கர்ப்பமாகிகுழந்தையைபெற்றெடுக்கமுடி என்றார்கள்

"இல்லை "என கேலி சிரிப்புடன் சொன்னதும்.

\ அதேபோல்தான் ஆண்களின் சில விலைகளை பெண்களாலும், பெண்களின் சில வேலைகளை ஆண்களாலும் செய்ய இயலாது.அதுதான் இயற்கையின் தத்துவம். அதை நாம் மாற்ற நினைப்பது இயற்க்கைக்கு மாறான கருத்து.கடவுள் படைப்பிற்கு எதிரான ஒன்று. ஒரு ஆண் நள்ளிரவில் தனியாக வெளியே சென்று நடக்க முடியும்.அவன் நல்லபடியாக மறுபடியும் வீடு திரும்ப முடியும். ஆனால் ஒரு பெண் தன்னந்தனியாக நள்ளிரவில் செல்வது அவளுக்கு ஆபத்தே.ஐந்து பெண்கள் ஒன்றாக

சேர்ந்து ஒரு ஆணை மடக்கினால் ,அதிலிருந்து ஆவனால் தப்பித்துவரமுடியும். ஆனால் ஒரு ஆணிடம் ஒரு பெண் மாட்டினால் அதிலிருந்து அவளால் மீண்டு வருவது அவ்வளவு சுலபமில்லை.

“ஒரு ஆண் பல பெண்களுடன் ரகசிய உறவு வைத்துகொண்டு ஊருக்கு தெரியாமல், வாழ்ந்துவிடமுடியும். ஆனால் ஒரு பெண் ஊருக்கு தெரியாமல் உறவு வைத்திருந்தால் , அவள் கர்ப்பமாகி ஊருக்கு விரைவில் தெரிந்துவிடும்.அதனால்தான் சொல்கிறேன் சக்தியும்,சிவமும் பாதிபாதியாக இருந்து தம் தம் வேலைகளை போட்டியிடாமல் சரிவர செய்வதால் இவ்வுலகம் நல்லபடியாக உருண்டோடும்.அதற்குதான் இந்த ஊர் சிதம்பரம் கோவில் உலகிற்கு எடுத்துகாட்டாக அமைந்திருக்கிறது”என்றார்கள்.

கேட்க மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.இவ்வளவு விஷயங்களை என் கனவிலும் இதுநாள் வரையில் நான்

நினைத்துகூட பார்த்ததில்லை. நிறைய விஷயங்களை தாத்தா ஈஸ்வரனிடமிருந்து இம்முறை நான் கற்றுக்கொண்டேன்.

21

அத்யாயம்-இருபத்திஒன்று

மேலும் தாத்தா ஈஸ்வரன் பல கேள்விகளை கேட்டு என் மனக்கண்ணை திறந்தார்கள் என்றே நான் சொல்ல வேண்டும்.

“சூரிய ஒளியை சந்திரனால் கொடுக்கமுடியாது.பூமியின் வனப்பை சூரியனில் எதிர்பார்க்கமுடியாது. சூரியன் ,சந்திரன்,மற்றும் பூமி இவை மூன்றும் தன் வேலையை போட்டியின்றி செய்வதால்தான் இந்த அனைத்து கிரகங்களும் இன்னும் நிலைத்திருக்கிறது.அதே போல மனித இனமும்

தம்தம் வேலைகளை சரிவர திறம்பட நடத்த வேண்டுமே தவிர யார் சிறந்தவர்கள் உயர்ந்தவர்கள் என வீண் பேச்சு நம்மை அழித்துவிடும்"என்றார்கள் .

இப்படி படிப்படியாக தாத்தா எல்லாவற்றிற்கும் விளக்கம் அளித்தது குறித்து என் மனம் வியந்தது.எத்தனை பேருக்கு இவ்வாறு நினைக்கத்தோன்றும்.மக்கள் பொதுவாக சூரியன்,சந்திரன்,வானம்,பூமி,தண்ணீர்,காற்று,நீர் என சாதாரணமாக பார்த்துவிட்டு இருப்பார்கள்.ஆனால் இவ்வொன்றிலும் எத்தனை வகையானஉள் அர்த்தங்களும் ,தத்துவங்களும் இருப்பதை எத்தனை பேருக்கு தெரியும்?." என நினைத்து ஆச்சர்யப்பட்டேன்.

மனித வாழ்க்கையே மிகவும் வினதையானது.மனிதன் உயிருடன் இருக்கும்போது உள்ள வாழ்கையை பற்றி கவலைபடுவதைவிட ,இறந்த பிறகு தான் சொர்க்கத்திற்கு போவோமா?அல்லது நரகத்திருக்கு போவோமா? என கவலை

படுவதை நினைத்து மனதிருக்குள் சிரிப்பு வந்தது.அடிக்கடி பாட்டி கமலா சொர்க்கம்,நரகம் என பேசுவதை கேட்டிருக்கிறேன்.

மேலும் என் கேள்விகளை தொடர்ந்தேன்."தாத்தா நாம் ஏன் தினமும் சாமிய கும்பிட வேண்டும்?அவரை கும்பிடாவிட்டால் சாமி தண்டனை கொடுத்துவிடுவார் என்கிறார்களே ,அது உண்மையா தாத்தா? என்றேன்.

"பிரார்த்தனை என்பது நம் மனித மனதிற்கு சாந்தி ஏற்படுவத்ர்க்கே.கடவுள் மனிதனை போல இறுமாப்பு மிடியாது.கடவுளுக்கு எதுவும் இதனால் நல்லதோ,கேட்டதோ ஏற்படுவதில்லை .சில மணி நேரங்கள் கண்ணை மூடி கைகூப்பி சாமியை நினைத்து நல்லது வேண்டும் என வேண்டுவதால் நம் மனதில் அந்த சில மணிநேரம் நல்ல எண்ணங்கள் அற்படுவதாலும், அதனால் நம் உடலிலுள்ள ரத்தங்கள்,அணுக்கள் எல்லாம் தூய்மை அடைந்தது நல்லதாகி விடுவதால் நம் உடலும் மனமும் தூய்மை

அடைந்துவிடுகிறது.நம் மனதில் நல்லவை அர்ப்டுவதால் நாம் நல்லதை செய்ய வாய்ப்புக்கள் அதிகமாகிறது அதனால் எல்லாம் நல்லதாகவே நடக்கும்.இதனால் கடவுளின் இந்த படைப்பை நாம் நல்லபடியாக உபயோகித்து வருவதால் அவருக்கும் அது மகிழ்ச்சியை தரும்"அவ்வளவுதான். என்றார்கள்.

"நாம் ஏன் இரு கைகளை கூப்பி கூபிடுகிறோம் தெரியுமா உனக்கு?" என தாத்தா என்னிடம் கேட்டதற்கு.

தெரியாது என தலை ஆட்டினேன்,

"சரி சொல்கிறேன் கேள்" என ஆரம்பித்தார்கள்."நாம் சாமியை மட்டும் பார்த்து கைகூப்பி .கும்பிடுவதில்லை, நம்மை விட பெரியவர்கள் யாரை பார்த்தால்லும் மரியாதையுடன் கைகூப்பி கும்பிடுகிறோம்,ஏன் என்றால்,இரு கைகளையும் நாம் கூப்பி கும்பிடுவது,எல்லா மனித ஜீவனுக்குள்ளும் நாம் தெய்வீகத்தை பார்க்கிறோம் கடவுள்

எங்குமிருக்கிறார் என முன்பே சொன்னேனே இல்லையா? எனவே அதன் ஐதீகம் என்னவேன்றால் , “என் உடலிலுள்ள அவ்வளவு வலிமையையும் இரு கைகளினால் ஒன்றுசேர்த்து ,அதில் நான் என்ற அகந்தையை அகற்றி தலைவணங்கி உன்னுள் இருக்கும் ஆத்மாவை நான் மிகவும் மதிக்கிறேன்”என்பதே ஆகும் என தாத்தா சொன்னது கேட்டதும் நான் மிவகும் ஆச்சரியத்தில் வாய்பிளந்து நின்றேன்.

நானும் தாத்தாவும் பேசிக்கொண்டிருக்கும்போதே காலை உணவை சாப்பிட பாட்டி கூப்பிடும் குரல் கேட்டு எங்கள் சம்பாஷணையை நிறுத்திவிட்டு சாப்பிட சென்று விட்டோம்.இன்னும் ஊருக்கு செல்ல சில நாட்களே இருண்டவ்றதால் என் மீதமுள்ள கேள்விகளை பிறகு கேட்டுகொள்ளலாம் என இருந்துவிட்டேன்.எப்படியும் தாத்தா எங்களை தினமும் மாலையில் கோவிலுக்கு அழைத்துசெல்வதால் அன்று மாலை கோவிலுக்கு செல்லும் நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தேன்.

மாலை நேரமும் வந்தது.வழக்கம்போல தாத்தா எங்களை கோவிலுக்கு அழைத்து செல்கையில் கோவிலின் நிறைய ஏழை சாமியார்கள் காவி உடை அணிந்துகொண்டு பிச்சை எடுத்துகொண்டிருந்ததை பார்த்த நான்,"ஏன் தாத்தா இவர்கள் எல்லாம் காவி உடை அணிந்த்டிருக்கிரார்கள்" .சாமியார்கள் எல்லாம் கேசரி கலர் காவி உடை தான் அணியவேண்டுமா?தாத்தா. வேறு எந்த கலர் துணியும் அணியகூடாதா? என்றேன்.

உடனே தாத்தா அதற்க்கு பதில் அழிக்காமால், திரும்பவும் என்னை கேள்வி கேட்க்க ஆரம்பித்தார்கள்.

"காலையில் சூரியன் உதயமாகும் போது அந்த இளம் சூரியன் நிறம் என்ன?என்றார்கள்.

"ஆரஞ்ச் நிறம்"என்றேன்.

"மாலையில் சூரியன் மறையும்போது என்ன நிறம்?" என்றார்கள்.

“அதே ஆரஞ்ச் நிறம்தான்” என பதிலளித்தேன்.

“முன்பேநான்சொன்னேன்இல்லையா,கடவுள்என்ப
,தூங்கிகொண்டிருக்கும்அனைத்துஉயிரினங்களையு
முழுதும்தொடர்ந்துதன்னைஎரித்துகொண்டுவெளிச்

வழங்கி பல உயிரினங்களை எந்தவித
பிரதிபலனும் எதிர்பார்க்காமல் உறவாக்கி,காத்து
மாலை நேரத்தில் மறையும் போதும் அதே
ஆரஞ்சு நிரந் அழகுடனும்,பொலிவுடனும்,
குளுமையுடனும் உயிரினகளை மகிழ்வித்து
மறைகிறதோ, அதே போல சாமியார்களும் சூரிய
பகவானை போல தன நலம் கருதாது பிறர்
நலம் கருதி வாழ்பவர்கள் என்பதை உணர்த்தவே
ஆரஞ்ச் கலர் உடையை தேர்ந்தெடுத்து
அணிதிருக்கிரார்கள்.என சொன்னதை கேட்டதும்
இந்த ஏழை சாமியார்கள் போட்டிருக்கும்
ஆரஞ்சு நிற காவி உடையில் இவ்வளவு பெரிய
தத்துவங்கள் அடங்கியிருக்கிறதா?என
அதிசயமடைந்தேன்.

கோவிலுக்குள் நுழைந்ததும் நடராஜர்

சன்னதியில் தாத்தா எங்களையும் தரையில்
விழுந்து கும்பிடச்சொல்லிவிட்டு
தானும்,அண்ணன் ஷா,தம்பி பாட் ஐயும் உடலை
நேராக நீட்டிநெடுக்க விழுந்து கும்பிடும்படி
செய்ததை பார்த்த நான் அதற்க்கான
விளக்கத்தையும் கேட்டேன்.

“மனிதனுக்கு மிக முக்கியமாக கருத்தும்
சுயமரியாதை,கௌரவம்,மரியாதை,ஆணவம்,எல்லா
சாமி சந்நிதானத்தில் கடவுளின் காலடியில்
அற்பணித்துவிட்டு ,மிகவும்
சுயநலமற்ற,பணிவான அடக்கத்துடன்
இருப்பதன் பொருள்” என்றார்கள் தாத்தா.

மேலும் அந்த கோவிலிலுள்ள ஓம் என்று பறந்து
கொண்டிருந்த கோடியை காண்பித்து
அதனுடைய அர்த்தம் என்ன என்பதயும் நாங்கள்
கேட்காமலேயே எங்கள் நால்வருக்கும் தாத்தா
விளக்கமாக கூறினார்கள். “இந்த கொடியின்
நிரமும்கேசரி நிற ஆரஞ்சு கலர். இதில் இரண்டு
முக்கானல்வடிவ கொடியின் முனியில்
உண்டு,மேலே உள்ள முக்கோணம்

சற்றேநீளமாக இருக்கிறது
பார்த்தீர்களா,அதற்க்கு என்ன பொருள்
தெரியுமா?கீழிருந்து கிளம்பும் தீ மேலெழுந்து
மிக நீளமாக எரியும்.,மேலிருந்து எழும்பும் தீ
மிகவும் குறுகிய நீளமாக எரியும்.எனவே சூரியன்
ஆரஞ்சு நிறத்தில் பூமியின் கீழிருந்து எழும்பி
மேலே உச்சிக்கு சென்று நாள் முழுதும்
தன்னலமின்றி உலகத்திற்கு வெளிச்சம் அளித்து
உயிரினங்களை உற்பத்தி ஆக்கி,காத்து,வாழ்விக்க
செய்து அதே ஆரஞ்சுகலரின் சுயநலமின்றி
மறைகிறது என்பதை இந்த கொடியின்
விளக்கமாகும்"என விவரித்தார்கள்.

"தர்மம் ,தர்மம் என்று சொல்றீங்களே தாத்தா.
தர்மம்னா என்ன?இருப்பவர்கள்
இல்லாதவர்களுக்கு பிச்சை போடுவதா? "என்று
கேட்டேன்.

"பிச்சை போடுவதும் ஒருவித
தர்மம்தான்.ஆனால் தர்மம் என்பதற்கு
உண்மையான பொருள் அது இல்லடா
கண்ணு.தர்மம் என்றால் மனிதர்களாக உலகில்

பிறந்த நாம்,நம் கடமையை தினமும் சரிவர செய்து நம்மையும்,நம் சுற்றத்தாரையும் திறம்பட காத்து, யாருக்கும் தீங்கு செய்யாமலும்,தீங்கு நினைக்காமலும் முடிந்தவரை நல்லவைகளை செய்து தான் மனிதனாக பிறந்த கடன்களை நல்லபடியாக நடத்தி இறப்பவனே நல்ல தர்மவானாக சொல்வார்கள்"என்றார்கள்.

மேலும் தொடர்ந்தார்கள்.நம் தம்ழில் திருக்குறளில் "பிறர்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வினையும்" அதற்கு பொருள் என்னவென்றால் மற்றவர்களுக்கு நீ நல்லது செய்தாலோ அல்லது தீயது செய்தாலோ அவை பின்னால் உனக்கு திரும்ப வந்து சேரும். நல்லது செய்தால் பின்னால் உனக்கு நல்லது நடக்கும், பிறருக்கு கெடுதல் செய்தால் பின்னால் உனக்கு கெடுதலே வரும். அதுதான் தர்மம்.எனவே எப்போதும் நம் மனதில் நல்லதையே நினைத்து,நல்லதையே செய்தால் நமக்கு பிற்காலத்தில் தேவைப்படும்போது எல்லாம் நல்லவைகளாகவே நடக்கும்" என்றார்கள்.

தர்மத்தை பற்றி சொல்லிய தாத்தா கூடவே ஒரு கதையையும் எங்களுக்கு சொன்னார்கள்.”ஒரு ஊரில் ஒரு பிராமணர் தன குடும்பத்துடன் வசித்துவந்தார். அவர் குடும்பம் வறுமையில் இருந்ததால் ,அந்த ஊரை விட்டு சென்று பணம் சம்பாத்து வருவதற்கு தன குடும்பத்தை விட்டு வெளி ஊருக்கு சென்று கொண்டிருந்தார்.அப்போது வழியில் ஒரு பெரிய கிணற்றிற்குள் இருந்து உதவி உதவி என சத்தம் வரவே ,கிணற்றிற்குள் அந்த பிராமண எட்டி பார்த்தபோது அந்த கிணற்றிற்குள் ஒரு பாம்பு,ஒரு புலி ,ஓர் குரங்கு,ஒரு மனிதன், என்று நான்கு பேர் இருந்தனர்.அப்போது குரங்கு அந்த பிராமணரிடம் சொல்லியது என்னை நீ காப்பாற்றினால் உனக்கு தேவையான உணவு பொருட்களை,உனக்கு தேர்வைப்படும்போது என்ன நிச்சயமாக உன்னக்கு தருவேன் என்றது, பாம்பும் அந்த பிராமணரிடம் என்னை நீ காப்பாற்றினால்உனக்கு ஆபத்து ஏற்படும்போது என் பெயரை சொல்லி அழைத்தால் நான்

அவசியம் உன்னை ஆபத்திலிருந்து காப்பாற்ற வருவேன் என்றது.அதே போல புலியும் என்னை நீ காப்பாற்றினால் உனக்கு தேவையான பொன்னும்,பொருளும் தருவேன் என கூறிவிட்டு, அந்த புலி தொடர்ந்து கூறியது அந்த பிராமணரிடம் ,எங்கள் முன்று பேரையும் காப்பாற்று ஆனால் இந்த மனிதனை மட்டும் காபாற்றாதே,அவனால் உனக்கு தீங்குதான் விளையும் என்றது.சிறிது நேரம் யோசித்து விட்டு அந்த பிராமணர் குரங்கு,பாம்பு, புலியை மேலே தூக்கிவிட்டு காப்பாற்றி யவுடன் ,மறுபடியும் அந்த முன்று மிருகங்களும் அந்த ப்ராமரை எச்சரித்தது. தயவு செய்து அந்த மனிதனை காபாற்றாதே என கூறிவிட்டு சென்றுவிட்டது. மனம் கேட்காமல் அந்த கிணற்றுக்குள் இருக்கும் மனிதர் கெஞ்சியதும் அவனையும் காப்பாற்றி விட்டு அந்த பிராமணர் காட்டிற்குள் சென்றுகொண்டிருக்கும் போது , அந்த பிராமணர் குரங்கின் ஞாபகம் வரவே அதனிடம் சென்று உதவி கேட்டதற்கு குரங்கு அவரை சந்தோஷமாக வரவேற்று அவருக்கு

பலவகை பழங்களை கொடுத்தது.பிராமணரும் அந்த குரங்கிற்கு நன்றி சொல்லிவிட்டு ,அப்படியே புலி தங்கியிருந்த குகைக்கு சென்றார்.புலி அவரை மிகவும் சந்தோஷத்துடன் வரவேற்று அவருக்கு பலவகையான பொன் நகைகளையும் பொருளையும் கொடுத்துதவியது. பிராமணர் அந்த புலிக்கு நன்றி சொல்லிவிட்டு தன வீட்டை நோக்கி ஆனந்தமாக திரும்பி சென்றுகொண்டிருந்தார்.

வீடு சென்ற பிராமணர் தன் மனைவியிடம் காண்பித்து நடந்தவைகளை கூறிவிட்டு, அந்த பொன் நகைகளை ஊரிலுள்ள நகை கடைக்கு சென்று விற்று அந்த பணத்தில் தன குடும்பத்திற்கு வேண்டியதை வாங்கி வருவதாக கூறிவிட்டு கடைக்கு சென்றார்.அந்த கடையின் சொந்தகாரர்தான் அந்த கிணற்றிற்குள் இருந்து பிராமணரால் காப்பாற்றப்பட்ட மனிதர்.அவரை பார்த்த பிராமணர் மிகவும் சந்தோஷமடைந்து நகைகளை அவரிடம் கொடுத்து அதற்க்கான பணத்தை தருமாறு கேட்டார்.

அந்த நகைகளை பார்த்த அந்த நகை கடைகாரர் ,அய்யா சற்று இங்கு அமர்ந்த்திருங்கள் நான் உள்ளே சென்று இந்த நகைகள் உண்மை தான என ஆராய்ந்துவிட்டு வந்து பிறகு அதற்குண்டான பணத்தை உங்களுக்கு தருகிறேன் என கூறிவிட்டு உள்ளே சென்ற நகை கடைகாரர் வெகுநேரம் வெளியே வரவில்லை. அச்சமயம் அந்த ஊர் ராணியின் நகைகள் காணவில்லை கண்டுபிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் அளிக்கப்படும் என அரசவையிலிருந்து அறிவித்திருந்தபடியால் ,அந்த சன்மானத்தை பெற அந்த நகை கடை காரர் அவ்வளவு நகைகளையும் எடுத்துகொண்டு அரண்மனைக்கு சென்று ராஜாவிடம் நகைகளை காண்பித்து சன்மானத்தை வாங்கிகொண்டு வீட்டிற்கு திரும்பி வருவதற்குள் அரண்மனை காவலாளிகள் நகை கடைக்கு சென்று அந்த பிராமணரை கைதுசெய்து அரண்மனை சிறைசாலையில் வைத்து விட்டார்கள். அரசனும் எதையும் சரிவர விசாரிக்காமல் மறுநாள் அந்த பிராமணருக்கு மரண தண்டனை வித்துவிட்டார்.

சிறையில் மிகவும் கவலையாக இருந்த பிராமணருக்குபாம்பின் நினைவு வரவே ,அந்த பாம்பின் பெயரை சொல்லி உதவிக்கு அழைத்தவுடன் பாம்பு அவர் இருக்கும் சிறை சாலைக்குள் வந்து ,என்ன விஷயம் என கேட்கவே, நடந்தவை முழுதும் பாம்பிடம் கூறி மறுநாள் தனுக்கு மரண தண்டனை ,அதிலிருந்து நீ என்னை எப்படியாவது காப்பாற்றிவிடு என கேட்கவே.பாம்பு அவருக்கு ஒரு யோசனையை கூறியது, நான் மகாராணியின் அறைக்கு சென்று அவர்களை கொட்டி விஷத்தை அவர்கள் உடம்பில் ஏற்றிவிடுகிறேன்.ஆனால் அந்த விஷம் உடல் முழ்தும் பரவினாலும் சாகாமல் பார்த்துகொள்கிறேன்.நீ அரசனிடம் அந்த மகாராணியை குணப்படுத்துவதாக சொல்லி அவர்கள் தலையில் உன் கையை வைத்தால் விஷம் முழுதும் இறங்கிவிடுமாறு செய்துவிடுகிறேன்.பிறகு நீ நடந்தவைகளை அரசரிடம் கூறி வெளியே வந்துவிடு என கூறிவிட்டு அந்த பாம்பு நேராக ராணியின் அறைக்கு சென்று ராணியை கொத்தி விஷத்தை

அவர் உடம்பில் இறக்கிவிட்டு சென்றுவிட்டது.ராணியின் உடல் முழுதும் விஷம் பரவி நீல நிறமாகி விட்டது. எவ்வளவோ மருத்துவர்கள் வந்து வைத்தியம் செய்தும் ராணி குணமாகவில்லை.

உடனே அரசன் ஊரில் உள்ள அனைவருக்கும் யார் ராணியை குணப்படுத்துகிரார்களோ அவார்களுக்கு தகுந்த சன்மானம் அளிக்கப்படும் என அறிவித்தவுடன் ,சிறையிலிருந்த பிராமணர் தான் குனபடுத்துவதாக கூறவே, அரசன் அவரை சிறையிலிருந்து விடுவித்து ராணி இருக்கும் அறைக்கு அழைத்துசென்றவுடன் பிராமணர் ராணியின் தலையில் கைவைத்ததும் ,ராணி உடலிலுள்ள விஷம் இறங்கி ,நல்லபடியாக குனமாகிவிட்டதும், பிராமணர் அரசரிடம் நடந்த உண்மைகளை கூறி ,செய்யாத குற்றத்திற்காக தான் சிறைவாசம் ஆக்கப்பட்டு மரண தண்டனை விடித்திக்கபாடத்தை விளக்கியதும், அரசன் வருத்தமுற்று பிராமணருக்கு தகுந்த சன்மானம் அளித்து அவரை விடுவித்து வீட்டிற்கு அனுப்பிவிட்டு நகை கடை காரன் மீது

கோபமடைந்து அவரை சிறையிலிட்டு மரண தண்டனையை விதித்தார்." இதுதான் தர்மம் என சொல்வது.அந்த பிராமண செய்த தர்மம் அவரை காப்பாற்றியது" என தர்மத்திற்கு விரிவாக விளக்கத்தை சொன்னார்கள் தாத்தா.

கதை கேட்டு கொண்டே கோவிலை சுற்றி விட்டு சிவாலிங்கம் இருக்கும் இடத்திற்கு வந்ததும்,வெகு நாட்களாக சிவ லிங்கம் என்றால் என்ன?அதற்க்கு உருவமே இல்லையே.இது என்ன மாதிரியான சாமி?அந்த சிவ்லிங்கம்த்தின் அடையாள சின்னம் என்ன?என்ற கேள்விகள் என் மனதுக்குள்ளே அடிக்கிடி எழுந்து வந்தது.இம்முறை தாத்தாவிடம் கேட்டு தெளிவாக்கி கொள்ளவேண்டியதுதான் என நினைத்தேன்.

"இந்த சிவலிங்கத்தை எல்லோரும் கும்பிட்றாங்களே தாத்தா, இந்த சாமி யாரு?இவருடைய தொழில் என்ன?என்று கேட்டேன்.

“நீ சிறு பெண் ,சிவலிங்கத்திற்கு முழுமையான விளக்கத்தை இப்போது என்னால் தெளிவாக சொல்லமுடியாது.ஆனால் சுருக்கமாக சொல்கிறேன் கேள்.இந்த பூமியில் எந்த உயிரினத்திலும் ஆண் ,பெண் என்ற இனம் இருப்பதால்தான் இனப்பெருக்கம் நடைபெறுகிறது.இருவரும் சேர்ந்து திருமணம் செய்துகொண்டு குழந்தைகளை பெற்று தனக்குப்பின் இந்த பூமியில் வாரிசுகளை விட்டு செல்வதால் ஆண்,பெண் இருவரும் இவ்வுலகின் இனபெருக்கத்திர்க்கு மிகவும் முக்கியம்.கீழே உள்ள வட்டவடிவ உறுப்பு பெண்ணின் இனபெருக்க உறுப்பு,மேலே உள்ளது ஆண்ணின் இனபெருக்க உறுப்பு.அதை மக்கள் தெய்வீகமாக வழிபடுகிறார்கள்.லிங்கம் என்றால் சமஸ்க்ரிதத்தில் அமைப்பு என்று பொருள். சிவனின் (உருவாக்குபவர்)ஆண் உறுப்பின் அமைப்பை சக்தியாகிய பெண் உறுப்பு தாங்கி நிற்கும் அமைப்பை (காஸ்மிக் ஆப் யூனியன் அண்ட் க்ரியஷன்)இது குறிக்கும்.மக்கள் இதை உணர்ந்து பெண் இல்லை என்றால் ஆண்

இல்லை, ஆண் இல்லை என்றால் பெண் இல்லை என்ற மகத்துவத்தையும்,முக்கியத்துவத்தையும் தெய்வீகமாக கருதி மதிக்கவேண்டும் என்பதன் சின்னமே இந்த சிவலிங்கம் " ஏன் தாத்தா வவரித்தார்கள்.நான் அப்போது சிறுமி என்பதால் தாத்தாவின் விளக்கம் அப்போது புரியாமல் விழித்தேன்.

பேசிக்கொண்டே கோவிலை சுத்திவருகையில் கோவிலின் பிரகாரத்தில் சிலர் தேங்காய் உடைப்பதை பார்த்துவிட்டு ,"ஏன் தாத்தா சாமிக்கு முன்னால் இவ்வளவு தேங்காயை உடைக்கிறார்கள்.அதே போல சாமிக்கு முன்னால் தேங்காயை வைத்து பூஜை செய்கிறார்களே ஏன்?"என்று கேட்டேன்.

"சிவபெருமான் முகத்தில் மூன்று கண்கள் உண்டு.உலகத்தை பார்க்க இரு கண்களும்,அறிவை திறக்கும் கண்ணாக நெற்றியின் நடுவே மூன்றாவதாக அறிவு கண் இருப்பது போல தேங்காய் தலையிலும் மூன்று

கண்கள் உள்ளது.அதோடு இல்லாமல் தேங்காயின் மேலுள்ள கடினமான மூடி உடைத்தால்தான் உள்ளே இருக்கும் நல்லவைகளான அந்த வெள்ளை பருப்பை நாம் சாப்பிட்டு ரசிக்கமுடிகிறது.அதே போல் வாழ்வில் கடினமான உழைப்பிற்கு பிறகு அதன் பலனை நாம் அடையமுடியும் என்பதே அதன் அர்த்தம். மேலும் தேங்காயின் கடினமான மேல்மூடியை எரித்து பல்பொடி,கண்மை,சூட்டினால் ஏற்பாடு காயத்திற்கு ஆயின்மெண்ட் ,வயதானவர்களுக்கும்,நோய்வாய் பட்டவர்களுக்கும் தேங்காய் தண்ணீர் குடித்தால் நல்லது, அதோடு மட்டுமில்லை,சர்க்கரை வியாதி உள்ளவர்கள் தேங்காய் சாப்பிட்டால் மிகவும் நல்லது.தேங்காயை பற்களினால் நன்றாக மென்று துப்பிவிட்டு பல்லை கழுவிவிட்டால் பற்கள் வில்லையாக அழகாக இருக்கும்.தேங்காய் நாறு பாத்திரம் தேய்க்க உதவுகிறது.இப்படி தேங்காயின் ஒவ்வொரு பகுதியும் நமக்கு பல விதத்தில் உதவுவதால் அதை ஒரு நல்ல பொருளாக கருதி நல்ல

நாளில் அதை
உபயோகபடுத்துகிறோம்.தேங்காயின் ஒவ்வொரு
பகுதியும் மற்றவர்களுக்கு உதவியாக
இருப்பதுபோல மனித பிறவிகளும் நம்
ஒவ்வொரு செயலும் மற்றவர்களுக்கு உதவியாக
இருக்கவேண்டும் என்பதே அதன் விளக்கம்"

என தாத்தா கூறியதை கேட்டதும் ,ஒரு
சாதாரண தேங்காயில் இவ்வளவு விஷயம்
இருக்கிறதா.என்பதை அன்றுதான்
அறிந்தேன்.அதேபோல் அங்கு எல்லா
இடங்களிலும் கற்பூரம் எரிந்துகொண்டிருப்பதை
பார்த்து அதற்கான விளக்கத்தை கேட்டதும்,

"கற்பூரம் தன்னை எரித்து நல்ல மனத்துடன்
வெளிச்சத்தை கொடுப்பதால் அதையும் நல்ல
பயனுள்ள தூய்மையான பொருளாக நாம்
கருதுகிறோம்.மேலும் அதிலிருந்து வரும் சில
கெமிகல்ஸ் நம் சுவாசித்தால் அது நம்
உடலிலுள்ள கிருமிகளை கொன்று நல்ல
காற்றை சுவாசித்து ஆரோக்யமான சூழ்நிலையை
கோவிலுக்குள ஏற்படுத்துகிறது."என்றார்கள்.

இதுபோல பல விஷயங்களை
தாத்தாவிடமிருந்து நான்
தெரிந்துகொண்டேன்.ஒரு நாள் தாத்தாவிடம்
உங்களுக்கு சர்க்கரை வியாதி
இருப்பதாகவும்,காலில் அடிபட்டு அந்த புண்
பரவி ஆறாமல் நீங்க சீக்கிரமாக
இறந்துவிடுவீர்கள் என் பெசிகொண்டார்களே
தாத்தா,இன்னும் சாகாமல் எப்படி
பிழைத்துகொண்டீர்கள்,இன்னும் எவ்வளவு நாள்
உயிருடன் இருப்பீர்கள் தாத்தா?"என்று
கேட்டதற்கு,

"நான் கூடிய விரைவில் இறந்துவிடுவேன்
என்றுதான் மருத்துவர்கள்
நினைத்தார்கள்.ஆனால் அதன் பிறகு நான்
தினமும் காலையில் ப்ரானாயானம் ஒரு
மணிநேரம் செய்கிறேன்.பிறகு அறையின் நடுவே
மற்றுமொருமணிநேரம் தலைகீழ்
நிற்கிறேன்.வீடில்லுள்ள வேலை ஆட்கள் மற்றும்
உன் பாட்டி உள்பட என்னை வேடிக்கையாக
பார்த்தார்கள்.சாக போகிறவன் ஏன்
அநாவசியமாக இதை எல்லாம் செய்கிறேன்

என்று.அந்த
ப்ராணாயானமும்,சிறைசாசனமும்தான்
என்னுடைய சர்க்கரை வியாதியை விரைவில்
குணபடுத்தி ,சாவிலிருந்து காப்பாற்றி இருக்கிறது
என்றே நினைக்கிறேன்.நல்ல ஆரோகியத்துடன்
நீண்ட நாட்கள் வாழவேண்டும் என்றால் நீயும்
தினமும் காலையில் எழுந்து
சிறைசாசனமும்,ப்ராணாயானமும் செய். எந்த
நோயும்,உன்னை அணுகாது"என தாத்தா
சொல்லியது கேட்டு நானும் தாதாவை போல
தலை கீழ்நிற்க ஆசைப்பட்டேன்.

மறுநாள் காலையில் எழுந்ததும் பல்
விலக்கிவிட்டு முகம் கழுவிவிட்டு தலை கீழ்
நிர்ப்பதர்க்கு தயாரானேன்.தாத்தாவும் தலை கீழ்
நிர்ப்பது எப்படி என எனக்கு காண்பித்துவிட்டு
தன்னுடைய இடத்திற்கு சென்று தலை கீழ்
நிற்க தொடங்கினார்கள். ஓர் நல்ல காட்டன்
துண்டை எடுத்து அதை வட்டவடிவமாக தாத்தா
காட்டியது போல சுருட்டி அறையின் நடுவே
வைத்துவிட்டு தலையை அதிலே நன்றாக
புதைத்து வைத்துகொண்டு இரு கைகளையும்

தரையில் மடித்து வைத்து இரு கால்களையும் ஊனவைத்து அனாவசியமாக தூக்கி மேலே நேராக நிறுத்தி ஆடாமல் அசையாமல் ஒரு மணிநேரத்திற்கு அந்த 70 வயதில் தாத்தா நிற்கும்போது,இந்த 10 வயதில் நான் நிற்பது ஒன்றும் பெரிய கம்ப சூத்திரம் இல்லை என்று நினைத்தபடி ,நானும் அங்கிருந்த ஒரு காட்டன் துண்டை சுருட்டி ஹாலின் நடுவே வைத்து என் தலையை அதில் பதிய வைத்து என் இரு கைகளையும் தரையில் ஊன்றி இருகால்களையும் மேலே தூக்க முயற்சித்தேன்,பலமுறை முயற்சித்தும் முடியவில்லை.சரி,என சுவற்றின் அருகே சென்று சுவற்றை ஓட்டி தலை கீழாக நிற்க முயர்ச்சித்த போதும் ,என் முயற்சி முழுதும் தோல்வியில்தான் முடிந்தது.அதற்குள் சமையலறையிலிருந்து வெளியே வந்த பாட்டி கமலா என்ன செய்து கொண்டிருக்கிறாய் அந்த சுவற்றின் ஓரமாக என பதட்டத்துடன் கேட்கவே,

“தாத்தா மாதிரி நானும் தலை கீழாக நிற்க

முயற்சிக்கிறேன்
பாட்டி,"என்றேன்.அவ்வளவுதான்.

"நாசமாய் போச்சு,உங்க தாத்தாவிற்கு வேலை வெட்டி இல்லாமல் தினமும் காலையில் தலை கீழே நிக்கிறாங்க.பெண்பிள்ளை நீ இப்படி எல்லாம் செய்ய கூடாது.கழுத்து சுளுக்கி கொள்ளும்.தலை கீழே நின்றால் குடல் மேலே ஏறிவிடும்.ஓடிபோய் விளையாடு.இது எல்லாம் தேவை இல்லாத விஷயம் உனக்கு" என கண்டித்து அங்கிருந்து விரட்டிவிட்டார்கள்.

தலைகீழ் நிற்க என்னால் முடியவில்லை என்ற ஆதங்கத்தில் தோட்டத்திற்கு விளையாட சென்றுவிட்டேன்.ஆனால் அதன்பிறகு யாரும் பார்க்காத இடத்தில் தனியாக ரகசியமாக தலைகீழ் நிற்க பல முறை முயற்சித்து தோல்விதான் மிச்சமானது.பிறகு பயம் வந்துவிட்டது.கழுத்து சுளுக்கி,குடல் மேலே ஏறிவிட்டால் பாட்டி சொன்னமாதிரி ,நாம் கஷ்டபடவேண்டுமே என்று எண்ணி அந்த எண்ணத்தையே முழுமையாக

கைவிட்டுவிட்டேன்.

கோடைவிடுமுறை முடியும் நாள்
நெருங்கியது.நாங்கள் சென்னைக்கு செல்லும்
நாளும் வந்தது.மறுநாள் விடியற்காலையில்
பஸ்சில் சென்னைக்கு கிளம்ப அம்மாவும்,குமாரி
அக்காவும் எல்லாவற்றையும் பாக்
பண்ணிகொண்டிருந்தார்கள் தாத்தாவுடன்
அன்று மாலையும் கோவிலுக்கு சென்று
நடராஜர் சாமி சந்நிதானத்தில்
உட்கார்ந்து,தாத்தா மனமுருகி கண்முடி எதோ
வேண்டிகொண்டிருந்தார்கள்.நான் தாத்தா அருகி
அமைதியாக உட்கார்ந்து அடுத்த முறை மாமா
பெண்களும் வரவேண்டும் என
வேண்டிகொண்டிட்ருந்தேன்.

நடராஜா சிலையை உற்று
பார்த்துகொண்டிருந்த எனக்கு அந்த சிலையின்
அர்த்தத்தையும் தெரிந்து கொள்ள
ஆசைப்பட்டேன். தாத்தா மிகவும் அழகாக
விளக்கம் சொல்வதால் அவர்களிடம் நான்
எதுவும் பயப்படாமல் கேட்டுதேரிந்துகொள்ள

மிகவும் ஆசைப்பட்டேன்.தாத்தா
கண்விழிக்கும்வரை பொறுமையாக
காத்திருந்தேன்.

தாத்தா கண்விழித்ததும்."தாத்தா நடராஜா சாமி
ஏன் நடனம் ஆடுவதுபோல நின்றுகொண்டு
யாரையோ காலடியில் போட்டு
மிதித்துகொண்டிருக்கிறார்?சாமி ஏன் மனுஷனை
மித்தித்து துன்புறுத்துகிறார்?"என்று கேட்டேன்.
உடனே தாத்தா எங்கள் நால்வரையும்
அங்குள்ள பிரகாரத்திற்கு தனியாக
அழைத்துசென்று ஒரு தனியான இடத்தில்
படிகாட்டில் உட்கார சொல்லிவிட்டு "இப்போது
உங்க நாலு பேருக்கும் இந்த சிதம்பரத்தை பற்றி
கதை சொல்ல போகிறேன்.நீங்க நாலு பெரும்
சாதாரண ஊரில் பிறக்கவில்லை ,நீங்க ஏழு
பேருமே பூலோக கைலாசத்தில் பிறது
புண்ணியம் செய்தவர்கள்.சிதம்பரத்தை பூலோக
கைலாசம் என்று சொல்வார்கள். ஏன் என்பதை
இப்போது உங்கள் நாலு பேருக்கும் நான்
நீங்கள் பிறந்த ஊரை எப்படி பட்ட புனித
ஸ்தலம் என்பதை சொல்லபோகிறேன்."என்று

சிதம்பரத்தை பற்றி கதை சொல்ல ஆரம்பித்தார்கள்.

“நாம ஊர் சிதம்பரத்திற்கு,சிதம்பரம் என்ற பெயர் வைப்பதர்க்குமுன்,ஆதிகாலத்தில் இந்த தில்லை நடராஜர் கோவிலும்,இந்த ஊரும் இருந்த இடத்தில் அடர்ந்த காடாக இருந்தது.அந்த காடு முழுதும் தில்லை என்ற மரங்கள் இருந்தன.அந்த தில்லை மரத்தின் இலையின் பெயர் வில்வ இல்லை.ஒரு வில்வ இலையில் மூன்று பாகமாக பிரிந்திருக்கும்.இந்த தில்லை மரங்கள் அதிக தண்ணீர் பசையுள்ள இடத்தில்தான் வளரும்.தில்லை மரங்கள் இருக்கும் இடத்தில் பொதுவாக நிறைய உயிர்வாழ் இனங்கள் வாழ்ந்துவரும்.மேலும் தில்லை மரங்கள் இருக்கும் இடத்தில் வெள்ளம் ஏற்படாது.தில்லை மரங்கள் நிறைந்த அடர்ந்த காடுகளாக இந்த் இடம் இருந்ததால் இதற்க்கு தில்லை வனம் என்று முற்காலத்தில் அழைத்துவந்தார்கள்.வெகு காலத்திற்கு முன்னே இந்த தில்லை வனத்தின் நடுவே ஓர் தாமரி குளம் இருந்ததாம்.அந்த குளத்தின் தெற்கு பகுதியும் சுயம்பு லயங்கள்

ஒன்று காணப்பட்டதாம்.சுயம்பு என்றால் சுயமாக என்று பொருள்.இந்த லிங்கம் மனிதனால் செய்யப்பட்டது இல்லை.தானாகவே அங்கு உருவாகி இருந்ததால் ,அந்த லிங்கல்த்திர்க்கு சுயம்பு லிங்கம் என்று பெயர் வந்ததது."

"இந்த தில்லைகாட்டின் நடுவே இருந்த குளத்தருகே இருந்த சுயம்பு லிங்கத்தை தரிசிக்க வ்யக்ரபதா ,(புலிகால் முனிவர்)என்ற முனிவரும்,பதஞ்சலி என்ற முனிவரும் வந்தார்களாம்.இவர்கள் இருவரும் ஒன்றாக வரவில்லையாம்.வெவ்வேறு திசையிலிருந்து வந்தார்களாம்.பதஞ்சலி முனிவர் யார் என்றால் விஷ்ணு கடவுளுக்கு படுக்கையாக இருந்த பத்துதலை பாம்பு,நடராஜர் பெருமானின் ஆனத்த தாண்டவத்தை தரிசிக்க வேண்டி ஆவல் கொண்டதால் கடவுள் அந்த சற்பத்தை பதஞ்சலி முனிவராக பூலோகத்திற்கு அனுப்பினாராம்.அந்த பதஞ்சலி முனிவர் இமயமலையில் தவம் புரிந்து ,அங்கிருந்த வ்யக்ரபதா என்ற புலிகால் முனிவருடன் தில்லை அம்பலத்திலுள்ள

சுயம்புலிங்கத்தை வணங்கி சுவ பெருமானின் ஆனந்த தாண்டவத்தை தரிச்க்கும் பொருட்டு வந்தார்களாம் என ஒரு கதை உண்டு .”

(.அந்த புலிகால் புனிவாருக்கு புலிகளை போல காலும்,புலிகளை போல கண்களும் இருக்குமாம்.ஏன் என்றால் அவரது புலி கால்களை கொண்டு மரங்களின் மேலே வேகமாக ஏறி ,தேனீக்களும்,வண்டுகளும் பூக்களைமுகறுமுன் அந்த புலை கால் முனிவர் பூக்கள் அனைத்தையும் பறித்துவந்து சிவபெருமானுக்கும் பூஜை செய்தது அர்ப்பணித்து வந்தாராம்.”)

“மேலும் இந்த தில்லை வனத்தில் பல முனிவர்களும்,ரிஷிகளும் வசித்துவந்தார்கலாம்,அப்போது தங்கள் தவத்தாலும்,மந்திர சக்தியாலும்,தந்திர சக்தியாலும் கடவுளையே தன வசம் அடக்கிவிடலாம் என இருமாந்த்திருந்தார்களாம் .இதை அறிந்த சிவபெருமான் அவர்களுக்கு பாடம் கற்ப்பிக்கும் பொருட்டு,தில்லைவனத்தில்

பரதேசிபோல
திரிந்துகொண்டிருந்தாரம்.அவருடன் விஷ்ணு
கடவுளும் அழகிய பெண் உருவத்தில் சென்று
கொண்டிருந்தாராம்.தில்லைவனத்தில்
வாழ்ந்துவந்த முனிவர்களின் துணைவியார்கள்
அனைவரும் அந்த பரதேசிபோல திரிந்து
கொண்டிருந்த சிவபெருமானின் அழகும்,அறிவும்
மிகவும் காவற்று இழுத்ததாம்.இதனால்
கோபமுட்ட்ற முனிவர்கள் அந்த பரதேசியை
பயமுறுத்தும் வகையில் பாம்பு கூட்டத்தை
ஏவினார்கலாம்.ஆனால் சிவபெருமான் அந்த
பாம்புகளை எடுத்து தன உடலின் மீது
அணிகலன்களாக கழுத்திலும்,மார்பிலும்
அணிந்த்து கொண்டதை கண்டு மீண்டும்
,கோபபுற்ற முனிவர்கள் மறுபடியும் புலிகளை
ஏவினார்கலாம்.ஆனால் சிவபெருமான்
மறுபடியும் அந்த புலிகளின் தொலை எடுத்து
ஆடையாக அணிந்துகொண்டாராம்.பிறகு
செய்வதறியாத முனிவர்கள் ,உருவில்
மிகப்பெரிய ,கொடூரமான அரக்கனை ஏவி அந்த
பரதேசியான சிவபெருமான பயமுறுத்தவே

,சிவபெருமான் அந்த கொடிய அரக்கனை தன் காலடியில் போட்டு மித்துகொண்டு ,ஆனந்த தாண்டவத்தை அடி,அந்த ரிஷிகளுக்கும் தன் உண்மை உருவில் காட்சியளித்து ,அவர் மந்திர,தந்திரங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர் என்பதை அவர்களுக்கு உணரவைத்தால்,தங்கள் பிழைகளை முனிவர்கள் நினைத்து ஆணவத்தை விட்டு வெட்கி தலைகுனித்து சிவா பெருமானின் காலடியில் வீழ்ந்து வணங்கி சரணாகதி அடைந்ததாக சொல்லப்படுகிறது".

"சிதம்பரம் என்ற பெயருக்கு அர்த்தம் என்ன தெரியுமா?சித் என்றால் சமஸ்க்ரிதத்தில் அறிவுபூர்வமாக உணருதல் என்பதாகும்.அம்பாரம் என்றால் சமஸ்க்ரிதத்தில் ஆகாயம் என்று பொருள். அதே தமிழில் அம்பலம் என்றால் மேடை,சபை என்று பொருள்.சித்து என்றால் கடவுளின் நாடகம் அல்லது நடனம் எற்று தமிழில் பொருளாகும்.இதை எல்லாவற்றையும் சேர்த்து இந்த ஊருக்கு சிதம்பரம் என பெயர் வந்தது.இந்த ஊர் பூலோக கைலாசம் என அழைக்கபடுவதால் இதற்க்கு சமஸ்க்ரிதத்தில் சித்

அம்பாரம் ,அதாவது ஆரம்பம்,முடிவும் இல்லாத இந்த ஆகாயத்தை மனக்கண் திறந்து பார்த்து அறிவுபூர்வமாக உண்மையை அறிந்துனர்தல் என்று பொருளும், தமிழில் சித்து என்பதால் கடவுளின் நடனம் என்றும், அம்பலம் என்பது மேடை,சபை என்பதால்,சிவபெருமான் ஆனந்த தாண்டவம் ஆடிய மேடை,சபை என்று பொருள் படுகிறது.”

“சிதம்பரம் இவ்வுலகத்தின் மைய இடத்தில் இருப்பதால் ,இதை சமஸ்க்ரிதத்தில் விரத் ஹிருதய பத்மஸ்தலம் என்று சொல்வதுண்டு.இங்கிருந்துதான் சிவபெருமான் தன ஆனந்த நடனத்தை நடத்தி வருகிறார் என்பதால் இந்த இடத்தை பொன் அமபலமா என்றும்,இந்த ஆகாயத்தைபோல ஆரம்பம் எது,முடிவு எது என அறியமால் இருக்கும் மக்களின் அறிவு கண்ணை திறந்து பார்த்து அதன் பொருளை அறியும்பொருட்டு அவர்களின் அறியாமையை நீக்கி உண்மையான ,உருவமில்லாத கடவுளை காண வைக்கும் புண்ணியதலமாக பூகாக கைலாசமாக இருக்கும்

இவ்விடத்தை சிற்றம்பலம் என்றும்
சொல்லுவதும் உண்டு."

"இந்த நடராஜர் கோவிலிலுள்ள
சிவபெருமானை கூத்தன் அன்றும்
அழைப்பார்கள்.ஏன் என்றால் ஒரு மேடை
நாடகத்திற்கு தேவையான கதாபாத்திரங்களை
ஏற்படுத்தி,காலம்பூர்ரவும் ஒவ்வொரு வினாடியும்
தன கூத்தை பிழையில்லாமல் நடனம்
ஆடுவதுபோல நளினமாக அனைவரும்
ரசிக்கும்படி திறம்பட நடத்தி கொண்டு
போவதால் நாம் அவரை கூத்தன் என்றும்
சொல்லுகிறோம்.கூத்தன் என்றால் நாடகத்தின்
கதாநாயகன் என்று பொருள்."

"இந்த சிதம்பரத்தில் பதஞ்சலி முனிவர் மற்றும்
புலிகள் முனிவர்களின் வருகையாலும்,திருமூலர்
என்பவர் பாடிய திருமந்திரத்தாலும்,தேவாரம்
பாடிய நாயனார் மற்றும்
திருநாவுக்கரசு,திருக்ஞானசம்பத்தர்,மற்றும்

சுந்தரரால்லும், திருவாசகம் பாடிய சேக்கிழாரால்லும் மிகவும் புண்ணியதலமாக விளங்குகிறது. இதற்க்கு 275 பாடல்கள் பெற்ற தலம் (சிவதலம்)என்றும் பெயர் உண்டு.இதோ இங்கிருக்கிறதே இந்த் ஆயிரங்கால் மண்டபத்தில்தான் அறுபத்துமுவருள் ஒருவரான சேக்கிழார் என்பவர் இரண்டாவது குலோத்துங்க சோழ மன்னரின் காலத்தில் பெரியபுராணம் என்ற நூலை இயற்றினார். “இந்த சிதம்பரம் கோவில் சுமார் நாற்ப்பது ஏக்கர் இடத்தை கொண்டது.இந்த கோவில் முற்காலத்தில் பெரும்தகன் என்பவர் திட்டமிட்டு கட்டியுள்ளதாக சரித்திரம் உண்டு..இந்த கோவிலில் ஐந்து பிரகாரங்கள் உண்டு.ஒவ்வொரு பிரகாரமும் ஒண்டுக்குள் ஒன்றாக கட்டபட்டிருக்கிறது.ஒவ்வொரு பிரகாரத்திருக்கு தனித்தனியாக மதில்கள் எழுப்பபட்டு ,உள்ப்ரகாரங்கள் நான்கும் மேலே மூடப்பட்டிருக்கும்.வெளியே உள்ள பிரகாரம் மட்டும் திறந்த வெளியாக ஆகாயத்தை பார்த்தவண்ணம் இருக்கிறது.இந்த ஐந்து

பிரகாரமும் நம் உடலை குறிப்பதுபோல இருக்கிறது. திறந்த வெளி பிரகாரம் நம் உடலின் மேற்புறம்.மூடப்பட்ட இரண்டாவது பிரகாரம் நம் உடலிற்குள் இருக்கும் தசை பகுதிகளை குறிக்கும்.மூன்றாவது பிரகாரம் நம் உடலிலுள்ள எலும்புகளை குறிக்கும்.இரண்டாவது பிரகாரம் நம் உடலிலுள்ள மற்ற உறுப்புகளை குறிக்கும்,கோவிலுக்கு நடுவே,உள் பிரகாரம்,முதல் பிரகாரமுமாகிய மேலே தங்க கூரை போட்ட பிரகாரம்தான்மனிதனின் ஆன்மா எனவும் கூறலாம். இப்பூமியின் மைய இடம் எனவும் கூறுகிறார்கள்.நம் வீட்டில் இருக்கும் உலக மாப் உள்ள உருண்டையை பார்த்தால் தெரியும் அதில் குறுக்குக் நெடுக்குமாக கோடுகள் வரையபட்டிருக்கும் அவைகள் பூமியின் லாஞ்சிடியுட் லடிடியுட் என்று சொல்லுவார்கள் அதில் பார்த்தால் நாம் ஊர் சிதம்பரம் இந்த பூமியின் மையத்தில் சரியாக அமைந்திருக்கிறது என சொல்லபடுகிறது.இதைதான் சம்ஸ்க்கிருதத்தில் விரத் ஹிருதய பதம் ஸ்தலம்

என்று சொல்லுவார்கள்.ஆங்கிலத்தில் லோட்டஸ் ஹார்ட் ஆப் த யுனிவெர்ஸ் என்றும் சொல்லுவார்கள்".

"முடப்பட்ட உள் பிரகாரத்தில்தான் மேலே தங்கத்தால் முடபட்டிருக்கிறது.பார்த்தீர்கள் இல்லையா?இந்த தங்க கொபுரத்தால் முடப்பட்ட பிரகாரத்திருக்குள் கடவுள் முன்று வகையான தோற்றமுடன் விளங்குகிறார்.

* நடராஜர் சாமி நடன தோற்றத்தில் முழுமையான உருவில் சகலகலா திருமேனியாக காட்சியளிக்கிறார்.

* பாதி தோற்றமாக லிங்க-வடிவமாக தோற்றமளிக்கிறார்.

* வெறும் காலி இடமான ,ஆகாயமாக சிதம்பர ரகசியம் ஆகவும் இருக்கிறர் ,

இந்த முன்று வகையாக தொட்ட்ரமளிக்கும் சிவபெருமான் இருக்கும் இந்த தங்க கூரை போட்ட இடம்தான் இப்பூமியின் மைய இடம்

என கூறப்படுகிறது. “இந்த சிதம்பரம் கோவிலில், நம் உயிரினங்களுக்கு உடலில் ஒன்பது ஓட்டைகள் இருப்பது போல ,ஒன்பது நுழைவாயில்கள் இருக்கிறது.அதேபோல இங்கு ஐந்து சபைகள் உள்ளது.1.சித்சபை,2.பொற்சபை 3.நிர்த்யசபை 4.ராஜ சபை.5.தேவ சபை .

“முதலாவதாக ,நடராஜா சாமியும்,அவரது துணைவியார் சிவகாமசுந்தரி அம்மையாரும் இருக்கும் ஹால்தான் சித்சபை அல்லது சித்-அம்பலம் .இதனால்தான் நம் ஊருக்கு சிதம்பரம் என்று பெயர் வந்தது .

இரண்டாவதாக சித்அம்பலத்திற்கு முன்னே இருக்கும் பொன்அம்பலம் அல்லது கனகசபைதான் தினமும் நாம் எல்லோரும் தன்றிசனம் செய்து வருகிறோம்.இதில்தான் நடராஜர் நடனம் ஆடுவதுபோல காட்சியளிக்கும் இடமாக இருக்கிறது.

முன்றாவதாக ந்ருத்ய சபை அல்லது நாட்டிய சபை.இதில்தான் நடராஜா சாமிக்கும்,அவரது

துணைவியார் பார்வதி அம்மையாருக்கும் யார் சிறந்தவர்கள் என்ற போட்டியில்,நடராஜர் சாமி காலை தலைக்குமேல் தூக்கி ஆடியதும்,பார்வதி அம்மையார் அப்படி ஆட முடியாமல் நின்று நடராஜா சாமியே உயர்ந்தவர் என தன தோல்வியை ஒப்பு கொண்டு, அவருடன் போட்டியிட்டதற்காக வெட்கி தலை குனிந்து நின்றதால் இதற்க்கு ந்ருத்தியசபை என்றும் பெயர்.

“ஏன் தாத்தா பார்வதி சாமியும் காலை தூக்கி ஆட வேண்டியது தானே ,அதற்க்கு ஏன் வெட்கி தலை குனிய வேண்டும்?”என்று நான் கேட்டேன்.

“உனக்கு முன்பே சொல்லி இருக்கிறே இல்லையா?பெண்களும்,ஆண்களும் ஒருவருக்கொருவர் போட்டியிடாமல் அவரவர் வேலைகளை செய்யவேண்டும் என்று. நம் இந்திய பண்பாட்டில் பெண்கள் பொது இடங்களில் சிலவற்றை செய்ய முடியாது.அதாவது பொது இடங்களில்

பெண்கள் காலை தூக்கி தலைக்குமேல் வைத்து ஆடுவது என்பது பெண்களுக்கு இழுக்கை தரும் .இந்திய பண்பாட்டின்படி பெண்களாய் பிறந்தவர்கள் அடக்கத்துடனும்,பவ்யமாகவும்,நளினமாகவும் இருப்பதுதான் அழகைத்தரும்.ஆனால் ஆண்கள் பொது இடங்களில் காலை தூக்கி தலைக்குமேல் வைத்து ஆடினால் பார்க்க அவ்வளவு விகாரமாக தெரியாது.இந்த உண்மையை மக்களுக்கு உணர்த்தவே கடவுள் இப்படி ஒரு நாடகத்தை நடத்தி இருக்கிறார்.இப்போது புரிகிறதா? "என தாத்தா கூறியது கேட்டு என் மனமும் அது மிகவும் சரியே என உணர்ந்தது.

"அடுத்து வருவது ராஜ சபை அல்லது ஆயிரம் கால் மண்டபம்.இந்த் ஆயிரம் கால் மண்டபம் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை பூவை குறிக்கும்.இந்த் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மண்டபத்தின் நடுவே உட்கார்ந்து நம் புலன்களை அடக்கி தவம் செய்தால் மோட்ச்சத்தை அடையலாம்,இந்த ஆயிரம் கால் மண்டபத்தில்தான் அறுபத்துமுவரூள் ஒருவரான

சேக்கிழார் என்பவர் பெரியபுராணத்தை இயற்றினார் என்று முன்பே சொல்லி இருக்கிறேன் இல்லையா.”

“மூன்றாவதாக தேவசபை என்பது. பஞ்ச மூர்த்திகள் வீடுகளாகிய விநாகர்,சோமகண்டர் (சிவன்,பார்வதி,முருகர்,விநாயகர்)சிவானந்த நாயகி,முருகர்,மற்றும் சண்டிகேஸ்வரர் இருக்கும் பிரகாரம்.”

நான்காவதாக பொன்னம்பல சபைக்கு முனால் ஐந்து படிகள் காண்பித்தேன் இல்லையா?அவற்றிற்கு பஞ்சாட்ச்சர படிகள் என்று பெயர். பஞ்ச என்றால் ஐந்து ,ஆட்ச்ச்சரம் என்றால் அழிக்கமுடியாத வார்த்தைகளாகிய சி வா ய ந ம .இந்த சித் சபையின் மேலே கூறித்தான் நான்கு தூங்கலை கொண்டு கட்டபட்டிருக்கிறது.இந்த நான்கு தூண்களும் நான்கு வேதத்தை குறிக்கிறது, ரிக் வேதம்,சாம வேதம்,அதர்வண வேதம்,யஜுர் வேதம்.பொன் அம்பலத்தின் பிரகாரம் 28 அகமத்தை குறிக்கிறது.(மிதாலேஜி) இந்த 28

ஆகமங்களும் என்னென்ன்வேன்றால்,
காமிகம்,யோகா ரஜம்,சிந்த்யம்,கரணம்,அஜிதம்
,தீப்தம்,சூக்ஷமம்
,சகஸ்ரம்,அஹீமன்,சுப்ரபாதம்,விஜயம்,நிஷ்வாசம்,சு
மகுடம்,விமலம்,சந்த்ரஞானம்,பிம்பம்,ப்ரோகிதம்,லலி
.இந்த 28 அகமத்தையும் நான்கு வகையாக
படிக்கலாம்.அவைகள்
கல்பா,கலாமுகா,பஹீப்தா,மற்றும் சைவம்.அகமா
என்பதற்கு பொருள் சிவனிலிருந்து
தேவிக்கும,தேவியிலிருந்து
நந்திக்கும்,நந்தியிளிருந்து
பிரம்மாவிற்கும்,ப்ரம்மாவிலிருந்து
ரிஷிக்கும்,ரிஷியிலிருந்து மனித பிறப்பிற்கும்
,என்பதாகும். இந்த் தங்க கூரையை 64
கட்டைகளால் தாங்கப்பட்டுள்ளது.64
கட்டைகளும்,64 வகையான கலைகளை
குறிக்கிறது.இந்த 64 கட்டைகளையும் பல
குறுக்கு கட்டைகளால் தாங்கி கட்டப்பட்டுள்ளது
.இந்த குறுக்கு கட்டைகள் அனைத்தும்
உயிரினகளிலுள்ள குறுக்கும் நெடுக்குமாக
செல்லும் இரத்த குழாய்களை குறிக்கிறது.மேலும்

இந்த தங்க கூரை 21,600 தங்க தகடுகளை கொண்டுள்ளது.21,600 தங்க தகடுகளும் நாம் தினமும் சுமார் 21,600 முறை மூர்ச்சை இழுத்து சுவாசிப்பதை குறிக்கிறது.இந்த தங்க தகடுகளை கூரையில் பொறுத்த 72,000 ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளது.இந்த 72,000 ஆணிகளும் நம் உடம்பிலுள்ள 72,000 நாடிகளை குறிப்பதாகும். (நரம்புகள்)இந்த தங்க கூரையின் மீதுள்ள இந்த ஒன்பது கலசங்களும் ஒன்பது சக்தியை குறிக்கிறது. அந்த ஒன்பது சக்திகள் யார் யார் தெரியமா?1.சூரியன்.2.சந்திரன்.3.செவ்வாய்.4.புதன்.
6.கேது.7.சனி.8.சுக்கிரன்.9.ராகு.என்பவர்கள்.இந்த ஒன்பது சக்திகளும் ஒன்பது திசையை பார்த்துகொண்டிருக்கிறார்கள். இவர்களை தான் நாம் இந்த கோவிலுக்கு வரும் சாயம் எல்லாம் ஒன்பது முறை சுற்றி வது வணகுகிறோம்இங்குள்ள அர்த்தமனடபத்தில் ஆறு தூண்கள் இருக்கிறது இல்லையா?இவை ஆறும் ஆறு சாஸ்திரத்தை குறிக்கிறதுஆறு சாஸ்திரங்களாகிய 1.சானக்கியசாஸ்த்ரம் (கணக்கு)-கபிலமுனிவர் இயற்றியது.2.யோகா

சாஸ்திரம் -பதஞ்சலி முனிவர்
இயற்றியது.3.நியாய சாஸ்திரம் -கௌதம
முனிவர் இயற்றியது.4.வைஷேஷிக்
சாஸ்திரம்-கனக முனிவர்
இயற்றியது.5.பூர்வமிமன்சா -ஜைமஈ முனிவர்
இயற்றியது.6.உத்தர் மிமன்சா -பாத்ராயன்
வியாச முனிவர் இயற்றியது..அர்த்த
மண்டபத்திற்கு அடுத்து இருக்கிறது பாரு ,இந்த
ஹாலில் 18 தூண்கள் இருக்கிறது
பார்த்தீர்களா ,இந்த 18 தூண்களும் 18
புராணகளை குறிக்கிறது1.பிரம்ம புராணம்,2.பத்ம
புறாணம்.3.விஷ்ணு புராணம்.4.சிவா
புராணம்.5.வமன புராணம்.6.மார்கண்டேய
புராணம்.7.வராக புராணம்.8.அக்னி
புராணம்.9.கர்ம புராணம்.10.பகவத் மகா
புராணம்.11.லிங்க புராணம்.12.நாரத
புராணம்,13.ஸ்கந்த புராணம்.14.கருட
புராணம்,15,மத்சய புராணம்.16.வாயு
புராணம்.17.பவிஷ்ய புராணம்.18.பிரம்மாண்ட
புராணம்.இந்த 18 புராணங்களையும் இந்த
ஒவ்வொரு தூணும் நினைவுபடுத்திவருகிறது..

“இந்த கோவிலில் நான்கு கோபுரங்கள் இருக்கிறது இல்லையா இவைகள் நான்கும் நான்கு திசைகளை குறுக்கிறது.ஒவ்வொரு கோபுரமும் ஏழு அடுக்குகள் கொண்டது.ஒவ்வொரு அடுக்கிலும் நுழைவாசல்கள் இருக்கிறது.இந்த் ஏழு அடுக்குகளும் உயிரினங்களின் ஏழு ஜென்மத்தை குறிக்கும் சின்னமாகும்.”

“நடராஜா பெருமானின் நாட்டிய சிலையின் சின்னம் எதை குறிக்கிறது தெரியும்மா?

*முதலாவதாக நடராஜரின் காலடியில் இருக்கும் அரக்கனை-கடவுள் உயிரினங்களின் அறியாமையையும்,,கொடிய தன்மைகளையும் உள்ளவர்களை தன காலடியில் போட்டு மித்தித்து கொண்டு,

*உலகில் பிறந்ததற்கான தத்துவத்தையும்,உண்மையையும், புரிந்து நல்லபடியாக வாழ்ந்து,நல்லவற்றை செய்து உயினகளை மொடச்சத்தை அடைய

விமோசனம் கொடுக்கும் விளக்கமாக அவர் தூக்கி நிறுத்திய காலை (லெப்ட் லெக்)குறிக்கிறது.இதை ஆங்கிலத்தில் லிபரேஷன் என்று சொல்லுவார்கள்.

*நெருப்பு வைத்திருக்கு கை (பவர் ஆப் டிஷ்ராகூஷன்)-அவர் தீயவைகளையும்,கொடியவைகளையும் அழிக்கும் சின்னமாகவும்,

*தூக்கி நிறுத்தியபடி இருக்கும் கையை-யாமிருக்க பயமேன்-எல்லா உயிர்களையும் ரட்சிப்பதர்க்கான சின்னமாகவும்,

*அவரை சுற்றி இருக்கும் நெருப்பு வளையம் -இதற்க்கு பெயர் திரு வாஷி,பிரபாவதி என்பதாகும்.அப்படீனா இந்த உலகை சற்றும் பிழையின்றி,கனகச்சிதமாகவும்,சீராகவும் நடத்திவருவதன் அர்த்தமாகும்.நெருப்பு சீராக எரிந்துகொண்டு சுற்றி வருகிறது.அது சற்றே குறைந்தாலும் அதிகமானாலும் உயினகளுக்கு ஆபத்தே.(சூரிய ஒளி)

*அவர் கையிலுள்ள உடுக்கை-உயிரினகளின் இதய துடிப்பை குறிக்கும் சின்னமாக இருக்கிறது.

*தாமரை இதழ்கள் இந்த உலகையும்,இவ்வுலகத்தில் “ஓம் ” என்ற சத்தத்தையும் குறிக்கிறது.

*நடராஜரின் முன்று கண்களும்,இடது,மற்றும் வலது மற்றும் நேற்றியிலுள்ளவைகள்-இவைகள் சூரியன்,சந்திரன்,அறிவு/நெருப்பை குறிக்கிறது.

*அவரது காதுகளிலுள்ள குண்டலம் ரைட் காது குண்டலம் (மகர குண்டலம்)லெப்ட் காதில் உள்ள குண்டலம் (ஸ்ரீகுண்டலம்)மகரகுண்டலம் ஆணையும்,ஸ்ரீகுண்டலம் பெண்ணையும் குரிக்கிரகுற்று.(யூனியன் ஆப் மென் அண்ட் உமன்) *அவரது தலையில் இருக்கும் பிறை அழகையும்,மிடுக்கையும் குறிக்கிறது.

* தலையிலிருந்து விழும் கங்கா-உயிரினகளின் வாழ்க்கை முடிவில்லாதது என்பதை குறிக்கிறது.

*அவருடைய பரட்டை தலயும்,ஆடைகளும் அவர் படைப்பின் சக்தியை குறிக்கிறது.

" நம்ம ஊர் சிதம்பரத்திற்கு ,சிதம்பரம் என்ற பெயர் வைப்பதற்கு முன் ,ஆதிகாலத்தில் இந்த தில்லை நடராஜர் கோவிலும் ,இந்த ஊரும் இருந்த இடத்தில் அடர்ந்த காடாக இருந்தது.அந்த காடு முழுதும் தில்லை என்ற மரங்கள் இருந்தது.அந்த தில்லை மரங்களின் இலையின் பெயர் வில்வ இல்லை. இந்த மரங்கள் அதிக தண்ணீர் பசையுள்ள இடத்தில்தான் வளரும்.இந்த மரங்கள் இருக்கும் இடத்தில் வெள்ளம் ஏற்படாது.வெள்ளம் வராமல் இந்த மரங்கள தடுத்துவிடும்.இந்த தில்லை மரங்கள் அடர்ந்த காடுகள் இந்த ஊரில் இருந்ததால் முற்காலத்தில் இந்த இடத்தை தில்லை என்ற பெயருடன் விளங்கியது. இந்த தில்லை வனத்தின் நடுவே ஒரு தாமரை குளம் இருந்ததாம்.அந்த தாமரை குளத்தின் தெற்கு பகுதியில் சுயம்பு லிங்கம் ஒன்று தென்பட்டதாம்.இந்த லிங்கம் மனிதனால செய்யப்படாமல் தானாகவே உருவாகி

இருந்ததால் அதற்க்கு சுயம்பு லிங்கம் என்ற பெயர் வைக்கப்பட்டதாக ஒரு கதை உண்டு.

" சுயம்ம்புன்ன என்ன தாத்தா?" என்று கேட்டேன்.

"சுயம்புன்ன சுயமாக .தானாக தோன்றியது என்று அர்த்தம்" என்று கூறிவிட்டி கதை தொடர்ந்தார்கள் தாத்தா.

இந்த தில்லை காட்டின் நடுவே இருந்த தாமரை குளத்திற்கு வியக்ரபதா (புலிகால் முனிவர்) மற்றும் பதஞ்சலி என்ற இரு முனிவர்களும் வந்தார்களாம்.இவர்கள் இருவரும் ஒன்றாக வரவில்லை. வெவ்வேறு இடங்களிலிருந்து இந்த தில்லை வனத்திற்கு சிவபெருமானை தரிசிக்கும் நோக்கத்துடன் வந்தார்களாம்.இதற்க்குள்ளேயும் ஒரு கதை உண்டு.அதாவது விஷ்ணு பகவான் படுக்கையாக இருந்த பத்துதலை பாம்பு ஒரு நாள் விஷ்ணு

பகவான் மிகவும் ஆனந்தமாக இருப்பத கண்டும், அவர் தன மீது படுத்திருக்கும் பொது வழக்கத்திற்கு மாறாக மிக கனத்து இருப்பதை உணர்ந்த அந்த பத்து தலை பாம்பான

ஆதிஷேஷ்யன் விஷ்ணு பகவானிடம் அதற்க்கான காரணத்தை கேட்டதற்கு, விஷ்ணு பகவான் தான் அன்று சிவபெருமானின் ஆனந்த தாண்டவத்தை கண்டு களித்த பாக்கியத்தை கூறியதும் ,ஆதிஷேஷ்யனுக்கு தானும் சிவபெருமானின் ஆனந்த தாண்டவத்தை தரிசிக்க ஆவல் ஏற்பட்டது.தன ஆர்வத்தை சிவபெருமானிடம் தெரிவித்ததில் ,சிவபெருமான் ஆதிஷேஷயனை பதஞ்சலி என்ற பேருடைய முனிவராக பூலோகத்திற்கு அனுப்பினார்.அந்த பதஞ்சலி முனிவர் இமயமலையில் தவம் புரிந்து,அங்கிருந்த வியாக்ரபாதர் (புலிகால் முனிவர்)என்ற முனிவருடன்(புலிகால் முனிவருக்கு ,புலிகளை போல கால்களும்,கண்களும் இருக்குமாம்.ஏன் என்றால் அவரது புளிகால்களைக் கொண்டு மரங்களின் மேலே ஏறி தேனீக்களும்,வண்டுகளும் பூக்களை

மொய்ப்பதற்க்கு முன் ,அந்த புலிகால் முனிவர் பூக்களை பறித்து வந்து கடவுளுக்கு சமர்ப்பித்து பூஜை செய்வாராம்)தில்லை அம்மபலத்திர்க்கு காட்டின் நடுவே உள்ள சுயம்புலிங்கத்தை வணங்கி ,சிவபெருமானின் ஆனந்த தாண்டவத்தை தரிசிக்க வந்ததாக ஒரு கதை உண்டு".

மேலும் இந்த தில்லைவனத்தில் பல முனிவர்களும்,ரிஷிகளும் வசித்து வந்தனராம்.அப்போது தங்கள் தவத்தாலும், மந்திரத்தாலும் கடவுளை தன வசம் அடக்கி விடலாம் என இறுமாப்புடன் இருந்தார்களாம்.இதை அறிந்த சிவபெருமான் அவர்களுக்கு பாடம் கற்பிக்கும் பொருட்டு தில்லைவனத்தில் பரதேசிபோல திரிந்து கொண்டிருந்தாராம்.அவருடன் விஷ்ணு பகவானும் மோகினி என்ற பெண் உருவில் சென்று கொண்டிருந்தாராம்.தில்லை வனத்திலிருந்த ரிஷிகளின் மற்றும் முனிவர்களின் மனைவிகள் அனைவரையும் அந்த பரதேசிபோல திரிந்து கொண்டிருந்த சிவபெருமானின் அழகும்

அறிவிவும் மிகவும் கவர்ந்ததாம். இதனால் பொறாமையும்,கோபமும் உற்ற ரிஷிகள் அந்த பரதேசியை பயமுறுத்த பாம்பு கூட்டத்தை அனுப்பினார்களாம்.பரதேசியான சிவபெருமான் அந்த பாம்புகளை எடுத்து அணிகலன்களாக கழுத்திலும், மார்பிலும் அணிந்து கொண்டதும்,அந்த ரிஷிகள் மறுபடியும் புலிகளை அனுப்பி பயமுறுத்துவே, சிவபெருமான் புலிகளை கொன்று புலித்தோலை ஆடையாக அணிந்து கொண்டாரராம் செய்வதறியாத ரிஷிகள் பிறகு மிக பெரிய அரக்கனான முயலகனை அனுப்பி பரதேசியான சிவனை பயமுறுத்துவே அந்த பெரிய அரக்கனை காலடியில் போட்டு மிதித்துக்கொண்டு ஆனந்த தாண்டவத்தை ஆடி அந்த ரிஷிகளுக்கு தன சுய உருவில் தோற்றமளித்தது கண்டு ,கடவுள் என்பவர் உண்மையானவர்,அவர் மந்திர,தந்திரங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்பதை உணர்ந்து அனைத்து ரிஷிகளும் ஆணவத்தை விட்டு சிவபெருமானின் காலடியில் தன்னை அர்பணித்து வணங்கியதாக ஒரு

கதையும் உண்டு" என் தாத்தா சொல்லிவிட்டு மீண்டும் தொடர்ந்தார்கள்.

சிதம்பரம் என்பதற்கு பொருள் என்ன தெரியுமா?"சித் " என்றால் சமஸ்க்ரிதத்தில் அறிவு பூர்வமான உணருதல் என்றும், "அம்பலம்" என்றால் தமிழில் மேடை,சபை, என்றும் ஆகும்.அம்பாரம் என்றால் சமஸ்க்ரிதத்தில் ஆகாயம் என்றும் பொருள்."சித்து" என்றால் கடவுளின் நாடகம் அல்லது நடனம் என்றும் பொருள்.இது எல்லாவற்றியும் சேர்த்து இந்த ஊருக்கு சிதம்பரம் என பெயர் ஏற்பட்டது.அதாவது ஆகாயத்தில் ஆரம்பம் எது, முடிவு எது என்று தெரியாமலும்,அந்த ஆகாயத்தில் எனென்ன,எங்கெங்கு இருக்கிறது என எதுவும் தெரியாமலும் வெறும் திறந்தவெளியாக இருப்பதை நாம் நம் அறிவு கண் திறந்து பார்த்து ஆராய்ந்து உண்மை அறிய நினைப்பது போல, இந்த சிதம்பரம் ஒரு ஆகாயமாக இருந்து மக்களின் அறிவு கண்ணை திறந்து,அவர்க்கு மோட்ச்சத்தை தரும் புண்ணிய தலமாக இருக்கிறது."

இங்கு தில்லை மரங்கள் அடர்ந்து காடாக இருந்ததால் இதற்க்கு தில்லை வனம் என்றும்,இந்த இடம் இவ்வுலகத்தின் மையத்தில் இருப்பதால்(இதை சமஸ்க்ரிதத்தில் விரத் ஹ்ருதய பத்மஸ்தலம்),இங்கிருந்துதான் சிவபெருமன் தன ஆனந்த நடனத்தை நடத்தி விக்கிறார் என்பதாலும் இதை பொன் அம்பலம் என்றும், மக்களின் றிவு கண்களை திறந்து ,முடிவு எது,ஆரம்பம் எது என்று தெரியாமலிருக்கும் ஆகயத்தத்தில் உண்மையான ,உருவமில்லாத கடவுளை காண வைக்கும் புண்ணிய தலமாக ,பூலோக கைலாசமாக இருக்கும் இவ்விடத்தை சிற்றம்பலம் என்றும் கூறுவார்கள்.”

இந்த நடராஜர் கோவிலில் உள்ள சிவபெருமானை கூத்தன் என்றும் அழைப்பார்கள்.ஏன் என்றால் ஒரு மேடை நாடகத்திற்கு தேவையான அனைத்து கதாபாத்திரங்களையும் சற்றும் பிழையில்லாமல் ஒவ்வொரு வினாடியும்,சரிவர நடத்தி செல்வதாலும், இவ்வுலகிலுள்ள அனைத்து

கதாபாத்திரங்களையும்
ஆட்டிபடைப்பதாலும்,இவரை கூத்தன் என
அழைப்பதுண்டு."

நம்ம ஊர் சிதம்பரம் ,பதஞ்சலி முனிவர் மற்றும்
புலிகால் முனிவர்களின் வருகை தந்தாலும்,
திருமூலர் என்பவர் பாடிய
திருமந்திரத்தாலும்,தேவாரம் பாடிய நாயநார்
மற்றும் திருநாவுக்கரசர்,திருஞானசம்பந்தர்
மற்றும் சுந்தரராலும், திருவாசகம் பாடிய
சேக்கிழாராலும் மகவும் புண்ணியதலமாக
விளங்குகிறது. இதற்க்கு 275 பாடல்கள் பெற்ற
தலம் (சிவஸ்தலம்)என்று பெயர்.இங்குள்ள
ஆயிரங்கால் மண்டபத்தில்தான் 63 பேரில்
ஒருவரான சேக்கிழார் என்பவர் இரண்டாவது
குலோத்துங்க சோழ மன்னன் காலத்தில்
பெரியபுராணத்தை இயற்றினார். "

இந்த கோவில் சும்மார் 40 ஏக்கர் இடத்தை
கொண்டது.இந்த கோவிலை முற்காலத்தில்

திட்டமிட்டு கட்டியவர் பெயர் பெருந்தகன்.இதில் ஐந்து பிரகாரங்கள் இருக்கிறது. ஒவ்வொரு பிரகாரமும் ஒன்றிற்குள் ஒன்றாக அமைந்து , ஒவ்வொரு பிரகாரத்திருக்கும் தனித்தனியாக மதில்கள் எழுப்பப்பட்டு மேலே மூடப்பட்டு இருக்கிறது பார்த்தீர்களா?இந்த ஐந்து பிரகாரத்தில் நான்கு உள் பிரகாரங்கள் மேலே மூடப்பட்டு இருக்கிறது பார்த்தீர்களா? ஒரே ஒரு வெளி பிரகாரம் மட்டும் மேலே மூடாமல் திறந்து இருக்கிறது இல்லையா ? இதற்கும் முக்கிய காரணங்கள் சொல்லப்படுகிறது.

“ஐந்து பிரகாரத்தில் நடுவே உள்ளே உள்ள உள் பிரகாரத்தில் மட்டும் மேலே தங்கத்தால் கூரை கட்டபட்டிருக்கிறது .இந்த தங்க கோபுரத்தால் மேலே மூடப்பட்டுள்ள பிரகாரத்தில் கடவுள் முன்று வகையான் தோற்றமுடன் இருக்கிறார்.

* நடராஜரின் நடன தோற்றம்தான் சகலகலா திருமேனியாக காட்சியளிகிறார் (முழுத்தோற்றம்)

* லிங்க வடிவமாக தோற்றமளிக்கிறார் (பாதி தோற்றம்)

* சிதம்பர-ரகசியமாக (வெறும் காலி இடம்,ஆகாயமாக) தோற்றமளிக்கிறார்.

இந்த மூன்று வகையாக தோற்றமளிக்கும் சிவபெருமான் இருக்கும் இந்த தங்க கூரை போட்ட இடம்தான் இப்பூமியின் மைய இடம் என கூறுகிறார்கள். இதை சமஸ்க்ரிதத்தில் விரத் ஹ்ரிதய பத்ம ஸ்தலம் என்று பெயர். இந்த பூமியில் மாப்பில் பார்த்தால் லாஞ்சிடூட்,லாட்டிடூட், என வரைந்து இருக்கிறது இல்லையா? அதில் பார்த்தால் நம்ம ஊர் சிதம்பரம் சரியாக இந்த பூமியின் மையத்தில் அமைந்திருக்கிறது என்கிறார்கள். எனவே சமஸ்க்ரிதத்தில் இந்த இடத்தை லோட்டஸ் ஹார்ட் ஆப் த யுனிவெர்ஸ் என்று சொல்கிறார்கள்" என்று விளக்கமாக தாத்தா சொல்வதை கேட்டதும் எங்கள் நால்வருக்கும்

அதிசயமாக இருந்தது எங்களால் இதையெல்லாம் நம்பவே முடியவில்லை. இவையெல்லாம் ஒருகால் உண்மையாக இருக்குமா அல்லது எங்களுக்காக தாத்தா சும்மா கதை சொல்கிறார்களா என்று எண்ண தோன்றியது.

தாத்த மீண்டும் தொடர்ந்தார்கள் “இந்த கோவில் மனித உடலில் 9 ஓட்டைகள் இருப்பது போல 9 நுழை வாசல்கள் இருக்கிறது.அதே போல இங்கு ஐந்து சபைகள் உள்ளது. 1. சித்சபை. 2.பொற்சபை 3. நிர்தயசபை 4.ராஜ சபை 5.தேவ சபை.

நடராஜா சாமியும் அவரது துணைவியாருமான சிவகாம சுந்தரியும் இருக்கும் ஹால்தான் சித்சபை அல்லது சித் அம்பலம் .இதனால்தான் நம் ஊருக்கும் சிதம்பரம் என்றும் பெயர் வர மற்றொரு காரணமும் ஆகலாம். 2.பொன் அம்பலம் அல்லது கனகசபை, சித் அம்பலத்தின் முன்னே இருக்கிறது. இதில்தான் தினமும் நாம் எல்லோரும் நடராஜர் பெருமானின் தரிசனம்

பார்த்துவருகிறோம்.நாட்டியம் ஆடுவது போல் நடராஜர் சாமி நிற்கிறாரே அதுதான் பொன் அம்பலம் .3. நிருத்ரய சபை அல்லது நாட்டிய சபை.இதில்தான் நடராஜர் சாமிக்கும் அவரது துணைவியார் பார்வதி என்கின்ற சிவகாமி அம்மையாருக்கும் யார் சிறந்தவர்கள் என்ற போட்டியில் நடராஜர் சாமி தன காலை தலைக்கு மேல் தூக்கி வைத்து ஆடியதும், பார்வதி அம்மையார் சபைக்கு நடுவே காலை தூக்கி தலைமேல் வைத்து ஆடமுடியாமல் நடராஜர் சாமியே உயர்ந்தவர் என தன தோல்வியை ஒப்புக்கொண்டு அவருடன் போட்டியிட்டதற்காக வெட்கி தலைகுனிந்து நின்றதால் இதற்க்கு நிறுத்திய சபை என்ற பெயர் வந்தது" என்றும் தாத்த சொன்னார்கள்.

"ஏன் தாத்தா பார்வதி சாமியும் காலைத்தூக்கி ஆட வேண்டியதுதானே. அதற்க்கு ஏன் வெட்கி தலை குனிய வேண்டும்?" என்று எதுவும் புரியாமல் கேட்டேன்.

"உனக்கு முன்பே சொல்லி இருக்கிறேன்

இல்லையா?பெண்களும் ஆண்களும் ஒருவருக்கொருவர் போட்டியிடாமல் அவரவர் வேலைகளை செய்ய வேண்டும் என்று.நம் இந்திய பண்பாட்டில் பெண்கள் பொது இடங்களில் சிலவற்றித்தன் செய்யமுடியும்.ஆண்களுடன் போட்டிபோட்டுக் கொண்டு பொது இடத்தில் அவன் காலை தூக்கி தலையில் வைத்து ஆடுகிறான் பார்க்க நன்றாக இருக்கிறது அதை மக்கள் ரசிக்கிறார்கள் என்பதற்காக சபையின் நடுவே பெண்களும் அது மாதிரி செய்தால் பார்க்க விகாரமாக தோன்றும். .பொது இடங்களில் பெண்ணாய் பிறந்தவள் அடக்கமாகவும்,பவ்யமாகவும் இருப்பதுதான் நம் இந்திய பண்பாட்டுக்கு அழகு. அதை மக்களுக்கு உணர்த்தவே இந்த இடத்தில் சிவபெருமான் தன நாட்டியம் முலம் உண்மையை உலகுக்கு தெரிவித்திருக்கிறார்.இப்போது புரிகிறதா ஏன் என்று."என தாத்தா கூறியது கேட்டதும் என் மானும் அது மிகவும் சரியே என உணர்ந்தது

தாத்தா மேலும் தொடர்ந்தார்கள், அடுத்து

வருவது ராஜ சபை அல்லது 1000 கால் மண்டபம்.இந்த ஆயிரம் கால் மண்டபம் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை பூவை குறிக்கும். இந்த 1000 இதழ்கள் கொண்ட தாமரை மண்டபத்தின் நடுவே உட்கார்ந்து நாம் நம் எல்லா புலன்களையும் அடக்கி தவம் செய்தால் மோட்சத்தை அடையலாம்.

அடுத்தது தேவ சபை என்பது.பஞ்ச மூர்த்திகளின் வீடு.பஞ்சமூர்த்திகலாகிய விநாயகர்,முருகர், சோமகன்டர் ,சிவானந்த நாயகி,மற்றும் சண்டிகேஸ்வரர்.

பொன் அம்பல சபைக்கு முன்னால் ஐந்து படிகள் காண்பித்தேன் இல்லையா?அவற்றிற்கு பஞ்சாட்சர படிகள் என கூறுவார்கள். பஞ்ச என்றல் ஐந்து .ஆட்ச்சரம் என்றால் அழிக்க முடியாத வார்த்தைகளாகிய சி வா யா ந ம. இந்த சித் சபையின் மேல் கூரை நான்கு தூண்களால் கட்டப்பட்டது.இந்த நான்கு தூண்களும் நான்கு வேதத்தை குறிக்கிறது. ரிக் வேதம்,சாம வேதம், யஜுர் வேதம்,அதர்வண

வேதம் ஆகும்.பொன் அம்பலத்தின் பிரகாரம் 28 தூண்களால் காட்டப்பட்டது.இந்த 28 தூண்களும் 28 ஆகமத்தை குறிக்கிறது. (மிதாலேஜி).இந்த தங்க கூரையை 64 கட்டைகளால் தாங்கி கட்டப்பட்டுள்ளது.இந்த 64 கட்டைகளும் நிறைய குறுக்கு கட்டைகளால் கட்டப்பட்டுள்ளது.64 கட்டைகளும் 64 வகையான கலைகளை குறிக்கிறது.குறுக்கு கட்டைகள் அனைத்தும் உயிரினங்களின் உடலிலுள்ள குறுக்கும்,நெடுக்குமாக செல்லும் இரத்த ஓட்ட குழாகளை குறிக்கிறது.இந்த கூரை 21,600 தன தகடுகளால் அடுக்கப்பட்டுள்ளது.21,600 தங்க தகடுகளும் நாம் தினமும் சுமார் 21,600 முறை மூர்ச்சை இழுத்து சுவாசிப்பதை குறிக்கிறது.,இந்த தங்க தகடுகளை கூரையில் பொறுத்த 72,000 ஆணிகளால் அடிக்கப்பட்டுள்ளது.

72,000 ஆணிகளும் நம் உடலிலுள்ள 72,000 நாடிகளை குறிப்பதாகும் (நரம்புகள்)இந்த தங்க கூரையில் மீது 9 தங்க கலசங்கள் இருக்கிறது பார்த்தியா? இந்த 9 கலசங்களும் 9 சக்தியை

குறிப்பதாகும். இங்கு அர்த்த மண்டபம் என்னும் மண்டபத்தில் ஆறு தூண்கள் இருக்கிறது.இவை ஆறும் ஆறு சாஸ்திரத்தை குறிக்கிறது.அர்த்த மண்டபத்திருக்கு அடுத்து இருக்கிறது பாரு இந்த ஹாலில் 18 தூண்கள் இருக்கிறது இந்த 18 தூண்களும் 18 புராணங்களை குறிக்கிறது.

இந்த கோவில் நான்கு கோபுரங்கள் இருக்கிறது இல்லையா?இந்த நான்கு கோபுரங்களும் நான்கு திசைகளை குறிக்கிறது.ஒவ்வொரு கோபுரமும் 7 அடுக்குகள் கொண்டது.ஒவ்வொரு அடுக்கிலும் நுழைவாசல் இருக்கிறது பார்த்தியா? என எல்லாவற்றையும் மிக விளக்கமாக கூறிக்கொண்டே வந்தார்கள் தாத்தா.

மீண்டும் தொடர்ந்தார்கள்,நடராஜர் சாமியின் நாடிய சிலையின் சின்னங்கள் எதை குறிக்கிறது தெரியுமா?

1. நடராஜா சாமியின் காலடியில் இருக்கும் அரக்கனை- கடவுள் உயிரினங்களின் அறியாமையையும்,கொடிய தன்மைகளையும் உள்ளவர்களை தன

காலடியில் நிறுத்திக்கொண்டு ,உலகில் பிறந்தர்கான
தத்துவத்தையும்,உண்மையையும் புரிந்த நல்லபடியாக வாழ்ந்து,நல்லவாற்றை செய்த உயிரினகளை மோட்சத்தை அடிய விமோசனம் கொடுக்கும் விளக்கமாக அவர் தூக்கி நிறுத்திய லேப்ட் காலும்
(லிபெரசன்)

2.நெருப்பு வைத்திருக்கும் கை (பவர் ஆப் டிஸ்ருக்சன்)-அவர்
தீயவைகளையும்,கொடியவைகளையும் அழிக்கும் சின்னமாகவும்.

3. தூக்கி நிறுத்தி இருக்கும் கை-யாமிருக்க பயமேன்-எல்லா உயிர்களையும் ரத்சிப்பதர்க்கன் சின்னமாகவும்.

4.அவரை சுற்றி நெருப்பு வளையம் இருக்கிறது இல்லையா?-அதற்க்கு பெயர் -திருவாஷி பிரபாவதி என்று பெயர்.-அப்படின்னா இந்த உலகை சற்றும் பிழையின்றி ,கனகச்சிதமாக சீராக எல்லாவற்றையும் நடத்தி வருவதற்கான

சின்னமாகவும், நெருப்பு சீராக எரிந்து கொண்டே சுற்றி வருகிறது.அது சற்றே குறைந்தாலும் அதிகமானாலும் உயிரினகளுக்கு ஆபத்தே (சூரிய ஒளி)

5.அவர் கையிலுள்ள உடுக்கை-உயிரினகளின் இதய துடிப்பை குறிக்கும் சின்னமாக இருக்கிறது.

6.தாமரை இதழ்கள் இந்த உலகையும்,இவ்வுலகத்தில் ஓம் என்ற சத்தத்தையும் குறிக்கிறது.

7.நடராஜரின் மூன்று கண்களும் -சூரியன், சந்திரன்,அறிவு/நெருப்பை குறிக்கிறது.

8.அவர் காதுகளிலுள்ள குண்டலம் ரைட் காதிலுள்ள குண்டலம் மகர குண்டலம் இது ஆணை குறிக்கும். லெப்ட் காதிலுள்ள குண்டலம் ஸ்ரீ குண்டலம் .இது பெண்ணை குறிக்கிறது.

9. அவர் தலையில் இருக்கும் பிறை அழகையும்,மிடுக்கையும் குறிக்கிறது.

10. தலியிலிருந்து விழும் கங்கை- உயிரினகளின் வாழ்கை முடிவில்லாதது என்பதை குறிக்கிறது.
11. அவருடைய பரட்டை தலையும்,ஆடைகளும், அவர் அவர் படைப்பின் சக்தியை குறிக்கிறது." என்று ஏதேதோ தாத்தா எங்களுக்கு புரியாததை எல்லாம் கூறிக்கொண்டே சென்றார்கள். நாங்கள் நான்கு பெரும் இவற்றையெல்லாம் வாய்பிளந்து வண்ணம் கேட்டுகொண்டிருண்டோம். ஏன் என்றால் எங்களுக்கும் இதை விட்டால் பொழுது போவதற்கு வேறு வழியில்லை இந்த கோடை விடுமுறையில் .

தாத்தா எல்லாவற்றையும் சொல்லி முடித்ததும் "தாத்தா எதோ ஆறு சாஸ்திரங்கள்.28 ஆகமங்கள், 9 சக்திகள்,18 புராணங்கள் என்று சொன்னீர்களே. அப்படின்னா என்ன தாத்தா? அதன் பேர் எல்லாம் உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டேன்.

"எல்லா பேரும் எனக்கு தெரியுண்டா கண்ணு

ஆனால் ,அவைகளை சொன்னால் உனக்கு இப்போது புரியாது. நீ பெரியவளான பிறகு சொல்கிறேன்" என்றார்கள் தாத்தா.

"இப்ப சும்மா சொல்லுங்கள் தாத்தா ,முடிந்தால் நாங்கள் ஞாபகம் வைத்து கொள்கிறோம் " என்று நான் விடாமல் கேட்டதனால், ஒவ்வொரு பேராக வரிசையாக கூற ஆரம்பித்தார்கள்.

" ஆறு சாஸ்திரங்கள் என்ன தெரியுமா?- சங்க்ய சாஸ்திரம் (கணக்கு)கபில முனிவர் எழுதியது,யோகா சாஸ்திரம்- பதஞ்சலி முனிவர் எழுதியது,நியாய சாஸ்திரம்-கௌதமன முனிவர் எழுதியது,வைசஷிக் சாஸ்திரம்-கனக முனிவர் எழுதியது,பூர்வமிமன்ச சாஸ்திரம் -ஜைமினி முனிவர் எழுதியது,உத்தர மிமன்ச சாஸ்திரம்- என ஆறு சாஸ்திரங்கள்.

9 சக்திகள் என்ன தெரியுமா?- சந்திரன்,சூரியன்,செவ்வாய்,புதன்,சுக்கிரன்,ராகு,கே என்பவைகள்.

28 ஆகமங்கள்-
காமிகம்,யோகராஜம்,சிந்த்யம்,கரணம்,அசிதம்,திப்த
,சுப்ரபாதம், விஜயம்,நிஷ்வசம் ,சுவயம்புவம்
,அனலம்,வீரம்,ரௌரவம்,மகுடம்,விமலம்,சுந்தர
ஞானம்,பிம்பம்,ப்ரோகிதம்,
லலிதம்,சித்தம்,சந்தானம்,சர்வோக்தம்,பரமேச்வரம்,கி
,வாதுளம். இந்த சைவ ஆகமத்தை நான்கு
வகையாக நாம் படிக்கலாம்-
கல்பா,கலாமுகா,பஷீபதா,மற்றும் சைவா .அகமா
என்பதற்கு பொருள்-சிவனிலிருந்து
தேவிக்கும்,தேவியிடமிருந்து
நந்திக்கும்,நந்தியிடமிருந்து ப்ரம்மாவிர்க்கும் ,
ப்ரம்மாவிடமிருந்து ரிஷிக்கும்,ரிஷியிடமிருந்து
மனித பிறப்பிற்கும் என்றும் அர்த்தமாகிறது ”
என்று எங்களுக்கு புரியாததை எல்லாம் அடுக்கி
கொண்டே சென்றார்கள் தாத்தா.எதற்கடா
கேள்வி கேட்டோம் என்றாகிவிட்டது எனக்கு.
சரி இத்துடன் முடிந்தது என நினைக்கையில்
தாத்தா விடாமல் தொடர்ந்தார்கள்

18 புராணங்கள் என்ன தெரியுமா?- பிரம்ம
புராணம்,பத்மா புராணம்,விஷ்ணு புராணம்,சிவா

புராணம்,வமனா புராணம், மார்கண்டேய புராணம்,வராக புராணம்,அக்னி புராணம்.காம புராணம்,பவத் ஹோ புராணம், லிங்க புராணம்,நாரத புராணம், ஸ்கந்த புராணம்,கருட புராணம்,மத்திய புராணம்,வாயு புராணம்,பவிஷ்ய புராணம்,பிரம்மாண்ட புராணம் . என்று கூறி முடிந்ததும் .நாங்கள் மௌனமாக கேட்டு விட்டு மீண்டும் கேள்வி எதுவும் கேட்காமல் வாயை இறுக்கமாக முடிக்கொண்டு உட்கார்ந்திருந்தோம். தாத்தா எதை எதையோ சொல்கிறார்கள் ஒன்றுமே புரியவில்லையே ,இதையெல்லாம் எப்படி தாத்தா தெரிந்து கொண்டார்கள் என்று ஆச்சர்யமாக இருந்தது. ஆனால் வாய் திறந்து கேள்வி கேட்டால் மீண்டும் நமக்கு புரியாததை எல்லாம் தாத்தா அடுக்கி கொண்டே போவார்கள் என பயந்து கொண்டு வாயை திறக்காமல் உட்கார்ந்திருந்தேன்.

. அனைத்தும் உருவாவதும்,எறிந்து சாம்பல் ஆவதும்,இவ்வுயிரினங்களுக்கு தேவையான முக்கிய அணுக்களான காற்று,தீ,தண்ணீர்

முதலியவற்றையும்,கடவுள் தீயவைகளை தன காலடியில் நிறுத்தி நல்லவைகளை விமோசிப்பதும் ஒரே ஒரு வடிவில் நம் முன்னோர் எவரோ அவ்வளவு அழகாக நிர்ணயித்து விளக்கியதை நினைத்து என் மனம் மிகவும் வியந்தது.இதுபோல இன்னும் நிறைய விஷயங்களை தாத்தா உயிருடன் இருக்கும்போது கேட்டு தெரிந்து கொள்ள மேலும் ஆவல் ஏற்பட்டது.ஆனால் கோடைவிடுமுறை முடிந்து நாங்கள் ஊர் திரும்பும் நாளும் வந்துவிட்டதை எண்ணி என் மனம் மிகவும் வருத்தமடைந்தது.

22

அத்யாயம்-இருபத்தி இரண்டு

சென்னை வந்து சேர்ந்த நாங்கள் வழக்கம் போல பள்ளிக்கூடம் சென்று வந்து கொண்டிருந்தோம்.தாத்தாவும்,பாட்டியும் இப்போதெல்லாம் சென்னை வரும்போதெல்லாம் பெரியம்மா சேதுவின் வீட்டில்தான் அதிக நாள் தங்கினார்கள்.

1969-ம் வருடம் பிப்ரவரி மாதம் தாத்தாவும் ,பாட்டியும்,பொங்கல் பண்டிகை முடிந்து பலகாரங்களையும்,பட்சனகளையும்,எடுத்துக்கொண் பெரியம்மாவின் வீட்டில் தங்கி

இருந்தார்கள்.அப்போது நாங்கள் அனைவரும் அவர்களை பார்த்துவருவதர்க்காக பெரியம்மா வீட்டிற்கு சென்றிருந்தோம்.பெரியம்மா வேலை செய்யும் அலுவலகத்தில் பலபேர் அந்த மாதம் புதியதாக வெளிவந்திருந்த எதிர்நீச்சல் என்ற திரைப்படம் மிக நன்றாக இருக்கிறது என பேசிகொன்டிருந்ததால் ,பெரியம்மாவும்,அம்மாவும் மற்றும் பாட்டியும் மூவரும் பிப்ரவரி 3-ம் தேதி அன்று வியாழக்கிழமை மாலை ஆறு மணி ஷோவிற்கு டிக்கெட் புக் பண்ணிவிட்டு கார் ஓட்டிபவரிடம் அவர்கள் மூவரையும் தியட்டரில் இறக்கிவிட்டுவிட்டு வீடு திரும்பிவிடுமாரும், படம் முடிந்ததும் இரவு பத்து மணியளவில் திரும்பவம் வைத்து அழைத்துகொள்ளுமாறும் சொல்லிவிட்டு மூவரும் திரை படம் பார்க்க கிளம்பி சென்றுவிட்டனர்.

அவர்கள் மூவரையும் தியேட்டரில் இறக்கிவிட்டு வந்த கார் ஓட்டுநர் ஜான் எங்களுடன் விளையாடிகொண்டிருந்தார்.எனக்கு நினைவு தெரிந்த நாள்முதலாக அன்றுதான் பெரியம்மா,அம்மா,மற்றும் பாட்டி மூவரும்

ஒன்றாக முதன்முதலாக திரை படம் பார்க்க தியேட்டருக்கு சென்றிருந்தார்கள்.

மாலை ஏழு மணி இருக்கும்.ரேடியோவில் பரபரப்பாக வாசித்த செய்தி கேட்டு வீட்டில் அனைவரும் கலங்கி நின்றோம். அன்று பிப்ரவரி 3-ம் தேதி தமிழ் நாட்டு முதலமைச்சர் அறிஞ்ஞர் அண்ணாதுரை
இறந்துவிட்டதாகவும்,ஊரெங்கிலும் அவரது கட்சி தொண்டர்களும்,ரசிகர்களும்,அவரது இழப்பை தாங்கமுடியாமல் ஊரிலுள்ள கடைகளை முடுமாறும்,பொது பஸ்கள் எதுவும் ஓடக்கூடாது என்றும்,தியேட்டர்களில் திரைப்படம் ஓட்டுவதை நிறுத்துமாறும் ஒரே கலாட்டாவும்,கலவரமும் செய்து வருவதாகவும்,இறந்த இப்பெருந்தலைவருக்கு, எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு மரியாதை அஞ்சலி செய்யவேண்டும் என கலாட்ட செய்து வருவதாக செய்தி கேட்டு அனைவரும் பயந்து செய்வதறியாது திகைத்து
நின்றுகொண்டிருந்தோம்.

வீட்டிலிருந்து கார் ஓட்டிபவர் காரை வெளியே எடுத்து சென்று அவர்களை அழைத்து வரமுடியாது.ஏன் என்றால் காரை உடைத்து நொறுக்கி விடுவார்கள்.தாத்தாவிற்கு கவலை. பாட்டி உடல் முழுது தங்க,வைர நகைகளை நிறைய அணிந்துகொண்டு திரை படம் பார்க்க சென்றுள்ளதால், பாட்டியை யாராவது அடித்து போட்டு நகைகளை, இந்த கலாட்டா சாக்காய் வைத்துகொண்டு பிடுங்கி சென்று விட்டால் என்ன ஆவது என பாட்டிய நினைத்து கவலை பட ஆரம்பித்துவிட்டார்கள்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.இரவு 11 மணியும் ஆகிவிட்டது.வீட்டிலிருந்து யாரும் வெளியே போக முடியாத நிலை.வெளியே சென்ற முவரின் நிலைமையும் தெரியாமல் அனைவரும்
தவித்துக்கொண்டும்,பயந்துகொண்டும்,வாசலுக்கும்,
நடந்துகொண்டு இருக்கையில்,வாசலில் ஒரு டாக்சி வந்து நிற்கும் சப்தம் கேட்டு ஜன்னல் வழியாக அனைவரும் ஆவலுடன் எட்டிபார்த்தோம்.டாக்சியிலிருந்து முவரும்

அவசர அவசரமாக இறங்கி வீட்டிற்குள் ஓடிவருவது கண்டு அனைவருக்கும் போன உயிர் திரும்பி வந்தது போல் பெருமூச்சு விட்டு அமைதியும்,சந்தோஷமும் அடைந்தோம்.

பெரியம்மாவும்,அம்மாவும்,பாட்டியும் வீட்டிற்குள் நுழைந்ததும் அப்பாடா என ஒரு பெருமூச்சு விட்டு விட்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள்.பிறகு பெரியம்மா சேது சிரிப்பதை நிறுத்திவிட்டு, நடந்தவைகளை எங்களிடம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

“நாங்கள் தியேட்டருக்குள் அமர்ந்தது அட்வர்டைஸ்மென்ட் முடிந்து,சரியாக திரை படம் ஆரம்பிக்குமுன் அதில் நடிப்பவர்களின் பெயரை காண்பித்துகொண்டிருக்கையிலேயே முதலமைச்சேர் இறந்த செய்தி வந்துவிடவே திரைப்படத்தை தொடறாமல் நிறுத்த கலாட்டவை ஆரம்பித்துவிட்டார்கள்.உடனே படம் பார்க்க வந்த அனைவரும் அவசர அவசரமாக வீட்டிற்கு செல்ல ஆரம்பித்து விட்டார்கள்.நாங்க முவரும் செய்வதறியாமல்

தியேட்டருக்கு பின்னால் உள்ள தெருவில் ஆள் நடமாட்டம் ரொம்ப இல்லாத இடமாக பாதுகாப்பான இடத்திற்கு செல்ல பார்க்கையில் அங்கு ஒரு டாக்சி நின்று கொண்டிருந்தது.அவரிடம் சென்று நிலமையை கூறியவுடன் முன்று பெண்மணிகள் தனியாக நிர்ப்பது சரியில்லை என பெரிய மனது பண்ணி அந்த டாக்சி ஓட்டுபவர் எங்களை ஏற்றி கொண்டு முடிந்தவரை ஆள் அதிகம் இல்லாத தெரு வழியாக எங்களை பத்திரமாக கொண்டு வந்து இங்கு எப்படியோ சேர்த்துவிட்டார்.அவருக்கு நன்றி கூறிவிட்டு மீட்டர் தொகைக்கு மேல் அதிகமாக பணம் கொடுத்துவிட்டு வந்தோம்.பாவம் அந்த டாக்சி ஓட்டுபவர் எங்களை அதிக பணம் எதுவும் கொடுக்க வேண்டாம் என்று சொன்னார். எங்களுக்கு தான் மனது கேட்காமல் அவரிடம் தயவு செய்து பணத்தை வாங்கிக்கொள்ளவேண்டும் என அன்புடன் கூறி கொடுத்துதும் அரை மனதுடன் வாங்கிகொண்டு சென்றுவிட்டார். நல்ல மனிதர் அவர் என

புகழ்ந்து பேசினார்கள்.

பாட்டி கமலா அலுத்துகொண்டார்கள்."நாங்க முணுபேரும் ஒன்றாக சேர்ந்து முதன்முறையாக இன்றுதான் படம் பார்க்க அதிசயமாக சென்றோம். இன்னைக்கு தானா முதலமைச்சர் இறக்கவேண்டும்.அவர் இரவு பத்து மணிக்குமேல் இறந்திருக்க கூடாதா.நாங்கள் அனைவரும் தியேட்டரில் முதல் வகுப்பிற்காக கொடுத்த பணமும் போச்சு,டாக்சிக்கு கொடுத்த பணமும் வீணாக போனதுதான் மிச்சம்."என்று.

படம் பார்க்க மூவரும் குதூகலமாக சென்று, மிகுந்த ஆர்பாட்டத்திர்க்கும்,கலாட்டாவிர்க்கும் நடுவே வீடு வந்து சேர்ந்த அந்த நிகழ்ச்சியை அடிக்கடி பேசி,சிரித்து ஆதங்கபட்டுகொண்டதுடன்,அதன் பிறகு மூவரும் ஒன்றாக வெளியே செல்வதையும்,படம் பார்ப்பதையும் எண்ணத்தையே அடியோடு விட்டுவிட்டார்கள்.

மறுநாள் நாங்கள் அனைவரும் எங்கள்

வீட்டிற்கு திரும்பினோம்.தாத்தாவும்,பாட்டியும் பார்க்க இம்முறை மாமா ஜகன்னாத்தும், அவர் குடும்பமும் இம்முறை வரவே இல்லை.மாமாவின் தொடர்பு சிறிது சிறிதாக துண்டிக்கப்பட்டு வந்தது.மாமாவின் பெண்கள் சீதா,நிஷா, மற்றும் உஷாவை நாங்கள் பார்ப்பதும் நின்று விட்டது.எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. எங்கள் பெயரில் அதிக சொத்தும்,பணமும்,நகைகளும்,தாத்தா எழுதியதன் பயனாக அம்மா,மாமா பெரியம்மா மூவருக்குள் இருந்த உறவு இப்படி படி படியாக குறைத்து,எல்லோர் மனதிலும், குழப்பமும்,வெறுப்பும்,நிம்மதியின்மையும் நாளுக்கு நாள் அதிகமாகி வந்தது. ஆனால் பெரியம்மா மட்டும் எங்கள் குடும்பத்துடன் இன்னும் அதிகமான நெருக்கத்துடன் பழக ஆரம்பித்தார்கள்

ஒரு முறை பெரியம்மா ,அம்மா,நான் ,அண்ணன்ஷான்,தம்பி

பாட்,ஆனஹி,பெரியம்மாவின் மகன் குமார் ஏழுபேரும் திருப்பதிக்கு கோவிலுக்கு சென்று சாமி கும்பிட்டுவர சென்றோம்.அந்த திருப்பதி சாமி பெருமாள் ஒரு மலையின் மீது உள்ள கோவிலில் இருந்தார்.அந்த திருப்பதி பெருமாள் மிகவும் பிரசித்தி பெற்ற கடவுள் என்பதால் அந்த கோவிலுக்கு நிறை பேர் தூர தேசத்தில் இருந்து வந்து தங்கி சாமியை தரிசித்து ,உண்டியலில் நிறைய பணத்தையும்,நகைகளையும் போட்டுவிட்டு செல்வார்கள்.எனவே அந்த கோவிலுக்கு போக வேண்டும் என அம்மா பிரியப்பட்டதால் ,பெரியம்மா எங்கள் அனைவரையும் தன காரில் அங்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது ஆனஹிக்கு வயது மூன்று,குமாருக்கும் வயது மூன்றே.இருவரும் ஒரே வருடத்தில் பிறந்தவர்கள். ஆனஹி குமாரை விட ஐந்து மாதம் பெரியவள்.கோவிலுக்குள் நாங்கள் சென்ற சமயம் இரவு ஒன்பது மணிக்கு மேல் இருக்கலாம்.அப்போது அங்கு மக்கள் கூட்டம் மிக அதிகமாகவே இருந்தது.எனவே பெரியம்மா

எங்கள் அம்மாவிடம். “மங்கை நீ குமாரை வைத்துக் கொள்.நான் ஆனஹியை வைத்துக் கொள்கிறேன்”என்று சொன்னதும்,அம்மா குமாரை தூக்கி தன் இடுப்பில் வைத்துக் கொண்டார்கள்.ஆனால் பெரியம்மா ஆனஹி தூக்கி தன இடுப்பில் வைத்துக் கொள்ளாமல் அவளை தன கையில் பிடிட்த்துக் கொண்டு நடத்தி அழைத்துச் சென்றார்கள்.
கூட்டத்தின் நடுவே நாங்கள் மாட்டிக் கொண்டதால்,யாரும் யாரையும் கவனிக்க முடியவில்லை.ஆனால் நாங்கள் முவரும் எப்படிடோ அம்மாவை பிடித்துக் கொண்டு அவர்களுடன் மிகவும் பத்திரமாக வெளியே வந்து சேர்ந்தோம்.பெரியம்மாவும் ஒரு வழியாக வெளியே வந்து எங்களுடன் சேர்ந்துவிட்டார்கள். அனைவரும் வெளிய பத்திரமாக சேர்ந்துவிட்டோம் என்ற நினைப்பில் சற்று தூரம் சென்றவுடன் நான் அம்மாவிடம் “அம்மா ஆனஹி எங்கே”? என்று கேட்டதும்.அம்மா திடுக்கிட்டு “சேது நீதானே ஆனஹியை வைத்திருந்தாய்,எங்கு விட்டாய்

அவளை?”என் பதறி போய் கேட்டதும், பெரியம்மா பதட்டம் எதுவும் இல்லாமல் வெகு சாதாரணமாக “என் கையில் பிடித்திருந்தேன்.கூட்டத்தில் என்ன நடந்தது என தெரியவில்லை”என்ற பதிலை கூறினார்கள்.

அம்மாவிற்கு அழுகை வந்துவிட்டது.உடனடியாக தூக்கி வைத்திருந்த குமாரைகீழே இறக்கி விட்டுவிட்டு ஆனஹியை தேடி மறுபடியும் கோவிலுக்குள் பதறிய டித்துக்கொண்டு அழுதுகொண்டே ஆனஹி,ஆனஹி என கூச்சலிட்டுக் கொண்டே இங்கும் அங்குமாக ஓடிக்கொண்டிருந்தார்கள்.. நாங்கள் முவரும் ஆனஹி தொலைந்துபிவிட்டாளே,இனிகிடைப்பாளா?இல்லை பயம்,அந்த கோவில் மலை மேல் இருந்ததால்,மலையிலிருந்துஎங்காவது இடம் தெரியாமல் தவறி உருண்டு விழுந்து இறந்திருப்பாளோ?என்ற மனக்கஷ்டமும்மனதை வெகுவாக பாதித்தது. அம்மா மறுபடியும் வெளியே ஓடி வந்து சுற்றி முற்றும்கீழே எங்காவது வீழ்ந்து கிடக்கிறாளா?என

அழுதுகொண்டே பித்து பிடித்து போலஓடிகொண்டிருந்தார்கள்.எங்கள் முவரையும் இடத்தை விட்டு எங்கும் நகராகக் கூடாது எனகூறியிருந்ததால் அம்மா குறிப்பிட்ட இடத்தில் முவரும் ஒன்றாக உட்கார்ந்துகடவுளைவேண்டிக் கொண்டிருந்தோம்,தங்கை ஆனஹியை எப்படியாவது எங்களிடம் சேர்த்துவிடுஎன்று. ஆனஹி இல்லாமல் அன்றிரவு ஊர் திரும்ப முடியாது என அம்மா உறுதியாகபெரியம்மாவிடம் கூறிவிட்டு ,ஆனஹியை தேடி தனியாக அலைந்து கொண்டிருந்தார்கள். அரை மணிநேரத்திற்கு மேல் இருக்கலாம் ஒரு பெரிய குடும்பம் 20 பேருக்கு மேல்இருக்கலாம்.நாங்கள் இருக்கும் திசை வழியாக கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள்.அந்தகூட்டத்தில் ஒரு பெண்மணி ஆனஹியை கைபிடித்து அழைத்து வந்து கொண்டிருந்ததை அம்மாபார்த்துவிட்டு அவர்களை நோக்கி ஓடிச் சென்று “என் மகள் எப்படி உங்களுடன்வருகிறாள்”என ஆனஹியை

இழுத்து கட்டிகொண்டார்கள். “நாங்கள் உங்கள் மகளைதிருடவில்லை அம்மா.உள்ளே கூட்ட்டத்தில் உங்கள்குழந்தை “ஓ”வென அழுது கொண்டுநின்றிருந்தது.அதனிடம் நாங்கள் பேச்சு கொடுத்து பார்த்தோம்.அதற்க்கு பேச இன்னும்வரவில்லை என்பதால் அது அழுது கொண்டிருந்தது.இந்த குழந்தையால் எதையும் எங்களிடம்சொல்ல தெரியவில்லை.எனவே அதன் உரிமையாளரிடம் தேடி ஒப்படைக்கலாம் என அழைத்துக்
கொண்டுவந்தோம்”என்றார்கள்.”
அம்மா அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு ஆனாஹியைதன்னுடன் தூக்கி கொண்டு வந்துவிட்டார்கள்.
“குழந்தையைஜாக்கிரதையாகவும்,கெட்டியாகவும் பிடித்து அழைத்து செல்லுங்கள்.அதிலும் கூட்டத்தில்ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்”என அக்கறையுடன் கூறிவிட்டு அந்த கூட்டத்தினரும்விடைபெற்று கொண்டு அவர்கள் வழியே சென்றுவிட்டார்கள். அதன் பிறகு அம்மா ஆனஹியைபெரியம்மாவுடன் விடாமல்

தானே தூக்கி வைத்துக் கொண்டு வந்தார்கள்.பெரியம்மா எதுவும்நடவாதது போல சர்வ சாதாரணமாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அந்தநிகழ்ச்சியை இன்றும் என்னால் மறக்க முடியாத நிழ்கழ்ச்சியாகிவிட்டது.பெரியம்மாவேண்டுமென்றே ஆனஹியை தொலைத்தார்களா?அல்லது எல்லாம் எதேச்சியாக நடந்து ,அது பற்றிஅவர்களுக்கு ஏதும் அக்கறை இல்லாமல் இருந்ததாதா?என எப்பவும் என் மனதில் அந்த ஒருநிகழ்ச்சி குழப்பமாகவே இருந்தது.

ஒவ்வொரு சமயமும் அவர்கள் வீட்டிற்கு நாங்கள் செல்லும் போதெல்லாம்,"மங்கை நம்ப ரெண்டு குடும்பமும் எப்போதும் ஒரே வீட்டில் ஒன்றாக வாழவேண்டும் என்பது என் ஆசை. ஒரே மகனான என் பிள்ளை குமாருக்கு உன் நான்கு குழந்தைகளுடன் வளர்ந்தால் அவன் தனியாக வளருகிறான் என்ற எண்ணமே ஏற்படாது."என்று அடிக்கடி அம்மாவிடம் கூறி

வந்ததால்,அம்மாவும் அக்கா தன் மீதும்,தன குடும்பத்தின் மீதும் மிக அக்கறையாக இருப்பதாக நம்பினார்கள்.

பெரியம்மா எங்கள் வீட்டிக்கு வருவதும்,எங்கள் பெற்றோர் அனுமதி இல்லாமல் அழைத்துச் செல்வதும் அதிகமாகி கொண்டே வந்தது.ஒரு நாள் அம்மா இல்லாத சமயம் பெரியம்மா எங்கள் வீட்டிற்கு வந்து ஆனஹியை தவிர மற்ற எங்கள் முன்று பேரையும் அவர்களுடன்,அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று ,அன்று வெள்ளிக்கிழமை இரவு சாப்பாட்டிற்கு பிறகு, அங்கு வேலை செய்யும் ஐந்து பெண்களில், பாத்திரம் கழுவும் வேலைக்காரப்பெண் உமாவிடம்

“உமா,இன்று பாத்திரத்தை அனிதாவை கழுவ சொல்லிவிட்டு ,நீ என் அறைக்கு வந்து, எனக்கு உதவி செய்”என உத்தரவிட்டுவிட்டு சென்று விட்டார்கள்.

எனக்கு தூக்கிவாரி போட்டது .”பெரியம்மா

வீட்டில் இவ்வளவு வேலை ஆட்கள் இருக்கும்போது,நான் ஏன் பாத்திரம் கழுவவேண்டும்"என மனதில் ஏற்பட்ட சந்தேக குறியுடன் நின்றிருந்தேன்.

வீட்டிற்கு பின்னே மேலே திறந்த வெளிமுற்றத்தில் ஒரு குழாயும்,அதை சுற்றி நிறைய கழுவ வேண்டிய பெரிய பெரிய பத்திரங்களும் குவித்து கிடப்பதை நோட்டம் விட்டேன்.அங்கு கீழே ஒரு கட்டையில் உட்கார்ந்துகொண்டு ,தேங்காய் நாரில் சாம்பலை தொட்டு, அங்குள்ள அனைத்து அலுமினிய,பித்தளை,எவர்சில்வர்,பத்திரங்களை தேய்த்து, அங்குள்ள குழாயை திறந்து, பக்கெட்டில் தண்ணீரை நிரப்பி, பாத்திரங்கள் முழுதும் கழுவி,அருகிலுள்ள சிமெண்ட் மேடைமீது கவிழ்க்க வேண்டும்.பிறகு குழாய் சுற்றி உள்ள அந்த பெரிய முற்றத்தை தண்ணீரை ஊற்றி நன்றாக சுத்தமாக கழுவி விட வேண்டும்.இவைகளை எல்லாம் உமா செய்து வந்ததை நான் பார்த்திருக்கிறேன்.இவை எல்லாம் எனக்கு பழக்கம் இல்லாததால்

பெரியம்மாவின் உத்தரவு கேட்டு குழம்பிய நிலையில் கையை பிசைந்தது கொண்டு முழித்தவண்ணம் நின்றிந்தேன்.

“அம்மா,அனிதாவிற்கு இவை எல்லாம் பழக்கமில்லையே”என்றாள் உமா.

“என்ன பெரிய பழக்கம் வேண்டி இருக்கிறது.அனிதா போயி எல்லாவற்றையும் கழுவி விட்டு,இடத்தை சுத்தம் செய்துவிட்டு போய் படுத்துகொள்.பெண் பிள்ளையாக பிறந்துவிட்டதால் இந்த வேலை எல்லாம் நீ இப்போதே பழகி கொள்ள வேண்டும்,திருதிருவென முழித்துக்கொண்டு மதமதவென நிற்காதே”என என் முதுகை பிடித்து தள்ளியதும்,நான் பயந்துகொண்டே சென்று பத்திரம் கழுவ ஆரம்பித்தேன்.

உமா எனக்கு எப்படி பத்திரம் கழுவவேண்டும் என காண்பிக்க என் அருகே வர முயற்சிக்கையில்,

“உமா,எங்க போறே,அவளுக்கு நீ ஒன்றும் கற்றுத்தர வேண்ட்டிய அவசியம் இல்லை.அவளாக கற்றுகொள்ளட்டும்.நீ என் அறைக்கு வந்து என் காலை அமுக்கிவிடு.அனிதா இடம் சுத்தமாக இருக்கவேண்டும்.இன்னும் கொஞ்சம் நேரத்தில் நான் வந்து பார்ப்பேன்.” என மிரட்டும் தோரணையில் கூறிவிட்டு உமாவையும் அழைத்துக்கொண்டு தன அறைக்கு சென்று விட்டார்கள் பெரியம்மா.மற்ற வேலை ஆட்களுக்கு என்ன செய்வது என புரியாமல் மனவருத்தத்துடனும்,இந்த சம்பவத்தை அவர்கள் எதிபார்க்காத அதிர்ச்சியுடனும் ஒதுங்கி நின்று நான் செய்யும் வேலையை பார்த்தவண்ணமே அவர்ககுக்குள் எதோ கிசுகிசுவென பேசி கொண்டிருப்பதை நான் கவனிக்காமல் இல்லை .

எப்படியோ சமாளித்துக்கொண்டு பத்திரங்களை எல்லாம் கழுவி,இடத்தையும் சுத்தம் செய்துவிட்டு ,நான் உடுத்தியிருந்த பாவாடை முழுதும் நனைந்து ஈரம் சொட்ட சொட்ட நின்று கொண்டிருந்தேன்,சொன்னபடி சிறிது நேரத்திற்க்கெல்லாம் தன் அறையை விட்டு

வெளியே வந்து, நான் வேலையை சரிவர செய்திருக்கிறேனா என பார்க்க வந்த பெரியம்மா,நான் ஈரம் சொட்டும் பாவாடையுடன் நின்றிருப்பதை பார்த்து கோபமடைந்தவராக பளீரென என் கன்னத்தில் ஒரு அரை விட்டுவிட்டு ,

“ராஸ்கல்,நீ என்ன இன்னும் சின்ன குழந்தையா?வயது பத்து ஆகிறது, பாவாடையை தூக்கி நனையாமல் கட்டிக்கொண்டு பாத்திரம் கழுவ தெரியாதா என்ன?இது கூடவாடி உனக்கு யாராவது சொல்லி தரவேண்டும் .முட்டாள்,எருமை மாடு மாதிரி வளர்ந்து இருக்கிறாய்,வேலையில் கவனம் இல்லை”என பெரியம்மா கூறியதும்,

எனக்கு பெரியம்மா கன்னத்தில் அறைந்த வலியை விட எல்லோர் முன்னிலையிலும்,ராஸ்கல் என கூறி திட்டி அடித்தது மிகவும் அவமானமாகிவிட்டது.பெரியம்மா விட்ட அறையில் என் கண்கள் கலங்கி இருந்ததது.

நான் உடனே குனிந்தது பாவாடையை பிழிந்து ஈரத்தை ஓரளவிற்கு எடுத்துவிட்டு ,வெளி முற்றத்தை விட்டுஉள் விராண்டாவிற்கு வந்தேன்.அந்த விராந்தா சமயலறைக்கு எதிரே உள்ள எல் வடிவிலிருக்கும் விராந்தா.இதில்தான் அங்கு வேலை செய்யும் ஆட்கள் அனைவரும் படுத்து தூங்குவது வழக்கம்.

நான் உள்ளே வந்ததும் என் பாவாடையை தொட்டு பார்த்துவிட்டு அதிலிருந்து தண்ணீர் சொட்டவில்லை என்றதும் “உமா ஓர் பாயை இவளுக்கு கொடு,உங்களுடன் இந்த விறாண்டாவில் இவள் படுக்கட்டும்”என்றார்கள் பெரியம்மா கொஞ்சமும் ஈவு இறக்கம் இல்லாமல்.

“பாவாடை ஈரமாகே இருக்கே அம்மா,வேறு பாவாடை மாற்றி கொண்டு படுக்க சொல்லவா”என்று உமா கேட்டதற்கு,

“தேவை இல்லை,ஈரம் சொட்டவில்லை சற்று நேரம் இந்த விறாண்டாவில் படுத்தால் எல்லாம்

காய்ந்துவிடும்.ஈரத்துணியுடன் படுத்தால்தான் இவளுக்கு புத்தி வரும்.அடுத்த முறை பாவாடையை நனைக்காமல் வேலை செய்வாள்".என உத்தரவிட்டுவிட்டு தன் அறைக்கு படுக்கச் சென்றுவிட்டார்கள் பெரியம்மா.

நான் அழவில்லை.அமைதியுடன் "கின்"என்ற வலித்த காதை பிடித்த வண்ணம், உமா கொடுத்த பாயை விரண்டாவின் ஒரு முலையில் விரித்து போட்டு தலையணை கொடுக்காததால், என் கைகளை தலை அணையாக மடித்து வைத்துகொண்டு படுத்து கொண்டேன்.ஆனால் அன்று பெரியம்மாவை எதிர்த்து பேச ஏனோ எனக்கு தைரியம் வரவில்லை.மாறாக அவர்களை பார்த்து பயம் ஏற்பட்டது.இந்த நிகழ்ச்சியை ஏனோ அம்மாவிடம் கூட கூற எனக்கும்,அண்ணன் ஷானுக்கும் தோன்றவில்லை.

பெரியம்மா கன்னத்தில் அறைந்ததால் காது வலியும் ,எல்லோர் முன்னிலையிலும் என்னை

ஒருமாதிரியாக பேசியாதாலும் ஏற்பட்ட மனவலியுடனும் ,"கடவுளே,நான் என்ன தவறு செய்தேன்,இந்த சின்ன விஷயத்திற்கு ஏன் கோபப்பட்டு பெரியம்மா என்னை அடித்து அவமானபடுத்தவேண்டும்.பெரியம்மாவிற்கு நான் ஒரு மகள்போலதானே.சொந்த பெண்ணாக இருந்தால் இப்படி எல்லாம் செய்வார்களா?இவ்வளவு வேலைகாரர்கள் இருக்க என்னை ஏன் அனாவசியமாக அழைத்து வந்து வேலை வாங்க வேண்டும்?என்ற மனவேதனையுடன் என்னையுமறியாமல் கண்ணிலிருந்து நீர்வடிய லேசாக விம்மியபடி படுத்திருந்த நான் அப்படியே தூங்கிவிட்டிருக்கிறேன்.

மறுநாள் காலையில் ஏழுந்ததும் பெரியம்மாவை கண்டு என் உடல் நடுங்கியது.கடவுளே இன்று என்ன நடக்கப் போகிறதோ ?என்று நினைத்துக்கொண்டிருக்கையில் பெரியம்மா அண்ணன் ஷானை அழைத்தார்கள் .வீட்டிற்கு முன்னே உள்ள கார் ஷெட்டில் குமாருடன் விளையாடி கொண்டிருந்த அண்ணன் ஷான்,

பெரியம்மா அழைத்த குரல் கேட்டு ‘என்ன பெரியமா? என கேட்டுகொண்டே உள்ளே நுழைந்தான்.

“நீயும்,உன் தம்பி பாட்டும்,வீட்டிற்கு முன்னே உள்ள செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிவிட்டு,சுற்றிலும் வளர்ந்து இருக்குக் புல்லையும்,வேண்டாத செடிகளையும்,பிடுங்கி ஏறிந்து சுத்தம் செய்தால்தான் மதியம் சாப்பாடு உங்களிருவருக்கும்” என்றார்கள் மிகவும் இரக்கமில்லாமல் .

அதை வேடிக்கை பார்த்து நின்றிருந்த என்னை பார்த்த பெரியம்மா “நீயும்தான், போய் முன்று பெரும் வேலை செய்யுங்கள்”.என மிரட்டிவிட்டு ஹாலில் தன் சோபாவில் பேப்பர் படிக்க ஆரம்பித்தார்கள்.

நான் முன்று பெரும் ஒழுங்காக வேலை செய்கிறோமா?என கண்காணிக்க பெரியப்பா ராமு அங்கு வீட்டின் முன்புறம் உள்ள முடிய போர்டிகோவில் ஒரு நாற்காலியில்

உட்கார்ந்துகொண்டு செய்தி தாளை படித்த வண்ணம் எங்கள் மீதும் ஒரு கண் வைத்து கொண்டிருந்தார்.நாங்கள் பெரியப்பாவின் பார்வையிலிருந்து சிறிது நேரம் கூட தப்பித்து ஓய்வு எடுக்க முடியாது நிலையில் இருந்தோம்.கை வலிக்கிறது என சற்று நேரம் நிழலில் வந்து நின்றால் “உம் ,நின்னது போரும் வேலையை மளமளவென முடிக்கபாருங்கள் முன்றுபேரும்.எப்படி இந்த சிறிய வயதில் கைகால் வலி ஏற்படும் ,சோம்பேறி பசங்களா, தெண்ட சோறு சாப்பிட கை வலிக்கவில்லையா?என வார்த்தைகளால் குத்தி பேசி,சிறு குழந்தைகள் என்று கூட பார்க்காமல் அரக்கத்தனமாக நடந்துகொண்டார்கள்

ஆனால் அவர்களது மகன் குமார் பெரியப்பாவின் அருகில் உட்கார்ந்து கொண்டு நாங்கள் வேலை செய்வதை பார்த்து கொண்டு விளையாடிகொண்டிருந்தான்.அவன் மட்டும் அவர்களுக்கு தெண்ட சோறாக தெரியவில்லையா?நல்ல காலம் தங்கை ஆனஹி எங்களுடன் இல்லை. ஒருவேளை எங்கள்

முவரையும் வேலை வாங்கவே தனியாக அழைத்துவந்தார்கள் போலிருக்கிறது என என மனம் எண்ணியது.

நாங்கள் முவரும் வெயிலில் சோர்ந்து விட்டோம்.வெய்யில் சுட்டெரித்தது.புற்களையும்,செடிகளையும் பழக்கமில்லாமல் முதன்முறையாக வெறும் கையில் வெகுநேரம் பிடுங்கியதால் எங்கள் முவரின் பிஞ்சு கைகளும் சிவந்து, எரிய ஆரம்பித்துவிட்டது.எங்கள் முவருக்குமே ஏனோ தைரியம் இல்லை .மாறாக பயமே ஏற்பட்டது.நாங்கள் எங்கள் வீட்டிற்கு போகவேண்டும், எங்களை கொண்டுவிடுங்கள் பெரியம்மா,வேலை செய்ய எங்களால் முடியவில்லை என கூறவும் துணிவில்லாமல் சோர்வுடன் வேலையை செய்து கொண்டிருந்தோம்.

“சரி ,பசங்களா வேலை செய்தது போதும், கை, கால்களை கழுவி கொண்டு சாப்பிட வாங்க”என அந்த வீட்டு சமையல்காரர்

முர்த்தியின் குரல் கேட்டதுதான்,தாமதமின்றி துள்ளி குத்தித்து கொண்டு கை கால்களை உதறி விட்டுக்கொண்டு வீட்டிற்குள் செல்ல நாங்கள் முவரும் தயாராகும் நேரத்தில் 'வேலையை முடிக்கட்டும்,இப்ப எதற்கு அவர்களை கூப்பிடுகிறாய் முர்த்தி"என பெரியப்பா அதிகார தோரணையில் முர்த்தியை கேட்டதற்கு.

"சிறு குழந்தைகளை வெய்யிலில் இவ்வளவு நேரம் வேலை வாங்குவது சரியாக எனக்கு படவில்லை.சொந்த தங்கை குழந்தைகளை அடிமைபோல வேலை வாங்குவது நியாயமில்லை .வெய்யில் தாங்காமல் குழந்தைகளுக்கு ஏதாவது ஆகிவிட்டால் பெற்றவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று யாரும் யோசித்து பார்த்தீர்களா?"என்றார் சமையல்காரர் முர்த்தி சற்றே கோபம் கலந்த குரலுடன்.

"அது பற்றி நாங்கள்தான் கவலை படவேண்டும்.அது உன் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லை ,உன் வேலை என்னவோ அதை போய்

பாரு,எங்கள் விஷயத்தில் தலையிடாதே"என பெரியம்மா கோபித்துகொண்டார்கள் மூர்த்தியை.

"நீங்கள் செய்வது எதுவும் எனக்கு சரியாக படவில்லை,நானும் நேத்திலிருந்து பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்.குழந்தைகளை வதைப்பது எனக்கு சரியாக படவில்லை"என்று அவர்கள் இருவரும் பேசுவதை சற்றும் பொருட்படுத்தாமல் எங்களை மதிய உணவு சாப்பிட வீட்டிற்குள் அழைத்து சென்றர் மூர்த்தி.அங்கிருந்த மற்ற வேலை காரர்களுக்கும் பெரியம்மா,பெரியப்பாவின் போக்கு பிடிக்கவில்லை என்றாலும்,செய்வதறியாமல் பேசாமல் இருந்து விட்டார்கள்.

அன்று மாலை அம்மா.குமாரி அக்கா மற்றும் ஆனஹி முவரும் பெரியம்மா வீட்டிற்கு வந்து, எங்களை அழைத்து போக வந்திருந்தார்கள்.அம்மாவை கண்டதும் நாங்கள் முவரும் மகிழ்ச்சியுடன் ஓடி சென்று

கட்டிகொண்டோம்.எங்கே அம்மாவிடம் நாங்கள் விஷயத்தை கூரிவிடபோகிரோமோ?என நினைத்தோ ,என்னவோ,பெரியம்மா இன்முகத்துடன் அம்மாவை வரவேற்று,அம்மாவிடம் பேசவிடாமல் எங்களிடமிருந்து பிரித்தெடுத்து, அம்மாவை மட்டும் தன் படுக்கை அறைக்கு அழைத்து சென்று “மங்கை உனக்கு ஒரு நல்ல கை கடிகாரம் வாங்கியிருக்கிறேன்.இந்தா இதை கையில் கட்டு பார்க்கலாம்.”என கூறி அங்கு மேஜையில் வைத்திருந்த சதுர விடிவில் தங்க பிரேமுடன் கருப்பு ஸ்ட்ராப் போட்ட கை கடிகாரத்தை அம்மாவிடம் கொடுக்கவே, அம்மா அதை வாங்கி கையில் கட்டி பார்த்துவிட்டு “மிக அழகாக இருக்கிறது சேது”எதற்கு நீ வீணாக செலவு செய்து எனக்கு வாங்கி தருகிறாய்.உனக்கு நான் கஷ்டம் கொடுக்க விரும்பவில்லை.எவ்வளவு பணம் என்று சொல்? அடுத்த மாத சம்பளம் வந்ததும் நான் உனக்கு கொடுத்துவிடுகிறேன்.”என்றார்கள்.

“நீ பணம் எதுவும் கொடுக்க வேண்டாம்.இது

என்னுடைய பரிசு உனக்கு"என கூறிவிட்டு.மேலும் "இந்த நகைகளை உன் பெண் அனிதாவிற்கு போட்டால் அவளுடைய தங்க கலர் தோலிற்கு மிகவும் அழகாக இருக்கும்.அதனால்தான் அவளுக்கென்று இதை தனியாக வைத்திருக்கிறேன்.எங்காவது விசேஷத்திற்கு போக நேர்ந்தால் ,இங்கு வந்து இந்த நகைகளை அவளுக்கு போட்டு அழைத்து சென்று விட்டு,திரும்பவும் நேராக இங்குவந்து நகைகளை என்னிடம் கொடுத்துவிட்டு சென்று விடு." என்று கூறிவிட்டு வெளிர் நீல நிறத்தில் உள்ள கற்கள் பத்தித்த பட்டாம்பூச்சி வடிவிலுள்ள கம்மலும், அதற்க்கு பொருத்தமாக நெக்லசும்,கைவளையல்களும் ஒரு செட்டாக அம்மாவிடம் காண்பித்தார்கள் பெரியம்மா.

"இந்த நகைகளை பாரிசிலிருந்து வாங்கி வந்தேன்.இந்த கற்கள் எல்லாம் கிறிஸ்டல் கற்கள்.ஆனால் வைரம்போல ஜொலிக்கிறது.இதை உன் மகளுக்காகவே வாங்கி வந்தேன்".என்று நல்ல வார்த்தைகளால் அம்மாவை அபிஷேகித்துக்

கொண்டிருந்தார்கள்.அம்மாவின் முன்னிலையில்
எங்களை நன்றாக பாசமுடன்
கவனிப்பதுபோலவும்,அக்கறையுடன்
இருப்பதுபோலவும் வேஷமிட்டு
கொண்டிருந்தார்கள்.

அன்று அம்மா எங்களுடன் தங்கிவிட்டு,
மறுநாள் ஞாயிற்று கிழமை காலையில் கிளம்பி
வீட்டிற்கு சென்றுவிட்டோம் .அம்மாவிடம்
நாங்கள் பெரியம்மாவை பற்றி கூற மறந்து
விட்டோம். அதன் பிறகு சிறுவர்களாக
இருந்ததால் விளையாட்டில் எங்கள்
பெற்றோர்களிடம் நடந்ததை சொல்ல
மறந்துவிட்டோம் என்றே நினைக்கிறேன்.

அதன் பிறகு பல சமயம் பெரியம்மா
அம்மாவிடம் கூறாமல் எங்களை அவர்கள்
வீட்டிற்கு அழைத்துசென்று வேலை வாங்கி
வதைத்து வந்தும்,ஏனோ எங்களுக்கு எங்கள்
பெற்றோரிடம் அதை கூறவோ?அல்லது
பெரியம்மா வீட்டிற்கு வர முடியாது என
கூறவோ தைரியமில்லாமல் இருந்தோம்.மிகவும்

பயந்தவர்களாகவும்,கோழைகளாகவும்,நானும்,அண்ண
ஷானும் இருந்தோம்.

காலம் வெகுவாக ஓடியது.
பள்ளிக்கூடத்திலும்,என் வாய்பாட்டிலும்
என்னிடத்திலே முன்னேட்ட்ரம்
ஏற்பட்டது.பள்ளிக்கூடத்தில் பாட்டு
போட்டி,எழுத்துபோட்டி ,விளையாட்டு போட்டி
முதலியவற்றில் முதல் பரிசும் பாராட்டும் பெற்று
வந்தேன்.கணக்கு பாடத்தை தவிர பிற
பாடங்களிலும் 90 -க்கு மேல் மதிப்பெண்களை
பெற்று தெரிவந்துகொண்டிருந்தேன்.

23

அத்யாயம்-இருபத்தி மூன்று

1970-ம் வருடமும் பிறந்ததது.அம்மாவின் பள்ளி கூடத்தில் ஒவ்வொரு வருடமும் கோடை விடுமுறை ஆரம்பிக்கும்முன் பள்ளிக்கூட விழா நடத்துவது வழக்கம்.அம்மாவின் பள்ளிக்கூட தலைமை ஆசிரியருக்கு அம்மாவை மிகவும் பிடித்க்கும்.ஒவ்வொரு வருடமும் அந்த விழா நடத்தும் முழு பொறுப்பையும் அம்மாவிடம்தான் ஒப்படைப்பது விடுவார்கள்.அம்மா சரித்திரம் மற்றும் ஆங்கில பாட ஆசிரியர், அதிலும் சரித்திரம் என்றால் அம்மாவிற்கு மிகவும் பிடித்த பாடம்.பொது நூலகத்திற்கு சென்று பழைய

கால இராஜா சரித்திரங்களையும்,நாடக புத்தகங்களையும் நிறையவற்றை எடுத்து வந்து படித்துவிட்டு,பள்ளிக்கூட இறுதிவிழாவிற்கு அதிலிருந்து ஒரு நாடகத்தை தேர்ந்தெடுத்து,தன் வகுப்பில் திறமையாகவும், அழகாகவும் இருக்கும் பெண்களை தேர்ந்தெடுத்து,

இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே பயிற்சியை ஆரம்பித்துவிடுவார்கள்.மாலையில் பள்ளிகூடம் நேரம் முடிந்த பிறகு இரண்டு மணிநேரம் அங்கேயே தங்கி மாணவிகளுக்கு பயிற்சியை அளித்துவிட்டு வருவார்கள் அம்மா.சனிகிழமை,ஞாயிற்று கிழமைகளிலும் கூட சில மணி நேரங்கள் பள்ளிக்கூடம் சென்று மாணவிகளுக்கு பயிற்சியை அளித்து வந்தார்கள்.

அந்த வருடம் அம்மா “கண்ணகி”என்ற நாடகத்தையும்,அம்மாவும்,அம்மாவுடன் வேலை செய்த இரு ஆசிரியர்களும் சேர்ந்து ஒரு பரத நாட்டியமும் ஆட ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அம்மா நாட ஒத்திகைக்கு பள்ளிக்கூடம் செல்லும்போதெல்லாம் எங்கள் நால்வரையும் தன்னுடன் அழைத்துசெல்வது வழக்கம்.ஒருநாள் ஞாயிற்று கிழமை “கண்ணகி”நாடக ஒத்திகைக்கு மதிய சாப்பாட்டை முடித்துக்கொண்டு பள்ளிக்கூடம் வருமாறு தன் மாணவிகளுக்கு அறிவித்திருந்தபடியால்,எங்கள் நாலவரையும்,குமாரி அக்காவையும் அழைத்துக்கொண்டு தன் பள்ளிகூடத்திற்கு ஒத்திகையை பார்க்க அழைத்து சென்றிருந்தார்கள் அம்மா.

நாங்கள் ஐந்து பேரும் ஒரு முலையில் உட்கார்ந்துகொண்டு நாடக ஒத்திகையை பார்த்து கொண்டிருந்தோம்.கண்ணகியாக நடித்த அந்த பத்மா அக்கா பார்க்க மிகவும் அழகாகவும்,நீண்ட அழகிய கரிய கூந்தலும்,அந்த அக்காவின் கூந்தல் முழங்காலுக்கு கீழ்வரை மிகவும் நீளமாக அழகாக இருந்தது.பத்மா அக்கா ஐந்தரை அடி உயரம் இருக்கலாம்.நல்ல சிவந்த நிறம்.அந்த பத்மா அக்காவை மனதில் வைத்தே அம்மா கண்ணகி நாடகத்தை

தேர்ந்தெடுத்தார்கள்.பத்மா அக்காவிற்கு கண்ணகி வேஷம் மிகவும் கனகச்சிதமாக பொருந்தி இருந்தது.ஆனால் கண்ணகி போல வீரவசனம் பேச மிகவும் கஷ்டப்பட்டார்கள் பத்மா அக்கா.பல நாட்கள் அம்மா எவ்வளவோ முயற்சி செய்தும் பத்மா அக்காவிற்கு அந்த கண்ணகி நாடகத்தில் கடைசி கட்டத்தில் கண்ணகி பேசும் வீரவசனம் மட்டும் பேச வரவே இல்லை.

“கண்ணகி” என்ற கதை தமிழ் நாட்டில் மிக பழைய காலத்து காவிய கதையாகும்.காவிய கதை மட்டுமில்லாமல் எல்லா மக்களின் மனதையும் கவர்ந்த உண்மை கதையாகவும் இருந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த உண்மை கதை என்றும் கூறுவார்கள்.

கண்ணகி என்ற கற்புக்கரசி தமிழகத்தில் இறண்டாவது அல்லது முன்றாவது நூற்றாண்டில் காவிரிபூம்பட்டினத்தில் ஒரு பெருங்குடி வணிகரின் மகளாக பிறந்து ,மற்றொரு பணக்,கார பெருங்குடி வணிகரின்

மகனான் கோவலன் என்பரவரை மணந்தது சந்தோஷமாக
வாழ்ந்துடோண்டிருக்கையில்,கோவலனுக்கு அந்த ஊரிலுள்ள ஒரு அரசனவ நாட்டிய நங்கை மாதவி என்பவர் மீது காதல் ஏற்பட்டு விடுகிறது.அவர்கள் காதல் முற்றி .கோவலன் கண்ணகியுடன் தாங்கும் காலம் குறைந்து, மாதவியுடன் தங்கி வாழும் காலம் அதிகமானது .அவ்வப்போது தன் செலவிற்கும்,மாதவிக்கு பரிசளிக்கும் பொருட்டு நகைகளையும்,பணத்தையும் கண்ணகியிடம் வந்து வாங்கி சென்று கொண்டிருந்தான் கோவலன்.கண்ணகியும் தன் கணவனின் மேல் உள்ள காதலாலும்,ப்ரியத்தாலும் ,கணவனின் சுகமே தன சுகம் எனவும்,கணவனின் சந்தோஷமே தன சந்தோசம என நினைத்து கோவலன் வரும் சமயம் எல்லாம்,எந்தவித மறுப்பும் இல்லாமலும்.கேள்விகளை கேட்காமலும் கோவலனுக்கு தேவையானவற்றை கொடுத்து வந்தாள் .

ஒருநாள் கோவலனும்,மாதவியும்

காவிரிபூம்பட்டினத்தில் கரையோரம் அமர்ந்து கொண்டிருக்கையில் ,அவர்களுக்கு இடையில் விளையாட்டாக ஏற்பட்ட வாக்குவாதம் வினையில் முடித்து.மனமுடைந்த கோவலன் மாதவியின் மீது கோபமுற்று ,மாதவியை விட்டு பிரிந்து கண்ணகியிடம் மீண்டும் திரும்பி வந்து ,தான் மனம் திருந்தி விட்டதாகவும் இனி கண்ணகியை விட்டு பிரியபோவதில்லை எனகூறி ,அந்த ஊரைவிட்டு கண்ணகியுடன் கிளம்பி பிழைப்பதற்காக வெளி ஊரான மதுரை மாநகரை அடைந்த போது,அப்போது அவர்களிருவரிடமும், கண்ணகியிடம் இருந்த இரண்டு மாணிக்கம் நிறைந்த கால் சிலம்புகளை தவிர வேறு எந்த நகைகளோ,பணமோ கையில் இல்லாததால்,தன கணவனுக்கு தைரியம் கூறிய கண்ணகி,தன கால் சிலம்புகளில் ஒன்றை கழற்றி கோவலனிடம் கொடுத்து ,அதை விற்று ,அந்த பணத்தில் வீட்டிற்கு தேவையானவற்ற வாங்கிவருமாறு அனுப்பிவைத்துவிட்டு,கோவலன் வரவை எதிர்ப்பார்த்து வீட்டில் காத்திருந்தாள் .

கோவலனும்,கண்ணகியும் மதுரை மாநகரை

அடைந்த அன்றுதான் அப்பாண்டிய நாட்டு மன்னனான குலோத்துங்க சோழனின் மனைவி கோப்பெருந்தேவியின் கால் சிலம்பு ஒன்று காணாமல் போய்விட்டதாகவும்,அதை கண்டுபிடித்து திருப்பி தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் அளிக்கப்படும் என்றும் ஊருக்குள் அறிவிக்கபட்டிருந்தது.மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியின் கால் சிலம்பு முத்துக்களால் நிரப்பப்பட்டது.ஆனால் கண்ணகியின் கால் சிலம்பு மாணிகத்தால் நிரப்பப்பட்டது.ஆனால் பார்ப்பதற்கு இரண்டும் ஒரே மாதிரியாக இருந்தது.

கண்ணகியின் கால் சிலம்பை கடைக்கு விற்ப்பதற்க்காக எடுத்து சென்ற கோவலனை ,அந்த கடைகாரர் ,கோவலன் அரசி கோப்பெருந்தேவியின் சிலம்பை திருடி, அதை தன கடைக்கு விற்க வந்தததாக தவறாக எண்ணி, அந்த சிலம்பை அரசனைவக்கு எடுத்து சென்று மன்னனிடம் காண்பித்ததும்,மன்னனும் கோவலனை திருடன் என கருதி, கோவலனை கைது செய்து அழைத்து வரச்சொல்லி,

தீரவிசாரிக்காமல் ,கோவலனுக்கு அந்த நிமிடமே மரணதண்டனை விதித்து கொன்றுவிட்டான்.

சிலம்பை விற்க சென்ற கணவன் வெகு நேரம் ஆகியும் திரும்ப வராததால் ,அக்கம் பக்கத்தில் விசார்த்துகொண்டு கண்ணகி வருகையில், தன் கணவனை மன்னன் குலோத்துங்க தீர விசாரிக்காமல் நீதி தவறி தன கணவனை கொன்ற செய்தி கேட்டு மனம் கொதித்தெழுந்த கண்ணகி ,பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டு தன கணவன் கள்வன் இல்லை என்ற உண்மையை நிலை நிறுத்த வேண்டி தன்னுடை மற்றொரு காலில் இருந்த சிலம்பை கழற்றி கையில் எடுத்து கொண்டு. தன நீண்ட விரிந்த கூந்தலுடன் அரசவையை நோக்கி சென்று,பாண்டிய மன்னன் முன்னால் நின்று கொண்டு ,தன ஒரு கையில் சிலம்பை தூக்கி பிடித்தவண்ணம்,"பாண்டிய மன்னனே என் கணவனும் ,நானும் பிழைக்க வேண்டி இப்பாண்டிய நாட்டிற்கு வந்தோம். கையில் பணம் இல்லாததால் என் காலில் உள்ள ஒற்றை சிலம்பை கொடுத்து, விற்று பண்டம் எடுத்துவர

அனுப்பினேன், ஆனால் தீர விசாரிக்காமல் என கணவனை நீ கொன்றுவிட்டாய்"என முறை இட்டு ஆவேசமாக பேசினாள் .

உடனே மன்னன் கோவலன் கையில் இருந்த சிலம்பு அரசியின் சிலம்பு போல இருந்ததால் ,அதை அரசி கோப்பெருந்தேவியின் சிலம்பு என நினைத்தேன் என கூறவே,"மன்னா என் சிலம்பிலுல்லவை விலை உயர்ந்த மாணிக்கங்கள்,சந்தேகமானால் இதோ என்னுடைய மற்றொரு சிலம்பை உடைக்கிறேன் பாருங்கள் என கோபத்துடன் தன கையில் இருந்த சிலம்பை தரையில் போட்டு கண்ணகி உடைத்ததும் அதிலிருந்து விலை உயர்ந்த மாணிக்க கற்கள் சிதறி ஓடின.உடனே மன்னன் அரசியின் காலிலிருந்து, கோவலனிடமிருந்த பெற்ற சிலம்பை எடுத்து உடைத்து பார்த்ததில் அதிலிருந்தும் மாணிக்க கற்கள் சிதறி ஓடியதை கண்டு. தன் ஆட்சியில் தீர விசாரிக்காமல் முறை தவறி ,நிரபராதியை கொன்ற நிலையை எண்ணி மனம் உடைந்த பாண்டிய மன்னன் ,அதே இடத்தில் உண்மை அறிந்தது ,

சிம்மாசனத்திலிருந்து விழுந்து இறந்து விடுகிறான.அப்போது அவையோர்களை பார்த்து கண்ணகி வீர வசனம் அழுதுகொண்டே பேசவேண்டும் “சொல்லுங்கள் அவையோர்களே என் கணவன் கள்வனா?என் கணவன் கள்வனா? என கேட்கவேண்டும், அதற்க்கு அவையில் உள்ளாவார்கள் இல்லை, இல்லை என் கரகோஷமிடவேண்டும், பிறகு கண்ணகி ஆவேசமாக சிரித்துக்கொண்டே அந்த மதுரை மாநகரை எரித்து சாம்பலாகிவிடுவது போல கடைசி காட்சி அமைந்திருந்தது.

இந்த கடைசி கட்ட வசனத்தை பத்மா அக்கா வீராவேசமாக பேச சொல்லி அம்மா எவ்வளவோ எடுத்து சொல்லியும் பத்மா அக்காவால் அந்த வசனத்தை அம்மா எதிர்பார்த்த அளவிற்கு சிறப்பாக தத்ரூபமாக பேசமுடியாமல் கஷ்ட்டப்பட்டார்கள்.சிறிது நேரத்திற்கு பிறகு பொறுமை இழந்த அம்மா கோபமடைந்தது தன இருக்கையை விட்டு எழுந்து சென்று எல்லோர் முன்னிலையிலும் பத்மா அக்காவின் கனனத்தில் பளீரென்டு ஒரு அரை விட்டதும் ,அந்த அக்கா

கன்னத்தை பிடித்துக்கொண்டே கண்ணில் நீர் பெருக தன்னையும் அறியாமல் வசனத்தை அருமையாக சொல்லி நடித்ததும், முதலில் அம்மாவின் இந்த எதிர்பாராத செய்கையால் அசந்து நின்ற அனைவரும் ,பத்மா அக்கா இம்முறை வசனத்தை எதிர்பார்த்த அளவிற்கு அருமையாக பேசி முடித்தது கண்டு சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்தது கைத்தட்டினார்கள்.

அம்மா மனம் மிகவும் கஷ்டப்பட்டது. பத்மா அக்காவை தேவை இல்லாமல் அடித்துவிட்டோமே என்று.அம்மா பத்மா அக்காவிடம் சென்று அவர்களை கட்டி அணைத்த வண்ணம் “மன்னிச்சுக்கோ பத்மா,கோபத்தில் என்ன செய்வது என தெரியாமல் உன்னை அறைந்துவிட்டேன்.தப்பாக எடுத்துகொல்லாதே.இதை மனதி வைத்துகொண்டு நாடகத்திற்கு தொடர்ந்து வராமல் இருந்துவிட்டாதே.உனக்காகவே இந்த நாடகத்தை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்”,என மிகவும் பரிவுடன் பேசினார்கள்.

“ஐயோ,மேடம் நீங்கள் அந்த மாதிரி ஒரு அரை என் கன்னத்தில் கொடுக்கவில்லை என்றால் இப்படி ஆவேசமான ஒரு வசனத்தை திறம்பட என்னால் கனவில்கூட பேசி இருக்கவே முடியாது.தாவு செய்து பள்ளிகூட விழா அன்று மேடையில் இந்த காட்சிக்கு நான் செல்லும்முன் இதே மாதிரி கோபமாக என் கன்னத்தில் ஒரு அரை விட்டு அனுப்புங்கள் அப்போதுதான் நான் நன்றாக வசனம் பேச வசதியாக இருக்கும் என மகிழ்ச்சியுடன் கூடிய அழுகையின் நடுவே கூறினார் பத்மா அக்கா.

அம்மாவும் ஆனந்தத்துடன் பத்மா அக்காவை சமாதானாப்டுத்த முதுகில் தட்டி கொடுத்தார்கள்.பத்மா அக்காவிற்கு கன்னத்தில் விழுந்த அறையை பார்த்து மற்ற கதா பாத்திரத்தில் நடிக்கும் மாணவிகளுக்கும் பயம் ஏற்பட்டு தம் தம் பத்திரத்தை அதன் பிறகு திறம்பட இன்னும் சிறப்பான முறையில் பேசி நடத்தி அம்மாவின் பெரும் பாராட்டுதலை

பெற்றார்கள் அன்று.

அதன் பிறகு பத்மா அக்கா இன்னும் சிறப்பாகவே வசனம் பேசினார்கள் .அம்மாவின் மனம் மிகவும் ஆனந்தத்தால் துள்ளியது.அவர்களது கண்ணகி நாடகம் மிக சிறப்பாக அமையபோகிறது என்ற சந்தோஷ மிகுதியில் தினமும் நாடக காட்சிகளுக்கான அமைப்புகளை ஆர்வத்துடன் தயார் செய்து வந்தார்கள்.

பள்ளிகூட விழாவிற்கு இரண்டு வாரத்திற்கு

சென்னையிலுள்ள ஜெமினி ஸ்டூடியோவிற்கு சென்று நாடகத்திற்கு வேண்டிய நகைகளையும்,மற்றும் ஒவ்வொரு காட்சிற்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் ஒரு நீண்ட பட்டியல் போட்டுகொண்டு ,என்னை மட்டும் தன்னுடன் ஜெமினி ஸ்டூடியோவிற்கு ஒருநாள் சாயங்காலம் ஆறுமணி அளவில் அழைத்து சென்றார்கள் அம்மா.ஜெமினி ஸ்டூடியோ சொந்தக்காரரான திரு

எஸ்.எஸ்.வாசன் அம்மாவின் குடும்பத்திற்கு உற்ற நண்பர் என்பதால் ,எங்கள் அம்மா எப்ப வேண்டுமானாலும் சென்று நாடகத்திற்கு வேண்டிய பொருட்களை எடுத்து செல்ல அனுமதி இருத்ததால்,வருடம் ஒரு முறை அம்மாவுடன் நான் மட்டும் சென்று எல்லாவற்றையும் பட்டியலில் உள்ளபடி ஒன்றுவிடாமல் பொருக்கி எடுத்து மூட்டையாக கட்டி எடுத்து கொண்டு இரவு ஒன்பது மணிபோல டாக்சியில் வீடு வந்து சேர்வது வழக்கம்.எல்லா பொருட்களும் அம்மா *pnaatti*ட்டியல் போட்டு எவ்வளவு என சரியாக கணக்கு வைத்திருப்பார்கள்.நாடகம் முடிந்ததும் அத்தனையையும் மறுபடியும் பட்டியலில் உள்ளபடி சரி பார்த்து எடுத்து சென்று ஒப்படைத்து விடுவார்கள்.

அம்மாவும்,அவர்களுடன் வேலை செய்து வந்த மற்ற இரண்டு ஆசிரியர்களும் நாட்டிய பயிற்சியை ஒவ்வொரு சமயமும் ஒவ்வொருத்தர் வீட்டில் பயிற்சி செய்து வந்தார்கள்.சில சமயங்களில் பள்ளிகூடத்திலே

பயிற்சி செய்து வந்தார்கள்.

ஒவ்வொரு வருடமும் அம்மா வேலை செய்து வந்த பள்ளிகூட இறுதிவிழாவிற்கு அந்த பள்ளி கூடம் இருக்கும் பகுதியிலுள்ள மாணவிகளின் பெற்றோகளும்,உறவினர்களும்,ஆவலுடன் காத்திருப்பார்கள்.விழா நாள் அன்று பொதுமக்களும் வந்து பார்ப்பதரக்கு விசேஷ அனுமதியும்,சலுகையும் உண்டு. அம்மாவின் நடனமும்,அவர்கள் நடத்தும் நாடகமும் அந்த பகுதியிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். அம்மா அந்த பள்ளியில் ஒரு சிறந்த வரலாற்று ஆசிரியர் என பெயர் பெற்று இருந்தார்கள்.தினமும் சரித்திர பாடத்தை வகுப்பில் ஒரு நாடகம் போலவே நடத்தி மாணவிகள் மனதில் சரித்திரத்தை ஆழமாக பதியும் வண்ணம் போதித்து வந்ததால், அம்மாவிடம் படித்த மாணவிகள் சரித்திர பாடத்தில் சிறந்து விளங்கினார்கள்

அவ்வருடம் அம்மாவின் நாடகத்தையும் ,நடனத்தையும் பார்க்க வேண்டியே

தாத்தா ஈஸ்வரனும்,பாட்டி கமலாவும்
ஊரிலிருந்து வந்திருந்தார்கள்.அவர்கள்
வழக்கம்போல பெரியம்மா வீட்டில் தங்கி
இருந்தார்கள். நான் மிக ஆவலுடன்
காத்திருந்தேன் அந்த கண்ணகி நாடகத்தை
மேடையில் பார்ப்பதற்காக.அம்மாவின்
நாட்டியத்தை நாங்கள் பார்த்ததே
இல்லை.அதற்காகவும் ஆவலுடன் பார்க்க
காத்திருந்தேன்.

பள்ளிகூட விழா நாளும் வந்தது,அம்மா
காலையிலேயே புறப்பட்டு பள்ளிகூடத்திற்கு
சென்றுவிட்டார்கள். குமாரி அக்காவிடம் எங்கள்
நாலு பேரையும் மாலையில் நாலு மணிபோல
பள்ளிகூடத்திற்கு அழைத்து வருமாறு
சொல்லிவிட்டு சென்று விட்டார்கள்.

அம்மா சொன்னதுபோல குமாரி அக்கா எங்க
நாலு பேரயும் அழைத்துக்கொண்டு அம்மாவின்
ஸ்கூலுக்கு சரியாக நான்கு மணிக்கெல்லாம்
சென்றுவிட்டோம்.நாங்கள் நேராக
அம்மாவும்,மற்றவர்களும் இருக்கும் மேக்கப்

அறைக்கு ஆர்வத்துடன் விரைந்து ஓடினோம்.எங்களை கவனிக்க அம்மாவிற்கு நேரமே இல்லை.அம்மா அனைவருக்கு மேக்கப் போடுவதும், நாடக மேடையை அலங்கரிப்பதும் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

அனைவரும் அவரவர் நாடக உடையில் பார்க்க மிகவும் பிரமாதமாகவும், அழகாகவும் இருந்தார்கள்.பள்ளிகூட விழா சரியாக ஆறு மணிக்கு ஆரம்பமாக இருந்தது. நாடக அரங்கம் முழுதும் கூட்டம் நிரம்பி வழித்தது.உட்கார சீட் கிடக்காதாதால் பலபேர் அரங்கத்தை சுற்றி கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டிருந்தார்கள்.தாத்தாவும்,பாட்டியும் ஆறு மணிக்கு முன்னாலேயே வந்துவிட்டனர்.எங்களுக்கு மேடைக்கு அருகிலேயே உள்ள முன் வரிசையில் உட்கார்ந்து கொள்ள இடம் ஒதுக்கபட்டிருன்தது.

நிகழ்ச்சி ஆரம்பமாகி,தலைவர் முதல் பள்ளிகூட தலைமை ஆசிரியர் வரை எல்லோரும் துவக்க விழா பேச்சை முடித்த பிறகு, மற்ற நடன

நிகழ்ச்சிகளும் ,பல நிகழ்ச்சிகளும் நடந்துமுடிந்த பிறகு,விழாவின் கடைசி நிகழ்ச்சியாக கண்ணகி நாடகம் வைக்கப்பட்டிருந்தது. அனைவரும் கண்ணகி நாடகத்தை பார்க்க ஆர்வமுடன் காத்துக்கொண்டிருந்தார்கள்.நாடகம் துவங்கும் நேரமும் வந்தது,ஒவ்வொரு காட்சியும் ஒத்திகையில் பார்த்ததை விட மிகவும் சிறப்பாகவே அமைந்த்திருந்தது.அரங்கிலுள்ள கூட்டம் அனைத்தும் ஒவ்வொரு காட்சி முடிந்து திரையை மூடி திறக்கும் போதும் மகிழ்ச்சி ஆராவாரத்தில் கைதட்டி தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்தனர்.ஒவ்வொரு காட்சியிலும் மாணவிகளின் நடிப்பு அரங்கிலுள்ளவர்களை திகைக்கவைத்தது. நான் ஆவலுடன் கண்ணகியாக நடிக்கும் பத்மா அக்காவின் கடைசி காட்சியில் கண்ணகி பேசும் வீர வசனத்தை எப்படி இன்றைக்கு பேச போகிறார்கள் என ஆவலுடன் எதிர்பார்த்து காத்துகொன்டிருந்தேன்.

நான் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த அந்த கடைசி காட்சியும் வந்தது.அனைவரும்

எதிர்பாராத வண்ணம் கண்ணகியாக நடித்த பத்மா அக்கா அனைவரின் மனதையும்,அம்மா உள்பட, உருக்கும் வண்ணம் மிக அருமையாக நடித்து அனைவரது கைத்தட்டலையும்,பாராட்டுதலையும் பெற்றார்.என்னால் நம்பவே முடியவில்லை .அரங்கில் கைத்தட்டல் பலமணிநேரம் ஓயாமல் நீடித்திருந்தது.அன்று அவ்வளவு திறமையாக நடித்து முடித்தார் பத்மா அக்கா.

நாடகம் முடிந்ததும் அம்மாவன் நடனமே கடைசி நிகழ்ச்சியாக முடிந்தது.அதனால் அம்மாவுடன் மற்ற இரண்டு ஆசிரியர்களும் நாட்டிய உடையுடனும்,மேக்கப் உடனும் தயாராக நின்றிந்தார்கள். அம்மாவின் கண்களில் ஆனந்த கண்ணீர் வழிந்தோடுவதை மண்ட மற்ற இரு ஆசிரியைகளும்"அழாதே மங்கை,அடுத்தது நாம் நடனம்தான்,மேக்கப் கலைந்துவிட்டால் திரும்ப போடா நேரம் இல்லை ", என தேறுதல் வார்த்தை கூறி அம்மாவை ரொம்ப உணர்ச்சிவசபடாமல் பார்த்து கொண்டார்கள்.

அம்மாவின் நாடியமும் முடிந்தது.முவரும் மிக அழகாக ஆடினர் .மிகவும் இனிமையான பாட்டிற்கு நடனம் ஆடினார்கள்.அந்த பாட்டின் மெட்டு இன்றும் என் காதுகளில் ரீங்காரமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.ஆனால் வார்த்தைகள் மட்டும் நினைவில் இல்லை.

நிகழ்ச்சிகள் முடிய இரவு பத்து மணி ஆகிவிட்டதால் அனைவரும் மிக களைப்புடன் இருந்தோம்.அதிலும் அம்மா ரொம்பவே களைப்புடன் இருந்தததால் நடன உடைகளையும், நகைகளையும் கழற்றாமல், வீட்டிக்கு போய் மேக்கப் ஐ கலைத்துகொள்ளலாம் என நினைத்து, குமாரி அக்காவிடம் ஒரு டாக்சியை அழைத்து வர சொல்லவே, அனைவரும் டாக்சியில் ஏறி உட்கார்ந்து கொண்டோம். தாத்தாவும் பாட்டியும் பெரியம்மாவுடன அவர்கள் காரில் பெரியம்மாவின் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள்.

எங்கள் டாக்சி பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்து சிறிது தூரம் கூட

சென்றிருக்காது,எங்கள் ராக்சிக்கு அருகே
செல்லும் மற்ற காரிலுள்ளவர்களும்,நடந்து
செல்பவர்களும்,பொது பஸ்சில் செல்பவர்களும்
,டாக்சிக்குள் அம்மா பரத நாட்டிய
உடையுடனும்,நகைகளுடனும்,மேக்கப் உடனும்
இருத்ததை பார்த்து விட்டு எதோ ஒரு பெரிய
திரைப்பட நடிகை சினிமா ஷூடிங்கிற்கு
போவதாக நினைத்து கொண்டு அவர்கள்
வாயில் வந்த பிரபல நடிகைகள் பெயரை
எல்லாம் சொல்லி அழைத்துகொண்டே
ஆரவாரம் செய்து கொண்டு எங்கள்
டாக்சியை துரத்தவே ,அம்மா டாக்சி
ஓட்டுபவரிடம் அங்கு மனித நடமாட்டம்
அதிகமில்லாத சந்து வழியாக ஓட்டி
செல்லுமாறும்,டாக்சி மீட்டருக்கு மேலே அதிக
பணம் தருவதாகவும் கூறவே டாக்சி
ஓட்டுபவாரும் எங்களை எந்த
தொந்தரவுமில்லாமல் வீடு வந்து சேர்த்தார்.

ஒரு வாரத்திற்கு மேல் ஓடியது.அம்மாவின் ரைட்
கால் பாதத்தில் ஒரு பெரிய கட்டிபோல வந்து
சீழ் கோர்த்துக்கொண்டு நடக்க முடியாமல்

அவதிபட்டார்கள். கட்டி ஒவ்வொரு நாளும் பெரிதாகிக் கொண்டே வந்ததுடன் இல்லாமல் காலை கீழே வைத்து நடக்க முடியாமல் மிகவும் வலியுடன் அம்மா துடித்து வந்ததால்,மருத்துவரிடம் சென்று காண்பித்ததில்,அவர் அந்த கட்டியை அறுவை சிகிச்சை செய்துதான் அகத்ற்றவேண்டும் என கூறி,அன்றே அந்த கட்டியை அறுவை சிகிச்சை செய்து சுத்தம் செய்து காலில் கட்டு போட்டு வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.புண் ஆற எப்படியும் பத்து நாட்களுக்கு மேல் ஆகும் அதுவரை அம்மாவால் சரியாக காலை கீழே வைத்து நடக்காமல் பார்த்து கொள்ள சொல்லி மருத்துவர் கூறிவிட்டதால், அம்மா சிறிது நாட்கள் முடித்தவரை ரொம்பவும் நடக்காமல் பார்த்துகொண்டார்கள்.

பத்து நாட்களுக்கு பிறகும் அம்மா காலை சரியாக தரையில் வைத்து நடக்கமுடியாமல் தாங்கி தாங்கியே நடந்து வந்தார்கள்.மற்றவர்களும் ,அம்மாவின் பெற்றோர்களும் ,அம்மாவின் நாட்டியத்தையும்,

நாடகத்தையும் பார்த்துவிட்டு சென்ற ஊர் மக்களின் கண் திருஷ்டியால்தான் அம்மாவுக்கு இப்படி ஏற்பட்டுவிட்டது என தினமும் புலம்ப ஆரம்பித்து விட்டார்கள்.

ஒரு மாதமாகவே நொண்டி போல தாங்கி தாங்கி நடந்து வந்ததால் அம்மாவின் இரு முழங்கால்களும் அதிக வலி ஏற்படலாயிற்று.அறுவை சிகிச்சையாலும் ,ஒரு மாதம் தாங்கி தாங்கி நடந்து வந்ததாலும் முட்டி வலி ஏற்பட்டிருக்கலாம் என அனைவரும் எண்ணிக் கொண்டிருந்தனர்.அதனால் இதை ஒரு பெரிய விஷயமாக அம்மா உள்பட யாருமே பொருட்படுத்தாமல் இருந்துவிட்டார்கள்.

இதற்கிடையில் ஒருநாள் எங்கள் தாய்மாமா ஜகன்னாத் மனைவியான மாமி கமலியின் தம்பியின் திருமணத்திற்கு சென்றிருந்தோம்.அதில் அம்மாவின் பெற்றோரோகளும்,பெரியமாவும் வந்திருந்தனர்.வழக்கமாக அம்மா காஞ்சிபுரம் பட்டுப்புடவையும், அதற்க்கு பொருத்தமான உயர்ந்த ரக கண்ணாடி வளையல்களையும்,

தங்க வளையல்களுக்கு நடுவே கலந்து அணிந்து, அதற்க்கு பொருத்தமாக கம்மல்,நெக்லஸ் முதலியவற்றை அணிந்து செல்பவர்கள் அன்று சாதாரண பட்டுபுடவையில் கழுத்தில் வெறும் தாலிசெயினுடன் சென்றிருந்ததை பார்த்த பெரியம்மா,

“என்ன மங்கை,உன் நகைகள் எல்லாம் என்னவாயிற்று?ஏன் இப்படி எதுவுமில்லாமல் வந்திருக்கிறாய்?” என ஆச்சரியத்துடன் கேட்டதற்கு.

“ரொம்ப களைப்பாக இருந்தது .வீட்டில் வேலை வேறு அதிகமாக இருந்தது எனவே நேரம் இல்லாததால் இப்படி சாதராணமாக வந்துவிட்டேன்”.என பதிலளித்துவிட்டு மௌனமாக இருந்துவிட்டார்கள்.அன்று அம்மா சொன்னதை பாட்டி,தாத்தா, பெரியம்மா அனைவரும் முழுமையாக நம்பிவிட்டார்கள்.

திருமணம் முடிந்தவுடன் நாங்க நாலுபேரும்,அம்மா,குமாரி அக்காவும் பெரியம்மா

வீட்டிற்கு சென்று அன்றிரவு அவர்களுடன் தங்கிவிட்டோம். தாத்தாவும்,பாட்டியும் எங்களுடன் பெரியம்மா வீட்டில் தங்கினார்கள் அன்று.

அன்றிரவு சாப்பாட்டிருக்கு பிறகு வரவேற்ப்பரையில் உடகார்ந்துகொண்டு அனைவரும் பேசிகொண்டிருக்கையில் பெரியம்மா வீட்டில் வேலை செய்யும் உமா"அம்மா உங்கள் அமெரிக்கா பயண கதையை பாதியில் விட்டு விட்டீர்களே,மீதியை இன்றைக்கு தொடர்ந்து சொல்கிறீர்களா?எல்லோரும் அதை கேட்க ரொம்ப ஆர்வத்துடன் இருக்கிறோம்.அதோட இல்லாமல் இன்று எல்லோரும் இங்கு ஒன்றாக இருக்கிறோம்".என கெஞ்சி கேட்டாள் .

சிறிது யோசித்து கொண்டிருக்கையில் ,அம்மாவும் "ஆமாம் சேது, போன முறை நீ பாதியில் நிறுத்தி விட்டாய்.மீதியையும் சொல் கேட்கிறோம்" என தொடர்த்து உமாவை ஆதரிக்கும்படி கூறியதும்,பெரியம்மாவும் சரி என

கூறவே கதைய மீண்டும் தொடர ஆரம்பித்தார்கள்,"போன முறை எங்கு நிருந்த்தினேன்" என்றார்கள்.

நான் பேப்பரில் பெரியம்மா போனமுறை சொன்னாதை எழுதிவைத்திருந்ததால் கடைசியாக அவர்கள் நிறுத்திய இடம் எனக்கு நன்றாக ஞாபகத்திலிருந்தது.

"நீங்கள்இங்கிலாந்திர்லிருந்து ஜார்ஜ் என்ற கப்பலில் ஏறி அமெரிக்கா செல்ல தயார் ஆனீர்கள் என முடித்தீர்கள் பெரியம்மா,அதை க்வீன் எலிசபெத் கப்பலுடன் ஒப்பிடவே முடியாது என்றும் சொன்னீர்கள்"என்று ஞாபகபடுத்தினேன்.

'சரி, என கதைய மீண்டும் தொடர ஆரம்பித்தார்கள் .அனைவரும் பெரியம்மாவை சுற்றி தரையில் உட்கார்ந்துகொண்டு கதையை கேட்க ஆரம்பித்தோம்.எங்களுடன் தாத்தாவும் பாட்டியும்கூட உட்கார்ந்திருந்தார்கள்.அனைவரும் குடும்பமாக உட்கார்ந்து கதை கேட்க

ஆரம்பித்தோம்.பெரியம்மா கதை சொல்லும் போது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்.நாமும் அவர்கள் கூட பயணம் செல்வது போல ஒரு உணர்வு ஏற்படும்.

24

அத்யாயம்-இருபத்து நான்கு

"குறித்த நேரத்தில் நடுப்பகலில் எங்கள் கப்பல் மெள்ள திறமுகத்தை விட்டு நகர ஆரம்பித்தது. என்னுடைய கேபினில் இரண்டே பேர்தான் .ஒருவன் மராத்திய பெண், மற்றும் நான்.மதராசை விட்டு புறப்பட்டு சரியாக ஒரு மாதமாகியும் இன்னும் அமெரிக்காவிற்கு செல்லும் வழியில் பாதிதான் வந்திருந்தேன்"என்றார்கள்.

"அந்த குறுகிய காலத்திதான் எத்தனை மாறுதல்கள்.இந்த கால்கள்தான் எவ்வளவு

சுற்றியிருகின்றன.இவைகள் எல்லாம் வாழக்கையில் மிகவும் மறக்க முடியாதவைகள்.”

“பம்பாயிலிருந்து நான் லண்டனுக்கு சென்ற கர்ப்யு கப்பலை விட அந்த ஜார்ஜ் கப்பல் நான்கு மடங்கு பெரியது.அதில் 1,800 பிரயாணிகளும்,சிப்பந்திகள் 700 பேரும் ,மொத்தத்தில் 2,500 பேர் மிதந்து கொண்டு போய் கொண்டிருந்தோம்.முதலில் கப்பலை சுற்றி வருகையில் சுவரோரங்களில் சில இடங்களில் கரி கரியாக இருந்தது.அது என்ன என விசாரித்ததில் யுத்தத்தின் பொழுது குண்டு வீச்சால் தீ பற்றி கொளுந்சம் எரிந்து அப்படியே சமுத்திரத்தில் மூழ்கிவிட்டதாகவும்,சண்டைக்கு, சமுத்திரத்தின் அடியிலிருந்து அதை வெளியே கிளப்பி ரிப்பேர் செய்து,திருத்தி இப்போது முன்போல பிரயாணிகளை ஏற்றி செல்வதாகவும் தெரிய வந்தது. கேட்டதும் சற்றே திக்கென்றாலும்,பிறகு சரியாகிவிட்டது” என்றார்கள்.

“இங்கிலாந்திலிருந்து புறப்பட்ட எங்கள் கப்பல்

நேரே பிரான்ஸ் தேசத்தின் வடக்கே உள்ள கலே என்ற துறைமுகத்திற்கு சென்று அங்குள்ள பிரயாணிகளை ஏற்றி கொண்டு பிறகு அயர்லாந்தின் தெற்கு பாகத்தேயிருக்கும் கார்க் பட்டணத்தை அடைந்தது. அங்கு உள்ளவார்களையும் ஏற்றி கொண்டு நேரே நியூ யார்க் -கு சவாரி செய்தது.

“அந்த கப்பலில் சில இந்திய மாணவர்களும் இருந்தனர்.எல்லோரும் வட இந்தியரே.மேல் படிப்பிற்காக அமெரிக்கா செல்வபவர்கள்.அமெரிக்காவில் கால்வைக்கும் முன்னமேயே அமேரிக்கா நடை, உடை, பாவனை,நாகரீகம்முதலியவற்றை கைகொள்ள முற்பட்டுவிட்டனர்.இவர்களில் சிலர், ஒரு வட இந்திய மாணவருக்கு ஏற்கனவே ஒரு ஐரோப்பிய நடனம் தெரியும் போலிருக்கிறது.நடன கூடத்தில் தினமும் இரவு வேலைகளில் சக்கைபோடு போட்டு வெள்ளைக்காரர் அனைவரையும் திகைப்படைய வைத்தார்.இதற்குள் இந்தியாவின் சுதந்திர தினத்தை கப்பலில் கொண்டாடும்படி ஆயிற்று

எங்களுக்கு.சிலர் கப்பல் காப்டனிடம் மாலை நிகழ்ச்சி நடத்த வேண்டும் என ஒரு விசேஷ அனுமதியை வாங்கி கொண்டு பிரயாணிகள் அனைவருக்கும் இதுபற்றி அறிவித்து விட்டார்கள். அன்று மாலை நாங்கள் அங்குள்ள பெரிய கூடம் ஒன்றில் பலதரப்பட்ட நிகழிச்சிகள் நடத்த விரும்பினோம்.இந்தியர்கள் நாங்கள் சுமார் 20 பேர் இருந்தோம். நிகழ்ச்சிகளை எப்படி,எங்கே,எத்தனை மணி நேரத்திற்கு நடத்தவேண்டும் என்பதை நிர்ணயிக்கவே இரண்டு நாட்கள் ஆகிவிட்டது."

"இந்த கதம்ப நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு மாஹானதவரும் தமக்கென்று ஒரு அயிட்டம் கொடுக்குமாறு கேட்டதால் எழுந்த தகராறுகள் தீர்ந்ததும்,அயிட்டங்கள் தொகுக்கப்பட்டன.எங்களுக்குள் ஒரு கமிட்டி சார்மன் தேர்ந்தெடுத்தோம்.தமிழ் நாட்டிலிருந்து ஒரு அயிட்டம் வந்தாக வேண்டும்.நம்மில்தான் ஒரு ஆசிரியை இருக்கிறாரே என ஒரு மைசூர் வாசி பிரச்சனையை எழுப்ப,அதெல்லாம் கூடாது.நேரம் போதாது எல்லாம்

ஹிந்தியில்தான் இருக்கவேண்டும்.அத்துடன் அயிட்டங்களை நிறுத்திக்கொள்ளலாம் என்று ஒரு போடு போட்டார் அந்த சர்வாதிகார சேர்மன் .

சரி என அவர்களுக்குள்ளே அமோதித்துகொண்டனர்.பிறகு சுதந்திர தினத்தன்று நிகழ்ச்சிகள் நடக்கையில் அந்த ஹால் மிக சிறியதாகையால் வெள்ளைகாரர்களுக்கு இடம் அளிக்க வேண்டி,எந்த அயிட்டமும் இல்லாத என்னை போன்ற இந்தியர்களையும் ,மற்ற இந்தியர்களையும் வெளியே தள்ளி விட்டனர்.அவ்வளவு ஒற்றுமை உணர்ச்சி நம் இந்தியர்களுக்குள்”என கூறிவட்டு சிரித்தார்கள் பெரியம்மா.

“ஏன் சேது சும்மா விட்டுவிட்டாய் அவர்களை”நல்ல நறுக்கென்று நாக்கை பிடுங்குகிறமாதிரி கேள்வி கேட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்”என்றார்கள் அம்மா.

“நல்லவர்களிடம் பேசலாம்.நானோ வயதில் பெரியவள்.அதிலும் புத்தியில்லாமல் நடக்கும் அந்த சிறுவர்களிடம் பேசுவது நமக்கு மரியாதை குறைவு” என்றே பெரியவர்கள் நாங்கள்பேசாமல் இருந்துவிட்டோம்”என்றார்கள் பெரியாம்மா பதிலுக்கு.

“அது விடுமுறை காலம் என்பதால் அமெரிக்கா பள்ளி மற்றும் காலேஜ் ஆசிரியர்கள் பலர் ஐரோப்பியா சென்று இக்கப்பலில் நாடு திரும்பி கொண்டிருந்தனர்.நான் எதற்காக அமெரிக்கா செல்கிறேன் என்ற செய்து அவர்களும் பரவவே,அவர்களுக்கு என்னை அணுகி சம்பாஷனை செய்ய ஆவல் ஏற்பட்டது.என்னிடம் பேசும் பொது குறிப்பு எழுதி வைத்து கொண்டனர்.ஆசிரியர்கள் அனைவரும் மாலை நேரங்களில் கூடி என்னை ஒவ்வொரு தடவையும் இரண்டு மணி நேரத்திற்கு குறையாது இந்தியாவை பாற்றி பேசவைத்து தங்கள் நோட்டு புத்தகத்தில் குறிப்பு எடுத்து கொண்டார்கள்.இந்தியாவை பற்றி நேரடியாக என்னிடமிருந்து அறிந்தவைகளை

தங்கள் மாணவர்களுக்கு போதிக்க வேண்டி அந்த குறிப்புகளை எடுத்ததாக கூறினார்கள் என்னிடம்" என மிகவும் மகிழ்ச்சி பொங்க சொன்னார்கள் பெரியம்மா.

"இதற்கிடையில் கப்பலிலிருந்து சில அமெரிக்க ஆசிரியர்களுக்கு என்னை பார்க்க பரிதாபமாக இருந்தது. அதையும் அவர்களே சொல்லியும் விட்டார்கள்.'ஆரம்ப பள்ளிகூட குழந்தைகளுக்கு போதிக்க போகிறாய் என்றால் கூட பரவாயில்லை.பதினேழு,பதினெட்டு வயதிருக்கும் ஸ்கூல் மாணவ,மாணவிகளுக்கு உனக்கு லேசில் அடங்க மாட்டார்களே,கடவுள்தான் உன்னை காப்பாற்ற வேண்டும் என்றும், மற்றும் அவர்களில் சிலர்,கவலை படாதே, உனக்கு ஒன்றும் கஷ்டமிருக்காது.அமெரிக்க குழந்தைகள் உயர்தர பள்ளி மாணவர்கள் உட்பட பெரும்பாலானோருக்கு எழுத்துகூட்டி கூட படிக்க வராது. எல்லாம் உனக்கு சுலபமாக படும்.ஏதாவது வாலாட்டினால் தீர்த்து கட்டிவிடு"என சில முரட்டு வாத்தியார்கள் எனக்கு உபதேசம் செய்தனர்" என்றார்கள்

புன்முறுவலுடன்.

“அமெரிக்காவின் தெற்கேயுள்ள லூசியானா என்னும் இடத்தை சார்ந்த ஒரு ஆப்ரிக்க அமெரிக்கன் ஆசிரியை இந்த கூட்டத்திலிருந்தார்.அவருக்கு என் மீது ரொம்ப ப்ரியம் ஏற்பட்டுவிட்டது.கப்பலிலிருந்த பெரும்பாலான நேரத்தை நாங்கள் இருவரும் பேசி பல விஷயங்களை பரிமாறிக்கொண்டோம்.”

“நல்லவேளை,வடக்கே உள்ள வாஷிங்டன் ஸ்டேட்டில் நீ ஆசிரியராக வேலை செய்ய போவது உன் அதிர்ஷ்டம்தான்.தெற்க்கே உள்ள எங்கள் மாஹானத்தில் முற்றிலும் வேறானது. நிற பாகுபாடு நிறைய உண்டு. பள்ளிக்கூடம்,பஸ்கள்,டிரெயின் ,எல்லா இடங்களிலும் எங்களுக்கும், வெள்ளை காரர்களுக்கும் தனித்தனி இடம்தான்.அதனால்தான் என் வீட்டிற்கு வந்து என்னுடன் தங்கு என்று சொல்ல எனக்கு மனம் வரவில்லை.அப்படி தப்பித்தவறி நீ என்

மாஹானத்திற்கு வந்தால் கூட திரும் மனக்கசப்புடனும்,வெறுப்புடனும்தான் வெளியேறுவாய் எனபது நிச்சயம்",என்று வருத்தம் தோய்ந்த குரலில் அவர் மேற்கொண்டு சொல்லிக்கொண்டே போகையில் எனக்கும் என்னமோ போலிருந்தது."

"உலகிலேயே எவ்வளவோ முன்னெற்ற நாடாக இருந்தும், அங்கும் இதுபோல அறியாமையும்,பெருங்குறையும்,இருக்கத்தான் செய்கிறது.மனித இனத்தை பொறுத்தவரை நிறமும்,நாடும்,மொழியும்தான் வேறுபாடே தவிர குணத்தில் மனித இனம் முழுதும் ஒரே மாதிரிதான். இதில் மேல்நாடு,உயர்ந்த நாடு,கீழ் நாடு என வார்த்தைக்குத்தான் சொல்லிக் கொள்ளலாம்"என்றார்கள் பெரியம்மா.

"அமெரிக்க கரையை இன்னும் சிறிது நேரத்தில் விடியற்காலையில் அடைந்து விடுவோம் என்ற அறிவிப்பை கேட்டதும் என்னால் நம்பவே முடியவில்ல.எல்லாம் கனவில் ஓடுவது போல இருந்தது.அந்த இரவில் சந்தோஷமிகுதியால்

தூக்கமே வரவில்லை. விடியற்காலை நாலு மணிக்கே பிரயாணிகள் அனைவரும் மேல்தளத்திற்கு வேடிக்கை பார்க்க சென்று விட்டோம்.அச்சமயம் அப்போதிருந்த குளிர் ஒரு குளிராகவே தோன்றவில்லை.இன்னும் இருட்டாகத்தான் இருந்தது.அமெரிக்காவின் முதல் தோற்றத்தை காண ஆவலுடன் காத்திருந்தோம்.இன்னும் சில மைல்கள்தாம் .அந்த இருட்டில் ஏக காலத்தில் நாலா பக்கங்களிலிருந்தும் பற்பல விதமான வெளிச்சங்கள் எங்கள் கப்பலையும்,சமுத்தரத்தையும் பகலாக்கி விடுவதை போல திடீர்தாக்குதல் செய்தன.அமெரிக்கா வாடையை எங்களுக்கு உணர்த்த மிக சக்திவாய்ந்த மின்சார விளக்குகள் வானத்திலும்,நீலகடலிலும் வீசி எங்களுக்கு வழி காண்பிப்பதுபோல நர்த்தனமாடி கொண்டிருந்தது.”

“எங்களுடைய ஆரவாரமும் தாங்கமுடியவில்லை.எல்லாம் அடங்கி வரும் சமயத்தில் பொழுதும் சிறிது சிறிதாக விடிய

ஆரம்பித்தது. பல ஆண்டுகளாக நான் கண்ட கனவும் பலிக்கும் நேரம் வேகமாக நெருங்கி வந்து கொண்டிருந்தது. அமெரிக்காவிற்கே முதல் உயர்த்த சின்னமான அமைந்துள்ள அந்த கம்பீரமான தோற்றமளிக்கும் சுதந்திர சிலை எங்களை கரம் ஏந்தி வரவேற்ப்பது போல அளித்த அந்த காட்சி என் கண்ணை விட்டு என்றும் மறையாது நின்றது"

"ஒரு பக்கம் சுதந்திர ஒளியை கையில் ஏந்தி நிற்கும் அந்த பிரம்மாண்டமான சிலை,இன்னொருபுறம் வானொங்கும் கட்டிடங்கள்,இவற்றிற்கு நடுவே 2500 பேர் கொண்ட எங்கள் கப்பல் சாவாதானமாக தவழ்ந்து சென்று சில நிமிடங்களில் கரையை தொட்டது.அப்போது காலை ஆறு மண் இருக்கும். நான் பள்ளிகூடத்தில் ஆறாம் வகுப்பு படிக்குபோது நியூ யார்க் கட்டிடங்களை பற்றி படித்திருக்கிறேன்.அப்போதெல்லாம் நாமும் அங்கே எல்லாம் ஒரு நாளைக்குபோய் பார்க்க மாட்டோமா?என அடிக்கடி எண்ணி பலவருடங்களாக மனக்கோட்டை கட்டி

வந்திருக்கிறேன். ஆகாச கோட்டை வெறும் கனவு கோட்டையாகிவிடவில்லை என்பதை அப்போது நினைக்கையில் எவ்வளவு திருப்தி என்பதை வார்த்தைகளால் வர்ணிக்கவே இயலாது"என மெய்சிலிர்க்க கூறினார்கள் பெரியம்மா.

காலை ஆறுமணிக்கு துறைமுகத்தை வந்தடைந்த கப்பலைவிட்டு நான் வெளியே வர நான்கு மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. கடைசியாக கப்பலைவிட்டு இறங்கியவுடன் ஆவலோடு காத்திருக்கும்,என் அருகே எனது பிரயாண ஏஜண்டான குக்ஸ் கம்பெனியை சேர்ந்த நபர் ஒருவர் வந்து ,"உங்களுக்கு போர்டர் வேண்டுமானால் நான் சீக்கிரமே கொண்டு வரட்டுமா?" என்றது, நானும் சரி, என சந்தோஷத்துடன் கூறினேன்.உடனே ஒரு நிமிடத்திர்க்கெல்லாம் ஒரு போர்டர் கொண்டு வந்து எனது பெட்டிகளை அனைத்தையும் ஒரு சின்ன ட்ராலியில் ஏற்ற ஏஜண்டும் விறுவிறுவென என்னையும் வெளியே கொண்டுவந்து விட்டுவிட்டார்.இவ்வளவு

விரைவாக காரியம் முடிந்த மகிழ்ச்சியுடன் குக்ஸ் கம்பெனி ஏஜன்டுக்கு நன்றி சொல்லிவிட்டு நகர ஆரம்பித்தேன்."நில்லுங்கள்,இந்த போட்டருக்கு நீங்கள் $5 கூலி கொடுத்தாகவேண்டும்.(சுமார் 24 ரூபாய்)என்றார்.எனக்கு தூக்கி வாரி போட்டது.போர்டருக்கு கூலி கொடுக்க கூடாது என்ற விதியை நான் அறிவேன்"என சொன்னதற்கு.அதெல்லாம் கிடையாது.நீங்கள் அதிக நாழிகை காத்திருப்பதற்கு பதிலாக விரைவிலேயே உங்களுக்கு, போர்டருக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.நீங்கள் அதற்கான தனிப்பட்ட பணம் கொடுத்தாக வேண்டும் என்றார் அந்த விடா கண்டன் ஏஜன்ட் .சரி என $5 அழுதேன்.உடனே அதில் $2 அந்த ஏஜன்ட் எடுத்து கொண்டு $3 -ஐ அந்த போர்டருக்கு கொடுத்தார் என் கண் எதிரிலேயே.எனக்கு வந்த கோபத்திற்கு சொல்லில் அடங்காது."என ஆக்ரோஷத்துடன் கூறினார்கள் பெரியம்மா.

"அமெரிக்காவிலும் இப்படி தில்லுமுல்லு நடப்பதை நினைத்தேன்.பணக்கார நாடானாலும்

சரி, ஏழ்மை நாடானாலும் சரி,மனித இனத்தின் தில்லுமுல்லை முறியடிக்க கடவுளாலும் முடியாது போலிருக்கிறதே என என் மனதிருக்குள் எண்ணி வியந்தேன்" என்றார்கள்.

"பிறகு நான் டாக்சி ஒன்றில் ஏறி ஏற்கனவே ரிசேர்வ் செய்த ஹோட்டலுக்கு போய் சேர்ந்தேன்.அந்த அறையில் நுழைந்தவுடன் அவசர அவசரமாக எனக்கு வந்த கடிதங்களை பிரித்து படித்தேன்." அந்த கடிதத்தில் "உங்கள் வரவு நல்வரவாகட்டும்,பிரயாணம் எல்லாம் சுகமாக முடிந்திருக்குமென நினைக்கிறோம்.உங்களை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறோம். நீங்கள் தங்குவதற்கு வேண்டிய வசதி அனைத்தையும் பள்ளிக்கு அருகிலேயே ஒரு வீட்டில் ஏற்பாடு செய்திருக்கிறேன். பள்ளிக்கூடம் திறக்க இன்னும் இரண்டு வாரங்களே உள்ளன. உங்கள் நாட்டு பணத்தில் மாற்றுதலில் உங்களுக்கு போதிய பணம் கிடைத்திருக்காது என்ற சந்தேகத்தால் நான் அங்கத்தினராக இருக்கும் ரோட்டரி க்ளப்பிலிருந்து உங்களுக்கு $250 செக்

அனுப்பசெய்திருக்கிறேன்..கூடிய சீக்கிரம் வந்து சேருங்கள்" என்று என்னை அமெரிக்காவிற்கு அழைத்த சூபெரின்ட்டேன்டன்ட் அந்த அன்பு கடிதத்தை படித்து முடித்தவுடன் துறைமுகத்தில் நான் ஏமாந்ததை மறந்து ,உலகம் பலவிதம்தான், அதில் சந்தேகமே இல்லை என மன அமைதி அடைந்தேன் "என்றார்கள் பெரியம்மா.

"கடிதத்தை படித்த பிறகுதான் நான் தங்கியிருக்கும் அரை எப்படி என சுத்தி பார்க்க முற்பட்டேன்.அந்த கட்டிலின் அருகே இருந்த பெரிய டெலிவிஷன் என் கண்ணை கவர்ந்தது.முன்பு நான் இங்கிலாந்திருந்த போது டெலிவிஷன் பார்த்திருக்கிறேன்.ஆனால் அதை விட இந்த டெலிவிஷனின் ஸ்க்ரீன் நான்கு மடங்கு பெரிதாக காணப்பட்டது. ஆவல் மேலிட டெலிவிஷனை திருப்பினேனே. அது வேலை செய்யவில்லை. சற்றே வியப்புடன் சுற்றி முற்றி பார்க்கையில் அதிலிருந்து உண்டியலில் போடுகிறமாதிரி ஒரு சிறு துவாரத்தில் 25சென்ட் போட்டால்தான் அந்த டெலிவிஷன் அரை மணி நேரத்திற்கு பார்க்கலாம் என்பதை

அறிந்தவுடன்,சரி,சாவகாசமாக எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு இரவில் பார்த்து கொள்ளலாம் என நினைத்து கொண்டு, மனித வாழ்க்கையில் எத்தனை விதத்தில்தான் இந்த பணம் ஜீவ நாடியாக வேலை செய்து வருகிறது என்ற வியப்புடன் குளிக்க சென்றுவிட்டேன்"என்றார்கள்.

"நியூ யார்க்கில் ஒரு வாரத்திற்குமேல் நான் தங்கவில்லை.எனவே அங்கு ஒரு சின்ன தீவிலிருக்கும் சுதந்திர சிலை மீது ஏறி விரிவாக பார்க்க நான் ஆசைப்பட்டேன்.அங்கு போக வேடுமானால் அதற்கென பிரத்யேகமான படகில் ஏறி தான் செல்லவேண்டும்.இச்சிலை பிரெஞ்சு மக்களின் உபயமாக சுமார் 121/2லட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டு பிரஞ்ச்/அமெரிக்க பரஸ்பர நட்புக்கு அறிகுறியாக அமெரிக்காவிற்கு அளிக்கபாட்டது.சுமார் எழுபது வருடங்களுக்கு முன்புதான் அது அந்நகர் துறைமுக வாயிலில் நிறுவப்பட்டது.

சிலையும் அது வைக்கபட்டிருக்கும் பீடமும் சுமார்

100 கஜமுள்ளது.சிலையின் பீட அடித்தளத்திலிருந்து பாதம்வரை ஒரு லிப்ட் உண்டு. அதன் பிறகு அதன் தலை வரை ஏறிபோக வேண்டுமானால் இதன் உடம்புக்குள் சுழன்று,சுழன்று போகும் படிக்கட்டுகளின் வழியே ஏறிபோக வேண்டும்.ஏன் என்றால் அதில் லிப்ட் கிடையாது.அந்த படிக்கட்டில் ஏறி போவதற்கு என் முச்சு திணறிவிட்டேன்."

:அந்த சிலையில் டார்ச் பிடித்தபடி மேலோங்கி நிற்கும் வலதுகை சுண்டுவிரல்வரை படிக்கட்டு செல்கிறது.பிறகு நெற்றி வரை மட்டும் படிகட்டுகள் இருந்தது.அதற்குமேல் ஒன்றுமில்லை.நெற்றியில் உள்ள வராண்டா போன்ற இடத்தில் நின்று வெளியே தலை நீட்டி பார்க்கையில் அந்த ஓங்கிய கை எவ்வளவோ பெரிதாக தெரிந்தது.கைக்கட்டைவிரல் மட்டும் 21/2கஜம் இருக்கும் போலிருந்தது.அந்த சிலை மட்டும் 225 டன் எடையுள்ளது.பிரான்ஸ் தேசத்து மக்களால் பரிசாக அளிக்கப்பட அந்த அபூர்வ பெண் உருவத்தின் இடது கையில் (லெப்ட்)உள்ள ஒரு சுவடியில் 1776-ம் ஆண்டு

ஜூலை 4-ம் நாள் என்று
பொறிக்கபட்டிருந்தது.இந்த தேதியில்தான்
அதிகார பூர்வமாக அமெரிக்கா ,பிரிட்டிஷ்
ஆதிக்கத்திலிருந்து விடுபட்டது"என்றும்
பெரியம்மா விவரித்தார்கள்.

"மேலும் அதன் பிறகு மறுநாள் சவகாசமாக
எம்பையர் ஸ்டேட் கட்டிடத்திற்கு பார்ப்பதற்காக
சென்றேன்.102 மாடியுள்ள கட்டிடத்தை
ஆண்டவன் த்ன் படைப்பில் மனிதனுக்குன்
அளித்த முளையின் உதவி கொண்டு
எழுப்பபட்டு பல உலக அதிசயத்தில்
இதுவுமான்று என்ற விளக்கத்துடன் சுமார்
84,000 சதுர அடி விஸ்தீரணத்தில் 80,000 பேர்
வேலை செய்யும் இடமாக இருப்பதை ஒரு
பட்டினம் என்றே சொல்லிவிடலாம்."
என்றார்கள்.

"படிக்கட்டுகளில் ஏறி செல்ல முடியாமல் $1.25
கொடுத்து லிப்டில் 102 ஆவது மாடிக்கு
சென்றேன்.$1 நம் இந்திய பணத்திற்கு 41/2
ரூபாய்.எனவே நம் நாட்டு பணத்திற்கு ஆறு

ருபாய் கொடுத்தேன்.4,470அடி உயரத்திலிருந்த அதன் திறந்த மேல்மாடிக்கு சென்று நின்று பார்க்கையில் பக்கத்திலுள்ள 80 மாடி கட்டிடங்கள் எல்லாம் ரொம்ப குள்ளமாக தெரிந்தது."என்று வேடிக்கையாக கூறினார்கள் பெரியம்மா.

"மேலும் அங்குள்ள பீச் -ஐ பார்க்க ஆசை ஏற்பட்டதால் காணி தீவிற்கு (கோனே ஐலாண்ட்)சென்ற பஸ் தண்ணீருக்கு அடியில் செல்லும் உலகிலேயே நீளமான சுரங்க வழியாக சென்றது.அதன் பெயர் பாட்டரி ப்ரூக்ளின் டனல் எனப்படும்.அது மிக அழகாக கட்டபட்டிருன்தது.நகரின் வழியாக ஓடும் நதிக்கு அடியிலும்,துறைமுகத்திற்கு கீழேயும் அந்த சுரங்க பாதை ஓடுகிறது. தண்ணீருக்கு மேலே கப்பல்கள் மிதக்க அதற்கு அடியில் பஸ்,கார்,போக்குவரத்து என்றல் யார்தான் ஆச்சரியபடாமலிருக்க முடியும்"என்றார்கள்.

மேலும் பெரியம்மா தொடர்ந்து நியூ யார்க் நகரத்திற்கு எப்படி அந்த பெயர் வந்தது எனவும்

விவரித்தார்கள். “முன்னூறு ஆண்டுகளுக்கு முன் அந்நகரில் சுமார் 250 பேர்கள்தான் குடியிருந்தனர் என்று சரித்திரம் சொல்லப்படுகிறது.அந்த காலத்தில் நியூ யார்க் என்று கூட பெயர் இல்லை.முதலில் அந்த இடம் டச்சுகாரர்கள் வசமிருந்தததால், அச்சிறு பட்டிணத்திற்கு “நியூ ஆம்ஸ்டர்டாம்”என்ற பெயரிடப்பட்டிருந்ததாம்.பிறகு அவர்களிடமிருந்து ஆங்கிலேயர்கள் பறித்துக் பிறகு அந்நகர் “நியூ யார்க்”என பெயரிடப்பட்டதாம். மறுபடியும் டச்சுக்காரர்கள் அதை பிடுங்கி கொண்ட பொது இதற்க்கு “நியூ ஆரஞ்ச்”என்ற புதிதாக ஒரு பெயர் வழங்கலாயித்ராம்.கடைசியாக எல்லாம் பூரணமாக ஆங்கிலேயர்கள் கைக்கு மாறியது நாளிலிருந்து “நியூ யார்க்”என்ற பெயர் நிரந்தரமாயிற்று ” என்பதை கூறினார்கள்.

“மேலும் நியூ யார்க் நகரில் எதை பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் கிரகங்களின் மியூசியமான ப்லானிடோரியத்தை பார்க்காமல் செல்ல கூடாது . நம் நாட்டுக்கு வெளியே நான் கண்ட சில

அதிசயங்களுள் இந்த மியூசியம்தான் முதன்மையானது என்றே திட்டவட்டமாக சொல்வேன்.இதில் சுமார் மூன்று மணிநேரம் கழித்துவிட்டு வெளியே வந்த எனக்கு உலகில் இருப்பதாச் சொல்லப்படும் ஒருசில அதிசயங்களுள் இந்த பிளானிடோரியம் எனப்படும் கிரகங்களின் மியூசியம் ஒன்று என சொல்லிவிடலாம் போல் தோன்றியது"என பிரம்மிப்புடன் கூறினார்கள்.

மேலும் அந்த ப்லாநிடோரியத்தை பற்றி விரிவாக கூற ஆரம்பித்தார்கள் பெரியம்மா "இதற்க்கு ஹேடன் பிளானிடோரியம் என்று பெயர்.பிரபல செல்வந்தரும்,தர்மவானும் ஆனா ஹேடன் என்பரவரின் பெயரால் இது அழைக்கபடுகிறது.இந்த அற்புத மியூசியம் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்தான் தொடங்கப்பட்டது,டிக்கட் விற்பதால் சேரும் தொகையை கொண்டுதான் அந்த கட்டிடம் எழுப்புவதற்கான வாங்கிய கடனை அடைத்து வருகிறார்களாம்.நாம் வசிக்கு இந்த கோளத்தில் அபூர்வமாக சிற்சில சமயங்களில் மற்ற

கிரகங்களிலிருந்தும்,நட்ச்சத்திரங்க்ளிலிருந்தும் சில துண்டுகள் பிய்ந்து கொண்டு வந்து விழும் இவற்றிக்கு மிடியோரைட்ஸ் என ஆங்கிலத்தில் சொல்லப்படுவதுண்டு,

இம்மாதிரி மற்ற கோளங்களிலிருந்து விழுந்துள்ள சில பெரிய கர்ப்பாறைகளை போன்ற துண்டுகளை இந்த மியூசியத்தில் வைத்திருக்கிறார்கள். இது சுமார் 36 டன்எடையுள்ள ஒரு மிடியோரிட், க்ரீன்ஸ்லாந்திலிருந்து அங்கு கொண்டு வரப்பட்டுள்ளது.அது நமது பூமியில் விழுந்த பிறகு பல்லாண்டு பல்லாண்டுகளாக எஸ்கிமோக்கள் சிறிதுசிறிதாக வெட்டி உபயோகித்து கொண்டிருந்தனராம்.இந்த கிரகதுண்டு ஏகப்பட்ட கணம்.அது வெறும் நிக்கல்-இரும்பு லோக கலப்படம்.எஸ்கிமோக்கள் அதை வெட்டி ,ஈட்டி,கத்திகள்,செய்து உபயோகித்து வந்தனர். ஒரு அகலமான பீடத்தில் வைக்கபட்டிருந்த அந்த உலோகம் கருப்பாக பாறாங்கல்லை போன்று இருந்தது. வழவழப்பாக இல்லை.மேடும்

பள்ளமும்,குண்டும் குழியுமாக கரடு முரடாக இருந்தது.அமெரிக்காவின் பசிபிக் கரையிலிருக்கும் ஓரிகன் என்னும் இடத்தில் 1902-ம் ஆண்டு விழுந்த சுமார் 15 டன் உள்ள இன்னொரு உலோகம் துண்டும் அந்த மியூசியத்திலிருந்தது .ஈரம் அதிகமாய் உள்ள காட்டில் அப்படியே விழுந்து, அது பல வருடங்களாக இருந்ததால், துருபிடித்து மேல்பாகம் கொஞ்சம் கொஞ்சமாக மறைய நேர்ந்ததால், அதுவும் மேடும் பள்ளமுமாக விசித்திரமாக காணப்பட்டது.அதுதான் உலகிலேயே மிகப்பெரிய மிடியோரைட் என சொல்லப்படுகிறது."

"அந்த மியூசியத்திலேயே மற்றொரு அறைகளில் ஆதிகால சைனா நாட்டின் மற்றும்.பிரான்ஸ் ,ஜெர்மனி,முதலிய நாடுகளில் உபயோகித்து வந்த நேரம் காட்டும் சூரிய கடிகாரமும்,மாலுமி திசை காட்டும் கருவியும்,வான சாஸ்திர கருவிகளும்,பார்க்க பார்க்க திகட்டாமல் காட்சியளித்தது.மற்றொரு அறையில் மரசட்டகளுக்கு உட்பட்ட சுவருக்குள் பல

கிரகங்களின் சாயல்களை பதித்து உள்ளிருந்து அவைகளுக்கு வெளிச்சம் போட்டு அவற்றின் தன்மையை எடுத்து காட்டும் முறையில் ஒழுங்கு பெற வைத்திருந்தார்கள்.சன்னாடி ஜன்னலுக்கு பின் இப்படி வைத்திருப்பது ரொம்பவும் தத்ரூபமாக இருந்தது."என்றார்கள்

"இந்தியாவிலுள்ள ,ஜெயப்பூரிலுள்ள 18-ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட வான சாஸ்திர நிலையத்தினுடைய புகைப்படமும் அங்கு வைக்கபட்டிருந்தது.சைனா தேசத்தின் தலைநகரான பீகிங் நகரில் பழைய நாட்களில் கட்டப்பட்ட ஆப்சர்வேட்டரியின் படமும் அங்கே பார்க்கலாம்.நம் பூமியில் சுற்றியுள்ள பெரிய கிரகங்களை மாதிரியே அனைத்தையும் உண்மையில் நாம் நேரில் பார்ப்பது போல கொண்டு வந்து நிறுத்தி இருப்பது மிகவும் விசேஷம்.அமெரிக்காவின் பூர்வீக குடிகளான சிவப்பு இந்தியர்களுக்குளும், வான சாஸ்த்திர சம்பத்தமான எண்ணற்ற புராண கதைகள் உலவி வந்திருக்கின்றன.அவற்றில் முக்கியமான சிலவற்றை ஓவிய ரூபமாக திரட்டி அங்கு

வைத்திருப்பதை மிக சுவாரஸ்யமான ஒன்று" என்றார்கள்.

"மேற்சொன்ன மிடியோரைட் கிரகங்களின் மாடல்கள் வெளிப்புற அறைகளிலிருக்க,நடுவே வட்டவடிவமான சூரியனின் ஹால் என்ற பெரிய கூடம் இருக்கிறது.எல்லாவற்றையும் விவரித்துக்கொண்டே வந்தவர் எங்களை எல்லாம் அந்த வட்ட வடிவ ஹாலின் நடுவே இல்லாமல் சுவற்றின் ஓரமாக போடபடிருந்த சேரில் உட்காரவைத்தார்.இந்த வட்டவாடிவமான கூடத்தின் நடுவே ஒரு அதிசய காலண்டர் கல் எனப்பட்ட ஒரு படம், சலவை கல்லிலே தீட்டபட்டிருந்தது .அனேக ஆண்டுகளுக்கு முன் மெக்சிகோ தேசத்தில் அஸ்டேக்ஸ் என்னும் ஒருவகை மக்கள் உபயோகித்து வந்த காலண்டரின் நகல்தான் அதில் காணப்பட்டது.நாம் யுகங்கள் என சொல்வது போல அவர்களும் இப்போதைக்கு முன் நான்கு சூரிய காலம் இருந்ததாக நம்பி வந்திருக்கிறார்கள். இக்காலன்டரின் அசல் மெக்ஸிகோ தேசத்தில் உள்ள தேசிய

மியூசியத்தில் அப்படியே அது கணக்கிட்டபடி வைக்கபட்டிருக்கிறதாம் “என்றும் கூறினார்கள்.

“இந்த காலண்டருக்கு மேலே கூரையில் மிகப்பெரிய மின்சார விளகொன்று வெள்ளைவளேரென்று தொங்கவிடப்பட்டிருக்கிறது.அதுதான் சூரியனும், இதை சுற்றி ராகு,கேது,கிரகங்கள் தவிர மற்ற பெரிய கிரகங்கள் எப்படி இயற்கையில் தூர தூர சூரியனை சுற்றி வட்டமிட்டு கொண்டிருக்கின்றனவோ ஆதே மாதிரி இதில் காட்டியிருகின்றார்கள்.கூரையிலிருந்து சூரியனை சுற்றி பல கம்பிகள் போடப்பட்டிருகின்றன. இவற்றில் நமது பூமி உள்பட பற்பல கோளங்கள் உருண்டை வடிவில் ஒன்றுக்கொன்று ஒப்புடன் காணப்படும் வகையில் பெரியது,சிறியதாக அளவில் பொருத்தப்பட்டு சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கின்றன.சூரியனையும் அதை சார்ந்த கிரகங்களையும் உண்மையில் நம் தூர நின்று பார்ப்பது போலவே இருந்ததது.ஒருமுறை சூரியனை சுற்றி வர சில கிரகங்களுக்கு சீக்கிரம்

முடியும், சில கிரகங்களுக்கு பல வருடம் ஆகும். ராகுவும்,கேதுவும்,எல்லா கிரகங்களை விட மிக சிறியதாக இருப்பதால் அவற்றையும் அங்கே பொறுத்த வேண்டுமென்றால் அக்கூடத்தை இன்னும் பெரியதாக விரிவு படுத்த வேண்டும்,அதனால்தான் சனி கிரகத்தோடு நிறுத்திவிட்டார்கள்."என்ற விவரத்தை பெரியம்மா விளக்கமாக கூறியது கேட்டு அனைவரு மிகவும் ஆச்சர்யமடைந்தோம்.குழந்தைகள் நாங்கள் மட்டுமல்ல, தாத்தா,பாட்டி,அம்மா,உள்பட அனைவரும் திரைப்படம் பார்ப்பது போல "ஆ"வென வாயை பிளந்த வண்ணம் மிக சுவாரஸ்யமாக கேட்டுக்கொண்டிருந்தோம்.

பெரியம்மா சொல்ல சொல்ல பேப்பர், பென்சிலில் ஒன்றுவிடாமல் குறிப்பை நானும்,அண்ணன் ஷானும்,தம்பி பாட்டும் எடுத்துகொண்டிருந்தோம்.இது பெரியமாவின் ஐடியாவே.நான் பள்ளிக்கூடம் போகும் பொது பெரியம்மா எங்களுக்கு சொன்ன கதையை நான் என் சிநேகிதிகளுக்கு கதை போல மதிய

சாப்பாட்டின் பொது கூறிவந்தேன்.

பெரியம்மா மேலும் தொடர்ந்தார்கள்."சுமார் அரைமணி நேரத்திற்கு அங்கிருந்தேன்.அதற்குள் புதன்,வெள்ளி,பூமி இவை மூன்றும் கிரகங்களும் சூரியனை சுற்றி வந்துவிட்டன. நமது சந்திரனும் பூமியை சுற்றிகொண்டே சூரியனையும் சுற்றி வந்தது பார்க்க மிக வேடிக்கையாக இருந்தது.அம்மாவானை ,பௌர்ணமி இதில் தோன்றுவதை கண்டேன்.எப்படித்தான் இவ்வளவு அதிநுட்பமாக அதை எல்லாம் அவ்வளவு கணக்கு பார்த்து அமைத்தார்களோ?மிகவும் பாராட்டத்தக்கதும்,ஆச்சர்யமானதும் கூட. அத்துடன் சுற்றியுள்ள சுவர்களில் 12 ராசிகளையும்,சின்னங்களையும் அவற்றை நமக்கு உருவாக்கி காட்டும் நட்ச்சத்திர கூட்டங்களையும் அப்படியே அழகாக தீட்டியிருக்கிறார்கள்.அந்த ஹாலை விட்டு வெளியே வர யாருக்குமே மனமில்லாமல் இருந்தது."என்றும் கூறினார்கள்.

அத்யாயம்-இருபத்து ஐந்து

"அந்த அறையைவிட்டு வெளியே வந்ததும் எங்களை எல்லாம் முதல் மாடிக்கு அழைத்து சென்றார்கள். அங்கேயும் ஒரு வட்டமான ஹால் இருந்தது.700 பேர் உட்காரும் அளவிற்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தது.அந்த ஹாலில் சாய்வு நாற்காலி போளில்லாமலும்,நேராயுள்ள நாற்காலி போலில்லாமலும் கழுத்தை வளைக்காமல் சுலபமாக அண்ணாந்து பார்க்கும் பொருட்டு வசதி தரும் லேசான சாய்வு கொண்ட நாற்காலிகளில் அனைவரும் சௌகரியமாக உட்கார்ந்ததும் மேலே பார்த்ததில்

கூண்டுபோல வட்டவடிவமாக அமைந்துள்ள கூரையை பார்த்தோம். இதை டூம் என சொல்லுவார்கள்.நாற்காலியை தவிர அண்ட் அறையில் வேறு ஏதும் பார்ப்பதர்கில்லை. இங்கு ஏன் அனைவரும் அழைத்து வரப்பட்டோம் என ஆர்வ மிகுதியில் அனைவரும் இருக்கையில் சுற்றியிருந்த விளக்குகள் ஆன அணைக்கப்பட்டது .ஹால் கும்மிருட்டானது.திடீரென வானத்தில் நட்ச்சத்திரங்கள் தோன்றின.நீலவானக் ஆகாச மண்டலத்தில் நாங்கள் பறந்து போய் கொண்டிருந்தோம்."

"ஆகாச வெளியில் வெகு விரைவாக பறந்தோம்.எங்கிருந்தோ தேவலோக நாதம் ஒருவித இன்னிசையாக காதில் ஒலிக்க மெய் மறந்து பறந்தோம்,பறந்தோம்,பறந்தோம் ஆயிரகணக்கான நட்சச்சத்திரங்கள்,அதோ தூரத்தே சந்திரன்,அதை தாண்டினால் செவ்வாய் லோகம்,பின்னால் திரும்பி பார்த்தோம்.பூமியும்,சமுத்திரமும் கண்டங்கேளோடு காட்சி அளித்தது.அதில் புல்

,பூண்டு,மரம்,செடி,கோடி,மனிதர்கள் ஏதும் காணவில்லை".

"வான மண்டலத்தில் வெகுவிரைவாக யாத்திரை செய்து கொண்டே நட்ச்சத்திரங்களுக்கு நடுவே புதன்,வியாழன்,சனி,ராகு,கேது,முதலிய கிரகங்களை நேரிலே கண்டு,அதை எல்லாம் தாண்டி சென்று ஆகாச வெளியில் சுற்றினோம்,சுற்றினோம்,அப்படி சுற்றினோம்.ஆண்டவன் படைப்பில் அதிசயத்தை உணர இதை விட வேறு எது வேண்டும்?

"கிரகங்கள் சுற்றிகொண்டிருப்பதுபோல நாங்களும் போட்டி போட்டுகொண்டு விரைந்து கொண்டிருந்தோம்.எங்களுக்கு தெரிந்த அத்தனை கிரகங்களையும் நட்ச்சத்திரங்களையும் சந்தித்து விட்டோம். வான வீதியில் ,ஆஹா|இப்படியல்லவா பிரயாணம் செய்யவேண்டும்.சனி கிரகத்தைச் சார்ந்த பல சந்திரன்களையும்,இன்னும் அதை சுற்றி பால் போல வட்டமிட்டுகொண்டிருக்கும் வளையத்தையும் கண்டு வந்தோம்.ஆகாசத்தின்

பால் வீதியையும் காண தவறவில்லை நாங்கள்.”

“சந்திரோதயத்தை கண்ணார கண்டோம். வால் நட்ச்சத்திரங்கள் சில எங்களை வர வேற்றன .நேரம் போவதே தெரியவில்லை. மேஷம்,ரிஷபம் முதலிய ராசிகளின் நட்ச்சந்திரங்களையும் இருக்கும் இடத்தை ஆகாச வெளியில் பறக்கும் போதே கண்டு பிடித்தேன்.இன்னிசையும் நின்ற பாடில்லை.சூரியனிடம் மட்டும் போகவில்லை. ஏன் எனில் இன்னும் இறவு நேரம்தான்.”

“பயணம் முடிந்தது.இரவு கலைய ஆரம்பித்தது.கிழக்கு வெளுத்தது.கதிரவன் வருகையை அறிவ்ப்பது போல கீழ் வானம் பல நிறங்களுடன் காணப்பட்டது.சூரியனும் வந்து தோன்றிவிட்டான் அந்த வெளிச்சத்தில்தான் மறுபடியும் நாங்கள் இன்னும் ப்லாநிடோரிதில்தான் இருக்கிறோம் என்பதை உணர்ந்தோம்.இப்படி ஒரு அதிசய சூழ்நிலைய உண்டு பண்ணும் பிளானிடோரியம் ,ப்ரோஜெச்ட்டர் என்ற கருவி அறையின் நடுவே இருப்பதை அபோது தான்

கவனித்தோம்.எப்படித்தான் இப்படி ஓர் கருவிய கண்டுபித்தார்களோ?.2000 ஆண்டுகளுக்குமுன் வானவெளியில் எந்தெந்த கிரகம்,நட்ச்சந்திரம் எந்தெந்த இடத்தில் காட்ச்சியளித்தது என்பதை இக்கருவி உதவி கொண்டு காணமுடியும் அதுமட்டுமல்ல 72,000 ஆண்டுகளுக்கு பிறகும் எப்படி கிரகங்கள் இருக்கும் என்பதையும் அறியலாம்.அவ்வளவு நுட்பமாக அந்த கருவி அமைக்கப்பட்டுள்ளது.

“இந்த கருவியின் உதவிக்கொண்டுதான் நான் வான வீதியில் துரித பயணம் செய்ய முடிந்தது என நினைக்கையில் அதை என்றும் என்னால் மறக்க முடியாத ஒன்று”அதோடு இல்லாமல் வடதுருவத்திர்க்கும் , தென்துருவத்திர்க்கும் கூட அழைத்துச் செல்லப்பட்டோம்.ஆகாசத்தில் தூர இருந்தபடியே நம் பூகோளத்தை கண்ணார கண்டு களித்தோம்.எங்களுக்கு இந்த பூலோகத்திற்கு திரும்ப வரவே இஷ்டமில்லை”என்றார்கள் பெரியம்மா.

“மேலும் அந்த ஹாலை விட்டு வெளியே

வந்ததும் முற்றிலும் வெளிச்சம் இல்லாமலும் முற்றிலும் இருட்டாக இல்லாமலும் ஒரு வராண்டா இருந்தது.அதில் எடை பார்க்கும் தராசுகள் பல வகை வைக்கபட்டிருந்தன.அவைகளும் விசித்திரமான கருவிகள்தாம்.ஒவ்வொரு கிரகத்திற்கும் இழுப்பு சக்தி என்று உண்டல்லாவா?வெவேறு கிரகத்திற்கு நாம் செல்லும் போதும் நம் உடலின் எடை அந்த கிரகத்திற்கு ஏற்றார் போல வேறுபடும்.ஒவ்வொரு கிரகத்திற்கு செல்லும் போது என் எடை எவ்வளவு மாறுகிறது என்ற ஆவல் ஏற்படவே,நமது பூமியின் தராசில் முதலில் ஏறி நின்றேன்.என் எடை 120 பவுண்ட் என காண்பித்தது.அதற்கு பக்கத்திலுள்ள வியாழன் கிரக தராசு இருந்தது. அதில் நான் நிற்க என்னுடைய எடை 318 பவுண்ட் இருந்தது .வெள்ளி கிரகதராசில் அதே எடை 102 பவுண்டாக காண்பித்தது.சந்திர கிரக தராசில் என் எடை இடம் தெரியாமல் சென்று விட்டது. அங்கே நான் வெறும் 18 பவுண்ட்தான் இருந்தேன்.இதற்க்கு பக்கத்தில் சூரிய கிரக

தராசில் என் எடை 3,345 பவுண்ட் ஏறிவிட்டது."என வேடிக்கையாக கூறினார்கள் .

"பிறகு அங்கிருந்து ராக்பெல்ல செண்டர் என்ற இடத்திற்கு சென்றேன்,அங்கு பூமாதேவி லோகத்தை தாங்குகிறார் என்று நாம் சொல்வது போல அட்லஸ் என்ற பூத மனிதன் தனது தோளில் உலகத்தை தாங்குவதாக முற்காலத்தில் கிரேக்கர்கள் நம்பி இருந்தனர்.இதனால்தான் தேசப்பட புத்தகத்தை அட்லஸ் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது. இந்த அட்லஸ் சிலை ஒன்று மிகப்பெரியதாக உருண்டை பூமியை தோளில் தாங்குவது போல செய்து ராக்பெல்லர் கட்டிடம் ஒன்றின் முன் வைக்கப்பட்டுள்ளது".என்றும் கூறினார்கள்.

"இந்த கட்டிடங்களுக்கு மத்தியில் அழகிய நீர்சுனைகள் முன் உயரமான மிகபெரிய ஒரு சாய்ந்தாற் போல ஒரு சிலை உள்ளது.மனிதன் நெருப்பு எப்படி பற்ற வைப்பது என்பதை கண்டு பிடித்தானோ அன்றிலிருந்து அவனது முன்னேற்றம் அதிவிரைவில் நடந்தேறியது

என்பது சரித்திரம்.முதன் முதல் மானிடருக்கு தீயை பரிசாக அளித்த ப்ரோமிதியஸ் என்னும் அக்னி பகவான்தான் என்று கிரேக்க புராணம் கூறுகிறது. முறைதவறி இப்படி ஒன்றை மனித வர்கத்திற்கு கொடுத்ததால், இந்த அக்னிபகவான் குருவின் கோபத்திற்கு ஆளாகி,ஒரு பெரிய மலையோடு சேர்த்து இணைக்கப்பட்டு நிரந்தரமாக சங்கிலியால் அடித்து வைக்கபட்டிருப்பதாக கிரேக்க கதை.இதே ப்ரோமிதியஸ் என்னும் சிலை உருவத்தை நல்ல வென்கலத்திலெ செய்து வலது கையில் அனல்குழம்பு ஏந்தி மானிடருக்கு பரிசு வழங்குவதுபோல அர்த்தத்தில் இந்த சுனையின் முன் கம்பீரமாக வைத்திருந்தார்கள்."என்றார்கள்.

"பிறகு அங்கிருந்து உலகத்தில் பிரசித்தி பெற்ற வால்தெரு பார்க்க சென்றிருந்தேன்.பணம் பேசும் இக்காலத்தில் அந்த வால்தெருவுக்குத்தான் எத்தனை மகத்துவம்.அமெரிக்க நாட்டு வளத்திற்கு ஜீவ நாடியான அந்த ஸ்டாக் எக்ஸ்சேஞ் கட்டிடமே இருக்கும் இடத்தில் ஒரு காலத்தில் அதே இடத்தில் அமெரிக்க

சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற வர்த்தகங்களின் காப்பி ஹவுஸ் ஒன்று இருந்தது என எழுதப்பட்ட ஒரு போர்ட் இருந்தது. அங்கே இருந்ததாக சொல்லப்படும். காப்பி ஹவுஸ் சுமார் 200 வருடங்களுக்கு முன் இருந்தாதாகவும் ,பிரிட்டிஷ் ஆதிக்கத்தினின்று விடுவிப்பதற்குரிய முதல் திட்டத்தை இங்குதான் பல தீவீரவாதிகள் கூடி முடிவு செய்தார்கள் , பிறகு அமெரிக்க நாடு அடிமைத்தனை நீங்கும்வரை-புரட்சிக்காரர்கள்-சதி செய்யும் இடமாக இது இருந்தது. அமெரிக்காவில் சுதந்திர போர் எழுந்த இடம் இதுதான் என சொல்லப்படுகிறது"என்றார்கள் பெரியம்மா.

"பிறகு நான் வாஷிங்டன் டி,சி, சென்று அங்கு சில முக்கிய இடங்களை சுற்றி பார்த்து வந்தேன்,வெளிநாடுகளுக்கு சென்றாக அங்குள்ள பிரதான மியூசியத்தை பார்க்காமல் நான் வெளியேறுவதில்லை.ஜேம்ஸ் ஸ்மித்சன் என்ற ஒரு ஆங்கிலேய பெரும் பணக்காரர், இந்த அமெரிக்க நாட்டை அவர் பார்த்ததே இல்லை.இருப்பினும் 1829-ம் ஆண்டு உயிர்

துறக்கும் முன், தனது 51/2 லட்சம் டாலர் மதிப்புள்ள சொத்தை வாஷிங்டன் நகரில் தனது பெயரில் சகலவித அறிவுகளையும் உலகத்திற்கு பரப்புவதற்கு வேண்டு ஒரு ஸ்தாபனம் எழுப்புமாறு உயில் எழுதி வைத்துவிட்டாராம்.அதன் முடிவாக அமைக்கப்பட்டதுதான் ஸ்மித்சோனியன் ஸ்தாபனம் ஆகும்.சுமார் 110 ஆண்டுகளுக்கு முன்தான் இது கட்டப்பட்டது.”

“எல்லாவற்றையும் சுற்றி பார்த்துவிட்டு நான் வேலைக்கு செல்லும் பள்ளிக்கூடம் கிளார்க்ஸ்டன் உயர்நிலை பள்ளியிருக்கும் ஊருக்கு செல்ல தயாராகி ,மூன்று நாட்கள் ரயில் பயணத்திற்கு பிறகு ,கிளார்க்ஸ்டனிலிருந்து சுமார் 350 மைல் தூரத்திலுள்ள ஒரு ஊரில் கடைசியாக இறங்கினேன்.ஆனால் எங்கள் ரயில் தாமதித்து வந்து சேர்ந்ததால் ,நான் போக வேண்டிய மற்றொரு மாற்று ரயிலை தவறவிட்டுவிட்டேன்.ரொம்ப நேரம் மற்றொரு மாற்று இரயிலுக்கு காத்திராமல் மாறி,மாறி

இரண்டு பஸ்களில் ஏறி கிளார்க்ஸ்டன் போய் சேர்ந்தேன்.அப்போது மணி பிற்பகல் மூன்று இருக்கும். நான் தங்க இருக்கும் வீட்டு விலாசம் முன்பே எனக்கு தெரியும் என்பதால் உடனே யாருக்காகவும் காத்திராமல் ஒரு டாக்சியை கூப்பிட கைபெட்டியுடன் வெளியே வருகையில், எதிர்பாராதவண்ணம் ஒருவர் காரை என் அருகே கொண்டு வந்து நிறுத்தி,"நீங்கள் தானே எங்கள் ஊருக்கு வந்திருக்கும் புதிய இந்திய ஆசிரியை.உங்கள் வருகையை பற்றி பல மாதங்களுக்கு முன்பே பத்திரிக்கைகளில் மூலம் நாங்கள் அறிவோம்.உங்கள் முகவரியை சொன்னால் நான் காரில் கொண்டு போய் விட்டு விடுகிறேன். ஏறுங்கள் காரில் என்றார்"

"யாரையுமே தெரியாத அந்த சிறு ஊரில் இப்படி பரிவாக ஒரு நபர் உதவ முன் வருவதை பார்க்க எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.இதற்கிடையில் கடை தெருவில் சிறிது தூரத்தில் ஆங்காங்கே மக்கள் நின்று என்னை பார்த்து எதோ ஒருவர் காதில் ஒருவர் கடிப்பதையும் அறியாமலில்லை நான். அங்கு

நிர்ப்பதர்க்கு கொஞ்சம் வேகமாக இருந்ததால் தயங்காமல் மகிழ்ச்சியுடன் அக்காரில் ஏறி அமர்ந்தேன்.பத்திரிகை முலமாக டவுன் மக்கள் என்னை பற்றி எவ்வளவு அறிந்திருக்கிறார்கள் என்று அந்த நபரிடமிருந்து விசாரித்து தெரிந்து கொண்டேன்".என்றார்கள் பெரியம்மா.

"புது இல்லத்தில் எனக்கு நல்ல வரவேற்ப்பு.அந்த வீடு சொந்தகாரர் வீட்டை நான் தாங்கும் அறையை காண்பித்துவிட்டு "நாங்கள் எல்லோரும் உங்களை காலையிலேயே எதிர்பார்த்து,பள்ளிகூட மாணவ,மாணவிகள் சிலர்,சூப்பரின்ட்டேன்டன்ட்,பத்திரிகை நிபுணர்கள்,டீச்சேர்ஸ் சிலர் முதலியோர் போய் ஸ்டேஷனில் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பினோம்" என்றார்.உடனே டெலிபோன் மணி அடிக்கவே ஆர்வத்துடன் சென்று அதை எடுக்கையில் அப்பள்ளிக்கூட சுப்பெரின்ட்டேன்டன்ட் தான் கூப்பிட்டு,நான் சுகமாக வந்து சேர்ந்தேனா?என விசாரித்தார். எனவே அவரை பார்க்கும் ஆவல் ஏற்பட்டது. நான் வந்து விட்டேனா என அரை மணி

நேரத்திற்கு ஒருமுறை விசாரித்து கொண்டே அவர் இருந்தததையும் அந்த வீட்டு சொந்தகாரர் சொன்னதை கேட்டு ,அவரை பார்க்க ஆவல் ஏற்பட்டது."என்றார்கள் "பள்ளிக்கூடமும் திறந்துவிட்டது.ஆசிரியர்களில் பெண்களும் சரி, ஆண்களும் சரி ரொம்ப ஜக்காக உடை அணிந்திருந்தார்கள்.முகத்தை "உம் "என்று வைத்து கொள்வதைஇன்னதென்று தெரியாத ஆத்மாக்களாக தோன்றியது.போய் சில நிமிடங்களுக்குள்ளேயே பலநாட்கள் தெரிந்தது போல என்னிடம் மற்றவர்கள் பேச்சு கொடுத்தது எனக்கு புதுமையாக இருந்தது,. ஆங்கிலேயர்களுக்கும்,அமெரிக்கார்களுக்கும்தான் எத்தனை வேறுபாடுகள்"என்று ஆச்சர்யமாக கூறினார்கள் பெரியம்மா.

"நுழைவதே தெரியாமல் எங்கள் முன்னிலையில் நின்றார் எங்கள் பிரின்சிபால்.அவர் நுழையும் போது ஒரு வாத்தியார்கள் கூட எழுந்திருக்கவே இல்லை.வணக்கம் சொல்லவும் இல்லை.அவரை கண்டதும் மரியாதைக்காகவாவது அவர்கள் பேச்சை நிறுத்தவும் இல்லை.பரிபூரண சமத்துவம்

இருப்பதை கண்டேன்.சரியாக 8:45மணிக்கு பெல் அடித்ததும் மாணவர்கள் அனைவரும் அந்த ஹாலிலுள்ள நாற்காலிகளில் அமர்ந்து விட்டனர்.பின் வரிசை நாற்காலிகளில் நாங்க ஆசிரய,ஆசிரியர்கள் அமர்ந்திருந்தோம்.அங்கிருந்த மாணவர்களில் ஒருவராவது ஆசிரியர்களை லட்சியம் செய்ததாக தெரியவில்லை.ஆசிரியர்களுக்கு வணக்கம்,நமஸ்காரம் எதுவும் சொல்லவில்லை.நாற்காலியில் உட்கார்ந்து அரட்டை அடித்து கொண்டிருந்த மாணவர்கள் ஒருவர்கூட எங்களை கண்டு எழுந்திருக்கவில்லை.
பிரின்சிபால்,சுபரின்ட்டேன்டன்ட் இவர்களுக்கு கூட இதே மரியாதைதான் என்று மிக வேடிக்கையாக சொன்னார்கள் பெரியம்மா

. .

. சூபரின்ட்டேன்டன்ட் வரவேற்ப்பு சொற்பொழிவு சில நிமிடங்கள் நிகழ்த்திவிட்டு, மாணவர்களுக்கு என்னை அறிமுகபடுத்தி வைத்தார்.ஒரே சப்தம், என்னை போல நூதன

உடை உடுத்தியிருக்கும் ஒருவரை அவர்கள் பார்த்ததே இல்லை என்றே நினைக்கிறேன். நான் பேச ஆரம்பித்ததுதான் தாமதம் பல திக்குகளிலிருந்து காமிராக்கள் வேலை செய்தன.டி .வி யில் காண்பிப்பதற்கு செய்தி படம் போல அன்று எடுத்துகொண்டிருந்தார்கள்.அது எனக்கு சர்பரைஸ் ஆக செய்திருந்தார்கள். முதல் நாள் ரயில் ஸ்டேஷன் சென்று ஏமாற்றமடைந்ததற்கு இப்படி செய்தது திருப்தியாக போய்விட்டது என மாணவர் சங்க தலைவர் தன முடிவுரையிலும் கூறிவிட்டான்.அதன் பின் மாணவர்கள் பிரிந்து தம்தம் வகுப்பறைக்கு சென்று விட்டனர்”.

“எனக்கு கொடுத்த ஐந்து வகுப்புகளுக்குள்ளும் சூபேரின்ட்டேன்டன்ட்தான் முதன்முதல் என்ன அழைத்து சென்று மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்.ஒருவராவது எழுந்திருக்கவேண்டுமே.ஆசிரியர் வகுப்புக்குள் நுழையும் போதுகூட எழுந்திருக்காத இந்த போக்கு எனக்கு சற்றே மரியாதை

குறைவாகத்தான் பட்டது.நாங்களிருவரும்
வகுபிர்க்குள் நுழையும் போதுகூட
மாணவர்களின் பேச்சு நிற்கவில்லை.
சூப்பரின்ட்டேன்டன்ட் வாய்திறந்த பிறகுதான்
அவர்களிடம் அமைதி நிலவியது “.

“மற்றொரு விஷயம் முதல்நாள் அன்று என்னை
அதிர்ச்சிக்குள்ளாக்கியது.நான் முதல்பாடம்
சொல்லிகொடுத்து வகுப்பு முடியும் நேரம்
கரும்பலகையில் எதோ எழுதுவதற்காக
திரும்பினேன்.அப்போது மணி
அடித்தது,அவ்வளவுதான் அத்தனை
மாணவர்களும் மின்னல் வேகத்தில் ஓடி
போய்விட்டனர்.இது என்ன இப்படி
காட்டுமிராண்டி தனமாக நடந்து
கொள்கிறார்களே என்று தோன்றியது.நான்
களைந்து போகலாம் என்று கூட
சொல்லவில்லையே.அது புதுமையான
அனுபவம்தான் எனக்கு.

நாம் பேசிகொண்டிருந்தாலும் மணி அடித்தவுடன்
தானாக விரைவில் வெளியேறிவிடுவார்கள்

என்பதை மற்ற ஆசிரியர்கள் வாயிலாக பிறகு தெரிந்துகொண்டு,நாம்தான் மணி அடிக்க ஒரு நிமிடம் முன்பே பேச்சை நிறுத்தி கொள்ள வேண்டும் என முடிவு செய்து கொண்டேன்.நாம் பாடம் சொல்லி கொடுத்துக் கொண்டிருக்கையில் மணி அடித்ததும் மாணவர்கள் ஓடிவிடுவதா?என்னால் நம்ப முடியவில்லை. முதலில் அதிர்ச்சியை கொடுத்த பல நிகழ்ச்சிகள் பிறகு நாளடைவில் பழக்கமாகிவிட்டது" என்பதை மிகவும் வேடிக்கை கலந்த நகைச்சுவையாக பெரியம்மா கூறியது என்கலனைவருக்குமே மிகவும் வியப்பாக இருந்தது.

"காலை 8.15 மணிக்கு ஆசிரியர்கள் பள்ளிக்கு வரவேண்டும்.வகுப்பு சரியாக 8:30 குதான் தொடங்குகிறார்கள்.ஆசிரியர்கள் பள்ளிக்கு வந்தவுடன் ரெஜிஸ்டர்-ல் கையெழுத்திட தேவையில்லை..அதற்கு பதில் கடிகாரம் பொருத்தப்பட்ட ஒரு சின்ன மிஷின் சுவரில் தொங்கவிடபட்டிருக்கும். அதற்க்கு பக்கத்தில் ஒவ்வொரு ஆசிரியரின் பெயரும் அச்சிடப்பட்ட

ஒரு கார்டும் இருக்கும்.பெயரோடு ஒரு நம்பரும் கூட கொடுப்பார்கள்.அந்த நம்பரும் அந்த கார்டில் காணப்படும்.எல்லா கார்டுகளும் ஒரு பெரிய நீள அட்டையில் சொருக விடப்பட்டிருக்கும்.பள்ளிகூட வாசற்படி ஏறியதும் ஆபீஸ் அறைக்கு சென்று தனக்குரிய கார்டை அந்த கடிகாரமுள்ள மிஷினுக்குள் போட்டு பொத்தானை அழுத்தினால் மணி நம் கார்டில் அச்சிடப்படும்.அதுதான் நாம் வந்த நேரத்திருக்கு ரெகார்ட் ஆகும்" என்றார்கள்.

"எதிர்பார்த்ததற்கு பன்மடங்கு மேலாக நன்றாகவே நடந்து கொண்டார்கள் எனது மாணவ மாணவியர்கள் என்பது மிகவும் மாகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்" என்றார் பெரியம்மா'.

"இரட்டை மாகாணமான லூயிஸ்டன்,கிளார்க்ஸ்டன் பட்டினத்திற்கு என்னை போன்ற புதிதாக இந்தியாவிலிருந்து வந்திருப்பதால், நான் இருக்கும் போதே அதை நன்கு பயன்படுத்தி கொள்ள எண்ணினார்கள்.

இந்தியாவை பற்றி பத்திரிகை வாயிலாக எவ்வளவு படித்தாலும் சரியாக அறிய முடியாதது ஒன்று,.கீழ்நாடுகளிலேயே உயர்ந்து விளங்கும் நம் பாரத பூமியின் உண்மை சரித்திர விஷயத்தை நேரில் அறியும் வாய்ப்பு என்னால் கிட்டுகிறது என்பது ஒன்று,ஆகவே பல சங்கங்கள் மகிழ்ச்சி கொண்டு என்னை அழைக்க தீர்மானித்தது.அதனால் எவ்வளவு எனக்கு சிரமம் இருந்தாலும் அதை சகித்து கொண்டு, தங்களுக்கு இந்தியாவை பற்றி கொஞ்சமாவது சொல்லுமாறு அவை அழைத்தன.டெலிபோனில் கூப்பிட்டு வண்ணமிருந்தார்கள்.சிலர் ஸ்கூல் சூபரின்ட்டேன்டன்டையும்,ப்ரின்சிபாலையும் அழைத்து அவர்கள் அனுப்பும் அழைப்பை ஏற்று கொள்ள சிபாரிசு செய்யுமாறு கேட்டுகொண்டனர்.இன்னும் சில சனங்கள் நேரில் வீட்டிற்கு வந்து அழைத்தன.

“நானும் எத்தனையோ நாடுகள் சுற்றி இருக்கிறேன். ஆனால் இதுபோல என் வருகையை பற்றியும்,இருக்கையை பற்றியும் அமர்க்களம் படுத்திய மக்களை நான் வேறு

எங்குமே கண்டதில்லை.இதுவரை இந்த பட்டிணத்து சரித்திரத்திலேயே, ஒரு இந்தியர் கூட வசித்துவராததாலும்,அதிலும் முதன்முதலாக வசித்து வந்தவர் ஒரு இந்திய பெண்ணாக இருந்ததாலும்,எதோ என்னை மிக பிரமாதமாக எண்ணி விட்டார்கள் போலிருக்கிறது.இந்த ஊர் முழுதுமே கூடி என்னை தரையில் விடாமல் ஏந்தினார்கள் என்றால் அது மிகையாகாது.வெளியே தலை காட்டினால், குறைந்தது இரண்டு பேராவது என்கூட துணைக்கு வருவார்கள்.வெளியே தலை காட்டினால் போதும் மறுநாள் பேப்பரில் என் பெயரை பார்க்கலாம்"என்று மிகவும் பெருமையடன் பேசினார்கள் பெரியமம்மா.

"மேலும் இந்த வட்டாரத்தில் என்னை போல் ஆசிரியை புதியதாக இருந்தால், சுற்றியுள்ள பட்டினகளிலிருக்கும் ஆசரியர் பயிர்ச்சியிலிருந்து எங்களிடமிருக்கும் வருகால ஆசிரய மாணவர்களை ,எனது ஆசிய வகுப்புக்கு அனுப்பி பயனடைய செய்ய அனுமதி உண்டா என்று கேட்டு கடிதங்கள் பிரின்சிபாலுக்கு வந்தன

.தவிர அந்த பாடம் படிக்கும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் பெற்றோரோகள் பலமுறை வந்து வகுப்பு பின்னால் உட்கார்ந்து கொண்டு ஆசிய கண்டத்தை பற்றி நேரடியாக கேட்டு திருப்தியுடன் திரும்பினார்கள்.டவுனிலுள்ள சிலர்களுக்கு குழந்தை இல்லாமல் இருந்தாலும் ,என் வகுப்புகளுக்கு வந்து நான் எப்படி என்ன சொல்லி தருகிறேன் என்பதை பார்க்க அனுமதி வேண்டினர்.ஆகவே வருடம் முழுதும் சதா எனது வகுப்பு அனைத்தும் யாராவது இரண்டு அல்லது முன்று பெரியவர்கள் பின்னால் உட்கார்ந்து கேட்டு கொண்டிருப்பார்கள்.பக்கத்திலுள்ள மற்ற ஆரம்ப பள்ளிகளுக்கு சென்று குழந்தைகளுக்கு இந்தியாவை பற்றி சொல்லும் போதும், அங்கேயும் பல பெற்றோர்கள் உட்கார்ந்து கொண்டிருப்பார்கள்.மாலை வேளைகளிலும் மக்கள் நிழல் போல தொடர்ந்தார்கள். ஆசிரியர் பயிற்சி பள்ளிகளிலிருந்து மாணவ வாத்தியார்களையும் எனது வகுப்பிலேயே பயிற்சிக்கு வைத்து கொள்ள இசைந்தேன்.”என்றார்கள்

“இதற்கிடையில் வேடிக்கையான சம்பவம் ஒன்று முதலில் நடந்தது.பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த ஒரு வாரத்திற்கெல்லாம் ரேடியோ ஸ்டேஷனிலிருந்து ஒருவர் என்னை டெலிபோனில் கூப்பிட்டார்.என்னை பற்றியும்,அமெரிக்க குழந்தைகளை பற்றியும் நாட்டை பற்றியும்,மக்களை பற்றியும் எனது அபிப்ப்ராயங்களை கேட்டு தெரிந்து கொண்டார்.பதினைந்து நிமிடங்களுக்கு மேல் போனில் பேசிகொண்டிருந்தோம்.எல்லாம் முடிந்தவுடன் போனில் பேசிய அத்தனையும் நாங்க ரிகார்ட் பண்ணியுள்ளோம் இன்று மாலை ரேடியோவில் ஒளிபரப்புவோம்,கேளுங்கள் என்றதும் எனக்கு தூக்கிவாரி போட்டது.முன்பே தெரிந்திருந்தால் ஒழுங்காக பேசியிருப்பேனே என்று நான் சொன்னதற்கு ,அதெல்லாம் இல்லை இதுதான் இயற்கை பொலிவுடன் திகழ்வது, எங்களுக்கு பிடிப்பதுமாகும் என்றார்கள்.மணி அடித்தவுடன் சொல்லி கொள்ளாமலேயே வகுப்பறையை விட்டு மாணவர்கள் ஓடிவிடுவது எனக்கு

பிடிக்கவில்லை என்று நான் சொன்ன அபிப்பிராயமும் அதன் மூலம் ரேடியோ ஒளிபரப்பின் மூலம் வெளிவந்துவிட்டது.எனது அபிப்ப்ராயத்தை கேட்ட உள்ளூர் வாசிகளுக்கு வேடிகையாகிவிட்டது". என்றார்கள்.

"மேலும் நான் போய் மூன்று வாரம் கூட ஆகவில்லை,ஒரு நாள் சூபெரின்ட்டேன்டன்ட் என்னை கூப்பிட்டு "நீங்கள் இங்கு வந்த பிறகுதான் தெரியும் உங்கள் படிப்பும்,அனுபவமும்,ஆராய்ச்சி துறை திறமையும்,எல்லாம் விரிவாக தெரிய வந்தன.எங்கள் மாகாணத்து கல்விதிட்டத்தின்படி உங்கள் அனுபவத்திற்கு இன்னும் அதிக சம்பளம் கொடுக்க வேண்டும்.இதை நான் முன்னமையே தெரிவிக்க இயலவில்லை.நான் முன்பு எழுதியதை விட இப்போது மாதம் சம்பளம் $33 (ரூபாய் 152)உங்களுக்கு கூட கொடுக்க சொல்லி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது .இது குறித்து புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்டு பழையதை ஈழித்துபோட்டு விடலாம் என சந்தோஷத்துடன் கூறனார்"

நாம் கேட்டு கொள்ளாத போதே வலிய கூப்பிட்டு சம்பளம் உயர்வை தெரிவிப்பதும்,ஒரு கலியுக அதிசயம்தான்.வெளியூர்காரர்தானே,- அவருக்கு என்ன தெரியபோகிறது என்ற எண்ணம் இல்லாது நேர்மையாக பற்ற அமெரிக்க ஆசிரியர்கள் போல -அதே உயர்ந்த சம்பளம் அளிக்க முன் வந்துள்ள அவ்வதிகாரியின் போக்கை என்னால் வியக்காமலிருக்க முடியவில்லை.தகுதியானவர்களை தேர்ந்தெடுத்ததுதான் அந்த அபீசரை போல பொறுப்புள்ள பெரும் பதவியில் அமர்த்துவார்கள் போலிருக்கிறது அமெரிக்காவில்"என்றார்கள் மிகவும் மகிழ்ச்சியுடன்.

"நான் மாதம் சம்பளம் $445 வாங்கினேன்.அதை இந்திய பணமாக மாற்றினால் அப்போது மாதம் ருபாய் 2,100 சம்பளம்.என்னைபோல அந்த பள்ளிகூடத்தில் முன்றே பேர்கள்தான் இந்த சம்பளம் பெற்றார்கள். மற்றவர்கள் எல்லாம் இதற்க்கு குறைவாகத்தான்

பெற்றார்கள்.அமெரிக்கர்கள் மிகவும் வெள்ளை மனது படைத்தவர்கள்.கொஞ்சம் நாட்கள் பழகினாலும் அன்பொழுக தங்கள் நாட்டு நல்லது ,கேட்டது,எடுத்து கூறி எனக்கு எச்சரிக்கை கொடுத்தது மிகவும் பாராட்டக்குரிய விஷயமாகும்"என்றார்கள்.

"மேலும் ஒருமுறை என் வீட்டு ஓனர் இரவில் வெளியே சென்று அங்குள்ள ஒரு பாலத்தின் வழியாக இரவு 10:30 மணிக்கு என்றும் இல்லாத வழக்கமாக கையில் சில சாமான்களுடன் வீடு திரும்பி கொண்டிருந்தார்.அபோது ஒரு போலிஸ் அதிகாரி நின்று அவரை கட்டாயபடுத்தி காரில் ஏறவைத்து வீட்டில் கொண்டுவந்து விட்டு போனார். பிறகு இனி இம்மாதிரி பாலத்தில் தனியாக நடக்க கூடாது என எச்சரிக்கை செய்து அனுப்பினார் ,அப்படியே என்னிடமும் ஒரு நாள் வந்து ,தூர கிழக்கு நாட்டிலிருந்து இங்கு வந்திருக்கும் உங்களை காப்பது எங்களுடைய பொறுப்பு.அதற்கு நீங்களும் ஒத்துழைக்கவேண்டும்.சின்ன திருட்டிற்காக இங்கு கொலை செய்யாதவர்களும்

இல்லாமலில்லை. சில ஆண்டுகளுக்கு முன் நியூ யார்க்கில் இருந்து ஒரு இளம் இந்திய பெண் வந்து படித்து கொண்டிருந்தாள். ஒரு நாள் மாலை எங்கோ வெளியே சென்ற பெண் இன்று வரை திரும்பி வரவே இல்லை.யாரோ அந்த பெண்ணை
பணத்திற்காகவும்,நகைகளுக்காகவும் கடத்தி சென்று கொலை செய்து, எங்கோ மறைத்து விட்டார்கள் என்பதில் ஐயமில்லை .என அவர் கூறியது கேட்டு நான்
பயந்தேவிட்டேன்"என்றார்கள்.

"செல்வத்தில் பஞ்சம் இல்லாத இந்த அமெரிக்காவில்
திருட்டுகளுக்கும்,கொலைகளுக்கும்,சற்றும் குறைவு இல்லை.1952-ம் ஆண்டு கணக்குப்படி அங்கு ஒரு லட்சம் பேரில் 1322 பேர் கொலை குற்றத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள்.அப்போது இந்தியாவில் 165 பேர்தான் இக்குற்றத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள்.உலகிலேயே பெரும் கொலைகளும், கொள்ளைகளும்,சில்லறை திருட்டுகளும் அமெரிக்காவில்

அதிகப்படியாகவும்,இந்தியாவில் மிக மிக குறைவாகவும் இருக்கின்றன."என பெரியம்மா கூறியது கேட்டு நான் மிகவும் நம்பமுடியாமல் அதிசயித்தேன்.இந்திய நாட்டை ஏழ்மை நாடு என வெளி நாட்டவர் நினைத்திருந்தாலும்,இங்கு குற்றவாளிகள் மிக குறைவாக இருப்பது கேட்க மிகவும் ஆனந்தமாவகே இருந்தது எங்களனைவருக்கும்.

மேலும் தொடர்ந்தார்கள் பெரியம்மா,"திருட்டும்,கொள்ளையும்,கொலையும்,ந குணமும் கலந்து,கலந்து ஓடுவதை பார்க்கும் அமெரிக்காவை கண்டு வியந்தேன்.மேலும் அந்நிய நாட்டினர் அங்கு வந்திருக்கையில் அவர்களை சொற்பொழிவு ஆற்ற அழைக்கும் அமெரிக்க பாணியே ஒப்பற்றது.உபசரித்து,மகிழ்வித்து, மரியாதை செய்து அனுப்புவது என்பதை அமெரிக்கர்களிடமிருந்து நாம் கற்று கொள்ள வேண்டிய ஒரு முக்கிய பாடமாகும்.ஒவ்வொரு நாடுதோறும் சுற்றுகையில் மனித குலம் யாவும் ஒன்றே என்றுதான் தோன்றும்.தோற்றத்திலும்

,பழக்க
வழக்கத்திலும்,பாஷைகளிலும்,உடைகளிலும்,நிறத்திலு
தேசம் மக்கள் வேறுபடலாம்.ஆனால்
இருதயத்தின் அந்தரங்கத்தில் மக்கள் யாவரும்
ஒரு வழி பட்டவர்களே"என்றார்கள்.

"சில வாரங்களுக்கு பிறகு,நம் வீட்டிலிருந்து
12,000 மைல் தூரத்தில் இருக்கிறேன் என்பதே
எனக்கு மறந்து விட்டது.அமெரிகர்களின் பரந்த
குணாதிசயங்களை பார்க்கையில் எனக்கு நம்
இந்திய நாட்டில் இருப்பது போலவே
தோன்றியது.அதே போல எனது அமெரிக்க
நண்பர்கள் சிலர் என்னிடம் அமெரிக்கர்
குணபோக்கிற்கும் உன்னுடைய தன்மைக்கும்
வித்யாசமே இல்லை,தூரகிழக்கிலிருக்கும் உன்
போன்றவர்களுக்கும் எங்களை போல
மனபோக்கு இருக்கும் என நாங்கள் உன்னை
சந்திக்கும் முன் நினைத்ததே இல்லை என
கூறியது கேட்டு என் உள்ளம்
மகிழ்ந்தது"என்றார்கள்.

"விருந்தினரை உபசரிப்பதும்,புதியோரிடம் பழகி

சிநேகம் பண்ணுவதிலும்,பழகியவரிடம் அன்பு செலுத்துவதிலும்,அமெரிக்கரை வெல்லுவது கடினம்தான்.இங்கிலாந்தில் வசித்த இரண்டு ஆண்டுகளிலும் இந்த மாதிரி ஒரு அனுபவம் எனக்கு ஏற்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.இவ்விரு தேசத்து மக்களிடையே உள்ள வேறுபாடுகள் மிக அதிகமானவையே.நாண்பர்கள் இல்லாத நாட்டில் வசிக்கிறோம் என்ற கவலையே நமக்கு வேண்டியதில்லை.பஞ்சமும்,பசியும்,தரித்திரமும் இல்லாத வசிக்கும் மக்கள் சதா இன்முகத்துடன், நிமிஷத்தில் சிநேகம் பண்ணி அன்பை சொரிவதில் வியப்பென்ன?" என்று வார்த்தைகளால் அமெரிக்க மக்களை புகழ்ந்து தள்ளிவிட்டார்கள் பெரியம்மா.

"செல்வம் மிக்க அமெரிக்காவில் பள்ளி கூடங்களில் அமைப்பில் சகல செளகரியங்களும் உள்ளன.அப்படி இருந்தும் சிலர் ,இது அசௌகரியம்,அது அசௌகரியம் என முணுமுணுக்காமல் இல்லை.அமெரிக்காவில் பள்ளிகூடத்தில் மாணவர்களுக்கு அளிக்கப்படும்

கல்வியும்,பல பரந்த கொள்கைகளையும் உடையது.பள்ளி கூடத்தில் எவ்வளவு சுதந்திரம் வேண்டுமோ அவ்வளவு சுதந்திரம் அவர்களுக்கு தரப்படுகிறது.வாத்தியாரை கண்டு பயந்து ஒதுங்கும் சுபாவமே அவர்கள் அகராதியில் இல்லை.ஆசிரியர்கள் கேள்வி கேட்டால் மாணவர்கள் உட்கார்ந்து கொண்டுதான் பதில் சொல்லுவார்கள்.அதிதீவீர சமத்துவம்தான்.மற்றவர்கள் மீது அதிகபடியாக சார்ந்து இல்லாமல், தனித்து, தன முயற்சியுடன், தன கை ஊன்றி திறம்பட வாழ்க்கை நடத்த வேண்டுயும்,நாட்டில் எதிர்காலத்தில் திறமையான பிரஜையாக வாழ்ந்து ,தேச நலத்திற்கு மேற்கொண்டு உழைக்க வேண்டுயம், இக்கல்வி திட்டம் அமைந்த்துள்ளது.ஏட்டில் மட்டும் இக்கொள்கைகள் ,இலட்ச்சியங்கள் எழுதப்படவில்லை.பள்ளிகூட நடவடிக்கை ஒவ்வொன்றிலும் குழங்கைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சி எல்லாவற்றிலும் இந்த இலட்சியத்திற்கான முறை கையாலபடுக்கிறது" என்றார்கள்.

“முதலாவதாக அமெரிக்க மாணவர்கள் பயந்து வாழ்க்கை நடத்துவதில்லை.எதிலும் ஒரு அனாயசயமான தைரியம்,எதையும் தங்களால் ஈடேற்ற முடியும் என்ற தன்னம்பிக்கை,ஆயிரம் பேர் முன்னே எழுந்து பேச சொன்னாலும் அது பெரிய காரியம் அல்ல,ப்ரின்சிபாலையோ,சூபரின்ட்டேன்டண்டை கண்டு பயந்து தலை மறைவதும் இல்லை,.உட்கார்ந்திருந்தால் எழுந்திருப்பதும் இல்லை,எவ்வளவு பெரிய மனுஷர் வந்தாலும் சங்கோஜமில்லாமல் புத்திசாலிதனமாக வார்த்தையாடும் திறமை மாணவ,மாணவிகள் எல்லோருக்கும் பொதுவாக இருக்கிறது.சிறு வயதிலிருந்தே அமெரிக்க குழந்தைகள் வீட்டிலும்,பள்ளியிலும்,வாழ்க்கையில் தைரியம் குன்றாது தன்னம்பிக்கையுடன் தலை நிமிர்ந்து, பிறர் கையை எதிர்பாராமல் எந்த காரியத்தையும் திறம்பட செய்ய முயற்சிப்பது மிகவும் மெச்சத்தக்கது.இம்மாதிரி அமெரிக்க பள்ளிகூடங்களில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் அதிதீர சுதந்திரத்தை சில

வெளிநாட்டு கல்வி நிபுணர்கள் நல்லது என்று கருதுவதில்லைதான். எதிலும் நல்லது,கெட்டது ,இருக்கிறதல்லவா?இதனால் விளையும் கணக்கற்ற நன்மைகளை நாம் உதறி தள்ளிவிடமுடியாது"என்றார்கள்.

மேலும் தொடர்ந்தார்கள்,"அமெரிக்கர் வீடுகளுக்கு விருந்துண்ண செல்வது ஒரு நல்ல அனுபவம்தான்.காரில் வீட்டிற்கு வந்து என்னை அவர்கள் வீட்டிற்கு அழைத்து செல்வார்கள்.எவ்வளவு தூரமிருந்தாலும் அழைத்து சென்று திரும்பவும் கொண்டு வந்து விடுவார்கள்.அதில் அவர்களுக்கு அலாதி மகிழ்ச்சி என்றே சொல்ல வேண்டும்.நான் சைவம் என்பதை எப்படியோ தெரிந்து கொண்டு ,அதனால் முன்பே என்னை போனில் கூப்பிட்டு எனக்கு என்ன பிடிக்கும் என கேட்டு அதன்படி சமைத்து வைத்திருப்பார்கள்.இந்த மாதிரி நம் நாட்டில் என்னிடம் நெருங்கி பழகிய நண்பர்கள் கூட என்னை எவ்வளவு பரிவுடன் உபசரித்தது இல்லை என்றே சொல்லலாம்.என்னை பற்றி ஏன் இவ்வளவு

அக்கறையும்,கவலையும்,காண்பிக்கிறீர்கள் என நான் அடிக்கடி பலரிடம் கேட்டதுண்டு.அதற்கு “இவ்வளவு தூரம் ஊரை விட்டும்,நாட்டைவிட்டும்,உறவினரை பிறிந்தும் சிரமம் பார்க்காமல் எங்களுக்காக நீ இங்கு வந்துள்ள போது ,உன்னை வைத்து கண்காணித்து காப்பது எங்கள் எல்லோருடைய பொறுப்பு இல்லையா?என்ற பதில் வருவது தவறவே இல்லை என்றே கூறுவேன்”என்றார்கள் தன் கலங்கிய இரு கண்களுடன் .

பெரியம்மா சொல்வதை அப்படியே ஒன்று விடாமல் எல்லாவற்றையும் குறிப்பு எடுத்து கொண்டேன். மிகவும் சுவாரஸ்யமாகவும்,அமெரிக்க மக்களின் அந்த நல்ல குணாதிசயங்களையும்,சுபாவங்களையும் கேட்கையில் நாமும் அந்த நாட்டிற்கு போய் இதை எல்லாம் பார்க்க மாட்டோமா? என்ற ஆவல் என்னுள் பிரிந்தது.

அத்யாயம்- இருபத்து ஆறு

“முன் பின் தெரியாத அமெரிக்க மக்கள் என்னை கவனித்துகொண்ட முறையை யாராவது பார்க்கும் பட்ச்சத்தில் கல்நெஞ்சமும் நெகிழ்ந்துவிடும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் அமெரிக்காவில் இறங்கிய இரண்டு மாதத்தில் நூற்றுகணக்கான அந்நிய நண்பர்கள் எனக்கு கிடைத்தார்கள்.”

“பிரிட்டிஷ் மக்களுக்கும் ,அமெரிக்க மக்களுக்கும் எத்தனையோ வேறுபாடுகள். இங்கிலாந்தில் இருந்தபோது நம் நாட்டை விட்டு பல ஆயிரம்

மைல் தூரத்தில் வெகு தொலைவில் இருந்தது போல எனக்கு தோன்றியது.ஆனால் அமெரிகாவிலிருந்த போது ,வீட்டிலிருந்து 13,000 மைல் தூரத்திலிருந்தாலும் எதோ பக்கத்திலிருப்பது போல ஒரு உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.இந்த மாதிரி ஓர் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டதற்கு அமெரிக்க மக்கள் என்னிடம் காண்பித்த அன்பொழுகும் மனப்பான்மைதான் பெரிதும் காரணமாகும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை"என வாயார புகழ்ந்து தீர்த்தார்கள் அமெரிக்க மக்களை.

"கிளார்க்ஸ்டனில் ஒரே ஒரு தபால் ஆபீஸ்தான்.அது பள்ளிகூடத்திற்கு எதிரேவே இருந்தது.மாலையில் வீடு சென்று கடிதங்களை படிக்க பொறுமையில்லாமல் காலை எட்டு மணிக்கே எனது கடிதங்களை மட்டும் வாங்கி கொள்ள தபால் ஆபீசுக்கு செல்வேன்.அந்த ஆபீசில் மின்னி என்ற பெண்மணி வேலை செய்து வந்தார். அவருக்கு 50 வயது .ஆனால் பார்ப்பதற்கு 35 வயதுக்கு மேல் சொல்ல முடியாது.அந்த அபீசில் அவர் ஒருவர்தான்

இருந்தார். அவருக்கு என்னிடம் பரிச்சயமாக அதிக நாட்கள் பிடித்க்கவைல்லை.அவர் என்னை பார்த்ததும் ஓடி சென்று தபால் கட்டிலிருந்து என் கடிதங்களை எடுத்து கொடுப்பார்.மிகவும் நல்ல பெண்மணி அவர்"என்றார்கள் பெரியம்மா.

"அமெரிக்கா வந்ததிலிருந்து,கஷ்டப்பட்டு உழைப்பவர்களுக்கு அங்கு நிறைய பாராட்டுகள் கிடைக்கின்றன என்பதை என்னால் உணரமுடிந்தது.நம் இந்திய நாட்டில் பாராட்டுதல் கூட வேண்டாம், நம்மை குற்றம் சொல்லாமலிருந்தாலே போதும் என்ற நினைக்கிறோம்.உண்மை உழைப்பாளிகளுக்கு அமெரிக்காவில் சமூக அதிகாரிகளும்,மக்களும் கௌரவம் அளிக்க தவறியதில்லை.இந்திய நாடு அதை போல பின் பற்ற வேண்டியது அவசியமே"என்றும் கூறினார்கள்.

"எவ்வளவு
பெரியவர்களானாலும்,உழைக்கும்போது ஊக்கம் தேவை.ஊக்கமிருந்தால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் அதை திரணமாக

மதித்து உற்சாகத்துடன் செய்யும் குணம் யாருக்குமுண்டு. இவ்வாறு ஒருவருக்காருவர் ஊக்கமளித்து உர்ச்சாகமளித்து வருவதால்தான் அமெரிக்க நாடு அதிவிரைவில் முன்னேறி வருவதற்கான காரணங்களுள் ஒன்றாகும்.மேலும் அமெரிக்கர்கள் எவ்வளவு பெரிய காரியாலயமானாலும் ஒருகெடுபிடி ,ஆர்பாட்டம் இல்லாமல் அன்றாட வேலைகளை மிக விரைவில், சுமுகமாக முடிக்க முடிகிறது.குமாஸ்தாக்கள் தப்பு செய்துவிட்டால் நம் இந்திய ஆபீசர்கள் போல ஜகமே புரண்டு விட்டது போல குதிக்காமல்,குமாஸ்தாக்களும் நம்மை போல மனிதர்களே| நாம் தப்பு பண்ணுவதுபோல அவர்களும் வேலையில் தப்பு செய்யாமல் காரியாலயத்தில் இருக்க முடியுமா?என்று நினைத்து, சிப்பந்திகளுடன் பரிவுடனும்,கூடிய பரிதாபம் அங்குள்ள அபீசர்களுக்கு ஏற்படுகிறது"என்றார்கள்.

"மேலும் அமெரிக்காவில் ஆபீசர்கள் அபீசர்களாக நடந்து கொள்வதில்லை,நம் நாடு போல. தன ஆபீசில் தனக்கு கீழ் வேலை

பார்க்கும் அத்தனை சிப்பந்திகளுக்கும்
நண்பனுக்கு நண்பனாகவும்,பிசகு பண்ணும்
இடத்தில் ஆலோசகராகவும்,கஷ்டம் ஏற்படும்
பட்ச்சத்தில் அவர்கட்கு அருள்
பாலிப்பவர்களாகவும் இப்படி பலருக்கு
பலவிதமாக நடந்து கொள்வதால் காரியாலயம்
முழுதும் ஒரு குடும்பமாக இயங்கி வருகிறது.

மணிப்படி வேலை அனைத்தும் மிஷின்போல
அங்கு நடந்தாலும் மனிதனுக்கு இயற்கையில்
இருக்கும் அன்பு உணர்ச்சி இதில்
எல்லாவற்றிலும் ஊடுருவி போகிறது என்பது
நம் கண்ணுக்கும் அங்கே தப்பாமல் தெரிகிறது.
ஆபீஸில் பல காரியதரிசிகள்,குமாஸ்தாக்கள்
இவர்களிடையே என்ன ஒற்றுமையும், பரிபூரண
நம்பிக்கையும் நடமாடுகிறது
தெரியுமா?அமெரிக்கா செல்ல நான் செலவழித்த
பணமே,இம்மாதிரி ஒரு நல்ல மக்களையும்,
பண்புகளையும் பார்க்கவே சரியாகிவிட்டது
என்றே சொல்லுவேன்”என்றார்கள்.

“ஆசிய பாடத்தை இஷ்ட பாடமாக எடுத்துக்

கொண்ட அத்தனை மாணவர்களும், பன்னிரெண்டாம் வகுப்பை சார்ந்தவர்கள்.இருந்தாலும் முதலில் சில வாரங்களுக்கு சின்ன குழந்தைகளுக்கு பாடம் சொல்லி தருவது போல சொல்லி தரவேண்டிய நிலை ஏற்பட்டது. வகுப்பில் பூகோளம் அறவே பூஜ்யமாக இருந்தது.பர்மா தேசம் ஐரோப்பா கண்டத்தில்தான் இருக்கிறது என்பது சில மாணவர்களுக்கு தீர்மானமான எண்ணம்.சிலோன் தீவை பற்றி கேள்வி பட்டதே இல்லை சிலர்.இன்னும் ஆசிய நாடுகளில் பாதிக்குமேல் அவற்றின் பெயரை கூட ஜென்மத்திலும் கேட்டதில்லை சில பேர்.கொஞ்சம் பேர் மேலும் ஐரோப்பா கண்டத்தையும்,ஆசிய கண்டத்தையுன் பிரிப்பது இமயமலையே என்ற அபிப்பிராயம் கொண்டிருந்தனர் ஒருசில மாணவர்கள்".என்றார்கள் பெரியம்மா மிகவும் ஆச்சரியத்துடன்.

"அதுமட்டுமல்ல,லண்டன் மாநகரத்து வழியாக ஓடும் கங்கை நதியா பற்றியும்தான் ரொம்பவும்

கேள்விபட்டிருப்பதாக ஒரு பையன் அளந்தான்.முகமதிய தேசத்தை முதல் முதலில் ஸ்தாபித்தவர் ஸ்டாலின் என்ற பதில் வந்ததது ஒரு மாணவரிடமிருந்து.அனைத்து மாணவர்களுக்கும் 17 வயது முடிந்து 18ஆவது வயது நடந்து கொண்டிருந்தது. ஆனால் எப்படியோ எல்லாம் சரிபடுத்தி விட்டேன்.இப்படி ஒன்றுமே தெரியாத மாணவர்களுக்கு அடியிலிருந்து நுனிவரை சொல்லி தருவதும் உற்சாகமான ஒன்றுதான் .ஆர்வமிக்க அந்த மாணவர்களுக்கு சீக்கிரம் பாடம் பிடிபட்டு கிரகிக்க அதிக நாட்கள் பிடிக்கவில்லை.அதுமட்டுமல்ல என்னிடம் உலக சரித்திரம்,ஆசிய சரித்திரம் படித்த மாணவ,மாணவியரில் பெரும்பாலானோருக்கு எழுத்து பிழையில்லாமல் தங்கள் பாஷையாகிய ஆங்கிலத்திலேயே சரியாக எழுத வராது.ஏழெட்டு மாணவர்கட்கு தங்கள் பெயரையே எழுத்து பிழை இல்லாமல் சரியானபடி எழுத தெரியாது.ஆனால் என் மாணவர்கள் ஒருசில வாரங்களில்

கெட்டிகாரர்களாகி விட்டார்கள்.ஆசியாவை பற்றி அதுவரை தாங்கள் எவ்வளவு தப்பான அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள் என்பதையும் அடிக்கடி எனக்கு அவர்கள் சொல்ல தவறவில்லை"என்றார்கள் பெரியம்மா.

"மானிட நாகரீகம் மேல் நாடுகளுக்குத்தான் உறியது என எண்ணிக்கொண்டிருந்த அக்குழந்தைகுகளுக்கு நாளா வட்டத்தில் -பண்டைய காலத்தில் ஐரோப்பாவில் காட்டுமிராண்டியாக உலவிய போது,அதே சமயத்தில் பெரும் ஆசிய நாடுகளான,சைனா,இந்தியா,சுமேரியா,முதலிய தேசங்களில் நாகரீகம் மேலோங்கி இருந்தது என அறிய வியப்பாக இருந்ததது.அதோடு இல்லாமல் உலகில் இப்போதுள்ள பெரிய மதங்கள் அனைத்தும் ஆசியாவில் தோன்றியவைதான் என்பதை அறிய அக்குழந்தைகளின் வியப்பு எல்லை கடந்து போயிற்று"என்றார்கள்.

"ஆசிய நாடுகள் எழ்மையிருக்கலாம்,ஆனால்

ஆசிய மக்களிடம் காணப்படும் பண்பாட்டிருக்கும்,கலாச்சாரத்திற்கும் ,நாகரீகத்திற்கும்,யாதொரும் குறையுமில்லை என சீக்கிரமே அறிந்து கொண்ட என் மாணவர்கள்,மேற்கொண்டு அறிய உற்சாகம் காட்டினர்.பிறகு ஆசிய நாடுகளை பெரிய மதிப்புடன் நோக்க ஆரம்பித்தனர்.இப்படி நாளடைவில் அம்மாணவர்களின் மனம் மாற்றத்தை காண எனக்கு அதிக ஆச்சரியமாக இருந்தது"என்றார்கள்.

"பாடம் துவங்கி முன்று மாதங்களுக்குள்ளேயே எதோ ஆசியாவில் சுற்றுபயணம் செய்வது போன்ற உணர்ச்சி ஏற்படுவதாகவும் என் மாணவர்கள் தெரிவித்தனர்.இதற்க்கு சில திரைப்படங்களும் பெரிதும் உதவியது. வாஷிங்க்டனிலிருக்கும் இந்திய தூதுவாராலயத்திளிருந்து நான் நமது நாட்டை பற்றிய பல அறிய படங்களை வரவழைத்து காண்பித்தேன் "என்றார்கள்..எனக்கே அவைகளை பார்க்க சுவாரஸ்யமாக இருந்ததது.இதுவரை நான் இதுபோல பார்த்ததே

இல்லை.ஒருமுறை இந்திய சிற்பங்களை குறித்து ஒரு திரைப்படம் காண்பித்த போது நமது ராஜாஜி படத்தையும் அதில் காண நேர்ந்தது எனக்கு வியப்பை அளித்தது.ராஜாஜி அவர்கள் அதில் சிற்ப்பத்தை பார்த்து கொண்டிருப்பது போல அப்படம் ஓடுகிறது.நமது இந்திய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட படங்கள் மட்டும் உண்மையாக இருக்கும்.ஆசிய நாடுகளை பற்றி அமெரிக்க கம்பனியால் எடுக்கப்பட்ட திரைப்படங்களை பார்க்கையில் நமக்கே கன்றாவியாக இருக்கும்.சிற்சில சமயங்களில் நமக்கே ரொம்ப வருத்தமாகவும் இருக்கும்.

“உதாரணமாக பள்ளியை சேர்ந்த திரைப்பட நிலையத்திலிருந்து படங்களை வர வழைத்து நான் உபயோகித்திருக்கிறேன். அதில் ஆசிய மக்கள் அனைவரும் பசி,பட்டினி,தவிர வாழ்க்கையில் வேறு எதுவும் கண்டிராதவர்கள் எனவும்,குடிசையில் அனைவரும் வாழ்கின்றனர் எனவும்,பெரும்பான்மையான ஆசிய மக்கள்- இந்தியா உள்பட-காட்டுமிராண்டிகளின் மதத்தை பின்பற்றி வருகின்றனர் என்ற

அபிப்ராயத்துடன் என் மாணவர்கள் வெளியேறியிருப்பார்கள்.அமெரிகர்கட்கு மற்ற நாடுகளை பற்றி நல்லதையே பிடித்து படமாக்கும் ஆற்றல் கிடையாதோ?என என சந்தேகிக்கும் அளவுக்கு நம்மைக் கொண்டு விடும்" என்றார்கள்.

"மாணவர்களுக்கு காண்பிக்கும் முன்பு நான் தனியாக திரை படங்களை ஒட்டி பார்த்து விட்டு,பிறகு அவை சரி என பட்டால் மேற்கொண்டு அவர்களுக்கு காண்பிப்பதுண்டு,நாளடைவில் உள்ளூரில் வைத்திருக்கும் படங்களை நான் உபயோகபடுத்தாமல்,வாஷிங்டன் நகரில் இருக்கும் ஆசிய நாடுகளின் தூதுவராலத்திர்லிருந்து நேரடியாக எழுதி படங்களை வரவழைத்து கொள்ள வேண்டியதாயிற்று."என வருத்ததுடன் கூறினார்கள் பெரியம்மா.

"இப்படி செய்கையில் பள்ளிகூடத்திற்கு செலவு அதிகம் ஆயிற்று."ஏன் நம்மிடம்தான் வேண்டிய

படங்கள் இருக்கின்றனவே/." என ஒருமுறை பிரின்சிபால் சந்தேகத்தோடு கேட்டபோது,ஆசியா மக்களின் உண்மை வாழ்க்கையை அப்படங்கள் அனைத்தும் சித்தரிக்கப்படவில்லை.(எதோ சிலவற்றை தவிர).அவற்றை மாணவர்கள் பார்க்கும் பட்ச்சத்தில் தப்பபிப்பிராயம் ஏற்படுமே தவிர ,நான் நேரில் வந்தும் உண்மை புலப்படாது ஆகிவிடும் என்று பதிலளித்தேன்"என்றார்கள்.

"இதற்கு சில நாட்கள் பொறுத்து எனது பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் கூடி என்னை தங்கள் பள்ளி நிலையத்தில் இருக்கும் சில ஆசியபடத்தை காண்பித்து காண்பித்து அவற்றிலுள்ள குற்ற ங்குறைகளையும்,தப்பானவற்றையும் எடுத்து தங்களுக்கு உண்மையை தெரியபடுத்தும்படி சொன்னார்கள்.எல்லாம் முடிந்த பிறகு நம்மிடம் உள்ள எல்லா படங்களையும் தூக்கி ஏறிந்து விட்டால் என்ன?உண்மையை சித்தரிக்காத படங்களை வைத்து கொண்டிருப்பதால் பயன் என்ன?என்று ஒரு ஆசிரியை வாய் விட்டே சொல்லியும் விட்டார்".என்றார்கள்.

“நான் அந்நிய நாட்டிலிருந்து வந்திருந்தாலும் எதையும் வெளிப்படையாக மனம் விட்டு சொல்லும் வாய்பை எனக்கு அந்த கல்வி ஸ்தாபனம் ஆபீசர்கள் கொடுத்த முறையை என்னால் என்றுமே மறக்க முடியாத ஒன்றே.தங்களிடம் குறை இருந்தாலும் அவற்றை அன்னியர் வாயிலிருந்து வருவதை கேட்க மனம் வரவேண்டுமே.இது ஒரு அறிய பண்புதான் என்றே சொல்லுவேன்”என வெகுவாக அந்த கல்வி ஸ்தாபனத்தை வாயார பாராட்டினார்கள்.

நாங்கள் அனைவரும் வாயை பிளந்து வண்ணம் பெரியம்மா கூறுவதை அப்படியே லயித்து கேட்டு கொண்டிருக்கையில் பாட்டி கமலாவிற்கு களைப்பாகிவிட்டதால் ‘சரி சேது மீதிய பிறகு பார்த்து கொள்ளலாம் எல்லோரும் தூங்க போங்க”என கூறவே ,கதை கேட்ட அனைவரும் அரை மனதுடன் எழுந்து தூங்குவதற்கு சென்று விட்டோம்.நான் குறிப்பு எழுதிய பேப்பரை பத்திரமாக அம்மாவின் கைபையில் வைத்துவிட்டு தூங்க சென்று விட்டேன்.

மறுநாள் காலையில் எழுந்து எங்கள் வீட்டிற்கு செல்ல தயாரானோம். தாத்தாவும்,பாட்டியும் கூட சிதம்பரம் புறப்பட தயாரானார்கள்.அனைவரும் கிளம்பி விடை பெரும் சமயம் ,இன்னும் ஒரு மாதத்தில் வர இருக்கும் அடுத்த உறவினர் ஒருவர் திருமணத்திற்கு செல்ல போகும் விவரங்களை பேசி முடித்துவிட்டு அவரவர்கள் தங்கள் வீட்டிற்கு கிளம்பி சென்று விட்டோம்.

அம்மாவிற்கு இப்போதே கவலை ஏற்பட்டுவிட்டது.அடுத்த கல்யாணத்தில் நகைகள் எங்கு என கேட்டால் என்ன பதில் சொல்ல போகிறேன் என்று.தினமும் குமாரி அக்காவிடம் இது பற்றி புலம்பி கொண்டே வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.அந்த உறவினர் கல்யாணம் அப்பா பக்கத்தில் மிக நெருங்கிய சொந்தம் என்பதால் போகாமல் இருக்கவும் முடியாது.பிரச்சனை எழுந்து விடும்.போனாலும் பிரச்சனை வரும்.செய்வதறியாமல் அம்மா தினமும் தவிப்பது அனைவருக்கும் வெளிப்படையாகவே தெரிந்தது.அம்மா மகிழ்ச்சி

இழந்து எப்பவும் கவலையாகவே காணப்பட்டார்கள்.குமாரி அக்கா அவர்களை எப்படி எல்லாமோ தைரிய வார்த்தைகள் கூறி தேற்ற முயன்றும் தோல்வியுற்றார்கள் .

ஒரு மாதம் எப்படியோ ஓடியது.கல்யாண நாள் நெருங்கியது.ஊரிலிருந்து தாத்தாவும்,பாட்டியும்,பெரியம்மா வீட்டிற்கு வரப்போவதாகவும் கடிதம் வந்தது.இன்னும் ஓரிரு தினகளே இருந்தது கல்யாணத்திற்கு.இம்முறை அம்மா தாத்தா,பாட்டியை அழைக்க ஸ்டேஷனுக்கு சென்று பார்த்துவிட்டு பிறகு கல்யாணத்தில் அவர்களை மீண்டும் பார்ப்பதாக கூறி அப்படியே வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.

27

அத்யாயம்- இருபத்து ஏழு

அன்றுதான் அப்பாவில் உறவினர் திருமணம்.முகூர்த்தம் காலையில் ஆறு மணிக்கு என்பதால் அனைவரும் காலை நாலு மணிக்கே எழுந்து குளித்து விட்டு ,வீட்டை விட்டு ஐந்து மணிக்கெல்லாம் கிளம்பி விட்டோம்.அம்மாவின் முகம் பேயறைந்தது போல இருந்தது.வழி முழுதும் யாரும் எதுவும் பேசவில்லை.திருமண மண்டபத்தை அடைந்ததும் அங்கு எங்களுக்கு முன்பே பெரியம்மா,தாத்தா,பாட்டி,மாமா,மாமி, மற்றும் அவர்கள் மூன்று பெண்களும் வந்திருந்தனர்.

அம்மா உள்ளே நுழைந்து அவர்கள் இருக்கும் இருக்கையின் பக்கத்தில் சென்று அமர்ந்ததும் ,சற்றும் தாமதிக்காமல் அம்மாவின் வருகைக்காக காத்திருந்ததது போல் “என்ன மங்கை இந்த முறையும் நீ வழக்கம் போல் நகைகள் எதுவும் ரொம்ப இல்லாமல்
வந்திருக்கிறாய்?சாதாரணமாக இவ்வளவு எளிமையாக நீ வெளியே
வரமாட்டாயே?உண்மையை சொல்.உன் நகைகள் எல்லாம் என்ன ஆயிற்று?”என பெரியம்மா சேது கேட்கவே.

“வீட்டில் நகைகளை வைத்திருந்தால் திருட்டு போய் விடுமோ? என பாங்கில்
வைத்திருக்கிறேன்.அதனால்தான் ஒவ்வொரு முறையும் பாங்கிற்கு போய் நகைகளை எடுத்து வர நேரமில்லாததால் இப்படியே வந்து விடுகிறேன்”என தயங்காமல்
பொய்யுரைத்தார்கள்..அம்மா ,பிறகு மெதுவாக பெரியம்மாவிடமிருந்து நழுவி மற்ற உறவினர்களிடம் பேசும் பாவனையில் சென்று விட்டார்கள். அந்த திருமணத்தில் நாங்கள்

இருந்த அந்த சில மணி நேரங்கள் அம்மா பெரியம்மாவுடன் பேசுவதை தவிர்த்தார்கள்.நகைகளை பற்றி தொடர்ந்து பெரியம்மா பேச்சு எடுப்பது அம்மாவிற்கு இஷ்டமில்லை. ஆனால் பெரியம்மாவும் விடாமல் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் "'எந்த பாங்கில் வைத்திருக்கிறாய்?வேண்டுமானால் என் வீட்டு இரும்பு பெட்டியில் வைத்து விடு.பத்திரமாக இருக்கும்.தேவை படும் போது சொல் நான் கொண்டு வந்து தருகிறேன் அல்லது நீயே வந்து எடுத்து செல்.பிறகு திரும்பவும் நீயே வந்து வந்து பூட்டி விடு.உன்னிடம் வேண்டுமானால் ஒரு சாவியை உன்னிடம் இருக்குமாறு இருக்குமாறு கொடுத்து விடுகிறேன்".என்று கூறி வற்புறுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

"சரி சேது, நேரம் வரும் போது அப்படியே செய்கிறேன்"என நழுவிய அம்மாவை பெரியாம்மா விடுவதாக இல்லை."நாளைக்கு வருகிறேன்,நாம ரெண்டு பேரும் நேராக பாங்க சென்று நகைகளை லாகரிலிருந்து எடுத்து

வந்து என் இரும்பு பீரோவில் வைத்து விடலாம்.நீ இப்படி நகைகள் இல்லாமல் வெளி உலக நல்ல காரியங்களுக்கு வருவது பார்க்க கஷ்டமாக உள்ளது. நீ எப்பவும் நிறைய நகைகளுடனும்,தலை நிறைய பூவும் வைத்து புடவைகளுக்கு பொருத்தமான நகைகளை அணியும் நீ இப்படி ஒன்றுமில்லாமல் சாதாரணமாக வருவது பார்க்க எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது"என ஆதங்கபட்டார்கள்.

"அதற்கெல்லாம் எனக்கு இப்ப நேரம் இல்லை சேது.என் கால் வேறு வலிக்கிறது .நடக்க மிகவும் கஷ்டமாக இருக்கிறது.இரு முட்டிகளும் உயிர் போகிறமாதிரி வலி எடுக்கிறது.எல்லாம் நல்லபடி ஆகட்டும்,பிறகு இது பற்றி பேசி கொள்ளலாம்"என கூறிவிட்டு பேச்சை வேறு திசைக்கு உடனே திருப்பிவிட்டார்கள்.

"பெரியம்மாவின் முகத்தில் சந்தேககுறி எழுந்ததை நான் கவனிக்க தவறவில்லை. மௌனமாக அம்மாவை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த பெரியம்மா அதன் பிறகு

நகைகளை பற்றி எதுவும் பேச்சு எடுக்கவில்லை.

நாங்கள் நால்வரும் எங்கள் மாமா பெண்கள் முவருடனும் சந்தோஷமாக பொழுதை அந்த திருமண மண்டபத்தில் கழித்தோம். அவர்கள் முவரும் சிதம்பரத்திற்கு கோடை விடுமுறைக்கு வராதது பற்றி எங்கள் வருத்தத்தை பகிர்ந்து கொண்டோம்.அந்த கல்யாணத்தில் நிறை கோககோலா ட்ரிங்க்ஸ் இருந்ததால் நாங்கள் எட்டு பெரும் போட்டி போட்டுகொண்டு ஆளுக்கு ஐந்து பாட்டில்களுக்கு மேல் குடிந்தது தீர்த்தோம்..முடிந்தவரை நாங்கள் எட்டு பேரும் ஒன்றாக உட்கார்ந்துகொண்டு சந்தோஷமாக பொழுதை போக்கிவிட்டு பிரிய மனமில்லாமல் விடைகொடுத்து, திருமண நிகழ்ச்சி எல்லாம் முடிந்து நாங்கள் வீடு திரும்பி வழக்கம் போல் நாட்கள் நகர்ந்து கொண்டிருந்ததன.

அப்பா எப்போதும் போல இரவு 12 மணிக்குதான் வீடு திரும்பினார்கள்.இரவில் கடைசி பஸ் பிடித்துதான் வீட்டிற்கு வருவார்கள். அந்த பஸ்ஸை தவற

விட்டுவிட்டால் அப்பாவின் நண்பர்கள்
அவர்களது காரில் கொண்டு வந்து
இறக்கிவிட்டுச் செல்வார்கள்.காலையில்
அனைவரும் பள்ளிக்கூடம் கிளம்பி செல்கையில்
அப்பா தூங்கிக் கொண்டிருப்பார்கள்.நாங்கள்
அனைவரும் ஒருவருக்கொருவர் பேசும் வாய்ப்பு
குறைந்து கொண்டே வந்ததது, வீட்டில் என்ன
நடக்கிறது.நாங்கள் என்ன மதிப்பெண்கள்
வாங்குகிறோம்?வீட்டு வரவு,செலவு
என்ன?அம்மா உடல் நலம் எப்படி
இருக்கிறது?வைத்தியரிடம் அழைத்து செல்ல
வேண்டுமா? என்று எது பற்றியும் அப்பா
கவலை பட்டதில்லை. எல்லாம் அம்மாவின்
பெற்றோர்களும்,பெரியம்மாவும் பார்த்து
கொள்வார்கள் என்ற
தைரியமோ?என்னவோ?தெரியாது.சூதாட பணம்
இருந்தால் போதும்.எது பற்றியும் கவலை
கிடையாது.சூதாட்டத்திற்கு பணம் தேவைப்படும்
போது மட்டும் அம்மாவிடம் இருக்கும்
கொஞ்ச,நஞ்ச பணத்தையும் வாங்கிச் சென்று
விடுவார்கள்.

ஒரு சமயம்.அன்று விடு முறை நாள்.அப்பா மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அம்மாவிடம்,"உன்னிடம் ஏதும் பணம் இருக்கிறதா?.எனக்கு கொஞ்சம் பணம் அவசரமாக தெவைபடுகிறது.நீ இப்போது எனக்கு ரூ 200 கொடு.நான் ஆபீசில் லோன் போட்டு இருக்கிறேன்.அது வர இரண்டு வாரங்கள் ஆகலாம் .வந்ததும் உனக்கு திருப்பி தந்து விடுகிறேன்"என்றார்கள்.

"என்னிடம் இப்போதைக்கு அவ்வளவு பணம் இல்லையே.சின்னவன் பாட் பள்ளிகூடத்திற்கு இந்த முறை பீஸ் கட்டாததால் அவன் பள்ளிக்கு செல்லாமல் முன்று வாரங்களாக வீட்டில் இருக்கிறான்.அவனுக்கு ஸ்கூல் பீஸ் கட்ட அப்பாவை பணம் கேட்க ஒரு மாதிரியாக இருக்கிறது. உங்களைத்தான் இன்று இது பற்றி கேட்கலாம் என்றிருந்தேன்"என்றே அம்மா கூறிய பதிலை கேட்டு அப்பாவிற்கு மிகவும் கோபம் வந்துவிட்டது.

“நான் உன்னை அவசரம் என்று பணம் கேட்டால்,நீ என்னை திருப்பி கேட்கிறாயா?.திமுரு பிடத்த கழுதை,”என உரத்த குரலில் மிரட்டியதும்,அம்மா பயந்தபடி எதுவும் பேசாமல் அப்பாவின் அருகில் நின்றுகொண்டிருந்தார்கள்.நானும்,குமாரி அக்காவும் பக்கத்திலுள்ள அறையில் நின்று கொண்டு இவர்களது சம்பாஷணைகளை கேட்டுகொண்டிருந்தோம்.

“நான் பேசுவது காதில் விழுவில்லை.திமிரா நிக்கிறியே, பணம் இருக்கா,இல்லையா?என மிரட்டும் தொனியில் அப்பா கேட்கவே,

என் உடல் நடுங்கியது.பயத்துடன் குமாரி அக்காவை கட்டி பிடித்துக் கொண்டேன்.

“அதான் ,சொன்னேனே, பாட் ஸ்கூலுக்கே பீஸ் கட்ட பணம் ரூ 150 என்னிடம் இல்லை என்று. அது மட்டுமில்லை மளிகை கடைகாரனுக்கு ரூ 75-ம்,கொடுக்கவேண்டும்.ரூ 75 பாக்கி பணத்தை மளிகைக்கடைகாரனுக்கு இன்னும் ஒரு வாரத்தில்

கொடுக்காவிட்டால் மளிகை சாமான்கள் கிடையாது என திட்டவட்டமாக சொல்லிவிட்டான்.இனி மளிகை சாமான்களும் கிடையாது.மேலும் இரண்டு மாதங்களாக பால் காரனுக்கு வேறு ரூ 50 கொடுக்கவில்லை.தினமும் பால் காரன் என்னை பணம் கேட்டு நச்சரித்து வருகிறான். இவற்றிற்கெல்லாம் யாரை கேட்பது என யோசித்துக் கொண்டிருக்கிறேன்.இதற்கிடையில் என் உடல் நிலை இரு மோசமாகி கொண்டே வருகிறது. மருத்துவரிடம் கூட போக பணம் இல்லை".என அம்மா அடுக்கி கொண்டே போனது அப்பாவிற்கு இவை எல்லாம் கேட்பதற்கு இஷடமில்லாமல்.

"ஏன் உன் அக்கா,அப்பாவிடம் கேட்கவேண்டியதுதானே.என்னிடம் ஏன் இதுபற்றி முறையிடுகிறாய்?என கொஞ்சமும் பொறுப்பில்லாமல் சுயநல வாதியான அப்பாவை பார்க்க என் மனம் கூசியது. ச்சே,நீ எல்லாம் ஒரு அப்பாவா?உனக்கெல்லாம் ஒரு குடும்பம்வேறு கேடா?என என் மனதிற்குள்

அப்பாவை வெறுத்தேன்.

“உன் கழுத்திலிருக்கும் மாங்கல்ய சூத்திரத்தை கொடு,இன்னும் ஒரு மாதத்தில் மீட்டு தந்து விடுகிறேன்”என்றார்கள் கொஞ்சமும் ஈவு இறக்கம் இல்லாமல்.

“ஐயோ,இதையும் கழற்றி கொடுத்துவிட்டால் என் அக்காவிற்கும்,பெற்றோர்களுக்கும் என்ன பதில் சொல்வேன் நான்”கழத்தில் செயின் இல்லாமல் மஞ்சள் கயிறுடன் வேலைக்கு சென்றால் அங்கு கேட்பவர்களுக்கு நான் என்ன பதில் சொல்வது” என
பயத்துடனும்,நடுக்கத்துடனும் அம்மா குரல் தழுதழுக்க கூறிக்கொண்டிருக்கையில் மேலும் ஆக்ரோஷத்துடன் சாப்பிட்டுகொண்டிருந்த அப்பா அவர்கள் சாப்பாட்டு தட்டில் இருந்த ரசம் சாதத்துடன் இருந்த கீரை கூட்டை எடுத்து அம்மாவின் தலையில் கவிழ்த்துவிட்டு,கன்னத்தில் ஓங்கி இரண்டு அரை கொடுத்தார்கள்.

“கழுதை, எதிர்த்தா பேசுகிறாய்?பணக்கார திமிரா உனக்கு?.உன் பெயரில்தான் உன் அப்பா நிறைய சொத்து எழுதி வைத்திருக்கிறாரே.அப்புறம் என்ன குறை உனக்கு.பணம் இல்லை.பணம் இல்லை என பஞ்சப்பாட்டு பாடுகிறாய். பணத்தை மறைத்து வைத்துகொண்டு நடிக்கிறீயா? என்னிடம்.”என்றதும் அம்மா அழுது கொண்டே தலையிலிருந்து வழிதொடிய ரசம் சாதத்தையும் ,கீரை கூட்டையும் வழித்து துடைத்தபடி கழுத்திலிருந்த தாலி செயினை கழற்றி அப்பாவிடம் கொடுத்தார்கள்.

எனக்கும் குமாரி அக்காவிற்கும், அண்ணன் ஷானுக்கும் , தம்பி பாட்டிற்கும் பயத்தால் உடல் நடுங்கி,என் இதயம் பட படவென அடிக்க தொடங்கியது.குமாரி அக்காவை கட்டிய வண்ணம் தேம்பி,தேம்பி அழ ஆரம்பித்துவிட்டேன் நான்.நான் அழுவதை பார்த்ததும்,தம்பி பாட்டும், குமாரி அக்காவும் ,அண்ணன் ஷானும் கூடவே ஆழ ஆரம்பித்துவிட்டார்கள்.

அப்பா சாப்பிடாமல் செயினை எடுத்துக் கொண்டு மாடிக்கு சென்றதும்,குமாரி அக்கா அம்மாவிடம் விரைந்தது சென்று அவர்கள் தலையை சுத்தம் செய்ய உதவினார்கள்.குமாரி அக்கா கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய் வழிந்தோடியது.நாங்கள் நால்வரும் அழுதுகொண்டே சிந்திய சாப்பாட்டை சுத்தம் செய்தோம்.அம்மா உடல் முழுதும் சாப்பாடு வழிந்தோடியதால்.

“நான் மறுபடியும் குளித்துவிட்டு சுத்தம் செய்துவிட்டு வருகிறேன் குமாரி,நீ தரையை மட்டம் சுத்தம் செய்துவிட்டு ,பசித்தால் நீயும் சாப்பிட்டுவிட்டு,குழந்தைகளுக்கும் சாப்பாடு கொடுத்துவிட்டு,கதவை பூட்டிவிட்டு மேலே சென்றுவிடு.எனக்கு பசிக்கவில்லை.நான் குளித்துவிட்டு மேலே பேப்பர் கரெக்ட் பண்ண வந்துவிடுகிறேன்”என்று சொல்லிவிட்டு குளியலறைக்கு குளிப்பதற்காக சென்றுவிட்டார்கள் அம்மா.

அப்பாவின் செய்கை எனக்கு துளியும்

பிடிக்கவில்லை.அம்மா இவ்வளவு தூரம் பணம் கஷ்டம் என கூறியும்,தம்பி பாட் ஸ்கூலுக்கு பீஸ் கட்டாமல் அவன் ஸ்கூலுக்கு போகாமல் வீட்டிலிருப்பது பற்றியும் கவலை இல்லை.குடும்பத்தை பற்றி துளியும் அக்கறை இல்லாத அப்பாவிற்கு எதற்கு குடும்பம்.அம்மா ஏன் அப்பாவுடன் குடும்பம் நடத்தவேண்டும்.இவரை அப்பா என கூப்பிடுவதே பாவம்.என் மனதில் கசப்புணர்ச்சி ஏற்பட்டது.கடவுளே ஒன்றும் அறியாத எங்களுக்கு ஏன் இப்படி ஒரு தறுதலை அப்பாவை கொடுத்து தண்டிக்கிறாய்?ஊரில் மற்ற குழந்தைகளின் அப்பாக்கள் எவ்வளவு பொறுப்புடன் குடும்பத்தை பார்த்து கொள்கிறார்கள்.

அம்மாவின் கண்கள் கோவை பழமாக சிவந்திருந்தன.வரவேற்பறையில் அமர்ந்து பரீட்சை பேப்பர்அனைத்தையும் திருத்திகொண்டிருந்தார்கள்.நாங்கள் அனைவரும் அம்மாவை சுற்றி உட்கார்ந்துகொண்டு பேசிகொண்டிருந்தோம்.

நான் வழக்கம்போல் காலையில் எழுந்து பாட்டு கிளாசுக்கு சென்று வந்தேன்.பாட்டு டீச்சர் கோடை விடுமுறை சமயம் பாட்டு பரீட்சை என்றும்,அந்த பரீட்சையில் தேறினால் அடுத்த நிலையிலுள்ள பாட்டு கற்று கொள்ள முடியும் இல்லை என்றால் மறுபடியும் இப்போது நிலையிலுள்ள பாட்டையே சரியாக கற்று மறுபடியும் அடுத்த வருடம் பரீட்சையில் தேறினால் மேற்கொண்டு போகலாம் என்ற விஷயத்தை வீட்டில் பெற்றோரோரிடம் கூறும்படி எங்களுக்கு விடுத்த அறிவிப்பை வீட்டில் வந்து அம்மாவிடம் கூறியதுதான் மிச்சம் ,அம்மா தினமும் மாலையில் எனக்கு பாடச்சொல்லி பயிற்சி அளித்தார்கள்.எப்படியாவது இந்த பரீட்ச்சையில் நான் தேறி மேற்கொண்டு பாடல்களை கற்று கொள்ளவேண்டும் என்பது அம்மாவின் மிகப்பெரிய ஆசையும் கனவும் கூட.நான் மேடையில் அமர்ந்து பாடவேண்டும் அம்மா கீழே உட்கார்ந்துகொண்டு நான் பாடும் கச்சேரியை ரசிக்கவேண்டும் என்பது அம்மாவின்

கனவு.அப்போது கர்னாடக சங்கீதத்தில் என் குரலும் நன்றாகவே இருந்தது.

ஒருநாள் நாங்கள் அனைவரும் பள்ளிக்கூடம் சென்றிருக்கையில்,நாங்கள் குடியிருக்கும் ஏரியாவில் உள்ள ஒரு அரசாங்க பள்ளிகூடத்திற்கு திடீர் விஜயம் செய்ய வந்த பெரியம்மா அப்படியே அருகில் இருக்கும் எங்கள் வீட்டிற்கு மதியம் சாப்பாட்டிற்கு பிறகு வந்தவர்கள். தம்பி பாட் ஸ்கூலுக்கு போகாமல் வீட்டில் விளையாடி கொண்டிருப்பதை பார்த்து விட்டு குமாரி அக்காவிடம் விஷயத்தை கேட்கவே குமாரி அக்காவும் முழு விவரத்தை பெரியம்மாவிடம் கூறிவிட்டார்கள்.

அன்று மாலை வேலை முடிந்து வீட்டிற்கு வந்த அம்மாவிடம் குமாரி அக்கா பெரியம்மா வந்து போன விஷயத்தை கூரியதும் அம்மாவிற்கு பயம் ஏற்பட்டுவிட்டது.இனி அவள் சும்மா இருக்க போவதில்லை.ஏதாவது அமர்க்களம் செய்ய போகிறாள் என நடுக்கம் உண்டாயிற்று.அம்மா பயந்து செத்தது போலவே

பெரியம்மா சும்மா இருக்கவில்லை'.தாத்தா,பாட்டி இருவருக்கும் கடிதம் போட்டு உடனே வரவழைத்து விட்டார்கள்.

தாத்தா ஈஸ்வரனும்,பாட்டி கமலாவும் மற்றும் பெரியம்மா முவரும் ஒருநாள் மாலை ஆறு மணிக்கு, அம்மா வீட்டில் இருக்கும் சமயம் பார்த்து வந்திறங்கினார்கள்.கீழே தெருவில் சிநேகிதிகளுடன் விளையாடி கொண்டிருந்த நான் இவர்கள் முவரும் பெரியம்மா காரில் வந்து இறங்கியது பார்த்துவிட்டு மேலே சென்று "அம்மா,பெரியம்மாவுடன் தாத்தாவும்,பாட்டியும் வந்திருக்கிறார்கள்"என்றதும், .பெற்றோர்களும்,அக்காவும் வருகிறார்கள் என்ற விஷயம் அறிந்து அம்மாவின் முகம் பேயறைந்தது போல வெளுத்தது. அவர்கள் வருகிற விஷம் அம்மாவிற்கு சந்தோஷத்தை கொடுக்கவில்லை.அம்மாவின் முகத்தில் கலவரம் ஏற்பட்டது.அதை பார்த்த எனக்கு ஒன்றுமே புரியவில்லை.குமாரி அக்காவும் ஆடு திருடிய கள்ளி போல விழித்துக்கொண்டு நின்றிருந்தார்கள்,அதற்க்கு பெரியம்மாவும்,

தாத்தாவும்,பாட்டியும் மேலே ஏறி வந்து விடவே அம்மாவும்,குமாரி அக்காவும்,

“வாங்க,வாங்க,என அவர்களது முகத்திலிருந்த கலவரத்தை மறைத்து கொண்டு இன்முகமாக வரவேற்றார்கள்.மொட்டை மாடியில் நாற்காலிகளை போட்டு அதில் அவர்கள் முவரையும் உட்காரவைத்துவிட்டு

“குமாரி காபி போட்டு கொண்டு வாயேன்”என்றார்கள் அம்மா.

“வேண்டாம் குமாரி, நாங்கள் எல்லாம் முடித்துவிட்டு வந்துவிட்டோம்”என பெரியம்மா சொன்னவுடன் குமாரி அக்கா என்னை அழைத்துக்கொண்டு சற்றே தூரத்தில் சென்று நின்று கொண்டார்கள்.அவர்களுக்குள் நடக்கும் சம்பாஷனைகள் அனைத்தும் கேட்க்கும் தொலைவில் நின்று கொண்டு அடுத்த மொட்டை மாடியில் விளையாடிக்கொண்டிருக்கும் அண்ணன், தம்பியை பார்க்கும் பாவனையில்

இருந்தோம்.பேச்சை தாத்தா ஈஸ்வரன்தான் முதலில் ஆரம்பித்தார்கள்.

“எப்படிப்பா இருக்கே?” என்றார்கள்.

“நல்லா இருக்கேன் அப்பா”என்றார்கள் அம்மா.

“உன் உடல்நிலை எப்படியிருக்கிறது?ரொம்பவும் தாங்கி தாங்கி நடக்கிறியே ,மாப்பிள்ளை எப்படி இருக்கிறார்?”என சாதாரணமாக பேசுவதுபோல பேச்சை ஆரம்பித்தார்கள்.

“எதோ போய் கொண்டிருக்கிறது அப்பா.கவலைபடுவதற்கு ஒன்றுமில்லை”என்றார்கள்.

“எல்லாவற்றிற்கும் ஒரு வரியில் பதில் சொல்லுகிறாயே மங்கை.விஷயத்தை அப்பாவிடம் சரியா விளக்கமாகத்தான் சொல்லேன்.”என்றார்கள் பெரியம்மா.

“சொல்வதற்கு என்ன இருக்கிறது சேது.விசேஷமாக ஒன்றும் இல்லை”என்றார்கள்

அம்மா.

“நான் போனவாரம் மத்தியானம் இங்கு வந்து போனதை குமாரி உன்னிடம் சொல்லியிருப்பாள் என நினைக்கிறேன்”என்றார்கள் பெரியம்மா.

“சொன்னாள் “என்றார்கள் அம்மா.

“சின்னவன் ஏன் பள்ளிக்கூடம் போகாமல் இருக்கிறான்?”என பெரியம்மா கேட்டதற்கு,

“அம்மா பதில் எதுவும் பேசாமல் மௌனமாக இருப்பது கண்டு கோபமடைந்த பெரியம்மா,

“வாயை திறந்து வெளிப்படையாக பேசேன்,ஏன் இப்படி எதற்கெடுத்தாலும் மௌனம் சாதிப்பது,ஒரே வரியில் பதில் சொல்வது என்றிருந்தால் யாருக்கும் ஒன்றும் தெரியாமல் போய்விடும் என்று நினைக்கிறாயா?வாயை திறந்து நடக்கும் உண்மைகளை இப்போவாவது எங்களிடம் சொல்லிவிடு.இல்லை என்றால் உன் நிலைமை மோசமாகி விடும்.உண்மையை கூறினால் எங்களால் முடிந்த உதவியை செய்து

உன்னையையும் ,குழந்தைகளையும் எங்களால் காப்பாற்ற முடியும்.இல்லை என்றால் உன் குடும்பமே கூண்டோடு கைலாசம் போக வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்

வீணாக கதையில் வரும் நல்லதங்காள் மாதிரி ஆகிவிடாதே என மனவருத்தத்துடன் பேசியதும்,"ஆமாம்ப்பா,தயவு செய்து என்ன என்று சொல்.என்னால் என்ன உதவி செய்ய முடியுமோ அதை செய்கிறேன்"என தாத்தாவும் வருத்தத்துடன் கூறியதும் அம்மா மெதுவாக வேறு வழியின்றி தம்பி ஸ்கூல் பீஸ் கட்டாதது முதல்,மளிகைகடை,பால் பாக்கி,முதலியவற்றை கூறி முடித்தார்கள்.

"உன் நகைகள் எல்லாம் பங்கில் வைத்திருப்பதாக சொன்னாயே? எந்த பாங்கில் வைத்திருக்கிறாய்? உண்மையில் அது பாங்கில்தான் இருக்கிறதா?இல்லை உன் புருஷன் விற்று சூதாடிவிட்டானா?"என கேட்டுகொண்டே அம்மாவின் கழுத்தை பார்த்த பெரியம்மா அதிர்ச்சியுடன்,

“உன் கழுத்திலிருந்த 12 பவுன் தாலி செயின் எங்கே?”என்றார்கள்.

“அடபாவி,தாலி செயினையுமா உன் புருஷன் விற்றுவிட்டான்?”என்று முதல் முறையாக பாட்டி கமலா வாய் திறந்து அதிர்ச்சியுடன் ஆதங்கத்துடனும் கேட்டார்கள்.

அம்மாவிடம் சிறிது நேரம் மௌனம் நிலவியது.பொறுமை இழந்த பெரியம்மா”நீ இப்பவும் உண்மையை சொல்லாவிட்டால், நாளை எங்களை பாங்கிற்கு அழைத்துச்சென்று பாங்கில் நகை இருப்பது உண்மை என்பதை நிரூபி.நாளை நாங்கள் மறுபடியும் வருகிறோம் என பயமுறுத்துவதுபோல பேசியதும் ,வேறு வழியில்லாமல் கையும் களவுமாக அகப்பட்டு கொண்டப்பின் ஜான் போனால் என்ன,முழம் போனால் என்ன?என்ற நிலைக்கு வந்தததும் அம்மா அனைத்து உண்மைகளையும் கூறிமுடித்தார்கள்.

“அப்பா அவர் எல்லா நகைகளையும் சேட்டு

கடையில் வட்டிக்கு அடகு வைத்து பணம் வாங்கி செலவு செய்து விட்டார்.வீட்டில் துளி நகை கூட இல்லை.காதில் போட்டிருக்கும் இரு கம்மல்களும்,இந்த ஒரு மூக்குத்தி மட்டும்தான் உள்ளது",என்றார்கள் அம்மா.

"சீதனமாக கொடுத்த வெள்ளி பாத்திரங்கள்,பித்தளை பாத்திரங்களையாவது பத்திரமாக வைத்திருக்கிறாயா?அல்லது அதையும் உன் புருஷன் விற்று தள்ளி விட்டாரா?"என்று பாடி மலா கேட்டதற்கு,சிறிது நேரம் தயங்கி விட்டு,குறுகிய மௌனத்திற்கு பிறகு "எல்லாம் அடகு கடையில் இருக்கிறது". என்றார்கள் அம்மா.

பாட்டி தலையில் அடித்துக்கொண்டு ,தலையில் இடி விழுந்தாற்போல மௌனமாக ஆகாயத்தை பார்த்து கொண்டிருந்தார்கள்.அங்கு முவரிடமும் பயங்கரமான மௌனம் நிலவியது சில மணி நேரங்கள்.பிறகு

"அடகு வைத்த எல்லா நகைகளும்,வெள்ளி

பாத்திரங்களும்,பித்தளை பாத்திரங்களும் இருக்கிறதா?இல்லை முழ்கி விட்டதா?"என பாடி தொடர்ந்து கேட்டார்கள்.

"வட்டியும் ,முதலும் கொடுக்கமுடியாமல் பாதி நகைகளுக்குமேல் ஏலத்திற்கு போய்விட்டது.வெள்ளி பாத்திரங்களும்,பித்தளை பாத்திரங்களும் முழுதுமே பணம் கட்டமுடியாமல் முழ்கிவிட்டது.மீதி உள்ள நகைகளை கூடிய சீக்கிரம் மீட்க்காவிட்டால் அதுவும் ஏலத்திற்கு வர இருக்கிறது என நோட்டீஸ் வந்திருக்கிறது.சின்னவன் பாட்டுக்கு ஸ்கூலில் இந்த டெர்ம் பீஸ் காட்டாவிட்டால் அவள் ஸ்கூலுக்கு தொடர்ந்து போக முடியவில்லை "என்ற எல்லா விவரத்தையும் கூரிமுடித்தார்கள் .

"200 பவுனுக்குமேல் இருந்ததே மங்கை.இரு பெண் குழந்தைகளை வைத்திருக்கிறாய்.பிற்காலத்தில் அவர்களுக்கு கல்யாணம் என்றால் நகைகள்,வெள்ளி பாத்திரங்கள் வேண்டாமா?குழந்தைகளுக்கு படிப்பிற்கு, கல்யாணத்திற்கு என ஒரு பைசா

கூட சேமிக்க முடியவில்லை.இப்படி இருப்பதையும் தொலைத்துவிட்டால் வருங்காலத்தில் குழந்தைகளின் கதி என்னவாகும் என யோசித்து பார்த்தியா?இப்படி மக்கு மாதிரி எல்லாவற்றையும் உன் புருஷன் கேட்டார் என கொடுத்து விட்டு,எங்களிடமும் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் என்ன ஒரு அசட்டு தைரியத்தில் இப்படி மௌனமாக இருக்கிறாய்?கொஞ்சம் கூட உனக்கு சுய சிந்தனை இல்லையா?ஏன் இப்படி அடி முட்டாளாக இருக்கிறாய்?"என பெரியம்மா வருந்தும் தோணியில் கேட்டார்கள்.

"இன்னும் கொஞ்ச நாட்களில் நகைகள் அனைத்தும் மூழ்கிவிடுவதாக நோட்டீஸ் வந்திருக்கிறது என்று சொன்னாயே,எங்கே அதை கொண்டுவா பார்க்கலாம் "என்றார்கள் தாத்தா ஈஸ்வரன்.

"அம்மா உள்ளே சென்று பீரோவிலிருந்து நோட்டிசை எடுத்து வந்து தாத்தாவுடம் காண்பித்தார்கள்.சற்று நேரம் அதை படித்து

பார்த்துவிட்டு அந்த நோட்டீஸ் -ஐ
பெரியம்மாவிடம் கொடுத்துவிட்டு

“இப்போதைக்கு ரூ.5000 என் கைவசம்
இல்லை.ஊருக்கு சென்று பணத்தை எடுத்து
கொண்டு திரும்பி வர எப்படியும் இரண்டு
நாட்கள் ஆகும்.நீ லீவு போட்டுவிட்டு தயாராக
இருந்தால் நாம் சென்று நகைகளை மீட்டு
எடுத்து வந்து விடலாம்.”என தாத்தா கூறியதும்

“அப்பா நான் ரூ.5000 கடனாக
தருகிறேன்.நாளை காலையிலேயே தேவனை
அழைத்துக்கொண்டு சென்று நகைகளை மீட்டு
விடுங்கள்.ஊருக்கு சென்றதும் ரூ.5000த்தை
எனக்கு மணி ஆர்டர் செய்துவிடுங்கள்.வேலை
விரைவில் முடிந்துவிடும்.”என பெரியம்மா
கூறியதும் தாத்தா சரி என்பது போல தலை
ஆட்டினார்கள்.

பிறகு சிறிது நேரம் வேறு ஏதேதோ பேசிவிட்டு,
தாத்தா பணத்துடன் மறுநாள் விடியர்
காலையிலேயே வருவதாகவும்,நகை

சம்பந்தப்பட்ட ரசீதுகளை தயாராக வைத்திருப்பதுடன்,அப்பாவையும் வீட்டிலிருந்து அடகு கடைக்கு தாத்தாவை அழைத்து சென்று நகைகளை மீட்டு வருவதற்காக தயாராக இருக்கும்படி சொல்லிவிட்டு கிளம்பி சென்றுவிட்டார்கள்.

அவர்கள் முவரும் சென்றதும் நானும் குமாரி அக்காவும் அம்மாவின் அருகில் சென்றோம்."பரவாயில்லை அக்கா,நகை பிரச்சனை எப்படியோ தீர்ந்து விட்டது."என்றார்கள் குமாரி அக்கா.

"இல்லை குமாரி, பிரச்சனை இனிமேல்தான் ஆரம்பிக்க இருக்கிறது."என்றார்கள் அம்மா.

"என்ன சொல்றீங்க அக்கா? ஏலத்திற்கு வர இருக்கும் நகைகளை சரியான் சமயத்தில் வந்து மீட்பது நல்லதுதானே.இதில் என்ன பிரச்னை வர இருக்கிறது?"என கேள்வி குறி முகத்தில் எழும்ப குமாரி அக்கா கேட்டதும்,

“புரியாமல் பேசுகிறாய் குமாரி, நகைகளை அப்பா மீட்டு என்னிடம் கொடுக்க போவதில்லை.அப்பாவிடம் அல்லது அக்கா சேது வீட்டில்தான் இருக்கபோகிறது.என் கணவருக்கு இதில் விருப்பம் இருக்காது.அந்த நகைகளை எடுத்து வா என ஒவ்வொரு முறையும் பணம் தேவைப்படும் போதெல்லாம் நச்சரித்து சண்டை போட்டால் நான் அப்பாவிடமும் அக்காவிடமும் கேட்டால் அவர்கள் கொடுக்க போவதில்லை .அவர்கள் கேட்க்கும் கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்லவும் முடியாது.என்ன நடக்க போகிறதோ?எனக்கு வயிற்றை கலக்குகிறது.நாளைக்கு அப்பா பணத்துடன் வந்தால் இவர் ரகளை செய்ய போகிறார்”என்றார்கள் அம்மா கவலையுடன்.

“கவலைபடாதீர்கள் அக்கா, எல்லாம் நல்லதாகவே நடக்கும்.கடவுளை வேண்டிக்கொண்டு நிம்மதியாக இருங்கள்”என குமாரி அக்கா தைரிய வார்த்தைகளை கூறிவிட்டு தன வேலையை பார்க்க கீழே சமலரைக்கு சென்று விட்டார்கள்.

மறுநாள் காலையில் சரியாக ஆறு
மணிக்கெல்லாம் சொன்னது போல தாத்தா
ஈஸ்வரன் வந்து வீடு கதவை
தட்டினார்கள்.அப்பா இனமும்
தூங்கிகொண்டிருந்தார்கள்.தாத்தாவை
வரவேற்று அங்கு ஹாலிலுள்ள நாற்காலியில்
உட்காரவைத்துவிட்டு அம்மா
பேசிக்கொண்டிருக்கையில், குமாரி அக்கா காபி
போட்டு கொண்டு வந்து தாத்தாவிடம்
கொடுத்தார்கள்.தாத்தா காபியை
குடித்துகொண்டிட்ருக்கையில் அம்மா படுக்கை
அறைக்குள் சென்று அப்பாவை எழுப்பி
விஷயத்தை சொல்லவே ,அப்பா அரை
தூக்கத்தில் தடுமாரியவண்ணம் எழுந்து
கோபத்துடன் “உன் அப்பா எதற்கு நகைகளை
மீட்க வேண்டும்?அவருக்கு எப்படி தெரியும் இந்த
விஷயம் எல்லாம்? “என கேட்டார்கள்.

“நானாக சென்று எதுவும் சொல்லவில்லை.”என
கூறிவிட்டு நடந்த விஷயங்களை சுருக்கமாக
அப்பாவிடம் கூறினார்கள் அம்மா.

“உன்னால் சும்மா இருக்க முடியாதா? அவர்களிடம் ஏன் நீ இதை எல்லாம் கூற வேண்டும்?நம் விஷயத்தில் தலையிட அவர்கள் யார்?”என கோபத்துடன் கூறிவிட்டு கீழே சென்று பல்விளக்கி விட்டு,முகம் கழுவிவிட்டு மேலே வந்து சட்டையையும்,பாண்ட்டும் மாட்டிக்கொண்டு எதுவும் பேசாமல் கீழே இறங்கி நடக்கவே, அம்மாவும், தாத்தாவும் அப்பாவை பின் தொடர்ந்து சென்றார்கள்.

ஒரு மணி நேரத்திற்கு பிறகு அப்பாவும் அம்மாவும் மட்டும் திரும்பி வந்தனர்.தாத்தாவை காணவில்லை.அப்பா எதுவும் பேசாமல் உடைபாற்றி கொண்டு கீழே குளிப்பதற்கு சென்றுவிட்டார்கள்.

குமாரி அக்கா அம்மாவிடம்,” அப்பா எங்கே?”என்று கேட்டார்கள்.

“அப்பா நகைகளை எடுத்துகொண்டு அக்கா வீட்டிற்கு சென்று விட்டார்கள்”என்றார்கள் அம்மா.

“வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டு போயிருக்கலாமே அக்கா?காலை உணவு அவருக்காக தயாராக வைத்திருந்தேன் “என்றார்கள் குமாரி அக்கா மிகவும் வருத்தத்துடன்.

“பரவாயில்லை குமாரி, இப்போது இருக்கும் சூழ்நிலையில் அப்பா வீட்டிற்கு வராமல் நேரே போனதே நல்லது.இவர் வேறு மிகவும் கோபமாக இருக்கிறார்”வழி முழுக்க ஏதும் பேசகூட இல்லை”என்றார்கள் அம்மா.

“குளித்துவிட்டு மேலே வந்த அப்பா ஏதும் பேசாமல் மறுபடியும் உடைகளை மாற்றி கொண்டு செருப்பை மாட்டிக்கொண்டு முகத்தை உம் என வைத்துக்கொண்டு எதுவுமே சாப்பிடாமல் வீட்டைவிட்டு சென்றுவிட்டார்கள்.

“என்னக்கா அவர் எதுவும் சாப்பிடாமல், எதுவும் பேசாமல் சென்றுவிட்டார்”என குமாரி அக்கா கலவரத்துடனும், மிகவும் கவலையுடனும்

கேட்டார்கள்.

அம்மா வழக்கம்போல் எதுவும் பேசாமல் மௌனமாக ஆகாயத்தை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.அம்மாவின் முகம் சோகமே உருவாயிருந்தது.அதன் பிறகு வீட்டில் யாருமே அதிகம் பேசி கொள்ளவில்லை.அவரவர் வேலைகளை செய்து கொண்டிருந்தோம்.

அம்மாவின் கால் வலி நாளுக்கு நாள் அதிகமாகி கொண்டே வந்தது.மிகவும் கஷ்டபட்டார்கள்.மாடி ஏறுவதும்,அதிகம் நடக்க முடியாமலும் மிகவும் அவதிபட்டார்கள்.மருத்துவரிடம் காண்பித்ததில் ,அது வெறும் ஆர்தரிடிஸ்தான் கவலைப்பட ஒன்றும் இல்லை.ஆர்திரிடீசால் முட்டுவலி ஏற்பட்டுவிட்டதால் நிறைய பழங்களும், பழச்சாறும், தண்ணீரும் தினமும் குடிக்கவேண்டும். அதி அளவில் ஓய்வும், மனநிலை சஞ்சல மில்லாமல் அமைதியான சூழ்நிலையில் சிறிது காலம் இருந்தால் எல்லாம் சரியாகிவிடும்.என மருத்துவர் கூறிவிட்டு

வலிக்காண மாத்திரைகளை மட்டும் எழுதி கொடுதனுப்பிவிட்டார்.

அதன் பிறகு தினமும் அம்மா வலிக்கான மாத்திரையை சாப்பிட்டு அதிக வலி இல்லாமல் இருக்க முடிந்ததே தவிர அவர்கள் நடப்பது நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது.அம்மாவின் மருத்துவ செலவெல்லாம் தாத்தா ஈஸ்வரனே பொறுப்பேற்று கொண்டார்கள் .

அப்பா தினமும் நடு இரவில் வீட்டிற்கு வருவதும், முகத்தை “உம்” என்று வைத்து கொண்டு யாருடனும் பேசாமலும் ,சாப்பிடுவதும், தூங்குவது .வேலைக்கு செல்வதுமாக இருந்தார்கள்.வீட்டை பற்றி முழுமையாக கவலையின்றி, இந்த குடும்பத்திற்கும் அப்பாவிற்கும் சம்பத்தம் இல்லாதது போல அக்கறையின்றி இருந்து வந்தார்கள்.

அத்யாயம்-இருபத்து எட்டு

1969-ம் ஆண்டு கோடை விடுமுறையும் துவங்கியது.இந்த விடுமுறையில் நான் சங்கீத வகுப்பு பரீட்சையில் தேரவேண்டும். பரீட்சையில் உண்டான தேதியும் டீச்சர் கொடுத்து விட்டதால் அந்த பரீட்சையில் நான் நன்றாக பாடி பெயரெடுத்து சிறந்த மாணவியாக தேரவேண்டும் என்பத அம்மாவின் மிகுந்த ஆசை.அதற்காக தினமும் காலையில் தீவீர பயிற்ச்சியை அளித்து வந்தார்கள்.பாட்டு டீச்சரும் பரீட்ச்சைக்கு ஏதும் அக்கறையோ,கவனமோ என்னிடத்தில்

காண்பிக்கவில்லை.ஆனால் மற்ற மாணவிகளை ப்ரீட்சைக்குரிய கோட்பாடுகளை கூறி அவர்களை தயார் செய்து வந்தார்கள்.வழக்கம்போல என்னை அவர்கள் சட்டை செய்யவில்லை. நான் தேறுவது உறுதி இல்லை என்பது போல பாவனையில் அலட்ச்சியமாக நடத்தி வந்தார்கள் என் பாட்டு டீச்சர்.

பாட்டு பரீட்சைக்கு இன்னும் ஒரு சில நாட்களே இருந்தன.இதற்கிடையில் பெரியம்மா அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவது அதிகமாகியது.அம்மாவிற்கும் நிறைய அறிவுரைகளை கூறி வந்தார்கள் பெரியம்மா.அம்மாவை அடிக்கடி மருத்துவரிடம் பெரியம்மாதான் தன காரில் அழைத்து சென்று வந்தார்கள்.

“இப்படி மக்காக இருக்கிறாயே மங்கை.உன் குழந்தைகள் நிலையை கொஞ்சமாவது யோசித்து பார்த்தாயா?அவர்கள் எல்லாம் தலைக்கு மேலே வளர்ந்து கொண்டே

போகிறார்கள்.இன்னும் ஓரிரு வருடத்தில் மூன் பருவத்தை அடைத்துவிடுவார்கள்.இப்படி நீ உன் கணவர் கேட்டதை எல்லாம் கொடுத்துவிட்டு ஓட்டாண்டியாக ஒன்றுமில்லாமல் நின்றால் உங்கள் ஐந்து பேர் நிலையம் என்ன ஆவது?உங்கள ஐந்து போரையும் தேவன் நடு ரோட்டில் பிச்சை எடுக்கும் அளவிற்கு கொண்டு வந்து விட்டு விட்டு எங்காவது தலை மறைவாக ஓடிவிடபோகிறார்.நீயும் குழந்தைகளும் நல்லதங்காள் மாதிரி கூண்டோடு கைலாசமாக போகிறீர்கள்.கொஞ்சமாவது யோசித்து பார்த்தாயா?ஏன் இப்படி இடித்துவைத்த புளி போல உட்கார்ந்து இருக்கிறாய்?நான் சொல்வதை கேள்.எல்லோரும் உறுப்பிட வழி இருக்கிறது"என மந்திரம் போல அடிக்கடி அம்மாவின் காத்தில் ஓதிக் கொண்டே இருந்ததுதான் மிச்சம்.

"எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று புரியவில்லை சேது.உடல் நிலையோ மிகவும் பாதிக்கப்பட்டு வலியுடன் தினமும் போராடுகிறேன்.அவரை எதிர்த்து போராட என்

உடம்பில் தெம்பில்லை”என அம்மா மிக தொய்வுடன் பதிலளித்து வந்தார்கள்.

“நான் சொல்வதை அப்படியே கேட்டு நடந்தால் எல்லாம் சரியாகிவிடும்.உன் புருஷனுக்கு சூதாட பணம் கொடுத்து கொண்டே உன்னால் இனி முடியாது.உன் உடல் நிலை நாலு குழந்தைகள் எதிர்காலத்தை முன்னிட்டு அந்த மனிதனை பிரிந்து நீ குழந்தைகளுடன் தனியாக சென்று விடு.நான் வீடு கட்டுவதற்காக நிலம் வாங்கி இருக்கிறேன்.பெரிய வீடாகவும் கட்ட இருக்கிறேன்.நீ குழந்தைகளுடன் என்னுடன் வந்து தங்கிவிடு.தேவன் திருந்தாவிட்டால் அவரை விவாகரத்து செய்து விட்டு நிம்மதியாக உன் வருமானத்தையும்,சிதம்பரத்தில் உன் பேரில் அப்பா எழுதி வைத்திருக்கும் வீட்டிலிருந்து வரும் வாடகையும்,நிலத்திலிருந்து உன் பங்கிற்கு வரும் அரிசியும்,பருப்புகளையும் வைத்து கொண்டு நீ ராணி போல வாழ்க்கை நடத்தலாம்.இப்படி ஒரு மோசமான வாழ்க்கை உனக்கு தேவை இல்லாத தலை எழுத்து”என்று பெரியம்மா மிகவும் அக்கறையுடன் கூறினார்கள்.

“ஐயோ,என்ன சேது உன் வாயில் விவாகரத்து அப்படி,இப்படி என ஏதேதோ வார்த்தை எல்லாம் வருகிறது.விவாகரத்து எல்லாம் நம் பரம்பரையிலேயே கிடையாதே.அப்படி இருக்கும்போது துணிந்து என்னை இம்மாதிரி காரியத்தை எல்லாம் செய்ய சொல்கிறாயே. ஊரிலுள்ளவர்களும்,உறவுகாரர்களும் என்னை ஒரு தினுசாக பார்ப்பார்களே.குழந்தைகளுக்கு அப்பா என்ற பந்தமே இல்லாமல் போய்விடுமே.பின்னால் அவர்கட்கு கல்யாணம் காட்சி என்றால் அப்பா இல்லாமல் நன்றாக இருக்காதே”என மிகவும் கலவரம் படிந்த முகத்துடனும்,சற்றே அதிர்ச்சி அடைந்தவர்களாகவும் படபடவென பேசி முடித்தார்கள் அம்மா.

“எல்லாவற்றையும் பற்றி இப்போது கவலைபடாதே.நீ இப்போதே விவாகரத்து செய்ய வேண்டாம். கொஞ்சம் நாட்கள் குழந்தைகளுடன் தனியாக சென்று விடு.தேவன் வீட்டிற்குள் நுழையாதபடி கோர்ட் ஆர்டர் வாங்கி விடலாம். ஓரிரு வருடத்தில் தேவன்

திருந்தி விட்டால் அவரை திரும்ப
விடு.திருந்தாவிட்டால் கடைசி கட்டத்தில்
உனக்கு வேறு வழி இல்லாத பட்ச்சத்தில்
விவாகரத்து நோட்டீஸ் அனுப்பு.அதற்கும் அவர்
பயந்து திருந்தாவிட்டால் முறைப்படி
விவாகரத்து செய்து விட்டு குழந்தைகளுடன்
சென்னையை விட்டு எங்காவது சிறிய
டவுனுக்கு சென்று நிம்மதியாக வாழ்.நான்
உனக்கு எந்த ஊர் பிடித்க்கிறதோ அந்த
ஊர்ருக்கு மாற்றல் செய்து
விடுகிறேன்.அப்பாவும்,அம்மாவும் நான்
நினைப்பதே சரி என
ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.நீ என்ன
சொல்கிறாய்?"என்று மீண்டும் விடாமல்
கேள்விகளுக்கு மேல் கேள்வி கேட்டு கொண்டே
இருந்தார்கள்.

"உள்ளே வராதே என்று அவரை சொல்ல
முடியாதே சேது.எப்படியிருந்தாலும் வந்து பணம்
கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்வார்.வீட்டில்
இல்லாவிட்டால் வேலை செய்யும் இடத்தில்
வந்து தொந்தரவு கொடுப்பாரே"என்றார்கள்

அம்மா கவலையுடன்.

“அதை என் கையில் விட்டுவிடு மங்கை.நீ சென்னையில் இருந்தால்தானே அவர் பணம் கேட்டு அடிக்கடி உன்னை வந்து தொந்தரவு செய்வார். என் பதவி பலத்தை வைத்து சென்னையைவிட்டு வெகு தூரத்தில் நல்ல ஊராக பார்த்து உன்னை மாற்றல் செய்து விடுகிறேன்.அந்த ஊருக்கு இந்த கோடை விடுமுறையிலேயே சென்று விடு.”என்றார்கள் பெரியம்மா.

அம்மாவின் அருகில் உட்கார்ந்து இதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த என் சின்ன உள்ளத்திலே கசப்புணர்ச்சி உண்டாயிற்று.அத்துடன் இனம் புரியாத கலவரமும்,பயமும் ஏற்பட தொடங்கியது.இந்த பாழாய் போன ஒரு அப்பாவால் ,அவர் சரி இல்லாதததால் வாழ்க்கையில் நாங்கள் எவ்வளவு துன்பத்தை அடைய வேண்டி இருக்கிறது.தன்னுடைய சூதாட்ட குணத்தால் குடும்பமே அல்லல் படுவது ஏன் அப்பாவுக்கு

தெரியவில்லை?புரியவில்லை?அல்லது தெரிந்திருந்தும் அப்பா அதை பெரிதும் பொருட்படுத்தவில்லையா?

இப்படி பொறுப்பில்லாத மனிதருக்கு ஏன் கல்யாணம்,குழந்தைகள்,குடும்பம் என வைத்துக்கொண்டு அவர்களை உயிருடன் வதைக்க வேண்டும்.அப்பா மட்டும் அல்ல அம்மாவிற்கும் இதில் பங்குண்டு.அம்மாவாவது எங்கள் மீது அக்கறையிருந்தால் சாமர்த்தியமாக பெரியம்மா சொன்னது போல தன வருமானத்தை காத்து குடும்பத்தை தன காலில் நின்று சாமர்த்தியமாக நடந்த்தியிருக்கலாம்.பெரியம்மா சொன்ன எந்த வார்த்தைகளிலும் என்னால் தவற்றை கண்டுபிடிக்க முடியவில்லை.என்னை பொறுத்தவரையில் பெரியம்மா சொன்ன அனைத்தையும் என் மனம் முழுமையாக ஆதரித்தது.

அப்பா,அம்மா இருவருக்கும் குழந்தைகள் மீது அக்கறை இல்லை என்றால் ஏன் எங்களை

பெற்றெடுத்தார்கள். அப்படியே இருந்தாலும் எதற்கு நான்கு குழந்தைகளை பெற வேண்டும்.ஒன்று அல்லது இரண்டுடன் நிறுத்தி இருக்கலாமே.பெரியம்மா ஒரு குழந்தையுடன் இல்லையா.

நல்ல கணவன் மனைவி சில பேருக்கு குழந்தைகளே பிறக்கவில்லை என கோவில் கோவிலாக சென்று வேண்டியும் குழந்தைகள் இல்லாமல் மனம் நொந்து போகிறார்கள்.ஆனால் அவர்கட்கு கடவுள் குழந்தைகள் பிறக்க வரம் கொடுக்க மறுக்கிறார்.ஆனால் பொறுப்பில்லாத என் பெற்றோருக்கு நான்கு குழந்தைகளை கொடுத்து ஒன்றுமறியாத பிஞ்சு மலர்களை நசுக்கி மிதித்து வதைக்கிறார்.அது ஏன்? என் வகுப்பிலுள்ள பல பெண்களின் அம்மாக்கள் ரொம்பவும் படிக்காமல்,வேலைக்கு செல்லாமலும் வீட்டிலிருந்து குடும்பத்தை திறமையாக நடத்தி வருகிறார்கள்.பல பேரின் அப்பாக்களும் சாதாரண லாரி ஓட்டுபவராகவும்,அரசாங்கத்தில் குமாஸ்தாவாகவும் ,துணிக்கடையில் வேலை செய்பவர்களாகவும்,சாதாரண கூலி வேலை

செய்து சம்பாதிப்பவர்களாகவும் இருந்து
கொண்டு அந்த சொற்ப சம்பளத்தில்
கடனில்லாமலும்,அதில் சிறிது சேமித்தும்
சந்தோஷமாக வாழும் போது என்
பெற்றோர்கள் மட்டும் ஏன் இவ்வளவு
படித்திருந்தும், பணக்கார குடும்பத்தில்
பிறந்திருந்தும், இருவரும் கை நிறைய
சம்பாதித்திருந்தும், நாங்க நாலு பெரும் ஏன்
அனாதைகள் போல அவதிபடவேண்டும்.

அப்பாவை பிரிந்து செல்வதுதான்
நல்லது.அப்பாவால் எங்கள் யாருக்குமே எந்த
பிரயோஜனமும் இல்லை .கடவுளே
எப்படியாவது அம்மாவின் மனசை மாற்றி
பெரியம்மா சொல்படி அப்பாவை விவாகரத்து
செய்துவிடும்படி செய் என வேண்டிக்
கொண்டேன்.

“யோசிக்கிறேன் சேது.இதுபோன்ற விஷங்களில்
அவசரப்பட்டு திடுதிப்பென்று முடிவு எடுக்க
முடியாது”என்று அம்மா சுருக்கமாக
சொல்லிவிட்டார்கள்.

“இதில் யோசிப்பதற்கு
ஒன்றுமில்லை.தலைக்குமேல் வெள்ளம் வந்த
பிறகு ஜான் போனால் என்ன?,முழம் போனால்
என்ன? உன் நிலை அப்படிதான்
இருக்கிறது.உன் தலைக்குமேல் வெள்ளம்
வந்துவிட்டது,அதிலிருந்து வெளியே சீக்கிரமாக
நீந்தி வராவிட்டால் நீங்கள் அனைவரும் மூழ்கி
இறந்து விடுவீர்கள்..பழமையை பேசி அதில்
மூழ்கி சாகாதே.பல வருடங்களாக உன்
புருஷனை பற்றி வெளிய ஏதும் சொல்லாமல்
கௌரவமாக எல்லாவற்றையும் மறைத்து
வந்தாய்.என்றைக்காவது ஒருநாள் எல்லாம்
வெளிச்சத்திற்கு வரத்தான் போகிறது.ஒரு பெண்
திருட்டுத்தனமாக கர்ப்பமானதை ரொம்ப
நாளைக்கு மறைத்து வைக்க முடியாது.நாள் ஆக
ஆக வயிறு பெரிதாகி ஊருக்கு உண்மை
தெரியத்தான் போகிறது.நீயாக முந்திக்கொண்டு
உண்மையை கூறி பலன் தேடினால்
புத்திசாலி.வரும்முன் காப்பான்
அறிவாளி.இல்லையேல் ஊர்
வம்புக்கும்,கேலிக்கும் ஆளாகிவிடுவாய்”என

பெரியம்மா ஒரு பெரிய பிரசங்கமே செய்து முடித்தார்கள்

அம்மா மௌனம் சாதித்தார்கள்.பெரியம்மாவின் போதனையில் அம்மாவிற்கு அவ்வளவு விருப்பம் இருந்ததாக எனக்கு தோன்றவில்லை.பெரியம்மா விடவில்லை மேலும் தொடர்ந்தார்கள்.

“நீயாக முடிவு எடுக்கவில்லை என்றால் நானும்,நம் பெற்றோரும் சேர்ந்து நாங்களே ஒரு முடிவு எடுத்து அதற்க்கான ஏற்பாடுகளை செய்ய இருக்கிறோம்.எல்லாம் உன் குடும்ப நலத்திற்க்கே .நான் எவ்வளவு புத்தி சொல்லியும் உன்னால் எதையும் சரியாக கண் திறந்து பார்க்க முடியவில்லை.இன்னும் ஓரிரு வாரங்கள் சவகாசம் தருகிறேன்.நீயாக முடிவெடுத்து என்னிடம் கூறாவிட்டால் . எங்கள் முடிவுப்படி செய்ய முடிவெடுத்துவிட்டோம்.உன் போக்கு எல்லோரையும் பயமுறுத்துகிறது.எங்களுக்கு எதுவும் சரியாக படவில்லை”என முடிவாக கூறிவிட்டார்கள் பெரியம்மா.

அம்மா எதுவும் பேசவில்லை.அன்று இரவு சாப்பாட்டிற்கு பிறகு நாங்கள் கிளம்பி எங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம்.அன்றிரவு முழுதும் தூக்கம் வராமல் ஏதேதோ சிந்தனையில் என் மனம் மூழ்கியது.அம்மா என்ன முடிவு எடுக்க போகிறார்கள்?நாம் எல்லாம் அப்பாவை விட்டுவிட்டு எந்த ஊருக்கு போக போகிறோம்?அப்படி சென்று விட்டால் அப்பாவை இனி வாழ்நாள் முழுதும் பார்க்கப்போவதில்லையா?அப்பா எங்கு தங்குவார்கள்?எப்படி சாப்பிடுவார்கள்?எங்களை எல்லாம் மறந்து விடுவார்களா? அல்லது மனம் திருந்தி நாங்கள் வேண்டும் என வந்து அழைத்து செல்வார்களா?என்றெல்லாம் நினைத்துக்கொண்டே இருட்டில் அசையாமல் படுத்திருந்தேன்.என்னையும் அறியாமல் என் கண்களிலிருந்து நீர் காதோரமாக வழிந்தோடியது.தொண்டை அடைத்தது.இருதயம் கனத்தது.எவ்வளவு நேரம் நினைத்து வேதனைப்பட்டேன் என தெரியாது.அப்படியே தூங்கிவிட்டேன்.

“எழுந்திரு அனிதா,அம்மா காத்துகொண்டிருக்கிரார்கள். பாட்டு பயிற்சி செய்யவேண்டும்.எழுந்திரு”என என்னை உலுக்கி எழுப்பிய குமாரி அக்காவின் குரல் கேட்டு படுக்கையிலிருந்து உடம்பை வளைத்து நெளித்து சோம்பல் முறித்தபடி கடிகாரத்தை பார்த்த நான் அது காலை மணி ஏழு என காண்பித்ததை பார்த்துவிட்டு அடித்து வாரி சுருட்டிக்கொண்டு கீழே ஓடி சென்று பல்விளக்கி, முகம், கை ,கால்களை கழுவி துடைத்துக்கொண்டு அப்படியே எதிரே இருந்த சமயலறையில் சென்று குமாரி அக்கா கொடுத்த காபியை வாங்கி குடித்துவிட்டு மேலே மொட்டை மாடிக்கு சென்றேன்.அங்கு அம்மா சுருதி பெட்டியுடன் ஒத்திகை பார்ப்பதற்காக தயாராக உட்கார்ந்திருந்தார்கள்.

“சீக்கிரம் உன் பாட்டு நோட்டை எடுத்து வா” என என்னை துரித படுத்தினார்கள் அம்மா.

உள்ளே ஓடி சென்று பாட்டு நோட்டுடன் வந்த நான் அம்மா எதிரே உட்கார்ந்து

பாடுவதற்காக என் தொண்டையை கணைத்து சரி செய்து கொண்டேன்.

“ஹிமகிரி தனையே ஹேமலதே”பாட்டை பாடு என ஆருமானிய பெட்டியை அந்த பாட்டிற்கு ஏற்றார்போல சரியான கட்டையில் வைத்து சரி செய்து கொண்டிருந்தார்கள் அம்மா.அந்த பாட்டு எனக்கு மிகவும் பிடித்தமான பாட்டு.அந்த பாட்டை நான் எப்பவும் பாடிக்கொண்டே இருப்பேன்,விளையாடும் போதும்,படிக்கும் போதும்,குளிக்கும் போதும்,பஸ்சில் ,காரில் பயணம் செய்யும் போதும் மெதுவாக பாடிகொண்டே இருப்பேன்.எனவே எனக்கு பிடித்த பாட்டை அம்மா பாடச்சொல்லவே,,மிகவும் ஆனந்தத்துடன் தாமத்திக்காமல் பாடி முடித்தேன்.சில இடங்களில் ராகத்தை சரியாக பாடும்வரை திரும்ப திரும்ப அந்த பாட்டை பலமுறை பாடவைத்து பயிற்சி அளித்தார்கள்.பரீட்சை மறுநாள் காலை ஆறு மணிக்கே ஆரம்பிக்க இருந்தது.எனவே அம்மா அன்று முடிந்த்தவரை எனக்கு நன்றாக பயிற்சி அளித்து என்னை

தயார்செய்து வந்தார்கள்.

மறுநாள் காலை ஆறுமணிக்கு பாட்டு பரீட்ச்சை என்பதால் அம்மாள் என்னை அன்று 5:00மணிக்கே எழுப்பி குளிக்கவைத்து நன்றாக பட்டுப்பாவாடையை அணிவித்து என்னை அலங்கரித்து பாட்டு கிளாசுக்கு அழைத்து சென்று என் னை அங்கே விட்டுவிட்டு வீடு திரும்பிவிட்டார்கள்.

“நான் பாட்டு டீச்சர் வீட்டிற்கு சென்றபோது அங்கு யாருமே இல்லை.மணி ஆறாக இன்னும் பத்து நிமிடங்களே இருந்தது.நான்தான் முதல் மாணவி அங்கு இருந்தேன்.என்னை பார்த்த பாட்டு டீச்சர் “நீ இப்படி வெளியில் திண்ணையில் உட்கார்.எல்லோரும் வந்து முடிந்ததும் பரீட்ச்சை ஆரம்பிக்க இருக்கிறேன்.”என்று கூறி விட்டு உள்ளே சென்று விட்டார்கள்.

நான் வெளியே திண்ணையில் உட்கார்ந்திருந்தபடி மற்றவர்கள் வருகைக்காக

காத்துக்கொண்டிருந்தேன்.ஒருவர் பின் ஒருவராக அனைவரும் 6:15கல்லாம் வந்து உள்ளே ஹாலில் சென்று அமர்ந்து கொண்டு பாட்டு மூச்சர் வருகைக்காக சற்றே முகத்தில் கலவரத்துடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.என்னுடன் சேர்த்து 25 மாணவிகள் அந்த வகுப்பில் .அதில் நான் மட்டும்தான் வயதில் மிக சிறியவள்.எனக்கு மேல் அனைவரும் சுமார் மூன்று முதல் 10 வயதிற்குள் பெரியவர்களாக இருந்தார்கள்.

பாட்டு மூச்சர் சமயலறையில் வேலையை முடித்துவிட்டு அவசர அவசரமாக வெளியே வந்து ஹாலில் எல்லோர் முன்னும் சுருதி பெட்டியுடன் அமர்ந்தார்கள். நான் மட்டும் ஹாலுக்கு வெளியே உள்ள வராண்டாவில் எல்லோரையும் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தேன்.நான் முதலில் வந்ததால் மூச்சர் என்னைத்தான் முதலில் பாடச் சொல்ல போகிறார்கள் என தொண்டையை கனைத்துக்கொண்டு என்னை தயார் செய்து கொண்டிருந்தேன்.

ஏமாற்றம் என்னை கவ்வியது.டீச்சர் என்னை பற்றி கண்டு கொள்ளாமல் உள்ளே உட்கார்ந்திருந்த அனைவரையும் வரிசையாக பாடச் சொல்லி கொண்டிருந்தார்கள்.ஒவ்வொருவருக்கும் ஐந்து நிமிடமே நேரம் ஒதுக்கப்பட்டது.அனைவரும் பாடி முடித்ததும், டீச்சர் த்ன் கையில் வைத்திருந்த நோட்டு புத்தகத்தில் மதிப்பெண்களை போட்டுக் கொண்டே வந்தார்கள்.மொத்த மதிப்பெண்கள் 25.இருபத்து நான்கு பேர்களும் பாடி முடித்து அனைவரும் சென்றுவிட்டனர்.நான் மட்டும் தனியாக விறாண்டாவில் என்னுடைய் முறைக்காக காத்திருந்தேன்.பாட்டு டீச்சர் மறுபடியும் சமையலறைக்குள் சென்று எதோ வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

நான் ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன்.எழுந்து வீட்டிற்கு சென்று விடுவதா?அல்லது டீச்சரிடம் சென்று என்னை மறந்து விட்டார்களா?என்று கேட்பதா? என யோசித்து கொண்டே ஓரிரு நிமிடத்திர்க்கு பிறகு

சரி இனி மூச்சரிடம் கேட்டுவிடுவதுதான் நல்லது என நான் எழுந்து நின்றுகொண்டு உள்ளே எட்டி பார்த்த வண்ணம் ,"மூச்சர் நான் பாடட்டுமா?"என்றேன்.

"ஓ",உன்னை மறந்தே விட்டேனே,நீ வெளியே இருந்ததால் உன்னை கவனிக்கவில்லை.எனக்கு சமயலறையில் நிறைய வேலை இருக்கிறது, .எனவே நீ அங்கிருந்தே பாடிவிட்டு போ.நான் உள்ளே இருந்தே கேட்கிறேன் நீ பாடுவதை"என்றார்கள்.

மூச்சர் கூறியதும் தாமதிக்காமல் நான் கொண்டுவந்திருந்த சுருதி பெட்டியை போட்டுகொண்டு ஹிமகிரி தனையே பாட்டை பாடினேன்.மூச்சர் பாதியில் வந்து நிறுத்தச் சொல்வார்கள் என நினைத்தேன்.ஆனால் நான் முழு பாட்டையும் பாடி முடிக்கும் வரை மூச்சர் வெளியே வரவே இல்லை.

மூச்சர் நான் பாடுவதை கேட்கவில்லை போலிருக்கிறது.வேலைமும்முரத்தில்

இருக்கிறார்கள் போலிருக்கிறது. என நினைத்துக் கொண்டே மனச் சோர்வுடன் சற்றே அவமான உணர்வுடன் சுருதி பெட்டியை முடிவிட்டு வீட்டிற்கு போகலாம் என எழுதிருக்கையில்,சமையலறையிலிருந்து வெளியே வந்தபாட்டு டீச்சர் என்னை ஆனந்த பரவசத்துடன் கட்டிக்கொண்டார்கள்.

“நான்றாக பாடிநேடி குழந்தே,நீ இவ்வளவு அழகா பாடுவாய் என இது நாள் வரை தெரியாமல் போய்விட்டது எனக்கு.நல்ல குரல் உனக்கு.நான் மறந்தாலும் நீ கடைசிவரை பொறுமையாக இருந்து முழுபாட்டையும் பாடி முடித்தாயே.உனக்கு 25/25 மதிப்பெண்கள் கொடுத்திருக்கிறேன்.உன் அம்மாவிடம் போய் இதை சொல்லிவிட்டு,அம்மாவை உடனடியாக வந்து என்னை பார்க்க சொல்”என அன்பாக என் முதுகில் தட்டி கொடுத்து கையில் ஒரு சாக்லெட்டையும் கொடுத்தார்கள்.

வீட்டிக்கு விரைந்து சென்று இந்த விஷயத்தை அம்மாவிடமும்,குமாரி அக்காவிடமும் கூறியதும்

சந்தோஷ பெருமிதத்தால் என்னை கட்டி பிடித்து தலையில் முத்தமாரி பொழிந்தார்கள் இருவரும்.டீச்சரை பார்க்க இன்னும் ஓரிரு நாட்களில் போவதாக கூறிவிட்டு குமாரி அக்காவுடன் காய்கறி கடைக்கு கிளம்பி சென்று விட்டார்கள் அம்மா.எனக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.கீழே சென்று தெருவிலுள்ள எல்லா சினேகிதிகளுக்கும் விவரத்தை கூறி குதூகலத்துடன் அங்கும் இங்குமாக ஓடி ஆடிக் கொண்டு அன்று பொழுதை ஒரு வழியாக கழித்தேன்.

வழக்கமாக கோடைவிடுமுறை முடிந்த ஓரிரு தினத்தில் எங்களை எல்லாம் அழைத்து செல்லும் தாத்தா ஈஸ்வரன், இந்த கோடை விடுமுறை முடிந்து 10 நாட்களாகியும் ஏனோ தெரியவில்லை எங்களை வந்து அழைத்து போகவில்லை.இது பற்றி நச்சரித்து கேட்டும்,அம்மாவுக்கும் இது பற்றி எந்த தகவலும் தாத்தா ஈஸ்வரன் கடிதம் முலம் தெரிவிக்காததால்,அம்மாவும் எங்களுக்கு எதோ ஒரு காரணத்தை சொல்லி சமாளித்து

வந்தார்கள்.நாட்கள் செல்ல செல்ல எங்களுக்கும் சிதம்பரம் செல்லும் ஆவல் குறைந்து வந்தது.தெருவிலுள்ள சிநேகிதர்களுன் நன்றாக காலத்தை கழித்து வந்தோம்.

1969 மே மாதமும் முடிய இன்னும் சில நாட்களே இருந்தது.ஒரு நாள் மத்தியானம் அம்மாவிற்கு ஒரு கடிதம் அவர்கள் வேலை பார்க்கும் அரசாங்கத்தினரிடமிருந்து வந்திருந்தது.அந்த கடிதத்தை தபால்காரர் கீழே விளையாடிக்கொண்டிருந்த என்னிடம் கொடுக்க மறுத்துவிட்டார்.அதை அம்மாதான் கையெழுத்திட்டு வாங்க வேண்டும் என்பதால்,அம்மா வீட்டில் இருக்கிறார்களா?என கேட்டதும் ,"இருக்கிறார்கள்"என நான் அவருக்கு பதில் அளித்துவிட்டு மாடிக்கு விரைந்து சென்று

"அம்மா, உங்களுக்குபள்ளியிலிருந்து ரெஜிஸ்டர் கடிதம் வந்திருக்கிறது"என கூறியது அம்மாவின் முகத்தில் தோன்றியஆச்சரிய குறியுடன் "அரசாங்கத்திலிருந்து அப்படி என்ன முக்கியமான கடிதம் எனக்கு வரப்போகிறது"என

குமாரி அக்காவிடம் சந்தேகமாக கூறிக்கொண்டே வாசலுக்கு சென்று தபால்காரரிடம் கையெழுத்திட்டு கடிதத்தை வாங்கிகொண்டு ,ஆவலுடன் அதை பிரித்த வண்ணம் “குமாரி பீரோவிலிருந்து ரூ 1/- எடுத்துவந்து தபால்காரரிடம் கொடு “என கூறிவிட்டு கடிதத்தை படிக்க ஆரம்பித்தார்கள்.

குமாரி அக்காவும் ஒரு ரூபாய் சன்மானத்தை தபால்காரரிடம் கொடுத்தனுப்பிவிட்டு அது என்ன கடிதமாக இருக்கும் என்ற ஆவலில் அம்மாவிடம் வருகையில் அம்மாவின் முகம் வெளுத்து, பனியில் உறைந்தார்ப்போல் நின்றிருந்தார்கள்.சிறிது நேரம் கடிதத்தையே வெறித்து பார்த்துகொண்டு ஆடாமல் அசையாமல் இருந்தார்கள்.

அம்மாவின் முகத்தை நான் ஆவலுடன் பார்த்தேன்.ஏன் என்றல் சிறிது நாட்களுக்கு முன் அம்மா உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியையாக பதவி உயர்வு பட்டியலில் முதலில்

இருப்பதாகவும்.எப்போதுவேண்டுமானாலும் பதவி உயர்வு வரலாம் என கூறியதை நான் கேட்டதாக நினைவிருந்தது.எனவே அம்மாவிற்கு பதவி உயர்வு கிடைத்துவிட்டால் வேறு ஸ்கூலுக்கு சென்று விடுவார்கள் .எந்த ஸ்கூலாக இருக்கும் என ஆவலுடன் அம்மா முன் நின்றிருந்தேன். “

“அக்கா ஏன் இப்படி மலைத்து கல்லை போல நின்று கொண்டு இருக்கிறீர்கள்.நல்ல விஷயம்தானே.”என்று கேட்டார்கள் குமாரி அக்கா.

“ஒரு வகையில் நல்லவிஷயம்,இன்னொரு வகையில் சற்றே சங்கடமான விஷயம்”என்று புதிர்போடும் வகையில் பேசினார்கள் அம்மா.

“என்னதான் விஷயம் அக்கா .கொஞ்சம் புரியும்படி கூறினால் நன்றாக இருக்கும்”என்றார்கள் குமாரி அக்கா.

“எனக்கு உயர்நிலைப்பள்ளி தலைமை

ஆசிரியையாக பதவி உயர்வு
கிடைத்திருக்கிறது.அதே சமயம் என்னை
சிதம்பரத்திற்கு மாற்றி இருக்கிறாள் என்
அக்கா.அதுவும் நான் இன்னும் ஒரு வாரத்தில்
அங்கு சென்று பதவியை ஏறுகொள்ளவேண்டும்
என உத்தரவு வந்திருக்கிறது.என் அக்காதான்
இந்த ஆர்டரில் கையெழுத்து
போட்டிருக்கிறாள்.என்னை கேட்காமல் ஏன்
இப்படி செய்தாள் என்று தெரியவில்லை.வேறு
எந்த ஊருக்காகவாது மாற்றி
இருக்கலாம்.எதற்க்காக சிதம்பரத்திற்கு
மாற்றினாள் .சரி குமாரி வீட்டு வேலைகளை
எல்லாம் சீக்கிரமாக முடி,நாம் இன்னும் சிறிது
நேரத்தில் கிளம்பி சென்று அக்காவை பார்த்து
விவரம் கேட்டு வரலாம்." என்று குமாரி
அக்காவை துரிதபடுத்தினார்கள் அம்மா.

அம்மாவிற்கு கவலையும்,பரபரப்பும்
ஏற்பட்டுவிட்டது.சிதம்பரத்திற்கு போகவேண்டும்
என்றால் அங்கு தனியாக வேறு வீட்டில் தங்க
போகிறோமா?அல்லது அப்பா வீட்டில் தங்க
போகிறோமா?இந்த் வீட்டு சொந்தக்காரரிடம்

வேறு வீட்டை காலி பண்ணுவதை பற்றி முன்பே சொல்லிவிட வேண்டுமே?எங்கள் அப்பாவிர்க்குவேறு இதைப்பற்றி சொல்லவேண்டுமே?.நாம் சென்று விட்டால் அவர் எங்கு தங்குவார்?என் தலை சுற்றுகிறது குமாரி.இப்படி ஒரு இடியை என் தலையில் வந்து இவ்வளவு சீக்கிரம் போட்டுவிட்டாளே என் அக்கா .இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவே இல்லையே என அம்மா புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள்.

அம்மா ஹாலில் உள்ள நாற்காலியில் உட்கார்ந்தவண்ணம் தபாலில் வந்த ஆர்டர்யை திரும்ப திரும்ப வெறித்து பார்த்து கொண்டே தன கண்களையே நம்ப முடியாதது போல காணப்பட்டார்கள் .இதற்குள் நான் கீழே சென்று தெருவில் விளையாடிகொண்டிருந்த அண்ணன் ஷான்,தம்பி பாட் இடமும் விஷயத்தை கூறவே அவர்களும் மாடிக்கு விரைந்தோடி அம்மாவிடம் விஷயத்தை கேட்டு நான் அவர்களிடம் சொன்னதை ஊர்ஜிதபடுத்திகொண்டார்கள்.

மாலை முன்று மணி அளவில் எங்கள் முவரையும்,குமாரி அக்காவையும் அழைத்துக் கொண்டு பெரியம்மா வீட்டிற்கு கிளம்பி சென்றார்கள் அம்மா.பெரியம்மா வீட்டை அடைந்ததும் அங்கு வேலை செய்யும் சமையற்காரன் அண்ணன் முர்த்தி எங்கள் வரவை சற்றும் எதிர்ப்பாரததால் எங்களை ஆச்சரியத்துடன் வரவேற்று

“என்ன விஷயம் திடீரென வந்திருக்கிறீர்கள் சின்னம்மா?”என்று கேட்டார். அம்மா விஷயத்தை முர்த்தியிடமும்,அங்குள்ள வேணி,உமா விடமும் கூறிவிட்டு “அக்கா சேது எப்போது வருவாள்?”என்று கேட்டார்கள்.

“ஆறு மணிக்கு வந்துவிடவேண்டும்.இராத்திரி சாப்பிட்டுவிட்டு கிளம்புங்கள் சின்னம்மா,அக்காவிடம் பேசிவிட்டு கிளம்பி சென்று விடாதீர்கள்”என்றார் முர்த்தி.

“பார்க்கலாம் முர்த்தி நிலைமை எப்படி போகிறது என்று.இரவு சாப்பாட்டை பற்றி கவலை

படாதே முர்த்தி"என்றார்கள் அம்மா.

"அக்கா ஆறு மணிக்குமே வந்து அதன் பிறகு நீங்கள் பேசிவிட்டு கிளம்ப எப்படியும் எட்டு மணிக்குமேல் ஆகிவிடும்.எனவே இங்கேயே சாப்பிட்டுவிட்டு கிளம்புகள்,நான் சமையலுக்கு தயாராகுகிறேன்"என முர்த்தி கண்டிப்பாக கூறவே அம்மாவும் மறுப்பேதும் சொல்லாமல் சரி என்பது போல அரை மனதாக ஒப்புக்கொண்டார்கள்.

சொன்னபடி ஆறுமணிக்கு சரியாக பெரியம்மாவின் கார் போர்டிகோவில் வந்து நின்றது.காரிலிருந்து இறங்கிய பெரியம்மா எங்களை கண்டதும்,நாங்கள் வந்த காரியத்தை புரிந்துகொண்டது போல "வா வா மங்கை, ஆர்டர் கிடைத்துவிட்டதா?"என்றார்கள் முகத்தில் மலர்ச்சியுடன்.

"காலையில்தான் கிடைத்தது.அதை பற்றிதான் பேசிவிட்டு போகலாம் என வந்தே சேது"என்று பதிலளித்தார்கள் அம்மா.

“முதலில் நான் உள்ளே சென்று உடைகளை மாற்றி விட்டு வருகிறேன்.பிறகு நாம நிதானமாக பேசலாம்.இரவு சாப்பிட்டுவிட்டு கிளம்பி மங்கை”என கூறிவிட்டு மூர்த்தி என கூப்பிட்டதும்.

“நான் ஏற்கனவே சின்னம்மாவிடம் சொல்லிவிட்டேன்.சமையலும் எல்லோருக்கும் சேர்த்துதான் சமைத்துக் கொண்டிருக்கிறேன்”என மூர்த்தி சமையலறையிலிருந்து குரல் கொடுத்தார்.

நாங்க முன்று பெரும் குமாருடன் வரவேற்ப்பரையில் விளையாடி கொண்டிருந்தோம். ஹாலிலுள்ள பெரியம்மாவின் பெயர் எம்ப்ராடிரியில் பத்தித்த உறை போட்டிருந்த குஷன் நாற்காலியில் வசதியாக தன இரு காலகளையும் மடித்து தூக்கி நாற்காலில் போட்டுகொண்டு வசதியாக உட்கார்ந்துகொண்டு “சொல்லு மங்கை நீ என்ன நினைக்கிறாய்?”என ஆரம்பித்தார்கள்.

அம்மா பெரியம்மாவிற்கு எதிரில் அவர்களை
பார்த்தாற்போல் தரையில் உட்கார்ந்துகொண்டு
“என்னை ஒரு வார்த்தை கூட கேட்காமல்
சிதம்பரத்திற்கு மாற்றி விட்டாயே
சேது.ஜகன்னாதன் என்ன
நினைப்பான்.ஏற்கனவே என் மேல் அவன்
கோபமாக இருக்கிறான்.அவன் கோபத்தை
கிளருவதுபோல நீ என்னை அங்கு
மாற்றியிருக்கிறாய்.ஜகன்னாதன் வந்து
அப்பாவிடம் சண்டை போடுவதுடன்
என்னையும் கறித்து கொட்டி
விடுவான்.அவனுக்கு இது பற்றி எதுவும்
தெரியமா?”என்று கேட்டார்கள் அம்மா.

“முதலில் உன்னை செய்யாருக்குதான்
மாற்றலாம் என்றிருந்தேன்.ஆனால் உன் உடல்
நிலை இப்போது இருக்கும் நிலையில்
குழந்தைகளுடன் ஊர் பேர் தெரியாத இடத்தில்
நீ தனியாக காலம் தள்ளுவது
கஷ்டம்.அதோடில்லாமல் உனக்கு ஓய்வு தேவை
என மருத்துவர் கண்டிப்பாக
சொல்லிவிட்டதால்,நீ சிதம்பரத்தில் சென்று

அப்பா,அம்மாவுடன் சில மாதங்கள் தங்கி இரு.உனகென்று பெரிய வீடும்,நிலங்களும் இருக்கிறது.உன் உடல்நிலை சற்றே தேறியவுடன் உன் பெயரிலுள்ள பக்கத்து வீட்டிற்கு தனியாக குடிபோய்விடு.தேவன் அதற்குள் மனம் திருந்திவிட்டால் திரும்ப உன்னை சென்னைக்கே மாற்றிவிடுகிறேன்.இல்லை என்றால் அவருக்கு ஒரு முழுக்கு போட்டுவிட்டு நிம்மதியாக சிதம்பரத்திலேயே உன் வீட்டில் இருந்துவிடு.உன்னுடைய மற்றும் குழந்தைகளின் நலனை உத்தேசித்தே அப்பா,அம்மாவுடன் கலந்து பேசி அவர்கள் சம்மதத்துடன்தான் இந்த ஆர்டர் ஐ உனக்கு அனுப்ப ஏற்பாடு செய்தேன்.எல்லாம் உன் நன்மைக்கே.என்னை நம்பு"என்றார்கள் பெரியம்மா.

இன்னும் மூன்று வாரத்தில் நான் அங்கு சென்று டீடியில் சேர வேண்டுமே சேது ,வீட்டை எப்படி நான் காலி செய்வது?குமாரியை அங்கு என்ன செய்வது.அப்பா வீட்டில் ஏற்கனவே நிறைய வேலை ஆட்களிருப்பதால் குமாரியை

அங்கு தேவைபடாதே.அதே சமயம் உயர்நில ஸ்கூலில் அதிக மார்க் எடுத்து பாஸ் பண்ணியிருக்கும் இந்த பெண்ணை திருப்பி அனுப்பவும் எனக்கு மனம் வரவில்லையே.ஏதாவது ஹச்சர் ட்ரைனிங் கோர்ஸ் சேர்த்துவிடேன்.நான் வேண்டுமானால் அவள் செலவை பார்த்துகொள்கிறேன்”என அம்மா பெரியம்மாவிடம் குமாரி அக்காவை திரும்ப அவர் ஊருக்குக் அனுப்பிவைக்க மனமில்லாமல் கெஞ்சுவதுபோல கூறினார்கள்.

“நீ சொன்னபடியே குமாரியை என் வீட்டில் தங்கி வேலைகளை செய்துகொண்டு ஹச்சர் ரெயினிங் படிக்கட்டும்.செலவுகளை நான் பார்த்து கொள்கிறேன்.நீ கவலை படாதே.உன்னையும்,குழந்தைகளையும் நீ கவனித்துகொள்.அதுவே போதும். அப்பா இந்த வார கடைசியில் லாரியுடன் வந்து உன் வீட்டை காலி செய்துவிட்டு சாமான்களை அங்கு எடுத்துச் சென்று விடுவார்கள்.நான் குழந்தைகளை காரில் சிதம்பரம் கொண்டு போய் சேர்த்துவிடுகிறேன்.இன்னும் இரண்டு நாட்களில்

அவர்களுக்கான துணிமணிகளை கொஞ்சம் பேட்டியில் போட்டு தயாராக வை.நீ சாவகாசமாக தேவனிடம் விவரத்தை கூறிவிட்டு.பள்ளிகூடத்திலும் முடிக்க வேண்டிய வேலைகளை முடித்துவிட்டு,ரிலீவிங் ஆர்டர் வாங்கி கொண்டு அங்கு சென்று சேர்ந்துவிடு.நான் அடிக்கடி வந்து உன்னை பார்த்து வருகிறேன்.கவலை படாதே."என்றார்கள்.

"ஜகந்நாதனை எப்படி சமாளிக்க போகிறாய்?"என்று கேட்டார்கள் அம்மா கவலையுடன்.

"அவனுக்கு இன்று போனில் விஷயத்தை கூறிவிட்டேன்.நீ அவனை பற்றி கவலைபடாதே.அப்பா எல்லாம் கவனித்துக் கொள்வார்கள்."என அம்மாவிற்கு தைரிய வார்த்தைகளை கூறி சமாதான படுத்தினார்கள் பெரியம்மா.

"நீ அங்கு செல்வதில் அவனுக்கு

விருப்பமில்லைதான்.அதற்கெல்லாம் நீ கவலைபடாதே.உனக்கு அங்கு உரிமை இருக்கிறது.அங்கு போகாதே என உன்னை மிரட்ட அவனுக்கு எந்த உரிமையும் கிடையாது.நம் பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்வரை நாம் அங்கு செல்ல நமக்கு முழு உரிமை உண்டு"என தைரியமளித்தார்கள்.

"என்ன இருந்தாலும் இப்போதைக்கு கொஞ்ச காலம் அப்பாவுடன் தானே தங்க இருக்கிறேன்.அப்பா, அம்மா வாழும் வீடு ஜகன்னாதன் பேரில்தானே இருக்கிறது.எனவே அவன் கோபப்பட்டு எங்களை ரகளை செய்வானோ என பயமாக இருக்கிறது"என திரும்பவும் கூறினார்கள் அம்மா.

"அவன் கிடக்கிறான்.அவன் சண்டை போடுவதை பெரியதாக நினைக்காதே மங்கை.அப்பா அவனை சமாளித்து கொள்வார்கள்.குறைந்த பட்சம் ஒரு வருடம்தான்.அதுவரை பொறுமையாக கவலைபடாமலிரு.அதற்குள் ஏதாவது ஏற்பாடு செய்துவிடலாம்"என

மறுபடியும் தைரியமளித்தார்கள் பெரியம்மா.

பிறகு பெரியம்மா,அம்மா,குமாரி அக்கா மூவரும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர் வெகுநேரம் வரையில்.இரவு ஒன்பது மணிபோல அனைவரும் சாப்பிட்டுவிட்டு பெரியம்மா வீட்டிலிருந்து கிளம்பி எங்கள் வீட்டிற்கு செல்ல இரவு பத்துமணி ஆகிவிட்டது.எல்லாம் கனவுபோல இருந்தது எனக்கு.இன்னும் ஓரிரு நாட்களில் சென்னையை விட்டுக்கிளம்பி சிதம்பரம் சென்று விட போகிறோம் என நினைக்கையில் துக்கம் என் தொண்டையை அடைத்தது.

குமாரி அக்கா எங்களை படுக்க வைத்துவிட்டு விளக்கை அணைத்துவிட்டு தானும் எங்களுடன் படுத்து கொண்டார்கள்.எனக்கு தூக்கம் வரவில்லை.இனி நாங்கள் சென்னைக்கு திரும்பி வர போவதில்லையா?அப்பாவை இனிமேல் நாங்கள் பார்க்க போவதில்லையா?பாட்டு கிளாஸ் அவ்வளவுதானா?என் ஸ்கூலில் என்னுடன் படித்த சினேகிதிகளுக்கும் நான் இனி இந்த ஸ்கூலுக்கு வரபோவதில்லை என

தெரிந்திருக்க முடியாதே.பள்ளிக்கூடம் திறந்த பிறகுதான் தெரிய வாய்ப்பிருக்கிறது.அவர்களிடமெல்லாம் போய் வருகிறேன் என்று சொல்லிகொள்ளக்கூட எனக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டதே.என் தெருவில் அக்கம் பக்கத்து வீட்டிலுள்ள மற்ற சிநேதிகளையும் பிரிந்து செல்ல மிகவும் கஷ்டமாக இருந்தது. இனி இவர்களை எல்லாம் திரும்ப என் வாழ்வில் பார்க்க சந்தர்ப்பம் கிடைக்குமா?ஏன் இப்படி அம்மாவை அனாவசியமாக வெளியூருக்கு திடுதிப்பென்று மாற்ற வேண்டும்.

என் மனம் வேதனையடைந்தது.கண்கள் குளமாகி கன்னத்திலே வழிந்தோடியது. சிதம்பரத்திற்கு சென்றால் நாங்கள் தெருவில் எங்கள் விருப்பப்படி மற்ற குழந்தைகளுடன் ஓடியாட விளையாடுவதை கௌரவ குறைவு என தாத்தா, பாட்டி அனுமதிக்க மாட்டார்களே.விளையாட மாமாவின் மூன்று பெண்களும் இருக்கமாட்டார்களே.தாத்தா வீட்டிற்குள்ளும் எந்த சிநேகிதர்களையும்

அழைத்துசென்று விளையாடவும் அனுமதி கிடைக்காதே.என்றெல்லாம் என் மனம் எண்ணி துக்கத்தால் விம்மியது.

ஒவ்வொரு வருடமும் கோடைவிடுமுறைக்கு தாத்தா வீடு செல்ல ஆர்வமாக காத்திருந்த என் மனம் இம்முறை அங்கு செல்வதை வெறுத்தது.மாமா பெண்களும் இனி அங்கு வரபோவதில்லை.இனி அவர்களையும் நாங்கள் பார்க்க போவதில்லை.எங்கள் வாழ்க்கை சிதம்பரத்திலேயே சற்றே மாறுதலாகத்தான் இருக்கப் போகிறது.முதன் முதலாக என் மனதில் சோகமும்,இனம் புரியாத கலவரமும் ஏற்பட்டது.இனி என் வாழ்க்கையில் இவர்களை பார்க்க போவதில்லை என்ற ஏக்கத்துடனும்,துக்கத்துடனும் புரண்டு புரண்டு படுக்கையில் குமாரீ அக்காவை பார்த்தேன்.இனி குமாரக் அக்கா எங்களுடன் இருக்க போவதில்லை.இனிமேல் என் ஹோம் வொர்க்,நோட்ஸ் எல்லாம் நானேதான் செய்தாக வேண்டும்.

இதுவரை குமாரி அக்கா இருந்தது எங்க மூன்று பேருக்கும் வசதியாக இருந்தது.அம்மாவிடம் அடிவாங்காமல் குமாரி அக்காவிடம் எல்லாம் உதவிகளையும் பெற்ற நாங்கள் இனி அம்மாவிடம் அல்லது தாத்தாவிடமும்தான் கேட்கவேண்டும்.பாவம் குமாரி அக்கா,பெரியம்மா வீட்டில் இருந்த கொண்டு கஷ்டபட போகிறார்கள்.கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை,டீச்சர் ட்ரைனிங் படிக்க போகிறார்களே என்ற சந்தோஷமும் என் மனதில் ஏற்பட்டது.குமாரி அக்காவை கட்டிக்கொண்டு படுத்தேன்.அவர்களையும் பிரிய என் மனம் வேதை அடைந்தது.மனதிற்கு விம்மியபடியே தூங்கிவிட்டேன்.

அன்று ஞாயிற்றுகிழமை என்பதால் அப்பா வீட்டில் இருந்தார்கள்.அப்பாவிடம் விஷயத்தை கூற அம்மா சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.அப்பாவும் வழக்கம் போல் காலை ஒன்பது மணிக்கு மேல் எழுந்து தன காலை கடன்களை முடித்து விட்டு வரவேற்பறையில் அமர்ந்துகொண்டு

செய்தித்தாள் படித்து கொண்டிருந்தார்கள்..
அம்மா சற்றே தயக்கத்துடன் தன்னுடைய பதவி உயர்வு மற்றும் இடம் மாறுதலை ஆர்டர் ஐ அப்பாவிடம் எடுத்து சென்று “எனக்கு உயர்நிலை பள்ளி தலைமை ஆசிரியையாக பதவி உயர்வும்,டிரான்ச்வர் ஆர்டர் -ம் நேற்று மத்தியானம் தபாலில் வந்தது”என கூறி அப்பாவிடம் காண்பித்தார்கள்.

அப்பா செய்தி தாளை மடித்து மேஜை மீது வைத்துவிட்டு ,சிகரெட்டை சாம்பலை ஆஷ் டிரெவில் தட்டி விட்ட படி ஆர்டர் ஐ வாங்கி படித்து கொண்டிருக்கையில் அவர்களது முகம் சுருங்கி மாறியது.நெற்றி சுருங்க புருவத்தை உயர்த்து “உன் பெற்றோர் ஊருக்கே மாற்றல் கேட்டு போக துணிந்து விட்டியா?”என அதிகாரம் கலந்த கோபத்துடன் கூடிய தோரணையில் கேட்டார்கள்.

“நேற்று இந்த தபாலை பார்க்கும்வரை என் ப்ரோமோஷன் மற்றும் டிரான்ச்பர் பற்றி எந்த விவரமும் தெரியாது எனக்கு.நான்

சிதம்பரத்திர்க்கு போகவேண்டு என்று கேட்கவில்லை”என்றார்கள் அம்மா பயந்துகொண்டே.

“அது எப்படி எல்லாம் உனக்கு தெரியாமல் நடக்கும்?நீ உன் குடும்பத்தாருடன் கூடி பேசித்தான் இதுமாதிரி எனக்கெதிராக சதி திட்டம் போட்டிருக்கிறீர்கள்.பணக்கார திமிரு உன்னைவிட்டு இன்னும் போகவில்லை.என்னை ஒரு வார்த்தை கூட கேட்க வேண்டும் என்ற புத்து உனக்கில்லையா?புருஷன் என்ற மரியாதை உனக்கு துளியும் இல்லை.நாயே| எக்கேடாவது ஒழிந்து போ|இரகசியமாக நீயும் உன் குடும்பத்தாரும் எனக்கெதிராக போடும் சதி திட்டத்தை பார்த்து கொண்டிருக்க நான் ஒன்றும் இல்லாத மடையன் இல்லை.உன் புருஷனைவிட உன் அக்காவும் உன் பெற்றொரும் உனக்கு முக்கியம் என்றால் இனி உனக்கும் எனக்கும் எந்த சம்பத்தமுமில்லை.உன்னை போல திமிரு பிடித்த கழுதையுடன் இனி ஒரு நிமிடம் கூட இந்த வீட்டிலிருக்க நான் தாயாராக இல்லை” என்று

கோபமாக கூறியபடி டிரான்ச்பர் ஆர்டர் ஐ அம்மா மீது விட்டெரிந்து விட்டு கோபத்துடன் கீழே குளியலறைக்கு குளிப்பதற்காக செல்கையில்

“அப்பா லாரியுடன் வீடு காலி செய்ய இந்த வார இறுதியில் வர இருக்கிறார்கள்.வீட்டு சொந்தக்காரரிடம் வீடு காலி செய்வது பற்றி கூற வேண்டும்.நீங்கள் எங்கு தங்க போகிறீர்கள் என்பதை பற்றியும் பேச வேண்டும்”என அம்மா பேச்சை எடுக்கையில்

“நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள்.என்னை பற்றி கவலை பட வேண்டிய அவசியமில்லை”என்றார்கள் அப்பா.

“சற்றே நிதானமாக இருந்தால் நாம் ஏதாவது பேசி ஒரு முடிவு எடுக்கலாம்”என்று அம்மா கெஞ்சுவது போல பேசினார்கள்.

“பேசுவதற்கு இனி ஒன்றுமில்லை.நீ இவ்வளவு ஏற்பாடுகளையும் என்னை கேட்காமல்

செய்திருக்கிறாய்,இனி மேற் கொண்டு நடப்பதையும் உன் அக்காவை வைத்து நடத்திக்கொள் “என்றர்கள் அப்பா கோபத்துடன்.

“உண்மையாக சொல்கிறேன் எனக்கு எதுவுமே இது பற்றி நேற்று வரை தெரியாது.அக்கா என்னிடம் கூறாமல் அவளாகவே எல்லாம் செய்து விட்டாள்.இது குறித்து நேற்று சாயந்திரம் அவள் வீட்டிற்கு உடனே சென்று கேட்டு வந்தேன்.மறுபடியும் ஆறு மாதத்தில் சென்னைக்கு என்னை மாற்றிவிடுகிறேன் என்று கூறினாள் “என்றார்கள் அம்மா சற்றே கரகரத்தகுரலில்.

“சரிம்மா,நீ எல்லாம் சொல்லி விட்டாய்.நீ உன் வேலையை பார்,நான் என் வேலையை பார்க்கிறேன்.”என அம்மா கெஞ்சுவதை பொருட்படுத்தாமல் அப்பா கடகடவென கீழே சென்று குளித்து விட்டு மேலே வந்து பாண்ட் ,சட்டையை போட்டுகொண்டு ஒருகைபையை எடுத்து தன துணிமணிகளையும்,மற்ற

உடமைகளையும் எடுத்து
வைத்துகொண்டிருந்தார்கள்.

“எங்கு கிளம்பி விட்டீர்கள்.எதற்காக இப்போதே எல்லாவற்றையும் எடுத்து கொண்டு போகிறீர்கள்.சற்று பொறுமையாக இருந்தால் ஏதாவது பேசி ஒரு முடிவு எடுக்கலாம் “என்று அப்பாவின் கையை பிடித்துக்கொண்டு அம்மா அழுதார்கள்.

“முடிவு செய்ய நான் யார்?நீதான் எல்லாம் முடிவெடுத்து விட்டியே.இனி என் தயவு உனக்கு தேவை இல்லை.எனக்கு எது பற்றியும் இனி நீ தெரிவிக்க அவசியம் இல்லை.உன் அக்கா,அப்பாவை வைத்து எல்லாம் முடித்துகொள்”என கோபத்துடன் கூறிவிட்டு பரபரவென எல்லாவற்றையும் பாக் பண்ணிக்கொண்டு முடித்தவுடன்,அப்பாவின் கையை பிடித்துக்கொண்டு அம்மா கதறி கதறி அழுதார்கள்.அதை பார்த்ததும் எங்கள் அனைவருக்கும் அழுகை அழுகையாக வந்தது.

“தயவு செய்து நான் சொல்வதை கேளுங்கள்.என் மீது எந்த தவறும் இல்லை.உங்களை எதிர்த்து,உங்களுக்கு தெரியாமல் நான் எதையும் செய்யவில்லை.என்னை நம்புங்கள்”என மன்றாடி கேட்டும்,அம்மாவின் பிடியை உதறி தள்ளிவிட்டு கோபமாக எதுவும் சாப்பிடாமல் எங்களிடம் கூட அப்பா போய் வருகிறேன் என்றுஒரு வார்த்தை கூட சொல்லாமல் வீட்டை விட்டு விரைவாக சென்று விட்டார்கள்.

குமாரி அக்காவும் ஒரு முலையில் நின்று கொண்டு கண்கள் சிவப்பாகி நீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது.அப்பா வீட்டை விட்டு சென்றதில் ஒரு புறம் எனக்கு சந்தோஷமாக இருந்தாலும்,ஒரு புறம் கவலையாகவும் இருந்தது.அண்ணன் ஷானும்.தம்பி பாட்டும் செய்வதறியாமல் பயத்துடன் குமாரி அக்காவை ஒட்டி நின்று கொண்டிருந்தார்கள்.நான் அம்மாவின் புடவையை பிடித்துகொண்டு அவர்களை ஒட்டிக்கொண்டு நின்றுகொண்டிருந்தேன்.

அப்பா சென்றதை எண்ணி அம்மா ஏன் அழ வேண்டும்?அப்பா ஒரு நாளும் அம்மாவை கண்டுகொள்ளவில்லை.எப்பவும் சூதாட பணம் கேட்டு நச்சரித்து அம்மாவை பலமுறை அடித்து துன்புறுத்தி இருக்கிறார்கள்.குழந்தைகள் எங்களிடமும் கூட ஒரு வார்த்தை போய்வருகிறேன் என கூற மனைல்லாத அப்பா போனதற்கு நாம் ஏன் கவலைபடவேண்டும்?அப்பாவிற்கு குடும்பத்தின் மீது அக்கறை இருந்தால் இப்படி திடுதிப்பென எல்லாவற்றையும் எடுத்துகொண்டு சென்றிருக்கமாட்டார்கள்.உடல்நிலை சரியில்லாத அம்மா எப்படி தனியாக எல்லாவற்றையும் சமாளிப்பார்கள் என்று கூட அப்பாவிற்கு அக்கறை இல்லையே.அக்கறையில்லாத இந்த அப்பா வீட்டை விட்டு செல்வது பற்றி அம்மா ஏன் கவலைபட்டு அழவேண்டும்?அப்பாவால் கடனும்,தொல்லையும்,தவிர உபயோகம் என்று சொல்லி கொள்ள ஒன்றுமில்லை.அப்பா போவதில் ஒருபுறம் நல்லதுதான்.இனி

நிம்மதியாக வாழலாம் என என் மனம் அன்று எண்ணியது.சிறிய பெண்ணான நான் விவரம் புரியாமல் இப்படி எல்லாம் என் மனதிற்குள் எண்ணினேன்

அத்யாயம்- இருபத்து ஒன்பது

அப்பா வீட்டை விட்டு சென்ற உடனே வீடு செத்தவீடுபோல
சோகமயமாகிவிட்டது.அம்மாவும்,குமாரி அக்காவும் சாப்பிடவில்லை எங்கள் முன்று பேருக்கு மட்டும் சாப்பாடு போட்டுவிட்டு இருவரும் சோகமாக ஆளுக்கொரு முலையில் அழுது சிவந்த கண்களுடன் உட்கார்ந்த்திருந்தார்கள்.எல்லாம் முன்று மணிநேரத்திற்குள் கனவுபோல நடந்து முடிந்ததது.

“நீ ஏன் பட்டினி கிடக்கிறாய் குமாரி?போய் சாப்பிடு,சாமான்களை கழுவி கவிழ்த்துவிட்டு வா”என்றார்கள் அம்மா.

“பசிக்கலை அக்கா, ஒரு வேளை சாப்பிடாவிட்டால் என்ன செத்தா போயிடுவேன்.என்னை பற்றி கவலைபடாதீர்கள்.பசித்தால் நான் போய் சாப்பிட்டு கொள்கிறேன்”என்று பதிலளித்தார்கள் குமாரி அக்கா.

அன்று முழுதும் வீடு வெறிச்சென்றிருந்தது.யாரிடமும் கலகலப்பில்லை.அன்று சாயங்காலம் பெரியம்மா வந்ததும், அம்மா எல்லா விஷயங்களையும் கூறினார்கள்.

“அந்த மனிதன் போனதை பற்றி நீ கவலைபடாதே மங்கை.நான் புதன் கிழமை காலையில் குழந்தைகளை சிதம்பரத்திற்கு அழைத்து செல்ல இருக்கிறேன்.அன்றே அப்பா காலையில் லாரியுடன் வந்து சாமான்களை

ஏற்றி கொண்டு சென்று விடுவார்கள்.வீட்டு சொந்தக்காரரிடம் இன்றே போய் விஷயத்தை கூறிவிட்டு இன்னும் ஆறு மாத வாடகைமுன்பணமாக இருக்கிறது.இதனால் அவருக்குஎதுவும் பாதகமில்லை .குமாரியையும்,குழனதைகளையும் நாம் இப்போதே அழைத்து செல்கிறேன் நீயும் சில துணிமணிகளுடன் என்னுடன் வந்துவிட்டு.நான் புதன்கிழமை காலையில் குழந்தைகளுடன் ஊருக்கு சென்றதும் நீயும் குமாரியும் என் வீட்டிலிருந்து மற்ற காரியங்களையும்,குழந்தைகளின் ஸ்கூலில் டிரான்ச்பர் சர்டிபிகேட்டும் வாங்குவதையும் மற்ற உன் ஸ்கூல் விஷயத்தையும் முடித்துக்கொள்ளுங்கள் ."என்றார்கள் பெரியம்மா.

“குமாரி நீ உடனடியாக குழந்தைகளின் துணிமணிகளை பெட்டியில் பாக் பண்ணு, உன் உடைமைகளை முழுதும் பாக் பண்ணி என் வீட்டிற்கு வந்து விடு.உன்னை டீச்சர் ட்ரைனிங் சேர்க்க ஏற்பாடு செய்துவிட்டேன்.நீ என்

வீட்டிலேயே தங்கி வேலை செய்து கொண்டே படிக்கலாம்"என கூறியதும் குமாரி அக்கா ஒன்றும் புரியாமல் திருதிருவென முழித்தார்கள்.

"சேது, இன்று வேண்டாம் நாங்க பாக் பண்ணி வேண்டியது நிறைய இருக்கிறது.எல்லாவற்றையும் முடித்துவிட்டு நானும்,குமாரியும் புதன்கிழமை உன் வீட்டிற்கு வருகிறோம்.குழந்தைகளை மட்டும் இன்று உன்னுடன் அனுப்பி வைக்கிறேன்"என்றார்கள் அம்மா.

சரி,என்னுடன் காரில் ஏறு வீட்டுக்காரரிடம் சென்று பேசிவிட்டு வரலாம்"என பெரியம்மா கூறியதும் அம்மா கிளம்பி பெரியம்மாவுடன் சென்று விட்டார்கள்.குமாரி அக்கா எங்கள் துணிமணிகளை பெட்டிகளில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.குமாரி அக்கா என்னை கட்டி பிடித்த வண்ணம் "நன்றாக புத்திசாலிதனமாக இருந்து,நல்லா படிடி கண்ணு.என கண்கலங்கி கூறியதும் எனக்கும் அழுகை வந்துவிட்டது.குமாரி அக்கா என்

கண்களை துடைத்தவண்ணம்"அழாதேடி செல்லம்,அம்மாவை நன்றாக பார்த்துக்கொள்.நீயும் நல்லாபடி"என கூறி கொண்டே துணிமணிகளை பாக் பண்ணிகொண்டிருதார்கள்.

"இனிமே உங்களை நாங்க பார்க்க முடியாதா?குமாரி அக்கா "என்றேன் குரல் தழுதழுக்க .

"நீங்கள் சென்னைக்கு வரும்போதெல்லாம் என்னை பார்க்கலாம்.உங்க அம்மாவுக்கு உடல் குணமாகி அனைவரும் மறுபடியும் சென்னைக்கு மாற்றலாகி வந்து விட்டால் நான் அவசியம் உங்கள் வீட்டில் மறுபடியும் வந்து தங்கி விடுவேன்" என்றார்கள்.

அந்த வார்த்தைகளை கேட்டதும் என் மனதில் சற்றே தெம்பு ஏற்பட்டது.குமாரி அக்கா எங்களை விட்டு தற்காலிகமாகத்தான் பிரிந்திருக்க போகிறார்கள் என்று என் மனதிற்கு நானே ஆறுதலை கூறிக்கொண்டு அக்காவிற்கு

உதவியாக நான் துணிமணிகளை எடுத்து வைத்துக் கொண்டிருத்தேன்.எல்லாம் மாயையாக கண் சிமிட்டும் நேரத்தில் நடந்து கொண்டிருந்தது.யாருக்குமே சிந்திக்கும் அவகாசத்தை பெரியம்மா கொடுக்கவில்லை.அனைவரும் மின்னல் வேகத்தில் இயங்கி கொண்டிருந்தோம்.அம்மாவிற்கும் சுற்றி என்ன நடக்கிறது என்று யூகிக்ககவே சதர்ப்பமில்லாமல் போய்விட்டது.

நல்லவேளை காலையிலேயே நான் தெருவிலுள்ள எல்லா சினேகிதிகளுக்கும் நான் ஊரைவிட்டு போகப்போவதை சொல்லி விட்டேன்.ஆனால் அவர்கள் யார்க்கும் தெரியாது நான் இப்போதே போக போகிறேன் என்று.எனக்கே தெரியாது இன்றிரவே நான் போகபோகிறேன் என்று,நாளை விடிந்தால்தான் என் சிநேகிதிகளுக்கு தெரியவரும் நான் சென்று விட்டேன் என்று.அவர்களிடம் மறுபடியும் சென்று நான் இப்போதே போகிறேன் என கூற என் மனம் இடம் தரவில்லை.அவர்களிடம்

விடைபெற மனம் மிகவும் வேதனைப்பட்டது.ஏன் என்றால் அவர்கள் அழ, துக்கத்தில் நான் அழ ,பிரிய மனமில்லாமல் என் மனம் வேதனைப்படும்.எனவே அவர்களிடம் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பவே முடிவு செய்து விட்டு ,வீட்டை விட்டு வெளியே நான் செல்லவேயில்லை.

அண்ணன் ஷானும்,தம்பி பாட்டும் வெளியே ஓடி சென்று அவர்கள் நண்பர்களிடம் பிரியாவிடை பெற்று திரும் வந்து தன உடமைகளை பாக் பண்ணிக் கொண்டிருந்தனர்.அவர்களிடமும் சோகத்தை பார்க்க முடித்தது என்னால்.

இரவு பத்து மணி அளவில் பெரியம்மா எங்களுடனேயே இருந்து எல்லாம் பாக் ஆகி விட்டதா என செக் பண்ணிவிட்டு ,கீழே உள்ள காரில் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.எங்கள் தெரு மிகவும் நிசப்தமாக இருந்தது.இரவு பத்து மணி என்பதால் அனைவரும் தூங்க சென்று இருப்பார்கள்.கீழே குடியிருப்பவர்கள் நாங்கள்

அடிக்கடி பெரியம்மா வீடு செல்வதால் அதுபோல இன்றும் போவதாகதான் நினைத்துக் கொண்டிருந்திருப்பார்கள்.யாருக்குமே தெரியாது நாங்கள் ஊரைவிட்டு இவ்வளவு விரைவாக போகபோகிறோம் என்று.

திங்கள் கிழமையும், செவ்வாய் கிழமையும் பெரியம்மா விட்டில் நாங்கள் முவரும் கழித்தோம்.அம்மாவும் ,குமாரி அக்காவும் எங்கள் முன்று பேருக்கும் ஸ்கூலிலிருந்து டிரான்ச்வெர் செர்டிபிகட் வாங்கி வருவதில் மிகவும் மும்முறமாக இருந்தார்கள்.இதற்கிடையில் பாட்டு டீச்சரை பார்த்து இனி நான் வரமாட்டேன் என கூறவேண்டும் என்பதை அம்மாவிற்கு நான் நினைவுபடுத்தியதால், செவ்வாய் கிழமை அன்று மாலையில் அம்மா என்னையும் அழைத்துக்கொண்டு பாட்டு டீச்சர் வீட்டிக்கு சென்றார்கள்

எங்களை பார்த்ததும் பாட்டு டீச்சர் மிகவும் மகிழ்ச்சியுடன “வாங்க,வாங்க,என்னடா ஆளையே காணோமே என்று

நினைத்துக்கொண்டே இருந்தேன்”என்றார்கள்.

“மறக்கவில்லை,நிறைய வேலைகள்.அதை எல்லாம் ஒவ்வொன்றாக முடித்துவிட்டு இப்பதான் நேரமிருந்தது,இன்று உங்களை பார்த்தே ஆக வேண்டும் என்று அனிதா என்னை ஒரே பிடியாக நின்று அழைத்து வந்துவிட்டாள்”என்றார்கள் அம்மா.

“உங்கள் பெண் விஷயத்தை சொல்லியிருப்பாள் என்றே நினைக்கிறேன்.அனிதா பரீட்சையில் 25/25 வாங்கியிருக்கிறாள் 25 மாணவிகளில் இவள்தான் முதலாவது மார்க் வாங்கி தேறியிருக்கிறாள் .அடுத்த லெவலுக்கு அவளை தயார் பண்ணவேண்டும் .பாட்டை நிறுத்தாமல் தொடர்ந்து அனுப்பி வையுங்கள்.இந்த முறை இவளுக்கு சிறப்பான முறையில் பயிற்சி அளிக்கலாம் என் இருக்கிறேன்.இதுவரை வாரம் இரண்டு நாட்கள்தான் வந்து கொண்டிருந்தாள்.இனிமேல் வாரத்திக்கு மூன்று நாட்கள் வகுப்பிற்கு அனுப்பி வையுங்கள்”.

“அவளை நன்றாக தேற்றிவிடுகிறேன்.கபாலி கோவிலில் அவள் மேடையில் உட்கார்ந்து கச்சேரி செய்வதை நீங்க கீழே உட்கார்ந்து ரசிக்கும்படியான நாளும் வரத்தான் போகிறது” என பாட்டு டீச்சர் முச்சுவிடாமல் அடுக்கிக் கொண்டே போனார்கள்.பாவம் டீச்சருக்கு தெரியாது இனி நான் அவர்களிடம் பாடம் கற்று கொள்ள வரப்போவதில்லை என்று.டீச்சர் பேசி முடித்ததும்,

“அது பற்றி பேசத்தான் இன்று வந்திருக்கிறேன்”.என அம்மா விவரத்தை முழுதும் கூறி, அனிதாவும் மற்ற குழந்தைகளும் நாளை காலையே ஊருக்கு செல்கிறார்கள். இனிமேல் அவள் பாட்டு கிளாசுக்கு வரமாட்டாள் என்பதை சொல்லவே இன்று வந்தேன்.அனிதா கடைசியாக உங்கள் பார்க்க வேண்டும் என என்னுடன் வந்துவிட்டாள்.நீங்கள் சொன்னதை கேட்க்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.என் பெண்ணுக்கு தொடர்ந்து உங்களிடம் பாட்டு பயிர்ச்சிபெற கொடுத்துவைக்கவில்லை.ஒருவேளை இன்னும்

சிறிது மாதங்களில் சென்னைக்கு திரும்ப வர நேரிட்டால்,நாங்கள் நிச்சயமாக இங்குதான் வரலாம் என இருக்கிறேன்.அப்போது இவளை மறுபடியும் உங்களிடமே பாட்டு பயிற்சிக்கு அனுப்பி வைக்கிறேன்.எல்லாவற்றிற்கும் ரொம்ப நன்றி"என அம்மா கூறி முடித்து விடை பெரும் சமயம்,

பாட்டு டீச்சருக்கு அதிர்ச்சியாக இருந்தது.அவர்களின் கண்கள் குளமாகியது.கரகரத்த குரலில் "எங்கிருந்தாலும் குழந்தையை விடால் நல்ல பாட்டு டீச்சராக பார்த்து பாட்டு சொல்லி கொடுங்கள்.அவளுக்கு நல்ல குரல் இருக்கிறது.நல்ல எதிர்காலமும் இதனால் ஏற்பட வாய்ப்பு இவளுக்கு இருக்கிறது.அதை தவறவிடாதீர்கள்"என கூறிக்கொண்டே என்னை கட்டிபிடித்து முதுகை தடவிய வண்ணம் "பாட்டு பயிற்சியை விட்டுவிடாதேடி குழந்தே,நீ நல்லா பாடகியாக வருவதற்கு என் ஆசிகள் உனக்கு எப்போதும் உண்டு"என கூறி முதன் முறையாக எங்களை அவர்கள் வீட்டிற்க்குள் அழைத்து சென்று

காப்பி குடிக்க வைத்து பிரியாவிடை கொடுத்து அனுப்பிவைத்ததை இன்றும் பசுமையாக என் நினைவில் நிற்கிறது.

புதன்கிழமை விடியற்காலை நாலு மணிக்கே குமாரி அக்காவும்,அம்மாவும் எங்களை எழுப்பி குளிக்கவைத்து தயார் செய்து கொண்டிருந்தார்கள்.வீட்டை விட்டு சரியாக ஐந்து மணிக்கு கிளம்பிவிட வேண்டும் என கண்டிப்பாக பெரியம்மா கூறிவிட்டபடியால் அவசர அவசரமாக எங்களை கிளப்பி கொண்டிருந்தார்கள்.தாத்தா வீட்டிக்கு செல்கிறோம் என ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தாலும் ,இனி சென்னைக்கு திரும்பி வருவோமா?என்ற கவலை மற்றொருபுறம் என் மனதை வாட்டி எடுத்தது.சென்னையில் பிறந்து பத்துவருடங்களுக்குமேல் வளர்ந்துவிட்டு இப்போது எப்படி சிதம்பரத்திலே சிறிய டவுனிலே காலம் தள்ளபோகிறோம் என என் மனம் வருந்தியது.

வீட்டை விட்டு கார் கிளம்பியதும் குமாரி

அக்கா,மற்றும் மற்றவர்களின் கண்களும் கலங்கியது.குமாரி அக்கா எங்கள் முவரையும் கட்டி பிடித்து முத்தமிட்டு நல்லபடியாக படிக்கவேண்டும் என அறிவுரைகளை கூறி கண்களில் தாரைதாரையாக வடிந்த கண்ணீரை தன புடவை தலைப்பில் துடைத்த வண்ணமிருந்தார்கள்.மூர்த்தியும் பொம்பளை மாதிரி தேம்பி தேம்பி அழுதார்.எங்கள் முவரையும் அனைத்து முத்தம்மாரி பொழிந்தார்.அம்மா டாடா காண்பித்தவண்ணம் கேட் வரை வந்து வழி அனுப்பிவைத்தார்கள்.

வழி முழுதும் நாங்க முவரும் எதுவும் பேசவில்லை.முத்தி பாக் பண்ணி கொடுத்த இட்லி,மிளகாய்பொடி காலை உணவாகவும்,புளிசாதம்,உருளைகிழங்கு கறியை மதிய உணவாகவும் சாப்பிட்டோம்.ஒவ்வொரு சாப்பாட்டு நேரமும் பெரியம்மா காரை தண்ணீரி ஓடும் ஓடைக்கு அருகே மரத்தடியில் நிறுத்தச்சொல்வார்கள் கார் ஓட்டுபவரை.சாப்பிட்டுவிட்டு அங்கேயே ஓடை நீரில் கை கால்களை கழுவி கொள்ள மிக

வசதியாக இருந்தது.

இரவு ஏழு மணியளவில் பாட்டி தாத்தா வீட்டை அடைந்தோம்.நாங்கள் வருவது அவர்களுக்கு முன்பே அறிவித்திருந்தபடியால் தாத்தா வீட்டை முழுதும் சுத்தம் செய்து, புது வெள்ளை அடித்து நாங்கள் தாங்கும் படுக்கை அறைகளை எல்லாம் தயார் செய்து
வைத்திருந்தார்கள்.எங்களுக்கான இரவு சாப்பாடும் தயாராக காத்திருந்தது.இம்முறையும் வேலை ஆட்கள் யாரும் ஆர்வமுடன் எங்களை வரவேற்கவில்லை.

“சின்னம்மா வரவில்லையா?”என அங்கு வீட்டு வேலை செய்யும் அஞ்சலி கேட்டதற்கு,

“இல்லை,அவர்களுக்கு சென்னையில் சில வேலைகள் உள்ளது.அதை முடித்துவிட்டு இன்னும் 10 நாட்களில் இங்கு வந்து விடுவார்கள்”என பெரியம்மா பதிலத்தார்கள்.மேலும் தொடர்ந்தார்கள்”அப்பா இவர்கள் வீட்டை காலி செய்து கொண்டு

லாரியுடன் இந்நேரம்
கிளம்பியிருப்பார்கள்.நாளை விடியற்காலை
எல்லாம் வந்து விடலாம் என
நினைக்கிறேன்.எதற்கும் எல்லோரும் தயாராக
இருங்கள் .சாமான்களை லாரியிலிருந்து
இறங்கக நிறைய உதவி ஆட்கள் தேவை
படலாம்"என பெரியம்மா வேலை ஆட்களிடம்
கூறிக்கொண்டே உள்ளே அறைக்கு சென்று
பாட்டியுடம் எதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

எங்களை கண்டதும் என் தங்கை ஆனஹி
உள்ளேயிருந்து ஓடிவந்து எதோ மிருகத்தை
வேடிக்கை பார்ப்பதுபோல தூர நின்று பார்த்துக்
கொண்டிருந்தாள்.நாங்க மூன்று பெரும் பயண
களைப்பினாலும்,சென்னையை விட்டு
எல்லோரையும் பிரிந்து வந்த வருத்தத்தாலும்
சற்றே வாட்டத்துடன் இருந்தோம்.

எல்லாமே நான்கு ஐந்து நாட்களில் நடந்து
விட்டதால் அப்பாவின் பெற்றோர்களுக்கு அப்பா
போய் சொன்னால்தான் தெரிந்திருக்க
கூடும்.தெரிந்தாலும் அவர்கள் இது பற்றி கவலை

படபோவதில்லை.நாங்கள் தனியாக வந்துவிட்டபிறகு அப்பாவின் பெற்றோர்களுக்கும் எங்களுக்கும் எந்தவித சம்பத்தமும் இல்லாமல் போயிற்று.திடீரென அப்பா பக்க உறவினர்களின் நினவு அப்போதுதான் எனக்கு உத்தித்தது.

இரவு சாப்பாட்டிற்கு பிறகு அனைவரும் வெகு சீக்கிரமாகவே தூங்குவதற்கு சென்று விட்டோம்.மறுநாள் விடியற்காலையில் எல்லாம் தாத்தா லாரியுடன் வந்துவிடுவார்கள் னைநித்துக்கொண்டே, பிரயாண களைப்பில் படுத்ததும் நன்றாக தூங்கிவிட்டேன்.

திடீரென பேச்சுக் குரலும்,அங்கும் இங்குமாக ஆட்கள் நடமாடுவதும்,பார்த்து,பார்த்து போ பிச்சை, மேஜையை சுவற்றில் இடித்துவிடாதே.இப்போதுதான் வெள்ளை அடித்துள்ளது.மெதுவாக தூக்கி சென்று வரவேற்ப்பு அறையில் ஒரு முலையில் தூணை ஒட்டி வை”என தாத்தாவின் குரல் கேட்டு விழித்தேன்.விடியற்காலை.முழுமையாக

விடியவில்லை.செந்நிறமாக சூரியன் மேலே மெதுவாக தலை தூக்கி எழும்பி கொண்டிருந்தார்.காக்கையின் கா,கா என்ற சத்தமும்,பறவைகளின் கீச்சிடும் சத்தமும் காதுக்கு இனிமையான கீதமாக ஒலிததது .எங்கோ தொலைவில் பக்திப்பாடல்கள் ஒளிபரப்பிக் கொண்டிருப்பது காற்றில் மிதந்து கொண்டு வந்தது.விடியற்காலை 5:55 அணிக்கு மேளதாளமும், அதன்பிறகு 6:00 மணிக்கு செய்தி வாசிப்பவர், 6:05 மணிவரை செய்திகளை ரேடியோவில் வாசிபதும் ஒலித்துக்கொண்டிருந்தது.வேலை செய்யும் அம்மாள் அஞ்சலி, தொட்டியில் தண்ணீரை நிரப்பிய வண்ணம் ,சாமான் லாரியிலிருந்து இறக்கிக் கொண்டு

வருபவர்களிடம் எதோ பேசி கொண்டிருந்தார்.வீடே கல்யாண வீடு போல கலகலப்பாக காட்சியளித்தது.

சென்னையில் எங்கள் வீட்டில் காலையில் எழுந்திருக்கும் போது இதுபோல

இருந்ததில்லை.காலையில் எழுந்திருக்கும் போதே எவ்வளவு சுறுசுறுப்பான எண்ணம் மனதில் தோன்றுகிறது என என் மனம் குதூகலித்தது.ஒரே துள்ளலில் படுக்கையிலிருந்து எழுந்த நான் பரபரப்புடன் குளியலறைக்கு சென்று பல்லை விளக்கிவிட்டு காபி குடிக்க சமயலறைக்கு சென்றேன்.சமயலறையில் பாட்டியுன் அருகே பெரியம்மா உட்கார்ந்து இருந்ததை பார்த்ததும் ,சமையற்கார சித்தி ரத்தினம் கொடுத்த காபியை எடுத்துக்கொண்டு வெளியே வந்து முற்றத்தில் உட்கார்ந்துகொண்டு அங்கு நடப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டே காபியை குடித்து முடித்தேன்.

சமயலறையில் பாட்டியிடம் மறுநாள் காலையிலேயே சென்னைக்கு திருப்புவதாக பெரியம்மா கூறியது என் காதில் விழுந்தது.பிறகு வெகு நேரம் ஏதேதோ ரகசியமாக இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.பெரியம்மாவை கண்டால் எனக்கு கொலை நடுக்கம்தான் எப்போதும்.சிறிது நேரத்தில் பெரியம்மா எழுந்து

அவர்கள் அறைக்குள் சென்று கதவை சார்த்திகொண்டார்கள்.

சாமான்களை இறக்கிய லாரி சென்றுவிட்டது.வேலை ஆட்களும் சாமான்களை இறக்கி, தாத்தாவும் ,veliyeபாட்டியும் சொன்னபடி அந்தந்த இடத்தில் வைத்து விட்டு தம் வேலைகளை பார்க்கச் சென்றுவிட்டனர்.தாத்தா சவகாசமாக வந்து உட்கார்ந்தவுடன் சமையல் செய்யும் ரத்தினம் சித்தி காலை உணவையும்,காபியையும் தாத்தா இருக்கும் ஊஞ்சலில் கொண்டு வந்து கொடுக்கவே தாத்தா அதை சாப்பிட்டு கொண்டே “சேது எங்கே?”என கேட்டார்கள்.

உள்ளேயிருந்து வெளியே வந்து கொண்டிருந்த பெரியம்மா ‘என்னப்பா விஷயம்?”என கேட்டதும்.

“எல்லாம் முடித்துவிட்டது.இந்த மூன்று குழந்தைகளை ஸ்கூலில் சேர்க்க ஏற்பாடு பண்ணவேண்டியதுதான்.நான் இன்றே

பையன்கள் பள்ளிகூடத்திற்கு சென்று இருவரின் அட்மிஷனும் முடிக்க ஏற்பாடு செய்துவருகிறேன்."என்றார்கள் தாத்தா.

"அனிதாவை மங்கை போகும் ஸ்கூலிலேயே சேர்த்துவிடலாம் அப்பா.இப்ப அந்த பள்ளி கூடத்திர்க்குதான் திடீர் விஜயம் செய்ய இருக்கிறேன்.நீங்க பையன்கள் இருவருக்கும் முடித்துவிடுங்கள்"என்று கூறிக்கொண்டே என்னிடம் திரும்பி "அனிதா தயாராகு,நாம் ஸ்கூலுக்கு போக வேண்டும்"என கூறியதும் நான் உள்ளே சென்று என் பெட்டியில் இருந்த நல்ல உடையாக எடுத்து கொண்டு குளிக்க சென்று விட்டேன்.

நான் போக கூடிய பள்ளிக்கூடமும்,அம்மா தலைமை ஆசிரியையாக பணி ஏற்க வேண்டிய பள்ளிகூடத்தையும் பார்க்க மிக ஆவலுடன் பெரியம்மாவுடன் சென்றேன்.அந்த பள்ளிக்கூடம் ஊருக்கு கடைசியில் ரயில்வே ஸ்டேஷன் அருகில் இருந்தது.ஸ்கூலை தாண்டி மறுபக்கம் சென்றால் வெறும் நிலமே.வீடுகள் எதுவும்

கிடையாது.பள்ளிக்கூடம் தனிப்பட்ட நிலையில் நின்றிருந்தது.சென்னையிலுள்ள என் பழைய பள்ளிகூடம் போல இது அழகாக இல்லை.ரொம்பவும் சாதாரணமாக இருந்தது.அன்று அரை நாள் மதியஉணவு வரை பெரியம்மாவுடன் தலைமை ஆசிரியர் அறையில் உட்கார்ந்திருந்தேன்.நான் அந்த பள்ளி கூடத்திற்கு புதிதாக வர இருக்கும் தலைமை ஆசிரியையின் மகள் என்பதால் எனக்கு ஏகப்பட்ட தடபுடலான வரவேற்ப்பும்,மரியாதையும் அளிக்க்கப்பட்டது.அந்த அலுவலகத்தில் வேலை செய்யும் குமாஸ்தாக்கள் என்னை நன்றாகவே கவனித்துக் கொண்டார்கள்.பொதுவாக எனக்கு பயங்கரமான ராஜ மரியாதை என்றே சொல்லலாம்.என் சம்பந்தமான அட்மிஷன் வேலை முடித்துவிட்டு,பெரியம்மாவின் ஸ்கூல் விசிட்டையும் முடித்துவிட்டு மதியம் ஒரு மணி போல வீட்டிற்கு சாப்பிட வந்து விட்டோம்.

எங்கள் மூவரின் அட்மிஷன் வேலையும் ஒரே நாளில் முடிந்து விட்டது.ஆனஹி தாத்தா வீடு

இருந்த அதே தெருவில் உள்ள ஒரு ஆரம்ப பள்ளி கூடத்திற்கு ஏற்கனவே சென்று கொண்டிருந்தாள். அவளை பற்றி யாரும் கவலைபட நேரிடவில்லை.அன்று பொழுதை ஒரு வழியாக எங்களை ஸ்கூல் சேர்ப்பதிலும்,வந்திறங்கிய சாமான்களை ஒழுங்கு படுத்துவதிலும் ரொம்ப மும்முரமாக சென்று விட்டது.மறுநாள் விடியற்காலையில் நாலு மணிக்கே பெரியம்மாவும் கிளம்பி சென்னைக்கு சென்று விட்டார்கள்.அவர்கள் சென்றதும் வீட்டில் அனைவருக்கும் நிம்மதி பெருமூச்சுடன் அப்பாடா என்றிருந்தது.பெரியம்மா வீட்டிலிருந்தாலே எப்பவும் வீடு அமர்க்களமாகவும்,பரபரப்பாகவும்தான் இருக்கும்.அனைவரையும் ஏதாவது ஒரு வேலை வாங்கிகொண்டிருப்ப்பர்கள் பெரியம்மா.

இன்னும் பள்ளிக்கூடம் திறக்கவில்லை.ஒரு நாள் தாத்தா ஈஸ்வரன் எங்கள் நால்வரையும் அழைத்து சென்று பள்ளி கூடத்திற்கு தேவையான புக்ஸ், நோட்டு புத்தகம் ,பென்சில்,பேனா,இறைசர் ,ஆகியவற்றை

அவரவர்களுக்கு வேண்டியதை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்ததும்,பாட புத்தகங்களுக்கு அட்டை போடுவது எப்படி என கற்று தந்தார்கள்.அதே போல எங்களை எல்லாவற்றிர்க்கும்அட்டை போட்டு ,லேபல் ஒட்டி பெயர் ,முகவரி எல்லாம் எழுத வைத்து எங்களுக்கென ஒதுக்கப்பட்ட அலமாரியில் வரிசையாக வைக்கச் சொன்னார்கள்.எல்லா பேனாக்களுக்கும் இங்க் போட்டு, பிறகு பென்சிலை இரண்டாக வெட்டி அதை ஒவ்வொன்றையும் கத்தியால் கூர்மையாக்கி ,எரசரை அனைத்தையும் இரண்டாக அறுத்து ஆளுக்கொரு பாதியாக கொடுத்தார்கள்.எல்லாம் அம்மா வருவதற்கு முன் தாத்தா முடித்துவிட்டார்கள்.

மேலும் குளிப்பதற்காக லைப் பாய் சோப்பை வாங்கி அதை நான்காக வெட்டி ஆளுக்கொரு சோப்பு துண்டை அவரவர்களுக்கான சோப்பு பாக்ஸில் போட்டு கொடுத்தார்கள்.எங்கள் நால்வரின் சோப்பு பாக்சும் நான்கு கலரில் இருந்தது.எனவே யாருடையது என சரியாக அடையாளம் கண்டுகொள்ளமுடியும்

என்பதற்காக.இப்படி எல்லாவற்றையும் நான்காக ப்ரிரித்து தனி தனியான இடத்தில் வைக்கச் சொன்னார்கள் தாத்தா.

பிறகு எங்கள் நால்வருக்கும் சாப்பிடுவதற்கு பிஸ்கட்,ரஸ்க்,சாக்லேட்,மற்றும் கடிப்பதர்க்கே கடினமான கமர்கட் மிட்டாய் ,அனிமல் கிராக்கர் என வாங்கி தனிதனி பாட்டிலில் போட்டு எங்களுடன் கொடுத்து அவற்றை குறைந்தது இரண்டு வாரங்களுக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என மிகவும் எச்சரித்தார்கள்.

ஒவ்வொரு வேளைக்கும் வித விதமான சாப்பாடும்,குறைவில்லாமல் ஸ்நாக்கும். பழம் மற்றும் எல்லாம் நன்றாக சாப்பிட்டு வந்தோம்.சென்னையில் எங்கள் வீட்டில் எல்லாம் இருந்தும் இதுபோல ஒவ்வொரு வேலையும் அருஞ்சுவை உணவு நாங்கள் சாப்பிட்டதில்லை.கடல்போல வீடும்,எங்கு திரும்பினாலும் வேலை ஆட்களும்,அருஞ்சுவை உணவும் இருந்தும் அந்த வீட்டில் எதோ ஒரு குறை இருப்பதுபோல ஒரு உணர்வு எங்கள்

நாலவருக்கும் தோன்றியது.

அப்பாவின் பெற்றோர்கள் வீட்டில் இருக்கும்போது அங்கும் எங்களுக்கு அன்பும்,ஆதரவும் கிடைக்கவில்லை.அங்கே எங்களை யாரும் ஒரு பொருட்டாகவே மதித்ததில்லை.அதற்க்கு பார்த்தால் அம்மாவின் பெற்றோர்கள் வீட்டில் அன்புடனும்,ஆதரவுடனும் அக்கறையுடனும் நடத்தி வந்தார்கள்.இதை விட வேறு என்ன தேவை.நாம் ஏன் வீணாக எதையோ இழப்பதுபோல கற்பனை செய்து கொள்ள வேண்டும் என எனக்கு நானே புத்தி கூறிக்கொண்டேன்.

மறுநாள் பள்ளிக்கூடம் திறக்கவிருந்தது.எனவே தாத்தா ஈஸ்வரன் எங்களை அழைத்து மறுநாள் பள்ளிகூடத்திர்க்கு வேண்டியவைகளை பையில் தயாராக வைத்துவிட்டு இரவு படுக்கைக்கு போகச் சொன்னார்கள்.இரவு சீக்கிரமாகவே தூங்கச் சொல்லி படுக்கை அறைக்கு எங்களை அனுப்பி விட்டார்கள் தாத்தா.தங்கை

ஆனஹியும் எங்களுடன் சகஜமாக பழக ஆரம்பித்துவிட்டாள் .அவளுக்கும் நாங்கள் யார் என்ற விவரம் நன்றாக புரிந்து விட்டது.

மறுநாள் விடிந்தால் புதிய ஊரில் புதிய பள்ளிகூடத்தில் புதிய சிநேகிதிகளுடன் இர்ருக்கபோவதை நினனைக்கும்போது சந்தோஷத்தில் இரவு சரியாக எங்கள் முன்று பேருக்குமே தூக்கம் வரவில்லை.

அண்ணன் ஷானுக்கும், தம்பி பாட்டுக்கும் ஸ்கூலிற்கு சென்று வர தனித்தனியாக சைக்கிள் தாத்தா கொடுத்திருந்தார்கள்.நான் அம்மாவுடன் குதிரை வண்டியில் போய் வருவதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. தங்கை ஆனாஹியின் பள்ளிக்கூடம் அதே தெருவில் இருந்ததால் எப்பவும் போல தாத்தா அவளை பள்ளிகூடத்திற்கு கொண்டுபோய் விட்டு அழைத்து வர இருந்தார்கள்.

விடியற்காலையில் ஆறு மணிக்கலாம் தாத்தா எங்களை எழுப்ப.படுக்கை அறையை விட்டு

வெளியே ஹாலுக்கு வந்த எங்களுக்கு அம்மாவை பார்த்ததும் ஆச்சரியம் தாங்கவில்லை.அம்மா எங்கள் நால்வரையும் அவ்வளவாக கண்டுகொள்ளவில்லை.நாங்கள் நால்வரும் கடகடவென எல்லாவேலைகளையும் முடித்து விட்டு ஸ்கூலுக்கு செல்ல தயாராகி கொண்டிருந்தோம்.

தாத்தா ஈஸ்வரன் அம்மா பள்ளி கூடம் செல்வதற்கான குதிரை வண்டியை தயார் செய்யும்படி வண்டி ஓட்டுபவரிடம் கூறவே,அவர் மிக பெரிய அழகிய வெள்ளை குதிரையை வண்டியில் பூட்டி தயார் செய்து தோட்டத்தில் நிறுத்தி வைத்திருந்தார்.

அது மிக பெரிய வண்டி.உள்ளே எட்டு பேருக்கு மேல் உட்கார்ந்து பயணம் செய்யலாம்.வண்டியில் இருபுறமும் திரையிட்டு மறைத்திருக்கும்.வண்டிக்குள் இருந்து வெளியே பார்க்க முடியும்.வெளியே உள்ளவர்கள் வண்டிக்குள் இருப்பவர்களை பார்க்கமுடியாது.

குதிரை வண்டியில் போவதென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்.அதிலும் தினமும் ஸ்கூலுக்கு அதில் போய் வரப்போகிறேன் என கேள்வித் பட்டதும் என் மனம் குதூகலித்தது.அதே போல சென்னையில் அண்ணனும்,தம்பியும் ரிக்ஷாவில்தான் ஸ்கூலுக்கு போவார்கள்.ஆனால் இங்கு தாத்தா இருவருக்கும் சைகிள் கொடுக்கவே அவர்கள் இருவருக்கும் ஆனந்தம் பிடிபடவில்லை.முவரும் பள்ளிக்கூடம் போகும் நாளை ஆவலுடன் காத்திருந்த நாளும் வந்துவிட்டது.

நான் போகவிருக்கும் பள்ளிக்கூடம் வீட்டிலிருந்து முன்று மைல் தூரம் இருக்கலாம் என்றே நினைக்கிறேன்.அனைவரும் குளித்துவிட்டு ஸ்கூல் யூனிபார்ம் அணிந்த்துகொண்டு காலை உணவும் சாப்பிட்டுவிட்டு தயாராக இருந்தோம்.அண்ணன் ஷானும்,தம்பியும் சைக்கிளில் பறந்துவிட்டார்கள்.அம்மா மெதுவாக வேலை ஆட்கள் இருவரை பிடித்த வண்ணம் தோட்டத்திற்கு வந்து வண்டியில் கஷ்டப்பட்டு

ஏறி அமர்ந்தார்கள்.அம்மாவின் கால் இந்த சிறிது நாட்களில் மிகவும் மோசமாகிவிட்டது.நடக்கவே வெகுவாக கஷ்டப்பட்டார்கள்.வண்டி சற்றே உயரமாக இருந்ததால் அம்மாவால் காலை தூக்கி மேலே வைத்து ஏறி உட்கார்வதற்கு மிகவும் தடுமாறி,வலி தாங்கமுடியாமல் அவதி பட்டு,மிகவும் சிரமப்பட்டு ஏறி உட்கார்ந்தார்கள்.

நானும்,அம்மாவும் ஜட்காவில் ஏறி உட்கார்ந்ததும் வெள்ளை குதிரை வீதியில் டக்டக் என்ற காதுக்கினிய தாளத்துடன் கூடிய கீதமாக நிமிர்ந்த நிலையில் கம்பீரமாக ஓடிக்கொண்டிருந்தது.வெள்ளை குதிரை ஸ்கூல் கட்டிடத்திற்குள் நுழைந்து முன்னே உள்ள போர்டிகோவில் நின்றது.அம்மாவை கைத்தாங்கலாக இறங்க உதவி செய்து மெதுவாக படியேற்றி உள்ளே அழைத்துச் சென்றேன்.அங்கே தலைமை ஆசிரியை ரூமுக்கு வெளியே நிண்டிருந்த பியூன் எங்களை கண்டதும்

“என்ன விஷமாக வந்தீர்கள்.தலைமை ஆசிரியை

மிகவும் பிசியாக இருப்பதால் இப்போது அவர்களை பார்க்கமுடியாது.இப்படி வெளியே பெஞ்சில் உட்காருங்கள், இந்த் சீட்டில் உங்கள் பெயர்,.வந்த விவிவரத்தை எழுதி கொடுங்கள் நான் மேடத்திடம்
கொடுத்துவருகிறேன்."என்றார்.

அம்மாவும் எதுவும் பேசாமல் அந்த பியூன் கொடுத்த பேப்பரில் தன பெயரை எழுதி,விவரத்தையும் எழுதி கொடுத்தனுப்பியதும்,உள்ளே இருந்த தலைமை ஆசிரியை திருமதி,சந்திரா விழுந்து அடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்து அம்மாவை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்கள்.அதற்குள் அந்த ஆபீசில் வேலை செய்யும் குமாஸ்தாக்கள்,பியூன் எல்லாம் புத்திதாக வந்துள்ள தலைமை ஆசிரியையை காணும் ஆவலில் அங்கு வந்து நின்றிருந்தனர்.

தலைமை ஆசிரியை சந்திரா அம்மாவை அங்குள்ளவர்களுக்கு அறிமுகபடுத்திவிட்டு அம்மா பணியில் சேர்வதற்கான பேப்பர்களை தயார்

செய்யும்படி குமாஸ்தாக்களுக்கு உததரவிட்டார்கள். அம்மா திருமதி.சந்திராவிடம் தான் தலைமை ஆசிரியையாக சேரப்போவதில்லை என்றும் உதவி தலைமை ஆசிரியராகத்தான் சேரப்போவதாகவும் தன ஆர்டர் ஐ காண்பித்ததும்தான் அந்த தலைமை ஆசிரியருக்கு உயிர் வந்தது போல இருந்தது.தன் தலைமை ஆசிரியை பதவி உயர்வை தற்காலிகமாக தன உடல் நிலையை முன்னிட்டு நிறுத்தி வைத்திருப்பதாக அம்மா அந்த பள்ளிகூட தலைமை ஆசிரியரிடம் கூறியதும் அந்த அலுவலகத்தில் இருந்த அனைவரும் சற்றே நிம்மதி பெருமூச்சு விட்டார்கள்.

பிறகு திருமதி சந்திரா அந்த பள்ளிகூடத்தில் சில நாட்களாக அம்மா தலைமை ஆசிரியையாக வரப்போவதாகவும்,கூடவே திருமதி.சந்திராவிற்கு டிரான்ச்பர் அர்டெரையும் கொண்டுவரப்போவதாகவும் ஒரு வதந்தி இருந்துவந்தது என்றும் இன்று அம்மா சென்று அவற்றையெல்லாம் சரிசெய்து விட்டதாகவும் கூறினார்கள்.

அம்மாவும் ,"முதலில் நான் இங்கு தலைமை ஆசிரியராக பதவி உயர்வில் வருவதாகத்தான் இருந்தது. பிறகு இப்போதைக்கு என் உடல் நிலை இருக்கும் நிலையில் வேண்டாம் என அதை ரத்து செய்துவிட்டு உதவி தலைமை ஆசிரியராக வர
தீர்மானித்துவிட்டேன்'என்றார்கள்.

திருமதி சந்திரா அம்மாவை அந்த பள்ளிக்கூடம் எப்படி இருக்கிறது என சுற்றி காண்பிப்பதற்காக சிறிது தூரம் அழைத்து சென்றார்கள். அம்மாவால் அதிகம் நடக்க முடியாததால் சுருக்கமாக காண்பித்துவிட்டு மறுபடியும் தன அறைக்கு அழைத்துசென்று முடிக்கவேண்டிய மற்ற பேப்பர் வேலைகளை முடித்தார்கள்.

அதற்குள் நான் என் பையை அம்மாவின் அருகில் வைத்துவிட்டு பள்ளிக்கூடம் எப்படி இருக்கிறது என சுற்றி பார்க்க வெளியே சென்று விட்டேன்.ஸ்கூல் ஆரம்பிக்க இன்னும் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருந்தது.நான் அந்த ஸ்கூலிற்கு புதிதாக வரபோகும் டீச்சரின்

பெண் என்பதால் அங்கு வேலை செய்யும் அனைவரும் என்னிடம் மிக மரியாதையாகவும்,அன்பாகவும் இருந்தனர் .

அந்த பள்ளிக்கூடம் இருக்கும் இடமும்,கட்டிட அமைப்பும் இன்று என்னை வெகுவாக கவர்த்தது.எந்தவித ஆரவாரமும் இல்லாத அமைதியான் ஒதுக்குபுறத்தில் நிறைய நிலங்கள் சுற்றியிருக்க கட்டிடங்கள் ஆங்காங்கே தனித்தனியாக அழகாக இருந்தது.பள்ளிக்கூடம் மதில் சுவர் கேட்டிற்கு முன் ஒரு சின்ன கடை,தேவையான பள்ளிகூடத்திற்கு தேவையான பொருட்களை அந்த கடையிலிருந்தே வாங்கிக்கொள்ளலாம்.அதன் அருகே ஒரு டீ கடை, . அதில் சூடாக மசால்வடை,உளுந்துவடை ,டீ ,காபி பிஸ்கட்,கடலை உருண்டை,போன்றவைகள் வைக்கபட்டிருந்தது.

அதிலிருந்து கொஞ்சம் தூரத்தில் ரயில்வே ஸ்ட்ஷன் .அதை சுற்றிலும் சில கடைகளும்,சாப்பாடு சாலைகளும் இருந்தது.

எப்போது என் வகுப்பிற்கு சென்று என் புதிய சிநேகிதிகளை பார்ப்போம் என்ற ஆவலிலிருந்ததென்.ஸ்கூல் முழுதும் சுற்றி ஒரு நோட்டம் விட்டுவிட்டு மறுபடியும் தலைமை ஆசிரியை ரூமிற்கு சென்று அம்மாவின் அருகில் நின்று கொண்டேன்.

சரியாக ஒன்பது மணிக்கு பள்ளிக்கூடம் ஆரம்பமாகி ,முதல்நாள் அனைவரும் பள்ளிகூட பொது ஹாலில் காத்திருந்தார்கள்.தலைமை ஆசிரியை திருமதி சந்திராவும் துவக்க விழாவிற்கு சென்று கடவுள் வாழ்த்தும்,தேசிய பாடலும் பாடி முடித்ததும் ,அனைவரயும் வரவேற்று சொற்பொழிவாற்றி விட்டு அந்த பள்ளிக்கு புதியதாக சேர்ந்துள்ள ஆசிரியையான அம்மாவையும்
அறிமுகபடுத்திவிட்டு,என்னையையும் அப்படியே ஏழாம் வகுப்பில் புதிதாக சேர்க்க பட்ட மாணவி என அறிமுகபடுதிவைத்தார்கள்.

அந்த சிதம்பரம் டௌனில் உயர்நிலை பள்ளி உதவி தலைமை ஆசிரியை

என்பதாலும்.பெரியம்மா கல்வி இலாக்கா அதிகாரி என்பதாலும்,தாத்தா ஈஸ்வரன் ஊரில் பணம் படைத்தவர் மற்றும் அரசியலில் செல்வாக்கு கொண்ட மனிதர் என்பதாலும் ஊரிலும், பள்ளிக்கூடத்திலும் எங்களுக்கு ஏக மரியாதையும் வரவேற்ப்பும் இருந்தது கண்டு என் மனம் பூரித்தது.சென்னையில் இப்படி ஒரு ராஜ பரிபாலனை எங்களுக்கு கிடைத்ததில்லை.எல்லாம் ஒரே மாயையாக இருந்து வந்தது எங்களுக்கு.

காலையில் இறை வணக்கமும் முடித்து மாணவிகளும் ஆசிரியர்களும் தம்தம் வகுப்பிற்கு பிரிந்து செல்லும் சமயம் திருமதி சந்திர நான் போக இருக்கும் வகுப்பு மாணவிகளுடன் என்னை கொண்டு சேர்த்துவிட்டு அம்மாவுடன் தன அறைக்கு சென்று விட்டார்கள்.

30

அத்யாயம்-முப்பது

என் வகுப்பு மாணவிகளுடன் நான் என் வகுப்பறையை நோக்கி நடந்தேன்.கூட வந்த மாணவிகள் அனைவரு ம் எதோ ஒரு வினோதபுரியை பார்ப்பது போல என்னை திரும்பி,திரும்பி பார்த்து கொண்டே அவர்களுக்குள் எதோ கிசுகிசுவென பேசிக்கொண்டே நடந்தார்கள்.எனக்கு சற்றே சங்கோஜமாகத்தான் இருந்தது.வகுப்பறையில் நுழைந்து அவரவர்கள் இருக்கையில் அனைவரும் உட்கார்ந்தவுன் ,எங்கு உட்காறுவது என தயங்கி தயங்கி வகுப்பிற்கு கடைசியில் இருந்த

ஒரு காலி நாற்காலியில் சென்று உட்கார்ந்தேன்.இன்னும் வகுப்பிலுள்ள சக மாணவிகள் என்னை திருமபி திரும்பி பார்த்து கொண்டே இருந்தார்கள்.சிலர் புன்முறுவலை உதிர்த்தனர் என்னை பார்த்து.

என் அருகே உட்கார்ந்திருந்த ஒரு மாணவி என்னை பார்த்து “உன் பேர் என்ன?”என்று கேட்டாள் .

“அனிதா”என்றேன்.

“என் பேர் ரேணுகாதேவி”என்றாள் அவள்,

நான் லேசாக புன்முறுவல் செய்தேன்.

நீ எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறாய்?என்றாள் ரேணுகாதேவி.

“சென்னையிலிருந்து”என பதிலளித்தேன்.

“நான் திருநெல்வேலியிலிருந்த போன வருடம்தான் வந்தேன்”என்றாள் ரேணுகாதேவி.

“உன் அப்பாவுக்கு இங்கே மாற்றலாகிவிட்டதா?”என கேட்டேன்.

“இல்லை,என் அப்பா இறந்துவிட்டார்.அம்மா வேலை செய்யாததால் வருமானம் இல்லாமல் மாமா வீட்டிற்கு என்னை அனுப்பி விட்டார்கள்.இங்கு என் மாமா வீட்டில் தான் நான் தங்கி படிக்கிறேன்”என்றாள் அவள்.

எனக்கு அவளை பார்க்க பரிதாபமாகிவிட்டது.பாவம் அவள் என என் மனதிற்குள் நினைத்துகொண்டேன்.எனக்கு அப்பா உயிருடன் இருந்தும் பயனில்லாமல் தாத்தாபாட்டி வீட்டிற்கு வந்திருக்கேறேன்.அவளுக்கு அப்பா உயிருடன் இல்லாததால் மாமா வீட்டிற்கு வந்திருக்கிறாள்.என்ன உலகம் என நினைத்துகொண்டேன்.

அதற்குள் வகுப்பு டீச்சர் திருமதி.சாந்தா,அந்த வகுப்பிற்கு வந்த எல்லா மாணவிகளையும் நல்வரவு என கூறிவிட்டு என்னையையும்

வகுபில்லுள்ள எல்லா மாணவிகளுக்கும்
அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.அதன் பிறகு
வகுப்பு தொடரவு யாரும் யாருடனும் பேச
முடியவில்லை.நேரம் நகர்ந்தது மதியம்
சாப்பாட்டிற்கு மணி அடித்ததும் அனைவரும்
சாப்பிட பறந்து சென்றுவிட்டார்கள்.நான்
மட்டும் அம்மா இருக்கும் டீச்சர் அனைவரும்
இருக்கும் அறைக்கு சென்றேன்.அங்கு
அம்மாவின் மேஜையில் சுடசுட முழு சாப்பாடும்
ஐந்த அடுக்கு லஞ்ச பாக்ஸில் எங்களுக்காக
காத்திருந்தது.தாத்தா வீட்டிலிருந்து
எங்களுக்காக லஞ்ச் சமைத்து வேலை ஆளிடம்
சைக்கிளில் அனுப்பி கொடுத்துவர
சொல்லியிருக்கிறார்கள் என அம்மா
கூறினார்கள்.இனிமேல் நமக்கு தினமும் இப்படி
தான் லஞ்ச கொடுத்தனுப்புவார்கள் நீ
என்னுடன்தான் தினமும் மத்தியானம்
சாப்பிடபோகிறாய் என அம்மா சொன்னது
கேட்டு எனக்கு பெருத்த ஏமாற்றம்.என் சக
வகுப்பு தோழிகளுடன் சாப்பிட என்னால்
முடியாது போலிருக்கிறது என மனம் சற்றே

சோர்வு அடைந்தது.

தாத்தா வீட்டில் காலையில் ப்ரேக்பாஸ்ட் முடிந்ததும் மதியம் உணவை பத்து மணிக்குமேல்தான் சமைக்க ஆரம்பிப்பார்கள்.எனவே நாங்கள் அனைவரும் காலை எட்டு மணிக்கே கிளம்பிவிடுவதால் எங்களுடன் லஞ்ச எடுத்து வருவது இயலாத காரியமாக இருந்தது. எனவே மதிய சமையல் முடிந்தவுடன் தாத்தா வீட்டு சமையல் சித்திரத்தினம் அவரவர் லஞ்ச பாக்ஸில் சாப்பாட்டை போட்டு வேலை ஆள் மூலமாக எங்களது பள்ளிகூடங்களுக்கு கொடுத்தனுப்பிவிடுவார்கள்.

நான் வேறு வழி இல்லாமல் மதிய சாப்பாட்டை அம்மாவுடன் சாப்பிடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.ஜன்னல் வழியாக வெளியே பார்த்தேன்.மற்ற மாணவிகள் கூட்டம் கூட்டமாக பேசிக்கொண்டே ,அரட்டை அடித்துக் கொண்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.அதை பார்த்த எனக்கு ஏக்கமாக இருந்தது.அம்மா மற்றவர்களுடன் பேசி

கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.நான் மட்டும் தனியே யாருடனும் பேசாமல் உட்கார்ந்து சாப்பிடுவது சற்றே மனதிற்கு பிடிக்கவில்லை.மிகவும் போர் அடித்தது.சென்னையிலிருந்த போது அம்மாவுடன் சாப்பிடும் வாய்ப்பு கிடைத்ததில்லை.சிநேகிதிகளுடன் சாப்பிடும் வாய்ப்பும் கிடைத்ததில்லை. சென்னையில் நான் சென்ற பள்ளிக்கூடம் வீட்டிற்கு மிக அருகில் இருந்தபடியால் மதியான சாப்பாட்டிற்கு வீட்டிற்கு சென்று சாப்பிட்டு வருவேன்.இங்கு அம்மாவுடன் உட்கார்ந்து சாப்பிடும் வாய்ப்பு கிடைத்தது குறித்து மகிழ்ச்சியாக இருந்தாலும்,கூட படிக்கும் சக மாணவிகளுடன் உட்கார்ந்துகொண்டு அரட்டை அடித்துக்கொண்டு சாப்பிட என் மனம் ஏங்கியது.

மாலையில் பள்ளிக்கூடம் முடிந்ததும் அனைவரும் சென்றுவிட்டனர்.நான் அம்மாவின் அருகில் அமர்ந்தது கொண்டு அவர்கள் வேலை முடிந்து கிளம்பும்வர காத்திருந்தேன்.மாலை ஐந்துமணி

அளவில் ஒரு வழியாக அம்மாவுடன் ஜட்காவில் வீடு வந்து சேர்ந்தேன்.வீட்டில் சுடசுட பஜ்ஜியும்,காபியும் எங்களுக்காக காத்திருந்தது.வீட்டில் தாத்தா பாட்டி,அம்மா வேலை ஆட்கள் என கலகலப்பாக இருந்தது.

சிறிது சிறிதாக சிதம்பர வாழ்க்கை எனக்கு மிகவும் பிடிக்க ஆரம்பித்தது.அண்ணன் ஷானும்,தம்பி பாட்டுக்கும்கூட ரொம்ப பிடித்துவிட்டது.தினமும் அம்மாவுடன் சென்று அம்மாவுடனே திரும்பி வந்து கொண்டிருந்தேன்,அண்ணன் ஷான்,தம்பி பாட் ,தங்கை ஆனஹி மூவரும் எங்களுக்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே வீட்டிற்கு வந்து விடுவார்கள்.வீட்டில் மாலை சிற்றுண்டியை முடித்துவிட்டு தோட்டத்தில் விளையாடிகொண்டிருப்பார்கள்.நான் மட்டும் அம்மாவுடன் நேரம் சென்று ஸ்கூலிலிருந்து அம்மாவுடன் வருவதால் ,பள்ளிக்கூடம் முடிந்த்ததும்,அருகிலுள்ள ஒரு ஹோட்டலில் அம்மா எனக்கு தினமும் பூரி மசாலா,அல்லாது மசாலா தோசை என வாங்கி சாப்பிட சொல்லி

ரூபாய் 1 என்னிடம்
கொடுத்துவிடுவார்கள்.எங்கள் நால்வருக்கும்
இந்த வாழ்க்கை மிகவும் பிடித்துபோய் விட்டது.

சென்னையில் பள்ளிக்கூடம் விட்டது வீட்டிற்கு
வந்தால் குமாரி அக்கா மட்டுமே
இருப்பார்கள்.தினமும் மலையில் ஸ்நாக் வீட்டின்
அருகிலுள்ள ஒரு பேக்கேரியில் எங்களுக்கு
தேவையானதை வாங்கி கொண்டால்
,கடைக்காரர் ஒரு சிறிய நோட் புத்தகத்தில்
எங்களின் முன்று பெயர்களையும் எழுதி
யார்,யார் என்னென்ன ஸ்நாக் வாங்கினோம்
என எழுதி அதன் விலையையும் தேதியுடன்
எழுதி விடுவார்.மாதம் இறுதியல் அம்மா
பேக்கரியில் மொத்தமாக பணத்தை கொடுத்து
விடுவார்கள்.தினமும் ஆளுக்கு 15 பைசாதான்
கணக்கு.அதற்க்கு மேல் எதுவும் கொடுக்ககூடாது
என கடைக்காரரிடம் அம்மா கூறியபடியால்
அவரும் 15 பைசாவிற்கு மேல் எங்களுக்கு
எதுவும் கொடுக்க மறுத்துவிடுவார்.

ஆனால் இங்கு அப்படி இல்லை.தினமும் சுடசுட

ஏதாவது ஒரு ஸ்நாக் காபியுடன் இருக்கும்.அதுதவிர மற்ற நொறுக்கு தீனிகளும் இருப்பதால் எங்களுக்கு தேவையானது தினமும் கிடைத்து வந்தது.

மாதங்கள் செல்ல செல்ல சென்னை வாழ்க்கையை முழுமையாக மறந்து சிதம்பர வாழ்க்கையை முழுமையாக அனுபவித்து,ரசிக்க துவங்கி விட்டோம்.முதல் ஆறு மாதகாலம் ஆனந்தமாக சென்றந்து.அந்த மகிழ்ச்சியும்,சந்தோஷமும்,கவனிப்பும் சிறிது காலமே என்று அப்போது சிறிய குழந்தைகளாகிய எங்களுக்கு தெரியாமல் சென்று விட்டது.அந்த ஆறு மாத காலத்தில் அப்பாவை பற்றி யோசிக்கவோ,நினைக்கவோ எங்கள் நால்வருக்கும் நேரமே இல்லாமல் போயிற்று.

அம்மாவின் உடல் நிலை மட்டும் இந்த சூழ்நிலையிலும் மாறாமல் நாளுக்கு நாள் மிகவும் மோசமாகிக்கொண்டே சென்றது.அனைவருக்கும் இது ஒரு புரியாத புதிராகவே இருந்து

வந்தது.இவ்வளவு வசதிகள் இருந்தும்,தினமும் மருத்துவர் வீட்டிக்கு வந்து சிகிச்சை அளித்து சென்றும் உடல் நிலை தேறுவதற்கு பதிலாக மோசமாகி கொண்டே சென்றது.

தாத்தா பல ஜோதிடர்களை அழைத்து வந்து அம்மா ஜாதகத்தை பார்த்து அவர்கள் எதிர்காலத்தை பற்றி கேட்டு வந்தார்கள்.எல்லா ஜாதககாரர்களும் ஒரே மாதிரியாக பதிலையே கூறினார்கள்.அம்மாவிற்கு 40 வயதில் உயிருக்கே ஆபத்தான ஒரு பெரிய கண்டம் வர இருக்கிறது.அதில் தப்பித்துகொண்டால் அம்மாவிற்கு ஆயுசு மிகவும் கெட்டி,அதன் பிறகு வெகு நாட்கள் நல்ல உடல் நிலையுடன் இருப்பார்கள்.அந்த கண்டத்திலிருந்து தப்பிக்க சில பரிகாரங்களை செய்ய வேண்டும் என விவரங்களையும் தாத்தா,பாட்டியிடம் கூறிச் சென்றார்கள்.அவர்கள் சொன்னதை அப்படியே தாத்தாவும்,பாட்டியும் பரிகாரம் அனைத்தையும் செய்து வந்தனர்.

ஒரு நான் தாத்தாவின் நண்பர் ஒருவர் மிகவும்

பணக்காரர் அவர்.தாத்தாவை பார்ப்பதற்காக நெய்வேலியிலிருந்து வந்திருந்தார்.அவருக்கு ஜாதகம் பார்த்து சொல்வதை ஒரு பொழுதுபோக்காக வைத்திருந்தார்.தாத்தாவும்,பாட்டியும் ஒருநாள் மாலை ஸ்நாக் சாப்பிட்டு விட்டு அவருடன் உட்கார்ந்து ஹாலில் எதேச்சியாக பேசிகொண்டிருந்தபோது,நாங்களும் அம்மாவும் அங்கு உட்கார்ந்திருந்தோம்.அப்போது அம்மாவை பற்றி பேச்சு வந்தபோது ,அவரிடம் அம்மாவின் ஜாதகததை பார்த்து சொல்லும்படி கேட்கவே,அவரும் அம்மாவின் ஜாகத்தை கேட்டு வாங்கி எதோ பேப்பரில் எழுத்தி கணக்கு போட்டுகொண்டிருந்தார்.அம்மாவும் அதே ஹாலில் உட்கார்துகொண்டு பரீட்சை தாளை மும்முரமாக திருத்தி கொண்டிருந்தார்கள்.

தாத்தாவும்,பாட்டியும் அந்த நெய்வேலி தாத்தா என்ன சொல்லபோகிறார் என்ற ஆவலுடன் அவர் அருகில் உட்கார்ந்து அவரையே ஆர்வமுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.சிறிது நேரத்திக்கு பிறகு அம்மா எதற்கோ எழுந்து

உள்ளே சென்றது அதற்காகவே காத்திருந்தாற்போல அந்த நெய்வேலி தாத்தா அம்மா காதில் விழாத வண்ணம் மெதுவான குரலில் "பிள்ளைவாள்,சொல்கிறேன் என்று தப்பாக நினைக்காதீர்கள்.சொல்லாக்கூடாது என்று என் மனம் சொன்னாலும் நீங்கள் என் உற்ற நண்பர் என்பதால் நான் சில முக்கிய விஷயத்தை உங்களிடம் சொல்லாமலிருக்க மனம் வரவில்லைஎன்றார்

"பரவாயில்லை,எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்லுங்கள். எங்களுக்கு அதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை."என்றார்கள் பாட்டி கமலா.

"உங்கள் பெண்ணுக்கு ஆயுசு ரொம்ப கம்மியாக தெரிகிறது. இந்த ஜாதகத்துபடி உங்கள் பேரன் சானுக்கு 14 வயது ஆகும் சமயம் உங்கள் மகளுக்கு ஒரு பெரிய கண்டம் வர இருக்கிறது.அதில் தப்பி விட்டால் இன்னும் கொஞ்சம் நாட்களுக்கு ஆயுசு நீளும்.உங்கள் பேரன் ஷானின் ஜாதகம்தான் உங்கள் மகளுக்கு

யமனாக வரப்போகிறது.எதற்கும் ஜாக்கிரதையாக இருங்கள்.எதையுமே உங்கள் பெண் விஷயத்தில் அலட்சியமாக இருந்து விடாதீர்கள்”என எச்சரிப்பதுபோல கூறினார்.

அவர் குரலில் ரொம்ப சீரியசாக இருப்பதை என்னால் உணரமுடிந்தது. நெய்வேலி தாத்தா இவ்வாறு சொல்லியதற்கு பிறகு பாட்டி கமலாவுக்கு அண்ணன் ஷானின் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.இது நடந்த ஒருசில நாட்களில் ஒருநாள் விடுமுறையில் மாலையில் அனைவரும் காபி பலகாரம் சாப்பிட்டுவிட்டு ஹாலில் உட்கார்ந்து பேசிகொண்டிருந்தபோது திடீரென அம்மா அலற ஆரம்பித்து விட்டார்கள்..

“ஐயோ,அப்பா என்னை என்னவோ செய்கிறதே|என் தலை எல்லாம் மரத்துவிட்டது போல இருக்கிறதே.நெஞ்சு படபடவென அடிக்கிறதே “என கூறி துடித்தார்கள் தலையை பிடித்துக் கொண்டு.பிறகு சற்றே மயங்கிய நிலையில் கண்கள் எல்லாம் மேலே சொருகி இழுத்துக்கொண்டிருந்ததை பார்த்ததும்

அனைவரும் பயந்து அலறி அடித்துக் கூண்டு அருகிலுள்ள மருத்துவர் ஒருவரை தாத்தா தன்னுடன் அழைத்து வந்து காட்டியதில்,அவர் அம்மாவை பரிசோதனை செய்துவிட்டு ,எதோ ஒரு இஞ்சக்ஷனை போட்டுவிட்டு பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என கூறி விட்டு சென்றுவிட்டார்.எல்லாவற்றிர்கும் அம்மாவின் மனநிலைதான் காரணம் .எனவே அம்மாவை அமைதியான சூழ்நிலையில் வைக்கும்படி கூறிவிட்டும் சென்றுவிட்டார் அந்த மருத்துவர்.

மருத்துவர் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் அம்மா வழக்கம் போல எழுந்து உட்கார்ந்துகொண்டு கலகலப்பாக சிரித்து பேசிய பிறகுதான் வீட்டிலுள்ள அனைவருக்கும் அப்பாடா என்ற பெருமூச்ச ஏற்பட்டது.

எனக்கு பயம் ஏற்பட்டுவிட்டது.”பாட்டி அம்மா சீக்கிரம் செத்துவிடுவார்களா?”என்று கேட்டேன்.

“இல்லேடா கண்ணு”நீ தினமும் சாமியை வேண்டிகொள், உன் அம்மா சீக்கிரம் குணமாக

வேண்டும் என்று"என்றார்கள்.

அன்றிலிருந்து தினமும் சாயங்காலம் சாமிக்கு
பாட்டி விளக்கை ஏற்றியதும்
"கடவுளே,அம்மாவை எப்படியாவது குணபடுத்தி
விடு"என வேண்டி கொண்டு வந்தேன்.

அன்று அம்மா கிட்டத்தட்ட இறந்து
விடபோகிறார்கள் என்ற நிலை ஏற்பட்டு
எல்லோரையும் கலக்கிய பிறகு தாத்தாவிற்கு
பயம் வந்து விட்டது.உடனடியாக
பெரியம்மாவிற்கு இது குறித்து விவரத்தை எழுதி
போட்டு சிதம்பரத்திற்கு வந்து போகுமாறு
கேட்டு கொண்டார்கள்.

தாத்தாவின் கடிதத்தை படித்துவிட்டு
உடனடியாக புறப்பட்டு வந்து விட்டார்கள்
பெரியம்மா.இரவு எட்டு மணி அளவில்
பெரியம்மா சேது வந்திறங்கினார்கள்.பெரியம்மா
வந்த ஒருசில மணி நேரத்திற்க்கெல்லாம்
எல்லோரையும் ஆச்சரியத்திற்கும்,அதிர்ச்சிக்கும்
உள்ளாக்கும்படி மாமா ஜகந்நாதன்

வந்திறங்கினார் .அவரது வருகை அனைவரின் உள்ளத்தையும் கலக்கி கொண்டிருந்தது.என்பதை என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது.

வீட்டிலுள்ள வேலை ஆட்களுக்கும்,பாட்டிக்கு மட்டுமே மாமாவின் வரவு மகிழ்ச்சியை அளித்தது என்றே சொல்லுவேன்.மாமாவை அனைவரும் சிறந்த முறையில் வரவேற்று உபசரித்தனர்.

அன்றிரவு சாப்பாட்டிற்கு பிறகு ஹாலில் உட்கார்ந்து கொண்டு தாத்தா,பாட்டி,அம்மா பெரியம்மா மற்றும் மாமா பேசிக்கொண்டிருந்தார்கள்.நாங்கள் நால்வரும் பக்கத்து அறையில் உட்கார்ந்து கொண்டு படித்திக் கொண்டே ஹாலில் நடக்கும் சம்பாஷணைகளை கேட்டுக்கொண்டிருண்டோம். மாமாதான் முதலில் பேச்சை துவங்கினார்கள்.

எவ்வளவு நாட்கள் நீ குழந்தைகளுடன் இந்த வீட்டில் தங்க போகிறாய் மங்கை”என்ற கேள்வியை எடுத்த எடுப்பிலே கேட்டார்கள்

மாமா.

“அடுத்த வருடம் இவர்களை அவளுக்காக எழுதிவைத்த பக்கத்து வீட்டில் தனி குடித்தனம் வைத்து விடலாம் என இருக்கிறோம்,அதற்குள் இவள் உடலும் சற்று தேறி விட்டால் நன்றாக இருக்கும்”என தாத்தா குறுக்கிட்டு பதிலளித்தார்கள்.

“நான் மங்கையை கேட்டால் அவள் அவள் பதில் சொல்லாமல் நீங்கள் என்ன இவளுக்கு வாயா பதில் சொல்கிறீர்கள்.அப்பா,இது என் பேரிலுள்ள வீடு.மங்கை குழந்தைகளுடன் இங்கு தங்கினால், என் குடும்பம் இனி இந்த வீட்டிற்கு வருவது என்பது நடக்காத காரியம்.மங்கை குழந்தைகளுடன் இந்த வீட்டில் இருப்பதில் எனக்கும்,என் மனைவி கமலிக்கும் இஷ்டமில்லை.அவளுக்கென்று கணவன்,மாமியார் வீடு என இருக்கும் போது அவள் இங்கிருப்பது எனக்கு சரியாக படவில்லை.நீங்கள் எல்லாம் தவறான முடிவு எடுத்திருக்கிறீர்கள்.என்னிடம் கூட ஒரு

வார்த்தை இதுபற்றி கலந்து ஆரோசிக்கவில்லை.நான் நினைத்தால் இன்றே இவளையும்,இவள் குழந்தைகளையும் வெளியே அனுப்பிவிடலாம்.நானாக அவர்களை வெளியே போ என சொல்வதற்கு முன் நீங்களாக ஒரு நல்ல முடிவு எடுத்து விடுங்கள்.உன்னையும் எச்சரிக்கிறேன் மங்கை.நீ உன் புருஷனுடன் சென்னைக்கு சென்று விடு.கூழ் குடித்தாலும் குடிசையில் இருந்தாலும் நீயும் குழந்தைகளும் அவருடன் இருப்பதுதான் ஊருக்கு மரியாதையாக இருக்கும்.குழந்தைகளுக்கு அப்பா அவசியம் தேவை .எனவே வருகிற வருடம் நீ சென்னைக்கு மாற்றலாகி சென்று விடு.இவர்கள் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டு இங்கேயே தங்கிவிடாதே.உனக்குத்தான் மரியாதை குறைவு"என திட்டவட்டமான குரலில் கூறினார்கள் மாமா.

யாரும் எதுவுமே பேசவில்லை.ஹாலில் நிசப்தம் நிலவியது.மாமா படுப்பதற்கு முன் வெளியே சென்று தன் நண்பர் ஒருவரை பார்த்துவிட்டு வருவதாக சென்று விட்டார்கள்.

“அப்பா, அவன் கிடக்கிறான்.அவன் பேச்சை ஒரு பெரியதான் நினைக்காமல் நாம் செய்வதை தொடர்ந்து செய்வோம்”என்றார்கள் பெரியம்மா.

“அது,என்ன அப்படி சொல்லிவிட்டாய் சேது,என்ன இருந்தாலும் இந்த சொத்துக்கு அவனும்தானே வாரிசு,அவனை பகைத்துக் கொண்டு வயதான காலத்தில் நாங்கள் எப்படி காலம் தள்ளுவது”என பாட்டி பீடிகை போட்டார்கள்.

அம்மாவும்,தாத்தாவும் ஏதும் பேசவில்லை.என மனம் படபடவென அடித்துகொண்டது.எங்கள் நால்வருக்கும் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை.ஆறு மாதகாலம் நிம்மதியாக சந்தோஷமாக வாழ்ந்த நமக்கு மறுபடியும் பிரச்சனை வந்து விட்டதே.அப்பாவால் பிரச்சனை என அதை தீர்க்க சென்னையிலிருந்து சிதம்பரம் வந்தால் இங்கு மாமாவால் பிரச்சனை ஏற்பட்டுவிட்டதே.கொடுமை கொடுமை என்று கோவிலுக்கு சென்றால் அங்கு ஒரு கொடுமை

தலை விரித்தாடியதாம் என்பது போல் அல்லவா இருக்கிறது எங்கள் வாழ்க்கை.என்று மனதிற்குள் நொந்துகொண்டேன்.

பெரியம்மா மேலும் விடாமல் தொடர்ந்தார்கள்."மங்கையின் உடல் நிலை தற்சமயம் மோசமாக இருப்பதால் இன்னும் சில மாதங்களுக்கு இதுபற்றி யோசிக்க தேவை இல்லை அப்பா.தஞ்சாவூர் பெரிய ஆஸ்பத்திரியில் எனக்கு தெரிந்த ,தேவனுக்கு நெருங்கிய உறவினர் ஒருவர் மிக பெயர் போன மருத்துவராக இருக்கிறார்.அங்கு இவளை சேர்த்துவிட்டு ஒரு மாதம் சிகிச்சை கொடுக்கலாம் .அவள் அங்கு தேறிவிட்டால் மறுபடியும் சென்னைக்கே மாற்ற முயற்சிக்கிறேன்.அதுவரை பொறுமையாக ஜகந்நாதன் சொல்வதை காதில் போட்டு கொள்ளாமல் இருங்கள்.மங்கையையும் குழந்தைகளையும் என்ன செய்ய வேண்டும் என்ற திட்டத்தை என்னிடத்தில் விட்டு விட்டு நிம்மதியாக இருங்கள்"என கூறிவிட்டு மீதியை மறுநாள் பேசி கொள்ளலாம் என எழுந்து

தூங்குவதற்கு சென்று விட்டார்கள் பெரியம்மா.

தாத்தாவும்,பாட்டியும்,அம்மாவும் அதன் பிறகு இதை பற்றி எதுவும் பேசவில்லை.ஒரு சில வாரங்கள் கழித்து பெரியம்மாவிடமிருந்து தாத்தாவிற்கு ஓர் கடிதம் வந்தது.அம்மாவை தஞ்சாவூருக்கு ஆஸ்பத்திரியில் சேர்க்க ஏற்பாடுகள் அனைத்தும் செய்து விட்டதாகவும் அம்மாவை ஒரு மாதம் மருத்துவத்தை முன்னிட்டு விடுமுறை போட்டுவிட்டு குறிப்பிட்ட தேதியில் அங்கு சென்று சேர்ந்துவிடும்படியும் ,அம்மா கூட தங்கி இருக்க ஏதாவது ஒரு வேலை ஆளை அனுப்பிவக்கும்படியும் விவரமாக கடிதம் எழுதி இருந்தார்கள் பெரியம்மா.

பெரியம்மாவின் கடிதத்தை படித்து முடித்த அம்மா வெகு நாட்களுக்கு பிறகு முதன் முறையாக அப்பாவிற்கு ஒரு கடிதம் எழுதி என்னிடம் கொடுத்து தபால் பெட்டியில் போட்டு வரச் சொன்னார்கள்.அப்பாவிற்கு அம்மா என்ன எழுதியிருப்பார்கள் என்ற ஆர்வம் என்னுள் எழுந்தது.ஆனால் முடிய கடிதம்

என்பதால் என்னால் படிக்க முடியவில்லை கடிதத்தை தபால் பெட்டியில் போட்டுவிட்டு வந்ததும் அம்மா என்னிடம் இது பற்றி யாரிடமும் கூற வேண்டாம் என கேட்டு கொண்டார்கள்.எனவே நான் இதை பற்றி யாரிடமும் கூறவில்லை.என் அண்ணன் தம்பியிடம் கூட சொல்லவில்லலை.

பள்ளிக்கூடத்தில் அம்மா ஒரு மாதம் மெடிகல் லீவ் கேட்டு அரசாங்கத்திற்கு எழுதி அனுமதி கேட்டிருந்த விவரத்தை பெரியம்மாவிற்கு கடிதம் முலம் தெரிவிக்க,பெரியம்மா உடனடியாக தன அலுவக கிளேர்கிடம் சொல்லி விரைவில் அனுமதி கடிதத்தை அம்மாவின் பள்ளிகூடத்திற்கு அனுப்பிவைத்தார்கள்.

தஞ்சாவூருக்கு செல்ல ஒரு வேலை ஆளையும் தயார்செய்து விட்டார்கள் தாத்தா.அம்மாவிடம் அவர்கள் எவ்வளவு நாட்கள் அங்கு இருப்பார்கள் என கேட்டேன்.அம்மாவிற்கு விவரம் சரியாக தெரியாததால் தஞ்சாவூர் சென்றால்தான் முழு விஷயமும் தெரியும் என

கூறிவிட்டார்கள்.

‘அம்மா நீங்க வரும்வரை நான் தனியாகத்தான் ஸ்கூலுக்கு போக வேண்டுமா?”என்று கேட்டேன்.

தஞ்சாவூருக்கு கிளம்பும் முன் அம்மா என்னை மறுபடியும் பாட்டு கிளாசுக்கு சேர்க்க முயற்சித்த போது தாத்தா வீட்டு எதிர் வீட்டிலேயே ஒருவர் பாட்டு சொல்லி தருவதாக கூறியதால் அம்மா அவரிடம் என்னை பாட்டு கற்று கொள்ள சொல்லி ,தினமும் ஒரு மணிநேரம் ,அந்த பாட்டு டீச்சர் எங்கள் வீட்டிற்க்கே வந்து எனக்கு பாட்டு கற்று கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.அந்த பாட்டு டீச்சர் சென்னை பாட்டு டீச்சர் போல மிகவும் பிரசித்தி பெற்றவர் அல்ல.வெகு நாட்களுக்கு முன் அவரது கணவர் இறந்து விட்டதால் இரு பெண் குழந்தைகளுடன் தன்னுடைய தினப்படி பிழைப்பிற்கு பாட்டு சொல்லி கொடுத்து சம்பாதித்து வந்தார்.அம்மா ஏற்பாடு செய்தபடி நான் தினமும் ஸ்கூல் விட்டு வந்த சிறிது நேரத்திற்க்கெல்லாம் பாட்டு டீச்சர் வந்து

விடுவதால், ஒருமணி நேரம் அவரிடம் பாட்டு பயிற்சியை பெற்று வந்தேன் .

அம்மா தஞ்சாவூருக்கு செல்லும் நாளும் வந்தது.அம்மா தஞ்சாவூருக்கு கிளம்பும் முதல் நாள் இரவே பெரியம்மா வந்து விட்டார்கள்.மறுநாள் மதியம் சாப்பாட்டிற்கு பிறகு கிளம்பி தஞ்சாவூர் போவதாக கூறினார்கள் பெரியம்மா.அம்மாவும் கூட செல்லும் அந்த வேலை ஆளும் இரவே எல்லாம் பாக் பண்ணி தயாராகிவிட்டார்கள்.மறுநாள் மதிய உணவை சீக்கிரமாக சாப்பிட்டுவிட்டு இரவு சாப்பாட்டிற்கு கொஞ்சம் பாக் பண்ணி எடுத்துக் கொண்டு பன்னிரண்டு மணிக்கெல்லாம் வீட்டை விட்டு பெரியம்மாவுடன் அவர்களது காரில் அம்மா சென்று விட்டார்கள்.

அம்மா சென்றது எங்க நாலு பேருக்கும் எதையோ இழந்த மாதிரி இருந்தது.வீடு வெறிச்சென்று தெரிந்தது.இனிமேல் நான் பள்ளி கூடத்திற்கு நடந்தே மற்ற சிநேகிதிகளுடன்

செல்லலாம் .அவர்களுடன் உட்கார்ந்து மதிய சாப்பாட்டை சாப்பிடலாம்.குறைந்தது இரண்டு முன்று வாரங்களாவது நான் இந்த வாழ்க்கையை வாழலாம் என கற்பனை உலகில் மிதந்து கொண்டிருந்தேன்.மறுபடியும் என் மனதில் அம்மா கடிதத்தில் அப்பாவிற்கு என்ன எழுதியிருப்பார்கள் என யூகிக்க நினைத்தேன்.ஆனால் என்னால் எதையுமே யூகிக்க முடியவில்லை.

அம்மா தஞ்சாவூர் சென்று ஒரு வாரம் ஓடியது.அம்மாவிடமிருந்து தாத்தாவிற்கு ஒரு கடிதம் வந்தது.அதில் அம்மாவை ஸ்பெஷல் வார்டில் போட்டிருக்கிறார்கள் என்றும் தினமும் உடற் பயிற்சியும் சிகிச்சையும் அளித்துவருகிறார்கள் என்றும்.அம்மா இருக்கும் ஸ்பெஷல் வார்டில் ஒரு ரூமும் ஒரு சமையல் அறையும் உள்ளது என்றும்,தினமும் வேலை ஆளும் அம்மாவும் சமைத்தே சாப்பிடுவதாக எழுதி இருந்தார்கள்.மேலும் எல்லோரையும் பிரிந்து அங்கு தனியாக இருப்பது மிகவும் போர் அடிக்கிறது என்றும் எழுதி இருந்தார்கள்.

ஏனோ தெரியவில்லை.தாத்தாவும்,பாட்டியும்
தஞ்சாவூர் சென்று அம்மாவை
பார்க்கவில்லை.நான் தனியாக ஜட்காவில்
ஸ்கூலுக்கு சென்றேன்.நான் நடந்து போக
கூடாது என தாத்தாவும் பாட்டியும்
உத்தரவிட்டபடியால் வேறு வழி இல்லாமல்
ஜட்காவில் சென்றேன்.குதிரை வண்டியில்
செல்வதென்றால் குஷியாக இருந்த நான்
இப்போது அதில் தனியாக செல்வதை
வெறுத்தேன்.நான் எவ்வளவோ கேட்டும் தாத்தா
ஜட்காவில் நான் தனியாகத்தான் போக
வேண்டும் என்னுடன் எந்த சிநேகிதியையும்
அழைத்துசெல்ல கூடாது என கண்டிப்பாக
கூறிவிட்டபடியால் நான் தினமும் தனியாக
ஜட்காவில் சென்று தனியாக வீடு திரும்பும்
நிலை ஏற்பட்டது

அதேபோல் மதியம் சாப்பாடும் ,அம்மா
தஞ்சாவூருக்கு சென்றபின்,சாப்பாடு
கொண்டுவரும் வேலை ஆள் சாப்பாட்டு
காரியரை தலைமை ஆசிரியை ரூமில்
வைத்துவிட்டு சென்று விடுவார்,நான் தினமும்

தலைமை ஆசிரியருடந்தான் உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என எங்கள் பள்ளிகூட தலைமை ஆசிரியர் கூறிவிட்டார்கள்.ஏன் என்றால் பழைய தலைமை ஆசிரியை மாறுதல் ஆகி ,அம்மாவுடன் கூட படித்த சினேகிதி திருமதி யசோதா என்பவர் தான் அப்போது தலைமை ஆசிரியையாக இருந்தார்.தன சிநேகிதி உடல்நல குறைவால் ஆஸ்பத்திரியில் சேர்ந்திருப்பதால் அவருடைய மகளை பார்த்துகொள்வது தன கடமை என்று எண்ணிய திருமதி யசோதா, தலைமை ஆசிரிர்யை என்னை அவர்களுடன்தான் தினமும் சாப்பிடவேண்டும் என ஆர்டர் போட்டதை என்னால் மீறமுடியவில்லை.

என் மனம் ஏங்கியது.நான் மட்டும் ஏன் சிறை கைதி மாதிரி எப்பவும் தனியாகவே ஸ்கூலுக்கு சென்று தனியாகவே சாப்பிட வேண்டும்.தனியாகவும் விளையாட வேண்டும் .வீட்டிற்கு வர யாருக்கும் அனுமதி கிடையாது.சென்னையில் எங்கள் இஷ்டத்திற்கு துள்ளி ஓடியாடி விளையாண்ட எங்களுக்கு

இங்கு கட்டிபோட்டார்போல ஓர் உணர்வு ஏற்பட்டது.சென்னையில் என் சிநேகிதிகளுடன் கழித்ததை இன்ப நாட்களை நினைத்து ஏங்கலானேன்.அது போல நாட்கள் இனி எப்போது வருமோ?வராதோ?என மனம் எண்ணி நொந்தது.என்ன இருந்தாலும் அப்பா,அம்மாவுடன் நமக்கென்று தனியான வீட்டில் இருந்தால் நம் விருப்பப்படி இருக்கலாம்.இப்படி இன்னொருவர் வீட்டில் அடிமை போல காலம் தள்ளுவது சற்றே சிரமமாக தோன்றியது.ஆரம்பத்தில் தோன்றிய மகிழ்ச்சியும்,பெருமையும் இப்போது முடுபனி போல சிறிது சிறிதாக மறைந்ததெளிவுற்றது போல தோன்றியது..

அம்மா எங்கோ மருத்துவ மனையில் இருக்கிறார்கள்.அப்பா சென்னையில் எங்கோ இருக்கிறார்கள். நாங்கள் நால்வரும் சிதம்பரத்திலே தாத்தா பாட்டி வீட்டில் வாழ்கிறோம்.என்ன வாழ்க்கை இது.மற்ற குழந்தைகள் குடிசையில் இருந்தாலும்,சிறிய வீட்டிலிருந்தாலும் தன பெற்றோரகளுடன்

எவ்வளவு ஆனந்தமாக வாழ்கிறார்கள். எங்கள் நால்வருக்கும் நன்றாக படித்து பட்டம் பெற்று நல்ல உத்யோகத்திலிருக்கும் பெற்றோர்கள் இருந்தும்,இருதரப்பிலும் உள்ள தாத்தா பாட்டிகளும் நல்ல பணம் படைத்தவர்களாக இருந்தும் ஏன் இப்படி அனாதைகள் போல எடுப்பார் கைப்பிள்ளைகளாக வாழவேண்டும் என்ற தலைவிதி.அம்மா எப்போது குணமாவார்கள், அப்பா எப்போது திருந்துவார்கள்,நாம் எல்லோரும் ஒரு குடும்பமாக சந்தோஷமாக தனியாக வாழும் சந்தர்ப்பம் இனி கிடைக்குமா?என என் மனதிற்குள் சதா கேள்விகள் எழுந்து நெஞ்சில் தவிர்க்க முடியாத எதோ ஒரு பயம் கவ்வி இழுத்து கொண்டிருந்தது.

ஒருநாள் நான் ஸ்கூலிற்கு ஜட்காவில் சென்று கொண்டிருக்கையில் திரையை விலக்கி வெளியே வேடிக்கை பார்த்து கொண்டே சென்றேன். அப்போது என் நெருங்கிய சினேகிதிகள் நடந்து வந்துகொண்டிருந்தன்ர்.அவர்களுடன் நான்

ஜட்காவில் உட்கார்ந்து கொண்டே உரக்க பேசி கொண்டு வந்தேன்.அவர்கள் பின்னால் நடந்து கொண்டும் ஓடி கொண்டும் வண்டியை பிடித்துகொண்டும் பேசி கொண்டே வந்தனர் ஜட்காவில் உட்கார்ந்துகொண்டே பேசிக்கொண்டு வர எனக்கு என்னோவோ போல இருந்தது.ஜட்கா ஓட்டுபவரிடம் வண்டியை உடனடியாக நிறுத்தச் சொன்னேன்.நான் சொன்னதும் உடனே அவர் நிறுத்திவிட்டார்.நான் ஜட்காவை ஓட்டுபவரிடம் “நான் என் சிநேகிதிகளை ஜட்கா வண்டியில் ஏற்றி கொள்ள அனுமதி கிடையாது என்றுதானே பாட்டி தாத்தா கூறினார்கள் .நான் இறங்கி அவர்களுடன் நடந்து வருகிறேன் நீங்கள் ஸ்கூல் வரை வந்து விட்டு திரும்பி போய்விடுங்கள்.தயவு செய்து இந்த விஷயத்தை தாத்தாவிடம் கூறவேண்டாம்.”என்று மிகவும் கெஞ்சி கேட்டுக்கொண்டேன்.அவரும என் நிலையை புரிந்தவராக “சரி பாப்பா”நீ உன் சிநேகிதிகளுடன் பேசிக்கொண்டு வா நான் மெதுவா வண்டியை ஓட்டுகிறேன்,கால்

வலித்தால் வண்டியில் ஏறி கொள்”என்றார்.

அன்று முதல் காலையிலும் சாயங்கலமும் நான் ஜட்காவின் பின்னால் என் சிநேகிதிகளுடன் பேசிக்கொண்டே நடந்து செல்வேன். சாயங்காலம் மட்டும் தெரு முனை வரை நடந்து வந்துவிட்டு பிறகு ஜட்காவில் ஏறி வீட்டிற்கு வந்து விடுவேன்.அதே போல காலையில் ஜட்காவில் ஏறி வீடு தெரு முனையில் என் சிநேகிதிகளை காத்திருக்க சொல்லிவிட்டு,ஜட்காவிளிருந்து இறங்கி அவர்களுடன் ஸ்கூலுக்கு நடந்தே சென்று வந்தேன்.வண்டி ஓடுபவரும் இது பற்றி வீட்டில் யாரிடமும் கூறாமல் ரகசியமாக வைத்திருந்தார்.

ஒருநாள் மாலையில் ஸ்கூல் முடிந்து சிநேகிதிகளுடன் நான் தெருவில் பேசிக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்ததை பார்த்த தாத்தாவின் நெருங்கிய நண்பர் என்னிடம் “ஏன் பாப்பா நடந்து போகிறாய் வண்டி என்னவாயிற்று”என்றார்.

அவர் எங்கள் பின்னால் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.நான் ஒன்றும் சொல்லாமல் திரு திருவென முழித்தேன்.

“சைக்கிளில் ஏறி உட்கார் நான் வீட்டிற்கு தாத்தாவை பார்க்கத்தான் போகிறேன் உன்னை அப்படியே கொண்டு போய் விட்டுவிடுகிறேன்”என்றதும் பயத்தில் “இல்லை வேண்டாம்”இதோ ஜட்கா வண்டி முன்னால் போகிறது.அதிலேயே வந்து விடுகிறேன்.கொஞ்சம் நேரம் சிநேகிதிகளுடன் பேசுவதற்காக இறங்கினேன் அவ்வளவுதான்”என கூறி கொண்டே சிநேகிதிகளிடமிருந்து விடை பெற்று ம்கொண்டு ஜட்காவில் ஏறி கொடு வீட்டிற்கு வந்துவிட்டேன்.

வரும் வழி எல்லாம் பயம் என் வயிற்றை பிசைந்தது.எங்கு இந்த மனிதர் தாத்தாவிடம் கூறிவிட போகிறாரோ இதைப்பற்றி என்று.கடவுளே என ப்ரார்த்தித்துகொண்டேன்.இது பற்றி தாத்தாவிடம் இவர் ஏதும் சொல்லிவிட கூடாது

என்று நான் வேண்டியது கடவுளின் காதுகளில் விழவில்லை போலிருக்கிறது வீட்டிற்குள் நுழைந்த தாத்தாவின் நண்பர் சிவம் முதலில் இந்த விஷயயத்தை கூறிவிட்டுத்தான் பிறகு தான் வந்த விஷயத்தை பேசியிருக்கிறார்.

அவர் சென்றவுடன் தாத்தா என்னை கூப்பிட்டு விஷயத்தை கேட்டதில்,பயத்தில் எல்லாவற்றையும் உளறிவிட்டேன்.நான் உளறியதில் நான் மட்டும் வம்பில் மாட்டி கொள்ளவில்லை ,ஜட்கா ஓட்டுபவரையும் வம்பில் மாட்டிவிட்டேன்.என் மனம் வேதனை அடைந்தது.தாத்தா என் கையை திருப்ப சொல்லி ஸ்கேலால் இரண்டு அடி கையில் கொடுத்துவிட்டு,வண்டி ஓட்டுபவரை வரவழைத்தது நன்றாக திட்டு விட்டார்கள் பொறுப்பில்லாத மனிதர் என்று.

அவரை பார்க்க என் மனம் மிகவும் கஷ்டப்பட்டது.மறுநாள் ஸ்கூலுக்கு செல்கையில் அவரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டேன்.பாவம் வண்டி ஓட்டுபவர் என்னை

எதுவும் சொல்லவில்லை.அன்று விஷயம் முழுதும் என் சினேகிதிகளிடம் ஜட்காவில் உட்கார்ந்துகொண்டே ,நடந்து வந்துகொண்டிருந்த அவர்களிடம் சொல்லி முடித்தேன்.அன்றிலிருந்து அம்மா திரும்பி வரும்வரை நான் ஜட்காவில் தனியாக சென்று வந்தேன்.

இது நடந்த சில தினத்தில் அண்ணன் ஷான்,மற்றும் தம்பி பாட் பள்ளிகூடத்திலிருந்து ஆசரியர் ஒருவர் தாத்தாவை பார்க்க சாயங்காலம் ஒருநாள் வந்திருந்தார்.அவர் தாத்தாவிடம் “பிள்ளைவாள்,உங்கள் பேரன்கள் இருவரும் எந்த ஹோம்வோர்க்கும் செய்து கொடுப்பதில்லை.எல்லா பரீட்ச்சையிலும் சீரோ வாங்கி இருக்கிறார்கள்.கால் பரீட்சையில் மாத பரீட்சையில் எல்லாவற்றிலும் ஆங்கிலத்தை தவிர மற்ற பாடங்களில் சீரோ தான் வாங்கி இருக்கிறார்கள்.ப்ரோக்ரேஸ் ரிப்போர்ட் கொடுத்தால் அதில் கை எழுத்து வாங்கி வராமல் டிமிக்கி கொடுத்து கொண்டிருக்கிறார்கள்.இப்படியே போனால்

அவர்களை இந்த வருடம் ரீடைன் பண்ண வேண்டி வரும்.எனவேதான் இதை நேரில் உங்களிடம் சொல்லிவிட்டு வர தலைமை ஆசிரியர் என்னை இன்றைக்கு இங்கு அனுப்பி வைத்தார்".என்று கூறியதை கேட்ட தாத்தா தோட்டத்தில் விளையாடி கொண்டிருந்த இருவரையும் அழைத்துவருமாறு என்னிடம் கூறினார்கள்.

நான் தோட்டத்திற்கு ஓடி சென்று அண்ணன் ஷானையும்,தம்பி பாட்டையும் ,விஷயத்தை கூறி அழைத்ததும் அவர்கள் இருவர் முகத்திலும் பயம் கலந்த பீதி ஏற்பட்டது.பயந்து கொண்டே இரு கைகளையும் பிசைந்துகொண்டு முழி முழி என முழித்து கொண்டே தாத்தாவின் முன் பவ்யமாக கைகட்டி நின்றிருந்தார்கள்.

"உங்களை பற்றி பள்ளிகூடத்திலிருந்து புகார் வந்திருக்கிறது.நீங்க ரெண்டு பெரும் ஹோம்வொர்க் செய்வதில்லை,எல்லா பரீட்சையிலும் வெறும் வெள்ளை பேப்பரில் உங்கள் பெயரை மட்டும் எழுதி கொடுத்துவிட்டு

வந்து இருகிறீர்களாமே ஏன்?"என்று மிரட்டும் தோரணையில் கேட்டார்கள் தாத்தா.

"எல்லா பாடங்களும் தம்ழில் எழுதி இருக்கிறது தாத்தா.எங்க இரண்டு பேருக்கும் தமிழ் எழுத படிக்க தெரியாது.அதனால் பரீட்சையில் கேள்வி தாளில் உள்ள அனைத்தும் தமிழில் இருந்ததால் எங்களால் படிக்க முடியவில்லை அதனால் தான் எங்கள் பேரை மட்டும் எழுதி கொடுத்துவிட்டு வந்து விட்டோம்"என்றான் அண்ணன்.

இதை கேட்டதும் தாத்தாவிற்கு அதிர்ச்சியாகிவிட்டது."அப்படி என்றால் சென்னையில் என்ன படித்தீர்கள்?'என தாத்தா கோபமாக கேட்டதற்கு,

"நாங்க படித்த காண்வென்டில் தமிழ் மொழி பாடம் கிடையாது தாத்தா,அதனால் நாங்க ஹிந்தி பாடம்தான் எடுத்து இதுவரை படித்து வந்தோம் என்றான்"அண்ணன் ஷான்.

"நீ எப்படி தமிழ் கற்று கொண்டாய்?"என்று

என்னை பார்த்து தாத்தா கேட்டதும்

“நான் படித்த பள்ளிகூடத்தில் தமிழ் பாடம் உண்டு தாத்தா.இவங்க ஸ்கூலில் அது கிடையாது”என்று பதிலளித்தேன்.

“இவ்வளவு நாட்கள் ஆகியும் ஆறுமாத காலமா இதை ஏண்டா நீங்க ரெண்டு பெரும் என்னிடம் சொல்லவே இல்லை”என்று தாத்தா கோபத்துடன் கேட்டார்கள்.

அண்ணன் ஷானும்,தம்பி பாட்டும் மெதுவாக”எங்களை யாரும் எதுவும் கேட்கவே இல்லை.நாங்க பயந்து கொண்டு பேசாமல் இருந்து விட்டோம்.நாங்களாகவே எதோ இப்பதான் தமிழ் ஆல்பா பேட்டுகளை சிறிது சிறிதாக கற்று வருகிறோம் தாத்தா”என்றார்கள்.

அண்ணன் மீதும்,தம்பி மீதும் கோபப்பட்டு பிரயோஜனம் இல்லை.எல்லாம் அவர்கள் தவறே என எண்ணி, வந்த ஆசிரியரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு

“நான் எப்படியாவது இவங்க இரண்டு பேருக்கும் தமிழ் டியூசன் வைத்து தேற்றி விடுகிறேன்.இந்த வருடம் இவர்களை பெயில் ஆக்காமல் பாஸ் செய்துவிடுங்கள்.அடுத்த வருடத்திற்கும் நான் தேற்றி விடுகிறேன்.இப்போது இவங்க இரண்டு போரையும் ஆங்கில வகுப்பில் போட முடியாதா?”என்று கேட்டார்கள் தாத்தா.

“தலைமை ஆசிரியரிடம் கூறி ஆங்கில வகுப்பிற்கு இவர்களை மாற்ற ஏற்பாடு செய்துவிடுகிறேன்.எங்கள் பள்ளிகூடத்திலுள்ள தமிழாசிரியரிடமே இவர்கள் இருவரும் தமிழ் கற்று கொள்ளட்டும் .ஸ்கூல் சாயங்காலம் முடிந்ததும் இவரிகளிருவரும் இரண்டு மணி நேரம் தங்கி தமிழ் டியுஷன் படிக்கட்டும் என்றார் அந்த வாத்தியார்.கவலை படாதீர்கள்,நாளைக்கு எதற்கும் நீங்கள ஸ்கூலுக்கு வந்து ஒரு விண்ணப்ப கடிதத்தம் எழுதிகொடுத்து விட்டு வந்து விடுங்கள் “என்று கூறிவிட்டு சென்று விட்டார்.

அன்றுதான் தாத்தாவிற்கு தெரியும் என் சகோதரர்கள் இருவருக்கும் தமிழ் எழுத,படிக்க தெரியாது என்று.அன்றிரவே தாத்தா கடைக்கு சென்று தமிழ் கற்பதற்கான புத்தகங்களை வாங்கி வந்து அவர்களிருவருக்கும் தினமும் வீட்டிலும் தமிழ் கற்பித்து வந்தார்கள்.ஸ்கூல் முடிந்ததும் இரண்டு மணி நேரம்ஸ்கூலில் தங்கி தமிழ் வாத்தியாரிடமும் தமிழ் பயின்று வந்தனர்.

ஆறே மாதத்தில் அண்ணன் ஷானும்,தம்பு பாட்டும் நன்றாக தமிழ் படிக்க எழுத கற்று கொண்டனர்

அத்யாயம்-முப்பத்தி ஒன்று

ஒருநாள் விடியற் காலையில் மாமா, மறுபடியும் திடுதிப்பென்று, எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் வந்து நின்றார்கள். எங்களை வெறுப்புடன் பார்த்து ,ஒரு நமட்டு சிரிப்பு ஒன்றே சிரித்து விட்டு ,எங்களை கடந்து உள்ளே சென்றார்கள்.

“வா,ஜகன்னாதா,சௌக்கியமா?என பாட்டி மாமாவை வரவேற்றபடி கேட்டார்கள்.

“சௌக்கியத்திர்க்கு என்ன குறை, நன்றாகத்தான்

இருக்கிறோம்”என அலட்சிய தோணியில் பதிலளித்தார்கள் மாமா.

“வா,வா,ஜெகன்னாதா,ஒரு கடிதம் போட்டுவிட்டு வந்திருத்தால், நீ தங்குவதற்கான ஏற்பாடுகளை முன்பே செய்திருப்பேனே”என்றார்கள் தாத்தா.

“ஏன் கடிதம் போடாமல் நான் இந்த வீட்டிற்கு வரக்கூடாதா? எனக்கு இங்கு உரிமை இல்லையா?”என சண்டை போடுவதுபோல பேசியதும் தாத்தா மேற்கொண்டு ஏதும் பேசாமலிருந்தார்கள்.

“பல் விளக்கிவிட்டு ,முகம் கைகால்களை கழுவிக்கொண்டு வா ஜெகன்னாதா,ப்ரேக்பாஸ்ட் தயாராக இருக்கிறது”என்றார்கள் பாட்டி.

“தேவையில்லை அம்மா,நான் வரும் வழியிலேயே சாப்பிட்டுவிட்டேன்.நான் இங்கு தங்குவதற்கு வரவில்லை.இரவு இரயிலில் திரும்ப சென்னைக்கு போக இருக்கிறேன்”என்றார்கள் மாமா.

“இரண்டு நாள் தங்கிவிட்டு போனால் என்ன ஜன்கன்னாதா.எதற்கு ராத்திரியே போகபோகிறாய்?”என கேட்டார்கள் பாட்டி.

“நான் தங்கும் மாதிரியா இந்த வீடு இருக்கிறது.இந்த சனியன்களை கொண்டு வந்து, என் வீட்டில் வைத்து கொண்டு இதுகளுடன் தங்கச் சொல்கிறீர்களே, வயதான காலத்தில் உங்கள் இருவருக்கும் முளை மங்கி விட்டதா? என்குழந்தைகள் இருக்க வேண்டிய இடத்தில்,எவனோ ஊதாரி பெத்துபோட்ட சனியன்களை அழைத்து வந்து வைத்திருக்கிறீர்கள்.நீங்களாவது அப்பாவுக்கு புத்தி சொல்லகூடாதாம்மா?”என்று வருத்தம் தோய்ந்த குரலில் பாட்டியிடம் சொன்னார்கள் மாமா.

நல்ல காலம் இதை கேட்க தாத்தா இங்கில்லை.அவர்கள் தோட்டத்திற்கு ஏதோ வேலை விஷயமாக சென்றிருந்தார்கள்.பாட்டியும்,மாமாவும்தான் ஹாலில் தனியாக இருந்தார்கள்,மாமா வருகை

கண்டதும் நாங்கள் நால்வரும் பயந்து கொண்டு, எங்கள் அறைக்குள் சென்று படிப்பது போல பாவனையில் உட்கார்ந்திருந்தோம்.எங்கள் அறைகும், உள்ளே ஹாலுக்கும் செல்லும் விராண்டாவிர்க்கும் நடுவில் ஜன்னல் இருந்ததால், எங்களால் ஹாலில் பேசுவதை நன்றாக கேட்க முடியும்.

“மங்கைக்கு உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டதால், தஞ்சாவூர் பொது மருதுவமனையில் சேர்த்து, சிறப்பு சிகிச்சை அளித்து வருகிறார்கள்.இன்னும் ஓரிரு வாரங்கள் பொறுத்துக் கொள்.அப்பா இதற்கொரு வழியை நிச்சயமா செய்து விடுவார்கள்”என சமாதானம் கூறிவதுபோல் கூறினார்கள் பாட்டி .

உள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்த எங்கள் நால்வருக்கும், மனம் மிகவும் வேதனை அடைந்ததது.எனக்கு 11வயது,அண்ணன் ஷானும் 13 வயது, தம்பிக்கு 9 வயது ,ஆனஹிக்கு 6 வயது.நாங்க நாலு பேருமே, எந்தவித கவுடு சூது, தில்லுமுல்லு செய்ய தெரியாத வெகுளி

குழந்தைகளாக வளர்ந்து விட்டோம்.பற்ற குழந்தைகளை போல் தைரியமாகவோ,சாமர்த்தியமாகவோ நடந்து கொள்ளவோ,பேசவோ தெரியாது.

மாமாவின் வாயிலிருந்து வந்த விஷம் போன்ற வார்த்தைகள், எங்கள் நெஞ்சத்தை ஈட்டிபோல துளைத்தது.மாமாவின் குழந்தைகளை இப்படி யாராவது அவதூறாக பேசினால், மாமா அதை கேட்டுக் கொண்டு சும்மாவா இருப்பார்கள்?அம்மாவை பார்க்க வேண்டும் போல இருந்தது.கடவுளை வேண்டிக் கொண்டேன். சீக்கிரமாக அம்மாவை குணபடுத்திவிடு என்று.இங்கிருந்து சீக்கிரமாக எங்களை நல்லபடியாக எங்காவது தனியாக கொண்டு சேர்த்துவிடு, என மனதிற்குள் வேண்டிக் கொண்டே உட்கார்ந்திருந்தேன்.

மேலும் மாமா பாட்டியிடம் தொடர்ந்து முறையிட தொடங்கினார்கள்.”அம்மா,அப்பாவிடம் சொல்லி, இந்த வருடமே மங்கையையும்,குழந்தைகளையும்

இந்த வீட்டை விட்டு வெளிய சென்றாக வேண்டும் என சொல்லிவிட சொல்லுங்கள்.மங்கைக்கு உடல் நிலை மோசமாக இருக்கிறதென்றால், அவளை மட்டும் இங்கே வைத்துக் கொண்டு குணபடுத்து அனுப்புங்கள்.இந்த் நான்கு குழந்தைகளையும் ,அவர்கள் அப்பா தேவனிடம் நீங்கள் அனுப்பிவிடுவதுதான் நல்லது.இவர்களை நீங்கள் இங்கு வைத்திருந்தால், தேவன் இன்னும் பொறுப்பில்லாமல் ஊதாரியாகவேதான் இருந்து விடுவான்.இந்த கோடை விடுமுறையில் ஒரு முடிவை எடுக்க சொல்லி அப்பாவிடம் கூறிவிடுங்கள்.நான் அடுத்த முறை வரும் போது ஏதாவது ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும்"என்றார்கள் மாமா.

பிறகு மாமா குளித்துவிட்டு எங்கோ வெளியே சென்று விட்டார்கள். அன்று மதியம் சாப்பிட வரவில்லை என பாட்டியிடம் கூறிவிட்டு சென்று விட்டார்கள் மாமா.மாமா பேசியதற்கெல்லாம் பாட்டி "உம்" போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள் பதில்

ஏதும் திரும்ப பேசவில்லை.

தாத்தா தன் வேலைகளை முடித்துவிட்டு தோட்டத்திலிருந்து உள்ளே வந்து ஊஞ்சலில் அமர்ந்தபடி"கமலா,எங்கே உன் பிள்ளை"என்றே கேட்டார்கள்.

"அது என்ன என் பிள்ளை என்கிறீர்கள்"

"கோவிச்சுக்காதே,சும்மா தமாஷாகத்தான் கேட்டேன்" என்றார்கள் தாத்தா.

"எதுதமாஷ்?"என கேட்டுவிட்டு பாட்டி மாமா வெளியே சென்றிருப்பதை கூறிவிட்டு

"உங்களுடன் சொல்ல சொல்லி, என்னிடம் சில விஷயங்களை கூறி சென்றான் ஜகன்னாதன்.அவன் மதிய சாப்பாட்டிற்கு வரவில்லை என்றும் ,இன்றிரவே சென்னைக்கு திரும்ப போவதாகவும் சொல்லிவிட்டு வெளியே, அவன் சிநேகிதர்களை பார்க்க சென்று விட்டான்."என்றார்கள் பாட்டி.

“என்ன விஷயம் சொல்ல சொன்னான்
“என்றார்கள் தாத்தா.

“குளித்துவிட்டு வாங்க.நிதானமாக
சொல்கிறேன்”என்றார்கள் பாட்டி.

“நிதானமாகத்தான் இப்ப இருக்கேன் சொல்லு
விஷயத்தை.”என்றார்கள் தாத்தா.

அப்படியே மாமா கூறியதை ஒன்றுவிடாமல்
தாத்தாவிடம் ஒப்புவித்தார்கள்
பாட்டி.தாத்தாவிடம் விஷயத்தை கூறுவதற்கு
முன் நாங்கள் யாராவது இருக்கிறோமா என
சுற்றி முற்றி பார்த்துவிட்டு,இல்லை என்றதும்
விஷத்தை கூறிவிட்டு,

“என்ன இருந்தாலும் ஜகன்னாதன் நம்மோட
ஒரே பிள்ளை.அதிலும் இந்த வீடு ,என் அப்பா
,என் கல்யாணத்திற்கு சீதனமாக உங்களுக்கு
கொடுத்தது.இப்போது இந்த வீடு ஜகன்னாதன்
பேரில் எழுதி வைத்திருக்கிறோம்.ஜகந்நாதன்
சொல்வதிலும் நியாயமிருக்கிறது.நம் மருமகன்

தேவனின் பெற்றோர்களே, இவர்களை வைத்துக் கொள்ளாமல் வெளியே அனுப்பிவிட்ட பிறகு, நாம் வைத்துக் கொள்வது சரியாக படவில்லை எனக்கு.என்ன இருந்தாலும் ஜகன்னாதன் குழந்தைகள்தான் நம் பேர பிள்ளைகள்.அவர்கள் இங்கு வராவிட்டால் நமக்குதான் பின்னால் கஷ்டம்.எனக்கும் என் மூன்று பேத்திகளை பார்த்து ரொம்ப நாட்கள் ஆகிவிட்டது.அவர்கள் மூன்று பேரும்ஓடி விளையாடும் இந்த வீட்டில் அவர்கள் இல்லாதது எனக்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது" என்று தன் மகனை ஆதரித்து பாட்டி பேசியது கீடது எங்கள் மூன்று பேருக்கும், தலையில் யாரோ சம்மட்டியால் அடித்தது போல இருந்தது.

இவ்வளவு நாட்கள் பாட்டி எங்களிடம் அன்பாகவும்,,அக்கறையாகவும் இருக்கிறார்கள் என நினைத்து ஏமாந்து விட்டோமே.என்ன இருந்தாலும் மகனின் குழந்தைகள்தான் தன் பேர குழந்தைகள், நாங்கள் அந்நியர்கள் என கூறிவிட்டார்களே பாட்டி.அம்மாவுக்கு இவை

எல்லாம் ஏன் புரியவில்லை.ச்சே|என்ன ஜென்மங்கள் இவர்கள்.இவர்களைச் சொல்லி குற்றமில்லை .எல்லாம் என் பெற்றோர்களிடம்தான் குறை இருக்கிறது.அவர்களிருவரும் சரியாக இருந்தால், எங்களுக்கு ஏன் இந்த இழிவு நிலை.அம்மாவிடம் இதை கூறினால் அவர்கள் மனம் கஷ்டப்படுமா?அல்லது நம்புமா?என என்னுள் வியந்தேன்.

இரவு ஏழுமணி போல வீட்டுக்கு வந்த மாமா,அங்கு எங்கள் அறைக்கு முன் உள்ள மற்றோறு ஹாலில் உட்கார்ந்து கொண்டு ,ஹோம்வொர்க் செய்துகொண்டிருந்த எங்கள் நாலு பேரையும், தன் அருகில் அழைத்து,"எதுக்கு பசங்களா இந்த வீட்டில் வந்து இருக்கிறீர்கள்.உங்கள் அப்பாவுடன் சென்று விடுங்கள் .அதுதான் உங்களுக்கெல்லாம் நல்லது.உங்களுக்கு உரிமையான இடம் உங்கள் அப்பாவின் பெற்றோர் வீடுதான்.இந்த வீடு இல்லை.இது என்னுடைய வீடு.நீங்கள் உங்க அப்பாவுக்கு கடிதம் போட்டு, உங்களை வந்து

அழைத்து போக சொல்லுங்கள்.அடுத்த வருடம் சென்னைக்கு சென்று ஸ்கூலில் சேர்ந்து விடுங்கள்.இங்கு இருக்காதீர்கள்.புரிஞ்சிதா?உங்க அம்மா ஒரு முட்டாள்.அவளுக்கு எதுவும் தெரியாது.நான் இப்படி சொன்னதாக தாத்தாவிடமும்,பாட்டியிடமும் கூறாதீர்கள்.காரியம் கெட்டுவிடும்.ரகசியமாக உங்க அப்பாவிற்கு கடிதம் போட்டு உங்களை அழைத்து செல்ல ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்"என கூறிவிட்டு உள்ளே சென்று விட்டார்கள் மாமா.

பிறகு உள் அறையில், மாமா தாத்தாவுடன் எதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.சிறிது நேரத்தில்"இது என் வீடு,நான் என்ன வேண்டுமானாலும் முடிவெடுப்பேன்.நீ எனக்கு புத்தி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உனக்கு பிடிக்கவில்லை என்றால் இங்கே வராதே.நான் எல்லாவற்றையும் இப்போதே வக்கீலை வரவழைத்து தர்மத்திற்கு எழுதி வைத்து விடுகிறேன்."என கோபமாக பேசிக்கொண்டே ரூமை விட்டு வெளியே

வந்தார்கள் தாத்தா.

மாமாவும் கோபமாக தன கைபையை எடுத்துக் கொண்டு பாட்டியிடம் மட்டும் போய்வருகிறேன் என கூறிவிட்டு சென்று விட்டார்கள்.

“நான் எவ்வளவு சொல்லியும், அவனை ஏன் வீட்டிற்கு வராதே என கூறி எதிர்த்துக்கொண்டீர்கள்.ஒரே பிள்ளை, அவனைஎதிர்த்து கொண்டால் பின்னால் நமக்குத்தான் தொல்லை. கொள்ளி வைக்க கூட ஆள் இருக்காது. ஊர் நம்மை பார்த்து சிரிக்கும்”என பாட்டி புலம்பி தள்ளினார்கள்.

“அவனுக்கு பரிந்து பேச வந்துட்டியே,குழந்தைகளையும்,மங்கையையும் வீட்டை விட்டு வெளியே அனுப்ப சொல்றியா?இப்போது அது நடக்க கூடிய காரியமா?அவள் உடல்நிலை சரி இல்லை.புருஷனும் ஒழுங்கில்லை.இந்த நிலையில் நாமும் அவளை ஒதுக்கிவிட்டால், பாவம் ,அவர்கள் என்ன செய்ய முடியும். சிறு

குழந்தைகள்.,அவர்களை வெளியே அனுப்பி அவதிப்பட வைத்துவிட்டு நாம் நிம்மதியாக இந்த வீட்டில் ஒரு வேளை சாப்பாடு சாப்பிட முடியும் என நினைக்கிறியா?அவன் கிடக்கிறான்.மூளை இல்லாத காட்டுமிராண்டி.இனிமே, அவன் வந்து தொந்தரவு கொடுத்தால், சொத்தில் அவனுக்கு ஒரு பைசா கூட கிடையாது .எல்லாம் தர்மத்திர்க்கு எழுதி வைத்துவிடுவேன்"என்றார்கள் தாத்தா வேதனை தொனிந்த குரலில். அதற்குமேல் பாட்டி எதுவும் பேசவில்லை.,மௌனமாக இருந்து விட்டார்கள்.

நாட்கள் வெகுவாக நகர்ந்தது.அம்மா சென்று முன்று வாரங்கள் ஆயிற்று.யாரும் எதிர்பாராத வண்ணம், ஒருநாள் விடியற்காலையில், வீட்டின் முன்னே வந்து நின்ற மாட்டு வண்டியிலிருந்து, அப்பா இறங்கி வருவதை பார்த்த வேலை ஆள் ஒருவர், பரபரப்புடன் உள்ளே வந்து "ஐயா,யாரோ ஊரிலிருந்து வந்திருக்கிறார்கள் ,யார் என்று தெரியவில்லை"என்றார்.

நாங்கள் தாத்தாவுடன் வாசலுக்கு விரைந்து

சென்று பார்க்கையில், எங்கள் அப்பா வண்டிகாரருக்கு பணத்தை கொடுத்துவிட்டு, உள்ளே வர இருந்தார்கள்.அனைவரும் வாய் பிளந்து நின்றுகொண்டிருந்தோம்.தாத்தா உடனே “வாங்க மாப்பிள்ளை,என கூறிவிட்டு வேலை ஆளிடம் மாப்பிளையிடமிருந்து பெட்டியை வாங்கி உள்ளே எடுத்துவா”என கூறிவிட்டு வீட்டிற்குள் விரைந்து சென்று “கமலா, நம் சின்ன மாப்பிள்ளை வந்திருக்கிறார்”என கூறியதும் பாட்டியால் நம்பவே முடியவில்லை.

பல மாதங்கள் கழித்து அப்பாவை பார்த்ததில் எங்களுக்கு பெருத்த மகிழ்ச்சியை கொடுத்தது.அம்மா இல்லாமல் தனியாக இருந்ததால்,அப்பாவை கண்டதும் ஒரு பெரிய நிம்மதி ஏற்பட்டது எங்கள் நால்வருக்கும்.தாத்தாவும்,பாட்டியும் மிகுந்த பரபரப்புடன் அப்பாவை வரவேற்று, அங்கு வரவேர்ப்பறைக்கு பக்கத்திலுள்ள, முற்றத்தில் உள்ள, ஊஞ்சலில் உட்காரவைத்தார்கள்.

அப்பாவிற்கு காபி கொண்டு வந்து தரும்படி சமையல் செய்யும் ரத்தினம் சித்திக்கு உத்தரவிட்டு விட்டு ,தாத்தா அங்குள்ள ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்கள்.நாங்கள் நாலு பேரும் ஊஞ்சலில் ,அப்பாவை சுற்றி உட்கார்ந்து கொண்டோம்.அப்பாவின் முகத்தில் சந்தோஷகளை தெரிந்தது.அப்பாவை ,அதுவரை பார்த்திராத வேலை ஆட்கள் அனைவரும் அந்த வீட்டு சின்ன மாப்பிள்ளையான அப்பாவை பார்க்க ஹாலுக்கு வந்து, அப்பாவிற்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, எதோ அதிசய மிருகத்தை பார்ப்பது போல வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள்.அப்பா அவர்கள் கல்யாணத்திற்கு பிறகு, அன்றுதான் முதன் முறையாக சிதம்பரத்திற்கு மாமனார் வீட்டிற்கு வந்திருப்பதால் பாட்டிக்கும்,தாத்தாவிற்கும் ஏகமாக மகிழ்ச்சியை தந்தது.

வேலை ஆட்களும், மற்றவர்களும் ஜன்னல் வழியாகவும்,அங்குள்ள கதவு அருகிலும்,கதவு

இடுக்கு வழியாகவும் நின்று பார்த்துக் கொண்டு தங்களுக்குள் ஏதோ கிசுகிசுவென பேசி கொண்டிருந்தனர்.

நேரம் செல்ல ,செல்ல விஷயம் அறிந்த அக்கம் பக்கத்து வீட்டினரும் இந்த வீட்டில் இரண்டாவது மாப்பிள்ளை வந்திருக்கிறார் என கேள்விபட்டு ஒருவர் பின் ஒருவராக வந்து அப்பாவை பார்த்து பேசிவிட்டு சென்றார்கள். அவ்வூரிலுள்ள அனைவரும் ,அம்மாவையும், எங்களையும் மட்டும்தான் இவ்வளவு வருடங்களாக பார்த்திருக்கிறார்கள்.அப்பாவை போடோவில்தான் பார்த்திருக்கிறார்கள்.இன்று தான் நேரில் பார்க்க வாய்ப்பை அப்பா ஏற்படுத்தியிருந்தார்கள்.

பாட்டி மட்டும் அப்பா எதிரே வரவே இல்லை.சின்ன ஊர்களில் மருமகன் முன்னிலையில் மாமியார் வருவது மரியாதை இல்லையாம் , எனவே பாட்டி சமையலறையின் கதவு இடுக்கு வழியாக அப்பாவை பார்த்தார்கள்.பாட்டி சென்னை

வரும் சமயம் எல்லாம் .மாலையில் எங்கள் வீட்டிற்கு வந்து ஒரு மணி நேரம் இருந்துவிட்டு சென்று விடுவார்கள்.அப்பாவை பார்க்க சென்னையில் அவர்கட்கு சந்தர்ப்பம் கிடைத்ததில்லை.

மருமகன் முன், மாமியார் வருவதில் என்ன அப்படி மரியாதை குறைவு.எனக்கு வேடிக்கையாகவும்.தமாஷாகவும் இருந்தது, அப்பாவின் வருகையை முன்னிட்டு, அன்றைக்கு தடபுடலாக சிறப்பு காலை உணவும்,மதிய உணவும் சமைக்கப்பட்டது.முதன் முறையாக அப்பா காலை உணவை சாப்பிட்டார்கள்.சென்னையில் அப்பா ப்ரேக்பாஸ்ட் சாப்பிட்டு நான் பார்த்ததே இல்லை.அப்பாவுடன் நாங்கள் எல்லோரும், பாட்டியை தவிர, உட்கார்ந்து காலை உணவை தடபுடலாக சாப்பிட்டு முடித்தோம்.

“நான் குழந்தைகளை அழைத்துக் கொண்டு தஞ்சாவூருக்கு சென்று மங்கையை பார்த்துவிட்டு,முடிந்தால் அவளை

ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்து அழைத்து வந்து விடலாம் என இருக்கிறேன்.அவள் எனக்கு கடிதம் போட்டிருந்தாள் .அங்கு மருத்துவ மனையிலிருப்பது அவளுக்கு பிடித்தக்கவினையாம்,மேலும் குழந்தைகளை பார்க்க ஆசைபடுவதாகவும் எழுதி இருந்தாள் .எனவே மதிய சாப்பாட்ட முடித்துக் கொண்டு நாங்கள் ஐந்து பேரும், தஞ்சாவூர் சென்று இரண்டு நாட்கள் இருந்து விட்டு ,திரும்பி வந்து விடுவோம்.குழந்தைகள் பள்ளிகூடத்திற்கு மூன்று நாட்கள் லீவு என ஸ்கூலுக்கு சொல்லிவிட முடியுமா?"என தாத்தாவிடம் கேட்டார்கள் அப்பா.

"அதற்கென்ன நான் நிச்சயமாக அவற்றை பார்த்து கொள்கிறேன்,நீங்கள் கவலை படாமல் குழந்தைகளுடன் சென்று, என் மகளை அழைத்து வந்து விடுங்கள்"என தத்தா மிகவும் ஆனந்தத்துடனும்,பரவசத்துடனும் மாப்பிள்ளை என்பதால் மிகவும பவ்யமாகவும் பதிலளித்தார்கள்.

“பசங்களா,இரண்டு நாட்களுக்கு வேண்டிய துணிமணிகளை பாகில் எடுத்து தயாராக வையுங்கள்.சாப்பிட்டதும், மதியான பஸ்சில் கிளம்பி போக வேண்டும்.”என அப்பா எங்களிடம் கூறியதுதான் தாமதம், நாங்கள் நால்வரும் பறந்து எங்கள் அறைக்கு ஓடி ,இரண்டு நாட்களுக்கு தேவையான எல்லாவற்றையும் கடகடவென பாக் செய்து விட்டோம்.ஆனஹிக்கும் சேர்த்து நானே பாக் பண்ணிவிட்டேன்.

மத்தியான சாப்பாடு, எங்களுக்கு சந்தோஷ மிகுதியால் சாப்பிடவே பிடிக்கவில்லை.இருந்தாலும் எதோ கடமைக்கு கொஞ்சம் சாப்பிட்டு முடித்தவுடன், தாத்தா எங்களுக்காக பஸ் ஸ்டாண்டுக்கு செல்வதற்கு குதிரை வண்டியை தயார் செய்து வைத்திருந்தார்கள்.அப்பா மட்டும் சாப்பாட்டை மிகவும் ரசித்து,ருசித்து ,சுவைத்து சாப்பிட்டார்கள்.சென்னையில் ஒரு வேளைக்கு வகை, வகையான, பலவித சாப்பாடு சாப்பிடுவது என்பது ரொம்ப விசேஷ

தினங்களில்தான். எனவே அப்பா கிடைத்த சந்தர்ப்பத்தை விடாது நன்றாக முக்கு பிடிக்க சாப்பிட்டு முடித்தார்கள்.

எல்லோரும் ஜட்காவில் ஏறி அமர்ந்ததும், தாத்தாவும் வழி அனுப்புவதற்காக எங்களுடன் ஜட்காவில் ஏறி உட்கார்ந்துகொண்டு பஸ் ஸ்டாண்ட் வரை வந்தார்கள்.அங்கிருந்து தஞ்சாவூருக்கு நான்கு அல்லது ஐந்து மணி நேரத்தில் சென்று விடலாம்.

சரியாக ஆறு மணிக்குள் தஞ்சாவூரை அடைந்தோம்.பஸ் நிலையத்திலிருந்து மருத்துவ மனை நடை தூரத்திலே இருந்தததால், நாங்கள் பஸ் நிலையத்திற்கு எதிரே இருந்த மருத்துவ மனைக்கு நடந்தே சென்று அடைந்தோம்.நாங்கள் அனைவரும் அன்று வரப்போவது அம்மாவிற்கு தெரியாது.ஏன் என்றால் ,அப்பா வருவதை பற்றி அம்மாவிற்கு எதுவும் கடிதம் போடவேயில்லை,அதற்கு நேரமும் இல்லாமையால் ,,அம்மாவின் கடிதம் கண்டவுடன் ,உடனே புறப்பட்டு வந்து,

எங்களையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள், என எங்களிடம் கூறினார்கள்.

நாங்கள் மருத்துவமனைக்கு சென்ற நேரம் சரியாக விசிட்டர் நேரம் என்பதால், எந்த தடையுமின்றி எங்களை உள்ளே அனுமதித்தார்கள்.விசிட்டர்ஸ் நேரம் 6மணி முதல் 9 மணிவரை.என அங்குள்ள ஒரு நோடீஸ் பலகையில் பார்த்தோம்.அம்மா இருக்கும் சிறப்பு வார்ட், ஆஸ்பத்திரியில் கட்டிடத்திலிருந்து சற்றே தூரத்தில் தனி வீடு போல, ஆங்காங்கே தனி தனி கட்டிடங்களாக கட்டி, ஒரு சிறிய குவார்ட்ஸ் போல இருந்தது.

எப்படியோ அம்மா தங்கி இருந்த அந்த சிறப்பு வார்டை கண்டு பிடித்து அங்கு சென்றது, அம்மா முகத்தில் எங்களை பார்த்ததும் மகிழ்ச்சி பிடிபடவில்லை.உள்ளே சென்று அம்மாவை சுற்றி அனைவரும் உட்கார்ந்துகொண்டோம்.அம்மா அங்கு ரொம்ப தனிமையாக உணர்வதால் அங்கிருக்க தனக்கு

விருப்பமில்லை என்றும்,உடனடியாக அங்கிருந்து டிஸ்சார்ஜ் பண்ணச்சொல்லி அக்கா சேதுவுக்கு கடிதம் போட்டிருந்தும் பெரியம்மா எந்தவித நடவடிக்கையும் எடுக்காததாலும்,பாட்டி தாத்தாவிற்கு கடிதம் எழுதியும் அவர்களும் இதுபற்றி எதுவும் கண்டு கொள்ளாததாலும், கடைசியாக அப்பாவிற்கு எழுதி வர சொன்னதாக அம்மா அப்பாவிடம் கூறி வருத்தத்ப்பட்டு கொண்டிருந்தார்கள்.

“மணி ஏழாகிவிட்டது. இன்று என்னால் ஒன்றும் செய்ய இயலாது. ஐந்து பெரும் வெளியே சென்று ரூம் எடுத்து தங்கிவிட்டு, நாளை காலை ஏழு மணிபோல வந்து உன்னை டிஸ்சார்ஜ் பண்ணுவதற்கான ஏற்பாடுகளை செய்கிறேன்”என்றார்கள் அப்பா.

அம்மா இருந்த வார்டுக்கு எதிரே, மைதானம் போல உள்ள இடத்தில் விளையாடுவதற்காக, நாங்கள் நால்வரும் சென்று விட்டோம்.அப்பா அம்மாவுடன் சிறிது நேரம் பேசி இருந்துவிட்டு.இரவு ஒன்பது மணி அளவில்,

விசிட்டர் நேரம் முடிந்துவிட்டது ,நாங்கள் வெளியே போய்விடவேண்டும் என நர்ஸ் கூறவே ,அம்மாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு, அருகிலுள்ள ஒரு ஹோட்டலில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, அங்கேயே ஒரு ரூம் எடுத்து தங்கினோம்.

மறுநாள் காலையில் அப்பா எங்கள் நால்வரையும் எழுப்பி பல்விளக்கி,குளிக்கவைத்து விட்டு காலை உணவையும் வாங்கி சாப்பிட சொல்லிவிட்டு ,பிறகு அம்மாவிற்கும்,உதவிக்கு இருத்த வேலைகார பெண்ணுக்கும், காலை உணவை வாங்கி எடுத்துக்கொண்டு, மறுபடியும் அம்மா இருக்கும் வார்டிற்கு சென்று, அங்கு எங்களை விட்டுவிட்டு அம்மாவையும்,அந்த வேலை ஆளையும் சாப்பிட சொல்லிவிட்டு, அம்மாவை டிஸ்சார்ஜ் செய்வதற்கான பேப்பரில் கைஎழுத்திட்டுவிட்டு வர அங்குள்ள அப்பீசுக்கு அப்பா சென்று விட்டார்கள்.

அம்மா கூட உதவிக்கு இருந்த அந்த பெண் எல்லாவற்றையும் பாக் செய்து முடித்தாள்.அப்பா

திரும்பி வந்ததும் ,கிளம்பி செல்வதற்காக எல்லாவற்றையும் தயாராக வைத்திருந்தாள்.காலை 11 மணிக்கெல்லாம் அப்பா எல்லா பேப்பரிலும் கை எழுத்திட்டுவிட்டு ,வார்டில் தங்கி இருந்ததற்கான பணத்தையும் கட்டி முடித்துவிட்டு, ரூமிற்கு திரும்பிய சமயம் வெய்யில் மண்டையை பிளந்து விடும்போல கொதித்தது.அம்மாவை மாட்டுவண்டியில் ஏற்றி உட்காரவத்திவிட்டு, நாங்களும் அதில் ஏறி உட்கார்ந்து கொண்டோம்.அப்பா மட்டும், மாட்டு வண்டிக்கு பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

நாங்கள் தங்கியிருந்த ஹோடேல்க்கே திரும்ப வந்து, மதியான சாப்பாட்டை முடித்துக்கொண்டு,அங்கிருந்தே அதே மாட்டு வண்டியில், அம்மாவை பஸ் ஸ்டாண்டுக்கு அழைத்து சென்றோம்.

பஸ் நிலையத்தில் அம்மாவை இறக்கி ஒரு இடத்தில் உட்காரவைத்து விட்டு ,எங்களையும் அம்மாவுடனே இருக்கச் சொல்லிவிட்டு ,அப்பா

எங்களுக்கேல்லாம் டிக்கெட் வாங்க சென்றுவிட்டார்கள்.சிதம்பரம் போகும் எல்லா பஸ்சும் மிகவும் கூட்டமாகவே இருந்தது.பிறகு வேறு வழி இல்லாமல் ,அப்பா எப்படியோ ஒரு பஸ்சில் எங்களை ஏற்றி , அந்த கண்டக்டேரிடம், அம்மாவின் நிலைமையை சொல்லி ,அம்மா உட்காருவதற்கு சீட் எதுவும் காலியாக இருக்குமா என கேட்டார்கள்.வண்டி நடத்துபவரும் எவ்வளவோ முயற்சி செய்தும் ,யாரும் அம்மாவிற்கு உட்கார இடம் அளிக்க மறுத்துவிட்டார்கள்.எங்கள் யாருக்குமே நிற்க கூட பஸில் இடமில்லை.அம்மாவால் உட்கார்ந்து வருவதே கஷ்டம், இதில் எப்படி நான்கு அல்லது ஐந்து மணி நேரம் நின்று கொண்டு வரப்போகிறார்கள் என மிகவும் கவலை பட்டோம் .அனைவரும் வெகு தூரம் பயணம் செய்வதால், யாருக்கும் தன்னுடைய இருக்கையை அம்மாவிற்கு தர மனம் இல்லாமல் இருந்தார்கள்.

“அடுத்த பஸ்சில போகலாமே, இது மிகவும் கூட்டமாக இருக்கிறது”என அம்மா

கூறியதும். “அடுத்த பஸ் கிளம்ப இன்னும் முன்று மணி நேரம் இருக்கிறது.அவ்வளவு நேரம் இந்த கொதிக்கும் உச்சி வெய்யிலில் நீங்கள் எல்லோரும் காத்திருந்தால் சோர்ந்து விடுவீர்கள்.எப்படியாவது சமாளித்துக்கொண்டு அந்த நான்கு மணி நேரம் காத்திருக்கும் நேரத்தில் வீடு போய் சேர்ந்துவிடலாம்.” என்றார்கள் அப்பா.

அந்த பஸ்சில் உட்கார்ந்து கொண்டு பிரயாணம் செய்த பிரயாணிகள் அனைவரும் அம்மாவை பார்க்காதது போல தன் முகத்தை திருப்பி கொண்டு, ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்ப்பதுபோல பாவனை செய்து கொண்டிருந்தார்கள்.

என்ன விந்தையான மனிதர்கள் என்று என் மனதிற்குள் எண்ணிக் கொண்டேன்.

சிறிது நேரத்தில் ,அப்பாவிற்கு ஒரு நல்ல யோசனை ஒன்று தோன்றியது.அம்மா எடுத்து வந்திருந்த டிரன்க் பெட்டியை, சற்றே உயரமாக

திருப்பி நிறுத்தி, அதன் மேல் அம்மாவை உட்காறும்படி சொன்னதில்,அதில் எப்படியோ சமாளித்துக் கொண்டு அம்மா உட்கார்ந்து கொண்டு, நாலு மணி நேரம் பயணம் செய்து முடித்தார்கள்.எப்படியோ மறுநாளே சிதம்பரதிற்கு மாலை ஆறு மணிக்குள் வந்து சேர்ந்தோம்.

அன்று மாலை, அம்மா வீடு திரும்புவதை யாரும் எதிர்பார்க்காததால், முன்று வாரம் கழித்து அம்மாவை பார்த்த சந்தோஷத்தில் வேலை ஆட்கள் அனைவரும், அம்மாவை சுற்றி, சுற்றி வந்து பேசி கொண்டிருந்தனர்.

“முன்று வாரம் ஆஸ்பத்திரியில் இருந்தும், உடம்பு கொஞ்சம்கூட தேராமல் அப்படியே இருக்கிறதே?”என அஞ்சலி கன்னத்தில் கைவைத்த வண்ணம் கவலையுடன் கேட்டார்கள்.

“வழக்கம் போல மாற்றி, மாற்றி மாத்திரை கொடுத்தார்கள்.ஊசிகளை போட்டார்கள்.வேறு

எதுவும் புதிதாக செய்யவில்லை
அஞ்சலி.அதனாலதான் இவருக்கு கடிதம் போட்டு
வரச்சொல்லி கிளம்பிவந்துவிட்டேன்”என்றார்கள்
அம்மா.

“நான் நாளை மறுநாள் சென்னைக்கு கிளம்ப
இருக்கிறேன்” என அப்பா கூறியது அம்மா
எதுவும் பேசாமல் மௌனமாக “உம்
“கொட்டினார்கள்.அப்பா மேலும்
தொடர்ந்தார்கள்,

கோடை விடுமுறை சமயம் நான் வந்து
குழந்தைகளை என்னுடன் சென்னை அழைத்து
செல்கிறேன்.என்னுடன் கொஞ்ச நாட்கள்
அவர்கள் இருக்கட்டும்”என்றார்க .

அம்மாவும் சரி என்பது போல
தலையாட்டினார்கள்.

32

அத்யாயம்-முப்பத்திரண்டு

அப்பா சென்னைக்கு கிளம்பி சென்று விட்டார்கள்.இப்போது என் மனம் மிகவும் வருந்தியது.அப்பாவுடனும் அம்மாவுடனும் இரண்டு நாட்கள் இருந்தது மிகவும் சந்தோஷமாகத்தான் இருந்தது.அம்மாவிற்கும் அப்பா கிளம்பி சென்றதில் வருத்தாமாகவே இருந்தது.ஆனால் அவர்களுக்குள் என்ன பேசினார்கள்?நாம் திரும்ப எப்போது சென்னைக்கு போக போகிறோம் என அம்மாவை நான் கேட்டதற்கு, அதைப் பற்றி நான் கவலை படத்தேவை இல்லை

என்றும்,அம்மா எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்கள் எனவும், எனக்கு சரியான ஒரு பதிலை கூறாமல் அது என் சம்மந்தப்பட்ட விஷயம் இல்லை என்பதுபோல என் வாயை அடைத்துவிட்டார்கள்.

மறுபடியும் அம்மாவுடன் ஜட்காவில் பள்ளிக்கூடம் சென்று வந்தேன்.மாமாவும் இப்போதெல்லாம் அடிக்கடி சிதம்பரம் வந்து, தாத்தா பாட்டியிடம் சண்டை போடுவதும்,எங்கள் நாலவரையும் ஊதாரி பெற்ற பிள்ளைகள் என உதாசீனமாக பேசுவதும்,அம்மாவை வீட்டை விட்டு வெளியே போ,என திட்டுவதுமாக இருந்து வந்தார்கள்.மாமாவின் துன்புருதத்தல் அதிகமாகியது.மாமாவை கண்டாலே எங்கள அனைவருக்கும் குலை நடுக்கமாக இருந்ததது.

அம்மாவை தஞ்சாவூர் ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்ட பெரியம்மா, பிறகு என்ன என்று கூட கண்டு கொள்ளவில்லை.அம்மா வீட்டிற்கு வந்ததும் பெரியம்மாவிற்கு இது பற்றி

விவரத்தை தாத்தா கடிதம் முலம் தெரிவித்திருந்தும், பெரியம்மா அதற்ககு பதில் ஏதும் எழுதாமல் இருந்துவிட்டார்கள்.

1970-ம் வருட கோடை விடுமுறையும் வந்தது.அம்மா தஞ்சாவூரிலிருந்து வந்து முன்று மாதங்களுக்கு பிறகு பெரியம்மா மறுபடியும் சிதம்பரம் ஸ்கூலுக்கு, ஒரு குறுகிய விசிட் போட்டுக் கொண்டு ,அந்த சாக்கில் எங்களையும் பார்க்க வந்திருந்தார்கள்.விடுமுறை ஆரம்பித்து ஓரிரு நாட்களே ஆயிற்று.பெரியம்மா வரவால் வீடு முழுதும் ஒரே பரபரப்பாக காட்சியளித்தது.

ஒரு நாள் இரவு சாப்பாட்ட முடித்துவிட்டு அம்மா,பெரியம்மா,தாத்தா மற்றும் பாட்டி நால்வரும் ஹாலில் உட்கார்ந்து கொண்டு பேசிகொண்டிருந்தார்கள்.

மாமா அடிக்கடி வந்து வார்த்தைகளால் எல்லோரையும் துன்புறுத்தி செல்வதை பாட்டி பெரியம்மாவிடம் கூறினார்கள்.வருகிற 1970-71ம்

வருடம் எங்களை என்ன செய்யலாம் என பேசி கொண்டிருக்கையில்,அடுத்த வருடமும், எங்களை அதே வீட்டில் வைத்திருப்பதா?அல்லது அடுத்த வீட்டில் தனியாக வைப்பதா?என நால்வரும் பேசிகொண்டிருந்தார்கள்.

“நான் பக்கத்து வீட்டில் குழந்தைகளுடன் தனியாக இருந்து விடுகிறேன்.”என்றார்கள் அம்மா.

“அதில் நிறைய தொல்லை இருக்கிறதே மங்கை.அதில் குடியிருப்பவர்களை உடனடியாக காலி பண்ணச் சொல்ல முடியாது.ஏன் என்றால் இப்போது குடியிருப்பவர்களிடம் மூன்று வருடத்திற்கு லீஸ் விட்டிருக்கிறேன்.அவர்கள் வந்து ஒரு வருடம்தான் ஆகிறது.அதோடில்லாமல் அதிலிருந்து ரூபாய் 200 வாடகையாக வருகிறது .இவ்வளவு பெரிய வீட்டில் நாங்கள் இருவரும் தனியாகத்தான் இருக்கிறோம். எனவே இன்னும் ஒரு வருடத்திற்கு இங்கேயே இருந்துவிட்டு, அடுத்த கோடை விடுமுறையில் நிச்சயம் ஏதாவது ஒரு முடிவை

எடுத்துவிடலாம்”என்றார்கள் தாத்தா.

“ஜகன்னாதன் கோபப்படுவான் அப்பா., இனி நான் இங்கிருந்தால்.வேறு வீட்டிற்காகவாவது , நான் தனியே போய்விடுகிறேன்.பள்ளிக்கூடம் அருகிலேயே வீடு பார்த்துவிட்டால் போய் வருவது வசதியாக இருக்கும்”என்றார்கள் அம்மா.

“இதெல்லாம் நடக்காத காரியம் மங்கை.நடப்பதை பேசு”என்றார்கள் பெரியம்மா.

“இல்லை சேது,நான் தனியாக செல்வது எனக்கு சரியாக படுகிறது”.என அம்மா தொடர்ந்தார்கள்.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டிட்ருந்த பாட்டி குறுக்கிட்டு,

“இந்த ஊரில் நான்கு பெரிய வீடுகள்,நிலம் ,தோப்பு எல்லாம் வைத்துக் கொண்டு, ஊருக்கு பெரிய மனிதர்களாக இருந்துகொண்டு, எங்கள் சொந்த மகளை, யாரோ ஒருவர் வீட்டில் வாடகைக்கு கொண்டு வைத்தால், நம் குடும்ப கௌரவம் என்ன ஆகும்.நம்மை பற்றி ஊர்

என்ன நினைக்கும்."என்றார்கள் பாட்டி.

"யோசிக்க நேரம் இல்லை அப்பா.மங்கை இங்கிருந்தால் ஜகன்னாதன் அடிக்கடி வந்து தொல்லை கொடுப்பான்.இவளுக்கும் உங்களுக்கும், நிம்மதி இல்லாமல் போய்விடும்.மறுபடியும் சென்னைக்கு மாற்றி விட்டு, என் வீட்டில் வைத்துக் கொண்டு, என் காரில் அவளை தினமும் ஸ்கூலுக்கு கொண்டு சென்று அழைத்து வருகிறேன்.என் வீட்டிலிருந்தபடியே அவள் தொடர்ந்து மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெற்று வரட்டும்.யாருடைய தொந்தரவும் இல்லாமல் அவள் கொஞ்ச நாட்கள் நிம்மதியாக என்னுடன் இருக்கட்டும்.என் வீட்டில் முன்புறமாக தனியாக உள்ள ஒரு ரூமை அவளுக்கு படுக்கும் அறையாக ஒதுக்கி கொடுத்து விடுகிறேன்.ஒரு வருடத்திற்கு எப்படி போகிறது என்று பார்க்கலாம்"என்றார்கள் பெரியம்மா.

"குழந்தைகளை என்ன செய்வது சேது,நான் உன் வீட்டிற்கு வந்து விட்டால்"என

கேட்டார்கள் அம்மா.

“குழந்தைகள் இன்னும் ஒரு வருடத்திற்கு இங்கேயே இருக்கட்டும்.அடுத்த கோடை விடுமுறையில் நாம் ஒரு முடிவு எடுத்து விடலாம்.அவர்களை பற்றிய கவலையை என்னிடம் விட்டுவிடு”என்றார்கள் பெரியம்மா.

கடைசியாக பெரியம்மா சொன்ன ஐடியாவிற்கு, அனைவரும் அரை மனதாக ஒப்புக்கொண்டார்கள்.

“நான் உடனே சென்று உன் டிரான்ச்பர் ஆர்டருக்கு ஏற்பாடு செய்கிறேன்.நீ உன் ஸ்கூல் வேலை ஏதும் பாக்கி இருந்தால் உடனடியாக முடித்து விட்டு தயாராக இரு. இன்னும் ஒரு மாதத்தில் கோடை விடுமுறை முடியும் முன் நீ சென்னையில் வேலையில் சேர தயாராக இரு.அதுவரை நான் ஷான்,அனிதா மற்றும் பாட்டை என்னுடன் நாளைக்கு சென்னைக்கு அழைத்து சென்று விடுமுறை முடியும்வரை வைத்திருந்துவிட்டு விட்டு ,மறுபடியும் இங்கு

அவர்களை கொண்டு வந்து விட்டு, விட்டு, உன்னை அழைத்துக்கொண்டு சென்றுவிடுகிறேன்"என்றார்கள் பெரியம்மா.

பெரியம்மாவுடன் செல்ல எங்களுக்கு விருப்பமில்லை. ஆனால் எங்களை யாருமே எதுவும் கேட்காமல், அவர்களே எல்லா முடிவையும் எடுத்துவிட்டார்கள்.எங்களுக்கும் பெரியம்மாவுடன் போகமுடியாது என சொல்ல மிகவும் பயமாக இருந்தது.அதனால் பேசாமல் இருந்தோம்.

"ஏய் பசங்களா,மூன்று பேரும் இங்க வாங்க" என்ற பெரியம்மாவின் குரல் கேட்டு நாங்கள் மூவரும் பயந்து கொண்டே, அவர்கள் எதிரே சென்று நின்றோம்.

"நாளை காலையில் ஐந்து மணிக்கே நீங்க மூன்று பேரும் என்னுடன் சென்னைக்கு வருகிறீர்கள்.ஸ்கூல் திறக்கும் முன், உங்களை இங்கு வந்து விட்டு விடுகிறேன்.அதுவரை தேவையான துணிமணிகளை உடனடியாக

தனித்தனியாக பாக் பண்ணி
தயாராகுங்கள்”என்று ஆணை இட்டார்கள்.

பெரியம்மா சொன்னவுடன் நாங்கள்
எங்களுக்கான எல்லாவற்றையும் எடுத்து ஒரு
பையில் வைத்து கொண்டு ,இரவு தூங்க
சென்று விட்டோம்.எங்கள் முவரின் மனமும்
மிகவும் கஷ்டப்பட்டது.சென்னைக்கு பெரியம்மா
வீட்டிற்கு செல்ல இஷ்டமில்லாவிட்டாலும்
,வேறு வழி இல்லை.அம்மாவால் தன்
இஷடத்திற்கு எதுவும் முடிவு எடுக்க
முடியவில்லை .அப்படி இருக்க எங்களுக்கு
எதுவும் செய்வதறியாது தவித்தோம்.எப்படியோ
இந்த விடுமுறை எங்களுக்கு சற்றே
நரகமாகத்தான் இருக்கப் போகிறது என்று
மனதிற்குள் நினைத்துக் கொண்டே, அன்றிரவை
தாத்தாவீட்டில் கழித்துவிட்டு, மறுநாள்
விடியற்காலையில் கிளம்பி பெரியம்மாவின்
வீட்டிற்கு புறப்பட்டு சென்றோம்.

ஆனஹி மட்டும் அம்மாவுடன் தங்கி விட்டாள்
.அப்பா, இந்த கோடை விடுமுறைக்கு, எங்களை

சென்னைக்கு அழைத்துபோவதாக சொன்னது என்னவாயிற்று?அம்மா இதை பெரியம்மாவிடம் கூறினார்களா?ஒருவேளை பெரியம்மாவிற்கு, அப்பா வந்து எங்களை அழைத்து செல்வது முன்பே தெரிந்துதான் வேண்டுமென்ற நாங்கள் அப்பாவுடன் செல்லாகூடாது என்பதற்காக முந்தி கொண்டு எங்களை அவர்கள் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார்களா?அம்மா மறுபடியும் அப்பாவிற்கு கடிதம் போட்டால் என்ன?"என்றெல்லாம் என்மனம் வழியெல்லாம் யோசித்துக் கொண்டே வந்தது.

அப்பாவுடன் நாங்கள் செல்வதை பெரியம்மா விரும்பவில்லை.இது எல்லாம் ஏன் அம்மாவுக்கு தெரியாமல்,புரியாமல் போய்விட்டது.என மனதிற்குள் எண்ணி வியந்தேன்

பெரியம்மா வீட்டை அடைந்தபோது இரவு எட்டு மணி ஆகிவிட்டது.கார் போர்டிகோவில் நின்றதும்,காரிலுள்ள லக்கேஜ் அனைத்தையும் நாங்க மூன்று பேரும் உள்ளே கொண்டுவந்து வைக்கவேண்டும் என்ற உத்தரவை இட்டுவிட்டு,

காரை விட்டு இறங்கி வீட்டினுள் சென்று விட்டார்கள் பெரியம்மா.நாங்க முன்று பெரும் காரிலிருந்த லக்கேஜ் அனைத்தையும் ஒவ்வொன்றாக கொண்டு உள்ளே வைத்துக் கொண்டிருதோம்.

ஒரு வருடம் கழித்து எதிர்பாராத விதமாக, அன்று எங்கள் வருகையை கண்ட மூர்த்தியும் ,குமாரி அக்காவும் வேணி அக்காவும்,உமாவும் மிகவும் ஆனந்தத்துடன் எங்களை கட்டியணைத்து முத்த மழைகளை பொழிந்தார்கள்.நாங்க முன்று பேரும் அடையாளம் தெரியாமல் மாறிவிட்டதாகவும்,உயரமாக வளர்ந்துவிட்டதாகவும் சொல்லி பூரிப்பு அடைந்தார்கள்.

சாமான்களை எல்லாம் உள்ளே வைத்துவிட்டு,பாத்ரூமுக்கு சென்று முகம் கை கால்களை கழுவிக்கொண்டு, சமயலறைக்கு எதிரே உள்ளே விறாண்டாவில் நின்று கொண்டு மூர்த்தியிடம் பேசிக்

கொண்டிருந்தோம்.பெரியம்மா குளித்து முடித்து விட்டு தன் படுக்கை அறைக்குள் சென்ற சிறிது நேரத்திற்க் கெல்லாம் அவர்கள் படுக்கை அறையிலிருந்து வெளியே வந்த உமா,"அனிதா,அம்மா உன்னை கூப்பிட்டார்கள்"என கூறிவிட்டு வீட்டிற்கு பின்புறம் சென்று விட்டாள் தன் வேலையை கவனிக்க.

நான் பயந்து கொண்டே பெரியம்மாவின் படுக்கை அறையில் நுழைந்ததும்"வந்து என் கால்களை பிடித்துவிடு"என்றார்கள்.உடனே பெரியம்மா படுத்திருக்கும் படுக்கையில் அவர்கள்காலடியில் உட்கார்ந்து கொண்டு, இரு கைகளாலும் பிடித்து அமுக்கிவிட்டு கொண்டிருந்தேன்.இருபது நிமிடங்களுக்கு மேல் இருக்கும்,என் விரல்களும், கையும் வலிக்க ஆரம்பித்து விட்டது.பெரியம்மா அசையாமல் கண்மூடி படுத்திருந்தார்கள். பிடிப்பதை நிறுத்திவிட்டு வெளியே சென்று விடுவதா?அல்லது அவர்கள் போ என்று சொல்லும் வரை தொடர்ந்து அவர்கள் காலை

பிடித்துக் கொண்டிருப்பதா?என யோசித்த வண்ணம் தொடர்ந்து காலை அமுக்கி கொண்டிருந்தேன்.சிறிது நேரத்திற்கெல்லாம் கண் திறந்து பார்த்த பெரியம்மா "போதும்,வெளியே போய் உமாவுக்கு உதவியாக பாத்திரம் எல்லாம் சுத்தம் செய்"என என்னிடம் கூறியபடி "உமா"என அழைத்தார்கள்.பெரியம்மாவின் குரல் கேட்டு ஓடி வந்த நின்ற உமாவிடம் "அனிதாவை பாத்திரம் கழுவ சொல்லியிருக்கிறேன்,நீ கொஞ்சம் நேரம் என் காலை பிடித்துவிடு" என்றார்கள்

நான் பின்னால் உள்ள முற்றத்திற்கு சென்று பார்க்கையில், பெரிய, பெரிய பாத்திரங்கள் நிறைய குவிந்து கிடந்தன.இவ்வளவையும் நான் எப்படி சுத்தம் செய்ய போகிறேன் என ஒரு சில மணி நேரங்கள் மலைத்து நின்று விட்டு எப்படியிருந்தாலும் பெரியம்மா என்னை விடப்போவதில்லை.நான்தான் இவை எல்லாம் விளக்கி ஆகவேண்டும்.மலைத்து நிற்கும் நேரம் கடகடவென காரியத்தில் இறங்குவதே நல்லது

என பாவாடை நனையாமல் உயரே தூக்கி சொருகிய வண்ணம்,கீழே உட்கார்ந்து கொண்டு பாத்திரங்களை தேய்க்க ஆரம்பித்துவிட்டேன்.கொசுக்கள் என் இருகால்களையும் மொய்த்தவண்ணம் கடிக்க ஆரம்பித்துவிட்டது.கொசுகடியால் ஏற்பட்ட அறிப்பினால் கால்களை சொரிந்தவண்ணம் கஷ்டப்பட்டு, எப்படியோ மூச்சை பிடித்துக் கொண்டு பாத்திரங்களை கழுவி முடித்தேன்.

வெளியே வந்து நான் பாத்திரம் கழுவுவதை பார்த்த மூர்த்தி அதிர்ச்சியுடன்,"உமா எங்கே,உனக்கு ஏன் தலை எழுத்து இதை எல்லாம் செய்யறே"என்றார்.நான் மூர்த்தியிடம் நடந்ததை கூறினேனே.கன்னத்தில் கைவைத்தவண்ணம் முகத்தில் கோப கனல் படர நின்றிருந்தத மூர்த்தியை, வேணி அக்காவும்.குமாரி அக்காவும் ஓடி வந்து என்ன நடக்கிறது என பார்த்து அவர்களும் பிரமிப்பு தாளாமல் செய்வதறியாது ,ஏதும் பேச முயாமலும் நின்றிருந்தார்கள்.

“குழந்தை ரொம்ப நாட்களுக்கு பிறகு நம்ம வீட்டிற்கு வந்திருக்கிறது.வந்த இரண்டு மணி நேரம் கூட ஆகவில்லை, அதை இப்படியா வேலை வாங்குவது.இவங்களெல்லாம் ஒரு மனுஷர்களா?தாய்,தகப்பனிடமிருந்து இதுகளை பிரித்துவந்து இப்படி வேலை வாங்குவது, கடவுளுக்கே பொறுக்காது .என்ன மனுஷியோ உன் பெரியம்மா?”என முர்த்தி வாய்விட்டு பெரியம்மாவை திட்டியது.

என்னை வேலை செய்யாமல் இருக்கச் சொன்னாலோ,அல்லது என்னிடம் விட்ட வேலையை வேறு யாரும் எடுத்துச் செய்தாலும் பெரியம்மாவின் கோபத்திற்கு அவர்கள் ஆளாகிவிடுவார்கள் என்பதால் கவலையுடன், நான் பாத்திரம் கழுவுவதை பார்க்க சகிக்காமல் அனைவரும் உள்ளே சென்று விட்டனர்.

பாத்திரங்களை எல்லாம் கழுவி அருகிலுள்ள மேடையில் கவிழ்த்துவிட்டு, சுற்றியுள்ள இடங்களை தண்ணீர் விட்டு கழுவி சுத்தம் செய்துவிட்டு வருவதற்குள் கொசுக்கடி

தாங்காமல் துடித்தேன்.சொரிந்து சொரிந்து கால்களெல்லாம் தோல் பிய்ந்து புண்ணாகி ரத்தம் வந்து விட்டது.வேலை முடிக்கும் சமயம், பெரியம்மா தன அறையை விட்டு வெளியே வந்து, நான் எப்படி வேலை செய்திருக்கிறேன் என பின்னால் வந்து நோட்டம் விட்டார்கள்.என்னுடைய சுத்தமான வேலையை பார்த்துவிட்டு "பரவாயில்லையே,நன்றாக செய்திருக்கிறாய்.வெரி குட்"என பாராட்டிவிட்டு "சரி போய் படுத்துகொள் "நாள்ளை காலையில் நீங்க முன்று பேரும் எழுந்து சாப்பிட்டுவிட்டு எல்லா செடிகளுக்கும் தண்ணீர் ஊற்றி உள்ளே வந்து என்னுடைய ரூமையும் சுத்தம் செய்யவேண்டும்.காலையிலும் சாயந்திரமும் இருவேளைகளிலும் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி வேண்டியது உங்க முன்று பேருடைய பொறுப்பு இனிமேல்"என்று கூறிவிட்டு மறுபடியும் உள்ளே சென்று அண்ணன் ஷானையும் ,தம்பி பாட்ட்டையும் கூப்பிட்டு விஷயத்தை அவர்களிடமும் சொல்லிவிட்டு தன் அறைக்கு தூங்குவதற்கு சென்று விட்டார்கள்.

நான் வரவேற்பறைக்கு வந்த போது ,அங்கு அண்ணன் ஷானும்,தம்பி பாட்டும் புத்தகங்களை தூசு தட்டி சுத்தம் செய்து அடுக்கி வைத்து கொண்டிருந்தார்கள்.நானும் அவர்கட்கு உதவியாக புத்தகங்களை தட்டி சுத்தம் செய்ய ஆரம்பித்தேன்.பெரியம்மா பையன் குமார், அங்குள்ள சோபாவில் உட்கார்ந்து கொண்டு, நாங்கள் வேலை செய்வதை பார்த்து கொண்டே எங்களிடம் பேசிக்கொண்டிருந்தான்.

என் மனம் வேதனை பட்டது .இதே நம் அம்மாவாக இருந்தால் குமாரை இப்படி எல்லாம் வேலை வாங்கி கொண்டு எங்களை உட்கார வைத்து வேடிக்கை பார்க்க சொல்வார்களா? தன் பிள்ளை மட்டும் செல்லமாக வளர வேண்டும், தன் தங்கை பிள்ளைகள் மட்டும் இந்த சிறிய வயதில் வேலை செய்யவேண்டுமா?.என்ன நியாயம் இது?.என என் மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

முர்த்தி சிறிது நேரத்திற்கெல்லாம் ஹாலுக்கு

வந்து குமாரை தூங்குவதற்காக அவன் படுக்கை அறைக்கு போகச் சொல்லி விட்டு ,மீதி வேலையை காலையில் எழுந்து செய்யும்படி எங்களிடம் சொல்லிவிட்டு உமாவை அழைத்து எங்களுக்கு படுப்பதற்காக ஜமுக்காளத்தையும் போடசொல்லிவிட்டு சென்றுவிட்டார்.உமா எங்களுக்காக படுக்க ஒரு நீண்ட ஜமுக்காலத்தையும் ,போர்த்திக்கொள்ள ஒரு நீண்ட போவையையும் கொடுத்துவிட்டு சென்றாள் .ஆனால் தலையணை கொடுக்கவில்லை.நாங்கள் அந்த ஒரே நீண்ட ஜமுக்காளத்தை விரித்துபோட்டு ,அவள் கொடுத்த ஒரேஒரு நீண்ட போர்வையை போர்த்திக்கொண்டு, எங்கள் கைகளை மடக்கி தலையணையாக வைத்துகொண்டு படுத்துக் கொண்டோம்.

ஹாலில் பான் இருந்தும், நாங்கள் அதை போட்டுக்கொள்ள அனுமதி கிடையாது.ஏன் என்றால் மின்சார செலவு அதிகமாகிவிடும் என்பதால எவ்வளவு கொசு கடித்தாலும் நாங்கள் பானை போட்டுக்கொள்ள அனுமதி

கிடையாது என்பதை முன்பே எங்களுக்கு பெரியம்மா கூறியிருக்கிறார்கள்.

விளக்கை அனைத்து விட்டு படுத்த எங்கள் முவருக்கும் தலையணை இல்லாமலும்,பான் இல்லாமலும், போர்த்தி கொள்ள தனி, தனி போர்வை இல்லாமலும் ஒரே போர்வையில் அரைகுறையாக போர்த்திக்கொண்டு கொசு கடியில் தொல்லை தாங்கமுடியாமலும் ,கோடை காலம் என்பதால் மிகுந்த உஷ்ணமாக இருந்ததால், உஷ்ணம் தாங்கமுடியாமலும் அந்த ஒரு இரவை கழிப்பது ஒரு யுகமாக இருந்தது.எங்கள் முவருக்கும் இரவு முழுதும் தூங்க முடியாமல் அவதிபட்டு ,முதல் நான் நீண்ட பயணத்தாலும்,அதன் பிறகு செய்த வேலைகளாலும் , சற்றே களைப்பு ஏற்பட்டு, விடியும் சமயம் எப்படியோ தூங்கிவிட்டிருக்கிறேன்.

மறுநாள் காலையில் ஆறுமணிக்கெல்லாம் “பசங்களா எழுந்திருங்கள ,பல்விளக்கிவிட்டு,காபியை குடித்துவிட்டு என

அறைக்கு வந்துவிடுங்கள்”என பெரியம்மாவிந்த் குரல் கேட்டு வாரி சுருட்டிகொண்டு அரைத்தூக்கத்தில் எழுந்த நின்ற எங்கள் முவருக்கும் நிதான நிலைக்கு வர சில வினாடிகள் ஆயிற்று.

எல்லாம் முடித்துவிட்டு ,காபியும் குடித்துவிட்டு, பெரியம்மா படுக்கை அறைக்கு செல்லும் போது ,குமாருக்கு வேகவைத்த முட்டையும்,தண்ணீர் சிறிதும் கலக்காத பாலில் போர்ன்விடாவும் கலந்து மூர்த்தி சாப்பிட வைத்துக் கொண்டிருந்ததை பார்த்த எங்கள் முவருக்கும் மனம் ஏங்கலாயிற்று.இப்படி ஒரு நாளும் எங்கள் நால்வருக்கும் , அன்புடன் சாப்பாடு யாருமே ஊட்டிவிடவில்லையே,அம்மா உள்பட. குமார் மிகவும் கொடுத்து வைத்தவன்.என்ன மாதிரியான ராஜ பரிபாலனை அவனுக்கு.அவன் ஸ்கூலுக்கு கிளம்பும் போது, உமா அவனுக்கு ஷூ மாட்டி விடுவாள், குமாரி அக்கா அவன் ஸ்கூல் பாகை தயாராக வைத்திருப்பார்கள்,மூர்த்தி அவனுக்கு சாப்பாடை ஊட்டிவிடுவார்,கார் ஓட்டுபவர் அவனை

பள்ளிக்கூடம் சென்று விட்டுவிட்டு வருவார்.மாலையில் அவன் பள்ளிக்கூடம் விட்டு வந்தவுடன் பேக்கரியிலிருந்து சூடாக பிஸ்கட் வாங்கி வந்து கொடுப்பார்கள்.ஆனால் அவனும் ஒரு வார்த்தை கூட எங்களுக்கு பிஸ்கட் வேண்டுமா என கேட்டதே இல்லை எங்களை பார்க்கவைத்து விட்டு, அவன் மட்டும் நன்றாக சாப்பிடுவான்.சில சமயங்களில், முர்த்தி ,அவர் செலவில் எங்களுக்கு பிஸ்கட் வாங்கி தருவார்.

என் பெற்றோரோகள் இருவரும், இவன் பெற்றோரோகளை விட அதிகம் சம்பாதிப்பவர்கள்.அவர்கள் இருவரும் இப்படி எங்களை ராஜ மரியாதையாக வளர்க்க ஏன் தவறிவிட்டார்கள்.இவர்கள் எல்லாம் எங்களை கேவலமாக நடத்துவது அவர்களுக்கு தெரியுமா?நாங்கள் மூவரும் ஏன் அவர்களிடம் இதை பற்றி சொல்லக் கூடாது.சொன்னால் எங்களை எங்கள் பெற்றோரோகள் நம்புவார்களா?என்றெல்லாம் என் மனதில் தோன்றியது.

பெரியம்மாவின் வீட்டில் காலையில் எழுந்ததும் வெறும் தண்ணீர்ர் ஊற்றி காபிதான்.பசி எங்கள் வயிற்றை கிள்ளியது.நாங்க முன்று பேரும் பெரியப்பாவின் ரூமை சுத்தம் பண்ணியாகவேண்டும். .பெரியப்பா எங்கள் முவரையும் அழைத்துச் சென்று அவர்கள் ரூமை திறந்துவிட்டு, உள்ளே போகச் சொன்னார்கள்.உள்ளே சென்ற நான் மலைத்துபோய் நின்றேன்.எங்கு பார்த்தாலும் பாக்ஸ் பாக்ஸாக அடுக்கி, என்னைவிட இருமடங்கு உயரத்திர்க்கிருந்தது . எங்கு பார்த்தாலும் புத்தகங்களும்,அலுவலக பேப்பர்களும், துணிமணிகளும் குவிந்து கிடந்தன.

“எல்லா பாக்சையும் திறந்து புத்தங்கங்களையும்,பேப்பர் அனைத்தையும் தூசு தட்டி, இந்த அலமாரியில் அடுக்கி வைத்துவிட்டு, பாக்ஸில் வைக்க வேண்டியதை அதில் வைத்து விட்டு ,புத்தகங்களை அலமாரியில் அடுக்கி வைத்துவிட்டு,துணிமணிகளை அழகாக மடித்து ,அடுக்கி பெட்டியில் வைக்க வேண்டும்.சுவர்களிலுள்ள ஒட்டடை,

ஜன்னலுலுள்ள ஒட்டடை, இவைகளை சுத்தமாக செய்து ,அறையை சுத்தம் செய்து, குப்பைகளை வெளியிலுள்ள குப்பை தொட்டிகளில் போடவேண்டும் புரியதா?'என ஆணையிட்டுவிட்டு சென்றார்கள்.

பெரியப்பா ஒரு சிடுமூஞ்சி.எப்பவும் சிடுசிடுவென் எதையாவது முணுமுணுத்துக் கொண்டே ,யாரையாவது குறை சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.எங்கள் யாருக்கும் பெரியப்பாவை அறவே பிடிக்காது.வேண்டு மென்றே எங்களை சிறு குழந்தைகள் என்று கூட பார்க்காமல், இப்படி வேலை வாங்க அவருக்கு என்னாதான் அப்படி கல்நேஞ்சமோ?என நினைத்துக்கொண்டு நாங்கள் முவரும் மளமளவென காரியத்தில் இறங்கினோம்.எப்படியோ அன்று ஒரு மாதிரியாக சமாளித்து, பெரியப்பா ரூமை ஒரு வழியாக சுத்தம் செய்து முடித்தோம்.

பெரிய ,பெரிய பெட்டிகளை தூக்கி இறங்கியதில், கைகள் இரண்டும்

வலித்தது.எங்கள் முவருக்கும் வேலையை நிறுத்தினால் பெரியம்மாவிடம் உதய் வாங்க வேண்டும் என பயந்துகொண்டு, வலியை பொருட்படுத்தாமல் முவரும் ஒத்துமையுடன் வேலையை செய்து முடித்தோம்.

இப்படி ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு அறையாக சுத்தம் செய்யவும்,மாலை நேரங்களில் தோட்ட வேலைகளையும் வாங்கி கொண்டு வந்தார்கள்
பெரியம்மாவும்,பெரியப்பாவும்.அவர்கள் மகன் குமார் மட்டும் எந்த வேலையும் செய்யாமல் சோபாவில் சொகுசாக உட்கார்ந்துகொண்டு எங்களிடம் பேசிக் கொண்டு பொழுதை கழித்து வந்தான்.

எப்படா சிதம்பரம் செல்வோம் என நாளை எண்ணிக் கொண்டேயிருந்தோம்.அப்பாவிற்கு கடிதம் போடலாம் என்றால் போஸ்ட் கார்ட் எங்களிடம் பணம் இல்லை.அப்பாவின் முகவரியும் எங்களுக்கு தெரியாது.வெளியே செல்ல அனுமதியும் எங்களுக்கு

கிடையாது.தினமும் பயந்து கொண்டே காலத்தை கழித்தோம்.குமாரி அக்காவுடன் நாங்கள் பேசக்கூடாது என்று ஏற்கனவே பெரியம்மா உத்தரவு போட்டிருப்பதால், குமாரி அக்காவும் பயந்துகொண்டு எங்களிடம் எதுவும் பேசாமல் இருந்துவிட்டார்கள்.

ஒரு நாள் வேலை செய்வதை நிறுத்திவிட்டு அண்ணன் ஷான் குமாருடன் விளையாடிக்கொண்டிருந்தான்.அலுவலகத்திலிருந்து அன்று எதிர்பாராதவிதமாக மதியம் வீட்டிற்கு வந்த பெரியம்மா,அண்ணன் உள்ளே வேலை செய்யாமல் வெளியே விறாண்டாவில் விளையாடிக்கொண்டிருப்பதை பார்த்ததும் கோபமடைந்து,விவிடுவென காரில் இருந்து இறங்கி, அண்ணன் ஷானின் அருகில் வரவே, அண்ணன் பயந்து நடுங்கி எழுந்து நின்று கொண்டு பேந்த பேந்த விழிக்கையில் “உன்னை உள்ளே வேலை செய்யச்சொன்னால், நீ குமாருடன் விளையாடிகொண்டா இருக்கிறாய் கழுதை” என கூறி படபடவென இரு கன்னத்திலும் மாறி மாறி அரை

விழுந்தது.சத்தம் கேட்டு அனைவரும் வளியே வந்த எட்டி பார்கையில் அண்ணனை அடித்துக் கொண்டே ,அவன் தலை முடியை பிடித்து இழுத்துக் கொண்டே உள்ளே வந்ததை பார்த்த எனக்கு அழுகை பொங்கி வந்ததது.நானும், தம்பியும் அழுது கொண்டிருக்கையில் ,அண்ணனை பிடித்து நாங்கள் சுத்தம் செய்துகொண்டிருந்த பெரியம்மாவின் படுக்கை அறைக்குள் தள்ளி விட்டு "வேலையை பாரு நாயே.விளையாட்டு என்ன வேண்டி இருக்கிறது.என மகன் ஒரே பிள்ளை அவனுக்கும் நிறைய பணம் இருக்கிறது.உன் அப்பனோ ஒரு ஊதாரி ,அவனுக்கு பிறந்துவிட்டு என் பையனுக்கு சரிசமமாக இருக்கலாம் என நினைக்காதீர்கள்"என கூர்மையான வார்த்தைகளால் எங்கள் இளம் நெஞ்சத்தை குத்தி கிளறினார்கள்.

அண்ணன் இரு கன்னங்களும் சிவந்து, கண்கள் கோவை பழமாகி தாரை தாரையாக நீர் வழிந்தோட, வாய் பேசாமல் வந்து வேலையை தொடங்கினான்.பயத்தில் நாங்கள் முவருமே

எதுவும் பேசவில்லை. முர்த்திக்கு இதை பார்த்ததும், அதிர்ச்சியில் கனனத்தில் கைவைத்த வண்ணம் நின்றிருந்தார்.என்ன இருந்தாலும் அவர் அந்த வீட்டில் வேலை செய்பவர்கள்தானே .அவரால் என்ன சொல்ல முடியும். வாயடைத்து நிற்க்க மட்டும்தான் முடியும்.பெரியம்மாவின் செய்கை எதையுமே துளிகூட முர்த்திக்கு பிடிக்கவே இல்லை.ஒரு சில முறை அவர் பெரியம்மாவிடம் “என்ன இருந்தாலும் அவர்கள் உங்கள் கூட பிறந்த தங்கையும் குழந்தைகள்,நீங்களும் அவர்களுக்கு ஒரு தாய் போல ,இப்படி அந்த குழந்தைகளை அழைத்துவந்து பாடு படுத்துவதை பார்த்துக் கொண்டு சகித்துக் கொண்டு என்னால் இருக்க முடியவில்லை.தயவு செய்து அவர்களை இங்கு அழைத்து வராதீர்கள்.நீங்கள் செய்வது துளிகூட எனக்கு பிடிக்கவில்லை அம்மா”என வாய்விட்டே கூறி குறை பட்டிருக்கிறார்.

“இது உன் விஷயமில்லை,இதில் நீ தலை இடாதே முர்த்தி.உன் வேலை என்னவோ அதை பார்த்து கொண்டு போ”.என்று முர்த்தியின்

வாயை அடைத்து விடுவார்கள் பெரியம்மா. எப்பவாவது களைப்பாக இருக்கிறது என சற்றே ஓய்வு எடுத்தால் பெரியம்மாவிடம் மனம் புண்படும்படியான வார்த்தைகளையும்,உதைகளையும் பெறவேண்டிய நிலை ஏற்பட்டு வந்தது.

அன்று அண்ணன் ஷான் கதறி அழுததை இன்றும் என்னால் மறக்க முடியாத சம்பவமாக என் மனதில் ஆழ பதிந்துவிட்டது.பாவம் அண்ணன் "பெரியம்மா ,இனிமேல் குமாருடன் விளையாட மாட்டேன்,வலிக்குது பெரியம்மா தலை முடியை விடுங்கள்,இனிமே தப்பு செய்ய மாட்டேன்"என அவன் கதறியது, எங்கள் நெஞ்சை விட்டு நீங்காத புண்ணாக இருந்து விட்டது.

ஒரு நாள் சனிகிழமை இரவு எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு இரவு 1- மணி அளவில் அனைவரும் படுக்கலாம் என நினைக்கியில்,அன்று நல்ல மூடில் இருந்த பெரியம்மா நாங்கள் படுக்க இருக்கும்

வரவேர்ப்பறையில் வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டு, எங்களுடன் கனிவாக பேசிக்கொண்டிருந்தார்கள்.எங்களுக்கே அதிசயமாக இருந்தது.பெரியம்மா இப்படி நல்ல முடில் பார்ப்பது சற்றே அறிதுதான் .ஒரு சில சமயம் அக்கரைகாட்டுவதுபோலவும்,அன்பாக இருப்பது போலவும் இருக்கும் பெரியம்மா, திடீரென பல சமயங்களில் எங்களை கொடுமை படுத்துவது நினைதது எங்களுக்கே புரியாத புதிராகவே இருந்து வந்தது.

“கதை சொல்லட்டுமா பசங்களா”என்றார்கள்.எப்படி இருந்தாலும் படுத்ததும் தூக்கம் வரப்போவதில்லை.வேலை செய்ததில் மிகவும் களைப்பாக இருந்தாலும்,கொசுக்கடி,மிகுந்த வெப்பம்,காற்று இல்லாமை எல்லாம் சேர்த்து தூக்கம் வராமல் அவதிப்பட போகும் எங்களுக்கு சிறிது நேரம் கதை கேட்டால் எல்லாம் மறந்துபோய்விடும் என்பதால் “சரி”என தலையாட்டினோம்.

“என்ன கதை வேண்டும்.? அமெரிக்கா கதை

வேண்டுமா?அல்லது நான் காலேஜில் படித்த கதை வேண்டுமா?"என்றார்கள்.

"அமெரிக்கா கதையே சொல்லுங்கள் பெரியம்மா .அதைதான் பாதியில் விட்டு விட்டீர்கள்"என்றோம்.

"எங்கு விட்டேன் என் ஞாபகம் இருக்கிறதா?"என பெரியம்மா கேட்டதும்.

"நான் முன்பு எழுதிய பேப்பர் சிதம்பரத்தில் இருக்கிறது பெரியம்மா,நீங்கள் கிளார்க்ஸ்டன் ஸ்கூலில் வேலை பார்த்ததை சொன்னீர்கள்"என்றேன்.

சிறிது நேரம் யோசித்த பெரியம்மா சற்றே ஞாபகத்தில் இருந்ததை வைத்துகொண்டு சிறிது நேரம் கதையைக் கூற ஆரம்பித்தார்கள்.அப்போது மூர்த்தி ,வேனி அக்கா,குமாரி அக்கா,உமா அனைவரும் கூட கதைய கேட்க வந்து எங்களுடன் உட்கார்ந்து கொண்டார்கள்.விளக்குகள்

அணைக்கப்பட்டு,இரவு விளக்கை லேசாக எரியவிட்டுவிட்டு, அந்த மந்தமான வெளிச்சத்தில் பெரியம்மா மறுபடியும் தன அமெரிக்கா கதையை தொடர்ந்து கூறினார்கள்.

அத்யாயம்-முப்பத்தி முன்று

“ஒரு நாள் நான் பள்ளிகூடத்தில், ராமாயணம்,மகாபாரதம் இதிகாசங்கள், நமது நாட்டிற்கு உறியதுபோல ,ஆசிய தேசங்கள் அனைத்துக்குக் தம்தம் நிலத்திற்குரிய பெருங்கதைகக் உண்டு,அவற்றில் சிலவற்றை அவ்வப்போது மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லுவேன்.இப்படி கிழக்கு தேசங்களில் வாழ்க்கையின் பண்டைய பழக்க வழக்கங்களையும்,கலாசாரங்களின் அஸ்திவாரத்தை, கதை முலமாகவே மறைமுகமாக எடுத்துச் சொல்வது எனக்குக் அதிக

சுவாரஸ்யமாக இருந்தது.கதைய பாதியில் விட்டால், மறுநாள் வகுப்பு வரும் வரை ,ஆவலால் மாணவர்கள் துடிப்பார்கள்.ஒரு முறை சாகுந்தலம் நாடகத்தை பாதியில் சொல்லி விட்டுவிட்டேன்.அன்றிரவு ஒரு மாணவி பதினோரு மணிக்கு போன் செய்து, தனக்கு தூக்கம் வரவில்லை என்றும், அடுத்தபடி சகுந்தலை கதை என்னவாயிற்று ,ஒரே வரி மட்டும் சொல்லுங்கள்.இரவு பன்னிரண்டு மணிக்கு முன் நீங்கள் தூங்குவதில்லை என்று கூறியதால், இப்போது கூப்பிட்டேன்."

"தொந்தரவு செய்வதற்கு அன்புகூர்ந்து மன்னித்து கொள்ளுங்கள்.கதையின் தொடர்ச்சியை கேட்கும் ஆவல் மிகுதியால், அதே நினைப்பாக இருக்கிறது என்றாள் .சரி போனால் போகிறது அவள் தூங்கி தொலையட்டும் என நினைத்துகொண்டு கொஞ்சம் கதையை சொன்னேன்.பிறகு....பிறகு....என கேட்க ஆரம்பித்தாள் .அதற்குமேல் சொல்லவில்லை நான் "என்றார்கள் பெரியம்மா."

“கதையை கேட்டதோடு நின்றுவிடவில்லை. என் மாணவர்கள்.சில கதைகளை நாடகமாக நடித்து பள்ளிக்கூடம் முழுதுமே காண்பிக்க நினைத்தார்கள்.சாகுந்தலம், புத்த பகவான் கதை,ராமாயணம்,நளதமயந்தி முதலியவற்றை தாங்களே ஆங்கிலத்தில் வசனம் எழுதி நடிக்க திட்டமிட்டனர்.அவர்கள் இஷ்டத்திற்கு விட்டுவிட்டேன்.நான் இருந்த அந்த ஒரு வருடத்தில் ஐந்து நாடகங்களை போட்டுவிட்டார்கள்.இந்த மகத்தான வெற்றியில் அந்த மாணவர்களுக்குத்தான் எவ்வளவு பெருமிதம்.”

“இம்மாதிரிர் காரியங்களில் எல்லாம் அமெரிக்க மாணவர்கள், ஆசிரியர்களை ஒரு அளவிற்குமேல் சார்ந்திராமல், எல்லாம் தாங்களே திட்டம் போட்டு, ஒழுங்கு பண்ணி முடிவுவரை வெற்றியுடன் நடத்திக்காட்டும் பயிற்சியையும்,திறமையையும் பெற்றிருந்தனர்.அதனால் என்னால் அதிக உழைப்பும்,வேலையும் இல்லாமல் போயிற்று.என் வாய் முலமாக கேட்ட கதையை

வைத்துக் கொண்டு, என் மாணவர்கள், வசனம் எழுதிய முறையையும்,நடித்ததையும், படம் எடுத்து, நம் ஊர் மக்களுக்கு காட்டியிருந்தால் மிகவும் ரசித்திருப்பார்கள்."

"வில்போன்ற புருவத்திற்கும்.கோவைசெவ்வாயிருக்கும்,முத்துபற்கள விழிகளுக்கும்,மானைபழிக்கும் மருண்ட பார்வைக்கும், இங்குள்ள மாணவிகளிடையே , யாதொரு குறையுமில்லை என்றே கூறுவேன்.உள்ளூர் பத்திரிக்கைகளிலும், இந்நாடகங்களை பற்றி அழகிய விமர்சனங்கள் எழுதப்பட்டன."

"என்னிடமிருந்து ஆசிய சரித்திரமும், உலக சரித்திரமும் படித்த மாணவர்கள் ,அத்துடன் நில்லாது, இன்னொரு காரியத்தில் தாங்களே முன் வந்து ஈடுபட்டனர்.அமெரிக்காவிற்கு செல்ல தயார் செய்து கொண்டிருக்கையில், அச்சிறுவர்களுக்கு காண்பிக்க வேண்டிய இந்தியா சம்பத்தமான பலவிதமான படங்களையும்

,பொருட்களையும்,சாமான்களையும்,திரட்டி கொண்டு சென்றேன் என முன்பே சொன்னேன் இல்லையா, இந்த வாய்ப்பை முழுதும் பயன்படுத்திக் கொண்டனர் என் மாணவர்கள்."

" நான் கொண்டு சென்ற சாமான்களை கொண்டு, ஒவ்வொரு வாரமும் எங்கள் வகுப்பை அலங்கரிபார்கள்.என் வகுப்பு ஒரே இந்திய மயமாக இருந்தது.நமது திருமணமுறை,கல்யாண வைபவம்,குடும்ப வாழ்க்கைமுறை,இந்திய வீடுகள்,பள்ளிகூடங்கள்,மாநாடுகள்,,நமது பொருட்காட்சிகள்,பரத நாட்டியம்,சங்கீதம்,முதலியன குறித்துள்ள அத்தனை படங்களையும் பார்ப்போர் யாவரும் எளிதில் கேள்வி கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை இல்லாமல், ,விளக்கமாக எழுதி முடித்தப்பின், அறை முழுதும் சுற்றிலும் படங்களை மாட்டிவிடுவார்கள்."

"நான் சொல்லி அவற்றிற்கு விளக்கம் எழுதும் போதே, அவற்றை குறித்து தங்கள் விரிவாக

முதலில் தெரிந்து கொள்வதில் அக்குழந்தைகளுக்கு அலாதி பெருமை.சுமார் 5000 படங்களை எடுத்துச் சென்றிருந்தேன்.ஒவ்வொரு வாரமும் புதிதுபுதிதாக, வாரத்திற்கு 150 படங்களுக்கு குறையாமல் விளக்கம் எழுதி, சலிக்காமல் அவர்கள் சுவரில் மாட்டிவிட்டு, பள்ளிக்கூடம் முழுதும் அழைத்து வந்து, அதை பார்க்கச் சொன்னது அம்மாணவர்களின் திறமைக்கு ஒரு உதாரணமாகும்.

படங்களோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், என் மாணவர்கள் நான் கொண்டு சென்றிருந்த சுவாரஸ்யமான பொருட்களையும், சுருக்கமாக விளக்கம் எழுதி ,வாராவாரம் கொஞ்சம், கொஞ்சமாக வருடம் முழுதும் காட்சிக்காக வைத்துக் கொண்டு போனார்கள். ஒரு வாரம் வகுப்பு முழுதும் கதர் ஆடை துணிமணி மயமாக காட்சி அளிக்கும்.இன்னோர் வாரம் மணியாலான பின்னல்கள்,எம்ப்ராயிடரி முதலியனவும்,மறுவாரம் கோவில் திருப்பணிகள்,சாமான்கள்,பிறகு ஓலையால்

செய்த வேலைபாடுகள்,வீட்டு சாமான்கள் ,தந்த வேலைகள்,மர வேலைகள்,நடன உடைகள்,பழைய நகைகள்,தபால் தலைகள்,இந்திய நாணயங்கள்,கைத்தறி வேலைகள்,கையால் நெய்யப்பட்ட பட்டு சேலைகள்,பழைய காலத்து கொட்டடி புடவைகள்.சரிகை வேலைபாடுகள்,நவதானிய வகைகள் அத்தனையும் தினுசு தினுசாக எல்லோர்ரையும் அழைத்து காண்பித்து மகிழ்ந்தார்கள்.”

“பள்ளிகளோடு சேர்ந்து பக்கத்திலிருக்கும் நூல்நிளையத்திலும், இக்காட்சிகள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் நடக்க ஏற்பாடு செய்தனர்.எனக்கும், இதனால் நாட்கள் பறந்ததே தெரியாமல் போயிற்று.நான் இருந்த இரண்டு பள்ளிகூடங்களிலும், இதே போல அந்த இரண்டு வருடங்களிலும் என் மாணவர்கள், நான் அவர்களுடன் இருந்த அறிய வாய்ப்பை முழுமையாக பயன்படுத்திக் கொண்டனர் என்றால் அது மிகையாகாது”என்றார்கள் பெரியம்மா.

“அமெரிக்கா நாட்டின் பள்ளிகூடங்களில் இருக்கும் விதவிதாமான சங்கங்களுக்கு குறைவில்லை.ஆசிய சங்கம் ஒன்று ஏற்பட்டது.மற்ற சங்கங்களை போல, இச்சங்கமும் யாராவது ஒரு மாணவர் வீட்டில், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கூடுவது வழக்கம்.பேச்சில் திறமை உள்ள மாணவர்கள், தங்களுக்கு பிடித்த ஆசிய கண்டத்தை ஒட்டி, பொருள் பற்றி பேசுவார்கள்.சீனாவில் ஆதி நாகரீகம்,காந்தி மகான் வாழ்க்கை சரிதை,ஆசிய மதங்களின் தத்துவங்கள்,நமது நேருஜியின் வரலாறு முதலியன அவர்களுக்கு பிடித்த விஷயங்கள்.என்னை கேட்டும், நூல் நிலையத்திலிருந்தும் எடுக்கும் புத்தகங்களைக் கொண்டு, வேண்டியது படித்து ,சங்கம் கூடும்பொழுது சொற்பொழிவை ஆற்றுவார்கள் .

“ஒவ்வொரு வாரமும் விழிப்பாக இருந்து , இதை எல்லாம் தொடர்பு அறுந்து போகாமல் வகுப்பு பாடம் சொல்லி கொடுப்பதுடன்,வெளியில் சொற்பொழிவிற்கு போவதுடனும் நில்லாது- பள்ளிக்கூடம் முழுதும் பார்வைக்கும்

கண்காட்சியாக அமைப்பது பிரயாசைதான் என்றாலும் மாணவர்கள் இதை கொண்டு ,நமது நாட்டை பற்றி கொஞ்சம் நேரடியாக தெரிந்து மகிழ்கிறார்கள் எனபதை பார்க்கையில் என் கஷ்டமெல்லாம் நொடியில் பறந்து விட்டது என்பதில் சந்தேகமில்லை"என்றார்கள் பெரியம்மா.

"ஓலை சுவடிகளை திருப்பி,திருப்பி,பார்ப்பதும், நடராஜர் தத்துவத்தை அறிந்து பின் ,அந்த -நான் கொண்டு சென்றிருந்த, ஒரு அடி உயரமுள்ள பஞ்சலோக நடராஜ சிலையை நோக்குவதிலும் அவர்களுக்கு இருந்த ஆர்வம் கடைசிவரை குறைவேயில்லை. காற்றுள்ள போதே தூற்றி கொள்வதில் என் அமெரிக்க மாணவர்கள், அதிக சாமர்த்தியர்கள் என்பதற்கு, இதை விட வேறு என்ன உதாரணம் வேண்டும்?"என்றார்கள் பெரியம்மா.கேட்க மிகவும் அதிசயமாக இருந்தது எங்களுக்கெல்லாம்.

"மேலும் வகுப்பில் அத்தனை

மாணவ,மாணவியரின் பெயர்களையும் தனித்தனியே தமிழிலும்,ஹிந்தியிலும் என்னை எழுத வைத்து அப்படியே காப்பியடித்து, தங்கள் புத்தங்கங்கள் மீது எழுதிவைத்துக் கொண்டனர்.அத்துடன் ஒரே நாட்டிலுள்ள இரு பாஷைகள் இவ்வளவு வித்யாசம் எழுத்துக்களில் காணப்படுமா?என்பதில் அவர்களுக்கு அவ்வளவு ஆச்சர்யம்.மேலும் நம்முடைய பழமொழிகளில் சிலதை கேட்டு எழுதிக் கொண்டனர்.அவைகளில் சில அமெரிக்க நாட்டிலிருப்பது போலவே இருக்கிறது என தங்களுக்குள் பேசிக் கொண்டனர்."என்றார்கள் பெரியம்மா.

"ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்த திருக்குறள் புத்ததகத்தை அவர்களிடம் கொடுத்து படிக்கச் சொல்லுவேன்.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், வசித்த ஒரு முனிவர் இதை எழுதினார் என்று சொல்கிறீர்களே, எங்களால் நம்பே முடியவில்லையே.இன்று நமக்காக எழுதியது போல அல்லாவா இருக்கிறது, என திரும்ப, திரும்ப கூறி மாணவர்கள் ஆச்சர்யமடைந்தனர்.அச்சிறுவர்கள் புத்தகத்தை,

என்னிடமிருந்து கடன் வாங்கி சென்று, தங்களுக்கு வேண்டியவர்களிடம் எல்லாம் காண்பித்தும்,படித்தது காட்டியும் வந்தனர்"என்று மிகவும் பெருமிதத்துடன் கூறினார்கள் பெரியம்மா.

"அளவுக்கு மீறி மனைவிக்கு கட்டுப்பட்டு, அவள் சொன்னபடி எல்லாம் ஆடக்கூடாது என்று திருக்குறளில், ஒரு இடத்தில் இருக்கிறது.இருபதாம் நூற்றாண்டில், அமெரிக்க நாட்டில், இந்த ஆண்கள் படும் பாட்டை தூரதிஷ்டியால், எதிர்காலத்தை பார்த்துத்தான், அந்த திருவள்ளுவர் அப்படி எழுதியிருக்கக்கூடும் என்று ஒரு பையன் சொல்லி, தன்னை சாந்தபடுத்திக் கொண்டான்"என வேடிக்கையாக கூறி சிரித்தார்கள் பெரியம்மா.

"முதல் வருடத்தில் கிளார்க்ஸ்டன் சங்கதத் தலைவனாக இருந்த மாணவன், என் ஆசிய சரித்திர வகுப்பில் இருந்தான்.கோடைவிடுமுறைக்கு இன்னும் இரண்டு மாதங்களே இருந்தது.அவனை ஒரு

நாள் பிரின்சிபால் கூப்பிட்டு, இந்த நகரத்தில், எந்த சங்கங்களிலும் இல்லாத மக்கள், நமது இந்திய ஆசிரியர் வாயிலாக, அவர் நாட்டை பற்றி அறிய வாய்ப்பு இல்லையே என்று என்னை பார்த்து அடிக்கடி குறை கூறுகிறார்கள். அதற்கு, அவரிடம் படிக்கும் நீங்கள் ஏதும் ஏற்பாடு செய்வதற்கு இல்லையா?என்று கேட்டு வைத்ததுதான் தாமதம்

“யாருடைய உதவியும் இல்லாமல் தாங்களே திட்டம் போட்டு, இதற்க்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தனர்.ஏப்ரல் மாதம், நாலு வாரங்களிலும் வெள்ளிக்கிழமை தோறும், இரவு ஏழு மணிக்கு, அந்த நகர பொது மக்களுக்காக, அந்த நகர டவுன் ஹாலில் ,எக்சிபிஷன் ஒன்றை விதவிதான ஏற்பாடுகள செய்து ,இந்திய கல்வித்திட்டம்,அரசியல் முறை,நவீன இந்தியா,இந்திய மதங்கள் முதலியவற்றை பற்றி நான் பேச முடியமா?என கேட்டு ஊர்ஜிதபடுத்திக் கொண்டு, மேற்கொண்டு ஆவதை ஏற்பாடு செய்தனர். இதை திறம்பட ஏற்பாடு பண்ணுவது குறித்து பல கமிட்டிகள்

ஏற்படுத்தப்பட்டு, மாலை வேலைகளிலும், சில மாணவர்கள் வீட்டில் இவர்கள் எல்லாம் கூடி, ஆலோசனை செய்து வந்தனர்.இருக்கும் வேலையை, அவரவர் சக்திக்கு தகுந்தாற்போல பிரித்துகொண்டனர்.இதனால் எனக்கு அதிக வேலை இல்லாமல் போயிற்று.இப்படிப்பட்ட, எள்ளு என்பதற்குள் எண்ணையாக நிற்கும் மாணவ,மாணவிகள் இருக்கையில் எனக்கென்ன கவலை?"என்றார்கள்.

"ஆசிய சரித்திர மாணவர்கள் அனைவரும் கூட்டத்திற்கு தவறாது வந்தார்கள்.அதோடில்லாமல் அந்த ஹாலில் ஒழுங்கு படுத்தி வைத்துள்ள படங்களை,பொருட்களை முதலியவற்றை வரும் மக்களுக்கு விளக்கினார்கள்.பொருட்காட்சியின் ஒவ்வொரு பிரிவிற்கும் ,ஒவ்வொரு மாணவன் பொறுப்பேற்றான்,நான்கு வாரங்கள வெவ்வேறாக பிரித்து வைத்தும்-படங்கள் அனைத்தும் பார்வைக்கு எடுத்து வைக்க முடியாமல் போயிற்று"என்றார்கள்.

“அந்த நான்கு வாரமும் நடத்திய பொது மக்கள் கூட்டத்திற்கு,ஒவ்வொரு மாணவன் அல்லது மாணவி தலைமை வகித்து என்னை சபையோருக்கு அறிமுகபடுத்திவைத்தனர் .மேஜைமேல் நம் கதர்க்கொடியை பறக்கவிட்டார்கள்.மேஜைக்கு முன்னே சிவபெருமான் உட்கார்ந்து, கண்களை மூடி தியானத்தில் ஈடுபட்டு,புலித்தோல் உடுத்தி,முடியில் நச்சுப்பாம்பு படம் எடுத்து ஆடுவதுபோல இருக்கும் சித்திரம் ஒன்றை, கையாலேயே வரைந்து வைத்திருந்தார்கள்.நான் கொண்டு சென்ற எவ்வளவோ புராண படங்கள் இருக்க, இந்த படத்தை ஏன்? தேர்ந்தெடுத்து,அவ்வளவு அக்கறையுடன் வரைந்து வைத்தார்கள் என்றுதான், எனக்கு இன்னமும் புரியவில்லை”என்றார்கள் பெரியம்மா.

“இக்கூட்டத்தை பிரசாரபடுத்த வேண்டி, பெரிய நோட்டீஸ் துண்டு பிரசாரங்கள் எல்லாம் மாணவர்களே கண்காணித்துக் கொண்டனர்.எல்லா பெற்றோர்களுக்கும் இது

பற்றி நோட்டீஸ்
அனுப்பப்பட்டது.அதோடில்லாமல் உள்ளூர்
பத்திரிக்கைகளிலும், இது குறித்து விளம்பரம்
செய்தார்கள் என் மாணவர்கள்"என்றார்கள்.

"கிளார்க்ஸ்டன் — லூயிஸ்டன் நகரங்களிலும்
எல்லா பொது இடங்களிலும் இந்த நோட்டிஸ்
காணப்பட்டன. " நான்கு வாரங்கள் ,இதுபோல
சலிக்காமல் வேலை செய்தார்கள்.அவர்களின்
ஆர்வத்தை என்ன என்று வர்ணிப்பேன்.அதற்கு
வார்த்தைகளே இல்லை.வரும் மக்களை
புன்முறுவலுடன் வரவேற்க சில மாணவிகளை,
என் உதவி கொண்டு சேலை கட்டி
கொண்டும்,நெற்றியில் போட்டு வைத்துக்
கொண்டும் நின்றிருந்தார்கள்."

"இப்படி விளையாட்டாகவே இரண்டு
ஆண்டுகள் அமெரிக்காவில் ஓடிவிட்டன.நான்
சொல்லி தந்தது ஒரு பங்கு என்றாலும், அதை
தங்கள்
ஊக்கத்தினாலும்,முயற்சியாலும்,பன்மடங்காக்கிய,
அந்த சீனியர் மாணவர்கள் விருத்தி செய்து

கொண்டது பெரியதும் பாராட்டத்தக்கதே.அதை பாராட்டுவதுக்கு வார்த்தைகள் போதாது."என்று கூறினார்கள் பெரியம்மா.மேலும் அமெரிக்க கல்வி திட்டம் எப்படிப்பட்ட ஒரு கருத்தோடு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்று உடல் சிலிர்க்க கூறினார்கள் பெரியம்மா.

"ஆசிய நாடுகளின் நெருங்கிய உறவு தற்போது மேல் நாடுகளுக்கும்-முக்கியமாக அமெரிக்கா தேசத்திற்கும் வேண்டியிருக்கும்போது, என்னை போன்ற ஒருவரை, தங்களிடையே வந்து ,நேரடியாக விஷயத்தை உணர்த்தியது, பெரிய காரியம்தான் என அந்த ஸ்கூல் சூபெரிண்டேண்டேன்ட் அடிக்கடி சொல்லிவிடுவார்.மிக பரந்த தன்மையுடைய நாட்டிலேயே, முதன் முதல் தன் பள்ளிகூடத்திலேதான், என்னை கொண்டு ,ஆசிய பாடத்தை புகுத்த செய்ததில், அவருக்கு அதிக பெருமை என்பது, நான் சொல்ல தேவையே இல்லை."என்றார்கள்.

“ஏகப்பட்ட புதுவிஷயங்களை, அம்மாணவர்கள் ,என் மூலமாகத்த் தெரிந்து கொண்டது மட்டும்மல்ல, நானும் புதிய அனுபவத்தால், எவ்வளவோ பயனடைந்தேன் என்றே சொல்ல வேண்டும்.இரண்டு வருடங்களாக அம்மாணவர்களிடம் தினமும் பழகி வந்ததால் , அநேக புதிய விஷயங்களை கற்றுக் கொண்டேன்.இப்படி அமெரிக்க பள்ளிக்கூட மாணவ வாழ்க்கையை குறித்து கொஞ்சம்,கொஞ்சமாக மறை முகமானவை உள்பட, எல்லாம் தெரிந்து கொண்டேன்.என்னை ஒரு அந்நியராகவே கருதாத அக்குழந்தைகள், எல்லாவற்றையும் என்னிடம் கூறிவிடுவார்கள்”என்றார்கள் பெரியம்மா

“அடுத்தது அவ்வருடம் கிறிஸ்மஸ் சமயம். லூயிஸ்தனில் எனக்கு தெரிந்த ஒரு பெரிய குடும்பத்தை சேர்ந்த அம்மாள், பரிசுகள் ராப் பண்ணுவதர்க்கென்றே ,ஒவ்வொரு ஆண்டும், நூற்றி ஐம்பது டாலருக்கு மடித்துக் கட்டும் கலர் காகிதம் மட்டுமே வாங்குவது என்பது ஊர்

அறிந்த விஷயம்.அப்படி என்றால் ,அவர் அவ்வளவு பரிசுகள் எத்தனை பேருக்கு,என்னென்ன விலையில், சுமாராக வாங்கி இருப்பார், எனநினைத்து பாருங்கள்.பரிசுகளின் விலைக்கு ஒப்பிடும்போது, அந்த காகிதத்தின் விலை ஒன்றும் இல்லாமல் போகலாம். ஆனால் காகிதம் வாங்கும் விலைக்கு, ஒரு நல்ல பரிசே வாங்கி விடலாம் போலிருக்கிறது"என மனவேதனையுடன் கூறினார்கள் .

"இரண்டாவது ஆண்டில் நான் வசித்த ஸ்போக்கென் நகரம், கிளார்க்ஸ்டனிலிருந்து, வடக்கே 150 மைல்கல்தான்.ஸ்போகேனிலிருந்து மூன்று மணி நேரத்தில், கனடா நாட்டிற்கு எல்லை அடைந்துவிடலாம்.ஸ்போகேன் நகருக்கும், நியூயார்கிர்க்கும் மூன்று நாட்கள் ரயில் பயணம்.ஸ்போகேன் நகரத்தில் ஐந்து லட்சம் ஜனத்தொகைக்குமேல் இருந்தாலும் ,சிறுவர்,சிறுமியர் உள்பட நான் யார் என்பது நன்றாகத் தெரியும் அங்கு வசித்த இந்திய பெண்மணி நான் மட்டும்தான்,ஆகவே

கடைகளிலும்,ஆலைகளிலும் பற்பல தொழிற்சாலைகளிலும் எனக்கு முழு சுதந்திரம்தான் என்றால் அது மிகை ஆகாது"என்று சொன்னார்கள்.

"அமெரிக்கா சென்றிருக்கும் நான், அவர்கள் வாழ்க்கை குறித்த நுட்பங்கள் பலவரையும் விவரமாக அறிந்து சென்று, இந்திய மக்களுக்கு நான் உண்மையை எடுத்துச் சொல்லவேண்டும் என்ற நோக்கம் படைத்தவர்கள் அமெரிக்கர்கள்.இப்படிப்பட்ட பண்பு அவர்களுக்கு இருந்ததால்தான், அவர்களிடமிருந்து செய்திகள் பலவற்றை திரட்டுவதில், கொஞ்சமும் எனக்கு கஷ்டமில்லை.அனுபவம் இல்லாத சிறுவர்கள் கூட, அந்நாடு சென்றால், மிக எளிதில் விஷயங்கள் பலவற்றை திரட்டிக் கொள்ளாலாம்."என்றும் கூறினார்கள்.

"அந்நியர்கள் தத்தம் தாய் நாட்டிற்கு திரும்பியபின், தங்கள் பார்த்த அமெரிக்க நாட்டை பற்றி பிரமாதமாக சொல்லவேண்டும்

என்ற பெரும் அக்கறைக் கொண்டவர்கள் அமெரிக்கர்கள்.இதுபற்றி அவர்களை நாம் யாதொரு குறையும் கூறுவதற்கில்லை.ஏழ்மையிலிருந்தாலும் ,செல்வத்தில் புரண்டாலும்,தாய் நாட்டைக் குறித்து பெருமை கொள்வது மானிட குலத்திர்க்கே இயற்க்கை சுபாவம்தானே|அப்படியிருக்க வளமை மிக்க வாழ்க்கையை தங்களுக்கு செப்பனிட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்கர்களுக்கு தம் நிலத்தைக் குறித்து மிதமிஞ்சிய பெருமை இருப்பதில் குறையே இல்லை"என்று அமெரிக்க மக்களின் குணத்தை மிகவும் பாராட்டி பேசினார்கள் பெரியம்மா.

"கிறிஸ்மஸ் சமயத்தில், மாணவர்கள் , தங்களுக்கு பிடித்த வேலைகளில், முன்னமே ஏற்பாடு செய்து கொண்டு, பள்ளிகூட மணி அடித்ததும், தாண்டி விழுந்து கொண்டு ,அவர்கள் வேலைக்கு ஓடுவதை பார்க்க எனக்குசிரிப்பு சிரிப்பாக இருக்கும்.அப்படி வேலை செய்வோரில், பெரும்பாலோர், தினமும்

மாலை பதினைத்து அல்லது இருபது டாலராவது சம்பாதிக்காமல் இருக்க மாட்டார்கள்.இரவில் கடைகளுக்கு போய், நான் சுற்றும் போது ,வாடிக்கையாளர்களை ரொம்ப அனுபவம் உள்ளது போல கவனித்து அனுப்பும் எனது மாணவர்களை பார்த்து, நான் ஆச்சர்யபட்டதுண்டு.எவ்வளவு தன்னம்பிக்கை,என்ன தைரியம்,எப்படித்தான் அவ்வளவு கருத்துக்கள் அக்குழந்தைகளுக்கு, அந்த வயதில் ஏற்படுகிறதோ|மிகமிக மெச்சத்தக்கதே|"என மிகவும் பாராட்டி பேசினார்கள் பெரியம்மா.

"மேலும் அமெரிக்க பெண்களை பற்றி நமக்கு எவ்வளவோ தப்பு அபிப்பிராயம் இருப்பது உண்மை.வீட்டை தங்கள் சொந்த அணிகலன்களாக கருதி , அதை கண்ணும், கருத்துமாகவே சுத்தம் செய்து,,வீட்டை ஒரு தும்பு தூசி கூட சேர்க்காமலும்,வீட்டில் அளவுக்கு அதிகமாக பொருட்களை சேர்க்காமலும்,வைத்து பாதுகாப்பதில், இப்பெண்களை வேறு எந்த நாட்டவரும் தோற்கடிக்க முடியாது என்பது

நிச்சயமாக சொல்லுவேன்.வெளியில் சென்று, ஆண் பிள்ளைகளை போல வேலை செய்து சம்பாதிக்கிறோமே என்ற சாக்கு வைத்துக் கொண்டு, இங்கே பெண்கள் தங்கள் வீட்டை பற்றி கொஞ்சமும் கூட அலட்சியமாக இருப்பதில்லை. ஒரு மூலையில் ஒரு சின்ன அழுக்கு அல்லது தூசு இருந்தால் கூட, பார்க்க சகிக்க மாட்டார்கள்.படித்த பெண்களுக்கு வீட்டு வேலை என்ன செய்யத்தெரியும்? என நம் இந்தியாவில் நாம் நினைத்து சமாதானபடுத்து கொள்வது போல, அந்த நாட்டில் பழக்கமில்லை. சமூகத்தில் எவ்வளவு சம உரிமைக்கு போராடினாலும், இல்லம் என்பது, பெண்களுக்கு உரித்தான ஒரு தனி இலாகா என்பதை அமெரிக்க நாட்டு பெண்கள் மறக்காமல்தான் பாதுகாத்து வருகிறார்கள்."என அமெரிக்க பெண்களை வெகுவாக பாராட்டி, எங்களையும் அதுபோல வீட்டு வேலைகளை செய்து பழகச்சொல்லி, அவர்களை போலவே இருக்கவேண்டும் என புத்திமதி கூறினார்கள் பெரியம்மா.

“வீடு வேலை செய்பவர்களுக்கு சம்பளம் கொடுத்து கட்டுபடியாகாது என பெரும்பாலான்மையான பெண்கள் ,தங்கள் வீட்டு வேலைகளை தாங்களே செய்வது மிகவும் பாராட்டத்தக்கதே “என்றார்கள்.

“படித்த பெண்களுக்கு சமைக்கத்தேரியாது, என நம் இந்தியாவில் பெருமை அடித்து கொள்வதை கேள்விப்படும் பட்ச்சத்தில், அமெரிக்க பெண்கள் கேலிசெய்து கைகொட்டி சிரிப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.நம் ஊரில் பெண்கள் அதிகம் படிக்கும் பட்ச்சத்தில்,உத்தியோகம் பண்ணும் பட்ச்சத்தில் ,அநேகர் விளக்குமாற்றை எடுத்து தரையை கூட்டுவதைகூட இழிவாக கருதுவார்கள்.அத்துடன் பாத்திரங்கள் கழுவுவதையும்,துணி துவைப்பதையும்,நம்மூர் படித்த பெண்கள் செய்வது பெரும்பான்மையோர் வரவேற்ப்பதில்லை.வேலைகாரி ஒரு நாள் லீவு போட்டுவிட்டால், அவர்களுக்கு ஒரே திண்டாட்டம்தான் அன்று.ஆனால் அமெரிக்க பெண்கள் எவ்வளவு உயர்ந்த படித்ப்பு

படித்திருந்தாலும்,உயர்ந்த உத்யோகத்திலி
ருந்தாலும், வீட்டு வேலை எல்லாவற்றையும்
செய்வது அவர்களுக்கு தண்ணீர்பட்ட
பாடுதான்"என்றே சொல்வேன்
நான்.என்றார்கள்

"அமெரிக்க பெண்கள் தங்கள் வீட்டை
கண்காணிக்கும் முறையிலிருந்து நானும் சிறிது
பாடம் கற்றுக் கொண்டேன் என்றுதான்
சொல்லவேண்டும்.எவ்வளவு வெளிவேலை
இருந்தாலும், தங்கள் வீட்டு வேலையை,
யாருடைய உதவியும் இல்லாமல்,
இப்பெண்களே பார்த்துக் கொண்ட
முறையும்,சமையல் செய்து,பாத்திரம் கழுவி,
துணி மணிகளை துவைத்து,சலவை செய்து
ஒழுங்கு படுத்தும் விதமும்,குடும்ப வரவு செலவு
கணக்குகளை பார்த்து நடந்ததும் முறையும், என்
கவனத்தை வெகுவாகவே கவர்ந்தது."என
பெரியம்மா மிகவும் பிரம்மிப்புடன் கூறினார்கள்.

"அமெரிக்க பெண்கள் வீட்டில் உடல் வளைத்து
வேலை செய்வதை பெருமையாகவும்

கருதுவதில்லை.இழிவாகவும் கருதுவதில்லை.இதை எல்லாம் தங்கள் தினப்படி வாழ்க்கையில் ஒரு சகஜமான கடமை என்றே நினைக்கிறார்கள்”என்றும் கூறினார்கள்.

“அன்றாட வாழ்க்கையில் , சில்லரைப் பிரச்சனைகளை எல்லாம் எழுந்து நம்மை தினமும் கொல்லாதிருக்கும்படி ,வசதி ஒவ்வொன்றையும் நுட்பமாக ஆராய்ந்து, அதற்க்கு தக்கபடி, தங்கள் சமூக வாழ்வை , எவ்வளவு இன்பமாக ஆக்க முடியுமோ, அவ்வளவும் ,அந்த அமெரிக்க பெண்கள் உழைத்து செய்து கொண்டிருப்பவையே.அதிக ஆச்சரியம்தான்|கஷ்டங்கள் ஏதும் இல்லாமல் காலையில் எழுதிருப்பதிலிருந்து, இன்முகத்துடன் அன்று தினத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆவல் படைத்தவர்கள் அமெரிக்க மக்கள்.அதனால் ஒரு பிரச்சனையை இருந்தால் கூட சகிக்க மாட்டார்கள் அவர்கள்.பிரச்சனைக்கு பரிகாரம் தேடாவிட்டால் ,அவர்களுக்கு தூக்கம் பிடிப்பதில்லை.அதனால்தான் கஷ்டம் ஏதுமின்றி, தினப்படி வாழக்கை போவது தெரியாமல்

தவழ்ந்து செல்ல வேண்டி,உள்ளமும் ,புறமும் கணக்கற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.இதில் அமெரிக்க நாட்டினருக்கு இணை அவர்களே என்றுதான் நான் சொல்லுவேன்"என்றார்கள்.

"இன்னொரு விஷயம் இங்கே சொல்லப்போகிறேன்.எவ்வளவு உயர்ந்த படிப்பு படித்து பெரிய உத்யோகத்திலிருக்கும் ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி கடைக்கு தாங்களே சென்று பொருட்களை வாங்கி, அவற்றை கையில் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு செல்வதை ,அங்கு கௌரவ குறைச்சலாக கருதுவதில்லை.இது மிகவும் பாராட்டக்கூடிய விஷயமே.வேலைக்காரி என்றாவது லீவு போட்டுவிட்டால் கூட, என் தாயார், என்னை சின்ன வயதில் கறிகாய் வாங்க கடைக்கு அனுப்பியது கிடையாது.கறிகாய் பையை கையில் மாட்டிக் கொண்டு செல்வதென்றால், நம் இந்தியர் பலருக்கு, அது இழுக்காக தோன்றும்.வேலைக்காரர்கள் இல்லாவிட்டால் ,கஷ்டபட்டாலும் பாடுவோமே தவிர, நாம்தான்

கடைக்கு போய் வேண்டியதை வாங்கி வந்தால் என்ன என்று ஒரு போதும் எண்ணியது கிடையாது"எனவே நீங்கள் எல்லாம் அப்படி வளராமல் தன கையே தனக்குதவி என்று வளர வேண்டும்..இதற்காகத்தான் இவ்வளவு கதைகளும் உங்களுக்கெல்லாம் சொல்லுகிறேன் என்று எங்களை பார்த்து சொன்னார்கள் பெரியம்மா.

"நம் நாட்டு உத்தியோகஸ்தர்கள் பலருக்கு, ஆண்களும் சரி,பெண்களும் சரி, கறிகாய் கடை,மளிகை கடை ,எப்படி இருக்கும் என்று கூட சிலருக்கு தெரிய வாய்ப்பில்லை.கடையில் சாமான் வாங்குகையில் ,வேலைகாரர்கள் திருடினாலும் பரவாயில்லை என சகித்துக் கொண்டு இருப்பார்களே தவிர, அதை தவிர்க்கும் பொறுட்டாவது, தாங்களேதான் போனால்தான் என்ன?முழ்கியா போய்விடும் என்று நினைத்து கடைக்கு கிளம்ப மாட்டார்கள்.இப்படி பழைய காலத்து பாணியில் வைத்து, நாம் பார்க்கும் கௌரவம் எல்லாம் அமெரிக்க மக்கள் பார்ப்பதில்லை.இவ்வளவு

சொல்கிறேனே தவிர, நானும் இந்தியாவில் துணிந்து கறிகாய் கடைக்கோ,மளிகை கடைக்கோ போனது கிடையாது."என்றும் கூறிவிட்டார்கள் பெரியம்மா.

"வீட்டில் துடைப்பகட்டை இல்லை, கடைக்கு போய் விளக்கமாறு வாங்கி வா, அதை தூக்கி கொண்டு தெருவில் நடந்து வா, என்று என் கணவரிடம் சொன்னால் ,தன்னுடைய உயிரே போய்விடும் போலதான் தோன்றும்.நானாவது துடபத்தை கையில் தூக்கி கொண்டு வருவதாவது என்று மனதில் ஆணவமும் கௌரவமும் ஏற்படும்.இவ்வளவெல்லாம் அமெரிக்க நாட்டு மக்களின் வாழ்வை விவரமாகக் கண்டும் , இந்தியா திரும்பிய பின்னும், எனக்கு இந்த தைரியம் வராததை ஒத்துக் கொள்கிறேன்.இதெல்லாம் நம் ரத்தத்தில் ஊறியுள்ளது என்றே கூறுவேன்"என்றார்கள் பெரியம்மா.

"மாலை நேரத்தில் சிற்சில சமயங்களில், எங்கள் பள்ளிக்கூட சூபெரிண்டேன்ட்டேன்டின்

மனைவி டெலிபோனில் ,ஆபீஸ் முடிந்ததும் வீடு வரும் போது, மளிகை சாமான்கள் வாங்கி வருமாறு உத்தரவு பிறக்கும்.பெரிய உத்யோகத்திலிருக்கும் சூபரிண்டேண்டேன்ட் வாய் பேசாது,வழியில் கடையில் சாமான்களை வாங்கிச் செல்வதை பார்க்க என் மனம் அதிசயிக்கும்.எவ்வளவு பெரிய பதவியிலிருந்தாலும், த்ன் கையே தனக்குதவி என்பதில் முழு நம்பிக்கை படைத்தவர்கள் போலும் அமெரிக்கர்கள்.

அமெரிக்காவில் பாலும்,தேனும் வழிந்தோடுகிறது என்றால் அது மிகையாகது.அவ்வளவு சுத்தமான பாலும், தேனும் அங்கே கிடைக்கிறது."என்றார்கள்.

"அமெரிக்காவில் ,ஸ்போகேன் நகரத்தில் நானும் உங்கள் பெரியப்பாவும் தங்கியிருந்தபோது தனி வீடு எடுத்திருந்தோம்.தினமும் இரவில் இந்திய சாப்பாடுதான்,சாதம், சாம்பார், ரசம், அப்பளம்.,வடவம் இல்லாமல் நாங்கள் சாப்பிட்டதே இல்லை.வற்றல் வடாம் எல்லாம்

இங்கிருந்தே எடுத்து சென்றிருந்தேன்.அரிசி அங்கே மிக நன்றாக கிடைத்தது.இரவில் உட்கார்ந்து சாப்பிடும் போதெல்லாம் அமெரிக்காவில்தான் இருக்கிறோம் என்ற நினைவே எங்களுக்கு இருக்காது."என்றும் சொன்னார்கள்.

"இப்படியாக என் அமெரிக்க வாழ்க்கையைஒரு வழியாக முடித்துவிட்டு இந்தியா திரும்பி விட்டேன் "என்று முடித்தார்கள்.பிறகு இரவு நேரமாகிவிட்டதால் தூங்குவதற்கு சென்றுவிட்டோம்.

வழக்கம் போல சிறிது நேரம் வரை தூக்கம் வராததால் பெரியம்மா சொன்ன கதைகளை நினைத்து பார்த்தேன். அமெரிக்காவை பற்றி இவ்வளவு பெரியதாக பேசும் பெரியம்மா நல்லவைகளை தெரிந்துவந்த பெரியம்மா,அமெரிக்க குழந்தைகளின் அன்பையும்,மரியாதையையும் பெற்ற பெரியம்மா, எங்களை மட்டும் ஏனிப்படி அடிமை போல, வேலை

வாங்குகிறார்கள்.அமெரிக்காவிலுள்ள குழந்தைகள் போல பொறுப்புடன் நாங்கள் வளர வேண்டும் என்றா?அப்படி என்றல் அவர்கள் பிள்ளை குமாரை மட்டும் ஏன்? அப்படி பொறுப்புள்ளவனாக வளர்க்க தவறிவிட்டார்கள்.என என் மனதிற்குள் கேள்விகள் எழுந்தன.

பரவாயில்லை அமெரிக்காவிலிருந்து நல்லதை கற்று கொள்ள பெரியம்மாவால், எனக்கு கிடைத்த வாய்ப்பை எண்ணி சந்தோஷமடைந்தேன்.சிறு வயதில் கடைகளில் வேலை செய்து சம்பாதிக்கும் டீன் ஏஜர்ஸ் அமெரிக்காவில் இருக்கும்போது,இந்தியாவில் இருக்கும் நான் ஏன் வேலை செய்வதை கேவலமாக நினைக்க வேண்டும்.பெரியம்மா வீட்டில் நாம் முன்று வேளைகள் சாப்பிடும் சாப்பாட்டிற்கு, அவர்கள் வீட்டை சுத்தம் செய்வதை ஈடாக இருக்கட்டும் என மனதிற்கு எனக்கு நானே சமாதானம் கூறிக் கொண்டேன்.

இனிமேல் வேலை செய்வதை இழுக்காக

நினைக்காமல், அவை என்னுடைய நல்லதிற்கும்,நேரத்தை வீனே கழிக்காமல் ,உபயோகமாக செலவழிப்பதற்கும் நமக்குதானே நல்லது எனவும், எனக்குள் கூறிக்கொண்டேன்.பெரியம்மாவின் அமெரிக்க கதை ,என் எண்ணங்களை மாற்றியது.இப்போதுதான் புரிந்தது, பெரியம்மாவின் உள் எண்ணம் என்னவென்று.ஏன்?எதற்கு?வேலைவாங்குகிரார்கள் என்று.அம்மாவும் அப்பாவும் சரியில்லாத பிள்ளைகள் நாங்களாவது வாழ்வில் பல வேலைகளைக் கற்றுக் கொண்டு கஷ்டங்களை புரிந்து,தெரிந்து,வருங்காலத்தில் நாட்டின் ஒரு நல்ல பிரஜைகளாக இருக்க வேண்டும் என்ற அவர்களது நல்ல எண்ணமே இது, என இவ்வளவு நாட்கள் புரியாமல் போயிற்று என வியந்தேன்.

அதன் பிறகு பெரியம்மா வீட்டில் மீதம் தங்கியிருந்த நாட்களில் மனக்கஷ்டமில்லாமல் வேலைகளை செய்தேன்.நாட்கள் பறந்தன.அப்பாவை பார்க்காமலே சிதம்பரத்திற்கு

திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது எங்களுக்கு.

அத்யாயம்-முப்பத்தி நான்கு

பெரியம்மா வீட்டில் கோடைவிடுமுறையை முழுதுமாக முடித்து விட்டு, சிதம்பரத்திற்கு, திரும்பவும் எங்களை கொண்டு சேர்த்துவிட்டு, மறுநாளே அம்மாவை தன்னுடன் சென்னைக்குத்ன் வீட்டிற்கு அழைத்துசென்று விட்டார்கள் .

பெரியம்மா கோடைவிடுமுறை ஆரம்பிக்கும் முன்பே,அம் மாவிடம் கூறியபடி, அம்மா முன்று மாதத்திற்கு மருத்துவ லீவ் விண்ணப்பித்து, பெரியம்மாவின் உதவியால், விரைவாகவே அதற்கான அனுமதியை அரசாங்கத்தாரிடமிருந்து

பெற்று தயாராக வைத்திருந்தார்கள்.அதனால் எங்களை சிதமபரத்தில் விட்ட மறுநாளே அம்மாவை தன்னுடன் அழைத்துச் செல்ல வசதியாக இருந்தது.

மறுபடியும் நாங்கள் நால்வரும் அம்மா,அப்பாவிடமிருந்து பிரிக்கப்பட்டோம்.அம்மாவிடம் பேசுவதற்கான வாய்ப்பையே, பெரியம்மா எங்களுக்கு கொடுக்கவில்லை.எல்லா வேலைகளும் மிக துரிதமாகவே நடந்துகொண்டிருந்தன.எல்லாமே கனவில் நடப்பதுபோல தோன்றியது எங்களுக்கு.

அனைவருக்கும் கோடைவிடுமுறை நாட்கள் முடித்து, பள்ளிகூடங்களும் ஆரம்பமாகி விட்டன.நாங்கள் நால்வரும் பள்ளிக்கூடம் சென்று வந்து கொண்டிருந்தோம்.இம்முறை நான் ஜட்காவில் ஸ்கூலுக்கு செல்லவில்லை .என் ஆசைப்படி, சிநேகிதிகளுடன் இரண்டு மைல்களுக்கு நடந்தே சென்று வந்தேன்.இம்முறை வேலையாள், மதிய உணவை

எனக்கு எடுத்துவரவில்லை.காலையில் நான் ஸ்கூலுக்கு செல்லும்போதே, எங்களிடம் மதிய உணவை கொடுத்து அனுப்பிவிட்டனர்.எனவே நான் விரும்பிய படியே சிநேகிதிகளுடன் உட்கார்ந்து சாப்பிட்டேன்.அண்ணன் ஷானும்,தம்பி பாட்டும் கூட நடந்தே ஸ்கூலிற்கு சென்று வந்தனர்.

அம்மாவின் வருமானமும் இல்லை,அப்பாவின் வருமானமும் இல்லை.பெற்றோர்களுடனும் இருக்க எங்களுக்கு கொடுத்து வைக்கவில்லை.தாத்தா,பாட்டியின் கவனிப்பில் இருந்ததால், எங்களால் எதையும் உரிமையுடன் கேட்கவும் முடியாமல் சூழ்நிலையில் விடப்பட்டோம்.

எப்படியோ ஓரிரு மாதங்கள் கடந்தனன்.நான் எட்டாம் வகுப்பும்,ஷான் 10-ம் வகுப்பும்,தம்பி பாட் ஆறாம் வகுப்பும்,ஆனஹி முன்றாம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தோம்.எங்கள் படிப்பை கவனிக்க யாரும் இல்லை.என்ன படித்தோம்,எவ்வளவு மார்க் வாங்கினோம்

என்பதை பற்றி அறிய அங்கு யாருமே அக்கறை காட்டவில்லை.நாங்கள் நால்வரும், காலையில் எழுந்தது முதல், இரவு படுக்கும் வரை ,எங்களுக்கு தேவையானவைகளை, நாங்களே செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.அங்குள்ள வேலை ஆட்களுக்கும் ,எங்கள் மீது அக்கறை காட்டுவது குறைந்துகொண்டே வந்தது.நாங்கள் அந்த வீட்டிலிருப்பது யாருக்கும் விருப்பமில்லாதது போல் தோன்றியது.மேலும் வேலைகாரர்கள் ,எங்கள் மீது அக்கரைகாட்டாவிட்டாலும் பரவாயில்லை. .எதற்க்கெடுத்தாலும் எங்களை குறை கூறியும்,நிந்தித்தும்,தாத்தா, பாட்டியிடம் எங்களை பற்றி புகார் கூறியும் வந்தார்கள் .எங்களுக்கு அந்த வீட்டிலிருக்கும் வாழ்க்கை சிறிது சிறிதாக கசக்கத் தொடங்கியது.

மூன்று மாதம் கழித்து, ஒரு நாள் அம்மா, பெரியம்மாவுடன் எதிர்பாராதவிதமாக வந்திறங்கினார்கள்.அம்மாவை கண்டதும் எங்களுக்கெல்லாம் ஆனந்தமாக இருந்தது.இனிமேல் கவலை இல்லை நமக்கு

வேண்டியதை அம்மாவிடம் கேட்டு வாங்கி கொள்ளலாம் என்ற மகிழ்ச்சி ஒரு சில மணி நேரங்களே நீடித்தது.அன்று திங்கட்கிழமை காலை, அம்மாவுடன் பெரியம்மா காரில் ஸ்கூலுக்கு சென்றேன்.மாலையில் அம்மாவின் ரூமிற்கு நான் செல்கையில் ,அனைத்து ஆசிரியர்களும், அம்மாவிற்கு பிரியாவிடை விருந்து கொடுத்துக் கொண்டிருப்பதை கண்டு ஒன்றும் புரியாமல் விழித்தேன்.பிறகுதான் தெரிந்தது அம்மா அன்று ஸ்கூலில் ஜாயின் பண்ணிவிட்டு , தன் பொறுப்புகளை ஒப்படைத்துவ்ட்டு, மறுநாளிலிருந்து ரிலீவிங் ஆர்டர் வாங்கிகொண்டு, மறுபடியும் சென்னைக்கு மாற்றலாகி போகப்போகிறார்கள் என்று.

“அம்மா,நாங்களும் உங்களுடன் சென்னைக்கு வருகிறோமா”என்று மிகவும் ஆனந்தபரவசத்துடன் கேட்டேன்.

“இல்லை,நீங்கள் நால்வரும் இங்கேயே இந்த வருடம் இருந்துவிட்டு,அடுத்த

கோடைவிடுமறையில்தான் உங்களை எல்லாம் எங்கு சேர்ப்பது என ஏற்பாடு செய்ய வேண்டும்”என்றார்கள் அம்மா.

“அம்மாவை தொந்தரவு செய்யாதே”என பெரியம்மா இடை மறைத்து கூறவே, என்னால் தொடர்ந்து எதுவும் அம்மாவுடன் பேச முடியவில்லை.அம்மாவும், அதற்குமேல் என்னிடம் எதுவும் பேசவில்லை.வீடு வந்ததும், உள்ளே சென்று பாட்டியிடம் இதுபற்றி கூறினேன்.பாட்டிக்கு இது புதிய விஷயம் இல்லாததால், நான் கூறியதை அவர்கள் சட்டை செய்யவில்லை.எங்களை தவிர, அந்த வீட்டில் அனைவருக்கும், ஏற்கனேவே அம்மாவின் மாற்றம் பற்றி தெரிந்திருந்தபடியால் ,நான் கூறியது அவ்வளவாக யாரையும் ரொம்ப எதுவும் பாதிக்கவில்லை.

பெரியாம்மா ,வேலை ஆட்களிடம் ,அம்மாவின் எல்லா உடைகளையும் ஒன்று விடாமல் பாக் பண்ணுமாறு உத்தரவிட்டுக்கொண்டிருந்தார்கள்.மறுநாள்

விடியற் காலையிலேயே திரும்பவும்
சென்னைக்கு செல்ல இருப்பதாக கூறியதும்,
என் தலையில் இடிவிழுந்ததுபோல
தோன்றியது.நான் மிகுந்த கவலையுடன்
அம்மாவின் உடமைகளை வேலை ஆள் பாக்
பண்ணுவதை பார்த்துக் கொண்டு ஒரு
முலையில் நின்றிருந்தேன்.

அம்மாவும்,பாட்டியும்,பெரியம்மாவும்,தாத்தாவும்
ஹாலில் உட்கார்ந்து கொண்டு ஏதோ
சுவாரஸ்யமாக பேசிக்
கொண்டிருந்தார்கள்.அம்மாவும் எங்கள்
நால்வரையும் அழைத்து எதுவுமே
பேசவில்லை.எங்கள் நாள்வரை இவ்வளவு நாள்
பிரிந்திருந்த கவலைகூட அம்மா முகத்தில் நான்
பார்க்கவில்லை.அம்மா ஏதோ அவர்களுக்கும்,
எங்களுக்கும் சம்பத்தமில்லாதது போல நடந்து
கொண்டார்கள்.எப்படியிருக்கிறோம்,நாங்கள்
என்ன சாப்பிட்டோம்,இந்த வீட்டில் நாங்கள்
சந்தோஷமாக நடத்தபடுகிரோமா?என்ற எந்த
சிந்தனையும் அம்மா மனதில் ஓடவில்லை
போலிருக்கிறது.அதனால்தான் எங்களை அம்மா

ஏதும் கேட்கவில்லை.அம்மாவின் மனதில் அவர்களது பெற்றோர்களும்,அக்காவும், எங்களை அன்புடன் நடத்துவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

மேலும் என் எண்ண அலைகள் ஒவ்வொன்றாக அலைபாய்ந்து கொண்டிருந்தது.அடுத்த வருடம் எங்கள் நிலை என்ன?நாங்கள் எங்கு இருக்கப்போகிறோம்?மாமா வந்தால் ,எங்களை திட்டினால், நாங்கள் என்ன பதில் சொல்வது?என்ற பயமும்,இனம் புரியாத ஒரு கலக்கமும் என் இளம் மனதை வாட்டி வதைத்தது.பெரியம்மா ,இப்பொது பாட்டியிடம் ஏதோ தனியாக பேசிகொண்டிருந்தார்கள்.பாட்டி பதில் எதுவும் பேசாமல் மௌனமாக பெரியம்மா சொல்வதை கேட்டு கொண்டு, பிரமிப்பு தட்டியதுபோல உட்கார்ந்திருந்தார்கள். பாட்டியின் முகத்தில் எந்த வித சலனத்தையும் நான் பார்க்கவில்லை.அன்று முழுதும் அவர்களுக்குள் ஏதேதோ பேசிக் கொண்டிருந்துவிட்டு, மறுநாள்

விடியற்காலையில், அம்மாவுடன் பெரியம்மா சென்னைக்கு பறந்துவிட்டார்கள்

முன்று மாத காலம் அம்மா லீவில் பெரியம்மா வீட்டில் இருந்து சிகிச்சை பெற்றும் அம்மாவின் உடல் தேறி இருப்பதற்கு பதில் இன்னும் மோசமாகி காணப்பட்டது.அதற்க்கான காரணம் என்ன என்று யாராலோ அப்போது அறிந்து கொள்ளவோ,உணரவோ முயற்சிக்கவில்லை,

அந்த வருடம் 1970 டிசம்பர் மாதம் விடுமுறையும் வந்தது,என் பள்ளிகூடத்தில் இன்டர் ஸ்டேட் ஜூனியர் ட்ராக் அண்ட் பீல்ட் போட்டிக்காக, எங்கள் பள்ளிகூடத்திலிருந்து சிறந்த சில மாணவிகளை தேர்ந்தெடுத்து, எங்களை விழிப்புரம் என்ற ஊருக்கு ,எங்கள் பள்ளிக்கூட உடற்பயிற்சி ஆசிரியை அழைத்துசெல்வதற்காக, தாத்தாவிடம் உத்தரவு சீட்டில் கையெழுத்து வாங்கி கொண்டு, என்னை அங்கே அழைத்துச் சென்றார்கள்.அந்த விழிப்புரம் என்ற ஊரில், நாங்கள் குறைந்தது முன்று அல்லது நான்கு நாட்களாவது தங்கி இருக்க நேரிடும் என்றும்

அதற்கான ஏற்பாட்டுடன் வரச்சொல்லி, ஏற்கனவே எங்கள் உடற்பயிற்சி ஆசிரியை கூறி இருந்தபடியால், நாங்கள் ஏழு மாணவிகள், நான்கு நாட்களுக்கு தேவையானவைகளை பாக் செய்து கொண்டு சென்றிருந்தோம்.

. நான் குறுகிய தூர ஓட்டபந்தயமான 50மீட்டரும்,100மீட்டரும்,200 மீட்டர் தூரமும் ,நன்றாக ஓடுவேன்.ஒவ்வொரு வருடம் குறுகிய தூர ஓட்டபந்தயத்திலும்,பந்தெறிதல் மற்றும் டிஸ்க் எறிதலும்,லாங் ஜம்ப்,ஹய் ஜம்ப் முதலியவற்றிலும் நான் எப்பவும் முதலாவதாகவே வருவேன்.எனவே என்னை அந்த வருடம் ஜூனியர் இன்டெர் ஸ்டேட் போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்று ஸ்கூலுக்கு பெருமை கொண்டுவரவேண்டும் என எங்கள் உடற் பயிற்சி ஆசரியை மிகுந்த ஆவல் கொண்டார்கள்.

விழிப்புரத்தை அடைந்த நாங்கள், ஒரு விளையாட்டு மைதான கட்டிடத்தில் இரவில், எல்லோரும் ஒரு பெரிய ரூமில், ஒன்றாக

படுத்திருந்தோம்.அன்றிரவு புதிய இடம் என்பதாலோ, என்னவோ என்னால் சரியாக தூங்க முடியவில்லை.இனம் புரியாத தனிமையும்,சற்றே சோர்வுடனும் இருந்தேன்.தலை மிகவும் வலித்தது.செய்வதறியாது குழம்பிய நிலையில், தலைவலி தாங்கமுடியாமல், நடு இரவில் எழுந்து உட்கார்ந்து கொண்டு "ஓ "வென அழ ஆரம்பித்துவிட்டேன்.என் டீச்சர் மிகவும் பயந்து போய்விட்டார்கள்.சிரமப்படாமல், என் அருகே உட்கார்ந்து கொண்டு, எனக்கு சமாதானம் கூறிக் கொண்டு இருந்தார்கள்.என் கூட வந்த என் பள்ளிக்கூட தோழிகளும் எழுந்து வந்து என்னருகே உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் அனைவருக்கும் தெரியும் என் பெற்றோர்கள் சென்னையில் இருக்கிறார்கள் என்றும்.நான் தாத்தா, பாட்டி வீட்டிலிருந்து படிக்கிறேன் என்று,அம்மாவை பிரிந்த கவலை என்னை வாட்டுகிறது என அவர்களுக்குள் பேசிக்கொண்டு, அவர்கள் அனைவரும் எழுந்து செருப்பை மாட்டிகொண்டு என்னை அழைத்துக்

கொண்டு, அந்த நள்ளிரவில், சற்றே தூரத்தில் இருந்த ஒரு காபி கடைக்கு அழைத்துச் சென்று, சூடாக பால் வாங்கி என்னை குடிக்கச் சொல்லி, திரும்ப அழைத்து வந்து படுத்து தூங்கச் சொன்னார்கள்.நள்ளிரவு என்று கூட பாராமல், அவர்கள் அனைவரும் என்னுடன் இருந்து சமாதானபடுத்தி தூங்கச் செய்ததற்கு நன்றி கூற எனக்கு வார்த்தைகளே இல்லை என்றே சொல்லுவேன்.

மறுநாள் காலை நாலு மணி அளவில், எங்கள் ஏழு பேரையும் எழுப்பி, பல் விளக்கி குளிக்க சொல்லிவிட்டு,ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று, காலை உணவையும் வாங்கி கொடுத்துவிட்டு,விளையாட்டு மைதானத்திற்கு, போட்டி நடக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள் எங்கள் பி.ஈ கோச்சர். நான் 100 மீட்டர் ஓட்டபந்தயத்திற்கு தயாராகி, என் பெயர் ஒலி பெருக்கியில் அழைக்கும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டு, சற்றே பொறுமையிழந்து அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தேன்.

என் 100 மீட்டர் ஓட்டபந்தயம் நேரமும் வரவே, ஒவ்வொருவர் பெயரையும், அவரவர் படிக்கும் ஸ்கூல் பெயரையும் , ஊர் பெயரையும் ஒலிபெருக்கியில் அறிவித்து, அழைத்துக் கொண்டிருக்கையில் ,என் பெயரும், பள்ளிக்கூடமும் அறிவிக்கையில் ,நான் ஓடிச் சென்று ,சற்றே ஆர்வம் ஓங்க, எப்படியாவது முதலாவது வந்து விட வேண்டும் என எனகென்று உள்ள ட்ராக்கில் சென்று நின்று கொண்டு ஓட்டபந்தயம் ஆரம்பமாகும் நேரதத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கையில் ,மறுபடியும் ஒலிபெருக்கியில் என் பெயர்,மற்றும் ஸ்கூல் பெயரையும், ஊரையும் அறிவித்து ஓட்ட பந்தயம் முடிந்தவுடன் மேடைக்கு உடனடியாக வரவேண்டும் என்ற அறிவிப்பை கேட்டது குழப்பத்துடன், என் கண்கள் மேடையை நோக்கி பாய்ந்தது.அங்கே மேடையில் அமர்ந்திருந்த பெரிய மனிதர்களுக்கு நடுவே, பெரியம்மா சேதுவும், இந்த நிகழ்ச்சியை துவக்கி வைக்கும் தலைவராக அமர்ந்திருந்ததை

பார்த்ததும் என் உடலில் நடுக்கம் ஏற்பட தொடங்கியது. மிக அதிர்ச்சியாகவும் இருந்தது.எதற்கு இங்கு வந்தோம் என என்னை நொந்து கொண்டேன்.

அந்த அறிவிப்பை கேட்டவுடன் ,அதே மனக்கஷ்டத்துடன், நான் நூறு மீட்டர் ஓட்டப்பந்தயம் ஓடியதில் ,முன்றாம் இடத்தையே நான் பெற முடிந்தது.எங்கள் கூச்சர் வசந்தாவிற்கு மிகவும் எதிர்பாராத வியப்பாக இருந்தது.”நீ முதலிடம் வந்து தங்க மெடல் வாங்குவாய் என நினைத்தேன், உன் உடம்பு ஏதும் சரியில்லையா.வழக்கமாக மான் போல பறந்தோடும் நீ இன்று ஸ்ரத்தியே இல்லாமல் ஓடினாயே” என்ன வாயிற்று என கவலையுடனும் ,,சற்றே சந்தேகத்துடனும் கேட்டார்கள் .

“உடம்புக்கு ஒன்றுமில்லை கூச்சர், மனசுதான் சற்றே சரியில்லை”என்று பதிலளித்தேன்.

கூச்சர் என் மனதை புரிந்து கொண்டார்கள்.

அப்பா,அம்மாவை பிரிந்து, என் மனது மிகவும் கஷ்டப்படுகிறது என்று.அவர்களுக்கு பெரியம்மாவை பற்றி விஷயம் தெரியாது.நானும் எதுவும் அவர்களிடம் பெரியம்மாவை பற்றி கூறவில்லை.

பந்தயம் முடிந்தவுடன் மேடையில் தலைமை தாங்கி அமர்ந்திருக்கும் அமந்திருக்கும் பெரியம்மாவை நோக்கி நடந்தேன். பயத்துடன் அவர்கள் அருகில் சென்றதும், “இன்னும் எத்தனை பந்தயத்தில் கலந்து கொள்ள இருக்கிறாய்?”என்று கேட்டார்கள்.

“இப்போதுதான் ஒரேஒரு பந்தயம் முதல் முறை ஓடியிருக்கிறேன்.இன்னும் நான்கு பந்தயம் பாக்கி இருக்கிறது.எல்லாம் முடிய இன்னும் இரண்டு நாட்கள் ஆகும் பெரியம்மா”என்று பதிலளித்தேன்.

“நான் இன்னும் சிறிது நேரத்தில் சென்னைக்கு கிளம்புகிறேன்.நீ என்னுடன் கிளம்பி வந்து விடு .இரண்டு நாட்களுக்கு பிறகு, உன்னை ஊரில்

கொண்டு சேர்த்து விடுகிறேன்.நீயும் உன் அம்மாவை பார்த்த மாதிரி இருக்கும்.அம்மாவை பார்க்க உனக்கும் ஆசைதானே,நீ போய் ,உன் டீச்சரிடம் என்னை உடனே வந்து பார்க்கச் சொல் ,நான் விஷயத்தை அவர்களிடம் சொல்லிவிடுகிறேன்”என்று சொன்னார்கள்..

அம்மாவை பார்க்கும் ஆசையில் பெரியம்மா கூப்பிட்டதும், மற்ற பந்தயங்களை பற்றி நான் சிறிதும் கவலை படாமலும்,யோசிக்காமலும் சரி என கூறிவிட்டு “நான் டீச்சர் இடம் சென்று சொல்லி விட்டு என் துணிமணிகளை எடுத்துவந்துவிடுகிறேன் பெரியம்மா”என்று சொல்லிவிட்டு அந்த மேடையிலிருந்து கீழே இறங்கி டீச்சர் பார்க்க ஓடினேன் .

டீச்சர் இருக்கும் இடத்திற்கு சென்று அவர்களிடம் விஷயத்தை கூறிவிட்டு, என் உடமைகளை எடுத்துவர சென்றுவிட்டேன்.பெரியம்மாவை பார்த்துவிட்டு விஷயத்தை தெரிந்து வந்த எங்கள் டீச்சர் சற்றே ஏமாற்றத்துடன் “சீக்கிரமாக போ, உன்

பெரியம்மா காத்துக்கொண்டிருக்கிறார்கள்.நான் உன் தாத்தாவிற்கு, இது பற்றி நாங்கள் ஊர் திரும்பி சென்றதும், தகவல் கொடுத்துவிடுகிறேன்"என கூறி என்னை அவசர ,அவசரமாக வழியனுப்பி வைத்தவுடன்,என்னால் ,என் கூட வந்த சினேகிதிகளிடம் கூட, போய் வருகிறேன் என சொல்லிக்கொள்ள நேரம் கிடைக்கவில்லை.அவர்கள் எல்லாம், அவரவர்கள் போட்டியில் கலந்து கொள்ள, அந்தந்த ஏரியாவில் இருந்ததால் ,டீச்சரை தவிர, வேறு யாருக்கும் நான் ஊர் சென்றது, அப்போதைக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

போகும் முன் டீச்சரிடம் "டீச்சர் நான் மற்ற பந்தயம் எல்லாம் இன்னும் செய்யவில்லையே"என்றேன் தயக்கத்துடன்.

"அதை பற்றி கவலைபடாதே, உன் பெரியம்மா எல்லாவற்றையும் கான்சல் செய்ய சொல்லிவிட்டார்கள்.நீ நல்லபடியா போய் உன் அம்மாவை பார்த்துவிட்டு வா"என்றார்கள்.

நான் அவசர, அவசரமாக எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு மேடைக்கு ஓடினேன்.நான் வருவதை தூரத்திலேயே பார்த்துவிட்ட பெரியம்மா, மேடையில் அனைவரிடமும் விடை பெற்று கொண்டு, கீழேயிறங்கி வந்து என்னையும் அழைத்துக் கொண்டு, சென்னைக்கு புறப்பட்டார்கள்.அம்மாவைப் பார்க்கும் ஆவலில், நானும் அறைமனதுடன், பெரியம்மாவுடன் சென்றேன்.

கார் பெரியம்மா வீட்டை அடைந்ததும், அம்மாவை பார்க்கும் ஆவலில் என் மனம் படபடவென அடித்துக் கொண்டது.காரிலிருந்து இறங்கியவுடன் பெரியம்மாவை தொடர்ந்து நானும் உள்ளே நுழைந்தேன்.

“போய் உன் அம்மாவை பார்த்துவிட்டு பேசிவிட்டு வா”என பெரியம்மா என்னிடம் கூறியபடி அம்மா ரூமிற்கு அருகில் சென்று

“மங்கை யார் வந்திருக்கிறார்கள் என்று பார்”அம்மாவிடம் புன்முறுவலுடன் கூறிவிட்டு

தன அறைக்குச் சென்று விட்டாகள்.

நான் அம்மா இருக்கும் அறைக்கு அருகில் சென்று, கதவோரம் நின்று கொண்டு வெட்கப்பட்டுக் கொண்டே அம்மாவை பார்த்தேன்.

“உள்ளே வாம்மா,ஏன் வெளியே நின்றுவிட்டாய்?இப்படி வந்து அம்மா பக்கத்துல உட்காரு”என்றார்கள் அம்மா.

மெதுவாக சென்று அம்மாவின் படுக்கையில், அவர்கள் அருகில் நான் உட்கார்ந்ததும் ,அம்மா மிகவும் ஆச்சரியபட்டவர்களாக ,மிகவும் நன்றாக உயரமாக வளர்ந்துவிட்டாள்,என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை.இவளை யார்? என்றே, ஒரு நிமிடம் எனக்கு அடையாளமே தெரியவில்லை அந்த அளவிற்கு மாறி விட்டிருக்கிறாள்”என அங்கு நின்றிருந்த , வேணி அக்காவிடமும் ,குமாரி அக்காவிடமும் சொல்லி பூரித்துப் போனார்கள் அம்மா.

“ஆமாம் அக்கா, மளமளவென குழந்தை வளர்ந்து கொண்டே போகிறாள்”என கூறி என்னை கட்டிபிடித்துக் கொண்டார்கள் குமாரி அக்கா.

நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே பெரியம்மா உள்ளே நுழைந்தார்கள்.

“சரி, எல்லோரும் போய் வேலையை பாருங்கள்,நீயும்தான் அனிதா,அம்மா ஓய்வு எடுக்கட்டும்”என கூறி என்னையும் வெளியே அனுப்பிவிட்டு அம்மாவின் அறை கதவை முடிவிட்டு வந்தார்கள்.

“அனிதா, நீ என் ரூமிற்கு வா.”என என்னை ,அவர்கள் படுக்கை அறைக்கு அழைத்துச் சென்று,

“நீ வயதுக்கு மீறி வளர்த்தியாக தெரிகிறாய்.இனிமேல் இப்படி அரை ஸ்கர்ட்டும், சட்டையும் போட்டு திரிவது நல்லது இல்லை.இன்றையிலிருந்து நீ முழு பாவடையும்,மேலே தாவணியும் போட்டுக்

கொள்ளவேண்டும்”என கூறிவிட்டு,”குமாரி இங்கே வா”என குமாரி அக்காவை அழைந்த்ததும்,குமாரி அக்கா பெரியம்மா படுக்கை அறைக்கு வந்ததும்,

“இந்த பீரோவிலிருந்து, என் பழைய புடவைகளை எடு”என அங்குள்ள சில புடவைகளை காண்பித்து எடுக்கச் சொன்னார்கள்.அதை இரண்டாக மடித்து சமபாதியாக வெட்டச் சொன்னார்கள். பிறகு மற்றொரு கனமான,ஆல்மண்ட் கலரில் ,சிறிய சிறிய பச்சை கலர் பூ போட்ட புடவையை எடுக்கச் சொன்னார்கள்.அந்த புடவை பார்க்க புத்தம் புதிய புடவையாக தெரிந்தது.

“இந்த துணி ஆப்ரிக்காவில் இருந்து, எனக்கு ,என் சினேகிதி ஒருவர் பரிசாக கொடுத்தார்.இந்த துணி மிகவும் கனமாக இருப்பதால், நான் புடவையாக இதை கட்டிக்கொள்ள முடியாது. எனவே இதை வெட்டி பாவாடைகளாக தைத்துக் கொடுக்கிறேன் .நீ உடுத்திக் கொள்

என்றார்கள்.

பெரியம்மா அங்குள்ள வேணி அக்கா,குமாரி அக்காவிற்கு தையல் மிஷின் ஒன்றை வாங்கி கொடுத்து, கொஞ்சம் தையலும் கற்றுக்கொள்ள, தையல் வகுப்பிற்கு அனுப்பி இருந்தபடியால்,அவர்களிடம் ,அந்த துணியை கொடுத்து முன்று பாவாடைகளை ,அன்றிரவே தைத்துகொடுக்கச் சொல்லி கொடுத்தார்கள்.

எனக்கு எப்பவும் சின்ன ஸ்கர்ட் போட்டே பழக்கம் இதுநாள் வரையில். இப்போது திடீரென்று, அதுவும் நாளையே முழு பாவாடையும், தாவணியும் கட்டச் சொன்னால் எப்படி கட்டப்போகிறேன் என என் மனம் கஷ்டப்பட்டது.என் வகுப்பில் யாருமே பாவாடை தாவாணி இதுநாள் வரையில் அணியாமலிருக்கும் போது , நான் மட்டும் அணிந்து சென்றால் பார்க்க ஒரு மாதிரியாக இருக்காதா? நான் வயதிற்கு கூட வரவில்லையே என்னை ஏன்? பெரியம்மா, இன்று, இங்கு அழைத்து வந்து, இப்படி துன்புறுத்த

வேண்டும்?நான் விழிப்புரத்திற்கு வந்தே இருக்கக் கூடாது.அப்படியே வந்திருந்தாலும், பெரியம்மாவுடன் ,இங்கு வராமல் ,அங்கேயே இருந்து என் ஐந்து பந்தயத்தையும் முடித்துவிட்டு, சிதம்பரத்திற்கு திரும்பச் சென்றிருந்தால், இதிலிருந்து தப்பித்து இருக்கலாமே.ஆனால் வலையில் மான் சிக்கியது போல, பெரியம்மா விரிக்கும் வலையில் நான் மறுபடியும்,மறுபடியும் வந்து மாட்டிக் கொண்டு ஏன்? இப்படி அவதிபடவேண்டும்?என என்னை நானே நொந்து கொண்டேன்.

உள்ளே இருக்கும் அம்மாவுக்கு இந்த விஷயம் தெரிந்திருக்க சந்தர்ப்பமில்லை.பெரியம்மா உத்தரவு இல்லாமல், யாரும் அம்மா இருக்கும் அறைக்கு போகக்கூடாது என பெரியம்மா கூறியிருந்தபடியால் முக்கியமாக நான் ,என் அம்மாவின் ரூமிற்கு சென்று பேசக்கூடாது என்ற உத்தரவு இருந்தது.பெரியம்மாவின் இந்த செய்கை, அந்த வீட்டில் இருந்த வேலை ஆட்களுக்கு மனக் கஷ்டத்தை கொடுத்தது.பெரியப்பா ஒரு குறுக்கு புத்தி

படைத்தவர்.நாங்கள் சிறு குழந்தைகள் என்றுகூட கருதாமல், எங்களை பற்றி இல்லாததையும், பொல்லாததையும் கூறி சில சமயங்களில் பெரியம்மாவிடம், எங்களை உதைவாங்க வைத்திருக்கிறார்.இதனால் எங்களுக்கு மட்டுமல்ல, அந்த வீட்டிலுள்ள யாருக்குமே பெரியப்பாவை பிடிக்காது.பெரியப்பா யாரையும் நல்லதாக பேசியே கேட்டிருக்க முடியாது.பெரியப்பா வாய திறந்தாலே மற்றவர்களை பற்றி குறை பேசுவதாக மட்டுமேதான் இருக்க முடியும்.அந்த அளவிற்கு துர்குணம் படைத்தவர் பெரியப்பா.ஆபீசிற்கு போவதும்,ஆபீசை விட்டு நேராக வீட்டிற்கு வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டு எல்லோரையும் மிரட்டி வேலை வாங்குவதே அவருக்கு ஒரு பொழுது போக்காக இருந்து வந்தது.பெரியப்பாவிடம் உறவினர் யாருமே பேசுவது கிடையாது.எப்பவும் சோம்பலாகவும்.சிடுமுஞ்சியாகவும்தான் அவரை காண முடியும். தன் மாத சம்பளத்தை என்ன செய்கிறார் என்று கூட, பெரியம்மாவிடம் கூற

மாட்டார். தன் சாப்பாட்டிற்கான பணத்தை மட்டும் பெரியம்மாவிடம் கொடுத்துவிடுவார்.மீதி பணம் எங்கே ?என பெரியம்மா கேட்டால், அவர் பதிலேதும் சொல்லாமல் இருப்பார்.இதனால் பெரியம்மா ,பெரியப்பா இடையே நிறைய சண்டைகள் அடிக்கடி நேரிட்டு வருவதை பார்த்திர்க்கிறேன்.

பெரியப்பா அவரது பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை.அவர் காலேஜ் படிக்கும்போதே, அவரது பெற்றோர்கள் காலமாகி விட்டார்களாம்.பெரியப்பாவும்,பெரியம்மாவும் காலேஜில் ஒன்றாக படித்தார்களாம்.பெரியப்பாவிற்கு பெற்றோர்களும் இல்லாமலும்,அதிக உறவினர்களும் இல்லாததாலும், பெரியம்மா அவரை காதலித்து, அமெரிக்க செல்லும் முன், பதிவு திருமணம் செய்து கொண்டார்களாம்.வெளி உலகமென்றால் என்ன? என தெரியாத பெரியப்பாவை ,விவாகரத்து செய்து வெளியே அனுப்பிவிட்டால்,பெரியப்பாவால் ஒரு நாள்கூட

தள்ள முடியாமல் அவதிப்பட்டு
இறந்துவிடுவார்கள் என பாவம் பார்த்து,
தொலைந்து போகட்டும் என அவருடன்
பெரியம்மா காலம் தள்ளி வர வேண்டிய
சூழ்நிளையிலிருந்தார்கள்.இதை அடிக்கடி
நாங்கள் சிறுவர்களாக இருந்தாலும் ,எங்களிடம்
கூறியிருக்கிறார்கள்.

பெரியப்பா எப்பவும் அந்த ஹாலில்
சோபாவிலேயே உட்கார்ந்திருப்பதால் ,அவரை
தாண்டி யாராவது அம்மா இருக்கும் அறைக்குச்
சென்றால், பெரியப்பா உடனே, பெரியம்மா
ஆபீசிலிருந்து வந்ததும் வராததுமாக, கலகம்
பண்ணி விட்டு, எங்களை வம்பில்
மாட்டிவிட்டு ,வேடிக்கைப் பார்த்து மகிழ்வார்.

எனவே பெரியம்மாவின் உத்தரவை மீறி யாரும்
அந்த வீட்டிலே நடக்க பயப்படுவார்கள்.நான்
அம்மா ரூமிற்குள் போகாமலிருக்க, பெரியப்பா
மிகவும் உதவியாக இருந்தார்.

சில சமயங்களில் எனக்கு தோன்றும்,

பெரியம்மாவுக்கு கடவுள் நன்றாகத்தான் தண்டனை கொடுத்துள்ளார் என்று.இப்படி ஒரு வக்கீலுக்கு படித்த, ஒரு உதவாக்கறை கணவனுடன் காலம் தள்ளவேண்டும் என்று.பெரியம்மாவின் குரோத எண்ணத்திற்கு ஏற்றாற்போல், ஒரு குறுகிய புத்திக் கொண்ட சிடுசிடுப்பான கணவன் வந்து வைத்திருக்கிறார் என நான் மட்டுமல்ல, எங்கள் உறவினர்களும்,வீட்டு வேலை காரர்களும், நண்பர்களும் அப்படியே நினைத்தார்கள்.

அன்று முழுதும் நான் அம்மாவை பார்க்கவில்லை.மறுநாள் என் பாவாடை தைக்கப்பட்டு, தயாராக இருக்கவே ,என்னை பாவாடை ,தாவணி அணிய வேண்டும் என பெரியம்மா கூறிவிட்டதால்,குளித்து தாவாணியுடன் வெளியே வந்த என்னை, அனைவரும் மிக வித்யாசமாக பார்த்துச் சிரித்தார்கள்.எனக்கு மிகவும் கூச்சமாகவும்.அவமானமாகவும் இருந்தது.புதிதாக பாவாடை தாவாணி அணிந்திருந்தது சற்றே சௌகரிய குறைவாக இருந்தது.

குமாரி அக்காவிற்கும்,மூர்த்திக்கும் என்னை பாவாடை தாவாணியில் பார்க்க துளியும் பிடித்க்கவில்லை.மூர்த்தி தன் வாய்க்குள், கடுகடுவென ஏதையோ முணுமுணுத்துக் கொண்டே, சமயலறையில் சென்று விட்டது.அன்று முழுதும் வீடு கூட்டுவதும், பாத்திரங்களை கழுவுவதுமாக, வீட்டு வேலைகளில் என் நேரம் சென்றது.அன்றிரவு சாப்பாட்டிற்கு பிறகு பாத்திரம் கழுவுவது என் வேலை என்பதால் ,பின்னால் முற்றத்தில் கீழே உட்கார்ந்து கொண்டு, பத்திரம் கழுவி, பக்கத்திலுள்ள மேடையில் கவிழ்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போது யாரோ மெதுவாக தாங்கி தாங்கி நடந்து வருவதை சத்தம் கேட்டு நிமிர்ந்த நான், அம்மாதான், அங்குள்ள பாத்ரூமிற்கு செல்ல வேண்டி வந்த சமயம் ,பாத்ரூம் வாசலில் நின்று என்னை உற்று பார்த்ததை கவனித்து விட்டு பாத்திரத்தை கழுவுவதை விட்டுவிட்டு அம்மாவின் அருகே ஆசையுடன் ஓடினேன்.

அம்மாவுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை.ஏன் என்றால் நான் பாவாடை தாவாணியில் ,காது,கழுத்து,கையில் நகைகள் எதுவும் இல்லாமல், தலையில் நன்றாக எண்ணையை தடவி, இழுத்து வாரி ,ஒரு வேலைக்காரியை போல் நின்றிருந்ததால்தான் .நான் அருகே சென்று “நாந்தாம்மா, நான் எதுவும் உதவி செய்யவா?”என கேட்டதும்தான் அம்மாவிற்கு, அது நான் என தெரிய வந்தது.

அம்மாவிற்கு முகத்தில் முதன் முறையாக சந்தேக குறியையும் ,சற்றே பிரம்மை பிடித்தது போல பார்வையையும் கண்டேன்.அம்மா என்னிடம் பேச ஆரம்பிக்கும் சமயம், பெரியம்மா புயல்போல, எங்கிருந்தோ விரைந்து வந்து,

“உன் மகள் எப்படி இருக்கிறாள் மங்கை.இந்த பாவாடை தாவாணியில்.அழகாக இல்லை.அவள் வயதுக்கு மீறி வளர்த்தியாக தெரிந்ததால், நான் இந்த பாவாடை தாவணியை தைத்து, அவளுக்கு ,இன்று காலையில்தான் போட்டேன்.உன்னிடம் இதுபற்றி இன்றிரவு படுக்கும் முன் சர்ப்ரைசாக

காண்பிக்கலாம் என்றிருதேன் அதற்குள் நீயே பார்த்து விட்டாய்.பெண்ணாக பிறந்தவள், வருங்காலத்தில் கல்யாணம் ஆகி, மாமியார் வீட்டிற்கு சென்றால், இதுபோன்ற வேலைகளை செய்ய வேண்டிய நிலை வரும் என்பதால், அவளுக்கு வீட்டு வேலைகளை செய்ய பழக்க சொல்லியிருக்கிறேன்"என்று மிகவும் அக்கறை காட்டுவது போல பேசினார்கள்.

அம்மா எதுவும் பேசாமல் ஒரு புண் முறுவலுடன் பாத்ரூமிற்கு சென்று விட்டு, தன் ரூமிற்கு திரும்பி செல்கையில்,

"நீ ஏன் இவ்வளவு தூரம் வரவேண்டும்.உன் ரூமில்தால் எல்லாம் இருக்கிறதே"என்று கேட்டார்கள் பெரியம்மா.

"சும்மா ரூமிலேயே எவ்வளவு நேரம் அடைந்திருப்பது சேது,பேசுவதற்கு கூட யாருமில்லை.தினமும் என்னுடன் வந்து பேசும் வேணியும்,குமாரியும் கூட, இரண்டு நாட்களாக, என் அறை பக்கம் அதிகமாக

வரவில்லை.எனவேதான் சற்று எழுந்து நடந்து பார்க்கலாம் என வந்தேன்"என்றார்கள் அம்மா.

ரூமிற்கு சென்ற அம்மா குமாரி அக்காவை அழைத்து ,அனிதாவை வரச்சொல் என்று கூறி அனுப்பினார்கள்.

குமாரி அக்கா ,அம்மாவிடம் எதுவும் கூற பயந்து கொண்டு, மெதுவாக பெரியம்மா அறைபக்கம் நோட்டம் விட்டார்கள்.இரவு பத்து மணி ஆகிவிட்டபடியால், பெரியம்மா தன அறைக்குள் கதவை சார்த்திக் கொண்டு இருந்தார்கள்.பெரியப்பாவும் ஹாலைவிட்டு படுக்கை அறைக்கு சென்று விட்டிருந்தார்கள்.

உடனே குமாரி அக்கா என்னிடம் வந்து ரகசியமாக, அம்மா உன்னை பார்க்க வேண்டும் என்று கூறினார்கள்,மெதுவாக பெரியம்மாவுக்கும் தெரியாமல் போய் பார்த்து விட்டு ஓடி வந்து விடு.ரொம்ப நேரமிருக்காதே, என எச்சரித்து , என்னை அம்மா இருக்கும் அறைக்கு அனுப்பி வைத்தார்கள்.

அன்றிரவு, சமயலறைக்கு வெளியே உள்ள விராண்டாவில், வேலை ஆட்கள் படுக்கும் இடத்தில், எனக்கும் ஒரு பாய் கொடுக்கப்பட்டு படுக்கச் சொல்லியிருந்தபடியால்,நான் குமாரி அக்கா படுக்கும் இடத்தில், அவர்கள் பக்கத்தில் என் பாயை போட்டுவிட்டு, அம்மா ரூமிற்கு அடிமேல், அடிவைத்து சத்தம் போடாமல் சென்றேன்.

அம்மா ரூமிற்கு சென்றதும் அம்மா என்னிடம் "நீ இங்கே வந்து என்னுடன் படுத்துக்கொள்"என்றார்கள் அம்மா.

இல்லை அம்மா,பெரியம்மா என்னை விராண்டாவில் படுக்க சொல்லியிருக்கிறார்கள்.நான் குமாரி அக்காவுடன் படுத்துக் கொள்கிறேன்"என்றே கூறி முடிக்கும் முன்

"தூங்காமல் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்"என்ற பெரியம்மாவின் குரல் கேட்டு திடுக்கிட்டு திரும்பினேனே.

“நான்தான் அவளை பார்க்க வேண்டும் என கூப்பிட்டேன் சேது”என்றார்கள் அம்மா.

“நீ நன்றாக ஓய்வு எடு மங்கை. உன்னை தொந்தரவு செய்ய கூடாது என கூறியிருக்கிறேன்.நீ ஓய்வு எடுத்து நன்றாக தூங்கு .நாளை காலையில் இவளை சிதம்பரத்திற்கு அனுப்ப இருக்கிறேன் அப்பா தேடி கொண்டிருப்ப துடன், அவள் ஸ்கூலிற்கு போயாகவேண்டும்”என என்னை அவசர அவசரமாக ,அம்மா ரூமை விட்டு வெளியே அனுப்பி விட்டார்கள்.

பிறகு அம்மாவிடம் சிறிது நேரம் பேசிவிட்டு வெளியே வந்த பெரியம்மா, நேராக நான் படுத்திருந்த விராண்டாவிர்க்கு வந்து, என் கன்னத்தில் ஓங்கி ஒரு அறையை விட்டுவிட்டு “உன்னை அங்கு போக கூடாதுஎன்று சொல்லியிருக்கிறேன் இல்லையா?எதுக்குடி அங்கு போய் உன் அம்மாவை தொந்தரவு செய்யறே?”என்று கூறி வீட்டு, இன்னொரு அறையும் கன்னத்தில் பளீரென்று

வைத்தார்கள்.

குமாரி அக்கா குறுக்கிட்டு “அவளை அடிக்காதீர்கள் அக்கா,சின்ன அக்கா, அனிதாவை பார்க்கவேண்டும் என என்னிடம் கூறி, வரச் சொல்ல சொன்னார்கள்,நான்தான் இவளை போய் பார்த்துவிட்டு வந்து படுக்கச் சொன்னேன்”என பதட்டத்துடன் என்னை கட்டிய வண்ணம் கூறினார்கள்.

“நீ இந்த வீட்டிலிருந்து படிப்பை முடித்து,வேலை வாங்க வேண்டுமானால் என் சொல்லை மீறி எதுவும் அதிக பிரசங்கி தனமா செய்யாதே.உனக்கு தங்க வீடு,சாப்பாடு,படிப்பு செலவெல்லாம் நாந்தான பார்த்துக் கொள்கிறேன். சின்ன அக்கா இல்லை.அடுத்த முறை என் அனுமதி இல்லாமல் இப்படி ஏதும் நீ செய்தால், வீட்டை விட்டு வெளியே உன்னை அனுப்புவதை தவிர வேறு வழியில்லை எனக்கு”என குமாரி அக்காவை மிரட்டுவது போல திட்டிவிட்டு என்னிடம் திரும்பி ,

“நாளை காலை ஒன்பது மணி ட்ரெயினில் உன்னை ஊருக்கு அனுப்ப இருக்கிறேன் குமாரி நீதான் இவளுக்கு டிக்கெட் வாங்கி, டிரெயின் ஏற்றிவிட்டு வரவேண்டும்”என கூறிவிட்டு “உன் பையை தயாராக ஏழு மணிக்கெல்லாம் வைத்திரு.காலை 7:30 கு எல்லாம் வீட்டை விட்டு கிளம்பிவிட வேண்டும், என ஆணையிட்டு விட்டு தூங்க சென்று விட்டார்கள்.

நான் வலித்த கன்னத்தை இரு கைகளால் பிடித்துக் கொண்டே, ,பெரியம்மா சொன்னது கேட்டு என் உடல் நடுங்கியது .கன்னத்தில் விழுந்த அறையால் என் காதுகள் இரண்டும் ஜிவ்வென்று வலித்தது.

“அக்கா நான் தனியாக எப்படி டிரெயினில் போவேன்.பயமாக இருக்கு குமாரி அக்கா,இதுவரை நான் தனியாகவே போனதில்லையே”என விம்மி விம்மி அழுதேன்.

அத்யாயம்-முப்பத்தி ஐந்து

அன்றிரவு, குமாரி அக்காவுடன்
தூங்கினேன்.காலையிலேயே எழுந்து
குளித்துவிட்டு பெரியம்மா கொடுத்த, பாவாடை,
தாவணியை போட்டுக் கொண்டு, காலை
உணவையும் சாப்பிட்டு விட்டு, 7:30
மணிக்கெல்லாம் தயாராகிவிட்டேன்.

குமாரி அக்காவும், நானும் கிளம்பி
விட்டோம்.போகும் சமயம் அம்மாவிடம்
சொல்லிக் கொள்ளவதற்காக ,அம்மாவின்
அறைக்கு செல்லும் சமயம், பெரியம்மாவும்

எங்களுடன் , அம்மாவின் அறைக்குள் வந்து நின்றிருந்தார்கள்.நான் அம்மாவிடம் போய்வருகிறேன் என கூறியதும்,டிரைனுக்கு நேரமாகிவிடப்போகிறது என எங்களை அவசர அவசரமாக வெளியேற்றி அனுப்பிவிட்டார்கள் பெரியம்மா.

குமாரி அக்காவுடன் பஸ்சில், நான் இரயில் நிலையம் வந்தேன்.தனியாக செல்வதை நினைத்ததும் என் உடல் இன்னும் நடுங்கியது.வரிசையில் நின்று பயண சீட்டு வாங்கிவிட்டு, இரயிலில் என்னை ஏற்றி,ஒரு நல்ல இடமாக பார்த்து உட்காரச் சொல்லிவிட்டு"பார்த்து போடி கண்ணு.யாருடனும் ரொம்ப பேசாதே,யார் எது சொன்னாலும் அவர்களுடன் போய்விடாதே.வண்டியை விட்டு எந்த காரணத்தைக் கொண்டும் இறங்கி விடாதே, சாமர்த்தியமாய் போய் சேர்ந்தவுடனே, மறக்காமல் அம்மாவுக்கு கடிதம் போடு.உன் கடிதம் பார்த்தால்தான், எனக்கும், உன் அம்மாவிற்கும் நிம்மதி பெருமூச்சு வரும்.பத்திரம்டி

கண்ணு,"என கூறி கொண்டிருக்கையில் இரயில் புறப்பட தயாரானது.அது நகர ஆரம்பிக்கையில் குமாரி அக்கா கீழே இறங்கி நின்ற வண்ணம், கலங்கிய கண்களுடன், கையசைத்து ப்ரியாவிடை அளித்து கொண்டே, இரயில் அவர்கள் கண்ணுக்கு எட்டிய தூரம் செல்லும் வரை நின்று கை அசைத்தவண்ணம் பார்த்துக்கொண்டே நின்றிருந்தார்கள்.

இரயில் வெகுதூரம் சென்றதும், நான் ஜன்னலைவிட்டு நகர்ந்து என் இருக்கையில் சென்று அமர்ந்தேன். பயத்துடன் யாருடனும் பேசாமல் அமைதியாக ஜன்னலுக்கு வெளியே வடிக்கை பார்த்துக் கொண்டே சென்றேன். என் பெட்டியில், நான் உட்கார்ந்திருந்த இருக்கைக்கு அருகில் இருந்த நடுத்தர வயதுள்ள பெண்மணி ஒருவர் ,நடுத்தர வகுப்பு குடும்பத்தை சேர்ந்தவர் போல காணப்பாட்டார்.அவர் நான் தனியாக பயணம் செய்வதை கண்டு, என்னை தன் மகள் போல கவனித்துக் கொண்டார்.மதிய உணவு சாப்பிடும் போது கூட, பெரியம்மா வீட்டிலிருந்து நான் இட்லி கொண்டு

சென்றிருந்தேன்.,இருந்தாலும் கூட அவன் தன் சாப்பாட்டிலிருந்து ,கொஞ்சம் எனக்கு கொடுத்து, அன்பொழுக சாப்பிடச் சொன்னார்.அவர் கொடுத்த தயிர் சாதமும் மிக சுவையாகவே இருந்தது.நான் பாத்ரூம் சென்றால் கூட, என் கூட வந்திருந்து ,எனக்கு எந்த இடையூறுமில்லாமல் கவனித்துக் கொண்டார்.கடையில் எது வணங்கினாலும் எனக்கும் ஒன்றை வாங்கி கொடுத்து, தன் குழந்தை போல என்னை பார்த்துக் கொண்டதில் என் உள்ளம் நெகிழ்ந்து விட்டது.இவர்கள் எனக்கு அம்மாவாக இருந்திருக்க கூடாதா?இனி இவரை என் வாழ்க்கையில் பார்ப்பதே அரிதாக இருக்குமே?என்ன உலகமோ இது என நினைந்தேன்

இரயில் மாலை ஆறு மணி அளவில், சிதம்பரம் இரயில் நிலையத்தை அணுகியது.இறங்குவதற்கு முன், அந்த பெண்மணி பல அறிவுரைகளை எனக்கு கூறி, பத்திரமாக வீடு போய் சேரும்படி கூறினார்கள்.பிரிய மனமில்லாமல், எனக்கு அன்புடன் பிரியாவிடை

கொடுத்தார்கள்.எனக்கும் அவரை பிரிய மனமில்லாமல் பிரிந்தேன்.அதோடில்லாமல் அங்குள்ள இரயில் நிலைய மாஸ்டர் இடமும், பத்திரமாக நான் வீடு போவதற்கு வழி செய்யுமாறு கூறிவிட்டு சென்றார் அந்த பெண்மணி.

யாரோ முன்பின் தெரியாத ஒரு பெண்மணி, என் மீது இவ்வளவு பரிவுகாட்டி அக்கறையுடனும்,அன்புடனும் கவனித்து கொண்டார்களே.என் உறவினர்கள் ஒருவர் கூட ,என் பெற்றோரோகள் உள்பட, இப்படி ,எங்களிடம் பரிவாகவும், பாசமாகவும் இருந்ததில்லையே.ஏன்?பணம் வசதியுள்ள குடும்பத்தில் பிறந்து வளரும் நாங்கள் அன்பும்,அக்கறையும் காட்டாத உறவினர்களுகிடையில் மாட்டி தவிப்பதேன்?பணம் ரொம்பவும் இல்லாத, இந்த இரயில் பயணி பெண்மணிக்கு நான் மகளாக பிறந்திருக்க கூடாதா?இந்த அம்மாவிற்கு பிறந்த குழந்தைகள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள் என மனதிற்குள் எண்ணிக் கொண்டே

ப்ரியாவிடை கொடுத்துவிட்டு திம்பியதும்,.

“எந்த வீட்டு குழந்தை பாப்பா நீ?வீட்டு முகவரி தெரியுமா?யாராவது கூட துணைக்கு அனுப்பவா?”என ஸ்டேஷன் மாஸ்டர் கேட்கவே,

“யாரும்தேவையில்லை.அதோதெரிகிறதே,அந்தபள்ள

“நீ அவரது சொந்த பேத்தியா பாப்பா? நடந்து போகாதே.நான் வேண்டுமானால் ஜட்கா ஏற்பாடு செய்கிறேன்.பெரிய இடத்து பொண்ணு நீ,தனியாக போவது சரியில்லை.யார் உன்னை சென்னையிலிருந்து தனியாக அனுப்பினார்கள்”?”உன் தாத்தாவிற்கு நீ வருவது தெரியமா?”என கேள்விகளை அடுக்கிகொண்டே சென்றார்.

“தெரியாது’நான் போனால்தான் தெரியும்,”என நடந்ததது சுருக்கமாக இரண்டு முன்று வரியில் முடித்துக் கொண்டு ,ஜர்காவண்டி வேண்டாம் நான் நடந்தே போய்விடுகிறேன் என அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, மளமளவென நடந்து

வீடு வந்து சேர்ந்தேன்.வீடு சேருகையில் மாலை 6:30 ஆகிவிட்டது.

கைப்பையுடன் நான் தனியாக வந்து நின்றதை பார்த்ததும் தாத்தா பாட்டிக்கு மிக அதிர்ச்சியாக போய்விட்டது.

“உன்னை பெரியம்மா சென்னைக்கு அழைத்துச் சென்றுவிட்டதாக இன்று மதிய ம்தான் உன் டீச்சர் வந்து சொல்லிவிட்டுச் சென்றார்கள்.நீ எப்படி தனியாக வந்தாய்”என தாத்தா பதட்டத்துடன் கேட்டதும்,நான் நடந்தவைகளை தாத்தாவிடம் கூறினேனே.

பிறகு தாத்தாவிடம் ஒரு கடிதத்தை வாங்கி, குமாரி அக்கா கேட்டுக்கொண்டபடி அம்மாவுக்கு, நான் ஊர் வந்து பத்திரமாக சேர்ந்தது பற்றி கடிதம் எழுதி ,மறுநாளே தபாலில் போட்டுவிட்டேன்.

அந்த டிசம்பர் மாத விடுமுறையும் முடிந்து 1971-ம்வருடமும் பிறந்து

ஓடிக்கொண்டிருந்து.திடீரென ஒரு நாள் மாலை நேரம் இருக்கும், தாத்தாவிற்கு சென்னையிலிருந்து தந்தி வந்துள்ளதாக தபால்காரர் கொண்டு வந்து கொடுத்தார்.தாத்தாவும், பாட்டியும் ,வீட்டிலுள்ளவர்களும் பயத்துடன், தாத்தா தந்தியை பிரித்து படிக்கும் வரை பார்த்துக் கொண்டு நின்றிருந்தனர்.தந்தியை படித்து முடித்த தாத்தா, சென்னையில், எங்கள் அப்பாவின் தந்தை சுந்தரம் இறந்துவிட்டதாக செய்தி வந்துள்ளது என கூறியதும், அனைவருக்கும் சற்றே நிம்மதி ஏற்பட்ட்டது.அனைவரும், எங்கள் அம்மாவிற்கு ஏதும் ஆகிவிட்டதோ என்ற பயத்தில் நின்றிருந்தனர்.

தாத்தாவும்,பட்டியும் தங்கள் சம்மந்தி இறந்ததாக்காக நிச்சயமாக போகவேண்டும் என கருதியதால் ,அங்கு வேலை செய்யும் ஆட்களை அனைவரையும் அழைத்து, ஒரு வாரத்திற்கு தங்கள் வீட்டில் இருக்கப்போவதில்லை என்றும் ,அந்த ஒரு வார காலத்திற்கு, தினமும்

தேவையானவைகளை உடனடியாக பட்டியல் போட்டு வாங்கிவரும்படியும்,எங்களை ஸ்கூலுக்கு அனுப்புவது முதல், சமையல் வரை எல்லா ஏற்பாடுகளையும் தாத்தா துரிதமாக நடக்க செயல் பட்டார்கள்.எல்லாம் அவரசர அவரசரமாக நடந்து கொண்டிருந்தது.தாத்தாவும் ,பாட்டியும் இரவு இரயிலிலேயே சென்னை செல்ல எல்லா பயண ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தனர்.சென்னையில், சுந்தரம் தாத்தா இறந்தது குறித்து எங்கள் நால்வருக்கும் அவ்வளவாக எதுவும் பாதிக்கப்படவில்லை.ஏன் என்றால் சுந்தரம் தாத்தாவுடன் நாங்கள் அவ்வளவாக பழக்கம் இல்லாததால், எங்கள் நால்வருக்கும் அதுபற்றி யோசிக்ககூட தோன்றவில்லை.

தாத்தாவும் பாட்டியும் ஒருவாரத்திற்கு தேவையான எல்லா வசதிகளையும் செய்துவிட்டு, எங்கள் நால்வரையும் வீட்டு வேலை ஆட்களின் கண்காணிப்பில் விட்டுவிட்டு சென்று விட்டார்கள் அன்றிரவே.ஒரு வாரம் என கூறிவிட்டு சென்ற இருவரும் மூன்று

நாட்களில் திரும்பி விட்டனர்.ஏன் ஏன்றால், சுந்தரம் தாத்தாவின் பதினைந்தாம் நாள் காரியம் சமயம் மறுபடியும் செல்ல வேண்டி இருப்பதால் ,சுந்தரம் தாத்தாவின் இறுதி ஊர்வலம் முடிந்ததும், சிதம்பரம் திரும்பிவிட்டார்கள் இருவரும்.

அம்மாவும்,பெரியம்மாவும் அங்கு வந்திருந்ததாகவும் ,எல்லா உறவினர்களை பார்த்ததாகவும் பேசிக்கொண்டனர் தாத்தாவும் பாட்டியும்.சுந்தரம் தாத்தாவின் பதினைந்தாம் நாள் காரியத்திற்கு, என் தங்கை ஆனஹியை மட்டும் தன்னுடன் அழைத்துக்கொண்டு சென்றிருந்தார்கள்
தாத்தாவும்,பாட்டியும்.ஆனஹியை அம்மா பார்க்காவேண்டும் என ஆசைப்பட்டதால் அவளை மட்டும் தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார்கள். இம்முறையும் தாத்த்தாவும் பாட்டியும் இரண்டு நாட்களில் வீடு திரும்பிவிட்டார்கள்.பதினைந்தாம் நாள் காரியத்திற்கு செல்லும் முன்,தாத்தாவும் பாட்டியும் தாங்கள் செய்ய வேண்டிய

முறைக்காக, நிறைய பேருக்கு துணிமணிகளை வாங்கி கொண்டு சென்றிருந்தார்கள். எங்களுக்கும் அந்த சாக்கில் ஆளுக்கொரு உடை கிடைத்தது.

எல்லாம முடிந்து , மாதங்கள் உருண்டோடின.ஆனால் அடுத்த வருடம் நாங்கள் நால்வரும் எங்கு இருக்கப்போகிறோம் என்பது எங்கள் நால்வருக்கும் ஒரு புதிராகவே இருந்தது.இதற்கிடையில் மாமா ஜகன்னாதனும் அடிக்கடி வந்து போய்கொண்டிருந்தார்கள்.தாத்தா, பாட்டியிடம் நாங்கள் அடுத்த வருடம் அங்கு இருக்க கூடாது என, வரும் போதெல்லாம் வலியுறுத்தி வந்தார்கள் மாமா ஜகந்நாதன்.

1971-ம்வருடம் கோடை விடுமுறையும் ஆரம்பமாகும் நேரம் நெருங்கி கொண்டிருந்தது.கோடை விடுமுறை ஆரம்பித்த முதல் பாட்டி ,தாத்தாவிடம்,"நமக்கோ வயதாகிக்கொண்டே போகிறது.மங்கையை வேறு, சென்னைக்கு மாற்றலாகி கொண்டு

சென்று விட்டாள் சேது.இவர்கள் அப்பா தேவன் பொறுப்பில்லாமல் சென்னையில் இருக்கிறார். இவர்கள் அப்பா சரியில்லாததால் , அவருடன் குழந்தைகளை தனி குடித்தனம் வைக்கவும் சேது சம்மதிக்க மாட்டேன் என்கிறாள்.நம்மால் இந்த வயதான காலத்தில், நான்கு குழந்தைகளை வைத்துக் கொண்டு சமாளிப்பது நடக்காத காரியம்.ஜகன்னாதனின் தொந்தரவு நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.உடனடியாக சென்னை சென்று சேதுவிடம் இது பற்றி கேட்டு வந்து விடுங்கள்"என தினமும் நச்சரித்து வந்தார்கள்.

கோடை விடுமுறையும் ஆரம்பித்தது முதல், என் மனதில் இனம் புரியாத பீதி ஏற்பட்டு என் வயிற்றை கலக்கிக் கொண்டிருந்தது.எதோ கெடுதல் நடக்க இருக்கிறது என என் உள் மனது கூறிக் கொண்டே இருந்தது.எதிர்காலத்தை நினைக்கையில், பயமாகவும் இருந்தது.விடுமுறைக்கு ,அம்மா சிதம்பரம் வருவார்கள் என எதிர்பார்த்திருந்தோம்.அம்மா வருவதற்கான

அறிகுறி எதுவும் தென்படவில்லை.எது நடந்தாலும் எல்லாவற்றிற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும் என்ற தைரியத்தை என் மனதிற்குள் வளர்த்துக் கொண்டேன்.

விடுமுறை ஆரமபித்து ஒரு வாரம் இருக்கலாம். ஒரு நாள் இரவு வழக்கம்போல் பெரியம்மா சேதுவின் திடீர் வருகை எங்களுக்கு ஆச்சரியத்தை தந்தது.பெரியம்மாவின் ஒவ்வொரு வருகையும், எங்களை கலக்கியும் இருக்கிறது.பெரியம்மாவின் வருகையால் யாருக்குமே நிம்மதி ஏற்படவில்லை.இந்த முறை என்ன இடியை தூக்கி எங்கள் தலையில் போடப் போகிறார்களோ என காத்திருந்தேன்.தாத்தாவும்,பாட்டியும் இம்முறை பெரியம்மாவிடம் சென்னைக்கே எங்களை அனுப்பிவிடுமாறு கூறுவதற்கு தயாராக, உரிய நேரத்திற்காக காத்திருந்தார்கள்.

அன்றிரவு பெரியம்மா ஏதும் பேசவில்லை.மிகவும் களைப்பாக இருந்ததால் காலையில் எழுந்து விவரங்களை பேசலாம் என கூறிவிட்டு

பெரியம்மாவிற்கு என்று ஒதுக்கப்பட்ட படுக்கை அறைக்கு ஓய்வெடுக்க சென்று விட்டார்கள்.

“விடிந்தால் சேதுவிடம் அவசியம் பேசிவிடுங்கள், அவள் ஊருக்கு கிளம்புவதற்குள்”என பாட்டி தாத்தாவின் காதை கடித்தார்கள் இரவு தூங்க போவதற்கு முன்.

“சரி,நான் பேசாமலா இருப்பேன்.நீ, நிம்மதியாக தூங்கு.எது பற்றியும் கவலை படாதே.ஆகா வேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன்”என தாத்தா கூறிவிட்டு படுக்கச் சென்று விட்டார்கள்.

இரவு பூராவும் ,என் மனதில் ,அவர்கள் காலையில் என்ன முடிவு எடுக்கப் போகிறார்களோ? நாம் எங்கு இருக்கப் போகிறோம்?என்ற சிந்தனை தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது.காலையில் சீக்கிரமாக எழுந்து ,அவர்கள் பேசுவதை கேட்க நினைத்தேன்.தாத்தா,பாட்டி பெரியம்மா மூவருமே விடியற்காலை நாலு மணிக்கெல்லாம்

எழுந்து விடுவார்கள்.

அவர்களது பேச்சு வார்த்தைகள் எல்லாம் அப்போதுதான் மும்முரமாக இருக்கும்.எனவே எப்படியாவது தூங்கி விடாமல் முழித்திருந்து கேட்க முடிவு செய்தோம் நானும் அண்ணன் ஷானும்.பயமும்,பீதியும் எங்களை கலக்கியதன் காரணமாகவோ ,என்னோவோ என்னால் அன்றிரவு நிம்மதியாக தூங்க முடியவில்லை.கண்கள் அகலவிரிந்து கொட்டகொட்ட முழித்துக் கொண்டிருந்தேன்.

விடியற்காலையும் வந்தது.வெளியே பெரியம்மாவும்,தாத்தாவும் பேசும் குரல் கேட்டது.காதை தீட்டிக் கொண்டு ஜன்னலருகே சென்று உட்கார்ந்து கொண்டேன்.அவர்கள் முன்று பேரும், காலையில் எழுந்து, காலை கடன் அனைத்தையும் முடித்துவிட்டு வரும் சப்தம் கேட்டது.இன்னும் யாரும் எதுவும் பேச ஆரம்பிக்கவில்லை.சில மணி நேரங்கள கழித்ததும், பெரியம்மாவின் பேச்சுக் குரல்

கேட்டது.

“அப்பா நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன்.இனி நீங்கள் கவலை படவேண்டாம்.எல்லாம் சரியாகிவிடும்.மங்கையும் விரைவில் குணமாகி விடுவாள்”என்ற பீடிகையும் ஆரம்பித்தார்கள்.

“என்ன சொல்றே சேது,புரியும்படி கொஞ்சம் விளக்கமாக சொல்லு.பீடிகை போடாதே”என்றார்கள் தாத்தா.

பெரியம்மா மெதுவாக ஆரம்பித்தார்கள்”அப்பா,மங்கையை நான் என் வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம் என இருக்கிறேன்.என்னுடன் அவள் இருந்தால், அவளை நான் நன்றாக பார்த்துக் கொள்ளவும்,வைத்தியம் செய்து குணபடுத்தவும் வசதியாக இருக்கும்.அவளை தினமும் வேலைக்கு, என் காரிலேயே கொண்டு போய் விட்டு கொண்டு வந்து விடுவேன்.வேலைஆட்களும் இருப்பதால், அவர்கள் மங்கையை பார்த்து

கொள்வார்கள்.அதோடு இல்லாமல் அவள் என் வீட்டிலிருந்தால், தேவன் வந்து அவளிடம் பணம் வாங்க முடியாது.அவள் தனியாக குடி போனால், இவ்வளவு சொத்தையும், தேவன் விற்று சூதாடி நாசமாக்கி விடுவார்.குழந்தையையும், மங்கையையும் நடுத்தெருவில் விட்டுவிடுவார்.எல்லாவிதத்திலும் மங்கை என்னுடன் இருப்பதே நல்லது என முடிவு செய்துவிட்டேன்.அவளது வருமானம்,சொத்து,நகை,பாத்திரம் பணம் எல்லாம் கடைசிவரை பத்திரமாக பாதுகாத்து, அவளிடமே நேரம் வரும்போது கொடுத்துவிடுவேன்"என்றார்கள்.

"அப்ப குழந்தைகளும் உன்னுடன் அழைத்துச் சென்று வைத்து படிக்க வைக்கப் போகிறாயா?"என கேட்டார்கள் தாத்தா.

"அந்த ஊதாரி பெத்த குழந்தைகளை நாம் ஏன் அப்பா வைத்துக் கொள்ளவேண்டும்?பெத்த அப்பனுக்கே குழந்தைகளை பற்றி அக்கறை இல்லை என்றால், நாம் ஏன் மண்டையை

போட்டு உடைத்துக்
கொள்ளவேண்டும்.மங்கையிடம் சொல்லி
,தேவனுக்கு விவாகரத்து நோட்டீஸ்
அனுப்பிவிட்டு,பத்து நாட்களுக்குள், அவர் வந்து
குழந்தைகளை தன்னுடன் அழைத்துச்
செல்லவில்லை என்றால்,
அனிதாவையும்,ஆனஹியையும் ஒன்றாக ஒரு
அநாதை இல்லத்திலும்,ஷானையும்,பாட்டையும்
ஒன்றாக ஒரு அநாதை இல்லத்திலும்
சேர்த்துவிட தீர்மானித்து விட்டதாகவும்
,அதற்க்கான ஏற்பாடுகளையும் நான் முன்பே
அந்தந்த அநாதை இல்லத்திற்கு சென்று முன்
ஏற்பாடுகளை செய்துவிட்டு
வந்துவிட்டேன்.பத்து நாட்களுக்குள் வந்து,
தேவன் குழந்தைகளை அழைத்துச் சென்று,
அவன் பெற்றோர்கள் வீட்டில் வைத்தது
வளர்ப்பாரோ ,அல்லது தனியாக வைத்து
வளர்ப்பாரோ அது அவருடை பாடு.அது பற்றி
நாம் கவலை பட வேண்டிய அவசியம்
இல்லை.அவர் குழந்தைகளை வளர்க்க
முடியாமல் தெருவில் பிச்சை எடுக்க

வைத்தாலும் அது அவர் பாடு.நம் பெண் மங்கையை பற்றி மட்டும்தான் இப்போதைக்கு நாம் கவலைபடவேண்டும்".என்றார்கள் பெரியம்மா சற்றே ஈவு ,இறக்கம் இல்லாதவராக

இதை கேட்டதும் பாட்டியும்,தாத்தாவும் சிறிது நேரம் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார்கள்.

"என்னப்பா யோசிக்கிறீர்கள்?தேவன் பொறுப்பும்,புத்தியும் வரவேண்டும் என்றால் ,இது தவிர வேறு வழி கிடையாது நமக்கு.மங்கையால் எந்தவித முடிவுக்கும் வரமுடியாது.நாம்தான் ஏதாவது செய்தாகவேண்டும்.வருகிற வருடம் குழந்தைகள் இங்கிருப்பதில் எனக்கும் சரியாகபடவில்லை."என தொடர்ந்தார்கள் பெரியம்மா.

"இதுவும் நல்ல யோசனைதான் சேது, அந்த மனுஷன் பெற்ற குழந்தைகள், அவன் பார்த்து

காப்பாற்ற வேண்டியது, அவனுடைய பொறுப்பு.என் பெண்ணை படுத்தியவன், சும்மா சுதந்திரமா திரிய விடுவது நல்லதாகப் படவில்லை.நீ சொல்வதும் சரியாகத்தான் படுகிறது எங்களுக்கும் “என பாட்டி பெரியம்மாவை ஆதரிப்பது போல பேசவே, தாத்தா வேறு வழியின்றி எதுவும் கூறாமல் பேசாமலிருந்தார்கள்.

“என்னப்பா நீங்கள் எதுவும் பேசவில்லை?”என பெரியம்மா கேட்டதும்.

“உன் இஷடப்படி செய் சேது”.என ஒரே வார்த்தையில் கூறிவிட்டு அமைதி ஆனார்கள் தாத்தா.

இதை கேட்டுக் கொண்டிருந்த எனக்கு, என் இதயமே பல ஆயிரம் துண்டுகளாக வெடித்து சிதறுவதுபோல இருந்தது.அப்பா நிச்சயமாக நம்மை அழைத்துச் செல்ல வரமாட்டார்கள்.பெரியம்மா நிச்சயமாக எங்களை அநாதை ஆசாரமத்தில் சேர்க்கத்தான்

போகிறார்கள்.இனிமேல் நான்
அப்பா,அம்மா,தாத்தா,பாட்டி
அண்ணன்ஷான்,தம்பி பாட்,என் சினேகிதிகள்
உறவினர்களை யாரையும் பார்க்கப் போவது
கிடையாது.நானும்,ஆனஹியும் அநாதை
இல்லத்தில் எப்படி காலம் தள்ளப்
போகிறோமோ?எப்படி யாவது தங்கையை,
நான் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள
வேண்டியது இனி என்னுடைய பொறுப்பே,
என எண்ணியதும் என் தொண்டை அடைத்துக்
கொண்டு கண்களிலிருந்து கண்ணீர்
வழிந்தோடியது.

ஆனஹியை திரும்பி பார்த்தேன்.பாவம் அவள்,
சிறு குழந்தை நிம்மதியாக தூங்கி
கொண்டிருந்தாள்.ஷானையும் தம்பி பாட்டையும்
பார்த்தேன்.அவர்களும நன்றாக தூங்கிக்
கொண்டிருந்தார்கள்.இவர்களுடன் எவ்வளவு
சண்டை போட்டிருப்பேன்.இனிமேல் இவர்களை
நான் பார்க்க போவதே கிடையாதா? என
நினைக்கையில் எனக்குள் மேலும் அழுகை
அழுகையாக வந்தது.

அப்பாவும்,அம்மாவும் எங்களை அநாதை ஆசரமத்திர்க்கு மட்டும் அனுப்பிவிட்டால், நான் உயிருடன் இருக்கும் வரை, அவர்கள் முகத்திலே விழிக்க போவதே இல்லை.அதுமட்டும் இல்லை .ஆனஹியையும் ,அவர்களை பார்க்க அனுமதிக்க மாட்டேன்.அவளை நான் நன்றாக வளர்ப்பேன்.நான் பெரியவளாக வளர்ந்ததும், என் சகோதரர்களை, எங்கே இருந்தாலும் எப்பாடியாவது கண்டுபிடித்து, நாங்க நாலு பேரும் ஒன்றாக, நன்றாக வாழ்ந்து இவர்களுக்கு காண்பிக்கபோகிறேம,.என எனக்குள் சபதம் எடுப்பது போல சொல்லிக் கொண்டேன்.

எனக்கு அழுகை பீரிட்டு வந்தது.ஒரு முலையில் சென்று உட்கார்ந்து கொண்டு தேம்பி,தேம்பி அழுதேன்.மேலும் தாத்தாவின் பேச்சுக் குரல் தொடரவே ,மீண்டும் ஜன்னல் அருகே சென்று ஒட்டுக் கேட்டேன்.

“மங்கையிடம் விஷயத்தை சொல்லிவிட்டாயா சேது?அவள் இதற்கு சம்மதம் என சொல்லிவிட்டாளா?”என கேட்டார்கள்.

“இன்னும் அவளுக்கு இதுபற்றி சொல்லவில்லை.விவாகரத்து நோட்டிஸ் அனுப்புவது பற்றி கூறிவிட்டேன்.இந்த நோட்டிஸ்,சும்மா தேவனை பயமுறுத்தவே என்றும்.,உண்மையில் விவாகரத்து செய்வதற்கு இல்லை என அவளிடம் சமாதானம் கூறி, சம்மதிக்க வைத்துவிட்டேன்”என்றார்கள் பெரியம்மா.

“ஏன் குழந்தைகளை பற்றியும் கூறிவிடவேண்டியதுதானே சேது?”என்று தாத்தா கேட்டார்கள்.

“இப்போதைக்கு அவளிடம் குழந்தைகளை பற்றி கூறுவது சரியில்லை அப்பா.முதலில் இந்த விவாகரத்து நோட்டிஸ் பார்த்துவிட்டு தேவன் என்ன செய்கிறார் என்று பார்க்கலாம்.அதன் பிறகு அவளிடம், என், அடுத்தபடி உள்ள பிளானை மெதுவாக சமயம் பார்த்து நாசுக்காக எடுத்து அவளுக்கு புரியும்படி சொல்லிவிடுகிறேன்”என்றார்கள் பெரியம்மா.

நான் அழும் சத்தம் கேட்டு எழுந்த அண்ணன் ஷான்,:ஏண்டி அழுறே?"என கேட்டான்.

அங்கு ஹாலில் பெரியம்மா பேசியதை எல்லாம் அவனிடம் கூறியவுடன், அவன் தம்பி பாட்டையும் எழுப்பிவிட்டான்.அவனிடமும் நாங்கள் விஷயத்தை கூறவே, அவன் திருதிருவென முழித்தான்.

"நம்மை நிச்சயமாக அப்பா அழைத்துச் செல்ல மாட்டார்கள்.நாம்அநாதை விடுதிக்குதான் போகப் போகிறோம்"என அவன் கூறும் போதே, அவன் கண்களும் கலங்கியது.

"நீ ஆனஹியை பார்த்துக் கொள்,நான் பாட்டை பத்திரமாக பார்த்துக் கொள்கிறேன்"என்றான் ஷான்.

"நாம வளர்ந்ததும் ,எப்படியாவது நாம் இருக்கும் இடங்களை கண்டு பிடித்து, நாலுபேரும் ஒன்றாக வாழலாம்"என்றேன் அழுது கொண்டே.

நாங்கள் முன்று பேரும் ஒன்றாக உட்கார்ந்து

கொண்டு, தனித்தனியாக பிரியப்போகிறோமே என்ற கவலையில் இருந்தோம்.எங்கள் மூவருக்கும் அழுகை அழுகையாய் பொங்கி வந்தது.

“நீ எங்கே இருந்தாலும் பத்திரம்மா ஆனஹியை பார்த்துக் கொண்டு அவளையும் நன்றாக படிக்க வைத்து, நீயும் எப்படியாவது நல்லா படித்து பட்டம் வாங்கிவிடு”எது பற்றியும் கவலை படாதே”என ஆறுதல் கூறினான் அண்ணன் ஷான்.

“நீயும் தம்பியை பார்த்துக் கொள்.அப்பாவையும்,அம்மாவையும் ,உறவினர்களையும் நாம் ஏறெடுத்துக் கூட பார்க்கக் கூடாது.நம் உறவினர்கள் யாரும் நல்லவர்கள் இல்லை.ஒரு விதத்தில் நாம் எல்லாம் அநாதை ஆஸ்ரமம் செல்வது எனக்கு சந்தோஷத்தையே கொடுக்கிறது.நம் உறவினர்கள், அங்கு வந்து நம்மை தொந்தரவு செய்ய மாட்டார்கள்.நாம நாலு பெரும் நிம்மதியாக இருக்கலாம்”என்றேன் நான்.

“ஏய் அண்ணா,நாம் நம் பாடபுத்தகங்களை விற்று பணத்தை எதற்கும் கொஞ்சம் கையில் வைத்துக் கொள்வோம்.நாம முணு பேரும் புத்தகங்களுக்கு புது அட்டை போட்டு,நம் தெருவிலுள்ளவர்களுக்கு விற்று விடலாம்.பல் விளக்கியதும் நீ வெளியே சென்று உன் சிநேகிதர்களிடம் புத்தகம் வாங்கி கொள்கிறார்களா?என்று கேட்டு எப்படியாவது எல்லாவற்றையும் விற்று விடு.சீக்கிரமே விற்று விட்டால், எப்ப புறப்பட்டாலும் நம்மிடம் கொஞ்சம் பணம் இருப்பது நல்லது”என்று அண்ணனுக்கு என்னுடைய ஐடியாவை கூறினேனே.

“சரி,நீ எங்கள் புத்தகதிற்கு எல்லாம் புது அட்டை போட்டு தயாராக வை. பாட்டும் ,நானும் எங்கள் சிநேகிதர்களிடம் விஷயத்தை கூறி, உடனடியாக நம் புத்தகங்களை எல்லாம் பாதி விலைக்கு வாங்கி கொள்கிறார்களா?என கேட்டு வருகிறேன்”என்றான் ஷான்.

நாங்கள் பேசி கொண்டிருக்கும் போதே

பொழுது நன்றாக விடிந்து விடவே,ஆனாஹ்யை எழுப்பி கொண்டு வெளியே சென்று முகம் கைகால்களை கழுவி, பல் விளக்கி முடித்து, சமயலறைக்கு சென்று காபியை குடித்தோம்.

அனைவரும் அமைதியாக இருந்தனர்.நாங்க முன்று பேரும், எதையும் வெளியே தெரிந்ததாக காண்பித்துக் கொள்ளவும் இல்லை,பெரியம்மா எங்களை கண்டும் காணாததுபோல, தாத்தாவிடம் பேசிக் கொண்டிட்ருந்தார்கள்.

தாத்தா, பாட்டியை பார்க்க இப்போது சற்றே வெறுப்பாக இருந்தது.இப்போது தாத்தாவின் வீடு யாரோ அன்னியர் வீடு போல தோன்றியது.யாருடனும் பேசவோ,பார்க்கவோ எங்களுக்கு பிடிக்கவில்லை.

காப்பி குடித்து முடித்ததும், அண்ணன் ஷான், தம்பியும் வெளியே ஓடிவிட்டார்கள்.நான் ஆனஹ் இடம் இது பற்றி கூறவில்லை.நானும் செருப்பை மாட்டிக்கொண்டு, பக்கத்து தெருவிலுள்ள, என் சினேகிதி வீட்டிற்கு

புறப்பட்டேன்.அவளுக்கு, பக்கத்து வீட்டில்
படிக்கும் பையன், ஏழாம் வகுப்பிலிருந்து
எட்டாம் வகுப்பு செல்ல இருப்பதாலும்,
அவனால் புது புத்தகம் வாங்க வசதி
இல்லாததால், பழைய புத்தகங்களை யாராவது
விற்றால் வாங்க இருப்பதாக வகுப்பில்
எங்களிடம் சொல்லிக் கொண்டிருந்தது என்
நினைவில் வரவே, அவளிடம் சென்று
விஷயத்தை கூறி வரலாம் என சென்றேன்.

நான் முழு விஷயத்தை அவளிடம் கூறாமல்
திரும்பவும் நாங்கள் சென்னைக்கு மாற்றலாகி
போகப் போகிறோம்.அடுத்த ஸ்கூல் வருடம்
நாங்கள் இங்கு இருக்க போவதில்லை என
கூறியதும், அவள் மனம் மிக வேதனை
அடைந்தது.உடனடியாக பக்கத்து வீட்டு
பையனிடம் விஷயத்தை கூறி, என்
புத்தகங்களை வாங்கி கொள்ள
சொன்னாள்.அவனும் சரி என கூறவே,
சந்தோஷத்துடன் நான் வீடு திரும்பினேன்

நான் மெதுவாகச் சென்று, என் புத்தகம்

இருக்கும் அலமாரியை திறந்து, எட்டாம் வகுப்பு பாட புத்தகத்தை எல்லாவற்றையும் எடுத்து, பழைய அட்டைகளை பிரித்து குப்பையில் போட்டுவிட்டு,தூத்தா வைத்திருந்த பழைய செய்தித் தாள்களை எடுத்து வந்து, எல்லா புத்தகத்திற்கும் புது அட்டையை போட்டு முடித்தேன்.அப்படியே அண்ணன் ஷான் மற்றும் தம்பி பாட்டின் புத்தகங்களுக்கும், புது அட்டைகளை போட்டு முடித்தேன்.

பிறகு எங்கள் மூவரும் உபயோகத்து வந்த நோட்டு புத்தகங்களை எல்லாம் எடுத்து,அவற்றில் எழுதி இருந்த தாளின் பக்கங்களை கிழித்து எடுத்து குப்பையில் போட்டுவிட்டு, மீதம் இருந்த எழுதாத வெள்ளை வெறும் தாள்களை ஒன்றாக சேர்த்தேன்.எங்கள் மூவர் நோட்டிலிருந்து கிழித்தெடுத்த வெள்ளை தாள்களை கொண்டு, நான்கு நோட்டு புத்தகங்களை தைக்கலாம் போல இருந்தது.அவைகளை நான்காக பிரித்து , அதற்கு மேல் செய்தித்தாளை மேல் அட்டையாக வைத்து, எல்லா தாளையும் சமமாக

கத்தரிக்கோலால் வெட்டி எடுத்துவிட்டு ,.தாத்தா அரிசி முட்டையை தைப்பதற்காக வைத்திருந்த பெரிய ஊசியையும்,நூலையும் எடுத்து எப்படியோ கஷ்டப்பட்டு ,நான்கு நோட்டு புத்தகங்களை தைத்து முடித்தேன்.பிறகு எங்களுடைய பழைய பேனாக்கள்,பென்சில்கள்,ரப்பர்கள்,எல்லாவற்றையு நான்காக பிரித்து, நான்கு பென்சில் பாக்ஸில் தனித்தனியாக போட்டு வைத்தேன்.

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஆனஹி "எதுக்கு எல்லாம் பண்ணுகிறாய்?"என்று கேட்டாள் ..

"சும்மாத்தான்,போரடிக்குது.அதுதான் இதை எல்லாம் ஒழுங்கு பண்ணி வைக்கிறேன்"என பொய் சொன்னேன்.

"பிறகு எங்கள் அறைக்கு சென்று எங்களது துணிமணிகளையும் எடுத்து அழகாக மடித்து, அவரவர் பெட்டிக்குள் வைத்து பாக் பண்ணிவிட்டு,ஸ்கூல் சம்பத்தமானவைகளையும்,

அவரவர் பாகில் வைத்து தயாராக வைத்துவிட்டேன்.

எப்போது எங்களை பெரியம்மா இங்கிருந்து அழைத்து செய்வார்கள் என தெரியாததால் ,எப்ப கூப்பிட்டாலும் பெட்டி தயாராக வைத்திருந்தால் கவலை இல்லாமல் ,அப்படியே எடுத்துக் கொண்டு செல்வது போல, எல்லாம் ஒரு அரை நாளில் தயார் செய்து விட்டேன்.

ஆனஹி என்னை சும்மா விடவில்லை.சுற்றி சுற்றி வந்து நான் ஏன் எல்லாவற்றியும் பாக் பண்ணுகிறேன் என நச்சரித்து கேட்கவே “நாம அநாதை விடுத்திக்கு போக போவதாக பெரியம்மா ,தாத்தாவிடம் கூறியதை நான் கேட்டுவிட்டேன்,நீ யாரிடமும் இது பற்றி சொல்லிவிடாதே. உனக்குள் ரகசியமாக வைத்துக்கொள்”என அவளிடம் கூறி, அவளிடம் சத்தியம் வாங்கிக் கொண்டேன்.

அவளும் நான் நிச்சயமாக யாரிடமும் சொல்ல மாட்டேன் என சத்தியம் செய்து கொடுத்தாள்

எனக்கு.என்னை விட்டு போகாமல் என் அருகிலேயே உட்கார்ந்திருந்தாள் .பாவம் ஆனஹி,அவள் பிறந்ததிலிருந்து ஒரு இடத்தில் நிலையாக வளரவில்லை.கடைசியாக அவள் தலை எழுத்து அநாதை இல்லத்திற்கு போய் வளர வேண்டிய நிலை இருக்கிறது என நினைக்கையில் என் மனம் துன்புற்றது.

அநாதை இல்லம் எப்படி இருக்கும் .அங்குள்ளவர்கள் நல்லவர்களாக இருப்பார்களா?கெட்டவர்களாக இருப்பார்களா?சாதாரண பள்ளிக்கூடமாக, எல்லா பாடங்களும் சொல்லித்தருவார்களா?அல்லது படிப்பே சொல்லிதறாமல் விட்டுவிடுவார்களா?சாப்பாடு எப்படி இருக்கும்?எங்கு படுத்து தூங்குவோம்?என்று பலவிதமான எண்ண அலைகள் வந்து மோதிய வண்ணம் இருந்தது.அன்று நாங்கள் நால்வருமே முக வாட்டத்துடனும்,சோர்வுடனும் காணப்பட்டோம்.

அண்ணன் ஷான்,தம்பி பாட்டும் தங்கள்

புத்தகத்தை விற்க ஏற்பாடு செய்து விட்டு வந்தனர். அன்று எங்களுக்கு சாப்பாடு கூட சரியாக சாப்பிட முடியவில்லை.எப்படியோ அன்று தினம் ஓடியது.

மறுநாள் காலையில் பெரியம்மா சென்னைக்கு கிளம்பி சென்று விட்டார்கள்.அதன் பிறகு ஒரு வாரம் வழக்கம்போல ஓடியது.எங்கள் புத்தகங்களை விற்று ,அந்த பணத்தை பத்திரமாக பையில் வைத்துக் கொண்டோம்.தாத்தா,பாட்டியும் எங்களிடம் இதுபற்றி எதுவும் கூறாமல் வழக்கம்போல இருந்தார்கள் .

ஒரு நாள் விடியற்காலையில் முழிந்தேழுந்த நாங்கள், வரவேற்பறையில் தாத்தா யாருடனோ பேசிகொண்டிருந்தது கேட்டது.இவ்வளவு காலையில் தாத்தாவை பார்க்க யார் வந்திருப்பார்கள் என்ற சந்தேகத்துடன் வந்து பார்த்த நான் ,ஆச்சரியத்தால், தாமரை மலரைப் போல ,என் இரு கண்களும் அகல விரிய,,வாய் பிளந்து

கற்சிலையாக நின்று விட்டேன்.அங்கு சோபாவில், அப்பாவின் அக்கா ரோஜியின் கணவர் பாஸ்கர் மாமாவும்,அப்பாவின் தாய் மாமாவான சோமு தாத்தாவும்தான், தாத்தாவுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.என் கண்களையே என்னால் நம்ப முடியாமல் இருந்தது.எந்த விஷயத்திலும் தலை இடாத பாஸ்கர் மாமாவும்,சோமு தாத்தாவும், எதற்காக இங்கு வந்திருக்கிறார்கள்?இதுவரை என்ன பேசினார்கள்?என அறியும் ஆவலில், அங்கு சென்றதும்,என்னை பார்த்த சோமு தாத்தா "வாடா கண்ணு,எப்படி இருக்கீங்க எல்லோரும்"என்று கேட்டார்.

"நல்லா இருக்கோம் தாத்தா"என்று பதில் அளித்தேன்.

"போய் பல் விளக்கி காபி குடித்துவிட்டு வா"என தாத்தா அங்கிருந்து என்னை விரட்டி விட்டார்கள்.எல்லாவற்றியும் முடித்துவிட்டு ,சமயலறையில் பாட்டி,நான்,சமையற்கார சித்திரத்தினம்,வேலையாள் அஞ்சலி அனைவரும்

கேட்டுக் கொண்டிருந்தோம்.சமயலறையில் யாருக்கும் எந்த வேலையும் ஓடவில்லை. இதற்குள் ,ஆனஹி,ஷான்,தம்பி பாட் எல்லாம் எழுந்து வந்து விட்டார்கள்.

அத்யாயம்-முப்பத்தி ஆறு

“என்ன இருந்தாலும் இப்படி திடீரென ஒரு நோட்டிஸ், எங்க பையனுக்கு நீங்க அனுப்பியிருக்க கூடாது”என்றார் சோமு தாத்தா.

“உங்க பையன் என்னதான் செய்வதாக இருக்கிறார்? அதை பற்றி நீங்க எதுவுமே சொல்லவில்லையே?”என பதிலுக்கு தாத்தா, சோமு தாத்தாவை திருப்பி கேட்டார்கள்.

“சொல்வதற்கு என்ன இருக்கிறது.விவரத்தை தெளிவாக தெரிந்து வருமாறு எங்களை

அனுப்பியிருக்கிறான் தேவன். குழந்தைகளை அவன் தனியாக வீட்டில் எந்த உதவியுமில்லாமல் வளர்ப்பது என்பது முடிகின்ற காரியமாக எங்களுக்கு படவில்லை.உங்கள் பெண்ணையும், குழந்தைகளையும் ஒன்றாக மறுபடியும் தனி குடித்தனம் வைத்து விடுங்கள்.அவர்கள் ஒரு குடும்பமாக ஒன்றாக இருக்கட்டும்"என்றார் சோமு தாத்தா மறுபடியும்.

பாஸ்கர் மாமா எதுவுமே பேசவில்லை.சோமு தாத்தாதான் முழுக்க முழுக்க எல்லா விஷயங்களையும் பேசினார்.

"எங்கள் பெண்ணுக்கு உடல்நிலை மோசமாக உள்ளது.இந்த நிலையில் அவளை மறுபடியும் தனி குடித்தனம் வைத்தால், இப்போது அவளிருக்கும் நிலையில் முடியாதாத காரியம்.என் பெண்ணுக்கு, இங்கு நிறைய சொத்து இருக்கிறது.அதை வைத்துக் கொண்டு, அவள் நல்லபடியாக வாழ்ந்துவிட முடியும்.உங்கள் பிள்ள தேவன், அவருடைய

குழந்தைகளுக்கு பொறுப்பேற்று கொண்டுதான் ஆக வேண்டும், எங்கள் பெண்ணை பார்த்துக் கொள்வது எங்கள் பொறுப்பாக இருப்பது போல, அவர் குழந்தைகளுக்கு அவர்தான் பொறுப்பு.அவர் பொறுப்பு ஏற்காவிட்டால் எங்களுக்கு வேறு வழி இல்லை.அதுகளை அநாதை ஆசரமத்திர்க்கு போக வேண்டிய தலை எழுத்துதான்"என்றார்கள் தாத்தா.

சோமு தாத்தாவிற்கு இதை கேட்டதும் கோபம் வந்துவிட்டது"அது எப்படி பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் போது ,,அதுவும் கைநிறைய அவர்கள் இருவரும் சம்பாதிக்கும் போது, அவர்களை அநாதை விடுதியில் சேர்க்க போகிறோம் என வாய் கூசாமல் கூறுகிறீர்கள்.இது உங்களுக்கே நன்றாக படுகிறதா?"என்றார்..

"இவ்வளவு பேசுகிறீர்களே,முதலில் உங்கள் பிள்ளை தேவனை சூதாடுவது நிறுத்திவிட்டு, குடும்பத்தை சரிவர நடத்த புத்திமதி கூறுங்கள்.என்னிடம் கோபப்பட்டு பிரயோஜனம்

இல்லை"என்றார்கள் தாத்தா ஈஸ்வரன்.

"நாங்களிருவரும் தேவனிடம் இதுபற்றி பேசுகிறோம்.உங்கள் பெண் அனுப்பிய விவாகரத்து நோட்டிஸை பார்த்துவிட்டு, விஷயத்தை கேட்டு அறிந்துவர, எங்களை இங்கு அனுப்பினான்.மேலும் உங்கள் பெண் சென்னைக்கு மாற்றலாகி சென்றது அவனுக்கு இன்னும் தெரியாது.மங்கை இங்குதான் இன்னமும் இருக்கிறது என்றுதான் நினைத்துக் கொண்டு இங்கு எங்களை அனுப்பி, மங்கையை பார்த்து பேசி வரச சொன்னான்" என கூறினார் சோமு தாத்தா.

"காலை உணவையும், மதிய உணவையும் சாப்பிட்டுவிட்டு,இரவு இங்கேயே தங்கிவிட்டு, நாளைக்கு நிதானமாக சென்னைக்கு செல்லுங்கள்"என்று தாத்தா ஈஸ்வரன், அவர்கள் இருவரையும் மிகவும் அன்புடன் உபசரித்தார்கள்.

"ரொம்ப நன்றி, பரவாயில்லை,மங்கையை பார்த்து விவரம் அறிந்து போகவே

வந்தோம்.இப்போது எல்லாம் புரிந்து விட்டது.நாங்கள் உடனே புறப்பட்டு போய் தேவனிடம் விஷயத்தை சொல்லவேண்டும்.சாப்பாடு இப்ப முக்கியம் இல்லை"என கூறிவிட்டு இருவரும் உடனடியாக புறப்பட்டு சென்று விட்டனர்.

சோமு தாத்தாவும்,பாஸ்கர் மாமாவும் சென்னை திரும்பிய ஒரு சில நாட்களுக்கெல்லாம், மறுபடியும் பெரியம்மா சிதம்பரத்திற்கு வந்திறங்கினார்கள்.தாத்தாவும், பாட்டியும் எங்களிடம் எதை பற்றியும், அதன் பிறகு பேசாமல் எப்போதும் போல எங்களிடம் நடந்துக் கொண்டார்கள்.நாங்கள் நால்வரும் கூட, அவர்களிடம் இந்த விஷயத்தை பற்றி பேச்சை எடுக்காமல், நடப்பது நடக்கட்டும் என்று பொறுமையாக இருந்தோம்.

பெரியம்மாவை கண்டதும் பேயை பார்த்தது போல மனம் பகீர் என்றது.எப்பவும் விடியற்காலையில் வந்திறங்கும் பெரியம்மா ,இந்த முறை இரவு எட்டு மணிக்கு

வந்திறங்கினார்கள்.

“சாப்பிடுகிறாயா சேது?”சமையல்காரரிடம் ஏதாவது சமைக்கச் சொல்லவா?”என கேட்டார்கள் பாட்டி.

“இல்லை அம்மா,வேண்டாம் சாப்பிட்டு வந்து விட்டேன்,காலையில் ப்ரேக் பாஸ்ட் சாப்பிட்டுவிட்டு உடனே சென்னைக்கு திரும்ப இருக்கிறேன்”என்றார்கள் பெரியம்மா.

“எங்கு சாப்பிட்டாய்?”என விடாமல் கேட்டார்கள் பாட்டி.

நான் வரும் வழியிலேயே ஒரு ஊரில் சாப்பிட்டுவிட்டேன்.அந்த ஊர் பள்ளிக்கூட தலைமை ஆசிரியர் வீட்டிலேயே தடபுடலான சாப்பாடு,அருமையாக இருந்தது “என்று பதிலளித்தார்கள் பெரியம்மா.

அந்த ஹாலில் உட்கார்ந்திருந்த எங்கள் நாலு பேரையும் பார்த்த பெரியம்மா “நான் தாத்தா பாட்டியுடன் கொஞ்சம் தனியாக பேசவேண்டும்.

நீங்கள் நாலு பேரும் போய் பக்கத்து ரூமில் இருங்கள்”என கூறி எங்கள் நால்வரையும் விரட்டிவிட்டார்கள் அங்கிருந்து.

எங்க நாலு பேருக்கும், அவர்கள் என்ன பேசப்போகிறார்கள் என்ற ஆவலுடன் பக்கத்து அறைக்கு செல்வது போல சென்று, அங்கு சுவற்றோரமாக ஒழிந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தோம்.

“அப்பா உங்கள் கடிதம் பார்த்து உடனே புறப்பட்டு வந்து விட்டேன்”என்ன பேசினீர்கள் அவர்கள் இருவரிடமும்”என கேட்டார்கள் பெரியம்மா.

தாத்தா நடந்த பேச்சு வார்த்தைகளை ஒன்று விடாமல் பெரியம்மாவிடம் ஒப்புவித்தார்கள்.

நானும் மங்கையிடம் பேசினேன்.அவளுக்கும் தேவனை விவாகரத்து பண்ண இஷடமில்லை எனவும் ,விடுமுறையில் குழந்தைகளுடன் இருக்கவேண்டும் எனவும்

ஆசைபடுகிறாள்.நிஜமாக நீ விவாகரத்து செய்ய போவதில்லை,சும்மா தேவனை பயமுறுத்துவே இந்த் நோட்டிஸ் அனுப்பினாய் என அவளுக்கு சமாதானக் சொல்லி இருக்கிறேன்"என்றார்கள் பெரியம்மா.நான் நான்கு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு சென்னைக்கு செல்கிறேன்.தேவன் வந்து குழந்தைகள் எங்கே என்று கேட்டால் என்னிடம் இருக்கிறார்கள் என கூறிவிடுங்கள் .வேறு எதுவும் பேச வேண்டாம்"என்றும் தாத்தாவிற்கு எச்சரித்துக் கூறினார்கள் பெரியம்மா.

மேலும் தொடர்ந்தார்கள்.குழந்தைகளை இப்போது தேவனிடம் ஒப்படைப்பது சரி இல்லை என்றே எனக்கு தோன்றுகிறது. அவருக்கு பாடம் புகட்டவேண்டும் என்றால், குழந்தைகளை உடனே அநாதை விடுதியில் சேர்த்து விடுவதுதான் நல்லது என முடிவு செய்துவிட்டேன்.தேவன் இடம் ஒப்படைக்கப் போவதில்லை. குழந்தைகளை வைத்துக் கொண்டு மங்கையிடம் பணம் கேட்டு நச்சரிப்பார்.மங்கையை குணமாக்கும் வரை ,என்

கண்காணிப்பில் ஜாக்கிரதையாக வைத்திருந்து விட்டு, மறுபடியும் அவளை இங்கு மாற்றலாகி கொண்டு வந்து விட்டு விடுகிறேன்.இதுவரை மங்கைக்கு வேறு எதுவும் வழி இருப்பதாக எனக்கு படவில்லை "என அப்பாவை பழிவாங்கும் அரக்கத்தனத்துடன் பேசினார்கள் பெரியம்மா.

"குழந்தைகளை அநாதை விடுதிக்கு அனுப்புவாதை அவளுக்கு சொல்லிவிட்டாயா சேது?"என்று பாட்டி சற்றே சுரத்தை இல்லாத குரலில் கேட்டார்கள்.

"குழந்தைகளை ஹாஸ்டலில் சேர்க்கபோவதாக இப்போதைக்கு சொல்லி இருக்கிறேன்.எனவே அவளிடம் மற்றும் ஜகன்னாதநிடமும் இது பற்றி எதையும் நீங்கள் இருவரும் சொல்லிவிடாதீர்கள்.சமயம் வரும் போது நானே கூறி விடுகிறேன் அவளுக்கு"என்றார்கள் பெரியம்மா.

எங்கள் நால்வருக்கும் அழுக்கை அழுகையாக

வந்தது.கடவுளே எங்களை ஏன் இப்படி சோதிக்கிறாய் .இதை விட எங்களை சாகடித்துவிடு என மனதிற்குள் வேண்டிக் கொண்டேன்.தங்கை ஆனஹியை கட்டிபிடித்துக் கொண்டேன்.

“ஏய் பசங்களா,என பெரியம்மா கூப்பிட்ட குரல் கேட்டு மெதுவாக எங்கள் அறைக்குச் சென்று, அங்கிருந்து வருவதுபோல பாவனை செய்து கொண்டு நாங்க நாலு பேரும் பயந்தவண்ணம், பெரியம்மா முன்னிலையில் வந்து நின்றோம்.

“நாளை காலையில், ப்ரேக் பாஸ்ட் சாப்பிட்டுவிட்டு, சென்னைக்கு புறப்பட இருக்கிறோம்.உடனடியாக முடிந்தவரை, எல்லா துணிமணிகளையும் பாக் பண்ணி முடித்துவிட்டு படுக்கச் செல்லுங்கள்.காலையில் எழுந்ததும், நமக்கு நேரம் கிடையாது.புரிகிறதா.படுக்கும் முன் எல்லாம் பாக் பண்ணி, இங்கு ஹாலில் கொண்டு வைத்துவிடவேண்டும்.”என மிரட்டும் குரலில் பெரியம்மா கூறினார்கள்.

நாங்கள் நால்வரும் ,ஏற்கனவே
எல்லாவற்றையும் தயாராக பாக் பண்ணி
அவரவர் பெட்டியில் வைத்திருப்பது அவர்கள்
யாருக்குமே தெரிந்திருக்க நியாயமில்லை.
நாங்கள் நால்வரும், சரி பெரியம்மா ,என
தலையை ஆட்டிவிட்டு ,அங்கிருந்து நகர்ந்து
எங்கள் அறைக்கு சென்று சோகமாக
உட்கார்ந்திருந்தோம்.

“அப்பாவுக்கு கடிதம் போட்டால்
என்னடி”என்றால் ஷான்.

“வேண்டாம்டா அண்ணா. அக்கறை இருந்தால்
அப்பாவே வந்து நம்மை அழைத்து
செல்லட்டும்”என்றேன் நான் பதிலுக்கு.

“தம்பியும், ஆனஹியும் பேந்த, பேந்த விழித்துக்
கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

“நான் அம்மாகிட்டே சொல்லப்போறேண்டி,நாம
யாரும் அநாதை விடுத்திக்கு போவது எனக்கு
பிடிக்கவில்லை”என்றான் அண்ணன் ஷான்.

“நான் ஒன்றும் சொல்லாமல் உட்கார்ந்திருந்தேன்.என்ன சொல்வது என்று புரியவில்லை.மீதமுள்ள துணிமணிகளையும்,உடமைகளையும் எடுத்து பையில் வைத்துவிட்டு ,பெரியம்மா தூங்கச் சென்றவுடன், ஹாலில் எங்கள் பெட்டிகளை கொண்டு வைக்கலாம் என காத்துக் கொண்டிருந்தோம்.

சரியாக இரவு தூங்கப் போகும் முன் பெரியம்மா, எங்களை அழைத்து, பாக் பண்ணிய பைகளை கொண்டுவந்து ஹாலில் வைக்கச் சொன்னார்கள்.மறுநாள் குளித்து, உடைமாற்றும் டிரஸ்ஸை மட்டும் தயாராக தனியே வெளியே வைத்துவிட சொன்னார்கள்.பெரியம்மா கட்டளைப்படி ,அனைவரும் எங்களது பாக் பண்ணிய பைகளை கொண்டுவந்து நாடு ஹாலில் வைத்தோம்.

நாங்கள் நால்வரும் எதிரபாராத விதமாக

மறுநாளே திடுதிப்பென கிளம்புவது தாத்தாவுக்கும்,பாட்டிக்கும் சிறிதே ஏமாற்றமாகதான் இருந்தது.நாங்கள் சென்றுவிட்டால் வீடு களை இழந்து விடுமே என இப்போது தாத்தாவும்,பாட்டியும் மற்றும் வேலைக்காரர்களும் கவலையானார்கள்.நாங்கள் நாளை காலை புறப்பட இருப்பது, நிறைய வேலை ஆட்களுக்கும், எங்கள் சிநேகிதர்களுக்கும்,அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கும்,தெரியாது.பொழுது விடிந்தால் நாங்கள் எங்கே என அனைவரும் தேடப்போகிறார்கள்.இப்படி யாரிடமும் சொல்லிக் கொள்ளகூட அவகாசமிலாமல் போகப் போகிறோமே என என் மனம் வேதனைப்பட்டது.

நாங்கள் எப்ப ஊரை விட்டு கிளம்பினாலும் திடீரெனதான், யாரிடமும் சொல்லிக் கொள்ளக் கூட அவகாசமில்லாமல் சென்றுவிட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது

தாத்தாவின் மனது மிகவும் வேதனைப்பட்டதை

எங்களால் உணர முடிந்தது.படுக்கும் முன், தாத்தா எங்கள் நால்வரையும் அழைத்து கட்டிப்பிடித்து முத்தமிட்டு,தொண்டை கரகரக்க, புத்திசாலித்தனமாக பிழைத்துக் கொள்ளுங்கள், நன்றாக படித்து பெரிய ஆளாக வேண்டும், என ஆசி கூறி ,அண்ணன் ஷானுக்கு ரூ 100/-,எனக்குரூ 75/-,தம்பி பாட்டுக்கு ரூ50/-,ஆனஹிக்கு ரூ 25/-என பணத்தை தறுகையில், நாங்கள் நால்வரும் ஒன்று சேர்ந்தார்ப்போல "எங்களுக்கு வேண்டாம் தாத்தா.போனவருட பாட புத்தகத்தை விற்றதில் கிடைத்த பணம் எங்களிடம் இருக்கிறது.அதுவே போதும் "என்றோம்.

தாத்தாவிற்கு அழுகை வந்துவிட்டது.கண்ணில் நீர் வழிந்தோட இல்லடா கண்ணுகளா,எதற்கும் இந்த பணத்தையும் வைத்துக் கொள்ளுங்கள்.ஏதாவது அவசர செலவிற்கு உதவும்.பத்திரமான இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள்"என கூறி நாங்கள் பத்திரமாக பையில் வைப்பதை பார்த்து உறுதி செய்துவிட்ட பிறகு, எங்கள் நால்வரையும்

தூங்குவதற்கு, எங்கள் அறைக்கு அனுப்பிவைத்தார்கள் தாத்தா.பாட்டி எதுவும் பேசவில்லை.மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள்..

அன்றிரவு தூங்காமல் கிசுகிசுவென எங்களுக்குள் பேசிக்கொண்டோம்."அண்ணா அநாதை விடுதி எப்படி இருக்கும்?' என கேட்டேன்.

"தெரியாதுடி,நானும் உன்னை மாதிரிதான்.அநாதை விடுதியை முன்பின் பார்த்தது கிடையாது".என்றான்.

"உனக்கு பயமா இல்லையா?"என்று கேட்டேன்,

"பயமாத்தான் இருக்கிறது.ஆனால் என்ன செய்வது.நமக்கு வேறு வழி கிடையாது.அப்பா எப்படியும் நம்மை வந்து அழைத்து போகபோவதில்லை.அம்மா எதுபற்றியும் கவலை படாது, பெரியம்மா வீட்டில் இருக்கிறார்கள்.நம்மை பற்றி யாருக்கேமே எந்த அக்கறையும் இல்லை.எனவே அநாதை இல்லம்தான் நமக்கு இனி நல்லது என

படுகிறது”என்றான் அண்ணன்.

“பெரியம்மா வீட்டிலிருப்பதை விட அனாதை விடுதி எவ்வளவோ மேலாதத்தான் இருக்கும் என நினைக்கிறேன்.நான் ஆனஹியை பார்த்துக் கொள்கிறேன்.நீ தம்பியை பத்திரமா பார்த்துக் கொள்.நாம் வளர்ந்து பெரியவர்களானதும், எப்படியாவது ஒருவரை ஒருவர் கண்டுபிடித்து ஒன்றாக வாழலாம்”என நான் சொல்லி முடித்ததும் நால்வரும் அழுத்துவிட்டோம்.

நாங்கள் அழுதுகொண்டே படுத்திருக்கையில், ஹாலில் மணி டான்,டான்,டான் என்று மூன்று முறை அடித்து ஓய்ந்தது.இன்னும் ஒரு மணிநேரத்தில் எழுந்து கிளம்பியாக வேண்டும் என்பதால் நாலுபேரும் படுக்கையை விட்டு எழுந்திருக்க தயாராக காத்திருந்தோம்.இரவு முழுதுமே நாங்கள் நால்வரும் தூங்கவில்லை.

எங்கள் அறையை நோக்கி யாரோ வரும் காலடி ஓசை கேட்டது.எங்கள் அறை கதவை திறந்து, விளக்கு போட்டதும், நால்வரும் “டிங்” என

சாவி கொடுத்த பொம்மைபோல எழுந்து உட்கார்ந்தோம்.

“அட,தூங்கவில்லையா?பசங்களா,”என்று கேட்டார்கள் தாத்தா.

“இல்லை தாத்தா,தூக்கம் வரவில்லை”என்றோம்.

“சரி,எழுந்து பல்விளக்கிவிட்டு,தொட்டியில் புது தண்ணீர் பிடித்து
வைத்திருக்கிறேன்.ஒவ்வொருவராக குளித்து விட்டு தயாராகுங்கள்”என்று கூறி எங்களை அழைத்துக் கொண்டு பாத்ரூமிற்கு சென்று, ஒவ்வொருவரும் தயாராகுவதற்காக எங்களுக்கு உதவி செய்துகொண்டிருந்தார்கள் தாத்தா.

நாங்கள் நாலுபேரும் தயாராகி முடிக்கையில், பெரியம்மாவும் எழுந்து குளியலறைக்கு செல்லும்முன் எங்களிடம் “நான் தயாராகும்வரை உங்கள் பெட்டி பைகளை காரின் பின்னால் டிரன்கில் வையுங்கள்.கார் ஓட்டுபவரும் உங்களுக்கு உதவி செய்வார்”.என கூறி விட்டு

சென்று விட்டார்கள்.நாங்களும் ,தாத்தாவும் ஒவ்வொரு சாமான்களாக கொண்டு சென்று காரில் வைத்துவிட்டு திரும்பினோம்.

காலை ஐந்து மணிக்கெல்லாம் கிளம்பி விட்டோம்.கிளம்பும் முன் தாத்தா,பாட்டியின் காலில் விழுந்து ஆசீர்வாதத்தையும் பெற்றோம்.பாட்டிக்கு எங்கள் பிரிவால் அவ்வளவாக வருத்தம் இருப்பதாக தெரியவில்லை.ஆனால் தாத்தா மட்டும்மிகவும் வருத்தமாக காணப்பட்டார்கள்.

வீட்டிலுள்ள வேலைகாரர்கள் சிலபேர் மட்டும் நாங்கள் கிளம்பும் போது கூட இருந்தனர்.எங்களை கட்டிபிடித்து முத்தமிட்டு வழியனுப்பினார்கள் அஞ்சலையும்,ரத்தினம் சித்தியும்.வீட்டை விட்டு கார் கிளம்பியதும் , அந்த தெருவையும்,வழி முழுக்க உள்ள எல்லா இடங்களையும் நன்றாக பார்த்துக் கொண்டோம்.இன்னும் இருட்டாகவே இருந்தது.சூரியன் வெளியே வருவதற்கு அப்போதுதான் தயாராகி கொண்டிருந்தார்.இந்த

ஊருக்கு, இனி திரும்ப வரமாட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டது.பலி ஆடுகள் போல மிரண்டு மிரண்டு விழித்துக் கொண்டே, பெரியம்மாவுடன் காரில் பயணம் செய்தோம்.இரவு சரியாக தூங்காததாலும்,கார் மேடு பள்ளங்களில் ஆடி,ஆடி சென்று கொண்டிருந்ததாலும்,. அது எங்களுக்கு தாலாட்டு பாடுவதுபோல இருந்தது.தங்கை ஆனஹியை, என் மடியில் படுக்கவைத்து ,தட்டி தூங்கவைத்தவண்ணம், நானும் நன்றாக தூங்கிவிட்டேன்

திடீரென கார் நிற்கவே கண் விழித்து பார்த்த நாங்கள், கிராமத்தில் எதோ ஒரு வீட்டின் முன் கார் நின்றதை உணர்ந்தோம்.பெரியம்மா மட்டும் காரிலிருந்து இறங்கி, அந்த வீட்டிற்குள் சென்றார்கள்.நாங்கள் நால்வரும் கார் ஓட்டுபவரும், காரிலேயே உட்கார்ந்திருந்தோம்.பசி வயிற்றை கிள்ளியது.ஒரு மணி நேரமாகியும் ,பெரியம்மாவும் வெளியே வரவில்லை.

ஆனால், அந்த வீட்டிலுள்ள ஒரு வேலை ஆள் மட்டும், வெளியே வந்து “குழந்தைகளா, உங்களை சாப்பிட உள்ளே வரச் சொன்னார்கள்” என்றதும்,.கோர பசியில் இருந்த எங்களுக்கு உயிர் வந்தார் போலிருந்தது.உள்ளே சென்ற எங்கள் நால்வரையும், பெரியம்மா அந்த வீட்டிலுள்ளவர்களுக்கு அறிமுகபடுத்தியதும், அவர்கள், எங்கள் நால்வரையும் ஒரு மாதிரியாக பார்த்துவிட்டு,

“பார்க்க அழகா, லட்சனமா இருக்கிற இந்த குழந்தைகளுக்கா, அப்படி ஒரு அப்பா.பாவம் குழந்தைகள்”என கூறியதும் நாங்கள் புரிந்து கொண்டோம்.அப்பாவை பற்றி பெரியம்மா எதோ தறகுறைவாக கூறி இருக்கிறார்கள் என்று.எனக்கு அவமானமாக இருந்தது.எங்களை பார்த்து இவர்கள் ஏன் பாவப்படவேண்டும்.நாங்கள் என்ன ஏழைகளா?ஒன்றுமில்லாத அனாதைகளா?என மனம் நொந்தது.

மதியம் சாப்பாட்டை, அந்த வீட்டில் முடித்துவிட்டு,அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்புகையில், உச்சி வெய்யில் மண்டையை பிளந்தது.பசியில் மூக்கு பிடிக்க சாப்பிட்டுவிட்டு,மறுபடியும் காரில் பிரயாணம் செய்ததில் ,மறுபடியும் நன்றாக தூங்கி விட்டோம் நாங்கள் நால்வரும்.பிறகு கார் பெரியம்மா வீட்டு போர்டிகோவில் நின்ற சமயம்தான் விழிப்பு வந்தது.ஆச்சரியமாக இருந்தது.எவ்வளவு சீக்கிரம் சென்னை வந்துவிட்டோம் என்று.

“பசங்களா,சீக்கிரம் இறங்கி பைகளை நேரே உள்ளே கொண்டு வையுங்கள் உங்கள் அம்மாவை பிறகு பார்க்கலாம்.இப்போது நேரே அங்கு போகாதீர்கள்”என மிரட்டிவிட்டு, உள்ளே தன் அறைக்கு சென்றார்கள் பெரியம்மா.நாங்கள் முவரும் காரிலிருந்து எல்லா சாமான்களையும் இறக்கி, நேரே சமையலறை அருகே உள்ள விறாண்டாவில் கொண்டு இறங்கி வைத்தோம்.

“போய் கை கால் முகத்தைக் கழுவிக் கொண்டு,

இங்கே ஹாலில் இருங்கள் நான் வந்து உங்களை, உங்கள் அம்மா அறைக்கு அழைத்துச் செல்கிறேன்"என ஆணையிட்டார்கள்.

எங்கள் நால்வரையும் ஒன்றாக பார்த்த மகிழ்ச்சி முர்த்தி,வேணி அக்கா,குமாரி அக்கா மற்றும் உமாவிற்கு ஏற்பட்டது.பெரியம்மாவின் ஆணைப்படி நாங்கள் எல்லாம் முடித்துவிட்டு வந்ததும், எங்களை அன்புடன் வரவேற்று அனைத்து முத்தமிட்டிபடி காபியும்,பிஸ்கட்டும் கொடுத்தார் முர்த்தி.அப்போது மாலை ஐந்து மணி இருக்கலாம் என்றே நினைக்கிறேன்.அம்மாவை பார்க்கும் ஆவலில் பெரியம்மாவின் உத்தரவிற்காக காத்திருந்தோம்.

அம்மாவிற்கு , நாங்கள் நால்வரும் வந்திருப்பது தெரிந்திருக்க சந்தர்ப்பம் இல்லை .பெரியம்மா சிதம்பரத்திற்கு கிளம்புகையில், அம்மாவிடம் எங்கள் நால்வரையும் அழைத்துவரப் போவதாக கூறவில்லை என்றே நினைக்கிறேன்.மேலும் ,இந்த வீட்டிலுள்ள யாருக்குமே எங்களை பார்த்ததும் ஒரு எதிர்பாராத

ஆச்சரியமும்,அதிர்ச்சியும் ஏற்பட்டதை, நாங்கள் கவனிக்காமலில்லை.அம்மா தூங்கி கொண்டிருப்பதாக குமாரி அக்கா கூறினார்கள்.

பெரியம்மா குளித்து உடைமாற்றி விட்டு, முர்த்தி கொடுத்த காபி கப்பை கையில் பிடித்த்த வண்ணம், அம்மா இருக்கும் அறையை நோக்கி சென்றார்கள்.சிறிது நேரத்தில் ,அம்மாவை மெதுவாக கைத்தாங்கலாக நடத்தி ஹாலுக்கு அழைத்துவந்தார்கள்.எங்கள் நால்வரையும் கண்டதும் ஆச்சரியத்தால் அம்மாவின் கண்கள் அகல விரிந்தது.பின் என் தங்கை ஆனஹியை இரு கை நீட்டி ஆசையுடன் அழைத்து அனைத்துக் கொண்டார்கள். குமாரி அக்கா, அம்மாவை கைத்தாங்கலாக பிடித்து, அங்குள்ள ஒரு சோபாவில் உட்காரவைத்தார்கள்.

அம்மாவும் ,பெரியம்மாவும் ஏதேதோ பேசினார்கள்.எங்களை அநாதை ஆசரமத்தில் சேர்ப்பது பற்றி மட்டும் எதையுமே பெரியம்மா,அம்மாவிடம் கூறியதாக தெரியவில்லை.நாங்கள் அங்கு ஹாலில்,

குமாருடன் உட்கார்ந்து காரம்போர்ட்
விளையாடிக் கொண்டிருந்தோம்.சிறிது
நேரத்தில், அம்மா எழுந்து, தன் ரூமிற்கு,
உமாவின் உதவியுடன் சென்று விட்டார்கள்.

அம்மா உள்ளே சென்றதும்,பெரியம்மா, குமாரி
அக்கா,வேணி அக்கா உமா மூவரிடமும்
நாங்கள் நால்வரும் அம்மாவின் அறைக்குச்
சென்று அவர்களை தொந்தரவு செய்யாமல்
கண்காணித்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு
,அவர்களும் தன் அறைக்குச் சென்று
விட்டார்கள் ஓய்வு எடுப்பதற்காக.

அன்று இரவே பெரியம்மா, எங்கள் மூவருக்கும்,
காலை முதல் இரவு படுக்கும் வரை என்னென்ன
வேலைகள் என பட்டியல் போட்டு எங்களை
அழைத்து சொன்னதுடன், கொடுத்த
வேலைகளை சரிவர செய்கிறோமா என
கண்காணித்து பெரியம்மாவிற்கு தினமும் கூற
வேண்டும் என உமாவிடமும்,குமாரி
அக்காவிடமும் கூறினார்கள்
பெரியாம்மா.ஆனஹி மட்டும், அம்மாவை எப்ப

வேண்டுமானாலும் பார்க்கலாம் என்ற அனுமதி வழங்கப்பட்டது.

காலை முதல், அந்த வீட்டிலுள்ள பாத்திரங்களை கழுவுவதும் ,வீடு பெருக்கி துணிகளை துவைத்து ,காயவைத்து ,மடித்து அவரவர் பீரோவில் வைப்பது என்னுடைய வேலை
எனவும்,வீட்டிலுள்ள அனைத்து கதவுகள்,ஜன்னல்கள் , தோட்டத்திலுள்ள செடிகொடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல் .வேண்டாத செடிகளை பிடுங்கி எறிதல் ,தோட்டத்தை சுத்தமாக வைப்பது,மற்றும் காரை கழுவி சுத்தம் செய்வது , அண்ணன் ஷான் மற்றும் தம்பி பாட்டின் வேலைகள் என்றும் பிரிக்கப்பட்டது.

வந்து இரண்டு நாட்களாகியது.கொடுத்த வேலைகளை நாங்கள் முவரும் சரிவர செய்து வந்தோம் .ஆனால் அம்மாவை பார்க்க மட்டும் எங்களுக்கு அனுமதி இல்லை.கோடை விடுமுறை என்பதால் பெரியப்பாவும்,குமாரும் வீட்டிலேயே ஹாலில் இருப்பதால் ரகசியமாக கூட

எங்களால் அம்மாவை போய் பார்க்கவோ, அவர்கள் ,எங்களை பார்க்கவோ முடியாமலிருந்தது.கோடைவிடுமுறையில் சென்னை உயர் நீதி மன்றம் மூடிவிடுவதால் ,பெரியப்பா எப்பவும் ஹாலில் உட்கார்ந்திருப்பார்கள்.அதனால் அம்மா அங்கு வந்து சிறிது நேரம் கூட உட்கார முடியாமல் இருந்தது.

முன்றாம் நாள் இரவு, நான் வேலைகளை பத்துமணி போலமுடித்துவி .ட்டு ,ஹாலில் படுத்து தூங்க முயற்ச்சித்துக் கொண்டிருக்கையில், உமா ஓடி வந்து ,எங்கள் அனைவரையும் ,அம்மா அவர்கள் ரூமிற்கு கூப்பிடுவதாக கூறவே,வேணி அக்கா,குமாரி அக்கா ,உமா மற்றும் நாங்க நால்வரும் அம்மாவின் அறைக்குச் சென்றோம்

“கூப்பிட்டீர்களா அக்கா?”என்றார்கள் வேணி அக்கா.

“ஆமாம் வேணி,எனக்கு பிடித்த காவிய தலைவி

என்ற சினிமாவிலிருந்து ஒரு பாட்டை, ரேடியோவில் விரும்பி கேட்டவை நிகழ்ச்சிக்கு கேட்டு எழுத்தி இருந்தேன் இல்லையா?அந்த பாட்டை இப்போது ஒளிபரப்ப இருக்கிறார்கள்.என்னுடன் இருந்து நீங்கள் எல்லோரும் அந்த பாட்டை கேளுங்கள்"என்றார்கள் அம்மா.

எல்லோரும் அம்மாவை சுற்றி உட்கார்ந்து கொண்டு ரேடியோவை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தோம்.ரேடியோவில் காவியத்தலைவி என்ற திரைப்படத்திலிருந்து, "ஒருநாள் இரவு ,பகல் போல் நிலவு "என்ற பாட்டை விரும்பி கேட்டு எழுதியிருந்தவர்களின் பெயரை எல்லாம் ஒலிபரப்பாளன் வாசித்ததுக் கொண்டே வந்தார்.கடைசியாக எழும்பூரை சேர்ந்த மங்கை என அம்மா போரையும் கூறி முடித்தவுடன், பாட்டு ஆரம்பமானது.மிகவும் உறுக்கமான பாட்டு .அம்மாவுக்கு பிடித்த பாட்டு அது.மகள் தன் தாயை பலவருடங்களாக பிரிந்து,பாசத்தால் அம்மாவை நினைத்து பாடும் பாடலாகவும்,அதற்க்கு அம்மாவும், மகளை தேடி

பாடும் பாடல் அது.

சத்தம் கேட்டு வெளியே வந்த பெரியம்மா, அம்மாவின் ரூமிற்கு வந்ததும்,நாங்கள் அனைவரும் இருப்பதை பார்த்துவிட்டு "இரவு பத்து ஆயிற்று போய் எல்லோரும் தூங்குங்கள.மங்கை நீயும் தூங்கு என அனைவரையும் விரட்டி விட்டு அம்மாவின் அறைய முடிவிட்டு, ஹாலிற்கு வந்தவர்கள்.எங்கள் நால்வரையும் மிகவும்கடிந்து கொண்டார்கள்."எந்த காரணத்தை கொண்டும், இந்த குழந்தைகள், அந்த ரூமிற்கு போக கூடாது என்றுதானே சொல்லியிருந்தேன்.எப்படி போனார்கள்"என பெரியம்மா கோபமாக கேட்கவே "சின்னமாதான் பாட்டைக் கேட்க அனைவாரையும் கூப்பிட்டார்கள்,எனவேதான் சென்றோம்"என்றால் உமா.

"இனிமேல் சின்னம்மா கூப்பிட்டு அனுப்பினால் ,என்னிடம் வந்து முதலில் சொல்லிவிட்டு பிறகு போங்களேன் .அனுமதி இல்லாமல் யாருமே அங்கு போகக் கூடாது.உமா மட்டும் சாப்பாடு

எடுத்து செல்ல ,சின்னம்மாவுக்கு உதவி செய்ய அப்பப்ப சென்று வரலாம்.மற்றவர்கள் அனாவசியமாக அந்த ரூமிற்கு போய் என் தங்கையை தொந்தரவு செய்யாதீர்கள் ,அவளுக்கு முழு ஓய்வு தேவை என டாக்டர் சொல்லியிருக்கிறார்"என தீர்மானமாக சொல்லிவிட்டார்கள்.

நான்கைந்து தினங்கள் நகர்ந்தன.அன்று தாத்தாவிடம் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.கோயம்பத்தூரில் தனது முக்கிய நண்பர் ஒருவரது மகளின் திருமணத்திற்கு செல்வதற்கு தாத்தாவும்,பாட்டியும் சென்னைக்கு வந்து மறுநாள் காரில் பெரியம்மாவுடன் கோயம்பத்தூர் சென்று கல்யாணத்தைப் பார்த்துவிட்டு, உடனே சென்னை திரும்பி விடுவதாகவும் தெரிவிக்கபட்டிருந்தத்து.

அன்று சனிக்கிழமை மாலை நான்கு மணியளவில் ஊரிலிருந்து தாத்தாவும்,பாட்டியும் வந்திறங்கினார்கள்.வந்ததும அவர்களை வரவேற்று ஹாலில் உட்கார்ந்து

பேசிக்கொண்டிருந்தனர்.அம்மாவும் ஹாலுக்கு அழைத்து வந்து விட்டார்கள்.சிறிது நேரம் பேசிக் கொண்டிட்ருந்து விட்டு தாத்தா மெதுவாக ஆரம்பித்தார்கள்.

“தேவன் நேற்று காலையில் சிதம்பரத்திற்கு வந்திருந்தார்.மங்கையையும்,குழந்தைகளையும் இல்லாது ஏமாற்றத்துடன் திரும்பி உடனே சென்னைக்கு வந்துவிட்டார்.நேற்றிரவே சென்னை வந்திருப்பார்.இங்கு தேவன் வந்தாரா?”என கேட்டார்கள் தாத்தா.

“என்ன கேட்டார்?அதற்கு நீங்க என்னப்பா சொன்னீர்கள்?”என திரும்பவும் தாத்தாவிடம் கேள்வி கேட்டார்கள் பெரியம்மா.

“நீ சொன்னதுபோல் எங்களுக்கு தெரியாது.எங்கள் பெரிய பெண் சேதுவை போய் கேளுங்கள் .எல்லோரும் இப்போது அவள் வீட்டில்தான் இருக்கிறார்கள்”என்று சொன்னேன்.

“இங்கு வருவதாக சொன்னாரா? எப்போது வருவதாக சொன்னார்?”என அம்மா குறுக்கிட்டு கேட்டார்கள்.

“எதுவும் சொல்லவில்லை .நான் சொன்னதை மட்டும் கேட்டுவிட்டு, கொடுத்த காபியை கூட குடிக்கவில்லை ,உடனெ புறப்பட்டு சென்று விட்டார்”என்றார்கள் பாட்டி.

பெரியம்மாவின் முகம் வெளுத்தது.ஸ்தம்பித்து நின்ற பெரியம்மாவிற்கு பேச்சு எதுவும் வரவில்லை.என் மனம் சந்தோஷத்தால் துள்ளியது.அம்மாவின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது.

பெரியம்மா அதன் பிறகு அப்பாவை பற்றி பேசுவதை நிறுத்திவிட்டு

“அப்பா நாம விடியற்காலையே கிளம்பி கோயம்பத்தூருக்கு சென்று கல்யாணத்தை பார்த்துவிட்டு, உடனே திரும்பிவிடலாம்.முடிந்தால் நாளை இரவு

வந்துவிட பார்க்கலாம்.எனக்கு அலுவலகத்தில் நிறைய வேலைகள் இருக்கிறது."என்றார்கள் பெரியம்மா.

பிறகு அனைவரும் அந்த ஹாலை விட்டு ஒவ்வொருவராக நகரவே, அம்மாவை, உமா மெதுவாக தாங்கி பிடித்து ,அவர்கள் ரூமிற்கு அழைத்துச் சென்று விட்டுவிட்டு வந்தாள் .

அவள் திரும்பி வந்ததும்,பெரியம்மா என்னையும்,அண்ணனையும்,தம்பியையும் அழைத்துக் கொண்டு சமையலறையை ஒட்டி உள்ள விறாண்டாவிர்க்கு சென்று நிறுத்தி வைத்துக் கொண்டு ,குமாரி அக்கா,வேணி அக்கா, உமா,மூர்த்தி இவர்களையும் அழைத்து "நான் என் பெற்றோர்களுடன் நாளை காலை கோயம்பத்தூருக்கு சென்று இரவே திரும்பிவிட நினைக்கிறேன்.வேணி நீ சின்னம்மா ரூமிற்கு சென்று நாளை உடைமாற்றி கொள்ள ஒரே ஒரு புடவை மட்டும் எடுத்து வெளியே வைத்து விட்டு, மீதி உள்ள எல்லா துணிமணிகளையும் ஒரு பெட்டியில் போட்டு எடுத்து வந்து என்

படுக்கை அறையில் இப்போதே வைத்துவிடு.சின்னம்மா என்ன எதுக்கு என்று கேட்டால் ,என்னிடம் பேசிக் கொள்ளச் சொல்.பசங்களா,உங்கள் பெட்டி, பைகளை உடனடியாக, என் ரூமில் கொண்டு வையுங்கள்.நாளைக்கு உடை மாற்றிக்கொள்ள வேண்டியதை மட்டும் வெளியே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.உம் சீக்கிரம்."என எங்கள் அனைவரையும் துரிதபடுத்தினார்கள்.

நாங்கள் முவரும் அவசர அவசரமாக ஒரே ஒரு ட்ரெஸ் மட்டும் வெளியே எடுத்து வைத்துவிட்டு, மீதி உடமைகளை எல்லாவற்றையும் பெரியம்மா ரூமில் கொண்டுபோய் வைத்துவிட்டோம்.

அம்மாவின் அறையிலிருந்து, எல்லாவற்றையும் எடுத்துவிட்டு வந்த வேணி அக்கா "சின்னம்மா உங்களை பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள்"என்றதை பெரியம்மா சட்டை செய்யாமல் இருந்தார்கள்.அம்மாவை, பெரியம்மா சென்று பார்க்கவே இல்லை.

இரவு படுக்கும் முன், எங்கள் எல்லோரையும் திரும்பவும் அழைத்து “நாளைக்கு நான் இல்லாத சமயம் தேவன் வந்தால் உள்ளே வர அனுமதிக்காதீர்கள்.பசங்களா,உங்கள் அப்பா வந்தால், நீங்கள் யாரும் போய் பேசக் கூடாது,இங்கு சமயலறையில் முர்த்தியுடன்தான் நீங்கள் நால்வரும் இருக்க வேண்டும்.உங்கள் அப்பா நல்லவர் இல்லை.உங்களை எல்லாம் அழைத்துக் கொண்டு போய் பிச்சை எடுக்க வைத்து விடுவார்.உங்கள் அப்பா ஒரு ஊதாரி,சூதாட்டக்காரர்,அதனால் அவரிடம் பேசாதீர்கள்,புரிகிறதா?”என்று எச்சரித்துவிட்டு

“உமா நீ கேட்டை எப்பவும் பூட்டி வை. பூட்டாமலிருந்தால் , இவர்கள் அப்பா உள்ளே வந்து விடுவார்.அவர் வந்து, எது கேட்டாலும் கேட்டை திறக்காமலே பதில் சொல்லி அனுப்பிவிடுங்கள் .நான் ஊரில் இல்லை.வர இரண்டு நாட்கள் ஆகும்.அதன் பின் வந்து என்னை ஆபீசில் பார்க்க சொல்லி அனுப்பிவிடு.எந்த காரணத்தை கொண்டும் கேட்டை திறந்து உள்ளே விட்டு

விடாதே.புரிகிறதா”என அவளை மிரட்டுவது போல கூறினார்கள்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டே பெரியப்பா அங்கு நின்றிருந்தார்கள்.உடனே பெரியம்மா அவரை பார்த்து”உங்களையும்தான்,தேவன் வந்தால் நீங்கள் எதுவும் பதில் சொல்லாதீர்கள்.உமா பதில் சொல்லி அனுப்பட்டும்.என் தங்கைக்கு விஷயம் தெரிய வேண்டாம்.நான் வந்து எல்லாம் கவனித்துக் கொள்கிறேன்”என கூறினார்கள் பெரியம்மா .

பெரியப்பாவும் தலையை பூம்பூம் மாடுபோல பெரியம்மா சொல்வதர்க்கேல்லாம் ஆட்டிக்கொண்டிருந்தார்,

தாத்தாவும்,பாட்டியும் அவர்கட்கு என ஒதுக்கப்பட்ட அறைக்கு தூங்குவதற்காக சென்றுவிட்டனர்.பெரியம்மா எங்கள் அனைவரது பெட்டிகளையும் பெரியப்பாவின் அறையில் வைத்து பூட்டிவிட்டு ,சாவியை

தன்னுடன் எடுத்து கொண்டு அறைக்கு சென்றுவிட்டார்கள்.

என் மனம் படபடவென அடித்துக் கொண்டது.எப்படியாவது அம்மாவிடம் விஷயத்தை கூறிவிட வேண்டும்.நாம் எதற்க்காக பெரியம்மாவிற்கு பயப்படவேண்டும் .அவர்கள் தயவில் நாம் வாழவில்லை.அவர்கள் சம்பாத்தியத்தில் நாங்கள் வாழவில்லை.அம்மா மீது மிகுந்த அக்கறை இருப்பது போலவும் பாசமுள்ளவர்கள் போலவும் நடந்து கொண்டு ,எங்களையும்,அம்மாவையும் அப்பாவையும் பிரித்து,அம்மாவை மட்டும் வைத்துக் கொண்டு ,அவர்கள் மீதுள்ள அவ்வளவு சொத்தையும், தான் எடுத்துக் கொண்டு, தன் மகன் குமாருக்கு, எங்களுக்கு சேர வேண்டிய நகை ,சொத்து,பணம்,எல்லாம் கொடுத்து விடலாம் என சதி திட்டம் போடுவதற்கு நாம் ஏன் உடந்தையாக வேண்டும் என என் மனம் கொத்தித்தது.அம்மாவும் தன் அக்காவை முழுமையாக நம்பிவிட்டார்கள்.

தான் மட்டும் கணவன்,குழத்தை வேலைகாரர்கள் என குடும்பமாக இருந்து கொண்டு,எங்கள் குடும்பத்தில் ஏன்? புகுந்து விளையாடி, எல்லோரையும் தனித்தனியாக பிரித்து துன்புறுத்த வேண்டும்.மாமா ஜகன்னாதன் சொன்னதில் நியாமிருக்கிறது.குடிசையில் வாழ்ந்தாலும்,ஒருவேளை கஞ்சி குடித்தாலும் அப்பாவுடன் போய் வாழுங்கள். அதுதான் உங்களுக்கு எல்லாம் நல்லது என்பது நூற்றுக்கு நூறு உண்மையே.

மாமாவை அன்று தவறாக நினைத்தோம்.ஒருபுறம் அவரது வீட்டில் உட்கார்ந்து கொண்டு அவரது சொத்தை பறித்துவிட போகிறோமோ என அவர் நினைப்பதாக தோன்றினாலும்,அவர் அம்மாவிடம், கணவனுடன் சென்று குடித்தனம் பண்ணு,சூதாட்டக்காரனானாலும்.குழந்தைகளுக்கு அப்பா மிகவும் அவசியம்.பிச்சை எடுத்தாலும் குடும்பமாக பிச்சை எடுங்கள்.அதில் தனி கௌரவம் உண்டு என மாமா கூறியதில் முழுக்க, முழுக்க விஷயமிருக்கிறது.

இப்போது மாமா ஜகன்னாதன் மிக நல்லவராக என் மனதில் தோன்றினார்,மறுநாள் பெரியம்மா கோயம்பத்தூர் புறப்பட்டு சென்றதும் அம்மாவிடம் சென்று விஷயத்தை கூறிவிட வேண்டியத்துதான்.என என் மனதிற்குள் உறுதியாக சொல்லிக் கொண்டேன், எப்போது பொழுது விடியும், இவர்கள் முவரும் கிளம்பி செல்வார்கள் என ஆவலுடன் காத்திருந்தேன்.

அத்யாயம்-முப்பத்தி ஏழு

விடியற் காலையில் முவரும் கிளம்பி, அம்மாவின் அறைக்குச் சென்று போய் வருகிறேன்.என கூறிக் கொண்டு, காரில் ஏறி கிளம்பி சென்று விட்டார்கள்.அப்போது மணி விடியற்காலையில் நாலு மணி.அம்மா இப்போது தூங்கி கொண்டிருந்தார்கள்.தொந்தரவு செய்ய வேண்டாம்,விடிந்ததும் அம்மா காபி,ப்ரேக்பாஸ்ட் சாப்பிட்டதும் சாவகாசமாக சொல்லிவிடலாம்.பெரியப்பா எப்படியும் தன் படுக்கை அறையை விட்டு, ஹாலுக்கு ,ஒன்பது மணிக்கு மேல்தான் வருவார்கள் ,என

மனதிற்குள் எண்ணிக் கொண்டு படுத்திருந்தேன்.

சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரம் “டான் டான்” என ஆறு அடித்தது.திடுக்கிட்டு முழித்தேன்.சிறிது நேரம் நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டிருக்கிறேன் போலிருக்கிறது.தடதடவென எழுந்து படுக்கையை மடித்து, பாயை சுருட்டி எடுத்துக் கொண்டு சென்று, பின்னால் விறாண்டாவில் வைத்து விட்டு,பல் விலக்கிவிட்டு, அப்படியே பச்சை தண்ணீரில் குளித்துவிட்டு வெளியே வந்த நான் ,தங்கை ஆனஹியையும் குளிக்கச் சொல்லி பாத்ரூமிற்கு அனுப்பினேன்.அவள் குளித்துக் கொண்டிருக்கும் போதே, நான் ஹாலுக்கு சென்று தூங்கி கொண்டிருந்த அண்ணன் ஷானையும்,தம்பி பாட்டையும் எழுப்பி ரகசிய குரலில்,

“ஏய் அண்ணா,தம்பி ரண்டு பெரும் எழுந்து குளித்து தயாராக இருங்கள் .ஒருவேளை அப்பா வந்தால், அவர்களுடன் நாம் சென்று விடலாம்.சீக்கிரம் எழுந்திருடா”.என இருவரையும் அவசரபடுத்தினேன்.

இருவரும் அரக்கபரக்க எழுந்து படுக்கைகளை சுருட்டி எடுத்துக் கொண்டு போய் விறாண்டாவில், பின்னால் வைத்துவிட்டு. பல்விளக்கி .குளித்துவிட்டு உடையும் மாற்றி கொண்டார்கள்.

நாங்கள் கழற்றி போட்ட பழைய உடைகளை, நான் உடனடியாக துவைத்து வெய்யிலில் கயவைத்தேன்.அப்பா எப்போது வந்தாலும் ,அந்த காயவைத்த உடைகளையும் எடுத்தச் சென்றுவிடலாம் என்ற எண்ணத்துடன்.

“அப்பா வரமாட்டாங்காடி, அப்படியே வந்தாலும் நம் அனைவரது பெட்டிகளை எல்லாம் உள்ளே வைத்து பூட்டிவிட்டு சென்று விட்டார்கள் பெரியம்மா.எனவே நாம இங்கிருந்து போக முடியாது.அப்பாவுக்கு வீடு இல்லை.ஹோட்டலில்தான் தங்கிருக்கிரார்கள்.நாம போய் அங்க தங்க முடியாது” என்றான் அண்ணன் ஷான்.

“எதற்கும் தயாராக இருப்போமே.அப்பா

வராவிட்டால் பரவாயில்லை.நான் போய் அம்மாவிடம் விஷயம் முழுக்க கூறிவிடப் போகிறேன்.அப்பாவை எப்படியாவது, இன்று வரவழைத்துவிட்டு, நாம் இங்கிருந்து சென்று விடலாம்"என அவனிடக் கூறினேன்.

மணி காலை 8:30 ஆயிற்று.அம்மாவிற்கு காபி,ப்ரேக்பாஸ்ட் எல்லாம் உமா அம்மாவின் ரூகிற்கு எடுத்துச் சென்று ,காலி தட்டையும் ,கப்பையும் திரும்ப எடுத்துக் கொண்டு வந்தாள் .

அதை பார்த்ததும் நாங்கள் நால்வரும் கொஞ்சமும் தாமதிக்காமல் அம்மாவின் அறைக்கு விரைந்தோம்.நல்ல காலம் பெரியப்பாவும்,குமாரும் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார்கள் .அவர்கள் அறை மூடப்பட்டிருந்தது,நல்லது என நினைத்து கொண்டு ,அம்மாவின் அறைக்கு விரைந்து சென்று நுழைந்ததும், அம்மா எங்களை கண்டதும், ஆசையுடன் அழைத்து அவர்களது கட்டிலில், எங்கள் நாலு பேரையும்

உட்காரச்சொன்னார்கள்.

“அம்மா நாம இங்கிருந்து போய் விடலாம்.இல்லை என்றால், எங்கள் நாலு பேரையும் தனித் தனியான அநாதை ஆசரமத்தில் சேர்க்க போவதாக பெரியம்மா ஏற்பாடு செய்து விட்டார்கள்.அப்பா வந்தால், உள்ளே விடக் கூடாது என எங்களை எல்லாம் மிரட்டி விட்டு, நம் பெட்டிகளை எல்லாம் பெரியப்பா ரூமில் வைத்து பூட்டிவிட்டு, சாவியை தன்னுடன் எடுத்துச் சென்று விட்டார்கள் பெரியம்மா”என்றேன்.

“ஆமாம்மா, என அண்ணன் ஷான் கூறிவிட்டு ,பிறகு நாங்கள் தினப்படி செய்யும் வேலைகளை பற்றியும் ஒன்றுவிடாமல் கூறிவிட்டான் அம்மாவிடம்.நாங்கள் நால்வரும் பேசிக் கொண்டிருக்கும்போதே, வேணி அக்கா,குமாரி அக்காவும் முர்த்தியும் அங்கு வந்து விட்டனர்.

“குழந்தைகள் சொல்வது சரிதான் சின்னம்மா. இங்கிருந்து போய் விடுங்கள்.குழந்தைகள் படும்

அவதியை பார்த்துக் கொண்டு சகித்துக் கொண்டு எங்களால் இனி இருக்க முடியாது.எங்களை பற்றி கவலைபடாதீர்கள்.இவர்கள் அப்பாவை வரச் சொல்லி, இங்கிருந்து இன்றைக்கே கிளம்பி சென்று விடுங்கள்"என்றார் மூர்த்தி.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அம்மா"எனக்கும் கொஞ்ச நாட்களாகவே சந்தேகம் மூர்த்தி,என் அறைக்கு குழந்தைகளோ,நீங்கள் யாருமே அதிகம் வருவதில்லை.உமா மட்டும் வந்து போகிறாள்.எதோ நடக்கிறது என்ற சந்தேகம் எனக்கு இருந்து கொண்டே இருந்தது. அவருக்கு போன் பண்ண என்னிடம் பணம் இல்லையே,/எல்லாம் அக்காவின் அறையிலேதான் ,அவள் பீரோவில் வைத்திருக்கிறாள்"என்றார்கள் அம்மா.

"உங்களிடம் அவர் போன் நம்பர் இருந்தால் போதும், நான் பணம் தருகிறேன்.ஐயா எழுந்திருப்பதற்குள் இந்த தெரு முனையிலுள்ள

கடைக்கு சென்று ,போன் செய்து உடனே வரச் சொல்லுங்கள்"என்றார் முர்த்தி.

முர்த்தி உடனே சமயலறைக்கு சென்று, தன் பெட்டியிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து வந்து அம்மாவிடம் கொடுத்தார்.அம்மா என்னிடம் அந்த ஒரு ரூபாயையும் கொடுத்து ,அப்பாவின் போன் நம்பரையும் கொடுத்து,உடனடியாக அப்பாவை முடிந்தால் பதினோரு மணிக்கு முன்னால் வரமுடிந்தால் நல்லது என கூறி ,இது மிகவும் அவசரம் , என்றும் சொல்லி வருமாறும், என்னையையும் அண்ணன் ஷானையும் அனுப்பிவைத்தார்கள்.

உடனே நானும்,அண்ணன் ஷானும் விரைந்து, அந்த தெரு முனையிலுள்ள கடைக்கு சென்று, அப்பா தங்கியிருந்த ஹோட்டல் ரூமிற்கு போன் செய்தோம்.நல்லவேளையாக அன்று விடுமுறை என்பதால், அப்பா ரூமில் இருந்து ,எங்கள் போன்ஐ எடுத்து பேசினார்கள்.நான் அப்பாவிடம் மிக அவசரம் ,உடனே வரவேண்டும் என்றும் பெரியம்மா ஊரில் இல்லை என்ற

விஷயத்தையும் கூறி ,அவசரமாக காலை 11மணிக்கு முன்னாலேயே முடிந்தால் வருமாறு சொன்னேன்.

:எங்கிருக்கிறீர்கள்?நீ எங்கிருந்து போன் செய்கிறாய்?"என அப்பா கேட்கவே

"எக்மோர் பெரியம்மா வீட்டில் இருக்கிறோம்.நான் ஒரு கடையிலிருந்து போன் பண்ணுகிறேன்.அண்ணன் ஷானும் என்னுடன் தான் இருக்கிறான்"என்றேன்.

"என்ன அவசரம்?அம்மா உடம்பு எப்படி இருக்கிறது?"என்றார்கள் அப்பா பதட்டத்துடன்.

"அம்மா நன்றாக இருகிறார்கள்.உடனே வந்தால் முழுவிவரமும், அம்மா சொல்லுவார்கள் ,அவசரம் அப்பா தாமதிக்காமல் உடனே வாங்க"என்றேன்.

"சரிம்மா, இப்போதே இன்னும் அரை மணி நேரத்தில் கிளம்பி 11 மணிக்குள் அங்கு வந்து விடுகிறேன்"என கூறிவிட்டு போன் ஐ வைத்துவிட்டார்கள் அப்பா.

கடைக்காரரிடம், மீதி ஐம்பது பைசாவை வாங்கிக் கொண்டு, ஓட்டமும் நடையுமாக இருவரும் வீட்டிற்கு ஓடி வந்தோம்.இன்னும் பெரியப்பா அவர்கள் ரூமை விட்டு வெளியே வரவில்லை.நம் நல்லகாலம்தான் இன்று என நிம்மதி பெருமூச்சுடன் ,அம்மாவின் அறைக்குச் சென்றோம்.எங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்த அனைவரின் முகத்திலும் ஆவல் மீர, நாங்கள் கொண்டுவந்த நல்ல விஷயத்தை கேட்டனர்.

“என்ன அப்பாவிடம் பேசினீர்களா? என்ன சொன்னார் உங்கள் அப்பா?”என்று ஆவலுடன் கேட்டார் முர்த்தி.

“ஆமாம், இன்னும் 11 மணிக்குள் வந்து விடுகிறேன் என அப்பா கூறினார்கள்”என்றேன்.

“சின்னம்மா உங்கள் அனைவரது பெட்டிகளையும் உள்ளே வைத்து பூட்டி இருக்கிறார்களே,மாற்று உடைக்கு என்ன செய்வீர்கள்”என்று கவலையுடன் கேட்டார்

வேணி அக்கா.

“முதலில் இங்கிருந்து கிளம்புவதுதான் முக்கியம்.மீதியை நாளை மறுநாள் பார்த்துக் கொள்ளலாம்.நாளைக்கு வந்து பெட்டிகளை யாராவாது எடுத்து செல்ல வருவார்கள்”என்றார்கள் அம்மா.

சரிங்க அக்கா,நீங்களும் குளித்துவிட்டு தயாராக இருங்கள் எதற்கும்”என்றார் குமாரி அக்கா.

எங்கிருந்தாலும் நல்லபடியா உடல் நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள் அக்கா.நான் வேண்டுமானால் உங்களுடன் வந்திருந்து உங்களை பார்த்துக் கொள்கிறேன்”என்றார்கள் குமாரி அக்கா.

“நிச்சயமாக குமாரி,முதலில் உன் டீச்சர் ட்ரைனிங் ,எந்த தடையுமில்லாது முடித்துவிட்டு,ஒரு வேலையை வாங்கிக் கொண்டு, பிறகு முடிந்தால் என்னுடன் வந்து கல்யாணம் ஆகும் வரை தாராளமாக இருந்து

விட்டு போ”எப்படியும் நான் வேலை செய்யும் பள்ளிக்கூடம் உங்களுக்கெல்லாம் தெரியும்.முடிந்தால் எப்போதாவது வந்து என்னை பாருங்கள்”என கண்கலங்கி அம்மா கூறியது, அனைவரின் கண்களும் குளமாக்கியது.

அம்மாவை உமா, குளிக்க வைத்து உடைமாற்றி தயார்செய்து கொண்டிருந்தாள்.அதற்குள் பாதி காய்ந்திருந்த, நான் துவைத்த துணிகளையும் அம்மா கழற்றி போட்ட துணிகளையும் ஒரு பையில் எடுத்து பாக் பண்ணி கொடுத்தார்கள்.குமாரி அக்கா.எல்லாவற்றையும் அம்மாவின் அறையில் வைத்துவிட்டு அவரவர் வேலைகளை பார்க்க சென்று விட்டனர் .நாங்கள் நால்வரும் ஹாலில் உட்கார்ந்து வண்ணம், அப்பாவின் வரவை எதிர்ப்பார்த்து ஆவலுடன் காத்திருந்தோம்.

பெரியப்பா இன்னும் அவர்கள் படுக்கை அறையை விட்டு வெளியே வராததால் இங்கு நடந்த எதுவும் அவருக்கு தெரியாது. அனைவரும் சோகமுடனும் ,பரபரப்புடனும்,இருந்தனர்.குமார்

எழுந்து தன ரூமை விட்டு வெளியே வந்தான்.பின் தொடர்ந்து பெரியப்பாவும் வெளியே வந்தார்கள்.இப்போது எங்கள் அனைவரது இதயமும் படபடவென அடித்துக் கொண்டது.அப்பா வந்தால் என்ன நடக்குமோ என்று.உமா மிகவும் கவலையாக இருந்த்தாள்.ஏன் என்றால் கேட்டை பூட்டி ,அப்பாவை உள்ளே விடாமல் சாவியை அவள் பொறுப்பில்தான், வைத்திருக்குமாறு, பெரியம்மா சொல்லிச்சென்றுள்ளார்கள்.

உமாவிற்கு எஜமானி பெரியம்மாவின் ஆணைப்படி நடப்பதா?அல்லது எங்கள் அம்மா சொல்வதுபடி நடப்பதா/என தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.ஆனால் அவளுக்கும், நாங்கள் எங்கள் அப்பாவுடன் செல்வதில் மிக சந்தோஷமே.பெரியம்மாவின் உத்தரவு அவளுக்குக் பிடிக்கவில்லை.

எங்களுடன், குமாரும் ஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்.பெரியப்பா அப்போதுதான் பாத்ரூமிற்கு சென்று பல் விளக்கி

குளித்துவிட்டு வரச் சென்றார்கள்.வீடே ஒரே நிசப்தமாக இருந்தது இப்போது.எனக்கு பேசுவதிலும்,விளையாடுவதிலும் கவனம் செல்லவில்லை.நொடிக்கொருதரம் வாசல் பக்கம் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தேன்.அதே போல முர்த்தி,உமா,வேணி அக்கா,குமாரி அக்கா அனைவரும் அவர்களது வேலைக்கு நடுநடுவே ஹால் பக்கம் வந்தூ வாசலை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.ஒவ்வொருமுறையும் கேட் திறக்கும் சத்தம் கேட்கும் போதெல்லாம், அனைவரும் ஆவலுடன் வாசலுக்கு ஓடிவந்து பார்த்துவிட்டு அப்பா இல்லாது வேறு யாரும் கேட் அருகே நின்று கூப்பிடுவது கேட்டு ஏமாற்றத்துடன் திரும்பினோம்.

மணி சரியாக 10:45 அப்பா இன்னும் வரவில்லையே என மனம் திக்திக்கென அடித்துக் கொண்டிருக்கையில், கேட்டை யாரோ திறக்க முயற்சிக்கும் சத்தம் கேட்டு எட்டி பார்த்தேன்.அப்பா கேட்டை திறக்க முடியாமல், பூட்டுபோட்டு இருந்தபடியால், அந்த கேட்டை உலுக்கி ஓசை செய்தார்கள்.நான் உடனே

அம்மாவின் அறைக்கு ஓடிச் சென்று
“அம்மா,அம்மா,அப்பா வந்து விட்டார்கள்”என்ற
ரகசிய குரலில் கூறிவிட்டு ஹாலுக்கு ஓடி வந்து
விட்டேன்.

அச்சமயம் பெரியப்பாவும் குளித்து முடித்துவிட்டு,
தன் அறை பக்கம்
வந்துகொண்டிருந்தார்கள்.”என்ன எல்லோரும்
இங்கு நின்று வேடிக்கை பார்த்துக்
கொண்டிருகிறீர்கள்”என்றார் பெரியப்பா.

“ஐயா<அனிதாவின் அப்பா வந்து கேட் அருகில்
நின்று கேட்டை திறக்க சொல்லி தட்டிக்
கொண்டிருக்கிறார்”என்றார் மூர்த்தி.

அதற்குள் அம்மா தன அறையிலிருந்து மெதுவாக
எழுந்து என் உதவியுடன் ஹாலுக்கு
வந்துவிடவே ,பெரியப்பா வேறு வழி இல்லாமல்
சிறிது யோசனைக்கு பிறகு “உமா போய்
கேட்டை திறந்து அவரை உள்ளே
கூப்பிடு”என்றார்கள்.

அனைவரும் மௌனமாக நின்றுக்கொண்டு, உமா கேட்டை திறந்து அப்பாவை உள்ளே வரவேற்றதை பார்த்துக் கொண்டே நின்றிருந்தார்கள்.பெரியப்பாவும் நின்றிருந்தார்கள்.எதுவும் பேசவில்லை.அப்பா வீட்டிற்குள் வந்ததும்,பெரியப்பாவும்,மற்றவர்களும் “வாங்க.என வரவேற்றனர்.அம்மாவும் அப்பாவை வாங்க என கூப்பிட்டதும்.”வேண்டுமானால் ரூமிற்கு சென்று பேசுங்கள்”என்று அம்மாவிடம் பெரியப்பா கூறவே.அப்பா, அம்மாவை அழைத்துக் சென்று சிறிது நேரம் பேசியப்பின் அப்பா வெளியே வந்து பசங்களா,ரெடியாகுங்கள் நாம கிளம்ப போகிறோம்”என கூறிவிட்டு ,பெரியப்பாவை கூப்பிட்டு ,சொல்லிவிட்டு கிளம்பலாம் என்றார்கள்.

அதற்குள் உமா பெரியப்பாவின்,ரூம் கதவை தட்டி,ஐயா,சின்னையா கூப்பிடுகிறார்”என்றாள் .

ஹாலுக்கு வந்த பெரியப்பாவிடம்,

குழந்தைகளையும்,மங்கையையும் அழைத்துக் கொண்டு கிளம்பிக்கிறேன்.அவர்கள் பெட்டிகளை எடுத்து கொடுக்க முடியுமா?"என்றார்கள்.\

"அந்த ரூம் சாவி என்னிடம் இல்லை.சேது தன்னுடன் எடுத்துக் கொண்டு சென்று விட்டாள் "என்றார்கள் பெரியப்பா.

"சேது வந்தால் சொல்லிவிடுங்கள்,நான் நாளை அல்லது நாளை மறுநாள் என் ஆபீஸ் பியூனை அனுப்பிவைக்கிறேன.அவனிடம் எல்லாவற்றையும் கொடுத்து அனுப்பிவிட சொல்லுங்கள்.இப்போது நான் இவர்களை அழைத்துப் போகிறேன்"என்றார்கள் அப்பா.

பெரியப்பா சரி,என்பது போல தலை ஆட்டி விட்டு நின்றிருந்தார்கள்.அனைவரும் ஹாலில் எங்களை வழி அனுப்ப சோகத்துடன் நின்றிருந்தார்கள்.

"நான் அம்மாவுடன்

இருக்கிறேன்.ஷான்,நீயும்,அனிதாவும் இங்கு
தெரு முனையிலிருக்கும் டாக்சி ஒன்றை
அழைத்து வா.எங்கு போக வேண்டும் என்று
டாக்சி ஓட்டுபவர் கேட்டால் தி.நகர்.பஸ்
நிலையம் போக வேண்டும் என சொல்லி
விடு"என்றார்கள் அப்பா.

நானும் அண்ணன் ஷானும் விரைந்து ஓடினோம்
டாக்சி கொண்டு வருவதற்கு.அப்பா சொன்னபடி
தெரு முனையில் நின்றிருந்த இரண்டு
டாக்சியில் ஒரு டாக்சி ஓட்டுபவரிடம் பேசி
டாக்சியில் ஏறி உட்கார்ந்து கொண்டு வீடு
வந்து இறங்கினோம்.

உள்ளே வந்ததும் ஹாலில்
அம்மா,அப்பா,ஆனஹி,பாட் அனைவரும்
தயாராக நாங்கள் வைத்ததிருந்த கைப்பையுடன்
நின்றிருந்தார்கள் .பெரியப்பாவும்,மற்றவர்களும்
எங்களை வழியனுப்ப நின்றிருந்தனர்.

"போயிட்டு வரேன்,எங்கள் உடமைகளை,
நாங்கள் அனுப்பி வைக்கும் வேலை ஆளிடம்

அவசியம்
கொடுத்தனுப்பிவிடுங்கள்.அக்காவிடமும்,அப்பா,அம்
நான் என் குழந்தைகளுடனும்,தேவனுடனும்
சென்று விட்டேன் என
கூறிவிடுங்கள்.அப்பாவிடம் சொல்லி,
குழந்தைகளின் பள்ளிகூடத்திலிருந்து மாற்று
சான்றிதழையும், மற்ற விவரங்களையும்
முடிந்தால் வாங்கி என் மாமனாரின் வீட்டு
முகவரிக்கு அனுப்பிவிட சொல்லுங்கள் .இல்லை
என்றால் தேவன் வந்து வாங்கிக்
கொள்வார்,மேலும் என் நகைகளையும்,வீட்டு
சாமான்களையும் என் புது முகவரி தெரிந்ததும்
அப்பாவிற்கு எழுதுகிறான்.அங்கு
அனுப்பிவிடசொல்லுங்கள்.அக்காவிடம் என்னை
தொந்தரவு செய்யவேண்டாம் என்றும்,இனிமேல்
நான் இங்கு திரும்பி வருவதாக இல்லை
என்றும்.என் அனுமதி இல்லாமல் ,என்னை எந்த
ஊருக்கும் இனி மாற்றவேண்டாம் எனவும்
சொல்லிவிடுங்கள்”என அனைவரையும் பார்த்து
பொதுப்படையாக சொல்லிவிட்டு
கிளம்பினார்கள் அம்மா.

சரி,சின்னம்மா,உடல்நிலையையும்,குழந்தைகளையும் பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள். எது பற்றியும் கவலை படாமல் நல்ல படியாக போய்வாருங்கள்”என்று கூறும்போதே முர்த்தியின் உடல் குலுங்கியது அழுகையால்.

முர்த்தி குலுங்கி அழுவாதை கண்டு மற்றவர்களும் அழ,பெரியப்பா மிக வருத்தமாக நின்றிருந்தார்.குமார் எதுவும் புரியாமல் விழித்துக் கொண்டு நின்றிருந்தான்.

அப்பா, அம்மாவை மெதுவாக தன் தோளில் தாங்கி பிடித்துக் கொள்ள,நான் ஒரு தோளில் அம்மாவை தாங்கி பிடித்து கொள்ள, மெதுவாக நடந்து சென்று டாக்சியில் சிரமப்பட்டு உட்காரவைத்தோம்.

எங்கள் நாலவரையும், மறுபடியும் கட்டிபிடித்து முத்தமிட்டு பிரியாவிடை கொடுத்தனர்.அப்பாவும் பாட்டும் டாக்சியில் முன் இருக்கையில் டாக்சி ஓட்டுபவர் அருகில் உட்கார்ந்து கொண்டார்கள்.ஷான்.ஆனஹி,நான் மற்றும்

அம்மா நால்வரும் டாக்சியின் பின் இருக்கையில் உட்கார்ந்து கொண்டோம்.டாக்சி புறப்படும் சமயம்,பெரியப்பா வீட்டை விட்டு வெளியே வரவில்லை. மூர்த்தி, வேணி அக்கா,குமாரி அக்கா மற்றும் உமா நால்வரும் டாக்சியின் அருகில் நின்றிருந்தார்கள்.

டாக்சி புறப்படுகையில் “நான் போகிறேன்”அக்காவிடம் கூறிவிடுங்கள் “என்றார்கள் அம்மா.\

“போகிறேன் என்று ஏன் சொல்றீங்க சின்னம்மா,போய் வருகிறேன் என்று சொல்லுங்கள்”என மூர்த்தி திருத்தியதும், அம்மா ஒரு வெறும் புன்முறுவலை உதிர்த்துவிட்டு பேசாமலிருந்தார்கள்..

பெரியப்பா ஹாலில் நின்ற வண்ணம், மௌனமாக எங்களை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“டாக்ஸி கிளம்பியதும்,தி.நகர் பஸ் நிலையத்திற்கு

போப்பா”என்றார்கள் அப்பா.டாக்சி அந்த வீட்டை விட்டு நகர்த்தும், எங்கள் அனைவருக்கும் எதோ பயங்கரமான அடைபட்டிருந்த குகையிலிருந்து விடுதலை பெற்று வந்தது போல மிகவும் ஆனந்தமாகவும்,நிம்மதியாகவும் இருந்தது.

இனி நாங்க யாரும் அநாதை விடுதிக்கு போகப் போவதில்லை.இனி எங்கள் நால்வரையும் யாரும் கொடுமை செய்வதற்கில்லை.இழிந்து பேசுவதற்கில்லை.அம்மா,அப்பாவுடன் இனி ஆனந்தமாக காலம் தள்ளலாம் என நிம்மதி பெருமூச்சு ஏற்பட்டது.

டாக்சி ஓடிக் கொண்டிருக்கையில் ,டாக்சி ஓட்டுபவரிடம் அப்பா மெதுவாக பேச்சை ஆரம்பித்தார்கள்.”ஏம்ப்பா,தி,நகர் அல்லது மேற்கு மாம்பலத்தில் யாரேனும் வீட்டு தாரகை உனக்கு தெரியுமா?வீடு ஏதும் அங்கு காலி இருக்கிறதா?உனக்கு எதுவும் அந்த வட்டாரத்தை பற்றி தெரியமா?” என்றார்கள். என்றார்கள். .

“மாம்பலத்தில் எனக்கொரு வீட்டு தரகர் தெரியும் சார்.அவரிடம் சொன்னால் நொடியில் வீடு எங்கெங்கு காலி இருக்கிறது என கூறிவிடுவார்.

டாக்சி ஓட்டுபவர் ஒரு நடுத்தர வயதுகாரர்.சுமார் 40வயது மதிக்கத்தக்கவர்.அவர் பார்க்க மிக சாந்தமாகவும்,நல்லவராகும் தெரிந்தார்.

“அப்படி என்றால் அவர் இருக்கும் இடத்திற்கு எங்களை அழைத்து போகிறாயா?மீட்டருக்கு மேல் எவ்வளவு கேட்டாலும் கொடுத்துவிடுகிறேன்.”என்றார்கள் அப்பா.மேலும் தொடர்ந்து பேசினார்கள் “என் மனைவிக்கு உடலிலை சரியில்லை.ஊரிலிருந்து குழந்தைகளுடன் வந்திருக்கிறார்கள்.எங்களுக்கு இன்றே ஒரு வீடு தங்குவதற்கு தேவைப்படுகிறது.கொஞ்சம் குடும்ப பிரச்சனையை.குழந்தைகளுடன் ஓட்டலில் தங்குவதற்கு வசதியாக இருக்காது.இன்றே வீடு கிடைத்தால் முன்பணம்,வாடகை எல்லாம்

கொடுத்து விடுகிறேன்”என கூறியதும் டாக்சி ஓட்டுபவர் ஓரளவு எங்கள் நிலைமையை புரிந்து கொண்டவராக, மேற்படி விஷயத்தை கிளறி கிளறி கேட்க்காமல் மிகவும் ஒத்துழைத்தார் எங்களுடன். .மிகவும் பொறுமையானவர் என்றே கூறவேண்டும்.

“கவலை படாதீங்கள் சார்.பணம் பெரிய விஷயம் இல்லை. உடல் நிலை சரியில்லாத மனைவியுடனும்,நான்கு சிறிய குழந்தைகளுடனும், ஓட்டலில் தங்குவது சரி இல்லை.நான் தரகர் வீட்டிற்கு உங்களை அழைத்துச் செல்கிறேன்.எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை.கவலைபடாதீர்கள் .அதே போல பணம் நீங்க எது கொடுத்தாலும் வாங்கி கொள்கிறேன்.அதிக பணம் ஏதும் நான் எதிர்பார்க்கமாட்டேன்”என கனிவுடன் கூறினார்.

டாக்சி ஓட்டுபவர், மிகவும் நம்பிக்கைக்குரியவரும்,அக்கறை உடையவருமாக தெரிந்ததும்,நடந்த விஷயத்தை ரொம்பவும் சுருக்கமாகவும் அதே சமயத்தில் அதிக

விஷயங்களை வெளியில் கூறாமலும்
மேலோட்டமாக விஷயங்களை அப்பா சொல்லி
முடித்ததும் ,டாக்சி ஓட்டுபவர் ஆச்சரியம்
தாங்கமுடியாமல் “சினிமாவில் வரும் கதை
போல இருக்கிறது சார்.கூட பிறந்த
சகோதரி,சகோதரன் மற்றும் சொந்த
பெற்றோர்கள் இப்படிகூட
இருப்பார்களா?உடல் நிலை சரியில்லாத
பெண்ணுக்கு உதவி செய்வதாக இப்படி
ஏமாற்றும் அவர்கள் கதி நல்லகதியாக
ஆகுமா?”என வருத்தத்துடன் கூறினார்.

பேசிக் கொண்டே வந்ததில் நேரம் போனதே
தெரியவில்லை.டாக்சி ஓட்டுபவர், மேற்கு
மாம்பலத்தில் வீட்டு தரகர் வீட்டு வாசலுக்கு
கொண்டு வந்து நிறுத்திவிட்டார் .தரகர் இருந்த
வீட்டு தெரு மிக குறுகலாக இருந்தது.நடுத்தர
குடும்பத்தினர் வசிக்கும் இடத்தைவிட கீழாக
உள்ள வகுப்பை சேர்ந்தவர்கள் வாழும் இடமாக
தெரிந்தது.ஒட்டிய வீடுகளும்,ஒரே வீட்டில் பல
குடும்பகள் சிறிய சிறிய பகுதிகளில் குடியிருப்பது
பார்த்தாலே அங்கு சற்றே கஷ்டப்படும்

குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன என்று தெரிந்துவிடும்.மதியம் ஒரு மணி வெய்யில் மண்டையை பிளந்தது.பசி அனைவரையும் வாட்டியது.இருந்தாலும் வீடு பார்க்கும் படலம் முடியும் வரை யாரும் சாப்பிடமுடியாத நிலை.

டாக்சியில் எங்களை எல்லாம் இருக்கச் சொல்லி விட்டு , உள்ளே சென்ற டாக்சி ஓட்டுபவர்,சிறிது நேரம் கழித்து தரகருடன் வெளியே வந்து எங்களுக்கு அறிமுகப்படுத்து வைத்தார்.

“சார், இரு வீடு இப்போதைக்கு தயாராக உள்ளது.ஆனால், அது மிகவும் சிறிய வீடு.வசதியும் சற்றே குறைவே.இரண்டு சிறிய ரூமும்,ஒரு சமையலறையும்தான்.குளிப்பதற்கு மட்டும் தனி குளியலறை உண்டு.ஆனால் டாய்லெட் மட்டும் ஏழு குடித்தனகளுக்கு சேர்த்து பொதுவாக உள்ளது.வாடகை ரூ 75/-என்றார் தரகர்.

“எதுவாக இருந்தாலும் பரவாயில்லை

.இப்போதைக்கு கொஞ்சம் நாட்களுக்கு தங்குவதற்கு இடம் வேண்டும்.என் குடும்பத்தை அந்த வீட்டில் விட்டு விட்டுதான் மதிய சாப்பாட்டிற்கு நான் ஏற்பாடு செய்தாக வேண்டும்"என்றார்கள் அப்பா.

வீட்டு தரகர் குனிந்து டாக்சியில் இருக்கும் எங்களை ஒரு நோட்டம் விட்டுவிட்டு"சார்,நான் சைக்கிளில் வருகிறேன்.என்னை தொடர்ந்து வாருங்கள்.என்னுடைய கமிஷன் தொகையை பற்றி டாக்ஸ் டிரைவர் ஏற்கானவே உங்களுக்கு சொல்லியிருப்பார் என நினைக்கிறேன்.உங்களுக்கு அதில் ஏதும் ஆட்சேபனை உண்டா?"என்று கேட்டார்.

டாக்சி டிரைவர் எதுவும் சொல்லவில்லை.உங்கள் கமிஷனை எதுவானாலும் பரவாயில்லை.உடனே கொடுத்துவிடுகிறேன்.பணத்தை பற்றி கவலைபடாதீர்கள்"என்றார்கள் அப்பா

"ரொம்ப நன்றி சார்.என்னை தொடர்ந்து

வாருங்கள்”என கூறிவிட்டு உள்ளே சென்ற தரகர், சிறிது நேரத்திற்க்கெல்லாம் உடைமாற்றிக் கொண்டு வெளியே வந்து, அவரது பழைய துருப்பிடித்த சைக்கிளை, கறுக் கறுக் என்ற சத்தத்துடன் மிதித்திக் கொண்டே முன்னே செல்ல,எங்கள் டாக்சி அவரை மெதுவாக பின் தொடர்ந்து சென்றது.

வீட்டு தரகர், ஒரு அழுக்கான வெள்ளை வேஷ்டியும்,கலர் மங்கிப்போன ஒரு வெளி நீலநிறச் சட்டையும் ,காலில் செருப்புக் கூட இல்லாமல் அந்த ஓட்டை சைக்கிளை மிதித்துக் கொண்டு செல்வதை பார்க்க எங்களுக்கு சற்றே பரிதாபமாக காட்சியளித்து.பாவம் இந்த கமிஷன் பணத்தை வைத்துக் கொண்டுதான் அவர் தன் குடும்பத்தை நடத்த வேண்டிய நிலை.அவருக்கு வாடிக்கை ஆளர்கள் இல்லாவிட்டால் கமிஷன் கிடைக்காது.கமிஷன் பணம் இல்லை என்றால் இவர் குடும்பத்தை நடத்த பணம் இருக்காதே.பாவம் இந்த மனிதர், என மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

அம்மா வழி முழுதும் எதுவுமே பேசவில்லை.அப்பா மட்டும் டாக்சி டிரைவரிடம் பேசி கொண்டு வந்தார்கள்.தரகரின் சைக்கிள் ஒரு அகலமான தெருவிற்குள் நுழைந்தது.இருபுறமும் மரங்களும்,செடிகொடிகளும் அதிகமில்லாமல் ,கேட் போட்ட தனித்தனி வீடுகளாக அந்த தெருவில் காணப்பட்டது.பார்க்க நடுத்தர வகுப்பு குடும்பங்கள் வசிக்கும் தெருவாக தெரிந்தது.தெருவில் நுழைந்ததும் பத்து வீடுகள் தள்ளி ரைட்சைடில் தெரு ஓரமாக ,ஒரு வீட்டின் முன் தன் சைக்கிளை நிறுத்திவிட்டு,கீழே இறங்கினார் தரகர்.டாக்சி டிரைவரும் அவரது சைக்கிளிற்கு பின்னால் ,டாக்சியை நிறுத்திவிட்டு, அவரும் இறங்கி தரகருடன் சென்றார்.அப்பாவும் கூடவே அவர்களுடன் சென்றார்கள்.அவர்கள் மூவரும் ஏதேதோ பேசினார்கள்.பிறகு வீட்டு தரகர் அப்பாவிடமும்,டாக்சி ஓட்டுபவரிடம் எதோ சொல்லி விட்டு தான் மட்டும் அந்த வீடிற்கு பின்னால் தனியாக சென்றார்.

அப்பா திரும்பி டாக்சியின் அருகில் வந்து எங்களிடம் “தரகர் வீட்டு ஓனரை பார்த்து பேசிவிட்டு வர சென்றிருக்கிறார்.வீட்டு சொந்தக்காரர் வீட்டிலிருந்தால் நம் அதிர்ஷ்டம்.இது மத்தியானம் சாப்பாட்டு நேரம் என்பதால், வீட்டு சொந்தக்காரர் நிச்சயமாக சாப்பாட்டிற்கு வீட்டிற்கு வந்திருப்பார் என தரகர் உறுதியாக கூறிவிட்டு சென்றிருக்கிறார்.வீட்டு சொந்தக்காரர் தினமும் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு வருவது வழக்கமாம்.அதோடு இல்லாமல் சாப்பாட்டிற்கு பிறகு ,சிறிது ஓய்வு எடுப்பதும் வழக்கமாம்.என்றார்கள் அப்பா.

அனைவரும் பசியால்துடித்துக் கொண்டே ,வீட்டு சொந்தக்காரர் வீட்டில் இருக்கவேண்டுமே என கடவுளை வேண்டிக்கொண்டோம்.வீட்டுச் சொந்தக்காரர் இல்லை என்றால், இன்று ஹோட்டலில்தான் தங்கவேண்டும், என நினைத்துக் கொண்டேன்.

போன தரகர் பதினைந்து நிமிடங்களுக்கு பிறகு

,கருப்பாக,மிகமிக குட்டையாக,நாலு அடி உயரம் உள்ளவருமாக,வெள்ளை வெளேரென்ற காட்டனில் மேல்சட்டையும்,பளிச்சிடும் வெள்ளையில் மடித்துக் கட்டிய வேஷ்டியும்,தலையில் முன்புறம் பாதிக்குமேல் முடிகிடையாது,பளபளவென்ற வழுக்கை தலையும் கொண்டு,அந்த கரி போன்ற முகத்தில் அவர் சிரித்தபோது தெரிந்த வரிசையான பளிச்சென்று தெரிந்த வெள்ளை பற்களையும் கொண்ட ஒருவருடன் வந்தார்.அவர்கள் இருவரும் வருவதை பார்த்ததும்,அப்பாவும்,டாக்சி டிரைவரும் காரிலிருந்து இறங்கியதும் வீட்டு தரகர் ,அந்த குட்டை மனிதரை அப்பாவிற்கு அறிமுகபடுத்தி வைத்தார்.

டாக்சி டிரைவர்,அப்பா,வீட்டு தரகர்,வீட்டு சொந்தக்கார நால்வரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள் சிறிது நேரம் வரையில்.நல்லவேளை டாக்ஸி டிரைவர் டாக்ஸியை ,ஒரு பெரிய வேப்பமரத்தடியில் நிறுத்தியிருந்ததால்,,அந்த மரத்தின் நிழலும், வேப்பமரக் காற்றும் அதிக வெய்யில் தெரியாமல்

,எங்களால் தாக்குபிடிக்க முடிந்தது.

சில நிமிடங்களுக்கு பிறகு, அப்பா எங்களிடம் வந்து “எல்லோரும் காரை விட்டு இறங்குங்கள் .வீட்டு சொந்தக்காரர் இப்போதே வீடு கொடுக்க சம்மதித்துவிட்டார். இன்னும் சில மாதங்களுக்கு இந்த வீட்டில்தான் நாம் இருக்கப் போகிறோம்.நான் பின்னால் இருக்கும் அவர் வீட்டிற்கு சென்று பேப்பரில் கையெழுத்திட்டுவிட்டு,முன்பணம் கொடுத்துவிட்டு வாருகிறேன்.அதுவரை நீங்கள் அனைவரும், இந்த வீட்டிற்குள் இருக்க அவர் அனுமதி அளித்திவிட்டார்.இறங்கி வீட்டு வாசலுக்கு முன் நின்றால் அவர் சாவியுடன் வந்து வீட்டை திறந்து விடுவார்”என்றார்கள் அப்பா.

வீடு உள்ளே எப்படி இருக்கிறது என்று யாருமே பார்க்ககூட இல்லை.அது பற்றி யாரும் துளிகூட கவலை படவும் இல்லை.அன்று எங்கள் அனைவரின் கவலை எல்லாம் சில நாட்களுக்கு தங்குவதற்கு வீடு வேண்டும் என்பதுதான்.

சாவியுடன் வந்த வீட்டு சொந்தக்காரர்,வீட்டை திறந்ததும்,அப்பாவும் நானும், அண்ணன் ஷானும், அம்மாவை டாக்சியிலிருந்து மெதுவாக இறக்கி கைத்தாங்கலாக அழைத்து வந்து வீட்டிற்குள் செல்கையில்,பக்கத்து போர்ஷனில் குடியிருந்த ஆண்டி வெளியே வந்து, எங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.அப்பா அந்த ஆண்டியிடம் “என் மனைவிக்கு கீழே உட்கார முடியாது,ஒரு சில மணி நேரத்திற்கு உட்காருவதற்கு ஒரு நாற்காலி அல்லது ஸ்டூல் கொடுத்தால் உதவியாக இருக்கும்”என கேட்டார்கள். அந்த ஆண்டி தாமதிக்காமல், தன் போர்ஷனுக்கு சென்று, ஒரு நாற்காலியை கொண்டுவந்து அப்பாவிடம் கொடுத்துவிட்டு”அவசரமில்லை மெதுவாகவே திருப்பி கொடுங்கள்”என்றார்கள்.

அம்மாவை நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு ,டாக்சி டிரைவருக்கு நன்றி கூறிவிட்டு அவருக்கு பணத்தை எடுத்து கொடுத்தார்கள் அப்பா.”மீட்டர் காட்டும் பணமே போரும் சார். எதற்கு இவ்வளவு அதிகமாக கொடுத்து

இருக்கிறீர்கள்.”என்றார் அன்புடன், மேலும் “குடும்பத்துடன் இப்போதுதான் புதுசா மறுபடியும் எல்லாம் துவங்குவதால் நிறைய செலவுகள் இருக்கும்,எனவே இவ்வளவு தேவை இல்லை எனக்கு’என மீதி பணத்தை திரும்ப அப்பாவிடம் கொடுக்க முனைகையில்,

“உங்க உதவிக்கு நான் தரும் பணம் ஒன்றுமே இல்லை.இன்னும் நிறைய பணம் உங்களுக்கு கொடுக்க ஆசைதான், இப்போதைக்கு அவ்வளவுதான் என்னால் கொடுக்க முடிந்தது.தயவு செய்து எடுத்து கொள்ளுங்கள்.உங்கள் உதவிக்கு ரொம்ப நன்றி”என அப்பா கூறியதும்,அம்மாவும் “ஆமாம்ப்பா,பணத்தை வைத்துக்கொள்ளுங்கள்.ரொம்ப நன்றி”என டிரைவரிடம் கூறி அவரை வழியனுப்பிவிட்டு வந்தார்கள் அப்பா.

டாக்சி டிரைவர் போவதற்கு முன் “சார்,என் வீடு தி.நகரில்தான் இருக்கிறது.உங்களுக்கு எப்போது உதவி தேவையானாலும், என்னை

தாராளமாக கூப்பிடலாம்.நான் உடனே வந்து விடுகிறேன் என அவரது வீட்டு முகவரியையும்,பக்கத்து கடை தொலைபேசி எண்ணையும் அப்பாவிடம் கொடுத்துவிட்டு சென்றார்.

சிறிது நேரமே பழகினாலும், அந்த டாக்சி டிரைவர் ,எங்கள் குடும்பத்தில் ஒருவர் போல பழகினார்.அவரது உதவியை எங்களால் எப்பவுமே மறக்க முடியாது.

நாங்கள் குடிவதிருந்த வீடு, ஒரு இரட்டை வீடு போன்றது.இரண்டு போர்ஷனும் ஒரே மாதிரியாகவே இருந்தது.தெருவிலிருந்து சற்றே உயரத்தில் உள்ள பிளாட்பாரமும்,அந்த

பிளாட்பாரத்திலிருந்து ஐந்து அடி உள்ளே தள்ளினாற்போல் நீளமான இரண்டு படிகட்டுகள்.இரண்டாவது படி ஏறினால், இரண்டு வாசற்படிகள் அடுத்தடுத்து இருந்தது.ஒரு வாசற்படி ஏறி உள்ளே சென்றால் நாங்கள் குடியிருக்கபோகும் போர்ஷன். பக்கத்து

வாசற்படி ஏறி உள்ளே சென்றால் பக்கத்து வீட்டு ஆண்டி குடியிருக்கும் போர்ஷன்.வாசற்படி கதவை திறந்ததும் முதல் ரூம் 14 க்கு 10 சதுர அடி இருக்கலாம் என்றே நினைக்கிறேன்.அந்த அறையின் இருபுறமும் நல்ல பெரிய ஜன்னல்களும்,பிறகு இன்னொரு வாசற்படி,அதை தாண்டினால் மற்றும் ஒரு ரூம். .அந்த ரூம் 14க்கு 14 சதுர அடி இருக்கலாம்.அதில் ஒரே ஒரு ஜன்னல்தான்.அது அந்த ரூமில் லெப்ட் பக்கம் இருந்தது.அந்த ரூமை கடந்தால், மற்றொரு வாசற்படி.அதை கடந்தால் 14க்கு 14 சதுர அடிக்கு ஒரு சமையலறை.அதேபோல அந்த சமயலறையிலும் லேப்ட்சய்டில் ஒரு ஜன்னல் இருந்தது.ஜன்னலுக்கு அருகே சமயல் செய்வதற்கான சிமெண்ட் மேடையும்,அதற்க்கு அருகில் ஜன்னலை ஒட்டி ,பாத்திரம் கழுவுவதற்கு ஒரு தொட்டியும் இருந்தது.சமயலறையில் குழாய் கிடையாது.

சமையலறையை கடந்தால், பின்னல் ஒரு வாசற்படி.அந்த கதவை திறந்தால் மறுபடியும்

இரு படிகள் இருந்தது.அதிலிருந்து இறங்கியதும் ,பின்னால் மிக பெரிய திறந்த வெளி.அங்கு லெப்ட்சைடில் சமையலறையை ஒட்டினாற்போல ஒரு குளியலறை.அந்த குளியலறையில் இருந்த கதவு ,குளியலறையை முழுமையாக மூடியில்லாமல் மேலும் கீழும் திறந்தாற்போல,நடுவில் மட்டும் சிறிது மூடியிருந்தது.

குளியலறையிலும்,சமயலறையிலும் தண்ணீர் குழாய் கிடையாது.பக்கத்து போர்ஷனும் எங்களது போலவே அப்படியே இருந்தது.அவர்களது குளியலறையும் எங்களது குளியலறையும் ஒன்றை ஒன்று பார்த்தாற்போல இருந்தது.

அங்கிருந்து இறங்கி இருபதடி சென்றால், மிகப்பெரிய கிணறு.அதை தாண்டியதும், முன்று குடிசை வீடுகள் ஒருபுறமும்,மற்றுமொரு முன்று குடிசை வீடுகள் மறுபுறமும் இருந்தன.அதில் உள்ள ஒரு பெரிய குடிசை வீடு தான் , வீட்டு சொந்தக்காரரின் வீடு.அவரும் அவர் மனிவியும்

பல வருடங்களாக அந்த வீடிலிருப்பதாகவும், அவர்களுக்கு பலவருடங்களாக குழந்தைகளே பிறக்கவில்லை என்றும் வீட்டு தரகரின் மூலம் எங்களுக்கு தெரிய வந்தது.

அந்த வீட்டு சொந்தக்காரரும், அவரது மனிவியும் மிகவும் நல்லவர்களாக தெரிந்தார்கள். அவர்களுக்கு வயது முப்பதிற்கும்,நாற்பதுக்கும் நடுவே இருக்கலாம் என்றே நினைக்கிறேன்.அவர்கள் இந்த டுப்லேக்ஸ் வீட்டு வாடகையும்,அந்த ஐந்து குடிசை வீட்டு வாடகையையும்,அந்த ஓனர் ஒரு அரசாங்கத்தில் எதோ சாதாரண பணியில் வேலை செய்து வந்த சம்பளத்தையும் வைத்துக் கொண்டுதான் குடும்பம் நடத்துவதாக சொன்னார்.

கிணற்றை தாண்டியதும் அடுத்தடுத்தாற்போல, இரண்டு டாய்லேட்டுகள் ,அந்த டாய்லெட்டுகள் முன்னால் முன்று படிகள் ,அவற்றை ஏறியதும் உள்ளே சென்றால் தரையில் மிகப் பெரிய ஓட்டை போட்டு, அந்த ஓட்டைகு கீழே ஒரு பெரிய இரும்பாலான சதுர வடிவில் பாத்திரம்

வைக்கப்பட்டு இருந்தது.அந்த பாத்திரம் தினமும் நிரம்பியதும் மறுநாள் காலையில் டாய்லேட் சுத்தம் செய்பவர் அதை எடுத்துவிட்டு புது பாத்திரத்தை வைத்துவிட்டு போவாராம்..இந்த இரு டாய்லெட்டும்தான், அங்கு குடி இருக்கும் ஆறு குடிசைவாசிகளும், நாங்க இரண்டு இரட்டை வீட்டு குடும்பத்தாரும் உபயோகிக்கவேண்டும்.டாய்லெட்ஸ் உள்ளே நுழைந்தால் நாற்றம் மூக்கை துளைத்தது.டாய்லெட்ஸ் இரண்டிற்கும் மேலே முடாமல் வானத்தை பார்த்தாற்போல இருந்தது.மழைகாலம் வந்தால் என்ன செய்வது.அவசரம் என்றால் என்ன செய்வது.

அம்மாவை என்ன செய்வது. அவர்கள் எப்படி இந்த மாதிரியான டாய்லிட்டில் சமாளிக்க முடியும்.இவற்றை எல்லாம் பார்த்து நாங்கள் நால்வரும் மலைத்து நின்றோம்.இருந்தாலும் இன்னும் கொஞ்சம் நாட்களுக்கு எப்படியாவாது நாம் சமாளித்தே ஆகவேண்டும்.வேறு வழி கிடையாது என்ற நிலையை புரிந்து கொண்டு,அம்மாவின் கூட

பிறந்தவர்களிடமும்,பெற்றோர்களிடமும் அவதி படுவதை விட இந்த டாய்லேட் ஒன்றும் பெரிய விஷயமாக அப்போது எங்கள் யாருக்கும் தெரியவில்லை.

கிணற்றை சுற்றிதான், அனைவரும் துணி துவைக்கவேண்டும்.அது மிகப் பெரிய வட்டவடிவமான கிணறு. அவற்றின் மேல், இரண்டு புல்லிகள் இருந்தன.ஒவ்வொரு குடும்பத்தாரும், தனித்தனியாக தாம்பு கயிறும்,புல்லியும் .பக்கெட்டும் கொண்டுவந்து மாட்டி, தண்ணீரை எடுத்து முடித்தவுடன் கழற்றி கொண்டுவந்து அவரவர் வீட்டில் வைத்துக் கொள்ளவேண்டும்.சமைப்பதற்கும் குளிப்பதற்கும் அதே கிணற்று தண்ணீரைதான் கொண்டுவந்து ஒரு பெரிய அண்டாவில் நிரப்பி வைத்துக் கொள்ளவேண்டும்.அம்மாவிற்கு படுக்கை அருகிலேயே ஒரு கம்மோட் இருப்பதால், டாய்லேட் பற்றி கவலை இல்லை.இனி எல்லா வேலைகளும் நாங்களேதான் செய்து கொள்ள வேண்டும் சிறிது நாட்களுக்கு.

“

அத்யாயம் -முப்பத்தி எட்டு

எல்லாவற்றையும் நாங்கள் ஐந்துபேரும் சுற்றி பார்த்து விட்டு உள்ளே சென்று அம்மாவிடம் கூறினோம்.இதற்கிடையில் பக்கத்து வீட்டிலுள்ள ஆண்டி உள்ளே வந்து தன்னை அறிமுகம்படுத்திக் கொண்டு, தன் குடும்பத்தார் அனைவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

“என் பெயர் கிரிஜா.இவர் என் கணவர் ,பெயர் ஸ்ரீநி ,எங்களுக்கு ஏழு பெண் குழந்தைகள்.என அவர்கள் பெயர்களையும் வரிசையாக கூறி அறிமுகபடுத்தி வைத்த்தார்கள்.மேலும் அம்மாவும்,

அப்பாவும் சுறுக்கமாக, நாங்கள் ,அந்த வீட்டிற்கு எந்த சாமான்களும் இல்லாமல் வந்த கதையை கூறவே,கிரிஜா ஆண்டி"நான் வேண்டுமானால், உங்களுக்கெல்லாம் சாப்பாடு வாங்கி வர, ஐந்து அடுக்கு சாப்பாட்டு காரியரை கொடுக்கிறேன்.முதலில் இந்த தெரு முனையிலுள்ள ஹோட்டலுக்கு சென்று சாப்பாடு வாங்கி வந்து அனைவரும் சாப்பிடுங்கள்.இப்போதைக்கு தண்ணீர் குடிக்க டம்பளர்,பக்கெட் மற்றும் எதுவேண்டுமானாலும் சிறிது நாட்களுக்கு கடன் வாங்கி கொள்ளுங்கள்.சிறிது நாட்களுக்குதானே ,சமாளித்துக் கொள்ளலாம்."என்றார்கள் மிகவும் அன்புடன்.

"இன்னும் எதுவேண்டுமானாலும் தயங்காமல் எங்களிடம், நீங்கள் கேட்கலாம்.எங்களால் முடிந்த உதவியை உங்களுக்கு செய்ய பிரியபடுகிறோம்".என்றார் அங்கிள் ஸ்ரீனி.

அதற்குள் கிரிஜா ஆண்டி, ஐந்து அடுக்கு சாப்பாட்டு காரியரை கொண்டுவந்து

அப்பாவிடம் கொடுக்கவே,அப்பா ஆண்டிக்கு நன்றி சொல்லிவிட்டு “இப்போதைக்கு இது போதும்,சாப்பாட்டை முடித்துவிட்டு குழந்தைகளுடன், நான் வீட்டிற்கு வேண்டிய சாமான்களை வாங்கிவர போகலாம் என இருக்கிறேன்.வரும் வரை நீங்கள் மங்கையுடன் துணையாக இருந்தால் உதவியாக இருக்கும்”என்றார்கள் .

“அதற்கென்ன,நான் அவர்களுடன் இருக்கிறேன்.அவசரபடாமல் வீட்டிற்கு வேண்டியதை பொறுமையாக வாங்கிகொண்டு வாருங்கள்”என்றார்கள் கிரிஜா ஆண்டி.

அப்பா சாப்பாட்டு காரியருடன், அண்ணன் ஷானையும் அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்கு சென்றார்கள், சாப்பாடு வாங்கி வருவதற்காக.அப்பா சென்றவுடன் கிரிஜா ஆண்டி ,அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

‘இவள் என் மூத்த மகள் அனிதா, என் சிறிய

மகள் ஆனஹி,சிறிய மகன் பாட் ,பெரியவன் ஷான்தான் அப்பாவுடன் ஹோட்டலுக்கு சென்றிருக்கிறான்."என்றார்கள்.

"குழந்தைகளுக்கு எல்லாம் என்ன வயதாகிறது"என்று கேட்டார்கள் ஆண்டி.

"பெரிய மங்கனுக்கு 14 வயது.அனிதாவிற்கு 12வயது.பாட்டிற்கு 10வயது,ஆனஹிக்கு 7 வயதாகிறது."என்று வரிசையாக எல்லாவற்றியும் அம்மா கூறினார்கள்.

'அனிதாவை பார்த்தால் 12வயது போலவே தெரியவில்லையே.நான் அவளுக்கு 18 வயதிருக்கும் என்று நினைத்திருந்தேன்.சரியாகத்தான் வயதை சொல்கிறீர்களா?"என சந்தேகிப்பது போல கிரிஜா ஆண்டி கேட்டதும்,

அம்மாவின் முகம் மாறியது.இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "இவள் இன்னும் வயதிற்கே வரவில்லை. வயதுக்கு மீறி

வளர்த்தியாக தெரிகிறாள்.என் அக்கா என்னை கேட்காமல் இவளுக்கு பாவாடை தாவணி போட்டுவிட்டாள் .இவளுக்கு வயது 12தான் ஆகிறது.மேலும் இவள் இப்போதுதான் ஒன்பதாம் வகுப்பிற்கே போக இருக்கிறாள்"என அம்மா கூறியதும், கிரிஜா ஆண்டியால் நம்பமுடியாமல் ,சந்தேகக் குறியுடன் என்னை பார்த்து விட்டு, மௌனமாக இருந்தார்கள்.அம்மா எதோ உண்மையை மறைப்பதாக கிரிஜா ஆண்டி சந்தேக படுவதை அவர்களது முக பாவத்திலிருந்து புரிந்து கொண்டோம்.

அப்பா சாப்பாட்டு காரியருடன், சுருட்டி கட்டப்பட்டிருந்த வாழை இலையை ஒரு கையில் பிடித்தவண்ணம் உள்ளே நுழைந்ததும் கிரிஜா ஆண்டி"சரி நீங்க எல்லோரும் சாப்பிட்டு முடியுங்கள்.நான் பிறகு வந்து பேசிக் கொள்கிறேன்"என கூறிவிட்டு, தன் போர்ஷனுக்கு சென்றுவிட்டார்கள்.

மாலை முன்று மணி ஆகிவிட்டதால், அனைவரும் பசியால் வாடி இருந்தோம்.அப்பா

என்னிடம் வாழை இலையை கொடுத்து, அதை கழுவி விட்டு, எடுத்துவரச் சொன்னார்கள்.நான் பின்புறம் கிணற்றடியில் சென்றதும், ,அங்கு குடிசையில் குடியிருந்த ஒரு பெண்மணி துணி துவைத்துக் கொண்டிருந்தார்.வாழை இலையுடன் நான் போய் நின்றதை பார்த்த அந்த பெண்மணி"இந்த பாக்கெட்டில் இருக்கும் தண்ணீரை எடுத்து இலையை கழுவிக்கொள் பாப்பா"என கூறியதும்,நான் நன்றி கூறிவிட்டு, இலைகளை தண்ணீர்விட்டு நன்றாக கழுநிவிட்டு ,உள்ளே சென்று அப்பாவிடம் கொடுத்தேன்.முதன் முறையாக வாழை இலையில் சாப்பிடும் சந்தோஷம் எங்கள் அனைவருக்கும்.இதுவரையில் நாங்கள் நால்வரும், வாழை இலையில் சாப்பிட்டதே இல்லை.மற்றவர்கள் வாழை இலையில் சாப்பிடுவதை பார்த்து நாங்கள் ஏங்கி இருக்கிறோம்.அப்பாவும், நாங்கள் அனைவரும் தினமும் வெள்ளி தட்டில்தான் சாப்பிட்டு வந்தோம்.இன்று எங்களிடம் அலுமினிய தட்டுகூட இல்லை சாப்பிடுவதற்கு.

“போய் பக்கத்து போர்ஷன் கிரிஜா ஆண்டியிடம், ஒரு ஸ்டூல் கடன் வாங்கி வா,அம்மாவுக்கு ,அதில் இலைபோட்டு சாப்பாடு போடவேண்டும்.சாப்பிட்டு முடித்ததும் திருப்பி உடனே தந்து விடுவதாக சொல்லு”என அப்பா என்னை பக்கத்து வீட்டுக்கு அனுப்பினார்கள்.

நான் பாக்கத்து போர்ஷன் கிரிஜா ஆண்டியிடம், தற்காலிகமாக ஸ்டூல் ஒன்றை கடன் வாங்கி வந்து, அம்மா உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு எதிரே போட்டேன்.அப்பா அந்த ஸ்டூலில் இலையை விரித்துபோட்டு, அம்மாவுக்கு சாப்பாடு போட்டு கொண்டே, எங்களை எல்லாம் தரையில் உட்காரவைத்து இலைபோட்டு சாப்பாட்டை பரிமாறிவிட்டு, தானும் எங்களுடன் உட்கார்ந்து சாப்பிட்டார்கள்.நாங்கள் ஆறு பேரும், முதன் முறையாக ஒன்றாக, ஒரு குடும்பமாக உட்கார்ந்து சாப்பிட்டது, இதுதான் முதல் தடவை.இதற்கு முன் நாங்கள் ஒரு குடும்பமாக வாழ்ந்தாலும், ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டதே கிடையாது.மிகவும் ஆனந்தமாக

இருந்தது அனைவருக்கும்.

அனைவரும் சாப்பிட்டு முடித்தவுடன் ,அப்பா எங்களை சாப்பிட்டு முடித்த வாழை இலைகளையெல்லாம் எடுத்துச் சென்று வீட்டுக்கு வெளியே உள்ள குப்பை தொட்டியில் போட்டுவிட்டு வரச்சொன்னார்கள்.சாப்பாட்டு காரியரில் மிச்சம் இருந்த சாப்பாட்டை, இரவில் முடித்து விடலாம் என எடுத்து சமயலறையில் வைத்துவிட்டு, அம்மா கைகழுவவும்,குடிக்கவும், பக்கத்து போர்ஷன் கிரிஜா ஆண்டியிடம் ,கிணற்று தாம்பு கையிற்றை கடன்வாங்கி ,அந்த பக்கெட்டில் அப்பா தண்ணீரை கிணற்றிலிருந்து இறைத்துக் கொண்டு வரவே, அதை ஒரு சிறிய பாத்திரத்தில் எடுத்துச் சென்று அம்மாவை அதில் கைகழுவச் சொலிவிட்டு,குடிப்பதற்கு தற்காலிகமாக கிரிஜா ஆண்டியிடம் கடன் வாங்கிய இரண்டு பித்தளை டம்ளரில் அனைவரும் தண்ணீரை குடித்து முடித்தோம்.அருமையான சாப்பாடு,வயிறு நிறைந்திருந்தது.

அம்மாவால் வெகு நேரம் உட்கார முடியாது என்பதால், உடனடியாக அம்மா படுக்க படுக்கையும் மற்றும் வீட்டிற்கு வேண்டிய எல்லாம் சிறிதளவிலாவது உடனடியாக வாங்க வேண்டிய அவசிய நிலை அப்போது.யாருக்குமே ஓய்வெடுக்க அன்று நேரமே இல்லை.

எனவே சாப்பிட்டு முடித்தகையோடு அப்பா ஆனஹியை மட்டும் அம்மாவுடன் வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டு,எங்கள் முவரையும் தன்னுடன் கடைக்கு அழைத்துச் சென்றார்கள்.

முதலில் நாங்கள் பாத்திர கடைக்கு சென்று கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் , தாம்பு கயிறும்,பக்கெட்டும்,பத்ரூமிருக்கு தண்ணீர் வைக்க இரண்டு பெரிய டிரமும் ,ஒரு பித்தளை அண்டாவும், குடிதண்ணீர் வைக்க எவர்சில்வர் குடங்கள் இரண்டும், சமைப்பதற்கு இரண்டு கெரொசின் அடுப்பும்,சமைக்க சில பாத்திரங்களும்,எங்கள் ஸ்கூலுக்கு போக லஞ்ச பாக்சும் ,என சமையலுக்கு,பாத்ரூமுக்கு என தேவையான அத்யாவசிய சாமான்களை வாங்கி

கொண்டு அதை, ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஏற்றி, அண்ணனையும் அந்த ரிக்ஷாவில் ஏற்றிவிட்டு, வீட்டில் கொண்டு இறக்கி விட்டு திருமபச் சொன்னார்கள்.

பாத்திரக்கடை வீட்டிலிருந்து அதிக தூரத்தில் இல்லை.,பக்கத்து தெருவிலேயே இருந்ததால் வசதியாக போய்விட்டது.

அண்ணனை ரிக்ஷாவில் வீட்டுக்கு அனுப்பிவிட்டு பக்கத்து கடையில் அம்மாவுக்கு வேண்டிய பெட்சைட் கம்மோட்,உட்கார இரண்டு நாற்காலிகள்,ஒரு ஸ்டூல்,படுக்க கட்டில் மெத்தை,நாங்கள் அனைவரும் படுப்பதற்கு சிறிய சிறிய
மெத்தைகள்,தலையணைகள்,போர்த்திகொள்ள போர்வைகளும் வாங்கி, அந்த கடைக்காரரே வான் வைத்திருந்ததால், அந்த வானில் எல்லாவற்றையும் ஏற்றி ,அதற்குண்டான பணத்தையும் கொடுத்துவிட்டு,அந்த கடைக்காரர்களிடம் எல்லா பர்நீச்சர்களையும் ,வீட்டில் இறக்கி போட்டுவிட்டு ,அம்மாவின்

நிலையை அவர்களுக்கு எடுத்துக் கூறி ,கட்டிலை மட்டும் ஒரு ஓரத்தில் போட்டு எங்கள் அம்மா அதில் படுக்க ஏற்பாடு செய்துவிட்டு வருமாறு ,எல்லாவற்றிக்கும் சேர்த்து கடைகாரருக்கு பணத்தை கொடுத்துவிட்டு,பின் அந்த தெருவிலுள்ள மளிகை கடைக்கு நானும் அப்பாவும் சென்று சில நாட்களுக்கு தேவையான மளிகை சாமான்களை வாங்கி கொண்டு, ஒரு சைக்கில் ரிக்ஷாவில் வீடு வந்து சேர்ந்தோம்.

முதலில் அம்மா படுப்பதற்கு கட்டிலை, முதல் ரூமில் தெருவை பார்த்தவண்ணம்மிருந்த ஜன்னலுக்கு அருகே போட்டு ,அதில் மெத்தையை போட்டு அம்மாவை அதில் மெதுவாக எழுப்பி உட்காரவைத்து,படுக்கச் சொல்லிவிட்டு,மீதி சாமான்களை அங்கங்கு அடுக்கி வைத்துக் கொண்டிருக்கையில், அம்மா டாய்லேட் போகவேண்டும் என்றும் அதனால் நாங்கள் வாங்கி வந்த, பெட்சைட் கம்மொடை உபயோகிக்கபோவதாக கூறவே, நாங்கள் அனைவரும் வீட்டிற்கு வெளியே சிறிது நேரம்

நின்றிருந்தோம .அம்மா டாய்லேட் போய் முடித்ததும்,அப்பா உள்ளே சென்று கம்மொடிலிருந்து பானை உடனடியாக எடுத்துச் சென்று பின்னால் உள்ள டாய்லிட்டில் கொட்டிவிட்டு,புதிதாக வாங்கிய, புல்லியை கிணற்றில் மாட்டி,தாம்புகயித்தை அதில் போட்டு, பக்கெட்டில் தண்ணீரை இறைத்து அந்த பானை சுத்தமாக கழுவிவிட்டு ,மறுபடியும் கம்மோடில் அதை வைத்துவிட்டு,அப்பாவும், நாங்களும் சாமான்களை அந்தந்த இடத்தில் வைப்பதில் முனைந்தோம்

பிறகு அப்பா பாத்ரூமில் இரண்டு ட்ரம்மையும் வைத்துவிட்டு, என்னிடம் ஒரு பக்கெட்டும்,அண்ணனிடமொரு பக்கெட்டும் கொடுத்து விட்டு,அதில் அப்பா தண்ணீரை கிணற்றில்லிருந்து இறைத்து ஊற்றவே,நானும்,அண்ணனும் அந்த தண்ணீரை கொண்டுவந்து பாத்ரூம் டிரம்மில் நிரப்பி வந்தோம்.ஒவ்வொரு பெரிய டிரம்மில், எங்கள் பக்கெட்டில் பத்து பக்கெட் தண்ணீர் பிடித்தது.பிறகு இரண்டு எவர்சில்வர் குடத்திலும்

தண்ணீரை வடிகட்டி நிரப்பி சமயலறையில் கொண்டுவந்து குடிப்பதற்காக வைத்துவிட்டு,ஒரு பெரிய பக்கெட்டில் தண்ணீரை பாத்திரம் கழுவுவதற்காக, கொண்டு வந்து சமையலறையில், பாத்திரம் கழுவும் பேசன் அருகே வைத்தோம்.

மாலை மணி ஐந்து மேல் ஆனவுடன், பக்கத்து வீட்டு கிரிஜா ஆண்டியின் .பிளாஸ்கை கடன் வாங்கிகொண்டு சென்று, அனைவருக்கும் ஹோட்டலிலிருந்து காபியை வாங்கி வந்தார்கள் அப்பா.அனைவரும் காபியை குடித்துவிட்டு சிறிது நேரம் உட்கார்ந்து ஓய்வெடுத்தப்பின்,மறுநாள் மாற்றுக்கு துணிகள் வேண்டும். குளித்துவிட்டு துவட்டகூட டவல் இல்லையே என்பதால், மறுபடியும் அம்மாவை படுத்து ஓய்வெடுக்குமாறு சொல்லிவிட்டு ,அப்பா எங்கள் நாலவரையும் அழைத்துக் கொண்டு வீட்டை முன்புறம் இழுத்து பூட்டி விட்டு சென்றார்கள்.

முதலில் ரெடிமட் துணிக்கடைக்கு சென்று

ஆளுக்கு ஆறு மாற்று உடைகளும,அம்மாவுக்கு ஐந்து புடவைகளும் ,உள் பாவாடைகளும்,அம்மா போட்டுக்கொள்ள,ப்ளீசும்எல்லாவற்றையும் வாங்கி கொண்டு,மீதமுள்ள மற்ற வீட்டுக்கு சாமான்களும், காய்கறிகளும்,பழங்களும், வாங்கி கொண்டு வருகையில் மணி இரவு எட்டு ஆயிற்று.

அம்மா ஆவலுடன், எங்கள் வருகைகாக காத்துக் கொண்டிருந்தார்கள்.அம்மாவிடம் எல்லா உடைகளையும் காண்பித்துவிட்டு,எனக்கும், அம்மாவுக்கும், ப்ளீஸ் மற்றும் பாவாடைகளை தைக்க வேண்டி துணி எடுத்து வந்துள்ளதால், அதை தையல் கடைக்கு கொடுக்க வேண்டும் என அப்பா கூறியதும்.

“நம் வீட்டு எதிரேயே தையற்கடை இருக்கிறது.நம் நிலைமையை அவரிடம் சொன்னால், உடனே தைத்து கொடுத்து விடுவார் என நினைக்கிறேன்.ஏன் என்றால் நாம் வந்தது முதல், அந்த தையற் கடைகாரர் நம் வீட்டில் நடப்பதை எல்லாம் பார்த்துக்

கொண்டே இருப்பதை நான் கவனித்துவருகிறேன்."என்றார்கள் அம்மா.

"அனிதா,நீ போய் அந்த தையற்காரரிடம் அம்மாவின் ப்ளௌஸ் அளவை எடுத்துச் செல்ல முடியமா?என கேட்டு வரியா?"என அப்பா என்னை அனுப்பவே ,நான் வீட்டு எதிரே இருந்த தையர்கடைக்கு சென்று.

"அம்மாவுக்கு உடனடியாக நாளைக்கே போட்டுக் கொள்ள ப்ளௌஸ் தேவைபடுகிறது.அம்மாவால் நடந்து வரமுடியாது.நீங்கள் வந்து அளவெடுத்துச் செல்லமுடியுமா?"என்று கேட்டேன்

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு இருந்த அந்த தையற்கடைகாரர் ஓரளவுக்கு, எங்கள் நிலையை, ஒரு மாதிரியாக புறிந்து கொண்டவர் போல "சரி பாப்பா"நீ போ,நான் இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன்"என்று என்னை அனுப்பிவிட்டு, அங்குள்ள வேலை செய்யும் பையனிடம் கடையை பார்த்துக் கொள்ள

சொல்லிவிட்டு எங்கள் வீடிற்கு வந்தார்.

“ஒரே ஒரு ப்ளைஸ் மட்டும் இன்றிரவே தைத்து கொடுத்தால் ரொம்ப உதவியாக இருக்கும்.மீதி எல்லாம் ஓவ்வொன்றாக தைத்து விரைவில் கொடுத்தால் மிகவும் உதவியாகவே இருக்கும்.”என அம்மா கெஞ்சுவது போல கேட்டதும்.

“நிச்சயமாக இன்னும் ஒரு மணி நேரத்தில் தைத்து கொடுத்து விடுகிறேன்.மீதமுள்ள துணிகளையும் இரண்டு நாளில் தைத்து கொடுத்து விடுகிறேன்.கவலைபடாதீர்கள்.”என கடைக்காரர் மிகவும் கனிவுடன் கூறிவிட்டு, அம்மா மற்றும் என் ப்ளைஸ் அளவுகளை எடுத்துக் கொண்டு ,தைக்கவேண்டிய துணிகள் அனைத்தையும் தன்னுடன் எடுத்துச் சென்றார்.அவர் சென்றதும் அம்மா,அப்பாவிடம் “இவ்வளவு பணத்திற்கு என்ன செய்தீர்கள் என்று கேட்கவே,

“நல்ல காலம் ,நான் என் ஜெனரல்

பிராவிடண்ட் பண்டிலிருந்து லோன் ரூ 5000/-மும்,என் சம்பளதிலிருந்து அரியர்ஸ் ரூ 5000/- மும் மொத்தம் ரூ 10,000 பணமாக என் கையில் வைத்திருந்தேன்.நீ கூப்பிட்டது ம், அந்த பணத்தை என்னுடன் எடுத்து வந்து விட்டேன் இல்லை என்றால், என்னால் இவ்வளவும், இன்று செய்திருக்க முடியாது.எல்லாம் நம் நல்ல காலம்தான் என்றார்கள் அப்பா.

பிறகு நானும், அப்பாவும் சமயலறைக்குச் சென்று, இரண்டு அடுப்பிற்கும் கெரோசின் ஊற்றி,அதற்காக வங்கி வந்திருந்த திரியை போட்டு ,சமயல் செய்வதற்காக தயார் ஆகும் சமயம் ,வெளி ரூமிலிருந்து அம்மாவின் குரல் கேட்டது.

“நான் எதுவும் உதவி செய்யவா?”என்றார்கள்.

“ரவா உப்புமாதான் இப்போதைக்கு எனக்கு செய்ய தெரியும்.ரவா உப்புமா செய்கிறேன். அதற்கு சர்க்கரையை போட்டு இன்றிரவு சாப்பிட்டுவிடலாம்.ஹோட்டலில் இருந்து

மத்தியானம் வாங்கிய சாப்பாடு வேறு மீதி இருக்கிறது. அதையும் சூடு செய்கிறேன்.எல்லா வற்றையும் முடித்துவிடலாம்.இப்போதைக்கு உதவி எதுவும் தேவை இல்லை”என அப்பா கூறினார்கள்.

“நான் பச்சை மிளகாய் வெட்டி தருகிறேன்.நீங்கள் ரவாவை வருத்துக் கொண்டிருங்கள்.”என்றார்கள் அம்மா.அப்பாவும்,அம்மா வெளி ரூமில் சும்மா உட்கார்ந்திருப்பதருக்கு பதில், சமயலறையில் எங்களுடன் இருந்தால் நன்றாக இருக்கும் என எண்ணியதால்,அப்பா முன் ரூமிற்கு சென்று, ,அம்மா சமயலறையில் உட்காருவதற்காக ஒரு நாற்காலியையும்,ஸ்டூலையும் கொண்டுவந்து போட்டார்கள்.பிறகு அம்மாவை மெதுவாக நான் அழைத்து சென்று சமயலறையில் இருந்த நாற்காலியில் உட்காரவைத்ததும்,அப்பா அவர்களிடம் வெங்காயத்தையும்,பச்சை மிளகாயையும் கொடுத்து வெட்டித்தரச் சொன்னார்கள்.அம்மா ,அவைகளை எல்லாம் வெட்டி முடிப்பதற்குள் ,அப்பா

ரவாவையும்,முந்திரிபருப்பையும் வறுத்து எடுத்துவிட்டு, பின் உப்புமாவை செய்து முடித்தார்கள்.

புதியதாக வாங்கி வந்திருந்த எவர்சில்வர் தட்டில், எங்கள் அனைவருக்கும் உப்புமாவை போட்டு,தொட்டுக்கொள்ள சர்க்கரையை கொஞ்சம் வைத்து,கடையிலிருந்து வாங்கி வந்திருந்த உருளைகிழங்கு சிப்சை வைத்து கொடுத்ததும், சமயலறையிலேயே அம்மா நாற்காலியில் உட்கார்ந்திருக்க,அம்மாவிற்கு முன்னால் எல்லோரும் கீழே தரையில் உட்கார்ந்து ஒன்றாக சாப்பிட்டு முடித்தோம்.உப்புமா மிகவும் சுவையாக இருந்தது.அம்மாவே அசந்துபோய் விட்டார்கள்.

முதல் முறையாக எங்கள் வாழ்வில் நாங்கள் ஆறு பெரும் ஒன்றாக வேலைசெய்து ,ஒன்றாக சமைத்து, ஒன்றாக ஒரே இடத்தில் தூங்கினோம்.

“எப்படி இவ்வளவு சுவையாக சமைக்க கற்று

கொண்டீர்கள்?"என அம்மா ஆச்சரியமாக கேட்டார்கள்.

"இரண்டு வருடம் ரூமில் தனியாக தங்கியிருந்ததால் உப்புமாவும்,பூரியும்,உருளை கிழங்கு மசாலாவும், ரவா கேசரியும் செய்து அடிக்கடி சாப்பிட்டு வந்ததால், அது மட்டும் நன்றாக செய்ய கற்றுக் கொண்டேன்."என்றார்கள் அப்பா சிரித்துக் கொண்டே

அந்த சிறிய வீட்டில், எந்தவித வசதியும் இல்லாமல்,வேலைக்காரர்களும் இல்லாமல்,எளிய முறையில், எளிய சாப்பாடு சாப்பிட்டாலும், குடும்பமாக ஒரே இடத்தில், ஒன்றாக சமைத்து சாப்பிடுவது போல இருக்கும் ஆனந்தத்திற்கு ஈடு இணையே இவ்வுலகத்தில் எதுவும் இல்ல என்றே கூறவேண்டும்.

அனைவரும் சாப்பிட்டு முடித்ததும், அப்பா எல்லா பாத்திரங்களையும் கழுவி சுத்தம் செய்து.,சமையலறையையும் துடைப்பத்தை

எடுத்து பெருக்கி சுத்தம் செய்து விட்டு, முன் அறைக்கு வரும் பொது இரவு பத்து மணி ஆகிவிட்டது.அனைவரும் மிகவும் களைப்புடன் இருந்தோம்.அம்மா அவர்கள் கட்டிலில் உட்கார்ந்திருந்தார்கள்.அப்பா எங்கள் ஐந்து பேருக்கும், அம்மா படுத்திருக்கும் கட்டிலின் அருகிலேயே படுக்கையை போட்டு, வாரிசையாக எங்களை படுக்கச் சொன்னார்கள்.அச்சமயம் எதிர்வீட்டு தையற்காரரும் , எங்கள் ப்ளைஸ் ஒன்றை தைத்து கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் “எல்லா துணிகளையும் தைத்து முடித்தவுடன் மொத்தமாக பணத்தை கொடுங்கள் .இப்போது ஒன்றும் அவசரமில்லை”என கூறிவிட்டு சென்றார்.

நாங்கள் ஆறு பேரும் படுத்துக் கொண்டோம்.”இந்நேரம் என் அக்காவும்,பெற்றோர்களும் வீடு திரும்பி இருப்பார்கள் என நினைக்கிறேன்.நானும் குழந்தைகளும் இல்லாதது பார்த்துவிட்டு, வீட்டில் வேலை செய்பவர்களையும் ,அவள்

கணவனையும் திட்டி ரகளை செய்து கொண்டிருப்பாள் அக்கா"என்றார்கள் அம்மா.மேலும் தொடர்ந்தார்கள்.

"அவள் எப்படியாவது நம் வீடு கண்டுபிடித்து வந்துவிட்டால் என்ன செய்வது?.இப்ப வராவிட்டாலும்,பள்ளிக்கூடம் திறந்ததும்,அங்கு வந்து என்னை திட்டுவாள் அல்லது நாளையே சென்று என்னை மறுபடியும் எங்காவது ஊருக்கு மாற்றல் செய்து விட்டால், மறுபடியும் நாம் கஷ்டபடவேண்டுமே"என அம்மா கவலையுடன் கூறவே,

"நீ ஏன் இதுபற்றி எல்லாம் இப்போது வீணாக கவலைப்பட்டு கொண்டிருக்கிறாய்.நிம்மதியாக தூங்கு.நாளை காலையில் எழுந்ததும் நான் சமைத்துவிட்டு ,முதல் வேலையாக அவள் உன்னை ஊரை விட்டு மாற்றாமல் இருக்க ,தலைமை அலுவலகம் சென்று இயக்குனரை பார்த்து எச்சரிக்கை கடிதம் ஒன்றை கொடுத்துவிட்டு.என் மார்க்கரை அனுப்பி உங்கள் அனைவரது பெட்டிகளை அவள்

வீட்டிலிருந்து எடுத்துவரச்
சொல்லிவிடுகிறேன்.நீயுன், உன்
பெற்றோரோகளுக்கு இப்பவே ஒரு கடிதம்
எழுதி என்னிடம் கொடு ,அதையும் மார்கரிடம்
கொடுத்து அனுப்பி, அவர்களிடம்
கொடுத்துவிட்டு வரச்
சொல்லுகிறேன்."என்றார்கள் அப்பா

மேலும் ஒரு பேப்பரையும் ,பேனாவையும்
அம்மாவிடம் கொடுத்து எழுதச்
சொன்னார்கள்.எங்களுடைய
பர்நீச்சரஸ்,நகைகள்,பாத்திரங்களையும்,மற்ற
உடமைகளையும் உடனடியாக லாரியில ஏற்றி
இங்கு அனுப்பிவிட்டால், அந்த செலவை லாரி
டிரைவரிடம் இங்கு வந்து திங்க்ஸ் இறங்கியதும்
கொடுத்துவிடுகிறோம் எனவும்,இனி உங்கள்
சொத்திலும்,பணத்திலும் எனக்கு ஒரு பைசாகூட
பங்கு தேவை இல்லை எனவும் ,இனி எங்கள்
குடும்ப விஷயத்தில்அங்குள்ளவர்கள் யாரும்
தலை இட கூடாது என்றும், பெரியம்மா சேது,
எந்த காரணத்தைக் கொண்டும் அம்மாவை
பள்ளிகூடத்திற்கோ,அல்லது வேறு எங்காவதோ

பார்த்து பேசவ கூடாது என்றும்,தாத்தா,பாட்டி கூட எங்கள் வீட்டிற்கு வரக்க கூடாது என்றும் அப்பா அம்மா இருவரும் எழுதுவது போல எழுதி ,இருவரும் கையெழுத்து இட்டுவிட்டு ,அதை ஒரு கவரில் போட்டு விட்டு, பின் அப்பா விளக்கை அணைத்துவிட்டு படுத்துவிட்டார்கள்.

அன்று அனைவரும் நன்றாக தூங்கினோம் என்றே சொல்லவேண்டும்.மறுநாள் காலையில் கண்விழித்தபோது, சமயலறையில் அம்மா நாற்காலியில் உட்கார்ந்தபடி, ஸ்டூலில் காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தார்கள்.அப்பா அடுப்பில் ஏதோ சமைத்துக் கொண்டிருந்தார்கள்.நான் பாத்ரூமிற்கு சென்றபோது ,இரண்டு பெரிய டிரம்மிலும் தண்ணீர் புதிதாக நிரப்பபட்டிருந்தது.நான் பல்விளக்கிவிட்டு வந்ததும், அப்பா என்னிடம் சுடசுட கொடுத்த காப்பிய வாங்கி குடித்தேன்.அப்பா சாம்பார்,ரசம் மற்றும் உருளை கிழங்கு பொறியல் மற்றும் சாதம் சமைத்துக் கொண்டிருந்தார்கள்.

காலையில் டாய்லேட் போவதை நினைக்கையில் எங்கள் அனைவருக்கும் மிகவும் கஷ்டமாக இருந்தது.இப்படிப்பட்ட டாய்லெட்டை இப்போதுதான் முதல் தடவையாக நாங்கள் பார்ப்பதுடன் இல்லாமல்,அதை உபயோகம் பண்ணவும் வேண்டிய நிலை.மூக்கை பிடித்துக் கொண்டு,கண்ணை இருக்க முடிக் கொண்டே அதற்குள் சென்று வந்தோம் ,நாங்கள் நால்வரும்.

அம்மா குளிப்பதற்கென பாத்ரூமில், ஒரு ஸ்டூலை ,அப்பா வாங்கி வந்து போட்டிருந்தார்கள்.அனைவரும் எழுந்து பல்விளக்கி காப்பி குடித்து முடித்தவுடன் ,அப்பா எங்கள் நாலு பேரையும் ஒருவர் பின் ஒருவராக குளித்துவிட்டு வருமாறு சொன்னார்கள்.நாங்கள் ஒவ்வொருவரும் குளித்துமுடித்து வந்ததும், அப்பா கிணற்றிலிருந்து தண்ணீரை கொண்டுவந்து நிரப்பிக் கொண்டே இருந்தார்கள்.

எல்லோரும் குளித்து முடிக்கையில், அப்பாவும்

சமையலை முடித்துவிட்டு பத்திரங்களை கழுவி,சமையலறையை பெருக்கி சுத்தம் செய்துகொண்டே “அனிதா அம்மாவையும் மெதுவா பாத்ரூமில் சொண்டு வந்து உட்காரவைத்து, குளிக்க உதவி செய்து, உள்ளே அழைத்துவந்து, அம்மா புடவை கட்டவும் உதவி செய்”என்றார்கள் .

“சரி அப்பா”என கூறிவிட்டு,அம்மாவிற்கு தேவையான துணிமணிகளை எடுத்துச் சென்று பாத்ரூமில் வைத்தேன்.அப்பாவும்,அம்மாவை மெதுவாக நடத்தி அழைத்து வந்து பாத்ரூம் ஸ்டூலில் உட்காரவைத்த்வுடன்,நான் அம்மாவின் உடம்பில் தண்ணீரை ஊற்றி சோப்பு போட்டு தேய்த்து குளிப்பாட்டி , உடலை துண்டால் துடைத்தவுடன், அம்மா மெதுவா சுவற்றை பிடித்துக் கொண்டு எழுந்து நிற்க, பாவாடையும்,ப்ளௌசும் மாட்டிவிட்டு,புடவையை மேலே போர்வை போல போர்த்தியபடி பாத்ரூமிலிருந்து மெதுவாக என் தோளில் தாங்கிய வண்ணம், சமையறைக்கு அழைத்து சென்றேன்.அங்கே அம்மாவிற்கு, புடவை கட்ட

உதவி செய்துவிட்டு, வீட்டின் முன்புற ரூமிற்கு அழைத்துச் சென்று, சீப்பை எடுத்து தலைவாரி, பின்னிவிட்டு, படுக்கையில் உட்காரவைத்தேன்.

அப்பாவும் குளித்துவிட்டு வந்தவுடன் , காலை 10:30 மணி ஆயிற்று.மறுபடியும் அப்பா எங்கள் அனைவரையும் சமயலறையில் உட்காரவைத்து சாப்பாட்டை பரிமாறிவிட்டு, தானும் எங்களுடன் உட்கார்ந்து சாப்பிட்டு முடித்து, பாத்திரங்களை கழுவி,மறுபடியும் சமையலறையை சுத்தம் செய்துவிட்டு ,எல்லோருமா முதல் ரூமிற்கு வந்ததும்.அப்பா சற்று நேரம் நாற்காலியில் உட்கார்ந்து சாவகாசமா ,ஒரு சிகரெட்டை பற்ற வைத்து அதை முழுக்க முடித்தவுடன்,எழுந்து பாண்ட்,சட்டையை மாட்டிக் கொண்டு, :ஐந்து பேரும் வீட்டினுள் தாள் போட்டுக் கொண்டு பத்திரமாக் இருங்கள்.வெளியே எங்கும் போகாதீர்கள்.அம்மாவை விட்டுவிட்டு."என்று கூறவிட்டு வெளியே கிளம்பி சென்றுவிட்டார்கள்.

எனக்குள் எதோ மறுபடியும் ஒரு பீதி ஏற்பட்டது.பெரியம்மா எங்கள் பெட்டிகளை கொடுப்பார்களா?தாத்தா ஊரிலிருந்து எங்கள் பர்னீச்சர்களை அனுப்புவார்களா?,பெரியம்மா ,மறுபடியும் அம்மாவை வேறு ஊருக்கு மாற்றிவிடுவார்களா?,பாவம் தாத்தாவும்,பாட்டியும்,இனி அவர்களை நாம் பார்க்க போவதில்லையா?அப்பா சாயங்காலம் வீட்டிற்கு வந்ததும் எல்லாம் விவரமாக தெரிந்துவிடும்.

நாங்கள் நால்வரும் வீட்டைவிட்டு வெளியே எங்கும் போகாமல் கதவை உள்ளே தாளிட்டுவிட்டு அம்மாவின் அருகில் உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டும்,சீட்டு விளையாடிக் கொண்டும் இருந்தோம்.சரியாக மாலை நாலு மணிக்கு அப்பா வாசற் கதவை தட்டியது கண்டதும் ,அனைவரும் ஆவலுடன் கதவை திறந்தபோது ,அப்பா டாக்சியில் எங்களது பெட்டிகளுடன் , வந்திருந்தது கண்டு அனைவருக்கும் தாளமுடியாத மகிழ்ச்சி.இனி துணிமணிகளுக்கு கவலை இல்லை.இனிமேல்

தாத்தா பர்நீச்சர்களை அனுப்பினால், இந்த வீட்டில், அவைகளை வைப்பதற்கு இடமே இல்லையே என்ற கவலை எங்களுக்கெல்லாம் எழுந்தது.

“போய் அப்பாவிற்கு உதவியாக பெட்டிகளை எல்லாம் எடுத்து வாங்க”என அம்மா எங்கள் முவரையும் சொன்னதால், நாங்க முன்று பேரும் ஓடிச் சென்று அவரவர் பெட்டிகளை எடுத்துவந்து, உள் அறையில் ஒரு முலையில் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைத்தோம்.அப்பா ,ப்ரெட்,ஜெல்லி,பட்டர் மற்றும் பிஸ்கட் சாப்பிடுவதற்காக வாங்கி வந்திருந்தார்கள்.டாக்சியை அனுப்பிவிட்டு உள்ளே வந்த அப்பா, நேரே சமயலறைக்கு சென்று, எங்களை அனைவருக்கும் வெஜிடேபிள் சான்ட்விச்-அம்மாவிர்க்கு தக்காளி பழ சூப்பும் செய்து வெளியே ஹாலுக்கு கூண்டுவந்து வைத்துவிட்டு சாப்பிடச் சொன்னார்கள்.

“அக்கா என்ன சொன்னாளாம்?’என்று கேட்டார்கள் அம்மா.

“என் பியூனை அனுப்பினேன் .அவன் கொண்டு சென்று கொடுத்த கடிதத்தை வேலையாளில் ஒருவர் வாங்கி கொண்டு போய், பெட்டிகளை கொண்டு வந்து கொடுத்து விட்டார்களாம்.

“என் பெற்றோர்களை உங்கள் பியூன் பார்த்தானா?”என மறுபடியும் அம்மா கேட்டதற்கு,

“இல்லையாம்,யாரையுமே பார்க்கவில்லையாம்.லெட்டரை வாங்கி கொண்டு வேலை ஆள் ,பெட்டியை கொடுத்தனுப்பிவிட்டார்களாம் .”என்றார்கள் அப்பா.

“நான் என் லெட்டரில்தான் ரொம்பவும் கண்டிப்பாக எழுதி அனுப்பியிருந்தேனே.என் அனுமதி இல்லாமல் என் மனைவியை வேறு ஊருக்கு மாற்றல் செய்தலோ, வந்து பார்த்து தொந்தரவு செய்தாலோ,கோர்டில் கேஸ் போட்டுவிடுவேன் என்று.எனவே அவளுக்கு கொஞ்சம் பாயம் இருக்கும். இனி அவள்

உன்னை ஏதும் தொந்தரவு செய்ய மாட்டாள் என்றே நினைக்கிறேன்.வீட்டிலும் பத்திரமாக இரு.,நான் இல்லாத சமயம். பக்கத்து வீட்டு கிரிஜாவிடம் சொல்லியிருக்கிறேன் நான் இல்லாத சமயம் யார் வந்தாலும் அவர்களை வைத்துக்கொண்டுதான் உன்னிடம் பேசவேண்டும் என்று"என அப்பா, அம்மாவிடம் கூறினார்கள்.

அப்பா செய்த வெஜிடபிள் சான்ட்விச் மிகவும் நன்றாகவே இருந்தது.டொமேடோ சூப்பும் மிக பிரமாதமாக இருந்தது என பாராட்டினார்கள் அம்மா.அனைவரும் சாப்பிட்டுவிட்டு பெட்டிகளிலிருந்து துணிமணிகளை எடுத்து அடுக்கி, அந்த உள்ள உள்ளறையில் இருந்த ஷெல்பில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தோம்.அப்பா தபால் ஆப்பீசுக்கு சென்று ஸ்டாம்ப்,மற்றும் எழுதுவதற்கான கடிதம் முதலியவற்றை வாங்கி வந்திருந்தார்கள்.

அம்மாவிடம் ஒரு நீண்ட பேப்பர்யையும் ,பேனாவையும் கொடுத்து,தாத்தா ஈஸ்வரனுக்கு

ஒரு நீண்ட கடிதத்தை எழுதச் சொன்னார்கள் .அப்பா சொன்னதை அப்படியே அம்மா எழுதினார்கள்.அந்த கடிதத்தில் எங்கள் வீட்டிலிருந்து எடுத்துச் சென்ற பர்நீச்சர்களையும்,நகைகளையும்,உடனடியாக அனுப்பிவைக்கும்படியும்,இனி எங்கள் குடும்பத்திர்க்கும், அவர்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும்,அவர்கள் யாரும் இனி எங்களை யாரையும் பார்க்க வரக்கூடாது என்றும்,அவர்களது சொத்து,பணம் எதுவுமே ஒரு பைசாகூட தனக்கு வேண்டாம் எனவும் எழுதிசொல்லிவிட்டு கையெழுத்திடச் சொல்லி பேப்பேரை மடித்து என்வேலபில் போட்டு அதை ஒட்டி,ஸ்டாம்ப்ஐயும் ஒட்டி மறுநாள் தபால் ஆப்பீசில் போஸ்ட் பண்ணுவதற்கு தயாராக வைத்துவிட்டு,இரவு சாப்பாடு தயார் செய்ய மறுபடியும் சமயலறைக்கு அனைவரும் சென்றோம்.

இரவு பூரியும்,உருளைகிழங்கு மசாலாவும் செய்ய போவதாக கூறிவிட்டு,அங்குள்ள கூடையிலிருந்த உருளை கிழங்கு,வெங்காயம்,பச்சை

மிளகாயையும் அம்மாவிடம் ஸ்டூலில்
வைத்துவிட்டு,அம்மா உருளை கிழங்கை
வெட்டும் வரை,அப்பா கோதுமை மாவை
பிசைய ஆரம்பித்தார்கள்.அம்மாவின்
உதவியுடன், அப்பா உருளை கிழங்கு
மசாலாவும்,பூரியையும் செய்து
முடித்ததும்,அனைவரும் சமலறையில்
உட்கார்ந்து, சுடசுட சாப்பிட்டுவிட்டு
,சமையலறையை சுத்தம் செய்து விளக்கை
அணைத்துவிட்டு,முதல் ரூமில் வந்து
உட்கார்ந்தோம்.இரவு 9:30
ஆயிற்று.இரண்டாவது ரூம்
,சமயலறைக்கும்,முதல் ரூமிற்கும் நடுவில்
இருப்பதால், அந்த இரண்டாவது ரூம் எப்பவுமே
இருட்டாகவே இருக்கும்.எனவே அதை
சாமான்கள் வைக்கும் அறையாக வைத்துக்
கொண்டோம்.முதல்
ரூமிலும்,சமயலறையிலும்தான் நாங்கள்
அனைவரும் பெரும்பாலான நேரத்தை
கழித்துவந்தோம்.

பள்ளிக்கூடம் திறக்க இன்னும் ஒருவாரமே

இருந்தது.சிதம்பரத்திலிருந்து மாற்று சான்றிதழ் உடனடியாக வாங்கி அனுப்புமாறு ஏற்கனவே தாத்தாவிற்கு எழுதிய கடிதத்திலும் குறிப்பிட்டு இருந்தபடியால், எப்படியும் தாத்தா நிச்சயமாக வாங்கி அனுப்பிவிடுவார்கள் என்ற நம்பிக்கையில், மறுநாள் எங்களை ஸ்கூலில் சேர்க்க விண்ணப்பத்தை பூர்த்தி செய்துவர அப்பா அம்மாவிடம்,

“நான் ஷானையும்,பாட்டையும் நாளை காலை இங்குள்ள ஆண்கள் உயர்நிலை பள்ளிக்கு அழைத்துச் சென்று பதிவு செய்துவிட்டு மாற்று சான்று கூடிய விரைவில் கொடுத்துவிடுவதாக சொல்லிவிட்டு வருகிறேன்.நீ அணிதாவுடனும்,ஆனஹியுடனும் உன்னுடைய பள்ளிகூடத்திற்கு சென்று அனிதாவை உன் ஸ்கூலிலேயே பதிவு செய்துவிட்டு”என்றார்கள்.

“அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை .நான் பார்த்துக் கொள்கிறேன் அதை.எனக்கும் வெளியே போய் வருவது சற்று மாறுதலாக இருக்கும்”என்றார்கள் அம்மா.

“பசங்களா நாளைக்கு காலையில் எல்லோரும் சாப்பிட்டுவிட்டு கிளம்பிவிட வேண்டியதுதான்.காலையில் நான் எழுப்பிவிட்டதும் நாலு பேரும் சண்டை போடாமல் மளமளவென குளித்து தயாராகிவிடுங்கள்.அதற்குள் நான் சமைத்து முடித்து விடுகிறேன்.பிறகு அனிதா,நீயும்,அம்மா குளிக்க உதவி செய்து,அம்மாவை சாப்பாட்டுக்கு முன் ரெடி பண்ணிவிட உதவி செய்”என அப்பா எங்களிடம் கூறிவிட்டு அனைவரையும் படுத்து தூங்கச் சொல்லிவிட்டு தானும் மிக களைப்பாக இருக்கிறது என விளக்கை அணைத்துவிட்டு படுத்துக் கொண்டார்கள்.

காலையில் அனைவரும் எழுந்திருக்கும் முன்னே அப்பா எழுந்திருந்து கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து பாத்ரும் டிரம்மில் இரண்டிலும் நிரப்பி,சமயலறையிலும் எல்லா பகேட்டிலும்,குடத்திலும் நிரப்பி இருந்தார்கள்.நாங்கள் அனைவரும் ஒவ்வொருவராக குளித்து முடிக்கையிலும், அப்பா கிணற்றிலிருந்து தண்ணீரை

கொண்டுவந்து நிரப்பிய வண்ணம் இருந்தார்கள்.எல்லோரும் குளித்து முடிக்கையில், அம்மா சமயலறையில் அப்பாவிற்காக உதவி செய்து முடித்திருந்தார்கள்.பிறகு அம்மாவையும் குளித்து உடை மாற்றி நான் தாயாராக்கி வைத்துவிட்டு ,அனைவரும் சாப்பிட்டுவிட்டு முடித்ததும் “நீயும் ,அனிதா,ஆனஹியுடன் ரிக்ச்ஷாவில் ஸ்கூலுக்கு போய் விடுங்கள்.நான் மீதி வேலையை முடித்துவிட்டு ஷானையும்,பாட்டையும் அழைத்துக் கொண்டு இன்னும் அரை மணி நேரத்தில் சென்று விடுகிறேன்”என அப்பா கூறிவிட்டு”ஷான் இந்த தெருமுனையில் ஏதாவது ஒரு சைக்கில் ரிக்ஷாவை தி.நகர் ஸ்கூலுக்கு போகவேண்டுமென கூறி அழைததுவா”என்றார்கள் அப்பா.

ஷான் ஓடிச் சென்று சைக்கில் ரிக்ஷாவை அழைத்துவந்திருந்தான்.நான் ஆனஹியை முதலில் அதில் ஏற்றி உட்கார சொல்லிவிட்டு,பிறகு ஒரு பக்கம் அப்பாவும், ஒரு பக்கம் நானுமாக அம்மாவை தாங்கி பிடித்து அழைத்துவந்து ரிக்ஷாவில் உட்காரவைத்தோம்.

“என் மனைவிக்கு இறங்க கஷ்டபடுவாங்க.நீயும், என் பெண்ணுக்கு உதவியாக அவர்கள் ஸ்கூலுக்குள் இறக்கிவிட உதவி செய்ய முடியுமா?”என அப்பா கேட்டதும் ,ரிக்ஷாகாரர் “அதனால் என்ன சார்,அம்மாவை இறக்கிவிட்டு காத்திருந்து வேண்டுமானால் திரும்பவும் அழைத்துவந்து விட்டுவிட்டு போகிறேன்”என்றார் அந்த நடுத்தர வயது ரிக்ஷா ஓட்டுபவர்.

“எப்ப திரும்புவாங்க என தெரியாது.நீ விட்டுவிட்டால் போதும். ஸ்கூல் திறந்தவுடன் வேண்டுமானால், நீ இவர்களை காலையில் ஸ்கூலில் விட்டு விட்டு சாயந்தரம் அழைத்துவந்து வீட்டில் விட்டு விடு தினமும்.மாதம் எவ்வளவு இதற்கு எதிர்பார்க்கிராக் என்பதை பிறகு பேசி கொள்ளலாம்.இன்னைக்கு அதை பேசவேண்டும் என்பதில்லை”என்றார்கள் அப்பா.

“சரி,சார்.அம்மா திரும் வரும் சமயம் நான் அங்கே சவாரி கிடைக்காமல் இருந்தால் திரும்ப

அழைத்து வந்து விட்டு விடுகிறேன்.மற்ற விஷயங்களை பிறகு வந்து பேசிக் கொள்கிறேன்."என கூறிவிட்டு எங்களை ஏற்றியபடி சைக்கில் ரிக்ஷாவை கஷ்டப்பட்டு மிதித்துக் கொண்டு சென்றார்.

ஸ்கூலை நாங்கள் அடைந்ததும் ,அம்மாவை அந்த ஸ்கூல் ஆப்பீசிற்கு மெதுவாக அழைத்துச் சென்றேன்.சிதம்பரத்திலிருந்து மாற்று சான்றிதழை வாங்கி கொண்டு, இங்கு வந்து சேர்ந்த அம்மா, தலை ஆசிரியை பணியில் நிறைய வேலை இருக்கும் என்பதால், தற்போதுள்ள உடல்நிலையில் ,இவற்றை எல்லாம் ,அம்மாவால் சரிவர செய்ய இயலாது என்பதாலும், உதவி தலைமை ஆசிரியையாக பணியாற்றினார்கள்

அம்மாவை கண்டதும் ஆப்பீசில் வேலை செய்பவர்கள் எல்லாம் அதிசயமாக "என்ன மேடம் விஷயம்.இப்போது வந்திருக்கிறீர்கள்:என்று கேட்டனர் .

.என் பெண்ணுக்கு இங்கே, என்னுடைய ஸ்கூலிலே சேர்த்துவிடலாம் என முடிவு செய்துவிட்டேன்.இங்கே பக்கத்திலேயே வீடு பார்த்துகொண்டு வந்து விட்டேன்.இவள் மாற்று சான்றிதழ் இன்னும் சில நாட்களில் வந்துவிடும் இவளுக்கு இந்த ஸ்கூலில் சேருவதற்கு பதிவு தாளை பூர்த்தி செய்து கொடுத்துவிட்டு போகலாம் என வந்தேன்"என்றார்கள் அம்மா.

அம்மாவுக்கு சிரமம் கொடுக்காமல் அரை மணி நேரத்தில் அந்த பள்ளிக்கூட குமாஸ்தா பெண்மணி எல்லா வேலைகளையும் தானே செய்துவிட்டு, அமமாவின் கையெழுத்து வாங்கி கொண்டு வேலையை விரைவாக முத்தத்துடன் இல்லாமல் ,எதிரிலிருக்கும் ஆரம்பபள்ளி கூடத்திலுள்ள க்ளர்க்கையும் , தனக்கு மிகவும் தெரிந்தவர் என கூறி, ஆபீஸ் பியூனை அனுப்பி ,என் தங்கை ஆனஹியின் பதிவு விண்ணப்பத்தை வாங்கிவரச் சொல்லி, அதையும் அவர்களே பூர்த்திசெய்து, அம்மாவின் கையெழுத்தை வங்கி கொடுத்தனுப்பி, விஷயத்தைமிக சுலபமாக முடித்து

கொடுத்தார்கள் .

நானும், ஆனஹியும் ஸ்கூல் விளையாட்டு மைதானத்தில் மண்ணில் உட்கார்ந்துகொண்டு விளையாடிக் கொண்டிருந்தோம்.அம்மா எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு வீட்டிற்கு கிளம்புகையில், அப்பா,அண்ணன் ஷானும் தம்பி பாட்டுடனும் நாங்களிருந்த பள்ளிகூடத்திர்க்கே வந்துவிட்டார்கள்.

“என்ன இவ்வளவு சீக்கிரமாக வந்து விட்டீர்கள்”என அம்மா கேட்டதற்கு,

“அந்த பள்ளிகூட தலைமை ஆசிரியர் என்னுடைய உற்ற நண்பர் என்பதால் போனவுடன், இவர்கள் இருவரையும் பதிவு செய்து எல்லா வேலையையும் நிமிடமாக முடித்துவிட்டோம்.இனி மாற்று சான்றிதழ்களைமட்டும்தான் நாம் ஒப்புவிக்கவேண்டும்.எனவே நேரே இங்கு வந்து ஆனஹியை பள்ளிகூடத்தில் சேர்க்க ஏற்பாடு செய்யலாம் என்று வந்தோம்”என்றார்கள்

அப்பா.

“அவள் அட்மிஷனும் முடிந்துவிட்டது நான் இப்போது வீட்டிற்கு செல்ல தயாராகிகொண்டிருந்தேன், நீங்களும் வந்துவிட்டீர்கள்”என்றார்கள் அம்மா.

பிறகு அப்பா அம்மா ஸ்கூல் தலை ஆசிரியரின் அறைக்கு சென்று நடந்தவைகளை சுருக்கமாக அவரிடம் கூறிவிட்டு, பள்ளிக்கூடம் திறந்ததும் யார் வந்து கேட்டாலும், தயவு செய்து அம்மாவை பார்க்க அனுமதிக்க வேண்டாம் ,பள்ளி கூடத்தில் எங்காவது ஒரு இடத்தில் பாதுகாப்புடன் வைத்திருக்குமாறு மிகவும் கேட்டுக் கொண்டார்கள் அப்பா.

பிறகு அம்மாவையும் ,ஆனஹியையும் ஒரு ரிக்ஷாவில் ஏற்றி அனுப்பிவிட்டு,ரிக்ஷாவிற்கு பின்னால் அப்பா,ஷான்,பாட்,மற்றும் நான் ,நாலுப் பேரும் நடந்து வீடு வந்து சேர்ந்தோம்.வீட்டிற்கு வருகையில், பிற்பகல் மணி இரண்டு ஆயிற்று.அப்பா மறுபடியும்

மீதியிருந்த ப்ரெட் ஸ்லைசை வெஜிடபிள் சான்ட்விச் செய்து எங்களுக்கெல்லாம் கொடுத்துவிட்டு ஆரஞ்சு பழத்தை பிழிந்து அம்மாவிற்கு ஜூஸ் போட்டு கொடுத்துவிட்டு, எங்கள் அனைவருக்கு பால்பவுடரை சுடுதண்ணீரில் கலந்து அதில் டீ போட்டு கொடுத்தார்கள்.டீ மிகவும் நன்றாகவே இருந்தது

அம்மா போட்ட கடிதத்தை பார்த்தவுடன் ,தாத்தா தாமதிக்காமல் எங்கள் நாலுபேரின் மாற்று சான்றிதழ்களை உடனடியாக அவசர தபால் முலமாக அனுப்பிவைத்திருந்தார்கள்.பள்ளிக்கூடம் திறக்கும் இரண்டு நாட்களுக்கு முன்பெ எல்லாம் கிடைத்துவிட்டது.அப்பா உடனடியாக எடுத்துக் சென்று எங்கள் நால்வரின் ஸ்கூலிலும் அதை கொடுத்துவிட்டு, எங்கள் அட்மிஷன் விவகாரத்தை முடித்து, ஒருவழியாக உறுதி செய்து விட்டு ,பீசையும் கட்டிவிட்டு வந்துவிட்டார்கள்.எங்கள் மாற்று சான்றிதழ்கள் அனைத்தும் அப்பாவின் முன்பு தங்கி இருந்த ஹோட்டல் முகவரிக்கே

அனுப்பபட்டிருந்தது.எங்கள் வீட்டு முகவரியை அப்பா அவர்கள யாருக்குமே கொடுக்கவில்லை.மேலும் அவர்கள் யாரும் எங்களை பார்க்க எங்கள் ஸ்கூலுக்கு வந்தால் அப்பாவின் உத்தரவு இல்லாமல் அவர்களுடன் பேசவோ,பார்க்கவோ கூடாது என நிச்சயமாக எங்களிடம் கூறிவிட்டார்கள் அப்பா.

மேலும் சனிகிழமை,ஞாயிற்று கிழமைகளிலும் எங்களை வீட்டிலிருக்க வேண்டாம் என நினைத்து,சனிகிழமை காலை சாப்பாட்டிற்கு பிறகு எங்கள் தெருவிலிருந்து ஐந்து தெருக்கள் தள்ளி குடியிருந்த ,அப்பாவின் அக்கா ரோஜி அத்தையின் வீட்டிற்கு சென்று விட்டுவிட்டு இரவு அப்பா வீடு திரும்பும் சமயம், எங்களையும் அப்படியே வீட்டிற்கு அழைத்து வந்து விடுவார்கள்.

பள்ளிக்கூடமும் திறந்து விட்டது.பள்ளிக்கூடம் திறக்கும் இரண்டு நாட்களுக்கு முன்பே எங்களுக்கு வேண்டிய எல்லா ஸ்கூல் புக்ஸ்,சப்லைஸ் அப்பா தயாராக வாங்கி

கொடுத்துவிட்டதால்,இனி அந்த மாத சம்பளம் வந்தால்தான் வீட்டு செலவை சமாளிக்க முடியும்.எனவே அப்பா அம்மாவிடம் ஒரு நாள் “பணம் எல்லாம் செலவாகிவிட்டது இன்னும் கொஞ்சம்தான் கையில் இருக்கிறது”என்றார்கள்.

அத்யாயம்-முப்பத்தி ஒன்பது

அம்மாவுக்கும் நிலமை புரியாமலில்லை. “என் கழுத்தில், இந்த பத்து பவுன் செயின்தான் இருக்கிறது.இதை அடகு வைத்தோ, விற்றோ, வரும் பணத்தை சம்பளம் வரும்வரை சமாளித்துக் கொள்ளலாம்”என்றார்கள்.

அப்பா மகிழ்ச்சியுடன், அந்த செயினை வாங்கி பத்திரமாக ஒரு கவரில் போட்டு மடித்து, தன் சட்டை பையில் வைத்துக் கொண்டார்கள்.

நாங்கள் தினமும் பள்ளிக்கு போவதும், திரும்பி

வருவதும்,அப்பா தினமும் விடியற்காலையில் எழுந்து ப்ரேக்பாஸ்ட் செய்து எங்களுக்கெல்லாம் கொடுத்து சாப்பிட சொல்லி விட்டு, ஸ்கூலுக்கு எங்கள் ஐந்து பேருக்கும், மத்தியானம் சாப்பாட்டை செய்து ,எடுத்துக் கொண்டு, தன் வேலைக்கு செல்லும் முன், எங்கள் ஸ்கூலிற்கு எல்லாம் வந்து கொடுத்துவிட்டு செல்வார்கள்.அதேபோல சாயங்காலம் ஏழுமணி போல வீட்டிற்கு வந்து ,எங்களுக்கெல்லாம் இரவு சாப்பாட்டை சமைத்து போடுவார்கள்.தினமும் இரவில் ரவா உப்புமா,அரிசி உப்புமா,பூரி,உருளைகிழங்கு மசாலா இவைகள்தாம் இருக்கும்.சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும், முதல் ரூமில், ஒரு பெரிய தட்டில் வெஜிடபிள் சான்ட்விச் எங்களுக்காக காத்துக்கொண்டிருக்கும்.அப்பா அவற்றை காலையிலேயே வேலைக்கு போகும் முன், செய்து செய்து வைத்து விட்டு, அதை மூடிவிட்டு ,ஹாலில் வைத்துவிட்டு சென்று விடுவார்கள்.வெஜிடபிள் சாண்ட்விச்தான் ,எங்கள் சாயங்காலம் ஸ்நாக்.பிளாஸ்கில் மில்க்

பவுடரால் செய்யப்பட்ட டீயும், அருகில் வைக்கப்பட்டிருக்கும்.

அப்பா காலேஜில், உடற் பயிற்சி இயக்குனராக வேலை பார்த்துவந்ததால், அந்த காலேஜி பிரின்சிபால் ரொம்பவும் நல்ல மனிதர் என்பதால், அப்பா தினமும் காலேஜுக்கு காலை 11 மணிபோல் வர அனுமதி வழங்கப்பட்டது.எங்கள் குடும்ப நிலைமை அப்பா கலேஜிலுள்ள பிரின்சிபால் மற்றும் கூட பார்ப்பவர்களுக்கும், ஓரவளவு தெரிந்திருந்ததால், அப்பா காலேஜுக்கு தாமதமாக செல்வதை யாரும் அவ்வளவாக கண்டு கொள்ளாமல், அப்பாவிற்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்கள்.

ஸ்கூலிலிருந்து வந்ததும் ,அனைவரும், அப்பா தயாராக வைத்திருந்த சாண்ட்விச்சை சாப்பிட்டுவிட்டு,பவுடர் மில்கினால் போட்ட டீயையும் குடித்துவிட்டு, சிறிது நேரம் ஓய்வு எடுத்துவிட்டு,பிறகு ஹோம்வொர்க் செய்துகொண்டும்,படித்துக் கொண்டும்

இருந்தோம்.அம்மா எங்கள் நால்வருக்கும் ஹோம்வொர்க் செய்யவும், படிப்பு சொல்லிகொடுத்துக் கொண்டும், உதவியாக இருந்தார்கள்.இப்படியாக ஒரு மாத காலம் மகிழ்ச்சியாக ஓடியது.அம்மா வீட்டார் யாரும் அதுவரை ,எந்த தொந்தரவும் கொடுக்கவில்லை.

ஒருநாள் தாத்தா ஈஸ்வரனிடமிருந்து ,அம்மாவிற்கு, ஸ்கூலின் முகவரிக்கு கடிதம் வந்திருந்தது.அம்மாவின் நகைகளை மட்டும் கொண்டுவந்து கொடுப்பதாகவும். பர்னீச்சர் எல்லாம், தாத்தா ஈஸ்வரன், அம்மாவிற்கு கல்யாண சீதனமாக வாங்கி கொடுத்தது என்பதால், அதை அவர்களே வைத்துக் கொள்ள போவதாக எழுதியிருந்தார்கள்.மேலும் நகைகளை, எங்கு வந்து கொடுப்பது எனவும் கேட்டு எழுதியிருந்தார்கள்.

அன்றிரவு அப்பா வீட்டிற்கு வந்ததும் இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு ஒன்றாக முதல் ரூமில் உட்கார்ந்திருக்கையில், அப்பாவிடம் தாத்தா எழுதிய கடிதத்தை அம்மா

காண்பிக்கவே,அந்த கடிதத்தை வாங்கி கொண்டு,அருகில் செல்பில் உள்ள , தன் ரீடிங் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு, கடிதம் முழுதும் ஒரு வரிவிடாமல் நிதானமாக படித்து முடித்துவிட்டு,"நகைகளை உன் அப்பாவோ,உன் அக்காவோ நேரே வந்து கொடுக்கக் கூடாது,குமாரியிடம் கொடுத்து புரசைவாக்காத்ததிலுள்ள, என் அம்மா வீட்டில் வந்து கொடுத்துவிட்டு போகச் சொல்லி எழுதி,ஏதாவது ஒரு விடுமுறை நாளில், அவர்கள் தேதி குறித்து எழுதினால் ,நாம் எல்லோரும், என் அம்மா வீட்டிற்கு, புரசைவாக்கத்திற்கு ,அன்று தினத்திற்கு சென்று காத்திருக்கலாம்.குமாரி வந்து நம்மிடம் நகைகளை கொடுத்துவிட்டு,அத்தாட்சி கடிதம் பெற்று செல்லட்டும் என எழுதி போடு உன் அப்பாவிற்கு"என கூறி ஒரு இன்லாண்ட் கடிதத்தையும்,பேனாவையும் கொடுத்து விவரத்தை சொல்லி எழுதச் சொல்லி, மறுநாள் தபால் ஆபீசில் போட, அதை வாங்கி தன் சட்டையில் வைத்துக் கொண்டார்கள் அப்பா.

சில நாட்களுக்கு பிறகு மறுபடியும், தாத்தா ஈஸ்வரனிடமிருந்து கடிதம் அம்மாவிற்கு ,பள்ளிகூடமுகவரிக்கே வந்தது.அம்மா எழுதியபடியே ,தாத்தா குமாரி அக்காவிடம் நகைகளை குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட மணி நேரத்தில் புரசைவாக்கத்திர்க்கு அனுப்பி வைப்பதாக எழுதியிருந்தார்கள்.

வெகு நாட்களுக்கு பிறகு, முதன்முறையாக ,அப்பாவின் பெற்றோரோகள் வீட்டிற்கு செல்ல போகிறோம்.தாத்தா சுந்தரம் இறந்து ஆறுமாதங்களே ஆயிற்று என்பதால், அந்த வீட்டில் இப்போது பாட்டி சரசாவும்,சின்ன அத்தை சாராவும் ,அவர்களுடன் சிறு வயதிலிருந்தே வளர்ந்து வந்த, பெரிய அத்தை ரொஜியின் மூத்த மகள் சீதாவும் இருந்தார்கள்.

குறிப்பிட்ட ஞாயிற்று கிழமை அன்று, அவர்கள் வீட்டிற்கு நாங்கள் அனைவரும் சென்று இறங்கியதும் ,அங்கு ஹாலிலுள்ள ஒரு பெஞ்சில், அம்மாவை சாய்ந்தாற்போல உட்கார சொன்னார்கள் பாட்டி சரசா. அப்போது தசரா

விடுமுறை என்பதால் அவர்கள் வீட்டில், மூன்று நாட்களுக்கு தங்கலாம் என்ற நினைப்புடன் அப்பா எங்களை அழைத்துச் சென்றார்கள்.

முதல் நாள் எங்களை நன்றாக கவனித்துக் கொண்டார்கள் பாட்டி.மறுநாள் விடியற்காலையில் பாட்டி சரசா அப்பாவிடம்,"தேவன்,எனக்கு உடல்நிலை சரியில்லை.எனவே என்னால் அனைவருக்கும் சமைக்க முடியாது .உன் குடும்பத்திற்கு மட்டும் நீ ஹோட்டலில் இருந்து சாப்பாடு வாங்கிக் கொள்.எங்கள் முவரை பற்றி கவலைபடாதே.என்னால் முடித்தவரை எங்கள் முவருக்கும் சமைத்து ,எங்களை பார்த்துக் கொள்கிறேன்."என்றார்கள் முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு .மேலும் உள்ளிருந்து பிளாஸ்க் ஒன்றையும்,ஐந்து அடுக்கும் சாப்பாட்டு காரியரையும் அப்பாவிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள் பாட்டி சரசா.

அத்தை சாரா எதுவும் தெரியாதது போல இருந்துவிட்டார்கள்.

காலையில் காப்பி முதல் ,இரவு சாப்பாடுவரை எல்லாவற்றையும் ஹோட்டலில் இருந்து வாங்கிவந்தார்கள் அப்பா.நாங்கள் ஆறு பேரும். அந்த வீட்டில் முன்புறம் உள்ள விறாண்டாவில் உட்கார்ந்துகொண்டு சாப்பிட்டோம்.அந்த விராண்டாவிலே படுத்து உறங்கினோம்.முன்றாம் நாள் மாலை ஆறு மணி அளவில், தாத்தா ஈஸ்வரன் கடிதத்தல் குறிப்பிட்டிருந்தபடி சரியான மணிக்கு ,குமாரி அக்காவிடம் நகைகளை கொடுத்து பெரியம்மாவின் காரில் அனுப்பிவைத்திருந்தார்கள்.கூடவே கார் ஓட்டுபவர் ஜானும் வந்திருந்தார்,

குமாரி அக்காவும்,ஜானும் அம்மாவை பார்த்ததும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.குமாரி அக்கா ஆசையுடன் எங்களை எல்லாம் கட்டிபிடித்த வண்ணம் நகை பெட்டியை அம்மாவிடம் கொடுத்தார்கள்.அம்மா பெட்டியை வாங்கி அருகிலுள்ள ஸ்டூலில் வைத்துவிட்டு,பெரியம்மா கொடுத்தனுப்பிய கடிதத்தை பிரித்து படித்தார்கள்.

அம்மாவின் முகம் மாறியது.நாங்கள் எல்லோரும் அம்மா கடிதத்தை பிரித்து படிப்பதை ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தோம் கடிதத்தில் என்னதான் பெரியம்மா எழுதி இருக்கிறார்கள் என்ற ஆவலுடன்.

“என்ன எழுதி இருக்கிறாள் உன் அக்கா?”என சரசா பாட்டி கேட்டார்கள்.

“என் பெற்றோரோகள் சொத்தில் இனி பைசாகூட எனக்கு கிடையாது என்றும்.நாங்கள் வீடு கட்டுவதற்காக, அக்கா சேதுவின் வீட்டு பக்கத்தில் வாங்கி போட்ட இரண்டரை கிரௌண்ட் நிலத்தை ,உடனடியாக என் அண்ணன் ஜகன்னாதனின் பெயரில் எழுதி கொடுத்துவிட வேண்டும்”என எழுதி இருக்கிறாள் என்றார்கள் அம்மா மிகவும் கவலையுடன்.

பாட்டி சரசா கோபக்கனலாக வார்த்தைகளை வீசவே, குமாரி அக்கா அழுதுகொண்டே அம்மாவிடம் விடை பெற்றுச் சென்றார்கள்.

அன்றிரவு ஹோட்டலிலிருந்து வாங்கிவந்த சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு உடனே ஒரு டாக்சியில் இரவு ஒன்பது மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம்.வீடு சேர்ந்ததும் அம்மா நகை பெட்டியை என்னிடம் கொடுத்து அவர்கள் பெட்டியில் வைத்து பூட்டிவிட்டு , சாவியை அவர்கள் படுத்திருக்கும் தலையணி கீழ் வைக்க சொன்னார்கள்.

1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதமும் வந்துவிட்டது.வழக்கம்போல் நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.ஒருநாள், தேதி சரியாக நினைவில் இல்லை,ஆனால் அன்று புதன்கிழமை விடியர்க்கலையில் ஆறு மணி அளவில், நான் படுக்கையைவிட்டு எழுதிருக்கையில் ,அதிர்ச்சியில் உடல்முழுதும் பயத்தால் நடுங்கியது.என் பாவாடை முழுதும் இரத்தத்தால் நனைந்திருந்தது.சுற்றிலும் முற்றிலும் பார்த்தேன்.எங்கிருந்து வந்தது இவ்வளவு இரத்தமும் என நடுங்கினேன்.பயத்தால் பேந்தபேந்த விழித்துக் கொண்டு நின்ற இடத்தை விட்டு நான் நகரவே இல்லை.

அம்மா சமயலறையில் அப்பாவிற்கு உதவியாக காய்கறிகளை நறுக்கி கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.சமையலறையை எட்டிப் பார்த்தேன்.அப்பா கிணற்றடியில் தண்ணீர் எடுத்துவரச் சென்றிருந்தார்கள் .

சமயலறைக்குச் சென்று அம்மாவிடம் "அம்மா,இது எப்படி என் பாவாடையில் வந்தது"என நான் கேட்டதும், காய்கறி நறுக்குவதை நிறுத்திவிட்டு என் பாவாடையை பார்த்த அம்மா திடுக்கிட்டு,மிரட்சியுடன் "போய் ஒரு பெட்ஷீட்டால் சுற்றி மூடிக்கொள்.உன் அண்ணன், தம்பி வந்து பார்த்துவிடப் போகிறார்கள்"என்றார்கள் அவசராவசரமாக.நான் உடனே சென்று ஒரு சீட்டை எடுத்து இடுப்பை சுற்றி சுற்றிக்கொண்டு நடு ஹாலில் செய்வதறியாது முழித்துக்கொண்டு நின்றிருந்தேன்.

பின், அம்மா ,தங்கை ஆனஹியை கூப்பிட்டு,"போய் பக்கத்து வீட்டு கிரிஜா ஆண்டியை நான் கூப்பிட்டதாக சொல்லி

உடனே வரச் சொல்”என அனுப்பினார்கள்.

இதற்குள் தண்ணீர் இறக்கச் சென்ற அப்பா திரும்பி வந்து விடவே, அம்மா விஷயத்தை கூறவே, அப்பா சற்றே நின்றுவிட்டு ,என்னிடம் வந்து “.நீ பெரியவளாகிவிட்டாய்”என்றார்கள்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லைஇதுவரை நான் இப்படி ஒரு வார்த்தையை கேட்டதே இல்லையே. பெரியவளாகிவிட்டேன் என்றால் என்ன அர்த்தம்?அதற்கும் என் பாவாடையிலுள்ள இரத்தத்திற்கும் என்ன சம்பந்தம்?அது எப்படி வந்தது?என எனக்குள் பல கேள்விகள் மனதிற்கு எழ ,ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு நின்றிருந்தேன்..

விஷயத்தை கேள்விப்பட்ட என் இரு சகோதரர்களும்,ஆனஹியும் கூட ஒன்றும் புரியாமல், நான் நின்றிருந்த நடு ரூமை எட்டி எ,ட்டி பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார்கள்.எனக்கு

கோபமும்,அழுகையுமாக வந்தது.இத்துடன் எப்படி நான் ஸ்கூலுக்கு போவது என்ற சந்தேகம் வேறு.

இதற்குள் பக்கத்து வீட்டு ஆண்டியும் வந்து விடவே ,அம்மா விஷயத்தை ஆண்டியம் கூறி"என்ன செய்வது இப்போது,ஸ்கூலுக்கு அனுப்புவதா?வேண்டாமா?எனக்கு எதுவுமே புரியவில்லை"என்றார்கள் அம்மா.

"வீட்டில் விட்டுவிட்டு போங்கள் .நான் பார்த்துக் கொள்கிறேன்"என கூறிவிட்டு ,"நீங்கள் உங்கள் பெண் பன்னிரண்டு வயதுதான் என கூறும் போது எங்களால் நம்பவே முடியவில்லை.அப்போது நாங்கள் நினைத்தோம் இவளுக்கு 16 அல்லது 18 வயது இருக்கலாம்,வயதுக்குகூட வந்திருக்கலாம்,நீங்கள்தான் அதை மறைத்து பேசுகிறீர்கள் என்று நினைத்தோம்.ரொம்பவும் மனிக்கணும்.உங்களை தப்பாக புரிஞ்சிகிட்டதர்க்கு"என அம்மாவிடம் கூறியபடியே ,

“நீ இப்படி நடு ரூமில் ஒதுக்குபுறமா இரும்மா,யார் மேலேயும் படாதே”என கிரிஜா ஆண்டி என்னிடம் கூறிவிட்டு அம்மாவிடம் எதோ ரகசியமாக கூறினார்கள்.பிறகு கிரிஜா ஆண்டி அவர்கள் வீட்டிற்கு, சென்று சில பழைய காட்டன் துணிகளை கொண்டு வந்து கொடுத்தார்கள்.

அம்மா மெதுவாக சுவற்றை பிடித்த வண்ணம் எழுந்து நடந்து ,நான் இருக்கும் நடு ஹாலுக்கு வந்து ,அந்த காட்டன் துணிகளை என்னிடம் கொடுத்து, அதை எப்படி உபயோகிப்பது என விளகினார்கள்.

வேறு எதுவும் அதிகமாக சொல்லவில்லை.

பிறகு என்னிடம்”நீ நேரே பாத்ரூம் போய் பல்விளக்கி,அப்படியே தலைக்கு குளித்துவிட்டு,உன் துணிகளை கழற்றி பக்கெட்டில் சோப்பு தண்ணீரில் ஊற வைத்துவிட்டு ,என்னுடன் கிளம்பி ஸ்கூலுக்கு வந்துவிடு.வீட்டில் தனியாக இருக்க

வேண்டாம்"என கூறி என்னை பாத்ரூமிற்கு அனுப்பிவைத்தார்கள்.

குளித்து முடித்துவிட்டு உடைகளை மாற்றிக் கொண்டு வந்ததும்,,ஷான்,பாட்,ஆனஹி மூவரும் என்னை ஏதோ மிருக காட்சி சாலையல் ஒரு அதிசய மிருகத்தை பார்ப்பது போல வித்யாசமான முறையில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்ததை கண்டதும் எனக்கு வெட்கமும் ,அழுகையும் பொத்துக் வந்தது.

"சீக்கிரம் எல்லோரும் ஸ்கூலுக்கு தயாராகுங்கள்.எதற்கு வேடிக்கைபார்த்துகொண்டு அவளை அழ வைக்கிறீர்கள்."என அப்பா அதட்டும் குரலில் கூறவே, மூவரும் சென்று ஸ்கூலுக்கு கிளம்ப தயாரானார்கள்.

அந்த வீட்டிற்கு வந்தது முதல் அம்மாவை குளிப்பாட்டுவதும்,அவர்கள் துணி மற்றும் எல்லோர் துணிகளையும் ஸ்கூலுக்கு போகும் முன், சோப்பு தண்ணீரில் ஊற வைத்து

சென்றுவிட்டு,ஸ்கூல் முடிந்து வீட்டிற்கு வந்ததும் நான்தான் உடனடியாக தோய்த்து, பின்னால் உள்ள கோடியில், காயவைப்பது வழக்கமாக இருந்து வந்தது.அதே போல் அன்று என் துணிகளை தனியான பக்கெட்டிலும் ,மற்றவர்களின் துணிகளை தனியான பக்கெட்டிலும் ஊற வைத்தேன்.

அன்று அம்மாவுடன் ஸ்கூலுக்கு சென்றேன்.நான் கிளாஸ்ரூமில் அமைதியாக உட்கார்ந்திருந்ததை பார்த்த என் கூட படித்த சினேகிதிகள் அனைவரும்"ஏன் அனிதா மௌனமாக,சோகமாக இருக்கிறாய்?உடம்பு சரியில்லையா"?என என்னை நச்சரித்து கேட்டுக் கொண்டே இருந்தார்கள்.நானும் அவர்களிடம் "ஆமாம்,உடல்நிலை சரி இல்லை என கூறி, அன்று எப்படியோ சமாளித்துவிட்டேன்.அன்று மாலை வீடு திரும்பினேனே.

வயதுக்கு வருவதென்றால் என்ன என்று யாருமே என்னிடம் விளக்கமாகவே கூறவில்லை.யாரிடமும் கேட்டு தெரிந்து

கொள்ளவும் , எனக்கு அப்போது துணிவில்லாமல் போயிற்று.

மறுநாள் காலையில் எழுந்து குளித்துவிட்டு எந்தவித முன்னேற்பாடுகளும், முதல் நாள் அம்மா சொல்லிகொடுத்ததுபோல செய்யாமல், கிளம்பி அம்மாவுடன் ஸ்கூலுக்கு சென்றுவிட்டேன்.அம்மாவும் என்னை எதுவும் கேட்கவில்லை.வகுப்பிற்கு சென்ற ஒருசில மணிநேரத்திர்கேல்லாம்,நான் எதற்காகவோ என் இருக்கையை விட்டு எழுந்திருக்கையில், என் பாவாடையில் கரையை பார்த்து, என் தோழிகள் என்னிடம் இதை பற்றி கூறிவிட்டு,டீச்சர் இடமும் கூறவிடவே என் வகுப்பு டீச்சர் உடனடியாக, என்னை ,என் அம்மாவின் ரூமிற்கு அனுப்பிவைத்தார்கள்.

“நீ தயாராக வரவில்லையா அனிதா?”என்று அம்மா கேட்டார்கள்.

“இல்லை”என தலை ஆட்டினேன்.சிறிது நேரம் என்னை என்ன செய்வது என முழித்துக்

கொண்டிருந்த அம்மா,,பிறகு வேறு வழி இன்றி, பாத்ரூம் சென்று பாவாடை கரையை தண்ணீர் விட்டு கழுவி விட்டு ,விரைந்து வீட்டிற்கு நடந்தே சென்று, உடைகளை மாற்றிக் கொண்டு , கட்டியிருந்த உடையை துவைத்து காயபோட்டுவிட்டு,வீட்டை உள்ளே தாளிட்டுக் கொண்டு, பத்திரமாக இரு நாங்கள் வரும் வரையில், என்றார்கள். அம்மா கூறியபடி, நான் பாத்ரூம் சென்று ,என் பாவாடையை சுத்தம் செய்துவிட்டு ஈரபாவாடையுடன், நடையும், ஓட்டமுமாக வீட்டிற்கு சென்றேன்.வீட்டை திறந்து உள்ளே செல்கையில் பக்கத்து வீட்டு கிரிஜா ஆண்டு என்னிடம்,

“ஏன் அனிதா இந்த நேரத்தில் தனியா வந்திருக்கே?”என கேட்டார்கள்.

நான் விஷயத்தை அவசர அவசரமாக கூறிவிட்டு உள்ளே சென்று உடைகளை மாற்றிக் கொண்டு,மறுபடியும் பாவாடையில் ஏதும் படாதவண்ணம் என்னை தயார் செய்து கொண்டு,கிணற்றடிக்கு சென்று எல்லா

துணிகளையும் துவைத்து
காயவைதேன்.அப்போது எனக்கு பயங்கரமான
இடுப்பு வலி ஏற்பட்டது.மிகவும் சோர்வாக
இருந்தது.அப்படியே உள்ளே சென்று படுத்த
நான் தூங்கிவிட்டேன்

மாலையில் அனைவரும் வீடு
திரும்பினார்கள்.அம்மாவும் ஏதும் என்னிடம்
கேட்கவில்லை.அன்று வழக்கபோல் சென்றது.

மறுநாள் காலையில் எழுந்து தயார் நிலையில்
இல்லாமல் மறுபடியும் ஸ்கூலிற்கு
சென்றேன்.அன்றும் சிறிது நேரத்திற்கெல்லாம்
என் பாவாடையில் கரையை பார்த்துவிட்டு,
டீச்சர் என்னை வீட்டிற்கு
அனுப்பிவைத்தார்கள்.எனக்கு ஒன்றுமே
புரியவில்லை .யாருமே என்னிடம் எதையுமே
விளக்கமாக கூறவில்லை.பெரியவள் ஆவது
என்றால், ஒரேஒரு நாள் மட்டும்தான் என
நினைத்துக் கொண்டிருந்தேன்.இப்படி
தினம்தினம் வருகிறதே.என்னடசாமி
இது.எவ்வளவு நாட்களுக்குத்தான் நான்

பெரியவளாகிக்கொண்டே போவது.இதற்ககு முடிவே கிடையாதா?என என்னை நானே நொந்துகொண்டேன்.தொடர்ந்து நான்கு நாட்கள் நான் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தேன்.என்னிடம் யாருமே இதுபற்றி வியார்காளிந்தார்கள்.அம்மாவும் ,கிரிஜா ஆண்டியும் கூட எதுவுமே என்னிடம் கேட்கவோ,சொல்லவோ இல்லை. பத்திரமாக இரு நாங்கள் வரும் வரையில், என்றார்கள்

நான்காவது நாள் அம்மா என்னை காலையில் எழுந்ததும் தலைக்கு குளிக்கச் சொல்லிவிட்டு நான் பெரியவளானதற்காக, அப்பா வாங்கி வந்த பட்டுபாவாடையையும்,தாவணியையும் அணிய வைத்து, பெட்டியிலிருந்து நகைகளை எடுத்துவரச் சொல்லி,அதில் எனக்கு பிடித்த ஓபல் கல்
நெக்லசையும்,வளையல்களையும்,கம்மலையும் அணிவித்து பள்ளி கூடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.தலை நிறைய மல்லிகை பூவையும் சூட்டியிருந்தார்கள்.அன்று மட்டும் ,அம்மா, நான் பள்ளிக்கூட உனிபார்ம் போடாமல் வர சிறப்பு

அனுமதி, தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்றிருந்தார்கள்.

என்னை பட்டுப்பாவாடை,நிறைய நகைகள் தலை நிறைய மல்லிகை பூவுடன் பார்த்ததும், நான் மிகவும் அழகாக இருப்பதாக, அம்மாவின் கூட வேலை செய்த சக ஆசிர்யைகளும்,என் பள்ளிக்கூட சிநேகிதிகளும் வெகுவாக புகழ்ந்து பாராட்டினார்கள்.அன்று நான் வீட்டிற்கு திருப்பி அனுப்பபடவில்லை.ஆனாலும் ,என் மனதிற்குள் உள்ள சந்தேகத்தை நான் யாரிடம் கேட்டு தெரிந்து கொள்வது என குழப்பமாக இருந்தது.எப்படியிருந்தாலும் இனி கவலை இல்லை.எல்லாம் முடிந்துவிட்டது என மன நிம்மதியடைந்தேன்.

அன்று மாலையில் வீடுதிரும்புகையில், அப்பா எனக்காக நாலு ஸ்ட்ரிங் கொண்ட, அதன் நடுநடுவே பச்சை கற்களும் வைத்து இருந்த முத்துமாலையை வாங்கி வந்திருந்தார்கள்.முத்துமாலை என்றால் அப்பாவிற்கு மிகவும் பிடித்த ஒன்று,தங்க

நகைகள் எதுவும் அப்பாவிற்கு பிடிக்காது.மேலும், அந்த நாலுசரமுள்ள, சிறிய ,சிறிய உருண்டை வடிவில் உள்ள முத்துக்கள் ,என் கழுத்திற்கு நன்றாக இருக்கும் என நினைத்தே அவற்றை வாங்கி வந்திருந்தார்கள்என அப்பா ,அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.அந்த முத்து மாலையை ஆர்வத்துடன் வாங்கி அணிந்து கொண்டேன்.அப்பா கூறியது போல அந்த நாலுசர முத்துமாலை என் கழுத்திற்கு மிக அழகாகவே அலங்கரித்து இருப்பது கண்டு வியந்தேன்.

அன்று போட்ட முத்துமாலையை என் கழுத்தைவிட்டு கழற்றாமல் தினமும் ஸ்கூலுக்கு போட்டுச சென்றேன்,.என் சினேகிதிகள் முதல்,அனைத்து ஆஸ்ரியைகளும் அந்த முத்துமாலை என் கழுத்திற்கு மிக அழகாக இருக்கிறது என் பாராட்டினார்கள்.

நான்கு நாட்களுக்கு பிறகு, நான் தினமும்

வழக்கம்போல் சென்று வந்தேன்.அம்மா நாடகத்திலும்,மேடை பேசுவதிலும் சிறந்து விளங்கியதால் அவர்களை போல, நானும் மேடை பேச்சில் சிறந்து விளங்க வேண்டும் என்பது அம்மாவின் பேராவல்.அந்த மாதம் இந்தியாவின் சுதந்திர தினவிழாவில், நான் சுதந்திர தினத்தை பற்றி மேடையில் பேச வேண்டும் என ஆச்சர் வற்புறுத்தவே ,நானும் ரொம்ப தைரியத்துடன் சரி என ஒப்புக்கொண்டேன்.

அம்மா,மேடையில் பெசுவதர்க்கான் விவரங்களை தயாரித்து, அதை ஒரு பேப்பரில் எழுதி என்னிடம் கொடுத்து ,தினமும் அதை படித்து,பேசி பார்த்து,பழகிகொள்ள, சொல்லியிருந்தார்கள்.நானும் தினமும், நேரம் கிடைக்கும்போதெல்லாம், அதை படித்து ,பார்க்காமல் மனப்பாடம் செய்தவுடன், அம்மா, பலமுறை வீட்டில் ,என்னை பேச சொல்லி ஒத்திகை பார்த்து வந்தார்கள்.ஆனால் ,அம்மாவிற்கு என் பேச்சில் சிறிதும் திருப்தி ஏற்படவே இல்லை.இருந்தாலும், நான்

பேசுவதற்கு பெயரை கொடுத்துவிட்ட காரணத்தால், பேசாமலிருந்து விட்டார்கள்.மேலும் அம்மாவின் உடல்நிலை நாளுக்குநாள் குன்றிக்கொண்டே வந்ததால், எங்களது படிப்பிலும்,என் பேச்சு போட்டிக்கும், என்னை சரியாக தயார் செய்ய முடியவில்லை.

தன்கூட வேலை செய்யும் சக ஆசிரியைகளிடம் பொறுப்பை ஒப்படைத்து,என்னை எப்படியாவது மேடையில் சரிவர பேச தயார் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.டீச்சர் யசோதாதான் என்னை தயார் செய்து வந்தார்கள்.சுதந்திர தினம் முன், யசோதா டீச்சர் என்னை ஒத்திகையின் போது பேச சொல்கையில், என் பேச்சு ரொம்ப மோசமாக இல்லை.எதோ பரவாயில்லை என அம்மாவிடம் கூறினார்கள்.அம்மாவும், நான் மறுநாள் சுதந்திர தினவிழாவில் ஓரளவு சுமாராக பேசிவிடுவேன் என்ற நம்பிக்கையில் இருந்தார்கள்.

மறுநாள் காலை ஏழு மணிக்கு அனைவரும் ஸ்கூலுக்கு சென்று, விழா நடக்கும் பெரிய

ஹாலில் 1000 இற்கு மேற்பட்ட மாணவிகளும்,ஆசிர்யைகளும் கூடி இருந்தனர்.என் வயிற்றில் ஏதோ ஒன்று கலக்கி கொண்டிருந்தது.டீச்சர் இடம் சென்று “எனக்கு பயமா இருக்கு டீச்சர்.நான் பேசபோவதில்லை”என்றேன் பயத்துடன்.

“கடைசி நேரத்தில் இப்படி வந்து சொன்னால் எப்படி?யாரையும் இன்று பேசுவதற்கு திடீரென தயார் பண்ணமுடியாது.எனவே எப்படியாவது சமாளித்துக் கொண்டு பேசிவிடு.பயப்படாதே.எழுதி வைத்துள்ள பேப்பரை கையில் ,எதற்கும் தயாராக வைத்துக் கொள்”என கூறிவிட்டு,மற்ற வேலைகளை செய்ய சென்று விட்டார்கள்.கூட்டத்தை கண்டதும் என் மனம் திக்திக்கென அடித்துக் கொண்டது.

அனைவரும் விழாவிற்கு தலைமைதாங்க வரும் தலைவருக்காக காத்திருந்தனர்.குறித்த நேரத்தில் சரியாக 7:30 மணிக்கு தலைவரும் வந்து சேர்ந்தார்.தலைமை ஆசிரியையும்,மற்ற

ஆசிரியைகளும் ,அவரை வரவேற்று மேடையில் உட்கார வைத்து விட்டு, எங்கள் அனைவருக்கும் அவரை அறிமுகபடுத்திவிட்டு,அவரை வருக,வருக என வரவேற்றுரையை கூறிவிட்டு,சுதந்திர தினவிழாவை பற்றி பேச இருந்த மூன்று மாணவிகளில் ,முதலாவதாக மாலாவை மேடைக்கு அழைத்தார்கள்.இரண்டாவதாக நான் பேச போவதாக நிகழ்ச்சி நிரலில் இருந்தது.பயத்தால் என் கைகால்கள் நடுங்கி வேர்த்து,வேர்த்து கொட்டியது.முதன்முறையாக மேடையில் பேசபோகிறோமே ,எப்படி பேசப்போகிறோம் ,அம்மா வேறு அங்கு மேடையில் உட்கார்ந்து இருக்கிறார்களே.சரியாக பேசாவிட்டால் என் மானமே போய்விடுமே.அம்மாவிற்கும் மன வருத்தபடுமே.என்றெல்லாம் என் மனம் எண்ணி பயந்தது. மாலா பேசியதுகூட என் காதுகளில் விழவில்லை. பயத்தில் என் தொண்டை அடைத்தது.

திடீரென அனைவரும் படபடவென கைதட்டும் ஓசை கேட்டு நினைவிற்கு வந்த

நான்,கடவுளே,தயவு செய்து என்னை
எப்படியாவது காப்பாற்றிவிடு.தைரியத்தை
கொடு மேடையில் நான் பேசுவதற்கு, என
கண்ணை இருக்க முடி வேண்டிக்
கொண்டிருக்கையில் என் பெயரை மைக்கில்
கேட்கவே எழுந்து மேடையை நோக்கி
நடந்தேன்.நான் மைக்கின் அருகில்
சென்றதும்.கீழே அமர்ந்திருந்த சக
மாணவிகளையும்,ஆஸ்ரியைகளையும் ஒரு
நோட்டம் விட்டேன்.மேலும் பயம் என்னை
கவ்வியது.அனைவரும் அமைதியாக உட்கார்ந்து
கொண்டு நான் பேச துவங்கும் நேரத்தை
ஆர்வமுடன் எதிர்பார்த்து காத்திருந்தனர்.ஹால்
முழுதும் இப்போது ஒரே நிசப்தத்தில்
இருந்தது.மேடையில் அமர்ந்திருந்த தலைமை
ஆசிரியையும்,தலைவரும் மற்றவர்களும்
என்னையே
பார்த்துக்கொண்டிருந்தார்கள்.ஹாலின்
ஏகப்பட்ட நிசப்த்தம் என் வயிற்றை மேலும்
வெகுவாக கலக்கியது.வாயிலிருந்து பேச்சு
வரவில்லை.வாயடைத்து நின்றேன்.நான்

இதுவரையில் தயார் செய்து வைத்திருந்த எதுவும் என் நினைவில் இல்லாமல் போயிற்று .சில நொடிகள் நான் எதுவும் பேசாமல் மைக்கை பிடித்து நின்று கொண்டிருப்பதை பார்த்த டீச்சர் யசோதா ,என் அருகே வந்து மைக்கை அணைத்துவிட்டு "அனிதா கையிலுள்ள பேப்பரை பிரித்து வைத்து படித்துவிட்டு போ,நேரமாகிறது சும்மா நிற்காதே"என அவசர படுத்தவே என் கையிலிருந்த பேப்பர் நினைவிற்கு வரவே, கடகடவென பிரித்து படிக்க ஆரம்பித்தேன்.பேப்பரை பிடித்திருந்த என் கைகள் இரண்டும் நடுங்குவதை அனைவரும் பார்த்து உணர்ந்தனர்.என் கையிலுக்க பேப்பர் படபடவென ஆடிக் கொண்டிருந்ததையும்,என் குரலின் நடுக்கதிலிருந்தும்,அதை உணராமல் யாருமே இருக்க முடியாது.உடல் வேர்க்க, கை நடுங்க படித்து முடித்து ,நன்றி கூறிவிட்டு, பெருத்த அவமானத்துடன் கீழே இறங்கி சென்று என் இருக்கையில் உட்கார்ந்து கொண்டேன்.யாரையும் ஏறுடுத்து பார்க்கக்கூட, அவமானத்தால் என் மனம் கூசி குறுகியது.

விழா முடிந்ததும் என் தோழிகள் என்னை தேற்றினார்கள்.நான் நடுக்கத்துடன் என் பேச்சை படித்தாலும் நன்றாகவே படித்தேன் என ஆறுதல் கூறினார்கள்.எனக்கு மிகவும் அழுகையாக வந்தது.அம்மாவிடம் நான் வருகையில், அம்மா ஒன்றுமே இதை பற்றி பேசவில்லை.நானும் எதுவும் அம்மாவிடம் இதுபற்றி பேச்சு எடுக்க

விரும்பாமலிருந்தேன்.. அன்றிரவு அப்பா,என்னிடம் “எப்படிம்மா உன் ஸ்பீச் “என்று கேட்டதும் அம்மா குறுக்கிட்டு “அட்டகாசம்,உங்கள் பெண் பேசப்போகிறாள் என்றதும் ஹால் முழுதும் ஒரே நிசப்தம்.அவள் பேசப்போவதை அனைவரும் ஆர்வமுடன் எதிர்பார்த்து காத்திருந்தோம்”என்றார்கள்

“பிறகு சொல்லு”ஏன் அவசரபடுத்தினார்கள் அப்பா.

“அவளும் நோக்கினால்,நாங்களும் நோக்கினோம்.ஹாலில் நிசப்தம்.உங்கள் மகள் பேசுவாள், பேசுவாள் என அனைவரும்

காத்திருந்தோம்.எங்கள் அனைவரின் ஆர்வமும், உங்கள் மகளை பேச்சிழக்க வைத்துவிட்டது"என ஜோக் அடித்ததும்,

"பேசினாளா?இல்லையா?"என்று மறுபடியும் கேட்டார்கள் அப்பா.

"எல்லோரும் மேடையில் பேசினால்,உங்கள் மகள் மேடையில் ,பேச்சை படித்து முடித்தாள்."என விவரத்தை அம்மா கூறியதும் வீட்டில் அனைவரு விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.எனக்கு அவமானத்தால் அழுகை பீரிட்டு வந்தது.

40

அத்யாயம்-நாற்பது

எப்படியாவது அடுத்தமுறை அம்மாவையும் மற்றவர்களையும் மேடையில் பேசி அசத்திவிட வேண்டும் என என் மனதிற்குள் உறுதிமொழி எடுத்துக் கொண்டேன்.;இதற்காக தினமும் ,ஏதாவது ஒன்றை மனப்பாடம் செய்து தனியாக பேசி பழகிவந்தேன்.;

1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம், மறுபடியும், அதிகாலையில் விழித்தெழுந்த பொது என் பாவாடையில் இரத்தகறை கண்டு திடுக்கிட்டேன்.போனமாதம்தானே, நான்

வயதுக்கு வந்தேன்.மறுபடியும் இம்மாதம் இரண்டாம் முறையாக வயதுக்கு வந்துவிட்டேனே.அது எப்படி?மறுபடியும் உடலுக்குள் எதோ கோளாறு ஏற்பட்டு தெரியாத்தனமாக விபத்து நடந்து விட்டதோ?என நினைத்துக் கொண்டே, அதை பெரிது படுத்தாமல் ,குளித்துவிட்டு துணிகளை சுத்தம் செய்து காயவைத்துவிட்டு பள்ளிக்கூடம் சென்றேன்.அன்று அம்மாவிடம், இதுபற்றி எதுவுமே நான் கூறவில்லை.

பள்ளிக்கூடம் சென்றதும், பாதி வகுப்பில், மறுபடியும் என் பாவாடையில் லேசாக கரைகள் இருப்பததும்,என் இடுப்பில் தாங்க முடியாத வலி ஏற்பட்டதும்,என் அருகில் உட்கார்ந்திருந்த சரோஜாவிடம் மெதுவாக விஷயத்தை கூறினேன்.

“நீ கவலைபடாதே.உன்னுடன் பாத்ரூமிற்கு நான் வருகிறேன்,நீ பாவாடையை தண்ணீர் விட்டு கழுவி சுத்தம் செய்து விடு.என்னிடம் எப்போதும் ,எதற்கும் இருக்கட்டும் என ஒரு

நாப்கின் வைத்திருப்பேன்.அதை உனக்கு கடனாக தருகிறேன்.திருப்பி தந்துவிடு நாளைக்கு.உன் பாவாடையில் இருக்கும் கரையை யாரும் பார்க்காத வண்ணம், உன் பின்னால் நான் நடந்து வருகிறேன்"என்றாள் .

சரோஜா கூறியது போலவே ரீசஸ் சமயத்தில், நாங்கள் இருவரும் பாத்ரூமிற்கு சென்று விஷயத்தை கச்சிதமாக முடிததுவ்ட்டோம்.அன்று நான் வீட்டிற்கு திம்பி போகாமல், சரோஜா என்னை காப்பாற்றிவிட்டாள் .இல்லை என்றால் என் மானமே அன்று போயிருக்ககூடும்.

திரும்ப வந்து வகுப்பறையில் உட்கார்ந்ததும், நான் சரோஜாவிடம் "நீ எப்போதும் கையில் ஒரு நாப்கின் தயாராக வைத்திருப்பாய் என்று சொன்னாயே ஏன்?நாம வயதுக்கு ஒரே ஒரு முறைதானே வருவோம்.எனக்கு எதிர்பாராமல் இரண்டாவது முறையும் வந்துவிட்டேன்.எல்லோருக்கும் அப்படி இல்லையே"என்றேன் வெகுளித்தனமாக.நான் கூறியது கேட்டு, சரோஜா தன தலையில்

அடித்துக் கொண்டாள்.

“ஐயோ, உனக்கு நிஜமாகவே எதுவும் இதுபற்றி விஷயம் தெரியாதா?உன் அம்மா உன்னிடம் எதுவுமே சொல்லவில்லையா?”என ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டு,நான் இல்லை, என தலையாட்டியதும்,நான் உண்மையிலேயே எதுவும் தெரியாமல்தான் இருக்கிறேன் என்பதை புரிந்து கொண்டவுடன்,எல்லா விஷயங்களையும், எனக்கு விளக்கமாக கூறி முடித்தாள் சரோஜா.அவள் கூறியதிலிருந்து, ஒவ்வொரு முறையும் நான் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டேன்.

அம்மாவின் உறவுக்காரர்கள் யாரும், இதுநாள்வரையில் வந்து எங்களை எதுவும் தொந்தரவு செய்யவில்லை.அப்பா உறவினர்கள் யாருக்கும் நாங்கள் எங்கு வசிக்கிறோம் ,எங்கள் முகவரி என்ன என்று கூட தெரிந்து கொள்ள முனையவில்லை.

ஒருநாள் நாங்கள் மாலையில் பள்ளிக்கூடம்

முடிந்து வீட்டிற்கு வந்திருக்கையில், எதிர் வீட்டில் வசிக்கும் அங்கிள், எங்கள் வீட்டிற்கு வந்து,"அம்மா தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள்.உங்கள் தந்தை நேற்றிரவு எங்கள் வீட்டிற்கு வந்து, ஜன்னலருகே உட்கார்ந்து கொண்டு, உங்களை எல்லாம் பார்த்துவிட்டு ,கண்ணீருடன் திரும்பிச் சென்றார்கள்.உங்களிடம் சொல்லவேண்டாம் என கூறிச் சென்றார்.ஆனால் ,அவர் வயதான காலத்தில் அழுது கொண்டே சென்றதை, பார்க்க எங்களுக்கெல்லாம் மிகவும் மனது கஷ்டமாக இருந்தது.அதனால்தான் உங்களிடம் சொல்லிவிட்டேன்.நீங்கள் ஏதும் தெரிந்து கொண்டதாக காட்டிக் கொள்ளாதீர்கள்.என்றார் மிகவும் வருத்தத்துடன்.

"அப்பா எதாவது சொன்னார்களா? எவ்வளவு நேரம் இருந்தார்கள் உங்கள் வீட்டில்?"என அம்மா ஆர்வமுடன் கேட்டதற்கு,

"அவர் இரவு எட்டு மணிபோல தலையில், வெள்ளை மேல்துண்டால் முடிக்கொண்டு

,நீங்கள் யாரும் பார்த்து விடாதபடி,எங்கள் வீடு கதவை தட்டி உங்கள் முகவரியை காண்பித்து, அது எந்த வீடு என கேட்டார்.நான் உங்கள் வீட்டை காண்பித்ததும், அவர் எங்களிடம் ,அது என் இளைய மகள் வீடு,அவர்கள் வீட்டிற்கு இப்போது நான் செல்ல அனுமதி இல்லை,என்று விஷயத்தை எங்களிடம் சுருக்கமாக கூறிவிட்டு,கொஞ்சம் நேரம் அங்கு ஜன்னலருகில் உட்கார்ந்து, உங்களை எல்லாம் பார்த்துவிட்டு போவதற்கு ஆட்சேபனை ஏதும் உங்களுக்கு உண்டா?என்றார்.நானும் சரி, என அனுமதி அளித்ததின் பேரில் ,ஒரு மணி நேரத்திற்கு, உங்களை எல்லாம் பார்த்துக் கொண்டே ,"என் மகள்அரண்மனை போல உள்ள வீட்டில் பிறந்து, வளர்ந்து நல்ல படித்த பணமுள்ள குடுமத்தில், என் சிநேகிதரின் மகனுக்கு திருமணம் செய்து வைத்தேன்.அவள் புகுந்த வீடும், பணக்கார குடும்பம்.ஆனால் எல்லாவற்றையும் வேண்டாம் என கூறிவிட்டு, இப்படி சின்னஞ்சிறிய வீட்டில் அனாதைபோல ,ஏழை போல வாழுகிறாள்."என மனம் நொந்து

அழுதார்.மேலும் பேரக்குழந்தைகளும்,
இப்படிப்பட்ட சூழ்நிலையில் வளருகிறார்களே
என அழுதுகொண்டே சென்றார்.நீங்கள் தப்பாக
நினைக்காவிட்டால் நான் ஒன்று
கேட்கட்டுமா?"என்றார் அந்த அங்கிள்.

"அதனால் என்ன தாராளமாக
கேளுங்கள்"என்றார்கள் அம்மா.

"நீங்கள் ஏன்? உங்கள் அப்பா வீட்டில் போய்
வசதியாக வாழாமல் இங்கு இந்த சிறிய வீட்டில்
எதுவுமில்லாமல் அவதிபடவேண்டும்?உங்கள்
அப்பா மிக பாசமுள்ளவர் போல்
தெரிகிறார்.பாவம் அவர்"என்றார். .

அம்மா ஏதும் பேசவில்லை அவர் உடனே அம்மா
நிலைமையை புரிந்தவராக ,அம்மாவிடம் விடை
பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார்.

தன் அப்பாவிற்கு வீட்டு முகவரி எப்படி
தெரிந்தது.மிகவும் ரகசியமாகத்தான்
வைத்திருந்தேன், என அம்மாவிற்கு சந்தேகமாக

இருந்தது.அந்த நிகழ்ச்சிக்கு பிறகு தாத்தா ஈஸ்வரன் இரண்டு முறை எதிர்வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு, எங்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்ததாகவும்,ஒரு முறை தாத்தா ,அவர்கள் வீட்டில் காலை உணவையும் சாப்பிட்டதாகவும், அந்த எதிர்வீட்டு அங்கிள் அம்மாவிடம் நீண்ட நாட்களுக்கு பிறகு கூறினார்கள்.அம்மா பள்ளிகூடத்தில் விசாரித்ததில், பெரியம்மா தொலைபேசி முலமாக, எங்களது வீட்டு முகவரியை வாங்கியதாக, அந்த அலுவலக குமாஸ்தா மூலம் தெரியவந்தது.உயர் அதிகாரியாக எங்கள் பெரியம்மா விவரம் கேட்கும் போது கொடுக்காவிட்டா அலுவலகல் குமாஸ்தா தொல்லையில் மாட்டிகொல்வார்கள் என பயந்து கொடுத்திருக்கிறார்கள் என்று அப்பாவிடம் கூறினார்கள் அம்மா.

1971-ம் ஆண்டு டிசம்பர் மாதமும் வந்தது.எங்களது பள்ளியில் அரை வருட பரீட்சை எல்லாம் முடிந்து, கிறிஸ்மஸ் விடுமுறையும் வந்தது.அண்ணன் ஷான்,தம்பி

பாட் மற்றும் ஆனஹியும் தெருவில்
விளையாடிக் கொண்டிருந்தார்கள்.நான்
அம்மாவின் அருகில் கட்டிலில்
உட்கார்ந்துகொண்டு, ஜன்னல் வழியாக
இருவரும் தெருவை வேடிக்கைப் பார்த்துக்
கொண்டிருந்தோம்.மாலை ஆறு மணி
இருக்கலாம்.கதிரவன் செந்நிறமாக நிறத்தில், தன்
வேலைய, அன்று முடித்துவிட்டு, லேசாக
தலையை கீழே இழுத்துக்கொண்டு மறைந்து
கொண்டிருந்தார்.விடுமுறை என்பதால் நிறைய
குழந்தைகள் தெருவில் ஓடி விளையாடிக்
கொண்டு, ஒரே சத்தமாக ,கலகலவென
இருந்தது.

. அம்மா கட்டிலில் உட்கார்ந்துகொண்டு
தெருவை வேடிக்கை பார்த்துக்கொண்டே
பரீட்ச்சை தாட்களை திருத்திக்
கொண்டிருந்தார்கள்.திடீரென அனைத்தையும்
கீழே போட்டுவிட்டு “ஐயோ ,என்னை
என்னவோ பண்ணுகிறதே ,தலை
சுற்றுகிறதே.என்ன? என்று சொல்ல
தெரியவில்லையே.எதோ தலைக்குள் இரத்தம்

போகாதாதுபோல்,மறத்து போனாற்போல் இருக்கிறதே"என இரு கைகளால் தலையை பிடித்துக் கொண்டு துடிக்க ஆரம்பித்தார்கள்.ஐயோ,ஐயோ என கதறி துடித்தார்கள்.இதற்க்கு முன்னாள் சிதம்பரத்தில் ஒருநாள் இப்படி தான் துடித்தார்கள்.

நான் பயந்து போய் பதறி அடித்துக் கொண்டு பக்கத்து வீட்டு கிரிஜா ஆண்டியிடம் விஷயத்தை கூறி அழைத்து வந்ததும்,கிரிஜா ஆண்டியும் அவரது கணவர் ஸ்ரீனியும் ஓடிவந்து பார்த்துவிட்டு, அவர்களும் பயந்து அலறிக்கொண்டு,பக்கத்து தெருவிலுள்ள மருத்துவரை உடனடியாக அழைத்து வந்துவிடுங்கள் என ஸ்ரீனி அங்கிளிடம் சொல்லி அனுப்பியதும்,அங்கிள் நிமிஷமாக தன் உடைகளை மாற்றி கொண்டு மருத்துவரை அழைத்துவர சைக்கிளில் பறந்தார்.

நான் தெருவிற்கு சென்று விளையாடிகொண்டிருந்த ஷான், பாட்,ஆனஹி முவரையும் விஷயத்தை கூறி

அழைத்துவந்தேன்.பக்கத்துவீடு.எதிர்வீடு,பின்னால் குடிசையில் இருந்த அனைவரும், எப்படியோ விஷயம் பரவி, எங்கள் வீட்டிற்கு ஓடிவந்து விட்டனர்.எங்கள் போர்ஷனுக்கு முன் ,ஒரு சிறிய கூட்டமே கூடிவிட்டது.அம்மா படுத்தபடி தலை பிடித்துக் கொண்டு துடித்துக் கொண்டே இருந்தார்கள்.அனைவரும் அம்மாவை தடவி கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

எங்கள் நால்வருக்கும் அழுகை வந்து விட்டது.எங்கள் நால்வரையும் ஒரு சிலர் நின்று கொண்டு சமாதானபடுத்திக் கொண்டிருந்தனர்/.இதற்குள் அங்கிள் ஸ்ரீனி ,ஆடோ ரிக்ஷாவில் மருத்துவரை அழைத்துவந்து விட்டார்.உள்ளே வந்த டாக்டர், அனைவரையும் வெளியே போகச் சொல்லிவிட்டு,எங்கள் நால்வரும் மற்றும் கிரிஜா ஆண்டி .ஸ்ரீனி அங்கிள் மட்டும் ரூமில் இருக்க அனுமதிதார்.சிறிது நேரம் அம்மாவை பரிசோதனை செய்துவிட்டு, ஒரு இஞ்சக்ஷனை போட்டுக்கொண்டே, அம்மாவிடம் மெதுவாக பேச்சுக் கொடுத்து விஷயத்தை கேட்டுக்

கொண்டிருந்தார்.நான் குறுக்கிட்டு “டாக்டர் இதற்க்கு முன் ஒரு முறை இதே மாதிரி அம்மாவுக்கு வந்தது, ஆனால், அரை மணி நேரத்தில் அம்மா பழையபடி சரியாகிவிட்டார்கள்.”என்றேன்.

“எப்போது வந்தது”என்றார் மருத்துவர்.

“போன வருடம்,ஆனால் மாதம் மட்டும் நினைவில் இல்லை”என்று பதிலளித்தேன்.

பிறகு சிறிது நேரம் அம்மாவை பரிசோதனை செய்துவிட்டு,பயப்பட ஒன்றுமில்லை,சிறிது படுத்து ஓய்வு எடுங்கள் சரியாகிவிடும்.

வேலையிலுள்ள அதிக பளுவால்கூட இதற்கு காரணமாக இருக்கலாம்.மறுபடியும் இதுபோல வந்தால் ஹாஸ்பிடலுக்கு சென்று பூரண பரிசோதனையை செய்து கொள்வதுதான் நல்லது என கூறி அங்கிள் ஸ்ரீனி கொடுத்த, தனது சிகிச்சைக்கான தொகையை வாங்கி கொண்டு புறப்பட்டு சென்றுவிட்டார்.

மருத்துவர் சென்ற சிறிது நேரத்திற்க்கெல்லாம், அம்மா சாதாரணமாக வழக்கம் போல் எழுந்து உட்கார்ந்து கொண்டு சிரித்து பேச ஆரம்பித்தார்கள்.அனைவருக்கு இந்த மாற்றம் மிகவும் ஆச்சரியத்தை கொடுத்தது.

“சிறிது நேரத்திற்கு முன், எங்களை எல்லாம் பயமுறுத்தி விட்டீர்கள். இப்ப என்னடா என்றால், எதுவுமே நடக்காதது போல் எழுந்து உட்கார்ந்து கொண்டு சிரித்து பேசுகிறீர்களே”என கிரிஜா ஆண்டி சந்தோஷமாகவும், ,செல்லமாகவும் அம்மாவை கடிந்து கொண்டார்கள்.

அம்மா, ஸ்ரீனி அங்கிளுக்கும்,கிரிஜா ஆண்டிக்கும் நன்றி சொல்லிவிட்டு மருத்துவரை அழைத்துவரவும்,சைக்கில் ரிக்ஷாவுக்கும் உறிய பணம் எவ்வளவு கொடுத்தீர்கள என கேட்டதும்.

“அது பற்றி இப்ப ஒன்றும் நீங்கள் கவலை படவேண்டாம்,தேவன் வந்ததும் அவரிடம் சொல்லி வாங்கிக் கொள்கிறோம்.நீங்கள்

இப்போது எதுபற்றியும் கவலை படாமல் ஓய்வு எடுங்கள்"என்றார் அங்கிள் ஸ்ரீனி.

"என்னிடம் பணம் இருக்கிறது. எவ்வளவு என்றால் நானே கொடுத்துவிடுகிறேன்.அவசரத்திற்கு உதவிநீர்களே ரொம்ப சந்தோசம்"என்றார்கள் அம்மா.

"ரொம்ப ஒன்றும் இல்லை .ரூபாய் 10/-தான்" என்றார்கள் அங்கிள் ஸ்ரீனி.

அம்மா கட்டிலில் தன தலையணைக்கு கீழே, வைத்திருந்த பர்சிலிருந்து பணத்தை எடுத்து அங்கிளிடம் கொடுத்து,மறுபடியும் நன்றி கூறினார்கள்.

"அதனால் என்ன பரவாயில்லை.இதற்கெல்லாம் எதுக்கு நன்றி சொல்கிறீர்கள். பக்கத்திலிருக்கிறீர்கள்.ஒருவருக்கொருவர் உதவி செய்வது சகஜம்தானே"என சொல்லிவிட்டு இருவரும் அம்மாவை ஓய்வெடுக்கச்

சொல்லிவிட்டு,எங்களையும், அம்மாவை தனியே விட்டுவிட்டு எங்கும் போகவேண்டாம் என புத்துமதி கூறிவிட்டு, தன் போர்ஷனுக்குள் சென்று விட்டனர்.

மணி 6:30 இருக்கும் அல்லது அதற்கு சற்றே மேலிருக்கும், அம்மா என்னை அழைத்து ,என் கையில் ஒரு ரூபாயை கொடுத்து, கூடவே ஒரு பேப்பரில் மாமா ஜகன்னாதனின் தொலைபேசி என்னையும் எழுதி கொடுத்து "மாமாவிடம் நான் அவசியம் பார்க்க விரும்புவதாகவும்,முடிந்தால் உடனே கிளம்பி வந்தால் நன்றாக இருக்கும் என அம்மா நினைக்கிறார்கள், என சொல்லிவிட்டு ,நம் வீட்டு முகவரியையும், மாமாவிடம் கொடுத்துவிட்டு வா":என்றார்கள்.

நான் "சரி"என தலையாட்டிவிட்டு நாங்கள் குடியிருந்த வீட்டு தெரு முனையிலுள்ள மளிகை கடைக்கு சென்று, மாமா ஜகந்நாதனுக்கு தொலை பேசியில் பேச, அவர்கள் வீட்டு எண்ணை சுற்றினேன்.இரண்டாவது மணியிலேயே மாமா எனக்கு பதில்

அளித்தார்கள்.மாமா “ஹல்லோ”என்றதும்,

“மாமா,நான் அனிதா பேசறேன் “என்றேன்.

“என்ன விஷயம்”என்றார்கள் மாமா.

“அம்மாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாகி,
இப்பதான் மருத்துவர் வந்து இஞ்சக்ஷன்
போட்டுவிட்டு சென்றார் மாமா,அம்மா
உடனடியாக உங்களை பார்க்க
வேண்டும்,முடிந்தால் இப்பவே கிளம்பி வரச்
சொன்னார்கள்”என்றேன்.

“நான் உடனே புறப்பட்டு வருகிறேன் என்று
அம்மாவிடம் சொல்லு.வீட்டு முகவரி என்ன”என
கேட்டதும் நான் எங்கள் வீட்டு முகவரியை
கொடுக்கவே ,அதை ஒரு பேப்ப்பரில் மாமா
குறித்துக் கொண்டு, அந்த கடைக்காரரிடம்
ரிசீவரை கொடுக்கசொல்லி, அவர் மூலமாக,
நாங்கள் குடியிருக்கும் இடத்தை ஓரளவு கேட்டு
குறித்து வைத்துக் கொண்டார்கள்.

நான் மாமாவிடம் பேசி முடித்துவிட்டு வீட்டிற்கு

விரைந்து வந்து,"அம்மா ,மாமா இப்போதே கிளம்பி வருவதாக சொன்னார்கள்"என கூறிவிட்டு, அம்மாவின் அருகில் உட்கார்ந்து கொண்டு, புத்தகத்தை எடுத்து புரட்டிகொண்டிருந்தேன்.

சரியாக 7:30 இருக்கும்.எங்கள் வீட்டின் முன் ஸ்கூட்டர் ஒன்று வந்து நின்றது.ஜன்னல் வழியாக, தன் அண்ணன் ஜகன்னாதன் வரவை ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த அம்மா,,மாமா ஸ்கூட்டரிலிருந்து இறங்கியாதும்,போய் மாமாவை உள்ளே அழைத்து வாருங்கள் உங்களில் யாராவது.என்றார்கள்.உடனே நானும் ஆனஹி,பாட் முவரும் வெளியே ஓடிசென்று, மாமாவை எங்கள் போர்ஷனுக்குள் அழைத்து வந்தோம்.

“வா ஜகன்னாதா,"என அம்மா வரவேற்றதும், மாமா சிரித்துக் கொண்டே அங்கிருந்த நாற்காலியை இழுத்து அம்மாவின் கட்டிலருகே போட்டு, அதில் உட்கார்ந்து கொண்டார்கள்.

“பசங்களா,வெளியே கொஞ்ச நேரம் போய் விளையாடிக் கொண்டிருங்கள்.நான் அம்மாவுடன் கொஞ்சம் பேச வேண்டும்”எனை கூறி மாமா எங்களை வெளியே அனுப்பிவிட்டார்கள்.

நாங்கள் நால்வரும் எங்கள் புத்தக முட்டைகளை எடுத்துக் கொண்டு, சமயலறையில் சென்று உட்கார்ந்து கொண்டு, லீவில் எங்களுக்கு என கொடுத்த ஹோம்வொர்க்கை செய்வதில் கவனம் செலுத்தினோம்.

அம்மாவும், மாமாவும் ஏதேதோ பேசினார்கள்.என்ன பேசினார்கள் என யாருக்குமே தெரியாது.குறைந்த பட்சம் முப்பது நிமிடங்களாவது பேசியிருப்பார்கள்.பின், எட்டு மணி அளவில், அம்மாவிடம் விடை பெற்று கொண்டு மாமா கிளம்புகையில் ,எங்கள் நால்வரையும் அழைத்து”அம்மாவை ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளுங்கள்.எதுவும் அவசியம், அவசரம்

என்றால் உடனடியாக எனக்கு போன் செய்யுங்கள்.போய் வரட்டுமா?"என கூறிவிட்டு சென்று விட்டார்கள்.

எங்கள் அனைவருக்கும் பசி எடுத்து.இரவு ஒன்பது மணி ஆகியும் அப்பா இன்னும் வீட்டிற்கு வரவில்லை."அம்மா பசிக்குது"என ஆனஹி கேட்டதும்.

"அனிதா,போய் அடுப்பை பற்றவை.ரவா உப்புமா செய்யலாம்.எப்படி செய்வது என நான் சொல்கிறேன் நீ செய்.ரொம்ப சுலபம்தான் ,பயப்படாதே"என கூறி என்னை ,சமயலறைக்கு சென்று அடுப்பை பற்றவைக்கச் சொல்லிவிட்டு,அண்ணன் ஷானின் உதவியுடன் அம்மா சமயலறைக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே, என்னை ரவாவை வருக்கச் சொல்லிவிட்டு, அண்ணன் கொடுத்த வெங்காயம்,பச்சை மிளகாய் இஞ்சியை கட்பண்ணி முடித்து,ஒவ்வொன்றாக, நான் அடுத்தது என்ன செய்ய வேண்டும் என கூறவே, ஒருவழியாக நான் உப்புமா செய்து

முடித்தேன்.

அண்ணன் ஷான் ,எல்லோருக்கும் தட்டுகளை வைத்து,சர்க்கரையை கொண்டுவந்து வைத்து உதவி செய்தான்.பின், நான் கிளறிய உப்புமாவை எல்லோர் தட்டிலும் கொஞ்சம், கொஞ்சம் போட்டு தொட்டுக் கொள்ள சரக்கரையை வைத்ததும், அனைவரும் எடுத்து வாயில் போட்டதும், முகம் சுளித்தார்கள்.ரவாவை சரியாக வருக்காமையாலும்,அளவுக்கு மீறி தண்ணீர் ஊற்றியதாலும்,அதில் ரவாவை சரியாக போட்டு கிளராததாலும், உப்புமா கட்டி கட்டியாக களிப்போல இருந்தது.எல்லோரும் பயங்கர பசியில் இருந்ததால் ,அந்த உப்புமாவை சர்க்கரை போட்டு சாப்பிட்டுவிட்டு

வாழைபழத்தையும், சாப்பிட்டுவிட்டு, அப்பாவிற்கும் கொஞ்சம் வைத்துவிட்டு,எல்லா பாத்திரங்களையும் நான் கழுவி ,சமையலறையை சுத்தம் செய்துவிட்டு அனைவரும் ஒன்றாக முன் ரூமிற்கு வந்து

உட்கார்ந்தோம்.

அன்று பார்த்து அப்பா வீட்டிற்கு வர இரவு 11 மணியாயிற்று.அப்பா வீடு வந்ததுமே, பக்கத்து வீட்டு ஸ்ரீனி அங்கிள், எங்கள் வீட்டிற்கு வந்து,"என்ன சார் இப்படி நேரம் கழித்து வந்திருக்கீங்க.பாவம் சின்ன குழந்தைகள் மிகவும் பயந்து விட்டார்கள்.உங்கள் மனைவி செத்து பிழைத்திருக்கிறார்கள்."என விவரம் முழுதும் ஒன்று விடாமல் கூறி முடித்துவிட்டு"உங்களுக்கு தகவல் கொடுக்கலாம் என்றால் யாரை கூப்பிடுவது, ,எப்படி தகவல் தெரிவிப்பது என எங்களுக்கு தெரியவில்லை" என்று வருத்தமாக கூறினார்.

"இன்று என் பழைய சிநேகிதன் ஊரிலிருந்து வந்திருந்தான்.பேசிவிட்டு வர நேரமாகி விட்டது.வீட்டில் பழங்களும்,பிரேட்டும் இருந்ததால் குழந்தைகள் இரவு சாப்பாட்டை சமாளித்துக் கொள்வார்கள் என நினைத்தேன்.இதற்கிடையில் ,இப்படி ஒரு நிலைமையை, நான் நினைத்து பார்க்கவே

இல்லை.ரொம்ப நன்றி ,நீங்கள் எல்லாம் உதவியாக இருந்ததற்கு .இனிமேல் ஏதாவது ஏற்பாடு பண்ணவேண்டும்.வீட்டு வேலைக்கும்,கூட இருந்து உதவி செய்வதுக்கும் ஆள் ஏற்பாடு பண்ணச் சொல்லி என் அம்மாவிடம் சொல்லி இருக்கிறேன்.கூடிய விரைவில் ஆள் கிடைத்துவிடும்".என்றார்கள் அப்பா.

அப்பா இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு, அம்மாவிடம் முழு விவரத்தையும் கேட்டுவிட்டு"நாளைக்கே மறுபடியும் அம்மாவிடம் சென்று உனக்கும்,குழந்தைகளுக்கும் உதவியாக இருக்க உடனடியாக வீட்டுடன் ஒரு வேலை ஆளை ஏற்பாடு பண்ணச் சொல்லிவிட்டு வருகிறேன்.தினமும் எல்லா வேலைகளையும், நானே செய்வது சற்றே கஷ்டமாக இருக்கிறது"என்றார்கள் அப்பா.

அம்மாவும் "ஆமாம்,அதுவும் நல்ல யோசனைதான்.நான் கூட இதைத்தான் நினைத்துக்

கொண்டிருந்தேன்.”என்றார்கள்.மேலும் அம்மா தொடர்ந்தார்கள்,”ஏன்,சிதம்பரத்திலே ,உங்கள் சின்னம்மா, அவர்கள் தம்பி வீட்டில் இருக்கிறார்களே,அவர்களுக்கு உங்களை மிகவும் பிடிக்குமே.பாவம் அவர்களுக்கு கணவனும்,குழந்தைகளும் யாருமே கிடையாதே,நீங்கள்தான் அவர்களுக்கு பிள்ளைபோல,என அடிக்கடி அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.உங்கள் அம்மாவிடம் பேசி விட்டு,உங்கள் அம்மா சரி என்றால்,சிதம்பரத்திலுள்ள உங்கள் மாமாவிர்ற்கு கடிதம் போட்டு, உங்கள் சின்னம்மாவும் விருப்பப்பட்டால் உடனடியாக நம் வீட்டிற்கு அனுப்பி வைக்க சொல்லுங்கள்.சிறிது காலம் வரை ,அவர்கள் நம்முடன் தங்கியிருக்கட்டும்.பிடிக்கவில்லை என்றால் திரும்ப அனுப்பிவிடலாம்.பிடித்துவிட்டால் சாகும் வரை அவர்கள் நம்முடனேயே தங்கி இருக்கட்டும்”.என்ற யோசனையை அம்மா கூறினார்கள்.

“நல்ல யோசனை,சின்னம்மாவை நான்

நினைத்தே பார்க்கவில்லை.நல்லவேளை ஞாபக படுத்தினாய்."நான் நாளைக்கே அம்மாவை பார்த்து விஷயத்தை சொல்லிவிட்டு அவர்கள் வீட்டிலிருந்தே மாமாவுக்கு கடிதம் போட்டுவிடுகிறேன்.ஏதாவது அவசரம் என்றால், அம்மா வீட்டிற்கு போன் செய்து விஷயத்தை கூறிவிடு"என அப்பா சொல்லிவிட்டு விளக்கை அணைத்துவிட்டு படுத்துவிட்டார்கள்.

மறுநாள் காலையில் எழுந்ததும், அப்பா வழக்கம் போல் அனைவருக்கும் காபி,ப்ரேக் பாஸ்ட்,கொடுத்துவிட்டு மதியம் சமையலையும் முடித்துவிட்டு, முன் அறையிலுள்ள அம்மாவின் கட்டிலிலுள்ள பெட் ஷீட்டையும், தலையணையையும் தட்டி சுத்தம் செய்கையில், அம்மாவின் தலை அணையின் அடியில் இருந்து ஒரு பெரிய வெள்ளை என்வெலோப் இருப்பதை பார்த்து விட்டு"என்னம்மா இது"என கேட்டுக் கொண்டே அந்த என்வலோபை பிரித்தார்கள்.

"தெரியவில்லையே"என்ன என, அந்த

என்வேலோபை பிரித்து பாருங்கள்”என கூறினார்கள்.

அப்பா அந்த பெரிய என்வேலோப்பை பிரித்து, அதனுள் கத்தையாக நூறு ருபாய் நோட்டுக்கள் இருப்பதை பார்த்துவிட்டு “ஏது இந்த பணம்,எப்படி உன் தலை அணைக்கு அடியில் வந்தது?”என கேட்டதும்

“அண்ணன் ஜகன்னாதன் நேற்று சாயங்காலம் வந்து சென்றான் என்று சொன்னேன் இல்லையா?நேற்று என்னிடம் செலவுக்கு எதுவும் பணம் தேவைபட்டால், இந்த் பணத்தை வைத்துக் கொள் என என்னிடம் கொடுக்க வந்தான்.

“நான்தான் வேண்டாம் ஜகன்னாதா,நீ எடுத்துகொண்டு போ, என்னிடம் பணம் போதுமானது இருக்கிறது என்றேன்.ஒருவேளை, நான் வேண்டாம் என சொன்னதும் ,அவன் என் தலையனைகீழ் வைத்துவிட்டு சென்று விட்டிருப்பான் போலிருக்கிறது, என

நினைக்கிறேன்.நான் கவனிக்கவே இல்லை.நல்லகாலம் நீங்கள் பார்த்தீர்கள்”என்றார்கள் அம்மா,.

அப்பா அந்த ரூ 1000/-எடுத்து தன சட்டை பையில் வைத்துக் கொண்டார்கள்,மதிய சாப்பாட்டை முடித்துவிட்டு “நான் அம்மா வீட்டிற்க்குச் சென்று விஷயத்தை கூறிவிட்டு கடிதம் எழுதி போட்டுவிட்டு முடிந்தவரையில் சீக்கிரமே வீடு வர பார்க்கேறேன்:என கூறிவிட்டு சென்று விட்டார்கள்.

அன்று மதிய சாப்பாட்டிற்கு பிறகு ,அப்பா கிளம்பி சென்று விட்டதும், அம்மா பக்கத்து வீட்டு கிரிஜா ஆண்டியிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“பாவம்,அனிதா சிறிய பெண், ஓடியாடி விளையாட வேண்டிய வயதில், எங்கள் துணிகளை துவைப்பதும்,சமையலுக்கு உதவி செய்வதும்,என் பெட்சைட் கம்மோடை கழுவி சுத்தம் செய்வதும்,என்னை

குளிப்பாட்டி,உடைபாற்றி தலை வாரி விடுவது, என எல்லா வேலைகளையும் செய்வதை பார்க்க மனதிற்கு கஷ்டமாகவும், வேதனையாகவும்இருக்கிறது எல்லா வேலையும் செய்துவிட்டு ,பாவம், அவளுக்கு ஹோம்வொர்க் செய்யகூட நேரமில்லாமல் மிகவும் களைப்பாகபடுத்து தூங்கிவிடுகிறாள்.அவளுக்கு நான் அம்மா என்ற முறையில் வேலை செய்வது, போய் அவள் என்னை அம்மா போல் பார்த்துக் கொள்கிறாள்".என்றார்கள் மனக்கஷ்ட்டத்துடன்.

"எல்லாம் கொஞ்ச நாட்களுக்குதானே செய்ய போகிறாள்.நீங்கள் விரைவில் குணமாகி ,அவளுக்கு திரும்ப காலம் பூர செய்ய போகிறீர்கள்.இதற்க்கு ஏன் கவலைபடுகிறீர்கள்.பெண் பிள்ளை வேலை செய்வது நல்லதுதான்." என்று சொன்னதும், அம்மா சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு,

பிறகு மற்ற ஏதேதோ விஷயங்களை பேசிக் கொண்டிருந்தார்கள்.பின்னால் குடிசையில்

வாழும் மற்ற பெண்மணிகளும் வந்து உட்கார்ந்துகொண்டு அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.அம்மாவுக்கு அவர்கள் எல்லோரையும் மிகவும் பிடித்துவிட்டது.அம்மா உடல்நிலை சரியில்லாமல் நடக்க முடியாத நிலையிலிருப்பதால், அம்மாவுக்கு பேச்சு துணைக்காகவும்,மனமாற்றத்திற்காகவும் அனைவரும் அவ்வப்போது வந்து அம்மாவிடம் சிறிது நேரம் பேசிவிட்டு செல்வது வழக்கம்.

அந்த வருட டிசம்பர் விடுமுறையும் ஒருவழியாக, இன்னும் ஓரிரு நாட்களில் முடிய இருந்தது.பள்ளிக்கூடம் திறக்கும் முதல் நாள் மாலை முன்று மணி இருக்கும்,அப்பாவின் மாமா சூதாக்கரும்,அப்பாவின் சின்னம்மா சந்திராவும் ஆட்டோ ரிக்ஷாவில் வந்து இறங்கினார்கள்.இவர்களிருவரையும் சிதம்பரத்தில், நாங்கள் இருந்த போது ஒருமுறை பார்த்திருக்கிறோம்.அப்பாவின் சின்னம்மா, ஐந்தரை அடி உயரமும்,சற்றே மாநிறமாகவும்,ஒல்லியான வெடவெடவென உருவமும்,ஒட்டடை குச்சிபோல்

இருப்பார்கள்.மிக சுருள்சுருளான அழகான இடுப்புவரை உள்ள தலை முடியும்,அந்த முடி பாதி நரைத்தும், பாதி கருப்பாகவும் இருந்தது.நெற்றியில் இரு புருவங்களுக்கு இடையில், சிறியதாக பச்சை குத்தி இருந்தார்கள்.மேலே ப்ளௌஸ் எதுவும் அணிந்திருக்கவில்லை.வெறும் காவி கலர் புடவையை உடலில் சுற்றி இருந்தார்கள்.புடவை முழங்காலுக்கும் சற்றே கீழே தொங்கியது.

அந்த சந்திரா பாட்டியையும், சுதாக்கர் தாத்தாவையும் வரவேற்று அப்பாவும்,அம்மாவும் பேசிகொண்டிருந்தார்கள்.அவர்கள் இருவரின் வரவும் அன்று எதிர் பாராத ஒன்றே."கடிதம் கண்டதும், உடனே புறப்பட்டு வந்து விட்டதாகவும், ,அம்மாவின் உடல்நிலை சரியில்லை என்பதால் அவர்களையும் பார்த்துவிட்டு ,சந்திரா பாட்டியையும் எங்கள் வீட்டில் விட்டுவிட்டு போகலாம் என வந்துவிட்டேன்"என்றார்கள் சுதாக்கர் தாத்தா.

"கவலை படாதேம்மா,இனிமேல் சமையல்

வேலை,பாத்திரம் கழுவும் வேலையை நான் கொஞ்ச நாட்களுக்கு பார்த்து கொள்கிறேன்.அதில் ஆட்சேபனை எதுவும் எனக்கு இல்லை.பாவம் ,ஒரு ஆண் பிள்ளை, இதை எல்லாம் செய்வதா?"என்றார்கள் சந்திரா பாட்டி.

சுதாக்கர் தாத்தா எங்கள் வீட்டிலேயே முன்று நாட்கள் தங்கி இருந்தார்கள்.அந்த சிறிய வீட்டில், சிறிய இடத்தில், நாங்கள் எட்டுபேர் எப்படியோ சமாளித்துக் கொண்டு இருந்து விட்டோம்.நான்காவது நாள் சுதாக்கர் தாத்தா ,காலையில் ப்ரேக்பாஸ்ட் சாப்பிட்டதும், கிளம்பி கீழ்பாகிலுள்ள அவரது அக்காவாகிய, எங்கள் சரசா பாட்டியை பார்க்க சென்று விட்டார்.சந்திரா பாட்டி ,சரசா பாட்டியின் கடைசி சகோதரி.சந்திரா பாட்டி கல்யாணம் ஆன ஆறுமாதத்திலேயே அவரது கணவர் எதோ நோய்வாய்பட்டு இறந்து விட்டாராம்.அவர்களுக்கு குழந்தைகள் எதுவும் இல்லாததால் ,கணவர் இறந்த பிறகு, தன் இளைய சகோதரன், சுதாக்கர் தாத்தா

வீட்டிலேயே இதுவரை தன் காலத்தை
கழித்துவிட்டு,இப்போது அம்மாவின்
வேண்டுதலினால் ,எங்களுக்கு துணையாக,
எங்கள் வீட்டிற்கு, தற்காலிகமாக சிறிது
நாட்களுக்கு வந்திருந்தார்கள்

சந்திரா பாட்டி ஓரிரு நாட்களிலேயே சமையல்
வேலையும்,பாத்திரம் கழுவுதையும் தானே
எடுத்துக் கொண்டார்கள்.அப்பா காலையில்
எழுந்து சமயலறையில் வேலை செய்வதை
பார்க்க அவர்களுக்கு பொறுக்கவில்லை.
அம்மாவிற்கும், அப்பாவிற்கும் சந்திரா
பாட்டியின் வருகையால் மிகவும் நிம்மதி
ஏற்பட்டது.அம்மாவிற்கும் தினமும் ஸ்கூல் விட்டு
வந்ததும் மனம் விட்டு பேச,வேண்டியதை
கேட்டு வாங்கி கொள்ள ஒரு பெரியவர்கள்
வீட்டில் இருப்பது
நிம்மதியாகவும்,சந்தோஷமாகவும் தோன்றியது.

சந்திரா பாட்டிக்கும், அம்மாவை மிகவும்
பிடித்துவிட்டது.எங்கள் வீட்டில் இருப்பதால்
அவர்களுக்கு நன்றாக பொழுதும்

போயிற்று.அப்பாவும் கவலை இல்லாமல் தினமும் இரவு தாமதமாக வர ஆரம்பித்தார்கள்

41

அத்யாயம்-நூற்பத்தி-ஒன்று

1972-ம் வாருடம் ஜனவரி மாதமும் ஆரம்பித்துவிட்டது.ஜனவரி 26-ம் தேதி குடி அரசு தினவிழா என்பதால், அந்த தினத்தை கொண்டாட கல்சுரல் ப்ரோக்ராம் நடத்த யார் யார் எந்தெந்த ப்ரோக்ராமில் இருக்க போகிறீர்கள், என்பதை குறிப்பிட்ட தேதிக்குள் கொடுத்து விடவேண்டும் என பள்ளிகூடத்திலிருந்து அறிவிப்பு விடுத்ததும்,என் மனதில் மின்னல்போல் ஒரு எண்ணம் தோன்றியது.இம்முறை பேசுவதற்கு பதில், நடனம் ஆடி எல்லோரையும் அசத்தினால்

என்ன?என பளீரென்ற எண்ணம் தோன்றவே, என் நெருங்கிய தோழி சுகுணா,மலர்,வாணி,சாந்தா நால்வரையும் அணுகி “ஹேய் நான் ஒரு நல்ல பாட்டுக்கு நடனம் ஆடலாம் என இருக்கிறேன்.போனமுறை சுத்திர தினவிழாவில் என் பேச்சு சரியாகவே செய்யாததை, இந்த நடனத்தை வைத்து ஈடுசெய்து விடலாம் என்று நினைக்கிறேன்.அதற்க்கு நீங்க நாலுபேரும் எனக்கு உதவி செய்ய வேண்டும்”என்று கேட்டுக்கொண்டேன்.

“அனிதா,ஆடுவது என்றால் என்ன என்று எங்களுக்கு தெரியாதே.இதுவரை நாங்கள் ஆடியதே கிடையாது.அப்படி இருக்க, எங்களை வைத்து கொண்டு நீ எப்படி ஆடி, எல்லோரையும் அசத்தப் போகிறாய்?உன் பெயர் இந்தமுறையும் கெடவெண்டுமானல், நீ எங்களை வைத்து டான்ஸ் ஆடு. உன் பெயர் கெடாமல் இருக்கவேண்டும் என்றால், இந்த எண்ணத்தை மறந்துவிடு.”என்றார்கள் ஒருமித்தமாக.

“கவலைபடாதீர்கள்,தினமும் மத்தியானம்
சாப்பாட்டு சமயத்திலும்,நமக்கு வகுப்பு இல்லாத
சமயத்திலும்,உடற்பயிற்சி வகுப்பின் போது,
அந்த டீச்சர் இடமும் அனுமதி வாங்கிக்கொண்டு,
யாரும் பார்க்காத மறைவான இடத்திற்கு
சென்று தினமும் ப்ராக்டிஸ்
பண்ணுனோம்.என்னால் டான்ஸ்
கொரியாக்ராபிக் நன்றாக செய்யமுடியும் என்ற
நம்பிக்கை இருக்கிறது.எனக்கு தெரியாவிட்டால்,
என் அம்மா பாரத நாட்டியம்
பயின்றிருக்கிறார்கள் ,அவர்களிடமும் கேட்டு
தெரிந்து வந்து உங்களை எல்லாம் நன்றாக
ஆட பயிற்சியை நான் அளிக்கிறேன்.என்னை
நம்புங்கள் .நீங்கள் நால்வரும் தைரியமாக
என்னை நம்பி இந்த ப்ரோக்ராமில்
இறங்கலாம்”என அவர்களுக்க் தைரியமளித்தேன்.

கடைசியில் ஒருமனதாக, அவர்கள்
நாலுபேரையும் “சரி” என சம்மதிக்க
வைப்பதற்குள் அப்பாடா
என்றாகிவிட்டது.மறுநாளே நாலவரையும்
அழைத்து கொண்டு, என்ன பாட்டுக்கு நாம

டான்ஸ் ஆட போகிறோம், என்பதை பாடி காண்பித்தேன்.பிறகு ,முதல் இரண்டு ஸ்டெப்ஸ் ஐ, நாங்கள் ஐந்து பேருமே கலந்து பேசி தேர்ந்தெடுத்து, பலமுறை ஒத்திகை பார்த்துக் கொண்டோம்.அச்சமயம் டேப் ரிகார்டர் எங்களிடம் இல்லாததால்,யாராவது மைக்கில் பாடவேண்டும்,அப்படி பாடினால்தான், எங்களால் ஆடமுடியும்.எனவே எங்கள் பள்ளிக்கூட பாட்டு டீச்சர் இடம் சென்று, பாடுவதற்கு சம்மதத்தை வாங்கிக்கொண்டு,அம்மாவுக்கு தெரியாமல் நானே முடிந்தவரை டான்சிற்கு ஸ்டெப்ஸ் போட்டு தினமும் ஒத்திகை செய்ய ஆரம்பித்தோம்.ப்ராக்டிஸ் செய்யும் போதெல்லாம், நான் அந்த பாட்டை பாடிக்கொண்டே ஸ்டேப்சும் போட்டுக் கொண்டு பழகிவந்தோம்.

தினமும் எங்களுக்கு ப்ரீ டைம் கிடைக்கும் போதெல்லாம், நாங்க ஐந்து பெரும் மறைவான இடத்திற்கு சென்று, டான்ஸ் ப்ராக்டிஸ் செய்துவந்தோம்.பாட்டின் கடைசி வரிகளுக்கு

ஸ்டெப்ஸ் எப்படி போடுவது என ஐந்து பேருக்கும் ஒரே குழப்பமாக இருந்ததுடன், எந்த ஸ்டேப்சும் திருப்பதியாக அமையவில்லை எங்களுக்கு.கடைசியில் வேறு வழி இன்றி, அம்மாவிடம்தான் ஆலோசனை கேட்க வேண்டும் என முடிவு செய்தேன்.அம்மாவிடம் நான் ஆடப் போகிறேன் என்ற உண்மையைச் சொல்லாமல் ,எப்படியாவது ஸ்டேப்சை கற்றுக்கொள்ள வேண்டும் என முடிவு செய்தேன்.

அன்றிரவு சாப்பிட்டுவிட்டு, அம்மா நினாதமாக, முன் அறையில் உட்கார்ந்து சந்திரா பாட்டியிடம் பேசி கொண்டிருக்கையில் “அம்மா என் சினேகிதிகள் குடியரசு தினவிஷாவிர்க்கு, டான்ஸ் ஆடுவதாக இருக்கிறார்கள்.அதற்காக அவர்கள் ப்ராக்டிஸ் பண்ணும்போது, நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். .பாட்டின் கடைசி சில வரிகளுக்கு ,எப்படி ஸ்டெப்ஸ் போடுவதென்று ஒரே குழப்பமான நிலையில் இருக்கிறார்கள்.நான் அந்த பாட்டின்

கடைசி வரிகளை பாடுகிறேன் உங்களால் முடிந்தால் அதற்க்கு எப்படி ,என்ன மாதிரி ஸ்டெப்ஸ் இருந்தால் நன்றாக இருக்கும் என சொல்ல முடியமா?"என்று வேண்டி கேட்டுக் கொண்டேன்.

அம்மா நாற்காலியில் உட்கார்ந்தபடியே, அந்த பாட்டின் வரிகளுக்கு எப்படி அபிநயம் செய்யவேண்டும் என ஓரிருமுறை கூறியதும்,அந்த அபிநயம் வெகுவாக எனக்கு திருப்தியை அளித்தது.அதற்கான ஸ்டேப்சும் எப்படி போடுவது என, தன் கைகளாலே போட்டு காண்பித்தார்கள் அம்மா.அந்த ஸ்டேப்சை , நான் கால்களால் போட்டு காண்பித்தவுடன், அம்மா அதை பலமுறை சரிசெய்து, பிறகு நான் அந்த ஸ்டேப்சை , சரியாக போட்டு காண்பித்தவுடன் திருப்தியுடன், சரியாக இருக்கிறது, நாளை இந்த ஸ்டேப்சை சரியாக ,உன் சிநேகிதிகளுக்கு காண்பித்து பழகச்சொல் என்றார்கள் அம்மா.

மறுநாள் ஆனந்த பெருக்கோடு ,என்

சினேகிதிகளிடம் சென்று, அந்த ஸ்டெப்ஸ்,அபிநயம் எல்லாம் நான் காண்பித்ததில், அவர்களுக்கு எல்லாம் ரொம்பவும் பிடித்து போய்விட்டது.தினமும் மிகவும் முயற்சி எடுத்து நன்றாகவே பயிற்சி எடுத்து வந்தோம்.என் சினேகிதிகள் நால்வருக்கும், இப்போது டான்சில் மிகவும் விருப்பம் ஏற்பட்டுவிட்டது..அவர்கள் நால்வராலும், தங்களை தாங்களே நம்பமுடியவில்லை.தாங்களும் மேடையில் டான்ஸ் ஆடப் போகிறோம் என்று.

எங்கள் டான்ஸ் ரிகர்சலில் தேறினால், மேடைக்கு செல்ல முடியும்.எங்கள் டான்ஸ் செலெக்ட் ஆகாவிட்டால், நாங்கள் குடியரசு தினவிழாவில் மேடையில் ஆட முடியாமல் போய்விடும்.குடியரசு தினவிழாவிற்கு இன்னும் ஒருவார காலமே இருந்தது.ரிஹர்சலுக்கான தேதியும் ,பள்ளிகூடத்தில் தெரிவித்துவிட்டார்கள்.

ரிகர்சல் நாளும் வந்தது.ஐந்து பெரும் கடவுளை வேண்டினோம்,எப்படியாவது எங்கள் டான்சை

ரிகர்சலில் தேறிவிடவேண்டும் என்று.எங்கள் ஐந்து பேர் வேண்டுதலும் பலித்தது.ரிகர்சலில் தேறியதோடு மட்டும் இல்லாமல் ,எங்கள் டான்ஸ் கூச்சருக்கு மிகவும் பிடித்துவிட்டது.அதை வெகுவாக பாராட்டி, குடியரசு தினத்தன்று, எங்கள் டான்சையே ஆரம்ப நிகழ்ச்சியாகவும் போட்டிருந்தார்கள்.குடியரசு தினத்தன்று காலையில், வெகு சீக்கிரமாகவே பள்ளிகூடத்திற்கு வந்துவிடுமாறும் கூறினார்கள்

இப்போது எந்த மாதிரி உடைகளை தேர்ந்தெடுக்கவேண்டும்,என்னென்ன நிறத்தில் நாங்கள் உடைகளை உடுத்தவேண்டும்,என்ன மாதிரி நகைகளை அணியவேண்டும் என ஐந்து பெரும் பேசி முடிவெடுத்தோம்.நான் நான்கு பேருக்கும் நடுவில் நிற்பதால், தனி நிறத்தில் பாவாடை, தவாணியையும் ,நகைகளும் அணியவேண்டும் என்றும்,மற்ற நால்வரும், ஒரேமாதிரி நகைகளும்,உடைகளும் அணியவேண்டும் என்றும் முடிவு

செய்தோம்.இப்போது எனக்கு வேறு வழி கிடையாது.அம்மாவிடம், நான் உண்மையை சொல்லியே தீரவேண்டிய நிலை ஏற்பட்டது.ஏன்? என்றல், எனக்கு புது உடைகளை வாங்க வேண்டும் அதற்கேற்றார்போல நகைகள் தயார் பண்ணவேண்டும்.

அன்று மாலை பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்கு திரும்பும் வழியில் அம்மாவிடம் மெதுவாக பேச்சை எடுத்தேன்.

“அம்மா குடியரசு தினவிழாவில் நான் டான்ஸ் ஆட இருக்கிறேன் என்று எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டேன்.நான், தனி நிறத்தில் உடைகளை உடுத்தி ஆடவேண்டும்.நம்மிடம் நிறைய நகைகள் இருக்கிறது.நீல நிறத்தில் பாவாடை,தாவணி வேண்டும்”என்றேன்.

“உனக்கு ஆடவே தெரியாதே.இதுவரை நீ ஆடியதே கிடையாதே.அதிலும் மேடை என்றால் உனக்கு நடுக்கமாயிற்றே.எப்படி ஆடப்போகிறாய்.உனக்கு ஒத்துவராது இதெல்லாம்.போய் உன் டான்ஸ் ப்ரோக்ராமை கான்சல் பண்ணச்சொல்”என்றார்கள் அம்மா.

“அம்மா ரிகர்சலில் டீச்சர் எங்கள் டான்ஸ் பிரமாதம் என்றும்,அதை அன்று ஆரம்ப நிகழ்ச்சியாகவும் வைத்திருக்கிறார்கள்.அதை இனி கான்ஸல் பண்ண முடியாது.”என பிடிவாதமாக கூறினேன்.

அம்மா வேறு வழியில்லாமல் சற்றே சமாதானக் அடைந்தவர்களாக, எனக்கு டான்ஸ் ஆட, உடைகள் வாங்குவதற்கு அன்றிரவு அப்பாவிடம் மனு போட்டார்கள்.மறுநாள் மாலை, நான் பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்கு வந்ததும் ,அப்பாவும் அன்று சீக்கிரமாக வீட்டிற்கு வந்து, என்னை கடைக்கு அழைத்துச்சென்று வேண்டிய துணிகளை வாங்கி கொடுத்தார்கள்.நான் நேவி நீல கலரில் தாவணியும்,அதே கலரில் ஜரிகை

போட்ட பட்டு பாவாடையும் ,ப்ளௗசும் வாங்கிகொடுத்தார்கள்.என் உடைகள் விலை உயர்ந்தது என்றாலும்,அப்பா அதுபற்றி கவலைபடாமல் கடைக்காரர் போட்ட ரசீதிர்க்கான பணத்தை கொடுத்துவிட்டார்கள்.வீட்டிற்கு வந்ததும் எதிர்வீட்டு தையற்காரரிடம் கொடுத்து விவரத்தை கூறி விரைவில் தைத்து தரும்படி வேண்டி கேட்டுக்கொண்டேன்.

பிறகு அம்மாவிடம் ,மறுநாள் ஆடுவதற்கான நகைகளை தேர்ந்தெடுக்கவேண்டும் என்று கேட்டதால், அம்மா, என்னிடம் பெட்டியின் சாவியை கொடுத்து, அதிலுள்ள நகைகளை எடுத்துவருமாறு சொன்னார்கள்.

நான் உள்ளே சென்று பெட்டியை திறந்து பார்த்தபோது ,அதில் ஒரு நகை கூட இல்லாதது கண்டு அதிர்ச்சியானேன். அம்மாவிடம் சென்று நகைகள் இல்லாதது பற்றி நான் கூறியதும்,

அம்மாவும் சற்றே அதிர்ச்சியால், என்னை நம்பாமல்,"நன்றாக பெட்டிக்குள் எல்லா இடத்தையும் பார்" என்றார்கள்.

பெட்டிக்குள் வேறு எங்காவது வீழ்ந்து இருக்கிறதா என்று பார்?"என்றார்கள் அம்மா.

காலி பெட்டியை கவிழ்த்து காண்பித்து "அம்மா ஒரு நகைகூட இதில் இல்லை"என்றேன்.

".

மறுபடியும் உள்ளறைக்கு சென்று நகை பெட்டி வைத்திருந்த பெட்டி முழுதும் பார்த்துவிட்டு"எங்குமே இல்லை அம்மா,நன்றாக தேடிவிட்டேன்"என்று கூறினேன்.

அம்மா எதுவும் பேசவில்லை.சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு "சரி,அப்பா வரட்டும், கடைக்கு சென்று, இன்றிரவு முடிந்தால் ஏதாவது நகைகளை வாங்கி கொண்டு செல் "என்றார்கள் அம்மா சற்றே ஏமாற்றம் தொனிந்த முகத்துடன்.

எனக்கு பெருத்த ஏமாற்றத்துடன் அழுகையே வந்துவிடும் போலிருந்தது.என் சிநேகிதிகளிடம் மிகவும் பெருமை அடித்துக் கொண்டேன், என் வீட்டில் நிறைய நகைகள் இருக்கிறது என்று.இப்போது அவர்களிடம் சென்று, நான் என்ன சொல்லுவேன் .என் மானமே போய்விடும் போலிருந்தது.

இரவு வீட்டிற்கு வந்த அப்பா சாப்பிட்டுவிட்டு முன் அறையில் அம்மாவுடன் உட்கார்ந்து பேசிகொண்டிருக்கையில் ,அம்மா பயத்துடன் விஷயத்தை தயங்கி தயங்கி அப்பாவிடம் கூறினார்கள்."பெட்டியில் நகைகள் இல்லையே, உங்களுக்கு எதுவும் தெரியுமா?"என கேட்டதற்கு,

"இப்ப்போது எதற்கு பெட்டியை எல்லாம் திறந்தீர்கள்."என அப்பா கேட்டார்கள்.

“அனிதா நாளை டான்சிர்க்கு நகைகள் வேண்டும் என்றாள்,அதனால்தான், நான் சாவியை அவளிடம் கொடுத்து, நகைகளை எடுத்து வரச் சொன்னேன்.”என்றார்கள் அம்மா.

சிறிதுநேர மௌனத்திற்கு ,பிறகு ,அப்பா நாற்காலியை விட்டு எழுந்து ,அருகில் செல்பில் இருந்த சிகரெட்டு பெட்டியை திறந்து, ஒரு சிகரெட்டை எடுத்தது வாயில் வைத்து கொண்டு, நெருப்பு பெட்டியில் இருந்து குச்சியை எடுத்து சிகரெட்டை பற்றவைத்த வண்ணம்,மிகவும் தாழ்ந்த குரலில் “வீட்டின் செலவிற்கு பணம் தேவைப்பட்டது.நான்தான் எல்லா நகைகளையும் அடகு வைத்து விட்டேன்.என் சம்பளத்தில் ஆபீசில் கடன் கேட்டு மனு போட்டிருக்கிறேன்.கூடிய விரைவில் பணம் வந்துவிடும். நான் நகைகளை மீட்டு தந்துவிடுகிறேன்”என்றார்கள் அப்பா.

எனக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.எவ்வளவு கனவுகள் கண்டிருந்தேன்.இந்த நகைகளை போட்டுக்

கொண்டு, அலங்காரமாக நாளைக்கு ஸ்கூலிற்கு சென்று டான்ஸ் ஆட.அப்பா, இப்படி என் கனவுகளை எல்லாம் தவிடுபொடி ஆக்கிவிட்டார்களே.இமிடேஷன் நகைகளைகளுடன் நான் எப்படி போய் டான்ஸ் ஆடுவது. என் மானம், மரியாதை என்னாவது?என மனம் மிகவும் வேதனை அடைந்தது.

“அனிதாவை அருகிலுள்ள பாஷன் நகை கடைக்கு அழைத்துச் சென்று நாளைக்கு ஆடுவதற்கு ஏதாவது கொஞ்சம் நகைகள் வாங்கி கொடுத்து விடுங்கள்”என்றார்கள் அம்மா.

கடை முட இன்னும் ஒரு சில மணிநேரங்களே இருந்தது. அப்பாவுடன் , உடனடியாக ,,அவசராவசரமாக பாஷன் நகை கடைக்கு ஓடிசென்று ,எதோ சிலவற்றை பொருக்கி வாங்கி கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்

.அப்பா முன்பு வாங்கி கொடுத்த நாலு சர

முத்துமாலைக்கு சரியாக ,முத்து காதணியும்,வளையல்களும் வாங்கிவந்திருந்தேன்.எல்லா பாஷன் நகைகளும் பார்க்க மிக அழகாகவே இருந்ததால், அது எனக்கு வெகுவாக திருப்பதி அளித்தது.நிஜ தங்க நகைகள் அணிந்தால் இவ்வளவு அழகாக இருக்க சாத்தியமே இல்லை என்றே சொல்லுவேன்.

மறுநாள் காலையில் வெகு சீக்கிரமாகவே எழுந்து குளித்துவிட்டு, புது உடை அணிந்து கொண்டு , முத்து நகைகளையும் போட்டுக்கொண்டேன்.அவைகள் எனக்கு மிகவும் அழகாகவே இருந்தது.அம்மா ,நிறைய பூ வாங்கி வைத்திருந்ததை ,தலை சுற்றி வைத்துக்கொண்டேன்.எல்லா அலங்காரங்களையும், நானே, எனக்கு பிடித்தாற்போல செய்துகொண்டு தயாரானேன்.

அம்மாவுடன் அலங்காரமாக, நான் ரிக்ஷாவில் சென்றபோது ,தெருவில் நடந்து போவோர், வருவோர் எல்லாம் என்னை திரும்பி, திரும்பி பார்த்துக் கொண்டு சென்றார்கள்.ஒருவழியாக

ஸ்கூலை அடைந்ததும் ,நேராக, என்னுடன் ஆட இருந்த சினேகிதிகள் இருக்கும் அறைக்கு ஓடினேன்.அங்கே அவர்கள் நாலுபேரும் அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள்.என்னை கண்டதும்"என்ன அனிதா, எல்லாம் முத்து வைத்த நகைகளாக அணிந்து வந்திருக்கிறாய்?உன் மற்ற நகைகள் என்ன ஆயிற்று?"என ஒன்று சேர்ந்தாற்போல கேட்டதும், எனக்கு என்ன சொல்வது என சிறிது நேரம் புரியாமல் விழித்துவிட்டு,பிறகு சமாளித்துக்கொண்டு "எல்லா நகைகளும் அப்பா பாங்கில் பத்திரமாக வைத்திருக்கிறார்கள்.வீட்டில் இருந்தால் திருட்டு போய்விடும் என்று.நேற்று பாங்கிலிருந்து எடுத்துவர அப்பா மறந்து விட்டார்கள்."என பளிச்சென்று மின்னல்போல என் மனதில் ஏற்பட்ட பொய்யை கூறி ஒருவாறு சமாளித்தேன்.

இந்த முத்து நகைகளே உனக்கு பொறுத்தமாக அழகாக இருக்கிறது.நல்லவேளை உன் அப்பா பாங்கிலிருந்து நகைகளை எடுத்துவர மறந்தது ஒரு விதத்தில் நல்லதாகி விட்டது"என்றார்கள்

என் தோழிகளும் மற்ற ஆசிரியைகளும் .

அம்மா என் டான்சை பார்க்க ஆவலுடன் இருந்தார்கள்.நான் டான்ஸ் ஆடி அம்மா பார்த்ததே இல்லை.எனவே அவர்கள் மிகவும் எதிர்ப்பார்ப்புடன் . இருந்தார்கள் .அன்று அம்மா வெளிர் சந்தன கலரில், புது பட்டு புடவை கட்டி இருந்தார்கள்.அந்த வெளிர் சந்தன நிற புடவையில் ,டைமண்ட் வடிவில் அந்த புடவை முழுதும் ஆங்காங்கே தங்க ஜரிகை போட்டும், மேலும், கீழும் ,ஐந்து இஞ்சிற்க்கு, அகலத்திற்கு தங்க ஜரிகை பார்டரும் போட்டு,அதற்கு ஈடாக சந்தன நிற ப்ளௌசும் ,தலையில் நிறைய ஆரஞ்சு நிற கனகாம்பர பூ முன்று முழத்திற்கு வாங்கி வைத்திருந்தார்கள்.அம்மா அன்று மிகவும் பார்க்க அழகாகவே இருந்தார்கள்.
பள்ளிக்கூடத்திலிருந்த அனைத்து,ஆசிரியைகளும்,மாணவிகளும் அம்மா அன்று மிக அழகாக இருந்ததாக என்னிடமும் ,அம்மாவிடமும் வெகுவாக புகழ்ந்து கூறினார்கள்.

விழா ஆரம்பமாகி, நிகழ்ச்சிகளும் துவங்கும்

நேரம் வந்தது.மைக்கில் பாட்டு டீச்சரும்,மற்றும் சில நன்றாக பாடக்கூடிய மாணவிகளும் ஒன்றாக நின்று தேசிய பற்று பாட்டான பாரதியாரின் பாருக்குள்ளே நல்ல நாடு என்ற பாட்டை இனிமையாக பாட, நாங்கள் ஐந்து பேரும் அதற்கு மிக அழகாக ,நளினமாக ஆடிமுடிக்க,அந்த ஹாலில் மிகுந்த ஆரவாரத்துடன் கைத்தட்டல்கள் சிலமணி நேரம் நீடித்தது.எங்கள் ஐந்து பேருக்கும் பெருமை பிடிபடவில்லை.

விழா முடிந்ததும் நிறைய பேர் என்னிடம் வந்து நீ நடனம் முறைப்படி கற்று கொண்டாயா?என கேட்டனர்.மேலும் நீ, நன்றாக ஆடுவாய் என எங்களிடம் இதுவரை சொல்லவே இல்லையே?என அங்கலாய்த்துக் கொண்டார்கள்.மற்ற ஆசிரியைகளும் அம்மாவிடம், உங்கள் பெண் பரதநாட்டியம் கற்றுக் கொள்கிறாளா?என்ற கேள்வியையே கேட்டு ,அம்மாவை திகைக்க வைத்தார்கள்.

எல்லோரிடமும் ஒரே பதிலைத்தான்

சொன்னேன்.”நான் இது வரை டான்ஸ்ஆடியதே இல்லை.எனக்கே தெரியாது, நான் டான்ஸ் ஆடுவேன் என்று இதுநாள்வரையில்.நான் ஸ்போர்ட்ஸ் மட்டுமே நன்றாக பண்ணுவேன் என்று, அதிலும் ஓட்டபந்தயமும், ஒருசில பீல்ட் ஈவன்ட்சும் தான் தெரியும்.கர்னாடக சங்கீதம் கொஞ்சம் தெரியும்.ஆனால் இன்றுதான் முதல் முறையாக டான்ஸ் ஆடினேன்”என்றேன்.

“பொய் சொல்லுகிறாய்.ஆட தெரியாதவள், எப்படி? நாலுபேரை சேர்த்துக் கொண்டு, நீயே அவர்களுக்கும் டான்ஸ் சொல்லிகொடுத்து, இப்படி ஆட முடியும்”என்றார்கள்.

“என் அம்மா ஏற்கனவே பரத நாட்டியம் பயின்றவர் என்பதால் அவர்களிடமிருந்து சில ஸ்டெப்ஸ் —ம், மீதியை நானே என் கூட ஆடிய சிநேகிதிகளின் உதவியுடன் போட்டேன்,மொத்தத்தில் எல்லாம் நன்றாகவே அமைந்துவிட்டது என் அதிர்ஷ்டமே”என்றேன் மிகவும் பெருமையுடன்.

அம்மாவின் முகத்தில் மகிழ்ச்சியை கண்டேன்."நல்லா ஆடினே அனிதா.எப்படி இந்த மாதிரி ஸ்டேப் எல்லாம் போட கற்றுக் கொண்டாய்?அதோடு இல்லாமல், நான்கு பேரையும் உன்னுடன் சேர்த்து பயிற்சி அளித்திருக்கிராயே."என மிகவும் தாளமுடியாத ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

அதன் பிறகு நாங்கள் ஐந்து பெரும், எப்பவும் ஒன்றாகவே மிகவும் நெருங்கிய தோழிகளாக பள்ளிகூடத்தில் பழகிவந்தோம்.அனைவரும் எங்களை மிகவும் பெருமையாக பார்த்தார்கள்.பள்ளிக்கூடம் முழுதும், சுமார் ஒரு வாரத்திற்கு எங்களது டான்சை பற்றியும்,டான்சிற்க்காக நாங்கள் தேர்ந்தெடுத்திருந்த உடைகளையும், நகைகளையும் பற்றியே பேச்சாக இருந்தது.

சுதந்திர தினவிழா பேச்சில் பழுதுபட்ட என் பெயரை, குடியரசு தினவிழாவில் டான்ஸ் ஆடி, நற்பெயரையும், அனைவரது பாராட்டுதலையும் பெற்றதில் என் மனம் ஏக சந்தோஷமும்,

அமைதியும் அடைந்ததது.

இதற்கிடையில் அம்மாவின் கூட வேலை செய்யும் சக ஆசிரியைகள், எங்கள் பள்ளிக்கூடம் இருக்கும் தெருவிலேயே ஒரு சாமியார் இருப்பதாகவும்,அவர் மிகவும் பிரசித்தி பெற்றவர் எனவும், அவரை ஞாயிற்று கிழமை விடியற்காலையில் சென்று பார்த்தால், அம்மா உடல் நிலை சரியில்லாததற்கு ,அவர் ஏதும் பரிகாரம் செய்வார் என கூறவே ,ஒரு நாள் ஞாயிற்று கிழமை விடியற் காலையில், அம்மாவுடன் ,நானும் அந்த சாமியார் வீட்டிற்க்குச் சென்றேன்.எங்களுக்கு முன்னால் ஐம்பதுக்கும் மேற்ப்பட்டவர்கள், அவரை பார்ப்பதற்காக, ஒரு ஹாலில் போடப்பட்ட பெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

சாமியாரின் உதவியாளர் இடம், டோக்கன் நம்பரை வாங்கிக் கொண்டு நானும், அம்மாவும் ,காத்திருந்தோம்.எங்கள் முறை வருவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆயிற்று.விடியற்காலையில் ஆறு மணிக்கு அங்கு

சென்ற நாங்கள் ,அவரை 10 மணிக்குமேல்தான் பார்க்க முடிந்தது.

அந்த சாமியார் அம்மாவிடம்,ஒவ்வொரு ஞாயிற்று கிழமையில் விடியற்காலையில், கருமாரி அம்மன் கோவிலுக்கு சென்று, சிறப்பு பூஜை செய்து விட்டு வாருங்கள்,தொடர்ந்து ஒன்பது ஞாயிற்று கிழமை அப்படி செய்துவந்தால், உங்கள் உடல் பரிபூரண குணமடைந்தது விடும்.உங்கள் உடலில் எந்த கோளாறும் இல்லை.உங்கள் உறவுக்காரர்களில் யாரோ ஒருவர் உங்கள் உடல் நிலை குன்றுமாறு, எதோ சூன்யம் வைத்துவிட்டார்கள்.அந்த சூன்யத்தை எடுக்கவேண்டும் என்றால், இந்த ஒரே ஒரு பரிகாரம்தான் இருக்கிறது".என்றார்.

"இப்போது என் உடல்நிலை இருக்கும் நிலையில், என்னால் அங்கெல்லாம் போக முடியாதே".என்றார்கள் அம்மா.

"உங்களால் போகமுடியாவிட்டால்

பரவாயில்லை.நீங்கள்தான் போகவேண்டும் என்பது இல்லை.உங்கள் சார்பாக யாராவது கோவிலுக்கு சென்று உங்கள் நட்ச்சத்திரத்திர்க்கு, உங்கள் பேரில் பரிகாரம் செய்து வந்தால் போதும்"என்றார் சாமியார் பதிலுக்கு.

அன்று மத்தியானம் வீடு வந்ததும் ,அம்மா விஷயத்தை அப்பாவிடம் கூறவே,அப்பா தானே அந்த கருமாரி அம்மன் கோவிலுக்கு போய்வருவதாக கூறியது கேட்டு அம்மாவிற்கு மிகவும் ஆச்சரியத்தை கொடுத்தது.ஏன் என்றால் அப்பா கோவிலுக்கே இதுநாள்வரையில் சென்றது கிடையாது.வீட்டில் பூஜை நடந்தால் கூட அதில் அப்பா கலந்து கொண்டது கிடையாது.

எனவே அப்பா கோவிலுக்கு போவார்கள் என அம்மாவோ, யாருமோ நினைக்கவில்லை.

அம்மாவின் சார்பாக ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும், விடியற்காலையில் நாலுமணிக்கே

எழுந்து, கருமாரி அம்மன் கோவிலுக்கு தொடர்ந்து ஒன்பது வாரங்கள் போக இருப்பதை அப்பா கூறியது நிஜமாகவே அனைவருக்கு ஆச்சரியத்தை கொடுத்தது.எதோ அப்பா தமாஷிர்க்காக சொன்னதாகவே அன்று அம்மா முதல், சந்திர பாட்டி மற்றும் நாங்கள் அனைவரும் நினைத்திருந்தோம்,

எங்கள் அனைவரது நினைப்பையும் பொய்யாக்கி விட்டார்கள் அப்பா.அப்பா சொன்னபடி ,அடுத்த வார ஞாயிற்று கிழமை விடியற்காலையில் நாலுமணிக்கே வீட்டை விட்டு கிளம்பி, கருமாரி அம்மன் கோவிலுக்கு செல்லும் காலை முதல் பஸ்ஸை பிடித்து சென்று வந்தார்கள்.அந்த கோவில், நாங்கள் வசிக்கும் இடத்திலிருந்து குறைந்த பட்சம் ஒரு மணி நேர பஸ் பயணம்.போக ஒரு மணி நேரம் வர ஒரு மணி நேரம் .இதற்கிடையில் அங்கு இறங்கி பூஜைக்கான பொருட்களை வாங்கி கொண்டு, வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்துவிட்டு ,அர்ச்சனையும் செய்துவர , குறைந்த பட்சம் இரண்டு மணி நேரத்திற்கு மேல்

ஆகும் என பேசிக்கொண்டார்கள்.

அன்று அப்பா பொறுமையுடன் நின்று ,சாமிக்கு அர்ச்சனை செய்து, அந்த பிரசாதத்தை வீட்டிற்கு கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்தார்கள்.ஜனவரி 1972-ம் வருடம் இரண்டாவது வாரம் அப்பா, தன் , முதல் வார பரிகாரத்தை முடித்தார்கள்.இன்னும் எட்டு வாரங்கள் பொகவேண்டும்.ஒன்பதாவது வாரம் மார்ச் மாதம் இறுதியில் முடிய இருந்தது.அப்பாவிற்கு இதில் எந்தவித சிரமமும் இல்லை என்று கூறிவிட்டார்கள்

பிறகு பிப்ரவரி முதல் வாரம், தாத்தா சுந்தரம் இறந்து ஓராண்டு நினைவு நாளன்று ,கீழ்பாக்கில் ,எங்கள் அப்பாவின் பெற்றோர் வீட்டில் நடைபெற இருந்ததால் ,அன்று பாட்டி சரசா வீட்டிற்கு ,விடியற்காலையிலேயே சென்றுவிட்டோம்.அன்று ஞாயிற்று கிழமை.அப்பா கருமாரி அம்மன் கோவிலுக்கு

சென்று விட்டு, நேரே அங்கு வந்துவிடுவதாக சொல்லிவிட்டு சென்றபடியால், நாங்கள் மட்டும் டாக்சியை எடுத்துக் கொண்டு, பாட்டி வீட்டிற்கு சென்று விட்டோம்.அனைவரையும் வெகு நாட்களுக்கு பிறகு, அன்று சந்திக்கும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது.எல்லோரையும் பார்த்ததில், அம்மாவிற்கு மிகவும் மகிழ்ச்சி.ஆனால் அம்மாவிற்கும், எங்கள் அனைவருக்கும் தெரியாது, இதுதான் அவர்கள் கடைசியாக உறவினர்களை பார்க்க போவது என்று.இதேபோல், அங்கு வந்திருந்த உறவினர்களுக்கும் எங்களுக்கும், தெரியாமல் போய் விட்டது ,அடுத்த மாதம், இதே இடத்தில் அம்மாவின் இறுதி ஊர்வலத்திற்கு, நாங்கள் அனைவரும், மறுபடியும் கூடப் போகிறோம் என்று.என்ன விந்தையான உலகம் இது என என் மனம் வியந்தது.அன்று தாத்தா சுந்தரம், கரும கடன்கள் முடிந்ததும், இரவு சாப்பாட்டை முடித்து விட்டு, திரும்ப எங்கள் வீட்டிற்கு, அன்றிரவே திரும்பிவிட்டோம்.

பிப்ரவரி 1972-ம் வருடம் இறுதியில், நானும்

,அம்மாவும் பள்ளிகூடத்தில் இருக்கையில், பெரியம்மாவும்,தாத்தா ஈஸ்வரனும் அம்மாவை பார்க்க வேண்டும் என எங்கள் பள்ளிகூடத்திற்கு வந்திருந்தார்கள்.பெரியம்மா கல்வி அதிகாரி என்பதால், அப்பள்ளியிலுள்ள அனைவரும் பயந்து கொண்டே எதுவும் பேசாமல் அம்மாவை பார்க்க அனுமதித்து விட்டனர்.

அப்போது பள்ளிக்கூடம் முடியும் நேரம்.இறுதி பெல் அடித்து அனைவரும் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தனர்.அம்மாவின் உடல், பெரியம்மாவின் வருகையால் நடுங்கியது.அவர்கள் முகம் கலவரத்துடன் காணப்பட்டது.அம்மாவின் அறைக்குள் நான் நுழைந்ததும், பெரியம்மா என்னிடம் “நீ பள்ளிகூடத்திலே இரு,நாங்கள் அம்மாவை அழைத்துக் கொண்டு போய், ஹோட்டலில் காப்பி குடித்துவிட்டு ,திரும்ப இங்கேயே கொஞ்சம் நேரத்தில் கொண்டு வந்து விட்டுவிடுகிறேன்”என்றார்கள்.

“அம்மா என்னிடம் “நான் திரும்பி வரும்வரை

எங்கும் போகாதே.நேரம் ஆகிவிட்டால் ரிக்ஷாகாரரை போகச் சொல்லிவிட்டு,நான் திரும்பி வந்ததும் வேறொரு ரிக்ஷா பிடித்து வீட்டுக்கு சென்று விடலாம்"என கூறிவிட்டு பெரியம்மா காரில் ஏறி சென்று விட்டார்கள்.

பள்ளிக்கூடம் முடிந்து ,நான்கு மணிக்கு அம்மா சென்றதும்,பள்ளிகூட கட்டிடம் முன் உள்ள படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.மணி ஐந்து அடித்ததும் பள்ளிக்கூடத்தில் யாருமே இல்லை.பள்ளிகூட பியூன் கேட்டை பூட்டிக்கொண்டு கிளம்ப தயாரானார்.நான் வேறு வழி இல்லாமல் கேட்டிற்கு வெளியே தெருவிலுள்ள பிளாட்பார்மில் உட்கார்ந்து, அம்மா வருகைக்காக காத்திருந்தேன்.ரிக்ஷா காரர் ,நான் ஏற்கனவே லேட் ஆகும் என கூறி அனுப்பிவிட்டதால்,அவரும் அங்கு இல்லை.என் மனம் திக்திக்கென பயத்தல் அடித்துக் கொண்டது.அம்மா எங்கு போயிருப்பார்கள்?ஏன் இன்னும் வரவில்லை?என மனதிற்கு பீதி அதிகமாகிகொண்டே சென்றது நேரம் ஆக ஆக.

மணி ஆறு ஆயிற்று.பள்ளிக்கூடம் முடிந்து இரண்டு மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது.இன்னமும் அம்மாவை காணவில்லை.அம்மா இல்லாமல் வீட்டிற்கு செல்லவும் மனம் இடம் கொடுக்கவில்லை.குழம்பிய ,பயந்த நிலையில் உட்கார்ந்திருந்தேன்.வெளிச்சம் மங்கிக் கொண்டே சென்றது.இருள் லேசாக பூமியை தழுவ ஆரம்பித்தது.எதற்காக மறுபடியும் பெரியம்மா பேச்சை நம்பி, அம்மா அவர்களுடன் சென்றார்கள்?நானும் கூடவே சென்றிருக்கலாமே.என் அம்மாவை தனியாக போக விட்டேன்?என்ற கவலையுடன் ஸ்கூலுக்கு முன்னால் உள்ள ஒரு கல்லின் மேலே உட்கார்ந்து கொண்டு ,அம்மா வருகிறார்களா? என இருபுறமும் மாறி ,மாறி பார்த்துக் கொண்டே இருந்தேன்.

சரியாய் 6:30 மணிக்கு ,பாதி இருட்டிவிட்ட நேரத்தில், பெரியம்மாவின் கார் பள்ளிகூடத்தின் முன் வந்து நின்றது.நான் காரின் அருகே ஓடிச் சென்று கதவை திறந்து அம்மாவை

கைத்தாங்கலாக இறக்கினேன்.பெரியம்மாவும்,தாத்தாவும் ஒன்றும் பேசாமல் அம்மாவை இறக்கிவிட்டு விட்டு சென்று விட்டார்கள்.எங்களது நல்ல காலம், எங்கள் ரிக்ஷாகாரர் சவாரி ஏற்றி சென்றிருந்தவர், சரியான சமயத்தில் திரும்பி வந்தது எங்கள் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.உடனே அவர் ஓடிவந்து அம்மாவ ரிக்ஷாவில் ஏற்ற உதவி செய்துவிட்டு, எங்களை வீட்டில் கொண்டு வந்து விட்டுச் சென்றார்.

வழியில் நான் அம்மாவிடம் "ஏம்மா இவ்வளவு நேரம் ஆயிற்று ?"என்ன நடந்ததது?"என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை,சும்மாதான் ஏதேதோ பேசினோம்.நேரம் போனதே தெரியவில்லை"என சமாளித்தார்கள்.வீடு அடைந்ததும் மணி 6:45ஆகிவிட்டது.பக்கத்து வீட்டு கிரிஜா ஆண்டியும்,சந்திரா பாட்டியும்,மிகவும் கவலையுடன் வாசலில் நின்று ஏன் இவ்வளவு

நேரமாகியும் நாங்கள் ஸ்கூல் முடிந்து வரவில்லை என்ற நினைத்துக் கொண்டே நின்றிருந்தார்கள்.எங்களை கண்டதும் “என்ன இவ்வளவு தாமதமாக வருகிறீர்கள்?நாங்கள் எல்லோரும் பயந்தே போய்விட்டோம்.”என்றார்கள் கிரிஜா ஆண்டி.

“என் அக்காவும்,அப்பாவும் வந்திருந்தார்கள்.பேசிவிட்டு வருவதற்குள் சற்று நேரமாகிவிட்டது”என்றார்கள் அம்மா.

“உங்க கண்கள் சிவந்திருக்கிறதே.அழுதீர்களா?”என்று மறுபடியும் கேட்டார்கள் கிரிஜா ஆண்டி.

“இல்லை.என்னவோ தெரியவில்லை” என மழுப்பிவிட்டார்கள் அம்மா.

அன்றிரவு சாப்பிட்டுவிட்டு அனைவரும் முன் அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கையில் ,அப்பாவும் சாப்பாட்டை முடித்துவிட்டு வந்து உட்கார்ந்திருந்தார்கள்.அம்மா சோகமாக

காணப்பட்டார்கள்.அப்பாவிடம் மெதுவாக பேச்சை ஆரம்பித்தார்கள்.

“அக்காவும்,அப்பாவும் மத்தியானம் 3:30 மணி போல் ஸ்கூலுக்கு வந்து, ,ஸ்கூல் முடிந்ததும், என்னை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று, காப்பி குடித்து வரலாம் என ,என்னை மட்டும் தனியாக காரில் ஏற்றி சென்று, அருகிலுள்ள பார்க்கில் நிறுத்திவிட்டு, பையிலிருந்து சில லீகல் பேப்பேர்களை சிலவற்றை எடுத்து என்னிடம் கொடுத்து அதில் கையெழுத்திடச் சொன்னார்கள்.”என்று கண்ணில், கண்ணீர் போங்க கூறினார்கள்.

“என்ன பேப்பர் அவைகள் எல்லாம்?என்ன எழுதி இருந்தது அதில்?”என அப்பா கேட்டார்கள்.

“அதில் எதுவும் எழுதி இருக்கவில்லை.வெறும் வெள்ளை லீகல் பேப்பேர்கள் .”என்றார்கள் அம்மா.

“நீ கையெழுத்து போட்டியா?”என்று கேட்டார்கள் அப்பா.

“ஆமாம்.முதலில் உங்களை கேட்காமல் நான் கையெழுத்து போடமாட்டேன் என்று மறுத்தேன்.ஆனால் அக்கா விடாமல், என்னை வற்புறுத்தினாள், .பயமுறுத்தினாள் ,அப்படியும் மறுத்தேன்.என் கன்னத்தில் பளீர்,பளீரென அறைந்து கையெழுத்து போடாவிட்டால் என்னை திருப்பி அனுப்ப முடியாது என மிரட்டினாள் .அனிதா வேறு தனியாக ஸ்கூல் முடிந்து தெருவில் உட்கார்ந்திருப்பாள்,வயது பெண் தனியாக இருப்பது எனக்கு சரியாக படவில்லை,எனவே எல்லா பேப்பர்களிலும் கையெழுத்து போட்டுவிட்டு அவர்களுக்கும் ஒரு முழுக்கு போட்டுவிட்டு வந்துவிட்டேன்” என்று சொல்லி விட்டு அம்மா அழுதார்கள்.

“கையெழுத்து போடும் முன், எதற்கு அதை வாங்குகிறார்கள் என உனக்கு எதுவும் விவரம் சொன்னார்களா?அல்லது விவரத்தை சொல்லாமல் உன் கையெழுத்தை வாங்கி கொண்டார்களா?”என அப்பா கேட்டதற்கு

“அண்ணா நகரில் ,அவள் வீட்டு பக்கத்தில் நாம் வாங்கிய முன்று கிரௌண்டு நிலத்தை என் அண்ணன் ஜகந்நாதனுக்கு எழுதிவைக்குமாரும்,மேலும் சென்னையில் ,என் பேரிலுள்ள மற்ற நிலங்களையும்,சிதம்பரத்திலுள்ள என் பெயரிலுள்ள சொத்துக்கள்,நிலம்,பணம் யாவற்றையும் அவன் பெயருக்கே, நான் எழுதி கொடுப்பது போல எழுதப்போவதாக கூறி,அதற்க்கு என்னிடம் முன்பாகவே வெறும் பேப்பரில் கை எழுத்துவாங்கி கொண்டு போய், பிறகு விரங்களை பூர்த்து செய்து கொள்ளப்போவதாக கூறினார்கள்.”என அம்மா சொல்லும்போதே கண்களிலிருந்து நீர்

வழிந்தோடியது.

“அடிப்பாவி, அவ நல்லகதிக்கு
போவாளா?இப்படி உடல்நிலை சரியில்லாத
பெண்ணை தனியே அழைத்துச் சென்று அடித்து
,கையெழுத்து வாங்கிகிரார்களே ,இவர்கள்
எல்லாம் என்ன கூடப் பிறந்தவகளா?பெற்ற
அப்பாவும் இப்படி செய்யக் கூடிய
காரியமா?”என சந்திரா பாட்டி மனக்
கஷ்டத்துடன் கூறிவிட்டு அம்மாவுடன் சேர்த்து
அவர்களும் அழுதார்கள்.

“போனால் போகட்டும்,உன்னை எதுவும்
செய்யாமல்சியாமல் முழுதாக
அனுப்பிவைத்தார்களே அதுவே
போதும்,மற்றவைகளை பற்ற கவலை
வேண்டாம்,போனால் போகிறது.கவலை படாமல்
நிம்மதியாக தூங்கு”என அப்பா அம்மாவை
தேற்றி ஆறுதல் கூறினார்கள்.

“மறுபடியும் அவள் பள்ளிக்கூடம் வந்து தகராறு செய்தால், நான் என்ன செய்வது?” என்றார்கள் அம்மா பயத்துடன்.

“நாளைக்கே, நான் ஸ்கூலுக்கு வந்து ,தலைமை ஆசிரியையிடம் சொல்லி, ஒரு வாரம் லீவு கேட்டு கடிதத்தை கொடுத்து விட்டு வந்து விடுகிறேன்.அடுத்த வாரம், நாம் ரெண்டு பெரும் ஸ்கூலுக்கு சென்று, தலைமை ஆசிரியையிடம் விவரகங்களை எடுத்துக் கூறி, உன்னை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கக் ஏற்பாடு செய்துவிட்டு வரலாம்.இனி உன் அக்கா உன்னை ஸ்கூலில் வந்து தொந்தரவு செய்தால், அவளை பற்றி நீதி மன்றத்தில் வழக்கு போட இருக்கிறேன் என்றும் விரிவாக எழுது கொடுத்துவிட்டு, ஒரு காப்பியை, உன் அக்காவிற்கும், இரு காப்பியை உன் தலைமை ஆசிரியைக்கும் கொடுத்துவிடலாம்”என அப்பா

கூறிய தைரியத்தில் அன்று அம்மா சற்றே நிம்மதியாக படுத்து உறங்கினார்கள்.

மறுநாள் அம்மா பள்ளிக்கூடம் போகவில்லை.அம்மா இல்லாமல் நான் மட்டும் சைக்கில் ரிக்க்ஷாவில் ஸ்கூலிற்கு சென்றேன்.அப்பா அம்மாவிடம் ,ஒரு வாரம் லீவு லாஸ் ஆப் பே ,அதாவது சம்பளம் இல்லாத லீவு கேட்டு கடிதம் எழுதி வாங்கி கொண்டு, எங்கள் பள்ளிக்கு வந்து தலைமை ஆசிரியையிடம் கொடுத்துவிட்டு, முதல் நாள் நடந்த விஷயாத்தை சுருக்கமாக கூறிவிட்டு, ஒரு வாரத்திற்கு பிறகு, அம்மா பள்ளிக்கூடம் வந்தால், தகுந்த பாதுகாப்பு தர வேண்டும் என தயவு பண்ணி கேட்டுக் கொண்டு கிளம்பினார்கள். பள்ளிகூடத்திலிருந்த சக ஆசிரியைகளும்,அலுவலக ஊழியர்களும்,தலைமை ஆசிரியையும் மிகவும் மனம் கஷ்டப்பட்டார்கள்.இவ்வளவு பேர் இருந்தும் ,அம்மாவை தனியாக அவர்களுடன் அனுப்பிவிட்டோமே என்று.

ஒரு வாரம் அம்மா இல்லாமல், நான் மட்டும் தனியாக ஸ்கூலுக்கு சென்று வந்தேன் . லீவு முடிந்து, அம்மா பள்ளிக்கூடம் திரும்பியதும், அனைவரும் அம்மாவிடம் சென்று, தங்கள் வருத்தங்களை தெரிவித்ததோடில்லாமல், மிகவும் வேதனையுடன் கொதித்தெழுந்து “இனிமேல் உங்களை யாரும் அணுகாமலும்,தனியே தன்னுடன் கொண்டு செல்லாமலும் நாங்கள் எல்லோரும் பார்த்துக் கொள்கிறோம்.இனிமேல் நீங்கள் லீவு போட வேண்டிய அவசியமே இல்லை.மேலும் நீங்கள் லீவில் இருந்தபோது ,மறுபடியும் ஒரு நாள், உங்கள் அக்கா மட்டும் ,உங்களை பார்ப்பதற்காக வந்துவிட்டு, நீங்கள் இல்லாதது கண்டு ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்”என்றும் கூறிவிட்டு அம்மாவிற்கு அனைவரும் தைரியம் அளித்தனர்.

அதன் பிறகு ஒருசில வாரங்கள் அம்மாவும்,நானும் எந்தவித இடறுமில்லாமல் ஸ்கூலுக்கு சென்று வந்தோம்.1972-.ம் வருட பள்ளி இறுதியாண்டு பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது.ஏப்ரல் முதல் வாரம் இறுதி

தேறுதல். .அம்மாவும் மும்முரமாக கேள்வி தாள்களை எல்லாம் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

மார்ச் 1972 முதல் வாரமும் தொடங்கியது.ஒருநாள் நாங்கள் பள்ளிகூடத்திலிருந்து வீடு திரும்புகையில்,அம்மாவின் வருகைக்காக ஒருவர் எங்கள் வீட்டில், மாநிறத்துடன்,தலையில் முடி அவ்வளவாக இல்லை.கண்ணாடி அணிந்திருந்தார்.வெள்ளை சட்டையும்,வெளி சாம்பல் நிற பாண்ட்டும் அணிந்திருந்தார்.நானும் அம்மாவும் வீட்டினுள் நுழையும் போது, அவர் சந்திரா பாட்டி கொடுத்த காப்பியை குடித்துக் கொண்டிருந்தார்.நான் அம்மாவை மெதுவாக கைத்தாங்கலாக இறக்கி, அழைத்து வருவதை பார்த்து எழுந்து நின்று ,அம்மாவை மௌனமாக பார்த்தார்.

அவரை பலவருடங்களுக்குப் பிறகு எதிர்பாராத விதமாக பார்த்த மகிழ்ச்சியில் அம்மா அவரை “சச்சின்,வா,வா,எப்போது வந்தாய்?காலேஜில்

படிக்கும் போது பார்த்ததுதான்.அப்படியே இருக்கே,மாற்றமே இல்லை"என்றார்கள்.

"கொஞ்சம் நேரத்திற்கு முன்தான் வந்தேன்"என்றார் அவர்.

நான் அம்மாவை ,அவர்கள் கட்டிலில் உட்காரவைத்ததும்,

"உட்காரு, சச்சின்.எப்படி நான் இருக்கும் இடத்தை கண்டு பிடித்தாய்?"என கேட்டார்கள் அம்மா.

"நான் ஒரு முக்கிய விஷயமாக உன் அக்கா சேதுவை பார்க்கச் சென்றேன்.அவள்தான் உன் முகவரியை என்னிடம் கொடுத்து,உன் உடல் நிலையை பற்றியும் சொன்னாள்.எனவேதான் உன்னை பார்த்துவிட்டு போகலாம் என வந்தேன்"என்றார்.

பிறகு அம்மா எங்கள் நால்வரையும் அவருக்கு அறிமுகபடுத்தி வைத்துவிட்டு ,அவர்கள் காலேஜில் கழித்த இன்ப நாட்களை பற்றி

பேசிக் கொண்டும்,அவர்கள்கூட படித்தவர்கள் யார்,யார்,எங்கெங்கு இருக்கிறார்கள் எம்பதையும் பேசிக் கொண்டிருந்தனர்.

“எப்படி மகாராணிபோல வாழ்ந்த நீ ,இப்படி உருக்குலைந்து ஆகிவிட்டியே.காலை தூக்கி டங்,, டங் என மேடையில் ஒரு உதய் உதைத்து மேடை அதிர ஆடிய, இந்த கால்களா இப்படி நடக்கமுடியாமல் நாற்காலியில் முடங்கி கிடக்கிறது.உன் நல்ல மனதிற்கு கடவுள் ஏன் இப்படி ஒரு சோதனையை உன் வாழ்வில் கொடுக்கவேண்டும்.உலகத்தில் கெடுதல் செய்பவர்களேல்லாம் நன்றாக வாழும் போது,பலருக்கு காலேஜ் படிக்கும் போது உதவிய உனக்கு ஏன்? இவ்வளவு பெரிய தண்டனையை ஆண்டவன் கொடுக்கவேண்டும்”என கண்கலங்க பேசினார் அந்த சச்சின்.

சச்சின் என்பவரும், அம்மாவும் ஒன்றாக காலேஜில் படித்தவர்கள் என்றும்,அம்மா என்றால் சச்சினுக்கு மிகவும் அன்பும்,பாசமும்

உண்டு என்றும்,காலேஜ் படிப்பு முடிந்தவுடன் திருமணம்,குடும்பம் என அவரவர்கள் பிரிந்து சென்று, 20 வருடங்களாக அவர்களுடன் படித்த யாருடனும் எந்த தொடர்பும் இல்லை என்றும் ,அவர்கள் பேசச் வார்த்தைகளிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

“மங்கை உன் பெற்றோரோகள், உன்னை இராணி மாதிரி வளர்த்தார்கள்.அவர்கள் உனக்காக கடல்போல பெரிய வீட்டை சிதம்பரத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள்.அங்கு போய் ஜாம்,ஜாம், என்று வாழ்வதை விட்டு விட்டு, இந்த சிறிய வீட்டில்,சூதாடி பணத்தை விரயமாக்கும் கணவனுடன் நீ அவசியம் வாழவேண்டுமா?இப்படி கஷ்டப்பட்டு கொண்டு வாழும் தலைவிதி உனக்கு அவசியம்தானா?நான் சொல்வதை தயவு செய்து கேள் மங்கை.உனக்கு உயர்ந்த படிப்பிருக்கிறது,நல்ல கை நிறைய சம்பாத்தியமும்,உத்தியோகமும் இருக்கிறது.உன் பேரில் நிறை சொத்து இருக்கிறது.பேசாமல் குழந்தைகளுடன் நீ மறுபடியும் உன் அப்பா இருக்கும் ஊருக்கே சென்று விடு”என

கெஞ்சுவது போல பேசினார் சச்சின்.

“இல்லை சச்சின்,இந்த வாழ்க்கையே எனக்கு நிம்மதியாக இருக்கிறது.எனக்கு அவர்கள் சொத்தில் ஒரு பைடாகூட வேண்டாம் என எழுதி கொடுத்துவிட்டேன்.போனவாரம் கூட சென்னையில் நாங்கள் இருவரும் வாங்கிய நிலத்தைக்கூட அவர்களுக்கு எழுதி கொடுத்துவிட்டேன்.”என்றார்கள் அம்மா அமைதியாக.

அப்போது சச்சின் ,அம்மா கையில் தன முகவரி கார்டை கொடுத்து ஏதும் உதவி வேண்டுமென்றால் தனக்கு கடிதம் போடும்படியும்,தான் உடனடியாக வந்துவிடுவதாகவும்,உதவி கேட்டு கடிதம்போடவோ,உதவி கேட்கவோ தயங்கவேண்டாம் என்றும் கூறினார்.

அம்மா அவர் கொடுத்த கார்டை வாங்குகையில்,

அது அம்மாவின் கைதவறி பக்கத்தில் விழுந்து விட்டது.அம்மா அந்த கார்டை எடுக்க முயற்சிக்கையில் , அந்த கார்ட் விழுந்த இடத்தை விட்டுவிட்டு அதற்கருகில் கைவைத்து கார்டை எடுக்க முயற்சித்தார்கள்.ஆனால் கார்ட் கைக்கு வராததால் ,மேலும், மேலூம் அங்கு கைவைத்து கார்டை எடுக்க முயற்சிப்பதை பார்த்த, சச்சின் அங்கிள், சற்றே குழப்பத்துடன்,

:"என்ன மங்கை செய்கிறாய்?"என கேட்டார்.

"கார்டை எடுக்க பார்க்கிறேன் அது என்ன கையில் வரமாட்டேன் என்கிறதே."என்று சலித்துக் கொண்டார்கள் அம்மா.

"நான் கொடுத்த கார்ட் இங்கே விழுந்திருக்கிறது

மங்கை,நீ வேறு எங்கோ கை வைத்து எடுக்க பார்க்கிறாய்”என்றார் சச்சின் அங்கிள்.

பிறகு அவர் அம்மாவின் கையை எடுத்து கார்ட் விழுந்த இடத்தில் கார்டிற்கு மேலே வைக்கவே, அம்மா சிரித்துக் கொண்டே “அட கடவுளே,நீ கொடுத்த கார்ட் என் பக்கத்திலேயே விழுந்திருக்கிறது.நான் வேறு எங்கோ கை வைத்து எடுக்க பார்க்கிறேன்.என் கண்களை கண் டாக்டேரிடம் டெஸ்ட் பண்ண வேண்டியதுதான். இப்ப எல்லாம், எனக்கு எல்லாம் இரண்டாக தெரிகிறது சச்சின்”என்று அம்மா கூறியதும் சச்சின் அங்கிள் சற்றே பிரம்மை பி டித்தவராக அம்மாவையே பார்த்துக்கொண்டிருந்தார்.

‘நான் டாக்டர் இல்லை, ஆனால் என்னால் நாடி பார்த்து சொல்ல முடியும்.உன் ரிஸ்ட் காட்டு,

உன் நாடி எப்படி இருக்கிறது என்று பார்த்து சொல்கிறேன்”என்றதும்

அம்மா தன் கையை நீட்டியதும் ,சச்சின் அங்கிள் அம்மாவின் ரிஸ்டை பார்த்துக் கொண்டிருந்தார்.சிறிது நேரம் தன் கைகடிகாரத்தை பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, பிறகு பேசாமல் எதோ யோசனையில் இருந்தார்.

“என்ன சச்சின் எதுவும் பேசாமல், எதோ திக்பிரம்மை பிடித்தாற்போல உட்கார்ந்துவிட்டாய்?”என்று அம்மா சிரித்துக் கொண்டே கேட்டார்கள்.

அம்மாவின் குரல் கேட்டு தன் நினைவிற்கு திரும்பியவராய்

“ஒன்றுமில்லை மங்கை,உன் உடல் நலத்தை நன்றாக பார்த்துகொள்.குழந்தைகளுக்காகவாவது நீ நீண்ட நாட்கள் வாழவேண்டும்.நீ உதவி என

கடிதம் போட்டால், உடனே நான் தாமதிக்காமல் வந்துவிடுகிறேன்.நன்றாக யோசித்து , நல்ல முடிவெடுத்து நீண்ட ஆயுசுடன் நீ வாழ கடவுளை
வேண்டிகொள்கிறேன்".நேரமாகிவிட்டது நான் புறப்படுகிறேன்"என அவர் கூறுகையில் அவர் கன்னத்தில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது.

சச்சின் அங்கிள் அம்மாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு , கிளம்பி வெளியே செல்கையில், அங்கு வெளியே நின்றுகொண்டிருந்த கிரிஜா ஆண்டியிடமும், ஸ்ரீனி அன்கிளிடமும் எதோ ரகசியமாக சிறிது நேரம் பேசிவிட்டு சென்றுவிட்டார்.

நாங்கள் அம்மாவிடம் சச்சின் அங்கிள் எதோ பக்கத்துவீட்டு கிரிஜா ஆண்டியிடம்

பேசிகொண்டிருக்கிறார் அம்மா என்றதும்,அம்மா அதை மிகவும் பெரிதாக கருதாமல் இருந்துவிட்டார்கள்.

அன்றிரவு அப்பா வீடு திரும்புகையில், நேராக வீட்டிற்குள் வராமல் பக்கத்திலுள்ள கிரிஜா ஆண்டி போர்ஷனுக்குள் சென்றதை அம்மா ஜன்னல் வழியாக பார்த்து விட்டார்கள்.

அத்யாயம்-நாற்பத்தி இரண்டு

அரைமணி நேரம் கழித்து அப்பா வீட்டிற்குள் நுழைந்ததும். “என்ன விஷயம், நேரே பக்கத்து வீட்டிற்கு போயிட்டீங்க?”என அம்மா கேட்டதற்கு.

“கிரிஜாவும்,ஸ்ரீனியும் என் வரவிற்காக ஜன்னல் வழியாக பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ,நான் வருவதை பார்த்ததும் சிறிது பேச வேண்டும் உள்ளே வரமுடியுமா ?என அழைத்துச் சென்று, உன் காலேஜ் சிநேகிதர் சச்சின் ,அவர்களிடம் கூறியதை என்னிடம் சொல்லி ,உன்னை

உடனடியாக ஆஸ்பத்தரிக்கு அழைத்துச் சென்று பரிசோதித்து வருமாறு சொன்னார்கள்" என்றார்கள் அப்பா.

"சச்சின் என்ன கூறினான் அவர்களிடம்"என அம்மா கேட்டார்கள்.

"நீ அவரிடம் எல்லாம் இரண்டாக தெரிகிறது என்றாயாமே, அதோடு இல்லாமல் உன் இருதய நாடியும், ரொம்ப குறைவாக இருப்பதால்,அவசியம் உன்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லுமாறு, என்னிடம் கூறச்சொல்லி போனாராம்.தாமதித்தால் நிலைமை மோசமாகிவிடும், பிறகு நாம் எல்லாம் மனக்கஷ்டம் ஏற்பாடும் நிலை வருவதற்குமுன், மருத்துவ பரிசோதனைக்கு அழைத்துச் சென்று, என்ன குறை என உடனடியாக கண்டுபிடித்து, சிகிச்சை அளிக்குமாறு கூறிவிட்டுச் சென்றாராம்"என்றார்கள் அப்பா.

உடனே சந்திரா பாட்டி குறுக்கிட்டு"ஆமாம்ப்பா தேவன்,நான் வந்தது முதல் கவனித்து

கொண்டுதான் வருகிறேன்.நான் எது கொடுத்தாலும், என் கையிலிருந்து வாங்காமல், வேறு பாகம் கைநீட்டி வாங்க முயற்சிக்கிறது மங்கை.எல்லாம் இரண்டாக தெரிகிறது போலிருக்கிறது"என்றார்கள் .

அப்பா எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, உடைகளை மாற்றிக் கொண்டு, இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு,முன் அறையில் உட்கார்ந்திருக்கையில் "நான் எதற்கும், என் கசினிடம், நாளை இதுபற்றி பேசி, விஷயத்தை என்ன என அறிந்துவிட்டு ,இதற்க்கு என்ன செய்யலாம் என கேட்டு வருகிறேன்.இதற்கிடையில் என் அம்மாவிடம் பேசிவிட்டும் வருகிறேன்"என அப்பா சொன்னார்கள்.

ஏப்ரல் முதல் வாரம் துவங்க இருக்கும், இறுதி பரீட்ச்சைக்காக எங்களுக்கு ஸ்டடி ஹாலிடே ஒரு வாரத்திக்கு விட்டிருந்தார்கள். அது மார்ச் 1972-ம் வருடன் நாலாவது வாரம்.எனவே மறுநாள் முதல் அனைவரும் வீட்டிலிருந்தோம்.

“நான் ஒரு வாரம் வீட்டிலிருக்கும் போதே, என் மருத்துவ பரிசோதனையை முடித்துவிடலாம்.அடுத்த மாதம் இறுதி பரீட்சை. பிறகு ,பரீட்சை தாளை திருத்த வேண்டும்.மிகவும் பிசியாகிவிடுவேன்.இந்த வாரமே மிகவும் வசதியான வாரம் என் செக்கப்பிற்கு”என அம்மா சொன்னதில், அப்பாவிற்கும் அது சரி என்றே பட்டது.

இரவு பதினோரு மணி அளவில் அனைவரும் படுத்து தூங்கிவிட்டோம்.மறுநாள் மார்ச் 22-ம் தேதி, பதன்கிழமை.என்றே நினைக்கிறன்.காலையில் வழக்கம் போல அனைவரும் எழுந்து வேலைகளை செய்து கொண்டிருந்தோம்.நாங்கள் நால்வரும் மும்முறமாக பரீட்சைக்கு படித்துக் கொண்டிருந்தோம்..அம்மா எங்களை உட்காரவைத்துக் கொண்டு பரீட்ச்சைக்கான பாடங்களை ,எங்களுக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.சந்திரா பாட்டி சமயலறையில் மிகவும் பிசியாக இருந்தார்கள்.அப்பா காலை 11 மணிக்கு

சாப்பிட்டுவிட்டு, அம்மா விஷயமாக பொது மருத்துவமனியில் மருத்துவராக இருக்கும் அப்பாவின் கசினை பார்த்து விவரத்தை கூறி, மருத்துவ பரிசோதனைக்கு ஏற்பாடு செய்துவிட்டு வர புறப்பட்டு சென்றுவிட்டார்கள்.

அன்றிரவு வீடு திரும்பிய அப்பா,அம்மாவிடம்"நேற்று என் கசினை பார்த்து உன் நிலைமையை சொன்னேன்.அவன் உடனடியாக உன்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துவரச் சொன்னான்.நாளை காலையில் ஒன்பது மணிக்கு, உனக்கான எல்லா மருத்துவ பரிசோதனைக்கும் அவன் தயார் படுத்திவைப்பதாக கூறிவிட்டான்.எனவே காலையில் சீக்கிரமாக எழுந்து தயாராகிவிட்டால், நாம் எட்டு மணிக்கே கிளம்பி ஒன்பது மணிக்குள் அங்கு சென்றுவிடவேண்டும்"என்றார்கள. பிறகு சந்திரா பாட்டியிடம் திரும்பி,சித்தி, காலையில் சீக்கிரமாக ப்ரேக்பாஸ்ட் தயார் பண்ணிவிடுங்கள்.நாங்கள் ரெண்டு பேர் மட்டும்

ஆஸ்பத்திரிக்கு போய்விட்டு, மதிய சாப்பாட்டிற்கு வந்து விடலாம் என நினைக்கிறேன் .பரிசோதனை எல்லாம் எவ்வளவு நேரமாகும் என தெரியவில்லை "என்றார்கள் அப்பா,

பிறகு என்னை பார்த்து,"அனிதா நீ காலையில் எழுந்து அம்மாவுக்கு வேண்டியதை எல்லாம், சரியாக எடுத்துவைத்து தயார் செய்துவிடு "என்றார்கள்.

மேலும் அப்பா தொடர்ந்தார்கள்,"நான் அம்மாவிடம் காலையில் எட்டுமணிக்கு இங்கு காரை அனுப்பச்சொல்லி, சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்.எனவே கார் சரியாக குறித்த மணிக்கு வந்து விடும்."என்றார்கள் அப்பா.

"நாம டாக்சியிலேயே போயிருக்கலாமே, ஏன் வீணாக உங்கள் அம்மாவை தொந்தரவு கொடுத்தீர்கள்"என அம்மா கூறினார்கள்.

"நம் காரில் சென்றால் நம் இஷ்டப்பட்டு திரும்ப

வரலாம், போகலாம்.டாக்சி என்றால் ஒவ்வொரு சமயமும் நான் போய் அழைத்துவர வேண்டும்.மீட்டருக்கு மேலே அதிக பணம் கேட்பான்.எல்லாம் தொல்லைதான்.அம்மா முதலில், கார் கொடுக்க மறுத்தார்கள்.ஏன்? என்றால் அந்த காரில்தான் எங்கள் அப்பாவை கடைசியாக, அதே பொது மருத்துவ மனைக்கு ,அதே கசினிடம் அழைத்து சென்று, மறுநாள், இதே காரில்தான் அப்பாவின் இறந்த உடலை எடுத்து வரப்பட்டது. இது ஒரு அதிர்ஷ்டமில்லாத கார்.இதில் உடல்நிலை சரியில்லாத உன் மனைவியை ஏற்றி செல்லாதே.டாக்சியில் அழைத்து போ என்றார்கள் அம்மா.நான்தான் டாக்சி வேண்டாம் என பிடிவாதமாக, அவர்கள் காரை அனுப்பச் சொன்னேன்.மேலும் இந்த முறை அப்படி ஒன்றும் நடக்காது என ஆறுதல் கூறிவிட்டு வந்திருக்கிறேன்"என்றார்கள் அப்பா புன்முறுவலுடன்.

அம்மாவும் பதிலுக்கு ஒரு முன்முறுவலை உதிர்த்துவிட்டு எதுவும் பேசாமல்

இருந்துவிட்டார்கள்.

மறுநாள் காலையில், நான் அம்மாவை குளிக்க உதவி செய்து, உடைகள் மாற்றவும் உதவி செய்து விட்டு, முடித்தவுடன் ,சந்திர பாட்டியும் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் ப்ரேக்பாஸ்ட் அவசராவசரமாக ரவா உப்புமாவை செய்து கொடுத்ததை, சாப்பிட்டுவிட்டு பாட்டி சரசா வீட்டிலிருந்து கார் வருவதை எதிர்ப்பார்த்து காத்திருந்தார்கள்.சிறிது நேரத்திர்க்கேலாம் பாட்டி சரசாவின் வீட்டிலிருந்து, கார் வாசலில் வந்து நின்றது.அப்பா அம்மாவை கைத்தாங்கலாக பிடித்து கார் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.பக்கத்து வீட்டு கிரிஜா ஆண்டியும், வெளியே அம்மாவை வழி அனுப்ப வந்து நின்றிருந்தார்கள்.நாங்கள் நால்வரும்,சந்திரா பாட்டியும் வெளியே வந்து நின்றிருந்தோம்.

“நான் போகிறேன்,குழந்தைகளை பார்த்துக் கொள்ளுகள்”என அம்மா கிரிஜா ஆண்டியிடம் கூறினார்கள்.

“ஏன் போகிறேன் என்று சொல்கிறீர்கள்.போய் வருகிறேன் என சொல்லுங்கள், உங்களுக்கு எந்த குறையுமிருக்காது.நல்லா சேதியுடன்தான் இன்று மாலையே நீங்கள் வீடு திரும்ப போறீங்க”என்றார்கள் கிரிஜா ஆண்டி.

அம்மா ஒரு வறட்டு சிரிப்புடன், மௌனமாக கிரிஜா ஆண்டி சொல்வதை கேட்டுவிட்டு காரில் ஏறி உட்கார்ந்து கொண்டதும்,அப்பாவும் ஏறிய உடன் கார் புறப்பட்டு சென்று விட்டது.கார் சென்றதும், கிரிஜா ஆண்டி ,சந்திரா பாட்டியிடம் “அபசகுணமாக போகிறேன் என்று விடை பெற்று செல்கிறார்களே உங்கள் மருமகள்,போய் வருகிறேன் என கூறுங்கள் என நான் திருத்தியும்கூட, எதுவும் சொல்லாமல் இப்படி போனால் எப்படி?”என அழுதுகொண்டே, முக்கை உருஞ்சியபடியே கூறினார்கள்.

ஆனால் அன்றுதான் நாங்கள் எல்லோரும் அம்மாவை பார்ப்பது கடைசி என்று யாருக்குமே தெரியாது.தெரிந்திருந்தால் அனைவரும் அம்மா கூடவே அன்று ஆஸ்பத்திரிக்கு சென்றிருப்போம்.

கிரிஜா ஆண்டி ஏன் அழவேண்டும்?அம்மா செக்கப்புக்குதானே செல்கிறார்கள்.இதை ஏன் அனைவரும் பெரிது படுத்தி மனது கஷ்டப்படவேண்டும்?என என் மனம் வரப்போகும் இடியை பற்றி துளியும் உணராமல் எண்ணியது.

அம்மா ஆஸ்பத்திரிக்கு சென்றதும் நாங்கள் பக்கத்து வீட்டு சிநேகிதர்களுடன் விளையாடிகொண்டிருந்தோம்,அம்மா திரும்ப வரப்போகிறார்கள் என்ற முழு நம்பிக்கையுடன்.காலையில் எட்டு மணிக்கு வீட்டை விட்டு சென்ற அப்பாவும்,அம்மாவும் இரவு ஏழு மணி ஆகியும் வீடு திரும்பாதது குறித்து கிரிஜா ஆண்டியும்,சந்திரா பாட்டியும் மிக கவலையுடன் ,ஏன் வரவில்லை என்னவாக இருக்கும்? என பேசுவதும்.அடிக்கொறுதரம் தெருவை பார்ப்பதுமாக பொறுமை இழந்து காணபட்டார்கள்.இதனால் நாங்கள் அனைவரும்கூட தெருவை வழிமேல் விழிவைத்து பார்த்திருந்தோம்.

தெருமுனையில் அப்பா அவருவதை பார்த்த நான் “டேய் அண்ணா,அப்பா மட்டும் தனியா வராங்கடா”என்றேன்.என் குரல் கேட்டு கிரிஜா ஆண்டியும்.,ஸ்ரீனி அங்கிளும் வெளிய வந்துவிட்டனர்.வீட்டிற்குள் அப்பா வந்ததும் ” என்ன சார் நீங்க மட்டும் தனியா வரீங்க”என்று கேட்டார் ஸ்ரீனி அங்கிள்.

“நிறைய பரிசோதனைகள் பண்ணவேண்டி இருப்பதால்,தினமும் வீட்டிற்கு போய் வருவது கஷ்டம் என்றும்,எல்லா டேஸ்டும் எடுத்து முடிக்க குறைந்தது நான்கு நாட்களுக்கு மேல் ஆகலாம் என்பதாலும், அங்கேயே ஸ்பெஷல் வார்டில் சேர்த்து விட்டார்கள்.இன்று இரவு மட்டும் ஒரு நர்ஸை துணைக்கு இருக்கும்படி பணம் கொடுத்துவிட்டு, ஏற்பாடு செய்துவிட்டு வந்து விட்டேன்.நாளை முதல், என் சின்னம்மாவை அங்கு துணைக்கு வைத்துவிட்டு.குழந்தைகளுக்கு லீவு என்பதால் நான் கூட இருந்து பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.எல்லா டேஸ்டும் விரைவில் முடித்துவிட்டு ,குழந்தைகளுக்கு

எக்சாமிற்கு முன் மங்கை வீட்டிற்கு வந்துவிடுவாள்"என்றார்கள் அப்பா.

அப்பா வீட்டிற்குள் வந்து உடைகளை மாற்றிக் கொண்டு சாப்பிட்டுவிட்டு,"அனிதா அம்மாவிற்கு வேண்டிய மாற்று துணிமணிகளை மூன்று செட்டை, பையில் எடுத்துவை"என என்னிடம் கூறிவிட்டு "சித்தி,நீங்களும் உங்களுக்கு வேண்டிய துணிமணிகளை, மூன்று நாட்களுக்கு வேண்டியதை பையில் வைத்துக் கொள்ளுங்கள்.நாளை காலையில் ஆஸ்பத்திரிக்கு போக தயாராகவிடுங்கள்.ப்ரேக்பாஸ்ட் ,காபி குழந்தைகளுக்கு வைத்துவிட்டு,நாமும் சாப்பிட்டுவிட்டு,மங்கைக்கும் சிறிது எடுத்துக் கொண்டு காலையில் ஏழுமணிக்கே வீட்டை விட்டு கிளம்பிவிட்டால் நன்றாக இருக்கும்.எல்லோரும் சீக்கிரமாக படுத்து தூங்கி விடுங்கள்.விடியற்காலையில் எழுந்திருக்கவேண்டும்"என்றார்கள் அப்பா.

மேலும் எங்கள் நால்வரையும்

பார்த்து,"பசங்களா,நீங்க யாரும் வீட்டை விட்டு வெளியே போக கூடாது.கதவை உள்ளே தாளிட்டுக் கொண்டு உள்ளேயே படித்துக் கொண்டிருங்கள்.நான் சீக்கிரம் வந்து ,மத்தியானம் சாப்பாட்டை சமைக்கிறேன்.அனிதா, நீ முடிந்தவரை காய்கறிகளை நறுக்கி வை.பருப்பு வேக வைத்து வை ,குக்கரில் சாதம் வைத்துவிடு"என எல்லாவற்றையும் கூறிவிட்டு ,அன்றிரவு எங்கள் அனைவரையும் இரவு ஒன்பது மணிக்கே படுத்து தூங்க சொல்லிவிட்டார்கள் அப்பா.

மறுநாள் மார்ச் 23-ம் தேதி வியாழக்கிழமை காலை ஏழு மணிக்கே அப்பாவும்,சந்திரா பாட்டியும் அம்மாவுக்கு பிளாஸ்கில் காபியையும்,பிரேக்பாஸ்ட் -ம் எடுத்துக்கொண்டு கிளம்பி ஆஸ்பத்திரிக்கு சென்று விட்டார்கள்.அவர்கள் சென்றதும், நாங்கள் நால்வரும் கதவை உள்ளே தாளிட்டுக் கொண்டுவிட்டோம்.அண்ணன் ஷானு,தம்பி பாட் ,ஆனஹியும் முன் ரூமில் படித்துக் கொண்டிருந்தார்கள்.நான் சமயலறையில்

சென்று கெரொசின் அடுப்பை பற்றவைத்து பருப்பை வேகவைத்துவிட்டு. குக்கரில் அரிசியை போட்டுவிட்டு,காய்கறிகளை எடுத்து நறுக்கி தனி தனியாக தட்டில் தயாராக வைத்தேன்.

அன்று அப்பா, சந்திரா பாட்டியை, ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு, பத்து மணிக்கெல்லாம் வீடு திரும்பி மத்தியான சாப்பாட்டை சமைத்து எங்களுக்கெல்லாம் வைத்துவிட்டு,வீட்டிலேயே தானும் சாப்பிட்டுவிட்டு அம்மாவுக்கும்,சந்திரா பாட்டிக்கும் சாப்பாட்டை எடுத்துச்சென்றுவிட்டார்கள்.

மார்ச் 24-,தேதி வெள்ளிக்கிழமை,மார்ச் 25-ம் தேதி சனிக்கிழமையும்,மார்ச் 26-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையும்,மார்ச் 27-ம் தேதி திங்கள் கிழமையும் நான்கு நாட்களும் அப்பா காலையில் ப்ரேக்பாஸ்ட் ,காபி,மற்றும் மத்தியானம் சாப்பாட்டையும்,இரவு சாப்பாட்டையும் சமைத்து எங்களுக்கும் வைத்துவிட்டு,தானும் சாப்பிட்டுவிட்டு,அம்மாவுக்கும்,சந்திரா

பாட்டிக்கும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துசென்று கொடுத்துவந்தார்கள்.இதற்கிடையில் மார்ச் 26-ம் தேதி ஞாயிற்றுகிழமை ஆஸ்பத்திரிக்கு போகும் முன், அன்று ஞாயிற்றுகிழமை என்பதால் அன்றுடன் கருமாரியம்மன் கோவிலுக்கு போய்வருவது, ஒன்பது வாரம் முடிய இருந்தது.எனவே சாமியார் சொன்னபடி கடைசி வார பிரார்த்தனை நாள்.அப்பா அதை நிறுத்த மனமில்லாமல் அன்றும் காலையில் எழுது கோவிலுக்கு சென்று, திரும்ப வீட்டிற்கு வந்து, அவசர அவசரமாக சமைத்து அம்மாவிற்கு மதிய சாப்பாட்டை எடுத்துக் கொண்டு ஓடினார்கள்.கோவிலுக்கே போகாத அப்பா,அம்மா குணமாக வேண்டி வாரம் தவறாமல் போய் வருவதால், ஒருவேளை கடவுளுக்கே மனம் மாறி அம்மாவை காப்பாற்றிவிடுவார் என நாங்கள் அனைவரும் முழு நம்பிக்கையுடன் இருந்தோம்.

ஆஸ்பத்திரியிலிருந்து அம்மாவின் உடைகளையும்,சந்திரா பாட்டி உடைகளையும் வீட்டிற்கு எடுத்துவந்து என்னிடம் கொடுத்து

துவைத்துவைக்கச சொன்னார்கள் அப்பா. அந்த நான்கு நாட்களிலும் முக்கால்வாசி சமையல் வேலைகள்,வீடு சுத்தம் செய்யும் வேலைகள்.துணிதுவைக்கும் வேலைகள் எல்லாம், நானே செய்து வந்தேன்.ஏற்கனவே பெரியம்மா வீட்டில் இம்மாதிரி வேலைகள் எல்லாம் முன்பே செய்து பழகி இருந்ததால், என்னால் எல்லாம் தனியாக சமாளிக்க முடிந்தது. இதனால் என்னால் சரிவர இறுதி பரீட்ச்சைக்கு படிக்க நேரமில்லாமல் போயிற்று .முடிந்தவரை வீட்டு வேலைகளையும் செய்து கொண்டு ,கிடைத்த நேரங்களில் படித்துக் கொண்டும் இருந்தேன்.அண்ணன் ஷான் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து பாத்ரூமில் நிரப்பி வந்தான்.நான் சமயலறையில் எல்லாவற்றிலும் தண்ணீர் நிரப்பிவிடுவேன்.

ஒன்பது வாரங்களை வெற்றிகரமாக சாமியார் சொன்னபடி கோவிலுக்கு சென்று அம்மா பெயரில் அப்பா அர்ச்சனை செய்து வந்ததன் பலனாக ,அன்று திங்கள் கிழமை மார்ச் 27-,தேதி இரவு ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்த

அப்பா, பக்கத்து வீட்டு கிரிஜா ஆண்டியிடம்" எல்லா பரிசோதனைகளையும் முடித்து மங்கைக்கு கவலைபடும்படி எதுவும் இல்லை.எல்லா பரிசோதனை முடிவும் நல்லதாகவே காண்பித்தது" என்ற நல்ல செய்தியுடன், அன்று மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார்கள்,மேலும் மங்கை அனிதாவை மிகவும் பார்க்க வேண்டும் போல இருக்கிறது, நாளை செவ்வாய் கிழமை காலையிலேயே அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துவந்து விட்டுவிட்டு, சாயங்காலம் திரும்ப வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி சொன்னாள் .நான்தான் எப்படியும் புதன் கிழமை உன்னை ஆஸ்பத்திரியிலிருந்து காலையிலேயே வீட்டிற்க்கு அனுப்பிவிடபோகினார்களே ,நடுவில் ஒரு நாள் தானே இருக்கிறது.புதன் கிழமை மதியானக் வீட்டிற்கு சாப்பிடபோகும்போது, அவளை பார்த்துக் கொள் இப்போது என்ன அவசரம் அவளை பார்க்க.அவளை இங்கு அழைத்துவந்துவிட்டால் வீட்டு வேலைகளை யார் கவனிப்பது "என்று மங்கைக்கு சமாதனம்

சொல்லிவிட்டு வந்துவிட்டேன் என்றார்கள் அப்பா பக்கத்துவீட்டு ஆண்டியிடம்.

இதை கேட்ட கிரிஜா ஆண்டிக்கும் ஸ்ரீனி அங்கிளுக்கும் மிகவும் சந்தோஷமாகவே இருந்தது."அப்பாட தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது.இனிமேல் கவலை இல்லை.நீங்களும் நிம்மதியாக வேலைக்கு போய் வரலாம்.ரொம்ப நல்ல செய்தியுடன்தான் வந்திருக்கிறீர்கள்.உங்கள் வாய்க்கு சர்க்கரைதான் போட வேண்டும்.ஒன்பது வாரம் நீங்கள் விடாமல் கோவிலுக்கு சென்றுவந்ததன் பலன் கிடைத்துவிட்டது"என்று கிரிஜா ஆண்டி மிகவும் சந்தோஷமாக கூறினார்கள் அப்பாவிடம்.மேலும் ஆண்டி தொடர்ந்தார்கள்"நீங்கள் சொல்வதும் சரிதான், எப்படியும் நாளை மறுநாள் புதன்கிழமை மத்தியானம் எல்லாம், மங்கை வீட்டிற்கு வந்துவிட போகிறார்கள்,எனவே நீங்கள் சொன்னதுபோல அனிதா இங்கேயே வீட்டிலிருந்து மற்ற வேலைகளை பார்த்துக் கொண்டால், உங்களுக்கும் சற்றே வசதியாக

இருக்கும்.எனவே இவளை ஏன்? அலைகழிக்கவேண்டும் இங்கும் அங்குமாக.அந்த சச்சின் நம்மை எல்லாம் வீணாகவே பயமுறுத்தி விட்டார்.சரியான ஆளாக இருப்பார் போலிருக்கிறது"என்று கேலியாக சிரிதார்கள் பக்கத்து வீட்டு ஆண்டியும், அங்கிளும்.

மேலும் கிரிஜா ஆண்டியும்,ஸ்ரீனி அங்கிளும் வெகு நேரம் அன்றிரவு அப்பாவுடன் பேசி கொண்டிருந்தார்கள்.

"மங்கையின் பெற்றோரோகளுக்கும், அக்காவுக்கும் ,அண்ணனுக்கும் தெரியுமா நீங்கள் அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பது?"என கேட்டார் ஸ்ரீனி அங்கிள்'

"ஆமாம்,விஷயத்தை போன் மூலம் அவர்களுக்கெல்லாம் சொல்லிவிட்டேன்.மங்கையின் அம்மா கண் அறுவை சிகிச்சை நடந்து ஆஸ்பத்திரியில் சேர்த்து இருக்கிறார்களாம்.மங்கையின் அப்பாவும் சென்னையில், அவர் பெண்

வீட்டில்தான் தங்கி இருக்கிறாராம்.நேற்று மத்தியானம் அவள் அக்கா சேது வீட்டிலிருந்து, மதியான சாப்பாட்டை மங்கைக்கும்,என் சித்திக்கும் கொடுத்தனுபியிருதிருக்கிறாள்.நேற்று மத்தியானம் என் அம்மாவும்,என் தங்கை சாராவும் மங்கையை பார்க்க ஆஸ்பத்திரிக்கு சென்றிருந்தார்கள்.அவர்கள் இருக்கும் போதுதான் ,மங்கையின் அக்கா வீட்டு வேலைக்காரன், மதியான சாப்பாட்டை கொண்டுவந்து மங்கையிடம் கொடுத்திருக்கிறான்.மங்கை அந்த சாப்பாட்டை திருப்பி அனுப்பிவிட்டாளாம் .எதற்காக உன் அக்கா ஆசையாக கொடுத்தனுப்பிய சாப்பாட்டை திருப்பி அனுப்பிவிட்டாய் சாப்பிடாமல்?" என என் அம்மாவும் தங்கையும் கேட்டதற்கு,"என் அக்கா அதில் எனக்கு விஷம் வைத்துக்கூட அனுப்பியிருக்க வாய்ப்பிருக்கிறது"எனவே தான் திருப்பி அனுப்பிவிட்டேன்: என்று மங்கை சொன்னாளாம்.கொஞ்சமாவது சாப்பிட்டுவிட்டு மீதியை கொட்டிவிடு என, என் அம்மா

சொன்னதற்கு ,முடியாது என மறுத்துவிட்டாளாம் மங்கை"மேலும் அப்பா,அம்மா, அக்கா யாரையும் பார்க்க முடியாது எனவும் மறுத்துவிட்டாளாம்.ஆனால் அண்ணன் ஜகந்நாதனை மட்டும் பார்க்க வரவேண்டாம் என கூறவில்லையாம்"என்றார்கள் அப்பா.

"நல்ல செய்தியாகத்தான் கொண்டுவந்திருக்கிறீர்கள்.இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது.இனி எல்லாம் நல்லதாகவே நடக்கட்டும்"என கிரிஜா ஆண்டியும்,ஸ்ரீனி அங்கிளும் கூறிவிட்டு தங்கள் போர்ஷனுக்குள் சென்று விட்டார்கள்.அப்பாவும் சற்றே சந்தோஷமாக காணபட்டார்கள்.அம்மாவிற்கு இனி பயப்படும்படி எதுவுமில்லை என்று எங்கள் நாலவருக்கும் மனநிம்மதி ஏற்பட்டது.

"மறுநாள் காலையில் மார்ச் 28-ம் தேதி, செவ்வாய் கிழமையும் நல்லபடியாகவே ஓடியது.அன்றிரவு வீட்டிற்கு வந்த அப்பா

என்னிடம்"அம்மா வீட்டிற்கு நாளை மத்தியானம் பன்னிரண்டு மணிக்கே
வந்துவிடுவார்கள்.மத்தியானம் சாப்பாட்டை, நீயே முடிந்தவரை சமைத்துவைத்து விடு அனிதா.உனக்குத்தான் இப்போது சமைக்க தெரியுமே.ரொம்ப எதுவும்
செய்யவேண்டாம்.எதோ மதியம் சாப்பிட சிறிது சமைத்துவை போதும்"என்றார்கள்.

அப்போது பக்கத்துவீட்டு கிரிஜா ஆண்டி, எங்கள் போர்ஷனுக்கு வந்து "இன்று எப்படி இருக்கிறார்கள் மங்கை"என்று கேட்டார்கள்.

"மங்கை நாளைக்கு டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு வர இருப்பதால் மிகவும் சந்தோஷமாக இருக்கிறாள் .பள்ளிகூடத்திலிருந்து சில பரீட்சை பேப்பர்களையும் எடுத்து வரச் சொல்லி, அதை இன்றிரவு சிறிது திருத்திவிட்டு படுக்கபோவதாக சொன்னாள்"என்றார்கள் அப்பா.

"இப்போ பேப்பர் திருத்துவதற்கு ஏன் அவசரப்பட வேண்டும் ,நாளை வீட்டிற்கு

வந்ததும், அதை எல்லாம் பார்த்துக் கொள்ளக்கூடாதா?"என்றார்கள் கிரிஜா ஆண்டி.

"என்னவோ தெரியவில்லை ,ஆஸ்பத்திரியில் போர் அடிக்கிறதாம்.அதனால் பேப்பரையாவது திருத்திக் கொண்டிருக்கிறன் என்றாள், ,நானும் சரி என்று சொல்லிவிட்டேன்"என்றார்கள் அப்பா.

அப்பா பின் வீட்டில், குடிசையில் இருக்கும் ஒரு அம்மாவை அழைத்து மறுநாள் இரவு சாப்பாட்டிற்கு இட்லி செய்ய மாவை அறைத்துக் கொடுக்கும்படி ,அதற்கு தேவையான அரிசி பருப்பை அவர்களிடம் அன்றிரவே கொடுத்துவிட்டார்கள்.

மறுநாள் அம்மா வீட்டிற்கு வந்தால், படுக்க புது பெட் ஷீட்ஸ் எல்லாம் முதல் நாள் இரவே அப்பா, அம்மா படுக்கும் கட்டிலில் போட்டு தயார் செய்து விட்டு படுத்துக் கொண்டார்கள்.அம்மா மறுநாள் வீடு வரபோவதை நினைத்து அனைவரும்

மகிழ்ச்சியில் இருந்தோம்.அம்மாவை பார்த்து ஒருவாரம் ஆயிற்று எனவே அவர்களை பார்க்கும் ஆவலில் நிமிடத்தை ,நாங்கள் நால்வரும் எண்ணிக் கொண்டிருந்தோம்.அன்றிரவு அனைவரும் நிம்மதியாக தூங்கினோம்.

மறுநாள் காலை 1972 மார்ச் 29-ம் தேதி ,காலையில் நாலு மணிக்கே அப்பா எழுந்து காபி போட்டுவிட்டு ,ரவா உப்புமாவை காலை உணவுக்கு சமைத்துவிட்டு ,எங்களை எல்லாம் சாப்பிடச் சொல்லிவிட்டு ,அம்மாவுக்கும்,சந்திரா பாட்டிக்கும் எடுத்துக் கொண்டு ,காலை 6:30 மணிக்கே வீட்டை விட்டு கிளம்பி சென்று விட்டார்கள்.

போவதற்கு முன் பக்கத்து வீட்டு கிரிஜா ஆண்டியிடம் "நான் மங்கையுடன் 12 மணிக்கு வந்து விடுகிறேன்.குழந்தைகளை பார்த்துக் கொள்ளுங்கள். மதியான சமையலை அனிதா தனியாக சமைக்க இருக்கிறாள்,அவளுக்கு சமையலுக்கு ஏதாவது உதவி

தேவைபட்டால்,உங்களால் முடிந்தவரை உதவி செய்தால் மிகவும் நான்றாக இருக்கும்"என்று அப்பா சொன்னதும்,

"கவலை படாமல் போயிட்டு வாங்க.அனிதா சமையலுக்கு, நான் உதவி செய்கிறேன்.என்னால் முடிந்தால் நானும் கொஞ்சம் சமைத்துத் தருகிறேன்.சமையலை பற்றி கவலைபடாதீர்கள்"என அப்பாவிடம் கூறி அவர்களை வழி அனுப்பி வைத்தார்கள் ஆண்டி. அப்பா சென்றதும் நான் அவசர அவசரமாக எல்லா வேலைகளையும் செய்ய தொடங்கினேன். அம்மா வருவதற்குள் எல்லா வேலைகளையும் முடித்துவிடவேண்டுமென்று.அண்ணன்,தம்பி ஆனஹி மூவரும் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.பறக்க ,பறக்க வேலைகளை எல்லாம் 11 மணிக்கு முடித்துவிட்டேன்.அம்மா இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்து விடுவார்கள் என்ற ஆர்வமுடன், அடிக்கடி தெருவை எட்டி எட்டி பார்த்துக் கொண்டே இருந்தேன்.

ஆனால் , அம்மா முதல் நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு , பரீட்சை பேப்பர்களை சிலவற்றி திருத்தி கொண்டிருக்கையில் ,அங்குள்ள ஸ்பெஷல் வார்ட் நர்ஸ் ,அம்மாவின் அறைக்கு வந்து, நள்ளிரவு ஆகிவிட்டது, இன்னும் தூங்காமல் ஏன் பேப்பர் திருத்திக் கொண்டிருக்கிறீர்கள். எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு தூங்குங்கள் என அம்மாவை வலுக்கட்டாயமாக படுக்கவைத்து விட்டு , அறையின் விளக்கை அணைத்துவிட்டு சென்ற ஒருசில மணி நேரத்திற்க்கெல்லாம், அம்மா இறந்து விட்டது, மறுநாள் காலை 7:30 அப்பா, அங்கு சென்ற பிறகுதான் அனைவருக்கும் தெரியவந்தது ,என அம்மா கூட இருந்த சந்திரா பாட்டி சொல்லித்தான் எங்களுக்கெல்லாம் தெரியவந்தது. அப்பாவும் காலை உணவை எடுத்துச் சென்று, அம்மா தூங்கி கொண்டிருக்கிறார்கள் என , சாப்பாட்டை அம்மாவின் அருகில் உள்ள மேஜையில் வைத்து விட்டு, அம்மா எழுந்திரிக்கட்டும் என காத்திருந்தார்களாம். எட்டு மணியாகியும் அம்மா

எழுத்திருக்காததாலும், சந்திரா பாட்டி அதற்க்கு முன் சில நிமிடங்களாகவே ,அப்பாவிடம், தேவன் எனக்கென்னமோ மிகவும் சந்தேகமாக இருக்கிறது, மங்கை வெகு நேரமாக அசையாமல் ஒரே நிலையில் படுத்திருக்கிறது. நானும், நர்ஸும் , மங்கை முதல் நாள் இரவு நள்ளிரவில் படுத்ததால், அசதியில் தூங்கிகொண்டிருக்கிறாள் என நினைத்தோம். மங்கையின் கையை நான் தொட்டு பார்த்தேன் ஐந்து நிமிடங்களுக்கு முன் நீ வெளியே நின்று சிகரேட் பிடித்து கொண்டிருக்கையில், அவளது கை மிகவும் ஐஸ் கட்டி போல சில் என்று இருந்தது. நர்ஸை நான் கூப்பிட்டபோது, அந்த அம்மாள் நான் சொன்னதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்ல .நீவேண்டுமால் உள்ளே வந்து மங்கையை தொட்டு பாரு, என அப்பாவை உள்ளே அழைத்துச் சென்ற பிறகே ,அம்மா இறந்த விட்ட செய்து அப்பாவுக்கே தெரியவந்தது. அதுவரை அப்பா ,எங்கள் அம்மா தூங்குவதாக நினைத்து வெளியே ,அம்மா எழுத்திருக்கும்வரை

காத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள்.

விடியற்காலையிலேயே ,அம்மா இறந்தது தெரியாமல் ,அப்பா வீட்டிலிருந்து அம்மாவிற்கு ப்ரேக்பாஸ்ட் எடுத்துச் சென்றதையும், காலை யிலேயே இறந்துவிட்ட அம்மாவின் வருகைக்காக ,நான் சமைத்து வைத்து காத்திருந்ததையும் நினைக்கையில் , அம்மா இறந்ததது கூட தெரியாமல் ,இப்படி அனைவரும், பல மணி நேரங்களுக்கு வழக்கம் போல இருந்த அறியாமையை நினைத்து மிகவும் வேதனைப் பட்டேன்.

உயிருடன் மதியம் சாப்பாட்டிற்கு அம்மாவை அழைத்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு போன அப்பா, அம்மா இறந்துவிட்டார்கள் என்ற செய்தியை எங்களிடம் உடனே சொல்ல தைரியம் வரவில்லை என்றார்கள். அப்பாவிற்கு மட்டும் அல்ல, என் குடும்பத்தார் யாருக்கும் அப்படி ஒரு தைரியம் மாலை ஐந்து மணி வரை வரவில்லை என்று சொன்னார்கள். பிறகு சின்ன அத்தை சாரா, துணிவுடன் எங்கள் வீட்டிற்கு

வந்து எங்களை அழைத்துச் சென்றுள்ளார்கள்.

பாவம் அம்மா, கடைசி நேரத்தில் என்னை பார்க்க மிகவும் ஆசை பட்டிருக்கிறார்கள். ஆனால் எங்களால் அம்மாவை பார்க்கமுடியாமல் போயிற்று .அம்மா ஆஸ்பத்திரிக்கு போகும் போது ,அவர்களை நாம் திரும்ப பார்க்க போவதில்லை என ,எங்கள் கனவில் கூட நாங்கள் நினைக்கவில்லை.அம்மா இனிமேல் எதை பற்றியும் கவலை பட தேவை இல்லை. பெரியம்மா ஸ்கூலிற்கு வந்து தொந்தரவு செய்வார்கள் என்றோ, வீட்டில் எங்களை எல்லாம் பாடம் சொல்லி கொடுத்து, படிக்க வைத்து ,எப்படி வளர்க்க போகிறோம் என்ற கவலையும் இல்லை. இனிமேல் இவை எல்லாம் அப்பாவின் கவலைதான். இது நாள் வரையில் பொறுப்பில்லாமல் வாழ்ந்து வந்த அப்பாவிற்கு, மிக பொறுப்ப அம்மா கொடுத்து விட்டு நிம்மதியாக கண்ணை முடிவிட்டார்கள். அம்மா கொடுத்து வைத்தவர்கள். சென்றுவிட்டார்கள். இனி இருப்பவர்கள் நாங்கள் தான் எல்லாவற்றையும் பற்றி கவலைபட்டாக

வேண்டும் என்று நினைக்கையில் என் மனம் விம்பி அழுதது. இனிமேல் எங்களுக்கு இந்த சந்திரா பாட்டியும், அப்பாவும் தான் எல்லாம். கடவுளே , எங்களை அம்மா கடைசியாக அப்பாவிடம் கொண்டுவந்து ஒப்படைத்துவிட்டு ,நிம்மதியாக சென்றுவிட்டார்கள். இனியாவது அப்பாவின் மனதை மாற்றி ,எங்களை நல்ல படியாக வளர்க்க புத்தி கொடு, என வேண்டிக்கொண்டேன்.இனி கடவுள் விட்ட வழிதான் எங்களுக்கு.பாவம் அப்பா, அவர்கள் வேண்டியதெல்லாம் வீணாகிவிட்டது.

ஒரு வேளை ,அப்பா வேண்டிய கருமாரி அம்மன், இதுதான் அப்பாவிற்கு கொடுத்த தண்டனையோ? அம்மாவிற்கு கொடுத்த மன நிம்மதியோ? ஆமாம், அம்மாவிற்கு கடவுளாக பார்த்து கொடுத்த மிகப் பெரிய அமைதியும், நிம்மதியும்தான். அம்மா பட்ட கஷ்டத்திற்கு ஒரு விடுவு காலம் வேண்டாமா? அப்பா ,அம்மாவிற்கு செய்த அதர்மத்திற்கு ஒரு முடிவு வேண்டாமா? அதனால்தான் , அந்த கருமாரி அம்மனே ,இப்படி ஒரு முடிவை எடுத்துவிட்டார்கள்

போலும்,"அரசன் அன்று கொல்லும் ,தெய்வம் நின்று கொல்லும்" என்ற பழமொழியை சும்மாவா நம் பெரியோர்கள் சொல்லிச் சென்றுள்ளார்கள்.

இப்படி பலவாறாக என் மனம் நினைத்தது. அம்மா இறந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டது. எல்லாம் என் கனவில் காண்பது போல நடந்துகொண்டிருந்தது. அம்மாவின் பதினைந்தாம் நாள் காரியத்தில்தான் ஒருவேளை நாம் ,அம்மாவின் உறவினர்களை கடைசியாக பார்க்கப் போகிறோமோ ,என்னவோ. இனிமேல் நமக்கு அப்பாவும், அவர்கள் உறவினர்களும்தான்.இனிமேல் மாமா பெண்களை நாம் பார்க்கவே போவதில்லை என நினைக்கையில் துக்கம் என் தொண்டையை அடைத்தது. கண்ணிலிருந்து மள ,மளவென கண்ணீர் அருவியென வழிந்தோடியது.

எல்லாம் அந்த சிதம்பர நடராஜரின்

திருவிளையாடலே என நினைத்துக் கொண்டேன். பாட்டி கமலா அடிக்கடி சொல்வது போல் , ஈசனின் திருவிளையாடல் நன்மையிலே முடியும் என்று. ஒரு வேலை எங்கள் வாழ்வில் கடவுள் விளையாடியது ஒரு விதத்தில் எங்கள் குடும்ப நன்மைக்குதானோ என எண்ணி என்மனம் சமாதான அடைந்தது.அதற்கும் கடைக்கு சென்ற அப்பாவும் காய்கறிகளும் வீடு திரும்பி விட்டார்கள். நான் சந்திரா பாட்டிக்கு உதவி செய்வதற்காக சமயலறைக்கு சென்றேன்.

FreeTamilEbooks.com - எங்களைப் பற்றி

எங்களைப் பற்றி

மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. *Kindle, Nook, Android Tablets* போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000

ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை *PDF, EPUB, MOBI, AZW3.* போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. *ProjectMadurai.com* எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஓர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் *PublicDomain*-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய

புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

எனவே ஒரு தமிழ் வாசகர் மேற்கூறிய "மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகளை" வாங்கும்போது, அவரால் எந்த ஒரு தமிழ் புத்தகத்தையும் இலவசமாகப் பெற முடியாது.

சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து

தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் *Creative Commons* எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில

அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை "யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்" என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது "Creative Commons" எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் "All Rights Reserved" எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் "All Rights Reserved" என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை "Creative Commons" உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம்

அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு நமக்கு அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச் செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை

“மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்”-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

FreeTamilEbooks.com

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

PDF for desktop, PDF for 6" devices, EPUB, AZW3, ODT

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம்*(download)* செய்து கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம்*(download)* செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை
எடுத்து, அவற்றை *LibreOffice/MS Office* போன்ற *wordprocessor*-ல் போட்டு ஓர் எளிய
மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.

அவ்வளவுதான்!

மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:

1. ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை "*Creative Commons*" உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்
2. தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்
3. சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்

விருப்பமுள்ளவர்கள் *freetamilebooksteam@gmail.com*

முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

இந்தத் திட்டத்தின் மூலம் பணம்
சம்பாதிப்பவர்கள் யார்?

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க
தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு
வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம்
என்னவெனில் தமிழில் நிறைய
மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை
இலவசமாக பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட
மின்புத்தகங்கள், *ebook reader* ஏற்றுக்கொள்ளும்
வடிவமைப்பில் அமையும்.

இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும்
ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம்
எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை.

ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப் பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து *ebook reader* போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் *tablets* மற்றும் *ebook readers* போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

நகல் எடுப்பதை அனுமதிக்கும் வலைதளங்கள் ஏதேனும் தமிழில் உள்ளதா?

உள்ளது.

பின்வரும் தமிழில் உள்ள வலைதளங்கள் நகல் எடுப்பதினை அனுமதிக்கின்றன.

1. www.vinavu.com
2. www.badriseshadri.in
3. http://maattru.com
4. kaniyam.com
5. blog.ravidreams.net

எவ்வாறு ஓர் எழுத்தாளரிடம் Creative Commons உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

<துவக்கம்>

உங்களது வலைத்தளம் அருமை [வலைதளத்தின் பெயர்].

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக *Mobiles* மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள் *http://www.FreeTamilEbooks.com* எனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான *Desktop,ebook readers like kindl, nook, mobiles, tablets with android, iOS* போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் *support* செய்யும் *odt, pdf, ebub, azw* போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை

பெற விரும்புகிறோம். இதன் முலம் உங்களது பதிவுகள்
உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை "Creative Commons" உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

http://creativecommons.org/licenses/

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

e-mail : freetamilebooksteam@gmail.com

FB : https://www.facebook.com/FreeTamilEbooks

G +: https://plus.google.com/communities/108817760492177970948

நன்றி.

</முடிவு>

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் "Creative Commons License"-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலைfreetamilebooksteam@gmail.com எனும்

முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது?

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும். அவை வகைப்படுத்தப்பட்டோ

அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம். அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி-I பகுதி-II என்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

தவிர்க்க வேண்டியவைகள் யாவை?

இனம், பாலியல் மற்றும் வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- email : freetamilebooksteam@gmail.com
- Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks

- Google Plus: https://plus.google.com/communities/108817760492177970948

இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?

குழு — http://freetamilebooks.com/meet-the-team/

Supported by

- Free Software Foundation TamilNadu, www.fsftn.org
- Yavarukkum Software Foundation http://www.yavarkkum.org/

உங்கள் படைப்புகளை வெளியிடலாமே

உங்கள் படைப்புகளை மின்னூலாக இங்கு வெளியிடலாம்.

1. எங்கள் திட்டம் பற்றி — http://freetamilebooks.com/about-the-project/

தமிழில் காணொளி — http://www.youtube.com/watch?v=Mu_OVA4qY8I

2. படைப்புகளை யாவரும் பகிரும் உரிமை தரும் கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம் பற்றி —

கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமை — ஒரு அறிமுகம்
http://www.kaniyam.com/introduction-to-creative-commons-licenses/

http://www.wired.co.uk/news/archive/2011-12/13/creative-commons-101
https://learn.canvas.net/courses/4/wiki/creative-commons-licenses

உங்கள் விருப்பான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமத்தை இங்கே தேர்ந்தெடுக்கலாம்.
http://creativecommons.org/choose/

3.

மேற்கண்டவற்றை பார்த்த / படித்த பின், உங்கள் படைப்புகளை மின்னூலாக மாற்ற பின்வரும் தகவல்களை எங்களுக்கு அனுப்பவும்.

1. நூலின் பெயர்
2. நூல் அறிமுக உரை
3. நூல் ஆசிரியர் அறிமுக உரை

4. உங்கள் விருப்பான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம்
5. நூல் — *text / html / LibreOffice odt/ MS office doc* வடிவங்களில். அல்லது வலைப்பதிவு / இணைய தளங்களில் உள்ள கட்டுரைகளில் தொடுப்புகள் *(url)*

இவற்றை *freetamilebooksteam@gmail.com* க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

விரைவில் மின்னூல் உருவாக்கி வெளியிடுவோம்.

நீங்களும் மின்னூல் உருவாக்கிட உதவலாம்.

மின்னூல் எப்படி உருவாக்குகிறோம்? —

தமிழில் காணொளி — *https://www.youtube.com/watch?v=bXNBwGUDhRs*

இதன் உரை வடிவம் ஆங்கிலத்தில் — *http://bit.ly/create-ebook*

எங்கள் மின்னஞ்சல் குழுவில் இணைந்து உதவலாம்.

https://groups.google.com/forum/#!forum/freetamilebooks

நன்றி !